# கங்காபுரிக் காவலன்



CHN
CHN437432
CHN437432
031,3NV,C7
P6-3
437432

கலைமாமணி விக்கிரமன்

# கங்காபுரிக் காவலன்



CHN
CHN437428
CHN437428

கலைமாமணி விக்கிரமன்

பாகம் - 1

CHN437428

# முன்னுரை

## டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

தமிழக வரலாற்றில் பிற்காலச் சோழர் ஆட்சி தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். சங்க காலத்தில் சோழ மன்னர்கள் இருந்தாலும் விஜயாலயன் தொடங்கி ஏற்படுத்தப்பட்ட சோழப் பேரரசு, பெருமை வாய்ந்ததாகத் துலங்குகிறது.

தஞ்சையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிற்காலச்சோழர் ஆட்சி விஜயாலய சோழனால் நிறுவப்பட்டது. அப்படிப்பட்ட மிகச் சிறந்த அரச பாரம்பரியம் விஜயாலய சோழன் காலத்திலிருந்து தொடங்குகிறது.

பின்னால் பெருமைக்குரியவராகப் பேசப்படுகின்ற இராஜ ராஜ சோழன் தனி வரலாற்றுச் சிறப்பிற்குரியவன். அவனுடைய காலத்தில்தான் உலகெங்கிலும் அவனுடைய புலிக்கொடி பறந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் பேசுகிறார்கள்.

இன்றைக்கும் சிறப்புமிக்க பெருமையுடன் தஞ்சையில் திகழ்கின்ற தஞ்சைப் பெருவுடையார் கோயில் எனப்படும் பிரகதீஸ்வரர் கோயில் அவனுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

கி.பி.985 இல் தொடங்கி 1012 வரை அர[illegible]ந்த சோழப் பேரரசனான, அவன் கண்ட சிறப்புகளிலேயே தலையாய சிறப்பு தஞ்சை பெருவுடையார் கோயிலாகும்.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா, என்ற பழமொழிக்கேற்ப அவனுக்குப் பின்னால் பட்டமேறியவன் முதலாம் இராஜேந்திர சோழன்.

முதலாம் இராஜேந்திர சோழனும் பெரும் வெற்றிக்கு நிலைக்களமாக விளங்குகிறான். அவனால் நிறுவப்பட்ட பேரூர், கங்கை கொண்ட சோழபுரம் ஆகும்.

கங்கை கொண்ட சோழபுரத்தின் சிற்பக் கலைகள் தனிச்சிறப்பாக வரலாற்றாசிரியர்களால் பேசப்படுகின்றன. அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புடைய சோழன், இராஜேந்திர சோழன்.

அந்த இராஜேந்திர சோழனுடைய காலத்தில் நிகழ்ந்த கதை, நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வரலாற்றுப் பின்னணியாகக் கொண்டு இந்த நாவல் எழுந்துள்ளது.

'கங்காபுரிக் காவலன்' என்ற இந்த நவீனம், மிகச் சிறப்பான நவீனம் என்று நான் உறுதியாய்ச் சொல்வேன்.

இந்த நாவலை எழுதியிருக்கின்ற கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்கள், வரலாற்று நாவல்களை எழுதுவதில் தனிச் சிறப்பு வாய்ந்தவர்.

'கல்கி' தொடங்கிய வரலாற்றுப் புதினம் என்ற அந்த சகாப்தம், கலைமாமணி விக்கிரமன் அவர்களால் இன்று பெருமையுடன் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இடையில், மறைந்த சாண்டில்யன் அவர்கள் வரலாற்றுப் போக்கிலே புதிய புதிய யுக்திகளைப் புகுத்தி, புதிய புதிய ரசனைகளைக் கொண்டு வந்து சேர்த்து, தன்னுடைய நாவல்களைச் சிறப்புமிக்கதாக விளங்கும்படிச் செய்தார்.

கலைமாமணி விக்கிரமன் அவர்கள், வரலாறு பற்றிய அறிவு பெரிதும் வாய்ந்தவர். வரலாற்றை நுணுக்கமாக அறிந்தவர். தாம் எந்தச் செயலைச் செய்தாலும் அதை நுணுக்கமாகப் பிறர் பாராட்டும்படி செய்ய வேண்டும் என்பதில் ஆர்வம் மிக்கவர். எனவே, அவர் எதைத் தொட்டாலும் அது துலங்குகின்ற வண்ணமாக இருப்பதை அவரது எண்ணற்ற படைப்புகளின் மூலம் அறியலாம். அவர் எழுதியுள்ள நாவல்களிலே வரலாற்று நாவல்கள் தான் மிகப் பலவாகும்.

அவருக்கு வரலாற்று நாவலாசிரியர் என்ற முத்திரை தமிழக மக்களாலே தரப்பட்டிருக்கிறது. அந்தப் பெருமைக்குப் பழுது வரா வண்ணம் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் தன்னுடைய கதைகளைக் கையாளுகின்றார்; நடையைக் கையாளுகின்றார்; கதை சம்பவங்களை விவரித்துச் சொல்கின்றார். அவருடைய திறமை பளிச்சிடுகின்ற வகையிலே மிகச் சிறப்பாக விளங்குகின்ற நாவல், கங்காபுரிக் காவலன்.

அமரர் 'கல்கி'யின் 'பொன்னியின் செல்வன்' நாவலின் தொடர்ச்சியாக விக்கிரமன் அவர்களின் 'நந்திபுரத்து நாயகி' விளங்கியது. அதே போல இங்கே இராஜராஜ சோழனுக்கு அடுத்துப் பட்டமேறிய இராஜேந்திர சோழன் காலத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் போக்கில் 'கங்காபுரிக் காவலன்' அமைந்திருக்கிறது.

ஆக, கல்கியின் அடிச்சுவட்டில் கலைமாமணி விக்கிரமன் புதுமை புனைந்து, பல யுக்திகளை மேற்கொண்டு, மிகச் சிறப்பாகக் 'கங்காபுரிக் காவலன்' என்ற இந்நாவலைப் படைத்திருக்கின்றார்.

முதல் பாகம் ஏறத்தாழ 456 பக்கங்களைக் கொண்டும், இரண்டாம் பாகம் சரியாக 500 பக்கங்களைக் கொண்டும் ஏறத்தாழ ஆயிரம் பக்கங்களில் இந்த நாவலைக் கலைமாமணி விக்கிரமன் புனைந்துள்ளார்.

இந்த நாவலைப் புனைவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை நோக்குகின்ற போது, அது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும் என்று சொல்லத் தோன்றுகிறது.

காரணம், கல்வெட்டுகளில் நல்ல ஈடுபாடு கொண்டு வரலாற்று நுணுக்கங்களை நன்றாகப் படித்தறிந்து இந்த நாவலை டாக்டர் விக்கிரமன் அவர்கள் புனைந்துள்ளார்கள் என்று நான் ஐயமின்றிச் சொல்வேன்.

அவர் மேற்கொண்டிருக்கிற அந்த உழைப்பு, அறிஞர் உலகு பாராட்டத்தக்கதாகும். அவர் மேற்கொண்டிருக்கிற நேர்மை பாத்திரப் படைப்புகளின் மூலம் தெரிய வருகிறது.

அதிலும் குறிப்பாகத் தேவார, திருவாசகப் பாடல்களில் அவர் கொண்டிருக்கின்ற ஈடுபாடு, ஆண்டாள் பாசுரங்களில் அவருக்கு ஏற்பட்டிருக்கின்ற ஆர்வ மிகுதி ஆகிய அனைத்தும் இந்த நாவலில் பளிச்சிடுகின்றன.

அது மட்டுமன்று; நல்ல இலக்கிய ஈடுபாடும், ரசனையும் மிக்கவர் கலைமாமணி விக்கிரமன் என்பதற்கு ஆங்காங்கு மேற்கோள்களாக அவர் காட்டிச் செல்கின்ற பதிகங்கள் நமக்கு உறுதுணை செய்கின்றன.

இத்தகு சிறப்பு மிகுந்த வரலாற்றை அவர் எழுதுவதற்கு, வரலாற்று நாவலைப் புனைந்திட, அவருக்கு வரலாற்று ஞானம் பெரிதும் கைகொடுத்திருக்கிறது என்பதனை நாம் இந்த நாவல் நெடுகிலும் காணலாம்.

முதலிலே நம்முடைய மனத்தைக் கவர்வது பாத்திரப் படைப்புகள். வரலாற்றுப் பாத்திரங்கள் படைப்பதென்பது அவ்வளவு சுலபமன்று. வரலாற்றுப் பார்வை கொண்டு, வரலாற்றுக்கு முரண் ஆகாத வகையில் தம்முடைய கருத்துகளை நாவல் போக்கிலே அவர் சொல்லுதல் வேண்டும்.

அந்த வகையிலே இராஜேந்திரனுடைய வாழ்க்கையிலே ஏற்பட்டதாக நினைக்கின்ற ஒரு சிக்கலைப் பின்புலமாக விக்கிரமன் அவர்கள் எடுத்துக் கொள்கிறார்.

முதலாம் இராஜராஜ மாமன்னன் தஞ்சையில் பெரிய கோயிலைக் கட்டினான். அதே போலத் தாமும் ஒரு பெரிய கோயிலைக் கட்ட வேண்டும்

என்று இராஜேந்திரன் நினைக்கிறார் என்பதையும் அந்தக் கோயிலைக் கட்டி முடிப்பதற்காக அவர் பட்ட பாட்டையும், அக்காலத்தில் அவருடன் வாழ்ந்த மற்றவர்களிடையே இவ்வாறு கோயில் ஒன்றைக் கட்ட முனைகின்ற இராஜேந்திர சோழன், இராஜராஜனுடன் பிணக்குக் கொண்டு விட்டான்; தஞ்சையைவிடப் பெரிதாக ஒரு கோயிலைக் கட்டத் துணிந்துவிட்டான் என்பதாக நிலவிய சிறு பொறி நெருப்பையும் எடுத்துக் கொண்டு இந்த நாவல் முழுவதையும் அவர் படைத்திருக்கின்றார்.

இது இயல்பான ஒன்று. ஆனால் நாவலின் இறுதியில் கங்கை கொண்ட சோழபுரம் ஏன் நிர்மாணிக்கப்பட்டது என்பதை விளக்குகின்ற போது, எல்லாரும் எதிர்பார்த்திருக்கின்ற தந்தை – மகன் என்கிற பிணக்கில்லாமல் ஒரு கலைச் சிறப்புமிக்க படைப்பைத் தானும் உருவாக்க வேண்டும் என்பதும், சிதம்பரத்திற்கு அடிக்கடி தில்லை நடராசப் பெருமானின் தரிசனத்துக்குச் செல்ல முடியாமல் ஐந்து ஆறுகள் குறுக்கிடுகின்றன என்பதும், அவ்வாறு குறுக்கிடாமல் தில்லையில் நடராசருடைய தரிசனத்தை, சோழப் பெரு மன்னர்கள் வழி வழியாகப் பெறவேண்டும் என்கிற ஆர்வ மிகுதியினால் ஒரு புதிய தலைநகரத்தை நிர்மாணிக்கிறார் என்பதும் இந்த நாவலின் இறுதியில் விளங்குகின்ற செய்திகள்.

இப்படி 'சஸ்பென்ஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்கின்றார்களே அப்படி ஒரு திருப்பு முனையை வைத்து நாவல் முழுவதையும் பின்னிப் பிணைந்து இறுதியில் ஒரு தீர்வினை ஆசிரியர் நமக்குத் தருகின்றார்.

வீரம்மாள் என்னும் பாத்திரம், அடுத்து இடம் பெறுகின்ற பாத்திரம். எங்கோ ஒரு மூங்கில் துறையில் பிறந்த அந்தப் பெண இசையிலும், நடனத்திலும் தேர்ச்சி பெற்று இராஜேந்திரனுடைய இதயத்திலே இடம் பெறுகிறாள். இதிலே ஒரு பெரிய சிறப்பு, இராஜேந்திர சோழனுடைய நெஞ்சத்தில அவள் இடம் பெறுகிறாளேயன்றி, அவருடைய மஞ்சத்தில் அவள் இடம் பெற மறுக்கிறாள். இதுதான் நுட்பமான பின்புலம் எடுத்துக் கொண்ட கலைமாமணி விக்கிரமன் அவர்களின் தனிப்பட்ட அறிவாற்றல் என்பதாகும்.

காரணம், அந்தப் பெண் எத்தகைய பண்பாட்டிற்குரியவள் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே – அவள் தியாக வாழ்க்கையைப் படம் போட்டுக் காட்டுகின்ற வகையிலே இந்நாவல் அமைந்துள்ளது.

நாம் ஒன்று பார்க்கிறோம். பிற அரச மாதேவிகள், இவளுடைய வாரிசுதான் நாளைக்குச் சோழ அரியணை ஏறப்போகிறது என்றெண்ணி அவளுடன் கோபப்பட்டு, அவளை வெறுக்கிறார்கள். அவள் மூங்கில் துறை என்ற சின்னஞ்சிறு கிராமத்திலிருந்து வந்தவள். அப்படி அவளை வெறுக்கின்றபோது நாளைக்கு இந்த சோழப் பேரரசு தன்னாலே சின்னாபின்னமாகி விடக்கூடாது; தான் அதற்குக் காரணமாக இருந்துவிடக் கூடாது; என்றென்றும் சோழப் பேரரசினுடைய புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும் என்கிற ஆர்வ மிகுதியாலே, தன்னுடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய தியாகத்தை – இராஜேந்திர சோழனுடன் கூடி ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என்ற ஒரு துணிச்சலான சபதத்தை அவள் மேற்கொள்கிறாள் என்பதும், எவ்வளவுதான் இராஜேந்திர சோழன் அந்தச் சபதத்தை முறியடிக்க முயன்றாலும் முடியாத அளவிற்கு அவள் தியாக வாழ்க்கையில் துலங்குகிறாள் என்பதும் ஆசிரியர் கையாண்டிருக்கிற ஒரு புதுமையான – சிறப்புமிக்க – ஒரு வரலாற்றுப் பின்னணியோடு பின்னியிருக்கின்ற – ஒரு செய்தியாகும்.

ஆகவே, வீரம்மாள் என்கிற ஒரு சாதாரணப் பெண், வீரமாதேவியாக எவ்வாறு உயர்கிறாள்? அவள் தியாகம் எவ்வாறு புலவர் பெருமக்களால் பேசப்படுகின்றது என்கிற நிலையை ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் அவர்கள் அதி அற்புதமாகப் படைத்திருக்கிறார் என்பது இந்த நாவலைப் படித்து முடித்தவுடனே நம் நெஞ்சில் எழுந்து நீங்காது நிலைத்து விடும் ஒரு செய்தியாகும்.

இன்னும் பிற பாத்திரங்கள் வருகிறார்கள். அவர்களுக்குள் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கருவூர்த் தேவர். அவர் ஒரு தெய்வ மனிதர். நீரின் மேல் நடந்து வருவதாக எல்லாம் கேள்விப்படுகிறோமே, அப்படிச் சித்து வடிவமாக விளங்கிய அந்தக் கருவூர்த் தேவர் பாடிய பாடல்களை இன்றைக்கும் பதினோராம் திருமுறைகளில் காணலாம். அந்தப் பாடல்களை இடையிடையே கொண்டு வந்து புகுத்தி, நாவலின் விறுவிறுப்பிற்கு அணி சேர்க்கிறார் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்கள்.

இவ்வாறு நாவல் முழுவதிலும் தேவாரப் பதிகங்களையும், திருவாசகப் பதிகங்களையும், ஆழ்வார் பாசுரங்களையும், கருவூர்த் தேவர் பதிகங்களையும் கொண்டு வந்து, அந்தக் காலத்திற்கே நம்மை அழைத்துச் செல்கிறார் திரு விக்கிரமன் என்றால் அது மிகையாகாது.

இந்த நாவலை நாம் படித்து முடிக்கின்ற வரையிலே நம்முடைய சூழலை மறந்து விடுகிறோம். நாம் எங்கே இருக்கிறோம்; என்ன செய்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே போய், அங்கே வாழ்ந்த அந்தப் பெருமக்களுடன் கூடி வாழ்கிறோம் என்பதுதான் இந்த நாவலின் தனிப்பட்ட சிறப்பாகும்.

பிற பிற பாத்திரங்கள் சிறப்பாக வந்தாலும், இந்த நாவலிலே நாம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிலே அமைந்திருக்கின்ற பாத்திரங்கள் என்று நான் கருதுவன – இராஜேந்திர சோழன், வீரமாதேவி, கருவூர்த் தேவர் ஆக மூவரே.

இந்த மூன்று பெருமக்களைச் சுற்றிச் சுழல்கின்ற பாத்திரங்கள் தான், மற்ற பாத்திரங்கள்.

மற்ற பாத்திரங்கள், அவர்கள் எந்தளவுக்கு இந்த நாவலில் இடம் பெற வேண்டுமோ அந்தளவுக்கு மட்டும் இடம் பெறுவதாகக் காட்டி, பிரதான பாத்திரங்களாக இம்மூவரை எடுத்து, மிகச் சிறப்பாக ஆயிரம் பக்கங் களில் தன்னுடைய நாவலைப் பின்னியிருக்கிறார் என்று சொன்னால் ஆசிரியருடைய கற்பனைச் சிறப்பினைக் கண்டு கொள்ளலாம். அப்படிப் பட்ட சிறப்பு இந்த நாவலுக்குண்டு.

இதற்கு அடுத்தபடியாக நாம் பார்க்க வேண்டிய சிறப்பு என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்கின்றபோது, இந்த நாவலில் வருகின்ற வர்ணனைகள்.

பொதுவாக, வரலாற்றாசிரியர்கள் வருணனைகளை மிகுதியாகக் கலந்து கொண்டு செல்வார்கள். ஆனால் டாக்டர் விக்கிரமன் அவர்கள்,உப்பு எப்படி சமையலுக்கு அதிகமாக இருந்தாலும் பயன்படாது; குறைவாக இருந் தாலும் பயன்கொள்ளாது என்று நாம் நினைக்கிறோமோ, அந்த அளவிலே, எந்த அளவிற்கு வருணனைகள் பெய்ய வேண்டுமோ, அந்த அளவிற்குப் பெய்திருக்கிறார் என்பது எடுத்துக்காட்டாக நாம் கொள்ளத் தக்கதாகும்.

அதிகமாக வருணனைக்குப் போகாமல் ஒரே ஒரு வருணனையை நான் எடுத்துக்காட்டாகச் சொல்வேன்.

வீரம்மாள் இருந்த, மூங்கில் துறை என்கிற, கிராமத்தை முதன் முதலில் நமக்கு அறிமுகப்படுத்த வருகிறார் ஆசிரியர். அவர் அறிமுகப் படுத்துகிற சிறப்பைக் கீழ்வரும் பகுதியில் நாம் காணலாம்:

"கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் அடக்கமாக ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளம் கரை புரண்டோடும் நாள்களில் பரிசலில் செல்லக்கூட எவரும் அஞ்சுவர். ஆனால் மார்கழி, தை மாதங்களில் ஆற்றில் தண்ணீர் மிதமாக ஓடும். இரவு, பகல் என்று பாராமல் பரிசல்கள் இக்கரைக்கும் அக்கரைக்கும் வந்து சென்று கொண்டிருக்கும். தஞ்சையினின்று தில்லை நகருக்குச் செல்பவர்கள் அந்தத் துறையில் இறங்கித்தான் வந்தாக வேண்டும்.

கொள்ளிடத்தின் வடகரையில் திகழ்ந்த மூங்கில்துறை அழகிய சிறு கிராமம். ஒரு காலத்தில் தடம் புரண்டோடிய கொள்ளிடத்தின் சீற்றத்தால் ஏற்பட்ட மணல் மேடுகள் அதிகம். கரும்புத் தோட்டமும், மூங்கில் புதர் களும், தென்னஞ்சோலைகளும் நிறைந்த அந்தக் கிராமத்துப் பரிசல் துறை எப்போதும் கலகலப்பாக இருக்கும்.

பயணிகள் தாகம் தீர்க்கத் தண்ணீர்ப்பந்தல் அங்கே பல ஆண்டுகளாக இருந்தது. அங்கே தாகம் தீர்த்துக் கொண்ட பிறகுதான், சிதம்பரத்திற்குச் செல்லும் பாதையில் பயணிகள் தங்கள் பயணத்தைத் தொடங்குவார்கள்.

சில ஆண்டுகளாக அங்கே இளைஞர்கள் சற்று அதிக நேரம் தங்கிச் செல்வது வழக்கமாகி விட்டது. வீரம்மாளின் கரத்தால் ஒரு குவளை நீர் மோரோ, கருப்பஞ்சாறோ, சுக்குத் தண்ணீரோ வாங்கிக் குடித்து விட்டுச் செல்லாவிடில் அவர்கள் வழிநடைப் பயணத்தில் உற்சாகம் இராது."

இந்தக் கதை நிகழும் இடங்களாக – குறிப்பாக தஞ்சாவூர், பழையாறை, மூங்கில்துறை, சிதம்பரம் என்ற நான்கு பேரூர், சிற்றூர்கள் இடம் பெறுகின்றன.

சிதம்பரம் தொடக்கத்திலேயே இடம் பெறுகிறது. 'ஆதிரை செல்வன்' என்று முதல் அத்தியாயம் தொடங்குகிறது. 'தில்லை நடராசன் திரு நடனம்' என்று ஆசிரியர் தொடங்குகிறார்.

ஆகா – எவ்வளவு அற்புதமான தொடக்கம்! சைவர்களுக்குக் கோயில் என்று சொன்னால் அது சிதம்பரத்தைக் குறிக்கும். வைணவர்களுக்குக் கோயில் என்று சொன்னால் அது திருவரங்கத்தைக் குறிக்கும். ஆக, 'கங்காபுரிக் காவலன்' என்ற இந்த நூல் சிதம்பரத்திலே தொடங்கு கிறது. கங்கை கொண்ட சோழபுரம், இராஜேந்திர சோழன் நிர்மாணிக் கின்ற புதிய நகரம்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் நல்ல கோயிலோடு ஓர் ஏரியும் உருவாக்கப்படுகின்றது. இந்த ஏரியை, நீர்ப்பாசனத்திற்குப் பயன்படு கின்ற வகையிலே உருவாக்குகின்றார் பேரரசர் என்பது நாம் கவனிக்க வேண்டிய செய்தியாகும். தஞ்சைக்கு இந்தச் சிறப்பில்லை.

ஆனால் தான் நிர்மாணிக்கின்ற கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றிச் சோழ கங்கம் என்ற ஏரியைக் கொண்டு வந்து நிறுவி, அது மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே இராஜேந்திர சோழன் செய்கிறார்.

ஓர் இடத்தில் உரையாடல் நிகழ்கின்றது. அப்போது அவன் சொல் கிறான். "மக்கள் நம்மிடத்திலே எவ்வளவு நம்பிக்கை வைத்திருக் கிறார்கள்; எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்த் தோம். அதற்கேற்ப அந்த நம்பிக்கையும் பாசமும் என்றும் நிலைத்திருக்கும் வகையில் அவர்களுக்கு நாம் தொண்டு செய்ய வேண்டும்" என்று இராஜேந்திர சோழன் சொல்கிறபோது, மக்களிடத்திலே அக்கால மன்னர்கள் எவ்வளவு ஈடுபாடு வைத்திருந்தார்கள்; மக்கள் வாழ்வு சிறக்க வேண்டும் என்பதில் தங்களை எப்படி ஈடுபடுத்திக் கொண்டார்கள் என்பதை, இந் நூலாசிரியர், தெளிவாக எடுத்துக் காட்டுவதுடன், இக்கால அரசியல் பின்னணியோடு பேசுகிறார் என்று சொல்லுகின்ற வகையிலே ஓர் அரச நெறியை, ஒரு தூய்மையான நெறியைத் தம்முடைய நாவலிலே வற்புறுத்தி இருக்கிறார் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

இது ஒரு தனிச்சிறப்பு.

இன்றைக்கும் கங்கை கொண்ட சோழபுரத்தைப் பார்க்கின்ற போது, அந்தச் சிற்பங்கள் நம் மனத்தை விட்டு அகலாமல் நம்முடைய நெஞ்சத்தில் நிலையாக நிற்கக்கூடிய அளவிலே கலைச் சிறப்புடன் மிளிர்வதைக் காணலாம்.

'ஞான சரஸ்வதி' என்கிற சிற்பத்தைப் போன்ற ஒரு பெருமை வாய்ந்த சிற்பத்தை, நாம் தென்னாட்டில் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு சிற்பத்தை நாம் அங்கே பார்க்கிறோம்.

அதுமட்டுமன்று; அந்தக் கோயிலுக்கு இன்று நாம் சென்றாலும், வெயில் நாளிலே சென்றாலும், அந்தக் கோயில், வெப்பத்தைத் தராமல் ஒரு குளிர்ச்சியைத் தருவதை இன்றைக்கும் நாம் உணரலாம்.

அங்கே பூசை செய்கின்ற பட்டாச்சாரியாரைக் கேட்கிறபோது அவர் சொல்லுவார்: 'இங்கு எங்கேயோ ஒரு சுவரிலே சந்திரகாந்தக் கல் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அது நம்முடைய வெப்பத்தை யெல்லாம் வாங்கிக் குளிர்ச்சியைத் தருகிறது' என்று.

இதை இன்றைக்கும் நாம் அங்கே நிதர்சனமாக உணரலாம். அப்படிப் பட்ட கலைச் சிறப்புமிக்க கங்கை கொண்ட சோழபுரம் இன்றைக்கும் அழியாமல் நம் கண்முன்னே நிற்கிறது. ஆக, ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் அதை ஆண்ட அரசர்கள் எங்கே மடிந்தார்கள் என்ற நிலையெல்லாம் நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் கட்டிவிட்டுச் சென்ற அந்தக் கலைக் கோயில் இன்றைக்கும் மக்கள் சென்று பார்க்கக்கூடிய வகையிலே உயிருடன் விளங்குகின்றது என்பதை நாம் பார்க்கிறோம். அடுத்த செய்தி அது.

இதற்கு மேலே இந்த நாவலில் நாம் சிறப்பாகக் கருதத் தக்க செய்தி என்னவென்று நாம் எண்ணிப் பார்க்கிறபோது, அன்றாட வாழ்க்கையிலே அன்றாடங் காய்ச்சிகள் அல்லது சற்று மிகைப்பட்டவர்கள் என்கிற பாத்திரங் களையெல்லாம் கொண்டு வந்து, மக்களுடைய அன்றாட வாழ்க்கை அந்தக் காலத்தில் எப்படி இருந்தது என்பதைக் காட்டுகிறார்.

சாதாரணமாக முத்து வடிவு, குமுதம், மாணிக்க சேகரன் என்கிற சிற்பி என்பவர்களுடைய வாழ்க்கையையெல்லாம் எடுத்துச் சொல்லுகிற போது பேரரசர்களை மட்டுமன்றி; அந்தக் காலத்தில் வாழ்ந்த எளிய மக்களுடைய வாழ்க்கையும் எப்படி இருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற வகையிலே இந்த வரலாற்றுப் புதினத்தை நம்முடைய கலைமாமணி விக்கிரமன் புனைந்துள்ளார் என்பதை நாம் பார்க்கிறோம்.

எல்லாவற்றிலும் மேலான மகிழ்ச்சியுடைய ஒரு செய்தி, வரலாற்றுக்குப் பங்கம் ஏற்படாமல், வரலாற்றுக்கு முரணாக அமையாமல், வரலாற்றை யொட்டியே தம்முடைய கற்பனைப் பாத்திரங்களைப் படைத்து, வரலாறு மேலும் மெருகேறுவதற்குத் துணை செய்கிறார் என்பதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

இதற்கு மேலேயும் நாம் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். அது என்ன என்று நாம் பார்க்கிற போது – உரையாடல்களை வளர்த்துச் செல்கிற போது டாக்டர் விக்கிரமன், பாத்திரங்கள் எப்படி எப்படிப் பேசுவார்களோ அந்தப் பாத்திரங்களுக்கு அப்படி அப்படி உரையாடல்களை வைத்திருக் கிறார் என்பதும் தனிச்சிறப்பு. இதைத்தான் கூடு விட்டுக் கூடு பாய்தல் என்று சொல்வார்கள்.

ஒரு பாத்திரமாகவே ஆகி, அந்தப் பாத்திரம் என்ன பேசும், என்ன நினைக்கும் என்பதையெல்லாம் இவராகவே கற்பனை செய்து, உரிய முறையில் அங்கே உரையாடலைச் சிறப்பாக அமைத்துள்ளார் என்பது கலைமாமணி விக்கிரமனுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்றுதான் நான் சொல்வேன்.

'நந்திபுரத்து நாயகி' என்ற அந்த வரலாற்றுப் புதினத்தில் குந்தவை தேவியாரின் எண்ண ஓட்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருப்பது போல, இந்த நாவலிலே வீரமாதேவியின் எண்ண ஓட்டங்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதற்கும் மேலே ஒரு சிறப்பை நான் காண்கிறேன். சிதம்பரத் திருத்தலத்தின் மீது ஆசிரியர் கொண்டிருக்கிற ஈடுபாடு மிகச் சிறப்பாகப் புலப்படுகிறது. காரணம் நடராசப் பெருமானின் அந்த, தூக்கிய திருவடிக் கோலம் இன்றைக்கும் பெருமையாகப் பேசப்படுகின்றது.

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த இலங்கை அறிஞர் ஆனந்த குமாரசாமி பிள்ளை என்பவர், நடராச தத்துவத்தை ஆங்கிலேயரும் அறியும் வண்ணம் அற்புதமான ஆங்கிலத்திலே உருவாக்கியிருக்கிறார்.

இந்த நாவலைப் படிக்கின்ற போதும்; படிக்கின்ற உணர்வு ஏற்படுகின்ற போதும் நாமும் சிதம்பரம் சென்று தில்லை நடராசப் பெருமானுடைய களி நடனத்தைக் கண்டு களித்திட வேண்டும் என்ற எண்ண ஓட்டத்தை, கலைமாமணி டாக்டர் விக்கிரமன் உருவாக்கியிருக்கிறார்.

ஏறத்தாழ ஆயிரம் பக்கங்கள் கொண்ட இந்த நாவலில், கதை வழுவாமல், முன்னுக்குப் பின் முரண் இல்லாமல் இறுதி வரையில் கதையைக் கொண்டு செல்கின்ற ஆசிரியருடைய ஒரு புதுமைப் போக்கு, அவருடைய நினைவுப் போக்கு எல்லாம் பாராட்டத்தக்கனவாகும்.

இந்த நாவலில் அடுத்த ஒரு சிறப்பு என்று எண்ணிப் பார்க்கின்ற போது வரலாற்றிலே மிகச் சிறப்பான ஒரு காலத்தைத் தன்னுடைய கதைக்குப் பின்னணியாகக் கொண்டு, வரலாறு வழுவாமல், கங்கைக்குச் சென்று அங்கிருந்து தண்ணீரைக் கொணர்ந்து சோழ கங்கை ஏரியில் விட்டுப் புதிய கங்கை கொண்ட சோழபுரத்தை நிர்மாணிக்கின்ற இராஜேந்திர சோழனுடைய பெருமையை அருமையாய் விளக்கியிருப்பதைக் காண் கிறோம்.

அந்தக் கதைக்குப் பின்புலமாக வேங்கிப் பயணம், சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள் கொண்ட தொடர்பு, கங்கையைக் கொண்டு வந்த சிரமம்

இவ்வளவையும் கொண்டு வந்து இவ்வளவையும் அவன் வெற்றி பெற்று விட்டான் என்று காட்டுகிறபோது நமக்குப் பெரும் சிறப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு செய்தி – எந்த நாட்டின் மீது தமிழக அரசர்கள் படையெடுத்துச் சென்றாலும், அந்த அரசர்களை வென்று, மீண்டும் அவர்களையே அங்கே அரசாளச் செய்து விட்டுக் கப்பப் பணத்தை மட்டும் பெறுவார்கள் என்பதுதான். அதாவது சுருக்கமாகச் சொன்னால் ஆங்கிலேயர்கள் போல 'காலனி' ஆதிக்க உணர்வு நம் அரசர்களுக்கு ஏற்படவில்லை.

'தங்களை இகழ்ந்து உரைத்தார்களா? தம்முடைய வீரத்திற்கு மாசு கற்பித்தார்களா?' வெகுண்டு எழுந்து போய் அவர்களை அடக்கி, 'நீங்களே ஆண்டு கொண்டிருங்கள். ஆனால் கப்பத்தைக் கட்டுங்கள்' என்று தங்கள் நாட்டிற்கு வந்து விடுவார்கள்.

அதனால்தான், கீழ்த் தூர தேசங்களை வென்ற பிற்காலச் சோழர்கள் அங்கு 'காலனி' ஆதிக்கத்தைப் புகுத்தாமல் அந்த மன்னர்கள், தங்களைப் பெரு மன்னர்களாகச் சொல்ல வேண்டும் என்ற ஒரு நிலையைப் பார்க்கிறோம். அதைத்தான் இந்த நாவலிலும் பார்க்கிறோம்.

கங்கை வரை சென்ற இராஜேந்திர சோழன், கங்கை வரை ஆள வேண்டும் என்று எண்ணம் கொள்ளாமல், அங்கே ஆண்டிருந்த மன்னர்களையே ஆளச் செய்து விட்டு – ஆனால் தன்னுடைய மேலாண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற நிலையிலே வெற்றி பெற்றுத் திரும்புகிறான் என்பது, தமிழக வரலாற்றுக்குள்ள தனிப் பெருமை. அந்தப் பெருமையையும் மிகச் சிறப்பாகவே திரு.விக்கிரமன் இந்த நாவலில் கையாண்டுள்ளார் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

இன்னும் இந்த நாவலைப் பற்றிச் சொல்லிக் கொண்டே செல்லாம். ஆனால் முன்பே படித்து விட்டு நிறுத்திவிடக் கூடாது அல்லவா? நீங்களும் இந்த நாவலிலே தோய்ந்து பார்க்க வேண்டும். அப்போதுதான் நாம் அந்தக் காலத்திற்கே சென்று அந்தக் கால அனுபவங்களைத் துய்க்க முடியும்.

இராஜராஜ சோழன், அவனை வளர்த்து ஆளாக்கிய குந்தவ்வை, இங்கே இராஜேந்திர சோழன் – அதே இளைய பிராட்டி இவனையும் ஆளாக்கியிருக்கிறார் என்ற செய்தி – அரண்மனையிலே பேரரசிகளாயிருந்தாலும் அவர்களுக்குள்ளே என்ன என்ன எண்ண ஓட்டங்கள் வருகின்றன – அதனாலே அரசு எந்தளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதையெல்லாம் நன்றாகப் புனைந்திருக்கிறார் கலைமாமணி விக்கிரமன் அவர்கள்.

ஆதலாலே இந்த நாவலை நீங்கள் எடுத்துப் படித்தால் முடிக்கும் வரை நீங்கள் கீழே வைக்க முடியாது என்கிற அளவிற்கு, மிகுந்த சுவாரஸ்யத்துடன் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் புனைந்துள்ளார்கள். இது அவருக்குக் கிடைத்திருக்கும் மற்றொரு வெற்றி. 'பொன்னியின் செல்வன்' என்ற 'கல்கி'யின் வரலாற்று நாவலுக்கு முன்னுரை எழுதிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 'யோக்கியனைக் கூடத் திருடத் தூண்டுபவை மணியத்தின் படங்கள்' என்றார். அதே பாராட்டுரை, இந்த நாவலுக்கு ஓவியம் வரைந்துள்ள கோபுலுவின் சித்திரங்களுக்கும் பொருந்தும் என்று கூறிப் பாராட்டி மகிழலாம்.

இன்னும் இது போன்ற நாவல்களைத் தொடர்ந்து அவர் எழுதிக் கொண்டு வருவாரேயானால் தமிழக வரலாறு பளிச்சிடும். தமிழக வரலாற்றினுடைய மிகச் சிறந்த பக்கங்கள், அத்தியாயங்கள் நமக்குத் தென்படும்.

அப்படிப்பட்ட ஆற்றல் உடையவராக அவர்கள் நம்மிடத்தில் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆற்றலை முழுவதுமாக அவர்கள் தமிழகத்திற்குத் தரவேண்டும். அதற்கு நன்றிக் கடனாகத் தமிழகம் இங்கே ஒரு 'வரலாற்றுப் புதினப் பேரரசர்' என்று அவரைப் போற்றுகின்ற வகையிலே தமிழ் மக்கள் நெஞ்சார்ந்த நன்றியைச் செலுத்த வேண்டும். 'அவரது தொண்டு வாழ்க! அவரது கை சிறக்க!' என்று வாழ்த்தி தமிழ் மக்களுக்கு இந்த அருமையான 'கங்காபுரிக் காவலன்' என்ற நாவலை நான் அறிமுகப்படுத்துவதிலே பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நாவல் ஆசிரியர் என்னுடைய பெரும் நம்பிக்கைக்கும் பெரும் வணக்கத்திற்கும் உரியவர் என்பதை இந்த நாவலின் மூலம் 'நந்திபுரத்து நாயகி'யைத் தொடர்ந்து இந்த நாவலின் மூலம் தமிழ் உலகிற்குக் கட்டியம் கூறுகிறார் என்று சொல்லி – மீண்டும் ஒருமுறை நாவலாசிரியர் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்களை வாழ்த்தி முடிக்கிறேன்; வணக்கம்.

சி. பாலசுப்பிரமணியன்
சென்னை – 29. (முன்னாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.)

## இந்தப் புதினத்திற்குச்
## சித்திரங்கள் வரைந்து சிறப்பித்த

# கோபுலு அவர்களின் அன்பு உரை

பல ஆண்டுகளுக்கு முன் என் அருமை நண்பர், ஆசிரியர் விக்கிரமன், என்னை மதித்து அவர் புனையப் போகும் புதியதொரு நவீனம், 'கங்காபுரிக் காவல்'னுக்குச் சித்திரம் வரையும்படி கேட்டுக் கொண்டார்.

காவிரி மைந்தர்களான சோழ மன்னர்கள் வாழ்ந்து, செங்கோலோச்சி சோழ மண்டலத்தை மகோன்னதமாகத் திகழச் செய்தார்கள். கரிகாலன் காலந் தொட்டு வழிவழியாகப் புகழுக்குப் புகழ் சேர்த்து வாழ்ந்த காலத்தை, ஆசிரியர் விக்கிரமனை விட யாரால் சிறப்பாக வர்ணிக்க முடியும்?

ஆசிரியர் விக்கிரமன், சோழ மண்டலத்தை நிலைக்களனாக வைத்துப் புகழ்பெற்ற பல நவீனங்களைத் தீட்டியுள்ளார்கள். 'கங்காபுரிக் காவல்'னில் இராஜ ராஜனையும், அவர் மைந்தர் இராஜேந்திர சோழனையும் கதைப்பாத்திரங்களாக்கி வரலாற்று நாவலைப் புனைந்துள்ளார்.

இராஜராஜனின் கற்பனையில் உருவான தஞ்சைப் பெருவுடையார் திருத்தளிகை ஒரு மகோன்னதப் படைப்பு. அதை உருப்பெறச் செய்வதில் தூண்டுகோலாக நின்றவர்கள் இருவர். ஒருவர் இராஜ ராஜனின் சகோதரி குந்தவ்வை பிராட்டி. மற்றொருவர் கருவூர்த் தேவர் என்று கூறப்பட்ட கருவூர்ச் சித்தர்.

கருவூர்ச் சித்தர் தஞ்சைக் கலைக்கோயிலை இராஜராஜனைக் கொண்டு உருவாக்கினார். அத்துடன் அவர் ஆசை அடங்க வில்லை. (சித்தர்களுக்கு ஆசை உண்டா என்று கேட்கலாம் - நமது கதாசிரியர் மனத்தில் அப்படியோர் ஆசை ஏற்பட்டிருக்க லாம்) மற்றுமொரு கலைக் கோயிலைச் சமைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கலாம். அதுவும் ஒரு சித்து விளையாட்டு போலும்!

அதன் காரணத்தைப் பற்றி ஆசியரின் கற்பனையுடன் என் கற்பனையையும் கலந்து இந்த முன்னுரையை எழுதுகிறேன். கருவூர்ச் சித்தரின் ஆசையின் தடத்திலே செல்கிறேன்.

சரி, மற்றொரு கோயிலை உண்டாக்குவது எங்கே? சித்த புருஷரின் மனத்திலே நடக்கும் நாடகத்தைக் கற்பனையாக எண்ணுகிறேன். தஞ்சைக் கோயிலை உண்டாக்க ஏற்ற இடமாக ஏற்கெனவேயே தஞ்சை நகரம் இருந்தது.

புதுக்கோயிலை எங்கே உண்டாக்குவது? மதுரையில் கோயில் ஏற்கெனவே இருக்கிறது. சிதம்பரத்திலும் அப்படியே. ஆகை யால் புதிய கோயிலுடன், ஒரு புதிய நகரத்தையும் நிர்மாணிக்க வேண்டும். ஓர் ஏரியும் உண்டாக்க வேண்டும். அதற்காக காவிரி, கொள்ளிடம் இடையே ஆன வனப் பிரதேசத்தில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்கிறார். சிற்பிகள் கோயில் கட்டக் கற்களைத் தேடு கிறார்கள். கல்லுளிகள் போன்ற உபகரணங்களைச் சேகரிக் கிறார்கள். வேலையைத் தொடங்குகிறார்கள்.

அதேபோல கருவூர்த் தேவர் என்ற மகா சிற்பி புதிய கோயிலை உண்டாக்க, கற்களைத் தேர்ந்தெடுக்கிறார்.

எந்தக் காரணத்தையும், காரியத்தையும் நியாயப்படுத்த வேண்டுமல்லவா? இராஜராஜ சோழன் மகன் இராஜேந்திர சோழன் மனத்தில் சித்தர் புகுந்து ஓர் ஏக்கத்தை ஏற்படுத்து கிறார். அதற்கு வடிகாலாக வெளியிட்ட ஓர் அற்புதச் செயல், வீரமாதேவியை, எங்கோ ஒரு கிராமத்திலிருந்து கொண்டு வந்து கதாநாயகியாக ஆக்குகிறார்.

தஞ்சைக் கோயிலை உருவாக்கிய சிற்பிகளை, கலைஞர்களை மேற்கொண்டு கலைப்பணி புரியப் புதிய இடமின்றி அவர்கள் தெற்கே மதுரையில் அவதியுறுவதையும் எண்ணினார் போலும்! அவர்களையும் புதிய இடத்துக்கு அழைத்து வருகிறார்.

கருவூர்ச் சித்தர் பல கதாபாத்திரங்களையும், அவர்களின் பலவிதச் செயல்களையும் சேர்த்து ஒரு புதிய நாடகத்தையே ஏற்படுத்துகிறார். எதற்காக? ஒரு புதிய கோயில் உண்டாக்க. அவர் சூத்ரதாரியாக எங்கும் இருப்பார். எதிலும் பட்டும் படாமல் கதாபாத்திரங்களைக் கொண்டே செயல் புரிவார். காதல், ஏக்கம், ஆசை, பொறாமை, கோபம், வீரம், சபதம் எல்லாமே சுவையாக அவர்கள் நடிப்பில் ஏற்படுத்துகிறார்.

இது கருவூர்த் தேவரின் சித்து விளையாட்டு என்று நான் என் கற்பனையில் உண்டாக்கிய நியாயப்படுத்தல். சரி, இதில் ஆசிரியர் விக்கிரமனின் பங்கு என்ன?

கருவூர்த் தேவரின் மனத்தில் நடப்பதை அவருக்கே தெரியாமல் சித்தரின் மனத்தில் உட்புகுந்து ஆசிரியர் விக்கிரமன் தன் எழுத்துச் சித்தியால் அறிந்து கருவூர்ச் சித்தரையே கதாநாயகர்களுக்கு மேற்பட்ட கதாநாயகராக ஆக்கியுள்ளார்.

சித்தர் மூலமாய்ப் புனையப்பட்ட இந்தச் சரித்திர நவீனம், சோழ நாட்டிலே தயாரிக்கப்பட்ட 'தகதகா' பட்டுச் சேலை.

பட்டு நூல் போன்ற மென்மையான கதை வளர்ச்சியும், அதில் வண்ண வண்ண நுணுக்கமான பொன் பூக்கள் புனைந்த சேலை, இராஜேந்திரனின் கம்பீரம், வீரமாதேவியின் அற்புத மனம், மற்ற பாத்திரங்கள் ஊடே இழையும் நயம், தங்கப் மலர்கள் போல் ஜொலிக்கும், மின்னும் உணர்ச்சி வெள்ளங்கள், (கொள்ளிடத்து வெள்ளத்தை மிஞ்சும்படி) அழகிய தலைப்பும், கரையும் கொண்ட நகாசு மிக்க உன்னதப் படைப்பு.

கருவூர்ச் சித்தர் மற்றவர்களைக் கொண்டு கோயில் சமைத்தார். ஆசிரியர் விக்கிரமன் கருவூர்ச் சித்தரைக் கொண்டு, இந்த நவீனத்தைப் படைத்தார். கோயில் முடிந்தது. சித்தரின் ஆசை முடிவுற்றது. ஆசிரியர் விக்கிரமனின் நவீனமும் முடிவடைகிறது. எப்படி?

சித்தரின் விளையாட்டை கடைசியில் கவிதையாக வெளிப்படுத்தி மற்ற கதாபாத்திரங்கள் பார்த்துக் கொண்டிருக்க, சித்தரை நீர்மேல் நடக்க வைத்து, தொடுவானத்திலே புள்ளியாக மாற்றி, ஒளியாய்க் கலந்ததை உணர்ச்சியுடன் சித்திரிக்கிறார். இந்த சரித்திர எழுத்துச் சித்தர் ஆசிரியர் விக்கிரமன்.

அற்புதமான அழகிய கூறைச் சேலை இந்த நவீனம்.

- கோபுலு

## என்னுரை

முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு, 1959 ஆம் ஆண்டு 'அமுதசுரபி' நவம்பர் இதழில், 'நந்திபுரத்து நாயகி' வரலாற்றுத் தொடர் கதையை எழுதத் தொடங்கினேன். 'முன்னுரை' என்ற தலைப்பில் அந்தத் தொடரை எழுதத் தொடங்கிய காரணத்தை அப்போது விளக்கி எழுதினேன்.

தமிழ்நாட்டில் வரலாற்று நாவல் எழுதப் புகுந்த முதல் எழுத்தாளர் அமரர் 'கல்கி.' அவருடைய சிரஞ்சீவிப் படைப்பான 'பொன்னியின் செல்வன்' கதை அளித்த ஊக்கத்தை முன்னிறுத்தி அந்த நாவலின் வரலாற்றுக் கதைப் பாத்திரங்களைத் தொடர்ந்து, எழுதப்பட்ட நாவல் 'நந்திபுரத்து நாயகி.'

மிகவும் பயபக்தியுடன் அந்தத் தொடரை ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் எழுதினேன். தமிழ்ப் பெருமக்கள் அமோகமான வரவேற்பை அந்தப் புதினத்துக்கு அளித்தார்கள். நன்றாக நினைவிருக்கிறது. 'அமுதசுரபி'யின் விற்பனை இரட்டிப்பாகியது. புத்தக வடிவில் மூன்று பாகங்கள் கொண்ட 'நந்திபுரத்து நாயகி' பல பதிப்புகள் விற்பனையாகி விட்டது. இன்றும் பலர் அதை விரும்பி வாங்கிப் படித்து வருகிறார்கள். 'சுயமுரசு' கொட்டுவதற்காகக் கூறவில்லை; அந்தப் புதினத்திற்குக் கிடைத்த பாராட்டுதலுக்கும் புகழுக்கும் என்ன காரணம்? ஒன்றன்று; மூன்று காரணங்கள்.

முதலாவது : 'கல்கி'யின் அமர இலக்கியமான 'பொன்னியின் செல்வன்' தமிழ் மக்களிடையே ஏற்படுத்திய தாகம்.

இரண்டாவது: அந்த வரலாற்றுப் புதினத்தின் அழியாத கதைப் பாத்திரங்களான வல்லவரையர் வந்தியத்தேவன், இளையபிராட்டி குந்தவ்வை, அருள்மொழி வர்மர் ஆகியோர். சோழ இளவரசன், அரச குடும்பத்தின் தலைமகன் ஆதித்த கரிகாலனைக் கொன்றது யார் என்றறிய ஆவலுடனிருந்த தமிழ் வாசகர்கள்.

மூன்றாவது காரணம்: தமிழ்ப் பெருமக்களுக்குத் தமிழ்நாட்டு வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பு. அந்தத் துடிப்பு இன்றளவும் மாறவில்லை.

தமிழ்நாட்டில் பொற்காலத்தைப் படைத்த இராஜராஜ சோழனைக் கதைத் தலைவனாகக் கொண்டு பல புதினங்கள் எழுதலாம். அந்த வகையில் சோழர்கள் காலத்தை நிலைக்களனாய்க் கொண்டு பல வரலாற்றுப் புதினங்களை எழுதினேன். குலோத்துங்கன் சபதம், சித்திர வல்லி, மாறவர்மன் காதலி, ராசாதித்தன் சபதம், தியாக வல்லபன், தெற்கு வாசல் மோகினி, யாழ்நங்கை, சோழ இளவரசன் கனவு, கொன்றைமலர்க்குமரி, சோழ மகுடம், ஒரு வாள் ஒரு மகுடம் இரு

விழிகள், ராஜராஜன் சபதம் (அண்மையில்) போன்ற இன்னும் பல புதினங்கள் எழுதலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் 'அமுதசுரபி'யில் எழுதிய 'வந்தியத் தேவன் வாள்' வரலாற்றுப் புதினத்தில் இளையபிராட்டி குந்தவ்வை, இராஜராஜன், வந்தியத் தேவன், இராஜராஜனின் அருமைப் புதல்வன் மதுராந்தகன் ஆகியோர் முக்கியமான வரலாற்றுப் பாத்திரங்கள். குறிப்பிட்ட ஓர் இடத்தில் அந்தத் தொடரை முடித்தேன். இரண்டாவது பாகத்தைப் பிறகு தொடங்க எண்ணினேன்.

ஆனால், என் இதயத்தில் பல ஆண்டுகளாக மறைந்து கிடந்த சிறு விதை முளைவிடத் துடித்துக் கொண்டிருந்தது. அழகிய அரும்பு, அலருவதற்குத் தருணம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

இராஜேந்திர சோழனைக் கதைத் தலைவனாகக் கொண்ட 'கங்காபுரிக் காவலன்' வரலாற்றுப் புதினத்தை - பிரசவிக்க இனியும் காலங்கடத்தக் கூடாது என்ற துடிப்பு மேலோங்கியதால், 'வந்தியத்தேவன் வாள்' இரண்டாம் பாகத்தை உடனே எழுதாமல் 'கங்காபுரிக் காவலன்' கதையை எழுதினேன்.

உலகப் பேரரசர்கள் வரிசையில் வைத்துப் போற்றத் தகுந்த இராஜராஜனுடைய திருமகன் இராஜேந்திரன் தந்தைக்குச் சற்றும் சளைத்தவரல்லர்.

கடல் கடந்த நாடுகளுக்குச் சென்றது, பாண்டிய, சேர நாடுகளை வென்றது, சாளுக்கியர்களுக்குக் காவலனாக விளங்கியது - எதிலும் தந்தைக்குச் சமமாக - ஒரு படி மேலேயே இருந்தார் எனலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில இராஜராஜன் பெயரை அழியாது நிலை நிறுத்துகிறது. அதுபோல், கங்கைகொண்ட சோழபுரத்தில் கோயிலொன்றை எழுப்பினார் இராஜேந்திரன். கங்கை பாயும் வடநாட்டிற்குச் சென்று அரசர்களை வென்று கங்கை நீரைக் கொண்டு வந்து 'கங்கை கொண்ட சோழபுரம்' என்று புதிய நகரை உருவாக்கினார். தலைநகரைத் தஞ்சையிலிருந்து மாற்றினார். ஏன் அப்படி? தஞ்சையில் பெருவுடையார் கோயிலிருக்கும்போது மற்றொரு பெருவுடையார் கோயில் ஏன்? தஞ்சை தலைநகராக இருக்க, புதிய நகரம் ஏன்?

ஏன்? ஏன்? ஏன்?

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக என் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும் கேள்வி. அந்தக் கேள்வியின் விளைவாக எழுந்ததுதான் 'கங்காபுரிக் காவலன்.'

இரா.நாகசாமி அவர்களுடன் நேரம் போவது தெரியாமல் 'கங்காபுரிக் காவலன்' கதையைப் பற்றிப் பேசினேன்.

இராசேந்திர சோழனைப் பற்றியும், அவர் படைத்த கோயிலைப் பற்றியும் கோயிலிலுள்ள சிற்பங்களைப் பற்றியும் நேரம் போவது தெரியாமல் இருவரும் பேசினோம்.

கல்வெட்டு சிற்ப ஆராய்ச்சியாளர் டாக்டர் கலைக்கோவன், புலவர் தாமரைக் கண்ணன், கல்வெட்டு ஆராய்ச்சியாளர் ஸ்ரீரங்கம் ஸ்ரீதரன் போன்ற பல நண்பர்களுடன் என் ஐயத்தைப் பகிர்ந்து கொண்டு விவாதித்தேன்.

ஓவியத் திலகம் 'சோபுலு' அவர்கள் சுலபமாகத் தொடர்கதைக்குச் சித்திரம் வரைய ஒப்புக் கொள்வதில்லை. 'கங்காபுரிக் காவலன்' கதையை எழுதப் போவதாகச் சொன்னவுடனேயே, அவர் தம் சித்திரத்தால் அதனை அழகுபடுத்த ஒப்புக் கொண்டார்.

'கங்காபுரிக் காவலன்' கதையைத் தொடங்கிய போதே என் செவிகளில் ஆடவல்லானின் நடன ஒலியும், பொன்னியின் புதுப் புனல் பாயும் அழகும், சோழர் குலப் பெண்டிரின் கலகலவெனும் சிரிப்பொலியும், அழகு மங்கையரின் வேல்விழிக் கூர்மையும், வீரர் தம் கை வாள் மின்னும் ஒளியும் கருதி கூட்டி ரீங்காரமிடத் தொடங்கின.

1991ஆம் ஆண்டு பிப்ரவரி மாத 'அமுதசுரபி' இதழில் 'கங்காபுரிக் காவலன்' கதையை எழுதத் தொடங்கினேன். 'தமிழ்ப் பெரு மக்களுக்கு, 'கங்காபுரிக் காவலன்' புதினத்தைக் காணிக்கை ஆக்குவதில் பெருமையடைகிறேன்' என்று எழுதினேன். உண்மை. உயர்வு நவிற்சி இல்லை. நான் எழுதும் வரலாற்றுப் புதினங்களுக்கு, சென்ற நாற்பது ஆண்டுகளாக தமிழ்ப் பெருமக்கள் ஆதரவு தந்திராவிடில் முப்பதுக்கும் மேற்பட்ட வரலாற்றுப் புதினங்களை நான் எழுதியிருக்க முடியுமா?

இந்தப் புதினத்தைத் தொடராக எழுதும்போது ஒவ்வோர் அத்தியாயத்திலும் அந்தப் பாத்திரங்கள் எதிரே தோன்றி என்னுடன் பேசுவார்கள். 'வீரமாதேவி பாத்திரத்தைக் கூர்மையான கத்தியில் நடக்குமாறு செய்திருக்கிறீர்களே' என்று பலர் கூறினார்கள்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளும், சகோதரருக்காக வாழ்ந்த திலகவதியாரும் உதித்த தமிழ்நாட்டில் வீரமாதேவி போன்றவர்கள் வாழ்ந்திருக்க முடியாதா?

வரலாற்றுக் கதைகளுக்கு முடிவேயில்லை. வீரமாதேவியைப் பற்றி சோழ வரலாற்றுக் கல்வெட்டுகளில் முக்கியமான குறிப்பு கிடைத்தது. மாபெரும் தியாகம் செய்தவள் வீரமாதேவி. தியாக மனப்பான்மை உடைய மங்கையர்க்கரசியைப் படைக்கும்போது மிக மிகக் கவனம் வேண்டுமன்றோ?

இந்த வரலாற்றுப் புதினத்தை நான் தொடர்கதையாக எழுதத் தொடங்கியபோது பிரபல எழுத்தாளர், பத்திரிகையாளர், 'சாவி' அவர்கள் வரவேற்றுப் பாராட்டினார்கள். 'கோபுலு'வின் சித்திரங்களையும் புகழ்ந்தார்.

''திரு.கோபுலுவின் சித்திரம் என் கச்சேரிக்குக் கிடைத்த நல்ல பக்கவாத்தியம்'' என்றேன், அடக்கமாக.

''அப்படிச் சொல்லாதீர்கள்; இரட்டை நாயனம் என்று சொல்லுங்கள்'' என்றார் சாவி.

அந்தச் சொற்களில் எவ்வளவு ஆழமான கருத்துகள்!

ஆம். திரு.கோபுலுவும் நானும் சேர்ந்தே 'கங்காபுரிக் காவலன்' இரட்டை நாயனக் கச்சேரியை நடத்தியிருக்கிறோம்.

ஆறு ஆண்டுகள் 'அமுதசுரபி' மாத இதழில் தொடர் கதையாக வெளிவந்தது கங்காபுரிக் காவலன். வார இதழில் ஆறு ஆண்டுகள் தொடர் கதையாக வந்திருந்தால் 300-க்கு மேற்பட்ட இதழ்கள் எழுதக் கிடைத்திருக்கும். மாத இதழில் 72 இதழ்களில், ஒரு வரலாற்றுப் புதினத்தை எழுதி அதன் பெருமையைக் கோபுரக்கலசமாக்க வேண்டும்!

இந்தப் புதினம் இத்துடன் முடிந்துவிடவில்லை. வீரமாதேவி, இராசேந்திர சோழனுக்கு உறு துணையாக இருந்து ஆற்றிய பணிகள் மகத்தானவை. வாய்ப்பு ஏற்படும் போது மற்றொரு புதினம் எழுதும் அளவுக்கு வீரமாதேவியின் செயல்கள் திகழ்ந்துள்ளன. மகத்தான தியாகத்தையே தன் வாழ்க்கையின் இறுதியில் செய்திருக்கிறாள் வீரமாதேவி.

தொடர்ந்து வெளிவந்தபோது படித்த வாசகர்கள் பலர் நேரிலும், கடிதம் மூலமும் பாராட்டினர். அவர்களுள் திரிபுவனத்திலிருந்து தாமரைச் செல்வி சுந்தர் என்ற வாசகர் ஒவ்வோர் இதழ் வந்தவுடனும் பாராட்டுவார். நானே உணராத பல நயங்களை எடுத்து விளக்குவார். கடிதத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்வேன். என் கதைச் சிறப்பைவிட அவர் எழுத்தில் அத்தனை நயம்!

அவர் பாராட்டி எழுதிய கடிதத்தையும் மற்றும் பலர் வரைந்த கடிதங்கள் சிலவற்றையும் இந்நூலில் வெளியிடுவதில் பெருமை அடைகிறேன்.

இந்தத் தொடருக்காகவே 'அமுதசுரபி'க்கு சந்தா செலுத்தி மகிழ்ந்தவர், அமரர் கலைமாமணி ஜி.உமாபதி. ஒவ்வோர் இதழ் வெளிவந்தவுடனும் அவர் கதையைப் பற்றிக் கூறிப் பாராட்டுவார். புகழ்ந்து பேசுவதில் அவருக்கு இணை அவரே. 'இந்தப் புதினம் நூல் வடிவில் வெளிவர வேண்டும்; அதன் வெளியீட்டு விழாவை நான்தான் முன்நின்று நடத்துவேன்' என்றார். அவர் அமரருலகிலிருந்து வாழ்த்துவார் என்பதில் ஐயமில்லை. மிகுந்த ஊக்கத்தை அளிக்கும் வகையில் அவ்வப்பொழுது பாராட்டியதையும் இன்று நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

கங்காபுரிக் காவலன் வரலாற்றுப் புதினத்தைத் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் அமுதசுரபியில் வெளியிட்ட அமுதசுரபி பதிப்பாளர் திரு ஏ.வி.எஸ். ராஜா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கங்காபுரிக் காவலன் வரலாற்றுப் புதினத்தை நூல் வடிவில் வெளியிட முன்வந்த நர்மதா பதிப்பக உரிமையாளர் திரு. இராமலிங்கம் அவர்களுக்குச் சிறப்பான நன்றியைத் தெரிவிப்பது மிக முக்கியம். நூலை மிக அழகாகக் கொண்டு வருவதற்கு எதை உவமையாகச் சொல்ல முடியும்? அந்த அழகிய சோழ சிற்பங்களைத் தான் சொல்லலாம்.

இந்தப் புதினத்தின் ஒளிக்கதிரச்சு (லேசர்) பக்கங்களைச் சரிசெய்து பக்கங்களாக ஆக்கிய ஓவியர் சிவகுமாருக்கும், பிழைதிருத்தி உதவிய திரு. கு.சண்முகசுந்தரம் அவர்களுக்கும், 'அமுதசுரபி' இதழில் தொடராக வெளிவந்த போது ஒளிக்கதிர் அச்சிடும் போதே பாராட்டிய திரு.நாகராஜகுமாருக்கும் நான் சிறப்பான நன்றியைத் தெரிவிக்க வேண்டும். இந்தப் புதினம் எழுதத் தொடங்கும்போது புலவர் தாமரைக் கண்ணன் அவர்களுடன் மணிக்கணக்காக விவாதித்தது நினைவுக்கு வருகிறது. அவரும், திரு.நீலவன் அவர்களும், போட்டோ நிபுணர் சிக்கி அவர்களும் வரலாற்றுத் தொடர்பான குந்தவ்வை தேவியார் கட்டிய கோயில்கள் உள்ள பல ஊர்களுக்கும், இராசேந்திர சோழர் கல்விச்சாலை நடத்திய ஊர்களுக்கும், வீரநாராயணப் பேரேரிக்கும் சென்று வந்ததை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

நீண்ட என்னுரையை முடிக்கும் முன்பு பேராசிரியர் டாக்டர் சி.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றி சொல்வதில் நான் பெருமையடைகிறேன். 'கங்காபுரிக் காவலன்' தொடராக வரும்போதே, என்னைப் பாராட்டி உற்சாக மூட்டிய அந்தப் பெருந்தகை, இந்த நூலுக்கு முன்னுரை அளிக்க மிகவும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார். அவருக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஓவியர் 'கோபுலு' அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மற்றொரு புதினம் எழுதி அதிலும் 'கோபுலு' அவர்களே சித்திரம் வரைய வேண்டும் என்பது என் பேரவா.

– விக்கிரமன்

# வாசக நெஞ்சங்களின் வாழ்த்து வரிகள்

நிலவு தேய்பிறை ஆகலாம்; தேய்பிறை நிலவு ஆகலாம், எத்தனை நிலவு வந்து போனாலும் ஆகாயம் அப்படியே தான் இருக்கிறது.

அதுபோல் புதின உலகில் நிலவு போல் எத்தனையோ புதினங்கள் தோன்றி மறைந்தாலும் ஆகாயம் போல் எங்கும் பரவி நிலைத்து நிற்கிற வரலாற்றுப் புதினம் ஒன்று உண்டு என்றால் அது 'கங்காபுரிக் காவலன்' ஒன்று மட்டுமே என்று கூறலாம்.

வரலாற்றுப் புதினம் எனும்போது 'அறிந்து கொள்ளக் கூடிய' தமிழில் எழுதுவது இயல்புதான். ஆனால் எல்லாராலும் படித்து அறியத்தக்க எளிய தேன் தமிழில், படித்துச் சுவைக்கக் கூடிய அளவில் எழுதுவதைப் பார்க்கும்போது 'கலைமாமணி' விக்கிரமன் அவர்களுக்குத்தமிழின் மேல் உள்ள பற்றும் தமிழை நேசிக்கும் நெஞ்சமும், தெரிகிறபோது-

'பயிற்றுப் பல கல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப, இந்தப் பாரை உயர்த்திட எளிய தமிழில் புதினம் படைக்கும் ஆற்றலில் டாக்டர் விக்கிரமன் அவர்களின் தமிழ்த் தொண்டு தெரிகிறது.

ஏதோ மாய சக்தி போல் எளிய தமிழில் கவர்ந்திழுக்கும் புதினத்தைப் புரட்டப் புரட்ட தஞ்சைத் தரணியும், கங்கை கொண்ட சோழபுரமும், நாடும் நகரமும் தோன்ற - சரித்திர காலத்திற்கே வந்து விட்டோமோ என்கிற பிரமையை ஏற்படுததி நெஞ்சை அள்ளிக் கொண்டு போகிறான், 'கங்காபுரிக் காவலன்.'

என்னையும் ஒரு பாத்திரமாக்கி, தஞ்சை - கங்கை கொண்ட சோழபுரம் எல்லாவற்றையும் அனுபவித்து, சுற்றிப் பார்க்க வைத்த அதன் உள்ளடங்கிய சக்தியை விவரிக்கப் பக்கங்கள் போதா.

காப்பிய நாயகி வீரமாதேவியின் நெஞ்சுரம், கலையின் மேல் கொண்டுள்ள காதல், தியாக உள்ளம், பிரம்மச்சர்ய விரதம் பூண்டு தஞ்சைக்கு நிகரான கோயில் ஒன்றை எழுப்ப அவள் படும்பாடுகள், இவையெல்லாம் அந்தக்கால நிகழ்ச்சிகளோடு நம்மைப் பிரமிக்க வைக்க -

தஞ்சைத் தரணி, சோழ சாம்ராஜ்யம், வீரம், தீரம், போர், நாட்டுப்பற்று, ராஜதந்திரம், கலை உணர்வு, கவிதை, நடனம், காதல் இவ்வளவையும் கலைமாமணி அவர்கள் நேரில் பார்த்தது போல் தன் சிந்தனை உளியால் மிளிரச் செய்ததை இராஜேந்திர சோழன் மட்டும் இருந்திருந்தால் வியந்து போற்றி மகிழ்ந்திருப்பார்.

அவதார புருஷர்கள் என்று அழைக்கக்கூடிய சித்தர்களைப் பற்றி எல்லாராலும் கூறிவிட முடியாது. தோன்றா ஞானம் வேண்டும்.

பதினெட்டு சித்தர்களில ஒருவரான கருவூர்ச் சித்தர் புதினத்தில் தோன்றும் போதெல்லாம் கலைமாமணி விக்கிரமன் அவர்களின் எழுததின் மூலம் தன்னைக் காட்டிக் கொள்கிறாரோ என்கிற எண்ணம் எழாமல் இருக்க முடியாது.

மேலும், இது இராஜேந்திர சோழன் காலத்தில் வாழ்ந்தவர்களின் சங்கல்பமாகக்கூட இருக்கலாம். அவர்களைப் பற்றிய செய்திகள் இலைமறைவு காய் மறைவாகப் போய்விட்டன என்ற ஆதங்கமாகவும் இருக்கலாம்.

அதுதான் கலைமாமணி விக்கிரமன் அவர்களின் சிந்தனையில் ஊறி எழுந்து சுவைபட்டு நிறைவேறி இருக்க வேண்டும்.

'படம் பிடித்தாற்போல்' என்று சொல்லுவோமே, அதை விடுத்து பாத்திரங்களாகவே மாறிவிடும் வல்லமை படைத்த இரண்டு பாகங் களைக் கொண்ட கங்காபுரிக் காவலனுக்கு எத்தனை பெரிய விருது கொடுத்தாலும், விருதுக்கே பெருமை ஏற்படும்.

பசுமரத்தாணி போல் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளத் தில் நிலைத்துவிட்ட இப்புதினத்தை உருவாக்கிய கலைமாமணி விக்கிரமன் அவர்களை! எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டிக் கொண்டே இருக்கலாம்.

'கோபுலு'வின் சித்திரங்களோடு ஒவ்வொரு மாதமும் 'அமுதசுரபி' இதழ் வெளி வருகையில் அடுத்து என்ன நிகழுமோ, என்ன நிகழுமோ என்கிற ஆவலைத் தூண்டச் செய்த இவ்வரலாற்றுப் புதினம் ஒட்டு மொத்தமாக ஒரு புதையல் போல் கையில் கிடைத்துப் படிக்கும்போது கீழே வைக்கவே மனம் வராது என்பது திண்ணம்.

தஞ்சைக்குப் பெரிய கோயில் என்றால், புதினத்திற்கு தேன் தமிழ் வித்தகர் விக்கிரமன் அவர்களின் 'கங்காபுரிக் காவலன்' என்பதைப் படிக்கின்ற யாராலும் மறுக்க முடியாது.

தாமரைச்செல்வி சுந்தர்,
திருபுவனம்

கங்கை கொண்ட சோழேச்சுரத்தின் கம்பீரத்தை நேரில் தரிசித்திருக் கிறேன். அதிலுள்ள சிற்ப அழகு ஓர் அற்புதமல்லவா? ஆனால் இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரம் தலைநகரை நிறுவியது - அம்பலவாணன் மீது கொண்ட அளவற்ற பக்தியால்தான் என்பதை விக்கிரமன் அவர்களின் விளக்கத்தின்மூலம் இப்போதுதான் உணர்ந்து

மெய்சிலிர்த்தேன். கங்காபுரிக் காவலன் ' சோழகங்கப் பொன்னேரி' உள்ள நாள் மட்டும் வாசகர் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்.

- தி.சு.பாலசுப்பிரமணியன்
திருவண்ணாதபுரம்.

டிசம்பர் 1995 'அமுதசுரபி' வந்தது. 'கங்காபுரிக் காவலன்' டாக்டர் விக்கிரமன் அவர்களின் கைவண்ணத்தில் விறுவிறுப்பாகவும் சுறுசுறுப்பாகவும் ஓடி, மனத்தில் நிற்கிறான். கங்காபுரிக் காவலன், அறிந்தவர்கள் அனைவர் நெஞ்சங்களிலும் என்றும் நிலைத்து நிற்பான்; எழுதிய ஆசிரியரும்தான்! டாக்டர் விக்கிரமன் அவர்களின் அடுத்த தொடரை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

- இராம. வேதநாயகம்,
வடமாதிமங்கலம்.

டாக்டர் விக்கிரமன் அவர்கள் எழுதிய 'கங்காபுரிக் காவலன்' தொடர்கதை மிக அற்புதம். அதில் கடைசியாக சக்கரவர்த்திகள், சித்தர் பெருமானிடம் வீரமாதேவியைத் தன்னுடன் வாழக் கோரியதற்கு, வீரமாதேவி சித்தரிடம் கூறுவது மிக அற்புதம். சித்த புருஷர்கள் மாயமாய் மறைவதை, புள்ளி வடிவாகக் காட்டியது மிகச் சிறப்பு. இறைவனே புள்ளி வடிவினன். இந்த மாபெரும் சரித்திரத் தொடர்கதையை எழுதி முடித்த டாக்டர் விக்கிரமன் அவர்கட்கு எனது பாராட்டுகள். இந்த கங்கை கொண்ட சோளீசர் இருக்குமிடமும் இந்த ஏரியும் இப்போது பார்க்க விழைகிறேன். தஞ்சையில் இருந்து எந்த வழியாகச் செல்ல வேண்டும் என்ற பாதையை என் போன்றோர்க்கு அமுதசுரபி மூலம் தெரிவிக்கவும்.

- எஸ்.சங்கரநாராயணன்
அருப்புக்கோட்டை.

சரித்திரத் தொடர் ... அதுவும் இந்த விரைவான காலகட்டத்தில் எழுதுவதா... அப்படி எழுதினாலும் வரவேற்பு இருக்குமா என்றெல்லாம் அஞ்சுபவர்களிடையே 'விக்கிரமன்' வித்தியாசமானவர் என்றே உறுதியுடன் சொல்லலாம். பெரிய கோயில் - பெரிய நகரம் - பெரிய ஏரி இவற்றுடன் இதோ ஒரு பெரிய சரித்திரத் தொடர் என நிருபித்து விட்டார். வாழ்த்திட வயதில்லை. கைகூப்பி வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். விரைவில் தனிப் புத்தகமாக வெளியிட வேண்டும்.

- வாசன்,
மதுரை.



# 1. ஆதிரைச் செல்வன்

தில்லைக் கூத்தனின் திருச்சபையில் வைகறை தரிசனத்திற்காக அடியார்கள் கூடி நின்றனர். ஒருபுறம் அரிதுயில் புரியும் கோவிந்தராசர் சந்நிதி. மறுபுறம் ஆனந்தத் தாண்டவமிடும் நடராசனின் திருச்சந்நிதி.

வழக்கத்தைவிட அன்று கோயிலில் மக்கள் அதிகம் திரண்டிருந்தனர். மார்கழிப் பனியின் குளிரைப் பொருட்படுத்தாமல் அவர்கள்,பொழுது புலரா முன்னம் கோயிலில் குழுமியிருந்தது அம்பலவாணனைத் தரிசிக்க மட்டுமன்று.

திருவாதிரைத் திருநாள் விழா தில்லைக் கோயிலில் கோலாகலமாக நடைபெறும். நடராசப் பெருமான் திருவீதிகளில் வலம் வரும் அழகைக கண்டுகளிக்க ஆயிரம் ஆயிரமாக அடுத்துள்ள பட்டி தொட்டிகளிலிருந்து மக்கள் தில்லைச் சிதம்பரத்தில் கூடுவர்.

தஞ்சையினின்று சக்கரவர்த்திகள் இராசராச சோழ தேவர் ஒரு வாரத்திற்கு முன்பே சிதம்பரத்திற்கு விஜயம் செய்வார். சக்கரவர்த்திகளைக் காண்பதற்கும் மக்கள் கூடுவர்.

பொழுது புலரா அந்த இளங்காலைப் பொழுதில் இராசராச சோழரை மிக அணுக்கத்தில் காண வேண்டும் என்ற பேரார்வம் நடு நாட்டு மக்களுக்கும் தொண்டை மண்டல மக்களுக்கும் ஏற்படும். வாழ்நாளில் ஒரு முறையாவது திருவாதிரைத் திருநாளன்று சிதம்பரம் வரவேண்டும் என்ற ஆசை சேர, பாண்டிய நாட்டு மக்களுக்கும் உண்டு.

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழும் கதிரவனின் நீள் கரங்கள், தில்லை அம்பலத்துப் பொற்கூரைகளின் மீது அன்று மெல்லப் படர்ந்து, தங்க விமானத்தை மேலும் ஒளிவீசச் செய்தன.

தேவார திருவாசகப் பண்கள் பாடப்பட்டன. வீணை முதலான வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. காலை நர்த்தனம் கணிகைகளால் ஆடப்பட்டது. பிறகு தீப ஒளியில் நடராசப் பெருமானையும் மரகதலிங்கத்தையும் கண்குளிரக் கண்டு களித்த ஆயிரம் ஆயிரம் விழிகள் இராசராச சோழரை எதிர்பார்த்து அலைந்தன.

"நேற்றே பழையாறையினின்று புறப்பட்டு விட்டார் என்ற சேதி வந்ததே?"

"அருமைப் புதல்வர் இராசேந்திரனுடன் சேர்ந்து வருவதற்காகவே பழையாறையில் தங்கியிருந்தாராம் இவ்வளவு நாள்கள்!"

"இன்று இளவரசரையும், பேரரசரையும் சேர்ந்தே காணப் போகிறோம். நாம் அதிர்ஷ்டசாலிகள்".

"பிரபஞ்சப் பேரரசர் நடராசருடன் சோழ அரசரையும், இளவரசரையும் சேர்த்துக் காணும் நம் விழிகள் பேறு பெற்றவை" என்று மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டனர். நாழிகைகள் நகர்ந்தன. திருச்சபையை விட்டுக் கலைய மனமில்லாமல் கலைந்து சென்றவர்கள் விசாலமான வெளித்திருச்சுற்று மணலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இன்னும் அவர்களுக்கு நம்பிக்கை, சக்கரவர்த்தி வந்துவிடுவார் என்று. காலை வெயில் அவர்களையும் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. பனித்துளிகள் கொன்றை மரங்களின் இலைகளிலிருந்தும், மலர்களிலிருந்தும் மெல்ல உதிர்ந்து கொண்டிருந்தன.

மண் மீது படர்ந்திருந்த பனிப் போர்வையைச் செங்கதிரவன் மெல்ல அகற்றினான். பேசிக் கொண்டிருந்த ஆடவர் பெண்டிரிடம் ஏமாற்றம் பொங்கி நின்றது.

**தி**ல்லைச் சிற்றம்பலத்திற்குச் சோழச் சக்கரவர்த்தி இராச இராச சோழ தேவர் விஜயம் செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன.



தஞ்சையில் பெருவுடையார் கோயிலைக் கட்டிக் குடமுழுக்கு செய்த பிறகு அவர் தஞ்சையை விட்டு வெளியே செல்வதில்லை. தன் ஒரே செல்வமகன் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி 'இராசேந்திரன்' என்ற திருப்பெயரிட்டுப் பெரும் பொறுப்புகளை அவனிடம் அளித்த பிறகு அவர் தஞ்சையை விட்டுப் பெரும்பாலும் செல்வதில்லை.

எப்போதாவது பழையாறை மாளிகைக்கு வந்து, அரச குலத்தவர்களுடன் சில நாட்கள் தங்கியிருந்து, அருகே உள்ள திருத்தலங்களுக்கு விஜயம் செய்த பின் தஞ்சைக்குத் திரும்புவார்.

எண்பது வயதிலும் அவரது கம்பீரமான தோற்றத்தையும், குன்றாத பொலிவையும் கண்டு சோழ நாட்டு மக்கள் வியப்படைவார்கள்.

ஆனால், சில மாதங்களாக இராசராசர் தோற்றத்தில் மாறுதலிருந்தது. முகத்தில் முதுமைக் கோடுகளுக்கு இணையாகக் கவலைக் கோடுகள் புலப்பட்டன. சொல்ல முடியாத வேதனையின் எதிரொலியாகப் பெருமூச்சு அடிக்கடி எழுந்தது. இருள் பிரியா முன்னர் எழுந்திருக்கும் வழக்கம் மெல்ல மெல்லக் குறைந்தது. மாளிகை நந்தவனத்தில் உலவி வருவதும் நின்றது.

திருவாதிரை நன்னாளில் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடவல்லானைத் தரிசிக்கும் நோக்கத்துடன் பத்து நாள்களுக்கு முன்பே தஞ்சையினின்று புறப்பட்டு விடுவார். வழியில் உள்ள ஊர்ச் சபைகளில் தங்கி, அந்த ஊரிலுள்ள திருக்கோயில் இறைவனை வணங்கி, தில்லைச் சிதம்பரத்தை அடைவார்.

அவருடன் வழக்கமான பரிவாரங்களுடன் அரச குடும்பத்து முக்கிய ஆடவரும் பெண்டிரும் வருவர். இளவரசன் இராசேந்திரன் சோழ நாட்டை விட்டு அயல் தேசங்களுக்குச் சென்றிருந்தாலும், திருவாதிரை நாளில் சோழச் சக்கரவர்த்திகளுடன் சேர்ந்து தில்லை நகருக்கு வரும் வழக்கத்தைக் கொண்டிருந்தான்.

திருவாதிரை நாளில் தந்தையின் திருப்பாதங்களில் வணங்கி எழும் தன் இனிய மகன், சோழ குலத்து விளக்கு, இராசேந்திரனைச் சிறு குழந்தையை அணைப்பது போல் கட்டித் தழுவி மகிழ்ந்து, உச்சி முகர்ந்து, கன்னங்களில்

முத்தமிட்டு, முதுகு தடவி, பாசமழை பொழிவார் சக்கரவர்த்திகள். முத்து மணியாரங்கள் பரிசளிப்பார்.

திருவாதிரை நாள் இராசேந்திரனின் பிறந்த நாள். சோழ நாட்டின் தவப்பயனாய் இராசராசருக்கு அழகிய திருமகன் உதித்த நன்னாள். சோழ அரசர்களுக்கே தில்லைப் பொன்னம்பலவாணர் மீது பக்தி அதிகம்; குறிப்பாக, சிவபாத சேகரன் இராசராசனுக்கு ஆடவல்லான் மீது அளவிடமுடியாத பக்தி. தேவாரத் திருப்பதிகங்களை தில்லைத் திருக்கோயிலிலிருந்து கண்டெடுத்தது முதல், தில்லை அம்பலவாணன் மீது அவருக்கு இருந்த பக்தி பன்மடங்கு அதிகமாகியது. தில்லை நடராசர் திரு அருளால்தான் இராசேந்திரன் தனக்கு மகனாக வாய்த்தான் என்று முழுவதும் நம்பினார்.

எட்டுத் திக்கும் சென்று வெற்றிக் கொடி நாட்டித் திரும்பி வரும் மகனை, தஞ்சைக் கோட்டை வாயிலுக்கே வந்திருந்து வரவேற்றுப் பாராட்டி மகிழ்வார்.

இந்த ஆண்டு ஆதிரை நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

தஞ்சை மாளிகை பொழுது புலருவதற்கு முன்பே விழித்தெழுந்து விட்டது. மாளிகை நந்தவனத்தில் புள்ளினங்கள் இன்னிசை எழுப்பின. தஞ்சைப் பெரிய கோயிலின் உதய கால பூஜையை அறிவிக்கும் மணி ஓசை மெல்ல மெல்ல எழுந்து வந்தது.

திருவெம்பாவைப் பாடல்களை இனிய குரலில் இசைப்பது காற்றில் தவழ்ந்து வந்தன.

இராசராசர் கண் விழித்து விட்டார். இரவெல்லாம் உறங்கினால்தானே? கட்டிலிலிருந்து எழவே அவருக்கு மனமில்லை.

அந்த முதிர்ந்த பிராயத்திலும் பஞ்சவன் மாதேவி அரசரருகே வந்து தன் இனிய முகத்தை அவர் காண நின்றிருந்தார். பட்டத்துத் தேவியருள் ஜீவியவந்தராய் பஞ்சவன் மாதேவி மட்டுமே இன்று இருக்கிறார்.

சயன அறை அருகே காத்திருந்த பணிமகளிர் அரசியின் கட்டளைக்காகக் காத்திருந்தனர்.



"தேவி! என் மகன் மதுரன் வந்துவிட்டானா?" அரசரின் குரல் மெல்லியதாய் இருந்தாலும் அதில் கவலையும் ஏக்கமும் கலந்திருந்தன.

பஞ்சவன்மாதேவிக்குச் சக்கரவர்த்தியின் ஏக்கமும் கவலையும் புரியும். சக்கரவர்த்திகளை விட அதிகம் தளர்ந்து விட்டவள், அவளே! நிற்க முடியாமல் மஞ்சத்தில் அவரருகே அமர்ந்தாள். தேவியின் கரத்தை மெல்லப் பிடித்த சக்கரவர்த்தி, "மதுரன் வரவில்லையா?" என்று கேட்டார்.

பஞ்சவன்மாதேவி தலையசைத்ததிலிருந்து அந்த அசைவின் பொருளை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

"ஏதாவது செய்தி கிடைத்ததா?"

"திருவாதிரைத் திருநாள் என்று வருகிறது?"

"ஒரு வேளை நேரே *பெரும்பற்றப் புலியூருக்கு வந்து விடும் எண்ணம் அவனுக்கிருக்கலாம்".

"தேவி! சில காலமாகாவே மதுரன் போக்கில் பெரும் மாறுதலைக் காண்கிறேன். அது ஏன்?"

சக்கரவர்த்திகள் தானே கேட்பதும், அரசியிடமிருந்து மறுமொழிக்காகக் காத்திராமல் தானே தொடர்ந்து பேசுவதுமாக இருந்தார்.

"அவன் உன்னிடம் ஏதாவது சொன்னானா? அவனுக்கு என்ன குறை தேவி?"

அரசரே பேசிக்கொண்டிருந்தார். பஞ்சவன்மாதேவி ஏதோ கூற வாயெடுத்தாள்.

"அவன் நாட்டிற்கும் உலகத்திற்கும் மாவீரன், புகழும் வெற்றியும் அவனைத் தேடி வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. கடல் கடந்து சென்று புலிக்கொடியை நாட்டி வந்த வீர விஜயன். ஆனால் அவன் இன்னும் என் குழந்தை. என்னிடம் வளராவிட்டாலும் அவனை வளர்ந்து வீரனாகவும் மேதையாகவும் ஆக்கிய இராஜமாதா செம்பியன்மாதேவியாரின் அபிமான புத்திரன் அவன். என் உடன் பிறந்தாள் இளைய பிராட்டி வளர்த்து உருவாக்கிய, செவ்வேள். தாயில்லாக் குறையைத் தீர்த்த இளைய பிராட்டியின் சொல்லைத் தட்டாத என் செல்வன் சில காலமாக ஏன் இப்படி இருக்கிறான்?"

சிதம்பரத்தின் வேறு பெயர்

சக்கரவர்த்திகளின் புத்திர பாசம் தழுதழுத்த வார்த்தைகளாக வெளிவந்தது.

பஞ்சவன்மாதேவியின் தளர்ந்த கரங்கள், மெல்ல அரசரின் விழிகள் அருகே சென்று ததும்பி நிற்கும் கண்ணீரைத் துடைத்தன.

"மதுரன் இன்று வந்து விடுவான். கவலைப்படாதீர்கள்" என்று ஆறுதல் சொன்னாள், பஞ்சவன்மாதேவி. அவளுக்குத் தெரியும். இளவரசன் இராசேந்திரன் தஞ்சைக்கு வரமாட்டான் என்று. தான் அறிந்தவற்றை சக்கரவர்த்திகளிடம் சொல்லத் தருணம் நோக்கியிருந்தாள்.







# 2. விழியும் வழியும்

கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் அடக்கமாக ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளம் கரை புரண்டோடும் நாள்களில் பரிசலில் செல்லக்கூட எவரும் அஞ்சுவர். ஆனால் மார்கழி, தை மாதங்களில் ஆற்றில் தண்ணீர் மிதமாக ஓடும். இரவு பகல் என்று பாராமல் பரிசல்கள் இக்கரைக்கும் அக்கரைக்கும் வந்து சென்று கொண்டிருக்கும். தஞ்சையினின்று தில்லை நகருக்குச் செல்பவர்கள் அந்தத் துறையில் இறங்கித்தான் வந்தாக வேண்டும்.

கொள்ளிடத்தின் வடகரையில் திகழ்ந்த மூங்கில் துறை அழகிய சிறு கிராமம். ஒரு காலத்தில் தடம் புரண்டு ஓடிய கொள்ளிடத்தின் சீற்றத்தால் ஏற்பட்ட மணல் மேடுகள் அதிகம். கரும்புத் தோட்டமும், மூங்கில் புதர்களும், தென்னஞ்சோலைகளும் நிறைந்த அந்தக் கிராமத்துப் பரிசல் துறை எப்போதும் கலகலப்பாக இருக்கும்.

பயணிகளின் தாகம் தீர்க்கத் தண்ணீர்ப்பந்தல் அங்கே பல ஆண்டுகளாக இருந்தது. அங்கே தாகம் தீர்த்துக் கொண்ட பிறகுதான் சிதம்பரத்திற்குச் செல்லும் பாதையில் பயணிகள் தங்கள் பயணத்தைத் தொடங்குவார்கள்.

சில ஆண்டுகளாக அங்கே இளைஞர்கள் சற்று அதிக நேரம் தங்கிச் செல்வது வழக்கமாகிவிட்டது. வீரம்மாளின் கரத்தால் ஒரு குவளை நீர்மோரோ, கருப்பஞ்சாறோ, சுக்குத் தண்ணீரோ வாங்கிக் குடித்துவிட்டுச் செல்லாவிடில் அவர்கள் வழிநடைப் பயணத்தில் உற்சாகம் இராது.

திருவாதிரை நாள் வரப்போகிறது என்றால் வீரம்மாளுக்கு ஏற்படும் குதூகலத்திற்கு அளவில்லை. அவள் வீட்டை ஒட்டியே தண்ணீர்ப் பந்தல் இருந்தது. தண்ணீர்ப் பந்தல் வாசலில் விடியும் முன்பே கோலம் வரையத் தொடங்கிவிடுவாள். விதவிதமான கோலமிட்டு, முடிக்கப் பொழுது புலர்ந்துவிடும்.

அவளுடைய இணைபிரியாத தோழிகள் இருவர் அவளுக்கு உதவுவார்கள். கோலம் வரைந்து முடித்தபின் கோலத்தின் அழகை அவர்களே சுற்றிச் சுற்றி வந்து பார்த்து ரசிப்பார்கள். கோலத்தின நடுவே பூசணிப் பூக்கள் மஞ்சள் நிறத்துடன் அவர்களைப் பார்த்துச் சிரிக்கும்.

> **ஆடுங்கடி பண்ணுப் பாடுங்கடி**
> **ஆதிரையான் பெயர் சொல்லுங்கடி**
> **கூடுங்கடி மாலை சூடுங்கடி – அந்தத்**
> **தூயோன் புகழ்பாடி ஆடுங்கடி!**
>
> **முழுமதி வானில் முளைத் தாச்சு**
> **முல்லை அழகாய்ப் பூத்தாச்சு**
> **தொழுது போற்றிட வாருங்கடி – தில்லைச்**
> **சுந்தரன் பாதத்தில் சேருங்கடி!**

புதுப்புதுப் பாடல்களை அவள் இட்டுக்கட்டிப் பாடுவதைப் பரிசல் துறையில் இறங்கி வருபவர்கள் சற்று நின்று ரசித்துவிட்டுச் செல்வார்கள்

**அ**ன்று வீரம்மாள் இருள் பிரியா முன்பே எழுந்து கொள்ளிடத்தில் நீராடித் தலை துவட்டியவாறு வீட்டிற்குள் வந்தாள்.

திண்ணையில் உடல் முழுவதும் மறைவாய்ப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்திருந்த வீரம்மாளின் பாட்டன் குரல் கொடுத்தார்.

"வீரம்மா! பொழுது விடிய இன்னும் ஒரு சாமம் இருக்கிறதே; இந்தக் குளிரில் குளித்து விட்டு வருகிறாயே! உடம்புக்கு ஏதாவது வந்தால் உன் உடன்பிறந்தானிடம் நான் என்ன சமாதானம் சொல்ல முடியும்?" என்று சற்றுச் செல்லமாகக் கடிந்து கொண்டார். பிறகு, "வழக்கத்தை விட இன்று குளிர் அதிகமில்லையா?" என்று கேட்டார்.



அவருடைய பிள்ளை வயிற்றுப் பெண், வீரம்மாள். வீரம்மாளைப் பெற்றெடுத்தவுடன் கண் மூடிய மருமகளைத் தொடர்ந்து அவர் மகனும் சிவனடியைச் சேர்ந்தான். பெயரனையும் பெயர்த்தியையும் வளர்க்கும் பொறுப்பு அந்த முதியவரின் தோள்களில் விழுந்தது.

தன் மகனின் வருங்காலத்தைப் பற்றிப் பெரிதாக எதிர்பார்த்திருந்தார். அவருடைய மூதாதையர் அந்தப் பகுதியில் செல்வாக்குடையவர்கள். வீரம் மிகுந்தவர்கள். தன் மகனும் ஒருநாள் சோழ நாட்டுப் படைகளுக்குத் தலைமை வகிப்பான் என்று எதிர்பார்த்தார். அவர் மனக்கோட்டை தகர்ந்தது. நல்ல வேளையாக அவர் பெயரன், குலப் பெயரை நிலைநாட்டும் அளவுக்கு வளர்ந்தான். தன் சகோதரியையும் கருத்துடன் கவனித்துக் கொண்டான். தனக்குப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் பிறந்த வீரம்மாளிடம் தாய்ப்பாசத்தைப் பொழிந்தான்.

தோள்வலி மிகுந்த வீரனாகத் திகழ்ந்த முத்துக்குமரன், விரைவில் சோழச் சக்கரவர்த்திகளின் பேரன்புக்குப் பாத்திரமானான். இளவரசர் இராசேந்திரன் வடக்கே படைகளுடன் செல்லும்போது ஒரு பிரிவுப் படைகளுக்குத் தலைமை ஏற்றான். வெற்றி மேல் வெற்றி பெற்றான். அதனால் இராசேந்திரனின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவனானான். தன்னைவிட வயதில் சிறியவனாயினும், அவனுக்கு இளவரசர் அளிக்கும் மரியாதையைக் கண்டு பலரும் வியப்படைந்தனர்.

தேவநேயப் பாவாணர் … நூலகம் … 002

காண்பவர்கள் ஒருமுறைக்கு இருமுறை திரும்பிப் பார்க்கும் வடிவுடையவள், வீரம்மாள். மாநிறமேனியில் வட்ட முகம் ஒரு தடாகம். அதில் இரு விழிகள் துள்ளி நீந்திச் சுண்டியிழுக்கும். ஒரு சமயம் அந்த விழிகள் தாமரை குவிந்தது போல் திகழும். ஒரு சமயம் அல்லி மலர் விரிந்ததுபோல் தோன்றும். ஒரு போதில் முகத் தடாகத்தில் துள்ளித் திரியும் கயல்களாக மாறும். மறு போதில் வீரன் கையில் பளபளக்கும் கூரிய வேல்களாக மாறும். விழிகள் சிரிக்கும்; வக்கிரபுத்தி உடையவர் களுக்குச் சீறும் நாகம். அரசகுலப் பெண்டிர்களுக்குள்ள கம்பீரத் தோற்றமும், வளப்பமும் அவளிடம் குடி கொண்டிருந்தன. அதுமட்டுமன்று; இறைவன் அழகுப் பொலிவுடன் அவளுக்கு அறிவாற்றலையும் அளித் திருந்தான்.

போர்க்களம் செல்லாத அமைதியான ஒருநாள். முத்துக்குமரன் வாழ்க்கையில் அது ஓர் அதிசயம்தான். எனினும் காலையிலே குதிரையை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார், குதிரைக்காரர்.

"அண்ணா! இன்று எங்காவது பயணமா?" என்று கேட்டாள், வீரம்மாள்.

"ஆமாம்; தில்லைக்குச் செல்கிறேன்".

"அடுத்து எந்த நாட்டின்மீது படை எடுத்துச் செல் கிறீர்கள்? தில்லையில் திட்டம் வகுக்கப் போகிறீர்களா?"

"இப்போதைக்கு இல்லை. இளவரசர் தஞ்சையில் சிறிது நாள்கள் தங்கியிருக்க வேண்டும் என்பது சக்கரவர்த்தியின் கட்டளை. அதனால் எனக்கும் வேலை இல்லை".

"உங்களால் ஒரு நொடி கூட சும்மாயிருக்க முடியாதே".

முத்துக்குமரன் சிரித்துக்கொண்டே, "ஆமாம், அதனால் தான் சிதம்பரத்திற்குப் புறப்படுகிறேன்; இளவரசரும் அங்கே வருகிறார்".

"இளவரசருமா? அடுத்து எந்த நாட்டின் மீது படை எடுத்துச் செல்லப் போகிறீர்கள்? இரகசியம் என்றால் சொல்ல வேண்டாம்!" வியப்பு விழிகளில் தெரிந்தது.

"போர்த் திட்டமில்லை; ஈசான பண்டிதரின் பாடசாலைக்கு".

வீரம்மாதேவி சிறிது யோசித்தாள். "ஈசான பண்டிதா கல்விக் கடலல்லவா?" என்றாள்.

"ஆமாம்! அவரிடம் இளவரசர் பாடம் கேட்கப் போகி றார். ஓய்வு ஏற்படும் காலங்களில் இளவரசர் ஈசான பண்டிதரின் மடத்திற்குச் சென்று வருவார். தேவாரப் பண்களை ஆராயப் போகிறார். நானும் உடனிருந்து கற்கப் போகிறேன். புத்தியைக் கொஞ்சம் தீட்டிக் கொள்ளப் போகிறேன்".

"நானும் உங்களுடன் வரட்டுமா, அண்ணா?"

"ஆகா! உன்னையும் அழைத்து வருவதாக இளவரச ரிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்."

வியப்பால் விழிமலர் விரிந்து மலர, "இளவரசரிடமா?" என்று கேட்டாள், வீரம்மாள்.



ஈசான சிவாசாரியாரின் கல்விக் கூடம் மிகப் பெரியது. வடமொழியும் தமிழும் கற்கும் மாணவர்கள் பலர் அந்த மடத்தில் தங்கியிருந்து கல்வி கற்றனர். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல மொழி பேசும் மாணவர்கள் வந்து தர்க்கம், இலக்கணம், வானநூல், சமயம், இலக்கியம் ஆகிய பலவற்றையும் பயின்றனர். போர்முறை பற்றியும் சிறந்த முறையில் கற்றுத் தரவேண்டும் என்று இராசேந்திரன் பண்டிதரிடம் கூறுவான்.

மடத்துக்குள் பெண்கள் நுழைய அனுமதி இல்லாததால், வீரம்மாளை மடத்தின் திண்ணையிலேயே உட்காரச் செய்துவிட்டு, முத்துக்குமரன் தேவாரம் கற்றுத்தரும் கூடத்திற்குச் சென்றான். வீரம்மாளின் தோற்றம் கல்விக் கூடத்திற்கு வரும் பிரம்மசா மாணவர்களின் புலனடக் கத்தைக் குலைத்தது. அவர்களது கள்ளப் பார்வை வீரம் மாளின் அழகை ரசித்தது. பருவ காலத் துன்புறுத்தல் களால் தங்கள் புலனடக்கத்தை ஒரு கணத்தில் இழந்துவிடும் அளவுக்கு வீரம்மாளின் வடிவழகும் பருவச் செழிப்பும் இருந்தன. கல்வி ஒளிவீசும் முகமும், ஆண்மைத் தோற்றமும் நிறைந்த இளைஞர்களைத் திரும்பிப் பார்க்காமலேயே அவர்கள் தன்னைக் குறுகுறு வெனப் பார்க்கிறார்கள் என்ற நினைவே இல்லாமல் வீரம்மாள் அகலமான கருங்கல் தூணின் அருகே அமர்ந் திருந்தாள். சிற்பி செதுக்காத சிலைபோன்று விளங்கி னாள். எவ்வளவு நேரம்தான் அவளால் தவசிபோல் அமர்ந்திருக்க முடியும்?

சற்று நேரத்திற்கெல்லாம் அந்தக் கல்விக் கூடத்தில் அமைதி நிலவியது. பாடம் சொல்லத் தொடங்கி விட் டார்கள். ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்கும் குரலொலியும் சில இடங்களில் மாணவர்கள் அமைதியாகத் திரும்பவும் சொல்லும் ஓசையும் ஒரே சீராகக் கேட்டன.

ஓரிடத்திலிருந்து இனிய தமிழ்ப் பாடல் மிதந்து வந்தது. வீரம்மாளை அந்த இனிய குரல் ஈர்த்தது. மெல்ல அந்தக் குரல் வரும் இடத்தை நோக்கி நடந்தாள். தேவாரப் பண்கள் கற்றுத்தரும் அந்தக் கூடத்தில் மறைந்திருந்து கவனித்தாள்.

சற்று உயர்ந்த மரப்பீடத்தில் ஆசிரியர் அமர்ந்திருந்தார். அவர் நெற்றியில் திருநீறு பளிச்செனத் துலங்கியது. கையில் சிறு தாளம் வைத்திருந்தார். அருகே

ஓலைச்சுவடிகள் நிறைந்திருந்தன. ஐந்தாறு மாணவர்கள் கையில் ஓலைச் சுவடியில் எதையோ பார்த்து இனிய குரலுடன் ஒவ்வொருவராகப் படித்துக் கொண்டிருந்தனர். சிலர் குரல் எடுத்துப் பாடினர்.

இளவரசர் இராசேந்திரன் தேவாரப் பண் ஒன்றை இசையமைத்துப் பாடிக் கொண்டிருந்தார்.

இளைஞர்களும், நடுத்தர வயதினரும் கலந்திருந்த அந்த வகுப்பு மாணவர்களிடையே இராசேந்திரனும், முத்துக்குமரனும்தான் மூத்தவர்கள்.

வீரம்மாளுக்கு ஏற்பட்ட வியப்புக்கு எல்லையில்லை. இளவரசர் போரில் வல்லவர். தோள் வலிமை மிக்கவர் என்றறிந்திருக்கிறோம். அவர் குரல் இனிமையானது; ஓதுவார்களைப் போல் தாளத்துடன் பாடுகிறார். உச்சரிப்பு தெளிவாக இருக்கிறது. அவர் எழுப்பும் ஐயங்கள் அறிவுச் சுடரை மேலும் தூண்டிவிடுவனவாக அமைகின்றன.

ஒரு பெண் அங்கு நிற்பதை யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்ற அச்சத்தில் அவள் திரும்பி வந்து திண்ணையில் தூண் அருகே சாய்ந்தவாறு அமர்ந்து கொண்டாள். மெல்லக் கண்மூடினாள். அந்தப் பாட சாலையில் இளம் மாணவர்களின் இனிய முகங்கள் தோன்றின. அவர்களுக்கு இடையே கம்பீரமான இளவரசரின் முகம் நின்றது.

அந்த உலகிலிருந்து பறந்து கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினாள்.

எவ்வளவு நேரம் ஆகியிருக்குமோ - அருகே ஒரு குரல்.

"இந்தத் தூங்கு மூஞ்சிதான் உன் சகோதரியா? என்று இளவரசர் பரிகாசம் செய்கிறார் பார்!" என்று அவளைத் தட்டி எழுப்பினான், முத்துக்குமரன். வீரம்மாள் பரபரப்புடன் எழுந்து நின்றாள். அருகேயிருந்த இளவரசரை ஏறிட்டுப் பார்க்காமல் தலைகுனிந்து நின்றாள்.

கிராமத்திற்குச் சென்ற பிறகு வீரம்மாள் கேட்டாள்:

"அண்ணா, அவர்தான் இளவரசரா?"

"ஆமாம்; நீ இதுவரையில் இளவரசரைப் பார்த்ததில்லையா?"

தலையசைத்தாள், வீரம்மாள்.



எப்போதோ விபரம் அதிகம் தெரியாத பருவத்தில் பார்த்த நினைவு. நாணமும், சற்றுக் குறும்புத்தனமும், பருவத்தின் குறுகுறுப்பும் நிறைந்திருக்கும் இளவரசரை இப்போது பார்த்ததில் புதுப்புது உணர்வுகள் பரவின.

"அண்ணா! உங்களைவிட வயதில் மூத்தவர் போலத் தோன்றும் இளவரசர், உங்களிடம் நெருங்கிய நண்பரைப் போல் பழகுகிறாரே. வயது வித்தியாசமும் அந்தஸ்து வேற்றுமையும் பாராமல் பழகுகிறாரே!" - வீரம்மாள் வியப்புடன் கேட்டாள். இளவரசரின் பாதாதி கேசம் ஒருமுறை மனதில் ஓவியமாக எழுந்தது.

"ஆமாம், என் அன்புள்ள தங்கையே! போர்க் களங்களிலிருந்து திரும்பி வரும்போது அவர் எனக்கு மெய்த் தோழர்; நான் அவருக்கு உயிர்த் தோழன். போர்க் களத்தில் அவர் கட்டளையை ஏற்று நடக்கும் சேனைத் தலைவன். அவர் இளவரசர். இந்த மரியாதையை எப்போதும் கடைப்பிடிப்பேன். அவர் என் தோளில் தம் கரத்தை இட்டு அணைத்து வருவதால் எங்கள் மரியாதையில் வேற்றுமை ஏற்பட்டுவிடாது".

"நீங்கள் பாக்கியசாலி அண்ணா!"

"எதற்காகச் சொல்கிறாய்?"

"இளவரசர் அருகே எப்போதும் இருக்கிறீர்கள். அவரது அபிமானம் மிக்கவராய் விளங்குகிறீர்கள். அரச குலத்தவருள் ஒருவராய் ஆகிவிட்டதாக நமது சொந்தக்காரர்கள் பேசிக் கொள்கிறார்கள். வருங்காலத்தில் சோழ நாட்டுத் தளபதி நீங்கள்தான் என்றும் பேசிக் கொள்கிறார்கள்".

முத்துக்குமரன் மெல்ல நகைத்தான்.

"ஈசான பண்டிதரின் பாடசாலையில் இருவரும் சேர்ந்து படிக்கிறீர்களே, எதற்காக?"

"எதற்காகவா? படிப்பது ஏன் என்றா கேட்கிறாய்? வீரத்தைவிட அறிவுதான் வெற்றி பெறும். வெற்றிக் கலையை அறிய வேண்டாமா? உன்னையும் சேர்ந்து படிக்கச் சொல்லுமாறு இளவரசர் அன்று கூறினார்".

"பெண், ஆண்களுடன் சரிசமமாகப் படிப்பதா? இளவரசரா சொல்கிறார்?"

"ஏன் அதில் என்ன தவறு? சோழ நாட்டில் உள்ள வழக்கம்தானே?"

"இதே கேள்வியை நான் கேட்டேன். சோழ நாட்டுப் பெண்கள் பெரிய மேதைகளாக விளங்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு. மடத்திற்கு வரமுடியாவிட்டால் ஓர் ஆசிரியரை வீட்டிற்கு அனுப்பி நாள்தோறும் கற்றுத் தர ஏற்பாடு செய்வதாகச் சொல்கிறார்!"

வீரம்மாளின் மேனி மெல்ல சிலிர்த்தது. "வேண்டாம், அண்ணா! நான் மாட்டேன். எனக்கு வெட்கமாக இருக்கிறது. இளவரசருடன் சரிசமமாக அமர்ந்து படிப்பதா?" என்று கூறிக்கொண்டே அங்கிருந்து ஓடி ஒளிந்தாள், மேகத்தில் மறைந்த வெண்மதியைப் போல்.

அன்றெல்லாம் அவளுக்குச் சொல்ல முடியாத பரபரப்பு. ஓலைச் சுவடிகளுடன் இளவரசர் அமர்ந்திருக்கும் தோற்றம் அவள் உள்ளத்தில் பதிந்ததா? இசையுடன் தேவாரப் பண்களைப் பாடும்பொழுது பண்ணுடன் கலந்த இனிய குரல் அவள் உள்ளத்தில் ஒலித்ததா? தன் சகோதரனைப் போன்ற வலிமையான தோள்களுடன் கூடிய இளவரசரின் கம்பீரமான தோற்றம் அவளைக் கவர்ந்ததா? எதனால் அவள் மனதில் அப்படி ஒரு சிலிர்ப்பு? மாறுதல்? நாணம்? மீண்டும் இளவரசரைப் பார்க்கத் தோன்றும் ஆவல்? ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை?

குதிரை மீதமர்ந்து இளவரசர் வரும்போது, வீட்டருகே வளர்ந்திருக்கும் மூங்கில் புதரின் மறைவில் நின்று விடுவாள். ஏன் அப்படி மறைந்து நின்று இளவரசரைப் பார்க்க வேண்டும்.?

என் சகோதரனுக்குத் தலைவர்; நாட்டின் இளவரசர் அவரிடம் நேருக்கு நேர் விழி நோக்கிப் பார்க்க முடியாதபோது, எப்படிப் பேச நா எழும்? ஏன் அப்படி?

முத்துக் குமரனும் அதையேதான் கேட்டான்: "வீரம்மா! இளவரசரைக் கண்டவுடன் ஏன் வெட்கப்படுகிறாய்? ஓடி ஒளிந்து கொள்கிறாய்?"

அவன் மேலும் கேட்டான்: "உன்னைச் சகல கலா வல்லியாக்க அவருக்கு ஆர்வம்: 'உன் தங்கைக்கு நல்ல உடல் வாகு. நாட்டியக் கலை பயிலலாம்' என்று



சொல்கிறார். 'முன்பே அவள் ஓரளவு கற்றிருக்கிறாள்' என்றேன். 'அப்படியா?' என்று வியப்புடன் கூறிய இளவரசர், 'தகுந்த நட்டுவனாரிடம் தொடர்ந்து அக்கலையைக் கற்று வளர்க்கச் செய்வோம்' என்றார்.

தன் சகோதரன் சொல்லிக் கொண்டே வருவதைக் கேட்கக் கேட்க வீரம்மாள் வியப்பிலாழ்ந்தாள். அவன் கூறிவருவது செவிகளில் வீழ்ந்தது. முத்துக்குமரன் தெரியவில்லை. வீடு தெரியவில்லை. வீட்டு வாசலிலிருந்த பூவரசமரம் தெரியவில்லை. மூங்கில் புதர் தெரியவில்லை. அவளேயே அண்ணாந்து பார்த்து அசைந்து நடக்கும் புறாக்கள் தெரியவில்லை. ஆசையுடன் வளர்க்கும் மான் தெரியவில்லை. கழுத்து மணி ஒலிக்க அசைபோட்டு நிற்கும் நாகு தெரியவில்லை.

இரண்டொரு நாள்களில் அந்த வீட்டில் சதங்கை ஒலி கேட்டது. அவள் ஆடுவதை இளவரசர் பார்க்கிறார் என்ற பிரமையுடன் அவள் நாள்தோறும் ஆடினாள்.

இந்த ஆண்டு திருவாதிரைத் திருநாளில் சபாநாயகர் சந்நிதியில் ஆட முடியாவிட்டாலும் மண்டபத்தில் ஆடவேண்டும். இரவு பூரண நிலவொளியில் கோயில் திருச்சுற்றில் நடைபெறும் நடன விழாவில் நாட்டிய மணிகளுள் ஒருவராக நாம் ஆடவேண்டும்.

பரிசல் துறைக்குச் செல்லும்போது, தண்ணீர்ப் பந்தலில் வெயில் வேளையில் வருபவர்களுக்கு நீர்மோர், கருப்பஞ்சாறு பானகம் கொடுக்கும்போது, சோறாக்கும் போது, குளிக்கும்போது வீரம்மாளுக்கு அதே நினைவு.

திருவாதிரை நாளுக்கு ஒருவாரம் முன்பிருந்தே அவள் இளவரசரின் வருகையை எதிர்பார்த்தாள். தன் சகோதரனுடன், ராஜஹம்ஸப் படகில் பரிசல் துறையில் அவர் இறங்கி வருவார். இந்த வழியாகத்தான் போவார். வீட்டிற்குள் இளவரசர் வருவாரா? ஒரு தடவையாவது, இளவரசரைக் "குடிலுக்குள் வாருங்கள்! இந்த ஏழை வீட்டில் சற்று அமருங்கள்! திண்ணையிலாவது அமர்ந்து என் தங்கை தரும் சுவையான மோரைக் குடியுங்கள்" என்று என் சகோதரன் ஏன் அழைப்பதில்லை? இன்று நாமே அழைத்து விடுவோமா?

பரிசல் துறையில் வழக்கத்தை விடப் பயணிகள் வருகை அதிகம். தஞ்சைக்குச் செல்பவர் குறைவு

தன் கைவண்ணக் கோலத்தின் அழகை இளவரசர் பார்த்து மகிழப் போகிறார் என்று நினைக்கும் போதே அவள் உள்ளம் துள்ளியது.

பரிசல் துறையிலிருந்து விதவிதமான மனிதர்கள் இறங்கிச் சென்றனர்.

கதிரவன் வேகமாகக் கிழக்கை விட்டு உச்சியை நோக்கி வந்து கொண்டிருந்தான். வீரம்மாளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"உன் அண்ணன் இன்றைக்கு வருவதாகச் சொல்லிச் சென்றானா?" என்று பாட்டனார் கேட்கும்போது, தானும் அதே கேள்வியை அவரிடம் கேட்க நினைத்திருந்தாள், வீரம்மாள்!"

"அண்ணா இன்றாவது வருவாரா?"

தன் சகோதரன் வந்தால் உடன் இளவரசர் வருவார் என்ற நம்பிக்கையில் அவள் கேட்க நினைத்தாள்.

பரிசல் துறையில் கலகலப்பு ஏற்பட்டது. இரண்டு பரிசல்கள் நிறைய சோழ வீரர்கள் இறங்கி வந்தனர். அவர்கள் உற்சாகமாக குதிபோட்டு வந்தனர்.

குழந்தைபோல் கைகொட்டிக் குதித்தாள்,வீரம்மாள்.

அடுத்து வந்தது பரிசலன்று; அரச குடும்பத்தவர் வரும் அலங்கரிக்கப்பட்ட பெரிய தோணி. புலிக் கொடி பறந்து கொண்டிருந்தது.

இளவரசர் வரும்போது எதிர் நோக்கி நின்று வரவேற்க எண்ணினாள். இந்தத் தடவை, "வருக...வருக! சோழர்க் குல ஒளி விளக்கே!" என்று கூறி வரவேற்க' வேண்டும் என்று நினைத்தாள்.

'திடீரென்று எதற்காக அவ்வாறு கூறி வரவேற்க வேண்டும்? தன்னைப் பிச்சி என்று ஒருவேளை நினைத்து விட்டால்...'

நான் முன்னே நடக்க, அவர் பின் தொடர்வாரா?

அப்படி செய்யாதே பெண்ணே! தவறாக நினைத்து விடுவார்கள். திடீரென்று உன் நாணம், அச்சம் எல்லாம் எங்கே ஒளிந்துவிட்டன?



ஆமாம்; ஆமாம். இங்கே தோணித்துறையில் இருப்பது சரியில்லை.

வீரம்மாள் துள்ளி மரத்தின் மறைவிற்கு ஓடினாள்.

தோணியிலிருந்து சோழர்க் குடும்பத்தவர்கள் இறங்கினார்கள்.

கம்பீரமான தோற்றமுடைய இளைஞன் ஒருவன் இறங்கினான்.

வீரம்மாள் ஒருமுறை உற்று நோக்கினாள். கண்களைக் கசக்கிக் கொண்டு மறுமுறை பார்த்தாள்.

யார், யார், இளவரசரா? இவ்வளவு இளைஞனாக ஆகிவிட்டாரா? அதற்குள் இளம் தாடியும் மீசையும் புனைந்திருக்கிறாரா?

யார்...? யார்... அவளுக்குப் புரியவில்லை. இளவரசர் இராசேந்திர சோழர் முப்பது வயது குறைந்தவராக எப்படி மாறினார்?

தன் சகோதரரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோம் என எண்ணினாள்.

அவள் சகோதரன் முத்துக்குமரன் வரவில்லை.



## 3. உள்ளம் கவர் கள்வன்

திருவாதிரைத் திருநாள் கோலாகலமாக நடைபெற்று முடிந்து சில நாள்கள் நகர்ந்துவிட்டன. வீரம்மாளுக்கு நாள்கள் மிக மெதுவாக நகர்ந்தது போன்ற உணர்வு.

தில்லை நகர வீதிகளில், வெள்ளம்போல் மக்கள் கூட்டத்தின் இடையே மெல்ல ஊர்ந்து சென்றிருக்கிறாள். சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து குடும்பத்துடன் வந்து

மக்கள் மகிழ்ச்சியுடன் பேசிச் சென்றதைக் கண்டு, தானும் அவர்கள் போல் பேசிச் சிரிக்க முயன்றிருக்கிறாள். அவளுடன் வந்த அத்தை கமலத்தாச்சியும், தோழி முத்துவடிவும் சிரிப்புப் பொங்கும் கதைகளைக் கூறியும், வீரம்மாளின் இதழ்களில் அந்த முறுவல் அரும்பாகவே இருந்தது. கதையைச் சொல்லிக் கொண்டே முத்துவடிவு நகைக்கிறாள். பொக்கை வாயைத் தலைப்பால் மூடிக் கொண்டு அத்தை சிரிக்கிறாள்.

வீரம்மாளுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. முத்துவடிவை அதட்டி அடக்குவதைத் தவிர, அவளுக்கு அப்போது வேறு ஏதும் செய்யத் தோன்றவில்லை. அவளைவிட வீரம்மாள் உரக்கப் பேசிச் சிரிக்கக்கூடியவள். இப்போது தனக்கு என்ன நேர்ந்துவிட்டதென்றே அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவளுக்கு ஏற்பட்டது ஏமாற்றமா, களைப்பா, எரிச்சலா? குழந்தையைப் போல் சொல்லத் தெரியவில்லை.

அவளுக்கு ஏற்பட்டது ஏமாற்றமா? ஏன், எதற்காக ஏமாற்றம்? இளவரசர் இராசேந்திர சோழர் வருவார் என்று எதிர்பார்த்தாள். வரவில்லை. அதனால் அவளுக்கு ஏன் ஏமாற்றம் ஏற்பட வேண்டும்? சென்ற ஆண்டு திருவாதிரை நாளன்று அவளுக்கு இப்படி எந்தவித ஏமாற்றமும் ஏற்படவில்லை. ஓகோ! சென்ற ஆண்டு அவள் சோழ இளவரசரைப் பற்றி நினைக்கவே இல்லை. அதனால் இளவரசர் வந்ததைப் பற்றியும் வராததைப் பற்றியும் அவள கவலைப்படவில்லை. எதிர்பார்க்கவில்லை. அதனால் ஏமாற்றம் ஏற்படவில்லை. சென்ற ஆண்டு அவள் எதிர்பார்த்தது தன் அண்ணனின் வருகையை. பொங்கல் புதுப்பானை வைப்பதற்குள்ளாவது அண்ணன் வந்து விடுவார் என்று எதிர்பார்த்தாள். வரவில்லை. போர்க்களத்திற்குச் சென்றவர் இன்றும் திரும்பி வரவில்லை.

வேனிற்காலம், மாரிக்காலம் என்று பருவம் மாறி, மீண்டும் இந்த ஆண்டு மாரிக்காலம் வந்தபோதுதான் அவள் உள்ளத்தில் மாறுதல் மெல்லப் படர்ந்தது. அதை விலக்க முயன்றாள். ஒதுக்க முயன்றாள். இளவரசர் எனும் மாறனின் கணை அவளை வதைக்க ஆரம்பித்தது. இளவரசரைப் பார்த்தது முதல், அவளுள்ளத்தில் புரிந்து கொள்ள முடியாத பலவித உணர்வுகள், நகைப்பு,





கோபம், பயம், சீற்றம், மௌனம் என்று அவளை மாறி மாறி ஆட்கொள்ளத் தொடங்கின.

இளவரசர் விருப்பப்படி அவளுக்கு நடனம் கற்றுத் தர, தஞ்சைபுரியிலிருந்து ஆசிரியர் வந்து விட்டார். ஆரம்பத்திலிருந்து தொடங்கிய பாடம் மிக வேகமாக வளர்ந்தது.

ஒருநாள், இராசேந்திர சோழர் நடன ஆசிரியரைப் பார்த்து, "அடுத்த முறை நான் வரும்போது வீரம்மாளின் அரங்கேற்றத்தைப் பார்க்க வேண்டும்" என்று கூறியவாறு வீரம்மாளை நோக்கினார்.

வீரம்மாளின் பூ இதழ் விரிந்து நகைத்தது. இமை மூடித் திறந்து அல்லி விழியும் நகைத்தது. மேனியெங்கும் ஏற்பட்ட சிலிர்ப்புடன், "அரங்கேற்றமா? உங்கள் எதிரே மட்டுமே ஆடுவதற்காகக் கற்றேனல்லாமல், பொதுமக்கள் கண்டுகளிக்க அன்று!'' என்று அவள் சொல்ல நினைத்தாள்.

இளவரசருக்கு அவள் நினைப்பது புரிந்துவிட்டது போலும். வீரம்மாளைப் பார்த்தபடி, ஆனால் அவள் சகோதரன் முத்துக்குமரனிடம் சொல்வதுபோல், "உன் தங்கையை நாட்டியம் பயிலச் சொன்னது எதற்காகத் தெரியுமா?" என்று கேட்டார்.

"இசை, நடனம், இலக்கணம், நாடகம் ஆகிய கலைகளைத் தெரிந்து கொள்வது எதற்காக என்பது எனக்குத் தெரியாது இளவரசரவர்களே!" என்று தனக்குத் தெரியாது என்பதை மிகவும் மரியாதையுடன் கூறினான், முத்துக்குமரன். உண்மையில் அவனுக்குக் கலையை ரசிக்கத் தெரியாது. அவன் அறிந்ததெல்லாம் வேல் எறிதல், யானை மீது தாவி ஏறுவது, போர்க்களத்தே சக்கராயுதம்போல் வாளைச் சுழற்றி எதிரிகளை வெட்டிச் சாய்ப்பது போன்றவைதாம்.

"சோழ நாட்டு மக்கள் கண்டு மகிழ்ந்து பாராட்டுவதற்காக நான் அரங்கேறச் சொல்லவில்லை" என்று மட்டுமே கூறி வீரம்மாள் பக்கம் திரும்பினார் இளவரசர்! 'பிறகு எதற்காக அரங்கேற்றம்?' என்று நினைத்தபடி வீரம்மாளும் இளவரசர் முகத்தை நோக்கினாள். இருவர் விழிகளும் சந்தித்தபோது ஆயிரம் ஆயிரம் செய்திகள் பாய்ந்து கலந்தன.



'தில்லைச் சிதம்பரத்து நடன மண்டபத்திலோ, தஞ்சைப் பெரிய கோயில் திருச்சுற்று வெளியிலோ ஆடி மகிழ்விக்க அன்று, என் இதய மேடையில் அரங்கேறத் தான் என்று இளவரசர் சொல்கிறாரா?' என்று எண்ணியவாறு வீரம்மாள் தன் மழை விழி இமைகள் படபடக்க, செங்குமுத முகம் சற்றே நிமிர இளவரசரை நோக்கினாள்.

இராசேந்திரன் மிகக் கம்பீரமாக, தன் உள்ளத்து இன்ப உணர்ச்சிகள் முகத்தில் ஒளி வீச வீரம்மாளைப் பார்த்தார்.

அவள் இளவரசரைப் பார்த்தபோது அவளுடைய இயற்கையான மாநிற முகம், நாணத்தால் ஆயிரம் செங்குமுத வண்ணமாக மாறியது. அவள் முக உணர்வை மறைக்க இருகரங்களும் ஓடிவந்து தழுவின. வீரம்மாள் அங்கிருந்து ஓடி மறைந்தாள்.

அதன் பிறகு அவள் அண்ணன் ஆர்வமுடன் வீரம்மாளின் நடனப் பயிற்சியில் அக்கறை காட்டினான்.

"வீரம்மா! இளவரசருக்கு உன் மீது எவ்வளவு பாசம் தெரியுமா? சென்று வென்று வந்த நாட்டில், அவர் விட்டு வந்த அதிகாரிகளின் நலன்கள், நடவடிக்கைகள், அங்குள்ள மக்களின் கொந்தளிப்புகள், ஆதரவுகள் பற்றிக்கூட இதுபோல் கேட்டறிய ஆவல் கொண்டதில்லை. என்னிடம் பேசும்போதெல்லாம் உன்னைப் பற்றி அவர் கேட்காமலிருந்ததில்லை" என்று தன் உடன்பிறந்தான் பரிவுப் பாசமுடன் கேட்கும்போது வீரம்மாள் நிலை கொள்ளாமல் தவிப்பாள்.

"என்னைப் பற்றியா?" ஒன்றுமே தெரியாதவள்போல் பாசாங்குடன் அண்ணனின் வாய்மூலம் செய்தி கேட்டறியத் துடிப்பாள்.

"ஆமாம், வீரம்மா! உன்னை அறிமுகப்படுத்திய நாளிலிருந்து அவர் உன்னைப் பற்றிக் கேட்டறியத் தொடங்கிவிட்டார். 'உன் தங்கை இருப்பது இவ்வளவு காலமாகத்தனக்குத் தெரியாது என்பார்...! என்று அவன் கூறிவரும்போது வீரம்மாள் குறுக்கிட்டு, சற்றே சிணுங்கியவாறு, "ஆமாம், உங்களுக்கு மட்டும் நினைக்க நேரமிருக்கிறதா, இந்த அருமைத் தங்கையை? பழையாறையை விட்டால், தஞ்சை, தஞ்சையை விட்டால், காஞ்சி, காஞ்சியை விட்டால், மதுரை, மதுரையை

விட்டால் மாதக் கணக்கில் ஈழும்" என்று கூறவும், அவன் கலக்கமுற்று, "ஆமாம், வீரம்மா! என் அருமைச் சோழ தேவியை நான் அதிகம் நேசிப்பதால், உன்னைப் பற்றிய சிந்தனை இதுவரை இல்லாமலிருந்தது. இல்லை என்றால் தாய் தந்தையற்ற உனக்கு நல்ல மணவாளனைத் தேடிப் பிடித்து அவனிடம் ஒப்படைத்திருக்க மாட்டேனா? இளவரசர் உன்னைப் பற்றிக் கேட்டறியத் தொடங்கிய பிறகுதான் நான் உன்னைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தேன். என்னிடம் உன்னைப் பற்றிக் கேட்பதுபோல, உன் நடன ஆசிரியரிடம் உன் கலை முன்னேற்றத்தைப் பற்றி அவர் கேட்டிருக்கிறார்!" என்றான்

"ஐயோ, ஆசிரியர் என்ன சொன்னார்? வரவர, அவரைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. நவரசங்களையும் தாண்டி அவருடைய முகத்தில் எரிச்சல், ஆத்திரம் போன்ற புதிய ரசங்கள் கூத்தாடுகின்றன. தேவாரப் பதிகங்களுக்கு அபிநயம் செய்யும் முறைகளை சில வித்தியாசமான முத்திரைகளை நான் சொல்லித்தர வேண்டியிருக்கிறது. ஏதாவது சொன்னால், 'உனக்கென்ன, இளவரசர் கருணைக் கடாக்ஷம் இருக்கிறது!' என்கிறார். அவரை நீக்கிவிட்டு வேறு குருநாத்ரை ஏற்பாடு செய்யுங்கள், அண்ணா!" என்று கூறவும், அண்ணன் மெல்லச் சிரித்து, "வீரம்மா! நடன ஆசிரியர் மிக நல்லவர், திறமையுடையவர். அவரை நீ ஆட்டிப் படைக்காதே! அவர் என்ன செய்வார், பாவம்! இளவரசருக்கும் அவர் மறுமொழி கூறியாக வேண்டும். உன் முன்னேற்றத்தைப் பற்றி அடிக்கடி இளவரசா கேட்கிறார். அதனால் அவர் உன்னிடம் அப்படி நடந்து கொள்கிறார்" என்று முத்துக் குமரன் சமாதானம் சொல்வான்.

வீரம்மாள் நினைப்பாள், "இளவரசருக்கு என் கலை முன்னேற்றத்தின் மீது அவ்வளவு அக்கறையா?"

நினைப்பே இனிக்கும். மேனியெங்கும் சிலிர்க்கும்.

இளவரசரைச் சந்தித்துப் பேச வேண்டும் என்று ஆவல் பொங்கித் ததும்பியது. திருவாதிரை நன்னாளில் சிதம்பரம் வரும்போது எப்படியாவது அவரைச் சந்தித்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் இருந்தாள். தனிமையில் வாய்ப்பு ஏற்பட்டாலும் நல்லதுதான்.



இளவரசர் வரவில்லை. இளவரசரின் இளம் வயதுப் பதிப்பாக ஓர் இளைஞர் தோணித் துறையில் இறங்கி வந்தார். அரச குடும்பத்து அதிகாரிகள் புடைசூழ, சோழர் கொடி பிடித்த வீரன் முன் செல்ல, அந்த இளைஞர் கம்பீரமாக வந்தார்.

இளவரசர் வரவில்லை. யாரிடம் கேட்பது? அந்தரங்கமாக யாரிடமாவது கேட்கக்கூடிய ஒரே தோழி முத்துவடிவுதான். அவளை விட்டால், ஆசை விழிகளுடன் நிமிர்ந்து பார்க்கும் கன்று நாகுதான். முத்துவடிவும் நெருங்கிய தோழிதான். ஆனால் அவளிடம் இப்போது பொறாமை சிறிது சிறிதாக முளைத்து வருகிறது.

அதனால் அவள் மன இருளுக்கு வெளிச்சம் ஏற்படுத்த வீட்டுப் புழக்கடைக்குச் சென்று நாகுவிடம் வாய்விட்டுப் பேசினாள்.

"என் அருமை நாகு" என்று கன்றின் கழுத்தை மெல்ல வருடி, "நாகு...நாகு...! எனக்கு ஏன் இப்படி ஒரு வேதனை ஏற்பட்டிருக்கிறது?" என்று கேட்டாள். கனிவுடன் அது விழி சாய்த்தது.

"நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். முன்பு போல் நீ இல்லை" என்றது.

"நானா என்னிடமா? என்ன மாறுதலை நீ கண்டாய்?"

"இவ்வளவு நாள்களாக நீ என்னைக் கவனித்தாயா? சில நாள்களாக நீ யாருடனும் பேசாமல் உன்மத்தம் பிடித்தவள் போலிருக்கிறாய். உனக்கு என்ன வந்துவிட்டது, வீரம்மா?"

"பொல்லாத நாகு. நீ கண்டுபிடித்து விட்டாயா? எனக்கு ஏற்பட்டது போன்ற துயரம் வேறு ஒரு பெண்ணுக்கும் ஏற்பட வேண்டாம்".

"உனக்கு என்ன குறை? இளவரசரின் கருணை விழிப்பார்வை பெற்றுவிட்ட உனக்கு என்ன குறை?"

"அதனால் வந்த வினைதானே, நாகு! அவர் சோழ நாட்டின் இளவரசர். அவர் விழிப் பார்வைக்கு ஏங்குபவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர் இருக்க, என்னிடம் அவருக்குப் பரிவு ஏற்பட்டது. நாட்டியம் கற்றுக் கொடுக்க நடன ஆசிரியரை ஏற்படுத்தினார்".

" நீ அதிர்ஷ்டசாலிதான்".

"இல்லை,நாகு! இளவரசர் எதிரே நான் ஆடவேண்டும். அவரைச் சந்திக்க வேண்டும். திருவாதிரைத் திருநாளுக்கு அவர் தில்லை அம்பலத்திற்கு வருவார் என்று ஆவலுடன் காத்திருந்தேன். அன்று அவருடைய பிறந்த நாள். ஏனோ அவர் வரவில்லை!"

"ஓ! அதனால்தான் உனக்கு மனவருத்தமா? சரியாக உணவு செல்லவில்லை, யாருடனும் பேசவும் பிடிக்கவில்லை. அப்படித்தானே?"

"அவர் வராதது ஒருபுறமிருக்க, அவரைப் போன்ற தோற்றமுடைய இளைஞரைப் பார்த்தேன். இளவரசர் இளம் வயதினராகிவிட்டாரோ என்ற பிரமை ஏற்பட்டது".

"இளம் பிராயத்தவரைத்தான் உனக்குப் பிடிக்குமா?"

"சீ, பொல்லாத நாகு! வயதுக்கு ஏற்ற பேச்சா நீ பேசுகிறாய்? மனம் ஒன்றிப் போவதற்கு வயது ஒரு பொருட்டா? ஈசான சிவ பண்டிதரின் மடத்தில் இளவரசரை முதன் முதலில் சந்தித்தபோது, அவர் வயது என் கண்களில் படவில்லை. அவருடைய புலமை, வீரம், விவேகம், பாசம், கம்பீரம் இவைதாம் என் கண் எதிரே தோன்றின. நாகு, ஏன் சிரிக்கிறாய்? என் செய்கை எனக்கே புரியவில்லை. அமைதியாயிருந்த என் மனத் தடாகத்தில் கவலை வட்டங்கள் எழுந்துவிட்டன.

"வயதான மூதாட்டி போல் பேசுகிறாய் !"

"எல்லாம் சில நாள்களாகத்தான். இப்போது மற்றொரு கவலை. நாகு. அதை எப்படிச் சொல்வேன்?"

"அந்த இளைஞரால் ஏற்பட்ட கவலையைத்தானே சொல்கிறாய்?"

"உனக்குத் தெரியாததே கிடையாதா?"

"இந்தக் குடிலுக்கு அவன் வந்தான்".

"அவன் என்று சொல்லாதே... அவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்".

"எல்லா விவரங்களையும் கேட்டறிந்து விட்டாயா?"

"இல்லை, நாகு! அவருடன் நான் பேசவில்லை. பேசப் பிடிக்கவில்லை. அவர் பார்வையைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. அவர் என்னுடன் பேச முயன்றார். நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்".



வீரம்மாள் தன் உள்ளக்கிடக்கையை விவரிப்பதைச் சற்று நிறுத்தினாள். அவள் தோழி முத்துவடிவு அங்கே வந்தாள்.

"ஏன் பாதியிலேயே நிறுத்தி விட்டாய்? பேசு, வீரம்மா. பேசு!" என்றாள்.

வீரம்மாள் திடுக்கிட்டாள். நாகுவுடன் பேசிக் கொண்டிருந்தவை எல்லாவற்றையும் முத்துவடிவு கேட்டிருப்பாளோ?

அங்கே மௌனம் நிலவியது. முத்துவடிவே மௌனத்தைக் கலைத்தாள். "வீரம்மா, சிதம்பரம் போய் வரலாமா?" என்று கேட்டாள். அவளுக்கும் மாறுதல் தேவையாயிருந்தது. அத்தையும் வர ஆவல் தெரிவித்தாள்.

"நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். உன் வீட்டிற்கு அவர் வருவதைப் பார்த்தேன். வெளியே இரண்டு வீரர்கள் நின்று கொண்டிருந்தனர். பழையாறையிலிருந்து வருகிறவர்கள். என்னிடம் உன்னைப் பற்றிக் கேட்டுவிட்டே உள்ளே நுழைந்தார்கள். நீ அப்போது ஆடிக்கொண்டிருந்தாய். சிறிது நேரம் கழித்து அந்த இளைஞர் வெளியே வந்தார். ஏமாற்றம் அவர் முகத்தில் நிலவியது" என்று அவள் கூறவும், வீரம்மாள் திடுக்கிட்டாள்.

"என் நாட்டியத்தைப் பார்த்தா? அவர் யார்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாது. நான் கேட்டறியவும் விரும்பவில்லை. ஆனால் சில நாள்களாக உன்னிடம் மாறுதலைப் பார்க்கிறேன்".

"போடி கள்ளி! என்னைப் பற்றி ஏதாவது குறை சொல்லாவிட்டால் உனக்குப் பொழுது போகாது. எனக்கு மிக வேண்டியவள் என எண்ணிக் கொண்டிருந்தேன்".

"மிகவும் நெருங்கிய தோழியாகிய என்னிடம் நீ சிலவற்றை மறைக்கிறாய்".

"என்னத்தைக் கண்டுவிட்டாய்?" - வீரம்மாள் சீறினாள்.

"சொல்லட்டுமா? அன்று வீட்டின் பரண்மீதிருந்த பெட்டியை எடுத்தாய். அப்போது உன் தாத்தா அங்கில்லை. பொன் நகைகளைப் பூண்டு கொண்டாய். புதிய வளையல்களை அணிந்து கொண்டாய். உடுத்தியிருந்த சேலையை மாற்றி, பட்டுச் சேலையை உடுத்திக் கொண்

டாய். கண்ணாடியின் முன் நின்று உன் புதிய தோற்றத்தை நீயே ரசித்தாய். வெளிவாசலுக்கு வந்தாய். யாரையோ எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தாய்".

முத்துவடிவு சொல்லச் சொல்ல, வீரம்மாள் நாணம் மேலிட்டால், பொய்க் கோபத்துடன், "ஆமாம். நான் என் தாயின் நகைகளை அணிந்தேன், பட்டுப் புடைவையை உடுத்தினேன்" என்று அவளை அடிக்கக் கையை ஓங்கினாள்.

அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டு "திருட்டுப் பெண்ணே! ஒரு பெண்ணின் இரகசியம் அவளிடம் அதிக நாள் தங்காது. யாரிடமாவது காதல் கொண்ட மங்கை ஒருத்தி செய்வதைத்தான் நீயும் செய்திருக்கிறாய். பல நூறு வருடங்களுக்கு முன்பு, ஒரு பெண் இப்படித்தான், ஒருவர் மீது மையல் கொண்டாள். அவரை நினைந்து நினைந்து உருகினாள். நீ செய்ததையெல்லாம் அவளும் செய்தாள். அவள் தந்தைக்கு எல்லாம் தெரிந்துவிட்டது.

"காறை பூணும் கண்ணாடி காணும்
தன் கையில் வளை குலுக்கும்
கூறை உடுக்கும் அயர்க்கும்
தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்...."

என்று அவள் ஒரு பாட்டே பாடிவிட்டாள்" என்றாள், முத்துவடிவு.

பிறகு வீரம்மாள் முகவாயை மெல்லப் பிடித்து, "வீரம்மாள்! இந்தப் பாட்டு உனக்குப் புரிகிறதா? காதல் வயப்பட்ட பெண்கள் வெளிப்படையாகச் சொல்லமாட்டார்கள். மனதிற்குள்ளேயே வைத்து உருகுவார்கள். நீயும் அதற்கு விலக்கா? சில நாள்களாகப் பார்க்கிறேன், உயிர்த் தோழியாகிய என்னிடம்கூடச் சொல்ல முடியாத அளவுக்கு மனதில் இரகசியத்தைத் தேக்கி வைத்திருக்கிறாய். காதல் நோய்வாய்ப்பட்ட அந்தப் பெண்ணோ அவள் காதலன் பெயரையும், புகழையும் சொல்கிறாள். என்னிடம் ஏன் மறைக்கிறாய், வீரம்மாள்? உன் மன வேதனையை என்னிடம் சொல். உன் மனதில் கள்ளத்தனமாகக் குடிபுகுந்தவன் யார் என்று சொல்".

வீரம்மாள் திகைத்தாள். 'அவளுக்கு எப்படித் தெரிந்தது?' என்று வைத்த விழி வாங்காமல் தன் தோழியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள்



விழிகளில் நீர்ப்படலம் திரையிட்டது. விழியைத் தன் சேலைத் தலைப்பால் மெல்லத் துடைத்துக் கொண்டு, அவள் கரத்தை அழுத்தமாகப் பற்றி, "முத்துவடிவு! உன்னிடம் நான் ஏன் மறைக்கப் போகிறேன்? என் மனம் சலனமடைந்துவிட்டது. நான் அவரைச் சந்தித்தேன். அந்தக் கணம் முதல் அவர் என் இதயத்துள் புகுந்து விட்டார். நான் நாட்டியக் கலையில் சிறந்து விளங்க வேண்டும் என்ற ஆவலில் நாட்டிய ஆசிரியரை அவர் அனுப்பினார்..." என்று கூறி வரும்போது முத்துவடிவு குறுக்கிட்டு, "ஓகோ! அவர் அனுப்பிய ஆசிரியர்தானா? அவர் முகமும் பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை. நாம் இருவரும் சிதம்பரம் சென்று இன்னும் சிறந்தவரிடம் பயிலலாமே!" என்றாள்.

"உன் பெற்றோர்கள் சம்மதிப்பார்களா, நாட்டியம் பயில? உன்னை மணக்கப் போகிறவருக்கு அதெல்லாம் பிடிக்குமா?" என்று வீரம்மாள் கேட்டாள்.

"ஓ! உன் சகோதரனும், அத்தையும், பாட்டனாரும் அனுமதித்து விட்டார் என்ற துணிவில் நீ பேசுகிறாய். உன் கைப் பிடிக்கப் போகிறவன் சம்மதிப்பானா?" என்று அவள் கேட்டபோது வீரம்மாளின் மேனி சிலிர்த்தது.

"அவர்தானே நாட்டியம் பயிலுமாறு சொன்னார், ஏற்பாடு செய்தார்" என்றாள்.

"அவர் என்றால்... யாரைச் சொல்லுகிறாய்? இளவரசர் தானே நாட்டியம் பயில ஏற்பாடு செய்தார்? அவரைத்தான் நீ..." என்று திடுக்கிட்டவள் போல கேட்டாள், முத்துவடிவு.

தலையை அசைத்த வீரம்மாள் நாணத்தால் முத்துவடிவின் தோளில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து முத்துவடிவு கேட்டாள்; "வீரம்மாள்! இன்று நாம் சிதம்பரத்திற்குப் போய் வருவோமா?"

வீரம்மாளுக்கும் மகிழ்ச்சியே!

முத்துவடிவு, அத்தை செங்கமலத்தாச்சி, வீரம்மாள் மூன்று பேரும் சிதம்பரம் நோக்கி மாட்டு வண்டியில் பயணமானார்கள்.

நடராசர் திருக்கோயிலில் வீரம்மாள் விழிகளை அலைய விட்டாள். ஒருவேளை இளவரசர் அங்கு வந்திருப்பாரோ என்று!

சிவகங்கைக் குளத்து நீரில் காலை வைத்து, மீன்கள் பாதங்களைக் குத்தும் குறுகுறுப்பையும், சிலிர்ப்பையும் அனுபவித்தவாறு முத்துவடிவை நோக்கி, "இன்னும் சிறிது நேரம் குளக்கரையிலேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கலாமா?" என்று கேட்டாள்.

அத்தை கமலத்தாச்சி, தன் வயதொத்த உறவினர் ஒருத்தியுடன் சற்றுத் தள்ளி அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

முத்துவடிவிடம் தன் உள்ளத்துணர்ச்சியைக் கொட்டி மனச் சுமையை இறக்க முயன்றாள் வீரம்மாள். சொல்லிக் கொண்டே வந்தபோது தோணித்துறையில் தான் கண்ட இளைஞனைப் பற்றியும் சொன்னாள்.

"யாராயிருக்கும்?" என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள். பிறகு, "அரச குடும்பத்தவரைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும்" என்று கூறி அந்த இளைஞனின் அங்க வடிவை, செளந்தர்யத்தை வர்ணித்தாள்.

"நான் பார்க்கவில்லையே பார்த்தால் சொல்வேன்!" என்றாள் முத்துவடிவு.

நீல வண்ணத் திரையில் வெண் பொட்டிட்டது போல், வட்ட முழுமதி வானத்திரையில் நீந்தி வந்து, தன் தண்ணொளியை எங்கும் தெளித்துக் கொண்டிருந்தது.

"இருள் இன்னும் சூழ்வதற்கு முன்பே புறப்பட்டு விடுவோம்!" என்றாள் முத்துவடிவு.

அப்போது குளக்கரையில் பரபரப்பு ஏற்பட்டது. படிக்கட்டுகளில் நான்கு பேர் இறங்கி வந்து கொண்டிருந்தனர்.

"அதோ... அவர்தானடி நான் அன்று பார்த்த அரச குடும்பத்து இளைஞன்" என்றாள், வீரம்மாள் பரபரப்புடன் எழுந்து.

முத்துவடிவும் எழுந்தாள். தன் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு, வீரம்மாள் சுட்டிக் காட்டியவரைப் பார்த்தவுடன் முத்துவடிவு திடுக்கிட்டாள். அங்கு வந்து கொண்டிருந்தவர்... அந்த இளமை கொஞ்சும் வீரன், இராசேந்திர சோழனின் இளைய மகன்.





# 4. பாசமும் உரிமையும்

பழையாறை பெரு நகரம் வழக்கத்தை விடக் கலகலப்பு மிகுந்து திகழ்ந்தது.

தஞ்சையினின்று இராசராச சோழ தேவர் பழையாறைக்கு வருகை தரவிருந்தார். பழையாறைக்கு அவர் வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அரச குலத்தவர்கள் தஞ்சைக்குச் சென்றே சக்கரவர்த்தியைக் கண்டு வணங்கி வந்தனர். இரண்டாண்டுகளாக இளவரசர் இராசேந்திர சோழர் மாளிகையில் தங்கியிருக்கும்போது, அதிகாரிகள் பழையாறைக்கு வந்து ஆணைகளைப் பெற்று வந்தனர். சோழ சக்கரவர்த்திகளோடு இணைந்து இளவரசர் இராசேந்திரனும் ஆணைகள் பிறப்பித்தமையால் ஆட்சி முறை தேக்கமின்றி நடைபெற்றது.

சக்கரவர்த்திகள் பழையாறைக்கு வந்ததில் மக்கள் குதூகலமடைந்தனர். பட்டீச்சரம், நந்திபுர விண்ணகரம், திருச்சத்திமுற்றம் கோயில்களில் சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டன.

பழையாறை அரண்மனையில் முக்கியமாக சோழர் குலத்தவர்கள் வாழ்ந்து வந்தனர்.

சோழப் பேரரசரின் பட்டத்து அரசியாகத் திகழ்ந்த லோக மாதேவியார் இரண்டாண்டுகளுக்கு முன்பு இறைவன் திருவடியை அடைந்த பிறகு, இராசராசர் பழையாறை மாளிகைக்கு வருவது அரிதாயிற்று. தேவியர் பதினொருவரில் பஞ்சவன்மாதேவியாரைத் தவிர மற்றவர்களை இழந்த துயரத்தை இராசராசர் எவ்வாறு தாங்கினார் என்பதே பேரதிசயம்.

பழுவேட்டரையர் திருமகளான பஞ்சவன்மாதேவி முதுமைப் பருவத்திலும், சக்கரவர்த்திகளின் அருகே இருந்து குறிப்பறிந்து பணிவிடைகள் செய்து வந்தார்.

மதுராந்தகன் என்ற திருப்பெயர் கொண்ட இராசேந்திரனைத் திருவயிறு வாய்த்த வானவன் மாதேவிக்குப் பிறகு மதுராந்தகனை வளர்க்கும் பெரும் பொறுப்பை இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியாரும், இராஜமாதா செம்பியன் மாதேவியாரும் ஏற்றிருந்தனர். செம்பியன் மாதேவியாருக்குப் பிறகு இராசேந்திரன் மீது அதிக அன்பு செலுத்தியவர், இளைய பிராட்டியார்தான்.

இராசராச சோழ தேவரின் அபிமானத்தை மிகவும் பெற்ற பஞ்சவன்மாதேவியார் மதுராந்தகனிடம் அதிக அன்பு செலுத்தினாள். வெற்றிமாலை சூடிப் பெரும் நிதியத்துடன் தஞ்சைக்கு வரும் மதுராந்தகனைக் கோட்டை வாசலில் வரவேற்க, சக்கரவர்த்திகளுடன் வருவாள். பழுவேட்டரையர் குலத்தின் தொடர்பு சோழர் குலத்துடன் மேலும் வலுவடைய வேண்டும் எனும் எண்ணத்துடன் சோழ அரசி நடந்து கொண்டார் என்றும் சொல்லலாம். ஆனால் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்படும்போது, தன் உறவுப் பெண் பழுவேட்டரையர் குலமங்கை நல்லாள் இளவரசியாக அமர்வாள் என்று எதிர்பார்த்தது நடைபெறவில்லை என்றாலும், சோழ அரசி பஞ்சவன்மாதேவி மதுராந்தகனிடம் அன்பையும், பாசத்தையும் குறைக்கவில்லை.

தன் தந்தையுடன் இராசேந்திரன் பேசிக் கொண்டிருக்கும்போது அருகிலிருந்து பார்க்கும் பஞ்சவன் மாதேவிக்கு, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு விளங்கிய அருள்மொழிவர்மரின் அழகிய வடிவமே கண்முன் நிற்கும்.

கண்ணேறு பட்டுவிடப் போகிறது என்ற கவலையுடன், 'இராசேந்திரன் நீடூழி வாழ வேண்டும்' என்று இறைவனைப் பிரார்த்தனை செய்து கொள்வாள். சக்கரவர்த்திகளுடன் தல யாத்திரை செய்து திருக்கோயில்களிலுள்ள இறைவனையும், இறைவியையும் வணங்கும்போது இராசேந்திரன் பெரும் புகழும், நலமும் பெற்றுத் திகழ வேண்டிக் கொள்வாள்.

அண்மைக் காலத்தில் தஞ்சை மாநகருக்கு இராசேந்திரன் வரவில்லை என்பதை பஞ்சவன்மாதேவி உணர்ந்திருந்தாள்.



துளிர்விடும் மரங்களில், இலைகள் சருகுகளாகி உதிர்வது போல் எவ்வளவு சம்பவங்கள்! அவற்றை நினைத்துப் பார்ப்பதில் அவளுக்குத் தனி இன்பம். மாளிகை நந்தவனத்தில் சக்கரவர்த்திகளுடன் காலையிலும் மாலையிலும் உலவச் செல்லும்போது நடந்த நிகழ்ச்சிகளை மீண்டும் நினைவுபடுத்தி, அவற்றை அரசருடன் பகிர்ந்து கொள்வதில் அவளுக்குத் தனி மகிழ்ச்சி.

சில வேளைகளில் மலர்ந்த நினைவுகளின் இன்ப நிகழ்ச்சிகளைக் கேட்டு அரசர் குழந்தைபோல் நகைப்பார். அவரை ஒருமுறை பஞ்சவன்மாதேவி உற்று நோக்குவாள். முத்தாரத்தில் கோக்கப்பட்ட முத்தைப்போல் உதிராத பற்கள், தன் பற்கள்! நினைக்கவே வெட்கமாக இருக்கும்.

இராசேந்திரன் ஆதிரைத் திருவிழாவிற்கு வருவான் என சக்கரவர்த்தி எண்ணியிருந்தார். ஆனால் பஞ்சவன் மாதேவிக்குக் கிடைத்த செய்திகள் கவலை அளிப்பனவாக இருந்தன. சக்கரவர்த்திகளிடம் எப்படிச் சொல்வது என்ற அச்சமும் இருந்தது. பழையாறை மாளிகைக்கு வந்து தங்கும் இராசேந்திரன் தஞ்சைக்கு ஏன் வரவில்லை? இந்தக் கேள்வி அவள் உள்ளத்தில் எழுந்து எழுந்து அலைமோதியது. இராசேந்திரன் உள்ளத்தி விருப்பதை அறிய பஞ்சவன்மாதேவி பல விதங்களில் முயன்றாள்.

பாட்டியைப் பார்க்க ஒரு நாள் இராசேந்திரன் மகள் அருள்மொழி நங்கை வந்திருந்தாள். இராசராசருக்குப் பெயர்த்தி அருள்மொழி நங்கையிடம் அளவு கடந்த பாசம். அருள்மொழி நங்கையை ஆசையுடன் வரவேற்று, கட்டியணைத்து, உச்சிமுகர்ந்து, முதுகுவருடி, திருஷ்டி கழித்து, "நங்கை, பாட்டிக்கு என்ன கொண்டு வந்திருக்கிறாய்?" என்று ஆசையுடன் கேட்டாள்.

கன்னங்குழியச் சிரித்த நங்கை, தான் கொண்டு வந்திருந்த தந்தப் பெட்டியைப் பாட்டியிடம் தந்து வணங்கி எழுந்தாள்.

பெட்டியைத் திறந்து பார்த்த பஞ்சவன்மாதேவி இரத்தினப் பதக்கம் கோக்கப்பட்ட இரத்தின மாலையைக் கண்டு வியப்புடன் அவளை நோக்க, "பாட்டி, இந்த முத்து மாலையைத் தங்களிடம் தந்து வணங்கி ஆசி பெற்று வருமாறு தந்தை கூறினார்" என்றாள்.

முத்துமாலையைக் கையிலெடுத்து அதன் ஒளியில் சற்று நேரம் தன்னை மறந்திருந்த பஞ்சவன்மாதேவி அந்த முத்துமாலையைப் பற்றிக் கேட்டறியலானாள்.

இராசேந்திரனின் இரு மகள்களுள் ஒருத்தியான அருள்மொழி நங்கை நாட்டு நடப்பை நன்றாக அறிந்தவள்.

சில நாட்களுக்கு முன்பு மதுரையினின்று வந்த பரிசுப் பொருள்களுள் அந்த முத்துமாலையும் ஒன்று என்றும், தன் தந்தை இராசேந்திர சோழ தேவர் அந்த முத்து மாலையைப் பாட்டிக்குக் கொடுக்க வேண்டும் என்று விரும்பியதோடு உடனே கொண்டு சேர்த்துவிடுமாறும் கூறியதாக அவள் தெரிவித்தாள்.

"என் செல்வமே, என்னிடம் உன் தந்தைக்கு உள்ள அன்பும், மரியாதையும் இந்த முத்துமாலை பரிசாகக் கிடைக்கப் பெறாமலேயே நான் அறிவேன். ஆனால் உன் தந்தையே நேரே வந்து இதைக் கொடுத்திருந்தால் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்திருப்பேன்" என்று கூறிய வுடன், நங்கை வியப்புடன் நிமிர்ந்து பார்த்து, "பாட்டி, தங்களைச் சந்தித்து நேரே அளிக்க நான் ஆசைப்பட்டேன். தந்தையிடம் அனுமதி பெற்றேன். அவர் வருவதற்கு நாளாகலாம் என்பதோடு தங்களையும், பாட்டனாரையும் கண்டு வாழ்த்துப் பெற நான் வந்தேன்" என்றாள்.

பெயர்த்தியின் சாமர்த்தியமான பேச்சை ரசித்த பஞ்சவன்மாதேவி, சட்டென்று, "உன் தந்தை தஞ்சைக்கு வந்து நாள்கள் பல ஆகின்றன என்பது உனக்குத் தெரியுமா? அவன் ஏன் வருவதில்லை?" என்று கேட்டாள்.

"தங்களுக்குத் தெரியாதா, தந்தைக்கு அதிகப் பணி. பழையாறையில் மட்டும் அவர் எங்கே தங்குகிறார்? வடக்கே காஞ்சிமாநகரம் சென்றிருந்தார். அதற்கும் வடக்கே காளத்திக்கும் சென்றார்" என்றாள்.

"காளத்திக்கு எதற்காகச் சென்றான்?"

"பாட்டி, தந்தை இப்பொழுது நடனம், சிற்பம், சித்திரம் என்று ஓயாமல் அறிஞர்களுடன் பேசிக் கொண்டிருக்கி றார். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சிற்பியை மாளிகைக்கு அழைத்துப் பேசுகிறார். பெரிய கோயிலின் திருச்சுற்றில் வர்ணச் சித்திரங்களைத் தீட்டிய ஓவிய ருடனும் கலந்தாலோசிக்கப் போகிறாராம். கோயில் மேல் மாடத்தில் நடனக் கலை தொடர்பான சிற்பங்களைப்



படைத்தவர்களுடன் கலந்து பேசப் போகிறாராம்..." என்று சொல்லிக் கொண்டே வந்த அருள்மொழி நங்கையை நோக்கி, "சரி, காளத்திக்கு எதற்காகச் சென்று வந்தான்?" என்று கேட்டார் அரசியார்.

"நடன மங்கையரை அழைத்துவர".

"எதற்காக நடன மங்கையர்? தஞ்சையில் இல்லாத வர்களா?"

"எனக்குத் தெரியவில்லை, பாட்டி! சிற்பிகளும் அதி காரிகளும் பேசிக் கொள்வதைப் பார்த்தால் தந்தை மிகப் பெரிய திட்டம் ஒன்றில் ஈடுபட்டிருக்கிறார் என்று தோன்றுகிறது".

"என்ன திட்டம்?"

"என்னவென்று எனக்குத் தெரியவில்லை. பெரிய வர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது தந்தை அழைத்தால் தவிர நான் அங்கே இருப்பதில்லை. முதல்அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது நான் அந்த இடத்தில் இருப்பதில்லை. அதனால் முழுச் செய்தியும் அறிய எனக்கு வாய்ப்பில்லை, பாட்டி!"

"நல்ல பழக்கம்தான். படை எடுப்பதற்கு முன்புதான் திட்டமிடுவது வழக்கம். அமைதி நிலவும் காலத்தில் அறிஞர்களுடன் திட்டமிடுகிறானே, எதற்காக என்று தெரிந்து கொள்ளும் ஆசையால் கேட்டேன், நங்கை! சக்கரவர்த்திகளுக்குத் தெரியாமல் போகப் போகிறதா? அப்பொழுது நான் அவரிடத்தில் தெரிந்து கொள்கிறேன்" என்று கூறிய பஞ்சவன்மாதேவி, பேச்சை வேறு திசையில் மாற்ற விரும்பி, "நங்கை, குந்தவ்வை தேவியார் நலமாக இருக்கிறாரா? உன் தந்தையின் அத்தை அவர்கள் என்பது உனக்குத் தெரியுமா? நீ சென்று பார்ப்பதுண்டா?" என்று கேட்டாள்.

முகமலர்ச்சியுடன், "இளைய பிராட்டியாரைப் பார்க் காத நாளெல்லாம் பிறவாத நாள், பாட்டி! இங்கே புறப்பட்டு வருவதற்கு முன்பு போய்ப் பார்த்து வணங்கி வந்தேன்" என்றாள் நங்கை.

"என்ன சொன்னார்கள்?"

"தங்களுக்கும், பாட்டனாருக்கும் தன் ஆசியைத் தெரிவிக்கச் சொன்னார்கள். நலம் கேட்டு வந்து சொல்லச் சொன்னார்கள். அவர்களால் நகர முடியவில்லை. படுத்த

படுக்கையாக இருக்கிறார்கள். அதனால் தஞ்சைக்கு வர முடியவில்லை என்பதையும் தெரிவிக்கச் சொன்னார்கள்".

அருள்மொழி நங்கை கூறியது கேட்டு, திடுக்கிட்ட பஞ்சவன்மாதேவி, "என்ன? குந்தவ்வை உடல் நலமில்லாமல் இருக்கிறாரா? பழையாறையிலிருந்து எந்தச் செய்தியும் வருவதில்லை. உன் பாட்டனார் சோழ நாட்டின் சக்கரவர்த்தியாக இன்றளவும் இருக்கிறார் என்பதை மறந்துவிட்டார்களா?" என்று சற்றுக் கோபத்துடன் கூறினாள்.

பஞ்சவன்மாதேவி, அருள்மொழி நங்கையையும் அழைத்துக் கொண்டு, சக்கரவர்த்திகளிடம் சென்றாள்.

பாட்டியார் பஞ்சவன்மாதேவியின் கம்பீரத்தை அருள்மொழி அறிவாள். தள்ளாமை மிகுந்த நிலையில் தன் தோளில் கரம் வைத்து நடந்து வர, சக்கரவர்த்திகளின் இருப்பிடத்தை இருவரும் அடைந்தார்கள். அந்தப் பிடியில்தான் என்ன மென்மையான அழுத்தம்?

**சோ**ழ சக்கரவர்த்தி இராசகேசரி இராசராச சோழ தேவர், அரசி பஞ்சவன்மாதேவியுடனும்மற்ற பரிவாரங்களுடனும்காவிரி உட்பட, புனிதமான ஐந்து ஆறுகளையும் கடந்து பழமை வாய்ந்த பழையாறை நகரை வந்தடைந்தனர்.

படைவீரர்கள் தங்கியிருக்கும் படையூர்களில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த வீரர்கள் சக்கரவர்த்திகளைத் தரிசனம் செய்ய நகரின் எல்லையிலேயே கூடிவிட்டார்கள்.

பழையாறை நகரின் வீதிகள் புதுப் பொலிவுடன் திகழ்ந்தன. புத்தாடை அணிந்த மாதர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் சாலையின் இருபுறமும் கூப்பிய கரங்களுடன் கூடி நின்றார்கள்.

பயிர் நிலங்களில் அறுவடை முடிந்து அடுத்து விதை விட ஆயத்தமாக இருந்தார்கள். மக்கள் வளமுடன் வாழ்கிறார்கள் என்பதை அவர்கள் இல்லமும் உடுத்திய உடைகளும் பொலிவான தோற்றமும் புலப்படுத்தின.

தேரில் வரும்போது இருபுறமும் அவர் பார்த்த காட்சிகளால் ஏற்பட்ட மகிழ்ச்சியால்அவரிடம் புதுத் தெம்பு ஏற்பட்டது. தன் புதல்வன் இளவரசன் இராசேந்திரனைப் பற்றிப் புதிதாக எழுந்த கவலை மறைந்தது.



**ப**ழையாறை மாளிகையில் அவர் இளைப்பாறியபோது ஒவ்வோர் அதிகாரியாக வந்து வணங்கிச் சென்றனர். அவர்களைப் பெயரிட்டு, பட்டப் பெயரிட்டு அழைத்து அவர்களுடைய குடும்ப நலன்களைக் கேட்டறிந்த அவரது நினைவாற்றல், பெருந்தன்மை அனைவரையும் பிரமிக்க வைத்தது.

"தேவி, உன் மகன் வருவதை எதிர்பார்த்து எதிர் பார்த்து என் கண்கள் பூத்துவிட்டன" என்று கவலையுடன் தெரிவித்தார், சக்கரவர்த்தி.

தேவநேயப் பாவா
நூல
சென்னை - 600 00

பஞ்சவன் மாதேவியும் எதிர்பார்த்திருந்தது, அவளுடைய பார்வையினின்று புலப்பட்டது.

"வந்துவிடுவான்..." என்று இரு வார்த்தைகளைக் கூறுவதற்குள் அவள் குரல் தழுதழுத்தது.

அன்று மாலை பட்டீச்சரம் கோயிலுக்குப் புறப்படுவதற்கு முன்பு இராசேந்திரன் வருகையை எதிர்பார்த்திருந்த சோழ சக்கரவர்த்திகளிடம் ஓர் அதிகாரி வந்து வணங்கித் தெரிவித்த செய்தியிலிருந்து, கொள்ளிடம் வடகரைப் பகுதிகளுக்குச் சென்ற இளவரசர் இராசேந்திரன் இன்னும் பழையாறைக்கு வரவில்லை என்பது தெரிந்தது.

437428/ 610549 1

இராசராசசோழ தேவர் பெருமூச்சு விட்டார். தன் மகனைச் சந்தித்துப் பேசும் வரை பழையாறையில் தங்கியிருப்பது என்று முடிவு செய்தார். தஞ்சைக்கு ஏன் திரும்ப வேண்டும்? அப்படி ஓர் எண்ணமும் எழுந்தது. இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியார் தன் சகோதரனும் சோழ சாம்ராஜ்ய சக்கவர்த்தியுமான இராசராசனைக் காண வந்தார். முதுமையுடன் நோயின் பிடியால் மெலிந்த தோற்றத்துடன் கூடிய குந்தவ்வை மெல்ல நடந்து வந்து, கண்ணீர் மல்க அவரைத் தழுவிக் கொண்டாள்.

'நலமா, நலமா' என்று இருவரும் ஒருவரையொருவர் கேட்காமலேயே விழிகள் பேசிக் கொண்டன.

இராசேந்திரனைப் பற்றிப் பேச்சு திரும்பியபோது, "தம்பி!" என்றழைத்த இளைய பிராட்டியின் குரலில் சோகம் ததும்பி நின்றது.

"திக்கெட்டும் புலிக்கொடி பறக்க அரசோச்சும் சக்கரவர்த்திகளாயிருந்தாலும் என்றும் இராசராசன் என்

இளவல்தானே!" எனக்கு அன்பான அருள்மொழிவர்மர் தானே!" என்று கூறியபோது உணர்ச்சி மிகுதியால் அவள் குரல் தழுதழுத்தது.

இராசராசனால் ஏதும் பேசமுடியவில்லை. தலையை மெல்ல அசைத்து, இளைய பிராட்டியின் திருக்கரத்தைச் சேர்த்துப் பிடித்தார்.

"சக்கரவர்த்திகளை உரிமையுடன் 'தம்பி' என்றழைக்கிறேன். ஆனால் சோழ சக்கரவர்த்திகளுக்கு இணையாக உத்தரவுகளைப் பிறப்பித்து ஆட்சி நடத்தும் இராசேந்திரனை, நான் வளர்த்த இராசேந்திரனை உரிமையுடன் அழைக்க முடியவில்லையே? அவன் மனதில் ஏதோ கோபம் பதுங்கி நிற்கிறது. அதை வெளிப்படுத்தாமல் அவன் மறை முகமாகச் செயலாற்றுகிறான். என்னைச் சந்தித்து ஓராண்டிற்கு மேலாகிறது. இன்னும் அவன் இளம் பருவத்தினனா. நான் அவனை அதட்டிக் கேட்க? ஐந்து குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுத்த தந்தை என்ற பெரும் இடத்தில் நிற்கும் அவனை, என் வாழ்நாளில் "டேய் மதுரா. என்ன காரியம் செய்கிறாய்? என்று கேட்க முடியுமா?" என்று சொல்லி வரும்போது அவளுடைய கம்பீரமான குரல் உடைந்து சிதறிச் சிறு சிறு வார்த்தைகளாக வந்தது

தன் சகோதரி, இராசேந்திரனை உருவாக்கிய இளையபிராட்டி கூறுவதைக் கேட்டு சோழச் சக்கரவர்த்தி மிகவும் துடிதுடித்துப் போனார்







# 5. கன்னியும் களிறும்

பௌர்ணமி கழித்து இரண்டாம் நாள், சந்திரோதயம் கீழ்வானில் சற்று மெல்லவே நிகழ்ந்தது. புழக்கடைத் தோட்டத்து மூங்கில் படல் அருகே அமர்ந்து நேரம் போவது தெரியாமல் கீழ்வானை நோக்கியிருந்தாள், வீரம்மாள்.

தோட்டத்து மரக் கிளைகளில் ஓய்வுடன் ஒண்டிக் கொண்ட பறவை இனங்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டன. வானில் திரிந்து வந்த தங்கள் அனுபவத்தையும், வேடர்கள் கரங்களில் சிக்காது வந்த திறமையையும் அவை பேசிக் கொண்டனவா?

குஞ்சுகளுக்கு இரை கொடுத்துக் குதூகலிக்கும் தாய்ப் பறவையும், காதல் அரவணைப்பில் சேர்ந்து குலவிக் கொண்டிருக்கும் இரட்டைக் குருவிகளும் அங்கே இருளில் அமர்ந்திருக்கும் வீரம்மாளைக் கவனிக்கவில்லை.

சந்தடியின்றி மெல்ல வந்த முத்துவடிவு வீரம்மாளைத் திடுக்கிட வைக்க எண்ணி, பின்புறமாக அவள் விழிகளைப் பொத்தினாள்.

"ச்... கையை எடுடி வடிவு..." என்று பொய்க் கோபத்துடன் முத்துவடிவின் கரத்தை நகர்த்திய வீரம்மாள், "விளையாடுவதற்கு உனக்கு வேளை போது தெரிவதில்லை" என்றாள்.

"அதிருக்கட்டும். நான்தான் உன் கண்ணைப் பொத்தினேன் என்று எப்படித் தெரிந்து கொண்டாய்?" என்று முத்துவடிவு கேட்டாள். வெளிச்சம் பரவும் முன் அடர்ந்

திருந்த அந்த இருளிலும் வியப்பு முகத்தில் நிறைந்திருந்தது தெரிந்தது.

"உன்னைத் தவிர இந்த நேரத்திலும் என்னைத் தேடி வருவதற்கு உற்ற தோழி யார்?" - வீரம்மாள் குரலில் ஏக்கம் இருந்தது.

"இரண்டு தினங்களாக நான் உன்னைக் கவனித்து வருகிறேன்; பிரமை பிடித்தவள் போலிருக்கிறாய். என்னிடம் சொல்ல உனக்கு இன்னும் மனம் வரவில்லையா?" - முத்துவடிவு கேட்டாள்.

முழுவட்டத்தில் கீற்றளவுக்குக் குறைந்த வெண்மதி கீழ்த் திசையில் மெல்லத் தலைகாட்டி சந்தன வண்ணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

முத்துவடிவின் தோள்களைத் தொட்டு, குரல் தழுதழுக்க, "வடிவு, தெரிந்துகொண்டே பேசுகிறாயா? என்னைச் சோதனை செய்வதுதான் உன் விருப்பமா?" என்று கேட்டாள்.

"ஆழ்கடல் போன்ற உன் மனதை என்னால் எளிதில் அறிய முடியவில்லை. சிதம்பரம் சென்று வந்ததிலிருந்துதான் இப்படி இருக்கிறாய்" வடிவு அவள் மனதை அறிய முயன்றாள்.

"நீயே சொல் அன்று என்ன நடந்தது! அதை நினைத்துப் பார்" - இப்போது வீரம்மாளின் குரலில் அழுத்தம் இருந்தது.

"ஆமாம்! அன்று சிவகங்கைக் குளக்கரையில் உன் பாட்டி சற்றுத் தொலைவில் உட்கார்ந்து ஊர்க்கதை பேசிக் கொண்டிருந்தாள். அகல் விளக்கின் வெளிச்சத்தைத் தவிர வேறு ஒளி இல்லை அங்கே. யாரோ சிலர் வேகமாகப் படிக்கட்டுகளில் இறங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து, நான் சற்றுத் திகைத்தேன். பரபரப்புடன் நீ எழுந்தாய். வந்தவர்களிடையே அந்த இளைஞன் இருந்தான்" என்று பேசிக் கொண்டு சென்றவளை வீரம்மாள் குறுக்கிட்டு, "முத்துவடிவு! அப்போது நான் சற்று விலகி நின்றேன். உனக்கும் எனக்கும் இடைவெளி ஏற்பட்டது. அவன் இவன் என்று இனி சொல்லாதே முத்துவடிவு - அவர் இராசேந்திர சோழரின் மகன், அரசகுமாரன் என்று பிறகுதான் தெரிந்தது. அவர் என் அருகே வந்து, 'வீரம்மாள்! உன் நடனத் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.



உன் வீட்டிற்கே வந்து நடன ஆசிரியர் நடனம் கற்பிக்கிறாராம். நீ ஆடுவதைப் பார்க்க வேண்டும்" என்றார். இன்னும் என்னென்னவோ கூறினார். பேசிக் கொண்டே என் கரங்களைச் சட்டென்று பற்ற முயன்றார். நான் பயத்துடன் மேலும் விலகி படிக்கட்டுகளில் ஏறி ஓடத் தொடங்கினேன்."

"ஆமாம்! இவை எல்லாம் கணப் பொழுதில் நிகழ்ந்து விட்டன. நானும் உன்னைப் பின் தொடர்ந்தேன். குளத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மண்டபம் ஓடுவதற்கு வசதியாக இருந்தது. மக்கள் நடமாட்டமில்லை. கீழ்ப்பக்கப் படிக்கட்டுகளிலிருந்து குளக்கரை நுழைவிடம் வந்த பிறகு நீ தான் நின்றாய்..."



"முத்துவடிவு, நான் ஏன் அப்படி ஓடி வந்தேன் என்று உனக்குத் தெரியுமா? அவர் பார்வை எனக்குப் பிடிக்க வில்லை. முன்பின் அறியாத என்னை அவர் கரம் தொட்டிழுக்கப் பார்த்தது சரியா? வடிவு, நீ சொல்! நீயும் என்னைத் தொடர்ந்து வந்தாயோ, நான் பிழைத்தேனோ?"

"வீரம்மாள்! நீ மிகத் துணிவுடையவள் என்று எண்ணி யிருந்தேன். ஆனால், நீ பயந்து ஓடிவந்தது..."

"சீ! என்ன பேசுகிறாய்? வந்தவர் இளவரசரின் மகன். அவர் கண்களில் ஒருவித பசி இருப்பது தெரிந்தது. முன்பின் அறியாத அவர், என் நாட்டியத்தைப் புகழ் வதற்கு அந்த நேரம், அந்த இடம்தானா கிடைத்தது?"

"இளவரசரின் மகன் என்று எவ்வாறு தெரிந்து கொண் டாய்?"

"நீதானே பிறகு சொன்னாய்... மறந்து விட்டாயா?"

"அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டு நாள்கள் ஓடி விட்டனவே; இன்னும் ஏன் பிரமை பிடித்தவள் போல் இருக்கிறாய்?"

முத்துவடிவின் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்ட வீரம்மாள், "முத்துவடிவு, நாம் எங்காவது சில நாள்களுக்குக் கண்மறைவாகப் போய் விடலாமா? என் உடன்பிறந்தான் வந்து விட்டால் எந்தப் பயமுமில்லை. அவர் எப்போது வரப் போகிறார் என்று தெரியவில்லை" என்று அச்சம் கலந்த குரலில் பேசினாள் வீரம்மாள்.

"ஓகோ! உன் அண்ணன் வந்தால், அவருடன் இளவரசரும் வருவார்... அதற்காகத்தானே, அப்படித்தானே?" என்று வடிவு கேட்கவும், அவள் கன்னத்தை மெதுவாகத் தட்டி, "வடிவு, அதுவும் ஒரு காரணம், நான் என் சகோதரரிடம் நடந்தவற்றைக் கூற வேண்டும். அப்போதுதான் அவர் தக்க முடிவு எடுப்பார்."

"ஏன், உன் பாட்டனாரிடம் சொல்லலாமே?"

"ஓ! வேண்டாம், வேண்டாம். அவர் உடனே வாளை எடுத்துக் கொண்டு, 'என் பெயர்த்தியின் கரத்தைத் தொட முயன்றவன் யார்?' என்று புறப்பட்டு விடுவார். அது மட்டுமல்ல வடிவு, அன்று குளக்கரையில் பார்த்த இளவரசரின் திருக்குமாரன் வீட்டிற்கே வந்து விட்டார்" என்று கூறி நிறுத்தினாள்.



"வீட்டிற்கா? எனக்குத் தெரியாதே" - வடிவு சற்றுக் கவலையுடன் கேட்டாள்.

"நேற்று முன் தினம், காலையில் படுக்கையை விட்டு எழும்போதே சோர்வாக இருந்தது. ஆற்றுக்குக் குளிக்கச் செல்லப் பிடிக்கவில்லை. உன்னையும் காணோம். வீட்டுக் கேணியில் நீர் சேந்திக் குளித்து விட்டு, வெயிலில் கூந்தலைக் காயவைத்துக் கொண்டு இருந்தேன். பச்சைக் கிளியொன்று பறந்து வந்து கிளையொன்றில் உட்கார்ந்தது. யாரையோ அழைத்தது. எங்கிருந்தோ மற்றொரு வண்ணக்கிளி வந்து அமர்ந்தது. இரண்டு கிளிகளும் எலுமிச்சை மரத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன. எனக்கும் அதுபோல் சுறுசுறுப்பாக ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றியது. கூடத்திற்கு வந்தேன். தாத்தா எங்கோ சென்றிருந்தார். அத்தையும் வேறு வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். சதங்கையை எடுத் தணிந்து கொண்டேன். எளிதாக ஆடச் சேலையை எடுத் துச் செருகிக் கொண்டேன்..."

அன்று ஆசிரியர் வரும் நாள். முன் தினம் அவருக்கும், அவளுக்கும் கருத்து வேற்றுமை. திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகம் ஒன்றைக் கற்றுக் கொடுக்கத் தொடங்கி னார்.

அவருக்குக் குரல் வளம் கிடையாது. அவர் பாடுவார்; அல்லது அவளே பாடிக் கொண்டு ஆடுவாள். அல்லது வடிவு பாடுவாள். இருவருக்கும் நல்ல குரல் வளம்.

"மாதர் பிறை கண்ணியானை..."

பாடலை ஒருமுறை ஆசிரியர் பாடினார். அவர் குரல் வீரம்மாளுக்குப் பிடிக்கவில்லை. மனதும் சரியாயில்லை. உடல் வளைய மறுத்தது. விழிகளில் ததும்பியிருந்த சோகம் பாடலுக்கு ஏற்ற பாவ உணர்ச்சிகளை வெளியிட மறுத்தது.

வீரம்மாள் ஆடாது கம்பம் போல் நின்றாள். பிறகு,

"ஆசிரியரே, மாதர்பிறைக் கண்ணி என்றால் என்ன பொருள்?" என்று கேட்டாள். "பொருள் என்ன? நான் தெலுங்கிலா பாடுகிறேன்?" என்று அவர் எரிச்சலுடன் கேட்டார்.

அந்த மன நிலையில் வீரம்மாள் கடுமையாக மறுமொழி கூற விரும்பினாள்.



"எனக்குத் தெலுங்கும் தெரியும். வடக்கே இரட்ட பாடியில் பல ஆண்டுகள் தங்கியிருந்த என் சகோதரர் தான் கற்றதை எனக்கும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். ஆசிரியர் ஐயா, நான் கேட்டது. 'மாதர் பிறை கண்ணியான்' என்று கூறுகிறீர்களே, மாதர் என்றால் என்ன பொருள் - பிறை என்பதற்கு எப்படி அபிநயிப்பது என்று கேட்கிறேன்" என்றாள். வார்த்தைகள் கொப்பளித்து வந்தன.

ஆசிரியர் எரிச்சலுடன், "நான் குரு. குரு சொல்வது போல் ஆடுவதுதான் அழகு" என்றார். வீரம்மாள் அவரைச் சுட்டெரிப்பதுபோல் பார்த்தாள். கருமை முகத்தில் பரவிய செம்மை, சாம்பலிடையே பளிச்சிடும் நெருப்பைப் போல் மினுமினுத்தது.





"உங்களுக்கும் தெரியாது. நான் சொல்வதையும் கேட்க மாட்டீர்கள். வீட்டிற்குச் சென்று மற்றவர்களிடம் கேட்டறிந்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் பாதச் சலங்கையை அவிழ்க்க முற்பட்டவளை "ஆ... ஆ... கூடாது கூடாது. அப்படிச் செய்யக் கூடாது" என்று தடுத்து நிறுத்தினான், அந்த இளைஞன்.

"குருவிடம் கோபிக்காதே வீரம்மா? கோபம், ஆத்திரம், சீற்றம் இவற்றிற்கு ஒரு பொருள் என்று கூறிவிட முடியாது. உன் விழிகள் அத்தனை உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. எனக்குத் தெரிந்ததை நான் சொல்லட்டுமா? எங்கே, அந்தப் பாட்டை ஒரு முறை பாடு."

வீரம்மாள் திடுக்கிட்டு அதிர்ச்சியுடன் அந்தக் குரலுக்கு உரியவரை நோக்கினாள்.

இராசேந்திர சோழரின் திருமகன் அங்கே நின்று கொண்டிருந்தான். படகுத் துறையில் சற்றுத் தொலைவில் பார்த்த அதே தோற்றம். சிவகங்கைக் குளக்கரையில் தன்னைப் பீதியடையச் செய்த அதே உருவம்

இப்போது மிக அருகே. வீட்டிற்குள்ளேயே அவன் வந்திருக்கும் சூழ்நிலை சரியில்லையே! யாரைக் கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான்?

அரசகுமாரனல்லவா? யாரைக் கேட்க வேண்டும்? இருந்தாலும், பண்பாடு என்று ஒன்று இருக்கிறதே! உள்ளே வருவதற்கு முன் சொல்லிவிட்டு, "வரலாமா?" என்று கேட்டு விட்டு வருவதுதானே முறை?

இளவரசன் சிரிக்கிறான். போதை குமிழியிடும் சிரிப்பு.

"வீரம்மா? ஏன் திகைத்து நின்று விட்டாய்? என்னை எதிர்பார்க்கவில்லை அல்லவா? உன் வீட்டிற்கு வருவதாக நான் அன்றே உன்னிடம் சொல்ல விரும்பி குளக்கரைக்கு வந்தேன். என்னைக் கண்டவுடன் ஏன் அவ்வாறு ஓடினாய்? அச்சமா, கூச்சமா? என்னைப் பற்றித் தவறாக யாராவது உன் செவிகளில் படுமாறு சொன்னார்களா? வீரம்மா பேசு, பேசு - நான் கேட்டதற்கு மறுமொழி சொல்லு. அந்தப் பதிகத்தை மீண்டும் பாடு!" என்றான்.

அரசகுமாரன் பேசிக் கொண்டிருக்கும் போதே வீரம்மாள் பயந் தெளிந்தாள். அதிர்ச்சியிலிருந்து மீண்டாள். அரச குமாரனை நோக்கி 'யார் நீ?' என்று கேட்பது போல் புருவத்தை உயர்த்தினாள். தாழ்த்தினாள், சுருக்கினாள்.



அரச குமாரன் புரிந்து கொண்டான்.

"வீரம்மா, நான் யார் என்று அறிய விரும்புகிறாய், அவ்வளவுதானே? நான் இங்கு வருவதை நீ எதிர்பார்க்கவில்லை; அவ்வளவு தானே? அன்று குளக்கரையில், அவ்வாறு உன்னிடம் நான் நடந்து கொண்டது சரியில்லை; அவ்வளவுதானே? வீரம்மா, சோழ நாட்டிலுள்ளவர்கள் என்னை அறிவார்கள் என்ற கர்வம் எனக்கு அதிகம். போகட்டும் நீயும் அறிந்திருப்பாய் என்று நினைத்தேன். நான் விரைவில் தஞ்சைக்குச் செல்ல வேண்டும். போகும் வழியில் உன்னைச் சந்திக்க விரும்பினேன். உள்ளே வந்தேன். நீ நட்டுவனாருடன் விவாதித்துக் கொண்டிருந்தாய். திருநாவுக்கரசரின் அந்தப் பதிகம் எனக்கு மனப்பாடம். நான் பாடட்டுமா?

"மாதர்ப் பிறைக் கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந்தேத்திப்
புகுவார் அவர் பின்புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறு
அடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்,
கண்டேன் அவர் திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்."

வீரம்மாள் மெய்மறந்து நின்றாள். இராசகுமாரனின் இனிய குரலுடன் கூடிய பாடல் அவளை ஒருகணம் திகைக்கச் செய்ததா? அந்தக் கம்பீர இளமைத் தோற்றத்திற்குள் அமிழ்ந்திருக்கும் கலைப் புலமை அவளைச் சிலிர்க்கச் செய்ததா?

"வீரம்மா! இந்தப் பதிகத்திற்கு அபிநயம் செய்ய வேண்டும். மிக எளிது. பாடலைப் புரிந்து கொள்ள வேண்டும். பாடல் எழுந்த சூழ்நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்."

வீரம்மாளுக்குத் துணிவு ஏற்பட்டு விட்டது.

"நானும் அதைத்தான் கேட்டேன். இந்தப் பாடலுக்குப் பொருள் சொல்லுமாறு கேட்டேன். மாதர் பிறைக் கண்ணிக்குப் பொருள் கேட்டேன். காதல் மடப்பிடியோடு

களிறு வருவன கண்டேன் - அங்கு ஏன் களிறும் மடப்பிடியும் வந்தன என்று அறிய ஆவல் கொண்டேன்.

"நாம் சிவபெருமானை உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும். சிவபெருமான் சடை முடியில் உள்ள மாதர் - பிறையைப் புலப்படுத்த வேண்டும். ஆண் யானையும் - பெண் யானையும் அசைந்து வருவதைப் போல் நடந்து காட்ட வேண்டும். யானையின் நடை எப்படி இருக்கும்?"

அரசகுமாரன் இருகை கொட்டி அவளைப் பாராட்டினான்.

"வீரம்மா, இந்தப் பதிகத்தின் பொருள் பாதிக்கு மேல் புரிந்து கொண்டிருக்கிறாயே! எங்கே, ஆடு பார்க்கலாம்!"

வீரம்மாளின் கூச்சம் பறந்து ஓடி விட்டது. அவருடைய நடன ஆசிரியரையும் அங்கே காணவில்லை. கால் சலங்கைகள் கலகலத்தன. பூவடிகளை முன்னும் பின்னும் எடுத்து வைத்தாள். சிவபெருமானை உருவகப்படுத்தினாள். சிவனின் தலை மாலையாகத் திகழும் பிறைச் சந்திரனை உருவகப் படுத்தினாள்.

சற்றுச் சோர்வாக இருந்தது. காலையிலிருந்து ஆகாரம் உட்கொள்ளாததால் அவளுக்கு இலேசாகத் தலை சுற்றியது. சற்று நிதானித்தாள்.

"வீரம்மாள், திருவையாறு என்ற திருத்தலம் தஞ்சைக்கு அருகே உள்ளது. அங்கே மலைமகள் பார்வதியுடன் வீற்றிருக்கும் சிவபெருமானைப் பாடித் துதித்து அர்ச்சிக்க மலரும், திருமஞ்சனத்திற்கு நீரும் தாங்கிச் செல்கிறார்கள் பக்தர்கள்... இதற்கு இப்படி ஆட வேண்டும்" என்று அரசகுமாரன் சிவபெருமானாக பார்வதியாக, பக்தர்களாக ஆடிக் காட்டினான்.

"திருமஞ்சனத்திற்கு நீர் சுமப்பவர்கள் இடையில் குடத்தை ஏந்தியிருப்பார்கள். நுண்ணிய இடை உடையார் ஒக்கலில் குடத்தை அணைத்துக் கொண்டு ஒரு கை வீசி நடக்க வேண்டும்" என்று கூறி வீரம்மாளின் இடையில் தன் கரத்தைத் தொட்டுக் காட்டி , மற்றொரு கரத்தை அழகுபட வீசிநடப்பது போல், துவண்டு இருப்பது போல் செய்து காட்ட முயன்றபோது, வீரம்மாளை அரசகுமாரனின் ஸ்பரிசம் ஒரு நொடி மெய்சிலிர்க்க வைத்தாலும், மறுகணம் அங்கிருந்து நகர்ந்து அவன் செய்தது சரியில்லை என்பது போல் சுட்டெரிக்கும் விழிகளுடன் நோக்கினாள்.



அரசகுமாரன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் மேலும் விவரித்தான்.

"திருநாவுக்கரசர் அந்தக் காட்சியை அனுபவித்துப் பாடியிருக்கிறார். ஆண் யானை தன் இனிய காதலியான பெண் யானையுடன் வருகிறதாம். யானையின் நடை அழகே அழகு. யானையின் துதிக்கையைப் போல் பெண்ணின் கரம் வளைந்து நெளிந்து காணப்படும். இதோ பார், ஆண் யானை எப்படி வருகிறதென்று! காதல் மடப் பிடியாகிற பெண் யானை, மிக நெருக்கமாக களிறை உராய்ந்து கொண்டு வருவதுபோல் நான் செய்து காட்டுகிறேன். நீயும் அது போல்,செய், வா... நான் கற்றுத் தருகிறேன். சாதாரண யானை இல்லை, வீரம்மா! பரம சிவனும், பார்வதியும் களிறு வடிவில் வருகிறார்கள். என்ன கற்பனை, என்ன கற்பனை! ஆகா! திருநாவுக்கரசர் 'காதல் மடப்பிடி' என்கிறார். தெய்வீகக் காதல் தெய்வம் யானை வடிவில் வந்து புரியும் காதல்... ஆகா" என்று வர்ணித்தவாறு, அரச குமாரனின் அபிநயத்தை மெய்மறந்து கண்டவாறு நின்ற வீரம்மாளின் கரம் பிடித்திழுத்து யானைபோல் நடந்து காட்ட முயன்றபோது, தன்நிலை உணர்ந்த வீரம்மாள் தணலைத் தீண்டியவள் போல் துள்ளி வாயிலை நோக்கி ஓடினாள். மறுகணம் "அண்ணா" என்று கூவினாள்.

அப்பொழுது வீரம்மாளின் சகோதரன் உள்ளே நுழைந்துகொண்டிருந்தான்.

அங்கு நடந்தது. நடப்பது எதுமே அறியாதவன் போல், "ஓ! இளவரசா! இராசேந்திர சோழரின் திருக்குமாரன் சுந்தர சோழரா! வாருங்கள். வாருங்கள்! நீங்கள் வரும் போது தக்க முறையில் வரவேற்க நானில்லாதது பெருங் குறையே! பொறுத்தருளுங்கள். என் பாட்டனார் எங்கே? அத்தையும் இங்கு இல்லையா? என் தங்கை வீரம்மாள் சிறு பெண். தங்களைத் தக்க முறையில் வரவேற்று ஆசனமிட்டு அமரச் செய்து உபசரிக்கும் நெறியறியாதவள். உட்காருங்கள், அரசகுமாரரே!" என்றான்.

"சற்றுமுன்புதான், சிதம்பரத்தில் தங்களை பற்றி இளவரசர் பேசிக்கொண்டிருந்தார். தங்களை உடனே சந்திக்க விரும்பி பழையாறைக்கும், தஞ்சைக்கும் ஆட்களை அனுப்பியுள்ளார். மிக முக்கியமான செய்தியைத் தெரிவிக்க வேண்டுமாம்" என்று அவன் கூறியதைக் கேட்க, அரசகுமாரனுக்கு வெறுப்பாக இருந்தது.

அருவிநீர் தடைப்பட்டது போன்று, அபிஷேகம் பாதியில் நின்றுவிட்டது போன்று அவன் நினைத்த காரியம் பாதியில் தடைப்பட்டு விட்டது. வீரம்மாளின் திருமேனியில் ஓர் அங்கத்தையாவது ஸ்பரிசிக்க விரும்பி, அதற்கேற்ற சூழ் நிலை உருவாகும்போது இப்படி ஓர் இடையூறா?

ஓ! சோழ நாட்டுப் படைத் தலைவர்களில் ஒருவரான முத்துக்குமரனின் தங்கையா, வீரம்மாள்? மிக நல்ல தாயிற்று என்று எண்ணித் தன் கருமை எண்ணத்தை மறைக்க மெல்ல நகைத்தான், அரசகுமாரன். காம விழி களைக் கருணை விழிகளாக மாற்ற முயன்றான், அரச குமாரன்.



## 6. எனக்கு இடமில்லையா?

இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியார் தம்முடன் மனம்விட்டுப் பேசியபோது சில முக்கியச் சம்பவங்களை இராசராச சோழர் புரிந்து கொண்டார். தம் தமக்கை யாரின் கூரிய மதியையும், நினைவாற்றலையும், ஆட்சி முறையில் எந்தெந்த போது எதெதைச் செய்ய வேண்டும், தவிர்க்க வேண்டும் மௌனமாக இருக்க வேண்டும் எனும் ராஜ தந்திரங்களையும் அவர் முன்பே அறிவார். இப் போது, இந்த முதுமைப் பருவத்திலும் குந்தவ்வை தெளி வாகச் செயல்படுவதையும் கண்டு வியந்தார்.

தன் அன்புமகன் அண்மைக் காலமாகத் தஞ்சைக்கு வரவில்லை; தன்னைச் சந்திக்கவில்லை என்பதை மிக வருத்தத்துடன் தன் தமக்கையாரிடம் அவர் கூறியபோது இளைய பிராட்டி அதைப் பெரிதாகப் பாராட்டவில்லை.



மெல்லிய முறுவலுடன், "தம்பி, மதுரன் இன்னும் குழந்தையா? அவன் இப்போது சோழ நாட்டின் இள வரசன். மதுரனுக்கு இராசேந்திரன் என்ற பெயர் இட்டு இளவரசுப் பட்டம் சூட்டி, பட்டத்து இளவரசியைத் திருமணம் செய்துவித்த பிறகும் நீ அவனை இன்னும் சிறு குழந்தையாகக் கருதுவது விசித்திரமாக இருக்கிறது" என்று கூறி இராசராசனின் மன வேதனையை மிக எளி தாகத் துடைக்க முயன்றாள்.

"இருக்கலாம்; நான் கேள்விப்படும் செய்திகள் பெரும் பாரத்தை என் இதயத்தில் சுமத்துகின்றன. பஞ்சவன் மாதேவி கூறிய பிறகுதான் எனக்கும் புரிந்தது" என்று பட்டத்தரசி பஞ்சவன்மாதேவியைத் திரும்பிப் பார்த்த வாறு பேசினார்.

பஞ்சவன்மாதேவி தலையை அசைத்தாள்; ஆனால் ஏதும் கூறவில்லை.

"நீங்கள் கேள்விப்பட்டதென்ன? இராசேந்திரன் மனதி லுள்ளதை உங்களிடம் ஒருவரும் எடுத்துச் சொல்லியிருக்க முடியாது. நேர்மாறாக இல்லாததைப் பொல்லாததைக் கூறித் தங்களுக்கும் மகனுக்கும் பிளவை ஏற்படுத்த முயன்றிருக்க வேண்டும். சாளுக்கிய மன்னன் இப்போது அந்தக் கைங்கர்யத்தைத்தான் செய்து வருகிறான். சாளுக் கியத் திட்டத்தைப் பற்றிச்சோழ சக்ரவர்த்திகளுக்குத் தெரியாததை நான் ஒன்றும் சொல்லிவிடப் போவதில்லை" என்று கூறி குந்தவ்வை பஞ்சவன்மாதேவியின் உள்ளத்தி லிருப்பதை அறிவதுபோல் பேசினாள். தொடர்ந்து "சாளுக்கியர்கள் சமீபகாலமாகப் படை திரட்டுகிறார்கள். உங்களுக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன்" என்று சக்ரவர்த்தியைப் பார்த்துக் கேட்டாள், குந்தவ்வை.

"நான் சாளுக்கியர்களைப் பற்றி இப்போது கவலைப் படுவதில்லை. அவர்களை இராசேந்திரன் கவனித்துக் கொள்வான். இளம் வயதில் என்னுடன் இணைந்து சாளுக்கிய நாட்டுப் போர்க்களத்துக்கு வந்திருக்கிறான். என் மகன் இராசேந்திரன் சாளுக்கிய நாட்டுடன் போர் நடத்துவதை விளையாட்டாகவே கொண்டிருந்தான். ஆனால், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவனுக்குச் சாளுக் கியர்களின் தொல்லையைக் கண்டு எரிச்சலே ஏற்பட்டது. சாளுக்கியர்கள் தொல்லைக்கு முடிவு கட்டப் பெரும் படைகளுடன் அவன் புறப்பட்டுச் சென்ற நிகழ்ச்சி உங்க

ளுக்குத் தெரியாததல்ல. கல்யாணபுரம் தரைமட்டமாக்கப் பட்டது என்று கேள்விப்பட்டேன். அப்படியிருக்கும்போது மறுபடியும் சாளுக்கியர்கள் படை திரட்டுகின்றனர் என்றால்..."

"அது மட்டுமா? போரில் இறந்து விட்டதாகக் கருதப் பட்ட சத்யாச்ரயன் படைகளைத் திரட்டுகிறான், சோழ நாட்டில் ஒற்றர்களை ஊடுருவச் செய்திருக்கிறான் என்பது நம்பக் கூடியதா?"

"எனக்கும் வியப்பாகத்தானிருக்கிறது. இராசேந்திர னைத்தான் கேட்க வேண்டும்" என்று கூறிப் பெருமூச்சு விட்ட சக்ரவர்த்தி இராசராச சோழதேவர், "அவன் வந்து என்னைச் சந்திக்கவில்லையே? என்னை ஆலோசனை கேட்கவில்லையே? தந்தை என்ற பாசம்தான் குறைந்து விட்டது என்றாலும், சோழ நாட்டுச் சக்ரவர்த்தி நான் தானே? எனக்குத் தெரிவிக்க வேண்டியது அவனுடைய கடமையன்றோ?" என்று கூறும்போது அவர் குரலில் பாசத் துடன் உரிமையும் கலந்திருந்தன.

"நம் ஒற்றர்ப் படைகளுக்கும் பொறுப்பு இருக்கிற தல்லவா? அவர்கள் தங்களிடம் தெரிவித்திருக்கலாமே?" இளையபிராட்டி விட்டுக்கொடுக்காமல் பேசினாள்

"நான் இப்போது நாட்டு விவகாரங்களில் அதிகம் கவ னம் செலுத்தவில்லை. எல்லாமே இளவரசர் கவனிப் பதால் அவர்கள் இளவரசருடன் தொடர்பு கொண்டிருக்க லாம்" என்று அவரும் விட்டுக் கொடுக்காமல் பேசினார். பிறகு தொடர்ந்து, "அவன் தஞ்சைக்குத் தொடர்ந்து வருகை தந்திருந்தால், ஒற்றர்களும் இங்கேயே வந் திருப்பர். ஏன் வரவில்லை? அதைப் பற்றித்தான் பல விதத் தகவல்கள்" என்றார் சக்கரவர்த்தி.

இளையபிராட்டி மௌனமாயிருந்தாள். தான் இதுவரை சொல்லாத செய்தி ஒன்றைத் தெரிவிக்க விரும்புபவள் போல் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, சுற்று முற்றும் பார்த்து, "தம்பி!" என்று மெல்லிய குரலில் தொடங்கினாள்.

முக்கியச் செய்தியை இளையபிராட்டி சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்த்து, நிமிர்ந்து உட்கார்ந்தார். இராசராசன்.

பஞ்சவன்மாதேவி சற்று அருகே வந்தாள்.



"தம்பி! அந்த நன்னாள் நினைவிருக்கிறதா?" என்று தொடங்கினாள், இளையபிராட்டி.

எவ்வளவோ நல்ல நாட்கள். எதைச் சொல்கிறார்? ஓகோ - இராசராசர் வாழ்நாளில் எவ்வளவோ நல்ல நாட் கள், மறக்க முடியாத நாட்கள். இருந்தாலும் அந்த ஒரே ஒருநாள்தான் அவர் இதயத்தில் வீற்றிருக்கும் நாள்.

"பெருவுடையார்க் கோயிலின் தட்சிண மேரு விமா னத்தின் குடமுழுக்கு விழா மங்கல நாளைப் பற்றித்தானே குறிப்பிடுகிறீர்கள்? எப்படி மறக்க முடியும்? நடைபெற்று இரண்டாண்டுகள்கூட முடியவில்லையே?"

"தம்பி! நான் நினைத்ததை நீ நினைக்கிறாய். உன் னைப் பாராட்டுகிறேன். அந்த நன்னாளை என்னால் மறக்க முடியவில்லை. குடமுழுக்கு நாளுக்குச் சில நாள் களுக்கு முன்பு நீ என்னைக் கலந்து ஆலோசித்தாய். அழியா நற்செயல் ஒன்றைச் செய்யப் போவதாகக் கூறினாய்."

"ஓ! விமானத்தில் கல்லிலே பொறிக்கச் சொன்ன வாச கங்களைச் சொல்கிறீர்களா?"

"ஆமாம், இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. கல் தச்சரிடம் திருமந்திர ஓலை நாயகம் கூறிய வார்த்தைகள்:

> **'நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜேச்வர முடையாருக்கு நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத் தனவும் ஸ்ரீ விமானத்தில் கல்லிலே வெட்டுக'**

வார்த்தைகள் சரிதானே?"

குந்தவ்வை கூறிய இந்த வாசகங்களை, விழிகளை மூடி மெய்ம்மறந்து கை கூப்பியவாறு கேட்டுக் கொண்டிருந்தார் இராசராசன். மூடியிருந்த விழிகளிலிருந்து உணர்ச்சிப் பெருக்கால் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது.

பஞ்சவன்மாதேவியும் இளையபிராட்டியும் சக்கரவர்த்தி களின் திருமுகத்தில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத் தனர்.

இராசராசன் தன் உடன்பிறந்த சகோதரி இளைய பிராட்டியின் திருக்கரங்களைப் பற்றி, "அக்கா, தங்கள் அருளால், ஆசியால் நான் சோழ நாட்டுச் சக்கரவர்த்தி யானேன். நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் எனக்குக்

கற்றுக் கொடுத்து, என்னை உயர்ந்தவனாக வளர்த்தீர்கள்" என்று கூறும்போது அவர் குரல் தழுதழுத்தது.

"அருண்மொழி - இப்படிக் குழந்தைபோல் விசும்புகிறாயே?"என்று குந்தவ்வை செல்லமாகக் கடிந்து கொள்ளவும், இராசராசன் தொடர்ந்து, "நான் மாவீரனாக எட்டுத் திக்குகளிலும் புலிக்கொடியைப் பறக்கவிட்டுப் புகழ் கொண்டு திகழலாம். அவை எனக்கு நிரந்தரப் புகழைத் தராது. சூரியன் சந்திரன் உள்ள அளவும் என்னை நினைவில் கொள்வது போர்க்கள வெற்றிகள் அல்ல. கம்பீரமான பெருவுடையார்க் கோயிலும், மேரு போன்று உயர்ந்த விமானமும்தாம். அந்த அரிய செயலைச் செய்யத் தூண்டியவர் தாங்கள்தானே? 'சிவபாதசேகரன்' என்ற பெயர் ஏற்படுமாறு என்னைப் பக்திமானாக வளர்த்தவர் தாங்கள்தானே பெருவுடையார்க் கோயிலைக் கட்டப் பணித்தவர் தாங்கள்தானே? அந்தக் கோயிலின் கம்பீரமான விமானத்தில் தங்கள் பெயரை வெட்டுமாறு நான் சொன்னது நன்றியுணர்வின் ஒருசிறு பகுதிதான்"என்றார்

உணர்ச்சி வயப்பட்டுப் பேசியதால் இராசராசன் சற்று இளைப்பாற விரும்பினார். பஞ்சவன்மாதேவி தங்கக் குவளையில் நீர் கொடுத்து, அவர் மார்பை மெல்லத் தடவி ஆசுவாசப்படுத்தினாள்.

"அருண்மொழி, உணர்ச்சி வயப்படாதே. என் கடமையை நான் செய்தேன். உன் நன்றிக்கடனை நீ தீர்த்தாய். ஆனால் அங்கு ஒன்றை மறந்து விட்டாய்" என்று இளைய பிராட்டி கூறவும், சக்ரவர்த்தி பரபரப்புடன் "என்ன அது - என்ன அது?" என்று கேட்டார்.

"தம்பி, நீ பெற்ற வெற்றிகளை விடப் பெரிய வெற்றி, தஞ்சையில் பெரிய கோயிலை எடுப்பித்தாயே, அதைத் தான் சொல்ல வேண்டும். அந்தக் கோயிலைத் தட்சிண மேரு என்று கூறுவது மிகப் பொருத்தம். தென்னாட்டில் மேருமலை இருப்பதுபோல் கம்பீரமாக விளங்குகிறது. உனக்கு நினைவிருக்கிறதா? பெரிய கோயிலின் விமானத்தின் மீது பெரிய கல்லால் ஆன சிகரம் அமைக்கப்பட்டது. அதன்மீது செப்புப் பொற்குடம் ஒன்றை நீ அளித்தாய். செப்புப் பொற்குடத்திற்கு மேல் வேயப்பட்ட பொன் தகடு. விமானத்தின்மீது பிரமந்திரக் கல்லை ஏற்ற நமது கல் தச்சர்கள் செய்திருந்த ஏற்பாடு இப்போது நினைக்கும்போதும் வியப்பாக இருக்கிறது" - இளைய பிராட்டியார் கூறிவரும்போது இராசராசன் குறுக்கிட்டு,



"அக்கையார் அவர்களே! பெருவுடையார்க் கோயிலின் சிறப்புக்கு, பெருமைக்கு முழுக்காரணமும் தாங்கள் தான் என்றும் அழியாத சிவத்தொண்டு ஒன்றைச் செய்ய எண்ணம் கொண்டபோது பெரிய கோயிலைக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியவர்களே தாங்கள்தானே கோயில் முழுமையாக நிறைவு பெற ஆன ஏழாண்டுகளும் தாங்கள் தானே உடன் இருந்தீர்கள். இரவு பகலென்று பாராமல் பணியாற்றிய கல் தச்சனார் குஞ்சரமல்லனுக்குப் பல விதங்களில் யோசனை கூறினீர்கள்..." என்று கூறி வரும்போது இளையபிராட்டியாரிடம் கடந்த கால நிகழ்ச்சிகள் நீண்ட பெருமூச்சாக எழுந்தன.

கோயில் திருப்பணிகளை முன்னின்று நடத்திய வீர சோழன் குஞ்சரமல்லனிடம் இராசராச சோழருக்குப் பெரும் மதிப்பு. இராசராசப் பெருந்தச்சன் என்று அவரைச் சிறப்பித்துப் பாராட்டினார். குஞ்சர மல்லனின் உதவியாளர் கண்டராதித்த பெருந்தச்சனின் சிற்பக் கூடத்திற்கு இளைய பிராட்டியார் சென்று யோசனைகள் பல வழங்கி வருவார். பெருவுடையார் திருக்கோயில் திருப்பணி மிக வேகமாக நடைபெற்றது. பெருவுடையார் கருவறையைச் சுற்றி உள்ள திருச்சுற்றில் ஓவியங்களைத் தீட்டும் பணியின்போது இராசராசனும், குந்தவையும் பல நாழிகைகள் ஓவியர்களுடன் இருள் நிறைந்த குறுகிய இடத்தில் தங்கி இருந்து பல முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்திரமாகத் தீட்ட விளக்கங்கள் கூறினர்.

அந்த நாள் நிகழ்ச்சிகளை இப்போது இராசராசனும், குந்தவ்வையும் மனக் கண்முன் கொண்டு வந்து ரசித்து மகிழ்ந்தனர். சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது. விழிகளை மூடியவாறு அமைதியுடன் இருந்த இருவரையும் மாறிமாறிப் பார்த்த அரசி பஞ்சவன் மாதேவியாருக்கு ஒருகணம் ஏதும் புரியவில்லை.

தன் நிலையை அடைந்த இளைய பிராட்டியார், "தம்பி, பெரிய கோயில் திருப்பணி நடைபெறும்போது செல்வன் மதுராந்தகன் சோழ நாட்டிலில்லை என்பது உன் நினைவில் இருக்கிறதா? கடல் கடந்த நாடுகளுக்குப் படைகளுடன் சென்றிருந்தான். திரும்பி வந்தபோது, 'தஞ்சையில் வானளாவ எழுந்திருந்த பெரிய கோயில் விமானத்தைக் கண்டான். அவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அள

வில்லை. கோயிலைப் பலமுறை சுற்றிச் சுற்றி வந்தான். "இப்படி ஓர் அதிசயமா?" என்று என்னிடம் சிறு குழந்தை போல் கேட்டான். அவனுடைய உயிர்த்தோழன் நித்த விநோதன் தேர்ந்த சிற்பி. அவனுடைய சிற்பக் கூடத்திற்கு இராசேந்திரன் சென்றான்" என்று கூறி வந்த இளைய பிராட்டியாரை ஏதோ கேட்க விரும்பினார், இராசராசன்.

"நித்த விநோதன் - ஹூம்... இந்தப் பெயரை..." என்று தொடங்கிய இராசராசன் மறுகணம் அவனை நினைவு படுத்திக் கொண்டவராக, "ஓ! பெரிய கோயிலைக் கட்டிய கல்தச்சர் குஞ்சரமல்லனின் உதவிக்காகக் கல்யாணி யிலிருந்து வந்தானே அவனா! இராசேந்திரன் அவனுடன் நெருங்கிப் பழகினான். அவனிடம் சென்று...? -" இராச ராசன் அறிந்துகொள்ள ஆவலுற்றார்.

"நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தானாம். பெரிய கோயிலின் விமானத்தில் பொறிக்கப்பட்ட பெயர்களைப் பற்றியும், விமானத்தின் கனத்தைப் பற்றியும் கேட்டானாம். விமானத்தின் மீதுள்ள குடத்தின் மேல் வேயப்பட்டுள்ள பொன் தகட்டைப் பற்றிக் கேட்டானாம். அதன் மதிப்பைக் கேட்டறிந்தானாம். பெருவுடையார்க் கோயிலின் திருச் சுற்று மாளிகை படைத் தலைவர் கிருஷ்ணன் ராமன் உதவி யால் கட்டப்பட்டது என்று கேட்டறிந்து கொண்டான். திருச் சுற்று மாளிகை உன் ஆணையின் பேரில் கிருஷ்ணன் ராமனால் எடுப்பிக்கப்பட்டது என்பதையும் அவன் அறிந்து கொண்டான்" என்று இளையபிராட்டி கூறிச் சற்று நிறுத்தினாள். இராசராசன் மெல்லப் பேசினார். அவர் சிந்தனை வேறு எங்கோ இருந்தது.

"இளையபிராட்டியாரே! இந்தச் செய்திகளை அவன் நம்மிடமே கேட்டிருக்கலாம். ஏனோ மதுரனுக்கு அவ்வாறு தோன்றவில்லை உம்... பிறகு" என்றார் இராசராசன்.

"கோயிலில் பல செப்புத் திருமேனிகளை எழுந்தருளச் செய்தவர்கள் யார் யார் என்றும் கேட்டிருக்கிறான். அரசி, சோழமாதேவி ஆடவல்லாரையும், அபிமானவல்லி, இலிங்கபுராண தேவரையும், திரைலோக்கியமாதேவி கல் யாண சுந்தரரையும் அளித்ததைக் கேட்டறிந்திருக் கிறான்."

"நம் தேவியார் பிள்ளையார் திருஉருவை அளித்தது அவனுக்குத் தெரியாதா?" என்று பஞ்சவன் மாதேவி யாரைப் பார்த்தவாறு கேட்டார், இராசராசன்.



"கேட்டறிந்திருப்பான். ஸ்ரீ காரியம் செய்யும் ஆதித்தன் சூரியன் பன்னிரண்டு திருமேனிகளை அறக் கொடையாக அளித்த செய்தியையும் அவன் அறிந்தான்."

"பெருவுடையார்க் கோயில் சிறப்பையும், பலர் திருப் பணிகள் செய்ததையும் அறிந்து மதுரன் பெருமகிழ்ச்சி யடைந்திருக்க வேண்டும். அவனுக்கு மகிழ்ச்சிதானே?" இராசராசர் கேட்கவும், குந்தவ்வை, "இராசேந்திரன் இன்று இளவரசன். அவன் குழந்தை இல்லை என்று சொன்னேன் அல்லவா? நித்த விநோதன் தஞ்சைப் பெரிய கோயிலின் பெருமையைப் பற்றிக் கூறக் கூற இராசேந் திரனுக்கு என்ன தோன்றியதோ? ஆனால், இராசேந்திரன் என்னிடம் கேட்டதிலிருந்து நான் ஒரு முடிவுக்கு வந் தேன்..." என்று கூறி நிறுத்தினாள் இளையபிராட்டி. என்ன வென்று அறிய இராசராசன் புருவமுயர்த்தினார்.

"தம்பி, கால காலத்திற்கு அழியாத பெரிய கோயிலில் அரசியார், சுற்றத்தார், அதிகாரிகள், படைத்தலைவர் எனப் பலருடைய பெயரும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. கோயிலில் அவன் பெயர் இல்லை. 'சண்டேச்வரர் சிலையை யாவது நான் அமைத்திருக்கக் கூடாதா?" என அவன் என்னைக் கேட்டான். "இறைவன் திருமேனியை அறக் கொடையாக அளிப்பதற்கும், சிற்பங்கள் அமைப்பதற்கும் எனக்கு வாய்ப்பில்லையே அத்தை?" என்று அவன் கேட்டபோது அவன் உள்ளத்து உணர்வை என்னால் விவ ரிக்க முடியவில்லை. பெரிய ஏமாற்றம் பொங்கி நிற்பதை அறிந்தேன்."

"ஏமாற்றமா? மதுரனுக்கு ஏமாற்றமா? என் மகனுக்கு ஏமாற்றமா? சோழ இளவரசனுக்கு ஏமாற்றமா? என்ன சொல்கிறீர்கள், இளைய பிராட்டி? தங்களிடம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டானா?" இராசராசன் கேட்டார்.

"இல்லை, இல்லை. என்னிடம் அவன் ஏதும் கூற வில்லை. அவன் முகத்திலும் எந்தவித மாற்றமும் இல்லை. பிறகு அறிந்தவற்றிலிருந்து நான் எடுத்த முடிவு."

"ஓ! இராசேந்திரன் சிறு குழந்தையல்லன். அவன் மாபெரும் வீரன். பல நாடுகளுக்கும் சென்று வென்று கொண்டு வந்த பொன்னையும் பொருளையும் என் காலடியில் சேர்ப்பித்து வணங்குவான். அந்தச் செல்வங் களைக் கொண்டுதான் பெரிய கோயிலை எடுப்பித்தேன்.

இந்தக் கோயிலில் அவனுக்கும் பங்கு உண்டு. அவன் மனத்தில் வேற்றுமையை விதைத்தவர் யார்?" இராசராச சோழதேவர் குரல் மெல்ல மெல்ல உயர்ந்தது.

இளையபிராட்டியார் தன் இளவலை அமைதிப் படுத்தினாள்,

"இதுவரையில் உறவின் உரிமையுடன் தம்பி என் றழைத்து விட்டேன். 'சோழ சக்ரவர்த்திகளே' என்று இனி அழைப்பது பொருத்தமுடையது. சோழ சக்ரவர்த்திகளே! இளவரசர் இராசேந்திரன் மீது நாம் வீண் சந்தேகம் கொள்ளக் கூடாது. தீர விசாரித்து அறிய வேண்டும்" என்று கூறி இராசராசனிடம் எழுந்த பரபரப்பை மெல்லக் குறைத்தாள்.

"யாரிடம் கேட்டறிய வேண்டும்? யார் யாரைக் கூப் பிட்டுப் பேச வேண்டும்? சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று இராசராசன் கேட்டார்.

"இருவரில் ஒருவர், சிற்பி நித்த விநோதன்."

"நித்த விநோதன்! அவன் சாளுக்கிய நாட்டுச் சிற்பி. ஹூம்... நான் சந்தேகப்பட்டேன். மற்றவர்?"

இளையபிராட்டி சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். "யார், யார்? மற்றவர் யாரென்று உடனே சொல்லுங்கள்" - சக்ரவர்த்தியின் குரலில் அழுத்தம் இருந்தது.

மெல்லப் புன்முறுவலுடன், "சொல்கிறேன், சக்ரவர்த் திகளே!" என்றாள்.

இராசராசனிடம் ஏற்பட்ட ஆவலையும் வேகத்தையும் கண்ட இளையபிராட்டி மற்றவருடைய பெயரைச் சொன் னாள்.

இளையபிராட்டி கூறிய பெயரைக் கேட்ட இராசராசன் திடுக்கிட்டார்.







# 7. மதுரை மாளிகை

பங்குனி மாதத்து இறுதி நாள்கள். கதிரவன் தன் கடுங் கிரணங்களை விரித்து மண்ணென்னும் நல்லாளைத் துயர மடையச் செய்வதில் இன்பங் கண்ட வண்ணமிருந்தான்.

மதுரை செல்லும் பெரும்பாட்டையின் இருபுறங்களிலும் மாமரங்கள் பூத்து நின்றன. சிலவற்றில் மாம்பிஞ்சுகள். இலைகளோடு இலைகளாக, கொத்துக் கொத்தாக அசைந்து கொண்டிருந்தன. வேப்பம் பூக்களின் மணம் வேனிலை 'வா.. வா' என்று கட்டியங் கூறிக் கொண் டிருந்தது. இருபுறங்களிலும் நிழல்தரு தருக்கள் நிறைந் திருந்தாலும் வெம்மை கலந்த காற்று களைப்படையச் செய்தது.

மதுரையை நோக்கி, சிற்பிகள் குடும்பத்துடன் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் கால்கள் துவண்டன. எங்காவது இளைப்பாறிச் செல்லத் துடித்தனர்.

இராசேந்திர சோழரின் ஆணையைச் சிரமேற்கொண்டு அவர்கள் தஞ்சையினின்று புறப்பட்டு வருகிறார்கள். இருள் சூழ்வதற்குள் மதுரையை அடைந்துவிடத் துடித் தார்கள். மறுநாள் சூரியோதயத்திற்குள் மதுரைக் கோட் டையை அடைந்து விட வேண்டும்.

இனியும் நடக்க முடியாது என்ற நிலை வந்தவுடன் தெய்வமே அருளியது போல் சாலையின் ஓரத்தில் ஓர் அல்லித் தடாகத்தையும், அருகே அடர்ந்த ஒரு தோப்பை யும் கண்டார்கள். புதையல் கிடைத்தது போல் குதூகல மடைந்தார்கள்.

தஞ்சைபுரியிலிருந்து குழுவினராய் அவர்கள் புறப்பட்டுப் பதினைந்து நாள்களாகியிருக்கும். அமாவாசை அன்று அவர்கள் புறப்பட்டார்கள். வானத்துச் சந்திரன் மெல்ல மெல்ல வளர்ந்து வருவதைக் கொண்டு நாள்களைக் கணக்கிட்டுக் கொண்டார்கள்.

தண்ணீரைக் கண்டு பல காலம் ஆனவர்கள்போல், குளத்து நீரை ஒருவன் அள்ளி அள்ளி முகத்தில் வீசிக் கொண்டான். ஓரிருவர் குளத்தில் குதித்து நீந்தத் தொடங்கினர். சிலர் குளத்தில் இறங்கி நின்றுகொண்டனர்.

நடுத்தர வயதுடைய பெண்கள் சேலையை மார்புக்கு மேல் சுற்றிக்கொண்டு குளிக்கத் தொடங்கினர். சற்று ஒதுக்குப் புறமாகச் சென்று இளமங்கை குமுதம் படித் துறையில் அமர்ந்து காலை மட்டும் குளிர் நீரில் அமிழ்த்திக் கொண்டாள்.

"நீ குளிக்கவில்லையா குமுதம்?" என்று அவள் அருகே மெல்ல நெருங்கிக் கேட்டான்,மாணிக்க சேகரன். தன் மிக அருகே வந்து, மூச்சுக் காற்று தோளில் விழுவது போல் அவன் கேட்டவுடன், குமுதத்தின் முகம் செங்குமுதமாகச் சிவந்தது. அங்கிருந்து வேகமாகச் செல்லமுற்பட்டவளைத் தடுத்த மாணிக்கம், "என்னைக் கண்டவுடன் உன் கூட்டத்தாரோடு சேர்ந்து மறைந்து கொள்கிறாய். ஆனால், உன் விழிகளை மட்டும் மறைத்துக் கொள்ளாமல், கிடைக்கும் இடைவெளி வழியாகப் பார்க்கிறாய். என்மீது கோபமா? நாணமா? சொன்னால்தான் விடுவேன்" என்று அவள் கரங்களைப் பற்றி அழுத்தினான்.

அவன் பிடியின் சுகத்தை விட முடியாமலும், அதே போது அவனுடைய பிடியினின்று விடுபட வேண்டும் என்ற பரபரப்புடனும், "ச்சி... விடுங்கள்... விடுங்கள் " என்றாள் மெல்லிய குரலில்.

"என் பிடி வலிக்கிறதா?"

அவள் தலையை அசைத்தாள். அதற்கு என்ன பொருள்?

அவனை நிமிர்ந்து பார்த்தாள். தன் பிடியின் அழுத்தத்தை மெல்லக் குறைத்த மாணிக்கம், "குமுதம்! தஞ்சையில் புறப்பட்டதிலிருந்து உன்னுடன் தனியே பேச முயல்கிறேன். இப்படி நடந்து செல்லும்போது ஏற்படும் வாய்ப்பு பிறகு கிடைக்குமா? ஏன் என்னை இப்படி வாட்டுகிறாய்?



என் கனவுகளை ஏன் இப்படிக் கருகச் செய்கிறாய்?" என்று மெல்லிய குரலில் தழுதழுக்கக் கேட்டான்.

"நானா வாட்டுகிறேன்?" என்பது போல் அவள் விழிகள் உயர்ந்தன.

முகத்திலிருந்து கோபத்தைச் சற்று மாற்றி, "உச்... என்ன வெயில்! என்ன வெயில்! இன்னும் எவ்வளவு தொலைவு நடக்க வேண்டுமோ? யாரைக் கேட்டால் தெரியும்? இனி ஓர் அடி எடுத்து வைக்க மாட்டேன். என் கால்கள் கெஞ்சுகின்றன" என்றாள். குமுதம் பேசி விட்டாள்.

"நான் தூக்கிச் செல்கிறேன்" என்றான் மாணிக்கம்.

குமுதம் 'க்ளுக்' என்று சிரித்து விட்டாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"தெரிந்திருந்தால் தஞ்சையிலிருந்தே தூக்கி வரச் சொல்லியிருப்பேன்!"

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

"குமுதம்! காஞ்சியிலிருந்தே உன்னைச் சுமக்கச் சித்தமாக இருந்தேன். என் மனதிலே எவ்வளவு நாள்களாகச் சுமந்து வருகிறேன் என்பது உனக்குத் தெரியாதா?"

'தெரியாது' என்பது போல் தலையை அசைத்தாள் குமுதம். அவள் தலையை அசைப்பது, மரக் கிளைகளில் மாவடுக் கொத்து காற்றில் மெல்ல அசைவது போலிருந்தது.

"உன்னைக் கள்ளி என்று அழைப்பதைத் தவிர வேறு சொற்கள் வரவில்லை" என்று அவன் கூறியபோது, "நீங்கள் மட்டும் என்னவாம்? உள்ளங் கவர் கள்வன்" என்றாள், குமுதம்.

"காஞ்சிபுரத்தில் இருந்திருந்தால் பங்குனி உத்திர நாளன்று இறைவன் இறைவி திருமண நாளில் உன் கழுத்தில் மங்கல நாணைக் கட்டியிருப்பேன். ''காஞ்சி புரத்தில் வேலை இல்லை, தஞ்சைக்குப் போகலாம் என்றார்;உன் தந்தை. தஞ்சைப் பெரிய கோயிலில் சிற்பப் பணிகள் முடிந்தவுடன் காஞ்சிபுரத்திற்குத் திரும்பலாம் என மனக்கோட்டை கட்டினேன்" என்று அவன் கூறி வரும்போது, நெஞ்சில் நிறைந்திருந்த தாபம் வார்த்தைகளாக வெளிப்பட்டது.

"இப்போது மதுரையில் கோட்டை கட்டச் செல்கிறோம். கோட்டை கட்டுவதில் நீங்கள் சமர்த்தர் என்று என் தந்தை கூறுவார்" என்று கூறி, முகத்தில் எந்தவித உணர்வும் புலப்படாதபடி பேசினாள் குமுதம்.

"ஆமாம், மனக்கோட்டை - ஆகாயக் கோட்டையைக் கட்டி ஏக்கச் சூழலில் எப்பொழுதுமே அமிழ்ந்திருக்குமாறு செய்வதில் உன் தந்தை மிகவும் சமர்த்தர்" அவன் குரலில் உண்மையிலேயே சோகம் நிறைந்திருந்தது.

தன்னைப் பிடித்திருந்த பிடியினின்று அவள் மெல்ல விலகி, "மாணிக்கம்! இன்று ஏன் உங்கள் குரலில் சோர்வும் ஏமாற்றமும் அதிகம் இருக்கின்றன? தஞ்சையில் சிற்பப் பணி முடிந்தவுடன், 'வேலை ஏதுமில்லை' என்று சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பி விடுவாரோ என்று நான் பயந்து கொண்டிருந்தேன். ஆனால், நித்தவிநோதப் பெருஞ் சிற்பியின் பெரிய மனது, நம்மைப் பட்டினி கிடக்க விடவில்லை. இதோ, மதுரைக்கு நாம் செல்ல ஏற்பாடு செய்து விட்டார்" என்றாள்.







"நித்த வினோதன் - மரியாதைக் குறைவாக 'அவன்' என்று பேசுவதற்கு மன்னிக்க வேண்டும் - அவன் ஒரு சூழ்ச்சிக்காரன். அவனுடைய திட்டங்கள் எனக்குத் தெரியும். உன் தந்தை புரிந்து கொள்ளவில்லை. வெண்நிறக் காட்டுப் பூக்களை மல்லிகை என்று நம்புகிறார்."

"ஆமாம்! என் அப்பா எல்லோரையும் நம்பி விடுவார். உங்களை நம்ப வில்லையா?" என்று அவள் கூறவும், மாணிக்க சேகரன் கோபத்துடன் அவளை அடிக்கக் கையோங்கியபோது கலகலவென்று நகைத்து, "மாணிக்கம்! உங்களிடம் மட்டும் அவர் ஏன் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை. முறை மாப் பிள்ளையான என் மாமன் மகனை அவர் நம்பவில்லை. விதி யாரை விட்டது? ஊஹ்ம்..." என்றாள், விழிகளில் குறும்புத்தனம் மிளிர.

மாணிக்கத்தால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. குமுதத்தின் தந்தை திறமை மிகுந்த சிற்பி. அவர் காஞ்சிபுரத்தில் பல ஆண்டுகளாகவாழ்ந்து வந்தார். அவருடைய ஒரே மகள் குமுதம். காஞ்சிபுரத்துச் சிற்பக் கூடத்தில் பணியாற்ற அவன் வந்து சேர்ந்ததிலிருந்து குமுதத்திடம் அவன் மனதைப் பறிகொடுத்து விட்டான். தஞ்சையில் இரவு பகலென்று பாராமல் சிற்பப் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவனுக்குக் காதலை வளர்த்துக் கொள்ள நேரமில்லை. ஏக்கப் பெருமூச்சும், விழி விடு தூதும் இன்பக் கனவுகளுமாகக் கழித்தான். தஞ்சைப் பெருவுடையார்க் கோயில் குடமுழுக்கு நிறைவேறிய பிறகு, சற்று ஓய்வு கிடைத்து, காஞ்சிபுரம் திரும்பி விட முடியும் என்று எண்ணியிருந்தவனுக்கு மதுரைப் பயணம் உற்சாகத்தை அளிக்கவில்லை.

சிற்பியின் குழுவில் அவருடைய மாணாக்கர்கள், பணியாட்கள், தேர்ந்தெடுத்த சிற்பிகள் என்று முப்பது பேருக்கு மேல் இருந்தார்கள். பலர் திருமணமானவர்கள். சிலருக்குத் திருமணம் ஆகவில்லை. பெற்றோருடன் வாழ்ந்தனர்.

வயது முதிர்ந்த பெண்களும், நடுத்தர வயதுடைய பெண்டிரும், புதிய தம்பதியரும், திருமணப் பருவம் அடையா மங்கையருமாக அந்தச் சிற்பக் குழு எப்போதும் கலகலப்புடன் இருக்கும். தஞ்சாவூரில் கோயிலருகே அவர்



கள் பல வீடுகளில் தங்கினர். திருமணம் ஆகாத வாலிபர்கள் சேர்ந்து ஒரு வீட்டில் தங்கினர்.

முதிய பெண்டிர், வீட்டுப் பணிகளைக் கவனித்தனர். நடுத்தர வயதுடையவர்கள் சிற்பக் கூடத்திற்கும், வீட்டிற்குமாகச் சென்று வருவதற்கே பொழுது சரியாக இருந்தது. இளம் பெண்கள் அச்சங் கொள்ளாமல், இயற்கையான நாணத்தையும் மறைத்துக்கொண்டு பெருவுடையார் கோயில் சிற்பப் பணி நடக்கும் விசாலமான பகுதியில் வளைய வந்து கொண்டிருந்தனர். பதியிலார் வீதிக்குச் சென்று, அவர்கள் நடனமாடுவதையும் நடனம் கற்றுக் கொடுப்பதையும் கவனிப்பார்கள். இசை ஒலிக்கும் வீடுகளுக்குச் சென்று, இன்னிசையில் மயங்கி நிற்பர்.

குமுதம் - மாணிக்கத்திடையே பாசப் பிணைப்பு அப்போதுதான் மெல்ல மெல்லப் பூங்கொடியால் நெய்யப் பட்டது.

"மாணிக்கம்! நித்த விநோதனிடம் உங்களுக்கு ஏன் வெறுப்பு ஏற்படுகிறது? அவரைப் பகைத்துக் கொண்டு வாழ முடியாது" - குமுதம் எச்சரிப்பாள்.

"அவன் என்னை என்ன செய்து விட முடியும்? குமுதம்! நான் சிற்றுளியை மட்டும் பிடிக்கக் கற்றுக் கொள்ளவில்லை. இந்தக் கரங்கள் வாளையும் சுழற்றும். ஊஹ்ம்..." என்று அவன் குரல் சீறும்.

"அவருக்குச் சக்ரவர்த்தியின் ஆதரவு உண்டு."

"அவனைப் பற்றிய உண்மை ஒரு நாள் சக்கரவர்த்திகளுக்குத் தெரியவரும். அப்போது நித்த விநோதனுடைய உண்மைச் சுயரூபம் புலப்படும்."

"முதலில் 'அவன்... அவன்...' என்று பேசுவதை நிறுத்துங்கள்."

"சரி, சரி, 'இராஜராஜ சோழ நித்த விநோதப் பெருந் தச்சன்' என்றே அழைக்கிறேன். போதுமா?"

"நித்த விநோதனிடம் மரியாதையுடன் பழகுவதற்கு - அழைப்பதற்கு, மற்றொரு காரணமும் உண்டு தெரியுமா? நம் சக்கரவர்த்தியினுடைய புகழ்ப் பெயர்களுள் நித்த விநோதன் என்பதும் ஒன்று."

"சரி, அம்மணி! நீங்கள் அந்த விநோதனுக்கு மிகவும் நடுநடுங்கி, நித்தமும் அடிபணிந்து இருங்கள். எனக்குத்

தேவையில்லை. ஒருநாள் நான் சக்கரவர்த்திகளிடம் உண்மை நிலையைச் சொல்லிவிடப் போகிறேன். பிறகு பாரேன்-"

குமுதம் சற்று மௌனமாக இருந்து, "மாணிக்கம்! உங்கள் மீதுள்ள பற்றினால் சொல்கிறேன். அவர் எந்தவிதத் தீங்கு செய்யவும் அஞ்சமாட்டார்" என்றாள்.

"என்ன செய்வான்? கொன்று போட்டுவிடுவான். கவலையில்லை. நான் பிரம்மராக்ஷதனாக வந்து - அவனைக் கடைசி வரை பிடித்தாட்டுவேன்."

"சிற்பிகளின் உயிர்நாடியான விரல்களை வெட்டி விடுவார். பாறைகளைப் பிளக்கும்போது தற்செயலாக ஏற்பட்டது போல் செய்து விடுவார். எவ்வளவு நாள்கள் நமது பணி தொடருமோ, தெரியவில்லை. பாண்டிய நாட்டின் தலைநகரமல்லவா, மதுரை! பணிபுரிய, பாண்டியர்கள் நம்மை அழைத்தார்களா?" - குமுதம் கேட்டாள்.

"உனக்குத் தெரியாதா? பாண்டிய நாடு முழுமையும் நம் வசம்."

குமுதம் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"நானே இன்னும் உங்கள் வசமாகாதபோது, பாண்டிய நாடு நம் வசமா?"

மாணிக்கமும் சேர்ந்து சிரித்து, சிரிப்புக் கோவைக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

"குமுதம்! உனக்குத் தெரியாதா? பாண்டியர்களுடன் சோழர்களின் விரோதம் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடக்கிறது. நம் சக்கரவர்த்தி ஆதித்த கரிகாலன், பாண்டிய மன்னன் வீர பாண்டியன் தலையைக் கொய்தார்."

"பூவா, கொய்ய? தலையை ஏன் கொய்தார்?" - குமுதம் வேண்டுமென்றே கேட்டாள்.

"போர்ப் பூங்காவில் எதிரிகளின் தலைகளைக் கண்டால் வெறி ஏற்படும். செடிகளிலிருந்து பூக்களைப் பறிப்பதல்ல, நறுக்கி விடுவார்கள். வீர பாண்டியன் தலையையும் அப்படித்தான் கொய்தார்."

"கேட்கவே பயமாயிருக்கிறதே!"

"வீரபாண்டியன் இறந்த பிறகு, பாண்டிய நாட்டைச் சோழர்கள் தம் வசப்படுத்தினர். நிலையாக ஒரு சிற்ற



ரசரை அமர்த்தாததால் பாண்டிய ஆபத்து உதவிகளாலும் அவ்வப்போது கலகங்கள் ஏற்பட்டன. வீரபாண்டியனுக்குப் பிறகு, இளவரசன் அமரபுஜங்கன் நமது சக்ரவர்த்திகளை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினான். இராஜராஜ சோழருடன் இளவரசர் இராசேந்திரனும் - அப்போது அவருக்கு மதுராந்தகன் என்று பெயர் - சேர்ந்து அமரபுஜங்கனைத் தோல்வியுறச்செய்து, பாண்டிய நாட்டை வென்றார். தாங்கள் கைப்பற்றிய பகுதியில் அரசப் பிரதிநிதிகளை நியமித்து ஆட்சி புரியும் வழக்கம்தான் நம் சோழ மன்னர்களுக்குக் கிடையாதே! ஆனால், இளவரசர் இராசேந்திர சோழ தேவர் பாண்டிய நாட்டை ஆளுவதில் கவனம் செலுத்தத் தொடங்கினார். அதற்காக, மதுரை மாநகரில் அழகிய மாளிகை ஒன்றைக் கட்ட முடிவு செய்தார். அழகிய மாளிகையை நிர்மாணிக்கும் பொறுப்பை உன் தந்தையிடம் அளித்தார். உன் தந்தை தம் சிஷ்ய பரிவாரங்களுடன் புறப்பட்டு விட்டார். மாளிகையை எவ்வளவு விரைவில் கட்டி முடிக்கிறோமோ, அவ்வளவு விரைவில் நம் திருமணம் நடைபெறும்."

மாணிக்கம் மூச்சுவிடாமல் பேசி வந்ததையும், அவன் குரலில் வெறுப்பும், ஆத்திரமும் ஏமாற்றமும் நிறைந்திருந்ததையும் கண்ட குமுதத்தின் இதயத்தில் அவன் மீது கனிவு ஏற்பட்டது.

பயந்து பயந்து சந்தித்தபடி எவ்வளவு நாள்கள் இருப்பது? திருமணத்தை விரைவில் நிறைவேற்ற மதுரை விஜயம் தடையாக இருக்கும் என்பதை அவன் உணர்ந்தான். மதுரையினின்று ஓடிச் சென்று விட்டால் என்ன என்றுகூட அவனுக்குத் தோன்றியது.

பொழுது சாயும் நேரத்திற்கு முன்பே, சிற்பிகளின் குழு மதுரையை நோக்கிப் புறப்பட்டு நடந்து செல்லும்போது, தன் தந்தையிடம் குமுதம் கேட்டாள் :

"மதுரையில் நாம் எவ்வளவு நாள்கள் தங்கப் போகிறோம்?"

"எவ்வளவு நாள்களா? எடுத்த வேலை எப்பொழுது முடிகிறதோ அதுவரையில். நித்த விநோதப் பெருந்தச்சனார் எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறாரோ, அவ்வளவு காலம்."

"மதுரையில் கோயில் கட்டப்போகிறோமா, கோட்டை கட்டப் போகிறோமா?" அல்லது மாளிகை கட்டப்போகிறோமா?

"மாளிகை கட்டப் போகிறோம். விசித்திர மாளிகை."

"மாளிகை கட்ட நாம் எதற்கு? செங்கல்லை அடுக்கி, சுண்ணாம்பு குழைத்துப் பூசி, மர மச்சுகள், மரக் கதவுகள் செய்து, ஓடுகள் வேய்ந்து... ஹூம்... தஞ்சைப் பெரிய கோயிலைக்கட்டிய சிற்பிக்கு மாளிகை மாடங்கள் கட்டும் பணியா? புலி வேட்டையாடுபவரைப் புல் செதுக்கச் செய்தது போல்? அவமரியாதை செய்வது போல் இல்லையா?"

"காஞ்சியில் பொன் மாளிகையைக் கட்டியவர்கள் பரம்பரையில் வந்தவன் நான். அதனால் விசித்திரமான மாளிகையைக் கட்டும் பணியை எங்களிடம் அளித்திருக்கிறார், நித்த விநோதன்."

"ஓகோ! மதுரையில் மாளிகையா? யார் அங்கே தங்கப் போகிறார்கள்?"

"நமது இளவரசர்தான். இளவரசருக்கு மதுரை மகுடத்தை அளிக்கப் போகிறார் நமது சக்ரவர்த்தி."

தந்தையும் மகளும் பேசிக்கொண்டே நடந்தார்கள். இருவர் நால்வராக சிற்பிகள் குடும்பத்தாருடன் ஊர் உலகத்தைப் பற்றிப் பேசியவாறு சாலை ஓரமாக நடந்தார்கள். அடிக்கடி குமுதம் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள். மிக அருகே மாணிக்கசேகரன் நடந்து வந்து கொண்டிருந்தான். மதுரைப் பயணத்தைப் பற்றியும் அங்கு நடக்க இருக்கும் பணிகள் குறித்தும் மாணிக்க சேகரன் தெரிந்து கொள்வதற்காகத்தான், தந்தையிடம் அவள் கேள்வி மேல் கேள்வி கேட்டு வந்தாள்.

இருபுறங்களிலும் வெள்ளம் கரை புரண்டோடும் வைகையில் ஓர் ஓரமாக அடக்கமாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. கரை ஓரமாக இருந்த சிறு கிராமத்தில் பழைய வீட்டின் கூடத்தில் மங்கலான விளக்கொளியில் பாண்டியர்களின் ஆபத்துதவிப் படை வீரர்கள் ஐவர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

பாண்டிய நாட்டை வென்று இராசராசன் புலிக் கொடியை மதுரைக் கோட்டையில் பறக்கவிட்ட பிறகு, வீரபாண்டியன் வழிவந்த அமரபுஜங்கன் இராசராசனுடன்



போரிட்டுத் தோற்றோடினான். சிறிது காலத்திற்குப் பாண்டிய நாட்டில் அமைதி நிலவியது. இழந்த உரிமையை மீண்டும் மீட்க வேண்டும் என்ற கிளர்ச்சி ஆங்காங்கே ஏற்பட்டது. நாட்டின் உண்மை வாரிசு யார் என்பதில் கருத்து வேறுபாடிருந்தாலும் சோழர்களின் ஆதிக்கத்தை ஒழித்து, மீண்டும் மீன் கொடியை மதுரைக் கோட்டையில் பறக்கவிடவேண்டும் என்பதில் நாட்டுப் பற்று மிகுந்த விசுவாசிகளிடையே உடன்பாடிருந்தது.

காடுகளிலும், மலைக் குகைகளிலும் மறைந்து திட்டங்கள் வகுக்காமல், மதுரைக்கருகே யாரும் ஐயப்படாத கிராமம் ஒன்றில் விசுவாசிகள் அவ்வப்போது கூடிப் பேசினர்.

முப்பது வயதைத் தாண்டாத இளைஞர்கள் அங்கு கூடியிருந்தனர். அவர்கள் பாண்டியர்கள் செயலிழந்து போன காலத்தில் பிறந்தவர்கள். வீர பாண்டியன் தலையைச் சோழ அரசன் கொய்து பந்தாடியதையும், அமர புஜங்கன் இராசராசனிடம் தோற்றுக் கானகப் பகுதிக்குள் ஓடி ஒளிந்து, இறுதியில் இறந்து போனதையும், அவனை வளர்த்து ஆளாக்கிய தலைவி முதுமைப் பிராய நோய் காரணமாகக் காலமானதையும் பெரியவர்கள் சொல்லக் கேட்டுச் சுதந்திர உணர்வைப் பெற்றார்கள். பழம் பெருமையை எடுத்துச் சொல்லக் கூடிய முதியவர்கள் இல்லாது போயிருந்தால் அந்தத் தலைமுறையினர் தாங்கள் பாண்டிய நாட்டவர்கள் என்பதையே மறந்திருப்பார்கள். பாண்டியர் ஆட்சி மீண்டும் மலர்வதற்கு வழி வகுக்காமல், அரியணையில் அமர்வது ஒன்றையே நோக்கமாகக் கொண்ட வாரிசு உரிமையைக் கொண்டாடுபவர்கள் சோழர்களை எதிர்க்க முடியாமல் உயிருக்கு அஞ்சி திருநெல்வேலிப் பகுதிகளுக்குச் சென்று விட்ட பிறகு, விடுதலை வேட்கை கொண்ட இளைஞர்கள் ஒன்று கூடினர். அடிமை விலங்கை அறுத்தெறியத் திட்டம் வகுக்கத் தொடங்கினர். ஐம்பதாண்டு அடிமை மோகம் மெல்ல விலகத் தொடங்கியது.

சோழ நாட்டினின்று வந்த அதிகாரிகளுக்கு இடையூறு செய்வதும், திடீரென்று தாக்கி மதுரைக் கோட்டையின் மதில் சுவர்களை இடித்துப் பாழ்படுத்துவதும் அவர்களுடைய முதல் நோக்கமாக இருந்தது. அதற்கான திட்டங்களை வகுக்கவே அவர்கள் அங்கு கூடியிருந்தனர்

அமரபுஜங்களின் படைகளில் ஒரு பகுதிக்குத் தலைவராக இருந்தவர். அந்த முதுமைப் பிராயத்திலும் இளைஞர் களுக்கு யோசனை கூற, வழிகாட்ட அங்கு வந்திருந்தார். முறையாகச் செயல்பட வழிவகைகளை அவர்கூறி வந்தார்.

நடுநிசி நெருங்கும் நேரத்தில் வாயிற்கதவை மெல்லத் தட்டும் ஓசை கேட்டது. ஒருகணம் அங்கே அமைதி நில வியது. தட்டும் ஓசையிலும் சங்கேத ஒலியை உணர்ந்த முதியவர் கதவைத் திறக்குமாறு சொன்னார். இளைஞன் ஒருவன் தள்ளாடியவாறு உள்ளே நுழைந்தான்.

விரைந்து வந்ததாலும், வெகு தூரம் நடந்து வந்த களைப்பாலும் சோர்வுற்ற நிலையில், அந்த இளைஞன் சற்று இளைப்பாறிய பிறகு சொன்னான் :

"தஞ்சாவூரிலிருந்து சிற்பிகள் கூட்டமாக வருகிறார்கள். மதுரையில் பெரிய மாளிகை ஒன்றைக் கட்டப் போகி றார்களாம். கோட்டை மதிலைப் பலப்படுத்தப் போகிறார் களாம். வருகிற பௌர்ணமி அன்று மாளிகைக்குக் கால் கோள் விழா நடத்த இருக்கிறார்கள்" என்றான்.

"நம்முடைய பழம் பெருமை வாய்ந்த மாளிகையை இடித்துத் தரைமட்டமாக்கிய சோழர்கள் புது மாளிகை கட்டப் போகிறார்களா? மாளிகையில் யார் இருக்கப் போகிறார்கள்?" என்று ஓர் இளைஞன் கேட்டான்.

"சோழ இளவரசர் இராசேந்திர சோழ தேவர்" என்று வந்த இளைஞன் கூறினான்.

"ஓ! அரண்மனையையும் சபை மண்டபத்தையும் அழித்த தால் அரியணைக்கு இடமில்லாது செய்து விட்டார்கள். புதிய மாளிகை கட்டி, சபை மண்டபம் கட்டி அரியணை மேடையைக் கட்டி, பரம்பரை அரியணையை அங்கு அமைத்து இராசேந்திரன் அதில் அமரப் போகிறானோ? உம்; விடமாட்டோம். பாண்டியரின் பழம்பெருமைமிகு அரியணையில் சோழனை அமர விடமாட்டோம். ஏ, சொக்கநாதா! உடனே ஏதாவது செய்தாக வேண்டும்; நீ என்ன சொல்கிறாய்?" கர்ஜித்தார் முதியவர், துடிப்புள்ள இளைஞனை நோக்கி.

"சொல்வதென்ன? செய்ய வேண்டும்; அல்லது செத்து மடிய வேண்டும். பரம்பரை சிங்காதனம் இருக்குமிடம்



எனக்குத் தெரியும். உடைத்துத் தூளாக்கி விடுவோம்" என்றான் சொக்கநாதன் என்ற துடிப்புள்ள இளைஞன்.

"அது சரியில்லை" என்பதற்கு அடையாளமாகத் தலை யசைத்தார் முதியவர்.

"நம்முடைய அரியணையை நாம் அழிப்பதா? கூடாது" என்றார்.

"மாளிகையைக் கட்டவிடாமல் எதிர்ப்போம்."

"மாளிகை கட்டும் சிற்பிகளுடன் நாமும் கூலி வேலைக் காரர்கள் போல் சேர்ந்து மாளிகையின் இரகசிய வழிகளை அறிந்து கொள்வோம்."

'திட்டம் சரியில்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தார்,முதியவர்.

"ஒரே சமயத்தில் சிற்பிகளையும், குடும்பத்தலைவரை யும் கொன்று குவித்து விடுவோம். சிற்பிகள் இருந் தால்தானே மாளிகை, கோட்டை கட்டுவார்கள்?" என்றான், இளைஞன்.

'அதுதான் சரி' என்பது போல் தலையசைத்தார் முதியவர்.

சிற்பிகள் தங்குமிடத்தை அறிந்து கொள்ளும் பொறுப்பு சொக்கநாதனிடம் அளிக்கப்பட்டது. பௌர்ணமி அன்று தாங்கள் எடுத்த பணியை நிறைவேற்றும் உறுதியுடன் அவர்கள் அன்று கலைந்தனர்.





# 8. புகழ் நிலைக்க

இராசேந்திர சோழதேவரின் இரண்டாவது குமாரன் சுந்தரன் மூங்கில் துறை கிராமத்திலிருந்து பிரிய மனமில்லாமல் புறப்பட்டான். அவனுடன் வந்த மெய்க்காப்பாளனுடன் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை.

தில்லையை நோக்கிச் செல்லும் பாதையில் இளவரசரின் புதல்வர் குதிரையைச் செலுத்தியதைக் கண்டு அவனுக்கு வியப்பு.

"இளவரசே! தஞ்சைக்குச் செல்ல நீங்கள் திட்டமிட்டிருந்தீர்களே?" என்று சுந்தரனின் மௌனத்தை அவன் கலைத்தான்.

"அப்படித்தான் முடிவு செய்திருந்தேன். ஆனால் என் மனம் சரியில்லை. ஏதோ ஒருவித ஏமாற்றம் ஏற்பட்டது போன்ற உணர்வு இதயத்தில் சூழ்ந்து நிற்கிறது. சிதம்பரத்திற்குச் செல்லாமல் பழுவூருக்குச் செல்லலாமா என்று கூடத் தோன்றுகிறது" என்று சுந்தரன் சொன்னான். சுந்தரன் சொன்னது அவனுக்குப் புரியவில்லை. திரும்பி அவர் முகத்தை நோக்கினான்.

இளவரசரின் குமாரருக்கு என்ன நேர்ந்து விட்டது? அந்த வீட்டிற்குள் நுழையும்போது இருந்த துள்ளலும், மகிழ்ச்சியும் கணப்பொழுதில் மறைந்து விட்டதன் காரணம் என்ன?

சுந்தரன் எதிரே பாதை தெரியவில்லை. வீரம்மாளின் பாதச் சதங்கை ஒலி அவன் செவிகளில் ஒலிப்பது போல் தோன்றியது. வீரம்மாள் இனிய குரலில் பாடிக்கொண்டே ஆடுவது போன்ற பிரமை!



இன்னும் சிறிது நேரம் வீரம்மாள் அருகே இருந்திருக்கக் கூடாதா? அவள் கரம் தொட்டபோது ஏற்பட்ட இன்ப உணர்வுபோல் இதற்கு முன்பு அவன் வாழ்நாளில் ஏற்படவில்லை! நாம் தொடாத அணங்குகளா? நாம் ரசிக்காத நடனங்களா? நேரம்போவது தெரியாமல் நாம் கலந்து மகிழாத காரிகைகளா?

வீரம்மாள் அப்படியொன்றும் பேரழகியல்லள்; ஆனால், அந்தத் தோற்றத்திலே மயக்கம் தரும் போதை இருக்கிறது. பொன்னிற மேனி அவளுக்கில்லை; ஆனால் அந்தக் கருமையிலும் கவர்ச்சி இருக்கிறது.

இன்னும் சில நொடிகள் - ஆஹா - சுவர்க்கத்தை இழந்தது போலாகி விட்டதே! அவளுடைய சகோதரன் வராதிருந்தால்----

"இளவரசே! என்ன சிந்தனை? கவலையுடன் இருப்பது போல் தோன்றுகிறதே?" என்று மெய்க்காவலன் கேட்டான். அவனிடம் சொல்லலாமா, கூடாதா என்று கணமும் சிந்திக்காமல், "என் துரதிர்ஷ்டம் நிழல் போல் தொடர்கிறது" என்றான்.

"துரதிர்ஷ்டமா?"

"ஆமாம். கைக்கு எட்டியது மெய்க்கு எட்டவில்லை."

"புரியவில்லையே இளவரசே!"

"அந்த அழகியை அணைக்கவிருந்த நேரத்தில் அவளண்ணன் வந்து விட்டான்."

இளவரசரின் இளைய புதல்வனின் போக்கை மெய்க்காவலன் மிக நன்றாக அறிவான். அவருடைய அந்தரங்கம் அவனுக்கு நன்றாகத் தெரியும். அவன் அறியாதவற்றையும், ஒளிவு மறைவு இல்லாமல் சுந்தரன் சொல்லத் தயங்க மாட்டான். தந்தைக்குத் தெரியாமல், பாட்டனாருக்குத் தெரியாமல் - ஏன், மூத்த சகோதரனுக்குத் தெரியாமலேயே தன் லீலைகளை நடத்துவான். அவனுக்கென்று ஒரு பொறுப்பும் இல்லை. முப்பாட்டனார் சுந்தர சோழரைப் போல் அழகானவன், அறிவுமிக்கவன் என்று அவனைப் புகழ்ந்து புகழ்ந்து மமதை மிகச் சேர அவனை ஒழுக்கப் பாதையினின்று விலகிச் செல்ல வாய்ப்பளித்து விட்டார்கள்.

சக்கரவர்த்தி இராசராசனுக்குத் தன் பெயரப் பிள்ளைகளைப் பற்றிய கவலை உண்டு. தன் ஒரே மகன் இராசேந்

திரன் சோழர் குலப் பெருமையை நிலை நாட்டும் அளவுக்கு உயர்ந்து விளங்குகிறான். ஆனால், அவனுடைய புதல்வர்களும், புதல்வியரும் – அவருக்கே சில வேளைகளில் அவர்கள் பெயர் மறந்துவிடும் – இராசேந்திரனின் மூத்த மகன், அடுத்து இளவரசனாகப் போகிறவன் இளவரசுப் பட்டம் சூட்டும்போது அவனுக்கு இட வேண்டிய பெயரை இராசராசன் முடிவு செய்து விட்டார். போர்க்களத்தில் அவன் காட்டும் வீரச் செயல்களை அறிந்திருக்கிறார். இராசாதிராசன் – ஓ! நல்ல பெயர்! பட்டத்தரசியின் புதல்வர்கள், அரசியாக ஏற்கப்பட்டவர்களுக்குப் பிறந்தவர்கள்... ஹூம் - எல்லோருமாகச் சேர்ந்து சோழ நாட்டின் பெருமையை நிலைநாட்ட வேண்டும்.

வாழ்க்கையின் பெரும் பகுதியைப் போர்க் களத்தில் கழித்துவிட்ட இராசேந்திரன், ஒரு நாள் அமைதியாக வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்கலானான். அவற்றுள் ஒன்று, தன் புதல்வர்களின் வருங்காலம். அரச குடும்பத்தில் பிறந்தவர்களாயிருந்தாலும் அவர்கள் குடிமக்களுக்குரிய பண்பு, ஒழுக்கம், அறிவு இவற்றில் சிறந்திருக்க வேண்டும் என்ற உறுதியான முடிவு இராசேந்திரனுக்கு இருந்தது. தன்னை வளர்த்து ஆளாக்கிய இளைய பிராட்டியாரைப் போல், தன் பிள்ளைகளுக்கு ஒரு வழிகாட்டி இல்லையே என்ற கவலை இளவரசன் இராசேந்திரனுக்கு இல்லாமலில்லை. மற்றொன்று, தன் தந்தையைப் போல் தானும் அழியாப் பெயர் பெற்று உலக மகா சக்ரவர்த்தி என்று திகழத்தக்கவாறு செயலாற்றுவது.

போர்க்களத்தில் வெற்றி பெற்று அங்கே புலிக் கொடியை நாட்டிப் பெயர் பெறுவதைவிட, தான் ஒரு பேரறிஞன் என்று பெயர் பெறுவதுதான் சிறந்த ஒன்று என்று இராசேந்திரன் உறுதியாக நம்பினான். ஈசான பண்டிதரிடம் தன் எண்ணங்களையும் எழுச்சிகளையும் ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துரைப்பான்.

அவர் நடத்தும் கல்விக் கூடத்திற்கு அவ்வப்போது விஜயம் செய்வான். தேவாரப் பாடல்களைக் கற்றுணர்வதில் அவனுக்கிருந்த ஆர்வத்தைக் கண்டு பண்டிதரே வியப்புற்றார்.

"இந்தக் கணத்தில் நான் யுத்த பூமியை மறந்திருக்கிறேன். சோழ நாட்டிற்கு விரோதிகள் என்று ஒருவரும் இல்லை..." என்று கூறிவரும்போது ஈசான பண்டிதர்



குறுக்கிட்டு, "நம் நாட்டின் மீது படையெடுப்பதற்கான ஆயத்தங்களைச் சாளுக்கியர்கள் தம் நாட்டில் செய்து வருவதாகக் கேள்விப்பட்டேனே!" என்றார்.

இராசேந்திரன் மெல்லச் சிரித்து, "துறவிகளின் செவிகளில் எட்டுமளவுக்கு அந்தச் செய்தி அவ்வளவு ரகசியமாக இருக்கிறதோ!" என்று கூறி, "பண்டிதரே! பாவம், சாளுக்கியன்! போனால் போகிறது என்று அவனை அங்கே ஆட்சி நடத்த விட்டிருக்கிறேன். நாட்டைக் கைப்பற்றி அந்த நாட்டைச் சோழ நாட்டுடன் சேர்த்துக் கொள்வது நம் கொள்கை அல்ல, நம் மேலாண்மையை ஏற்றுக் கொண்டால் போதும். சில வேளைகளில் நமது பிரதிநிதிகளை ஆட்சிக்கு உதவியாக அங்கே நியமிப்போம். பாண்டிய நாடு, இரட்ட நாடு, கங்க நாட்டிலெல்லாம் அதுபோல் அரசர்களை அகற்றுவதில்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். சாளுக்கிய நாட்டிலும் அது போன்றே - சத்யாச்ரயன் நம்முடன் நட்புக் கொண்டிருப்பான் என்றே நினைக்கிறேன். சத்யாச்சரயனை அடக்கி ஒடுக்க நமது படைத் தலைவர்கள் போதும். நான் செல்ல வேண்டியதில்லை. என் மூத்த மகனே படை நடத்திச் செல்லும் திறமை பெற்றவன்.

"போரை மறந்து, கலைப் பணியில் ஈடுபடவேண்டும் என்று என் உள்ளுணர்வு வற்புறுத்தி வருகிறது. இறைவனை மறக்காமலிருக்க உதவும் கலைகளான சிற்பம், இசை, நடனம் இவற்றிற்கு என்னாலான தொண்டினை ஆற்ற என் மனம் அவாவுறுகிறது. பண்டிதரே! அதற்கு வழி காட்டுங்கள். மாபெரும் சிதம்பரம் திருக்கோயிலில் அழியாத் திருப்பணிகளில் ஈடுபட விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் என் மூத்த மகனை இப்போதே இளவரசனாக்கி, அடுத்து அவனை சோழ அரியணையில் அமருமாறு செய்யவும் எண்ணுகிறேன். மனம் இறைவன் தொண்டில் ஈடுபட அவாவுறுகிறது. தில்லைச்சிற்றம்பலத்திலேயே தங்கிவிடலாம் என்றுகூட நினைக்கிறேன்" - இராசேந்திரன் தன் உள்ளக்கிடக்கையை ஒளிவு மறைவின்றி விண்டுரைத்தான்.

ஈசான பண்டிதர் இராசேந்திரன் ஆர்வத்துடன் பேசுவதை உற்று நோக்கியவாறிருந்தார். 'ஒரு பேரரசனின் புதல்வனுக்குத் தந்தையைப் போன்றே கலை ஆர்வம், தெய்வ நம்பிக்கை... ஆகா...! இளவரசருக்குத் தக்க வழி காட்டுவது நம் கடமை' என்ற முடிவுக்கு வந்தார்.

"இளவரசரே! மண்ணாசையும் பொன்னாசையும் நிலைக்காதவை தஞ்சைபுரித் திருப்பணிகள் முடிவுற்றன. அற்புதமான சிற்பப் பணியை நிறைவேற்றிய சிற்பிகளின் திறமையைப் பயன்படுத்திக் கொண்டு தில்லைச் சிற்றம் பலம் திருக்கோயிலை விரிவாக்கலாம். முன்கோபுரங்கள் கட்டலாம். நடன சபை ஒன்றைக் கட்டலாம். சிவபெரு மானின் திருவிளையாடல்களை அழியாச் சிற்பங்களாக அமைக்கலாம். இன்னும் பல கலைத் தொண்டுகள் புரியலாம்" என்றார்.

இராசேந்திரன் தன் விழிகளை மூடிய வண்ணம் நடனத் தோற்றங்களை கற்பனை செய்தான். அவற்றைச் சிற்ப வடிவில் கொண்டு வருவதை, மனக் கண்ணில் கொண்டு வரலானான். தன் இலட்சியம் நிறைவேற சிற்பிகள் வேண் டும், நடன மகளிர் வேண்டும், ஓவியர்கள் வேண்டும்.

"பண்டிதரே! என் ஆர்வத்திற்கு எண்ணெய் வார்த்து விட்டீர்கள். தில்லைச் சிற்றம்பலத்தில் சிற்பப் பணிகள் உடனே தொடங்க ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறி "யார் அங்கே?" என்று கைதட்டி அழைத்தான். முத்துக்குமரன் ஓடோடி வந்தான்.

"திருமந்திர ஓலைநாயகத்தை உடனே வரச்சொல். சிற்பி நித்த விநோதனை உடனே வரச் சொல்" என்றான்.

முத்துக்குமரன் மிக மெல்லிய குரலில், "மதுரை மாளிகை கட்ட மதுரைக்குச் சிற்பிகள் புறப்பட்டுச் செல் கிறார்கள்" என்று கூறும்போது, இராசேந்திரன் திடுக் கிட்டு, "மதுரை மாளிகையா? மாளிகை அமைக்கச் சிற்பி களா? மதுரைக்குச் செல்லுமாறு யார் உத்தரவிட்டது? உடனே அவர்களை இங்கே வரச் சொல்" என்றான். தொடர்ந்து, "என் இளைய மகன் சுந்தரன் எங்கிருந்தா லும் இங்கு வந்து என்னைச் சந்திக்கச் சொல்" என்று கட்டளையிட்டான்.







# சோழர் வரலாறு அதிகம் தெரியாதவர்களுக்கு...

இன்றைய சமூகம்தான், நாளைய வரலாறு. நேற் றைய சமூக நிகழ்ச்சிகள், இன்றைய வரலாறு. வரலாற்று நாவல்களும் அவ்வாறுதான் அமைகின்றன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கொண்டு கற்பனையும் கலந்து எழுதப்படும் வரலாற்று நாவல்களில் அரசர்களின் பெயர்கள், அவர்களுடைய சந்ததியினர், குடும்பத்தார், பணி செய்தவர்கள், சமூகத் தலைவர்கள், அதிகாரிகள் முதலியோரைப் பற்றிக் குறிப் பிடும்போது இன்றைய வாசகர்களையும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுடைய நினைவாற்றலுக்குச் சோதனை ஏற்படுத்திவிடக் கூடாது. எழுதுபவர் சரித் திரத்தில் தேர்ச்சி பெற்றவராக இருக்கலாம். வாசகர் களை அவ்விதம் எதிர்பார்க்கக்கூடாது. இவை பொது வான வாசகர்களின் கருத்து.

"கங்காபுரிக் காவலனை" நான் எழுதத் தொடங்கிய போது, என் எழுத்தின்மீது நம்பிக்கை உடைய அன்பர் டி.ஆர். கணேசனைப் போன்ற பல வாசகர்கள், சோழ அரசர்களின் வரிசை, உறவு முறை, அரச மரபு விவரம் தெரிவித்தால் நலமாயிருக்கும் என்று கருத்து தெரிவித் தார்கள்.

'பொற்காலத்தின் கதை' - என்ற பெயரில் வரலாற்றுக் குறிப்பு நூல் ஒன்று எழுதியுள்ளேன். 35 ஆண்டுகளுக்கு முன்பே எழுதினேன். ஆயிரம் பக்கங்களுக்கு மேல் உள்ள சோழர்களின் சரித்திரத்தை, எண்பது பக்கங்களுக்குள் சுருக்கமாகக் கொடுக்க முயன்றிருக்கிறேன் 'இளைஞர்

களுக்குச் சோழர் வரலாறு' என்று குறிப்பிட்டிருந்தேன். வரலாறு படிக்காத பெரியவர்களும் படிக்கலாம். அந்த நூலை வாங்கிப் படிக்கவேண்டும் என்று நான் இப்போது சொல்லவில்லை. அதைவிடச் சுருக்கமாகக் கொடுக்க முடியாவிட்டாலும், பிற்காலச் சோழர்களின் மரபு வரிசையை இங்கே தெரிவிக்க முயல்கிறேன்.

முத்தரையர்களை வென்று, தஞ்சை மாநகரிலிருந்து ஆளத் தொடங்கியவர்களைப் பிற்காலச் சோழர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

1. விஜயாலய சோழன் (கி.பி. 846 – 881 வரை) பிறகு அவர் மகன்,

2. ஆதித்த சோழன் (871 - 901) அடுத்து அவர் மகன்,

3. பராந்தகன் - முதலாம் பராந்தகன் என்று அழைக்கப் பட்டார் (907 – 955)

அவருக்கு நான்கு புதல்வர்கள். இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசோழன்.

இராசாதித்தன் என்ற மகன், போர்க்களத்தில் இறந்து விட்டார். அவருக்குப் பிறகு,

4. கண்டராதித்தன். 'மேற்கேலிருந்து எழுந்தருளியவர்' என்று இவரை அழைத்தனர். (957 வரை அரசாண்ட இவர், மேற்குத் திசையில் உள்ள நாட்டிற்குச் சென்றபின், இவரைப் பற்றிய இறுதி நிகழ்ச்சி தெரியவில்லை.)

5. இவருக்குப் பிறகு, அரிஞ்சயன் அரியணை ஏறினார். அவருக்குப் பிறகு உத்தம சோழன் என்ற பெயருடைய மதுராந்தக சோழர் அரியணை ஏறியிருக்க வேண்டும். இளவயதுடையவராயிருந்தபடியால் அரிஞ்சயன் மகன் சுந்தர சோழன் (957-970) அரியணை ஏறினார். இவருக்கு இரண்டாம் பராந்தகன் என்ற பெயரும் உண்டு.

இவருக்குப் பிறகு அரியணை ஏறுவதில் குழப்பம் ஏற்பட்டது. சுந்தர சோழரின் முதல் மகன் ஆதித்த கரிகாலன் கொலையுண்டதால், அவருடைய தம்பி, சுந்தர சோழரின் மற்றொரு புதல்வர் அருள்மொழிவர்மர் என்றழைக்கப்பட்ட இராசராசன் அடுத்து அரியணையில் அமர்ந்திருக்க வேண்டும். மதுராந்தக உத்தம சோழர்(6) அரியணை ஏறும் பருவமடைந்துவிட்டபடியால் அவர்



அரியணையில் அமர்ந்தார். அவர் 970 ஆம் ஆண்டு முதல் 985 வரை அரசாண்டார். அவருக்குப் பிறகு (8) இராசராசன் அரியணையில் அமர்ந்தார்.

சுந்தர சோழருக்குக் குந்தவ்வை என்ற மகள். ஆதித்த கரிகாலனின் தங்கை. இராசராசனின் தமக்கை. இளைய பிராட்டி என்று அழைக்கப்பட்ட இவரை வல்லவரையன் வந்தியத்தேவன் திருமணம் புரிந்து கொண்டார்.

சோழ அரசர்களின் பெயருக்கு முன் பரகேசரி, இராசகேசரி என்று பெயர் மாறி மாறி வரும். பரகேசரி விஜயாலயன், இராசராச சோழன் இராசகேசரி என்றழைக்கப் பட்டார். இவர் கி.பி. 985 முதல் கி.பி. 1014 வரை ஆட்சி புரிந்தார். இவரது புதல்வர் இராசேந்திர சோழரே, நம் வரலாற்றுப் புதினக் கதைத் தலைவர்.

இராசராசரின் ஆட்சிக்காலக் கடைசியில் நம் கதை தொடங்குகிறது. ஐப்பசித் திங்கள் சதய நாளில் பிறந்தவர் இராசராச சோழர்.

சில பெயர்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். முதல் பராந்தகன் - 'பொன் வேய்ந்த பராந்தகன்' என்று சிறப்புப் பெயர் பெற்றவர். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தவர்.

கண்டராதித்த சோழரின் பட்டத்தரசியார் செம்பியன் மாதேவியார். சிவன் கோயில்களுக்குப் பல திருப்பணிகளைச் செய்தவர்.

இளவரசுப் பட்டம் சூட்டப்படுவதற்கு முன்பு, இராசேந்திர சோழருக்கு மதுராந்தகன் என்று பெயர். இராசராசருக்கு "அருள்மொழி" என்று பெயர்.

இந்தக் கதை தொடங்கும்போது, இராசேந்திர சோழர் இளவரசராகத் திகழ்ந்தார். இளைஞர்களிடையே அரசராகவும், இளவரசராகவும் நம்மால் பார்த்துப் பழக்கப் பட்டுப் போன இராசேந்திர சோழர், இந்தப் புதினத்தில் ஏறத்தாழ நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட வயதுடையவராகத் திகழ்கிறார். என்ன செய்வது, வரலாறு அப்படித்தான் கூறுகிறது! கதைத் தலைவர் எல்லோரும் இளம் வயதினராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாதன்றோ!



# 9. பெருவுடையார் காப்பாற்றுவார்

நடுநிசியைக் கடந்து, முழுமதி மேற்கே இறங்கத் தொடங்கிய வேளையில் சிற்பிகள் மதுரையை வந்தடைந்தனர். மதுரை நகரம் சோர்வுற்றிருப்பது போல் தோன்றியது. பௌர்ணமிக்கு இரண்டு நாள்கள் இருந்தன. முழு வடிவு அடையா மதியரசன் வானத்தினின்று மதுரை நகருக்கு ஒளியை வீசி, இருளை ஓட்டிக் கொண்டிருந்தான்.

மதுரையில் இரவு அங்காடிகள் இயங்கிப் பல ஆண்டுகளாகி விட்டதாகப் பேசிக் கொண்டார்கள். மதுரையில் சோழர்களின் ஆட்சிப் பிடி ஏற்பட்ட பின், மதுரை நகரில் மகிழ்ச்சி குறைந்துவிட்டதாகவும், நகரை விட்டுக் கிராமப் பகுதிகளுக்குப் பலர் வெளியேறி விட்டதாகவும் பேசிக் கொண்டார்கள்.

கோட்டை வாயில் அடைக்கப்பட்டிருந்தது. வாயிலை ஒட்டிய மதிற்சுவர்கள் பழுதுபட்டிருந்தன. நான்கு பக்கக் கோட்டை வாயிலுக்கு வெளிப்புறக் காவலிருக்கும் சோழ வீரர்கள் இருவர் நால்வராக படுத்தவாறும் சாய்ந்தவாறும் ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தனர்!

கோட்டைவாயிலின் கூட கோபுரத்தின் மீது புலிக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. அதன் அருகே சோழ வீரன் ஒருவன் கூரிய வேலுடன் நின்றுகொண்டிருந்தான். புலிக்கொடியை இறக்கி மீன்கொடியை ஏற்றும் வேளையைப் பாண்டிய நாட்டு விசுவாசிகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.



சிற்பிகள் குழு களைப்புடன் மதுரை வீதியில் நடந்து கொண்டிருந்தனர். வீதிகளில் மக்கள் நடமாட்டமில்லை. சிற்பிகளை அழைத்து வந்த இளைஞன் மதுரை நகரின் ஒவ்வோர் இடத்தையும் அறிந்தவன்போல வழிகாட்டியவாறு முன்னே நடந்துகொண்டிருந்தான்.

"இன்னும் எவ்வளவு தொலைவு நடக்கவேண்டும்?" என்று குமுதம் தன் தந்தையிடம் கேட்டாள். தனக்காகக் கேட்கவில்லை, மாணிக்க சேகரனுக்காக அவள் கேட்கிறாள் என்பதை அவள் தந்தை பெரிய சிற்பி அறியமாட்டார். 'உங்களுக்காகத்தான் கேட்கிறேன்' என்பது போல குமுதம் திரும்பி மாணிக்கத்தை நோக்கினாள்.



அவள் விழிகளில் கூத்தாடிய குறும்புத்தனம் நிலவொளியில் பளிச்சிட்டது. "நானே நடக்கிறேனே. சிறிய வயது, அதற்குள் களைத்துவிட்டாயே" என்று மாணிக்கத்தை நோக்கிக் கேட்டார் சிற்பி.

"ஏனப்பா, தம்பி! இன்னும் எவ்வளவு தொலைவு இருக்கிறது நாம் தங்குமிடம்? உனக்கு வழி தெரிகிறதா? அல்லது, யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமா?" என்று முன்னே நடந்த இளைஞனைக் கேட்டார் பெரிய சிற்பி. அவரும் களைப்பு மிகுந்திருப்பதைப் புலப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

தெருமுனையில் பெண்மணி ஒருத்தி அடுப்பை மூட்டித் தோசை வார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எதிரே அமர்ந்து, வாழை இலையில் சிலர் தோசையை ருசித்துக் கொண்டிருந்தனர்.

வழி காட்டிச் சென்ற இளைஞனுக்கே சந்தேகம் வந்துவிட்டது போலும்! தோசைக் கடையில் உட்கார்ந்திருந்தவர்களிடம் வழி கேட்டான். தோசையை ருசித்துக் கொண்டிருந்தவன், கூட்டமாக வரும் சிற்பிகளைப் பற்றி வினவினான்.

"நீங்கள் குறிப்பிடும் இடம் மல்லிகைத் தோட்டத்தில இருக்கிறது நேரே இந்தப் பாதையில் செல்லுங்கள். இரவு ஆகாரமாகிவிட்டதா? அங்கு சென்றால் ஒன்றும் கிடைக்காது. இங்கேயே ஆச்சியிடம் இரண்டு இரண்டு தோசையை வாங்கிப் பசியாறிவிட்டுச் செல்லுங்கள்" என்று ஒருவர் உபசாரம் செய்தார்.

நன்றி தெரிவித்த குமுதத்தின் தந்தை, "பொழுது சாய்வதற்கு முன்பே எல்லாம் முடித்துக் கொண்டுவிட்டோம். இப்போது போய் 'அக்காடா' என்று உடலைச் சாய்த்தால் போதும் என்று தோன்றுகிறது" என்றார். அந்தச் சொல் அவர்களுக்குப் புதுமையாக இருந்ததால் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

**ம**ல்லிகைத் தோட்டம் பொலிவிழந்திருந்தது. காடு போல் மண்டியிருந்த மல்லிகைச் செடிகள் கவனிப்பாரின்றி வாடியிருந்தன. தப்பிய ஓரிரு செடிகளில் பூத்திருந்த மல்லிகை, மகிழ்ச்சியளிக்கும் நிலவொளிக்கு இணையாக மணத்தை வீசிக்கொண்டிருந்தது. தோட்



டத்தின் நடுவே இரண்டு பெரிய வீடுகள். வீடுகள் கட்டி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலிருக்கும்.

வீட்டின் வெளிப்புறத்தில் படுத்திருந்த தோட்டக்காரர் இவர்களுக்காகக் காத்திருப்பவர் போல வரவேற்று, "உங்களுக்காக மாலையிலிருந்து காத்திருக்கிறேன். நீங்கள் வருவீர்கள் என்று சோழ தளபதி சொல்லியிருக்கிறார். பௌர்ணமியன்று மாளிகைப் பணியைத் தொடங்கப் போவதாகவும், உங்களுடைய நலன்களைக் கவனித்துக் கொள்ளுமாறும் கட்டளையிட்டிருக்கிறார். நாளை மறுநாள் கால்கோள் விழா செய்யவேண்டும். உங்களைக் காணோமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். நீங்கள் வந்துவிட்டீர்கள் என்பதைத் தளபதியிடம் போய்ச் சொல்லி விட்டு வருகிறேன். வீட்டின் உள்ளே நீங்கள் தங்கிக் கொள்ளலாம். வீட்டைச் சுத்தம் செய்து வைத்திருக்கிறேன். சோறாக்கத் தனியே இடமிருக்கிறது. தோட்டத்தின் மூலையில் பெரிய கிணறு இருக்கிறது. அங்கே குளிக்கலாம். காலையில் எழுந்தவுடன் எல்லாம் தெளிவாகப் புரியும். பெண் பிள்ளைகள் குளிக்க மறைவான இடம்தான் இல்லை" என்று குமுதத்தை நோக்கித் தோட்டக்காரர் கூறினார். இன்னும் பல பெண்கள் இருப்பதையும் அவர் அறிந்து கொண்டார். பெண்களோ நின்றபடியே தூங்கிக் கொண்டிருந்தனர்.

"அதனால் என்ன, எங்கள் வீட்டுப் பெண்கள் குளத்திலும் ஆற்றிலும் குளித்துப் பழகியவர்கள்தாம்" என்றார், பெரிய சிற்பி.

சிற்பிகள் இரண்டு வீடுகளிலுமாகப் பிரிந்து போய்த் தங்கினர். பொழுது விடிந்த பிறகுதான் அவர்களுக்குத் தெரிந்தது. அந்த வீட்டில் தாங்கள் சிறை வைக்கப்பட்டிருக்கிறோம் என்று. இரவு வரவேற்ற தோட்டக்காரரைக் காணவில்லை. காலைக் கடன்களைக் கழிக்க முடியவில்லை. குழந்தைகள் பசியால் அழுதனர். காலை எழுந்ததுமே குளித்துப் பழகியவர்களுக்குக் கணம் கூட அந்தச் சிறிய வீட்டில் அடைந்திருக்கப் பிடிக்கவில்லை.

கதவை உடைத்துக் கொண்டு வெளியே வந்துவிடலாம் என்று ஒருவர் யோசனை கூறினார். அவர்களிடம் சிற்றுளி, சுத்தியல், பாறையைப் பெயர்க்கும் ஆயுதங்கள் இருந்தன.

கதவுகள் பிளக்கப்பட்டன. ஆயிரம் ஆண்டுகள் சிறைப்பட்டிருந்து, விடுதலையடைந்த உணர்வு அவர்களுக்கு. பெண்களிடம் ஏற்பட்ட பீதி நீங்கவில்லை.

கவனிப்பாரற்றுக் கிடந்த வீட்டைப் போலவே தோட்டமும் இருந்தது. மல்லிகை, செவ்வந்தி, இருவாட்சி, நந்தியாவட்டை, பாரிஜாதம் செடிகள் காய்ந்து கிடந்தன. அல்லிக் குளத்தில் நீர் குறைவாகவே இருந்தது. குளத்தைச் சுற்றிப் புதர் மண்டியிருந்தது. சப்பாத்தியும் கள்ளியும் தலைகாட்டத் தொடங்கி யிருந்தன. பாதையிலே முள் செடிகள்.

"உம்... சீக்கிரமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாது" என்று பெரிய சிற்பி மற்றவர்களை வற்புறுத்தினார்.

குமுதமும் மாணிக்க சேகரனும் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்பட்டது. கவலை நிறைந்த விழிகள் பேசிக் கொண்டன. செய்வதறியாது திகைத்து நிற்கும்போது துன்பம் சூழ இருக்கும்போது என்ன பேசுவது? செடியில் பறிக்காது வாடியிருக்கும் மலர் போல குமுதம் காணப்பட்டாள். ஒரே நாளில் குமுதம் முகத்தில் சோர்வும் கவலையும் சேர்ந்தன.

மதுரைக்குச் சிற்பிகளை வழிகாட்ட வந்த இளைஞன் பரபரப்படைந்து இங்குமங்கும் ஓடினான். செய்வதறியாது திகைத்தான். "நாம் இங்கிருந்து உடனே போய்விடுவோம். ஏதோ ஆபத்து வரவிருக்கிறது" என்று அவன் விரைவு படுத்தினான்.

அவர்கள் அங்கிருந்து புறப்படத் தொடங்கியபோது, பாண்டிய நாட்டு விசுவாசிகள், கரங்களில் வேலுடனும், வாளுடனும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். சிற்பிகள் குழுவினரை ஒரே வீட்டில் அடைத்தனர். குமுதமும், மாணிக்கமும் புதர் அருகே மறைந்திருப்பதைக் கண்ட பாண்டிய நாட்டு விசுவாசிகள், அவர்களை மற்றொரு வீட்டிற்குள்ளே தள்ளினர். அந்த வீட்டுக் கதவு உடைக்கப்படாமல் இருந்ததால் வெளியே தாளிட்டு விட்டனர். அவர்கள் பாண்டிய நாட்டின் விடுதலை ஒன்றை மட்டுமே இலட்சியமாகக் கொண்டவர்கள் ஆதலால், இளம்பெண் குமுதத்தையோ சிற்பிகள் குடும்பத்துப் பெண்களையோ மானபங்கப்படுத்தும் நோக்கம் அவர்களிடம் இல்லை. ஆனால், அவர்களை எதிர்த்த இளம் சிற்பியைப் பாண்டிய



நாட்டின் ஆதரவாளர்கள் கடுமையாகத் தாக்கினர். அவன் இரத்த வெள்ளத்தில் மண்ணில் வீழ்ந்ததைப் பார்த்த மற்ற சிற்பிகள் பேசவும் சக்தியின்றி வீட்டிற்குள் ஓடி ஒளிந்தனர்.

பயம், களைப்பு, பசியுடன் சிற்பிகள் இறைவனைத் துதிப்பதைத் தவிர, வேறு ஒன்றும் செய்ய இயலாதவர்களாய், மூச்சு விடக் கூடப் பயந்து ஒருவரை ஒருவர் பார்த்தவாறு இருந்தனர்.

**கூ**டுகளை அடையும் பறவைகள் ஏற்படுத்திய கலகலப்பொலி இரவு நெருங்கிவிட்டது என்பதைப் புலப்படுத்தியது. வீட்டுக் கதவு திறக்கப்பட்டது. பெரிய பாத்திரத்தில் குழம்புச் சோறு கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தனர், பாண்டிய நாட்டு இளைஞர்கள் சிலர்.

வயிற்றுக்குள் சிறிது சோறும் நீரும் சென்றவுடன் உயிர் மீண்டது போல உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. சிறிது நேரம் கழித்து உணவுப் பாத்திரத்தை எடுத்துச் செல்ல வந்தவனிடம் பெரிய சிற்பி பணிவான குரலில், "தம்பி! எங்களைத் தவறாக நினைத்து இங்கே அடைத்து வைத்திருக்கிறீர்கள் என நினைக்கிறேன். நாங்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். நாங்கள் சிற்பிகள். எங்களை வெளியே விட்டு விடுங்கள்" என்று பணிவுடன் பேசினார்.

"சிற்பிகள் என்பதால்தான் உங்களை இங்கே அடைத்து வைத்துள்ளோம்" என்று கூறி அந்த இளைஞன் பெரிதாகச் சிரித்தான்.

"பாண்டிய நாட்டில் சிற்பிகள் என்றால் குற்றவாளிகள் என்று அர்த்தமா?" என்று மற்றொரு சிற்பி சற்றுக் கோபமாகக் கேட்டார்.

"ஆமாம். பாண்டிய நாட்டில் பெரிய குற்றமிழைக்க வந்திருக்கிறீர்கள். உங்களைக் கொன்றுவிடவேண்டும் என்பது எங்கள் திட்டம்" - அவன் கடுமையான குரலில் பேசினான். குரலிலிருந்த கடுமையை விட, அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் இன்னும் கடுமையான தோற்றத்துடன் இருந்தார்கள்.

'சோழர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு மதுரையில் மாளிகை கட்டுகிறார்களாம். அதற்குச் சிற்பிகள் வருகிறார்களாம். சிற்பிகள் உயிரோடிருந்தால்தானே மாளிகை, மண்டபம் எல்லாம்? ஒரே இடத்தில் திரளம

மிருந்த சிற்பிகள்! இப்படியொரு வாய்ப்பு ஏற்படுவது அரிது. கூண்டோடு கைலாசம் அனுப்பிவிடுவோம்.'

இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் பாண்டிய ஆதரவாளர்கள் முடிவு செய்து, மதுரை நகருக்குள் சிற்பிகள் வரும் வரையில் காத்திருந்து, அவர்கள் தங்குமிடத்தை அறிந்தனர். இன்றோ நாளையோ தங்கள் தீர்மானத்தை நிறைவேற்றிவிடுவார்கள். கலை வளர்க்கும் சிற்பிகள் இரத்த வெள்ளத்தில் கொலையுண்டு கிடப்பதும் பௌர்ணமி நிலவில் அழகாகத் தானிருக்கும்.

இளம் சிறபிக்கு ஏற்பட்ட முடிவு தங்களுக்கும் ஏற்பட்டு விடும் என்ற பயத்தில் அவர்கள் அந்த வீட்டிற்குள்ளேயே அடைந்திருந்தனர். குல தெய்வங்களை வேண்டிக் கொண்டனர்.

அழும் குழந்தைகளைச் சமாதானப் படுத்தக்கூட அவர்களுக்குத் தோன்றவில்லை. பெண்கள் சிறிது நேரம் ஒப்பாரி வைத்தனர். பிறகு அதற்குக் கூடத் தெம்பில்லை. பெண்கள் எதிரே அழுகிறோமே என்ற நாணமும் இல்லாமல் ஆண்பிள்ளைகள்கூடத் தேம்பி அழுதனர். சிலர் சோர்ந்து படுத்தனர். சிலர் மயக்கமடைந்தனர்.

இரவு வந்தது. இருள் சூழ்ந்தது. தன் மகள் எங்கே என்று பெரிய சிற்பி புலம்பிப் பார்த்து ஒன்றும் செய்ய முடியாமல் ஓய்ந்து சாய்ந்தார். விடிந்தால் பௌர்ணமி. நல்லவர் நெஞ்சம்போல் தூய்மையான நீலவானத்தில், மதியரசன் ஏதுமே தெரியாதவன் போல் பவனி வந்து கொண்டிருந்தான்.

குமுதமும் மாணிக்கமும் மட்டும் மற்றொரு வீட்டின் அறையில் அடைப்பட்டிருந்தனர். தனியே இருந்த அவர்கள் தங்கள் காதலை வளர்த்துக் கொள்ளவில்லை. கொஞ்சும் மொழியில் பேசிப் பொழுதைப் போக்கவில்லை.

"என் தந்தை எங்கே?" என்று அவள் கேட்டுப் பார்த்தாள். கூவிப் பார்த்தாள்.

"நான் போய்ப் பார்த்து வருகிறேன்" என்று புறப்பட்ட மாணிக்கம் கதவைப் பலம் கொண்ட மட்டும் தட்டிப் பார்த்துச் சோர்ந்து போய்க் கீழே சாய்ந்தான்.

அந்த அறையில் மிக உயரத்தில் இருந்த சாளரத்தின் வழியே நிலவொளி மெல்ல எட்டிப் பார்த்தது.



கதவு திறக்கப்பட்டது. ஒரு குடத்தில் நீரும், ஒரு பாத்திரத்தில் சோறும் வீசி விட்டுக் கதவைத் தாளிட்டுச் சென்றான் ஒருவன். அந்த இளைஞனைப் பார்த்தால் பணியாளனைப் போல் தோன்றவில்லை. அங்கே ஓர் அழகிய பெண் இருக்கிறாள் என்பதைக்கூட அவன் இலட்சியம் செய்யவில்லை.

இப்போது குமுதம் குரல் கொடுத்தாள். 'அய்யா, அய்யா' என்று கூவினாள். தங்களை ஏன் அந்த அறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை.

437428/610549?

நா வறண்டது. சோறுண்ணப் பிடிக்கவில்லை. தண்ணீரைக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டாள். குமுதமும் மாணிக்கமும் ஒருவரையொருவர் பார்த்தவாறு, ஒன்றும் பேசாமல் சுவரில் சாய்ந்தவாறு இருந்தனர். அவளுடைய முகத்தில் படர்ந்த மங்கிய நிலவொளியில், அந்தச் சோகம் நிறைந்த சூழலிலும், குமுதத்தின் இயற்கை அழகு எந்தவிதக் குறைவுமின்றி விளங்கியது.

"மாணிக்கம்! அடுத்து என்ன நேருமென்றே தெரியவில்லையே! சோழ நாட்டிற்குச் செய்தி அனுப்பி, அவர்கள் வந்து விடுவிக்கும் வரை நம்மை உயிரோடு விட்டு வைப்பார்களா என்று தெரியவில்லையே" குமுதத்தின் குரலில் நடுக்கம் இருந்தது.

"நேர்வது நேரட்டும் என்று கதவை உடைத்து வெளியே செல்லப் போகிறேன்" என்றான், மாணிக்கம்.

"என்னை விட்டுவிட்டா?" என்று குமுதம் விம்மினாள். "இருவருமே ஓடிப் போய்விடுவோம்' என்றான் மாணிக்கம். அங்கிருந்து எப்படியாவது விடுபட்டுப் போகும் முனைப்பில் இருந்தான் அவன்.

"என் அப்பா என்ன ஆனாரோ?" - அழுகையை அவளால் அடக்க முடியவில்லை.

தேவநேயப் பாவ... நூ...
சென்னை - 600

"இரு. இரு. வெளியே யாரோ நடமாடும் ஓசை கேட்கிறது" என்று மாணிக்கம் மெல்லக் கூறினான். சாளரத்தின் சிறு கண்கள் வழியே நிலா ஒளி அந்த அறையில் கோலமிட முயன்றது.

அந்த மாளிகைக்கு வெளியே சிலர் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் அப்பொழுதுதான் அங்கே வந்தனர். அங்கேயே உட்கார்ந்துவிட்டனர்.

"உள்ளே யார் இருக்கிறது?"

"சிற்பிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு பெண்ணும் ஓர் ஆணும். இளம் வயதினர்."

"கணவன் மனைவியா?"

"தெரியாது. சிற்பிகள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் இன்னும் விசாரிக்கவில்லை. இவர்கள் தப்பியோடப் பார்த்தார்கள்."

"நாளைக்கு மாளிகை அடிக்கல் நாட்டப் போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரியுமா,"

"தெரியாது. எதிர்த்த ஓர் இளைஞனுக்கும் மரண அடி!"

"முதல் பலியா?"

"அடைப்பட்டிருக்கும் சிற்பிகளை இங்கிருந்து வெளியூர்களுக்குத் தனித்தனியே கொண்டு சென்று கொன்றுவிடும் திட்டத்தை நிறைவேற்ற யார் யார் பொறுப்பேற்றிருக்கிறார்கள்?"

"அந்தத் திட்டத்தைப் பற்றி ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த பெரியவர்தான் முடிவு செய்ய வேண்டும். இன்று பொழுது விடிவதற்குள் அவர்களை வேறு எங்காவது கொண்டு சென்று விடுவோம்."

வெளியே பேசிக் கொண்டிருப்பவர்களின் உரையாடலைக் கேட்டுக் குமுதவல்லியும் மாணிக்கமும் திடுக்கிட்டனர்.

"ஐயோ, அப்பா!" என்று குரல் கொடுத்து அழத் தொடங்கிய குமுதத்தின் வாயை அழுத்தமாக மூடி, 'உஸ்...' என்று சைகை செய்தான், மாணிக்கம்.

மிகப் பயங்கரமான சூழலில், மாணிக்கம் அவள் இதழ்களைப் பொத்தினான். அவன் கரம்பட, அவள் உடல் மெல்லச் சிலிர்த்தது.

அழுகையை அவளால் நிறுத்த முடியவில்லை. விம்மியவாறு அவன்மீது சாய்ந்தாள். இதுவரை அவனது ஸ்பரிசத்தை உணராத, உணர முயலாத குமுதத்திற்கு அந்த ஆபத்தான நிலையில் ஏற்பட்ட மெல்லிய அணைப்பு, வாழ்க்கையில் புது நம்பிக்கையை அளித்தது.

'தஞ்சைபுரியிலிருந்து மதுரை வந்தது, பாண்டிய மண்ணில் மாய்ந்து போவதற்கா?' - நினைக்கக்கூட அவளால் முடியவில்லை.



மீண்டும் வெளியே பேசும் குரல் கேட்டது.

"நான் மிகத் தீவிரமாகச் சிந்தித்தேன். சிற்பிகளை இந்த உலகத்தை விட்டே ஓட்டிவிடுவது ஒன்றுதான் சரியான முடிவு. சிற்பிகளின் கலைப் புலமையைக் கொண்டு தங்கள் பெயர் அழியாது நிலைத்து நிற்கக் கோயில்கள், கோயில்களில் சிற்பங்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளனர் சோழர்கள். சிறைப் பிடிக்கப்பட்ட பாண்டிய மக்களைக் கொண்டு தஞ்சையில் கோயில் கட்டினார்கள் என்பது உனக்குத் தெரியுமா? இந்த அவமானத்தைத் தொடரவிடக் கூடாது. சோழர்களின் இலட்சியத்தை முறியடிக்க வேண்டும். தங்கள் நாட்டில் மட்டுமின்றி, பாண்டிய நாட்டிலும் தங்கள் கலை பரவ நினைக்கிறார்கள். கூடாது. நடக்க விடக் கூடாது. இதை நாம் அனுமதிக்கக் கூடாது."

பாண்டிய விசுவாசிகளின் தலைவராக அவர் இருக்க வேண்டும். குரலில் கட்டளை, முடிவு அழுத்தமாக இருந்தது.

அந்த வார்த்தைகளால் குமுதத்தின் மேனியில் ஒருவித நடுக்கம் ஏற்பட்டதை மாணிக்கம் உணர்ந்தான்.

"குமுதம், குமுதம்...! பயப்படாதே. மதுரையில் இருக்கும் சோழர் படைத் தலைவர் நம்மை எப்படியும் காப்பாற்றி விடுவார்" என்று மாணிக்கம் அவளை அழுத்தமாக அணைத்துக் கொண்டு நம்பிக்கை அளிக்க முயன்றான்.





## 10. 'உன்னைப் போன்ற அழகு என்னைப் போன்ற...'

முத்துக்குமரனும், வீரம்மாளும் அன்று விடிய விடியப் பேசிக் கொண்டிருந்தனர். தன் மனதில் ஏற்பட்ட பயமொன்றைச் சகோதரனிடம் விவரிக்க அவள் விரும்பினாள். எப்படிச் சொல்வது? அதைத் தன் அண்ணன் ஏற்பாரா? தன் பேச்சில், தன் முடிவில் உண்மை இருக்கிறது, நியாயம் இருக்கிறது என்று ஒப்புக் கொள்வாரா? அரச குடும்பத்தவரைப் பற்றிப் பழி கூறுவதாக நினைத்து விடுவாரா?

முத்துக்குமரன் அன்று சற்று ஓய்வுடன் இருந்திருக்க வேண்டும். வீட்டிற்கு வெளியே சாணம் மெழுகிய தரையில் உட்கார்ந்துகொண்டான். அவன் அதுபோல் அமைதியாக அமர்ந்து, ஓய்வுடன் பேசிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நிலவொளி அமைதியாகப் பொழிந்துகொண்டிருந்தது. பாட்டனார், சீர்காழிக்குச் சென்றவர் இன்னும் திரும்பி வரவில்லை. அத்தையையும் அழைத்துச் சென்றிருந்தார்.

போர்க்களங்களைப் பற்றியும், போர்க்களத்தில் நடைபெற்ற சாகசங்களைப் பற்றியும், வெற்றிகளைப் பற்றியும், வென்ற நாட்டினின்று கொண்டுவந்து சேர்த்த செல்வங்களைப் பற்றியும் இதற்கு முன்பு நிறையச் சொல்லியிருக்கிறான்.

"அண்ணா! நான் ஒன்று தங்களிடம் கேட்கலாமா?" என்று வீரம்மாள் கேட்டாள். கேட்கலாம் என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் முத்துக்குமரன். "கேட்பதற்குக் கூட அனுமதி வேண்டுமா? நான் என்ன, அந்நியனாகிவிட்டேனா?" என்று மெல்லச் சிரித்தான்.



"இளவரசர் வென்று அடக்க வேண்டிய நாடுகள் இனி இந்தப் பூவுலகில் ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்" என்று தொடங்கினாள், வீரம்மாள்.

"ஆமாம். அப்படித்தான் நானும் நினைக்கிறேன். நம்மிடம் பணிந்தவர்கள் மீண்டும் கிளர்ந்தெழுந்தால்தான் இனி படையெடுப்பு, போர் முரசம், யுத்தம் எல்லாம்!"

"ஓ! சாளுக்கியர்களையும், பாண்டியர்களையும் மனதில் வைத்துக்கொண்டு சொல்கிறீர்களா?"

"ஆமாம்! அங்கெல்லாம் பூசல் ஏற்பட்டால் இனி இளவரசரே படைகளுக்குத் தலைமை வகித்துச் செல்ல வேண்டியிருக்காது."

"ஏன்? இளவரசருக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டதா? சோழ நாட்டுச் சக்கரவர்த்தியாக மகுடம் ஏற்ற பிறகு - அப்போது அவரே செல்வதுதானே வீரத்திற்கு அழகு?"

"ஆமாம். பலம் நிறைந்த நாட்டுடன் மோதும் நிலை ஏற்படலாம். இளவரசர் மற்றவருக்கு விட்டுக் கொடுக்க மாட்டார். ஆனால் சிறிய சிறிய கலகங்களை அடக்க அவரே செல்ல வேண்டுமா? அடுத்த தலைமுறை உருவாகி விட்டதே! - சோழ நாட்டுச் சேனாதிபதியாயிருந்த கிருஷ்ணன் ராமனுடைய மகன் தோள்களைத் தட்டிக் கொண்டு நிற்கிறான். இளவரசர் இராசேந்திரனின் மூத்த குமாரர் இராசாதிராசன் தன் வீரத்தைப் புலப்படுத்த, ஏற்ற தருணம் நோக்கி இருக்கிறான். நானும் சும்மாயிருப்பேனா?"

"அண்ணா! இதுவரை இளவரசருடன் போர்க் களத்தில் காலத்தைக் கழித்தது போதும். எனக்கு ஓர் அண்ணி வந்து அவர்கள் என்னைச் சீராட்டி நான் மகிழ வேண்டாமா?"

நிலவொளியில் வீரம்மாளின் முகத்தில் பொங்கிய ஆர்வத்தை முத்துக் குமரன் கவனித்தான்.

"இல்லை, இல்லை... வீரம்மா! உனக்கு அண்ணி இப்போது வரமாட்டாள். நீ தகுந்த மணாளனைக் கரம் பிடித்துப் புகுந்தவீடு சென்று, பூச்சூட்டலுக்குத் திரும்பி வரும்போது - மகப்பேற்றுக்கு வரும்போது - உன்னைச்

சீராட்ட இங்கு அண்ணி காத்திருப்பாள்" என்று முத்துக்குமரன் கூறியது கேட்டுச் சற்றுத் திகைத்த வீரம்மாளை நோக்கி மெல்லிய சிரிப்புடன், "அன்புள்ள தங்கையே! உனக்குத் தக்க இடத்தில் திருமணத்தை முடித்த பிறகுதான் என் திருமணம். உன் பாட்டனாரும் அத்தையும் எவ்வளவு நாள்கள்தாம் இருக்கப் போகிறார்கள்? உனக்கு ஒரு துணை காண வேண்டாமா?" என்றான்.

வீரம்மாள் சிணுங்கினாள். "உன்னை விட்டு நான் பிரியப் போவதில்லை அண்ணா!" என்றாள். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவளாய், "அண்ணா! நாம் இந்த மூங்கில்துறையை விட்டுச் சிதம்பரத்திற்கே சென்று விடுவோமா?" என்று கேட்டாள்.

"உனக்கு இந்தக் கிராமத்தில் இருக்கப் பிடிக்கவில்லையா? அதுவும் ஒருவிதத்தில் சரிதான். தினமும் தில்லை அம்பலவாணரைத் தரிசனம் செய்யலாம். நடராசர் சந்நிதியில் நாள்தோறும் நடனமாடலாம். உனக்கு நடனம் கற்றுக் கொடுக்க வேறு ஆசிரியரை நியமிக்குமாறு இளவரசர் அன்றே சொல்லி விட்டார். சிதம்பரத்திலேயே தக்கவரைப் பார்க்கலாம்" என்றான்.

சிறிது நேரம் அவள் ஏதும் பேசவில்லை. இளவரசருடைய இளைய மகன் சுந்தரன் காலையில் நடந்துகொண்ட விதம் முத்துக்குமரனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. சுந்தரன் விழியில் பட்ட எந்தப் பெண்ணும் அவனுக்கு இரையாகாது தப்பியதில்லை. ஒருவேளை, என் தங்கை என்பதற்காக அவன் சற்றுப் பயப்படலாம். நம்ப முடியாது. எந்தக் கணத்திலும் அவன் தொல்லை கொடுக்க வரலாம். அதனால் தங்களுக்கு மிகவும் பாதுகாப்பான இடம் சிதம்பரமே என்று அவன் முடிவு செய்தான். பலவிதச் சிந்தனைகளில் உறக்கம் வராது இருந்த முத்துக்குமரன் விடிந்து வெகுநேரம் கழித்து விழித்தான். உச்சி வேளைக்கு முன்னே முத்துக்குமரன் வீரம்மாளிடம் விடைபெற்றுக்கொண்டு சிதம்பரத்துக்குப் புறப்பட்டான்.

"அதற்குள் திருஷ்டி பட்டுவிட்டதா? இங்கே சிறிது நாள் அமைதியாகத் தங்கியிருப்பீர்கள் என்று நினைத்தேன்" என்று கலக்கமுடன் கேட்டாள், வீரம்மாள்.

"என் அருமைத் தங்கையே! இளவரசரைச் சந்தித்து விட்டு உடனே திரும்பி வருகிறேன். சிதம்பரத்தில் தகுந்த வீடு பார்த்து வருகிறேன். அதுவரையில் பயமின்றி இரு.



அத்தையும், பாட்டனாரும் சீர்காழியிலிருந்து இன்றே வந்துவிடுவார்கள்" என்று தைரியம் கூறிப் புறப்பட்டான் முத்துக்குமரன்.

அன்று முழுவதும் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாள், வீரம்மாள். கொள்ளிடத்தின் அகன்ற மணற்பரப்பின் மேற்குக் கோடியில் வேகமாக மூழ்கும் வட்டக் கதிரவனின் செங்கோள அழகை ரசிக்கச் சென்றாள் வீரம்மாள். காலம் தவறாமல் கடமையாற்றும் கதிரவனைக் கைகூப்பித் தொழவேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது.

"செங்கதிர்ச் செல்வனே! இன்று சென்று நாளைக்குத் திரும்பி வருக!" என்று விடைகூறி அனுப்பவேண்டும் போல் தோன்றியது, அவளுக்கு.

அவள் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன. சந்திரனுக்கு ஏற்ற முத்திரைகளைக் காட்டி அபிநயித்திருக்கிறாள். கதிரவனைப் போற்றி ஆடத் துடித்தாள்.

அவள் மனதுக்கு இதமாக இருந்தது. இருள் குவியத் தொடங்கும்போது பறவைகள் குதூகலமான ஓசையுடன் கூடு திரும்பும்போது தன் நடனத்தை ஒரு கணம் நின்று ரசித்துச் செல்வது போல் தோன்றியது. வரிசையாகப் பறந்து செல்லும் பறவைகள் அவளைக் காண மீண்டும் பறந்து வந்தன போல் தோன்றியது.

"உங்களுக்கென்ன, சுதந்தரமாகத் திரிவீர்கள். என்னைப் பாருங்கள், எப்போதும் எனக்குக் கவலை" என்று முணுமுணுத்தாள் வீரம்மாள். யாரோ கர ஒலி எழுப்புகிறார்களே -

"உன் நடனம் அற்புதம், அற்புதம்" என்று கை கொட்டிய ஓசை கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் வீரம்மாள்.

சுந்தரன் நின்றுகொண்டிருந்தான். கம்பீரமான தோற்றத்துடன் அவன் நிற்பது வேங்கை ஒன்று நிற்பது போல் தோன்றியது.

"வீரம்மா! உன்னுடன் சேர்ந்தே நடனக் கலையும் பிறந்திருக்கிறது. இயற்கையை ரசித்து நீ அத்துடன் ஒன்றிவிடுகிறாய். கதிரவனைப் போற்றிப் பாடிய அந்தப் பாடலை மற்றொரு முறை பாடு. ஆடு. நான் உனக்குச் சில பாடல்கள் கற்றுத் தரப் போகிறேன். மாலைக் கதிரவனின்







அழகில் மயங்கி நீ பாடிக்கொண்டே ஆடினாய். காலையில் எழு ஞாயிற்றின் உதய அழகை நீ ரசித்திருக்கிறாயா?

"கடற்கரைக்குச் சென்று அதை ரசிக்கவேண்டும். காவிரிப்பூம்பட்டினம் செல்வோமா? இதே கொள்ளிடம் கடலுடன் சேரும் இடம் செல்வோமா? அங்கே இளங் காலைப் போதில் ஞாயிறு நீலக் கடலிலிருந்து எழும் அழகைக் கண்டிருக்கிறாயா? 'உம்' என்று நீ சொன்னால் கோடிக்கரைக்கு அழைத்துச் செல்கிறேன். அங்கே ஏராளமான மான்கள் இருக்கின்றன. உன்னைப்போல் அழகிய விழிகள் அவற்றிற்கு.

"வீரம்மா! பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துச் சென்று வெற்றி கண்டேன் என்பது உனக்குத் தெரியுமா? அப்போது திருச்செந்தூர் சென்றிருந்தேன். அங்கே கடற்கரையில் நின்று சூரியோதயத்தைக் கண்டு களித்தேன். அருகே புலவர் ஒருவர் பாடினார். கிழக்குத் திக்கில் நீலக் கடலில் சூரியன் மெல்ல மெல்ல வெளியே எழுவது நீல மயில் மீது அமர்ந்திருக்கும் முருகன் எழுந்து வருவது போல் தோன்றுகிறதாம். ஆகா; என்ன வர்ணனை; என்ன சொல்நயம்! அனுபவித்துப் பாடி இருக்கிறார், புலவர்.

"உன்னைப் போன்ற அழகும் கலையும் ஒன்று சேர்ந்த நடன மங்கையுடன் அந்த இயற்கைக் காட்சியைக் கண்டு ரசித்து மகிழவேண்டும். பெண்ணே, வீரம்மா! என்னுடன் வந்துவிடு. நாம் காவிரிப்பூம்பட்டினம் செல்வோம். நாகைப்பட்டினம் செல்வோம். இன்றே தஞ்சைக்குச் சென்று விடுவோம். அங்கே அழகிய மாளிகையில் நீ வாழ வழி செய்வேன்" என்று வருணித்துக் கொண்டிருக்கும் போதே வீரம்மாள் அங்கிருந்து ஓட முயன்றாள். சுந்தரன் தாவி அவள் கரத்தைப் பற்றினான். அவன் கரத்தை அவள் உதறிய வேகத்தில், தடுமாறிய சுந்தரன் மரத்தின் வேர் தடுக்கிக் கீழே விழுந்தான். புலி வாயிலிருந்து தப்பி ஓடும் மான் போல் அவள் துள்ளித் தாவி ஓடி வீட்டிற்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள். படபடப்பு அடங்க நீண்ட நேரம் பிடித்தது.

"தாத்தா, அத்தை, அழகம்மா!..." என்று வாய்விட்டுக் கூவினாள். துணிவுடன் அவள் இயங்கினாலும், சுந்தரனின் காமப் பார்வை, பேச்சு, கரத்தைப் பற்றி இழுத்தது



எல்லாம் சேர்ந்து அவள் உடலில் ஏற்பட்ட நடுக்கம் தொடர்ந்து இருந்தது. மாடத்து விளக்கைப் பெரிதாக ஏற்றி வைத்துப் பிள்ளையார் சிலை அருகே இருந்த திருநீறு எடுத்து நெற்றியில் அணிந்து, கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டு விழித்தபடி அமர்ந்திருந்தாள். அவள் அத்தை கற்றுக்கொடுத்திருந்த கோளறு பதிகத்தை முணுமுணுத்தாள். புழக்கடை, வாயிற்கதவுகள் தாழ்ப்பாளிடப் பட்டிருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள்.

"சீர்காழியாம், சீர்காழி! அங்கே திருவிழா என்ன வேண்டிக் கிடக்கிறது? தாத்தாவும், அத்தையும் ஆண்டு தோறும் கலந்துகொள்ளும் திருவிழாதானே? இன்னும் வரவில்லையே. ஓ! அண்ணா! என்னைத் தனியே விட்டு விட்டு ஏன் சென்றீர்கள்?" என்று வாய்விட்டு அழுதாள், அலறினாள். பிறகு தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

'தன் முயற்சியில் தோற்றுப் போய், மர வேர் தடுக்கிக் கீழே வீழ்ந்து சிராய்ப்புகள் கண்ட சுந்தரன் அடிபட்ட நாகம் பழி தீர்க்க வருவது போல் மீண்டும் வருவான். வரட்டுமே! என்னைக் காத்துக் கொள்ள என்னால் முடியாதா? என் தந்தையின் வாள் கூடத்துச் சுவரில் தொங்குகிறது. அதை உருவிக் கொள்வேன். அந்தக் காமாந்தகன் - அரசகுலத்து வீரனாக இருந்தால் எனக்கென்ன? - பெண்பித்தனுக்கு ஒரே தண்டனை அவன் கரத்தை வெட்டுதல். குடலுக்குள் குறுவாளைப் பாய்ச்சுதல். கற்பைக் காப்பாற்றிக் கொள்ள 'வாளே துணை!' என்று தனக்குத்தானே சொல்லித் தைரியப்படுத்திக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் தூணில் சாய்ந்து கொண்டிருந்தாளோ - உறக்கம் அவளை ஆட்கொண்டது. திடீரென்று கெட்ட கனவொன்று கண்டு விழித்துக் கொண்டாள்.

கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. கதவு பலமாகத் தட்டப்பட்டது.

"யாரது?" - வீரம்மாள் குரல் கொடுத்தாள்.

"நான்தான். கதவைத் திற."

"நான் என்றால்?" - அவளுக்கு ஒரு கணம் புரியவில்லை.

மீண்டும் குரல் : "நான்தான் உன் பாட்டன். கதவைத் திற."

பாட்டனார் குரல்தானா? அது போலவே இருக்கிறது. இல்லாத பொய்க் குரலாகவும் தோன்றுகிறது. இருக்கட்டும், வந்தது வரட்டும் என்று கூடத்திலிருந்து வாளை எடுத்துக்கொண்டு கதவைத் திறந்தாள்,வீரம்மாள்.

சுந்தரனும் அவன் உதவியாளனும் உள்ளே பாய்ந்து வந்து கதவைத் தாளிட்டனர்.



## 11. பேரும் புகழும்

பழையாறைக்கு, இராசராச சோழ தேவர் விஜயம் செய்து ஆறு மாதங்கள் விரைந்தோடி விட்டன. இராசேந்திரனின் பிறந்த நாளான திருவாதிரைத் திருநாளைக் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்தவர், தன் மகன் இராசேந்திரனைச் சந்திக்க வேண்டும் எனும் ஆவலுடன் வந்தவர், இரண்டும் நிறைவேறாமல் பழையாறையிலேயே தங்கி விட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகு வருவதால் பழையாறை நகரின் ஒவ்வொரு பகுதியாகச் சென்று பார்க்கும் ஆவல் அவருக்கு ஏற்பட்டது. தஞ்சை நாணய சாலையைவிடப் புகழ் வாய்ந்துத் திகழும் பழையாறை நாணயசாலையைக் காணச் செல்லும் வழியில் அங்குக் கட்டப்பட்டிருந்த கம்பட்ட விசுவநாதர் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டார். இளைய பிராட்டியாரும் உடன் சென்றார்கள். பொன் நாணயங்கள் அச்சிடப்படும் விதத்தை இளைய பிராட்டியார் மிகவும் பாராட்டினார்கள். செல்வச் செழிப்பு மிக்க சோழ நாட்டின் பெருமை அவள் கண்முன் நின்றது.

"கருவூலத்தில் பொன் கட்டிகளையும், ஆபரணங்களையும் பாசி படிய வைக்காமல் மக்களுக்கு உதவ



நாணயங்களாக அச்சிட்டு நாடெங்கும் பரப்பும் உன் பெரிய மனத்திற்கு இணையே இல்லை, அருண்மொழி!" என்று இளைய பிராட்டி, உரிமையுடன் தன் சகோதரர் இராசராசனிடம் தன் பாராட்டைத் தெரிவித்தாள்.

இராசராசன் மெல்லிய புன்முறுவலுடன், "செப்புக் காசுகளே இதுவரை அதிகம் வழக்கிலிருக்கச் செய்திருந்தோம். பிறகு வெள்ளிக் காசுகளைப் புழங்கச் செய்தோம், நீங்கள் பார்த்ததில்லையா?" என்று கேட்டார்.

இளைய பிராட்டியார், காசுக் குவியல்களிலிருந்து ஓரிரு காசுகளை எடுத்துப் பார்த்து, "நமது பொற்கொல்லர்கள் திறமை மிக்கவர்கள். ஒரே சீரான வட்ட வடிவத்தில் நாணயங்களைச் செய்திருக்கிறார்கள். பெருமையாக இருக்கிறது" என்றாள்.

"உள் நாட்டிலும் சரி, கடல் கடந்த நாடுகளிலும் சரி, பண்டங்களைக் கொடுத்துப் பண்டங்களைப் பெற முடியாத சூழ்நிலையில் பொற்காசுகள் பெரிதும் உதவும். நம் பொற்காசுகளுக்கு மதிப்பும் வரவேற்பும் இருக்கின்றன" என்றார் இராசராசன்.

சோழ நாட்டினரின் வாணிபச் சிறப்பை, செழிப்பை இளைய பிராட்டி மிகத் தெளிவாக அறிவாள். கடை வீதிகளுக்குச் சென்று மக்களோடு மக்களாகக் கலந்து, கடைகளில் பண்டங்கள் வாங்குவதில் குந்தவ்வைக்குப் பெரும் ஆர்வம் உண்டு.

பழையாறை நகரில் தானியங்கள் விற்கும் தெருவிற்கும், அழகிய அணிகலங்களை விற்கும் வீதிக்கும், கண்ணைக் கவரும் வண்ணச் சேலைகள், துணிகள் விற்கும் வீதிக்கும் சென்று மகிழ்ந்தாள்.

சக்கரவர்த்தியும், இளைய பிராட்டியும் நகரெங்கும் ஒவ்வோர் இடத்திற்கும் வருகை புரிவதைக் கேள்விப் பட்டதும் மன்னரைக் காண மக்கள் விரைந்தோடி வந்து கூடி நின்றார்கள். ஆங்காங்கே வாழ்த்தொலிகள் வானை யெட்டின. இளம் வயதில் மன்னரைக் கண்ட முதியவர்கள் இப்போது முதுமையிலும் கண்டு பழைய கதை பேசி மகிழ்ந்தார்கள்.

சோழ மக்களின் பேரன்பைக் கண்டும் கேட்டும் மெய்சிலிர்த்துப் போனார் இராசராசன். அவர்களுடைய அன்பும் மரியாதையும் அவருக்கு இருபது வயது

குறைந்தது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தின. சோழ மாளிகையைச் சுற்றி அமைந்த படை வீரர்கள் வாழ்ந்த வீதிகளுக்கும் சென்றார் அரசர். ஓய்வு பெற்று அமைதியாக வாழும் படைவீரர்களைக் கண்டு நலன் விசாரித்தார்.

புதுப்படையூரும், ஆரியப்படையூரும், பம்பப்படையூரும், மணற்படையூரும் சென்று அங்கு வசித்து வரும் வயதான முன்னாள் படை வீரர்களைக் குசலம் விசாரித்தார்.

மாளிகைக்குத் திரும்பும்போது, பயணத்தால் களைப்புற்றிருந்தாலும் இராசராசன் இளைய பிராட்டியாரை நோக்கி, "எப்போதும் இல்லாத புதுத் தெம்பு இன்று எனக்கு ஏற்பட்டிருக்கிறது. என் வாழ்நாளில் பல தடவை இந்தப் பழம் பெருமை மிக்க பழையாறை நகருக்கு வந்திருக்கிறேன். இன்று எனக்கு ஏற்பட்ட புத்துணர்வும், மகிழ்வும் முன்பு எப்போதும் ஏற்பட்டதில்லை. மற்றொரு முறை சோழ நாட்டுச் சிவத்தலங்களைச் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகிறது. எவ்வளவு ஊர்கள், எவ்வளவு கோயில்கள்! எப்போதும் சிவத்தலங்களின் திருப்பெயரை உச்சரிக்கும்போது மெய்சிலிர்க்கிறது. இளைய பிராட்டியாருக்கு நான் சொல்ல வேண்டுமா? நீங்கள் அவ்வப்போது பாடுவீர்களே திருத்தாண்டகத்திலிருந்து ஒரு பாடல், கேட்க இனிமையாக இருக்கும்".

இராசராசன் இமைகளை மெல்ல மூடிக்கொண்டார். அவர் உதடுகள் மெல்ல முணு முணுத்தன.

"தம்பி! இப்போதுகூட ஒருமுறை அந்தப் பாட்டைப் பாட வேண்டும் போலிருக்கிறது" என்று கூறி இளைய பிராட்டியார் மெல்லப் பாடத் தொடங்கினாள்.

"நாடகமா டிட நந்தி கேச்சுரமா காளேச்
சுரநாகேச் சுர நாக ளேச்சுர நன் கான
கோடீச்சுரம் கொண்டீச்சுரம் திண்டீச்சுரம்
குக்குடேச் சுரமக்கீச் சுரம் கூறுங் கால்
ஆட கேச் சுரமகத் தீச்சுர மயனீச்சுர
மத்தீச்சுரம் சித்தீச்சுரம் அம் தண் கான்
ஈடுதிறை இராமேச்சுர மென்றென் றேத்தி
இறைவனுறை சுரம்பலவும் இயம்பு வோமே"

எண்பதைத் தாண்டிய அந்த முதுமைப் பிராயத்திலும், இளைய பிராட்டி குந்தவ்வை தேவியின் குரலில் நடுக்கம்



இல்லை; தொய்வு இல்லை. சம்பீரமாக ஒலித்த அந்தப் பாடலை மெய்மறந்து ரசித்த சோழச் சக்கரவர்த்தி, "இது போன்ற பதிகங்கள் இல்லை என்றால், சிவபெருமான் உறையும் திருத்தலங்களைப் பற்றி நான் அறிந்து கொள்ள முடியாமலே போயிருக்கும். நல்ல வேளையாக பாட்டியாரும், நீங்களும் இல்லாவிட்டால் கோயில்கள் ஏது, கோயில்களுக்காகப் பாடப்பட்ட பாடல்கள் ஏது?" என்று உணர்ச்சி மிகுதியால் குரல் தழுதழுக்கப் பேசினார்.

"தம்பி! பாட்டியார் செம்பியன்மாதேவியாரும் நானும் பல கோயில்களைப் புதுப்பித்துத் திருப்பணி செய்ததை நீ ஒரே ஒரு பெரிய கோயில் கட்டி அழியாப் புகழை நிலை நாட்டிவிட்டாய்!" - இளையபிராட்டி பாராட்டினாள்.

"நிலை நாட்டிவிட்டோம் என்று கூறுவதுதான் பொருத்தம். நீங்கள் இல்லாவிட்டால் தஞ்சைப் பெரிய கோயில் ஏது?"

"பெரிய கோயிலில் வீற்றிருக்கும் பெருவுடையாரைத் தீந்தமிழ்ப் பாடலால் போற்றித் துதிக்க நாவுக்கரசரும், தமிழ் ஞானசம்பந்தரும், சுந்தரரும் இல்லையே என்ற குறையை கருவூர்த் தேவர் போக்கிவிட்டார்!" - இளைய பிராட்டி கூறியவுடன் நினைவிற்கு வந்தவரைப்போல், கருவூர்த் தேவரின் பெருமையைப் பற்றிப் பேசி மகிழ்ந்து அன்றைய பொழுதை நல்ல பொழுதாக இருவரும் கழித்தனர்.

மறுநாள் இளங்காலைப் பொழுதில், இராசராச சோழ தேவர் துயிலும் கூடத்தின் வெளியே அரசர் துயில் எழ வீணையோடு இழைந்து இனிய குரல் ஒலித்தது.

உலகெலாந் தொழ வந்தெழு கதிர்ப் பரிதி
ஒன்று நானாயிரங் கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்பச்சோ
அங்ஙனே அழகிதோ வரணப்
பல குலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண்திங்கள்
இலை குலாம் பதணத்து இஞ்சி சூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே -

இராசராச சோழ தேவர் அந்தப் பாடலைக் கேட்டவாறு மெய்சிலிர்க்கப் படுக்கையில் எழுந்தமர்ந்தார்.

"கருவூர்த் தேவருக்குச் சிவபெருமான் மீது உள்ள பக்தியோடு என்னிடமுள்ள அன்பு எல்லை கடந்தது. தஞ்சை மாநகரின் சிறப்பை உலகம் உள்ளளவும் பறைசாற்றும் பெருமை மிக்கது அந்தப் பதிகம். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழித்து இந்தப் பாடலைக் கேட்போர் தஞ்சையின் பெருமையை உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. அழகிய வீதிகளும், நெடுநிலை மாடங்களும், அகில் கமழ் மாளிகையும், எழில்மிகு மங்கையர் யாழ் பயிலும் இடமும், ஆடல் பயிலும் நாடகசாலையும், மலர் நிறைந்த பொய்கையும், பூஞ்சோலையும், ஆழமான அகழியும் நிறைந்த தஞ்சையை வர்ணித்த கருவூராரின் பாடலைக் கேட்கும் போது, 'நம் தஞ்சை இவ்வளவு பெருமை உடையதா? சிறப்புடையதா' என்று நானே வியப்படைகிறேன்! கருவூர்த் தேவருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?"

"வெளிமண்டபத்தில் இளைய பிராட்டியார் காத்திருக்கிறார். அவருடன் வல்லவரையர் வந்தியத் தேவனும் வந்திருக்கிறார்". இந்தச் செய்தியை உடனே அரசரிடம் சொல்லியாக வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த அரசியார், சக்கரவர்த்தி அமர்ந்தவாறு இருக்கும் நிலை கண்டு திகைத்தாள்.

அரசியார் பஞ்சவன்மாதேவி அரசர் அருகே நெருங்கினாள். படுக்கையில் அமர்ந்து தனக்குத் தானே பேசிக் கொள்ளும் அரசருடைய நிலையைக் கண்டு அவள் திகைத்தாள். கண்ணீர் மல்க அவர் யாரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறார்?

அவர் அருகே சென்று நின்ற அரசியார் அரசரின் கரத்தை மெல்லப் பற்றினாள்.

சில நாள்களுக்கு முன்பு, இளைய பிராட்டியாருடன் பேசிக் கொண்டிருந்தபோது, தன் அன்புப் புதல்வன் சோழர் குலத்தின் ஒரே வாரிசு, இராசேந்திரன் தன்னைச் சந்திக்க இதுவரை வராதது குறித்து வேதனையை வெளியே புலப்படுத்திக் கொள்ளாது இதுவரை இருந்தவர், அன்று இளைய பிராட்டியிடம் மனம்விட்டுப் பேசினார். தன் மகன் வல்லவரையர் வந்தியத் தேவனிடம் பேசியிருக்கிறான் என்பதை அன்று தெரிந்து கொண்டார்.

"வல்லவரையர், தஞ்சைக்கு வந்து நீண்ட நாள்களாகி விட்டன அல்லவா?" என்று இளைய பிராட்டியை நோக்கி



இராசராசன் கேட்டார். இளையபிராட்டி உடனே மறுமொழி கூறவில்லை.

"பிரம்ம தேசத்தில்தானே இருக்கிறார்?" என்று மீண்டும் கேட்டார்.

தலையை மட்டும் அசைத்த இளைய பிராட்டியார், "தில்லைச் சிற்றம்பலத்தில் சிறிது நாள்களுக்கு முன்பு தங்கியிருந்ததாகச் செய்தி" என்று கூறினாள்.

"அவர் எங்கிருந்தாலும் என்னைச் சந்திக்குமாறு எல்லா இடங்களுக்கும் செய்தி சொல்லி அனுப்புங்கள்" என்றார் சோழ அரசர்.

"எல்லா இடங்களுக்கும் சொல்லியனுப்புங்கள்" என்று அவர் கூறியதிலிருந்து, வல்லவரையரைச் சந்திப்பதை மிக முக்கியமாக அவர் கருதுகிறார் என்பதை உணர்ந்தாள், இளைய பிராட்டி.



வல்லவரையர் வந்தியத் தேவன் பழையாறைக்கு வந்துவிட்டார். சக்கரவர்த்தி இராசராச சோழரின் மனக் கவலையை வல்லவரையரிடம் தெரிவித்தாள், இளைய பிராட்டி. இராசராசனைச் சந்திக்க வல்லவரையரும், இளைய பிராட்டியும் பழையாறை மாளிகையை நோக்கி விரைந்தனர்.

இருவரும் ஒன்று சேர்ந்து வந்து பல ஆண்டுகளாகி விட்டதால், மாளிகைப் பணியாட்களும், அதிகாரிகளும் மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்றனர். சூழ்ந்து கொண்டு வணக்கம் தெரிவித்தனர்.

பஞ்சவன்மாதேவி வல்லவரையர் வருகையைத் தெரிவிக்க மன்னரிடம் சென்றாள்.

இராசராசர் சுய நினைவடைந்து, சுற்று முற்றும் பார்த்து எதிரே நிற்கும் அரசியாரை நோக்கிப் புன்முறுவலுடன் கேட்டார்: "தேவி! சற்று முன்பு கருவூராரின் திருவிசைப்பா வீணையின் நாதத்துடன் இழைந்து வந்ததைக் கேட்டாயா?"

"கேட்டேன் சுவாமி! "கருவூராரின் ஆசியால்தான் சோழ நாட்டின் பெருமை உலகெங்கும் பரவுகிறது. அந்தப் பாடல் கேட்டுத் தாங்கள் மகிழ்வதற்கும், தாங்கள் நீண்ட நாள்களாக எதிர்பார்த்த வல்லவரையர் தங்களைச் சந்திக்க வருவதற்கும் நல்ல சகுனமாக இருக்கிறது. வல்லவரையரும், இளைய பிராட்டியும் கீழே மண்டபத்தில் நம் மாளிகைப் பணியாளர்களின் அன்புப் பிடியில் சிக்கியிருக்கிறார்கள்" என்றாள் பெருமையுடன்.

"இப்போதே அவரை நான் சந்திக்க வேண்டும், இதோ வருகிறேன்!" என்று பரபரப்புடன் கூறி எழ முயன்ற அவரை அமர்த்தி, "சுவாமி! நீராடி, பூசையை முடித்துப் பின் அவர்களைச் சந்திக்கலாம்" என்று அன்புக் கட்டளையிட்டாள். உணர்ச்சி வயப்பட்டிருந்த பேரரசர் சமநிலை அடையவே அவ்வாறு கூறினாள்.

வல்லவரையர் வந்தியத் தேவனும், சோழ சக்கரவர்த்திகளும் அன்புடன் ஆரத் தழுவிக் கொண்டனர். நலன் விசாரித்துக் கொண்டனர். தன்னை வணங்க முற்பட்ட வல்லவரையரைத் தடுத்து நிறுத்திய இராசராசர், "வல்லவரையரே! நீங்களும் நானும் நண்பர்களாக அறிமுகமானோம். வீரர்களாகப் பழகினோம். என்



அன்பு மிக்க சகோதரியின் கணவரானீர்கள். மரியாதை மிகுந்த உறவினரானீர்கள். தாங்கள் ஆற்றிய தொண்டும், தியாகமும் மகத்தானவை. வயதிலும், உறவிலும், தியாகத்திலும் சிறந்த தங்களை அன்றோ நான் வணங்க வேண்டும்?" என்று உணர்ச்சி மிகுதியால் வார்த்தை தழுதழுக்கக் கூறி வணங்க முயன்ற வல்லவரையரை மன்னர் அணைத்தவாறு எடுத்து நிறுத்தினார்.

"சோழ சக்கரவர்த்திகளே! பேரரசருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். முறையை மீறக் கூடாது. முதலில் தாங்கள் இந்த நாட்டின் வணக்கத்துக்குரிய சக்கரவர்த்தி. நான் ஒரு சிற்றரசன். அந்த மரியாதைக்குப் பிறகுதான் மற்ற உறவின் முறைகள்" என்று வல்லவரையரும் நெகிழ்ச்சியுடன் பேசினார். இராசராச சோழரைவிட, வல்லவரையர் வயதில் மூத்தவர். இருப்பினும் முதுமைப் பருவத்திலும் வல்லவரையரின் கம்பீரம் குறையவில்லை.

வல்லவரையர் வந்தியத் தேவனும், சோழ சக்கரவர்த்தி இராசராச சோழரும் நெடுநேரம் அளவளாவினர். அவர்கள் சந்திக்கா கால கட்டத்து நிகழ்ச்சிகளையெல்லாம் மனம்விட்டுப் பேசி மகிழ்ந்தனர்.

இளவரசர் இராசேந்திரனது வீரத்தையும், வெற்றிகளையும் பற்றிப் பேச்சு திரும்பியது. வல்லவரையரிடம் இராசேந்திரன் தெரிவித்திருந்தவற்றையெல்லாம் அரசர் கேட்டறிந்தார்.

"வல்லவரையரே! இவ்வளவு நேரம் தாங்கள் கூறியதிலிருந்து என் மகன் மனத்திற்குள் நிறைந்திருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே" என்றார் மன்னர்.

வல்லவரையர் புன்முறுவலுடன், சொன்னார்: "சோழ சக்கரவர்த்திகளே! சுருக்கமாகச் சொன்னால் தன் பெயர், காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் நிலைத்து நிற்கும் படியாகச் செயல்புரிய வேண்டுமென அவன் விரும்புகிறான்".

இராசராச சோழர் பெரிதாக நகைத்தார். "இதற்கு உகந்த மறுமொழியை அவனிடம் நீங்களே கூறியிருக்கலாமே! நான் இப்போது புரிந்து கொண்டேன்" என்று கூறியவர் சற்றுக் கவலையுடன், "தஞ்சைப் பெரிய

கோயிலின் புகழிலும் சிறப்பிலும் தனக்குப் பங்கு இல்லை என்று அவன் நினைக்கிறானா? தன் வெற்றிகளின் மூலம் கிடைத்த செல்வத்தினின்று கட்டப்பட்ட பெருவுடையார்க் கோயில் என்று சொல்கிறானாமே, உண்மைதானா! தன் வெற்றி என் வெற்றி என்று பிரிக்க முயல்கிறானா? வல்லவரையரே! உங்களால் வளர்க்கப்பட்ட செல்வன் மதுராந்தகன். அவனுக்கு வாள் பயிற்சி அளித்தவரே தாங்கள் தானே? வாழ்த்துக் கூறி உங்களுடைய வாளை அவனிடம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே கொடுத்தீர்களே, மறந்து விட்டீர்களா? உங்கள் பேச்சுக்கு அவன் மறு பேச்சு பேசுவானா? இதுவரை அவன் பெற்ற வெற்றியைச் சாசனங்களும் பட்டயங்கள், கல் எழுத்துகளும் காலாகாலத்திற்குக் கூறுமே! சாளுக்கியர்கள் நம்மீது பெரும் போர் தொடுக்க ஆயத்தம் செய்து வருகிறார்களாம். சாளுக்கியர்களுடன் போர் நடத்தி வெற்றித் தூணை





நாட்டட்டுமே! சாளுக்கிய நாடு என்று ஒரு நாடு இருந்தது என்ற சுவடு தெரியாமல் செய்யட்டுமே! அது ஒன்றே என்றும் அவன் புகழ் அழியாது விளங்க வழிசெய்யுமே! நியாயத்தை நீங்கள் எடுத்துரைக்கக் கூடாதா?" என்று நீண்ட உரை பகர்ந்தார்.

சற்று நேர மௌனத்திற்குப் பிறகு தொடர்ந்து, "வல்லவரயரே! என்னைப் பற்றி எட்டுத் திக்கிலும் என்ன பேசிக் கொள்கிறார்கள்?" என்று கேட்டார்.

"இதென்ன கேள்வி சக்கரவர்த்திகளே? கோதாவரிக்குத் தெற்கிலும் வடக்கிலும் தங்கள் பெருமைதான் - சாவகம், புட்பகம் போன்ற கீழ்த்திசை நாடுகளிலும் தங்கள் புகழ்தான். ஈழத்தில் தங்கள் வீரம் பேசப்படுகிறது. சோழர்களின் வலிமை அறிந்து சேரர்கள் அஞ்சியிருக்கின்றனர். பாண்டிய நாடு சோழ நாட்டுக்குள் அடக்கம். பெரிய கோயிலின் சிறப்பைப் பற்றி எல்லா நாட்டினரும் வியந்து பேசுகிறார்கள். தங்கள் நாட்டிலும்



அதுபோன்ற கோயில் எழுப்பத் தத்தம் நாட்டிலிருந்து கலைஞர்களை அனுப்புகிறார்கள். வேறு என்ன வேண்டும்? இவ்வாறிருக்க, தாங்கள் இதுபோன்ற கேள்வி கேட்பதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லையே!" என்று ஒருவிதக் கவலையுடனும், வியப்புடனும் கேட்டார் வல்லவரையர்.

இராசராச சோழர் கம்பீரமாகத் தலையசைத்து, "வீராதிவீரன் இராசேந்திரன் வெற்றிப்புகழ் நாட்டிய நாடு களில், நகரங்களில் எல்லாம் இராசராசன் மகன் இராசேந்திரன் என்று யாரும் சொல்லிப் புகழவில்லையா?"

"ஆகா, வேங்கையின் மைந்தன் என்று புகழ்ப் பரணி பாடுகிறார்கள்".

"பிறகு? என் பெயர் உள்ளளவும் இராசேந்திரன் புகழ் நிலைத்து நிற்காதா? இதைத் தாங்கள் விளக்க வேண்டாமா?"

இராசராசன் கேட்ட கேள்விக்கு, வல்லவரையரால் தக்க மறுமொழி கூற முடியவில்லை. என்னவென்று சொல்வார்? பெரிய கோயிலைப் புகழும்போது தன்னைப் புகழுகிறார்களா? என்று இராசேந்திரன் கேட்கிறானே அதற்கு என்ன மறுமொழி கூறுவது? இதை அரசரிடம் எவ்வாறு எடுத்துக் கூறுவது? இராசேந்திரனின் உள்ளக் கிடக்கை முழுமையும் எடுத்துக் கூற அவரால் இயல வில்லை. "நான் அவனிடம் விளக்கம் கூறாமல் இருப் பேனா?" என்றார், வல்லவரையர். "தலைக்கென்று தனிப் புகழ், பெருமை வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருக்கலாம். தனியே சாதனை புரிந்து புகழ் பெற விருப்பம் இருப்பது போல் தோன்றுகிறது" என்றார் இராசராசன்.

அங்கே மௌனம் நிலவியது. பிறகு இராசராசன் தீர்மானமான முடிவுக்கு வந்தவர்போல, "நான் உடனே கருவூர்த் தேவரைச் சந்தித்தாக வேண்டும். அதற்கு முன்பு குடந்தை சோதிடரைச் சந்திக்க வேண்டும். திருக்குடந்தை சோதிடரின் பெயரன் தன் பாட்டனாரைப்போல் சோதிட சாஸ்திர வல்லமையில் சிறந்தவராகத் திகழ்கிறார். அவரை உடனே அழைத்து வாருங்கள். யாரங்கே? - உடனே திருமந்திர ஓலை நாயகத்தை வரவழையுங்கள்! என்று கட்டளையிட்டார்.



கருவூர்த் தேவரை உடனே சந்திக்க சக்கரவர்த்திகள் ஏன் விரும்புகிறார்? குடந்தை சோதிடரை உடனே அழைத்து வரச் சொன்னதன் நோக்கம் என்ன என்று புரியாமல் வல்லவரையர் வந்தியத்தேவனும் இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியாரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

அரசி பஞ்சவன் மாதேவியாரும் காரணம் புரியாமல் திகைத்து நின்றார்.



## 12. சிதம்பரம் செல்ல வேண்டாம்

**வீ**ரம்மாளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அடங்க நீண்ட நேரம் பிடித்தது. கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டு முற்றத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள்.

பாட்டனாரின் மீதும், அத்தையின் மீதும் அவளுக்கு அளவு கடந்த கோபம் பொங்கி வந்தது.

"என்ன திருவிழா வேண்டிக் கிடக்கிறது? இங்கே ஒரு பெண்ணின் மானம் கொள்ளை போக இருந்தது. இங்கே காமாந்தகாரனின் களியாட்டத்தில் கன்னிப்பெண் சிக்கிக் கொண்டிருக்கும் போது முதியவர்கள் இருவரும் அங்கே சுவாமி ஊர் வலத்தைக் கண்டுகளித்துக் கொண்டிருக்கி றார்கள். சாமியாம், திருவிழாவாம்!".

'அம்மா நீங்கள் உயிரோடு இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா?' என்று வாய் விட்டுப் புலம்ப வேண்டும் போல் அவளுடைய வேதனை இதயத்தை மோதியது.

'அம்மா இருந்தால் மட்டும் என்ன? செல்வமும் செல்வாக்கும் நிறைந்த காமப் பேயிடையே அபலைப் பெண்ணால் என்ன செய்ய முடியும்? வேலியே பயிரை மேய்வதுபோல, இளவரசரின் திருக்குமாரனே குற்றம் செய்யத் துணியும்போது யார் காப்பாற்றுவார்கள்? – அரசு குலத்தவர்களது அட்டூழியத்தை அடக்க ஆளில்லாமல் போய்விட்டதா?' இப்படியும் சொல்லிப் புலம்ப வேண்டும் போலிருந்தது.

சிறிது நேரம் ஏதும் சிந்திக்காமல் தலையை முழங்காலில் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

"வீரம்மா! அப்படி நினைக்காதே. அரச குடும்பத்தவர்கள் அத்தனை பேரையும் கொடியவர்கள் என்று மொத்தமாகக் குற்றம் சாட்டிவிடாதே. பாம்பின் வாயில் சிக்க இருந்த தேரையைக் கடைசிக் கணத்தில் காப்பாற்றியது யார்?"

மார்க்கண்டேயனைக் காக்க வந்த சிவபெருமான் போல –

முதலை வாயினின்று கஜேந்திரனைக் காக்க வந்த திருமால் போல –

அடியார்களை ஆபத்தில் காக்க ஓடிவரும் இறைவனை அவள் நினைத்துக் கொண்டாள்.

தெய்வமே நேரே வராமல் மனித வடிவில் வந்து அடியார் படும் துயரத்தைத் துடைக்கவில்லயா? துச்சாதனனிடமிருந்து திரௌபதியைக் காக்கவில்லையா?

அத்தை அவ்வப்போது சொல்லிய கதைகள் நினைவுக்கு வந்தன.

ஆம்; தெய்வம் பொய்க்காது. நான் வணங்கும் ஆடவல்லான் என்னைக் கைவிடவில்லை. இதுவரை இறைவன் பெருமைகளைத்தானே அபிநயித்திருக்கிறேன்! ஈசன் பெருமையல்லாது வேறு ஒன்றையும் நான் பாடி ஆடினேனல்லேன். அதனால்தான் எனக்கு ஒரு கணப் பொழுதில் அந்த உதவி வந்தது.

அந்த மானம் காப்பாற்றப்பட்ட கணத்தை அவள் நினைத்துப் பார்த்தாள். அவள் மெய் சிலிர்த்தது.

இரவு நடந்ததென்ன? வாயிற் கதவை அவள் திறந்ததும் சுந்தரனும் அவனுடைய அடியாட்களும் உள்ளே



புகுந்ததும் – அந்தச் சம்பவம் மீண்டும் அவள் எதிரே ஊழிக்கூத்தாடின. சுந்தரன் கூறிய காமம் கொப்பளிக்கும் ஒவ்வொரு சொல்லும் அவள் நெஞ்சில் இன்னும் இரும்புக் கம்பியைக் காய்ச்சி இழுத்துக் கொண்டிருந்தது.

சுந்தரனின் கம்பீரத் தோற்றத்தைக் கண்டு அவள் வியப்படைந்திருக்கிறாள். அந்த வடிவழகு அவளைக் கவர்ந்தது என்னவோ உண்மைதான். ஆனால், அந்தக் கவர்ச்சி அவளைச் சலனப்படுத்தவில்லை. சபலப்படுத்தவில்லை. அவன் பார்வையே அவளுக்குப் பிடிக்கவில்லை. சொல்லிற்கும் விழி நோக்கிற்கும் நிறைய வேறுபாடு இருப்பதுபோல் தோன்றியது. ஆனால் அவள் கண்ணை மறைத்தது அவனுடைய கலை ரசனை. நடனத்தைப் போற்றும் பேச்சு, மகத்தான இளவரசனின் மகன் என்ற தகுதி வேற்றுமை இல்லாமல் அவன் ஆடினான், ஆடிக் காட்டினான். உண்மைக் கலைப் புலமை அதில் இருந்தது. அதனால் அவள் நம்பினாள். அவள் மனத்தில் கலைக் காதல் எழுந்தது. ஆனால் அவன் மனதிலோ காமக் கனல் கனன்றது. கள்ளத்தனம் மறைந்திருந்ததை அவள் அறியவில்லை.

இளவரசர் இராசேந்திர சோழரின் கலைப் புலமைக்கு ஏற்ற வாரிசு சுந்தரன் என்று எண்ணினாள். அதனால்தான் அவனிடம் நின்று பேசினாள். தொட்டுப் பேசிய போது தவறாக நினைக்கவில்லை. ஆனால், அவன் வரம்பு மீறுகிறான், அவன் நோக்கம் வேறு. கள்ள மனதுடன் பழகுகிறான் என்று அவள் உணர்ந்தபோது புலியானாள். அன்று மாலை நிகழ்ச்சியில் தனக்கு ஏற்பட்ட துணிவை நினைத்து அவளுக்கு வியப்பாகத்தானிருந்தது. அவன் கரத்தை உதறிய வேகத்தில் தடுமாறி அவன் வீழ்ந்தான். சுந்தரன் புரிந்து கொண்டிருப்பான் என்று நினைத்தாள். தான் வெறுப்பதை அறிந்த அவன் விலகிக் கொள்வான் என்று நம்பினாள். ஆனால் –

வீட்டிற்குள் மீண்டும் நுழைந்த அவன் – 'வாலைக் குமரியே வீரம்மா! வசமாய்ச் சிக்கினாயே, வீரம்மா! வாளைத் தூக்கலாமா, வீரம்மா!" என்று சுந்தரன் பாடினான். பிறகு சீற்றமுடன், "என்னைக் கீழே தள்ளி முழங்காலில் அடிபடுமாறு செய்தாய். என் இதயத்தில் ஏற்பட்ட அடி, அது. இதுவரையில் ஒரு பெண்ணும் என்னை அவமரியாதை செய்ததில்லை. இளவரசனின்





மகன் என்ற மரியாதை இல்லாமல் நடந்து கொண்டாயே! நான் உன்னை அவ்வளவு எளிதில் விட்டுவிடமாட்டேன். என்னைத் தட்டிக் கேட்க இங்கே யார் இருக்கிறார்கள்? இதோ, உன்னைத் தூக்கிச் செல்ல வந்துவிட்டேன். ஒரு வாரம் அன்ன ஆகாரமில்லாமல் கிடந்தால் நீ படிந்து விடுவாய். என் இளவரசியாக உன்னை ஆக்கிவிட ஆர்வம் கொண்ட என்னை வெறுத்துத் தள்ளிவிட்டாய்! உன் மேனி அழகும், ஆடல் கலையழகும் என் உள்ளத்து அக்னியைக் கொழுந்துவிடச் செய்துவிட்டன. உன்னை அடையாமல் ஓய மாட்டேன். வா! எதிர்ப்பின்றி வந்துவிடு! வாளைக் கீழே வீசிவிட்டு வந்துவிடு! பிடிவாதம்விட்டு, எதிர்ப்பைவிட்டு நீ என்னுடன் வந்துவிடு!" என்று அவன் பயங்கரமாகப்



பேசியவாறு வீரம்மாள் மீது பாய்ந்து, தாவிக் கட்டிப் பிடித்துத் தூக்க முயன்றான். உடன் வந்தவன் கயிறு கொண்டு அவளைப் பிணைக்க முயன்றான். வெளியே குதிரை கனைக்கும் ஒலி கேட்டது.

அவள் பெரிதாகக் கூவ முயன்றாள். முடியவில்லை. அழுத்தமாக அவள் வாயை மூடியிருந்தது, ஒரு கரம். பலம்கொண்ட மட்டும் எதிர்த்து அவனிடமிருந்து விடுபட முயன்றாள்.

வெளியே யாரோ ஓடிவரும் ஓசை கேட்டது. மூடிய வாயிற் கதவை உதைத்துத் திறந்து கொண்டு ஓர் உருவம் பாய்ந்து வந்தது. சடைமுடியும், தாடியும், மீசையுடன் அடையாளம் காண முடியா அந்த உருவத்தின் தோற்றமே பயத்தை அளித்தது.

அது சுந்தரனைப் பலம்கொண்ட மட்டும் தாக்கியது. உடனிருந்தவனைக் காலால் உதைத்து வீழ்த்தியது. "ஐயோ!" என்று அவன் அலறி ஓடி ஒளிந்தான்.

கீழே விழுந்த சுந்தரன் எழுவதற்குள் உள்ளே நுழைந்த வீரர்கள் அவனைக் கட்டித் தூக்கிக் கொண்டு குதிரையை நோக்கி விரைந்தனர். எல்லாம் மின்னல் மின்னிய நொடியில்நடந்துவிட்டது.

இரவு நடந்த சம்பவத்தை மீண்டும் நினைக்கும்போது அவள் தலை முதல் பாதம் வரை நடுங்கியது. வியர்வை அருவியாக ஓடியது.

ஆபத்து வேளையில் உதவவந்தவர் யார்? கற்றைச் சடைமுடியான் கங்காதரன் அந்த வேடத்துடன் வந்து காப்பாற்றினானா?

யார் வந்தது? அப்படியொரு சம்பவம் நடக்கும் என்பதை எதிர்பார்த்திருந்தவர் போல் ஆபத் சகாயனாக வந்திருக்கிறாரே - யாராயிருக்கும்?

யாராயிருந்தால் என்ன? சோழ நாட்டில் அநீதி அக்ரமத்தைத் தட்டிக் கேட்க ஆளில்லாமல் போய்விட்டார்களோ என்ற அவப்பெயரைப் போக்க வந்த தயாளன் யாராயிருந்தால் என்ன? பெண்மை சிதையாமல் காப்பாற்றிய இறைவனின் தூதன், யாராயிருந்தால் என்ன?

யாரா யிருந்தாலும், அவருக்கு வாழ்நாள் முழுமையும் கடமைப் பட்டிருக்க வேண்டும்.



- இவ்வாறு எண்ணிய அவள் தன்னைச் சற்றுத் தேற்றிக் கொண்டாள். விழிநீரைத் துடைத்துக் கொண்டாள். கலைந்திருந்த ஆடையைச் சரிசெய்து கொண்டாள். அச்சத்தால் வெளிறிப் போயிருந்த முகத்தில் தண்ணீரை வீசிக் குளுமை அடைய முயன்றாள்.

இரவு நடந்த சம்பவத்தைக் குறித்து விசாரிக்க அந்தச் சின்னஞ் சிறு கிராமத்தவர் ஒருவரும் வரவில்லை. அப்படியொரு பயங்கரமான சம்பவம் நடந்ததற்கான சுவடே அங்கு இல்லை.

சோர்வும், பதட்டமும் நீங்கிய வீரம்மாள் தரையில் படுத்துக் கொண்டாள். ஆபத்திலிருந்து தப்பியதால் ஏற்பட்ட நிம்மதி அவளுக்கு அமைதியை ஏற்படுத்தியது. களைப்பும், அமைதியும் ஒன்று சேர்ந்து அவளைக் கண் துயிலச் செய்தன.

"வீரம்மா, வீரம்மா - இன்னுமா தூங்கிக் கொண்டிருக்கிறாய்? பொழுது விடிந்து இவ்வளவு நேரமாகியும் இன்னும் தூங்குகிறாயே? உன் அண்ணன் வந்ததும் உன்னை எழுப்பவில்லையா?" என்று அத்தை வீரம்மாளைத் தட்டி எழுப்பினாள்.

தீய கனவை மறப்பதுபோல முதல் நாள் இரவு நடந்த சம்பவத்தை மறக்க முயன்றாள் வீரம்மாள்.

எழுந்து உட்கார்ந்து அத்தை, பாட்டனார், அண்ணன் இவர்களை வெறித்துப் பார்த்தாள். பிறகு மௌனமாக எழுந்து கிணற்றங்கரைப் பக்கம் சென்றாள்.

"வீரம்மா! குளித்து ஏதாவது ஆகாரம் உட்கொண்டு உடனே புறப்படு" என்றான், வீரம்மாளின் சகோதரன்.

"எங்கே அண்ணா?" என்று அவள் கேட்கவில்லை. அவள் கலகலப்பாக இல்லாததை முத்துக்குமரன் நன்கு கவனித்துக் கேட்டான்: "வீரம்மா! உடம்பு ஏதும் சுகமில்லையா?"

தலையசைத்தாள்; தனது மனத்தைத் தொட்டுக் காட்டினாள். முத்துக்குமரன் சிரித்தான்.

"எல்லாம் சரியாகிவிடும். இளவரசர் தில்லைக்கு உன்னை அழைத்து வரச் சொல்லிவிட்டார். இனி நாட்டியப் பயிற்சியைச் சிதம்பரத்திலேயே வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார். சில நாள்கள் கழித்துக்

குடும்பத்தையும் அங்கே மாற்றி விடலாம் என்று சொன்னார்".

வீரம்மாளின் முகம் மலர்ந்தது. மெல்லக் கேட்டாள்; "எந்த இளவரசர் சொன்னார்?"

"எத்தனை இளவரசர் இருக்கிறார்கள் இந்தச் சோழ நாட்டில்? இராசராச சோழ சக்கரவர்த்திகளின் ஒரே புதல்வன் அருமைப் புதல்வன் இராசேந்திர சோழன். பரகேசரி இராசேந்திர சோழ சக்கரவர்த்தி என்று விரைவில் பட்டம் சூட்டிக் கொள்ளப் போகிறவர்! ஊர் உலகம் அறிந்த உண்மையை நீ ஏனோ அறியவில்லை" என்று சற்றுச் சினத்துடன் கேட்டான்.

"இல்லை அண்ணா - இளவரசரின் புதல்வர்களும் தங்களை இளவரசர் என்று சொல்லிக் கொள்கிறார்கள்; அதனால் கேட்டேன்" என்றாள் வீரம்மாள், நயனத்தில் சோக மிகுந்தாலும், உதடுகளில் முறுவலைப் பூக்கச் செய்தவாறு.

முத்துக்குமரனும் மெல்ல நகைத்து, "வீரம்மா! இராசேந்திர சோழரின் புதல்வர்களுக்கும் இளவரசர் ஆகவேண்டிய வயதுதான். அதனால் அப்படிச் சொல்லியிருப்பார்கள்" என்று கூறியவன், "ஆமாம், தன்னை இளவரசர் என்று யார் கூறிக் கொண்டார் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"யாரா? அப்புறம் சொல்கிறேன். நம்து இளவரசர் சக்கரவர்த்தியாவது எப்போது, அவர் புதல்வர்கள் இளவரசர்களாவது எப்போது?" என்று வீரம்மாள் கேட்டதில் கபடம் ஏதுமில்லை.

"வீரம்மா! நமக்கு எதற்கு அரண்மனை விவகாரம்? அது சரி; இன்று நீ ஏதேதோ பேசுகிறாய். யாராவது அரசாங்க விவகாரம் பேசுபவர்கள் தோணித்துறையில் இறங்கி வந்தார்களா?" என்று கேட்டான்.

"ஊஹூம் அதெல்லாம் இல்லை" என்று கூறியவள் துணிமணிகளை ஒரு மூட்டையாகக் கட்டத் தொடங்கினாள்.

அரசாங்க பல்லக்கு வீரம்மாள் வீட்டு வாசலில் வந்து நின்றது. தெருவில் இருந்தவர்கள் அங்கே கூடிவிட்டார்கள். வீரம்மாளின் அருமைத் தோழி ஓடோடி வந்தாள்.



"வீரம்மாள், எங்கோ கடல் கடந்துச் சென்றுவிடப் போவதில்லை. சிதம்பரத்திற்குத்தான் போகிறாள். இளவரசர் தக்க ஆசிரியரை நியமித்து, நடனக் கலையில் வீரம்மாளைச் சிறந்த மேதையாக்கிவிடப் போகிறார். அவ்வப்போது வீரம்மாள் மூங்கில் துறைக்கு வராமலா இருக்கப் போகிறாள்? நாகுவை அவளால் பிரிய முடியுமா?" என்று கூறி முத்துக்குமரன், அனைவரையும் சமாதானப்படுத்தினான்.

பல்லக்கைத் தொடர்ந்து முத்துக்குமரன் குதிரையில் வந்தான். நடுவழியில் வீரம்மாள் சிவிகையிலிருந்து இறங்கினாள்.

"அண்ணா! தங்களிடம் மிக முக்கிய செய்தி ஒன்றைச் சொல்ல வேண்டும்" என்ற பீடிகையுடன் வீரம்மாள், தன் உடன் பிறந்தானிடம் நடந்தவற்றை உள்ளது உள்ளபடி தெரிவித்தாள்.

முத்துக்குமரன் உடல் கொதித்தது. "வீரம்மா! இப்போதே சுந்தரனின் கரங்களை வெட்டி எறியத் துடிக்கிறேன். ஆனால்... ஆனால், இளவரசருக்கு இந்தச் செய்தி தெரிந்தால் சுந்தரனை இரண்டு துண்டாக வெட்டிக் கழுகுக்கு எறிந்து விடுவார்" என்று ஆத்திரத்துடன் பேசியவன், "வீரம்மா! எனக்கு நேற்று ஏதோ மனமே சரியில்லை. சிதம்பரத்தில் இருந்திருந்தால் நான் வீட்டிற்கு வந்திருப்பேன். காலையில்தான் இளவரசரும் நானும் சிதம்பரம் திரும்பினோம்" என்றான்.

"அண்ணா! நேற்று இளவரசரும் நீங்களும் சிதம்பரத்தில் இல்லையா?"

"இல்லை வீரம்மா..."

"அப்படியென்றால், நேற்று என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றத் தக்கவரை அனுப்பியது யார்? ஒருவேளை இளவரசரே மாறு வேடத்தில் வந்திருப்பாரோ? தன் மகனுடைய தீய செயலை அறிந்து அவனைக் கண்டிக்க - ஒன்று, அவர் தக்கவரை அனுப்பியிருக்க வேண்டும். அல்லது அவரே வந்திருக்க வேண்டும். சடை முடியுடன் தாடியும் மீசையுமாக அடையாளம் காணமுடியாத தோற்றத்துடன் என்னைக் காப்பாற்ற வந்தவரின் புஜபலத்தை எப்படி எடுத்துச் சொல்வேன்? என்னைக் காப்பாற்ற வந்தவர் இளவரசராக இருக்க வேண்டும், அல்லது அரசர் அனுப்பிய வீரராக இருக்க வேண்டும்".

"வியப்பாக இருக்கிறது. காலையில் எழுந்தவுடன் இளவரசர் என்னை அழைத்தார். உன் நலனைப் பற்றிக் கேட்டறிந்தார். உன் நடனப் பயிற்சியைப் பற்றி வினவினார். சிதம்பரத்தில் தங்கியிருந்து நடனம் பயில ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறினார். உடனே சென்று உன்னை அழைத்து வருமாறு கட்டளையிட்டார்".

"ஓ...!" என்றாள், வியப்புடன் வீரம்மாள்.

"நான் சற்றுத் தயங்கினேன். உன் பாட்டனாரிடம் நான் சொல்லிக் கொள்கிறேன் என்றார்".

"வீரம்மாள் நடனம் கற்றுக் கொண்டு என்ன செய்யப் போகிறாள். திருமணத்திற்குப் பிறகு கற்ற கலை வீண்தானே?" என்றேன்.

"பயனுடையதாக்குகிறேன். முத்துக்குமரா! சோழ நாட்டிற்கு உன் சேவை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் வீரம்மாளின் கலைச் சேவையும்" என்றார் இளவரசர்.

"ஓ! அவ்வளவு நம்பிக்கையா என்மேல். அவ்வளவு புகழ்ச்சிக்கும் பெருமைக்கும் ஏற்றவளா,நான்?"

"வீரம்மா! இளவரசரின் கலை ஆர்வத்திற்கு எல்லையில்லை. அவருடைய சிந்தனை, இலட்சியம் எல்லாம் சிற்பம், சித்திரம், கோபுரம், கோயில்தான். மதுரையில் பெரிய மாளிகை கட்டவேண்டுமாம்! பெரிய கோயிலைப் போல் மற்றொரு கோயில் கட்ட வேண்டுமாம். அவர் சிற்பிகளை அழைத்துப் பேசுகிறார்; கருவூர்த் தேவரைச் சந்தித்து நேரம் போவது தெரியாமல் யோசனை கேட்டுக் கொண்டிருக்கிறார். அந்த நிலையிலும் அவருக்கு உன் நினைவு".

வீரம்மாள் மேனியில் மெல்லிய சிலிர்ப்பு ஏற்பட்டது. "எ...ன்...நி...னை...வு" அவள் முணுமுணுத்தாள்.

"அண்ணா! இளவரசரின் மகன் சுந்தரனுக்கு கலைத் தாகம்தான்" என்றாள் மெல்லிய குரலில்.

"இல்லை... காமத் தாகம்..." என்றான்,முத்துக்குமரன்.

"தன் புதல்வர்களுள் சுந்தரனைப் பற்றித்தான் இளவரசருக்கு மிகவும் கவலை. அவன் மீது அவர் கொண்டுள்ள பாசத்திற்கு ஈடு இணையே இல்லை. மூத்த மகன் இராசராசனை போர்க் கலையில் வல்லவராக்கினார்.



மற்ற புதல்வர்கள் வீரர்கள் - மேதைகள். ஆனால் சுந்தரனிடம் அன்பைப் பொழிந்து அவனை வழி தவறச் செய்துவிட்டார். ஆனால், சுந்தரனையும் ஓர் உயர்ந்த பீடத்தில் அமர்த்தத் திட்டமிட்டுள்ளார். மதுரைப் பாண்டிய நாட்டை ஆளும் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்க முடிவு செய்திருக்கிறார்".

முத்துக்குமரனின் பேச்சு அவளுக்கு வியப்பை அளித்தது. "அப்படியென்றால் அவர் கனவு சிதைந்து விட்டதா? நேற்று அவனுக்குக் கிடைத்த உதையும், அடியும் சுந்தரன் ஊனமடையாமல் நடமாடுவானா என்பது சந்தேகம்தான்" வீரம்மாள் கவலையுடன் கேட்டாள்

"என்ன சொல்கிறாய் வீரம்மா?"

"ஆமாம் அண்ணா! சுந்தரனின் செய்கைக்கு நேற்று அவனுக்குக் கிடைத்த பரிசு - பாசமுள்ள தந்தை கொடுத்த பரிசாக இருக்க முடியாது. மாபெரும் தண்டனை!"

"நேற்று இராசேந்திர சோழர் அங்கு வந்திருக்க முடியாது".

"இருக்கலாம். அவரே மாறு வேடத்தில் வந்திருந்தால் இப்படித் தன் ஆசை மகனைப் புரட்டி எடுத்திருக்க மாட்டார். ஒரு பெண்ணிடம் இளம் வாலிபன் அரச குடும்பத்துச் செல்லப் பிள்ளை அவ்வாறு நடந்து கொண்டது இயற்கைதான் என்று எண்ணியிருப்பார்".

"எப்படியோ, எனக்கு நேர இருந்த ஆபத்திலிருந்து அவர் காப்பாற்றிவிட்டார்".

"உனக்கு ஏற்பட்ட ஆபத்து என்பதைவிட சோழ நாட்டிற்கு ஏற்படவிருந்த அவமானத்திலிருந்து - சொல்லப் போனால் தனக்கு ஏற்பட இருந்த மாசிலிருந்து காப்பாற்றிவிட்டார் - காப்பாற்றிக் கொண்டார்".

முத்துக்குமரன் கூறுவதைக் கேட்ட வீரம்மாள் ஏதும் சொல்ல முடியாமல் திகைத்து நின்றாள். பிறகு, "அண்ணா! - என்னால்தானே இவ்வளவு தொல்லைகளும் துன்பங்களும்? நான் நடனம் பயிலப்போவதில்லை. சிதம்பரம் செல்ல வேணடாம், நாம் திரும்பிப் போய்விடுவோம், கண்காணாத இடத்திற்குப் போய்விடுவோம்" என்று கூறினாள், விம்மல் ஒலியுடன்.



## 13. இராசேந்திரன் மூவர்

சாளரத்தின் வழியே நுழைந்து கதிரவனின் பொன் வண்ணக் கதிர்களை வீரம்மாளின் இமைகளை மெல்ல வருடின. 'விழித்தெழு விழித்தெழு' என்று அவளைத் தட்டி எழுப்பின.

கனவு கண்டது போதும், பொழுது புலர்ந்து விட்டது என்று அவை அவள் செவியருகே மெல்லப் பேசின.

'கனவா?' அவள் மெல்லத் திரும்பிப் படுத்தாள். இரவு படுத்ததுதான் தெரியும். சுகமான பஞ்சணை. அந்த அறையில் மெல்லிய நறுமணப் புகை, கிராமத்து அமைதி. எப்போதோ ஓரிரு பறவைகள் அரைத் தூக்கத்தில் விழித்துப் பேசிக் கொள்ளும் குரல் தவிர வேறு விதச் சந்தடியின்றி அவள் உறங்கினாள்.

களைப்பும், மனப் பாரமும் நீங்க அந்த உறக்கம் அவளுக்கு உதவியது. மூங்கில் துறையில்கூட அவள் இவ்வாறு அயர்ந்து உறங்கியதில்லை. முதல் நாள் நடந்தவை அனைத்தையும் நினைத்துப் பார்த்தாள்.

சகோதரன் முத்துக்குமரனுடன் பேசிக் கொண்டே சாலையின் தொலைவைப் பொருட்படுத்தாமல் நடந்து வந்தாள். பாவம், குதிரையுடன் சேர்ந்து தன் சகோதரன் நடந்து வருகிறானே என்ற கவலை அவளுக்குத் தோன்ற வில்லை. சிவிகையைச் சுமப்பவர்கள் வீரம்மாளை அமரச் செய்யாமலேயே வியப்புடன் நடந்து வந்தார்கள்.

'சிதம்பரத்திற்குச் செல்ல வேண்டாம்; வேறு எங்காவது சென்றுவிடுவோம்; கண் காணாத இடத்திற்குப் போய்



விடுவோம்' என்று கூறிய வீரம்மாளைச் சமாதானப்படுத்த முத்துக்குமரன் நீண்ட நேரம் சமாதானம் கூறவேண்டியதாகிவிட்டது.

"வீரம்மா! நேற்று நடந்ததைக் கனவுபோல் மறந்துவிடு" என்று முத்துக்குமரன் ஆறுதல் கூறினான். "சோழநாட்டில் இளவரசர் இராசேந்திர சோழரின் எண்ணத்துக்கு விரோதமாக ஏதும் நடக்காது வீரம்மா! என் சகோதரி என்பதால் மட்டும் அவருக்கு உன்மீது அன்பு ஏற்படவில்லை; உன்னிடம் அடங்கியுள்ள கலைத்திறனும் அவரைச் சொக்க வைத்து விட்டது. இந்த நாட்டை ஆள்வதைவிட கலைத்தொண்டு செய்து காலத்தைக் கழிக்க வேண்டும் என்று அடிக்கடி அவர் சொல்வார்".

"ஹூம், அவர் புதல்வன் சுந்தரனும் அப்படித்தான் சொன்னார்! என்ன சொன்னார் தெரியுமா? திருமுருகாற்றுப் படையிலிருந்து வர்ணனை ஒன்றை எடுத்துக் கூறி விளக்கிவிட்டு, உன்னைப் போன்ற அழகும், கலையும் ஒன்று சேர்ந்த நடன மங்கையுடன் அந்த இயற்கைக் காட்சியை ரசிக்க வேண்டும், பெண்ணே; வீரம்மா! என்னுடன் வந்துவிடு. நாம் காவிரிப்பூம்பட்டினம் செல்வோம், நாகைப்பட்டினம் செல்வோம்; இன்றே தஞ்சைக்குச் சென்றுவிடுவோம். அங்கே அழகிய மாளிகையில் வாழ வழிசெய்வேன்" என்று கூறினார். அந்தப் பேச்சில் அன்பு இல்லை; காமம் இருந்தது. அண்ணா! சொல்லுங்கள், நான் நடனமாதா? அரண்மனையில் நடனமாடும் பெண்ணாகச் சேர்வதற்காக நடனம் கற்கிறேனா? தஞ்சாவூரிலுள்ள பதியிலாதாருள் ஒருவராக நான் விளங்கவேண்டும் என்பதற்காக எனக்கு நடனம் கற்றுத்தர இளவரசர் முயல்கிறாரா! அவர் அந்தரங்கம் அதுதானா? எல்லா ஆடவர்களுமே அப்படித்தானா? அண்ணா! வேண்டாம் வேண்டாம். மாளிகைத் தொடர்பே வேண்டாம், அண்ணா! பலியாகப் போகும் ஆட்டுக் கடாவிற்கு அலங்காரம் செய்வதுபோல் என்னை அரண்மனையில் வாழவைக்க இன்று இளவரசர் என்னை அழைக்கிறாரா?" வீரம்மாள் துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள். சாலையில் சோர்வுற்று நின்று விட்டாள். முத்துக்குமரன் செய்வதறியாது திகைத்தான். தங்கையின் துயரம், வேதனை, சோர்வு அவனையும் ஒருகணம் திகைக்க வைத்தது. பிறகு அவளைத்

தேற்ற முயன்றான். அதற்காகத் தான் முதலில் உற்சாகமும், நம்பிக்கையும் அடையவேண்டும் என்று முடிவு செய்து, முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு.

"என்ன, வீரம்மா! சின்னக் குழந்தையைப் போல் சாலை நடுவே நின்று விட்டாய்? பல்லக்குச் சுமப்பவர்கள் என்ன நினைப்பார்கள்! வீட்டிலே ஏதோ பிணக்குற்று, அதை நீயும் நானும் நடுச்சாலையில் விவாதிப்பதாக நினைத்துக் கொள்ளப் போகிறார்கள். சிதம்பரத்திற்கு நீ வந்தவுடனே, உன் நிலையைக் கண்டு நீயே வியப்படையப் போகிறாய். மகிழ்ச்சி அடையப் போகிறாய். அரச பல்லக்கில் ஏறுவதற்குத் தகுதி வேண்டும். மிக முக்கியமானவர்களுக்குத்தான் புலிச்சின்னம் பொறித்த சிவிகையை அனுப்புவார்கள்.

"நடனமங்கையை அழைத்துவர சிவிகை செல்லாது. அழைப்பைக் கேட்டவுடன் அவர்களே அரண்மனைக்கு வந்து விடுவார்கள். சிதம்பரத்தை அடைந்தவுடன் உனக்கு அங்கு அளிக்கப்படும் வரவேற்பைக் கண்டு நீயே வியப்படைவாய். சிதம்பரம் சென்றவுடன் இளவரசர் என்னைக் கோபிக்கப் போகிறார்" என்று கூறி வீரம்மாளைத் தேற்ற முயன்றான்.

"உங்களை ஏன் கோபிக்கப் போகிறார்?" வீரம்மாள் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு கேட்டாள்.

"சிவிகையை அனுப்பி உன்னை அழைத்துவர வேண்டும் என்பது இளவரசரின் கட்டளை நீ நடந்து வந்தாய் என்பதறிந்தால் என் மீது சினம் கொள்ளாமல் வேறு என்ன செய்வார்?" என்று முத்துக்குமரன் கேட்டான். "ஒரு வேளை அவர் முன்பு நீ நடனமாட நேர்ந்தால்? நடந்து சிவந்து நொந்த பாதங்கள் ஆட ஒத்துழைக்குமா? அதற்காகவும் சினமடைவார், இளவரசர்?"

"நான் இப்போது என்ன செய்வது, அண்ணா?"

"சிவிகையில் ஏறிக் கொள். உன்னைப் பின்தொடர்ந்து குதிரைமீது வருகிறேன். சிதம்பரத்தில் இளவரசரைச் சந்திப்போம். ஒருவேளை கோயில் அர்த்தசாம பூசைக்கு, ஆடவல்லான் சந்நிதிக்கு இளவரசர் வரக்கூடும். அப்போது உன்னை ஆடச் சொல்லலாம்" என்றான்.

சிதம்பரம் நகரை அடையும்போது பொன் மாலைப் பொழுது நெருங்கிக் கொண்டிருந்தது. மாலைக் கதி



ரவனின் தழுவலால் செம்பொன் நிறத்தில் நாணமுற்ற நங்கையின் முகம் போல கோயில் விமானம் காட்சியளித்தது.

வீரம்மாள் தங்குவதற்கு வீடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தோட்டத்தின் நடுவே அழகிய அந்தச் சிறு வீடு அமைந்திருந்தது. அரச குடும்பத்தவர்கள் தங்குவதற்கு ஏற்ற வகையில் அது அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளே நுழைந்தவுடன் சிறு கூடம். தரை பளிங்குபோல் வழுவழுப்பாக இருந்தது. கூடத்தின் ஓரத்தில் ஓர் ஆசனம். சித்திர வேலைப்பாடுடன் கூடிய அந்த இருக்கையில் அமரக்கூடிய தகுதி அரச குடும்பத்தவருக்குத்தான் என்பதை அழகிய இருக்கையின் பளபளப்பும், கம்பீரமும் சுட்டிக்காட்டின.

கூடத்தைத் தாண்டியவுடன் ஓர் அறை வேலைப்பாட்டுடன் கூடிய கதவு பளபளப்புடன் திகழ்ந்தது. அறையின் உள்ளே தரையில் இரத்தினக் கம்பள விரிப்பு. அறையின் நடுவில் மஞ்சம். அன்னத்தின் தூவியால் ஆன பஞ்சணை. இதமான காற்று அறைக்குள் தவழ்ந்து கொண்டிருந்தது. வெளிச்சத்திற்கும் காற்று வருவதற்கும் காலதர் ஒன்று அறையின் கூரையை ஒட்டி இருந்தது.

அந்த வீட்டைப் பார்த்தவுடன் வீரம்மாள் அகமும், விழிகளும் அகல விரிந்தன. அதேபோல முத்துக்குமரனுக்கும் வியப்புதான்.

"வீரம்மா! பார்த்தாயா? இதுபோன்ற வீடு எனக்குக்கூட இதுவரையில் கிடைத்ததில்லை. இளவரசரும் நானும் பல ஆண்டுகள் காட்டிலும், மலையடிவாரத்திலும் கூடாரங்களில், குடிசைகளில், போர்க்களத்தின் நடுவே இரவுகளைக் கழித்திருக்கிறோம். உன்மீது இளவரசருக்குள்ள அன்பின் காரணமாக, தில்லைச் சிற்றம்பலத்து நந்தவனத்தின் நடுவே இத்தகைய அழகிய வீட்டை நாம் தங்குவதற்கு ஏற்படுத்தியிருக்கிறார்" என்றபோது வீரம்மாளுக்கு வியப்பு மேலும் அதிகமாகியது.

அழகிய அந்தச் சிறு குடிலைப் பார்க்கப் பார்க்க வீரம்மாளுக்கு வியப்பாக இருந்தது. தரையில் கால் வைக்கவும் கூசியது. அவளது பாதங்கள் மெத்தென்ற அந்தக் கம்பளத்தில் அழுந்தியது; கைகொட்டிக் கூத்தாட வேண்டும் போலிருந்தது.

உணவு வந்தது. உடன் உறக்கமும் தொடர்ந்தது. பஞ்சணைக் கட்டிலின் மீது துயிலுற வேண்டுமாம்!

"ஐயோ, எனக்கு வேண்டாம் அண்ணா! நான் இப்படித் தரையில், கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்துக் கொள்கிறேன்!" என்றாள் வெட்கத்துடன்.

முத்துக்குமரன் சிரித்தான். "நான் தான், இங்கே இந்தக் கம்பளத்தில் படுத்துக் கொள்ளப் போகிறேன். நீ கட்டிலில் படுத்து நன்றாகத் தூங்கு. தைரியமாகத் தூங்கு. அமைதியாகத் தூங்கு! காலையில் எழுப்புகிறேன்" என்றான்.







"அப்படியென்றால் நானும் கூடத்திலேயே படுத்துக் கொள்கிறேன்" என்று சிணுங்கினாள் வீரம்மாள். கூடாது, கூடாது என்று பலமாகத் தலையை அசைத்தபின் முத்துக்குமரன், வெளியே சென்று சிறிது நேரம் கழித்து வந்தவன் சொன்னான்:

"வீரம்மா! இளவரசரைக் காலையில் சந்திக்கலாம். நாம் தங்குவதற்கு வேறு இடத்தில் வீடொன்று ஏற்பாடாகியிருக்கிறது. அத்தையும் பாட்டனாரும் சம்மதித்தால் உடன் தங்கலாம்" என்றான் முத்துக்குமரன்.

வீரம்மாள் முதலில் கட்டிலில் அமரவே கூச்சப்பட்டாள் பிறகு உறங்கிப் போனாள்.

பொழுது புலர்வதற்கு முன்பே கருக்கலில் எழுந்து பழக்கப்பட்ட வீரம்மாள் அன்று கதிர்க் கரங்கள் தொட்டெழுப்ப விழித்தாள்.

பணிப்பெண் அருகே நின்று கொண்டிருந்தாள். நீராட அழைத்தாள். நறுமணப் பொடிகள், தைலம், மாற்றுடை சகிதம் பணிப்பெண் அவளைத் தொடர்ந்தாள். ஒற்றையடிப்பாதையில் முன்னே அவள் நடக்க, வீரம்மாள் தொடர்ந்தாள்.

தோட்டத்துக் கிணற்றருகே பெரிய கருங்கல் தொட்டி. சிறிய குளம் போல் அதில் நீர் நிறைந்திருந்தது. இறங்கி நீராடப் படிக்கட்டுகள் இருந்தன. நீராடுபவரை வெளியே இருந்து காணமுடியாது. ஆற்றிலே குளித்துப் பழக்கப்பட்ட வீரம்மாளுக்கு சிறு வாவி போன்ற குளியல் தொட்டியில் நீராடச் சற்றுக் கஷ்டமாக இருந்தது.

வீரமமாளின் இயற்கை அழகைக் கண்டும் காணாமல் பணிப்பெண் ரசித்துக் கொண்டிருந்தாள். குளித்துவிட்டு நீர் சொட்டச் சொட்ட வீரம்மாள் படியேறி வந்து கூந்தலைத் துவட்டிக் கொண்டதும்.. இலாவகமாக உடை மாற்றிக் கொண்டதும்... பிறகு ஒயிலாக நடந்து சென்றதும் அவளைப் பின் தொடர்ந்த பணிப்பெண்,வீரம்மாளின் நடையழகைக் கண்டு இப்படியும் ஓர் அழகா என்று வியந்தாள்.

குடிலின் பின் பக்க வழியாகப் பணிப்பெண் வீரம்மாளை அழைத்துச் சென்றாள். அங்கே ஓர் அறையில் மஞ்சத்தில், விழிகளை மூடியவாறு சாய்ந்து படுத்திருந்த சுந்தரனைக் கண்டு தீயை மிதித்தவள் போல் வீரம்மாள் திடுக்கிட்டாள்.



சுந்தரன் - அவன் அருகே இருவர் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தனர். பச்சிலைச் சாறெடுத்து அவன் தோளிலும், மார்பிலும் தடவிக் கொண்டும் இருந்தனர்.

'அப்பா - அம்மா' என்ற மெல்லிய குரல் அவனிடமிருந்து எழுந்தது.

வீரம்மாள் அங்கிருந்து விரைந்து திரும்பி, "இங்கே ஏன் அழைத்து வந்தாய்?" என்று சீற்றமுடன் கேட்டாள். பிறகு -

"அங்கே படுத்திருப்பது யார்?" என்று தெரியாதவள் போல் கேட்டாள் வீரம்மாள்.

"இளவரசரின் இளைய புதல்வன் - சுந்தரன் என்று பெயர்" என்றாள் பணிப்பெண்.

"அவருக்கு என்ன நேர்ந்து விட்டது? மேனி சுகமில்லையா?" என்று கேட்டாள் வீரம்மாள்.

"நமக்கெதற்கு அரசாங்க நடப்பு?" என்று கூறியவள், "அம்மணி! அவருக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்; நேற்று முன்தினமாக இருந்திருந்தால் நேற்றிரவு நீங்கள் தனியே அந்த அறையில் தங்கியிருக்க முடியுமா! அல்லது நான் தான் இங்கே இப்படி நடமாட முடியுமா? நாங்கள் நான்கு பேராகத்தான் வருவோம்" என்றாள் மெல்லிய குரலில்.

சுந்தரன் தன்னைப் பார்த்திருக்க மாட்டான் என்ற நம்பிக்கையில் வீரம்மாள் தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

"கதவைத் தாளிட்டுக் கொள்ளட்டுமா?" என்று பணிப்பெண்ணைக் கேட்டாள்.

"உங்கள் வசதிப்படி; இளவரசர் வருவதற்குள் தலை சீவி, பொட்டிட்டு, பூ முடித்து, தங்களுக்குப் புத்தாடை அணிவித்திருக்க வேண்டும். உங்கள் உத்தரவுப்படி நடக்க என்னை அனுப்பியுள்ளார்கள். காலை பசியாறுவதற்குச் சூடாக பொங்கல், இடி ஆப்பம், அதிரசம், தோசை எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். மீன் குழம்பு மணப்பது தெரியவில்லையா?" என்றாள், பணிப்பெண். அவள் மிகுந்த கெட்டிக்காரி போலும்!

"இளவரசர் இங்கே வரப்போகிறாரா? எந்த இளவரசர்?" என்று கேட்க நினைத்தாள். 'என் சகோதரன் எங்கே போனார்?' அவளைக் கேட்க நினைத்தாள்.

"அம்மணி! தங்கள் சகோதரர் இங்கே இன்னும் சிறிது நேரத்தில் வருவார். இளவரசருடன் வருவார், தெரிவிக்குமாறு சொன்னார்". "என்ற பணிப்பெண்ணின் ஆற்றலை எண்ணி வியந்தாள். வீரம்மாள்.

சற்று முன்பு சுந்தரன் இருந்த காட்சியை நினைவுபடுத்திக் கொண்டாள். நேற்று அவர் இருந்த நிலை என்ன! இன்று உடலுக்கு மருத்துவர்கள் ஒத்தடம் கொடுக்க விழிகளைத் திறக்காமல் படுத்திருப்பதென்ன - கம்பீரமான அந்த மேனியும் அமைதியாக சாய்ந்திருக்கிறதே - அவள் மேனி சிலிர்த்தது. இளவரசரின் மகனாக ஒரு கணம் காட்சியளித்த சுந்தரன் அவள் கண்களுக்கு மறுகணம் பசி மிகுந்த புலியாகத் தோன்றினான்.

இங்கு இப்போது இளவரசர் வரப் போகிறாராமே! நேற்று நடந்த சம்பவத்தைப் பற்றி அவர் தன்னைக் கேட்கலாம். உள்ளது உள்ளபடி சொல்வதா? பேச்சு எங்கே வரப்போகிறது? பசியாற உண்டு, சற்று ஓய்வுடனிருந்தாள்.

வெளியே ஆரவாரம் எழுந்தது. குதிரைகள் வரும் ஓசை கேட்டது. எட்டிப் பார்த்தாள். இளவரசரும் அவரது பரிவாரங்களும் வந்து கொண்டிருந்தனர். வீரம்மாள் அறைக்குள் ஓடி ஒருபுறமாக மறைந்து நின்று கொண்டாள். பணிப்பெண் அங்கு இல்லை.

இளவரசர் இராசேந்திர சோழ தேவர் அந்தக் குடிலுக்குள் நுழைந்து அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தார். அவர் அருகே முத்துக்குமரனும், திருமந்திர ஓலை நாயகமும், அரசியல் அதிகாரிகளும் நின்று கொண்டிருந்தனர்.

அறையின் ஓர் ஓரமாக தான் நிற்பது வெளியே தெரியாமல் நின்று கொண்டிருந்த வீரம்மாள், இராசேந்திரன் வீற்றிருப்பதை எந்தத் தடையுமின்றி கதவோரமாக இருந்து நோக்கினாள்.

சுந்தரனைப் போன்று மூன்று சுந்தரன்கள் சேர்ந்த மொத்த உருவமாக இளவரசர் இராசேந்திரன் காட்சியளித்தார். விழிகள், நாசி, நெற்றி, உதடுகள் இவை சேர்ந்த வதனம்; முகத்தாமரையைத் தாங்கும் தண்டு போல் கழுத்து. மெல்லிய நீலநிற மேலாடை தவழும்



திண்தோள்கள், மார்பு. அதன்மீது முத்து ஆபரணங்கள், வலிமைமிக்க கரங்கள், அதில் பொன்னாலான கங்கணம். மஞ்சள்நிறப் பட்டாடை; அதன் மீது இடுப்பைச் சுற்றி பூச்சரிகை வேலைப்பாடுகளுடன் கருஞ்சிவப்புத் துகில் -

கம்பீரமான பார்வையுடன் அவர் அந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கிறார். யாரையோ தேடுகிறார் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. குறிப்பறிந்து ஒருவர் அவர் செவியில் மட்டும் விழுமாறு ஏதோ சொல்கிறார் - ஆமோதிப்பதுபோல் தலையை அசைக்கிறார்.

வீரம்மாளின் பார்வை, அவரது முகத்தின் மீது ஆழப் பதிகிறது. அவர் பேசும்போது அவர் முகத்தில் ஏற்படும் உணர்வுகளைக் கவனிக்கிறாள். இதற்கு முன்பு இரு முறை நேருக்கு நேர் அவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறாள். அவர் முகத்தை அவளால் உற்று நோக்கிப் பேச முடியவில்லை. சூரியனைப் பார்க்கக் கூசும் விழிகள் போன்ற நிலை.

இப்போது நன்றாகப் பார்க்க முடிகிறது. ஒவ்வோர் அசைவையும் ரசிக்க முடிகிறது. அந்தக் கம்பீரமான விழிகளின் அசைவு வெளிப்படுத்தும் வெவ்வேறு வித உணர்வுகளை அறிய முடிகிறது.

இவர் சுந்தரனின் தந்தையா? அல்லது சுந்தரனின் மூத்த அண்ணனா? இங்கே வீற்றிருப்பவர் இராசேந்திர சோழர்தாம் என்று நாம் சரியாகத் தெரிந்து கொண்டோமா? இராசேந்திர சோழருக்குக் குழந்தைச் செல்வத்துக்குக் குறைவில்லை என்பதை அவள் அறிவாள், மூத்த மகன் இராசாதிராசனைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறாள். படைப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கி போர்க்களத்தில் தந்தைக்கு உதவி வருபவன். இளவரசருடன் இணைந்து நிற்பவன். யார் தந்தை, யார் மகன் என்ற வேற்றுமையைத் தோற்றத்தில் அவர்களிடம் காண முடியாதாம்.

சக்கரவர்த்தி இராசராசசோழ தேவருக்குப் பிறகு சோழநாட்டு அரியணையை அலங்கரிக்கப் போகிறவர் இராசேந்திர சோழர், அவருக்குப் பிறகு இவர்தான் -

வீரம்மாள் மனதில் மிகுந்த குழப்பம். தன் சகோதரன் மீது சிறு கோபம். நேற்று இரவு தன்னை இந்தப் புது இடத்தில் விட்டு விட்டுத் திரும்பிக்கூடப் பார்க்க

வில்லையே! ஹூம். இராசேந்திர சோழரா இல்லை அவருடைய மகனா என்ற குழப்பம் நமக்கு ஏன் ஏற்படு கிறது தெரியவில்லையே ஹூம் சற்றுப் பொறுப்போம்.

அதோ முத்துக்குமரன் பரபரப்புடன், வீரம்மாள் இருக்குமிடம் நோக்கி சைகை காட்டுகிறான். பிறகு விரைந்து வருகிறான்.

"வீரம்மா! இளவரசர் உன்னை அழைக்கிறார், வா" என்கிறான். பிறகு "இரவு நன்றாகத் தூங்கினாயா? காலை உணவு வந்ததா? புதுப்புடைவை கொடுத்தார்களா? உன்னை அலங்கரிக்கப் பணிப்பெண்கள் வந்தார்களா?" என்று பரபரப்புடன் கேட்கிறான்.

வீரம்மா உடனே மறுமொழி கூறவில்லை.

"வீரம்மா! ஏன் முகவாட்டத்துடன் இருக்கிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?" என்று முத்துக்குமரன் கேட்கிறான்.

"இன்னும் என்ன நேர வேண்டும்? முன்பின் தெரியாத இடத்தில் என்னைத் தனியே இருக்க விட்டு விட்டு நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்? இரவு திடீரெனக் கண் விழித்து நான் பயந்து போனேன். பிறகு தூக்கமே வரவில்லை" என்றாள் பொய்க் கோபத்துடன்.

"நீ பயப்படக் காரணமே இல்லை, வீரம்மா!"

"பயப்படாமல் எப்படி இருப்பது? இந்தக் குடிலின் பின்புறத்து அறையில் இளவரசரின் மகன் சுந்தரன் இருககிறார்".

"யார் சுந்தரனா?" என்று கேட்டு நகைத்த முத்துக் குமரன், "பாவம்! நேற்று அவனுக்குச் சரியான மரியாதை கிடைத்தது. உயிர் இன்னும் இருக்கிறதா என்று கேட்கிறார் இளவரசர்".

வீரம்மாள் தன் சகோதரனை வியப்புடன் நோக்கினாள். நடந்த சம்பவங்கள் இளவரசருக்குத் தெரியுமா? என்று எண்ணினாள்.

"அண்ணா! அங்கே வீற்றிருப்பது இளவரசர்தானே?" என்று கேட்டாள் வீரம்மா.

"அதில் என்ன சந்தேகம்?" என்று கூறிய முத்துக் குமரன், "வீரம்மா! உன்னைப் பார்ப்பதற்காகவே இளவரசர் இங்கே வந்திருக்கிறார். மேலும் நேற்று நடந்த



சம்பவத்தைப் பற்றியும் அவர் உன்னைக் கேட்பார்" என்றான்.

இராசேந்திர சோழர் புன்முறுவல் தவழத் தலையசைத்து வீரம்மாளை வரவேற்றார். வீரம்மாள் அவரை வணங்கி எழுந்தபோது அவள் விழிகள் ஒரு கணம் அவர் விழிகளை அசையாது நோக்கின. நாணம் அவளைச் சூழ்ந்து கொண்டது. அவள் உடல் மெல்ல நடுங்கியது. உள்ளே ஓடிச் சென்று விடலாமா என்று ஒருகணம் எண்ணினாள்.

"வீரம்மா! நாட்டியப் பயிற்சி எல்லாம் எப்படி இருக்கிறது?" என்று இராசேந்திர சோழர் கேட்டார்.

அவள் தலைகுனிந்து நின்றாள். பிறகு அவள் மெல்ல அவரை நோக்கினாள். இப்போது இராசேந்திர சோழர் அவளைப் பார்க்காமல் அருகிலிருந்த அதிகாரியை நோக்கி, "கருவூர் சித்தரைப் பற்றிய சேதி ஏதாவது கிடைத்ததா? சித்தர் இப்போது எங்கே இருக்கிறார்?" என்று கேட்டு மீண்டும் வீரம்மாளை நோக்கினார்.

இவ்வளவு நேரம் அவரையே கடைவிழிகளால் நோக்கியவாறிருந்த வீரம்மாள், இளவரசர் தன்னைப் பார்க்கிறார் என்றறிந்தவுடன் நாணித் தலைகுனிநதாள்.

இராசேந்திரர் இருகரம் கொட்டி, "வீரம்மா! திருக்குறளுக்கு ஏற்றவாறு அபிநயம் செய்கிறாய். இதை யாரிடம் கற்றாய்?" என்று கேட்டுப் பெரிதாகச் சிரித்தார்.

"அங்குக் கூடியிருந்தவர்களுக்குப் புரியவில்லை, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"திருக்குறளில் ஒரு குறள், நேற்று சிவபண்டிதரிடம் படித்தேன். அந்தக் குறளுக்கு ஏற்ப உணர்ச்சியை வெளிப் படுத்தி ஆடினால் எப்படி இருக்கும் என நினைத்தேன். வீரம்மாள் இப்போது அதை நிறைவேற்றி விட்டாள்" என்றார்.இளவரசர்

வீரம்மாளுக்கு ஒன்றும் புரியவில்லை. அங்கிருந்தவர் களுக்கும் புரியவில்லை.

"குறிப்பறிதல் என்ற அதிகாரத்தைப் பாடக் கேட்டேன். அதில் ஒரு குறள்.

**'யான் நோக்கும் கால் நிலன் நோக்கும் நோக்காக்கால்**

**தான் நோக்கி மெல்ல நகும்'.**

இதைக் கூறிவிட்டு நிறுத்தியவுடன் அங்கிருந்தவர்களுக்குப் புரிந்துவிட்டது.

"வீரம்மா! சிதம்பரத்தில் மடத்திலேயே நாட்டியம் கற்றுத்தர ஏற்பாடு செய்து விட்டேன். இதற்கிடையில், நாட்டியக் கலையில் தேர்ந்த ஒரு மூதாட்டியைச் சந்திக்கப் போகிறோம். அவர்கள் உனக்கு நாட்டியக் கலை நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பார்கள். அமைதியாக சில காலம் அங்கே இருக்கலாம்" என்றார்.

அங்கே சிறிது நேரம் அமைதி நிலவியது.

"வீரம்மா! உனக்கு வேதனை ஏற்படும்படியான சம்பவம் ஒன்று நேர்ந்ததாகக் கேள்விப்பட்டேன். சோழ நாட்டிலும் இப்படி நடந்ததென்றால்..." என்று கூறும்போது அதில் வருத்தம் நிறைந்திருந்தது.

வீரம்மாள் வியப்புடன் அவரை நோக்கினாள். "சம்பவம் ஒன்று நேர்ந்ததாகக் கேள்விப்பட்டேன் என்கிறாரே - அந்த ஆபத்திலிருந்து என்னை இவர் காப்பாற்றவில்லையா? அங்கு வந்தது யார்? அங்கு நடந்தவற்றை உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறக்கூடியவர் யார்?" என்று எண்ணிக் கலங்கிக் கொண்டிருக்கும்போது இராசேந்திர சோழர், "வீரம்மா! நேற்று முன்தினம் நடந்தவற்றை ஒளிவுமறைவின்றிச் சொல்லிவிடு. தவறு செய்பவர், செய்தவர் யாராயிருந்தாலும் அவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது" என்றார்.

வீரம்மாள் சுற்று முற்றும் பார்த்தாள். தன் சகோதரனைப் பார்த்தாள். நடந்தவற்றை விவரிக்குமாறு அவன் சைகை செய்தான்.

வீரம்மாள் சொல்லப் போவதில்லை என்று தலையசைத்தாள். நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும் என்றெண்ணி வீரம்மாள் மௌனமாக நின்றாள்.

"வீரம்மா! உன்னிடம் முறை தவறி நடந்தவன், யார் என்று எனக்குத் தெரியும். என் இளைய மகன். அவன் அங்கே எப்படி வந்தான், ஏன் வந்தான்? விவரமாகச் சொல்லு" என்றார். குரலில் கடுமை இருந்தது.

வீரம்மாளின் மௌனம் நீடித்தது. இராசேந்திர சோழர் வீரம்மாளை நோக்கி, "நடந்தவற்றைச் சொல்லக் கூசுகிறாய். நான் எல்லாவற்றையும் கேட்டறிந்து விட்டேன். ஒரு தலைப்பட்சமாக அறிதல் சரியன்று. குற்றச்சாட்டை



விசாரிக்கும்போது இருதரப்பு வாதங்களையும் அறிதல் முக்கியம். சுந்தரன் சொல்லுகிறானாம். 'நான் நடனக் கலையின் மீதுள்ள ஆர்வத்தில்தான் அங்கு சென்றேன்' என்று. உன் எதிரிலேயே விசாரிப்போம்" என்று கூறி, சுந்தரனை அழைத்து வரக் கட்டளையிட்டார்.

"ஐயோ, வேண்டாம்! நடந்தது நடந்துவிட்டது. சுந்தரனுடைய முறை தவறிய செய்கைக்குத் தண்டனை கிடைத்துவிட்டது. இன்னும் என்ன விசாரணை - தண்டனை?" என்று வீரம்மாள் கவலையுடன் எண்ணினாள்.

சுந்தரனைக் கைத்தாங்கலாக இருவர் அழைத்து வந்தார்கள். சுந்தரன் நிற்க முடியாமல் தலைகுனிந்தவாறு நின்றான்.

வீரம்மாளின் உடல் இலேசாக நடுங்கியது. சுந்தரனைக் காண விரும்பவில்லை. அங்கே இருக்கவும் அவள் விரும்பவில்லை. அறைக்குள் ஓடி மறைந்து விடலாமா என எண்ணினாள்.

"வீரம்மா! நடந்தவற்றை நீ சொல்ல விரும்பவில்லை. ஒரு பெண் தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தன் வாயால் எடுத்துச் சொல்லமாட்டாள். நடந்தவற்றைக் கண்கூடாகக் கண்டவர் கூறுவதைக் கேட்கலாம்" என்று அருகிலிருந்த அதிகாரியிடம் ஏதோ கூறினார். சிறிது நேரத்தில் அங்கே கம்பீரமாக நுழைந்தான் இராசேந்திர சோழரின் மூத்த மகன் இராசாதிராசன்.

வீரம்மாள் திகைத்தாள். உட்கார்ந்திருந்த இராசேந்திரரையும், குற்றம் புரிந்துவிட்டுத் தலைகுனிந்து நிற்கும் சுந்தரனையும், அங்கு வந்து நிற்கும் இராசதிராசனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

ஆம், மூன்று இராசேந்திரர்கள் அங்கே! சற்றுக் கூர்ந்து கவனித்தால்தான் வயது வித்தியாசத்தினால் ஏற்பட்ட தோற்ற முதுமையும், இளமையும் மூவருக்கும் உள்ள வேறுபாடும் தெரியவரும்.

அந்தச் சிறு கூடத்திலிருந்த அதிரிகாரிகள், முத்துக்குமரன் அனைவரும் இராசாதிராசனை வணங்கினார்கள்.

இராசாதிராசனைக் கண்ட சுந்தரன் 'அண்ணா' என்று அலறினான்.

இராசாதிராசன் நடந்தவற்றை விவரிக்கத் தொடங்கு முன்பு சுந்தரன், விழிநீர் மழைநீர் போல் கொட்ட, "என் நீச

செயலைப் பொருத்தருளுங்கள்" என்று கூறி இராசேந்திர சோழரின் காலில் வீழ்ந்தான்.

"நீ விவரமாகச் சொல் இராசாதிராசா" என்பது போல் சைகை செய்தார் இராசேந்திரன்.

"சோழநாட்டுப் பழம் பெருமையை, பண்பை, தர்மத்தை, ஒழுக்கத்தைக் குலைக்கும் செயலைப் புரிபவர்கள் யாரா யிருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. என் அன்புத் தம்பி சுந்தரனின் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் முறையோடு இல்லை என்பதை நான் கேள்விப்பட்டு வந்தேன். தஞ்சையிலேயே தங்கியிருக்க முடியாததால் தந்தையாலோ அல்லது என்னாலோ அவனைக் கண்டிக்க முடியவில்லை. முத்துக்குமரனின் சகோதரி வீரம்மாளிடம் தவறாக நடந்து கொள்கிறான் என் இளவல் என்பதைக் கேள்விப்பட்டேன். மூங்கில் துறை கிராமத்திற்கு அவன் சென்றிருக்கிறான் என்ப தறிந்து நான் மாறு வேடத்தில் சென்றேன். என் தந்தை யின் மரியாதைக்கும், மதிப்புக்கும் பாத்திரமான முத்துக் குமரனின் தங்கையிடமே தவறாக நடந்து கொள்ள முயன்றபோது நான் குறுக்கிட்டேன், தலையிட்டேன்.. என் கரத்தால் அவனுக்குக் கிடைத்த பரிசு வாழ்நாள் முழுமையும் மறக்க முடியாத பரிசாகும்! வேறு தண்டனையே வேண்டாம் என்று கூறுமளவிற்கு என் மெய்க்காப்பாளர்கள் அவனை நொறுக்கி எடுத்து விட் டார்கள். என் இளவல் சார்பில் நடனக் கலை அரசியிடம் நான் மன்னிப்புக் கேட்கிறேன்" என்று கூறி இராசாதி ராசன் தலை வணங்கினார்.

சுந்தரன் இன்னும் அழுது கொண்டிருந்தான். அவனால் நிற்கக்கூட முடியவில்லை. தன் தந்தையின் பாதத்தில் வீழ்ந்து வணங்கியவனை மெல்லத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் திடீரென, "தந்தையே! நான் திருந்திவிட்டேன். அண்ணா! தக்க சமயத்தில் வந்தீர்கள். என்னைக் காப்பாற்றினீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிடில் மிகப்பெரிய பாதகத்தைப் புரிந்திருப்பேன். அம்மா - என்னைப் பொருத்தருளுங்கள்" என்று கூறி, வீரம்மாளின் காலில் தடாரென வீழ்ந்து விட்டான் சுந்தரன்.



'அம்மா - அம்மா - அம்மா' என்ற சொற்கள் வீரம் மாளின் செவிகளில் வீழ்ந்து அவள் உடலெங்கும் பாய்ந்து பரவி அவளைச் சிலிர்க்கச் செய்தன.



# 14. பாண்டிய இளைஞர்கள் இலட்சியம்

சோழர்களிடம் இழந்த தங்கள் திருநாட்டை மீண்டும் அடைந்துவிடுவது என்று பாண்டிய நாட்டு இளைஞர்கள் கங்கணம் கட்டிக் கொண்டனர்! வாரிசு உரிமைக்குப் போட்டியிருந்தாலும், சோழர்களை மதுரையினின்று விரட்டுவதில் அவர்கள் ஒன்றுபட்டனர்.

மதுரை மாளிகையைப் புதுப்பித்துச் சிறப்பாக நிர்மாணிக்க சோழநாட்டிலிருந்து சிற்பிகள் வந்திருக்கி றார்கள் என்ற செய்தி கிடைத்தவுடனேயே சிற்பிகள் குழுவைத் தீர்த்துக்கட்டி சோழநாட்டுக்குக் கலைஞர்கள் ஆதரவு அற்றுப் போகுமாறு செய்து விடவேண்டும் என்றும் திட்டமிட்டார்கள். அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சிற்பிகளை இயங்க விடாமல் சிறைப்படுத்தினார்கள்.

பௌர்ணமி அன்று கால்கோள் விழா நடத்தும் முன்பே சிற்பிகளை வெளியூர்களுக்குத் தனித்தனியே கொண்டு சென்று அங்கே கொன்றுவிட வேண்டும் என்ற திட்டத்தைப் பற்றிக் கலந்து யோசிக்க இளைஞர்களும், அவர்களுக்கு வழிகாட்டியாகச் சிலரும் கூடிப் பேசினர்.

சிற்பிகளைக் கொல்லக் கூடாது என்று ஒரு சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

"தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சிற்பிசள் ஒரு சேர இங்கே வந்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பை நாம் நழுவவிடக்கூடாது" என்று ஒருவர் கூறினார்.

"சிற்பிகளை அழிப்பதால் இழந்த பாண்டிய நாட்டை நாம் மீட்க முடியுமா?" என்று ஒருவர் கேட்டார்.

"சோழர்களின், கலை பாண்டிய நாட்டில் பரவுவதைத் தடுப்பது நம் போராட்டத்தில் ஓர் அங்கம்" என்றார் மற்றொருவர்.

"சோழ நாட்டைச் சுற்றிப் பார்த்திருக்கிறீர்களா? வடக்கே காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே காவிக்கரை வரை ஒவ்வோர் ஊரிலும் ஒரு கோயில். ஒவ்வொரு கோயிலும் ஒரு சிற்பக் களஞ்சியமாகத் திகழ்கிறது. தஞ்சையைப் போல் பல்வேறு சிற்ப அற்புதங்கள் நிறைந்த மற்றொரு கோயிலைக் கட்ட இளவரசர் இராசேந்திரன் முயல்வதாகக கேள்வி. மேலும் ஒரு செய்தி தெரியுமா? மதுரையிலும், பாண்டிய நாட்டின் மற்ற பகுதியிலும் சோழர்களின் கலையைப் பரப்புவது இராசேந்திரனின் திட்டம். அதற்காகத்தான் சிற்பிகள் மதுரைக்கு வந்துள்ளனர்" என்று ஓரளவுக்கு விவரம் தெரிந்தவர் கூறினர்.

"இப்போது மதுரையில் மாளிகை அமைப்பதில் இராசேந்திரனுக்குத் துளிக்கூட எண்ணமில்லை. அவர் உத்தரவின்றியே சிற்பிகள் மதுரை வந்துவிட்டனர்" என்றார்,ஒருவர்.

பலவாறு அங்குப் பேசப்பட்டன. சிற்பிகளைக் கொன்று விடக்கூடாது என்ற கருத்துக்கு ஆதரவு கூடியது. தனி அறையில் அடைத்து வைத்திருக்கும் சிற்பிகளை என்ன செய்யலாம்? என்ற பிரச்னை அலை மோதிற்று.

"சிற்பிகளின் தலைவரிடம் ஓர் உறுதிமொழி கேட்போம்!"

"எதைப் பற்றி?"

"மதுரை மாளிகையை நிர்மாணிப்பதில்லை என்று உறுதியைத் தருமாறு கேட்போம். அவ்வாறு உறுதியளித்தால் நாம் அவர்களுக்கு உயிர்ப்பிச்சை அளிப்போம்".

"அப்படியென்றால் எந்த வேலையும் செய்யாமல் அவர்களுக்குச் சோறு போடுவது சரியாகுமா?"

"மீண்டும் சோழ நாட்டிற்கே செல்லுமாறு வற்புறுத்துவோம்".

"அதனால் நமக்கு என்ன ஆதாயம்?"

"மதுரை மாளிகை அமைக்கப்படுவது தடுக்கப்படுகிறதே. அதுதான் முதல் வெற்றி".

"சோழநாட்டிற்குத் திருப்பி அனுப்பாமலேயே அவர்கள் பணிக்குத் தடை விதிக்கலாம்".



"பாண்டிய நாட்டின் தென் பகுதிக்கு அவர்களை அனுப்பிவைத்து, கோயில் திருப்பணிகளில் அவர்களை ஈடுபடுத்தலாம். மதுரை கூடலழகர் கோயிலையும் சொக்கநாதர் கோயிலையும் புதுப்பிக்கலாம்".

"அதற்கு வேண்டிய பொருளை யார் தருவது? மதுரைக் கருவூலம், சோழர்கள் வசமல்லவா இருக்கிறது?"

"கருவூலத்தைக் கைப்பற்றலாம், மதுரை மகுடத்தை மீட்பதில் ஈடுபடாமல் சிற்பிகளைப் பற்றிச் சிந்திப்பது நம் முயற்சியைத் தடுத்துவிடும்".

அவர்கள் பேச்சு முடியவில்லை. சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது.

அப்போது ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் விரைந்து வந்து, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டான்.

"மதுரை மாளிகை கட்டுவதற்காக வந்துள்ள சிற்பிகளைத் தடுத்துவிட்டோம். சரி. சிற்பிகளைக் காணாமல் மதுரையிலுள்ள சோழப் படைவீரர்கள் எந்தக் கணமும் தேடி வரலாம். அவர்களை எதிர்த்துப் போரிட நாம் இப்போதே ஆயத்தங்கள் செய்வோம். வீணே பேசிப் பொழுதைக் கழிக்க வேண்டாம். திருப்பரங்குன்றம் மலைக் குகையில் நாம் கூட வேண்டும் என்று முடிவாகியிருக்கிறது. உடனே புறப்படுங்கள்" என்றான், புதிதாக வந்தவன்.

சிற்பிகளை விட்டுவிட்டு, திருப்பரங்குன்றத்தில் கூடிப் பேசி, பாண்டிய இளைஞர்களும் ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்களும் புறப்பட்டுச் சென்றனர்.

அன்ன ஆகாரமும் குடிக்க நீருமின்றி சிற்பிகள் அறைக்குள்ளே வாடினர். குமுதமும், மாணிக்கமும் செய்வதறியாது திகைத்தனர். பகல் பொழுது ஒரு யுகமாகக் கழிந்தது.

மறுநாள் உச்சி வேளைக்குப் பிறகு சிற்பிகள் அடைபட்டிருந்த கதவுகள் திறக்கப்பட்டன. குமுதமும், மாணிககமும் இருந்த கதவும் திறக்கப்பட்டது. சிற்பிகளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவர்கள் குளிப்பதற்கும், ஆடைகளைத் துவைப்பதற்கும் வேண்டிய உதவிகள் செய்யப்பட்டன. பசியால் வாடி, அழுது அழுது

சோர்ந்து போன குழந்தைகளுக்குப் பால் வழங்கப்பட்டது. சோறும், குழம்பும், மோரும் தரப்பட்டன. சிற்பிகள் ஆனந்தக் கூத்தாடினர்.

இரவு நெருங்குவதற்கு முன்பு, பாண்டிய நாட்டு இளைஞர்கள் அங்கு வந்தனர். அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். அவர்களிடம் மாணிக்கம் கேட்டான்.

"மதுரையில் பெரிய மாளிகை ஒன்றைக் கட்டுவதற்காக நாங்கள் தஞ்சைபுரியிலிருந்து வந்தோம். எங்களைச் சிறு அறையில் ஏன் அடைத்து வைத்தீர்கள்? இப்போது விடுவித்து, பெரும் உபசாரங்களும் செய்கிறீர்களே, ஏன்? இனி என்ன செய்யப் போகிறீர்கள்?"

"நேற்றுவரை எங்கள் திட்டம், உங்களை நரபலி இடுவதென்பது ,இன்று நிலைமை மாறிவிட்டது. நாங்கள் சொல்லப் போவது உங்களுக்கு வேதனை தருவதாக இருக்கும். துக்கமாகவும் இருக்கும். இன்று காலை சோழ வீரர்களுடன் எங்களுக்கு ஏற்பட்ட மோதலில் பல சோழ வீரர்கள் கொல்லப்பட்டனர்".

இதைக் கேட்டு சிற்பிகள் அதிர்ச்சியடைந்தனர். மணி சேகரன் துள்ளி எழுந்தான்.

"சோழவீரர்களுக்கும் உங்களுக்கும் ஏன் மோதல் ஏற்பட்டது? இந்தச் செய்தியை எங்களிடம் ஏன் சொல் கிறீர்கள்? எங்களை அழைத்து வந்த தலைமைச் சிற்பியை நாங்கள் இன்னும் சந்திக்கவில்லை. எங்களைப் பலியிடுவ தென்றால் தாமதப்படுத்தாமல் உடனே கொன்று விடுங்கள். பெண்களையும், குழந்தைகளையும் சேர்த்தே கொன்று விடுங்கள்" என்று சீறினான்.

பாண்டிய இளைஞர்கள் அவனைப் பார்த்து மெல்ல நகைத்து, "என் சகோதரனே! அமைதியாயிரு. நியாயமாக ஆத்திரமும், கோபமும் எங்களுக்குத்தான் ஏற்பட வேண்டும். சுதந்தரம், அடிமை, விடுதலை என்பதெல் லாம் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. கலை ஒன்றுதான் உங்கள் இலட்சியம். எங்கள் நாட்டை மீண்டும் சோழர்கள் பிடியிலிருந்து விடுவிக்கப் போராடும் எங்கள் இலட்சியத்திற்குக் குறுக்கே நிற்கும் எவரையும் இவ்வுலகி லிருந்து அனுப்புவதுதான் எங்கள் முதல் வேலை. ஆனால், கலைஞர்களைக் கொல்வது நியாயமல்ல. உங்களுக்கு இரண்டு யோசனைகள் கூறுகிறோம். ஒன்று,



உடனே மதுரையை விட்டு சோழ நாட்டிற்குத் திரும்பிச் சென்று விடுங்கள். மற்றொன்று நீங்கள் சிறு சிறு குழுவினராகப் பிரிந்து பாண்டிய நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லுங்கள். அங்குள்ள கோயில்களைப் புதுப்பித்து உங்கள் கைவண்ணத்தால் வனப்பு மிகச் செய்யுங்கள். மதுரை மீட்கப்பட்ட பிறகு உங்களுக்குப் பொன்னும் பொருளும் பரிசாக வழங்கப்படும். நன்றாக யோசித்து முடிவு கூறுங்கள். நாளைக் காலையில் வரு கிறோம்" என்று கூறி, இளைஞர்கள் புறப்பட்டுச் சென் றனர்.

சிறிது நேரத்திற்கு முன்பு அவர்களிடையே மலர்ந்த மகிழ்ச்சி மறைந்தது. இரவு உறங்காமல் யோசித்தனர். ஒற்றுமையாக ஒரு முடிவும் அவர்களால் எடுக்க முடியவில்லை.

'பாண்டிய நாட்டிலேயே தங்கிவிடுவோம்' என்று பல சிற்பிகள் கூறினர்.

"அதுதான் சரியான முடிவு" என்றாள் குமுதம்.

"இல்லை இல்லை. நான் சோழநாட்டிற்குச் செல்ல முடிவு செய்து விட்டேன்" என்றான் மாணிக்கம். அவன் முடிவைக் கேட்டு குமுதம் திடுக்கிட்டாள்.





# 15. சித்தரின் அருள்

மாணிக்க சேகரன் ஒருவருக்கும் சொல்லாமல் மறுநாள் காலை மதுரையிலிருந்து புறப்பட்டுவிட்டான். குமுதம் பலப்பல சொல்லிப் பார்த்தாள். மதுரையிலேயே தங்கி விடுவதால் ஏற்படும் நன்மைகளை விளக்கினாள். மாணிக்க சேகரன் தன் முடிவில் உறுதியாக இருந்தான்.

"நான் மதுரையிலேயே தங்கிவிடுவதாக முடிவு செய்து விட்டேன்" என்று குமுதம் தன் உறுதியான முடிவைக் கோபப்படாமல் அவன் தோளில் தன் முகத்தை மெல்ல அழுத்தியவாறு கூறினாள்.

"உன் முடிவைத் தடுக்க நான் யார்?" என்றான், மாணிக்கம்.

குமுதம் இப்போது அவன் எதிரே வந்தமர்ந்து அவன் விழிகளை உற்றுப் பார்த்து, "நீங்கள் யார் என்று என் வாயால் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?" என்று கேட்டாள். கோபம் இருந்தாலும் குழைவும் இருந்தது, அவள் குரலில்.

"ஆமாம்; உன் தந்தை மற்றும் உன் உறவினர்கள், நெடுங்காலம் பழகிய நண்பர்களான சிற்பிகளை விட்டு விட்டு என்னுடன் நீ வருவது நியாயமன்று. உன் முடிவை நான் தடுப்பதும் முறையன்று. அதனால்தான், என்னையே நான் யார் என்று கேட்டுக் கொண்டேன்" என்று மாணிக்கம் நிதானமாகக் கூறினான்.

"மதுரையை விட்டு ஏன் அவர்கள் வர மறுக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?" குமுதம் கேட்டாள்.



"தெரியாது; ஆனால், ஏன் வரவேண்டும் என்பது மட்டும் எனக்குத் தெரியும்! கலைஞர்களுக்கு நாடு, மதம், அரசர் என்பனவெல்லாம் முக்கியமல்ல. இறைவன் தங்களுக்குத் தந்த கலையை நாட்டிற்கு அர்ப்பணம் செய்வதே அவர்கள் இலட்சியமாக இருக்கவேண்டும்".

குமுதம் அவன் முகத்தை உற்று நோக்கியவாறு குறும்புச் சிரிப்புடன், "நன்றாகப் பேசுகிறீர்கள். உண்மைக் கலைஞர் யார் என்பதற்கு விளக்க உரையைக் கூறி விட்டீர்கள். ஆனால் எடுத்த பணியை முடிக்காமல் திரும்புவது மட்டும் கலைஞர்களுக்கு அழகா?" என்று கேட்டாள்.

"நீங்கள் செய்யவிருக்கும் பணியைத் தடுக்க ஒரு கூட்டம் முயல்கிறது. அவர்கள் கோரிக்கையை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று விதிக்கும் நிபந்தனையை ஏற்பது மட்டும் கலைஞர்களுக்கு அழகா? பாண்டிய நாட்டின் பட்டி தொட்டிகளுக்கு உங்களைச் செல்லச் சொல்கிறார்கள். அங்கே திருப்பணியைச் செய்யச் சொல் கிறார்கள். நாம், சோழ மன்னரின் கட்டளையை ஏற்று வந்தோம். இப்போது பாண்டிய நாட்டவர்கள் கட்டளையை ஏற்கிறோம். பாண்டிய மன்னரின் கட்டளை என்று சொல்லிவிட முடியாது".

மாணிக்க சேகரன் கூறிவரும்போது குமுதம் குறுக் கிட்டு, "மதுரை நகரில் நாம் சிறைப்படுத்தப்பட்டோம். நம்மை விடுவிக்க சோழ வீரர்கள் வரவில்லை. மதுரைக்கு நாம் வந்ததை அவர்கள் அறியமாட்டார்களா? வேற்று நாட்டில் வந்து தங்கியிருக்கும் சோழ நாட்டு ஒற்றர் படையினருக்கு இந்த இரண்டு நாள்களாக நாம் சிறைப் பட்டிருப்பது தெரியாதா? ஏன் நம்மைக் காப்பாற்ற ஓடிவரவில்லை? நம்மைக் காப்பாற்றுபவர்களின் சொற் படி நடப்பதுதான் விவேகம்" என்றாள்.

சற்று நேரம் அங்கு அமைதி நிலவியது. மாணிக்க சேகரன் உறுதியான குரலில் பேசினான்: "இல்லை, இல்லை. நான் இந்தப் புரட்சி இளைஞர்களுக்குப் பயப் படமாட்டேன். நான் சோழ நாட்டிற்குச் செல்கிறேன். இராசராச சோழ சக்கரவர்த்திகளைச் சந்திக்கிறேன்".

மாணிக்க சேகரன் குமுதத்திடம் சொல்லாமல், ஒரு வரும் அறியாமல் புறப்பட்டுவிட்டான். அவன் மெல்ல நடந்தும், விரைந்து நடந்தும் பண்டங்களை இறக்கிவிட்டுத்

திரும்பி வரும் வண்டிகளில் அமர்ந்தும் சில நாள்களில் விராலிமலையை அடைந்தான். இரண்டு நாள்கள் அங்கே தங்கி ஓய்வெடுக்காவிடில் ஓரடிகூட எடுத்து நடக்க முடியாது என்று உணர்ந்த அவன் மண்டபம் ஒன்றில் படுத்துக் கொண்டான்.





விராலிமலையின் அழகு அவனைக் கவர்ந்தது. மலையில் பூத்திருந்த காட்டு மலர்களின் வண்ணங்களில் மனத்தைப் பறிகொடுத்தான். 'கேக்கா' என்று கூவிக்கூவி மயில்கள் அசைந்து நடக்கும் எழில் அவன் மனத்தை



ஈர்த்தது. மயில்களுடன் அவன் நடந்தான். காலை இளம் வெயில் மெல்லப் படர்ந்து வரும்போது வசந்த காற்று அந்தக் குன்றின் செடிகொடி மரங்களைத் தடவிச் செல்லும்போது மயில்கள் தோகை அசைய மெல்ல நடந்து வரும். பிறகு தன் தோகையை மெல்ல விரிக்கும். கதிர் ஒளியில் நீலமும், பச்சையும் கலந்த தோகையின் பீலி களின் வண்ணம், நூறு நூறு கண்ணபிரானின் மகுடத்தை நினைவூட்டும்.

அசைந்து அசைந்து மஞ்ஞைகள் நடந்து வரும்போது அவனுக்குக் குமுதத்தின் நினைவு தோன்றும். அவளிடம் சொல்லாமல் வந்தது நியாயமா என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்வான். சிற்பப் பணிகளின்போது சந்தித்து மௌனமாக வளர்ந்த காதலை ஒரு கணத்தில் உதறிவிட்டு வந்தோமே என்ற வேதனை அவனுள் எழுந்தது.

விராலிமலையில் உலாவும் மஞ்ஞைக் கூட்டங்கள் எல் லாம் மங்கையர் கூட்டமாக அவனுக்குக் காட்சியளித்தன. அந்தக் குன்றைச் சுற்றி வந்தான். கால் துவளும் வரை, உடலில் சோர்வு ஏற்படும் வரை, பசியும் தாகமும் ஏற் படும் வரை, சுற்றி அலைந்தபோது, குகை போன்ற பாறை களின் நடுவே, சித்தர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் எதிரே பச்சிலைகள் குவிந்திருந்தன. மனித சஞ்சாரமற்ற அந்தப் பகுதியில், சித்தர் தனியே என்ன செய்து கொண் டிருக்கிறார் என்று பார்க்கும் ஆவல் அவனிடம் எழுந்தது. மரத்தின் மறைவில் நின்று பார்த்தான்.

முதுமை கவ்விய அந்த நிலையிலும் சித்தர் சுறுசுறுப் பாக அங்குமிங்கும் அலைந்து செடிகளின் இலைகளைப் பறித்துச் சேகரித்துச் சேமித்தார்.

சற்று இளைப்பாறி, அருகே இருந்த மரப்பெட்டியைத் திறந்து ஏதோ ஒன்றை எடுத்து மென்று தின்றுவிட்டு பச்சிலைத் தழைகளைப் பாறைத் தொட்டியில் இட்டார். இரும்பு உலக்கை ஒன்றை எடுத்து வந்து தழைகளைக் குத்தினார். சிறிது நேரம் அவ்வாறு செய்த பிறகு, தொட்டியில் உள்ள சாற்றை எடுத்துப் பார்த்தார். சிறு துணியை எடுத்து, அதில் பச்சிலைக் குழம்பைத் தோய்த்துப் பாறையின் மீது தடவினார். மரத்தின் மறைவி லிருந்து பார்த்த மாணிக்க சேகரனுக்கு என்ன நடக்கிறது என்று சரியாகத் தெரியவில்லை. பிறகு, அவர் தனக்குத்



தானே ஏதோ பேசிக் கொண்டார். பிறகு, ஓய்வாகப் பாறையின் மீது உட்கார்ந்து கொண்டார்.

மாணிக்க சேகரனுக்கு ஆவல் அதிகமாகியது. அவன், சித்தர் இருக்குமிடம் நோக்கிச் சென்று அவர் பாதங்களில் பணிந்து எழுந்து நின்றான்.

"நீ யாரப்பா?" என்று அவர் கேட்பாரென்று நினைத் தான். அமைதியான அந்த இடத்திற்கு அவன் வந்த தெப்படி என்று வினவுவார் என்று எண்ணினான். சீற்றங்கொள்வார் என்று எதிர்பார்த்தான்.

சித்தர் அவனை ஒரு கணம் பாதம் முதல் தலை வரை பார்த்தார். தன்னருகே இருந்த மரப்பெட்டியைத் திறந்து சிறு உருண்டை ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார்.

தன்னையே பிரமிப்புடன் பார்த்தவாறிருந்த மாணிக்க சேகரனை நோக்கி, 'உம் எடுத்துக் கொள்' என்று சைகை செய்தார். அது கண்டிப்பும் கட்டளையுமாக விழிகள் மூலம் வெளிப்பட்டன.

அவரிடமிருந்து மூலிகை உருண்டையை எடுத்துக் கொண்டான். அவன் கையை நீட்டச் செய்து அவர் மேலிருந்து உருண்டையை அளித்தார். அவன் உடனே விழுங்காமல் அதையே சற்று நேரம் உற்றுப் பார்த்தான்.

அவரிடமிருந்து அதட்டல் போன்ற ஓர் உறுமல் வெளிப்பட்டது. மெலிந்த அந்த திரேகத்திலிருந்து அப்படி யோர் ஒலியா? அடர்ந்த வெண்தாடி மீசைக்குள் மறைந் திருந்த உதடுகளிலிருந்து இப்போது சொற்கள் வெளிப் பட்டன.

"தாமதிக்காமல், வாயில் போட்டு மென்று விழுங்கிவிடு".

மாணிக்க சேகரன் அவர் சொல்லிய வண்ணம் செய் தான்.

கசப்பும், புளிப்பும் கலந்த ருசியுடைய அந்த உருண்டை பல மூலிகைகளால் ஆனது என்பதை உணர்ந்தான். அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்த சித்தர் தன் பணியைத் தொடரலானார்.

அவருக்கு என்ன வயதிருக்கும்? அவன் சிந்திக்க லானான். அந்தச் சிறு குன்றில் தன்னந்தனியே அவர் என்ன செய்கிறார் என்றறிய ஆவல் கொண்டான். அவர் சிறு இரும்பு உலக்கையால் பச்சிலைகளை மசித்துக் கொண்டிருப்பது எதற்காக என்று தெரிந்து கொள்ளத்

துடித்தான். மெல்ல அவர் அருகே சென்றான். இதுவரை அவனுடலில் இருந்த களைப்பு மெல்ல விலகியது போல் தோன்றியது.

இரண்டு மூன்று மயில்கள் மெல்ல அசைந்தாடியவாறு குறுக்கும் நெடுக்குமாகச் சென்றன. மயிலொன்று அவர் அருகே வந்து உரிமையுடன் அலகால் அவர் முதுகில் உரசியது. அவர் திரும்பிப் பார்த்து, அந்த மயிலை அணைத்துக் கொண்டார். ஒரு மயில் மாணிக்க சேகரன் அருகே வந்து, தலையைச் சாய்த்து அவனை நோக்கியது. 'யார் நீ'என்று கேட்பதுபோல் தோன்றியது.

"அழகிய மயிலே அருகே வா
அணைத்தொரு முத்தும் அளிப்பேன் வா!"

என்று பாடவேண்டும் போல் தோன்றியது. "நாம் வற்புறுத்தியிருந்தால் குமுதமும் உடன் வந்திருப்பாள், அழைத்து வராமல் போனோமே" என்று இப்போது வருத்தப்பட்டான்.

நெருங்கி வந்த மயிலிடம் பாசம் காட்டினான். அதன் நெடிய கழுத்தை வருடினான். அதில் அன்பும் பாசமும் கலந்திருப்பதை அந்த மயில் புரிந்து கொண்டது போலும்! நெடுநாள் பழகியதுபோல் அவன் தோள்களில் தன்னைப் பிணைத்தது.

அவன் மேனி சிலிர்த்தது. மயிலின் தீண்டுதல் குமுதத்துடன் நெருங்கிய உணர்வை ஏற்படுத்தியது. ஒருநாள்கூட அவன் அவளை நெருங்கியதில்லை. தொட்டதுமில்லை. பிறகு எப்படித் தெரியும் அவள் ஸ்பரிசம் இப்படித் தானிருக்குமென்று.

சித்தர் அவனையே நோக்கியவாறிருந்தார். அவர் இப்போது பேசினார்: "களைப்பு நீங்கியதா?"

அந்த வார்த்தைகள் கந்தர்வர்கள் கானம்போல் கேட்டது. நாரதர் கரமிருக்கும் யாழிலிருந்து எழுந்த ஓசை போலிருந்தது. கிண்கிணியொன்றைத் தட்டியதால் எழுந்த தாள சப்தம் போலிருந்தது.

மாணிக்க சேகரன் மெய் சிலிர்த்தது. நன்றியும் மரியாதையும் கலந்த விழிகளுடன் அவரை இமைக்காமல் நோக்கினான்.

"குளித்துப் பல நாள்களாகி விட்டதுபோல் தோன்றுகிறது. குளித்துவிட்டு வா".



அந்தச் சொற்களில் பாட்டனாரின் பாசம் கலந்திருந்தது. 'இந்தக் குன்றில் எங்கே போய்க் குளிப்பது' - அவன் நினைத்துக் கொண்டான்.

அவன் நினைத்ததை நொடியில் புரிந்து கொண்டவர் போல், "வா, என்னுடன் வா" என்று அவர் வழி காட்டி முன் செல்ல, அவன் பின் தொடர்ந்தான்.

குன்றின் நடுவே சுனை ஒன்று இருந்தது. காலை வெயிலில் பளிங்கு போல் சுனை நீர் அடிமட்டத்திலிருக்கும் பாறைவரை புலப்பட்டது. மீன்கள் துள்ளும் போது வெள்ளிக் கொலுசை, யாரோ அசைத்து அசைத்து நீந்துவது போன்ற பிரமை ஏற்பட்டது.

குமுதத்தின் பாதங்களில் அழகிய வெள்ளியால் செய்யப்பட்ட அணியைப் பார்த்திருக்கிறான். அதில் கோக்கப்பட்ட சின்னஞ்சிறு மணிகள் அவள் நடை பயிலுவதற்கு ஏற்ப ஒலிப்பதைப் பார்த்திருக்கிறான்.

"கனவு காண வேண்டியதுதான்; ஆனால் அதற்கும் நேரம் காலம் உண்டு. சுனையில் குளித்து விட்டு வா. பிறகு உன் கனவைப் பற்றிக் கேட்கிறேன்" என்று சித்தர் சொன்னபோது மாணிக்க சேகரன் உடல் மெல்ல நடுங்கியது. இவர் என்ன முக்காலும் உணர்ந்த சித்தரா? உள்ளத்திலுள்ளதை அறியும் திறம் படைத்த ஞானியா?

"ஒன்றும் யோசிக்காதே! சுனையில் துணிந்து குதித்து விடு. முதலில் 'சிலீர்' என்று எலும்புவரை குளிர்ச்சி ஊடுருவிப் பாயும். பிறகு சுனையை விட்டு வர மனமிராது. நம் வாழ்க்கையைப் போல்..." என்று அவர் கூறினார். அவர் நகைத்திருக்க வேண்டும்; வெண் தாடிக்குள் மறைந்திருந்த வெண்பற்கள் பளிச்சிட்டன.

'செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்' என்று அவன் நாச்சியார் திருமொழியைச் சொல்லிக் கொண்டான்.

சித்தர் வேகமாக இயங்கினார். மேலும் உடுத்தியிருந்த அங்கியை விரைவாகக் களைந்தார். செக்கச் சிவந்த மேனியுடன் முதுமைப் பருவத்தில் செவ்வேள் இருந்தால் எப்படி இருப்பாரோ அவ்வாறு, கதிரவன் ஒளியில் காட்சியளித்தார். அவர் உடலைச் சுற்றி ஓர் ஒளி வட்டம் சுழல்வதுபோல் அவனுக்குத் தோன்றியது.

"தம்பி! உனக்கு நீந்தத் தெரியுமா?" என்று கேட்டார். தெரியும் என்று கூறும் பாவனையில் தலையை அசைத்தான் மாணிக்க சேகரன்.

"அப்படியென்றால் என் பின்னால் வா" என்று கூறிக் கொண்டே சுனையின் மேடான பகுதிக்குச் சென்று சற்று நேரம் கண்களை மூடித் தியான நிலையில் இருந்தார். அவர் உதடுகள் முணு முணுத்தன. 'சிவ, சிவ' என்றுதான் அவர் சொல்லியிருக்க வேண்டும் என்பதை அவன் உணர்ந்தான்.

சித்தர் கரங்களைத் தலைக்குமேல் உயர்த்திப் பிறகு குனிந்து எழுந்து, வெண்பறவை ஒன்று ஆகாயத்திலிருந்து பூமிக்கு வேகமாகப் பாய்வதுபோல், சுனையில் பாய்ந்தார்.

மாணிக்க சேகரன் தன் ஆடைகளைக் களையாமல் அப்படியே குதித்தான். குட்டி மீன்களோடு மீன்களாக இருவரும் நீந்தினர். ஒரு சமயம் சித்தர் கைகளையும் கால்களையும் அசைக்காமல் நீர் மேல் மிதந்தார். மற்றொரு சமயம் நீரில் மூழ்கினார். நீண்ட நேரம் வெளிவரவில்லை. பிறகு, இங்குமங்கும் கவலையுடன் நீந்திக்கொண்டிருந்த மாணிக்க சேகரனின் அருகே வந்து அவன் கரங்களை இழுத்தார். திரும்புவதற்குள் அவனருகே தலையை நீட்டிச் சிரித்தார்.

தண்ணீரில் நனைந்திருந்த வெண் தாடி, மீசைக்கிடையே வெண் பற்கள் பளிச்சிட்டன.

"போதுமா, இன்னும் ஜலக்ரீடை செய்கிறாயா?" என்று கேட்டார். அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"சரி, இன்று போதும். மேலே ஏறுவோம்" என்று, சுனையைவிட்டு மேலே இளைஞனைப் போல் விரைந்து ஏறினார். ஆலமர விழுது ஒன்று சுனையின் பக்கப் பாறையை ஒட்டித் தாழ்ந்து அடிப்பாகம் வரை சென்றது. மிகவும் எளிதாக அவர் அதைப் பிடித்துக் கொண்டு இளைஞனைப் போல் ஏறினார். மாணிக்க சேகரன் திண்டாடினான்.

சுனையின் கரையிலிருந்து எட்டிப் பார்த்த சித்தர் சிறு குழந்தை போல் கைகொட்டிச் சிரித்தார். பிறகு, மீண்டும் சுனையில் குதித்து விழுதுகளைப் பற்றிக் கொண்டு தன்னைப் பிடித்துக் கொள்ளுமாறு கூறி கரைமீது



இலகுவாக ஏறினார். சித்தரின் இடுப்பைப் பற்றிக் கொண்டிருந்த மாணிக்க சேகரன் உடலில் ஜிவுஜிவு என்ற மெல்லிய அதிர்ச்சி பரவியது.

கரை ஏறிய பிறகு, "எப்படி அனுபவம்?" என்று கேட்டார் சித்தர், தாடியை உருவியவாறு. அவர் கண்களில் ஏற்பட்ட ஒளியை நேருக்கு நேர் அவனால் ஏற்க முடியவில்லை. அவர் திருப்பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்தான்.

அவர் அவனைத் தொட்டு எழுப்பியபோது உடல் முழுமையும் மீண்டும் ஒரு சக்தி பரவுவதை உணர்ந்தான்.

இவர் யார்? தேவலோகத்திலிருந்து பூமிக்கு வந்திருக்கும் தேவபுருடரா? தெய்விக சக்தி பெற்ற சித்தரா?

"தம்பி! என்ன சிந்திக்கிறாய்? மதுரையிலேயே மனம் சுற்றிச் சுற்றி வருகிறதா? உன் உறுதியைக் குலைக்கிறதா?" என்று கேட்டார்.

அவன் திடுக்கிட்டான். வார்த்தை வரவில்லை. 'ஆடையைப் பிழிந்து உலர வைத்துவிட்டு வா' என்றார்.

இப்போது அவனுக்குக் களைப்பு இல்லை. ஆனால் பசி எடுத்தது. உச்சி வேளை நெருங்கியது. மேல் அங்கியையும் அரை ஆடையையும் உலரப் போட்டுவிட்டு கோவணத்துடன் சித்தர் முன் நிற்க வெட்கப்பட்டவனாக மரத்தின் மறைவில் சென்ற அவனை நோக்கிச் சித்தர் வந்தார்.

"தம்பி! நீ வடிக்கும் சிற்பத்திற்கு ஆடை அணிவிக்கும் வரை அந்தச் சிற்பம் அம்மணமாக இருப்பதாக நினைக்கிறாயா?" என்று சித்தர் கேட்டார்.

"அம்மணம், பூரண ஆடை அணிந்திருத்தல் எல்லாம் நம் மனசைப் பொறுத்தது. பறவைகளும், உயிரினங்களும் அதைப் பற்றி நினைப்பதில்லை. மனம்தான் அணிகலனை விரும்புகிறது. தான் விரும்புவதை, தான் படைக்கும் சிற்பங்களுக்கும் சிற்பி அணிவிக்கிறான். சிற்பத்தில் ஆடை இருப்பதாக ஒரு பிரமையை ஏற்படுத்தியிருந்தாலும், மனிதர்கள் தமது நோக்கில் சிற்பத்தை அம்மணமாகக் கண்டு தங்களைப் போன்று ஆடை அணிவிக்கிறார்கள். தஞ்சைபுரி பெருவுடையாரைப் பார்த்திருக்கிறாயா? ஒருருவம் இல்லாத இலிங்கத்திற்கு ஆடை அணிவிக்கிறார்கள்! என்ன பேதைமை! உனக்குத் தெரியுமா? ஓ! நீ, அங்கே சிற்பப் பணி புரிந்தவனாயிற்றே! நான்

இராசராசனிடம் இதைப் பற்றிக் கேட்டேன்" என்று சொல்லிக் கொண்டே போனார்.

"நான் சிற்பி என்பதும், தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருப்பணியில் ஈடுபட்டவனென்பதும் இவருக்கு எப்படித் தெரிந்தது?" திறந்த வாய் மூடாமல் வியப்புடன் நோக்கினான், மாணிக்க சேகரன்.

சித்தர் குழந்தையைப் போல் சிரித்தர். "தம்பி! என்ன பார்க்கிறாய்? பெருவுடையார் கோயில் திருப்பணியில் உன்னைப் பார்த்திருக்கிறேன். நீ என்னைப் பார்த் திருக்கமாட்டாய். நீயும் பெரிய சிற்பியும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பீர்கள். தெய்வக்கலை மேதை களான உங்களை வாழ்த்தியபடியே இராசராசனும் நானும் செல்வோம். தலைமைச் சிற்பியின் மகள் உங்களுக்கு உதவுவதற்கு அடிக்கடி சிற்பக் கூடத்திற்கு வருவாளே, அவள் எங்கே?" என்று சித்தர் கேட்டார்.

மாணிக்க சேகரன் புரிந்து கொண்டு விட்டான். இவர் மாபெரும் சித்தர், முக்காலும் உணர்ந்த சித்தர் என எண்ணியவனாய் அவர் பாதங்களில் வீழ்ந்து, "நான் பெரிய தவறு செய்து விட்டேன். என்னை நம்பிய பெரிய சிற்பியின் மகளை மதுரையிலேயே விட்டுவிட்டு வந்து விட்டேன்" என்று கூறும்போது அவன் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் ததும்பியது.

சித்தர் தாடியை மெல்ல நீவியவாறு, "எழுந்திரு, மகனே! யாரை யார் நம்பி இருக்கிறார்கள்? உன் மனதில் இடம் பிடித்துவிட்ட அவள் இங்கே உன்னைத் தேடி வருவாள். உன் ஆடைகளை அணிந்து இங்கே வா" என்றார்.

மூன்று கற்களை வைத்து, அதன் மீது சட்டியை வைத்து, அருகே இருந்த சுள்ளிகளையும், காய்ந்த விறகுகளை எடுத்துச் சேர்த்து, இரண்டு கற்களைத் தட்டி தீ மூட்டி, செப்புப் பாத்திரத்திலிருந்த தண்ணீரை ஊற்றி, அதில் சில பச்சிலைகளைப் போட்டுக் கொதிக்க வைத்தார்.

பச்சிலைச் சாற்றுக் குழம்பியிருக்கும் இடத்திற்கு மாணிக்க சேகரனை அழைத்துச் சென்றார்.

கல் தொட்டியில் பச்சை நிறக் குழம்பு நிறைந்திருந்தது.

"இது என்ன தெரியுமா?"



"தெரியாது" என்பதற்கு அடையாளமாக தலை யசைத்தான், மாணிக்க சேகரன். அந்தச் சாற்றிலிருந்து சிறு துளி எடுத்து அவன் ஆடையில் தெளித்தார். வெண்ணிற ஆடையில் பச்சை நிறச் சாறு பட்டவுடன் சிவப்பு நிறமாக மாறியது.

"ஆ, வர்ணக் குழம்பு!" என்று வியப்புடன் கூறினான், மாணிக்க சேகரன்.

"ஆமாம், பெருவுடையார் கோயிற் கருவறையின் பின்புறம் சித்திரங்களைப் பார்த்திருக்கிறாயா?" சித்தர் கேட்டார்.

"பார்த்திருக்கிறேன். அதிசயமான ஜீவ சித்திரங்கள்".

"அந்தச் சித்திரங்களில் பூசப்பட்ட வண்ணங்கள் அழியாதவை. சிவப்பு நிற வண்ணம் இந்தத் தொட்டியி லுள்ளது. வண்ணக் கற்களும், மூலிகைகளும் என்றும் அழியாத வண்ணங்களை அளிப்பவை. நான் தேடி யலைந்து இந்தக் குன்றில் கண்டுபிடித்தேன். உனக்குச் சித்திரம் வரையத் தெரியுமா?" என்று கேட்டார் சித்தர்.

மாணிக்க சேகரன் தலையசைத்தான்.

"உம், சோழநாட்டு ஓவியர்களுக்கு இந்த அழியா வர்ணத்தைச் சொல்லித்தரப் போகிறேன். ஓவியம் வரைய வேண்டுமானால் பெரிய பெரிய கோயில்களைக் கட்ட வேண்டும். உம்; அதற்கும் வேளை வராமலா போகும்?" என்று கூறிய சித்தர் குழந்தையைப் போல் நகைத்தது. சட்டியில் கொதித்துக் தணிந்திருந்த குழம்பை எடுத்து அவனிடம் குடிக்கக் கொடுத்தார். ஓவியங்களுக்கு வண்ணம் தீட்டும் குழம்பு! அவன் பருகினான் அமுதம் போல் இருந்தது. பசி தணிந்தது. புதிய சக்தி உரு வாகியது.

"தம்பி! உன்னைத் தேடி இங்கே சிற்பியின் மகள் வருவாள். நீங்களிருவரும் என்னைக் கொள்ளிடக் கரையில் தவறாமல் வந்து பாருங்கள்" என்றார்.

மரத்தடியில் மாணிக்க சேகரன் சற்றுக் கண்ணயர்ந்து எழுந்தபோது, கதிரவன் மேற்றிசையில் இறங்கிக் கொண்டிருந்தான். சித்தரைக் காணவில்லை. பச்சிலைக் குழம்பைக் காணவில்லை. இருள் கவ்விய நேரத்தில்

அங்கிருக்கக் கூடாது என்று அவன், குன்றிலிருந்து கீழே மண்டபத்துக்கு வந்தான்.

குன்றின் அடிவாரத்தில் சோழ வீரர்கள் கூடார மடித்துத் தங்கியிருப்பதைக் கண்டான்.

## 16. புதிய பதவி

விராலிமலையினின்று இறங்கி, அருகே இருந்த மண்டபத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ள வந்து கொண்டிருந்த மாணிக்க சேகரன் உற்சாகத்துடன் இருந்தான். பகல் உணவு ஏதுமில்லாமலிருந்தும் அவன் சுறுசுறுப்புடன் இருந்தான். ஆனால் உள்ளத்தில் ஓர் ஏக்கம் குடி கொண்டிருந்தது. குமுதத்தை வற்புறுத்தி அழைத்து வராதது தன் தவறுதான்; அவளும் வந்திருந்தால் சித்தர் தந்த பச்சிலைச் சாற்றைப் பருகி மகிழ்ச்சியுடன் இருந்திருக்கலாம் -'உம்; சற்றுச் சிந்திக்காமல் செயலாற்றி விட்டோம்'என்று பெருமூச்சு விட்டான்.

அவன் கண்ணெதிரே மயில்களின் ஒயிலான நடை. குமுதமும் அப்படித்தானே நடப்பாள். 'மயில்கள் குமுதம் போல் நடந்தன என்று ஒருமுறை சொல்லிப் பார்த்துத் தனக்குள் நகைத்துக் கொண்டான்.

குமுதம் அங்கு வந்துவிடுவாள் என்று சித்தர் சொல்கிறாரே - எப்படி வருவாள் சித்தர் நடந்ததை உணர்ந்திருக்கிறார். நடக்கவிருப்பதைச் சொல்கிறார். ஒளி வட்டத்திற்குள் திகழும் அவர் இன்னும் தன்னருகே இருப்பதுபோல் உணர்ந்தான். கொள்ளிடக் கரைக்கு வந்து சந்திக்குமாறு சொல்லி இருக்கிறார் - குமுதத்துடன்! நினைக்கவே இனிப்பாக இருந்தது.



சோழ சக்கரவர்த்தியைச் சந்திக்கப் போகிறோம்; அவரிடம் தன் அனுபவத்தைக் கூறவேண்டும் என்று உறுதியான முடிவில் மண்டபம் நோக்கிச் சென்றான்.

பாண்டிய நாட்டுடன் சேர்ந்திருந்த அந்தப் பகுதியை சில ஆண்டுகளாக யாரும் கவனிப்பதில்லை. மண்டபத்தைச் சுற்றி முள்ளும் புதரும் மண்டிக் கிடந்தன. மாலை மங்கிய ஒளியில் அவன் மண்டபத்துத் தரையில் படிந்திருந்த தூசியைத் தட்டத் தொடங்கியபோது, அவன் தோளை வீரன் ஒருவன் தட்டினான்.

"ஐயாவுக்கு எந்த ஊர்?" என்று கேட்டான். சோழ நாட்டு வீரனைப் போல் தோற்றமளித்த அவனை ஒருமுறை மேலும் கீழும் பார்த்த மாணிக்கம், "எல்லா ஊரும் என் ஊர்தான்"என்றான்.

"கேட்டதற்கு ஏற்ற மறுமொழி சொல்ல வேண்டும். நான் கேட்டால் சொல்வீர்களா? வாருங்கள் எங்கள் ஐயாவிடம்" என்று கூறி அவனை அழைத்தான்.

"நீங்கள் யார்? முன்பின் தெரியாமல் என்னிடம் வந்து அதிகாரம் செய்கிறீர்களே. உங்களைப் பற்றி முதலில் சொல்லுங்கள். பிறகு உங்கள் ஐயா, பாட்டனார், முப்பாட்டனாரிடம் வருகிறேன்" என்றான் மாணிக்கம்.

"ஐயாவுக்கு கோபம் வந்துவிட்டது போல் தோன்றுகிறது. சோழ இளவரசர் இங்கே தங்கி இருக்கிறார். இந்த ஊர்க்காரர் யாராவது தென்பட்டால் அழைத்து வருமாறு சொன்னார். அதனால் தங்களை அழைக்கிறேன்" என்றான்,சோழ வீரன்.

சோழ இளவரசரா? மாணிக்க சேகரன் வியப்புடன் அவனைப் பார்த்தான்.

"சோழ இளவரசரா? இராசேந்திர சோழரா? நான் உடனே சந்தித்தாக வேண்டும். வாருங்கள் போகலாம்; ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது" என்றான்,பரபரப்புடன்.

"இராசேந்திர சோழரின் புதல்வர் சுந்தரன் வந்திருக்கிறார். மதுரைக்குச் சென்று சோழ பாண்டியராகப் பதவியில் அமரப் போகிறார். போகும் வழியில் இங்கே சற்று இளைப்பாறத் தங்கி இருக்கிறார்" என்றான்.

மாணிக்க சேகரன், தஞ்சையில் இராசேந்திரனைப் பார்த்திருக்கிறான். கோயில் திருப்பணியைக் காண ஒரு

முறை வந்திருக்கிறார். குடமுழுக்கு விழாவிற்கு வந்திருக்கிறார்.

சுந்தரனைச் சந்தித்தபோது மாணிக்கம் ஒருகணம் திடுக்கிட்டான். இராசேந்திர சோழனின் புதல்வர்களுள் சுந்தரன் ஒருவன் என்பதை அவன் அறிவான். தஞ்சாவூரில் பல முறை பார்த்திருக்கிறான். சோழ பாண்டியனாக அரியணையில் அமர்வதற்குச் செல்கிறார் என்ற செய்தியும் அவனுக்கு வியப்பாயிருந்தது.





பழையாறையில் இருந்தவர்கள் அனைவருக்கும் சுந்தரனுக்குக் கிடைத்த புதுப் பதவி வியப்பை அளித்தது.

சிதம்பரத்தில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு, சுந்தரனை அழைத்து புத்திமதிகள் கூறி அவனைப் பழையாறைக்கு அனுப்பினார், இராசேந்திர சோழர். பொறுப்பான பதவியை அளித்தால் அவன் மனம் கீழ்த்தரச் செய்கையில் ஈடுபடாது என்ற முடிவுடன் அவனைத் தன் தந்தை இராசராச சோழரைச் சந்திக்க அனுப்பினார்.



பழையாறை மாளிகைக்கு வந்து சேர்ந்த சுந்தரனைப் பார்த்து, மாளிகையில் உள்ளவர்கள் மிக வேதனைப் பட்டனர். செய்தியறிந்த இளைய பிராட்டி குந்தவ்வை, சுந்தரனை இவ்வாறு காயப்படுத்தியவர்கள் யார் என்று தன் சகோதரன் இராசராசனிடம் கேட்டறிய முற்பட்டாள்.

சக்கரவர்த்தி இராசராச சோழர் நடந்த செய்தி அனைத்தையும் அறிந்திருந்தார்.

இளைய பிராட்டி கவலை நிறைந்த குரலில், "நமது குடும்பத்திலே ஏற்பட்டுள்ள கலக்கம், கவலை எப்போது தீருமோ தெரியவில்லை" என்று கவலைப்பட்டாள்.

இராசராச சோழர் அமைதியான குரலில், "இளைய பிராட்டி அவர்களே! தங்களுக்கு ஏற்பட்டுள்ள கலக்கத்தைப் போல் பல மடங்கு நானும் மனத்திலே அனுபவிக்கிறேன். எல்லாவற்றிற்கும் மருந்தளித்துக் குணப்படுத்துவதற்கு ஒரே வழி கருவூர்த் தேவரைச் சந்திப்பதுதான். அவர் நல்ல மருந்து சொல்வார். கருவூர்த் தேவர் இருக்குமிடத்தை அறிந்து வர அனுப்பியவர்கள் இன்னும் வந்து சேரவில்லை. சுந்தரன் செய்த மாபெரும் பிழைக்கு இராசேந்திரனே தக்க தண்டனை அளித்து, மேலே நடக்க வேண்டியதற்காக என்னிடம் அனுப்பி வைத்துள்ளான். நான் ஒரு முடிவு கூற வேண்டும். எனது பெயரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள். சுந்தரனுக்கு யாரும் சரியான வழிகாட்டவில்லை. அவனுக்கு வழிகாட்ட ஓர் இளைய பிராட்டி அமையவில்லை" என்றார்.

இராசேந்திரனை வளர்த்து, உருவாக்கியவர், இளைய பிராட்டியார்.

இளைய பிராட்டியாருக்குப் பெருமைதான். "வளரும் பருவத்தில் வழிகாட்டத் தவறினால் திசை மாறித்தான் போவார்கள். இராசேந்திரனுக்குத் திருமணத்தை முடித்து வைத்தோம்.இராசாதிராசனுக்கும்மற்றசகோதரர்களுக்கும் திருமணம் நடைபெற்றுவிட்டன. சுந்தரனைக் கவனிக்க யாருமில்லை. அவனுக்கு என்று பொறுப்பும் இல்லை. சுந்தரனுக்கு ஏற்ற பதவியை அளித்துப் பொறுப்புடன் நடந்து கொள்ளச் செய்வோம். மனக்குகையில் கொடிய விலங்குகளை அடைய விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றாள்.



அன்று, இராசேந்திரனிடமிருந்து சக்கரவர்த்திகளுக்கு ஓலை ஒன்று வந்தது. அதில் எழுதப்பட்ட செய்திகளை இளைய பிராட்டியாரிடம் தெரிவித்தார்,இராசராசன்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். சுந்தரனை மதுரைக்கு அனுப்புவோம். நாம் வென்ற இடங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்காமல் அந்த நாட்டிற்குரிய வாரிசுதாரர்களிடம் ஒப்படைப்பதை வழக்கமாகக் கொண்டு விட்டோம். பிறகு நம்மை எதிர்த்தே அங்கும் கலகங்கள் உருவாகின்றன. பாண்டிய நாட்டில் அவ்வாறு ஏற்படாமல் செய்வோம். மதுரை நகரத்தில் வீற்றிருந்து பாண்டிய நாட்டை ஆட்சி புரியும் பொறுப்பை சுந்தரனிடம் ஒப்படைப்போம்" என்றாள்.

சுந்தரன் பரிவாரங்களுடன், படைவீரர்களுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டான். செல்லும் வழியில் விராலி மலையில் தங்கினான்.

மாணிக்க சேகரனை இளவரசன் சுந்தரனிடம் அழைத்துச் சென்றார்கள்.

மாணிக்க சேகரன் நடந்தவற்றை விவரித்தான். மதுரையில் கலகம் செய்யத் திட்டம் வகுத்து - சிற்பிகளைச் சிறைப்பிடித்துள்ள இளைஞர்களைப் பற்றிக் கேள்விப்பட்ட சுந்தரன், இரவுக்குள்ளாக மதுரை நோக்கிச் செல்லத் திட்டமிட்டான். சித்தரைச் சந்தித்த விவரத்தை மாணிக்கம் சொல்லக் கேட்ட சுந்தரனுக்கு வியப்பு ஏற்பட்டது. 'அருமை இளம் சிற்பியே! நீ அற்புதமான சித்தரைச் சந்திருக்கிறாய். கருவூர்த் தேவரை என் பாட்டனாரும், என் தந்தையும் சந்திக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் இருப்பிடம் அறிய நாடெங்கும் சோழ வீரர்கள் அலைகிறார்கள். மிக எளிதில் நீ சித்தரைச் சந்தித்து விட்டாய். கொள்ளிடக் கரையில் சந்திக்குமாறு சித்தரின் அருள்வாக்கு உனக்குக் கிடைத்தது பேரதிர்ஷ்டம். நீ உடனே புறப்படு. என் தந்தையிடம் செய்தியைத் தெரிவித்துவிடு. குதிரை ஒன்றும், துணைக்கு வீரனொருவனையும் அனுப்புகிறேன். உடனே புறப்படு" என்று கூறினான்,சுந்தரன்.

'குமுதம் அங்கு வருவாள்' என்று கூறிய சித்தர் வாக்கு அவனுக்கு நினைவுக்கு வந்தது. சற்றுத் தயங்கி நின்ற மாணிக்கத்தை ஒருகணம்கூட அங்குத் தங்கவிடாமல் புறப்பட வற்புறுத்தினான், சுந்தரன்.

மாணிக்க சேகரன் புறப்பட்டுச் சென்ற சில நாழிகைக்குள்ளே குமுதமும் மற்றும் சில சிற்பிகளும் விராலிமலைக்கு வந்து சேர்ந்தனர்.



## 17. வேளை மலர்கிறது

காவிரி ஆற்றைக் கடந்து, மெல்லச் சென்று கொண்டிருந்தது அந்த ராஜ ஹம்ஸப் படகு. அந்தப் படகு வடிவத்தில் சிறு மரக்கலம்போல் இருந்தது. அரச குலத்தவர்கள் அமர்வதற்கான சிறப்பான இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன. படகைத் தள்ளுபவர்களுக்கு, படகில் அமர்ந்திருப்பவர்களுடன் தொடர்பு ஏதும் இல்லாத வண்ணம் படகு இரு பகுதிகளாக்கப்பட்டிருந்தது. அரச குடும்பத்தவர்கள் தங்கியிருந்த சிறு தளத்தில் இருந்த சாளரத்தை அலங்கரித்த வண்ணத் திரைச் சீலைகள் தென்றல் காற்றில் மெல்ல அசைந்து உள்ளே அமர்ந்திருப்பவர்களை அடையாளங் காட்டின.

இராசராச சோழரும், அரசி பஞ்சவன்மாதேவியாரும், இளையபிராட்டி குந்தவ்வை தேவியாரும் மற்றும் பணிப்பெண்களும் கீழ்த் தளத்தில் அமர்ந்திருந்தனர். மறு பகுதியில் திருமந்திர ஓலை நாயகமும், மெய்க்காவல் வீரர்களும் இருந்தனர்.

அகலம் குறைவாக இருந்தாலும் ஆழம் மிகுந்த காவிரி ஆற்றைக் கடந்து மறுகரைக்குச் செல்லப் பரிசல், தோணி அல்லது படகு தேவைப்பட்டது.

தோணித் துறைக்குச் சென்று படகில் ஏறும் வரை சக்கரவர்த்தி எங்கே செல்லப் போகிறார் என்று ஒருவருக்கும் தெரியாது. பழையாறை வீதிகளில் வலம்



வந்து, காவிரிக் கரைக்குச் செல்லும் சாலை வழியே இரதம் சென்றபோது அரச பெண்டுகள் ஒருவரையொருவர் பார்த்து விழிகளாலேயே கேட்டுக் கொண்டனர், எங்கே செல்கிறோம் என்று.

கரை இறங்கி, இராசராச சோழரும் பரிவாரத்தாரும் இயற்கைச் சூழல் நடுவே அமைந்திருந்த சிறு பாதை வழியே மெல்ல நடந்து சென்றனர்.

தென்னந் தோப்புகளையும், மாஞ்சோலைகளையும் பலவிதப் பழத்தோட்டங்களையும், மலர் பூத்துக் குலுங்கும் நந்தவனங்களையும் கடந்து கம்பீரமாக அரசர் நடந்து செல்லும்போது அவர் எங்கே செல்கிறார் என்று கேட்க ஒருவரும் துணியவில்லை.

"எல்லாம் உங்கள் நல்லாட்சியின் காரணமாக வளங் கொழித்து நிற்கிறோம்" என்று தோப்பிலுள்ள மரங்கள் வணங்கிக் கூறின.

செங்கதலி வாழைகள், 'உங்களுக்காகக் குலை தள்ளி இருக்கிறோம், வாருங்கள், வாருங்கள்' என்று இலைக் கரங்களை அசைத்து அழைத்தன.

"உங்கள் திருமார்பை, இந்த நந்தவனத்து மலர்கள் தாம் அலங்கரித்து மகிழக் காத்திருக்கின்றன" என்றன, தோட்டத்து மல்லிகை மலர்கள்.

"சோழ நாட்டை வள நாடாக ஆக்கி வாழ்விக்கும் பொன்னித் தாயின் கருணையே கருணை! என்ன தேவி?" என்று இராசராசர், சற்றுப் பின்னால் மெல்ல நடந்து வந்த அரசியைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கேட்டார்.

உடனே தன் அக்கையார் இளைய பிராட்டியின் பக்கம் திரும்பி, "நீர்வளத்தால் தன் மகத நாட்டில் வளம் பெருக்கத் திட்டம் வகுத்தாரே வல்லவரையர், நீர்ப்பாசனப் பணிகள் எவ்வளவு முன்னேறியிருக்கின்றன?" என்று கேட்டார்.

"சக்கரவர்த்திகள் ஒருமுறை தொண்டை மண்டலத்திற்கும், பிறகு மகத நாட்டிற்கும் வருகை தரவேண்டும்" என்று வல்லவரையர் கேட்டுக் கொண்டார்.

சக்கரவர்த்திகளிடமிருந்து நெடிய பெருமூச்சு எழுந்தது. 'இனி எப்போது வரப் போகிறேன்! உடல் தளர்ந்துவிட்டது. உள்ளத் தளர்வு ஏற்படாமல் மீதி நாள்களையும் தள்ள வேண்டும்" என்றார்.

"மீதி நாள்களா? என்ன சொல்கிறார் அருண்மொழி" என்று உறவின் முறையோடு கேட்டாள், இளைய பிராட்டி.

"என்னைவிட வயதில் மூத்த வல்லவரையரும், நீங்களும் முதுமைத் தளர்வை அடையாமல் இருக்கிறீர்கள். உள்ளத்தில் எந்தக் கவலையும் இல்லை." தன் தமக்கையாரிடம் திரும்பிப் பொருள் நிறைந்த புன்னகையுடன் கேட்டார், சக்கரவர்த்தி.







தன் இளவல், இராசராச சோழ தேவர் தன்னிட மிருந்து, ஏதோ எதிர் பார்ப்பதற்காக இப்படி வலை வீசுகிறார் என்பதை உணர்ந்த குந்தவ்வை, "சோழ சக்கர வர்த்திகளுக்கே கவலை என்றால் எங்களைப் போன்ற சாமான்யர் கதி என்னவாவது?" என்றாள், விட்டுக் கொடுக்காமல்.

"சொல்லமாட்டீர்களா? எனக்குள்ள கவலை உங்க ளுக்குத் தெரியாதா? இவ்வளவு ஆண்டுகள் கழித்துத் தலைப் பிள்ளை என் மீது கோபங்கொண்டு திரும்பிப் பார்க்காமல் இருக்கிறானே அந்தக் கவலை எனக்கு இல்லாமல் போய் விடுமா? அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து நான் தவறிவிட்டேனா என்ற கவலை கூடவா எனக்கு இல்லை என்று நினைத்துவிட்டீர்கள்? அவன் என்ன சிறு குழந்தையா? என் பேரனுக்கும் பிள்ளை பிறந்துவிட்ட பிறகும் என் மகன் ஏனோ கோபம் கொண்டிருக்கிறான்" சக்கரவர்த்தி ஒரு போடு போட்டார்!

"அப்படியென்றால் எனக்கும் மனத்தின் அடித் தளத்தில் தீர்க்க முடியாத வேதனை இருக்கத்தான் செய்கிறது. ஒன்றா, இரண்டா? பரம சாதுபோல் நடந்து வருகிறாரே வல்லவரையர் - அவர் ஏற்படுத்தியுள்ள பிரச்னைக்கு என்று முடிவு? அவர் மணந்து கொண்டு வந்தவள் வயிற்றில் பிறந்துள்ள பெண்ணைப் பற்றி எனக்குக் கவலை இருக்காதா? அது போகட்டும்; தலைப் பிள்ளையை பற்றிய கவலை என்று - அந்தத் தலைப் பிள்ளையை வளர்த்து ஆளாக்கிய நான், அந்தப் பிள்ளை யின் நடத்தைக்காகக் கவலைப்பட வேண்டாமா? எந்தக் கவலையும் எனக்கு இல்லை என்று சோழ சக்கரவர்த்தி தெரிவித்துவிட்டதால் இந்தக் கணம் முதல் எனக்குப் பெரிய கவலை ஏற்பட்டு விட்டது" என்று கூறினாள் இளைய பிராட்டி. அவள் எதிர்பார்த்ததுபோல் சக்கரவர்த்தி மௌனமானார்.

பிறகு, சக்கரவர்த்தியே மௌனத்தைக் கலைத்தார். "நம் கவலைகளுக்கெல்லாம் ஒரு முடிவு ஏற்படக் போகிறது" என்றார்.

பேசிக்கொண்டே வந்தவர் சற்றுப் பின்னால் நடந்து வந்துகொண்டிருந்த மெய்க்காவல் வீரன் ஒருவனை அழைத்து, "இங்குதானே குடந்தைச் சோதிடர் வீடு இருக்கிறது?" என்று கேட்டார்.



சோழ நாட்டின் ஒவ்வொரு பட்டி தொட்டியையும் அறிந்திருந்த இராசராசன் கவனத்தில் எந்தவிதத் தவறும் ஏற்பட நியாயமில்லை.

அடர்ந்த நந்தவனத்தின் நடுவே பர்ணசாலை போல் அமைந்திருந்த குடிலில் குடந்தை சோதிடர் வாழ்ந்து வந்தார்.

குடிலின் வாயிலில் அரசனின் வருகையை எதிர்பார்த்து நிற்பவர்போல் கையில் பூரண கும்பத்துடன் சோதிடர் நின்று கொண்டிருந்தார். வாயில் சாணமிட்டு மெழுகி மாக்கோலம் இடப்பட்டிருந்தது. விசேஷ தினம்போல், கோலத்தைச் சுற்றிச் செம்மண் கரையிடப்பட்டிருந்தது. நிலைப்படியில் மாவிலைக் கொத்து செருகப்பட்டிருந்தது. நிலைப்படியை ஒட்டிக் கதவருகே மறைவாக எட்டிப் பார்த்தன, இரண்டு மதி வதனங்கள்.

இராசராச சோழர் வியப்பு மிகுதியுடன் இளைய பிராட்டியை நோக்கி, "இளைய பிராட்டியாருக்குக் கூடத் தெரியாது, நான் சோதிடர் வீட்டிற்கு வரப்போகும் செய்தி. அப்படி இருக்க இந்த சோதிடர், முன்பே அறிந்தவர் போல் என்னை வரவேற்க வாசலில் வந்து நிற்கிறாரே!" என்றார்.

"சோதிடரன்றோ? முன்பாகவே அவருக்குத் தெரிந் திருக்கும். சோதிடரிடமும், வைத்தியரிடமும் மறைக்கக் கூடாது என்பார்கள். அதிலும், சோழ நாட்டு அரண்மனை சோதிடருக்குத் தெரியாதது ஏதுமில்லையே!" என்றாள் இளையபிராட்டி.

அங்கிருந்தவர்கள் கலகலவென நகைத்தனர்.

"சக்கரவர்த்திகளுக்கு வணக்கம் தெரிவியுங்கள்" என்றார் குடந்தை சோதிடர் தன் மனைவியிடமும், தங்கையிடமும். நல்வரவு கூறி வரவேற்றார்.

சோதிடரைச் சிறிது நேரம் வைத்த விழி மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தாள், இளையபிராட்டி. அடர்ந்த பின் சிகையும், நெற்றியில் பளிச்சென்ற திருநீறும், நடுவே சந்தனமும், குங்குமமும் திகழ ஒளிவீசும் முகத்துடன் கூடிய இளம் சோதிடரின் முகத்திலிருந்து வீசும் அருளொளியில் ஐக்கியமாகித் தன்னை மறந்து சில கணங்கள் இருந்தாள், இளையபிராட்டி.

இளம் சோதிடரின் பாட்டனாரை அவள் அறிவாள். தெய்விக அருள் பெற்றவர் என்று நாட்டிலுள்ளவர்கள் புகழ்ந்து போற்றும் திருக்குடந்தை சோதிடரின் பெயரன். திருக்குடந்தை சோதிடரின் மகன், காஞ்சிபுரத்திற்குச் சென்ற சில ஆண்டுகளில் மரணமடைந்தான். அற்ப ஆயுளில் மாண்ட தன் ஒரே புதல்வனின் மரணம் சோதிடரை நிலை குலையச் செய்துவிட்டது. நல்லவேளை யாக வாரிசு அற்றுப் போகமல், மகன் வயிற்றுப் பெயரன் பாட்டனாரிடம் வந்து சேர்ந்தான். 'சோதிடக் கலையைக் கற்றுத்தரப் போவதில்லை; என் தலைமுறையுடன் போகட்டும்' என்று விரக்தியுடன் இருந்தவரை புள்ளிருக்கும் வேளூரில் வாழும் நாடிசோதிடக் கலைஞர்கள் வற்புறுத்தி, பலவாறு எடுத்துக் கூறி அவர் துயர் துடைத்து, தன் பெயரனுக்குச் சோதிடக் கலையைக் கற்றுத் தருமாறு செய்தனர்.

பாட்டனாருக்குப் பிறகு, அவர் பெயரை நிலைநாட்டும் அளவிற்குத் திறமையும், பெயரும், புகழும் பெற்றான் பெயரன்.

இளம் வயதிலேயே சித்தர்கள் பலருடன் பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது. பாட்டனாரைச் சந்திக்கவரும் சாத்திர மேதைகள் பேசுவதைக் கேட்டுப் பலவற்றைக் கற்றறிந்தான். பாட்டனார் சேர்த்து வைத்திருந்த பழைய ஓலைச் சுவடிகளைக் கவனமாக ஆராய்ந்தான்.

"சோதிடரே இவர்கள் யார்?" என்று இளைய பிராட்டி யார் அங்கிருந்த பெண்களைப் பார்த்துக் கேட்டார்.

வணக்கம் தெரிவித்த பெண்கள் இருவருக்கும் உடனே முத்துமாலையைப் பரிசாக அளித்தாள், இளைய பிராட்டி.

"கட்டளையிட்டிருந்தால் தஞ்சாவூருக்கே வந்திருப்பேன். சக்கரவர்த்திகளுக்கு மிகுந்த சிரமத்தை அளித்து விட்டேன். வைரக் கட்டிலில் அமர வேண்டிய அரசருக்கு மண்தரையில் ஓலைப்பாயை விரித்து உபசரிப்பதற்குப் பொறுத்தருள வேண்டும்" என்று மிகவும் பணிவு நிறைந்த குரலில் கூறினார், சோதிடர்.

இரு பெண்களும் விசிறத் தொடங்கினர். சக்கரவர்த்தி பணிப்பெண்களுக்குச் சைகை செய்ய அவர்களிடமிருந்த விசிறியைப் பெற்று அவர்கள் விசிற முற்பட்டனர்.



"காலையில் இருந்து உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது. 'உணவு படைக்க ஆயத்தம் செய்' என்று இல்லாளிடம் சொன்னேன். கூடத்தை ஒழுங்குபடுத்தினேன். 'இந்தக் காட்டுப் பகுதிக்கு யார் வரப் போகிறார்கள்? இந்த நாட்டுச் சக்கரவர்த்தி வரப்போவதுபோல் பரபரப்படைகிறீர்களே' என்று என் தங்கை வேடிக்கையாகக் கேட்டாள்.

"ஆமாம், ஆமாம்" என்றேன். அதற்கு மேலே ஏதும் பேசவில்லை. வேடிக்கைப் பேச்சு என்று அவர்கள் எடுத்துக் கொண்டுவிட்டனர்.

"என் பாட்டனார் பல ஆண்டுகளுக்கு முன்பே அடிக்கடி சொல்வார், சக்கரவர்த்திகள் எட்டுத் திக்கிலும் அடையப் போகும் கீர்த்தியைப் பற்றி. புலிக்குப் பிறந்தது பூனையாகாது பார்! எட்டுத் திசை மன்னர்களும் அடிபணியப் போகிறார்கள். இளவரசரின் கீர்த்தியை நீயே பார்க்கப் போகிறாய்" என்பார். என் பாட்டனார் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. இளவரசர் வந்திருக்கிறாரா?" என்று கேட்டு வாயிற்புறத்தை நோக்கினார் சோதிடர், இளமை மாறா முகத்தில் அறிவுச் சுடர் பிரகாசிக்க.

சக்கரவர்த்தி இளையபிராட்டியவரை ஒருமுறை நோக்கினார். அதில் ஆயிரம் பொருள் பொதிந்திருந்தது.

அப்போது சோதிடரின் சகோதரி செவ்வாழை, மாதுளைப் பழங்கள் நிறைந்த பெரிய மரத்தட்டை சபை நடுவே வைத்தாள். ஒருமுறை அவளைப் பாதாதிகேசம் பார்த்த இளைய பிராட்டியார், "உங்கள் சகோதரிக்கு இன்னும் திருமணம் நடைபெறும் வேளை வரவில்லை போலிருக்கிறது" என்றாள்.

"தேவி, வேளை வந்துவிட்டது. காஞ்சிபுரத்தில் மாப்பிள்ளையை உறுதிப்படுத்தி விட்டேன். ஆனால்..." என்று கூறி நிறுத்தினார், சோதிடர்.

"ஆனால்..." – இளைய பிராட்டி கேட்டாள்.

"திருமணத்திற்கு வேண்டிய பரிசப்பணம் சேகரிக்க மாப்பிள்ளை வடக்கே போயிருக்கிறாராம். வந்தவுடன் கல்யாணம் நடக்க வேண்டியதுதான்".

இது கேட்டு இராசராசர் பெரிதாக நகைத்தார்.

"தட்சணையா? பெண்ணுக்கு விலையா? பெண்ணுக்குப் பிள்ளையைப் பிடித்து விட்டால் போதாதா! திருமணத்

திற்குத் திரவியம் சேகரிக்க மாப்பிள்ளை வடநாட்டிற்குப் போயிருக்கிறாரா? சோழ நாட்டிற்குப் பெரும் அவமானம்" என்றபோது சோதிடர் குறுக்கிட்டு, "மன்னிக்க வேண்டும்; மாப்பிள்ளையின் பெற்றோர் திருப்பதிக்கருகே இருக்கிறார்கள். அவர்களை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு வருவதாகச் சென்றிருக்கிறார். அதுவும் சோழ நாடுதானே, சக்கரவர்த்திகளே?" என்றார்.

"அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணம் நடக்கட்டும். உங்கள் சகோதரிக்கு மஞ்சள் காணியாக வேண்டிய நிலங்களை இப்போதே அளிக்கிறேன்" என்று கூறியவர், "யாரங்கே? உத்தரவை எழுதிக் கொண்டு, சோதிடரைக் கேட்டு வேண்டிய இடத்தில் உடனே கிராமங்களையும், விளை நிலங்களையும் இறையிலியாக அளியுங்கள்" என்றார்.

சோதிடர் ஆனந்தக் கண்ணீர் பெருக, "தரும தேவதை என் இல்லத்திற்கு வந்திருக்கும்போது, தருமதேவதையின் குடும்பத்திலும் நல்ல காரியம் ஒன்று நடைபெறப் போகிறது. அதைப் பற்றி அறிய வந்துள்ள தங்கள் மனம் போல் எல்லாம் நடக்கும்" என்றார்.

உடனே ஏணி ஒன்றைக் கொண்டுவரச் சொல்லி பரண்மேல் ஏறினார், சோதிடர். விலை உயர்ந்த மரத்தால் செய்யப்பட்ட பெட்டியை மேலிருந்து இறக்கினார்.

"இந்தப் பெட்டியில் இருப்பவை எல்லாம் சோழ குலத்தவர்களின் ஜாதகங்கள்" என்றவர் அவற்றை மிகவும் கவனத்துடன், ஒவ்வோர் ஓலைச் சுவடியாகப் பிரித்துப் பார்த்து, இரண்டு சுவடிகளை எடுத்தார்.

எடுத்துச் சென்று, பூசை அறையில் குலதெய்வத்தின் பாதத்தில் வைத்து வணங்கினார். பிறகு இராசராசரை நோக்கி, "சக்கரவர்த்திகளே! நீங்கள் நல்ல ஓரையில் வந்திருக்கிறீர்கள். இந்த இடத்தில் நம்மிருவரைத் தவிர வேறு ஒருவரும் இல்லாமலிருப்பது நல்லது. இப்போது நான் சொல்லப் போவது நானே சொல்வது அன்று. தேவியின் வாக்கு. யாரைப் பற்றியதோ அவர் மட்டுமே அறிய வேண்டியது" என்றார்.

இப்படிச் சொல்லும்போது அவர் விழிகள் பளபளத்தன. முகத்தில் முன்பிருந்த மஞ்சள் நிறத்துடன் குங்குமச் சிவப்பும் சேர்ந்தது.



ஏதோ சொல்ல வாயெடுத்தார், இராசராசர். அவரைக் கையமர்த்திய இளைய பிராட்டியார் எழுந்து குடிலுக்கு வெளிய செல்ல ஆயத்தமானார். பணிப் பெண்களையும் வருமாறு சைகை செய்தார். பஞ்சவன்மாதேவியாரை மட்டும் அங்கே இருக்குமாறு சொன்னார்.

சோதிடர் கூறிக் கொண்டே வருவதைக் கேட்க கேட்க, இராசராசன் மெய் சிலிர்த்தார். முகம் மாறியது. மகிழ்ச்சி பொங்கியது. பயம் படர்ந்தது.

"சோதிடரே! என் மகன் இராசேந்திரன் புகழ் நாலா திசைகளிலும் பரவியிருக்கிறது என்பது நாடு அறிந்த ஒன்று. பாண்டியர்களையும், சாளுக்கியர்களையும் வென்றதும், கடாரம் கொண்டதும் நடந்து போன சம்பவங்கள். இனி வரப்போகும் காலத்தில் அவன் நிலை என்ன? என்மீது பாசமில்லாமல் இருக்கிறானே அவனைச் சந்திக்க வேண்டும் என்று சில காலமாக முயல்கிறேன், முடியவில்லையே. ஏதோ கிரகம் தடுக்கிறதே. அதைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று குரல் தழுதழுக்கக் கேட்டார்.

"சக்கரவர்த்திகளே! உடனே இளவரசரை எங்கிருந்தாலும் அழைத்துவரச் செய்யுங்கள். இன்னும் ஒரு பட்சத்தில் சந்திக்காவிடில் நீங்கள் இளவரசரைச் சந்திக்க முடியாமல் போகலாம்" என்று சொல்லி நிறுத்தியவர், "சக்கரவர்த்திகளே! இப்படியெல்லாம் சொல்வதற்கு என்னைப் பொறுத்தருளுங்கள். சோழ அரச பரம்பரையில் நல்லதும், தீயதும் கலந்து நடக்கும் சூழ்நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்று கூறி ஓலைச்சுவடிகளைப் பட்டுத்துணியால் சுற்றிக் கட்டி வைத்தார்.

இராசராசர் ஏதேதோ கேட்டார். சோதிடர் வணக்கம் தெரிவித்து, பிறகு கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்து, "சக்கரவர்த்திகளே! இந்த ஓலையில் நான் ஒரு நாளைக் குறித்துத் தருகிறேன். அந்த நாள் இந்த நாட்டிற்கே மிக நல்ல நாளாகும். அதற்குள், சக்கரவர்த்திகள் இளவரசரைச் சந்தித்தாக வேண்டும்" என்றார். பிறகு, "அரசர்க்கரசே! கருவூர்த் தேவரை தாங்கள் சந்தித்து அவர் கருத்துப்படி நடக்கும் வேளை வந்துவிட்டது" என்றார்.

இராசராசர் வியப்புடன், "சோதிடரே! கருவூர்த் தேவர் இருக்குமிடம் அறிந்துவர நாலு திசைகளிலும் வீரர்களை

அனுப்பி இருக்கிறேன். அந்த மகானைச் சந்திக்கும் பாக்கியம் கிட்டுமா?" என்றார்.

தலையை அசைத்தார் சோதிடர். வெளியே 'அம்மா' என்று கன்றின் குரல் கேட்டது. "வெளியே சென்று விட்டவர்களை இங்கே வரச் சொல்லுங்கள்" என்றார்.

இளையபிராட்டி, சிறு குழந்தைபோல் குதித்துக் கொண்டு, அவர் இந்த நாட்டுச் சக்கரவர்த்தி என்ற நிலையையும் மறந்து, "தம்பி, அருள்மொழி, கருவூர்த் தேவர் இருக்குமிடம் தெரிந்துவிட்டது, தெரிந்துவிட்டது" என்று கூறியவாறு வந்தார்.

"ஆம், நல்ல வேளை மலர்ந்துவிட்டது" என்றார் குடந்தை சோதிடர்.



# 18. அதோ, சித்தர்!

குடந்தைச் சோதிடர் வீட்டினுள் சக்கரவர்த்திகளும், அரசியாரும் இருக்கும்போது, சோழ நாட்டு ஒற்றன் ஒருவன் அரசர் அங்கிருப்பதறிந்து அவரைச் சந்திக்க விரைந்து வந்தான். கருவூர்த் தேவர் இருக்குமிடம் தெரிந்துவிட்டதாகவும் அதைத் தெரிவிக்க விரைந்து வந்ததாகவும் கூறினான்.

மாணிக்கசேகரன், விராலிமலையினின்று புறப்பட்டவுடன் அவனைப் பின் தொடர்ந்த சோழ நாட்டு ஒற்றன், கருவூர்த் தேவரைப் பற்றிய விவரத்தை அவனிடமிருந்து தெரிந்துகொண்டான்.

சங்கிலித் தொடர்போல ஆங்காங்கே இருந்த ஒற்றர்கள் ஒருவருக்கொருவர் அந்தச் செய்தியைக் கேட்டறிந்து



கடைசியில் பழையாறைக்கு அந்தச் செய்தி வந்து சேர்ந்தது.

சித்தர் இருக்குமிடம் தெரிந்துவிட்டது என்பதறிந்த இராசராசர் கருவூர்த் தேவரைச் சந்தித்துவிட்டது போன்ற மகிழ்ச்சியில் திளைத்தார். உடனே சித்தரைச் சந்திக்க வேண்டும் என்ற பரபரப்பில் "கொள்ளிடக் கரையருகே எந்த ஊரில் சித்தர் இருக்கிறார்?" என்று கேட்டபோது சரியான விடையை ஒற்றனால் கூற முடியவில்லை.

சோதிடர் வீட்டிலிருந்து திரும்பி வரும்போது படகில், இராசராச சோழர் மௌனமாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். குடந்தை சோதிடர் கூறியவை அவர் மனதில் ஒருபுறம் மகிழ்ச்சியையும் மறுபுறம் சஞ்சலத்தையும் ஏற்படுத்தின.

அரசியாரைப் பார்த்துப் பெருமூச்சு விடுவதும் பிறகு விழிகளை மூடிக்கொண்டு தியான நிலையில் இருப்பதுமாக நேரத்தைக் கழித்தார். படகு மெல்லச் சென்று கொண்டிருந்தது. பழையாறை மாளிகையை அடைந்தவுடன், இளைய பிராட்டியாரைத் தனியே அழைத்து சோதிடர் கூறியவற்றை ஒளிவு மறைவு இன்றி இராசராசர் தெரிவித்தார்.

"இராசராசா! இறைவன் வகுத்த நெறி வழிப்படியே எல்லாம் நடைபெறும். சோழர் குலத்தை இதுவரையில் காப்பாற்றி வரும் ஆடவல்லான் அருளால் எல்லாம் நன்மையாக நடக்கும்" என்று ஆறுதலாகத் தெரிவித்தாள்.

"இளைய பிராட்டியாரே! இதுவரையில் எதற்கும் கலங்காத என் மனம் இன்று ஏனோ கலங்குகிறது" என்றார், இராசராசர்.

"திடீரெனக் கலக்கம் ஏற்படக் காரணம் என்ன? கவலை என்கிறீர்கள், கலக்கம் என்கிறீர்கள், என்னிடம் மனம் விட்டுச் சொல்லக்கூடாதா?"

"இளையபிராட்டியாரே! பஞ்சவன்மாதேவி கடுமையாக நோய் வாய்ப்படுவார்களாம். இன்னும் சிறிது நாள்களில் இராசேந்திரனைச் சந்திக்காவிடில் பிறகு எப்போதும் என்னால் சந்திக்க முடியாது போய்விடுமாம். என் அருமைப் புதல்வன் என்னிடம் கொண்டிருக்கும் காரணமில்லாத கோபம் அவ்வளவு எளிதில் தீராதாம். கருவூர்த் தேவரைச் சந்தித்தால் அவரால் எங்கள்

இருவரிடையே பாசம் மீண்டும் மலருமாம்" என்று கூறிச் சற்று நேரம் மௌனமானார் இராசராசன்.

"இந்த நாட்டை, என் மகனிடம் ஒப்படைத்து விட்டு நான் ஓய்வு பெறப் போவதாக செய்துள்ள என் முடிவைச் சோதிடரிடம் கூறினேன். இராசேந்திரன் அதை அவ்வளவு எளிதில் ஏற்கமாட்டான் என்றும் சோதிடர் கூறுகிறார்" என்றார்.

இளைய பிராட்டியார் மெல்ல நகைத்து, "சோதிடருடைய கூற்று இங்கே பொய்யாகப் போகிறது" என்றாள்.

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"இராசேந்திரனைச் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துங்கள். பிறகு,நான் அவன் மனதை மாற்றுகிறேன்".

"நான் அழைத்தும் அவன் வரவில்லை. அவன் இருக்குமிடத்திற்கு நாம் செல்வோம் என்றால் இன்றைக்கு ஓரிடம் நாளைக்கு ஓரிடம் என்று இருக்கிறான். யாரோ ஓர் இளம் பெண்ணின் பேச்சைக் கேட்டு சுந்தரனை எப்படியெல்லாம் துன்புறுத்தியிருக்கிறானாம் தெரியுமா?"

"யார் அந்தப் பெண்?"

"கண்டறிந்து வரவும், முடிந்தால் இங்கு அழைத்து வரவும், கட்டளையிட்டு, "அவனும் கருவூர்த் தேவரைத் தேடி அலைகிறானாம்".

அங்கே மௌனம் நிலவியது.

இப்போது இளைய பிராட்டியே பேசினாள்: "கருவூர்த் தேவர் இருக்குமிடம் கண்டறிந்துவிட்டால் அங்கே நாம் செல்வோம். எல்லாம் சுமுகமாக முடிந்துவிடும்".

கொள்ளிடக் கரையில் கருவூர்த் தேவர் எங்கு தங்கியிருக்கிறார் என்பதைக் கண்டறிய வீரர்கள் விரைந்தனர்.

மாணிக்க சேகரன் கருவூர்த் தேவரை எங்கே சந்திப்பது என்று புரியாமல் மனம் போன போக்கில் நடந்துகொண்டிருந்தான்.

உறையூரைத் தாண்டி, திருவரங்கம் கடந்து கொள்ளிடக் கரையை அடைந்து, இனியும் நடக்க இயலாது என்ற நிலையில் மண்டபம் ஒன்றில் படுத்திருந்தபோது, அதிகாலை வேளையில் கருவூர்ச் சித்தர் அவன் எதிரே





தோன்றினார். சிதம்பரம் செல்லும் பாதையில் வீராணம் ஏரிக்கருகே, நாராயணப் பெருமாள் கோயில் அருகே வருமாறு தெரிவித்தார்.

திடுக்கிட்டு விழித்த மாணிக்க சேகரன் "இதோ வருகிறேன்" என்று பரபரப்புடன் எழுந்தான்.

அவன் அருகே வந்து நின்ற ஒற்றன், "எங்கே ஐயா போகப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நீ யாரப்பா என்னைப் பற்றி அன்புடன் கேட்பது?" என்று கேட்டான், மாணிக்க சேகரன்.

"எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான், சித்தர் ஒருவரைத் தேடிச் செல்வதாக நான் கேள்விப்பட்டேன். உங்களுக்கு உதவுவதற்காகத்தான் நான் உங்களைத் தொடர்ந்து வருகிறேன்" என்றான் ஒற்றன்.

"சற்று முன்பு சித்தர் கனவில் தோன்றினார். என்னை வீர நாராயணப் பெருமாள் கோயிலுக்கு வருமாறு சொன்னார்" என்றான் மாணிக்க சேகரன்.

சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ஒற்றனைக் காண வில்லை. வீர நாராயண ஏரிக்கரையிலுள்ள வீர நாராயணப் பெருமாள் கோயிலை அடைய வழி கேட்டுக் கொண்டு புறப்பட்டான், மாணிக்க சேகரன்.

அவனைத் தொடர்ந்து மற்றொரு சோழ நாட்டு ஒற்றன் வந்து கொண்டிருப்பதை மாணிக்கம் அறியமாட்டான். முதலில் சந்தித்த ஒற்றன், சோழ சக்கரவர்த்தியிடம் செய்தியைத் தெரிவிக்க விரைந்தான்; மற்றோர் ஒற்றன், மாணிக்கத்தைப் பின்தொடரும் பொறுப்பை ஏற்றான்.

அமாவாசை கழித்து, மூன்றாம் பிறை தெரிந்து வானத்தில் மதியரசன் மெல்ல வளர்ந்து கொண்டிருந் தான். ஒரு நாள் காலையில் வழக்கம்போல் நடைப் பயணம் தொடங்கிய மாணிக்கம், சிறிது தொலைவு சென்றவுடன் நடக்க முடியாமல் மயங்கிக் கீழே வீழ்ந்தான்.

எவ்வளவு நேரம் அவ்வாறு கிடந்தானோ அவன் கண் விழித்தபோது ஓலைக் குடிசை ஒன்றில் தான் கிடத்தப் பட்டிருப்பதையும், தன் அருகே இரு வீரர்கள் தான் கண் விழிப்பதை எதிர்பார்த்தவாறிருப்பதையும் உணர்ந்தான்.



"ஐயா! இந்தப் பாலைப் பருகுங்கள். பசி மயக்கம்தான் தங்களுக்கு. சற்று ஓய்வெடுங்கள். பிறகு இளவரசரிடம் அழைத்துச் செல்கிறேன்" என்றான்.

"இளவரசரிடம் அவன் அழைத்துச் செல்லப்பட்டான். தஞ்சைபுரி பெரிய கோயில் திருப்பணியின்போது இளவரசரை அவன் பார்த்திருக்கிறான்.

இளவரசரை வணங்கி எழுந்த அவன் இளவரசரை வைத்த விழி வாங்காமல் பார்த்தவாறு நின்றான்.

இளவரசர் அருகே நின்ற அதிகாரி அவனைப் பார்த்து, "தம்பி, நீ யார்? உன்னிடமிருந்த சிறு மூட்டையில் சிற்பப் பணிக்கான கருவிகள் இருக்கின்றன. ஒன்றுமே பேசாமல் இளவரசரை வைத்த விழி வாங்காது பார்த்து நிற்கிறாயே, -பேசமாட்டாயா?" என்று கேட்டார்.

மாணிக்கம் மெல்லப் பேசினான். "சில நாள்களுக்கு முன்பு விராலி மலையில் சந்தித்த இளவரசரின் திருக் குமாரரின் தோற்றத்திற்கும், இங்கே இளவரசரின் தோற்றத்திற்கும் உள்ள ஒற்றுமையை எண்ணி வியப் புற்றேன்" என்று கூறிய மாணிக்கம் நடந்தவற்றை ஒன்று விடாமல் விவரித்தான்.

இப்போது இளவரசரே பேசினார்: "பெரிய கோயிலைப் படைத்த சிற்பியர் குழுவைச் சேர்ந்த உன்னைக் காண்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. கருவூர்த் தேவரைச் சந்திக்கும் பேறு பெற்ற நீ மகா பாக்கியசாலி. வீர நாராயணப் பெருமாள் கோயில் அருகே உன்னைச் சித்தர் வரச் சொன்னாரா? அவரைச் சந்திக்கவே நாங்களும் புறப்பட்டோம். அந்தத் திருக்கோயில் மிக அருகேதான் இருக்கிறது, வா போவோம்" என்றார்.

கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் கடல் போல் பரந்திருந்த ஏரியின் மறுகரையில் கதிரவன் மறையும் காட்சியை மாணிக்கம் வியப்புடன் ரசித்துக் கொண்டிருந் தான். அவன் அருகே இராசேந்திர சோழரும் நின்று செங்கோளமாக வட்டத்திகிரி போல் கதிரவன் சுழன்ற வாறு இறங்கும் காட்சி கண்டு, 'அடடா... என்ன அழகு!' என்று மாணிக்கம் தன்னை அறியாது கூவினான்.

"கலைஞர்களால்தான் இந்த இயற்கையின் அற்பு தத்தைக் கண்டு, ரசித்துப் பேரானந்தப்பட முடியும்" என்றார், இளவரசர்.

அவரும் சூரிய தேவனுக்கு மாலை வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அப்போது மாணிக்கம் திடீரென்று, "அதோ, அதோ சித்தர் - சித்தர் போகிறார்" என்று கூவினான். அவன் காட்டிய திக்கில் ஓர் உருவம் ஏரியில் நீந்திச் சென்றது.

மாணிக்கம் கரை ஓரமாகவே, "சுவாமி, சுவாமி இதோ வந்து விட்டேன்" என்று கூறிக்கொண்டே ஓடினான். பிறகு ஏரியில் குதித்து அந்த உருவத்தை நோக்கி நீந்திச் செல்லத் தொடங்கினான்.



## 19. மனமும் மாசும்

இராசேந்திரனின் இளைய மகன் சுந்தரன், விராலி மலையைச் சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளை ரசித்த வாறு மலை மீதேறி சுனை இருக்குமிடம் வரையில் சென்றான். "இங்கு சித்தர்கள் வாழ்வதாக சொல்கிறார்களே, உண்மையா? நாம் யாரையாவது ஒரு சித்தரைச் சந்திக்க முடியுமா?" என்று கேட்டான் - தன்னுடன் வந்த அதிகாரியைப் பார்த்து. அதிகாரி, நண்பன், அந்தரங்கப் பணியாள் எல்லாமே அவன்தான். சுந்தரனின் நம்பிக்கைக்கு உகந்தவன்.

அவன் சிரித்தான். "சித்த மகா புருஷர்களை அவ்வளவு எளிதில் சந்திக்க முடியாது. எல்லார் கண்களுக்கும் அவர்கள் தென்படமாட்டார்கள்" என்றான்.

"ஏன்? அப்படி?" சுந்தரன் கேட்டான்.

"அப்படித்தான சொல்கிறார்கள். மனதில் மாசு உள்ளவர்கள் எதிரே அவர்கள் புலப்படமாட்டார்கள்".



சுந்தரன் அதிகாரியைக் கோபத்துடன் நோக்கி, "நீ என்ன சொல்கிறாய். மனதில் மாசு எனக்கிருக்கிறதா? உனக்கு இருக்கலாம்" என்றான்.

"இளவரசே! என்மீது கோபப்படாமல் இருந்தால் நான் சொல்கிறேன். பிற பெண்கள் மீது சபலம் ஏற்படும் குணம் இன்னும் தங்களுக்கு மாறவில்லை. அது ஒரு குற்றம்தான்". இளவரசர் என்றுதான் அவன் அழைப்பது வழக்கம்.

அதிகாரி கூறியதைக் கேட்டு சுந்தரன் நகைத்தான். "எனக்கு அப்படி ஒரு சபலம் இருப்பது உண்மைதான். தெளிவாகச் சொல்வதானால் இருப்பது என்பதைவிட இருந்தது என்பதே சரி. இப்பொழுது நினைத்தாலும் மூங்கில் துறை கிராமத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை மறக்க முடியவில்லை. முதுகில் இன்னும் இலேசான வலி. அன்று என்னைப் பிழியப் பிழியத் துவைத்தவர் என் தந்தையா, என் மூத்த சகோதரரா என்பது எனக்கு இன்றுகூட புலப்படவில்லை. அந்த ஆடலழகி வீரம்மாள் மீது எனக்கு ஆசை ஏற்பட்டது உண்மைதான்; பாவையரைப் பார்த்தவுடனேயே மனத்தைப் பலியிட்டு விடுவதை மாற்றிக் கொண்டுதானாக வேண்டும். பழையாறை நகரில் என் சிறிய தாயாரும் மற்றவர்களும் எனக்கு ஆறுதல் கூறியது உடல் புண்ணுக்கு ஒத்தடம் கொடுத்தது போன்றிருந்தது. அது மட்டுமா? உடனே எனக்குப் புதிய பொறுப்பைக் கொடுத்தார்கள், மதுரை நகருக்குச் செல்ல வேண்டும்; அங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று. என் மனம் இப்போது தூய்மையுடன் இருக்கிறது. அதில் சந்தேகமே வேண்டாம்!" என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டே சென்றான்.

இவ்வளவையும் கேட்ட பிறகு நண்பன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்? உன்னிடம் மனம் விட்டுப் பேசியது நகைப்பைத் தருகிறதா?" - சுந்தரன் சீறினான்.

"என்னை பொறுத்தருள வேண்டும் இளவரசே! மதுரையில் தாங்கள் ஏற்பது சாதாரண ஆட்சிப் பொறுப்பன்று; ஓர் அரசருக்குள்ள தகுதி, மரியாதை, உரிமை எல்லாம் உண்டு. இவ்வளவும் வந்தவுடன் தங்களுடைய சுயரூபம் மீண்டும் வெளிப்படாது என்பது என்ன நிச்சயம்? அதை நினைத்தேன்; சிரிப்பு வந்தது" என்றான்.

அதிகாரியாக நடத்தாமல், தோழனாக நடத்துவதால் அவன் அஞ்சாமல் கூறும் கருத்துகளை ஏற்றுத்தானே ஆகவேண்டும்.

"உன்னை இப்போதே இரண்டாக வெட்டிப் போட வேண்டும்" என்று பொய்க் கோபத்துடன், அவனை அடிப்பதற்காக கையை ஓங்கினான் சுந்தரன்.

"இளவரசே! மதுரையினின்று நால்வர் வந்தனர். அவர்களுள் அழகிய பெண்ணும் ஒருத்தி இருந்தாள். மதுரையில் பாண்டிய புரட்சிக்காரர்கள் கலகக்கொடி ஏற்றி விட்டார்கள் என்ற செய்தியை நால்வரும் தெரிவித்தார்கள். அந்தப் பெண் தன் காதலனைத் தேடி வந்திருக்கிறாள். தக்க துணையுடன் அவர்களைத் தஞ்சைக்கு அனுப்ப வேண்டியதுதானே உங்கள் கடமை! அவர்களை ஏன் இங்கே தங்குமாறு சொன்னீர்கள்? அந்தப் பெண்ணைத் தனியே அழைத்து வருமாறு என்னிடமும் தெரிவித்தீர்கள். மெல்ல மெல்ல சபலம் தலை தூக்கத் தொடங்கிவிட்டது என்பதுதானே உண்மை? அதனால்தான் நான் சொன்னேன், சித்தர் தங்கள் எதிரே எவ்வாறு தோன்றுவார் என்று!".

சுந்தரனிடம் எழுந்த கோபம் பறந்தோடியது. தன்னை நன்றாக உணர்ந்திருக்கும் தன் நண்பனைத் தட்டிக் கொடுத்து, "என்னை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். உண்மைதான். சிற்பியின் மகளைப் பார்த்தவுடனேயே என் வைராக்கியம் தவிடுபொடியாகி விட்டது" என்றான்.

பிறகு அதிகாரியை நோக்கிக் கேட்டான்: "அவள் பெயர் என்னவென்று சொன்னாள்?"

"குமுதம்".

"ஆ! குமுதம். அவள் வடிவைப் போலவே பெயரும் மிக அழகு. சிற்பியின் மகள். தன் தந்தையை விட்டுப் பிரிந்து வந்திருக்கிறாள். அவளுடன் வந்த மற்ற சிற்பிகள் பாண்டிய நாட்டுப் புரட்சிக்காரர்களின் கட்டளையை ஏற்கவில்லை. நாம் இப்போது என்ன செய்யலாம், நம்முடனேயே சிற்பிகளையும், குமுதத்தையும் மதுரைக்கே அழைத்துச் செல்வோமா?" சுந்தரன் கேட்டான்.

"வேண்டாம், வேண்டாம்! சிற்பிகள் அவர்கள் விருப்பப்படியே தஞ்சை செல்லட்டும். நாம் உடனே மதுரைக்குப்



புறப்படுவோம். புரட்சி இளைஞர்களின் பிடியிலிருந்து மதுரையை மீட்பது நமது முதல் பணி. விராலி மலையில் சித்தர்களைப் பிறகு தேடுவோம்" என்றான்.

அவன் சொல்வது நியாயமாகப் பட்டது என்றாலும் குமுதத்தை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆவலை அவனால் தணிக்க முடியவில்லை.

சுந்தரன் எதிரே குமுதம் நின்றாள். கூனிக் குறுகி நின்றாள். சுந்தரனை நேருக்கு நேர் பார்க்க விரும்பாமல் நின்றாள். சோழநாட்டு இளவரசரின் புதல்வர் எதிரே நிற்கிறோம் என்ற அச்சம் அவளிடம் நிறைந்திருந்தது. தன் காதலன் மாணிக்கசேகரனை உடனே சந்திக்க, உதவி செய்யக் கேட்க வேண்டும் என்ற ஆவலும் அவளுள் நிறைந்திருந்தது.

மீண்டும் மதுரைக்கு வருமாறு சுந்தரன் அவளை வற்புறுத்தினான். சோழர்களின் பெருமையை மதுரையிலும் பாண்டிய நாட்டிலும் நிலை நாட்ட வேண்டும் என்றால் அதற்குச் சிற்பிகளின் ஆதரவு மிகவும் தேவை என்று எடுத்துக் கூறினான்.



குமுதம் சம்மதிக்கவில்லை. தன் காதலன் மாணிக்க சேகரனைச் சந்திக்க உதவி செய்யுமாறு வேண்டினாள்.

"சோழ நாட்டின் பெருமையைப் பாண்டிய நாட்டில் நிலை நாட்ட நீ உதவ வேண்டாமா?" என்று சுந்தரன் கேட்டான்.

குமுதத்திற்குத் துணிவு ஏற்பட்டது. "இளவரசர் அவர்களே, தங்கள் கேள்விக்கு மறுமொழி கூறாமல் நான் சில செய்திகளைச் சொல்வதற்கு என்னைப் பொறுத்தருள வேண்டும். சோழநாட்டு இளவரசரின் விருப்பத்திற்கு மாறாக சிற்பிகளை மதுரைக்கு அழைத்துச் சென்று விட்டனர். சோழர்களின் பிடியிலிருந்து தங்கள் நாட்டை மீட்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டுள்ள இளைஞர்கள் சிற்பிகளைச் சிறைப்படுத்தி, தங்கள் விருப்பத்திற்கு இணங்கச் செய்துள்ளனர். சிற்பிகள் சோழ நாட்டின் பெருமையை எவ்வாறு நிலைநாட்டப் போகிறார்கள்? தவிர சாளுக்கியர்கள் பயங்கரமான சதி திட்டம் ஒன்றை உருவாக்கி யிருக்கிறார்கள். தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருப்பணியைச் செய்த சிற்பிகளை வாதாபிக்கு அழைத்துச் சென்று விடப் போகிறார்களாம். இப்போது நீங்களே முடிவு செய்து சொல்லுங்கள். மீண்டும் நாங்கள் மதுரைக்கு வரவேண்டுமா?" என்று குமுதம் மெல்ல, ஆனால் அழுத்தமாக மரியாதையுடன் பேசினாள். முதலில் சுந்தரனை நேருக்கு நேர் சந்திக்க அஞ்சியவள் இப்போது துணிவுடன் பேசினாள்.

அவள் பேசுவதை சுந்தரன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் பேசும்போது ஏற்படும் முக உணர்ச்சிகளைக் கவனித்தான். சிற்பியின் மகளுக்குச் சிற்பம் போன்று பேரழகா? அவன் வியப்படைந்தான். அவள் பேசுவதைக் காலம் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம் போன்ற ஆவல் துள்ளி நின்றது.

"சிற்பிகளுடன் நீ தனியே பயணப்படுகிறாயே, உனக்குப் பயமாக இல்லையா?" சுந்தரன் கேட்டான்.

"சிற்பிகள் என் உடன் பிறவா சகோதரர்கள். அவர்கள் எனக்குத் துணை. அவர்களுக்கு நான் ஆதரவு".

இதைக் கேட்டு சுந்தரன் பெரிதாக நகைத்தான்.

"சோழ நாட்டில் யாரைச் சந்திக்கப் போகிறீர்கள். அங்கே இப்போது எந்தத் திருப்பணியும் நடைபெற



வில்லை. கலைஞர்கள் தங்கள் அருமையான நேரத்தை வீணாக்கக் கூடாது".

சுந்தரன் அவள் விழிகளைக் கூர்ந்து நோக்கினான். சுந்தரனைப் பற்றித் தவறாக நினைக்காத குமுதம் மிக இயல்பாகப் பேசினாள் :

"மாணிக்க சேகரன் சில நாட்களுக்கு முன்பு தஞ்சைக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார். அங்கு சென்றவுடன் அரசகுமாரர் இராசேந்திர சோழ தேவரை அவர் சந்திப்பார். சோழ நாட்டில் மாபெரும் கலைப் பணியை இராசேந்திரசோழ தேவர் தொடங்கத் திட்டமிட்டிருக்கிறாராம். நானும் அவர்களுடன் சேரப்போகிறேன்".

குமுதம் கூறியதைக் கேட்ட சுந்தரன் திடுக்கிட்டான். 'நமக்குத் தெரியாத பல செய்திகள் இந்தச் சிற்பியின் மகளுக்குத் தெரிந்திருக்கிறதே!' என்ற வியப்பு ஏற்பட்டாலும், அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல், "மாணிக்க சேகரன் சென்றிருக்கிறான் என்றால், மற்ற சிற்பிகளுடன் நீ ஏன் போகிறாய்? உன் தந்தை பெரிய கல்தச்சர் - அவரை விட்டுவிட்டு யாரோ ஒருவரைத் தேடிச் செல்வதன் நோக்கம்?"

குமுதத்திற்கு உடனே என்ன மறுமொழி சொல்வதென்று தெரியவில்லை. முகத்தில் செம்மை படர, "யாரோ ஒருவரைத் தேடிச் செல்லவில்லை. இளவரசர் அவர்களே, உயிரைத் தேடிச் செல்கிறேன்! அது சாதாரண உயிர் அன்று; கலைப்பற்று மிகுந்த அழியாத உயிர் உடலை இங்கே விட்டு விட்டு உயிரை அங்கே அலைய விட முடியுமா? இளவரசர் அவர்களே! எங்கள் பயணத்துக்கு உதவ வேண்டும். சோழ நாட்டின் எல்லைக்குள்ளும் விரோதிகளின் ஒற்றர்கள் பல்வேறு உருவங்களில் நடமாடுகிறார்கள். அவர்களால் எங்களுக்கு எந்தக் கணத்திலும் ஆபத்து ஏற்படாமல் உதவி செய்யுங்கள்" என்றாள்.

சுந்தரனுக்கு ஒன்றும் புரியவில்லை. தன் தந்தையின் எண்ணத்துக்கு மாறாக, மதுரைக்குச் சிற்பிகளை அனுப்பியவர்கள் யாராக இருக்கும் என்று சிந்தித்தான். சிற்பியின் மகளையும் பிரிய மனமில்லை - குமுதத்தின் வேண்டுகோளை நிறைவேற்றாமலிருக்கவும் முடியவில்லை.

"நான் மீண்டும் தவறு செய்கிறேனோ?" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.

அப்போது, வெளியே யிருந்து சுந்தரனின் நண்பன் விரைந்து வந்தான். அவன் பரபரப்புடன் சொன்னான் :

"இளவரசே! குதிரை வீரன் மதுரையினின்று செய்தி ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறான். மதுரையிலுள்ள நம் படைத் தலைவரைக் கொன்று நம்மவர்கள் தங்கியிருக்கு மிடத்தைப் பாண்டியர்கள் கைப்பற்றி விட்டார்களாம்".

சுந்தரனுக்குக் குழப்பம் அதிகமாகியது. "இனியும் ஒரு கணம்கூட இங்கே தங்கியிருக்கக் கூடாது; உடனே படை வீரர்களை ஆயத்தப்படுத்து. மதுரையை நோக்கி நாம் விரைவோம்" என்றான்.

குமுதம் அடுத்து என்ன செய்வதென்று புரியாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். திரும்பிப் பார்த்த சுந்தரன், "குமுதத்தையும், அவளுடன் வந்த சிற்பிகளையும் மதுரைக்கு அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டு, மதுரையை நோக்கிப் படைகளுடன் புறப்பட்டான்.



## 20. நீயும் நானும் மட்டும்

வீரநாராயண ஏரிக்கரையில் அமைந்துள்ள, வீரநாராயணபுரத்து மாளிகையில் இராசேந்திரன் வருகைக்காக பரிவாரத்தினர் காத்திருந்தனர்.

இளவரசர் தங்கும் மாளிகையிலேயே விசாலமான இடம் வீரம்மாளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த அறையைப் பார்க்கப் பார்க்க வீரம்மாளுக்கு அதிசயமாயிருந்தது.



தரையில் மெத்தென்ற கம்பளமும், இரவில் தீபமேற்ற தொங்கும் சர விளக்குகளும், மஞ்சமும், பஞ்சணை மெத்தைகளும் எல்லாமாகச் சேர்ந்து அவளைத் திகைக்க வைத்தன. தஞ்சாபுரி மாளிகையின் அந்தப்புரத்தில் வாழும் பெண்டிர்கள் இத்தனை சுக போகங்களை அனுபவிக்கிறார்களா!

சிறிது நேரத்திற்கு ஒருமுறை பணிப்பெண் ஒருத்தி வருகிறாள். மிக வணக்கத்துடன், "என்ன வேண்டும்?" என்று கேட்கிறாள். எல்லா இளம் பெண்களும் மேல் கச்சைமட்டும் அணிந்திருந்ததும், அவர்கள் நடந்து வரும் அழகும், இயற்கையா செயற்கையா என்று புரிந்து கொள்ள முடியாமல் இதழ் விரித்துச் சிரித்துப் பேசும் உபசார வார்த்தைகளும், மாளிகைச் சோற்றை உண்டதால் ஏற்பட்டிருக்கும் மேனி மினுமினுப்பும், பட்டாடைகள் உடுத்திய பணிப் பெண்களைக் கண்டு வீரம்மாள் வியப்படைந்தாள்.

காலம் எப்படியெல்லாம் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இன்னும் என்னென்ன எதிர்பாராத நிகழ்ச்சிகள் தன் வாழ்க்கையில் விளையப் போகின்றனவோ என்று வீரம்மாளுக்குச் சற்று அச்சம் ஏற்பட்டது.

தன் சகோதரன் எந்தக் கவலையு மில்லாமல் அரசுப் பணியென்று சதா அலைகிறான். என் உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை என் சகோதரன் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. சோழ அரச குடும்பத்தாரோடு என்னைப் பழக விடுவதன் நோக்கம் என்னவாக இருக்க முடியும்? எனக்கு நடனக் கலையைக் கற்றுத்தருவதில் இளவரசர் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்கிறார். என் நலன்களை அவ்வப்போது கேட்டறிகிறார். மூங்கில் துறையிலிருந்து, சிதம்பரத்திற்கே குடிபெயர்ந்து வருமாறு செய்து விட்டார். தான் செல்லும் இடத்திற்கு இப்போது என்னை உடன் அழைத்துச் செல்கிறார். இளவரசர் பரிவு காட்டுவதால் மற்றவர்கள் என்னை மிகுந்த மரியாதையுடன் நடத்துகின்றனர்.

வீரநாராயண ஏரிக்கரைக்குச் சென்ற இளவரசர் இன்னும் திரும்பவில்லை என்று மாளிகையில் உள்ளவர்கள் பேசிக் கொண்டனர்.

"நீங்கள் இளவரசருடன் செல்லவில்லையா?" என்று ஒரு பணிப் பெண் கேட்டாள். பணிப் பெண்களுக்குக் கட்டளை

யிடும் அதிகாரிச்சிகள் மாளிகையில் குறுக்கும் நெடுக்கு மாகச் செல்கிறார்கள். இளவரசர் பகல் உணவுக்கும் வரவில்லை; இருக்கும் இடத்திற்கும் உணவைக் கொண்டு வருமாறு கட்டளை வரவில்லை என்று மாளிகையிலுள்ள வர்கள் கவலைப்பட்டார்கள்.

தங்குமிடத்தைவிட்டு அவளால் வெளியே சுதந்திரமாக வரமுடியவில்லை. மேல் மாடத்திற்குச் சென்று பார்த்தால் கண்ணுக்கெட்டிய தொலைவுவரை பெரிய தோப்புகள். பசுமையான இயற்கைச் சூழல்!

நறுமணநீரில் குளித்து முடித்தவுடன், கூந்தல் உலரச் செய்ய அகில் புகையை ஒரு பணிப் பெண் மிகவும் இத மாக, பதமாக இட்டாள். வாசனைத் தைலம் தடவி, ஒரு பணிப் பெண் கூந்தலை வாரி புதுவிதமாக அலங்கரித் தாள்.

உச்சிப் பொழுது தாண்டியவுடன், வெள்ளித் தட்டில் பட்டுத் துணியால் மூடப்பட்டு பகல் உணவை ஒருத்தி கொண்டு வந்தாள். மூடிய துணியை மீறி உணவுப் பதார்த் தங்களின் மணம் நாசியைத் துளைத்தது.

"இளவரசர் பகல் உணவுக்கு இன்னும் வரவில்லையா?" என்று வீரம்மாள் கேட்டாள்.

மிகப் பணிவுடன் பணிப்பெண் சொன்னாள் : சித்த ரைத் தேடி ஏரிக்கரையில் வெகுதூரம் சென்று விட்டார் களாம்.

"மாளிகைக்குத் திரும்பி வதற்கு நேரமாகும் நீங்கள் பசியாறுங்கள்".

"இந்த ஊரிலுள்ள திருமால் கோயிலுக்குச் சென்று வரலாமா?" வீரம்மாள் கேட்டாள்.

பணிப் பெண், அறைக்கு வெளியே சென்றாள். அவள் திரும்பி வரும்போது அதிகாரிச்சியும் உடன் வந்தாள். மிகப் பணிவுடன் அவள் பதில் சொன்னாள்.

"இன்று கோயிலுக்குச் செல்லத் திட்டமிடப்படவில்லை; மேலும் உச்சிகால பூஜை முடிந்திருக்கும். இளவரசர் வந்தவுடன் கேட்டுத் திட்டம் வகுத்துத் தங்களுக்குத் தெரிவிக்கிறோம்".



வீரம்மாளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'கோயிலுக்குச் செல்வதற்கும் திட்டமிட வேண்டுமா? இளவரசரைக் கேட்க வேண்டுமா?'

'ஏ, வீரம்மா! உனக்கு யோக காலம்! வெள்ளித் தட்டில் உணவு பரிமாறுகிறார்கள். நெய்யுடன் சோறு. மீன் உணவு, இனிப்பு வகை, வெஞ்சனங்கள், உணவுக்குப் பிறகு முக்கனிகள், உண்டபிறகு கை கழுவ வெந்நீர், தண்ணீர் ஊற்ற ஒருத்தி. துடைக்க பட்டுத் துணி ஏந்தி ஒருத்தி. மூங்கில் துறையில் சிறு குடிலில் தரையில் படுத்த உனக்கு அழகான பஞ்சணை மெத்தை!' - வீரம் மாளின் உள் மனம் கேட்டது.

ஒரு பணிப்பெண் மெல்லிய குரலில், "சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் - அதோ பஞ்சணை" என்று கூறிய படி கையில் மயில் தோகை விசிறியுடன் கட்டிலருகே வந்து நின்றாள்.

சாதாரணமாக பகலில் தூங்கிப் பழக்கப்படாத வீரம் மாளுக்கு வசதி நிறைந்த அந்த இடத்தில் கண்ணைச் சுழற்றியது.

எவ்வளவு நேரம் தூங்கியிருப்பாளோ - யாரோ அவ ளருகே வந்து எழுப்புவது தெரிந்து, திடுக்கிட்டு விழித் தெழுந்தாள்.

அந்த அறையில் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. நறு மணப் புகை அலறயில் சூழ்ந்திருந்தது.

"அம்மா, இளவரசர் வந்து விட்டார்; இன்னும் சிறிது நேரத்தில் உங்களைத் தேடி வரப்போகிறார்" என்றாள் அதிகாரிச்சி.

வீரம்மாள் பரபரப்புடன் எழுந்தாள். 'இளவரசர் வரு கிறாரா? - ஐயோ நான் இப்படித் தூங்கு மூஞ்சியாகி விட் டேனே. ஆடைகள் கசங்கி, முகத்தில் தூக்கக் கலக்கமு மாய்...' அவள் வார்த்தைகளை முடிக்கவிடாமல் குறுக் கிட்ட அதிகாரிச்சி, "நொடியில் உங்களுக்கு அலங்காரம் செய்விக்கிறோம். முதலில் காய்ச்சிய பசும்பாலை அருந் துங்கள். இதோ" என்று உபசரித்தாள்.

வீரம்மாளுக்கு வெட்கமாக இருந்தது. தன்னை மறந்து நெடுநேரம் தூங்கலாமா?

"இளவரசர் எப்போது வந்தார்? என்னைப் பற்றிக் கேட்டாரா? நான் தூங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னீர்களா?" என்று கவலையுடன் கேட்டாள்,வீரம்மாள்.

பணிப் பெண்களும் அதிகாரிச்சியும் மெல்ல நகைத்துக் கொண்டனர்.

வீரம்மாள் மீண்டும் நீராடி, புத்தாடை அணிந்து மலர் சூடி, இளவரசர் வருவதற்காகக் காத்திருந்தாள். தனியே இளவரசரைச் சந்திக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி உள்ளத்தில் நிறைந்திருந்தாலும் உடலில் மெல்லிய பயம் நடுக்கத்தை அளித்தது.

இதுவரை இளவரசரைச் சந்திக்கும் போது யாராவது உடனிருந்திருக்கிறார்கள்.

இதுவரை இளவரசரைச் சந்தித்தது திடீரென ஏற்பட்ட நிகழ்ச்சி.

இதுவரை இளவரசரைச் சந்திக்கப் போகும்போது இதுபோன்ற அலங்காரங்கள் செய்து கொண்டதில்லை.

இதுவரை ஒரு தடவைகூட சகோதரனுக்குத் தெரியாமல் சந்தித்ததில்லை.

இன்று, வீரநாராயணபுரத்து அரசமாளிகையில் இளவரசரைச் சந்திக்க வேண்டும் என்று விதி திட்டம் வகுத்திருந்தால் அதை மாற்ற முடியுமா?

கம்பீரமாக இந்த அறைக்குள் நுழையும் இளவரசரை எப்படி வரவேற்கலாம்?

இரு கை கூப்பி வரவேற்கலாமா? பாதங்களைத் தொட்டுக் கும்பிடுவோமா?

ஒரு புது முறையாக, வணக்கம் கூறுவதற்கு நாட்டிய முத்திரையைப் புலப்படுத்தலாமா?

என் நலனைப் பற்றிக் கேட்டறிவார். நடனத்தில் புதிதாகக் கற்றதைப் பற்றிச் சொல்லுமாறு கேட்பார்.

இளவரசர் கலா ரசிகர். அவரே ஒரு கலைஞர். அவர் நடனமாடுவார் என்று சகோதரன் கூறியிருக்கிறான்.

நாட்டியக் கலையில் அவருக்குள்ள ஆர்வம்தான், என் மீது அவருக்கு அன்பு ஏற்பட காரணமாக இருக்கலாம்!

இந்த மாளிகையிலுள்ள பணிப் பெண்களுக்கும், அதிகாரிச்சிகளுக்கும் பொறாமை இருக்குமோ? ஓர் எளிய குடிமகளுக்கு, அரச குடும்பத்துப் பெண்களுக்கு உள்ள



மரியாதை, உபசாரமா? - ஒருவேளை அப்படியும் அவர்கள் நினைக்கலாம்.

நான் சாதாரண குடிமகள் அல்லவே - சோழ நாட்டின் ஒரு பகுதி வீரர்களுக்குத் தலைவராகத் திகழ்பவரின் தங்கை. எங்கள் குடும்பத்தினர் சோழ அரசர்களிடம் நம்பிக்கையுடன் பணியாற்றியிருக்கிறார்கள்.

காலில் சலங்கையை அணிந்து கொள்வோம். இடுப்புச் சேலை நழுவாமல் இருக்க முத்துவட ஒட்டியாணம் அணிந்து கொள்வோம்.

விழிகளுக்கு மை தீட்டிக் கொள்வோமா? ஆம், ஆம் மறந்துவிட்டோம்.

"யாரங்கே?" என்று கை தட்டி அழைத்தாள். இளவரசர் வருவதற்கு முன்பு ஒப்பனைகளை முடித்துக் கொள்வோம். வீரம்மாளின் மனம் பரபரத்தது.

ஒப்பனை முடிந்துவிட்டது. குறிப்பறிந்து சிறு பட்டுத் துகிலை பணிப்பெண் நீட்டினாள். முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன. இளவரசர் வந்துவிடுவார். ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

இளவரசர் இன்னும் வரவில்லை. மஞ்சத்தில் அமர்ந்தாள். சாளரம் அருகே சென்று வெளியே பார்த்தாள். அப்போதுதான் சந்திரோதயம் ஆகியிருந்தது. மெல்லிய பூங்காற்று வீசிக் கொண்டிருந்தது.

இளவரசர் இன்னும் வரவில்லை. என்னைத் துயிலிலிருந்து எழுப்ப இது போன்ற பொய்யைச் சொல்லிவிட்டார்களா?

அவளுக்குக் கோபமாக வந்தது. பணிபுரிபவர்களுள் யாரையாவது அழைத்துக் கோபமாக இரண்டொரு வார்த்தைகளாவது பேசவேண்டும் போல் தோன்றியது.

அறைக் கதவு திறந்தது. அதிகாரிச்சி வேகமாக வந்தாள்.

"இளவரசர் இங்கே வரவில்லை. புறப்பட்டுச் செல்கிறார். தங்களை ஏரிக்கரைக்கு அழைத்து வருமாறு அவர் கட்டளை யிட்டுள்ளார்" என்று சொல்வதற்குள் ஏனோ அவளுக்கு மூச்சு வாங்கியது.

வெளியே, இளவரசரும் பரிவாரங்களும் புறப்பட்டுச் செல்லும் ஓசை. தீவர்த்திகள் வரிசையாக அசைவது தெரிந்தது.

வீரம்மாள் உட்கார்ந்திருந்த சிவிகை அசைந்தாடிச் சென்றது. திரையை விலக்கிப் பார்த்தபோது, வீதியின் இருபக்கங்களிலும் கூடிநிற்கும் ஊர்மக்கள் ஆவலுடன் சிவிகையை நோக்குவது தெரிந்தது. ஆமாம்; இளவரசரைத் தொடர்ந்து யார் செல்கிறார்கள் என்று அறிய ஒருவரோடொருவர் பேசிக் கொள்வதும் அவளது காதில் விழுந்தது.

வீரம்மாளுக்கு பெருமையாக இருந்தது. இருபுறமும் குதிரை மீது வீரர்கள். 'ஓ! பாதுகாவலர்களா? என்னை யார் கவர்ந்து சென்று விடப்போகிறார்கள்!' – நினைக்கும் போது தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். பாவம். சுந்தரன் இப்போது பழையாறையிலிருக்கிறானோ தஞ்சையிலிருக்கிறானோ – அவன் என் மீது மோகங் கொண்டது தவறுதானே. அம்மா என்றழைத்து, வேரற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கினானே! என் அழகுதானே அவனுக்குத் தண்டனையையும் அவமானத்தையும் பெற்றுத் தந்தது. அதுபோல் வேறு எவராவது தவறாக நடக்க முயலலாம்.

அதுசரி; இளவரசருக்கு என்ன அக்கறை? சோழ நாட்டில் என்னைவிட எவ்வளவோ அழகிகள். அவர்களுக்கு எல்லாம் இவர் பாதுகாப்பு தருகிறாரா? காரணம் இருக்கிறது. அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவருடைய தங்கை, நான். அதனால்தான்...

அது மட்டுமா? – அவள் சிந்தனை அதற்கு மேல் செல்லவில்லை. சிவிகை இப்போது இருள் நிறைந்த சாலையில் சென்று கொண்டிருந்தது. இருபுறமும் மரகதப் பச்சை வயல்கள் வெண்ணிலவில் மேலும் அழகுடன் விளங்கின.

ஏரிக்கரையருகே தீப்பந்தங்கள் காற்றில் அலைபாய்ந்து கொண்டிருந்தன.

இராசேந்திர சோழர் அங்குதான் இருக்கிறார். சிவிகையிலிருந்து, வீரம்மாள் இறங்கியவுடன் அவளை ஏரிக்கரையருகே அழைத்துச் சென்றனர். அங்கு சிறு குடிலோ, குடிசையோ தங்குவதற்கு ஒரு மண்டபமோகூட இல்லை.

பெரிய படகு ஒன்று இருந்தது. கொள்ளிடத்தைக் கடக்க வரும் அரச குடும்பத்தவர்களை ஏற்றி வரும் படகை விடப் பெரியதாக இருந்தது, அந்தப் படகு. அதை சிறு மரக்கலம் என்றும் சொல்லலாம்.



'இளவரசர் தங்கள் வருகைக்காகக் காத்திருக்கிறார்' என்று கூறினார்கள்.

படகில் ஏறிச் செல்ல, சாய்வான மரப்பாலம் இருந்தது.

'படகில் ஏறி எங்கே செல்லப் போகிறோம்? யாரைக் கேட்பது?' என்று தெரியாமல், வீரம்மாள் நடந்து சென்றாள். மெல்லிய பட்டுத் துகிலால் போர்த்திக் கொண்டிருந்தாள். காலில் அணிந்திருந்த சலங்கை ஜல்ஜல் என்று ஒலித்தது.

படகின் மேல் தளத்தில் இராசேந்திர சோழர் கம்பீரமாக அமர்ந்திருந்தார். கீழே விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில் திருமந்திர ஓலை நாயகம் அமர்ந்திருந்தார். வீரம்மாள் இளவரசரை வணங்கி, பணிவுடன் ஓரமாக நின்றாள். வானத்தே வட்ட நிலா பவனி வந்துகொண்டிருந்தது.

"நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டாயா வீரம்மா?" என்று இளவரசர் கேட்டார். 437428/ 610547

பேச நா எழவில்லை. தலையசைத்தாள் வீரம்மாள்.

வானத்தை ஒருமுறை பார்த்து, வீரம்மாளையும் நோக்கினார் இளவரசர். வீரமமாள் புரிந்து கொண்டாள்.

அவர் குறிப்பின் மூலம் கூறவந்ததை, வீரம்மாள் புரிந்து கொண்டு நாணத்தால் தலைகுனிந்தாள்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

படகு நகர்ந்தது. அதை ஏரி என்பதை விட வீரநாராயணபுரக் கடல் என்று சொல்லலாம். கரையிலிருந்த தீவர்த்திகள் மெல்ல மெல்ல ஒளி குன்றி அகல் விளக்கைப் போல் காட்சியளிக்கத் தொடங்கின. நடுத்தளத்தில் படகைத் தள்ளுவோர் ஒரு பக்கத்திலிருந்து மறு முனைக்குச் சென்று வரும் 'தடதட' ஓசையைத் தவிர வேறு ஒலிகளற்ற அந்த வேளையில் நான்கு பக்கமும் ஏரி நீர் சூழ்ந்திருக்க, வானத்தில் முழுமதி சிரித்து நிற்க, இளவரசர் அவளைப் பார்த்து நிற்க எங்கோ சுவர்க்க புரியில் நடைபெறும் சம்பவம் போல் தோன்றியது.

'எங்கே செல்கிறோம்? இந்த இரவு நேரப் பயணத்தை இளவரசர் தேர்ந்தெடுத்தது எதற்காக?' என்று புரியாமல் நின்றிருந்த வீரம்மாளின் தனிமை உணர்வை இளவரசர் போக்கினார்.

"இப்படி ஓர் அழகிய சூழல் உனக்குப் பிடித்திருக் கிறதா" இளவரசர் கேட்டபோது அதில் மிக நெருக்கம் புலப்பட்டது.

அதற்கு வாய் திறந்து மறு மொழி கூறாமல் 'ஆம்' என்ற பொருளில் தலையசைத்தாள்.

"இதுபோன்ற அமைதியான சூழ்நிலை வேறெங்கும் அமையும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றார் இளவரசர்.

வீரம்மாளுக்கு மெல்ல மெல்லத் துணிவு ஏற்பட்டது.

"குழல் இன்னிசை எழுப்பும் வீணையும், தாளமும் ஒலிக்க இங்கே நீ ஆடினால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தேன்" என்றார் இளவரசர்.

அவளும் விழிகளை மூடியவாறு அந்தக் காட்சியை மனக் கண்முன் கொண்டு வந்தாள்.

"அந்தக் குழல் வீணைக் கலைஞர்களை இங்கே அழைத்து வர மறந்து விட்டேன்" என்றார் இளவரசர்.

வீரம்மாள், இளவரசரை நோக்கினாள்; அந்த விழி களில் கலை ஆர்வம் ததும்பி நின்றது.

இங்கிதம் அறிந்த திருமந்திர ஓலை நாயகம் அங் கிருந்து எழுந்து சென்றார். இப்போது இளவரசரும், அவளும்தான்.

"வீணை, குழல் கலைஞர்களை நான் அழைக்க மறந்து விட்டதாக நீ நினைக்கிறாய் அப்படித்தானே? இல்லை! மறக்கவில்லை. இந்த யாத்திரையின்போது நீயும், நானும் மட்டும் தனியே இருக்க வேண்டும் என்று எண்ணினேன்".

இளவரசர் கூறியது கேட்டு, வீரம்மாள் திடுக்கிட்டாள்.

நீயும் நானும் மட்டும் தனியே இருக்க வேண்டும் –

நீயும் நானும் மட்டும் தனியே இருக்க வேண்டும் –

வீரம்மாளின் செவிகளில் இளவரசரின் சொற்கள் ரீங்காரமிட்டன.

"ஏன்? ஏன்? ஏன்?' என்று அவள் இதய ஒலி திரும்பத் திரும்ப அவளையே கேள்வி கேட்டது.

"வீரம்மா, இந்த அருமையான அமைதி உனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லையா? உன் முகத்தில் இன்னும் அச்சத்தின் சாயல் இருக்கிறதே – ஏன்? இது போன்ற



சூழ்நிலையை நான் எதிர்பார்த்தேன். இனிய பாடலுக்கு ஏற்ப அழகி ஒருத்தி நடனமாட அதைக் கேட்டுக்கொண்டே யுகயுகாந்தரங்களைக் கழிக்க வேண்டும் எனும் ஆவல் நீண்ட காலமாய் என்மனத் தடாகத்தில் பொங்கி நிற்கிறது வீரம்மா! இன்று அப்படியொரு வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

"என் முப்பாட்டனாருக்கும் பாட்டனார் பராந்தக சோழ தேவரின் இந்த முயற்சியான வீரநாராயண ஏரியின் நடுவே, இந்தப் படகில் நடனமாட உன்னைவிடச் சிறந்த அழகி யார் இருக்கிறார்கள்? நல்லதொரு பாடல் வேண் டும். நீ அண்மையில் கற்ற பாடலைப் பாடிக் கொண்டே ஆடு. அந்தப் பாடல் எனக்குத் தெரிந்திருந்தால் அந்தப் பாடலை நான் பாடுகிறேன் நீ ஆடு".

இளவரசர் மனம் உவகையால் பொங்கித் ததும்புகிறது என்பது அவர் பேச்சிலிருந்து தெரிந்தது. முழுநிலவைக் கண்ட கடல் ஆர்ப்பரித்து எழுவதுபோல் அவருடைய முழுத் தோற்றமும் புலப்படுத்தியது.

வீரம்மாளின் மெய் சிலிர்த்தது.

"என்ன யோசனை வீரம்மா? பாடு, பாடு, பால்நிலவை வீணாக்காமல் பாடிக்கொண்டே ஆடு" – என்றார்.

வீரம்மாளின் பாதங்களில் ஒரு புத்துணர்ச்சி. கரங்கள் நெளிய ஆயத்தமாயின. இடை குலுங்க உத்தரவை எதிர் பார்த்தது. மனப் பறவை கற்ற புதிய பாடலைத் தேடிப் பறந்தது. தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

"பாடு வீரம்மா, பயம் விட்டுப் பாடு!"

"பொன்னார் மேனியனே – ..."

வீரம்மாள் மெல்லப் பாடத் தொடங்கினாள்.

"ஆஹா... நானும் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் இந்தப் பதிகத்தைத்தான் எதிர்பார்த்தேன். வீரம்மா நீயும் நானும் ஒன்றாகவே நினைத்து விட்டோம்" என்று கூறி உணர்ச்சி பொங்க சிறு குழந்தை போல் குதித்தவாறு இருந்த இடத்திலிருந்து ஓடிவந்த இளவரசர் உணர்ச்சி மிகுதியால் அவளை அணைத்துக் கொண்டார்.

களங்கமற்ற நீலவானத்தில் திடீரென ஆயிரம்கோடி மின்னல்கள் தோன்றின போல் வீரம்மாள் உணர்ந்தாள். நினைவு தடுமாறுவது போல் ஒரு மயக்கம்! சட்டென்று கீழே சரிய முயன்றவளை இராசேந்திரன் தாவிப்பிடித்துத் தன் வலுவான கரங்களில் தாங்கிக் கொண்டார்.



# 21. சிரிப்பும் சிந்தனையும்

வீரம்மாள் மௌனமாக ஏரிக்கரையை நோக்கியவாறிருந்தாள். கண்ணுக்கெட்டிய தொலைவு வரை வீரநாராயண ஏரி கடல் போல் விரிந்திருந்தது. அவள் கடலைப் பார்த்ததில்லை. கடல் இப்படித்தான் இருக்கும் போலும்! என்று நினைத்தாள். அலை எழும்பிக் கரையில் மோதும் என்று சொல்கிறார்களே! உம்; இந்த ஏரியிலும் சிறுசிறு அலைகள் படகில் வந்து மோதுகின்றன. நெஞ்சில் எழும் அலைகளின் உயரம் நாளுக்குநாள் அதிகமாகின்றது. மனத்தின் அடித்தளத்திலிருந்து மேல் விளிம்பு வரை மோதி மோதித் தணிகிறதே!

அமைதியாகச் சிந்திக்க நேரம் கிடைத்தது. பணிப் பெண்கள், சேடிகள், அதிகாரிச்சிகள் என்று கூடித் தனிமை உணர்வைக் கலைக்க இப்பொழுது இங்கு யாருமில்லை. நெஞ்ச அலைகளின் இரைச்சல் எழுந்து எழுந்து தணிந்தது.

அன்று இரவு படகில் தான் நடனமாடியதும், இளவரசர் ரசித்துத் தானும் அந்தப் பாடலின் பொருளுக்கு ஏற்ப ஆடியதையும் நினைத்துக் கொண்டாள்.

ஆகா; என்ன கம்பீரம்! ஆனால், இளவரசர் திடுமென்று அப்படிச் செய்வார் என்று அவள் ஒருபோதும் நினைத்ததில்லை. எழுந்தோடி வந்து அணைத்துக் கொள்வார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அப்போது எழுந்த உணர்ச்சியை - அதிர்ச்சியை, அந்த இனிய அனுபவத்தை இப்போது கற்பனை செய்து பார்க்க முயன்றாள். இளவரசர் பாராட்டும் அளவுக்கு நான் ஆடுகிறேனா? அவ்வளவு அற்புதமாக ஆடுகிறேனா? இல்லை - நடனக் கலையில் நான் சின்னஞ் சிறியவள். அவர் என்னை உற்சாகப் படுத்தவே அதிகமாகப் புகழ்கிறார்.



படகு கரையை அடைந்த பிறகும் நாங்கள் கரை இறங்கவில்லை. அவர் அணைப்பிலிருந்து விடுபட்டேன். யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். மேலே நீலவானம். நட்சத்திரங்கள் சூழ சந்திரன். சுற்றிலும் ஏரி நீர் தவிர வேறு யாருமற்ற அந்த ஏகாந்த வேளையாயிருந்தாலும் அவரைப் பார்க்கவே எனக்கு மிக நாணமாக இருந்தது. அந்தக் கரங்கள் போர்க்களத்தில் வாளையும் வேலையும் பிடித்து இரும்பாகியிருக்கும் என்று எண்ணியிருந்தேன். ஆகா; அவர் கரம் எவ்வளவு மென்மையாக இருந்தது?

நெருங்கிப் பேசவே அஞ்சம்படியான அவர் பேச்சும் குரலும் என்னிடம் நெருங்கி யிருந்தபோது கன்னலும், கரும்பின் சுவையுமாக இருந்தன.

'போகலாமா,' என்று கேட்டு, அவர் என்னை அழைத்துச் சென்றார். படகிலிருந்து இறங்கும்போது மெல்லக் கை கொடுத்தார். இப்போது சுற்றிலுமிருந்த விழிகள் எங்களையே பார்த்தன.

அவர் என்னை அணைத்தவாறு அழைத்துச் சென்றார். முகத்தை இரு கரங்களாலும் மூடிக்கொள்ள வேண்டும் என்று பரபரத்தேன். ஆனால் என் கரங்கள் சிறைப் பட்டிருந்தன.

இதுவரை அந்நியர் தீண்டலை அனுமதிக்காத நான், இளவரசர் என்னைத் தீண்டுவதற்கு நான் எப்படிச் சம்மதித்தேன்? இளவரசர் என்பதால், அவருக்குத் தனி உரிமை வந்துவிட்டதா? என்னால் ஏன் எந்தவித மறுப்பும் தெரிவிக்க முடியவில்லை?

இளவரசரிடம் ஏதாவது மாய சக்தி இருக்கிறதா? முதல் முதலாக அவரைச் சந்தித்தபோதே எனக்கு அவரிடம் ஓர் ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது. அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. கலையால் ஏற்பட்ட பிணைப்பாக இருக்கலாமென்று என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டேன். சிதம்பரம் மாளிகையில் அவரைச் சந்தித்தபோதே அவர் விழிகளுக்கு அடிமையானேனா? எனக்கு இன்னும் எதுவும் புரியவில்லை.

இளவரசருடைய புதல்வன் சுந்தரன் வயதில் இளையவன். அவனும் ஒரு கலைஞன். நடனக் கலையில் தேர்ந்தவன். அழகன். அவனைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், ஆனால்... நினைக்கவே நாணமாக இருக்கிறது.

வீரம்மாள் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். நெஞ்சோடு புலம்பினாள். திடீரென்று விலாவறச் சிரித்தாள்.







அவளுக்குத் திருநாவுக்கரசரின் தேவாரப்பாடல் நினைவுக்கு வந்தது. மெல்லப் பாடிப் பார்த்தாள்.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன்
நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற்று எல்லாம்
உடன் இருந்து அறிதி என்று
வெள்கினேன் வெள்கி நாளும்
விலா வறச் சிரித்திட்டேனே!

அவளால் தக்க விடை காண முடியவில்லை. படகிலே நடனமாடியதும், இளவரசர் பாராட்டியதும், புகழ்ந்ததும், மிக நெருக்கமாக அமர்ந்து பேசியதும் ஒரு மாயக் கனவு போல் இருந்தன.

இளவரசர் வருகைக்காக ஏரிக்கரை மாளிகை அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிறிய மாளிகை; எப்போதாவது வந்தால் தங்குவதற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருந்தது. மாடத்துக்குச் செல்லும் படிக்கட்டுகள், குறுகிய மேலே [illegible]கள் வழியே அவருடன் மிக நெருக்கமாகச் மரப்படி[illegible]போது - தோள்கள் இணைந்து கைவிரல்கள் செல்லும் [illegible]ள் உடல் கூசியது. அங்கிருந்து குதித்துத் பிணைந்து - அ[illegible]ன்றியது. தப்பி ஓடிவிடத் தோ[illegible]

"வீரம்மா! வா, மேல்மாடத்துக்குச் செல்வோம். அங்கிருந்து வீரநாராயண ஏரியின் அழகை ரசிக்க வேண்டாமா? என் பாட்டனாருக்கு முப்பாட்டனார் பராந்தகச் சோழர். அதி வீரபராக்கிரமமுடையவர். அவருக்கு இருந்த பல பெயர்களுள் வீர நாராயணன் என்ற பெயர் உலகப் புகழ் பெற்றது. வறட்சி மிகுந்திருந்த கொள்ளிடத்தின் வடக்குப் பகுதியை வளமைப்படுத்த நீர்த்தேக்கம் ஒன்று தேவை என்றுணர்ந்தார். உடனேயே திட்டமிட்டு இவ்வளவு பெரிய ஏரியை வெட்டினார். ஏரிக்கரையில் விண்ணகரம் ஒன்று கட்டினார். வீர நாராயணப் பெருமாள் கோயிலுக்கு நீ சென்றிருக்கிறாயா? அருகே புதிய ஊர் ஏற்பட்டது. பாசமுள்ள மக்கள் வீர நாராயணபுரம் என்று பெயர் சூட்டினர். கடல் போன்ற அந்த ஏரியில்



என்றுமே நீர் வற்றாது, வடியாது. இந்த மாளிகை எனக்காகக் கட்டப்பட்டது. போரில்லாத போது இங்கே வந்து தங்குவேன்" என்று இராசேந்திரன் சொல்லிக் கொண்டே போனார்.

வீரம்மாள் சற்று விலகியே நின்றிருந்தாள். "தனியாகவா" என்று கேட்டாள். 'எப்படிக் கேட்டோம்' என்றே அவளுக்குத் தெரியவில்லை. இளவரசர் பெரிதாகச் சிரித்த பிறகுதான், எவ்வாறு அந்தக் கேள்வியைத்தான் கேட்டோம் என்று அவளுக்கே வியப்பாக இருந்தது.

இளவரசர் மறுமொழி கூறிய பிறகே தன் கேள்வி தரக்கூடிய புதுப்புது அர்த்தங்கள் அவளுக்குப் புரிந்தன.

"வீரம்மா! - நல்ல கேள்வி கேட்டாய். அப்படித்தான் கேட்க வேண்டும். தனியாக எந்தக் காலத்திலும் வர மாட்டேன். என் அன்புக்கினிய தேவிமார்களுடன் வருவேன். அப்பொழுதெல்லாம் பாட்டும் கூத்தும் அமர்க்களப்படும். பலமுறை முத்துக்குமரன் இங்கே வந்திருக்கிறான். அவன் உன்னிடம் அந்த அனுபவங்களைச் சொல்லவில்லையா?" என்று கேட்டு, வீரம்மாவின் திருமுகத்தை நோக்கினார் . அவள் ஆழ்ந்த மௌனத்தில் மூழ்கியிருந்ததைக் கண்டுவிட்டு மீண்டும் "வீரம்மா! நான் மூச்சுவிடாமல் பேசிக் கொண்டிருக்கிறேன். நீ ஏதோ சிந்தனையிலிருக்கிறாயே!" என்று கேட்டு அவள் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்ப முயன்றார்.

வீரம்மாள் நடுங்கும் கரங்களுடன், அவர் கரத்தை மெல்ல விலக்கி, "என் அண்ணன் இப்போது எங்கே இருக்கிறார்?" என்று கேட்டாள்.

இளவரசர் சிரித்தார். ஒரு குழந்தை சிரிப்பதுபோல் இருந்தது அந்தச் சிரிப்பு.

"உன் அண்ணன் நினைவு வந்துவிட்டதா? சகோதர பாசம் என்பதே எனக்குத் தெரியாது. ஒருவனாகவே பிறந்துவிட்டேன். ஆனால் எனக்கோ எங்கள் குலதெய்வம் ஆடவல்லான் சற்று அதிகமாகவே மக்கட் பேறளித்திருக்கிறார். ஆயினும் ஒவ்வொரு புதல்வனும் ஒவ்வொரு திக்கில். அவர்கள் பலர் இப்போது செய்வதை நான் ஒருவனே முன்பு செய்தேன். நான் தஞ்சையில் தங்கியிருந்த நாள்கள் குறைவு!" என்று கூறி, வீரம்மாளின் முகத்தைத் தன் பக்கமாக மீண்டும் திருப்பி, செவ்விதழ்க் கடியில் நெளிந்து வழவழப்புடன் இருக்கும் முகவாயினை

இலேசாகப் பிடித்து. "வீரம்மா! இரண்டு விரல்களால் பிடிப்பதற்கேற்ற வகையில் மலரவன் இதைப் படைத்திருக்கிறான். அன்றலர்ந்த செந்தாமரை போல் உன் முகம் என்றுமே ஒளிவீசும். இன்று அதில் சிறு வாட்டம். ஏன்? ஏன் அப்படி? வீட்டின் நினைவு வந்து விட்டதா?" என்று கேட்டார்.

'ஐயோ! இதென்ன வரம்பு மீறும் செய்கை? பொறுப்புள்ள இளவரசர் இப்படி நடக்க முற்படலாமா?' என்று எண்ணினாள்.

"ஹூம்...ஹூம். நான் சம்மதிக்க மாட்டேன்" என்று முணுமுணுத்த அவள், அந்த மாடத்திலிருந்து அப்படியே குதித்துத் தப்பிவிடலாமா என்று எண்ணினாள். ஏரியில் குதித்து நீந்தி, நீந்தி...

'நீந்தி எங்கே போவாய், அசட்டுப் பெண்ணே? உனக்கு என்ன நேர்ந்து விட்டது? பொய்யான எண்ணம் தோன்றுகிறது. மனதைக் கொஞ்சம் தொட்டுச் சொல். உனக்குள் ஏற்பட்டுள்ள உணர்வை மறைக்க முயல்கிறாயா. அவளுள் ஏற்பட்ட நினைப்பே அவளுக்கு வெட்கத்தை அளித்தது. இரு கரங்களுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"உன் அண்ணன் முத்துக்குமரன் இங்கு வருவான். வடக்கே காஞ்சிபுரத்திலிருந்து ஒரு முக்கியச் செய்தி அறிந்துவரப் போயிருக்கிறான். நீ காஞ்சி மாநகர் சென்றிருக்கிறாயா?" அவர் கேட்டார்.

'இவர் என்ன இளவரசரா? சின்னஞ் சிறு குழந்தையா? காஞ்சிபுரம் போயிருக்கிறாயா, தஞ்சாவூர் போயிருக்கிறாயா?' என்று கேட்கிறார். மூங்கில்துறை கிராமமும், தில்லைச் சிற்றம்பலமும் தவிர வேறு எங்கும் போயறியாதவள் நான் என்பது அவருக்குத் தெரியாதா? இதுவரை என்னைப் பற்றிக் கேட்டறியாமலா இருந்திருப்பார்? இப்போது என்ன கேள்வி? ஏதாவது பேசவேண்டும் என்பதற்காகக் கேட்கிறாரா!

"வீரம்மா! இன்னும் சிறிது காலத்திற்கு இந்தச் சோழ நாட்டைவிட்டு வேறு எங்கும் செல்வதில்லை என்று நான் முடிவு செய்திருக்கிறேன். சோழ நாட்டில் இதுவரையில் செல்லாத சிவத் தலங்களுக்குச் செல்லப் போகிறேன். சிவநேயச் செல்வி செம்பியன் மாதேவியாரைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?"



இப்போதும் வீரம்மாளுக்குச் சிரிப்பு வந்தது. "இளவரசர் அவர்களே! எனக்குச் சிதம்பரத்தைத் தவிர வேறு எந்த ஊரும் தெரியாது. நம் சக்கரவர்த்தி இராசராச சோழ தேவரை அன்றி அரச குலத்தவர் வேறு ஒருவரையும் அறியமாட்டேன். சொல்லுங்கள். கேட்டுக் கொள்கிறேன். கற்கவும், கேட்கவும்தானே நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று அவள் சொன்னாள்.

விழிகள் பெரிதாக மலர, "ஆகா, ஆகா!" என்று குரலில் வியப்பு பொங்க, "பேசா மடந்தையோ என்று நான் நினைத்திருந்தேன். இதழ் திறந்து பேசிவிட்டாய்! வீரம்மா! உன் குரல் யாழ் ஒலியைவிட இனிக்கிறது. நீ பேசு, பேசு" என்று குழந்தைபோல் கைகொட்டிச் சிரித்தார்.

"எனக்குத் தெரியும், நீ இந்தச் சிதம்பரம் எல்லையைத் தாண்டவில்லை என்று. கிராமத்துப் பறவையான நீ வெளி உலகைக் காணவேண்டும் என்று நான் முன்பே தீர்மானித்து விட்டேன். அதனால்தான் சிதம்பரத்தில் நடனக் கலையின் நுணுக்கங்களை நீ அறிய ஏற்பாடு செய்தேன். பரந்த உலகைச் சுற்றிப் பார்த்துப் புதுப்புதுச் செய்திகளை உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தைப் புரிந்து கொள்ள, நீ பல நாடு நகரங்களைப் பார்க்க வேண்டும். அதற்காகவே உன்னை இங்கே அழைத்து வந்தேன். வீரம்மா! பெரிய பிராட்டியார் செம்பியன் மாதேவியாரை நான் மிகச்சிறிய வயதில் பார்த்திருக்கிறேன். அவர் சோழ நாட்டில் பல திருக் கோயில்களுக்குத் திருப்பணி செய்திருக்கிறார். அந்தக் கோயில்களையெல்லாம் பார்க்க விரும்புகிறேன். நான் செல்லும் இடங்களுக்கெல்லாம் உன்னையும் அழைத்துச் செல்ல முடிவு செய்துள்ளேன்" என்றார்.

மேலும் அவர் கடந்தகால அரச குடும்பத்துச் செய்திகளை விவரித்தார். சோழ குலத்துத் தலைப் பிள்ளைகள் இளம் வயதில் உயிர் துறந்து விடுவதைக் கூறினார். தான் மட்டும் விதிவிலக்கு என்று கூறிச் சிரித்தார்.

அவர் பேசப் பேச, வீரம்மாள் அவர் முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். 'பல குழந்தைகளுக்குத் தந்தையான இவர், இந்த நாட்டின் இளவரசர், எட்டுத்திக்கும் புகழ் பெற்றுத் திகழும் இவர் எதிரே எல்லோரும் கைகட்டி நிற்கிறார்கள். அவருடன் சமமாக உட்கார்ந்து கொண்டு நாம் பேசுகிறோமே'.

இந்த நினைவு வந்தவுடன் அவள் வேகமாக எழுந்து நின்றாள்.

"ஏன் எழுந்துவிட்டாய், வீரம்மா? உறக்கம் விழிகளைத் தழுவத் துடிக்கிறதா?" இளவரசர் கேட்டார்.

'இல்லை, இல்லை' தலையசைத்தாள்,வீரம்மாள்.

"நான் பேசுவது ரசனையாக இல்லையா?" என்று அவர் கேட்டவுடன், "ஐயோ, அப்படியெல்லாம் நினைக்கும்படியாகவா நடந்து கொண்டேன்? எனக்குத் திடீரென ஏற்பட்ட அதிர்ஷ்டத்தை நினைத்தேன்."

"அதிர்ஷ்டமா? அதிர்ஷ்டத்தை நினைத்தவுடன் எழுந்து கொண்டாயா?" - இளவரசர் வியப்புடன் அவளைப் பார்த்தார்.

"மாபெரும் சோழ நாட்டின் இளவரசர். சோழர்களின் பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவர். பல கலைகளிலும் மேதை! அவ்வளவு எளிதில் யாரும் நெருங்க முடியாத சிறப்புப் பெற்றவர். அவர் அருகே நான் சமமாக உட்கார்ந்து பேசுவதா? இன்னும் எனக்குப் புத்தி வளரவில்லை. குழந்தைத் தனம் மாறவில்லை என்பதைத்தான் என் செய்கை புலப்படுத்துகிறது. மரியாதை தெரியாத மடமை மிகுந்தவளாக இருக்கிறேன். அறியாமை இருள் இப்போதுதான் விலகியது. உடனே எழுந்து நின்றேன்".

'நானேவா பேசினேன்?' தன்னைத் தானே வியந்து கொண்டாள்.

"ஓ, வீரம்மா! நீயா சிறு பெண்? உன்னுள்ளே அறிவுச் செல்வம் மறைந்திருக்கிறது. கலைப் புலமை ஒளிந்திருக்கிறது. முதல் சந்திப்பிலேயே அதை நான் புரிந்து கொண்டேன். முத்துக் குமரனுக்கு இவ்வளவு அழகான தங்கையா? அதுவும் நடனத் திறமை கொண்ட நங்கையா? என்று வியப்படைந்தேன்!" என்று கூறிய இளவரசர், நின்று கொண்டிருந்த அவளின் கரம்பற்றி இழுத்து, "மரியாதை என்பது எழுந்து நிற்பதில் இல்லை, வீரம்மா! மனதில் இருந்தால் போதும். எவ்வளவு நேரம் நீ நின்று கொண்டிருப்பாய்? பேச வேண்டும், உன்னுடன் பேசவேண்டும். விடிய விடியப் பேச வேண்டும். என் திட்டங்களை உன்னிடம் பேசவேண்டும். என் மனதிற்குள் புதைந்திருக்கும் கலை ஆர்வத்தை யாரிடமாவது வெளியிடாவிடில் இனி எனக்குத் தாங்காது. என் இதய ஒலியைக் கேட்கக் கூடிய



வர் நீ ஒருத்திதான் என்பதைப் புரிந்துகொண்டேன். அதனால் நிறையப் பேசப் போகிறேன். நேரம் போவது தெரியாமல் பேசப் போகிறேன். அதுவரை நீ நின்றுகொண்டிருக்க முடியுமா? உன் அழகிய பாதங்கள் நொந்து போகாவோ?" வாழை இளந் தண்டு போன்ற கால்கள் துவண்டு போகாவோ! என்று கூறி நின்று கொண்டிருந்தவளின் கரம் பற்றி வேகமாக இழுத்தார். பஞ்சணை மெத்தையின் மீது உடல் பதிய, இளவரசர் மார்புமீது முகம் பதிய, வீரம்மாள் சரிந்தாள்.

★ ★ ★

இரண்டு நாள்களுக்கு முன்பு நடைபெற்ற அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் அவள் மெய் சிலிர்த்தது

இளவரசரின் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொண்டதை எண்ணியதும் அவளுக்கு ஏனோ துக்கம் பொங்கி வந்தது.

"இளவரசர் அவர்களே! நான் ஏதாவது தவறாக நடந்து கொண்டிருந்தால் என்னைப் பொறுத்தருளுங்கள்" என்று கூறி வெளிமாடத்தருகே விரைந்து வந்து நின்றாள். அவள் உடலில் இலேசான நடுக்கம். இதமாக காற்று வீசும் அந்த வேளையில் உடலெங்கும் வியர்த்திருந்தது.

இளவரசர் வேகமாக அவளருகே வந்து தோள்களைத் தொட்டு, "வீரம்மா! எதற்காக அழுகிறாய்? உன்னைப் பொறுத்தருளும்படியாக ஏதும் நீ தவறு செய்துவிடவில்லையே" என்றார்.

வீரம்மாளுக்குச் சொல்ல நா எழவில்லை. விம்மலை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"மூங்கில் துறைக்கே நான் போய்விட நினைக்கிறேன். என் பாட்டனாரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகிறது" என்றாள்; ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக.

"எனக்குப் புரிகிறது. உனக்கு வீட்டு நினைவு வந்துவிட்டது. உன் பாட்டனாரையும், உன் அத்தையையும் பழையாறைக்கு அழைத்துவரச் சொல்லியிருக்கிறேன். அங்கே ஒரு வீடு ஏற்பாடு செய்திருக்கிறேன். முத்துக்குமரனும் அங்கு வந்துவிடுவான். இன்னும் இரண்டு நாள்களில் அங்குச் செல்கிறோம்" என்றார்.

வீரம்மாள் அவரை ஏறிட்டு நோக்கினாள். 'பழையாறைக்கு அத்தை கமலத்தாச்சி வருகிறார். பாட்டனார் வருகிறார். என் அண்ணனும் வரப்போகிறார். பிறகு வேறு என்ன வேண்டும்?' அவள் முகம் சற்று மலர்ந்தது. பழையாறை பெரிய நகரம். சிதம்பரத்தை விடப் பெரிய ஊர். அங்கே செல்லப் போகிறோம். அந்தச் செய்தி அவளுக்கு இனிப்பாக இருந்தது. ஆனால், இரண்டு நாள்கள் இங்கே ஏரிக்கரை மாளிகையில் தங்க வேண்டுமே? இளவரசருடன் தங்க வேண்டும் என்ன செய்வது என்பதை நினைக்கும்போது மெல்ல உடல் நடுங்கியது.

வீரம்மாளிடம் ஏற்பட்ட முக மாறுதலையும் மாறிமாறி முக உணர்ச்சிகள் ஏற்படுவதையும் அறிந்த இளவரசர், "வீரம்மா! வா, உள்ளே செல்லலாம். உனக்குக் களைப்பாக இருப்பதை அறிகிறேன். சந்திரன் மேற்கில் இறங்கிக் கொண்டிருக்கிறான். உறக்கம் உன் விழிகளைத் தழுவத் துடிக்கிறது" என்று கூறி அவள் கரம் பற்றி உள்ளே அழைத்தார்.

அப்பொழுது மாளிகையின் கீழே யாரோ சிலர் பேசும் குரல் கேட்டது. கடுமையான வாக்குவாதம் நடப்பதையும் அவர்கள் அன்புடன் பேசிக்கொள்வதிலிருந்தே மாணிக்க சேகரன் அங்கே வந்திருப்பதையும் இளவரசர் அறிந்தார்.

மாணிக்கசேகரன் நின்று கொண்டிருந்தான். உடனே இளவரசரைச் சந்திக்க வேண்டும் என்று உரத்த குரலில் வற்புறுத்திக் கொண்டிருந்தான்.

இளவரசரைப் பார்த்தவுடனேயே அவருக்கு வணக்கம் தெரிவித்தான். கருவூர்த் தேவரைச் சந்தித்த செய்தியைத் தெரிவித்தான். கண்டறியாதன கண்ட பரபரப்பு அவனிடமிருந்தது.

"ஏரியில் நீயும் குதித்து நீந்திச் சென்றாய். நான் காத்திருந்து பார்த்தேன். இருள் சூழ்ந்து கொண்டது. பிறகு - நடந்ததைச் சொல்" என்று இளவரசர் ஆவலுடன் கேட்டார்.

அவன் நடந்தவற்றைச் சொல்லி, உடனே தாங்கள் வரவேண்டும். வைகறை வேளைக்கு முன்பு அவரைச் சந்தித்தாக வேண்டும். தாங்கள் வருவதாகச் சொல்லி வந்திருக்கிறேன். தங்கள் விருப்பமின்றி நான் ஏற்பாடு செய்ததற்குப் பொறுத்தருளுங்கள்" என்று கூறி இளவரசரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான்.



"கருவூர்த் தேவரைச் சந்திக்க வழி வகுத்துவிட்டாய். அரிய பெரிய செயலைச் செய்துவிட்டாய். இதோ வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டார். புறப்படும்போது வீரம்மாளிடம் சென்று, "வீரம்மா! பல ஆண்டுகளாக நான் எதிர்பார்த்திருந்த எண்ணம் கைகூடப் போகிறது. என் இலட்சியம் நிறைவேறப்போகிறது. இதோ... பழையாறையில் உன்னைக் குடி அமர்த்த நான் நினைத்தவுடனேயே கருவூர்த் தேவரைத் தரிசிக்கும் பேறு கிடைத்துவிட்டது. நீ அதிர்ஷ்டசாலி. நீ இந்த மாளிகையில் இரு. தக்க துணையுடன் உன்னைப் பழையாறைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்கிறேன். முத்துக்குமரன் வருவான். இங்கேயே இருக்குமாறு சொல். செய்தி சொல்லி அனுப்பிய பிறகு அவன் இங்கிருந்து புறப்படலாம். உன் அண்ணனுடன் மனம்விட்டுப் பேசி மகிழ்ச்சியுடன் இரண்டு நாள்கள் இருக்கலாம்" என்றார்.

நடந்தவை எல்லாம் கனவு போல் தோன்றின. பழையாறைக்குச் செல்வதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்த போது, சோழ வீரனொருவன் வந்தான். இளவரசர் உடனே அழைத்துவருமாறு செய்தி சொல்லியனுப்பியதாகத் தெரிவித்தான்.

சிவிகை ஆயத்தமாயிற்று. "நாம் எங்கே போகிறோம்?" என்று சிவிகையுடன் துணைக்கு வந்த வீரனைக் கேட்டாள் வீரம்மாள்.

"எனக்கே தெரியாது; அந்த இடத்திற்கு நாங்கள் இதுவரை சென்றதில்லை. கருவூர்த்தேவர் அங்கு தங்கியிருக்கிறார். இளவரசரும் அங்குதான் இருக்கிறார். தங்களை அழைத்துவரச் சொன்னார்கள்" என்றான் அவன்.





## 22. மகத்தான சந்திப்பு

கருவூர்த் தேவரைச் சந்தித்தது பற்றி மாணிக்க சேகரன் விவரித்ததைக் கேட்கக் கேட்க சிலிர்த்துப் போனார் இளவரசர் இராசேந்திரன்.

ஏரியில் நீந்திச் சென்றவரைத் தொடர்ந்தான், மாணிக்க சேகரன். அவருடைய வேகத்திற்கு இணையாக அவனால் செல்ல முடியவில்லை. கைகள் சோர்ந்தன. களைத்துப் போய் மூழ்கிவிடும் நிலை ஏற்பட்டபோது அவர் வெகு தூரம் சென்றிருந்தது தெரிந்தது. அவர் அங்கிருந்தே கையசைத்து அழைப்பதை அறிந்தவுடன் நீந்தத் தொடங்கினான். புதிய தெம்பு ஏற்பட்டது. கருவூரார் அருகே சென்றடைந்தான். தன்னைப் பின் தொடருமாறு அவர் சைகை காட்டினார்.

அவர்கள் கரை ஏறிய இடத்தில் ஒரு சிறு மண்டபம். மாணிக்கசேகரன் மேனி குளிரில் நடுங்கியது.

"தம்பி! உன் விடாமுயற்சியை மெச்சுகிறேன் இராசேந்திரனைச் சந்தித்தாயா?" என்று கேட்டார் சித்தர். "அவர் இன்னும் ஏரிக்கரையிலே காத்திருப்பார். தங்களைச் சந்திக்க ஆவலுடையவராய் இருப்பார்" என்றான் மாணிக்கசேகரன்.

"உனக்குப் பெரிய பணி தரப் போகிறேன்" என்றார் சித்தர்.

மிக மரியாதையுடன் வாய் பொத்தி, "காத்திருக்கிறேன் சுவாமி" என்றான்.



"சோழநாட்டில் திருப்பணிகளைச் செய்ய சிற்பிகள் இருக்கிறார்களா?"

"மதுரைக்குச் சென்றுவிட்டார்கள். அங்கும் அவர்கள் விரும்பும் பணியில் இல்லை".

"சிற்பிகளை இங்கே அழைத்துவர முடியுமா?"

"இளவரசரிடம் சொல்கிறேன், சுவாமி".

"நீ இளவரசரை உடனே சந்தித்து அழைத்துவா. உடனே புறப்படு!".

சித்தர் சொல்லிவிட்டார். எங்கே அழைத்து வருவது? கேட்பதற்கு அச்சமாக இருந்தது.

சித்தர் சிரித்தார். "கூழை யானைப் பெருவழி தெரியுமா?"

"தெரியாது, சுவாமி, சொல்லுங்கள் வழி கேட்டு வருகிறேன்".

சித்தர் சிரித்தார். "இராசேந்திரனுக்குத் தெரியும். கூழை யானைப் பெருவழிச் சாலையில் பழுவூருக்குச் செல்லும் காட்டுப் பாதை அருகே வரச் சொல் என்றார். பிறகு, "நீயும் வந்துவிடு" என்றார்.

மாணிக்கசேகரன் திகைத்து நின்றான். சித்தர் புறப்பட்டார். மாணிக்க சேகரன் நின்று கொண்டிருந்தான். நனைந்திருந்த ஆடையைப்பிழிந்து கொள்ளவும் தோன்றவில்லை. எப்பொழுதும் உடன் கொண்டுவரும் மூட்டையையும், ஏரியில் குதித்த இடத்திலேயே வைத்துவிட்டான்.

சிறிது தூரம் சென்ற சித்தர், திரும்பிப் பார்த்து மாணிக்கசேகரனை அழைத்து, "தம்பி! பசிக்கவில்லையா" என்று கேட்டார்.

பசியும் களைப்பும் இப்போது தெரிந்தன. 'ஆமாம்' என்று தலையசைத்தான்.

"என்னுடன் வா" என்று கூறி அவர் நடந்தார். மாணிக்க சேகரன் மறுமொழி கூறாமல் அவரைப் பின் தொடர்ந்தான்.

எங்கே செல்கிறோம் என்று தெரிந்து கொள்ளாமல் அவரைப் பின் தொடர்ந்து நடந்தான்.

இருவரும் ஒரு கிராமத்தை அடைந்தனர். ஊருக்குள் நுழைந்ததும் அங்கிருந்த பெரியவர் ஒருவர் சித்தரை

அடையாளம் கண்டு கொண்டார். சித்தரை அவர் வணங்கி அங்குள்ள திண்ணையில் அமரச் செய்தார். தெருவிலுள்ளவர்களை அழைத்து வர முயன்றபோது அவர் தடுத்து, "இந்தப் பிள்ளைக்கு உணவும் உடையும் கொடு" அது போதும் என்று கூறி மறுமொழிக்கு நிற்காமலே விடுவிடு என்று சென்றுவிட்டார்.

பசி நீங்க உண்டு, அங்கேயே, இளைப்பாறி, இளவரசர் இருக்குமிடத்தின் வழி கேட்டுப் புறப்பட்டான் மாணிக்கசேகரன்.

திருக்குடந்தைக்குச் செல்லும் சூழை யானைப் பெரு வழியில் கொள்ளிடக் கரை ஓரமாக பழுவூருக்குச் செல்லும் காட்டுப் பாதையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார் இளவரசர். இளம் வயதில் அந்தப் பகுதிக்கெல்லாம் சென்றிருக்கிறார். இராசராச சோழ தேவரின் இதயங் கவர்ந்த இன்பவல்லி அங்கு உள்ள சிறு கிராமத்தில் வாழ்ந்திருக்கிறாள்.

'சித்தர் அந்தப் பாதை வழியாக எங்கே அழைத்துச் செல்லப் போகிறார்?' என்று மாணிக்கசேகரனைக் கேட்டார், இராசேந்திரன்.

அவனுக்கு எப்படித் தெரியும்? காட்டுப் பாதை தொடங்குமிடத்தை அடைந்தபோது பொழுது புலர்ந்து விட்டது.

மாணிக்கசேகரன் பேச்சை நம்பி வந்தோமே என்றுகூட இளவரசர் யோசித்தார்.

ஒரு மரத்தடியில் வெண்ணிறத் தாடியுடன், வெண்ணிற ஆடையை மேலே போர்த்திக் கொண்டு கருவூர்த்தேவர் உட்கார்ந்திருந்தார்.

இராசேந்திரன் ஓடோடிச் சென்று தேவரின் திருப் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். ஆனந்தக் கண்ணீர் அவர் பாதங்களை நனைத்தன.

இளவரசரின் தலையில் தன் கரத்தை வைத்து வாழ்த்தி, அவரது நலங்களைக் கேட்டறிந்தார். அவர் கரம் பட்டவுடன் இளவரசரின் மேனியெங்கும் புத் துணர்ச்சி பொங்கியது.

மாணிக்க சேகரனையும், பரிவாரங்களையும் அங்கேயே தங்கியிருக்கச் சொல்லி, இராசேந்திரனை மட்டும் உடன்



அழைத்துக் கொண்டு ஒற்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கினார். 'வெயில் மேலேறியதும் இவர்கள் இந்தப் பாதை வழியே வரட்டும்' என்று கூறிவிட்டு, சித்தர் ஒற்றையடிப் பாதை வழியே நடக்கலானர். அவரைப் பின் தொடர்ந்தார், இராசேந்திரன். சித்தரின் நடைக்கு ஈடு கொடுக்க இராசேந்திரனால் முடியவில்லைதான்!

பேசிக் கொண்டே நடந்தார். முதலில் அவர் பல கேள்விகளைக் கேட்டார்.

அவற்றுள் ஒன்று, ஏன் சோழசக்ரவர்த்தியை இதுநாள் வரையில் இளவரசர் சந்திக்கவில்லை என்பது.

'கருவூர்த்தேவர் தன் தந்தையைச் சந்திக்கவில்லை. அப்படியென்றால் அவருக்கு இது எப்படித் தெரியும்' இராசேந்திரனுக்கு வியப்பாக இருந்தது.

கருவூர்த்தேவர் சற்று நின்று இராசேந்திரனைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தார்.

"இராசேந்திரா! உன் மனத்திலிருப்பது எனக்குப் புரிகிறது. தந்தையைவிட மேலும் புகழ் உடையவனாகத் திகழ வேண்டும் என்பது உன் எண்ணம். இராசராசனைவிட அதிக வெற்றியை அடைந்தவன் நீதானே! அது அதிகப் புகழை உனக்குத் தரவில்லையா?"

"போர்க்கள வெற்றியால் என் தந்தைக்குத் தானே பெருமை?" - இராசேந்திரன் கேட்டான்

"தஞ்சையில் பெரிய கோயிலை எழுப்பிய தந்தையின் பெருமையும் உன் பெருமைதானே?"

"சுவாமிகளே! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஐம்பது பிராயங்களைக் கண்டு விட்டேன். இன்னும் எவ்வளவு ஆண்டுகள் வாழ்வேன் என்று எனக்குத் தெரியாது. என் பெயர் என்றும் நிலைபெற்று நிற்க நான் ஏதாவது செய்தாக வேண்டாமா? கடாரத்தை வென்றதும் சாளுக்கிய நாட்டை வென்றதும், சேர நாட்டை வென்றதும் என்றும் நின்று நிலைக்குமா?" இராசேந்திரன் குரலில் ஏக்கம் மிகுந்திருந்தது.

சித்தர் தலையசைத்தார். "இராசேந்திரா! அதை பற்றிப் பேசவே உன்னை இங்கு அழைத்தேன். இன்று நல்ல நாள். உன் எண்ணத்தை எடுத்துக் கூற ஏற்ற நாள்" என்றார்.

"வாழ்நாளிலேயே மிக உயர்ந்த நாள்; அந்நாள் இன்றுதான்" என்றார் இராசேந்திரன்.

இருவரும் சிறிது நேரம் பேசாமல் நடந்தனர். ஓரிடத்திற்கு வந்தவுடன் தொலைவில் ஒரு கிராமம் தெரிந்தது.

இராசேந்திரனுக்குப் புரிந்து விட்டது. 'இந்த இடத்திற்கு முன்பு நாம் வந்திருக்கிறோம். வேறு வழியாக வந்திருக்கிறோம்' என்பதை உணர்ந்தார்.

கருவூர்த்தேவர் அங்கே மரத்தடியில் அமர்ந்தார். இராசேந்திரனையும் அருகே அமரச் சொன்னார்.

"இராசேந்திரா! நீ பெயரும் புகழும் பெற்று விளங்கப் போகிறாய்" என்று நல்லாசி மொழிந்தார்.

"சித்தர் அவர்களே! என் தந்தைக்கு வழிகாட்டியாக அமைந்தீர்கள், தாங்கள் எனக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும். அதுவே என் வேண்டுகோள்" என்றார் இராசேந்திரன்.

சித்தர் சிரித்தார். மீண்டும் இராசேந்திரனின் சிரசில் தன் கரத்தை வைத்து வாழ்த்தினர்.

"இராசேந்திரா! நீ சோழ சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாகக்கூடிய நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. கலை வளர்ச்சியில் நீ பெரிதும் ஈடுபடப் போகிறாய். பண்டித சோழனாகப் புகழ் பெறப் போகிறாய்" என்று கூறி வாழ்த்தினார்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தவர், சற்றுப் பொறுத்து, "சரி, உன் பரிவாரங்கள் இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வந்தடைவார்கள். நாம் கிராமத்திற்குச் செல்வோம்" என்று கூறிய சித்தர் இராசேந்திரனைப் பார்த்து, "உன் எதிரே அற்புதமாக நடனமாடினாளே அந்தப் பெண் எங்கே?" என்று கேட்டார்.

இராசேந்திரன் திடுக்கிட்டான். "சுவாமி!" என்று அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

"எப்படித் தெரியும் என்று வியப்படைகிறாயா?" என்று கூறிச் சிரித்த சித்தர், "அந்த ஆடல் மங்கையை அழைத்து வா, தேவாரப் பதிகங்கள் சிலவற்றைப் பாடி ஆடுமாறு பணிக்க வேண்டும்" என்றார்.

மின்னல் வேகத்தில் அப்பணி நடந்தேறியது. சித்தரும், இராசேந்திரனும் தங்கிய அந்தக் கிராமத்திற்கு வீரம்மாள் அழைத்து வரப்பட்டாள்.



மாணிக்க சேகரனுடன், இராசேந்திரனின் பரிவாரங்கள் வந்து சேர்ந்தன.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல அங்கே சோழ சக்ரவர்த்திகளும், அவர் பட்டத்து அரசியும் இளைய பிராட்டியாரும் மறுநாள் காலைபொழுது புலரும் வேளையில் வந்து சேர்ந்தனர்.

இராசராசசோழனும், இராசேந்திரனும் சந்தித்துக் கொண்டனர்.

இராசேந்திரன் கண்களில் நீர்மல்க, "அரசே! தந்தையே!" என்று கூறி, இராசராசனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.





# 23. இதயத்தில் பொங்கிய இனிய நினைவுகள்

பழையாறை நகரின் அருகே சோழ மாளிகைக்குச் செல்லும் வழியில் சிறு கிராமத்தில் புது வீடு ஒன்று மிக விரைவில் கட்டி முடிக்கப்பட்டது. இராசேந்திரன் சொல்லியபடி அங்கே வீரம்மாள் குடியேற எல்லா வசதிகளும் செய்யப்பட்டன.

அந்த வீட்டைச் சுற்றிச் சிறு தோட்டம். வீட்டின் பின்புறம் ஒரு கிணறும், ஏற்றமும் இருந்தன. கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் கிடையாது. ஏற்றத்தைப் பயன்படுத்திட் பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

கிணற்றைச் சுற்றிச் சில தென்னை மரங்கள். ஒரு நெல்லி மரம். மாமரம் ஒன்று அந்த ஆண்டுதான் பூக்கத் தொடங்கியிருந்தது.

புதுச் சுண்ணம் பூசி, திண்ணையில் சாணமிட்டு மெழுகி, தூய்மைப்படுத்தி செம்மண் வண்ணமிட்டு, மாக் கோலம் வரைந்து மாவிலைத் தோரணம் கட்டி புதுமனை புகுவதற்கான இலட்சணங்களுடன் வீட்டை அலங்கரித்திருந்தார்கள்.



'இளவரசருக்கு வேண்டிய குடும்பம் போலிருக்கிறது' என்று கவனமாகச் செய்தனர்.

வீரம்மாளுக்குப் பழையாறை நகரம் பிடித்திருந்தது. அவளுடன் அத்தை, தோழி வந்திருந்தனர். கூடமும் தாழ்வாரமும், ரேழியும், ஆளோடியும், சமையலறையும், அடுக்களையுமாக மனதுக்கு நிறைவாக இருந்தன.

நிலைவாசலில் சற்றுக் குனிந்து உள்ளே நுழைந்தவுடன், வீரம்மாளின் பாட்டனார் சுற்று முற்றும் பார்த்து, "மூங்கில் துறை வீடு மாதிரியே இருக்கிறது" என்று கூறி முற்றத்தின் ஓரமாகக் கருங்கல் தூணில் சாய்ந்து உட்கார்ந்துவிட்டார்.

"ஆமாம்; நம் மூங்கில்துறைக் கிராமத்து வீட்டில் இருப்பது இங்கே இல்லை" என்றாள் வீரம்மாள், குறும்புச் சிரிப்பு இதழில் துள்ள.

"நம் வீட்டில் இருப்பது இங்கே இல்லையா? என்ன சொல்கிறாய் வீரம்மா? மூங்கில் துறை வீட்டில் இல்லாததெல்லாம் இங்கே இருக்கிறது என்று சொல்வதற்கு மாறாக இப்படிச் சொல்கிறாயா?" என்று அவள் பாட்டனார் கேட்டார்.

"நம் வீட்டில் இருட்டாக இருக்கும். இங்கில்லையே. ஒட்டடைத் தோரணம் தொங்குமே! இங்கிருக்கிறதா?"

"போதும்! போதும் நிறுத்து. உன் குறும்புத்தனம் இன்னும் போகவில்லை. இளவரசருடன் பழகுகிறாய். இப்படியெல்லாம் பேசினால் அவர் கோபிக்கமாட்டாரா?" என்று பாட்டனார் கேட்டபோது, வீரம்மாளின் முகம் மாறியது.

"உங்களிடம் எனக்குள்ள உரிமையில் இப்படிப் பேசுகிறேன். அங்கெல்லாம் அப்படிப் பேசுவேனா?" என்று கூறிய வீரம்மாள் உடனே மௌனமானாள்.

இதுவரை இளவரசருடன் பேசியதையெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுபடுத்திக் கொள்ளத் தொடங்கினாள். பொழுது போகவேண்டும். மனதிலும் இன்ப எண்ணங்களைப் பதியவைக்க வேண்டும். தாழ்வாரத்தைச் சுற்றி வந்த போது இளவரசருடன் இதுவரையில் பழகியதை நினைத்துக் கொண்டாள்.

கொல்லைப்புறம் சென்று அடர்ந்த புதர்களையும், உயர்ந்த மரங்களையும், பழைய மாட்டுக் கொட்டிலையும்,

துணி துவைக்கும் கல்லையும் கல்லாலான பெரிய தொட்டியையும் பார்த்தவாறு சுற்றி வந்த போதும் நடந்தவற்றை மீண்டும் நினைத்துக் கொண்டாள். பிறகு படிக்கட்டில் உட்கார்ந்து விட்டாள். எவ்வளவு நேரம் சிந்தனையிலாழ்ந்தவாறு உட்காந்திருந்தாளோ, அவளுக்கே தெரியாது. அவள் தோழி அவள் அருகே வந்து, "இவ்வளவு விரைவில் மனத்திற்குள்ளேயே திட்டம் போடத் தொடங்கி விட்டாயா? அல்லது கனவா? இளவரசருடன் எங்கேயெல்லாம் சென்றிருந்தாய்? எனக்கும் சொல்லக் கூடாதா? என்னதான் அரண்மனை ஆதரவு கிடைத்து விட்டாலும் பழைய நட்பை மறந்துவிடக் கூடாது, வீரம்மா!" என்று குரல் கொடுக்கவும், வீரம்மாள் தன் நிலைக்குத் திரும்பினாள்.

தோழியை அணைத்துக் கொண்டு, "கனவும் இல்லை, திட்டமும் போடவில்லை. சற்றுக் களைப்பாய் இருந்தது, கண்ணயர்ந்து விட்டேன்" என்றாள். பொய் சொல்லுகிறாள் என்பது அவளுக்கும் புரிந்து விட்டது.

"ஆகா; சுகமான தூக்கமா? தூக்கத்தின் இறுதியில் இனிய கனவுகள் தோன்றி மறைந்திருக்குமே?" என்று கேட்டாள்.

மெல்ல, தோழியின் கன்னத்தைத் தட்டிய வீரம்மாள், "அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று கூறும்போது, அவள் ஏதோ மறைப்பது தெரிந்தது.

வீரநாராயண ஏரிக்கரையில் இருந்து, சிவிகையில் அவள் அழைத்து வரப்பட்டாள்.

இப்பொழுது நினைத்தாலும் கனவுபோல் தோன்றுகிறது. கொள்ளிடக்கரை கிராமமும், சிதம்பரத்தில் ஈசான சிவாசாரியார் பாடசாலையும், சிதம்பரம் குளக் கரையும், தன்னிடம் முறைதவறி நடந்துகொள்ள முயன்ற சுந்தரனும், இளவரசர் இராசேந்திரனின் கம்பீரமான தோற்றமும் - நடந்த நிகழ்ச்சிகள் விரைவில் தோன்றி மறைந்தன.

வீரநாராயணபுரக் குடிலில் தங்கியிருந்ததும், பிறகு ஏரிக்கரை மாளிகைக்குச் சென்றதும் - ஏரியில், நிலவொளியில், வீடு போன்ற பெரும் படகில் இளவரசருடன் சென்றதும், நடனமாடியதும் - அப்பொழுது நிகழ்ந்ததை இப்பொழுது நினைத்தாலும் அவள் மேனி சிலிர்த்தது.



**வீ**ரம்மாளின் அருகே இருந்த அவள் தோழி முத்து வடிவு - வீரம்மாளின் தன்னை மறந்த நிலைகண்டு, அவள் தோளைத் தொட்டு, அவள் முகத்தை மெல்லத் தடவி, "வீரம்மா! உனக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டாள்.

இனிய கனவைக் கலைத்துவிட்டாளே முத்துவடிவு என்று பொய்க் கோபம் கொண்டு, "முத்து! சிறிது நேரம் என்னை அமைதியாக இருக்கவிடு! என்றாள்.

"என்ன நேர்ந்தது உனக்கு?" முத்துவடிவு கேட்டு அவள் முகத்தை மீண்டும் தன் பக்கம் திருப்பினாள்.

"புதிய வீட்டிற்குள் நுழையும் வரையில் மகிழ்ச்சியுடன் இருந்தாய். இப்போது மௌனமாகிவிட்டாய். தனக்குத் தானே பேசிக் கொள்கிறாய்! உன் மனத்திலிருப்பதைச் சொல். உனக்கு நேர்ந்த அனுபவத்தைச் சொல். உன்னை விடமாட்டேன்" என்று மிக நெருங்கி உட்கார்ந்து அவளை அணைத்துக்கொண்டாள்.

வீரம்மாள் மௌனத்தைக் கலைக்கவில்லை. தன் முகத்தை முழங்கால்மீது பதியவைத்து இமைகளை மூடிக் கொண்டாள்.

"சரி, என்னிடம் கூற உனக்குப் பிரியமில்லை என்று சொல்லிவிடு. பிள்ளைப் பிராயத்திலிருந்து ஒன்றாக வளர்ந்த உயிர்த் தோழியிடம் சொல்வதற்குப் பிடிக்க வில்லை என்றால் உன்னை வற்புறுத்தமாட்டேன். இந்தப் புதிய ஊரில் எனக்கு என்ன வேலை? அத்தையிடம் சொல்லி ஊருக்குப் புறப்பட ஏற்பாடு செய்கிறேன். இன்றே புறப்பட்டு விடுகிறேன்" என்று எழமுயன்ற தோழி முத்துவடிவைத் தடுத்து, "கோபிக்காதே முத்து! - மனதில் ஏற்படும் எண்ணச் சுழற்சியை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு சமயம் பயமாக இருக்கிறது. மீண்டும் மூங்கில் துறைக்கே போய்விடலாமா என்று தோன்றுகிறது. எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நாம் அங்கே திரிந்து கொண்டிருந்தோம். காலையில் எழுந்தவுடன் வாசல் பெருக்கிக் கோலமிடுவதும், கூடிப்பாடி ஆடுவதும், தண்ணீர்ப் பந்தலில் நின்றுகொண்டு நீர் மோர் தருவதும், இளைஞர்கள் நம்மிடம் முன்னுக்குப் பின் தொடர்பில்லாமல் அசடு வழியப் பேச முயல்வதும் அவர்களை மேலும் பைத்தியமாக்கி நீ வேடிக்கைப் பார்ப்பதுமாக, சுதந்திர உணர்வோடு கூத்தாடிக் கொண்டிருந்தோம்

இன்ப அநுபவம் எல்லாமே போய்விடுமோ என்று தோன்றுகிறது" வீரம்மாள் சற்று நிறுத்தினாள்.

முத்துவடிவு அவள் கரத்தை மெல்லப் பற்றித் தன் கரத்துடன் பிணைத்து, "வீரம்மா! அடுக்கடுக்காக உன் வாழ்வில் ஏற்படும் மாறுதல்களைக் கவனித்து வருகிறேன். பஞ்சவர்ணக் கிளிக்குப் பட்டாடை போர்த்தி பொன் விலங்கு இட்ட நிலை உனக்கு ஏற்படுமோ என்ற பயம் எனக்கு உண்டு. பெண்ணாகப் பிறந்தவர்களுக்குத் துள்ளித் திரியும் பருவம், கட்டுப்பாடின்றிச் சுற்றித் திரியும் பருவம், பத்துப் பன்னிரண்டு வயது வரையில்தான். ஆனால் நமக்குத் தனி அதிர்ஷ்டம். நம்மிருவருக்கும் ஆனந்த அனுபவம் பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. திருமணப் பேச்சு எடுத்தவுடனேயே நம் மகிழ்ச்சி மறையத் தொடங்கிவிடுகிறது. ஆனால் ஆடவரின் அரவணைப்பைப் பெறாமல் இப்படியே இருக்க நாம் பிக்குணியா? புத்த மத்தில் சேர்ந்து விடலாம் என்றுகூட எனக்கு ஒரு சமயம் தோன்றும். எனக்கு மணம்பேச என் தந்தை முற்பட்டார். உன்னைவிட்டுப் பிரியவேண்டியிருக்குமே என்ற பயத்தில், திருமண ஏற்பாட்டை எதிர்த்தேன். நீ எதிர்பாராமலேயே கன்னி கழியும் வேளை உனக்கு நேரப் போகிறது. அதன் அறிகுறிதான் உன் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றம்"

வீரம்மாள் குறுக்கிட்டாள். "என்ன சொல்கிறாய் முத்து, எனக்குத் திருமணமா? கன்னிப் பருவத்திலிருந்து தாண்டிவிடும் சூழ்நிலை உருவாகிறதா? எனக்காக நீ என் திருமண ஏற்பாட்டை எதிர்க்கிறாயா? புரியவில்லையே முத்து. ஒரே குழப்பமாக இருக்கிறது எனக்கு. விவரமாகச் சொல்லு" என்று கூறி, தன் கரத்தை அவள் பிடியி லிருந்து விடுவித்துக் கொண்டு, அவள் உதடுகளை அன்புடன் வருடினாள்.

"இதெல்லாம் எங்கிருந்து கற்றுக் கொண்டாய் வீரம்மா?" என்று அவள் கேட்டவுடன் திடுக்கிட்டு, "சீ... சீ... யார் சொல்லித்தர வேண்டும்? கணவன் மனைவி விளையாட்டு விளையாடுவோமே யார் கற்றுத் தந்தார்கள்?" என்றாள் நாணத்துடன்.

"களிமண்ணால் குடம் செய்வோம். அடுப்பு செய்வோம், சோறாக்குவது போல் பாவனை செய்வோம். குழந்



தையைத் தாலாட்டுவது போல் நடிப்போம். கோபிப்பது போலும் வெளியூருக்குச் செல்வதுபோலும் நாம் செய்ததெல்லாம் யாரும் கற்றுத் தரவில்லைதான். அந்த வயதில் அவ்வளவுதான் கற்பனை. ஆனால், வயது வளர வளர எனக்குக் கற்பனை அதிகமாகியது. உனக்கு இன்னும் சற்று அதிகம். கணவன் – மனைவி விளையாட்டை மறந்தோம். ஒருவர் நினைப்பதை மற்றவருக்குச் சொல்லாமல் மறைத்துக் கொண்டோம். சில வேளைகளில் ஆற்றங்கரையில் உட்கார்ந்து பேசிக் கொள்வோம் படகிலிருந்து இளந் தம்பதியர் இறங்கி வருவதையும் அவர்கள் சிரித்து மகிழ்ந்து வருவதையும் ஒருவரோடொருவர் நெருக்கமாக இணைந்து வருவதையும் பார்த்து நாம் இருவரும் விழிகளாலேயே சிரித்துக் கொள்வோம்".

வீரம்மாள் வாய் திறவாமல் சிரித்தாள். ஆமாம்; ஆமாம். அவள் சொல்வது உண்மைதான். மாரி, கோடை, பனிக் காலம் மாறுவதுபோல் உள்ளமும், உடலும் மாறி வரும்போது எண்ணங்களும் மாறி வளர்ந்தன. படகுத் துறையில் இறங்கி சாலைவழியே செல்லும், தயங்கித் தயங்கி சற்று ஒதுக்குப்புறமாகச் செல்லும் இளம் வயது ஆண் பெண்களைப் பார்த்து, முத்து வடிவுடன் பேசிக் கொண்டதை இப்போது நினைத்தாலும் நாணமாக இருக்கிறது.

முத்துவடிவு பேசினாள் : "வீரம்மா! நாம் மனம் விட்டுப் பேசுவதைக் குறைத்துக் கொண்டோம். உன்னிடம் கூறாமல் மறைப்பதற்கு எனக்கு ஏதும் நேரவில்லை. ஆனால் கடந்த சில மாதங்களாக உனக்கு ஏற்பட்ட அனுபவங்களை நீ என்னிடம் மனம்விட்டுச் சொல்லவில்லை. அதனால்தான் ஏதோ பிரமை பிடித்தவள்போல் இப்படி உட்கார்ந்து மௌனமாகச் சிந்திக்கிறாய்" என்றாள்.

வீரம்மாள் பேசவில்லை.

"அப்படித்தானே, வீரம்மா? நான் சொல்வது சரிதானே?" முத்துவடிவு தூண்டினாள்.

இனியும் தன் உணர்வுகளை மறைப்பதில் பலனில்லை என்ற முடிவுக்கு வந்த வீரம்மாள் கலகலவெனச் சிரித்தாள். மனச்சுமை பாதி குறைந்தது போலிருந்தது.

"முத்துவடிவு! ஆருயிர்த் தோழி. உன்னிடம் சொல்லாமல், வேறு யாரிடம் சொல்வேன், முறையிடுவேன்?" என்று கூறி, நடந்தவற்றைச் சொல்லத் தொடங்கினாள்.



வீட்டிற்குள்ளிருந்து செங்கமலத்தாச்சியின் குரல் கேட்டது. "வாங்க, வாங்க! இலை போட்டாகிவிட்டது. பாட்டனார் காத்திருக்கிறார். பசி பொறுக்க மாட்டார்".

செங்கமலத்தாச்சியின் கைவண்ணத்தைச் சமையலில் காணலாம். சுடச்சுட சோறும், மணக்க மணக்க மீன் குழம்பும், ஒரு துவையலும் மிக விரைவில் ஆச்சி செய்து முடித்திருந்தார்கள். முத்தம்மாவை அருஞ்சுவையும் நறு மணமும் கவரவில்லை. தன் தோழி முத்துவடிவுக்கு முன்பு சொன்ன இடத்திலிருந்து, நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தாள்.

சுற்றுச் சூழ்நிலையை மறந்தாள். அத்தையும், பாட்ட னாரும் கேட்டுக் கொண்டிருப்பதை மறந்தாள். அவள் சொல்லி வரும் போது மீண்டும், நடந்த நிகழ்ச்சிகள் அவள் எதிரே நடப்பனபோல் தோன்றின.



"சோழ சக்ரவர்த்தி இராசராச சோழதேவரை முதன் முறையாக அன்று தான் பார்த்தேன். ஆகா! நான் எப்படி வர்ணிப்பேன்? வயது முதிர்ந்த நிலையிலும் அவருடைய வனப்பு வாடவில்லை. கம்பீரம் குறையவில்லை. சொல் தடுமாறவில்லை. அன்பு மாறவில்லை. அவர் திருப்பாதங் களில், இளவரசர் இராசேந்திரன் வீழ்ந்து வணங்கிய போது குன்றின் அடிவாரத்தில் மற்றொரு குன்று தாழ்ந்து பணிந்ததுபோல் தோன்றியது. அடி, முத்து! நான் பெரிய



பாக்கியசாலி. மூன்று தலை முறையினரை நான் அங்கே சந்தித்தேன்" என்று கூறியபோது, முத்துவடிவு குறுக்கிட்டு "மூன்று தலைமுறையினரா?" என்று கேட்டாள்.

"ஆமாம்; சோழசக்ரவர்த்தி இராசராசர், அவரது திருக்குமாரர் இராசேந்திரர். அவரது மூத்த புதல்வர் பெயர் எனக்குத் தெரியவில்லை. அவர் தன் தந்தையையும் பாட்டனாரையும் விஞ்சி விடுவார் எனத் தோன்றுகிறது" என்று சொல்லும்போது முத்துவடிவு குறுக்கிட்டு, "இராசாதிராசன் என்று அவருக்குப் பெயர். உனக்கு எப்படித் தெரியாமல் போய்விட்டது?" என்று கூறினாள். இருவரும் நகைத்தனர்.

"அடி பெண்களா, உண்ணும்போது பேசக் கூடாது; சிரிப்பதும் தவறு; தொண்டையில், மூக்கில் சிக்கிக் கொள்ளும்" என்று எச்சரித்தாள் செங்கமலத்தாச்சி. ஆனால் வீரம்மாளின் அனுபவத்தைக் கேட்பதில் முத்துவடிவு ஆர்வம் மிகக் கொண்டாள். குறிப்பாக, இராசேந்திர சோழருடன் அவள் நெருங்கிப் பழகும் செய்தியை அறிய ஆவல் கொண்டாள்.

கிராமத்தை விட்டுத் தாண்டாத முத்தம்மாள், சோழ குடும்பத்துடன் மிக நெருக்கமானதைக் கண்டு செங்கமலத்தாச்சிக்கு வியப்பு ஏற்பட்டாலும் மறுபுறம் கவலை ஏற்பட்டது. கவலை பயமாகவும் மாறியது.







# 24. மாமன்னர் எடுத்த முக்கிய முடிவு

பேசுவதை அத்தை கூர்மையாகக் கவனிக்கிறாள் என்பதறிந்த முத்துவடிவு, சைகை செய்து வீரம்மாளை எச்சரித்தாள். பேச்சை வேறுபக்கம் திருப்பினாள். "அருகேதான் அரிசிலாறு ஓடுகிறது; போய் காலை நனைத்து வருவோம்" என்று அழைத்தாள்.

ஆற்றங்கரைக்குச் செல்லும்போது இருவரும் பேசிக் கொண்டே சென்றனர்.

இராசேந்திர சோழர், தன் தந்தையை வணங்கியதையும், இருவர் விழிகளிலும் பொங்கிவந்த கண்ணீர் பாச அருவியாகப் பெருகியது என்றும் தந்தைக்கும், மகனுக்கும் இருந்த மனத்தாங்கல் அந்தச் சந்திப்பில் கரைந்தது என்றும் வீரம்மாள் கூறியபோது "அரச குடும்பத்திலும் இவ்வாறு மனத்தாங்கல் ஏற்படுமோ!" என்று முத்துவடிவு வினவினாள்.

"எனக்கு ஏதும் புரியவில்லை; இளவரசர் தந்தையிடம் மிக பயபக்தியோடு நடந்து கொண்டார் என்பது எனக்குப் புரிந்தது. அவர்களைச் சித்தர் அழைத்தார். அங்கே சென்று விட்டார்கள். சிறிது நேரம் கழித்து சக்ரவர்த்தி என்னை அழைப்பதாக அதிகாரிச்சி ஒருத்தி வந்து அழைத்துச் சென்றாள்.

"கருவூர்த் தேவர் அங்கே பாறை ஒன்றின் மீது அமர்ந்திருந்தார். அருகே இருந்த பசுங்கன்றை அவர் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் தனி ஒளி வீசியது. அவரைச் சுற்றி ஒளிவட்டம் சுழல்வதுபோல் தோன்றியது.

"அவர் என்னை அருகே அழைத்தார். பயபக்தியுடன் மெல்ல அடிமேல் அடி வைத்து நடந்து அவரருகே சென்றேன்.

"என்னைப் பார்ப்பதும், இளவரசரைப் பார்ப்பதுமாக இருந்த சித்தர் என்னை மிக அருகே அழைத்து, என் சிரசில் தன் வலக்கரத்தை வைத்தார்....

'ஜிவ்' என்று ஏதோ ஓர் உணர்வு உச்சி முதல் உள்ளங் கால் வரையில் பாய்ந்தது. என் உடல் சிலிர்த்தது. என்னைச் சுற்றியுள்ளவை சுழன்றன போல் உணர்ந்தேன்.

"தஞ்சாவூர் சென்றிருக்கிறாயா பெண்ணே?" என்று கேட்டார் சித்தர். மறுமொழி கூற நா எழவில்லை. தலையை அசைத்தேன்.

இளவரசரை நோக்கி, "தஞ்சாவூருக்கு எப்போது அழைத்துச் செல்லப் போகிறாய்?" என்று சைகை மூலம் கேட்டார்.

இளவரசர் மறுமொழி கூறாமல் மெல்ல நகைத்தார்.

"நீயும் அங்கு சென்று இரண்டு ஆண்டுகள் ஆகியிருக்குமா?" என்று கேட்டுவிட்டு, தன் அருகே கைகட்டி நின்று கொண்டிருந்த சோழ சக்ரவர்த்தி இராசராசனை அழைத்து, "இராசேந்திரன், உன்னைச் சந்திக்க தஞ்சாவூருக்கு வரவில்லை? நீயே புறப்பட்டு வந்துவிட்டாய்! அப்படித்தானே? என்ன கோபம் மகனே?" என்று சித்தர் இராசேந்திரனைப் பார்த்துக் கேட்டார்.

"அங்கே மௌனம் நிலவியது. என்ன சொல்வதென்று தெரியாமல் தந்தையும் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சித்தர் வீரம்மாளைப் பார்த்து கணீரென்ற குரலில் : "பெண்ணே! சக்ரவர்த்திகளை நீ இதற்கு முன்பு சந்தித்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

அச்சம் கலந்த பார்வையுடன் இராசராசரை நோக்கி விட்டு, சித்தர் பக்கம் திரும்பி 'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள். அவள் விழிகளில்



ஏற்பட்ட அச்சம் கலந்த நாணத்தையும், முகத்தில் ஏற்பட்ட மாறுதலையும் இராசராசர் கவனித்தார்.

"கோட்டையும், அகழியும், கோயிலும் நதியும், மாட மாளிகைகளுமாக தஞ்சாவூர் கோலாகலமாக இருக்கும். அந்த அழகிய ஊரைப் படைத்தவர் இராசராசன். நான் தஞ்சையைப் புகழ்ந்து இசைப்பா எழுதியுள்ளேன். நான் பாடுகிறேன்; அதற்கு ஏற்ப நீ ஆடுகிறாயா?" என்று சித்தர் கேட்டார்."

வீரம்மாள் நாணத்தால் தலை குனிந்தாள். "என்ன வெட்கம், குழந்தாய்? இங்கிருப்பவர்கள் உனக்கு வேண்டியவர்கள் தாமே? கூச்சம் விட்டு ஆடு!"

சித்தர் பாடத் தொடங்கினார். அகவை பல ஆகிய நிலையிலும் அவர் குரல் மணி ஓசை நாதம் போலிருந்தது. வீணை எழுப்பும் ஒலி போல் இருந்தது.

' உலகெலாந் தொழுவந்தெழு கதிர்ப்பரிதி
ஒன்று நூறாயிரம் கோடி
அலகெலாம் பொதிந்தச் சோதிநவுடம்பட்டோ
அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலைகுலாம் பதணத்து இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே -'

சித்தர் பாடுவதைக் கூர்மையாகக் கவனித்த வீரம்மாள் மறுகணம் ஆடத் தொடங்கினாள். தஞ்சைபுரிக் கோட்டையை உருவகப்படுத்தினாள். ஆழமான அகழியையும், மாடங்கள் நிறைந்த மாளிகைகளையும், அகலமான வீதிகளையும்,அணிமணிகள் விற்கும் அங்காடியையும் தன் அபிநயத்தால் புலப்படுத்திய வீரம்மாள் திறமை கண்டு இராசராசர் வியந்தார். அவரருகே இருந்த அரசி பஞ்சவன் மாதேவியார் வியந்தார்கள். தஞ்சை பெருவுடையாரைப் போற்றிப் பாராட்டிய கருவூர்த் தேவர், வீரம்மாளைச் சிறிது நேரம் உற்று நோக்கியவர், கையுயர்த்தி, "நல்ல கவன சக்தியும் அறியும் ஆற்றலும் இருக்கின்றன. உன் எதிர்காலம் ஒளிமயமாய்த் திகழும்!" என்று வாழ்த்தினார்.

இராசேந்திரனை அருகழைத்து. "வீரம்மாளைப் போற்றிப் பாதுகாப்பது உன் கடமை" என்றார்.

இராசேந்திரன் வணக்கம் தெரிவித்து, பிறகு வீரம்மாளைப் பாசம் பொங்கும் விழிகளுடன் நோக்கினார்.

அரிசிலாற்றங்கரைக்கு வந்தவுடன் மரநிழலில் இருவரும் அமர்ந்தனர்.

"ஓ! இளவரசரின் மிக நெருக்கம் உனக்கு ஏற்பட்டு விட்டது. இனி என்னை மறந்து விடுவாய்" என்ற முத்து வடிவு. வீரம்மாளிடமிருந்து மேலும் செய்தியை அறியக் கேட்டாள்.

வீரம்மாள் உடனே ஏதும் மறுமொழி கூறவில்லை. இளவரசரிடம் மிக நெருங்கிவிட்டதாக முத்துவடிவு சொல்கிறாளே அது உண்மையா? வீரம்மாள் சிந்திக்கலானாள்.







கருவூர்த் தேவர் அவளை வாழ்த்தியவுடனே அங்கிருந்து வேறு இடத்திற்குச் சென்றுவிட்டாள் வீரம்மாள்.

இராசராசனும், இராசேந்திரனும் கருவூர்த் தேவர் அருகே நின்று கொண்டிருந்தனர். தந்தையும், மகனும் மனம்விட்டுப் பேசினர்.

தங்களிருவரையும் ஒருசேரச் சந்திக்க கருவூர்த் தேவர் ஏன் அழைத்தார் என்று இராசராசனுக்கும், இராசேந்திரனுக்கும் புரியவில்லை. சித்தரிடம் கேட்பது மரியாதைக் குறைவாக இருக்கும் என்று எண்ணினர்.

சித்தர் பேசினார்: "சோழர் குலத்தை வாழ்விக்க வந்தவர்களே! இந்தக் காட்டுப் பகுதிக்கு வருமாறு ஏன் உங்களை அழைத்தேன் தெரியுமா?" என்ற கேள்வியை எழுப்பியவுடனே அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

அவரே அதற்கு விடையளித்தார். "இந்த மண்ணில் தனித்த ஒரு மகிமை இருக்கிறது. இந்த இடத்தை மேன்மையடையச் செய்ய வேண்டும்" என்றார்.

சக்ரவர்த்தியும், இளவரசரும் மௌனமாக இருந்தனர்.

சித்தர் தொடர்ந்தார். "உங்களிருவருள் ஒருவர் தில்லைப் பொன்னம்பலத்தானை அவ்வப்போது சென்று வணங்க வேண்டும்" என்றார்.

"சிதம்பரத்திற்கு இயன்றபோதெல்லாம் செல்லத் தவறுவதில்லை" என்றார் இராசராசர்.

"சில திங்களாக நான் பொன்னம்பலம் வந்து ஆடவல்லானை வணங்கும் பேறு பெற்றுள்ளேன்" என்றார் இராசேந்திரன்.

"தஞ்சையினின்றோ, பழையாறையினின்றோ சிதம்பரம் வந்து திரும்புவதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. காவிரியிலும், கொள்ளிடத்திலும் பெரும் வெள்ளம் வந்துவிடுகிறது. பரிசல் ஓட்டுவதற்கும் முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. ஒருமுறை தில்லைக்கு வந்தால் ஒரு திங்களாவது தங்குமாறு நேருகிறது. அதனால் அரசியல் பணிகள் தாமதப்படுகின்றன" என்றார் இராசராசன்.

"இராசராசா! நீ இனி ஓய்வு எடுத்துக் கொள்வதே நலம். ஆற்றல்மிகு புதல்வர் இராசேந்தரன் ஆட்சிப் பொறுப்பை ஏற்க ஏற்பாடு செய்துவிடு" என்றார் சித்தர். தொடர்ந்து —



"இராசேந்திரன் மனத்தில் ஒரு குறை சில காலமாக எழுந்து அவனுக்குப் பெரும் கவலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதைப் போக்க வேண்டும்" என்றார்.

"சுவாமி! அதைத்தான் நானும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவன் மனதில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள வேற்றுமை உணர்வை இப்போதுதான் உணர்ந்தேன். அதைப் போக்க வழி கண்டுவிட்டேன். ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்" என்றார் இராசராசன்.

அவர் எடுத்த முடிவை அறிவித்தவுடன் இராசேந்திரன் திகைத்து, தந்தையின் திருப்பாதங்களில் வீழ்ந்து பாதங்களை ஆனந்தக் கண்ணீரால் நனைத்தார்.





# 25. அழைப்பு வந்தது

**ப**ழையாறை நகரம் எப்போதும் கலகலப்பு நிறைந்து காணப்படும். அன்று விழாக் கோலமே பூண்டு விளங்கியது. தைத்திங்கள் முதல் நாளையொட்டி, முன்பே வீட்டிற்குப் புதுச் சுண்ணம் பூசியிருந்தார்கள். கலைஞர்கள் புதுப்புது ஓவியங்களை வரைந்து வீடுகளை அழகுபடுத்தியிருந்தார்கள்.

மாவிலைத் தோரணங்கள் வீட்டு நிலைப்படிகளில் கட்டப்பட்டன. புதுக் கரும்புகளை அறுவடை செய்து வீட்டு வாசலில் அடுக்கி இருந்தார்கள். இஞ்சி, மஞ்சள் கொத்துகள், வாழைப்பழக் குலையுடன் குவியலாகத் திண்ணையின் அருகே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

மாட்டு வண்டிகள் பழுதுபார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு புதுவண்ணம் பூசப்பட்டுப் பொலிவுடன் வீட்டு வாயிலில் ஓய்வு எடுத்துக் கொண்டன. இன்று தங்களுக்கு விடுமுறை என்ற மகிழ்ச்சியில் வண்ணம் பூசப்பட்ட வளைந்த கொம்புகளை மெல்ல அசைத்து, வைக்கோலை மென்றவாறு காளைகள் அசைபோட்டுக் கொண்டிருந்தன. கழுத்து மணிகள் அசைந்து இனிய ஓசை எழுப்பின.

‘ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்’ என்று தன்னைப் போற்றிப் புகழ்ந்து வணங்கும் ஊராரைக் காண இளஞ்சூரியன் தன் மெல்லிய கதிர்க் கரங்களைப் பழையாறையின் வீதிகளிலும், வீடுகளிலும் நீட்டி வாழ்த்



திக் கொண்டிருந்தான். பனிப்படலத்தை மெல்ல அகற்றிப் பொன் வண்ணத்தைப் பூசிக் கொண்டிருந்தான்.

வீட்டு வாசலில் அடுப்பு மூட்டிப் பொங்கல் பானைகளை ஏற்றி, பாலூற்றிப் புத்தரிசியை மூதாட்டிகள் அதில் இட்டனர். புதுப்பானைகள் விதவிதச் சித்திர அலங்காரத்துடன் திகழ்ந்தன.

பழையாறையின் ஒரு பகுதியான அவனி நாரணபுரத்தில் வாழ்ந்த தளிச்சேரிப் பெண்டிர் புத்தாடை அணிந்து புது அணிகள் பூண்டு மேலும் அழகுடன் விளங்கினர். பொங்கல் திருநாளை வழக்கத்தை விடச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டிருந்தனர். அதற்கு இரு காரணங்கள் இருந்தன.

பழையாறை நகரில் சக்ரவர்த்தி இராசஇராச சோழ தேவரும், இளவரசர் இராசேந்திர சோழ தேவரும் ஒருசேர வீற்றிருந்தனர். பல ஆண்டுகளுக்குப்பிறகு அவர்கள் இருவரும் அந்த நகரத்திற்கு வருகை புரிந்திருந்தது. பல சிற்றூர்களைக் கொண்ட அந்த நகரத்து மக்களுக்கு - பேசிப் பேசி மகிழக் கூடியதான - ஒரு பெரும் செய்தியாக இருந்தது.

முதியவரும் இளைஞரும் மரத்தடியிலும் திண்ணையிலும் அமர்ந்து கூடிப் பேசினர். பொங்கல் சோறு உச்சி வேளைக்குத் தானே!

“பல ஆண்டுகளுக்குப் பிறகு சக்ரவர்த்திகளும், இளவரசரும் கூடி நம் ஊரில் சேர்ந்திருப்பது மனத்துக்குப் பெரும் மகிழ்ச்சியைத தருகிறது” எனத் தொடங்கியது பேச்சு.

“தந்தைக்கும் மகனுக்குமிடையே பெரிய மனத்தாங்கல் இருந்ததாமே, அது சரியாகி விட்டதா?” - ஒருவர்.

“தந்தை மகன் என்று சொல்லாதீர்கள். பேரரசர் இளவரசர் என்று சொல்லுங்கள்” என்று திருத்தினார் மற்றவர்.

“அது என்னய்யா, மனத்தாங்கல் என்று கூறுகிறீர்களே, அவர்கள் மனதிற்குள்ளே புகுந்து புறப்பட்டவர்போல?” என்று சற்றுக் கோபமாகக் கேட்டார் ஒரு மூத்த குடிமகன்

“இதோ பாருங்கள்! எந்த இரகசியத்தையும் மூடி மறைக்க முடியாது. எனக்குத் தெரிந்து ஐந்து ஆண்டுகளாக இளவரசர் தஞ்சைக்கு வரவில்லை. பழையாறைக்கும் வரவில்லை. சக்ரவர்த்தி கூப்பிட்டு அனுப்பி

யும் வரவில்லை. சிதம்பரத்திற்கும் பழையாறைக்கும் அதிகத் தொலைவோ? அதைத்தான் தந்தையிடம் அவருக்கு ஏதோ மன வருத்தம் என்றேன்"

"அதுசரி! பேரரசருக்கும் அவர் மகனுக்கும் அப்படி என்ன மனவருத்தம் இருக்க முடியும்?"

"என்ன மனவருத்தம் இருக்க முடியுமா? நம்மைப்போல் தான் அவர்கள் சுக துக்கங்களும்; அரசர் என்பதால் அதில் மாறுதல் இல்லை! தந்தையிடம் மகனுக்கு எந்தெந்த விதத்தில் வருத்தம் ஏற்படும்? உங்கள் மகனையே எடுத்துக் கொள்ளுங்களேன் அவன் ஏன் உங்களிடம் பிணக்குற்றான்?"

"அவன் கிடக்கிறான். எனக்கு எண்பது வயதாகிறது. அவனுக்கு அறுபது வயது. ஏன் ஐயா சிரிக்கிறீர்கள்? நான் மிக முக்கியமான விஷயத்தைப் பேசுகிறேன்".

"அது இல்லை. வயதில் ஏதாவது தவறு சொல்கிறீர்களோ என்றுதான் பார்த்தேன். உங்கள் மகனின் வயதைக் கூடுதலாகச் சொல்கிறீர்களோ என்று..."

"அதுவா! எனக்குப் பதினான்கு வயதிலேயே திருமணம் நடந்துவிட்டது. அவளுக்கு ஏழு வயது! இப்பொழுது நீங்கள் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் தள்ளி கல்யாணம் முடிக்கிறீர்கள். காலத்தின் கோலம்!

"அதுபோகட்டும். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் எங்களைத் தனியே குடும்பம் நடத்த என் தந்தை அனுமதித்தார்கள். முதலில் மகன் - பிறகு இரண்டு பெண்கள். அவ்வளவுதான். வயதைக் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்களேன். குழந்தையே பிறக்காத உங்களைப் போல் குழந்தை பாக்யம் அற்றவர்கள் என்று நினைத்து விட்டீர்களோ?" முதியவர் சற்று நிறுத்தினார்.

கேள்விகேட்ட மற்றவர் மீண்டும் சிரித்து, "பாட்டா! புரிந்தது. உங்களுக்கும் உங்கள் மகனுக்கும் மனத்தாங்கல் அதனால்தான் என்று எனக்குத் தெரியும்?" என்றவுடன் அந்த முதியவர், "என்ன புதிதாகக் கண்டு பிடித்தீர்கள்? இரும்புப் பெட்டித் திறவுகோலை நானே வைத்திருப்பது ஒருவேளை காரணமாக இருக்கலாம்" என்றார்.

"அது மட்டுமில்லை; பாட்டா! சிலம்பம் சுற்றுவதில் நீங்கள்தான் இந்த வட்டாரத்தில் புகழ் பெற்றவர் மல் யுத்தத்தில், வாள் வீசுவதில் எல்லாவற்றிலும் - தங்கள்



மகனுக்கு எதையாவது புகழ்பெற விட்டு வைத்திருக்கிறீர்களா? அவருடைய மனைவியும் அவருடைய பிள்ளைகளும் அவரைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்".

"ஏன் சிரிக்கிறார்கள்? அப்பனைப் பார்த்து பிள்ளை சிரிப்பதா? அப்படியாயின் அவன் தன் பிள்ளைகளைச் சரிவர வளர்க்கவில்லை".

"கூறைநாட்டுச் சேலை வாங்க வேண்டுமென்றாலும் உங்களைக் கேட்க வேண்டிய நிலை. சிரிக்காமல் என்ன செய்வார்கள்? அதனால்தான் உங்களிடம் உம்பிள்ளைக்குச் சொல்ல முடியாத மனக்குறை".

முதியவர் இதைக்கேட்டு மறுமொழி கூறாமல் தலையசைத்து, "நியாயம்தான்" என்றார்.

"சோழ சக்ரவர்த்தியின் குடும்பத்திலும் அப்படித்தான். ஐம்பது அகவையைத் தாண்டிவிட்ட இராசேந்திர சோழர் படையெடுப்பு, போர்க்களம் என்று நாடு நாடாகச் சுற்றிக் கொண்டிருந்தார். நாடுகளைக் கைப்பற்றி என்ன பலன்? கடல் கடந்தும் சென்றார், வென்றார். என்ன பலன்? கலை ஆர்வம் மிக்க பண்டித சோழனான இராசேந்திரனுக்கும் போர்க்களம் மனநிறைவை அளிக்கவில்லை. தஞ்சைப் பெருவுடையார்க் கோயில் கட்டியதால் தன் தந்தைக்கு எட்டுத் திசைகளிலும் புகழ். இராசேந்திரன் பெருமூச்சு விடாமல் என்ன செய்வார்?"

முதியவர் சிந்தித்தார். "ஓகோ! புரிகிறது... புரிகிறது" என்றார்.

"உங்களுக்குப் புரிந்தது. சக்ரவர்த்திகளுக்கும் புரிந்து விட்டது. உங்களுக்குத் தெரியுமா செய்தி? இளவரசருக்குச் சோழ மகுடத்தை அணிவித்து சோழ ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதாக முடிவு செய்துவிட்டார்" என்றார் மற்றவர்.

முதியவர் வியப்புடன் அவரைப் பார்த்து, "அப்படியா? இராசராசருக்கும் பெரிய மனது; உயர்ந்த உள்ளம். இன்றே நல்ல நாள். நானும் என் மகனிடம் பணப்பெட்டித் திறவுகோலைக் கொடுப்பதுடன் என் உடைமைகளின் உரிமையை நிலம், வீடு, பசு, கன்று, ஆடுமாடு, அணிமணிகள் எல்லாவற்றையும் அவன் பேரில் மாற்றி விடுகிறேன்" என்று கூறியவர், "நமக்கு ஒரே சமயத்தில் இரண்டு அரசர்கள்!" என்று சிறு குழந்தைபோல் கைகொட்டிக் கூத்தாடினார்.

பழையாறை நகரத்திலுள்ளவர்கள் குதூகலத்துடனிருக்க அதுவும் ஒரு காரணம். 'இராசேந்திர சோழ தேவருக்கு மகுடாபிஷேக விழா விரைவில் நடக்கப் போகிறதாம். நான் பார்க்கப் போகிறார்களாம். எல்லா நாட்டு மன்னர்களுக்கும் செய்தி தெரிவிக்கிறார்களாம். குறுநிலத் தலைவர்களைப் பத்து நாள்கள் முன்னதாக வந்து சேரும்படி ஓலை அனுப்பப் போகிறார்களாம்!'

வீரம்மாள் வீட்டிற்கும் இந்தச் செய்தி எட்டியது. செங்கமலத்தாச்சிக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. வீரம்மாளைப் பார்க்கிறாள் ஒருகணம். பிறகு மௌனமாக அடுக்களைக்குள் சென்று மற்ற வேலைகளைக் கவனித்தவாறு ஏதோ சிந்திக்கிறாள். வீரம்மாளின் தோழி முத்துவடிவை அழைத்து, 'கேள்விப்படும் செய்தி உண்மைதானா?' என்று வினவுகிறாள். முத்துவடிவு பொங்கும் மகிழ்ச்சியுடன் 'ஆமாம் ஆமாம்' என்று கூறிக் கூத்தாடுகிறாள்.

"அப்படியென்றால் நாம் இனி மூங்கில் துறைக்குச் செல்ல வேண்டியதுதானா?" என்று கேட்கிறாள், செங்கமலத்தாச்சி.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்... அத்தை?" என்று முத்துவடிவு கவலையுடன் கேட்கிறாள்.

"இளவரசராகப் பழகுவது வேறு. சக்ரவர்த்திகளாக ஆனபிறகு, வீரம்மாள் பழகுவதற்குக் கட்டுப்பாடுகள் அதிகம் ஏற்படும். பழையாறையில் பிறகு நமக்கு என்ன வேலை?" என்ற ஆச்சியின் கவலையில் உண்மை இருக்குமோ என்று முத்து வடிவுக்குத் தோன்றியது.

புறக்கடைத் தோட்டத்து மரநிழலில் அமர்ந்து வீரம்மாளிடம் அத்தையின் கவலையை விவரித்தாள் முத்துவடிவு.

"முத்துவடிவு! அத்தைக்கு ஐயமேற்படலாம்; ஆனால் உனக்கு ஏற்படலாமா? இளவரசரைச் சந்தித்ததிலிருந்து இன்று வரை நடந்தவற்றை ஒளிவுமறைவு இல்லாமல் உன்னிடம் சொல்லியிருக்கிறேன். இளவரசரைப் பற்றி நீ சந்தேகப்படலாமா?" என்று வீரம்மாள் கேட்டாள்.

"இளவரசர் தங்கமானவர்தான். ஆனால் அவர் இனி இந்த நாட்டுக்குச் சக்ரவர்த்தி. அவர் சொந்த விருப்பப்படி ஏதும் செய்ய முடியாது. நினைத்தபோது அவர் வந்து உன்னைச் சந்திக்க முடியாது. உன்னை ஆடச் சொல்ல



முடியாது. அவரும் உன்னுடன் சேர்ந்து ஆடிப்பாட முடியாது. நினைவிருக்கட்டும்" முத்துவடிவு தன் சந்தேகத்தைத் தெரிவித்தாள்.

வீரம்மாள் செவ்விதழ் பிரியாமல் குறுநகை மலர, "என்மீது உனக்குள்ள அன்புக்கு எல்லையே இல்லை. அதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? இளவரசரை மனித குணங்களுக்கு மேம்பட்டவர் என்று கருதுகிறேன். அவர் என்னிடம் பழகிய விதமே தனி! என்றாள்.

"அவருக்குக் கலைமீது அளவுகடந்த காதல் இதுவரை இருந்திருக்கலாம். இனியும் அவர் அப்படியிருப்பார் என்று நம்ப முடியாது. இதுவரை இருந்ததுபோல் மற்றவருடன் எளிதில் பழகமுடியாது. அதுபோல் உன்னையும் அவர் சந்தித்துப் பேச முடியாது. இன்று நான் கேள்விப்பட்டேன். சிறந்த நடனப் பெண்கள் நூற்றுக் கணக்கானவர் தஞ்சையில் இருக்கிறார்கள். பழையாறையிலும் இருக்கிறார்கள். அவர்களைப் போல்தான் உன்னையும் மதிக்கலாம்; நடத்தலாம் !என்று முத்துவடிவு தன் கருத்தைத் தெரிவித்தாள்.

வீரம்மாளுக்கு வந்ததே கோபம். மாந்தளிர் வதனம் கோபத்தால் கருஞ் சிவப்பானது. "என்ன சொன்னாய்? உனக்கும் மற்றவருக்கும் அவர் இளவரசர்; நாளை சக்ரவர்த்தி. நான்அவரை ஒரு தெய்வீகக் கலைஞர் என்ற முறையில் பார்க்கிறேன். சித்தர் என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா! இனியும் அவரைப் பற்றித் தவறாகக் கணிக்க வேண்டாம்" என்றாள்.

வியப்பால் விழிகள் விரிந்திட, முத்துவடிவு வீரம்மாளைப் பார்த்து, தன் இரு கரங்களினாலும் வாயைப் பொத்திக் கொண்டு, "அம்மாடி! நான் என்ன சொல்லிவிட்டேன்? உனக்கு இப்படியொரு கோபம் வந்து நான் பார்த்ததில்லை. உன் அத்தை கவலைப்படுவதைத்தான் நானும் சொன்னேன். உன்னுடைய 'அவர்' எங்களுக்கெல்லாம் இன்று சக்கரவர்த்தி. நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டுமா, வேண்டாமா? என் ஆருயிர்த் தோழி நூற்றோடு நூற்றி ஒருத்தியாக ஆகிவிடக் கூடாது. நீ புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவே உன்னை எச்சரித்தேன். பிறகு உன் முடிவுதான்" என்றாள். சிறிது மௌனத்திற்குப் பிறகு தொடர்ந்து, "வீரம்மாள்! தெய்வீகக் கலைஞர் என்ற முறையில் அவருடன் பழகலாம்

ஆனால் வெளி உலகம் என்று ஒன்று இருக்கிறது. அதன் பார்வையே வேறு. ஊரில் அவர் எழுந்தால் அதன் வாயை அடக்க முடியாது. பார்த்து நடந்துகொள்!என்றாள்.

வீரம்மாள், தன் தோழியின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, "கோபப்படாதே, முத்துவடிவு! என்றுமே உன்னுடைய வீரம்மாளாகத்தான் நான் இருப்பேன். என் தன்மானத்தை அடிமைப்படுத்த மாட்டேன். ஆனால், நான் கலைக்கு அடிமை. கலை உள்ளம் கொண்ட இளவரசருக்கு அடிமை. நாளை அவர் சக்ரவர்த்தியாக சோழ அரியணையில் அமர்ந்து எப்பொழுதும் போல் என்னிடம் நடந்துகொண்டால் நான் அவருக்கு அடிமை. அவரிடம் எள்ளளவு மாற்றத்தைக் கண்டாலும் நான் ஒருகணம்கூட அவர் நிழலில் இருக்க மாட்டேன். எங்கே போகிறது என் இனிய மூங்கில் துறை; என் அருமை முத்துவடிவு; என் அன்புள்ள அத்தை; என் பிரியமுள்ள நாடு. ஊஹும்" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

முத்துவடிவு தன் விழிகளில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டாள். வீரம்மாளையும் தேற்றினாள்.

வீட்டின் வெளியே, கமலத்தாச்சி யாருடனோ பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். முத்துவடிவு விரைந்து அங்கு சென்று திரும்பவும் வீரம்மாளிடம் வந்து, பரபரப்புடன், "மாளிகையிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. உன்னை உடனே அழைத்துவரச் சொல்லியிருக்கிறார்களாம். அரசு பல்லக்கு வந்திருக்கிறது!" என்றாள். பேச்சில் பயம், கவலை, பரபரப்பு, வியப்பு எல்லாம் கலந்திருந்தன.

ஒருகணம் திகைத்த வீரம்மா, பிறகு முத்துவடிவிடம் கேட்டாள் : "மாளிகையா? அங்கு யார் யார் இருக்கிறார்கள் கேட்டாயா? என்னை அங்கு அழைத்தவர்கள் யார் என்று கேட்டாயா?"

அழைக்க வந்த சோழ வீரர்களிடம் சென்று முத்துவடிவு விவரம் கேட்டு வந்தாள்.

"அரச குடும்பத்தவர் வாழும் வேளத்திற்கு உன்னை அழைத்திருக்கிறார்கள். அங்கே இராசேந்திர சோழ தேவரின் மற்ற மனைவிகள், இளவரசிகள் இருக்கிறார்களாம்" என்றாள். இதைக்கேட்ட வீரம்மாள் திடுக்கிட்டாள்.





## 26. எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்

அந்த வீதியே வியப்புடன் நோக்கியது.

"சில நாள்களுக்கு முன்புதான் இந்த வீட்டில் குடியேறினார்கள். சிதம்பரத்திலிருந்து வந்த குடும்பமாம். மாளிகையிலிருந்து அழைப்பு வருகிறது என்றால் முக்கிய செய்தி இருக்க வேண்டும்" என்று பேசிக் கொண்டனர்.

"அந்த வீட்டிலே இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருத்தி நடனக்கலையில் தேர்ந்தவளாம்".

"நடனமாடுபவர்களை இந்த வீதியில் குடியமர்த்துவது பழக்கமில்லையே? அவனி நாரணபுரத்தில்தானே வாழ்கிறார்கள்?"

"எனக்கென்னவோ இந்த வீட்டுப் பெண் நடனமாட, கோயில் பணி செய்ய அர்ப்பணித்துக் கொண்டவளாகத் தெரியவில்லை" எனக்கூறி மிக மெல்லிய குரலில், "இளவரசர் இராசேந்திர சோழ தேவருக்கு வேண்டியவர்கள் போலிருக்கிறது. அதனால்தான் வீட்டைச் செப்பனிட்டு சகல வசதிகளும் செய்து இங்கே கொண்டு அமர்த்தி இருக்கிறார்கள்" என்றாள்.

கரங்களில் புலிக்கொடி ஏந்திய வீரர் சிலர் குதிரைகளில் அமர்ந்து முன்செல்ல, கொடி ஏந்தாத காவலர்

இருவர் பின்வர சிவிகை புறப்பட்டது. முத்துவடிவு உடன் வர அனுமதிக்கப்படாதது. வீரம்மாளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

வாசலில் கூடிநின்று பெண்டுகள் பேசுவதையோ, வீதிமுனையில கூடி நின்று, இளைஞர்கள் பேசுவதையோ் கவனிக்காமல் வீரம்மாள், திரையின் இடைவெளி வழியே பார்த்துக் கொண்டு சென்றாள்.

'சிதம்பரத்தை விடப் பழையாறை பெரிய ஊராகத்தான் இருக்க வேண்டும். வீதிகள், வீதிகளுக்குப் பிறகு பெரிய தோட்டங்கள், கோயில்கள், கடைவீதிகள் என்று நிரம்பி யிருந்தது அவளுக்கு வியப்பை அளித்தது. தன் வியப்பை,





மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள, தோழி முத்துவடிவும் உடனிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஹூம்... முத்துவடிவை என்னுடன் கூட வராமல் ஏன் தடுத்துவிட்டார்கள்? தொடக்கமே இப்படி இருக்கிறதே. தோழி கூறியதுபோல், அரச குடும்பத் தொடர்பு எங்களுக்குள் பிரிவை வளர்த்து விடுமோ?" வீரம்மாள் சிந்திப்பதும், வெளிக் காட்சிகளைப் பார்ப்பதுமாக புது உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

**ப**ழையாறை மாளிகை கலகலப்பு நிறைந்திருந்தது. பொங்கல் திருநாளை யொட்டி மாளிகை புதுச் சுண்ணப் பூச்சால் மெருகு கூடி விளங்கியது. சிதம்பரம் மாளிகையைவிடப் பன்மடங்கு பெரியது. மாளிகை வாயிலில் வேல் தாங்கிய வீரர்கள்.

விசாலமான கூடத்தில், விரிக்கப்பட்ட இரத்தினக் கம்பளத்தில் பெண்டிர் நிறைந்திருந்தார்கள். இயற்கையாகக் குளிர்ந்த காற்று அங்கு வீசும் வகையில் அந்த இடம் அமைக்கப்பட்டிருந்தது.



கூடத்தின் நடுவே சுற்றிவந்து கை கொட்டிக் கும்மியடித்து இளம்பெண்கள் பாடிக்கொண்டிருந்தார்கள்.

வயது முதிர்ந்தவர்கள், நடுத்தர வயதுடையவர்கள், இளம் வயதுடையவர்கள் என்று பல்வேறு பிரிவினர் அங்கே குழுமி இருந்தார்கள். அவர்கள் பொன்னாலான ஆபரணங்களை அணிந்திருந்தார்கள். தங்கத்திலான பூ வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டாடைகளை உடுத்தியிருந்தார்கள். நெற்றியிலும், காதிலும், தோளிலும், கரங்களிலும், இடுப்பிலும், பாதத்திலும் உச்சியிலுமாக அவர்கள் விதவித பொன்னாபரணங்கள் அணிந்திருந்தார்கள். பார்த்தவுடனேயே அவர்கள் அரச குடும்பத்தவர்கள் என்று தெரியும் வண்ணம் தோற்றமுடையவர்களாய் இருந்தார்கள்.

அந்தக் கூடத்தில் நுழையும்போது வீரம்மாளின் உடல் அச்சத்தால் நடுங்கியது. பேச்சும், பாட்டும், சிரிப்பும் நிறைந்திருந்தன அந்தக் கூடத்தில். அக் கூட்டத்தில் சிங்கத்தின் நடுவே வந்த சிறுமான் போல் அவள் காட்சியளித்தாள்.

பஞ்சவன் மாதேவியார் நடுநாயகமாக அமர்ந்திருந்தாள். மற்றவர்கள் அவளுக்குத் தரும் மரியாதையினின்று அவள் அரசி என்பது புலப்பட்டது.

அவளருகே ஒரு பெண் செவிக்கருகே மிக பயபக்தியுடன் குனிந்து வீரம்மாள் அழைத்து வரப்பட்டிருப்பதைக் கூறினாள். பஞ்சவன்மாதேவி வீரம்மாளை உற்றுப் பார்த்து, "வீரம்மாளா! வா, வா. சரியான நேரத்திற்கு வந்தாய். காலில் சலங்கையை அணிந்துகொள். கருவூர்த் தேவரின் பதிகத்வதப் பாடி ஆடினாயே, அதை இங்கே ஆடிக்காட்டு" என்றாள்.

வீரம்மாளை முன்பே அரசி அறிந்திருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட மற்றவர்கள் வீரம்மாளை வியப்புடன் நோக்கினார்கள்.

கூச்சமும், பயமும் கலந்திருக்க வீரம்மாள் தயங்கி நின்றாள். அங்கே வட்டமாகக் கைகொட்டி ஆடிக் கொண்டிருந்தவர்களும் தங்கள் ஆட்டத்தைச் சற்றே நிறுத்திவிட்டு, வீரம்மாளைப் பார்த்தனர்.

"உம், நேரமாகிறது. பாடிக்கொண்டே ஆடு பார்க்கலாம். உன்னைப் பற்றி என் அருமை மகன் இராசேந்



திரன் வானளாவப் புகழ்கிறான்" என்றாள் பஞ்சவன் மாதேவியார்.

மீண்டும் அங்கிருந்தவர்களின் பார்வை அவள்மீது சென்றது.

வீரம்மாள் கால் சலங்கை கலீர் கலீர் என ஓசை எழுப்ப ஆடினாள்.

ஆடி முடித்தவுடன் தூண் அருகே சென்று நின்று கொண்டாள்.

அங்கிருந்தவர்கள் மெல்லிய குரலில் ஏதோ பேசிக் கொண்டனர்.

கூடத்திலிருந்தவர்கள் கலைந்து சென்றுவிட்டனர். தூணருகே வீரம்மாள் சிலைபோல் நின்று கொண்டேயிருந்தாள். பலரும் அவளை வியப்புடன் பார்த்துச் சென்றனர். சிலர் முகத்தில் அகந்தை இருந்தது. பொறாமை குடிகொண்டிருந்தது. உதட்டைச் சுழித்துச் சென்றவர்களும் உண்டு.

வீரம்மாளுக்கு அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை. காலில் கட்டியிருந்த சலங்கையை மெல்ல அவிழ்த்துக் கையில் வைத்துக் கொண்டாள். நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். எங்கிருந்தோ 'பொங்கலோ பொங்கல்' என்ற குரல் சேர்ந்து ஒலித்தது கேட்டது.

வீரம்மாள் அங்கிருந்து வெளியேறிவிட முடிவு செய்திருந்தாள். மாளிகைக்குள் நுழைந்தவுடனேயே அவளுக்கு உற்சாகம் குறைந்துவிட்டது. பாச உணர்வுடன் பழகுபவர்கள் யாருமில்லை என்பதை உணர்ந்தாள். என்னென்னவோ எண்ணி எதிர்பார்த்துச் சென்ற வீரம்மாள் சற்றே ஏமாற்றம் அடைந்தாள். நாட்டியம் ஆடும் பெண் என்று தன்னைக் கருதிவிட்டதால் அலட்சியப்படுத்துகிறார்கள் என்று எண்ணினாள்.

"பெண்ணே, பெண்ணே!" என்று அவளைத் தொட்டு யாரோ உலுக்கினார்கள்.

"என்ன யோசனை; பசிக்கவில்லையா? எல்லோரும் உணவு உண்ணக் காத்திருக்கிறார்கள். உணவுக் கூடத்துக்கு வா!" என்று பணிப்பெண் அழைத்தாள்.

பசியும், தாகமும் அப்பொழுதுதான் தெரிந்தன. உணவுக கூடத்தில் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். வாழை இலையில், பதார்த்த வகைகள் பரிமாறப்பட்டிருந்தன. எங்கே இடமிருக்கிறது என்று தேடிப் போகும்போது, எல்லோர் விழிகளும் தன்னையே விசித்திரமாகப் பார்ப்பதுபோல் உணர்ந்தாள்.

"உன்னை, இளவரசியார் அழைக்கிறார்கள்" என்று ஒருத்தி வந்து அழைத்தாள்.

அந்தக் கூடத்து மஞ்சத்தில் வயதானவர்கள் இருவரும், நடுத்தர வயதுடைய ஒரு பெண்ணும் தலையணையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தனர். அவர்கள் விழிகளை மூடியவாறு சிறு உறக்கத்தில் இருந்தார்கள்.

வீரம்மாள் அவள் எதிரே போய் நின்றாள். நின்று கொண்டேயிருந்தாள். மெல்லக் கனைத்துக் குரல் கொடுத்தாள். தன்னை ஒருவரும் இலட்சியம் செய்யவில்லை என்பதை உணர்ந்தாள்.

அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. இனயும் அங்கு நிற்கக்கூடாது என்ற முடிவுடன் அங்கிருந்து உடனே வெளியேறினாள். சிறிது தொலைவு சென்றவுடன், ஒரு பெண் ஓடிவந்து கையைப்பிடித்து மிகவும் கோபமாக, "எங்கே போகிறாய்? உன்னை இளவரசியார் வரச்சொன்னார்கள். சொன்னதைக் கேட்காவிட்டால் தண்டனை கிடைக்கும். உடனே அங்கே போ!" என்று அதட்டினாள்.

"தண்டனையா? எனக்கா? யார் தருவது?" என்று கேட்டு வீரம்மாள் திரும்பிப் பாராமல் நடந்தாள்.







# 27. அதிர்ச்சியா? ஆச்சரியமா?

வீரம்மாளுக்கு வியப்பாக இருந்தது. கணப்பொழுதில் நிலைமை மாறிவிட்டது. தன்னை மிரட்டி அழைத்துச் செல்ல வந்த பணிப்பெண்கள் அடக்கமாக நின்று விட்டனர். ஏன் என்று புரியாமல் அவள் திகைத்தாள். அதிகாரம் செலுத்தவல்லவர்கள் அடங்கிப் போனதோடு முகத்தில் முறுவலையும் வரவழைத்து நிற்பதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று வீரம்மாள் திகைத்துத் திரும்பினாள்.

அங்கே –

இரோசேந்திர சோழர் பெண் வேடம் பூண்டு வந்து விட்டாரோ என்று ஐயுறும் வண்ணம் அரசகுடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி கம்பீரமாக நின்றுகொண்டிருந்தாள். அவள் வீரம்மாளின் கரத்தை மெல்லப் பிடித்தாள். பாச உணர்வு விர்ரென்று வீரம்மாளின் மேனியெங்கும் பாய்ந்தது.

அவளுடைய விழிகள் அன்பைப் பொழிந்தன. இதழ் விரியாமலே அவள் முறுவலித்தது முகமெங்கும் பரவியது.

அவள் விழிகள் இட்ட கட்டளையைப் புரிந்து கொண்டு, பணிப்பெண்கள் அங்கிருந்து சென்றனர்.

அவளைப் பின்தொடர்ந்த வீரம்மாள் மேல்மாடத்தில் விசாலமான அறை ஒன்றிற்குச் சென்றாள்.

"சற்று இளைப்பாறுங்கள்! நான் என் தந்தையாரைப் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன். இங்கே எந்தத் தயக்கமோ, கூச்சமோ இன்றி, இந்த மஞ்சத்தில் படுத்து இளைப்பாறலாம்" என்று கூறிவிட்டு, மீண்டும் வீரம்மாளின் தோளை அன்புடன் தடவிக் கொடுத்துச் சென்றாள். அந்த அறையின் திரைச் சீலையோடு இணைக்கப்பட்டிருந்த சிறுமணிகள் கலகலத்தன.

சற்றுக் கண்ணயர வேண்டும்போல் வீரம்மாளுக்குத் தோன்றியது. அந்த அரச மாளிகையில் பகலில் ஏற்பட்ட அனுபவக் கசப்பு அவளைக் கலக்கமடையச் செய்தது. விழிகளை மூட முயன்றாலும், முற்றிலும் புதிய இடத்தில் தாம் வந்து சிக்கிவிட்டோமோ என்ற அச்ச உணர்வு ஏற்பட்டது.

மாளிகை அழைப்பை ஏற்றுச் சிவிகையில் ஏறும்போது தன்னுடன் தன் தோழி முத்துவடிவு வரக்கூடாது என்று தடுத்த கணத்திலேயே மாளிகை அழைப்பை ஏற்காது வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது தவறோ? எண்ணச் சுழல் விழிகளைக் கனக்க வைத்தது. சோர்வும் களைப்பும் ஒன்றுசேர சிறிது நேரத்தில் அவள் கண்ணயர்ந்தாள். அதிக நேரம் உறங்கியிருக்க மாட்டாள்.

அவள் எதிரே பணிப்பெண்கள் நின்றிருந்தனர். என்ன பணிவு! என்ன மரியாதை! பயம் கலந்த பார்வை.

"இன்னும் சிறிது நேரத்தில் இளவரசரின் திருமகளாரை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள். வேறு ஆடை உடுத்தி முகம் கழுவி அலங்கரித்து ஆயத்தமாக வேண்டும். தங்களுக்கு உதவ வந்திருக்கிறோம்!" என்றாள் ஒரு பெண் மிகப் பணிவுடன்.

வீரம்மாள் தன் விழிகளை வியப்புடன் அகல விரித்து நோக்கினாள்.

இளவரசரின் திருமகளா? இளவரசர் இராசேந்திரர் இளம் வயதில் ஒரு பெண்ணாகத் தோற்றமளித்தால் எப்படி இருப்பாரோ அப்படி விளங்கிய பெண் யார் என்று நினைத்தேன் - ஓ! இராசேந்திரரின் திருமகளா?



வீரம்மாள் சுறுசுறுப்படைந்தாள். மஞ்சத்திலிருந்து எழுந்தாள். பணிப்பெண்களிடம் சிநேகமாகப் பேசினாள். இளவரசர் திருமகளைப் பற்றி அறிய முற்பட்டாள்.

கொள்ளிடக்கரையும், பரிசல் துறையும், பரிசலிலிருந்து இறங்கி வரும் பயணிகளும், அவள் வீடும், பாட்டனாரும், அத்தையும், போர்க்களத்திலிருந்து விடுபட்டு எப்போதாவது வந்து சில நாள்கள் இருக்கும் உடன் பிறந்தவனும், தோழி முத்துவடிவும், கன்றுக் குட்டியும் தவிர வேறு ஒருவரையும், அறியாமல் வளர்ந்தவள். பிறகு தில்லை நகரமும், ஆடவல்லான் கோயிலும், தில்லையிலுள்ள ஈசானபண்டிதர் திருமடமும் பழக்கமாயின. இளவரசர் அறிமுகமானார். அவளைவிட முப்பது வயதாவது மூத்தவராக இருந்த இளவரசரைப் பார்க்கும்போது புரிந்து கொள்ளா நாணம் அவளைச் சூழ்ந்து கொள்ளும். அவருடைய கம்பீரத் தோற்றமும், வடிவழகும், நாட்டியத்தின் மீதுள்ள ஆர்வமும், நாட்டியமாடும் திறமையும், நடனக் கலையில் தன்னை மேதையாக்கிவிட வேண்டுமென்ற அவர் ஆர்வமும் அவள் இதயத்தில் இளவரசரை ஏற்றி மதிப்பு மிகு பீடத்தில் அமர வைத்தன. காலில் சதங்கை அணிந்து கொள்ளும் போதெல்லாம் அவள் இளவரசரை நினைப்பாள். நாள்களாக ஆக இளவரசரிடம் தனக்குத் தனித்த ஓர் உரிமை இருப்பதாக எண்ணலானாள். விழிகளை நேருக்கு நேர் பார்த்துப் பேசக் கூச்சப்பட்ட அவள் நெருக்கமாக இருந்து பேச முயன்றாள். சிரித்துப் பேசினாள். அவரை ஆடச் சொன்னாள்; தானும் ஆடினாள். பாடல்களின் பொருளுக்கு ஏற்ப முக பாவங்களில், அங்க முத்திரைகளில் தவறு ஏற்பட்டால் திருத்த முற்பட்டாள்.

பழையாறையில் தனி வீட்டில் இருக்க அழைப்பு வந்தவுடன் அவள் கண்ட கனவே வேறு. இளவரசர் தனக்கு மட்டுமே சொந்தமாக இருக்கக்கூடாதா என்ற பேராசையும் உதித்தது.

இளவரசரின் அபிமானம் பெற்ற வீரம்மாள் என்பதைச் சிறிது நேரத்திற்கு முன்பு அறிந்த பணிப்பெண்களில் ஒருத்தி அறிவுக் கூர்மை அதிகம் உடையவள். வீரம்மாளிடம் நீண்ட நாள்கள் பழகியவள்போல் நெருங்க முயன்றாள். பணிவும் பாசமும் கொண்ட அவளிடம் சோழ

அரச குடும்பத்தைப் பற்றிய விவரங்களை அறிய முற்பட்டாள்.

இளவரசர் ஐந்தாறு புதல்வர்களுக்கும், இரு பெண் களுக்கும் தந்தை என்றறியும் போது வீரம்மாளுக்கு ஏற்பட்டது அதிர்ச்சியா அல்லது வியப்பா என்று அவளுக்கே தெரியவில்லை.

"எனக்கு இளவரசரின் இரு புதல்வர்களைத் தெரியும்" என்று வீரம்மாள் பேச்சைத் தொடங்கும்போது பணிப் பெண் குறுக்கிட்டு, "ஓ! சுந்தரசோழனை அறிந்திருப் பீர்கள்" என்றாள், அந்தப் பணிப் பெண்.

"அதெப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறாய்?" என்று வீரம்மாள் கேட்டாள்.

"அழகிய பெண்கள் இருக்குமிடத்தில் சுந்தர சோழரைப் பார்க்கலாம். அதனால்..."

"ஓ! உனக்கும் நடந்த சம்பவம் தெரிந்துவிட்டதா?"

தான் சற்று அதிகமாகப் பேசிவிட்டோமோ என்று தன் குரலைத் தாழ்த்தி, "என்னைப் பொறுத்தருளுங்கள். உங்களிடம் முறை தவறி நடக்க முயன்றதற்காக இளவர சரின் மூத்த புதல்வர் இராசாதிராசன் கடுமையாகத் தண்டித்ததும் சுந்தரசோழன் தங்கள் பாதங்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டதையும் நாட்டு மக்கள் பேசிக் கொண்டதி லிருந்து நான் அறிந்தேன். பொதுவாக மாளிகைச் செய்திகளை நான் பேசவே மாட்டேன். கண் இருந்தும் பாராதவள்; காதிருந்தும் கேளாதவள்".

"நல்ல வேளையாக நா இருந்தும் பேசாதவள் என்ற பெயரைப் பெறவில்லையே!" என்று வீரம்மாள் கூறிய போது இருவரும் நகைத்தனர்.

அப்படிச் சிரித்திருக்கக் கூடாது என்பதை உணர்த்த மற்றொரு பணிப்பெண், 'வந்த வேலையைப் பார்க்காமல் வம்பு பேசுவது உனக்கு வழக்கம்' என்று கடிந்து கொண்டவுடன் முதலில் பேசிய பணிப்பெண், "அம்மா, அம்மா! நேரமாகிறது தலைவாரிக் கொள்ளுங்கள். தங்க ளுக்கு உதவட்டுமா?" என்றாள்.

வீரம்மாளின் நீண்ட கருங்குழலை நறுமணத் தைலமிட்டு நீவிக்கொண்டே, "உங்களையும் நான் இனி இளவரசி





யாரே என்றுதான் அழைக்கப் போகிறேன்" என்று பேச்சைத் தொடங்கினாள்.

"ஓ! புதிய தகுதியை நீ தந்துவிட்டாயா?" என்று வீரம்மாள் கேட்டாள்.

"இளவரசரின் திருமகளார் தங்களைப் பற்றி என்னிடம் விவரித்த பிறகுதான் தங்கள் அருமை பெருமை எனக்குத் தெரிந்தது"

"இளவரசரின் திருமகளாரின் பெயர் என்ன?"

"இளவரசருக்கு இரு பெண்மக்கள். முதல் பெண் அருண்மொழி நங்கை. 'பிரானார்' என்று மதிப்பும், மரியாதையுடன் அவர்களை அழைப்பார்கள். இரண்டாவது பெண்தான் தங்களைச் சந்தித்த உடனே பற்றும், பாசமும் கொண்டுவிட்ட அம்மங்கை தேவி. இரு பெண் மக்களிடமும் மிகுந்த அன்பு கொண்டிருக்கும் இளவரசருக்கு அம்மங்கை தேவியிடம் சற்றுக் கூடுதல் பாசம் என்று நாங்கள் பேசிக்கொள்வோம். அம்மங்கை ஆழ்வார் என்று ஊர் உலகம் அவரை மரியாதையுடன் அழைக்கும்".

"ஆழ்வார் என்று அழைக்கப்படுவதன் காரணம்?"

"நம் சக்ரவர்த்தி இராசராச சோழ தேவரின் தமக்கையார் பெயர் குந்தவ்வை. அவர் சிவபெருமான் மீது அளவு கடந்த பக்தி உடையவர். அவர் ஆழ்வார் பராந்தகன் குந்தவ்வை என்று மரியாதையளித்து அழைக்கப்பட்டார். அதுபோல் அம்மங்கை சிவநேசச் செல்வி. இறைவன் மீது ஆழ்ந்த பக்தி கொண்டதால் ஆழ்வார் என்று அழைக்கப்படுகிறார்".

"ஓ! நீ எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே! அறிவுக் கூர்மை மிக்கவளாகவும் விளங்குகிறாய்!"

கூந்தலை மிக எளிதாகவும் இலகுவாகவும் இழைய இழைய வாரும்போது வீரம்மாளுக்குச் சுகமாக இருந்தது. தன் அத்தை இப்படித்தான் வாஞ்சையோடு பின்னலிடுவாள். கூந்தலில் பூசப்பட்ட நறுநெய்யின் மணம் அவள் மனதில் புத்துணர்வை ஏற்படுத்தியது. இதுவரை அவள் இத்தகைய நறுமணத்தை நுகர்ந்ததில்லை.

பணிப்பெண்ணைப் பாராட்டி அவளுடைய குடும்ப நலன்களைக் கேட்டறிவது போல அவளிடமிருந்து மேலும் சில செய்திகளைக் கேட்டறிந்தாள் வீரம்மாள்.



இராசேந்திர சோழ தேவருக்கு ஒரே ஒரு மனைவியா அல்லது பல பேரா என்று கேட்டறிய வீரம்மாளுக்கு ஆவல். எப்படிக் கேட்பது?

"உன் பெயர் என்னவென்று சொன்னாய்?"

"செவ்வந்தி".

"செவ்வந்தி! உன்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்?"

"நான்கு பெண் மக்கள்கள், ஓர் ஆண்".

"எல்லாரும் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகளா?"

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? என் தந்தைக்கு என் தாயார் ஒரே மனைவிதான். அதற்கு மேல் கல்யாணம் செய்துகொண்டால் சாதி சமூகம் பழிக்கும். நாங்கள் எல்லாம் அரச குடும்பத்தவர்களா?"

"தெரியாமல் நான் கேட்டேன் செவ்வந்தி! நம் இளவரசருக்கு எத்தனை மனைவிகள்?" - இப்படிக் கேட்பது தன் அறியாமையால்தான் என்று அவள் உணர வேண்டும் என்பதற்காக முகத்துணர்வுகளைச் சிறு குழந்தையுடையது போல் மாற்றிக் கொண்டாள்.

"இதென்ன அதிசயம்போல் கேட்கிறீர்களே? ஊர் உலகம் அறிந்த செய்தி உங்களுக்குத் தெரியாமல் போனதெப்படி? முக்கோக்கிழானடிகள், அரிந்தவன்மாதேவி, திரிபுவனமாதேவி, பஞ்சவன்மாதேவி. அவர்களுள் இன்று ஜீவியவந்தராய் இருப்பவர்கள் அரிந்தவன்மாதேவியும் பஞ்சவன்மாதேவியும்தான".

"பஞ்சவன்மாதேவி - சக்ரவர்த்திகளின் பட்டத்து அரசியின் பெயர்கூட பஞ்சவன் மாதேவிதானே?" என்று கேட்டாள் வீரம்மாள்.

"ஓ! உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே! ஒன்றும் தெரியாதவர்கள் போல் கேட்கிறீர்கள். என்னைச் சோதிக்கிறீர்களா? நான் ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டால் என்னைப் பற்றிப் புகார் செய்து விடாதீர்கள்" என்று மிகவும் பயந்தவள் போல் பேசினாள் செவ்வந்தி.

"செவ்வந்தி! நீ இரகசியம் எதையும் வெளியிட்டுவிடவில்லையே, ஏன் பயப்படுகிறாய்? இந்த மாளிகையில் எனக்கு நீதான் உதவியாக இருக்கப் போகிறாய்" என்று அவள் மீது நம்பிக்கை உடையவள் போல் பேசினாள் வீரம்மாள்.

"உங்களுடைய நல்ல குணம் எனக்கு உற்சாகத்தை அளித்துவிட்டது. நான் ஒன்று கேட்கிறேன்: என்னைக் கோபிக்கவோ தவறாக நினைக்கவோ மாட்டீர்களே? உங்களைப் பார்த்தால் அரச குடும்பத்தவர்போல் தெரியவில்லையே. நீங்கள் எந்த நாட்டுக்காரர்?" என்று கேட்டவள், தவறாகக் கேட்டுவிட்டோமோ என்று பயந்து, "உங்களிடம் அடக்கம் இருக்கிறது. அன்பு இருக்கிறது. தான் என்ற மமதை இல்லை. நாட்டியக் கலையில் சிறந்து விளங்குகிறீர்கள்" என்று கூறிவிட்டு, வீரம்மாள் என்ன சொல்வாளோ என்ற அச்சத்துடன் இருந்தாள்.

வீரம்மாள் செவ்வந்தியைத் திரும்பிப் பார்த்து, "அரச குடும்பத்தாரிடம் மட்டும்தான் அகந்தை இருக்கிறது என்று சொல்கிறாயா? அப்படி இல்லை. மனிதராகப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் அடிப்படையாக சில குணங்கள் உண்டு. எவ்வளவு உயரம் சென்றாலும் இயல்பி னின்று மாறாமல் இருப்பதுதான் சிறப்பு. நான் என்றுமே சாதாரணமானவளாக எளிமையுடன் இருக்க விரும்பு கிறேன். என் நிலையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லையே! மேலும், இப்போதும் நான் எளியவள்தான். என்னை எதற்காக மாளிகைக்கு அழைத்தார்கள் என்றே புரிய வில்லை. ஒரு நாட்டியக்காரி என்று நினைத்துவிட்டார்கள் போலத் தோன்றுகிறது".

"ஆகா; அம்மங்கை ஆழ்வார் தங்களைத் தன்னிடத்துக்கு அழைத்துவரச் சொல்கிறார் என்றால், மாளிகையில் தனித் தகுதி தங்களுக்கு ஏற்பட்டு விட்டதென்றே சொல்ல வேண்டும்".

"அப்படியொன்றும் தெரியவில்லையே, செவ்வந்தி! பகலில் அவர்கள் என்னை நடத்திய விதத்தை நீ அறிந்தால் அப்படிச் சொல்லியிருக்க மாட்டாய். என்னை நடனமாடச் சொல்லிவிட்டு அவர்கள் வேறு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு தங்கள் இருப்பிடத் திற்கு என்னை வரச்சொல்லிவிட்டு, ஒன்றும் பேசாமல் என்னை நின்று கொண்டிருக்கச் செய்து என்னை அவமதித்துவிட்டார்கள். நான் சாதாரண குடும்பத்தவ ளாய் இருக்கலாம். ஆனால் தன்மான உணர்வு மிக்க வீர பரம்பரை என்று அவர்களுக்குத் தெரியாது" - இதைச் சொல்லும்போது வீரம்மாள் குரல் தழுதழுத்தது.



"அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் தகுதியை அறிந்திராவிட்டால், உங்களை இங்கே அழைத்திருக்க மாட்டார்கள். உங்களை அவர்கள் சோதித்து இருக்கலாம்" என்றாள் செவ்வந்தி.

"சோதித்து இருக்கலாம்!" வீரம்மாள் முணுமுணுத்தாள்.

சோதனை அவளுக்குக் காத்திருந்தது. அலங்காரம் முடித்து, அம்மங்கை இருக்குமிடத்திற்குப் புறப்பட ஆயத்த மாயிருந்தபோது, இளவரசர் இராசேந்திர சோழரின் மனைவி இளைய பஞ்சவன்மாதேவியிடமிருந்து அழைப்பு வந்தது.

சாய்ந்து கொண்டிருக்கும் மாலை மஞ்சள் வெயிலின் கதிர்க்கோடுகள் சாளரங்கள் வழியே அந்தக் கூடத்தில் வண்ணக் கோலமிட்டுக் கொண்டிருந்தன

"வாடி, பெண்ணே, நீதான் வீரம்மாளா?" என்று பஞ்சவன்மாதேவி வீரம்மாளை வரவேற்றாள். அவளைச் சுற்றிலும் பொன்னாபரணங்கள் பூண்டு நடுத்தர வயதைக் கடந்த பெண்கள் உட்கார்ந்திருந்தனர். இராசராச சோழதேவரின் பட்டத்தரசி பெரிய பஞ்சவன்மாதேவியும் தளர்ந்த நிலையில் திண்டில் சாய்ந்திருந்தாள். அவர் களைப் பார்த்தவுடனே வீரம்மாளின் மேனி மெல்ல நடுங்கியது. அங்கிருந்தவர்களுள் அவளுக்குத்தான் வயது குறைவு. பழுவேட்டரையர் குலத்துதித்த இளைய பஞ்சவன் மாதேவி உயரமாகவும், கம்பீரமாகவும், பொன்னிற மேனி யுடன் நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருப்பவள் என்று சொல்ல முடியாத அளவுக்கு வனப்புடன் திகழ்ந்தாள். குத்தலும், கிண்டலும் நிறைந்த சொற்களை வீசுவதில் வல்லவள்.

வீரமமாள் மரியாதைக்காகக் குனிந்த தலையுடன் நின்றாலும், அவள் விழிகள் அங்கிருந்தவர்களை மதிப் பிட்டுக் கொண்டிருந்தன.

"உன் காலில் சதங்கையைக் காணவில்லையே. கழற்றி வைத்துவிட்டாயா?" என்று அங்கிருந்தவளுள் ஒருத்தி கேட்டாள்.

கேள்வி வந்த திக்கை நோக்கி வீரம்மாள் திரும்பி விழி மூலம் தன் பதிலை வீச முயன்றாள்.

"ஏன், உங்களுக்கும் நாட்டியம் கற்றுக் கொள்ள ஆசையா? என் சதங்கையைக் கொடுக்கட்டுமா?" வீரம்மாள் குரலில் இருந்த நெருப்பு கேள்வி கேட்டவளைச் சுட்டிருக்க வேண்டும்.

அந்தக் கூடத்தில் திடீரென நிசப்தம் நிலவியது. கேள்வி கேட்டவள் இராசேந்திர சோழரின் மற்றொரு நாயகி. அரிந்தவன்மாதேவி. வருங்காலத்தில் இராசேந்திரனுடன் இணையாக அரியணையில் அமரப் போட்டி போடுபவர்களுள் அவளும் ஒருத்தி. தன்னை எதிர்த்துப் பேச ஒருவருமில்லை என்ற அகந்தையுடன் வாழ்ந்து வந்த அவளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

வீரம்மாள் தொடர்ந்தாள். "நாட்டியக் கலை தெய்விகமானது. நீங்கள் கற்றுக் கொண்டால் புண்ணியத்துக்குப் புண்ணியம். உடல் நலத்துக்கு உடல் நலம். உடல் பருமனையும் குறைக்கலாம். எந்த நோயும் அணுகாது. என் பாடத்தை எப்போது தொடங்கலாம்?" என்று கேட்டவுடன் அங்கிருந்தவர்கள் எழுப்பிய சிரிப்பொலி அடங்கச் சிறிது நேரமாகியது. சிரிப்பு நெருப்பாகக் கொட்டியது. அரிந்தவன் மாதேவியின் கனமான உடலைச் சுட்டிக் காட்டுகிறாள் வீரம்மாள் என்று அனைவரும் நினைத்து விட்டனர்.

அங்கிருந்தவர்களுள் வயது கூடுதலாகக் காணப்பட்ட பஞ்சவன்மாதேவி. "உம் - என்ன சிரிப்பு? இளவரசர் வரும் நேரம்" என்று குரல் கொடுக்கவும் அந்த அதட்டலில் சிரிப்பலை அடங்கியது.

"இளவரசர் இங்கே வருவதாகச் சொல்லியிருக்கிறாரா?" பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

"எனக்கு எப்படித் தெரியும்? வீரம்மாளா – இவள் பெயர் என்ன? பெயர் சரியாகத் தெரியவில்லை. இவளைக் கேளுங்கள். இளவரசரின் நடவடிக்கை எல்லாம் முழுமையாக அறிந்தவள்" என்றாள் அரிந்தவன்மாதேவி.

"ஓ! இப்பொழுது இளவரசரின் மனத்துக்கு இனியவள் இவள்தானா? இளம் வயது - இளவரசர் மயங்குவதற்குக் கேட்க வேண்டுமா? அதனால்தான் மரியாதை தெரியாமல் பேசுகிறாள். நாம் எல்லாம் கசந்துவிட்டோம். நம்மை அவர் அணுகியே பல நாள்களாகிவிட்டன" என்றாள் அங்கிருந்தவர்களுள் ஒருத்தி.



"ஏன், நம் பஞ்சவன்மாதேவிகூட இளம் வயதில் அழகாய்தானிருப்பாள். போருக்குச் செல்லாத போதெல்லாம் இளவரசர் அவளுடன்தான் இருப்பார். பழுவேட்டரையர் வம்சமல்லவா? இளவரசருக்குச் சற்றுப் பயமும் கூட. காலம் மாறுகிறது. இவள் வந்துவிட்டாள். என்ன பெயர் இவளுக்கு? வீரம்மாளா? வீரமாதேவியா?" என்று எரிச்சலுடன் கிண்டலும் நிறைந்த குரலில் கேட்டாள் அரிந்தவன் மாதேவி.

"என்னை வம்புக்கு இழுக்காவிடில் இவளுக்குப் பொழுது போகாது. ஏன் - நீயும்தான் இளவரசரை மயக்க அழகுக்கு அழகு செய்து கொள்வதுதானே? இறைவன் படைக்கும்போதே வீரம்மாளை அழகுடையவளாகப் படைத்துவிட்டான். என் அழகில் இளவரசர் மயங்கிய கதை சொல்லவா? அவரை ஒரு மாயவலையிலிருந்து மீட்க நான் பட்டபாடு உங்களுக்கு என்ன தெரியும்? இதோ பாருங்கள், இப்போதே சொல்கிறேன் - மனதிற்குள் ஏற்பட்டுள்ள சந்தேகத்தை விண்டுரைக்காவிடில் எனக்குத் தூக்கம் வராது. நமக்கெல்லாம் வயது கூடிவருகிறது. இளவரசருக்கு வயது குறைந்து இளமை கூடிவருகிறது. ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொருத்தியிடம் இளவரசருக்கு மோகம். அதுபோல் இப்போது வீரம்மாள்! வீரம்மாள் வீரமாதேவியாக மாறி நம் இடத்தைப் பிடித்துக் கொண்டால் அதிசயப்பட முடியாது" என்று மூச்சுவிடாமல் பேசியவள் பஞ்சவன்மாதேவி.

அங்கு பேசப்பட்ட தேவையற்ற வம்புப் பேச்சால் சீற்றமடைந்த வீரம்மாள், தக்க மறுமொழி கூற நினைதத போது, அவர்கள் கூடியிருந்த அந்தப்புரக் கூடத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

அம்மங்கை தேவி அங்கு பணிப்பெண்டிர் சூழ வந்து நின்றாள். அம்மங்கையிடம் இராசேந்திரனின் நாயகிகளுக்கு அன்பும், மதிப்பும் அதிகம்.

அம்மங்கையை மகிழ்ச்சியுடன் வரவேற்ற பஞ்சவன்மாதேவி, 'அம்மங்கை! இளவரசருக்கு உன்னிடம் பாசம் அதிகம். உன் இடத்தைப் பங்குபோட இன்னொருத்தி வந்துவிட்டாளடி; மிகவும் கவனமாக இருக்க வேண்டும்" என்றாள்.

"நீ சொல்வது சரியில்லை. அம்மங்கையின் இடத்தைப் பங்கிட இவள் வரவில்லை. உன் இடத்தை என்று சொல்" என்று திருத்தினாள் அரிந்தவன்மாதேவி.

வீரம்மாள் திடுக்கிட்டாள்... பங்கு - இடம் என்ன பேசுகிறார்கள் இவர்கள்? பேச்சின் திசை மாறுகிறது. ரச உணர்வு தாழ்கிறது. இளவரசரின் இதயத்தில் நான் இடம் பெற்றுவிட்டேன் என்று இவர்கள் அறிந்து விட்டது சரிதான். ஆனால் அந்த இடத்தைப் பற்றி இவர்களுடைய கணிப்பு எனக்குப் புரியவில்லையே. பஞ்சவன்மாதேவியின் இடத்தைப் பறிக்க நான் வந்துவிட்டதாகச் சொல்கிறார்களே! இது சரிதானா? முறைதானா?

வீரம்மாளுக்கு இப்போது ஆத்திரத்தைவிடத் துக்கமே மேலிட்டது. கண்கள் கலங்கின. சொல்லம்புகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. முகத்தை மூடிக்கொண்டாள். அந்தக் கூடத்தில் இருப்பவர்கள் எல்லோரும் சேர்ந்து தன்னை விரோதியாகப் பார்ப்பது போல் தோன்றுகிறது. ஐயோ, அம்மா, அத்தை என்று அருமை முத்துவடிவு நீங்கள் எல்லாம் எங்கே போய்விட்டீர்கள்? அண்ணா! நீங்கள் எங்கே சென்றுவிட்டீர்கள்? எனக்கு இங்கு ஆதரவாகப் பேசுபவர் யாரும் இல்லையா?

ஏன் இல்லை?

வீரம்மாளின் தோளை ஓர் அன்புக் கரம் தொட்டது. தணல்போன்று கொதிக்கும் தன்னுடலில், தாமரைத் தண்டினால் ஏற்பட்ட வருடல் போல் மென்மை - குளிர்ச்சி ஏற்பட்டது.

"வீரம்மா! உனக்காக என் இருப்பிடத்தில் எவ்வளவு நேரம் காத்திருப்பது? இங்கே ஏன் வந்தாய்? வா, என்னுடன் வா! உன்னுடன் நான் நிறையப் பேசவேண்டும்" என்று அம்மங்கை ஆழ்வார் பேசினாள்.

வீரம்மாளின் துயரம், கணத்தில் பறந்தோடியது. அம்மங்கையின் மார்பில் குழந்தைபோல் சாய்ந்தாள்.







# 28. அலைபாயும் மனம்

**வீ**ட்டு வாசலில் சிவிகை வந்து நின்றது. வீரம்மாள் இறங்கினாள். இன்னும் சிறிது நேரத்தில் மாலை மறைந்துவிடும். அந்தி சூழும். அவ்வேளையில் வீட்டு நிலைப்படியருகே உள்ள விளக்கு மாடத்தில் விளக்கை ஏற்றப் பெண்கள் முயன்று கொண்டிருந்தனர். விளக்கை ஏற்றிக் கொண்டே வீதியில் என்ன நடக்கிறது என்பதையும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

வீரம்மாளின் அத்தை ஆரத்தி எடுத்து வீரம்மாளை வரவேற்றாள். அவள் கன்னத்தைத் தடவி திருஷ்டி சுற்றினாள். உள்ளேயிருந்து முத்துவடிவு ஓடிவந்தாள். வீரம்மாளின் முகத்தை நோக்கினாள். விழிகளிலிருந்து செய்தி அறிய முயன்றாள். வீரம்மாளின் புன்முறுவல் அவளுக்கு நம்பிக்கையை அளித்தது.

வீட்டினுள்ளே பிள்ளையார் சிலையருகே விளக்கை ஏற்றிய அத்தையை வணங்கி, வீரம்மாள் முற்றத்துத் தூணருகே உட்கார்ந்து கொண்டாள். புதிய காற்றைச் சுவாசித்தது போன்ற புத்துணர்ச்சி ஏற்பட்டது.

அருகே இருந்த பூக்கூடையைக் கண்ட வீரம்மாள், "அத்தை! கோயிலுக்குப் புறப்பட்டுவிட்டீர்களா?" என்று கேட்டாள்.

"இந்த நகரத்தில் எவ்வளவு கோயில்கள்! நாள் ஒன்றுக்கு ஒரு கோயில் என்று வருடம் முழுவதும் போய்த்

துதித்தாலும் நாள் போதாது. மாளிகைக்குச் சென்ற நீ எப்போது வருவாய் என்று எதிர்பார்த்து வாயில் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தேன். தெருவிலுள்ளவர்கள் ஒவ்வொருவராக அறிமுகம் செய்து கொண்டார்கள். அரச பல்லக்கு வந்ததன் காரணத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். "அடி, வீரம்மா! அவர்களுள் சிலர் சொல்வதைப் பார்த்தால் எனக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கிறது; அதே சமயம் பயமாகவும் இருக்கிறது" என்றாள் அத்தை.

அத்தையின் மடியில் தலைவைத்துக் கொண்டு படுத்த வீரம்மாள் கேட்டாள்: "பயமாக இருக்கிறது என்று எதைக் கொண்டு சொல்கிறீர்கள்?"

"இளவரசர் இராசேந்திர சோழ தேவருக்கு உன் மீது..." என்று சொல்ல வாயெடுத்தவள் சற்று நிறுத்திக் கொண்டாள்.

"சொல்லுங்கள் அத்தை! வீதியிலுள்ளவர்கள் சொல்வதில் உண்மையும் இருக்கும்" என்று கூறி எழுந்து உட்கார்ந்தாள். பிறகு அவள் மாளிகைக்குச் சென்றதிலிருந்து திரும்பி வந்தவரையிலும் அங்கு நடந்தவற்றை விவரித்தாள்.

இளவரசர் நாயகிகளின் பொறாமைப் பேச்சையும் இளவரசர் மகளின் அன்பு வார்த்தைகளையும் ஒன்று விடாமல் சொன்னாள்.

"அத்தை! அம்மங்கையின் ஆதரவான பேச்சு இல்லாதிருந்தால் திரும்பவும் மூங்கில் துறைக்கே சென்றுவிட முடிவு செய்திருப்பேன். இளவரசரின் திருமகள் என்னை மிகவும் பாராட்டினாள். நடனக் கலையில் எனக்குள்ள திறமையைப் புகழ்ந்தாள். இளவரசர், தன் மகளிடம் என்னைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறாராம். அவர்கள் சொன்னதிலிருந்து இளவரசருக்கே என் மீது ஏற்பட்டுள்ளது வித்தியாசமான அன்பு என்று தெரிகிறது. பயமாக இருக்கிறது அத்தை! ஆனால், சிவபெருமான் மீது ஆழ்ந்த பக்தியுடைய அம்மங்கையின் வார்த்தைகள் நம்பிக்கை அளிக்கின்றன. ஆனால், அந்தப்புரத்திலுள்ள மற்ற இளவரசிகளுடன் நான் சேர்ந்திருப்பதை நினைக்கும்போது பயமாக இருக்கிறது".



அத்தை தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தாள். "அடி பெண்ணே! முதலில் அப்படித்தான் இருக்கும். பெண்களுக்குப் பொறாமை பிறவிக் குணம். அரச குடும்பத்தாரையும் அது விட்டுவிடுமா? இளவரசரின் ஆதரவு உனக்கு இருக்கும்போது, உனக்கு யாராலும் தீங்கு செய்துவிட முடியாது" என்றாள்.

"அம்மங்கை ஆழ்வாரும் அதைத்தான் சொன்னார்கள். இப்போது ஜீவியவந்தராக இருக்கும் இளவரசிகளுள் ஒருத்தியைக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் தாய் பட்டத்து இளவரசியாக அமரவேண்டியவள் இறந்த பிறகு பழுவேட்டரையர் குடும்பத்தைச் சேர்ந்த பஞ்சவன்மாதேவி மற்றவர்களை அடக்கி ஆளும் அதிகாரம் படைத்தவளாகிவிட்டாள். அத்தை! நமது சக்ரவர்த்தியின் மனைவி பெயரும் பஞ்சவன்மாதேவி. இளவரசரின் மனைவி பெயரும் பஞ்சவன்மாதேவி! பழுவேட்டரையர் குடும்பத்தவர்கள் செல்வாக்கு அந்தப்புரத்திலும் ஓங்கி நிற்கிறது. அம்மங்கைக்கும் பிடிக்கவில்லை. தன் தந்தையின் மனம் அறிந்து, அவர் விருப்பம் அறிந்து நடக்கக் கூடியவள் நான்தானாம். எனக்குப் பயமாக இருக்கிறது அத்தை!"

"நான் பயப்படுவதும் அதற்காகத்தான். இளவரசருக்கு உன் கலையின் மீது ஆர்வமா? அல்லது..." அத்தை மெல்லப் பேசினாள்.

"நான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவளில்லையாம். நாட்டியமாட வந்தவளாம். நாட்டியத்திற்குத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த நூற்றுக் கணக்கானவர்களுள் நானும் ஒருத்தியாம். ஆசை நாயகியாக இருக்கக்கூட எனக்குத் தகுதியில்லையாம். இப்படியெல்லாம் பேசுபவர்கள் இடையே நான் போராடிக்கொண்டே மாளிகையில் வாழவேண்டுமா?"

வீரம்மாளின் கேள்விக்கு அத்தை உடனே மறுமொழி கூறவில்லை. தோழி முத்துவடிவு அங்கு நடைபெற்ற உரையாடலைக் கேட்டு என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்தவாறிருந்தாள்.

இரவு. முத்துவடிவு தன் அருகே படுத்திருக்கும் வீரம்மாளைப் பார்த்து, "மண்தரையில், ஓலைப்பாயில் படுப்பது இந்த இரவுதான் கடைசியாக இருக்கும் என்று





நினைக்கிறேன். ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்ட, விசாலமான அறையில் பஞ்சணை மெத்தையில்தான் இனி உன் சயனம். என்னை மறந்துவிடுவாயா?" என்று கேட்டாள். வார்த்தைகள் தழுதழுத்தவாறு வெளிவந்தன.

முத்துவடிவு ஏன் இப்படிச் சொல்கிறாள்? முத்துவடிவு தான் கேட்டறிந்தவற்றைச் சொன்னாள்.

"சிவிகையுடன் வந்த வீரர்கள், குடிக்கத் தண்ணீர் கேட்டார்கள். கொடுத்தேன். அவர்கள் உன்னிடம் வைத்திருக்கும் மரியாதை தெரிந்தது. நாளைக்கு மீண்டும் மாளிகையிலிருந்து அழைப்பு வருமாம். உன்னை மேளதாள மரியாதையுடன் வரவேற்கப் போகிறார்களாம். நீ இளவரசியாகப் போகிறாயாம்! அப்படியென்றால், இந்தக் குடிலுக்கு நீ வரமாட்டாய் அல்லவா? இங்கே உறங்கமாட்டாய் அல்லவா?"

இதைக்கேட்ட வீரம்மாளுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. தன் வருங்காலம் எவ்வாறு இருக்குமோ என்று கவலைப் படத் தொடங்கினாள். பலப்பல எண்ணங்கள். இனிய நினைவுகள். பயங்கள். பாட்டனாரையும், அத்தையையும், முத்துவடிவையும் பிரியப் போகிறோம் என்ற வேதனை.

"ஏன் - அரச வாழ்வு வேண்டாம் என்று மறுத்துவிட்டால்?" - இதை நினைக்கும்போதே அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இரவு நன்றாக உறங்கினாள். பொழுது புலர்ந்தவுடன் புழக்கடைத் தோட்டத்திற்குச் சென்றாள். கொல்லைப்புறத்தில் சிறு வாய்க்காலில் சலசலவென்று தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

**மா**ளிகையிலிருந்து சிவிகை வந்துவிட்டதைக் கண்ட முத்துவடிவு முற்றத்தையும் தாழ்வாரத்தையும் ஒரே மூச்சில் தாண்டி, புழக்கடையின் பக்கம் வந்து, "வீரம்மா, வீரம்மா! என்று கூவினாள். வேலிப் படல் அருகே தவித்துக் கொண்டிருந்த ஏதோ ஒரு கொடியைப் படர உதவிக் கொண்டிருந்தவள், முத்துவடிவு பரபரப்புடன் ஓடிவருவதைப் பார்த்தவுடன் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"நான் மாளிகை வாழ்வை அனுபவிக்கப் போவதில் இவளுக்குத்தான் என்ன பெருமை!" என்று சொல்லிக் கொண்டாள். 'பொறாமைப்படாமல் சந்தோஷப்படுகிறாளே!'



'என்னதான் இருந்தாலும் அத்தையின் கரத்தால் ஒருவாய்ச் சோறு உண்பதிலும் முத்துவடிவுடன் நேரம் போவது தெரியாமல் சிரித்துப் பேசி மகிழ்வதிலும் ஏற்படும் இன்பம் வேறு எங்கு ஏற்படப் போகிறது? நூங்கில் துறையில் கழித்த பொழுதுகள் மீண்டும் வரப் போகின்றனவா? அப்படியிருந்தும் மாளிகையினின்று வரும் அழைப்பை ஏற்க மனம் துடிக்கிறதே; மாளிகையில் வசிக்கும் அரச குடும்பத்தவரின் ஏச்சையும் பேச்சையும் பொருட்படுத்தாமல் அங்கே தங்கியிருக்க ஆவல் ஏற்படுகிறதே. அதற்கு யார் காரணம்? எது காரணம்?

இளவரசர்தான் காரணம். இப்போது இளவரசருடைய மகள் என்னைவிட வயதில் மூத்தவள். தந்தையிடம் அவளுக்கு எவ்வளவு மரியாதை, பக்தி! அவர்களுடனேயே இருந்து விடுவோமா? அம்மங்கை தேவி பழையாறையிலேயே நீண்ட நாள் தங்கியிருக்க முடியுமா? வேங்கிக்குச் செல்லமாட்டாரா? அவர்கள் சென்றுவிட்டால் என் நிலை என்ன? எனக்கு ஆதரவு யார்?'- இப்படியும் சிந்தித்தாள் வீரம்மாள்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. ஏன் இப்படி மாறுபட்டு நினைக்கிறோம்? இளவரசர் எங்கே சென்றுவிடுவார்? அவர் இந்த நாட்டின் பேரரசராகப் போகிறார். அப்படியென்றால் நம் மதிப்பும் இன்னும் உயருமல்லவா?

இந்தச் சிந்தனை அவளுக்குப் புதிய தெம்பை அளித்தது. முத்துவடிவைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற வேதனை சற்றுக் குறைந்தது.

மாளிகையிலிருந்து சிவிகை வந்து விட்டது என்பதைச் சொல்ல ஓடோடிவரும் முத்துவடிவைப் பார்த்து, "மெதுவாக வா, முத்து! கீழே விழுந்து கால் கையை முறித்துக் கொள்ளப் போகிறாய்" என்று கூறிக்கொண்டே அவளை நோக்கிச் சென்றாள்.

"வீரம்மா! நேற்று நான் சொன்னதுபோல் பல்லக்கு வந்துவிட்டது. பல்லக்குடன் குதிரைமீதமர்ந்த இரண்டு வீரர்கள் துணைக்கு வந்திருக்கிறார்கள். வீதிவாசலில் பெண்டுகள் வந்து நிற்கிறார்கள். நீ இன்னும் குளிக்கக்கூட இல்லையா?" என்று மளமளவென்று பேசினாள்.

வீரம்மாள் சிரித்தாள். "வரட்டுமே, காத்திருக்கட்டும். குதிரையை மரநிழலில் நிறுத்தச் சொல்லு. சற்று ஓய்

வெடுத்துக் கொள்ளட்டும். நான் கிணற்றில் நீர் சேந்திக் குளித்துவிட்டுத்தான் வருவேன். அத்தை கையால் பழைய அமுது, தயிர்விட்டுக் கலந்து போடச் சொல்லி உண்ட பிறகுதான் வருவேன். மாவடு ஊறி இருக்கிறது. பானையைத் திறந்தால் அதன் மணம் நாவில் நீர் சுரக்க வைக்கிறது. இவை மாளிகையில் கிடைக்குமா என்பது சந்தேகமே. அதனால் மூச்சுமுட்ட பழையமுதை ஒரு கை பார்த்தே வருவேன். நீயும் வா; குளித்து விட்டு வருவோம்" என்றாள் மிகவும் அமைதியாக.

பிறகு, "முத்துவடிவு, நீயும் என்னுடன் வரப் போகிறாய். மரப்பெட்டியில் நல்ல சேலை இருக்கிறது. எடுத்து உடுத்திக் கொள்" என்றாள்.

"ஐயோ, நானா? உன்னுடன் மாளிகைக்கா? நான் எதற்கு வீரம்மா? மாளிகைக்குள் நுழைய விடமாட்டார்கள். புறப்படுவதற்கு நீ ஆயத்தமாகு. தாமதப்படுத்தாதே!" என்றாள்.

"அதுதான் முடியாது. நீயும் வருகிறாய், என்னுடன் இருக்கிறாய். இங்கே படுப்பது போல் அங்கும் என் அருகே படுத்துறங்குகிறாய். காலைத் தூக்கித் தொப்பென்று மட்டும் என்மீது போட்டுவிடாதே. பயத்தில் நான் கூவினால், இரவு வேளையில் பயந்து என்னவோ ஏதோ என்று பலர் ஓடிவந்துவிடுவார்கள்" என்று கூறி நகைச்சுவை ததும்பப் பேசியதுபோல் பெரிதாகச் சிரித்தாள்.

முத்துவடிவு மௌனமாயிருந்தாள். அவளால் சிரிக்க முடியவில்லை. 'இவள் இன்னும் சின்னக் குழந்தையாகவே இருக்கிறாளே. இவளுடைய மாளிகைக்கு நான் வருவதாம்! இரவு இவள் அருகே நான் படுத்துக் கொள்வதாம்! பார்ப்பவர்கள், கேட்பவர்கள் நகைப்பார்கள். இவளுக்கு யார் புத்தி சொல்லப் போகிறார்கள்? அத்தையிடம் சொல்வோம்'.

"அத்தை!" என்று குரல் கொடுத்தாள் முத்துவடிவு.

"எதற்கடி அத்தையை அழைக்கிறாய்?" - வீரம்மாள் செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

முத்துவடிவு, உள்ளே ஓடினாள். வாசலில் பல்லக்கு வந்து காத்து நிற்பதையும், சோழ வீரர்களுள் ஒருவர் ஏதோ சொல்வதற்குத் திண்ணை அருகே நிற்பதையும்,



வீரம்மாள் இன்னும் குளிக்காமல் சோம்பலுடன் இருப்பதையும் அத்தையிடம் தெரிவித்தாள்.

முத்துவடிவு சொல்வதைக் கேட்டுக் கொண்டே வந்த வீரம்மாள் முத்துவடிவை அடிக்க வருவதுபோல் கையை ஓங்கி, "இரு, இரு! உன்னை மாளிகையில் வைத்துப் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள். குறும்புச் சிரிப்பு கும்மாளமிட்டு இதழ்களில் நர்த்தனமாடியது.

சற்று வயதான வீரனொருவன் உள்ளே வந்து பணிவுடன் நின்றான். மாளிகைக்கு முத்துவடிவை உடன் அழைத்துச் செல்ல முடியாது என்ற செய்தியைத் தெரிவித்தான். அவன் மேலும் கூறினான்: "பெரிய அரசியார் தங்களை உடன் அழைத்துவரச் சொன்னார்கள். தாமதமின்றி அழைத்துவரச் சொன்னார்கள். மாளிகைக்கு வந்து நீராடிப் புத்தாடை உடுத்தலாம் என்பதை மறக்காமல் சொல்லச் சொன்னார்கள்" என்றான்.

இதைக் கேட்ட முத்துவடிவு வீரம்மாளிடம் சென்று, "உனக்கு அதிர்ஷ்டம்தான் வீரம்மா! நீ குளிக்கக்கூட இல்லை. நல்ல வேளையாக பல் துலக்கி விட்டாய். இல்லாவிட்டால் அதைக்கூட மாளிகையில் வந்து செய்யச் சொல்லிவிடுவார்கள். பல் தேய்த்து விடுவதற்குப் பத்து பேர் காத்திருப்பார்கள். உம், புறப்படு, புறப்படு! என்று துரிதப்படுத்தினாள்.

"ஏய் முத்துவடிவு! நீயும் உடன் வருகிறாய். நீயும் குளிக்க வேண்டாம்? பல் துலககிவிட்டாயா? இல்லாவிடில் மாளிகைக்கு வந்து துலக்கலாம்! கட்டிய துணியுடன் புறப்படு" என்றாள். அவள் இப்போது வேகமாக இயங்கினாள்.

அத்தையிடம் விடைபெற்றுக் கொண்டாள். "அத்தை! உடல்நலத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். அண்ணன் வந்தால் சொல்லுங்கள். என்னை கவனிக்காமலேயே - ஊர் உலகம் சுற்றிவந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு, வருத்தப்பட்டேன் என்று சொல்லுங்கள். எனக்கு ஓர் அண்ணி எப்போது வரப்போகிறார்கள் என்று கேளுங்கள். ஒருவேளை அவருடைய மதிப்புமிகு தலைவர் - இளவரசர் - அரசகுல மகளாகப் பார்த்து அண்ணனுக்கு முடிவு செய்திருக்கலாம். திருமணம் நிச்சயமாகும் முன்பு நானும் ஒரு முறை அந்த மணப்

பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று சொல்லுங்கள். அத்தை! முத்துவடிவும் என்னுடன் வருகிறாள். வீட்டில் உங்களுக்கு யார் துணை? பாட்டனார் எப்போது வருகிறார், எங்கே போகிறார் தெரிவதில்லை. உம்" என்று கூறும் போது அவள் விழிகளில் நீர் கோத்தது. அது எந்த நேரத் திலும் அருவியாகப் பாயலாம் போலிருந்தது. அவளிடம் பரபரப்பு மிகுந்திருந்தது.

பிள்ளையார் மாடத்திற்குச் சென்று பிள்ளையாரைக் கும்பிட்டாள். அத்தை திருநீறெடுத்து வீரம்மாளின் நெற்றியில் இட்டாள். அப்போது, வீரம்மாள் விழிகளில் தேங்கி நின்ற கண்ணீர் பளபளத்தது தெரிந்தது!

வீரம்மாளை அணைத்துக் கொண்டு அவள் விழிகளைத் தன் சேலையால் துடைத்து, "நீ அசடாக எப்போது மாறினாய்? எங்களைவிட்டு கடல் கடந்தா போகப் போகி றாய்? எல்லா நலன்களுடன் நீ நூறாண்டுகள் வாழ்வதற்குச் செல்கிறாய். அரசிபோல் மாளிகையில் சுற்றிச் சுற்றி வரச் செல்கிறாய். தில்லை அம்பலவாணன் துணையிருப் பான். உன்னை நான் எப்போது வேண்டுமானாலும் வந்து பார்ப்பதற்கு அனுமதி பெற்றுத் தா, போதும்" என்றாள் அத்தை.

வீரம்மாள் விம்முவது அவள் மார்பு குலுங்குவதிலிருந்து தெரிந்தது. பிறகு விழிகளைத் துடைத்துக் கொண்டு, "நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். அல்லது நானே வந்து பார்ப்பேன், அல்லது முத்துவடிவை அனுப்புவேன்!' என்றாள்.

ஆனால் முத்துவடிவை அனுப்பும் வாய்ப்பு அவளுக்கு ஏற்படவில்லை. வீரம்மாள் நினைத்தபடி நடக்கவில்லை. முத்துவடிவை அவளுடன் அழைத்துச் செல்வதற்கு வீரர்கள் ஒப்புதல் தரவில்லை.

வீரம்மாளைத் தவிர மற்றவர்களை அழைத்துவர அரசியார் அனுமதியில்லை என்று மிகப் பணிவுடன் சொல்லிவிட்டார்கள் வீரர்கள்.

சிவிகை புறப்பட்டது. வீரர்கள் முன்னும் பின்னுமாக அணிவகுத்தனர்.

வீரம்மாள் விழியை நீர்த்திரை மறைத்ததால், வீதியில் நிற்போர் அவள் பார்வையில் படவில்லை.



சோழச் சக்ரவர்த்தி இராசராச சோழதேவர் வீற்றிருந்த ஆயிரந்தளி மாளிகைக்கு, வீரம்மாளை அழைத்துச் சென்றனர். நேற்று வந்த இடம் இதுவன்று என்பதைப் புரிந்து கொண்டாள் வீரம்மாள்.

அழகிய பூந்தோட்டத்தின் நடுவே கம்பீரமாகத் திகழ்ந்தது அந்த மாளிகை. மாளிகையின் மீது புலிக் கொடி ஆடி அசைந்துப் பறந்தது.

வாயிற் காவலர்கள் புலிக்கொடியுடன் கூடிய வேலா யுதம் தாங்கி நின்றனர். குதிரைகள் வரிசையாக நின்று கொண்டிருந்தன.

மாளிகை வாயிலில் மாளிகை நாயகம் நின்றுகொண் டிருந்தார். அரண்மனைக் காரியங்களை மேற்பார்வை செய்பவர் அவர். மன்னரோடு நெருங்கிப் பணி செய்யும் அணுக்கச் சேவகரும் அவர் அருகே நின்றிருந்தார். அவர்கள் இருவரும் வீரம்மாளின் வருகைக்காக மாளிகை வாசலில் நின்றிருந்தனர்.

இராசேந்திர சோழ 'தேவருக்குச் சோழ நாட்டின் மணிமுடியைச் சூட்ட நாள் பார்த்துவிட்ட செய்தியைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டனர்.

சக்ரவர்த்திகள் ஜீவியவந்தராக இருக்கும்போதே இளவரசரிடம், நாட்டின் அரசு பதவியை ஒப்படைப்பது புதுமையாக இருக்கிறதே என்றும் பேசிக் கொண்டனர்.

பழையாறைக்கு வந்து ஆயிரந்தளி அரண்மனை யில் தங்கியிருக்கும் சக்ரவர்த்திகள், மிக விரைவில் தஞ்சைக்குத் திரும்ப விரும்புவதாகவும், அதற்குள் தன் மகனுக்கு மகுடஞ்சூட்டும் விழாவை நடத்திவிட வேண்டும் என்றும் பட்டோலைப் பெருமான் தெரிவித்ததாக உடன் கூட்டத்து அதிகாரி சொன்னார்.

நாள் பார்த்தாகிவிட்டது. குறுநில மன்னர்களுக்கும் மற்றும் மேலர் அதிகாரிகளுக்கும் செய்தி தெரிவிக்குமாறு பட்டோலை அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பட்டோலைப் பெருமான் ஓலை எழுதுவதற்காகப் பலரை நியமித்திருப்பதாகவும் செய்தி கிடைத்தது.

திருமந்திர ஓலை நாயகமும் அப்போது அங்கே வந்து சேர்ந்தார். மன்னரின் அரச ஆணையை எழுதி உரிய காலத்து நடக்க வேண்டியவற்றை சக்ரவர்த்திக்கு நினை

வூட்டியும், அக்காரியங்களை நிர்வகித்தும் செயல் புரிபவர் திருமந்திர ஓலைநாயகம். மாளிகை உள் வாயிலுக்கு அவரும் வந்து சேர்ந்தவுடன் அவர்கள் ஒருவருக்கொருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

"மிகவும் வியப்பாக இருக்கிறது, நாம் மூவரும் ஒரே இடத்தில் ஒரே நாழிகையில் கூடியிருப்பது" என்று கூறினார் பட்டோலைப் பெருமான்.

"திருமந்திர ஓலைநாயகம் அனுப்பிய உத்தரவுப்படி நாம் இங்கு வந்திருக்கிறோம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சக்ரவர்த்திகளின் கட்டளை, இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வரப்போகும் பெண் நல்லாளை வரவேற்று உபசரித்து திருமஞ்சனக் கூடத்திற்கு அழைத்துச சென்று நீராட்டச் செய்து, புத்தாடை அணிவித்து சபை மண்டபத்திற்கு அழைத்து வருமாறு உத்தரவு" என்றார் பட்டோலைப் பெருமான்.

"வீரம்மாள் எனும் நாட்டியக்காரி வருகிறாளாம். அவளுக்கு இப்படிப்பட்ட ராஜ வரவேற்பு!."

"ஆம்; ராஜகுலப் பெண்டிராகிறாள் இன்று முதல். அதற்குத் தகுந்த வரவேற்பு, மரியாதை எல்லாம் செவ்வனே நடைபெற வேண்டுமல்லவா?"

"என்ன பெயரென்று சொன்னீர்கள்? ஓ! வீரம்மாள். நமது இளவரசரின் அபிமான வல்லியாகிவிட்டவள்தானே?

"இதுவரை நாம் மூவரும ஒன்றுகூடி இதுபோல் இங்கே நின்று யாரையாவது வரவேற்றதாக நினைவிருக்கிறதா?"

"மறந்துவிட்டீர்களா? பழுவூரிலிருந்து வந்த பஞ்சவன்மாதேவியை வரவேற்கக் கூடி நின்றோம்".

"அது நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் நேற்று நடந்தது போலிருக்கிறது. பஞ்சவன் மாதேவி நம் இளவரசரின் சரிசமமானபாகத்தைஏற்றுவிட்டார்கள். அவ்வாறு அவர்கள் முக்கிய இடத்தைப் பெறப் போகிறார்கள் என்று அறிந்துதானே - நாம் இங்குக் கூடி வரவேற்று அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்று வீற்றிருக்கச் செய்தோம்!"

"அப்படிச் சொல்லிவிட முடியாது. பழுவேட்டரையர் மகளுக்குச் சிறந்த வரவேற்பு அளிக்கக் கடமைப்பட்டிருந்



தோம். இப்போது வரும் வீரம்மாள் ஒரு நாட்டிய மங்கையாம். அவளுக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா?"

"ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவள் பரம்பரை நாட்டியப் பெண் அல்லள். மூங்கில் துறை கிராமத்து மூவேந்த வேளாளன் தங்கை. பிறவியிலேயே ஏற்பட்ட கலைப் புலமையைக் கண்ட இளவரசர் அவளுடைய கலைத்திறனை வளர்க்க முடிவு செய்தார்".

"அந்தப்புரத்தில் தன் பிரியம் மிக்கவளாகச் சேர்த்துக் கொள்ளப் போகிறாரா? அல்லது..."

திருமந்திர ஓலை நாயகம் இந்தப் பேச்சை அந்த அளவில் நிறுத்த விரும்பினார். "அரச குடும்பச் செய்திகளை மாளிகை வாசலில் விவாதிப்பது தவறு. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகும் வீரம்மாள் மிக விரைவில் இளவரசருக்குச் சமமாகத் திகழ்வாள் என்பது உறுதி" என்றார்.

சிவிகையினின்று வீரம்மாள் மெல்ல இறங்கினாள். ஒரு கணம் கம்பீரமான மாளிகையின் முகப்புத் தூண்களை நோக்கினாள். தன்னை வரவேற்க மரியாதையுடன் நிற்கும் அதிகாரிகளை நோக்கினாள்.

அவர்கள் வணக்கம் தெரிவித்தனர். திருமஞ்சனத்திற்கு ஏற்பாடாகியிருப்பதாகவும், புத்தாடை அணிகலன்கள் அணிவித்துக் கொண்டு சக்ரவர்த்திகளிடம் அழைத்துச் செல்லக் காத்திருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

இரண்டு பணிப்பெண்கள் சற்றுத் தொலைவில் கைகட்டி நின்றார்கள். அவர்கள் வீரம்மாளை நீராடும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

வீரம்மாள் நடந்து செல்லும் கம்பீரத்தைப் பார்த்த அணுக்கச் சேவகர் சொன்னார் :

"மற்ற இளவரசிகளுக்கும், வீரம்மாளுக்கும் ஏற்படும் போட்டியில் யார் வெல்லப் போகிறார்களோ?"

அவர் கூறியதன் உட்பொருள் தெரியாமல் அதை அறிய திருமந்திர ஓலைநாயகமும் பட்டோலைப் பெருமானும் ஆயத்தமாயினர்.



# 29. அந்த ஒரு சொல்

பழையாறை நகரம் எங்கும் கலீர், கலீர் என்ற சலங்கை ஒலி ஒலித்துக் கொண்டிருந்தது.

வீதிகள், மாட மாளிகைகள், சலசலக்கும் ஓடைகள், கோயில் விமானங்கள், உயர்ந்து வளர்ந்துள்ள தென்னை, பூத்துக் குலுங்கும் மா, வேப்பமரங்கள் எங்கும் சலங்கை ஓசையின் எதிரொலிதான்

வீதியில் சந்திப்போர் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டது வீரம்மாளின் நடனத்தைப் பற்றியே.

"அவனி நாரணபுரத்தில் வசிக்கும் நடன மங்கையர் ஒருவரும் இதுபோல் ஆடியதில்லையாம்".

"நாட்டியத்திற்காகப் பிறந்த மங்கை என்று மாளிகையிலுள்ளவர்கள் பேசிக் கொள்கிறார்கள்".

"உச்... விவரம் தெரியாமல் பேசாதீர். அரசகுடும்பத்தில் ஓர் அங்கமாவதற்காகவே பிறந்தவள் என்றுதான் மாளிகைப் பெண்டுகள் சொல்லிக் கொள்கிறார்கள்".

"எப்படியோ கொள்ளிடக் கிராமத்துப் பெண்ணுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா?"

சந்தித்துக் கொண்டவர்கள், வீரம்மாளின் நடனத்தைப் பற்றிப் பேசினார்கள். மாளிகையில், சக்ரவர்த்தி இராசராசர் முன்னிலையில் வீரம்மாள் அன்று ஆடிய நடனத்தின் நேர்த்தியைப் புகழ்ந்தார்கள்.



பழையாறை மாளிகையில் அன்று முக்கிய நிகழ்ச்சி. இராசராசரைச் சந்திக்கப் பல குறுநில மன்னர்கள் வந்திருந்தனர். அங்கு வருமாறு அவர்களுக்குச் சக்ரவர்த்தி ஓலை அனுப்பி இருந்தார்.

விருந்துக்கு முன்பு சபை மண்டபத்தில் சாத்திர விற்பன்னர்கள் கூடி விவாதித்தனர். ஈசான சிவாச்சாரியார் வந்திருந்தார்.

கருவூர் சித்தர் வரப்போகிறார் என்று சொல்லிக் கொண்டார்கள். எந்த நேரத்திலும் வருவார் என்றும், அவர் எப்படி வருகிறார் எப்படிச் செல்வார் என்பது தெரியாது என்றும் வியப்புடன் பேசிக் கொண்டார்கள்.

தஞ்சைப் பெரிய கோயில் கட்டியபோது பார்த்த சித்தரை மறுபடியும் சந்திக்கும் ஆவலில் வயது முதிர்ந்தவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

சபை நிறைந்து வழிந்தது. பண்டிதர்கள் தங்கள் அறிவுக் கூர்மையையும், ஆழ்ந்த புலமையையும் புலப்படுத்திய பிறகு வீரம்மாள் சபை மண்டபத்திற்கு அழைக்கப்பட்டாள்.

சக்ரவர்த்தியின் முன்னிலையில் ஆடப் போகிறோம் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. மாளிகைக்குத் தன்னை அழைத்ததும், மாளிகை வாசலில் அதிகாரிகள் காத்திருந்து ராஜமரியாதையுடன் வரவேற்றதும், பணிப்பெண்கள் உபசாரம் செய்து திருமஞ்சனம் செய்வித்து, புத்தாடை அணிவித்து அரசியாரிடம் அழைத்துச் சென்றதும் - எதற்காக இவ்வளவும் நடக்கின்றன என்று வீரம்மாளுக்கு அப்பொழுது விளங்கவில்லை.

முதல் நாள் அவளுக்கு அளிக்கப்பட்ட மரியாதையை விடப் பல மடங்கு மரியாதை, உபசரணை.

ஆனால் இராசேந்திர சோழனின் மற்ற மனைவியரின் பார்வைகள் சரியாக இல்லை. வாய் பேசவில்லையே தவிர விழிகள் பொறாமையை உமிழ்ந்தன. மௌனமே அவர்கள் இதயத்திலிருப்பதை ஒலித்தது.

சபை கூடியது. அந்தப்புரத்திலுள்ளவர்கள் சபை நிகழ்ச்சிகளைக் காண மண்டப மேல் மாடத்திலுள்ள இருக்கைகளில் அமர்ந்தனர்.

இராசராசப் பேரரசர் சபை மண்டபத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார். அருகே அரசியார் பஞ்சவன்மாதேவியார் அமர்ந்து புலவர்களின் வாக்கு வன்மையைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

இராசராசர் அவ்வப்போது திரும்பி, அரசியாரிடம் ஏதோ சொல்வதும், செவியில் தெளிவாக விழாததால் அவள் தலையைச் சாய்த்து மீண்டும் சொல்லச் சொல்லிக் கேட்பதுமாக இருந்தபோது, ஈசான சிவாச்சாரியாரிடம் தேவாரம் கற்றுக் கொள்ளும் மாணவ, மாணாக்கியர் தாளத்துடன் பாட வந்து சேர்ந்தனர்.

இராசராசர், தேவியைப் பார்த்துக் கேட்டார். "சிதம் பரத்து நடனப் பெண் எங்கே? இன்று நடனமாட அழைத் திருப்பதாகச் சொல்லியிருந்தாய்...?" என்று கேட்டார்.

பஞ்சவன் மாதேவி பணிப்பெண்களிடம் ஏதோ கூற அவர்கள் விரைந்தனர்.

"அரசியார் அழைக்கிறார்கள்" என்று கூறி அதி காரிச்சிகள், வீரம்மாளை அணுகி அழைத்தனர்.

பாதச் சலங்கை ஒலிக்க வீரம்மாள் சபையில் நுழைந் தாள். ஒருமுறை சபையைச் சுற்றி விழிகளைச் சுழற்றி னாள்.

ஆ! அதோ தன் சகோதரன் முத்துக் குமரன் அதிகாரி களுடன் அதிகாரியாக அமர்ந்திருக்கிறார். படைத் தலைவர் உடையில் அவரைக் கண்டவுடன் "அண்ணா" என்று வாய்விட்டுக் கூவ முயன்றாள். வார்த்தைகள் வரவில்லை.

"அண்ணா! தாங்கள் இந்த ஊரிலேயே இருந்தும் என்னை வந்து காணவில்லையே, ஏன்? மாளிகை யில் வசிக்குமாறு என்னைத் தவிக்கவிட்டுவிட்டீர்களே, நியாயமா? அரச குலத்தவர்கள் தொடர்பை நான் என்றாவது வேண்டினேனா அண்ணா? இளவரசர் எனும் கனியைப் பறிக்க, முட்புதரில் விழுந்து எழுந்திருக்கச் செய்துவிட்டாயே அண்ணா!"

இவ்வளவும் வாய்விட்டுச் சொல்லிக் கதற வேண்டு போல் தோன்றியது. வார்த்தைகள் வரவில்லை.

குழலோசை எழுந்தது. மத்தள ஒலி, தாளசப்தம் நிறைந்தன. மலரைச் சுற்றி வட்டமிடும் வண்டுகள் எழுப்



பும் ஓசை போன்ற சுருதியின் ஒலி சபை மண்டபத்தில் ரீங்காரமிட்டது.

அண்ணன் அதோ இருக்கிறார். ஹூம், அவர் - அவர் எங்கே? அவரில்லாமல் தன் உடன் பிறந்தான் எங்கும் செல்லமாட்டார் என்பது அவளுக்குத் தெரியாதா? அதோ - அரச பீடத்துக்கு அருகே ஓர் இடம் - அது இளவரசருக் கான இடம். ஈசான சிவாச்சாரியார் அதற்கருகே அமர்ந் திருக்கிறார். அந்த இடத்திற்கு உரியவர் வரவேண்டும் - வருவார்.

இசைக் கருவிகள் ஒலித்தன, கூப்பிய கரத்துடன், கற்சிலை போல் நின்றிருந்த வீரம்மாளைப் பார்த்து, சக்ரவர்த்திகள் கையசைக்கிறார்.

வீரம்மாள் ஆடினாள், பாடலின் உட்பொருளை விழி மொழியால் விளக்கினாள். கை விரல்களால் உருவகப் படுத்தினாள். கரங்கள் நெளிந்தன. இடை அசைந்தது. பாதங்கள் துள்ளின. கணநேரத்தில் கரியவானில் வெட்டிச் செல்லும் மின்னலானாள். நதியினில் சுழலானாள். தோகை சிலிர்த்த மயிலானாள்.

நாட்டியத்திற்கு உறுதுணையாக ஒலித்த இசைக் கருவியை இயக்கியவர்கள் திகைத்தனர். இமைக்கும் நேரத்தில் பல பாவங்களைப் பொழிந்து ஆடிய வீரம் மாளின் ஆட்டத்தைக் கண்டு வியந்தார் இராசராச சோழ தேவர். அவள் ஆடிக் கொண்டிருக்கும்போது இராசேந்திரன், சந்தடியின்றி வந்தமர்ந்தார்.

அவள் பார்த்திருக்க வேண்டும், வழியல ஒருகோணம் வியப்புற்றிருக்க வேண்டும். அவர் காண்கிறார் என்பத னால் ஆட்டத்தில் அதிக ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். தன் சகோதரர் மெச்சிப் புகழ வேண்டும் எனும் ஆசையால் அவள் திறமை அனைத்தும் திரண்டு வந்தன.

நடனம் முடிவடைந்து, கரவொலியும் சபையினர் பாராட்டி எழுப்பிய குரலும் பின்னணியில் ஒலித்துக் கொண்டிருக்க, வீரம்மாள் சபை மண்டபத்தை விட்டு வெளியே ஓடினாள். ஏதோ ஓர் அறையில் சென்று வீழ்ந் தாள். கால்கள் துவண்டிருந்தன. வியர்வை வெள்ளம் அவளை மீண்டும் குளிப்பாட்டியிருந்தது. தாம் எங்கிருக் கிறோம் என்றே அவள் அறியவில்லை. இந்த





மண்ணுலகிலிருந்து மேலே மேலே எங்கோ சென்று வான்வெளியில் சஞ்சரிக்கும் உணர்வுதான் ஏற்பட்டது.

அவள் கண்விழித்த போது அருகே அம்மங்கை [illegible]வார் விசிறி கொண்டு வீசிக்கொண்டிருப்பதை உணர்ந்தாள். 'ஆகா, இதுவென்ன காரியம்? இளவரசருடைய திருமகள் எனக்குச் சாமரமிடுவதா?' என்று திடுக்கிட்டு எழ முயன்ற வீரம்மாளை, அம்மங்கை அமைதிப்படுத்திப் படுக்கச் செய்து, "மிகவும் களைத்திருக்கிறாய் வீரம்மா! சிறிது இளைப்பாறினால் சரியாகிவிடும்" என்றாள்.

அவள் பாதத்தை இரு பணிப்பெண்கள் மெல்லப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தனர்.

"மரியாதைக் குறைவாக நான் நடந்து கொள்கிறேன், எனக்கு ஒன்றுமில்லை, களைப்பில்லை, சோர்வில்லை. நான் எழுந்து உட்கார்ந்து கொள்கிறேன். இப்படியே



படுத்திருப்பதுதான் என் வேதனையை அதிகப்படுத்தும்" என்று கூறி எழ முயன்றாள்.

"அம்மா! உங்களுக்குச் சற்று நேரம் ஓய்வு வேண்டும். சிறிது நேரம் கழித்து வருகிறேன். உணர்ச்சி மிகுதியால் நீங்கள் களைத்திருக்கிறீர்கள்" என்றாள் அம்மங்கை.

'அம்மா-'

இந்தக் குரல் வீரம்மாளைச் சிலிர்க்க வைத்தது. அவளே தன் தாயை அழைத்த இதய ஒலி போல் அந்தக் குரலோசை கேட்டது.

'அம்மா' என்று நானே அழைத்தேனா? எப்போதோ இறந்துவிட்ட என் தாயை அழைத்தேனா? அன்புக்கு ஏங்கித் தவிக்கும் நான் அழைத்த குரலொலியா அது?

'அம்மா, வீரம்மா! நான் கூறியது சரிதான். உங்கள் பார்வையில் களைப்பால் ஏற்பட்ட ஏக்கம் இருக்கிறது; தவிப்பு இருக்கிறது. சற்றுநேரம் அமைதியாக இருங்கள்" என்று கூறிவிட்டு, அம்மங்கை புறப்பட்டாள். அங்கிருந்த பணிப் பெண்களிடம், அந்த அறைக்குள் யாரும் நுழைந்து வீரம்மாளைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டாள். அங்கு வந்த அதிகாரிச்சி ஒருத்தியை அழைத்து -

"யாரோ ஒரு நடனமாடும் பெண்ணிற்குப் பணிவிடை செய்வதாக அலட்சியமாக நினைத்துவிட வேண்டாம். இவர்கள் இந்த மாளிகையில் இளவரசிகளுள் ஒருத்தியாக விளங்கப் போகிறவர்கள் நினைவிருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு, மிகவும் மெல்லிய குரலில் அதிகாரிச்சிக்கு மட்டும் விளங்கும் விதத்தில் ஒரு வார்த்தை சொன்னாள். அந்தச் சொல் கேட்டு அதிகாரிச்சி நிமிர்ந்து நின்றாள். அந்தச் சொல் அவளிடம் பயத்தையும், மரியாதையையும், வியப்பையும் அளித்தது.







# 30 அரசருக்குத் திருமணம்

**வீ**ரம்மாள் நடனம் முடிவடைந்தவுடன், கலை நிகழ்ச்சிகள் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. மதிய விருந்துக்குப் பின் சபை கூடியது. செழிப்பான விருந்தின் மயக்கம் ஒருபுறம் இருந்தாலும் சோழ நாட்டின் குறுநில மன்னர்கள் பலருடன் ஐம்பெருங் குழுவினரும் கூடியிருந்தனர். ஏதோ ஒரு முக்கியமான முடிவை எதிர்பார்த்து அவர்கள் கூடியிருந்தனர் என்பது தெரிந்தது.

சோழ நாட்டு ஒன்பது மண்டலங்களில் சோழ மண்டலம், இராசராசப் பாண்டி மண்டலம், மலைமண்டலம், அதிராசராச மண்டலம், சயங்கொண்ட சோழ மண்டலம் முதலியவற்றின் மண்டல அதிகாரிகளான மண்டல முதலிகள் வந்திருந்தனர். சிற்றரசர்களுக்குச் சமமான தகுதி படைத்தவர்களான அவர்கள் கம்பீரமாகத் தங்கள் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். அவர்களது பரந்த மார்பில் விருந்திற்குப் பின் பூசப்பட்டிருந்த சந்தனத்தின் மணம் மலர்த் தோட்டத்திலிருந்து வீசும் மலரின் மணம்போல எங்கும் வீசியது.

இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி ஆட்சிப் பொறுப்பில் ஈடுபடச் செய்தாகிவிட்டதே. இப்போது எந்த முடிவை எடுப்பதற்காக சபையைக் கூட்டியிருக்கிறார்கள் சக்ரவர்த்தி என்ற கேள்வி ஒவ்வொருவரிடமும் எழுந்தது.

தஞ்சை அரண்மனையில் சபை மண்டபத்தில் மந்திராலோசனைகள் நடைபெறுவது வழக்கம். பழையாறைக்குச் சக்ரவர்த்திகள் வந்திருக்கும்போது, இதுபோல் முக்கிய முடிவெடுக்க சபையைக் கூட்டுவது எதற்காக இருக்கும் என்ற கேள்வி அதிகாரிகளிடமும் எழுந்தது.

ஐம்பெருங் குழுவினர் அமர்ந்திருந்தனர். பல்வேறு படைப் பிரிவுகளின் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். ஈசான சிவாச்சாரியார் முதன்மையாக அமர்ந்திருந்தார்.

இராசராச சோழ தேவரை பல நாள்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் சந்திக்கும் 'உறுதிச் சுற்றத்தார்' விருந்துண்டு வரும் வேளையில் தங்களுக்குள் மெல்லப் பேசிக் கொண்டனர்.

வேங்கைபோல் கம்பீரமாகத் திகழும் சோழ சக்ரவர்த்திகள் மெலிந்து காணப்படுவதை நியாய சபையைச் சேர்ந்தவர் குறிப்பிட்டார். மாளிகையின் முன்புறத் தோட்டத்தில் அவர்கள் நின்றபடியே, களைப்பாறும் வேளையில் பேசிக்கொண்டனர்.

அரச கட்டளையெழுதும் மந்திரக் கணக்கர் சொன்னார்: "நாள்தோறும் நான் அரசர் அருகே இருப்பதனால் அரசருடைய உடல் நிலையில் எந்த மாற்றமும் தெரியவில்லை. அவருக்குள்ள கவலையெல்லாம் தன் மகன் இராசேந்திரனைப் பற்றியதே"

தன் மகனைப் பற்றிய கவலையா? என்னவாக இருக்க முடியும்? அவர்கள் கவலைப்பட்டனர்.

பெரிய போர் ஒன்றைத் தொடங்கத் திட்டமிட, கலந்து ஆலோசிக்க நாம் அழைக்கப்பட்டிருப்போமோ என்று சிலர் ஐயம் எழுப்பினர். அதற்காக இராது! என்றும் அவர்கள் சமாதானப்படுத்திக் கொண்டார்கள்.

சபை கூடியது. ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தினரும், உறுதிச் சுற்றத்தினரும், அரசியல் பொறுப்புச் சுற்றத்தினரும், படைத்தலைவர்கள், நாட்டதிகாரிகளும் சபையில் கூடியிருந்தனர். ஒரே சமயத்தில் சோழ நாட்டதிகாரிகளுள் முக்கியமானவர்கள் எப்போதாவது கூடுவது வழக்கம். ஐம்பெருங் குழுவினருடன் விவாதித்துச் சக்ரவர்த்திகள் முடிவெடுப்பது வழக்கம்.



முரசு முழங்கியது. சக்ரவர்த்திகள் சபைக்குள் நுழைந்தார். அவருடைய பெருமையை அறிவித்து உரத்த குரலில் கட்டியங்காரர் கூறுகிறார்.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனங்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட் டொழிற் சிங்கள ரீழ மண்டலமும்
இரட்டபாடி யேழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில் வளரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மர்
உடையார் ஸ்ரீராசராச தேவர்
எழுந்தருள்கிறார் - எழுந்தருள்கிறார் - எழுந்தருள்கிறார்.

சபை அமைதியுடன் திகழ்ந்தது. எழுந்து நின்றவர்கள் இருக்கையில் சோழ சக்ரவர்த்திகள் இராசராசன் அமர்ந்தவுடன் அமர்ந்தனர். சக்ரவர்த்திகள் முகத்தில் வீசும் கம்பீர ஒளியுடன் சோர்வும் குடிகொண்டிருப்பதைப் பலர் காணத் தவறவில்லை.

சோழ சக்ரவர்த்திகள் இராசராச சோழ தேவர் பேசத் தொடங்கினார். சபையில் கூடியுள்ள சோழநாட்டின் பெருமைக்குக் காரணமான அமைச்சர்களையும், ஆசானையும், படைத்தலைவர்களையும் பல்வேறு அதிகாரிகளையும் அன்புடன் வரவேற்று சபை கூட்டப்பட்டதன் காரணத்தை விளக்கினார்.

"பல ஆண்டுகளாகவே, ஆட்சிப் பொறுப்பை என் மகன், உங்கள் எல்லாராலும் அன்புடன் போற்றப்படும் இராசேந்திரன் என்ற அபிடேகத் திருநாமம் கொண்ட மதுராந்தகனிடம் அளிக்க வேண்டும் என்று எண்ணி வந்தேன். இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டவுடனேயே, இராசேந்திரன் தன் இச்சையாக அரச கட்டளைகளை வழங்கவும் நான் ஆதரித்து உத்தரவிட்டேன். அவன்

வயதில் நான் ஆட்சிப் பொறுப்பேற்று பல விஷயங்களில் சோழ நாட்டின் பெருமையைப் புகழை உங்கள் உதவியுடன் உயர்த்தப் பாடுபட்டு வெற்றி கண்டேன். ஆனால், அதில் பெரும் பங்கு இனிய புதல்வன் இராசேந்திரனுடையது என்பது உங்களுக்குத் தெரியும். போர்க்களங்களில் தன் இளமையின் பெரும் பகுதியைக் கழித்து நம் புலிக் கொடியை அவன் அங்கெல்லாம் பறக்கவிட்டுள்ளான் என்பவை நீங்கள் அறியாதன அல்ல. என்றாலும் அந்தப் பெருமைகள், வெற்றிகள், புகழ்கள் எல்லாம் என் பெயரால்தான் நடந்ததாக ஊர் உலகம் பேசுகிறது. வருங்காலமும் போற்றிப் புகழும். எனக்கு இனி எதற்குப் புகழ், பெருமை? கங்கையும், கடாரமும் வென்ற இராசேந்திரனுக்குத்தான் இனி பெருமையும், புகழும் சூழவேண்டும். கடந்த இரண்டாடுகளாக என்னுடன் இணைந்தே ஆட்சி புரிந்து வரும் என் அருமைப் புதல்வன், இனித் தனியே நம் பெருமை, சிறப்பு, வெற்றி நிலை நாட்டிக் கீர்த்தி பெற வேண்டும். அதனால் என் ஒரே செல்வன் மதுராந்தகனை பரகேசரி என்ற புகழ்ப் பெயருடன் சோழ நாட்டின் அரசராக்க விரும்புகிறேன். சோழர்களின் பரம்பரை மணிமகுடத்தைச் சூட்ட முடி வெடுத்துள்ளேன். அறிஞரும், வீரரும் நிறைந்த இந்தச் சபையின் ஆலோசனையும் அங்கீகாரமும் பெறவே உங்களை அன்புடன் அழைத்துள்ளேன். நல்ல நாள் குறித்து மகுடாபிடேக விழாவை நடத்த விரும்புகிறேன். உங்கள் நல்வாசிகளை இராசேந்திரன் பெற்று சோழ நாட்டின் பெருமை திக்கெட்டும் பரவும் வகை செய்வான் என்பதில் பெரும் நம்பிக்கை எனக்கிருக்கிறது".

சக்ரவர்த்திகள் அமைதியாக, கம்பீரமாகத் தன் கருத்தை வெளியிட்டார்.

"வாழ்க ! இராசகேசரி இராசராச சோழ மாமன்னர்! வாழ்க, வாழ்க!" என்ற வாழ்த்தொலி எங்கும் எழுந்தது.

'வாழ்க! வாழ்க! பரகேசரி இராசேந்திர சோழ சக்ரவர்த்தி!' என்ற வாழ்த்தொலி தொடர்ந்து ஒலித்தது.

சபை கலைந்த பிறகு அமைச்சரும், புரோகிதரும், சோதிடரும், அறக்களத்து அந்தணரும், அரச கட்டளை எழுதும் மந்திரக்கணக்கரும் மட்டுமே அங்கிருந்தனர்.



அரச சோதிடர் மிக்க மரியாதையுடன் கேட்டார்: "சக்ரவர்த்திகளே! மற்றொரு செய்தி கேள்விப்பட்டேன். அதை உறுதிப் படுத்திக் கொள்ள என்னை அனுமதிக்க வேண்டும்".

இராசராசர் தன் மகன் இராசேந்திரனைப் பொருள் நிறைந்த பார்வையுடன் நோக்கினார். பிறகு சோதிடரை நோக்கிக், 'கேளுங்கள்' என்பதுபோல் தலையசைத்தார்.

சோதிடர், இராசேந்திரனைப் பார்த்தவாறு, "இளைய பிராட்டியார் என்னை அழைத்தார். இளவரசரின் திருமணத்திற்கு நாள் குறிக்குமாறு கேட்டுக் கொண்டார்' என்றார்.

"ஆம்; நான்தான் கேட்குமாறு பணித்தேன். மகுடாபி டேகத்திற்கு முன்னர், திருமணம் புரிந்துகொள்ள என் மகன் விரும்புகிறான். அதற்கேற்ற நல்ல நாள் குறித்துத் தருமாறு கேட்டுவரச் சொன்னேன்" என்று கூறி, தன் மகனை ஒருமுறை நோக்கினார்.

மாபெரும் வீரர், சோழ நாட்டின் அரியணையில் அமரப் போகிறவர் முகத்தில் நாணம் சேர்ந்தது.

அறக்களத்தந்தணர் கேட்டார்: "இராசேந்திர சோழ தேவரின் கரம் பிடிக்கப் போகும் பாக்கியசாலி யாரோ? எந்த நாட்டு இளவரசியோ?"

அரச கட்டளை எழுதும் மந்திரக் கணக்கரைச் சக்ர வர்த்தி நோக்கினார்.

குறிப்பறிந்த அவர் தெரிவித்தார் : "இராசேந்திர சோழ தேவருடன் பல போர்க்களங்களுக்கும் சென்று புகழ்க் கொடி நாட்ட உதவி புரிந்துவரும் படைத்தலைவர் முத்துக் குமரனின் உடன்பிறந்தாள் வீரம்மாள் எனும் பெயருடைய நற்குண மங்கையை மனைவியாக வரிக்க இளவரசர் முடிவு செய்து, சக்ரவர்த்திகளின் அனுமதியையும் பெற்றிருக்கிறார். பரம்பரை பரம்பரையாக சோழ நாட் டிற்கு விசுவாசமாக உழைத்து வரும் நற்குடியைச் சேர்ந்தவள் அந்தக் குணவதி".

அங்கிருந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கணியர் தலைவர் பெருங்கணி கேட்டார் : "இன்று காலையில், அவையில் நடனமாடிய அந்த நாட்டிய மங்கையா?"

"ஆம்; நாட்டியக்கலை அனைவருக்கும் பொதுவானது. கலைகளில் தேர்ச்சி பெற்ற அந்த மங்கை நல்லாள், பண்டித சோழரான நம் இராசேந்திரனின் மனத்தில் அழியாத இடம் பெற்றுவிட்டாள். என்றும், எதிலும் உதவியாக அவள் விளங்குவாள்" என்று இராசராசர் கூறவும், அனைவரும் சம்மதிப்பதுபோல் தலையசைத்தனர்.

வீரம்மாளுக்கும், இராசேந்திர சோழருக்கும் திருமணம் என்ற செய்தியும் பழையாறை நகரில் முதலில் பரவியது. பிறகு சோழநாட்டு ஊர், நாடு, நகரங்கள் எங்கும் மக்களின் பேச்சாக அமைந்தது.







## 31. அவர் வரட்டும் இங்கே!

சிறு குழந்தையைப் போல வீரம்மாள், அத்தையின் மடியில் படுத்து விசும்பினாள். அருகே தோழி முத்து வடிவு என்றழைக்கப்படும் முத்தம்மாள் ஆறுதல் சொல்ல முடியாமல், சொல்லாமல் இருக்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். வாயில் திண்ணைக்குச் செல்வதும் திரும்பவும் அத்தையிடம் வருவதுமாக பரபரப்புடன் இருந்தாள்.

அவளுக்கு வியப்பாக இருந்தது. வீரம்மாளுக்கு என்ன குறை? எதற்காக வருத்தப்படவேண்டும்? தாய் தந்தையில்லை என்பதனால் பெற்றோரை நினைத்து அவள் அழுகிறாள் என்று நினைக்கவும் முடியாது. ஏனென்றால் பெற்றோரில்லாத குறை ஏற்படாமல் பாட்டனாரும் அத்தையும், உடன் பிறந்தானும் இதுவரையில் அவளைக் கண்ணைப்போல் காத்து வந்தனர். திடீரென்று இளவரசர் பார்வை விழுந்ததனால் மனத்துக்குப் பிரியமான ஆடற்கலை பயின்று, பிறர் பாராட்டும்படி வீரம்மாள் அந்தக் கலையை வளர்த்துக் கொண்டாள். இளவரசரின் பார்வை அவளிடம் முழுமையாக விழுந்தது. அவள் அவருக்கு நெருங்கியவளானாள். இளவரசரின் எதிரே நடனமாடினாள். அவருடன் சேர்ந்து கைகோத்து ஆடினாள். அரசவையில் ஆடும் பேறும் பெற்றாள். இளவரசரின் அன்பு வளர்ந்து, அன்பு காதலாகி மலர்ந்து திருமணம் புரிந்து கொள்ளும் அளவுக்கு, வளர்ந்து. வீரம்மாள் உயர்ந்து

விட்டாள். அவ்வாறு இருக்கையில் என்ன குறை இப்போது இவளுக்கு? ஏன் கண்ணீர் விட்டுக் கலங்குகிறாள், விசும்புகிறாள்?

மாளிகையிலுள்ளவர்கள் பேசிக் கொள்கிறார்கள், இனி வீரம்மாள் வைத்ததுதான் சட்டம் என்று. திருமணம் நடந்துவிட்டது. மிக ஆடம்பரமாக நடைபெறும் என்று தோழி முத்தம்மாள் நினைத்திருந்தது போலன்றி எளிமையாக நடைபெற்று விட்டது. இளவரசர் திருமணம் புரிந்து கொள்ளமாட்டார், வீரம்மாளை அழகிய மாளிகையில் ஆசை நாயகியாக அமர்த்தி அழகு பார்ப்பார் என்று சிலர் கருத்துத் தெரிவித்தது போலன்றி சிதம்பரத்தில், நடராசர் திரு முன்பு மாங்கல்யத்தை அணிவித்தாரே அதுவே வீரம்மாள் பெற்ற பாக்யம்தான். பிறகு ஏன் வருந்துகிறாள்?

மனத்திலுள்ளதைச் சொல்லிவிட்டாவது வருந்தலாம்; ஒன்றுமே சொல்லாமல் மௌனக் கண்ணீர் விடுகிறாளே!

"அத்தை நீங்களாவது கேட்கக் கூடாதா? வீரம்மாளை இன்னும் குழந்தையாக நினைக்காதீர்கள். சிதம்பரத்தில் திருமணம் முடிந்தபிறகு, மூங்கில் துறைக்குப் போக வேண்டும் என்று விரும்பினாள். இளவரசர் மகிழ்ச்சியுடன் சம்மதித்தாராம். திருமணமானவுடன் பிறந்த வீட்டிற்குச் செல்வதுதானே நியாயம் என்றாராம். பிறந்த வீட்டிற்கு வந்த வீரம்மாள் கிராமத்து மக்களுடன் குதூகலத்துடன் பழக வேண்டாமா? குழந்தைபோல அழுகிறாளே. நீங்கள் ஆறுதல் சொல்லக்கூடாதா?" என்று அத்தையை நோக்கிக் கேட்டாள்.

அத்தை கண் கலங்கியிருந்தாள். வாயிற் திண்ணையில் அமர்ந்திருக்கும் பாட்டனார் மகிழ்ச்சியுடனிருந்தார். மூங்கில்துறை மக்களிடையே அவர் மிகவும் உயர்ந்துவிட்டார். அரச குடும்பத்தோடு சம்பந்தம் செய்ததற்கு அவரைப் பாராட்டிப் புகழ்கிறார்கள். தன் பெயர்த்தி வருத்தப்படுகிறாள் என்று அவருக்குத் தெரிய நியாயமில்லை.

இதுவரையில் வாய்திறந்து பேசாத அத்தை, கண்களைத் துடைத்துக்கொண்டு, "முத்தம்மா! நீ அவளுடைய ஆருயிர்த் தோழி. அவள் மனம் உனக்குத் தெரியும். என்னை விட்டுப் பிரிந்தறியாதவள். பிரிவாற்றாமை அவளை வருத்தப்படச் செய்கிறது. சில நாள்களில்





எல்லாம் சரியாகி விடும். நீ அவளைத் தனியே அழைத்துச் சென்று சமாதானப்படுத்து" என்றாள். பிறகு, வீரம்மாள் கூந்தலை மெல்ல வருடி முதுகைத் தடவி, "வீரம்மா! குழந்தாய் எழுந்திரும்மா! உன் அண்ணனும் இளவரசரும் எந்தக் கணமும் இங்கு வரலாம். உன்னை இன்று மாலையே பழையாறைக்கு அழைத்துச் சென்று விடலாம். இளவரசராயிருந்தாலும் இது மாமியார் வீடல்லவா? அவர் வருகிறார். அவருக்கு ருசியாக ஏதாவது ஆக்கிக் கொடுக்க வேண்டாமா? எழுந்திரு. கிணற்றடிக்குப் போ. முகங்கழுவி சுறுசுறுப்புடன் வா!" என்றாள்.

பிறகு, தன் பெயர்த்தி உடுத்தியிருந்த பட்டாடையைத் தொட்டுப் பார்த்தாள். 'திருக்குடந்தை நெசவாளர்கள் திறமைசாலிகள். பட்டுத் துகிலில் பொன்வேலைப் பாட்டுடன் எவ்வளவு சிறப்பாக நெய்திருக்கிறார்கள்!" என்று கூறி, அவள் சங்குக் கழுத்தை அலங்கரிக்கும் முத்துமாலையைத் தடவிப்பார்த்து, "பாண்டியநாட்டை ஆளத் தொடங்கியபிறகு சோழர்களுக்கு முத்துக்குப் பஞ்சமில்லை" என்றாள்.

எவ்வளவு ஆபரணங்கள்! ஒவ்வோர் ஆபரணமாகப் பார்த்து அதிசயித்து, பெருமை பிடிபடாமல், அவள் கன்னத்தை விரல்களால் தடவி தன் கன்னத்தில் இட்டுக் கண்ணேறு கழித்து நெற்றியில் முத்தமிட்டு, "என் மகன் கொடுத்து வைக்கவில்லை உன் அழகைக்காண. அரச குமாரியாக நீ உலா வருவதைக் காண என் மருமகள் இன்று இல்லை, ஏண்டி, பெண்ணே! மாளிகையில் உள்ளவர்கள் என்னசொல்கிறார்கள்? 'கிராமப்பெண் ஒருத்திக்கு வாய்த்த அதிர்ஷ்டத்தைப் பாருங்களேன்' என்று பொறாமைப்படுவார்களே! அது மட்டுமா? அங்கே இளவரசி, பட்டத்தரசி என்றிருப்பவர்கள் எல்லோரும் வயது முதிர்ந்தவர்கள். உன்னைப் போன்ற இளம்பெண்ணைப் பார்த்துப் பொறாமைப்படுவார்களே?" என்றாள்.

அத்தையின் மடியிலிருந்து விருட்டென்று எழுந்த வீரம்மாள், "பொறாமையா? வயிறெரிகிறார்கள். சுட்டெரிப்பது போலப் பார்க்கிறார்கள் அத்தை! குத்தலும் கேலியுமாகப் பேசுகிறார்கள் அத்தை! நான் இனி அங்கே போக மாட்டேன் அவர்கள் பேசும் ஒவ்வொரு பேச்சிலும் என்னைக் குத்தி எடுக்கிறார்கள். அவற்றை நினைக்



கும்போது எனக்கு இந்த வாழ்வே வேண்டாம் என்று தோன்றுகிறது. அரண்மனை வாழ்வும் சுக போகமும் நான் விரும்பவில்லையே?

"அத்தை எனக்கு ஒரு வழிசொல்லுங்கள்; அம் மாளிகைக்கு நான் போகமாட்டேன். அங்கே அந்தப்புர மகளிர் என்னென்ன சொல்கிறார்கள் தெரியுமா? சோழ சக்ரவர்த்திக்கும் அவரது மகன் இளவரசருக்கும் என்னால்தான் மனவேற்றுமை ஏற்பட்டு விட்டதாம். சிற்றரசர்களின் புதல்விகள் பலர் நாட்டில் இருக்க கிராமத்துப் பெண்ணான என்னை மணக்க அவர் ஆசைப்படுமாறு நான் ஏதோ மாயம் செய்து விட்டேனாம். நான் மந்திரவாதியாம். ஒற்றுமையைக் கெடுக்க வந்தவளாம். பட்டத்துக்கு ஓர் அரசகுமாரனைப் பெற்று வாரிசுப் போட்டிக்கு விதை விதைக்க வந்திருக்கிறேனாம். அத்தை! நான் கேட்கிறேன்; எனக்கோ என் அண்ணனுக்கோ, அல்லது என் பாட்டனாருக்கோ மாளிகைச் செல்வத்தின் மீது ஆசையா? இல்லையே! அவ்வாறிருக்க அதற்காகத் திட்டமிட்டோம் என்று என் அண்ணன் மீதும் அபாண்டமாகச் சொல்கிறார்களே!

"அத்தை! உங்களுக்கே தெரியும். இளவரசரிடம் என் உடன்பிறந்தார் என்னை அறிமுகப்படுத்தியது உண்மைதான். நாட்டியம் பயிலவேண்டும் என்ற என் ஆசையை நிறைவேற்ற இளவரசரிடம் எடுத்துச் சொன்னது உண்மைதான். அவரும், என் ஆர்வத்தை வளர்க்கத் தக்க ஆசானை நியமித்து ஆடல் பயிலுமாறு செய்ததும் உண்மைதான். என்னிடம் இளவரசர் அன்பு கொண்டார். அது எதற்காக? எனக்கே புரியவில்லை. அமைதியாக மூங்கிலடிக் கிராமத்திலிருந்த எனக்கு, என் தோழியைத் தவிர மற்றவர்களிடம் அன்பு பாராட்டத் தெரியாத எனக்கு, அவரிடம் நேசம் ஏற்பட்டது எப்படி என்று புரியவில்லை. அவரைக் காணாமல் என்னால் ஒருநாள்கூட இருக்கமுடியவில்லை. அது எதனால்? எனக்குப் புரிகிறது. எனக்கும் அவருக்கும் பல விதங்களில் குண ஒற்றுமை இருக்கிறது..." என்று சொல்லி வரும்போது முத்துவடிவு மெல்ல நகைத்தாள்.

"என்னடி சிரிக்கிறாய்?"

"இல்லை. குண ஒற்றுமை என்று சொல்கிறாயே, இளவரசருக்கும் உனக்கும் எந்த விதத்தில் குண ஒற்றுமை இருக்கும்? அவர் அரச குமாரர். கடவுள் அருள் பெற்றுச் சுகத்தில் பிறந்தவர். மாவீரர். பலநாடுகளை வென்று சோழநாட்டிற்குப் பெருமை சேர்த்தவர். மிகக் கோபக்காரர் என்ற பெயரும் உண்டு. எந்த விதத்தில் உனக்கும் அவருக்கும் குணம் ஒன்றுபட்டிருக்கிறது?"

"முத்துவடிவு! என்னுடன் பழகிய நீ புரிந்து கொண்டது அவ்வளவுதான். அவர் அரசகுமாரர், தோள்வலிமை மிகுந்தவர். உண்மைதான். அதனாலேயே குணத்தில் வித்தியாசம் எப்படி ஏற்படும்? சொல்கிறேன், கேட்டுக்கொள். எனக்கும் முன் கோபம் வரும். உனக்குத் தெரியாதா? மனத்தில் ஒன்றுவைத்து வெளியே ஒன்று பேசத் தெரியாதவள்; அவரும் அப்படியே. என்னைப் பார்த்த முதல் சந்திப்பிலேயே என்னிடம் அவருக்குக் காதல் பிறந்து விட்டதாக என்னிடம் கூறினார். அவர் இளவரசர் என்ற அந்தஸ்தைப் பார்க்கவில்லை. வயது வித்தியாசம் ஒரு பொருட்டில்லை என்று அவர் கூறினார். நானும் அப்படித்தான் நினைத்தேன். அவரிடம் சொன்னேன். இருவருக்குமுள்ள குண ஒற்றுமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அவர் ஒரு குழந்தைபோல் சிரித்தார். நானும் குலுங்கக் குலுங்கச் சிரித்தேன். தோள் வலிமை மிகுந்த இளவரசருக்குக் குழந்தையைப் போன்ற மனம். இருவர் உள்ளமும் எப்படி ஒன்றானது? அவருக்குப் பண்டித சோழர் என்று பெயர். அவர் தமிழ் படித்தவர். நானும் அப்படித்தானே. அவரளவுக்கு இல்லை என்றாலும் கிராமத்து தமிழ் ஐயா எவ்வளவோ கற்றுக் கொடுத்திருக்கிறார். எனக்கு நாட்டியக்கலையில் உள்ள ஆர்வத்தை நீ அறிவாய். அவர் நாட்டிய சாத்திரம் கற்றவர். நடன முத்திரைகளைத் தவறில்லாமல் புலப்படுத்தி ஆடுவதைக் கண்டு நான் பிரமித்துப் போனேன். போர்க்களங்களிலே மிகுந்த காலத்தைக் கழித்த அவருக்கு நேரம் ஏது? அதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. அவர் இளவரசர். அவர் விரும்பினால் எத்தனையோ அழகிகளைச் சேர்த்து, அவர்களைத் தன் உடல் இச்சைக்கு ஈடுபடுத்திக் கொள்ள முடியும். என்னிடமும் அவர் அவ்வாறு நடந்து கொண்டிருக்க முடியும். ஆனால் அவர் ஒருபோதும் வேறுவிதமாக என்னைப் பார்த்ததில்லை ..."



முத்துவடிவு மெல்ல நகைத்தாள்.

"மீண்டும் நீ சிரிப்பதால் என் பேச்சை நம்பவில்லை எனத் தோன்றுகிறது" என்றாள் வீரம்மாள்.

"அப்படி இல்லை வீரம்மாள்! அன்பு, காதல், ஆசை என்று விதவிதமாய்ச் சொல்கிறாய். காமம் வயப்படாத காதலுக்கும் அன்புக்கும் வேற்றுமை இல்லை. காதல் என்று சொல்லும்போது காம உணர்வு இல்லாமல் காதல் மலராது என்று நீயே சொல்லியிருக்கிறாய். அதனால் சிரித்தேன்".

"முத்துவடிவு, சத்தியமாகச் சொல்கிறேன். அவர் என்னை அணைத்திருக்கிறார். ஆட்டத்தின் இன்பத்தில் ஆனந்தத்தால் ஏற்பட்ட அணைப்பு அது".

"ஓ! திருமணம் செய்து கொள்ளப் போவதாக அவர் சொன்னபோது உனக்கு ஏற்பட்ட உணர்வைப் பற்றிச் சொல்லவில்லையே? ஓர் ஆடவரின் ஸ்பரிசத்தால் உனக்கு முதலில் என்ன தோன்றியது?"

"அவர் என்னை முதலில் தீண்டியபோது நான் திடுக்கிட்டேன். ஆனால் அவர் என்மீது கொண்டுள்ள அன்பு, ஆசை மெல்ல மெல்லக் காதலாக மாறுவதை உணர்ந்தேன். நான் விரும்பியது போன்றே எப்போதும் அவருடன் நான் இருப்பதையே அவர் விரும்பினார். அது இயலுமா? அரசாங்கம், அரச குடும்பத்து இளவரசர், அரசர்- என்பவர்களுக்கும் சாதாரண குடிமக்களுக்கும் உள்ள வேறுபாட்டை இப்போதுதான் புரிந்து கொண்டேன். இளவரசரை சாதாரண குடிமகள் எளிதில் நெருங்கிவிட முடியாது. பழகவும் முடியாது. அப்படி இருக்கும்போது நான் அவருடன் பிரியாமல் இருப்பதை 'உறுதிச் சுற்றம்' என்ற குழுவினர் ஒப்புக் கொள்ளவில்லை. என்னைச் சந்திக்கவும் அவர்கள் கட்டுப்பாடு விதித்தனர். அதனால் அவர் என்னைத் திருமணம் புரிந்து கொள்ள முடிவு செய்தார். நான் இளவரசியாகிவிட்டால் பழகுவதை யார் தடுக்க முடியும்? திருமணம் நடக்கப் போகிறது என்ற முடிவு எடுக்கப்பட்டவுடன் இளவரசரின் கரம்பிடித்த இளவரசி பஞ்சவன் மாதேவியிடமிருந்து பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. இளவரசருக்கு இன்னும் சில மனைவிகள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் என்றாலும், மாளிகையிலுள்ள மற்ற இளவரசிகள் அறிந்தவன்

மாதேவியும், பஞ்சவன் மாதேவியும் கடுமையாக என்னை வெறுத்தனர்.

'சோழ மகுடத்தில் உனக்கும் உரிமை உண்டு என்று எண்ணினால் ஏமாந்துதான் போவாய்' என்றாள் ஒருத்தி.

"என்னைத் தவிர வேறு ஒருத்தி அரியணைக்கு உரிமை கொண்டாட முடியாது. எப்படியோ அவரை நீ மயக்கி விட்டாய். கொள்ளிடக்கரை குக்கிராமப் பெண்ணின் அழகில் அவர் மயங்கிவிட்டாரா? நானும்தான் அந்தக் காலத்தில் அழகாய் இருந்தேன். அழகைக் காட்டி உரிமையை நிலைநாட்ட முடியாது" என்று பஞ்சவன் மாதேவி சுடு சொற்களால் தாக்கினாள்.

அத்தை கேட்டாள் : "மாளிகையிலுள்ளவர்கள் பழித்துக் கூறுவதை இளவரசரிடம் தெரிவித்தாயா?"

"அவரைச் சந்தித்துப் பேச நேரமில்லை. திருமணத்திற்குப் பெரும்பற்றப் புலியூர் மாளிகையில் விருந்துண்டவுடன் அவரைத் தேடி சதுர்வேதி ஸ்ரீஜகந்நாதன் என்ற அறிஞர் வந்துவிட்டார். மிக முக்கியச் செய்தியைப் பேச விரும்பினார். அதை வாய்ப்பாகக்கொண்டு நானும், மூங்கில் துறைக்கு வந்து உங்களைச் சந்தித்து மனம்விட்டுப் பேச விரும்பினேன். பிறகு வந்து அழைத்துச் செல்வதாக அவர் கூறி வழியனுப்பினார்" என்றாள் வீரம்மாள்.

"ஆமாம், அவர் வருவார்! அவருக்கு விருந்து படைக்க வேண்டும். அவருடன் நீ புறப்பட்டுச் சென்றால் உன்னை நாங்கள் எப்போது சந்திப்பது? அவ்வப்போது நாங்கள் மாளிகைக்கு வரமுடியுமா?" என்று அத்தை கேட்டாள்.

"நீங்கள் எப்போதும் என்னைச் சந்திக்கலாம். நான் பழையாறைக்குப் போகப் போவதில்லை. அவர் வந்து அழைத்தாலும் போகப் போவதில்லை. இந்த மூங்கில் துறை கிராமமே இனி என் வாழ்இடம்" என்றாள்.

"சீ! விளையாட்டாகப் பேசாதே! குழந்தாய். இனி நீ சோழ இளவரசி தெரியுமா? மாளிகையில்தான் வாழ வேண்டும்" என்றாள் அத்தை.

"இல்லை, அத்தை! நான் அந்தப் பொறாமைக் கூட்டத்தின் நடுவே வாழமாட்டேன். வேண்டுமென்றால் இளவரசர் இங்கு வரட்டும்" என்றாள் அழுத்தம் திருத்தமாக.





## 32. தூதுவர் - யார் அவர்?

வீரம்மாளுக்குத் திருமணமாகி சில நாள்கள் விரைந்தோடி விட்டன. மூங்கில் துறைக்கு வந்தவள் பழையாறைக்குச் செல்லமாட்டேன் என்ற பிடிவாதத்திலிருந்து தன்னை மாற்றிக் கொள்ளவில்லை.

"பழையாறையில் உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்க மாட்டார்களா?" தோழி முத்துவடிவு கேட்டாள். பழைய கலகலப்பு இன்றி, எப்போதும் ஏதோ சிந்தித்த வண்ணம் இருப்பதைக் கண்ட முத்துவடிவுக்குக் கவலையாக இருந்தது.

வேறு விதமாக அவளுடன் பேசி அவள் மனத்தை மாற்ற முயன்றாள் முத்துவடிவு.

"இதோ பார், வீரம்மா! இல்லை - இல்லை, இளவரசி யார் வீரமாதேவி அவர்களே!" என்று தொடங்கினாள் பேச்சை.

வீரம்மாள் வேல்விழிகளால் முத்துவடிவைத் தாக்க ஆயத்தமானாள்.

"உன் குறும்புத்தனத்தை இப்போது காட்டாதே. எப்போதும் போல் வீரம்மா என்றே அன்புடன் கூப்பிடு! என்று சினத்துடன் கூறினாள்.

"உனக்கு ஏன் கோபம் வருகிறது? என்ன சொல்லி விட்டேன்? நான் சொன்னாலும் சொல்லாமல் போனாலும்

நீ இளவரசிதான். இளவரசியாய் இல்லாவிட்டால் அரச பல்லக்கில் உன்னைச் சிதம்பரத்திலிருந்து அழைத்து வருவார்களா? எவ்வளவு தடவை நாம் சிதம்பரத்திலிருந்து மூங்கில் துறைக்கு நடந்து வந்திருக்கிறோம், மறந்து விட்டாயா?" என்று சீண்டினாள்.

வீரம்மாள் பெருமூச்சு விட்டாள். "அடி, முத்து! அந்த நாள்கள் இனிமையாகவே இருந்தன. அப்படியே நாம் இருந்திருக்கலாம். மூங்கில்துறையில் தண்ணீர்ப் பந்தலருகே நின்று, வருபவர்களின் தாகம் தீர நீர் மோர் தந்து மகிழ்ச்சி அடைந்திருக்கலாம்!" என்றாள்.

"சரி! அப்படியே குதூகலமாக நீ இருப்பதை யார் தடுத்தார்கள்? நீயே வரவழைத்துக் கொண்ட சுவர்க்கம்தானே இது? இளவரசரைச் சந்தித்தாய். அத்துடன் நிறுத்திக் கொண்டிருக்கலாம். உனக்கு நடனம் கற்றுத்தர ஒரு கலைஞரை நியமித்தார்கள். அவரிடம் கற்றுக்கொண்டதோடு நிறுத்தி இருக்கலாம். ஒவ்வொரு படிக்கட்டாக ஏற முயன்ற நீ தாவி ஏற எண்ணினாய். இப்போது மேலே இருந்து கீழே தெரியும் பசுமையை எண்ணிப் பெருமூச்சு விடுகிறாய்" என்று நீண்ட அறிவுரை கூறினாள்.

தன் செய்கையைக் குத்திக் காட்டுவது போல் உணர்ந்த வீரம்மாளுக்கு, வாய்விட்டு அழவேண்டும் போலத் தோன்றியது.

"ஏ, முத்துவடிவு!" என்று கூவினாள். "சிறிது இடம் கொடுத்தவுடன் என் மனப் புண்ணில் கோல்கொண்டு குத்துகிறாயே" என்று கூறி விம்மினாள்.

முத்துவடிவு அவளை அன்புடன் அணைத்துக் கொண்டு, "என் அருமைத் தோழி! உன் மன வேதனையைத் தணிக்கவே நான் இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லு!" என்றாள்.

"இப்போது நீ இந்த இடத்தை விட்டுச் சென்றுவிட வேண்டும். நான் கூப்பிடும் வரையில் வரக்கூடாது. அத்தையிடமும் சொல்லிவிடு" என்று கூறிவிட்டு அங்கிருந்து எழுந்து முற்றத்தின் ஓரமாக ஒரு தூணில் சாய்ந்தவாறு சிந்திக்கலானாள்.

வெளியே நிழலாடியது. யாரோ வீரம்மாளைப் பெயர் சொல்லி அழைக்கும் குரல் கேட்டது. தலையில் முண்டாசும், நீண்ட அங்கியும் தோளிலே துணி மூட்டையும், கையில்



ஒரு கோலுடன் நின்றுகொண்டிருந்தவருடன் முத்துவடிவு பேசிக் கொண்டிருந்தாள்.

"இளவரசி வீரமா தேவியா? அப்படி யாரும் இங்கு இல்லையே" என்று முத்துவடிவு கூறிக் கொண்டிருக்கவும், வந்தவர் ஏதோ சொல்லவும், முத்துவடிவு பெரிதாக நகைத்து, "ஓ! மூங்கில் துறைப் பெண் வீரம்மாளா! அவள் எப்போது இளவரசி வீரமாதேவி ஆனாள்?" என்று கேட்டாள். அவள் விழிகளில் குறும்புத்தனம் நிறைந்திருந்தது.

அவர் மீண்டும் ஏதோ சொன்னார்.

"ஓ! சிதம்பரத்தில் திருமணம் நடந்ததா? இளவரசரை மணந்தாளா? அப்பாடியோ! எங்களிடம் சொல்லாமல், இந்தக் கிராமத்தாரிடமும் சொல்லாமல் கல்யாணமா? கல்யாணம் செய்து முடித்தவுடன் அவள் இளவரசியாகி விட்டாளா? எனக்குத் தெரியாதய்யா" என்று முத்துவடிவு, வீட்டிற்குள் திரும்ப எத்தனித்தாள்.

"ஏ, பெண்ணே! சற்று நின்று கேட்டு விட்டுச் செல். நான் உடனே உன் தோழியைச் சந்திக்க வேண்டும். இளவரசரிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன். உள்ளே போய்த் தெரிவித்தால் நல்லது... வீணாக என்னுடன் தர்க்கம் செய்து நின்றால் உனக்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று அரண்மனைத் தூதர் கடிந்து கொண்டார்.

முத்துவடிவுக்கு உள்ளூர பயம்தான். என்றாலும், வார்த்தைகளில் துணிவை வெளிப்படுத்தி, "தண்டனையா? என்ன தண்டனை தருவீர்கள்?" என்று கேட்டாள்.

தூதர் அவள் அருகே குனிந்து காதருகே மெல்லிய, ஆனால் அழுத்தந் திருத்தமான குரலில், "உன்னை எனக்குக் கல்யாணம் செய்து வைத்து விடுவார்கள்" என்றார்.

முத்துவடிவு முகம் சிவக்க, "பொல்லாதவராயிருப்பீர் போலிருக்கிறதே! என் தோழியும் அப்படித்தான் தனக்குத் தண்டனை வழங்கியதாக வருத்தப்பட்டுக் கொண்டு பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருக்கிறாள். எனக்கு ஏன் வம்பு? பிறகு என்னைத் தூக்கிக் கொண்டு போனாலும் போய்விடுவீர்கள்!" என்று குறும்பாகப் பேசி, வீரம்மாளை அங்கிருந்தே அழைத்தாள்.

அவள் அழைக்கும் முன்பே வீரம்மாள் அங்கே வந்து நிலைப்படி அருகே நின்று கொண்டிருந்தாள்.

"ஓ! அரண்மனைத் தூதுவர் வரப்போகிறார் என்று தெரிந்துதான் இங்கே வந்து நின்று விட்டாயா? பெரிய கள்ளி நீ!" என்று கோபிப்பது போல் நடித்த முத்துவடிவு தூதரை நோக்கி, "இதோ இவள்தான் எங்கள் கிராமத் தாமரை வீரம்மாள். உங்களுக்கு வீரமாதேவி! எனக்கு இனி இங்கு என்னவேலை? நான் போகிறேன்" என்று கூறி உள்ளே விரைந்து மறைந்தாள்.

வீரம்மாள், அங்கே நின்று கொண்டிருந்த அரண்மனைத் தூதரை நோக்கி, "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள். அவள் விழிகள் அலை பாய்ந்தன.

வந்த தூதுவர் அவளை நோக்கி விரலை நீட்டி, "நீதான் வேண்டும்" என்றார்.

வீரம்மாள் திடுக்கிட்டாள். "என்ன? மரியாதை இல்லாமல் பேசும் தூதுவரை அரண்மனையிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள் போலிருக்கிறது" என்று சினம்கொண்ட வீரம்மாளை நோக்கி, "இளவரசி வீரமாதேவி அவர்களே! உங்களிடம் ஒரு சேதி கூறிவிட்டு, தங்களை உடனே அழைத்து வரச்சொன்னார் இளவரசர்" என்று கூறி அடையாள இலச்சினையைக் காட்டினார்.

வீரம்மாள் திகைத்தாள். தூதரை ஏறிட்டுப் பார்த்தாள். அந்த விழிகள் அறிமுகமானவை போல் தோன்றின.

"என்ன சேதி? சொல்லுங்கள்!" என்றாள்.

"இங்கே தெருவாசலில் நின்றா? இளவரசர் அறிந்தால் என்னை என்ன செய்வார் என்று தெரியாது".

"ஓ! அப்படி என்றால், பெருமைமிகு தூதுவரே! உள்ளே வாருங்கள். உட்காருவதற்கு உயர்ந்த பீடம் ஏதும் இந்த ஏழை வீட்டிலில்லை".

"ஏழை இளவரசியின் இதயபீடம் இல்லையா?"

வீரம்மாளுக்குத் துணுக்கென்று கோபம் வந்தது. இது தூதன் பேசும் பேச்சாக இல்லையே -

"உள்ளே வாருங்கள்" என்று அழைத்துச் சென்றாள். ரேழி, தாழ்வாரம், முற்றம் - இங்கெல்லாம் வேண்டாம்" என்று தூதன் தலையசைத்தான்.



கொல்லைப்புறம். கிணற்றடி.

"ஆம்; இங்கே உட்காருவோம்! என்று மரத்தடியில் மல்லிகைப் புதர் மறைவில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினான்.

வீரம்மாள் தயங்கி நின்றாள்.

"இந்த இடம் ஏகாந்தமான இடம்" என்று கூறியவாறு தூதன் வீரம்மாளின் இடக் கரத்தைப் பிடித்திழுத்து உட்காரச் செய்தான்.

437428/ 610549]

ஒரு கணத்தில் நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சியில் அதிர்ச்சியடைந்த வீரம்மாள் மறுகணம் தூதனின், வலப் பக்கத்து மீசையை மெல்ல இழுத்து, "என்ன துணிவு உமக்கு? தூதுவராக வந்த நீங்கள் துச்சாதனனாக மாறுவதற்குப் பழையாறை மாளிகையில் கற்றுக் கொடுத்தது யார்? இளவரசியின் கரத்தைப் பற்றி இழுத்ததற்கு என்ன தண்டனை தெரியுமா?" என்றாள். அவள் குரலில்தான் கோபம் தெரிந்ததேயன்றி உண்மையில் கோபப்படவில்லை.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 002

"என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். உன் விழி விலங்கில் அகப்பட்டுக்கொண்ட தண்டனையை விடவா?" என்று கூறி நகைத்த தூதுவனின் அருகே அமர்ந்த வீரம்மாள், "நான் மிகவும் பயந்துவிட்டேன். இந்தப் பொல்லாத விழிகள் மட்டும் காட்டிக் கொடுக்காது இருந்திருந்தால் நடந்ததே வேறாக இருக்கும். சில காலம் முன்பு இதே வீட்டில் இதே இடத்தில் உங்கள் இளைய மகன் நடந்து கொண்டதற்கு என்ன தண்டனை கிடைத்தது என்பதை மறந்துவிட்டீர்களா?" என்றாள். பிறகு அவர் கரத்தைப் பிடித்துக்கொண்டு, "பொறுத்தருளுங்கள் சுவாமி, என்னை, தெருவாசலில் நிற்க வைத்துப் பேசியதற்கு. சோழப் பெருநாட்டின் இளவரசர் இப்படி மாறுவேடத்தில் வரலாமா? மெய்க்காவலர்களின் பாதுகாப்பின்றி வரலாமா? வந்தவர் திடீரென்று என்கரம் பற்றி இழுக்கலாமா? இப்படி இந்த ஏழையைச் சோதிக்கலாமா? ஒருபக்கத்து மீசையைப் பிடித்திழுத்து விட்டதற்குப் பொறுத்தருளுங்கள்" என்று கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.

தூதுவர் வடிவத்தில் வந்த இராசேந்திர சோழ தேவர், அவள் கூந்தலை மெல்ல வருடி அவளைத் தன் மார்பில்

மெல்லச் சாய்த்து, அவள் விழிகளில் துளிர்த்த நீரை மெல்லத் துடைத்து, அவள் முன் நெற்றியில் படர்ந்திருந்த கேச இழைகளை ஒழுங்குபடுத்தி, வில் போன்ற புருவத்தை விரல்களால் தடவி, எள் பூ நாசியை அளவெடுத்து, கோவை இதழ்களை மெல்ல விரித்து முத்துப் பற்களை எண்ண முயன்று, 'நான் ஒரு சேதி சொல்கிறேன்' என்று கூறி, மெல்லக் குனிந்து தன் இதழ்களைப் பதிய வைக்க முயன்றபோது வீரம்மாள், அவர் கரத்தைத் தள்ளி அவர் செய்கையைத் தடுத்து விரைந்து எழுந்து நின்றாள்.

கூடாது என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள். இராசேந்திரன் திகைத்தார்.

"ஏதோ செய்தி சொல்ல அழைத்தீர்கள்; ஆனால் இப்படிச் செய்ய அனுமதி பெறவில்லை! என்று கூறிச் சற்று நகர்ந்தாள்

"உம், உம், நாம் இங்கிருந்து புறப்படுவோம். தோழி முத்துவடிவு தேடிவந்து விடுவாள். கிணற்றங்கரைக்குத் தூதருடன் சென்ற என்னை இன்னும் காணவில்லையே என்று சந்தேகப்படமாட்டாளா? தூதுவராக வராமல் இளவரசராக வந்திருந்தால் உங்களுக்கு வரவேற்பும் மரியாதையும் இப்படியா இருந்திருக்கும்?" என்று கூறி அங்கிருந்து செல்ல முற்பட்டாள்.

இராசேந்திர சோழர் பேசுவதறியாது நின்றார். "ஆமாம் வீரமாதேவி! நான் செய்தது தவறுதான்" என்றார். "இனியும் இங்கே இருப்பது சரியன்று; போகலாம் வா' என்றுகூறி வேகமாக நடந்தார்.

"முத்து - நீ புத்திசாலிப் பெண் என்று தெரிந்து வைத்திருந்தேன். ஆனால் இன்று நீ மிகப்பெரிய அறிவாளி என்பதை உறுதிப்படுத்திவிட்டாய்!" என்று அத்தை அவளை மிகவும் பாராட்டினாள். முத்துவடிவின் கையில் ஆரத்தித் தட்டு இருந்தது.

"மாறுவேடத்தில் வந்தவர் இளவரசர் என்று எப்படி அறிந்தாய்? நல்ல வேளையாக இளவரசரையும், வீரம்மாளையும் நிற்கவைத்து ஆரத்தி எடுத்து, வெற்றிலைப் பாக்கு, பழம், தேங்காயாவது கொடுக்க முடிந்ததே" என்று அத்தை தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். "ஒரு



குவளை மோராவது பருகக் கொடுத்திருக்கலாம். இன்னும் சிறிது நேரம் இருந்தால் முந்திரி திராட்சைப்பழம் இட்டுப் பாயசம் கொடுத்திருக்கலாம்" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள். இராசேந்திர சோழரும், வீரம்மாளும் முற்றத்தைக் கடந்து தாழ்வாரத்தைக் கடக்கும்போதுதான், அத்தையிடம் அவள் ஆரத்தித் தட்டைக் கொடுத்தாள்.

"மாளிகையிலிருந்து வந்தவர் என்று அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோதே நான் சந்தேகப் பட்டேன். நொடியில் புரிந்து கொண்டேன். அவருடன் கிணற்றங் கரைப் பக்கம் வீரம்மாள் போகும்போது உறுதிப்படுத்திக் கொண்டேன். சிறிது நேரம் அவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்தேன். பிறகு வீட்டிற்குள் வந்து இளைப்பாறிச் செல்வார் என்று நினைத்தேன். நல்ல வேளை வீட்டிற்கு வந்த இளவரசருக்கு இந்தச் சிறு மரியாதையாவது செய்ய முடிந்ததே" என்று முத்துவடிவு பெருமூச்சு விட்டு, அத்தையைச் சமாதானப்படுத்தினாள்.

"இளவரசர் என்பதற்காக மட்டுமா மரியாதை? அவர் இந்த வீட்டு மருமகப் பிள்ளை இல்லையா? பெயர்த்தியின் திருமணம் திடீரென நடைபெற்றதில் பாட்டனாருக்குக் கொஞ்சம் வருத்தம்தான்; ஊர் உலகத்தை அழைத்துச் சிறப்பாகத் திருமணம் நடக்கவில்லை என்று வாய்க்கு வாய் சொல்கிறார். ஆனால், இளவரசர்தான் மாப்பிள்ளை என்றறிந்தவுடன் அவர் வருத்தம், கோபம் எல்லாம் பறந்தோடி விட்டது. எப்போதும் வீட்டுத் திண்ணையிலேயே இருப்பவர் இன்று இளவரசர் வரும் வேளையில் எங்கே போய்விட்டார்?" என்று அத்தை வருத்தப்பட்டாள்.

அரண்மனைத் தூதர் வேடத்தில் வந்த இராசேந்திரர், வந்த சுவடு தெரியாமல், வீரம்மாளை அழைத்துக்கொண்டு தோணித்துறையை நோக்கி விரைந்தார். அவர் நடை வேகத்திற்கு ஏற்ப வீரம்மாள் நடந்து வரும் போதே, "அத்தையும், முத்தம்மாளும், இப்பொழுது வருத்தப்பட்டுக் கொண்டிருப்பார்கள். நீங்கள் மாறுவேடத்தில் வராமல் இளவரசராகவே வந்திருக்கலாம். இது உங்கள் வீடு தானே?" என்று கேட்டாள் வீரம்மாள்.

"நான் நினைத்தது வேறு. உன்னிடம் உடனே தஞ்சைபுரிக்கு வருமாறு சொல்லிப் போக அரண்மனைத் தூதர் வேடத்தில் வந்தேன்".

"தவறு செய்துவிட்டீர்கள். அரண்மனைத் தூதர், செய்தி சொல்ல கிணற்றங்கரைக்கு அழைத்துப் போவாரா?"

வீரம்மாள் கேள்விக்கு விடைகூற அவரால் இயலவில்லை.

"உன்னிடம் சொந்தமாகப் பேச எண்ணினேன். அதற்கேற்ற இடம் மூங்கில் துறைதான் என்று முடிவு செய்தேன். அரசு அதிகாரிகளின் யோசனைக்குக் கட்டுப்பட்டவன் நான். உன்னுடன் பேசுவதென்றால்கூட அதற்கான நேரத்தில் பேச வேண்டும் என்ற வரைமுறைகள் உண்டு".

வீரம்மாள் மெல்லச் சிரித்தாள். "வீரநாராயணபுர ஏரிக்கரை மாளிகையில் சந்தித்துப் பேசினோமே, அதற்குக்கூட நேரம் ஒதுக்கப்பட்டதா?"

"அப்பொழுது இருந்த நிலை வேறு. வீரம்மாள் என்ற நடனமங்கையுடன் பழகினேன். அதற்கும் நேரம் ஒதுக்கப்பட்டது. இப்போது வீரமாதேவியுடன் அவள் கரம்பிடித்த கணவனாக, பொறுப்பு மிகுந்த இராசேந்திர சோழனாகப் பேசுகிறேன்".

"எனக்கு ஒன்றும் புரியவில்லை. மனைவியுடன் கணவர் பேசவும் அதிகாரிகள் திட்டமிட வேண்டுமா? நான் ஒரு கிராமப் பெண். நான் உங்களை இளவரசராக மட்டுமே அறிவேன். இளவரசரிடம் மனதைப் பறிகொடுத்தது தவறு என்பதை இப்போது உணர்கிறேன். என்னைத் தங்கக் கூண்டில் அடைக்காதீர்கள். அரண்மனை வாழ்வு கொடுத்து என் சுதந்திர உணர்வைக் கட்டுப்படுத்தாதீர்கள். என்னைக் கண்டால் வீணே அஞ்சுபவர்களும், பொறாமைப்படுபவர்களும், அதிகமாக மரியாதை செலுத்துபவர்களுமாக என்னைத் துன்பப்படுத்தாதீர்கள். நான் பழையாறை மாளிகைக்குத் திரும்புவதில்லை என உறுதி பூண்டிருந்தேன். ஆனால்..." என்று கூறிவரும்போது, இராசேந்திரர் திகைப்புற்றார்.

"வீரமாதேவி! உன்னிடம் ஏற்பட்டுள்ள திடீர் மாறுதலுக்கு என்ன காரணம்? நான் அறியலாமா?"



"நான் என்றுமே வீரம்மாளாக இருக்க விரும்புகிறேன். சிதம்பரத்தில் தங்களைச் சந்தித்ததிலிருந்து சம்பவங்கள் மிக வேகமாக நடைபெற்றன. எதிர்பாராத நிகழ்ச்சிகளும் எனக்குச் சில வேளைகளில் மகிழ்ச்சியையும், சில வேளைகளில் அச்சத்தையும் அளிக்கின்றன."

"அச்சமா?"

"ஆமாம், உங்களிடம் தெரிவிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த நேரத்தை விட்டால் பிறகு எப்போது வாய்க்குமோ?" என்ற கூறிய வீரம்மாள் தன் வேதனையையும் தனக்கு நேர்ந்த அனுபவத்தையும் விவரிக்கலானாள்

பழையாறை மாளிகையில் நல்ல உள்ளமற்ற இளவரசிகள் தன்னிடம் நடந்து கொண்ட முறையை - குத்தலும் குதர்க்கமும், வெறுப்பும் நிறைந்த பேச்சை - அவள் விவரித்தாள்.

"நான் அரச குடும்பத்தில் பிறக்காத சாதாரணக் குடிமகள் என்று அவர்கள் இழிவாகப் பேசுகிறார்கள். நடனத் திறமையாலும், இளமையாலும், அழகாலும் நான் தங்களை மயக்கிவிட்டேனாம். தங்களுக்கு என்னைவிட வயதில் மூத்த மகள் இருப்பதை நான் அறிந்த பிறகு அதிர்ச்சியடையவில்லை. தங்கள் மகள் எனக்கு ஆறுதல் கூறியிராவிட்டால் நான் என்றோ பழையாறையினின்று காணாமல் போயிருப்பேன்" என்று கூறும்போது விம்மல் ஒலி, இராசேந்திரரைத் திடுக்கிட வைத்தது.

"இளையபிராட்டியாரைச் சந்தித்தாயா?" இராசேந்திரன் கேட்டார். தலையசைத்த வீரம்மாள், "அவர்கள் என்னை அன்புடன் நடத்தினார்கள். திருமணத்திற்குப் பிறகு சந்திக்கவில்லை" என்று வீரம்மாள் கூறினாள்.

"நாம் இப்போது தஞ்சைபுரிக்குச் செல்கிறோம். பழையாறையிலிருந்து தஞ்சைக்குச் சென்றுவிட்டால் அங்கே என் அத்தையார் இளையபிராட்டியார் இருக்கிறார்கள், என் மூத்த மகள் இருக்கிறாள். அவர்களைச் சந்திக்க வேண்டும். சக்ரவர்த்திகளுடைய பிறந்த நாள் விழா அங்கே கொண்டாடப்படுகிறது. அது சமயம் நான் ஒவ்வொருவரிடமும் உன்னை அறிமுகம் செய்கிறேன். அன்புள்ள வீரமாதேவி! நீ சாதாரணப் பெண் அல்லள். நீ இனி சோழநாட்டு இளவரசி என்பது நினைவில் இருக்கட்டும்".

வீரமாதேவி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்? இளவரசி என்று நான் கூறியதை நீ நம்பவில்லை இல்லையா!"

"சோழ நாட்டிற்கு எவ்வளவு இளவரசிகள் என்று நினைத்தேன், சிரித்தேன்."

"அரசகுல வழக்கம்" என்று கூறிய இராசேந்திரன், "என் கதையை இதுவரை உனக்குச் சொல்லவில்லை. சிறிது சிறிதாகச் சொல்கிறேன். நான் இளவயதில் அழகி ஒருத்தியிடம் காதல் கொண்டேன். ஆனால் இளைய பிராட்டியார் என்னைத் தடுத்துவிட்டார். என்னை வளர்த்து உருவாக்கிய அத்தையிடம் எனக்கு மிக மிகக் கோபம். ஆனால் அவர்கள் தன் செயலுக்கான காரணத்தை விளக்கியவுடன் நான் அதிர்ச்சியடைந்தேன். பிறகு சமாதானமடைந்தேன். சோழ குலத்திற்கு மிகவும் ஆதரவானவர்களான பழுவேட்டரையர்கள் மரபில் பெண் கொள்வது வழக்கம். அதனால் பழுவேட்டரையர் குலத்தில் வந்த பஞ்சவன் மாதேவியை எனக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்".

"ஓ! அவர்கள்தான் முதல் இளவரசி; அதனால்தான் மாளிகையில் அவர்கள் அதிகாரம் கொடி கட்டிப் பறக்கிறது".

"இல்லை, இல்லை பட்டத்து இளவரசி இருந்தாள். இறந்து விட்டாள். அந்த இடத்தில்தான் பஞ்சவன் மாதேவி - இளைய பஞ்சவன் மாதேவி. பிறகு என் தந்தை சொல்படி, சிற்றரசர் புதல்விகள் சிலரை மணந்தேன்".

"அவர்களும் இளவரசிகள்; அப்படித்தானே? ஆனால் பஞ்சவன்மாதேவிக்கு உள்ள பெருமை, மரியாதை மற்றவர்களுக்கு இல்லை, அப்படித்தானே?".

"ஏன் அப்படி நினைக்கிறாய். எல்லாரும் ஒரே நிலைதான்".

"இளவரசருடன் சரிசமமாக அமரக்கூடிய தகுதி பெற்றவள் யார்?"

இராசேந்திரன் வீரமாதேவியை ஒரு கணம் உற்று நோக்கி, "வீரமாதேவி! கிராமப் பெண் என்றும், மாளிகையில் பழகும் ஆற்றலில்லாதவள் என்றும் சொல்லிக் கொள்ளும் உனக்குள்ள தர்க்க அறிவு என்னைப்



பிரமிக்க வைக்கிறது! நீ என்ன கேட்க வருகிறாய் என்று புரிகிறது. அந்தப்புரத்திலுள்ள இளவரசிகளுள் ஒருத்தியாகத்தானே இருக்க வேண்டியிருக்கும் என நீ நினைக்கிறாய்? உனக்குள்ள இடமே தனிதான். மாளிகையில் மற்ற இளவரசிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் எனக்கு நீ எந்த விதத்தில் உறுதுணையாக இருக்கலாம் என்பது பற்றியே எண்ண வேண்டும்" என்றார்.

வீரமாதேவி ஏதும் பேசவில்லை. கொள்ளிட ஆற்றைக் கடந்து கரையை நெருங்கும்போது இராசேந்திரர் கேட்டார்: "வீரமா தேவி! தஞ்சை மாநகரை நீ பார்த்திருக்கிறாயா?"

பார்த்ததில்லை என்று வீரமாதேவி தலையசைத்தாள். "தஞ்சைபுரிக் கோட்டையும், மாளிகையும் மிகப் பெரியவை. அதைவிட மகத்தானது பெரிய கோயில். என் தந்தைக்கு அழியாத பெயரை அளித்தது பெரிய கோயில். பெரிய கோயிலில் திருச்சுற்றிலுள்ள ஓவியங்களையும், மேல்தளத்திலுள்ள நடன சிற்பங்களையும் நீ தவறாமல் பார்க்க வேண்டும். ஒரு முறைக்கு இரு முறை பார்க்க வேண்டும். பார்த்தபிறகு உனக்கேற்படும் எண்ணத்தை எனக்கு விவரிக்க வேண்டும்" என்றார்.

கொள்ளிடக் கரையில் சோழவீரர்கள் நின்று கொண்டிருந்தனர். அவள் சகோதரன் நின்று கொண்டிருந்தான்.

தன்னை வரவேற்க சகோதரன் வந்திருப்பதாக எண்ணினாள். ஆனால் அவன் இளவரசரிடம் தெரிவித்த செய்தி கேட்டுத் திகைத்தாள்.

"மதுரையில் பாண்டியப் படைகள் போர்க் கோலம் பூண்டு பல இடங்களில் நம் படைகளைத் தாக்குகின்றன. பாண்டியப் படைவீரர்கள் பலத்த ஆயுதங்களுடன் செயலில் இறங்கியுள்ளனர்".

இராசேந்திர சோழன் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு வீரமாதேவியை நோக்கி, தஞ்சைக்குச் சென்று, தாம் கூறியபடிப் பெரிய கோயிலில் ஓவியங்களையும், நடனச் சிற்பங்களையும் காணுமாறு கூறினர்.

வீரமாதேவி கணம் கூடத் தாமதிக்காமல், "நான் தஞ்சைபுரிக்குச் செல்லவில்லை. மதுரைக்குத் தங்களுடன் வருகிறேன்" என்றாள்.




CHN
CHN437425
CHN437425

சென்னை - 600 002

## நூல் விவரக் குறிப்பு


| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : கங்காபுரிக் காவலன் (இரண்டாம் பாகம்) |
| ஆசிரியர் | : கலைமாமணி விக்கிரமன் |
| மொழி | : தமிழ் |
| உரிமை | : ஆசிரியருக்கே |
| பொருள் | : வரலாற்று நாவல் |
| பதிப்பாண்டு | : 2006 |
| தாள் விவரம் | : வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : டெம்மி |
| அச்சு | : 12 புள்ளி |
| பக்கம் | : 320 |
| வெளியீடு | : வனிதா பதிப்பகம், 11, நானா தெரு, தியாகராயநகர், சென்னை. 600 017. ☎ 42070663, 22245324 |

**விலை ரூ. 120.00**

| | |
|---|---|
| ஒளி அச்சு | : அம்சா கிராபிக்ஸ், நங்கைநல்லூர், சென்னை - 61. போன் : 22245324 |
| அச்சிட்டோர் | : சரவணா ஆப்ஃசெட், சென்னை. |


O31,3NV,G7 P6.2
437425
6105451



## 33. இராசராசன் கனவு

ஆடி மாதப் பிறப்பதற்கு முன்பே காவிரியில் வெள்ளம் கரை புரண்டு ஓடத் தொடங்கியது. காவிரியின் கிளை ஆறுகளில் சுழன்றுகொண்டு தண்ணீர் ஓடியது.

தஞ்சை மாளிகையின் வெளியே, சோழ நாட்டின் பல பகுதிகளிலிருந்து முக்கியமானவர்கள் கூடியிருந்தனர். இளவரசர் இராசேந்திர சோழர் மதுரையினின்று வெற்றி வாகை சூடி வருகிறார் என்ற செய்தி மிக விரைவில் பரவியது.

மதுரையில் பாண்டியர் அரண்மனையில் புலிக்கொடி கம்பீரமாகப் பறந்தது. சுந்தரனை அரியணையில் அமர்த்திவிட்டு, இராசேந்திரன் திரும்பி வருகிறார்.

மா, பலா, வாழை என முக்கனிகளுடன் சோழ மாளிகைக்கு நகர்ப்புறங்களிலிருந்து வேளாண்மைப் பெருமக்கள் இராசராச சோழரைக் காண வந்த வண்ண மாயிருந்தனர்.

சில நாள்களாக இராசராசர் உடல்நலங் குன்றியிருந்தது. படுக்கையினின்று எழாமலிருந்தார். இருந்தாலும் அவர் தனி உற்சாகத்துடன் திகழ்ந்தார். மதுரை வெற்றியைப் பற்றிய செய்தி சில நாள்களுக்கு முன்பே அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக பாண்டியர் புரிந்துவந்த போருக்கு, கொடுத்து வந்த தொல்

[illegible] 'வைக்கப்பட்டதை அறிந்து அவர் [illegible]

இராசராசர் ஆழ்ந்தப் பெருமூச்சு விட்டார். "என் மகன் [illegible]. பாண்டியர் சுரம் தீர்க்கவேண்டியிருக் கிறது" என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டார்.

இராசேந்திரனின் வருகைக்காக தஞ்சை விழாக் கோலம் பூண்டிருந்தது. உறையூரில் ஒரு பகல் தங்கி இளைப்பாறிப் பிறகு எங்கும் தங்காமல் தஞ்சை நோக்கி விரைந்தார் இராசேந்திரன். அவர் அவ்வாறு ஆவ லுடன் விரைந்து வரக் காரணமுமிருந்தது.

வீரமாதேவி தஞ்சை மாளிகையில்தான் தங்கியிருந்தார். மதுரைக்குப் புறப்படும் அன்று, 'தஞ்சைக்குச் செல்ல மாட்டேன். மதுரைக்குத் தங்களுடன் வருவேன்' என்று பிடிவாதம் பிடித்ததுடன் உறுதியாகவும் தெரிவித்த வீரமாதேவியைச் சமாதானப்படுத்தப் பெரு முயற்சியை எடுத்துக் கொள்ள நேரிட்டது.

"தஞ்சைக்குச் செல்லாமல், வேறு எங்குச் சென்று தங்குவாய் என் அருமை வீரமாதேவியே!" என்று அன்புடன் இராசேந்திரன் மற்றவர் எதிரில் கேட்டதோடன்றி, செல்ல மாக அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்தபோது நாணம் புயலாக அவளைத் தாக்கியது.

"மூங்கில் துறைக்குச் செல்கிறேன்".

"அங்கே சென்று நீ தங்கியிருப்பதற்கு அதிகாரிகள் சம்மதிக்கமாட்டார்கள்".

"யார் அந்த அதிகாரிகள்? என் சொந்தக் கருத்தை, முடிவை எதிர்க்க அவர்கள் யார்?"

"ஐயோ, வீரமாதேவி! நீ இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய்".

"ஆமாம், நான் குழந்தைதான். இந்த நாட்டு இளவரச ருக்கு ஒருவிதத்தில் நான் குழந்தைதான்'

"நீ இந்த நாட்டு இளவரசருக்குக் குழந்தை. இள வரசரோ உனக்குக் குழந்தை. இந்த நாட்டு இளவரசரின் அன்புக்குப் பாத்திரமான இளவரசி நீ. இளவரசிகள் இஷ்டம்போல் எங்கும் உலவ முடியாது. இருக்க முடியாது. தஞ்சை மாளிகையிலோ, பழையாறை மாளிகையிலோ தான் இருக்க வேண்டும். தொண்டை மண்டலம் சென்றால்





காஞ்சி மாநகரத்தில் பொன் மாளிகையில் அல்லது அரசர் எங்கு தங்குகிறாரோ அங்கு, அந்தப்புரத்தில் சகலவசதிகளுடன் குதூகலமாக வாழ்வதுபோக, மூங்கில் துறைக்குச் சென்று தொல்லைப் படப் போகிறாயா? நீ விரும்பினாலும் அரசாங்க அதிகாரிகள் அனுமதிக்க மாட்டார்கள்".

மாறு வேடத்திலிருந்த இராசேந்திரன் வீரமாதேவி யுடன் விவாதித்துக் கொண்டிருந்தார். வீரமாதேவியை நெருங்கிப் பேசுவதையும், தோளைத் தொட்டுப் பேசு வதையும், கரம்பிடித்துப் பேசுவதையும் மற்றவர்கள் தவறாக நினைக்கப் போகிறார்களே என்ற கூச்சத்தில் அவளால் பேச முடியவில்லை. இளவரசரின் ஆணித் தரமான பேச்சுக்கு அவளால் மறு பேச்சு பேச முடிய வில்லை.

கொள்ளிடக்கரையில் நின்றிருந்த பரிவாரங்களிடம் ஏற்பட்ட பரபரப்பு வீரமாதேவிக்குப் புரிந்தது.

அவள் தலையசைத்தாள். "சரி, தஞ்சைக்கே செல் கிறேன். மதுரைக்குத் தங்களுடன் வரக் கூடாது என்ப தற்குத் தாங்கள் சரியான காரணம் சொல்லவில்லை" என்றபடி தலைகுனிந்த வீரம்மாளின் முகத்தை நிமிர்த்தி, "மதுரைப் போர் சில நாள்களே நடக்கும். ஓரிடத்தில் நிலையாக நடக்காது. மதுரையைச் சுற்றியுள்ள காட் டுக்குள் சென்று, பாண்டியப் புரட்சி வீரர்களை வேட்டை யாடும்படி இருக்கும். நீ எங்கே தங்குவாய்? உனக்குப் பாதுகாப்பளிப்பதற்குத் திட்டமிடவே என் சிந்தனை செல்லும். சுந்தரனுக்கு உற்சாகமூட்டி அவனையும் ஒரணிக்குத் தலைமை வகிக்கச் செய்யவேண்டியிருக்கும்" என்று இராசேந்திரன் கூறியவுடன், வீரம்மாள் தலை யசைத்துச் சம்மதித்தாள். மதுரையில் சுந்தரன் இருக் கிறான் என்ற நினைவு வந்ததும் அவள் மேனி மெல்ல நடுங்கியது.

"உங்கள் முதல் கட்டளையை ஏற்று தஞ்சைபுரிக்குச் செல்கிறேன். ஒன்று மட்டும் இப்போது உங்களிடம் வேண் டிக் கொள்வேன். பழையாறை ஏன் மனத்தில் ஒரு வெறுப்பை ஏற்படுத்திவிட்டது. தஞ்சை மாநகரும் அவ்வாறு எனக்குக் கசந்து விட்டால், எனக்கென்று ஒரு சிற்றூரை நீங்கள் ஏற்படுத்தித் தருவீர்களா? அங்கே நான்

இருக்க சிறு இல்லம் ஒன்று கட்டித் தருவீர்களா?" என்று வீரம்மாள் அவர் செவிகளில் மட்டும் கேட்கும்படிப் பேசினாள்.

இராசேந்திரன் பெரிதாக நகைத்தார். "இவ்வளவு தானா? சிற்றூர் என்ன? பேரூரே ஏற்படுத்துகிறேன். பெரிய நகரம் படைக்கிறேன். அங்கே பெரிய பெரிய மாளிகைகளைக் கட்டுவேன். அங்கே பெரிய கோயில் ஒன்றைக் கட்டுவேன். வீரமாதேவி! என் இலட்சியமே அதுதான். என் மனத்திலிருப்பதை நீ எப்படி உணர்ந்தாய்? வீரமாதேவி! நான் இப்போது மதுரை நோக்கிச் செல்கிறேன். மகிழ்ச்சியுடன் விடை கொடு. வெற்றியுடன் திரும்பி வந்து என் உள்ளத்தில் நீண்ட காலமாகப் பொங்கி நிற்கும் வேட்கையை விவரிக்கிறேன்" என்றார்.

வீரம்மாளின் முகம் மாறியது. ஏமாற்றமும், ஆத்திரமும், கவலையும் கொண்டிருந்த மனத்தைப் பிரதிபலித்த முகத்தில் ஒரு நம்பிக்கை ஒளிபிறந்தது. அவள் மெல்லச் சிரித்தாள். "ஏன் சிரிக்கிறாய்" என்று கேட்பதுபோல் இராசேந்திரன் அவளை நோக்கினார்.

"உள்ளத்தில் நீண்டகாலமாகப் பொங்கி நிற்கும் வேட்கை என்னவாக இருக்கும் என்று யோசித்தேன், சிரிப்பு எழுந்தது". என்று சொன்ன வீரம்மாள், "காவலர்களும் அதிகாரிகளும் நம்மையே பார்க்கிறார்கள். தங்களைத் தாமதப்படுத்தும் என்மீது அவர்களுக்கு எரிச்சல் ஏற்பட்டு வருகிறது. மதுரையில் ஏற்பட்டுள்ள கலவரத்தை உங்கள் இளைய மகன் சுந்தரனால் அடக்க முடியவில்லை, அங்கும் நீங்களே செல்ல வேண்டியிருக்கிறது. மதுராந்தகன் என்று உங்களுக்கு அப்போதே பெயர் சூட்டி விட்டார்கள். தங்கள் மகன் சுந்தரன் நலனை நான் கேட்டதாகச் சொல்லுங்கள். சென்று வாருங்கள்; வென்று வாருங்கள். ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்கிறேன்; தஞ்சை மாளிகை அந்தப்புரத்தில் எனக்கு மரியாதைக் குறைவு ஏற்பட்டால் அங்கே ஒருகணம்கூட நான் தங்கமாட்டேன். உறவு முறையாளர், மரியாதை கொடுக்க வேண்டியவர்கள், அரசி, இளவரசி என்றெல்லாம் பார்க்காமல் என் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்வேன்".



இதைச் சொல்லிவிட்டு வீரம்மாள் தலைகுனிந்தாள் விழிகளை மூடித் திறந்தாள். இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் அவள் கன்னத்தில் உருண்டன. பிறகு நிமிர்ந்து இராசேந்திரனைப் பார்த்து, "சென்று வெற்றியுடன் திரும்பி வாருங்கள் இளவரசே!" என்றாள்.

"தஞ்சைக்கு உரிய மரியாதையுடன் உன்னை அழைத்துச் செல்வார்கள். மகிழ்ச்சியோடு இரு. உற்சாகத்தோடு இரு. சக்ரவர்த்தியாருக்கு உன்மீது அன்பு அதிகம் உண்டு. மிகவும் பாராட்டுவார். அவர் விரும்பும்போது நீ அவர் முன்பு ஆடலாம்!"என்று கூறினார்.

வீரமாதேவியின் பல்லக்கு, தஞ்சைக்குச் செல்லும் சாலையில் சென்று மறையும்வரை, கொள்ளிடக்கரையில் காத்திருந்த பிறகு, மதுரை நோக்கி விரைந்தார் இராசேந்திரன்.

தஞ்சைக் கோட்டைக்குள் நுழையும்போதே முதலில் அந்தப்புரத்திற்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் இராசேந்திரனிடம் பொங்கி நின்றது.

ஐம்பது பிராயத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் இளவரசர் இராசேந்திரன் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைப் போர்க்களத்தில் கழித்திருந்தாலும், இலக்கிய ஆர்வமும் காதல் மோகமும் அவரை விட்டுப் பிரியாதவை. இளம் வயதில் அவர் காதல் வயப்பட்டதுண்டு. இள வயதுக் காதலுக்கு இளையபிராட்டியார் குறுக்கே நின்று தடை விதித்தார்கள் என்று கோபப்பட்டதுண்டு. அவர்கள் அவ்வாறு தடை விதித்ததன் காரணம் அறிந்தபோது இளைய பிராட்டியிடம் மதிப்பும் மரியாதையும் அதிகமாகியது. அவை பழைய கதை. நடந்துபோன சம்பவங்கள். மறந்துபோன அந்த நிகழ்ச்சியை எப்போதாவது நினைவுபடுத்திக் கொள்வார். பழுவேட்டரையர் குலத்தில் இராசேந்திரனுக்குத் திருமணம் நடைபெற்றது. பட்டத்து



இளவரசியாக பஞ்சவன்மாதேவி திகழ்ந்தாள். பிறகு அரச குடும்பங்களுடன் தொடர்பு ஏற்பட வேண்டும் என்பதற்காக சில திருமணங்கள் நடைபெற்றன. நண்பனின் தங்கை வீரம்மாவைச் சந்தித்தவுடனேயே அவளை ஏற்க வேண்டும் எனும் ஆவல் இராசேந்திரனுக்கு ஏற்பட்டது. முதுமையின் நுழைவாசலில் நின்ற அவர் இதயத்தில் ஏற்பட்ட கலை ஆர்வம் வீரம்மாளை ஏறகக் காரணமாக





இருந்தது. போர்க்கள நினைவுகள், யுத்தப் பசி இவையெல்லாம் குறைந்து, கலை இலக்கிய ஆவல் இதயத்தில் சிலிர்த்துவிடத் தொடங்கியதும், தன் இலட்சியக் கனவுகளுக்குத் துணையாக நின்று ஈடுகொடுத்து நடைபோடக் கூடியவள் வீரம்மாள்தான் என்று உறுதியான எண்ணம் பதிந்ததால் வீரம்மாளை அவர் ஏற்றார். ஆடம்பரமற்ற முறையில் திருமணம் புரிந்துகொண்டார். மதுரையில் கிடைக்கும் சிறு ஓய்வின்போது வீரம்மாளின் அழகிய தோற்றம் அவர் கண்முன் தோன்றும். அவளுடன் எப்போதுமே இருக்க வேண்டும் எனும் ஆவல் ஏற்படும். மதுரைக்கு அவளை உடன் அழைத்து வந்திருக்கலாம். தவறி விட்டோமே என்றுகூட எண்ணுவார். மதுரையில் ஏற்பட்ட வெற்றிக்குப் பிறகு, இராசேந்திரன் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். தன் மனத்தில் இவ்வளவு காலமாக அடக்கி வைத்திருந்த உணர்வுகளைத் தந்தையிடம் தெரிவித்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

சக்கரவர்த்தியிடம் தன் மனதிலுள்ளதைத் தெரிவிக்கும் துணிவு இதுவரையில் இராசேந்திரனுக்கு இருந்ததில்லை. வீரம்மாளைச் சந்தித்தலிருந்து துணிவு மெல்ல மெல்ல அரும்பியது. வீரம்மாளின் கலைப் புலமையை அறிந்ததிலிருந்து அது ஏற்பட்டது. சிற்பத்துக்கே உயிர் தரக் கூடிய அழகு தேவதையாக அவள் திகழ்வதைக் கண்டவுடனேயே அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். வீரம்மாள் உதவியுடன், ஒத்துழைப்புடன் ஒரு சிற்பபுரியையே படைக்க வேண்டும் என்று திட்டமிட்டார்.

பகைவர்கள் நாட்டை வெல்வது, செல்வங்களைக் கவர்வது, தோற்றவர்களை அடிமையாக்கி சோழ நாட்டிற்கு அழைத்து வருவது, வெற்றி பெற்ற நிகழ்ச்சி அழியாதிருக்க கல்வெட்டில் செதுக்குவது புலவர்களைக் கொண்டு மெய்க் கீர்த்திகளைப் பாடச்செய்வது இவற்றிலெல்லாம் அவருக்கு ஆர்வம் குறைந்து விட்டது. அவை நிரந்தரம் அல்ல என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. கலைகளும், காவியங்களும், சிற்பங்களும், சித்திரங்களும், கோயில்களும், கோபுரங்களுமே அழியாது இருக்கக் கூடியவை; காலாகாலத்திற்கு அழியாமல் பேச வைக்கக் கூடியவை என்பதை உணர்ந்தார். தஞ்சையில் தன் தந்தை படைத்த பெரிய கோயிலைப் பார்க்கும் போதெல்லாம் பெருமூச்சு விடுவார். வாதாபிக்கும் அருகேயுள்ள

பட்டடக்கல்லுக்கும் சென்றபோது சாளுக்கியர்கள் பெயரைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் சிற்பக் கோயில்களைக் கண்டார். அவர் மனம் சிறிது சிறிதாக மாறியது.

தன் தந்தையிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்துவிட வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது. அதற்கான வேளை நெருங்கிவிட்டது. மதுரை வெற்றியைத் தெரிவிக்கும் போது, தன் மனத்திலுள்ளதை வெளியிட்டு விடவேண்டும் என்ற முடிவுடன் அவர் சக்கரவர்த்திகளைக் காண மாளிகைக்குச் சென்றார்.

தன் தந்தையைப் பார்தத‌வுடனேயே, இராசேந்திரன் திடுக்கிட்டார். தோள் வலிமை மிக்க, அகன்ற மார்புடைய, நீண்ட கரங்களையுடைய, கூர்மையான ஆனால் பாசம் நிறைந்த ஒளிபொருந்திய விழிகளையுடைய, அறிவாற்றலுக்கு அடையாளமாக விசாலமான நெற்றியையுடைய, செம்பாதங்களையுடைய சக்கரவர்த்திகளா இன்று மஞ்சத்தில் காய்ந்த வாழைபோல் கிடக்கிறார்? இராசேந்திரனின் கண்களை நீர்ப்படலம் மறைத்தது.

மதுரைக்குச் சென்று வருவதற்குள், சக்கரவர்த்திகளின் உடல் இந்த அளவுக்கு மெலிந்து விட்டதா?

வாளெடுத்துச் சுழற்றும்போது நூற்றுக்கணக்கான எதிரிகள் பயந்தோடும் வல்லமை படைத்த அந்தக் கரங்களைத் தூக்கி என்னை வாழ்த்த அவரால் முடியவில்லையே, என்றெல்லாம் எண்ணி இராசேந்திரன் கலங்கினார்.

"வா, மகனே! வா. வெற்றிமாலை அணிந்து வந்திருக்கும் நீ நீடூழி வாழ வேண்டும்!" என்று மெல்லக் கூறினார். இராசராசன்.

"என் அன்புமகனே இராசேந்திரா! நான் ஒரு சிறு தவறு செய்துவிட்டேன். நினைத்ததை உடனே நிறைவேற்றும் குணமுடையவன் நான். சற்றுத் தாமதப்படுத்தி விட்டேன். அதனால் உன் புகழ் மகுடத்தில் ஓர் அரிய மணி சேருவது குறைந்து விட்டது..." என்று கூறி மெல்ல நிறுத்தினார். அவரால் பேசமுடியவில்லை. ஆயிரமாயிரம் எண்ணங்கள், ஆசைகள் அவர் நெஞ்சிலிருக்கின்றன. அவற்றை வெளிப்படுத்த முடியாமல் அவை தொண்டைக் குழிக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்றன.



இலேசான காய்ச்சலும், நீர்க் கோவையும் மூச்சு வருவதற்குத் தடையாயிருந்தன.

'சக்கரவர்த்தியார் என்ன சொல்ல வருகிறார். ஏதோ தாமதப்படுத்திவிட்டாராமே? புகழ் மகுடத்தில் ஒரு மணி பதிவதைத் தாமதப்படுத்தி விட்டாராமே?' இராசேந்திரன் சக்கரவர்த்திகளைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தார்.

விழிகளை மீண்டும் திறந்து, களைப்பு நீங்கியவராக இராசராச சோழ தேவர், மகனைப் பார்த்து, "மகனே! இளைப்பாறி விட்டுப் பகலுக்கு மேல் இங்கே வா, முக்கியமான செய்தி பேச வேண்டும். முடிவெடுக்க வேண்டும். பிரதானிகளை, முதல் அமைச்சரை, நிமித்திகரை, சோதிடரை வருமாறு பணித்துள்ளேன்" என்றார். பிறகு தொடர்ந்து, "மகனே! உலகப்புகழ் பெறப் போகிறாய். வெற்றித் திருமகள் உனக்கு வீரக் கழல் அணிவிக்கப் போகிறாள். இமயம் வரையில் செல்ல வேண்டும், விந்தியம் கடந்து வடக்கிலும், மேற்கிலும் சென்று நான் புலிக்கொடியை நாட்ட வேண்டும் என்று கனவு கண்டவாறிருந்தேன். என்னால் இயலாததை நீ நிறைவேற்ற ஆடவல்லான் அருள வேண்டும். கங்கை நீராடி மகிழ வேண்டும் என்று எண்ணியதுண்டு. இனி என்னால் அவற்றை அடைய முடியாது. என் கனவுகளை நீ நிறைவேற்ற வேண்டும். தஞ்சையின் புகழ் தரணியெல்லாம் பரவச் செய்ய வேண்டும்" என்று அவர் கூறிவரும்போது, இராசேந்திரன் அவர் கரங்களை எடுத்துத் தன் விழிகளில் பதித்துக்கொண்டு, "கங்கையில் நீராட வேண்டும், அவ்வளவுதானே? கங்கையையே இங்கு கொண்டுவந்து விடுகிறேன் தந்தையே!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

சக்ரவர்த்தி மெல்லப் புன்முறுவல் பூத்தார். "வடக்கே பலகாதம் செல்லவேண்டும். நீ சக்கரவர்த்தியாகி அங்கெல்லாம் விஜயம் செய்து வெற்றிக் கொடி நாட்ட வேண்டும். நான் அதைக் கண்டு மகிழ வேண்டும்" என்றார்.

"சக்ரவர்த்திகளே! தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவேன். அதற்கான திட்டத்தை உருவாக்கியுள்ளேன். களைப்பாக இருக்கும் தங்களிடம் இப்போது அதைக் கூற விரும்பவில்லை. பிறகு கூறுகிறேன்" என்றார் இராசேந்திரன்.

"மகனே! இன்றைய பிற்பகலில் உனக்கு ஒரு நல்ல செய்திகூற விரும்புகிறேன். இப்போது சென்று இளைப்பாறித் திரும்பி வா!" என்றார். வணங்கிப் புறப்பட எத்தனித்த மகனை அழைத்த இராசராசர், "மகனே! இங்குள்ள அந்தப்புரத்திற்குச் செல்கிறாயா? அல்லது பழையாறைக்குச் செல்கிறாயா?" என்று வினவினார்.

இராசேந்திரன் திகைத்தான். 'பழையாறைக்கா? இப்போது அங்கு என்ன வேலை?'

இராசராசர் மகனை நோக்கிப் புன்முறுவலுடன் சொன்னார் : "பழையாறையில் என்ன பணி இருக்கிறது என்று கேட்க எண்ணுகிறாயா? வீரமாதேவி அங்குதான் இருக்கிறாள்".

இராசேந்திரன் திடுக்கிட்டுக் கேட்டார். "வீரமாதேவி தஞ்சையில் இல்லையா? பழையாறைக்கு ஏன் சென்றாள்? அவள் பயந்தபடியே தஞ்சையில் அவளுக்கு அவமானம் ஏதாவது நேர்ந்துவிட்டதா?".







## 34. நடந்ததைச் சொல், கண்ணே!

"எனக்கு ஏதும் அவமானமில்லை சோழ இளவரசே! இல்லை இல்லை -சோழநாட்டு அரசபிரானே! உங்களுக்குத்தான் அவமானம். தங்களைப் பற்றித்தான் கேலியாகப் பேசினார்கள். விழுந்து விழுந்துச் சிரித்தார்கள்" என்று வீரமாதேவி தழுதழுத்த குரலில் கூறினாள்.

"எனக்கு அவமானமா? என்ன சொல்கிறாள்? இளவரசே - என்று அழைத்து விட்டு அரசே என்கிறாளே?" என்ற இராசேந்திரன், வீரமாதேவியைத் தன் மார்புடன் இறுகத் தழுவிக்கொண்டு, அவள் முதுகை வருடியவாறு கேட்டார்.

"என் கண்ணே! முத்தே! மரகதமே! உன் நெஞ்சத்துள் பெரும் துக்கத்தைப் புதைத்து வைத்துக் கொண்டு என்னிடம் ஏதோ சொல்ல முயல்கிறாய். சொற்கள் வெளிவராது தடுமாறுகின்றன. என்ன நடந்தது என்று சொல். அதைக் கேட்பதற்காகத்தான் தஞ்சையில் இருந்து பழையாறைக்கு விரைந்து வந்தேன். உன்னைப் பிரிந்து ஒரு நாள்கூட என்னால் இருக்க முடியவில்லை. பழையாறைக்குச் செல்வதாக ஒருவரிடமும் - என் தந்தையிடமும் சொல்லாமலேயே வந்தேன். அதிகாரிகள் என்னைக் காண விரைந்து வருவார்கள். அதற்குள் நீ பேசு" என்று

இராசேந்திரன் அன்பும், வாஞ்சையும் கலந்த வார்த்தை களால் அவளைத் தேற்ற முயன்றார்.

பிடிவாதம் பிடிக்கும் குழந்தை தாயின் பிடியினின்று விடுபடத் திமிறிக்கொண்டு அகலவதுபோல், வீரம்மாள் அவர் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

"ஆகா! மலர்க் கொடி போன்ற உன்னிடம் இவ்வளவு பலமா? சக்தியா? என் பிடியையும் எளிதில் உதறித் தள்ளி விட்டாயே!" என்று நகைத்தவாறு அவளை மீண்டும் தன்னருகே இழுக்க முயன்ற அவரிடமிருந்து விலகிச் சிறிது தொலைவு சென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"உனக்கு என்ன நேர்ந்தது தேவி?" என்று சொல்லில் தேனைக் குழைத்துக் கேட்டார் இராசேந்திரன். இது போன்று அவர் அணைப்பை ஒரு பெண்ணும் விலக்கித் தள்ளியதில்லை. அதனால் எழுந்த கோபம், ஏற்பட்ட பட படப்பு, நடுக்கம், ஒரு வேகத்தை அவர் அடக்கிக்கொள்ள முயன்றாலும் அது அவரிடம் பிரதிபலிக்காமல் இருக்க வில்லை.

வீரமாதேவியும் கவனித்துவிட்டாள். இனியும் ஊடல் கூடாது என்ற முடிவுடன் தஞ்சையில் நடைபெற்ற சம்ப வத்தை உடனே சொல்லாமல் கொஞ்சங் கொஞ்சமாக வெளியிட்டு, இளவரசரின் கோபத் தீயை எரியவிட நினைத்தாள்.

"கொள்ளிடக் கரையில் நான் தங்களை வேண்டிக் கொண்டது என்னவென்று நினைவிருக்கிறதா?" வீரமா தேவி கேட்டாள்.

இராசேந்திரன் யோசிப்பவன்போல் நடித்து, "உம் நீதான் சொல்லேன். எனக்கு இப்போதெல்லாம் மறதி அதிகம்" என்றார், அவள் வளையல்களைத் திருத்திய வாறு. ஆனால் அவள் விலகிக் கொண்டாள்.

"மதுரைக்குத் தங்களுடன் வருவதாகக் கூறினேன். அங்கே உங்கள் புதல்வரால் எனக்கு ஏதாவது தொல்லை ஏற்படும் என்று நினைத்தீர்கள். ஆனால், தஞ்சையில் நான் எதிர்பார்த்ததுபோல் நடந்துவிட்டது". வீரமாதேவி உதடுகளில் குறும்புத்தனம் மிளிரக் கூறினாள்



"சுற்றி வளைக்காமல் சொல் வீரம்மா. நேரமாகிக் கொண்டிருக்கிறது. கொள்ளிடக் கரையில் நீ என்ன சொன்னாய்?" இராசேந்திரருக்குத் துடிப்பும் ஆர்வமும் மேலிட்டன.

"இந்தப் பழையாறை என் மனத்தில் ஒரு வெறுப்பை ஏற்படுத்திவிட்டது. தஞ்சை மாநகரிலும் அதுபோல் நேர்ந்துவிடக் கூடும் என்று சொன்னேன். பழையாறையில் எனக்கு என்ன நேர்ந்தது. ஏன் எனக்கு வெறுப்பு ஏற் பட்டது என்று கேட்டீர்களா?"

"கேட்க எனக்கு நேரமில்லையே தேவி". அவர் நெருங்கினார். அவள் சற்று விலகினாள்.

"பழையாறையில் முதல் நாளே என்னை வதைப்படுத்தி னார்கள் தெரியுமா?"

"ஏதோ நீ சொன்னதாக நினைவு".

"தங்கள் திருக் குமாரத்தி அங்கு எனக்கு ஆதரவு தர வில்லை என்றால் நான் மாளிகையில் இருந்து ஓடியே போயிருப்பேன். அரச குடும்பத்து உறவே வேண்டாம் என்று உதறியிருப்பேன்".

"சீக்கிரமாகச் சொல் தேவி! உன் மனம் புண்படுமாறு யார் நடந்து கொண்டார்கள்? சொல் தேவி!"

"சொன்னால் என்ன செய்வீர்களாம்?"

"ஏழு கடல் கடந்த ஒரு தீவில் அவர்களைத் தனியே தவிக்கவிட்டு வருமாறு கட்டளையிடுவேன்".

"உங்களால் அவ்வாறு செய்ய முடியாது. அவர்களை அப்படிச் செய்வதைவிட என்னை ஏழு கடலுக்கு அப்பால் தன்னந்தனியே தீவில் இருக்க விடுங்கள்".

"அது இயலாது வீரம்மா! நான் சோழ நாட்டை விட்டு ஏழு கடலுக்கு அப்பால் வர முடியாது. கடல்களில் பல நாடுகளுக்கு இளம் பிராயத்திலேயே விஜயம் செய்து விட்டேன். இனி நான் அங்கெல்லாம் போகப்போவது இல்லை. உம் நடந்ததைச் சொல்லு..."

"இளவரசர் அவர்களே! நடனமாடுவது என் தொழிலா? சொல்லுங்கள். தஞ்சையிலும், பழையாறையிலும் தங்கள் தந்தை, சோழ சக்கரவர்த்திகள், நடனமாடும் பெண் களைக் குடியேற்றிக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்கள் கோயிலுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு

விட்டார்கள். நான் இந்தக் கோயிலுக்குத்தானே என்னை அர்ப்பணித்துக் கொண்டேன்?" என்று இளவரசரைச் சுட்டிக் காட்டியபோது, இராசேந்திரன் நெகிழ்ந்துபோய், அவள் கரத்தைப் பற்ற முயன்றார். வீரம்மாள் மேலும் பின்னுக்கு நகர்ந்தாள்.

"ஆமாம் அதில் என்ன தேவி? உம்... சொல்லு" என்றார் இராசேந்திரன்.

"இளவரசர் அவர்களே! நாட்டியப் பெண்ணாக என்னைக் கருதி நினைத்த போதெல்லாம் என்னை ஆடுமாறு கட்டாயப்படுத்தினார்கள்".

இராசேந்திரன் அது கேட்டு நகைத்தார். அருகே உள்ள மஞ்சத்தில் அமர்ந்து, அவளைத் தன் அருகே அமரச் சொல்லி சைகை செய்தார். வீரமாதேவி உட்காராமல் நின்று கொண்டே: "நான் கேட்டதற்கு என்ன மறுமொழி? சொல்லுங்கள்?"

"வீரமாதேவி! நீ இன்னும் வீரம்மாளாக, சிறு குழந்தையாகவே இருக்கிறாய். உன்னை ஆடச் சொல்லிக் கட்டாயப்படுத்தியவர்கள் யார்?" - இராசேந்திரன் நகைத்தவாறு கேட்டுக்கொண்டே, தாவி அவள் கரம் பிடித்திழுத்துத் தன் மடியில் உட்காரச் செய்ய முயன்றார்.

"ஓ! இளமை எனும் அஸ்திரத்தால் முதிய இளவரசரை வயப்படுத்திவிட்டாள்" என்று அவர்கள் சொல்வது போல்தான் நீங்களும் செய்ய முயல்கிறீர்கள். ஒரு முறை தங்கள் பிரியமான மனைவியருள் ஒருத்தி சொன்னாள்... 'எனக்கெல்லாம் நடனம் தெரியாது. இசை தெரியாது. அந்தத் தகுதியில்லாததால் எங்களை அவர் தள்ளிவிடவில்லை. எங்களை மணந்ததும் அதற்காக இல்லை. கொள்ளிடக் கரை மோகினி நீ. அவர் எதிரே ஆடியே அவரை மயக்கிவிட்டாய்' என்றெல்லாம் என்னிடம் கூறினாள். நீங்களே சொல்லுங்கள், இளவரசே! நானா உங்களை மயக்கினேன்? முதன் முதலில் சந்தித்தபோது உங்கள் மனைவியாகி விடுவேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. இப்போதுகூட நான் உங்களுடன் அவ்வாறு பழகவில்லை".

இராசேந்திரன் பெரிதாக நகைத்தார்! "ஓ! பெண்ணே! இப்படிச் சொன்னவர் யார்? உன்னைப் பார்த்துப் பொறாமையை மனத்தில் வேகவைத்து, தாபம் தாங்காமல் அதை உமிழ்ந்தவர் யார்?"



"எனக்குப் பெயர் தெரியாது சுவாமி! அங்குள்ளவர்கள் எல்லாரும் வயதானவர்கள். பெரிய பெரிய சிற்றரசர்களின் புதல்விகள். எல்லாரும் இளவரசிகள்! எத்தனை இளவரசிகள்! இளவரசிகள் கூட்டத்தில் நான் அகப்பட்டுக் கொள்ளப் போகிறேன் என்பதை நான் அறிந்திருந்தால்..." என்று கூறி நிறுத்திய வீரம்மாளின் கன்னத்தை மெல்லத் திருப்பி, அவள் சோகத்தையும், வேதனையையும் மாற்ற விரும்பி, "என்ன செய்திருப்பாய்?" என்று கேட்டார்.

"தங்களைச் சந்தித்திருக்கவே மாட்டேன்".

"ஓ! அதனால்தான் தஞ்சையினின்று இங்கே வந்துவிட்டாயா?"

"முதலில் பழையாறையைப் பற்றிப் பேசுவோம். என்னைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே, பழையாறை அந்தப்புரத்திற்கு வரச் செய்தீர்கள். அப்பொழுது தங்களை மணந்தவர்கள் எல்லாம் என்னை நாட்டியத்தைத் தொழிலாகக் கொண்டவள் என்றே நினைத்துவிட்டார்கள். அப்பப்பா! அவர்கள் ஏசியதும், பேசியதும், எள்ளி நகையாடியதும், கைகொட்டிச் சிரித்ததும், இருபொருள் ஏற்படப் பேசியதும் என்னால் வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை. ஐயோ, காது செவிடாகிவிடக் கூடாதா என்று எண்ணினேன். நடனக்காரி என்று அவர்கள் நினைத்திருந்த நான், தங்கள் கரம் பற்றியதை அறிந்தவுடன் அவர்கள் மனத்தில் எழுந்தது பொறாமையா, சீற்றமா என்பது எனக்கும் புரியவில்லை. அவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள் என்பது உண்மை. அவர்களுக்குப் போட்டியாக நான் வந்து விட்டேன் என்று நினைத்து விட்டார்கள்".

இராசேந்திரன் இப்போது குறுக்கிட்டுப் பேசினார். "வீரமாதேவி! அவர்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துவிட்டுப் போகட்டும். அவர்களுக்குக் கொடுக்காத மகத்தான இடத்தை உனக்கு அளித்திருக்கிறேன். அவர்கள் பேசியதை மறந்துவிடு!" என்றார்.

இப்பொழுது அவள், இராசேந்திரன் அருகே சற்று இடைவெளிவிட்டு அமர்ந்தாள். "ஆம், பழையாறை நிகழ்ச்சியை நானும் அப்போதே மறந்துதான் விட்டேன். மேலும் அவர்களைச் சந்திப்பதையும் தவிர்த்தேன்.

ஆனால் என்னை நீங்கள் தஞ்சைக்குச் செல்லப் பணித்த வுடன் என் மனத்தில் கலக்கம் ஏற்பட்டது. அதற்கு ஏற்ற படியே தஞ்சை மாளிகையில் சம்பவங்கள் நடைபெற்றன" என்று வீரமாதேவி தஞ்சை அனுபவங்களை விவரித்தாள்.

தஞ்சை மாளிகையில் இராசராச சோழ தேவர் எதிரே எல்லா இளவரசிகளும் கூடியிருந்தனர். பட்டத்து அரசி பஞ்சவன்மாதேவி அமர்ந்திருந்தாள். முதுமையின் காரணமாக அவள் அருகே இருவர் உதவிக்கு நிற்க வேண்டியிருந்தது. அவள் மற்ற இளவரசிகளை அழைத்து அவர்கள் நலம் கேட்டறிந்து அவர்களுக்கும் பரிசுகள் வழங்கினாள். விரைவில் நடைபெறவிருக்கும் விழா நிமித்தமாக அந்தப்பரிசு.

இன்னும் சில நாள்களில் இராசேந்திரனுக்கு மகுடாபி ஷேகம் என்று அரசி தெரிவித்தாள். சக்கரவர்த்தி ஜீவிய வந்தராக இருக்கும்போதே தன் மகனுக்கு மகுடம் சூட்டி, சோழ சக்கரவர்த்தியாக்கி அவரை அரியணையில் அமரவைப்பது. இதுவரை சோழர்குலத்தில் இல்லாத புதுமை என்று பேசிக் கொண்டனர்.

ஓர் ஓரமாக அடக்கமாக நின்று கொண்டிருந்த வீரமா தேவியை அருகே வருமாறு சைகை செய்தாள் பேரரசி.

இராசஇராச தேவர் வீரமாதேவியை உற்று நோக்கி னார். அடி முதல் முடிவரை அணு அணுவாக விழுங்கி விடுபவரைப் போல் பார்த்தார்.

"இவள்தான் இராசேந்திரன் மணம்புரிந்து கொண்ட இளம் மான்" என்று அரசி தெரிவித்தாள். அங்கிருந்த வர்கள் கலீரெனச் சிரித்தனர். இராசராசன், தனக்குத் தெரியும் என்பதுபோல் தலையசைந்தார். முதிய வயதிலும் விழிகள் வீசும் ஒளி, பார்வையின் கூர்மையை உறுதிப்படுத்திற்று.

"எந்த நாட்டு இளவரசி என்று கேட்கவில்லையே?" என்றாள் இராசேந்திரனின் இரண்டாவது பட்டத்தரசி. அவள் உதடுகளில் குறும்புத்தனம். இராசராசன் அவளைக் கடுமையாகப் பார்த்தார்.

"அப்படி இன்னொருதரம் பேசக் கூடாது. வீரமா தேவியை இராசேந்திரன் மிகவும் விரும்பி மணந்திருக் கிறான். அவனுடைய கலை உணர்வை வளர்த்து



ஒத்துழைக்கக் கூடியவள் வீரமாதேவிதான். அவள் நடனக் கலையில் வல்லவள். உங்களில் ஒருவருக்காவது நாட்டியக் கலை தெரியுமா? அல்லது வேறு கலையில் புலமை, ரசனை உண்டா? வீரமாதேவி ஒரு நாட்டிய அரசி" என்றார். பிறகு வீரமாதேவியை நோக்கி, "வீரமா தேவி! உன் குடும்பத்தவர் இந்த நாட்டிற்குச் செய்திருக் கும் சேவையை நான் அறிவேன். சோழநாட்டிற்கு ஏற்பட்டுள்ள பல வெற்றிகளுக்கு உன் உடன்பிறந்தோனின் பங்கு மகத்தானது என்பதையும் அறிவேன்" என்று புகழ்ந்தார்.



சிரித்துப் பேசியவர்கள் சிரந்தாழ்த்திக் கொண்டனர். அங்கே ஏற்பட்ட மௌனம், ஒவ்வொருவர் உள்ளத்திலும் கடுமையான பொறாமைத் தீயைத் தூண்டியது. "பெண்ணே, வீரம்மா! சுந்தரமூர்த்தி நாயனார் பாடலுக்கு நீ மிகவும் சிறப்பாக ஆடுவதாக அறிந்தேன். அதை நான் இன்று இங்கு கண்டு ஆனந்திக்கலாமா?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.





கால் சலங்கை கொண்டு வரப்பட்டது. வீரமாதேவி ஆடினாள். இளம் மான் என்று சோழ அரசி அறிமுகப் படுத்தினாளே அந்த உருவகச் சொல்லை மெய்ப்படுத்தி ஆடினாள்.

**வீ**ரமாதேவி ஆடிய நடனம் இராசராசனை மெய் மறக்கச் செய்தது. விழிகளை மூடிக்கொண்டு நடனத்தை ரசித்தார். நடனம் முடிந்த பிறகு, அரசியிடம் ஏதோ தெரிவித்தார்.

சோழ சக்கரவர்த்தி இராசராசனின் பட்டத்து இளவரசி பஞ்சவன்மாதேவி வீரமாதேவியை அருகே அழைத்தாள். அவளை மெல்ல அணைத்துக் கொண்டு, "வீரமாதேவி! சோழர் குல தெய்வம் ஆடவல்லான் உனக்குப் பூரண அருளைத் தந்துள்ளான். என்மகன் இராசேந்திரன் மனம் அறிந்து நடந்து கொள். இளம் வயதிலிருந்தே அவன் கலை ரசிகன். அறிஞர்களுடன் பழகுவான். இசை என்றால் அவனுக்கு உயிர். நடனம் அவனுக்குக் கைவந்த கலை. உன்னை அவன் விரும்பி ஏற்றதே நாட்டியக்கலை மீதுள்ள ஆர்வங் காரணமாக. ஆடவல்லான் அருளால் நாட்டில் போர் என்ற பேச்சிற்கு இனி இடமில்லை. சோழ நாட்டின் உயர்வே அவன் மூச்சு. இனி வருங்காலத்தை அமைதியாக அவன் கழிக்கும்போது கலை ஆர்வமுள்ள, கலை இதயமுள்ள நீதான் அவனுக்குத் துணையாக இருக்க வேண்டும். இதோ இந்தப் பரிசை உனக்கு அணிவிக்கிறேன்" என்று கூறி, தன் கழுத்தில் திகழ்ந்த பொற்பதக்கம் கோக்கப்பட்ட சங்கிலியைக் கழற்றி அவளுக்கு அணிவித்தாள்.

கணநேரத்தில் நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சியைக் கண்டு அங்கிருந்த இளவரசிகள் அனைவரும் திகைத்தனர். ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். பெரு மூச்சுவிட்டனர். அவர்கள் மனத்தில் முன்பே இருந்த பொறாமைத் தணல் ஊதி விடப்பட்டது.

வீரமாதேவி அரசரையும், அரசியையும் குனிந்து வணங்கி எழுந்தாள். மார்பிலே உறவாடிய பொற்பதக்கத்தில் வேங்கையின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. வேங்கையின் அருகே ஒரு குத்துவிளக்கு. வீரத்தையும், ஞானத்தையும் குறிக்கின்றனவோ!

"ஈழத்தை வென்று வந்தவுடன், என் தந்தை சக்கரவர்த்தி எனக்கு அளித்த பரிசு. வேங்கையின் மகனி வெம்மை வேங்கைக்கு உறுதுணையாக இருக்கும் உனக்கு என் அன்பின் அடையாளம். வீரமாதேவி! நீ கேள்விப் பட்டிருப்பாய்; இன்னும் சில நாள்களில், இராசேந்திரனுக்கு மகுடம் அணிவிக்கும் விழா நடக்கப் போகிறது. அன்று முதல் சோழ சக்கவரர்த்தி - பரகேசரி இராசேந்திரன் என்று உலகம் அவனை அழைக்கப் போகிறது.

"பட்டத்து அரசியாக உன்னை என்மகன் ஏற்கிறானோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அவனுக்கு என்றுமே உறுதுணையாக இருக்கும் தகுதி உனக்கு இருக்கிறது. அந்த நிலையை என்றும் நீ காப்பாற்றிக் கொள்ள வேண்டும்" என்றாள்.

அவள் மெதுவாகப் பேசினாள். சக்கரவர்த்தி இராசராசன் அதை ஆமோதித்தார்.

இரவு இராசராசன் படுத்திருக்கும்போது பட்டத்து அரசியிடம் சொன்னார் : "வீரமாதேவியின் கடமையை நீ தெளிவாக எடுத்துச் சொன்னாய். அரச குடும்பத்தில் அவள் மிகவும் இளையவள். இந்த சூழ்நிலை அவளுக்குப் புதியது. அவள் முகத்தில் பயம் படர்ந்திருக்கிறது. இராசேந்திரன் அவளை மிகவும் நேசிக்கிறான் என்று எனக்குத் தெரியும். வீரமாதேவிக்கு என்று ஒரு மாளிகை கட்டித்தர ஏற்பாடு செய். தஞ்சை அரண்மனையில் இருந்து இராசேந்திரன் ஆட்சி நடத்தப் போகிறான். அதனால் தஞ்சையில்தான் மாளிகை அமையவேண்டும்.

"என் முப்பாட்டனார், அவருக்குப் பாட்டனார், சோழர் குலத்தின் பிதாமகரான விஜயாலயருக்கு இல்லாத ஓர் அதிர்ஷ்டம் எனக்கு இருக்கிறது. என் அருமைத் தந்தை நான் பெரும் புகழுடன் சோழ அரியணையில் வீற்றிருந்து ராஜ்யபரிபாலனம் செய்ததைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அவருடைய தந்தையும் அவ்வாறே. என் கண்ணெதிரே என் மகன் சிறப்பாக ஆட்சி நடத்துவதைப் பார்க்கப் போகிறேன். அவன் பெருமை பட்டயங்களில் பொறிக்கப்படப் போவதைப் பார்க்கப்போகிறேன். அவன் திறமையைப் போற்றிப் புலவர்கள் பாடுவதைக் கேட்கப் போகிறேன்.



"என் இதயத்தில் நீண்ட நெடுங்காலமாக ஓர் ஆசை உண்டு. செழுநீர் புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனின் சிரசிலிருந்து' வடக்கே பாய்ந்து வரும் புனிதக் கங்கையில் நீராட வேண்டும் என்பது என் நீண்டநாள் ஆசை. இராசேந்திரனிடம் என் விருப்பத்தைத் தெரிவித்து விட்டேன். அவனுடைய மகுடாபிடேகத்திற்குக் கங்கை நீரைக் கொண்டு வரவேண்டும்".

இராசராசர் தொடர்ந்து இவ்வாறு பேசிப் பல மாதங்களாகிவிட்டன. இடைவிடாது பேசியதால் அவர் மிகவும் அயர்ந்துவிட்டார். விழிகளை மெல்ல மூடி ஓய்வு எடுத்துக் கொள்ள முயன்றார்.

அந்தப்புரத்தில் இளவரசிகளுக்கு உறக்கம் கொள்ள வில்லை. மறுநாள் அவர்கள் ஒருவரோடொருவர் சந்திக்கும்போது வீரமாதேவிக்கு அரசி அளித்த பதக்கத்தைப் பற்றியே பேசிக் கொண்டனர்.

"நான் எதிர்பார்த்தபடியே நடந்து விட்டது".

"வீரமாதேவி ஏதோ மாயமந்திரம் செய்து விட்டாள்".

"ஹூம்!நம்மிடம் அந்த மாயசக்தி செல்லாது".

"இளவரசருக்கு மகுடாபிஷேகமாமே!"

"யார் பட்டத்தரசி?"

"அந்த கொள்ளிடக்கரை மோகினியாகத்தானிருக்கும்".

"நான் விட்டுக் கொடுப்பேனா!" ...

இதயத்தில் எழுந்த பொறாமை வார்த்தைகளாக வெடித்தன.

வீரமாதேவியிடம் அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சீறினர்.

பகல் உணவு உண்டபிறகு அவளை அழைத்து ஆடுமாறு கட்டளையிட்டனர்.

"ஐயோ பெண்ணே! மோகம் முப்பது நாள் என்று, உன்னை இளவரசர் வெறுத்து நாட்டியப் பெண்கள் வாழும் பகுதியில் குடியேற்றி விடலாம்".

"அதனால் நீ அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துவிடு".

"எங்களைப் போன்று இந்த மாளிகையில் என்றும் வாழலாம் என்று நினைத்து விடாதே" என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லிச் சொல்லி வேதனைப் படுத்தினர்.

ஒருநாள் வீரமாதேவியிடம் அவர்கள் சொன்னார்கள் : "அடி அறியாப் பெண்ணே! இளவரசரை மயக்கி ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டு சோழ மகுடத்துக்கு மற்றொரு வாரிசை உண்டாக்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்காதே!"

இந்த வார்த்தைகள் வீரமாதேவியைக் கலங்க வைத்தன. இராசேந்திரனிடம் இதைச் சொல்லும்போது வீரமாதேவி குலுங்கிக் குலுங்கி அழுதுவிட்டாள்.

இராசேந்திரன் அவள் விழிகளைத் துடைத்து, அவள் முதுகைத் தடவி ஆறுதல் கூறினார்.

வீரமாதேவி அவர் மடியிலிருந்து விலகி எழுந்து, "சோழ நாட்டு மாமன்னராகப் போகும் என் இதய அரசரே! அவர்கள் பயமுறுத்தலுக்கு நான் அஞ்சப்போவதில்லை. இதோ பாருங்கள் அரசியார் அளித்த பதக்கம். இதில் உள்ள வேங்கைதான் நீங்கள். நான்தான் அருகே உள்ள தீபம். உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாது" என்றாள்.

இராசேந்திரன் சிறு குழந்தைபோல் கைகொட்டிப் பாராட்டி, "இப்போதுதான் நீ வீரமாதேவி! புறப்படு, புறப்படு! உடனே தஞ்சை செல்வோம். அங்குள்ள பெரிய கோயிலைக் காண்போம். அந்தக் கோயிலை நீ நுணுக்கமாகப் பார்க்க வேண்டும். பார்த்தபிறகு உன்னிடம் சில கேள்விகள் கேட்பேன். அதற்கு விடைகூற ஆயத்தமாக இருக்க வேண்டும்" என்றார்.

"விசித்திரமாக இருக்கிறதே! கோயிலைப் பார்த்து விட்டுக் கேள்வியா?" வீரமாதேவியின் முகத்தில் புதிய மாறுதல் ஏற்பட்டது.

"ஆமாம். அங்குள்ள சித்திரங்களைப் பார்த்துவிட்டு, நடனச் சிற்பங்களைப் பார்த்துவிட்டு என் கேள்விகளுக்குத் தக்க மறுமொழி கூறவேண்டும்" என்றார் இராசேந்திரன்.

நடனத் தோற்றம் என்றவுடன் வீரமாதேவியிடம் புத்துணர்வு தோன்றியது. அது புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.





# 35. வீரமாதேவியின் சபதம்!

இராசேந்திர சோழ தேவருக்கென்று தனியே அமைந்திருந்த திருமாளிகையின் மேல்மாடத்து விசாலமான கூடத்தில் வீரமாதேவி மஞ்சத்தில் அமைதியாக அமர்ந்திருந்தாள். செண்பகக் கொடியொன்று, வெளிமுற்றத்தில் படர்ந்திருந்தது. அதில் பூத்திருந்த மலர்கள் மெல்லிய நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. வானத்தில் பஞ்சமி சந்திரன் தென்மேற்கே அளவோடு தண்ணிலவைப் பொழிந்து கொண்டிருந்தது.

இதுபோன்ற அமைதியான நேரம் அவளுக்குக் கிடைப்பது அரிது. அதிலும் சோழ மாளிகையில் அவளுக்கு இப்போதெல்லாம் அமைதி கிடைப்பது அரிதாக இருந்தது. இளவரசிகளின் உறவினர்கள், அதிகாரிகளின் உறவினர்கள் என்று அவளைக் காண வந்து சிறிதுநேரம் அளவளாவிச் சென்றனர். அவளுடன் பேசுவதைவிட அவளைப் பாதாதிகேசம் ஆராய்வதை முக்கியமாகக் கொண்டிருந்தனர்.

அவர்கள் வரும் நோக்கத்தை அவள் புரிந்து கொள்வாள். சிலருடன் மனம் திறந்து பேசுவதுபோல் நடிப்பாள். அவர்களிடமிருந்து உள்மனக் கிடக்கையைப் புரிந்து கொள்வாள். சிலருடன் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே பேசுவாள். சிலரைப் பார்க்க விரும்பாமல் பணிப் பெண்ணிடம் சொல்லி அனுப்பிவிடுவாள். போகும்போது

அவர்கள் இவளை மகா கர்வி என்று வசைபாடிச் செல்வர்.

அன்று சோழநாட்டுப் பேரரசி பஞ்சவன்மாதேவி திடீரென அழைத்தாள். அரசியின் எதிரே போய் நின்றவளிடம் அரசி உடனே பேசவில்லை. அங்கிருந்த வேறு யாருடனோ பேசிக்கொண்டிருந்தாள். திடீரென்று இவள் பக்கம் திரும்பி, "ஓ! வீரமாதேவியா! இப்போது தான் வந்தாயா? உன்னுடன் இராசேந்திரன் வரவில்லையா?" என்று கேட்டுக் கூர்ந்து நோக்கினாள்.

வீரமாதேவி தலைகுனிந்தவாறு மெல்ல நகைத்தாள்.

"நான் அழைத்துதான் அவர் இங்கு வரவேண்டுமா?" என்று மெல்லக் கேட்டாள்.

பேரரசிக்கு இப்போது சரிவர வார்த்தைகள் செவியில் வீழ்வதில்லை. முதுமையின் பிடியில் முழுமையாகச் சிக்கியிருந்தாள். "என்னைக் காணவருவதை விட உன்னிடம் அதிக நேரம் தங்கியிருக்கவே அவன் இப்போது விரும்புகிறான். அவன் இன்னும் தன்னை இளவரசன் என்றே நினைத்திருக்கிறான்! அவன் இந்த நாட்டின் அரசனாகப் போகிறானடீ பெண்ணே!" என்றாள். அதைச் சொல்லும்போது வீரமா தேவியைப் பார்க்காமல் மற்றவர்களைப் பார்த்தபடி பேசினாள்.

வீரமாதேவிக்கு நாணமாகவும் இருந்தது. அரசி தன்மீது ஏதோ குற்றம் சுமத்த முயல்வதாகவும் தோன்றியது. சிறிது கோபமும் ஏற்பட்டது.

சோழநாட்டின் இளவரசர்; மாவீரர். அவர் என்னுடன் அதிக நேரம் தங்குவதாக அரசி சொல்கிறார். தன் அன்புக்கு உரிய திருமகனாக அவர் இருக்கலாம்; பாச உரிமையில் மகனைக் குறைவாகப் பேசலாமா? ஒரு வேளை என்னைக் குறை கூறும் நோக்கத்துடன் அப்படிப் பேசுகிறார்களா? இதுவரையில் அவர் அருகே அமர்ந்து பேசிய நேரம் மிகக்குறைவு என்பதையும், அரசி நினைப்பதுபோல் தன்னுடனேயே அவர் தங்கவில்லை என்பதையும் அவள் எப்படிச் சொல்வாள்?

அவள் பேசியிருப்பாள்: 'என்னுடனேயே அவர் இருந்துவிடக் கூடாதா என்று; ஆசையுடன் நாள்தோறும்



காத்திருக்கிறேன். ஒருநாள் என்னருகே துயில்வாரா என்று ஏங்குகிறேன்' என்று சொல்லிவிடத் துடித்தாள். சோழநாட்டின் பேரரசியிடம் இவ்வாறு வாதாடலாமா?

வீரமாதேவி மௌனமாக நின்றாள். குனிந்த தலையை நிமிர்த்தாமல் நின்றுகொண்டிருந்தாள். துடிக்கும் அவள் விரல்கள் இதய உணர்வைப் பிரதிபலித்தன. சேலைத் தலைப்பின் நுனியை அவை படாதபாடு படுத்தின; முறுக்கின. இழுத்து முடிச்சிட்டு அவிழ்த்தன.

"வீரம்மா..!" அரசியின் குரலில் திடீரென்று பரிவு பிரதிபலித்தது.

தேவநேயப் பாவாணர்
சென்னை - 600 002

"நீ முன்பு பெரிய கோயிலுக்குப் போயிருக்கிறாயா?" என்று கேட்டாள்.

வீரமாதேவி குனிந்த தலை நிமிரவில்லை. இல்லை என்பதற்கு அடையாளமாக வீரமாதேவி தலையசைத்தாள்.

"பெரிய கோயிலை இப்போதுதான் முதன் முதலில் நீ பார்க்கிறாயா?"

433425/610545

வீரமாதேவி மேலும் கீழுமாகத் தலையசைத்தாள்.

"பெரிய கோயிலுக்குள் நுழைந்தவுடன் நீ முதலில் எதைக் கண்டாய்?"

வீரமாதேவி இப்போது மெல்லத் தலை நிமிர்ந்தாள்.

மலர்ந்த முகத்துடன் வீரமாதேவி பேசினாள்.

"அம்மா!" என்றழைத்தாள்.

எப்படி அழைப்பது என்று இவ்வளவு நேரம் யோசித்தாள். "சக்கரவர்த்தினி", "பேரரசியார் அவர்களே!", "ராஜமாதா அவர்களே", "பெரிய பிராட்டியார் அவர்களே!" இப்படி அழைக்கலாம் என்று அவளுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார்கள். ஆனால் அவள் நெஞ்சிலிருந்து வெளிவந்த வார்த்தையோ...

"அம்மா...!"

பஞ்சவன்மாதேவியின் மெய் சிலிர்த்தது. தன்னை அம்மா என்று அழைக்கவும் ஓர் அன்புள்ளம் இருக்கிறதே! மக்கட்செல்வம் பெறாத அவளுக்கு அந்தக் குரல் இதயத்தை வருடியது.

தன் வயிற்றில் பிறக்காவிடினும் தன்னை இராசேந்திரன் 'அம்மா' என்று எப்போதாவது அழைப்பான்

அவனைப் பிஞ்சுப் பருவத்திலிருந்து வளர்த்த இளைய பிராட்டியாரைத்தான் அம்மா என்று அவன் அழைப்பான்.

சோழ நாட்டுப் பேரரசியான தன்னை அம்மா என்றழைக்கிறாள் வீரமாதேவி!

அன்புள்ளம் பொங்கி நிற்கும் தன்மையுடைய அவள்மீது மெல்ல மெல்ல வெறுப்பை வளர்க்கப் பலர் முயல்கிறார்கள். அரச குடும்பத்தைச் சேர்ந்தவள் அவளல்லள் என்று கூறுகிறார்கள். அழகையும், இளமையையும், கலைத் திறமையையும் கொண்டு இராசேந்திரனை மயக்கி விட்டாள் என்கிறார்கள். இன்னும் என்னவெல்லாமோ சொல்கிறார்கள். எங்களுக்குச் சமமான அந்தஸ்தை அவளுக்கு அளிக்காதீர்கள் என்று வேண்டுகிறார்கள்.

இவளால் சோழ அரியணைக்குப் பிற்காலத்தில் பெரும் போட்டி ஏற்படப் போகிறது என்று ஆதாரத்தோடு எச்சரிக்கிறார்கள்.

பழுவேட்டரையர் குலத்தில் உதித்த தன்னைப் போன்ற பஞ்சவன்மாதேவி என்று பெயர் சூடிக்கொண்டுள்ள இராசேந்திரனை மணந்த மூத்த இளவரசி மெல்ல செவிக்கருகே சொல்கிறாள்: "பிராட்டியார் அவர்களே! எனக்கு புரியமுடியாத பயம் சிறிது நாள்களாக ஏற்படுகிறது. நம் இளவரசருக்கு முடிசூட்டு வைபவத்தின்போது சமமாக அரியணையில் வீரமாதேவியைத் தங்கள் திருப்புதல்வர் அமர வைத்துவிடுவாரோ என்ற அச்சம் ஏற்படுகிறது".

இதைக்கேட்டு அரசியும் திடுக்கிட்டாள்.

"வீரமாதேவியாம் வீரமாதேவி! நேற்று வரை வீரம்மாள் இன்று வீரமாதேவி!" என்று அவர்கள் பேசிக்கொள்வது அரசியின் செவியில் வீழ்ந்ததுண்டு.

பெருவுடையார்க் கோயிலில் முதன் முதலில் எதைப் பார்த்தாய் என்ற கேள்விக்கு வீரமாதேவி சொன்ன பதில் அரசியாரைத் திகைக்க வைத்தது. அவள் விவரிக்கத் தொடங்கினாள்.

"சிதம்பரத்தையும் சீர்காழியையும் தவிர வேறு கோயில்களை நான் பார்த்ததில்லை. கோயிலைச் சுற்றியுள்ள அகழியைக் கடந்தேன். கோயிலுக்கு மூன்று திருவாயில்கள் இருந்தன. முதல் திருவாயிலுக்குக் கேரளாந்தகன் திரு



வாயில் என்று பெயராம். சேரநாட்டவர்களுக்கு இமயன் போன்றவர் நமது பேரரசர் என்பதைத் தெரிவிக்கிறது அந்தப் பெயர் என்றும் சொன்னார்கள். இரண்டாவது திருவாயில் நம் பேரரசர் பெயரில் அமைந்திருக்கிறது. அடுத்துள்ள திருவாயிலைத் தாண்டியவுடனே அதற்கு என்ன பெயர் என்று கேட்கவில்லை - நான் கண்டது - தலை நிமிர்த்திக் கம்பீரமாக நான் பார்த்தது - மேரு போன்று உயர்ந்த விமானம். வேறு எந்த சிற்பமோ, மண்டபமோ என் விழிகளில் படவில்லை".

வீரமாதேவி தன்னை மறந்து கூறிவருவதைக் கேட்ட அரசியாருக்கு வீரமாதேவியின் மீது மதிப்பு மெல்ல மெல்ல உயர்ந்தது.

வீரமாதேவி, தன்னை மறந்து தான் கண்ட பெருவுடையார்க் கோயிலின் ஒவ்வொரு பகுதியாக எடுத்துரைத்தாள்.

பெரிய கோயிலிலுள்ள ஏழு வாயில்களையும் அவை ஒவ்வொன்றின் இருபுறத்திலும் கம்பீரமாகத் திகழும் துவாரபாலகர்களையும் பற்றி விவரித்தாள்

"துவாரபாலகர்களைப் பார்த்துப் பிரமித்துப் போனேனம்மா! நம் இளவரசரின் திண்தோள்களைப் போல் அகன்ற தோள்கள். அப்பப்பா, அந்தச் சிற்பத்தைப் படைத்தவர் யாரம்மா?

"கருவறையில் உள்ள மாபெரும் லிங்கத்தைக் கண்டவுடன் என்னை மறந்தேன் அம்மா! பெருவுடையாரை மெய்மறந்து வணங்கி நின்றேன். மேல் தளத்திற்குச் சென்றேன். ஆகா, அங்கேயே வாழ்நாளைக் கழித்துவிடலாம் என்ற ஆவல் ஏற்பட்டது. அம்மா! நான் அங்கேயே தங்கியிருக்க என்னை அனுமதிப்பீர்களா? அந்தப்புரமும், பணியாட்களும், இளவரசிகளும் இல்லாத அந்த தேவசபையில் நான் தங்கியிருந்து ஒவ்வொரு சிற்பமாகக் கண்டு, அதன் நுணுக்கங்களை ஆராய்ந்து - ஆ! வாழ்நாளே போதாது அம்மா!" வீரமாதேவி விழிகளை மூடியவாறு தன்னை மறந்து பெருவுடையார்க் கோயிலில் இருப்பது போன்ற நினைவுடன் விவரித்துக் கொண்டே போனாள்.

"பரத முனிவரின் நாட்டியக் கலையை எனக்குக் கற்றுத்தந்த நாட்டிய ஆசிரியர், இறைவன் ஆடிய பலவித நாட்டியங்களைப் பற்றி விளக்கியிருக்கிறார். அவற்றைப்

பயிலவேண்டும், ஆராய வேண்டும் என்ற ஆவல் எனக்கு அப்போதே ஏற்பட்டுவிட்டது. மூங்கில் துறையிலிருந்து, தில்லையம்பலம் செல்லும் நான் அங்கே காலைத் தூக்கி நின்று ஆடும் நடராசரைக் காணும்போது, சிவபெருமானின் மற்ற தாண்டவங்களையும் காண ஆவல் கொள்வேன். பெரிய கோயிலில் மேல்தளத்தில் சிவனின் நடனத்தோற்றங்களைக் கண்டேன். கண்டறியாதன கண்டேன். இறைவன் அங்கே அபிநயித்துக் காட்டுகிறார். நாலு திருக்கரங்களுடன் ஆடுகிறார். அவருடன் மான் ஆடுகிறது; மழுவாடுகிறது. அம்மா! அந்த நடன அரங்கிலே சிவபெருமான் ஆடும் அதிசயத்தைக் கண்டு ஆனந்தித்த வண்ணமிருக்க வேண்டும். மீண்டும் மீண்டும் அவற்றைக் கண்டு மகிழ வேண்டுமம்மா!" வீரமாதேவி பரவசமடைந்தவள் போல் பேசினாள்.

"வீரமாதேவி! அந்தச் சிற்பங்களைப் படைத்தவர் யார் என்று தெரியுமா?" -சோழ அரசி பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

"அந்த அமரசிற்பி யாரென்று எனக்குத் தெரியாது. இனிதான் தெரிந்து கொள்ள வேண்டும். நாளெல்லாம் அவற்றைப் பற்றிக் கேட்டுத் துளைத்து எடுக்கப் போகிறேன்" என்றாள், வீரமாதேவி குழந்தைபோல் சிரித்தவாறு.

"சிற்பி யார் என்று உன்னைக் கேட்கவில்லை. உலகம் புகழும் பெரிய கோயிலைக் கட்டி, தட்சிணமேரு என்று போற்றும் விமானத்தை எழுப்பி விமானத்துத் தளத்திலே நாட்டியச் சிற்பங்களைப் படைக்க வேண்டும் என்ற கலையார்வம் யாருக்குத் தோன்றியது தெரியுமா?"

வீரம்மாளுக்குத் தெரியும். ஆனாலும் மௌனமாக அவள், அரசியை நோக்கினாள்.

"வீரம்மா! எட்டுத் திக்கும் புகழும் பேரரசராகத் திகழும் நமது சக்ரவர்த்திதான் நடனச் சிற்பங்களை அங்கே அமைக்குமாறு சிற்பிகளுக்குக் கட்டளையிட்டார்" என்று பெருமிதத்துடன் அரசி கூறினாள்.

"தந்தையின் கலைப்புலமை மகனுக்கும் தொடர்ந்திருக்கிறது. இவரும் நடனக்கலை மீது தணியாத ஆவல் கொண்டுள்ளார். என்னை ஏற்றதும் கலைப் புலமைக் காகத்தான். அம்மா! போர்க்களங்களிலேயே தன்



கவனத்தைச் செலுத்திய இளவரசர் நடகக் கலையில் ஈடுபாடு கொண்டு தேர்ச்சியுற்றது அதிசயமாயிருக்கிறது. சிவபெருமானின் திருநடனங்களில் பலவற்றை அவர் எனக்கு ஆடிக் காட்டியிருக்கிறார். நான்கு கரங்கள் மட்டும் இருந்து விட்டால் இளவரசர் நடராசரின் மறு அவதாரம் என்றே சொல்வேன். இந்த நாட்டாட்சியும், போரும், பூசலும் அவருக்கு எதற்கு? நான் ஆட அவர் பாட, அவர் பாட நான் ஆட என்று கண்காணாத் தீவிலே நடனமாடியே காலத்தைக் கழித்துவிட வேண்டும் என்ற ஆவல் தோன்றுகிறது, அம்மா".

உணர்ச்சியின் உச்சநிலையில் வீரமாதேவி பேசினாள். மனதில் துள்ளுகின்ற பெருமகிழ்ச்சியோடு பேசினாள்.

"போதும் போதும், உன் சிருங்காரப் பேச்சு! உடனே நிறுத்து. சோழ நாட்டுப் பேரரசியின் எதிரே நின்று பேசுகிறோம் என்பதை மறந்துவிட்டாய். குப்பையில் இருந்தவளைக் கோபுரத்தில் ஏற்றி அமர வைப்பதற்கு ஆதரவு தந்த ராஜமாதாவின் எதிரே 'அம்மா அம்மா' என்றழைத்து அரசகுல வழக்கத்தையே குலைத்துவிட்டாய். உனக்கு முன்பே உரிமை பெற்றுக் கொண்டாடும் இளவரசரை கலைப் போர்வையில் மயக்கியதோடு அவரை இந்த நாட்டினின்றே வெளியேற்றி சாதாரணக் குடிமகன் போல் எங்கோ கண்காணா நாட்டிற்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டுவிட்டாயோ? அதை வெளியே சொல்ல உனக்கு என்ன துணிவு? உன் சதித் திட்டம் நிறைவேற விடமாட்டேன். சோழ நாட்டுப் பேரரசியார் அவர்களே! இவள் பேசுவதை இன்னுமா கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? இங்கிருந்து இவளை உடனே வெளியேறச் செய்யுங்கள்".

இளவரசர் இராசேந்திர சோழரை மணந்து இளவரசி என்ற கம்பீரத்துடன் மாளிகையில் நடமாடும் மற்ற தேவிகள் ஒன்று சேர்ந்து கூச்சலிட்டனர்.

வீரமாதேவி நிமிர்ந்து அவர்களை நோக்கினாள். ஆனந்தக் கனவைக் கலைத்த அரக்கியர் போல் அவர்கள் தோற்றமளித்தனர்.

"இங்கிருந்துதானே நான் போகவேண்டும்? இதோ போகிறேன். மீண்டும் நீங்கள் என்னை மேள்தாளத்தோடு அழைக்கும் நாள் மிக விரைவில் என்பதை எச்சரித்து

விட்டுச் செல்கிறேன்" என்று கடுங்கோபத்துடன் கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு விரைந்தாள்.

திருமாளிகையின் மேன்மாடத்துத் தனிமை வீரமா தேவியின் உள்ளத்தில் அன்று கொழுந்துவிட்டெரிந்த அக்னிக்குச் சற்று ஆறுதலளித்தது.

நடந்து போன நிகழ்ச்சிகளை எண்ணியவாறிருந்த அவள் அருகே வந்து நின்ற இராசேந்திரன், "வீரமா தேவி! எந்த நாட்டைப் பிடிப்பதற்காக இவ்வளவு பெரிய சிந்தனை?" என்று கேட்டபோது, வீரமாதேவி திடுக் கிட்டுத் திரும்பி, இராசேந்திரனின் பரந்த தோள்களில் முகத்தைப் புதைத்து விம்மினாள்.







## 36. உள்ளதைச் சொல்ல என்ன தயக்கம்?

வீரமாதேவியின் முதுகை ஆறுதலோடு தடவினார் இராசேந்திரன். அவள் விம்முவதால் ஏற்பட்ட இதயத் துடிப்பு அவர் இதயத்துக்கு எவ்வளவோ செய்திகளைத் தெரிவித்தது.

மாளிகையில் ஏதோ நடந்திருக்க வேண்டும். அங்கே வீரமாதேவிக்கு அவமதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அதை மீண்டும் அவள் வாய்வழி கேட்பதைவிட, இனி நடக்க வேண்டியவற்றைப் பேசி நடந்த நிகழ்ச்சியை மறக்குமாறு செய்வோம் என்ற முடிவுடன், இராசேந் திரன் அவள் முகத்தை மெல்லத் திருப்பினார்.

வீரமாதேவியின் கன்னங்களில் விழிநீர் கோலமிட்டது. கண் மையுடன் கரைந்து வழிந்தது. அவரது பரந்த மார்பு அதனால் ஈரமானது.

"வீரமாதேவி அழுகிறாயா? நீ அழலாமா?" என்று சிறு குழந்தையைக் கேட்பதுபோல் கேட்டார் இராசேந்திரர்.

விம்மல் ஒலி நிற்கவில்லை. அவர் கரங்களை விலக்கிவிட்டு, மாடத்து முற்றத்திலிருந்து சயன அறைக்கு விரைந்தாள்.

'இவளுக்கு என்ன வந்துவிட்டது? ஊடலா, கோபமா? என்ற தவிப்புடன் இராசேந்திரன் அவளை தொடர்ந்தார்.

இதற்கு முன்பு அவர் கரம் பிடித்த பட்டத்து அரசியைத் தொடர்ந்தோ, மணம் முடித்த மற்ற இளவரசிகளைத் தொடர்ந்தோ ஊடலைத் தணிக்க அவர் சென்றதில்லை. இந்த வயதில் இப்படியொரு தவிப்பா?

"வீரம்மா" - குரல் கொடுத்துக்கொண்டே பின்தொடர்ந் தார் இளவரசர்.

தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்ட வீரமாதேவியின் அழுகை இன்னும் நிற்கவில்லை.

அவள் தோளைப் பிடித்துத் தூக்கித் தன் முகத்தருகே கொண்டுவந்து வீரம்மாளின் விழிநீரைத் துடைத்து, "தேவி! நீ அழலாமா?" என்று மீண்டும் கேட்டார்.

அவள் பேசவில்லை. ஆனால் விம்மல் மெல்ல நின்றது.

விழி நீரைத் துடைத்து, தன்னை அணைக்க முதுகைச் சுற்றி வளைத்த அவருடைய இரு கரங்களையும் விலக்கி,

"என்னை அமைதியாக இருக்க விடுங்கள்" என்று கூறி நகர்ந்தாள்.

"ஆகா, தேவி பேசிவிட்டாள். கலைக்கப்பட்ட சிந்தனைக் கூட்டிலிருந்து சிறகடித்துப் பறந்து வருகின்றன என் தேவியின் இனிய சொற்கள்!" என்று கூறி மீண்டும் வெளிமுற்றம் நோக்கிச் செல்ல முயன்ற அவளைத் தடுக்க அவள் கரத்தைத் தாவிப் பிடிக்க முயன்றார்.

அவர் பிடியில் சிக்காமல் அவள் குனிந்து, நெளிந்து நழுவியதில் இருந்த நளினத்தைக் கண்டு சொக்கிப்போய் சில நொடிகள் நின்ற இராசேந்திரன் இன்னும் சிறிது நேரம் அவளுடன் மெய்யாகவே ஊடலை வளர்க்க விரும்பினார். ஏற்படும் புதிய புதிய தோற்றங்கள், முக பாவங்களை ரசிக்க விரும்பினார்.

"வீரமாதேவி! சோழ நாட்டு இளவரசியே! என் பிடியிலிருந்து சிக்கி ஓடுவதிலும் ஒரு நளினம் இருக்கிறது; அந்த அழகு உன் நடனக்கலைத் திறமையால் விளைந்தது. அது இருக்கட்டும். திடீரென்று உனக்குக் கோபம் வரக் காரணம் என்ன? அறியலாமா?" என்று கேட்டார்.

"தெரியாதவருக்குச் சொல்லலாம். தெரிந்தே நடிப்பவருக்கு எதற்குச் சொல்ல வேண்டும். இளவரசியாகப்



பிறந்து, வாழ்ந்து வரும் மற்ற இளவரசிகளிடம் உங்கள் வர்ணனைகளை, குழைவை, கெஞ்சுதலை, திறமையைப் புலப்படுத்துங்கள். நான் இளவரசியல்லள்; ஓர் எளிய குடும்பத்துப் பேதைப் பெண்" என்று கூறியவாறு முற்றத்துக் கைப்பிடிச் சுவரில் அமர்ந்தாள். வெளியே இருள். மேல்வானில் மங்கிய நிலவு மெல்ல மெல்ல இறங்கிச் சென்றது.

"ஆமாம்; நேற்று வரையில் எளிய குடும்பத்துப் பெண் தான். ஆனால் அதிர்ஷ்டம் அந்தப் பேதைப் பெண்ணுக் கன்றோ ஏற்பட்டுவிட்டது? ஒரே நாளில் அவள் இளவரசி யாகிவிட்டாள்" என்று கூறி வீரம்மாவின் விலாப்புறம் மெல்ல அழுத்தினார். அவள் சிரிக்கவில்லை. அவர் நகைத்தார்.

"ஆமாம், ஆமாம்! புயலில் குப்பை பறந்து கோபுரத்தில் அமர்ந்த கதைதான். இளவரசர் அவர்களே! நீங்களே சொல்லுங்கள். இளவரசி ஆவதற்காகவா நான் தங்களைச் சந்தித்தேன்? தஞ்சை அரியணையில் சமமாக அமர வேண்டும் என்று நான் தங்களிடம் என்றாவது வற்புறுத்தியதுண்டா?" வீரம்மாள் தானே மேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, இராசேந்திரனை நோக்கி வினவினாள்.

இராசேந்திரன் சிரித்தவாறு அவளை அணைக்க முயன்றார். வீரம்மாள் அவர் கரத்தை விலக்கி, "நான் கேட்டதற்கு என்ன விடை? என்றாவது நான் தங்களிடம் அரசு உரிமையைப் பற்றிக் கேட்டதுண்டா? இதற்கு மறுமொழி கூறிவிட்டுப் பிறகு உங்கள் சிங்காரப் பேச்சை வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

"ஓ! இன்று இளவரசியை யாரோ எரிச்சலூட்டி இருக்கிறார்கள். அவர்கள் யார் என்று நான் அறிந்து கொள்ள வேண்டும்".

"உம்! பேச்சின் திசையைத் திருப்பாதீர்கள். நான் கேட்டதற்கு என்ன விடை?"

"வீரம்மா! உன் முகத்தில் பலவித உணர்வுகளை இந்தச் சில நாழிகையில் கண்டுவிட்டேன். உன்னைப் படைத்த பிரம்மன் உன் நாசியின் நுனியில் கோபத்தை விதைத்திருக்கிறான். நாட்டியக் கலையில் புலமை பெற்ற

தால் ஏற்பட்ட விளைவா? இயற்கையிலேயே உனக்கு முன்கோபம் வருமா?"

"ஏன், அரச குடும்பத்தவர்களுக்குத்தான் கோபம், ஆத்திரம், கிண்டல், கேலி இவை இயற்கைச் சொத்தா? இறைவன் அவர்களுக்கு மட்டும்தான் உணர்வுகளைப் படைத்தானா?"

"இவ்வாறு நீ பேசி நான் கேட்டதில்லை. ஆனால், மாளிகையில் பெரியவர்கள் எதிரே நீ சீறியிருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன்".

"தாங்கள் அறிந்து வைத்தே என்னைக் கேட்கிறீர்கள். நடிப்புக்கலை உங்களுக்கு இயற்கையாக வந்ததா? அல்லது நாட்டியக் கலையில் புலமை பெற்றதால் வந்ததா? பண்டித சோழர் என்ற பெயரை நிலைநாட்ட ஏற்பட்டதா?"

"தேவி!" என்று அழைத்து மேலே பேச முற்பட்ட இளவரசரை நோக்கி, "தேவி என்றழைக்காதீர்கள். நான் குப்பையில் கிடந்தவள். உங்களுக்கு என்றுமே வீரம்மா ளாக இருக்க விரும்புகிறேன்" என்றாள்.

இராசேந்திரன் முகம் மாறியது. "வீரம்மாள் என்று அழைத்தாலும் அல்லது வீரமாதேவி என்று அழைத்தாலும் என் இதயத்தில் ஒரே இடத்தைத்தான் நீ பெற்றிருக்கிறாய். நீ சோழநாட்டு இளவரசி" என்று கூறி அவளைத் தன் அருகே இழுக்க முயன்றார்.

"வேண்டாம், வேண்டாம்! என்னைத் தொடாதீர்கள். நான் குப்பையில் இருந்தவள். கோபுரத்தில் ஏற வைக்க ஆதரவு தந்த ராஜமாதாவை நான் அம்மா என்று அழைத்தது குற்றமா?"

"வீரமாதேவி! எனக்கு முதலும் தெரியவில்லை, முடிவும் புரியவில்லை. மாளிகையில் அரசியார் எதிரே நீ கோபமாகப் பேசியிருக்கிறாய் என்று மட்டுமே கேள்விப் பட்டேன். அங்கே என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. நீ அரசியாரைச் சந்தித்து ஆர்வமுடன் பேசி யவை மட்டும் எனக்குத் தெரிவிக்கப்பட்டன. விளக்கிச் சொன்னால் புரிந்துகொண்டு உனக்கு வேதனை ஏற்படுத்தியவர்களுக்குச் சரியான பாடம் கற்பிப்பேன்".

"உறுதியாகவா?"

"இதில் உனக்கு ஐயம் ஏற்பட என்ன காரணம்? இராசேந்திர சோழன் வாக்குத் தவறாதவன் மட்டும்



அல்லன், எடுத்த காரியத்தை நிறைவேற்றாமல் ஓய மாட்டான் என்பதும் உனக்குத் தெரிந்திருக்க நியாய மில்லை".

"ஆமாம்; எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான். கலைப் போர்வையில் மயங்கிவிட்ட எனக்கு உங்கள் உள்ளம் புரிந்திருக்கவில்லைதான்".

"வீரமாதேவி! நேரத்தை வீணாக்காமல் நடந்தவற்றை விவரித்துச் சொல்லு. உன் மனம் புண்படும்படி நடந்தவர் களுக்குத் தக்க பாடம் புகட்டுவேன்".

"உறுதியாகவா என்று நான் மீண்டும் கேட்க மாட்டேன். ஆனால் தங்களைத் தர்மசங்கடத்தில் சிக்க வைக்க வேண்டுமா என்பதே என் மனப் போராட்டம். அதைவிடத் தங்களிடமிருந்து விலகி முன்புபோல் கிராமக் குளத்துத் தாமரையாகவே வாழ்நாளைக் கழிப்பது சரியாக இருக்குமோ என்று சிந்தித்து வருகிறேன். தாங்கள் இங்கு வரும்போது அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந் தேன். அரசியர் எதிரே என்னைத் துச்சமாக உங்கள் கரம்பிடித்த இளவரசியர் பேசிவிட்டனர். 'எந்த நாட்டைப் பிடிப்பதற்கு இவ்வளவு பெரிய சிந்தனை' என்று கேட் டீர்கள். பெரிய சிந்தனை அன்று; ஆழமான சிந்தனை; அழுத்தமான சிந்தனை".

இராசேந்திரனின் பொறுமைக்கும் ஓர் எல்லை ஏற்பட்டது. நடந்தவற்றை அறியத் துடித்தார்.

"வீரமாதேவி! நீ என்ன பேசுகிறாய்? யாரிடம் பேசுகிறாய்? என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. சுற்றி வளைக்காமல் நடந்தவற்றை விவரித்துச் சொல்லு. நேரம் பொன்னானது. நீ சொல்லாவிடில் நான் அரசியாரிடம் சென்று கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். இந்த நேரத்தில் அவர்களைச் சந்திப்பது முறையன்று என்பதனால் உன்னைக் கேட்கிறேன். நாளைப் பொழுது விடிந்தவுடன் நான் சிதம்பரம் செல்கிறேன். கொள்ளிடத்தில் பெருக் கெடுத்தோடிய வெள்ளம் குறைந்துவிட்டதாம். எண்ணா யிரம் என்று அழகிய சிற்றூர். அங்கே பாடசாலை ஒன்றை நடத்தி வருகிறார்கள். அந்தப் பாடசாலையின் தலைவர் என்னைச் சந்திக்க சிதம்பரம் வந்து காத்திருக்கிறார். அங்கு பயிலும் மாணவர்கள் அங்கே தங்கிக் கற்பதற்கு வேண்டிய உதவி அளிக்க வேண்டும். அவர்களுக்குச் சில

சாசனங்கள் செய்து தரச் சிந்தித்து வருகிறேன். நாளைக் காலை புறப்பட்டால் திரும்பிவர ஏழு நாள்களாகும். அதற்குள் உன்னைப் பார்த்துப் பேசி மகிழ்ந்து செல்ல வந்தேன்" என்று கூறியவர், தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "நம் திருமணம் நடைபெற்ற பிறகு உன்னிடம் நெருங்கவே வாய்ப்பில்லை. சோதிடர் நல்ல நாளைக் குறித்துத் தரவில்லை. விவாகத்தின் முதல் பயனைத் துய்க்க வேண்டாமா? உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டபோது குரலில் சிருங்காரம் இழையோடியது.

வீரம்மாள் தன் வியப்பை விரிந்த விழிகள் மூலம் புலப்படுத்தி, "அதென்ன விவாகத்தின் முதல் பயன்?" என்று கேட்டாள்.

மனதிலொன்றை மறைத்துப் பேசவில்லை என்பதை அவள் குரல் புலப்படுத்தியது.

இராசேந்திரன் அவள் முகத்தை நோக்கினார். அந்த முகத்தில் பிள்ளைத் தனம் வடிந்து கொண்டிருப்பது தெரிந்தது. விவாகத்தின் முதல் பயன் என்ன என்பதை அறிய விழிகள் முற்படுகின்றன என்பது புலப்பட்டது. பேச்சில் குறும்புத்தனம் இல்லை என்பதை உறுதியாக அறிய முடிந்தது.

இராசேந்திரன் அவள் அருகே நெருங்கினார். "வீரமா தேவி! மெய்யாகவே கேட்கிறாயா? நாம் எதற்குத் திருமணம் செய்து கொண்டோம்?" என்று கேட்டார்.

'தெரியாது' என்பதற்கு அடையாளமாக வீரம்மாள் தலையசைத்தாள். அந்த அசைவில் தெரிந்த நயம் அவர் உள்ளத்தில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

"வீரம்மா! நாம் எதற்குத் திருமணம் செய்து கொண்டோம் என்று மெய்யாகவே உனக்குத் தெரியாதா?"

"தெரியாது. தாங்கள் என்னை ஒருநாள் சந்தித்தீர்கள். அந்தச் சந்திப்பு என் மனத்தில் ஏதோ புதிய மலர்ச்சியை ஏற்படுத்தியது. என்னிடம் மறைந்துள்ள நடனக் கலைப் புலமையை வெளிப்படுத்தி மேலும் வளர்ப்பதற்காக என்மீது பிரியமாக இருக்கிறீர்கள் என்று எண்ணினேன். சந்திக்கும் போதெல்லாம் ஆடற் கலையின் நுணுக்கங்களை நாம் பேசினோம். இளவரசரான தங்களை அடிக்கடி சந்திக்க முடியாது என்பதற்காக என்னைத் தாங்கள் மணந்து உரிமையை அளிப்பதாக நான் நினைத்திருந்தேன்".



"அதுவும் ஒன்று. ஆனால் அது மட்டுமன்று. அதற்கும் மேலாக உன் உள்ளத்தில் வேறுவித உணர்வுகள் ஏற்பட வில்லையா? உன் விழிகளில் அந்த ஏக்கத்தைப் பலமுறை கண்டிருக்கிறேன். என்னை நீ விரும்பவில்லையா?"

"ஆகா! என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? தங்களை நான் மிகவும் விரும்பினேன்; நேசித்தேன்".

"இன்னும் நீ யார் யாரை விரும்பியிருக்கிறாய்? நேசித் திருக்கிறாய்?"

இப்படிக் கேட்டது முறையற்றதோ என்று ஒருகணம் நினைத்தார் இளவரசர். ஆனால் அவள் மறுமொழி அவரைச் சிலிர்க்க வைத்தது.

"எங்கள் கிராமத்தை, கிராமத்தருகே ஓடும் கொள்ளிட ஆற்றை, எங்கள் வீட்டை, வீட்டு நாகுவை, பறந்தோடி வந்தமரும் பச்சைக் கிளியை, என்னை வளர்க்கும் அத்தையை, என் உடன் பிறந்த அண்ணனை, என் தோழியை, பிறகு தங்களை!" என்று கூறி, கலகலவென்று சிரித்தாள்.

"நாகுவும், கிளியும், தோழியும், உன் அத்தையும், ஆறும், குளமும், வீடும், நானும் உன் இதயத்தில் அமர்ந்தது ஒன்றுபோல்தானா?"

வீரம்மாள் யோசித்தாள். "அதெப்படி ஒன்றுபோல் என்று சொல்ல முடியும்? துள்ளித் திரியும் நாகுவிடம் நான் கொண்ட பாசம் வேறு. பச்சைக் கிளியைக் கொஞ்சும் போது நான் பேசுவது வேறு. என் சகோதரனிடம் நான் வைத்திருக்கும் பற்று பெருவுடையார்க் கோயில் விமானத்தைவிட உயரமானது. என் அத்தை - ஆகா, அவள் அன்பே தனியானது. கொள்ளிட ஆற்று நீரில் நீந்துவதைப்போல் இன்பம் வேறு உண்டா? என் தோழி முத்துவடிவிடம் நான் பழகுவதே தனிதான்".

"உன் சகோதரனை, தோழியை நீ நேசித்தாய். இரண்டும் ஒன்றுதானா?"

"அதெப்படி ஒன்றாகும்? என் சகோதரன் என்னை வாழவைப்பவர். என்னைத் தங்களிடம் சேர்க்கக் காரண மானவர். தாயாகவும், தந்தையாகவும் இருந்து என்னை வளர்த்து வருபவர். தோழி முத்துவடிவிடம், நான் பழகுவதே வித்தியாசமானதுதான். என் அந்தரங்கம்

அறிந்தவள். என் மனத்திலுள்ளதை ஒளிவு மறைவு இல்லாமல் அவளிடம்தான் சொல்லத் தோன்றுகிறது".

"என்னைச் சந்தித்த பிறகு அவளிடம் பேசிப்பழக உனக்கு நேரம், காலம் குறைந்துவிட்டதல்லவா?"

"ஆமாம்; அதில் எனக்கு வருத்தம்தான். நானும் அவளும் ஒன்றாய் அமர்ந்து உணவருந்துவோம். ஆற்றில் ஒன்றாய்க் குதித்து நீந்தி விளையாடுவோம். ஒன்றாய்த் துயிலுவோம். தூக்கம் வரும் வரையில் அவள் பேசிக் கொண்டிருப்பாள்".

"பழையாறையில் தனி வீட்டில் சில நாள்கள் தங்கியபோது அவள் உன்னை
என்ன கேட்டாள்?"

"ஆகா; அவள் என்னைத் துளைத்து எடுத்துவிட்டாள். உலுக்கிவிட்டாள். தங்களைச் சந்தித்த நாளிலிருந்து அன்று காலை வரையில் தங்களுடன் பேசியது, பழகியது எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் விவரிக்குமாறு சொன்னாள்".

"நீ சொன்னாயா? நாணம் உன்னைத் தடுக்கவில்லையா?"

"நாணமா?" - வீரம்மாள் சற்று யோசித்தாள்.

"ஆமாம்; சிலவற்றை நான் விவரிக்காமல் விட்டுவிட்டேன். அவள் பெரிய கள்ளி. ஆனால் அவள் கேள்வி மேல் கேள்வி கேட்டு என்னைச் சொல்ல வைத்துவிட்டாள். அப்போது அவள், "திருடி; என்னிடமே மறைப்பதைப் பார்!" என்று என் கன்னத்தைக் கிள்ளினாள். அவளிடமிருந்து பெருமூச்சு எழுந்தது. இதுவரை அவள் பெருமூச்சுவிட்டுப் பார்த்ததில்லை. 'என்ன ஆச்சு உனக்கு?' என்று கேட்டேன்.

"வீரம்மா! பிள்ளைப் பிராயத்திலிருந்து நாம் ஒன்றாகப் பழகுகிறோம். அந்தரங்கம் என்று இதுவரை நாம் எதையும் மறைத்ததில்லை. இளவரசரைச் சந்தித்த பிறகு சிறிது இடைவெளி நம்மிடையே ஏற்பட்டது. அது நியாயம்தான். உன் அழகுக்கும், இளமைக்கும், திறமைக்கும் சோழ இளவரசரை இறைவன் பரிசாக அளித்தான் என்றெல்லாம் அவள் கூறினாள்" என்று வீரம்மா கூறியபோது, இளவரசர் குறுக்கிட்டு, "இளவரசர் பாக்கியசாலி என்று அவள் கூறவில்லையா?" என்றார்.



வீரம்மாள் முகத்தை நிமிர்த்தி அவர் விழிகளை நோக்கி, "ஆமாம்; அவள் கூறியது தங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அவள் என்னிடம் சொன்னாள்".

"தங்களிடமா, எப்போது சொன்னாள்? தங்களைச் சந்தித்ததைப் பற்றி அவள் என்னிடம் சொல்லவில்லையே?"

"ஒரு பெண் தன் அனுபவம் எல்லாவற்றையும் விண்டுரைத்து விடுவாள் என்று எதிர்பார்க்க முடியாது".

"அவள் அப்படிப்பட்டவளல்லள். நான்தான் சிலவற்றைச் சொல்ல விரும்பவில்லை. நாணம் என்னைத்







நடுத்தது. அது சரி, அவள் மேலும் தங்களிடம் என்ன பேசினாள்?"

"மிகவும் பயந்து பயந்து பேசினாள். நான் மிகவும் அதிர்ஷ்டக்காரராம். வீரம்மாள் போன்ற பூலோக அழகியை அடையக் கொடுத்து வைத்தவராம். நீ அரச குடும்பத்தில் பிறந்திருந்தால் உன்னை அடையப் பல நாட்டு அரசர்கள் போட்டி போட்டு வருவார்களாம்! போர் ஒன்று ஏற்பட்டு விடுமாம். அழகும், கலைத் திறமையும் ஒன்று சேர்ந் திருக்கும் உன்னை அவள் தோழியாகக் கொண்டிருப்பது முற்பிறப்பில் செய்த புண்ணியமாம். சோழர் குலத்துக்கு நல்ல அழகிய குழந்தையைப் பெற்றெடுத்துத் தந்தால் அதைவிடச் சோழ நாட்டிற்கு வேறு பெருமையே தேவை யில்லையாம்!"

இளவரசர் சொல்லிக் கொண்டே போகும்போது வீரம்மாளுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், முத்துவடி விடம் கோபமும் ஏற்பட்டது. இளவரசர் பேச்சில் குறுக்கிட்டு, "ஆமாம், ஆமாம், அவளுக்கும் பொறாமை வந்துவிட்டது. நான் இளவரசருடன் பழகுவது அவளுக் கும் பிடிக்கவில்லை. அழகான குழந்தையைப் பெற்றுத் தந்தால் அது சோழ நாட்டிற்குக் கிடைக்கும் பரிசு என்கிறாள். ஆனால், மாளிகையிலுள்ள இளவரசிகளோ, சோழ அரியணைக்கு ஒரு வாரிசாக நான் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து விடுவேன் என்று அஞ்சு கிறார்கள். எனக்கு ஒன்றும் ı ரியவில்லை, இளவரசே! திருமணத்தின் பலன் என்று சொல்கிறீர்களே, வாரிசைப் பெற்றுத் தருவதுதான் 'திருமணத்தின் பலன் என்றால், அப்படி நேருவதற்கான சந்தர்ப்பமே ஏற்பட வேண்டாம்".

வீரம்மாள், இவ்வாறு சொன்னவுடன் இளவரசர் அதிர்ச்சி அடைந்தார்.





## 37. 'இயற்கையை வெல்வேன்'

தஞ்சை மாளிகையில் உள்ள சயன அறையின் ஓர் ஓரமாக இருந்த சுடர் விளக்கிலிருந்து வீசிய மங்கலான ஒளியில் வீரமாதேவி மஞ்சத்தில் உறங்குவதை நோக்கிய வாறு இருந்தார், இராசேந்திரன். மஞ்சத்தின் ஓரமாகத் தலைப் பக்கத்தில் அமர்ந்திருந்த அவர் முகத்தில் கவலை நிறைந்திருந்தது.

கவலையில்லாமல், உள்ளத்தில் களங்கமில்லாமல் குழந்தை போன்ற முகத்துடன் உறங்கியவாறிருக்கும் வீரமாதேவியை அவர் சிறிது நேரமாகப் பார்த்துக் கொண் டிருந்தார். 'இந்தக் குழந்தை முகம் உடைய வீரம்மாளின் நெஞ்சத்தில் இவ்வளவு நாள்களாகப் பெரிய வைராக்கிய முடிவா நிறைந்திருக்கிறது?' அவர் பெருமூச்சு விட்டார்.

இரண்டு நாள்களாக் அவர் மனத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பு நீங்கவில்லை. எதற்கும் கவலைப்படாத அவர் மனத்தில் தீராத கவலை.

காலைப் பொழுதில் பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இரவு வீரம்மாளைச் சந்திக்க அவர் வரும்போது வீரம்மாள் அவர் வருகைக்காக விழித்துக் கொண்டிருந்தாள், ஏதும் நடக்காததுபோல் மலர்ந்த முகத் துடன் வரவேற்றாள்.

நடுநிசியை நெருங்கிக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில் பணிப்பெண்களைப் போகச் சொல்லிவிட்டு



அவளே தன் கரத்தால் அவருக்கு உணவு பரிமாறுவாள். பிறகுதான் அவள் உண்பாள். உண்ட பிறகு தாம்பூலம் மடித்துத் தருவாள். மயில் தோகை விசிறியை எடுத்து விசிறுவாள். மார்பிலும் முகத்திலும் தளிர்த்திருக்கும் வியர்வையைத் தன் சேலைத் தலைப்பால் ஒத்துடம் கொடுப்பதுபோல் மெல்ல அழுத்தி அகற்றுவாள்.

தன் உறுதியான முடிவைத் தெரிவித்த மறுநாள் அவள் அவரை நெருங்கினாள். கூந்தலுக்கு நறுமணத் தைலம் பூசியிருந்தாள். கண்ணுக்குப் புதிதாக மை தீட்டி யிருந்தாள். அவள் விழியின் சுழற்சி இளவரசரின் மனத் தில் புரியமுடியாத சலனத்தை ஏற்படுத்தியது.

அவர் அவளையே நோக்கியிருந்தார், ஏதும் பேசாமல்.

"என்மேல் கோபமா?" என்று முத்துப் பல்வரிசை பளீரெனத் தெரிய நகைத்தவாறு கேட்டு அந்தத் திண் தோள் வீரனின் தோள்களைத் தழுவினாள்.

இராசேந்திரன் அவளை உற்று நோக்கினார். முகத்தில் மகிழ்ச்சியிருந்தாலும் கரிய மேகம்போல் காட்சியளித்த மைவிழியிலிருந்து உதிர்வதற்கு ஆயத்தமாக நீர் தளும்பி நின்றது.

"ஏன் கோபிக்க வேண்டும்?" என்று மட்டுமே அவரால் பேச முடிந்தது.

"இல்லை, இல்லை! கருத்தைக் கூறாது உள்ளத்து உணர்ச்சியைப் பலவந்தமாக அடக்கிக் கொள்கிறீர்கள் இல்லை இல்லை! மறைக்க முயல்கிறீர்கள்" என்று கூறியவாறு அவர் கரத்தை அவள் பற்றினாள்.

"ஆமாம்; நடனக் கலையை நான் சிறிது அறிந்திருக் கிறேன். உணர்ச்சியை முகம், கரங்கள், முக்கியமாக விழிகள் வெளிப்படுத்தும் என்பது உண்மையே. நான் அடக்கிக் கொள்கிறேன் என்பதைக் கண்டு கொண்டிருக் கிறாய்".

சாளரத்தை அலங்கரித்தபடி காற்றில் அசையும் வண்ணச்சீலையை இராசேந்திரன் பார்த்தவாறு கூறினார்.

"உணர்ந்து கொள்ளும் சக்தியைக் கைவரப் பெற வில்லை".

"ஆனால் கோபமா என்று கேட்டது எப்படியோ?"

"நேற்று நான் கூறியது கோபத்தை அளிக்காமல் என்ன செய்யும்?"

வீரம்மாளின் பேச்சைக் கேட்டு இராசேந்திரன் மௌனமாயிருந்தார்.

வீரம்மாள் கூறியதைக் கேட்டவுடன் முதல் நாள் இரவு இராசேந்திரன் அதிர்ச்சியுற்றது உண்மையே. வீரம்மாள் கூறியவை கோபத்தால் வெளிப்படுத்திய வெறும் வார்த்தைகளல்ல. அவள் ஓர் உறுதியான சபதத்தையல்லவா வெளிப்படுத்தி விட்டாள்!

அவள் உணர்ச்சி வயப்பட்டுப் பேசவில்லை. ஆத்திரத்தில் கொட்டிய வார்த்தைகளாக அவை வெளிப்படவில்லை. நிதானமாகவே பேசினாள். என்ன சொல்கிறோம் என்பதை உணர்ந்தும் பேசினாள். எரிமலைக் குழம்பு பூவிதழ் உதிர்வதுபோல் உதிர்த்தாள். அவளுடைய முடிவைத் தெரிவித்த அந்தச் சொற்கள் திடீரென அவளிடமிருந்து எழவில்லை. அவள் பல நாள்களாக சிந்தித்து எடுத்த முடிவாக இருக்க வேண்டும். யாரிடம் பேசுகிறோம், என்ன பேசுகிறோம் என்பதை நன்றாகத் தெரிந்தே அவள் பேசினாள். ஒரு முறைக்கு இருமுறை யோசித்தாள்.

"இளவரசே! சோழச் சக்கரவர்த்திகளுக்குச் சோழ நாட்டின் தவப் பயனாய் உதித்த தேவரே! மீண்டும் நான் நடந்த கதையைச் சொல்கிறேன். சில மாதங்களுக்கு முன்பு தாங்கள் ஒருநாள் என்னைச் சந்தித்தீர்கள். அந்த நாளை, அந்த வேளையை, அந்தக் கணத்தை நான் மறக்கவே முடியாது. அந்தச் சந்திப்பு என் மனத்தில் ஏதோ புதிய மலர்ச்சியை ஏற்படுத்தியது. என்னிடம் மறைந்துள்ள நடனக் கலைத் திறமையை வெளிப்படுத்தி மேலும் வளர்ப்பதற்காக என்மீது அன்பு செலுத்துகிறீர்கள் என்று எண்ணினேன். சோழ நாட்டுக் குடிமகள் ஒருத்திக்குக் கிடைக்காத மகத்தான பேற்றினை எனக்களித்த தில்லை அம்பலவாணரை அல்லும் பகலும் துதித்து வாழ்த்தினேன்.

தங்களைச் சந்திக்காத போதெல்லாம் ஏதோ இருள் குகையில் தவிப்பது போன்ற நிலையை நான் அடைவேன். அந்த அனுபவம் காதலின் குணங்களுள் ஒன்று என்று நான் உணரவில்லை. குகையில் என்னைக் கரம்பற்றிய



போது, நடனமாடும்போது, என் தோளைத் தொட்டபோது, அன்பை வெளிப்படுத்த கன்னத்தில் மெல்லத் தட்டிய போது, பாராட்ட முதுகில் விரல்களால் வருடிய போது, இடையை வளைத்த போது சோழ நாட்டு இளவரசரின் நெருக்கத்தைப் பெற்ற பெரும் பாக்கியசாலி என்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டது. தங்களைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கணமும் எனக்கு ஏக்கத்தை அளித்தது. ஏக்கம் சிறிது சிறிதாக என் மனத்தில் சிலிர்ப்பொன்றை ஏற்படுத்தத் தொடங்கியது. மெல்ல மெல்ல என் நிலை எனக்குப் புரிந்தது. கொடியில் அரும்பாயிருந்தது மொட்டவிழ்ந்து மலரத் தொடங்கியது. தோழி பேசுவதும், ஊரார் பேசுவதும், தங்கள் அன்பின் திறத்தை அறிய வைத்தன. என் மனத்தில் ஏழு வண்ணங்கள் வானவில்லாய் அடிக்கடி பாலமிட்டன. ஸப்த ஸ்வரங்கள் உயிர்நாடியெங்கும் ஒலிக்கத் தொடங்கின" என்று கூறிவந்த வீரம்மாள், சற்று நிறுத்தி இராசேந்திரனை நோக்கினாள்.

இராசேந்திரன் விழிகளை மூடியவாறு தன்னை மறந்து, அவள் பேசுவதை ரசித்துக் கொண்டிருந்தார். பேச்சு நின்றவுடன் விழியைத் திறந்தார். அவள் தொடர்ந்தாள்:

"தங்கள் விரல்களுடன் என் விரல்களைப் பிணைக்கும் போது புதியதொரு சிலிர்ப்பு எனக்கு ஏற்பட்டது. நான் தனியே சந்திக்கும்போது உங்கள் விழிகள் எனக்குப் பல புதிய செய்திகளைப் புரிய வைத்தன. என் நிலையை யாரிடமாவது சொல்ல வேண்டும் எனத் துடித்தேன். ஆனால் சொல்லவும் வெட்கமாக இருந்தது.

"இளவரசர் உன்னை நேசிக்கிறாரம! அடி கள்ளி! என்னிடம் இதுவரை அந்த இரகசியத்தை மறைத்து விட்டாய். அந்தப்புர அந்தஸ்து உனக்குக் கிடைக்கப் போகிறது" என்று முத்துவடிவு சொல்லத் தொடங்கியவுடன் நான் புரிந்து கொண்டேன்.

'சோழ நாட்டு இளவரசியாகப் போகிறாள்' என்று பேசிக் கொண்டார்கள். நான் புரிந்து கொண்டேன். எனக்குப் பெருமையாக இருந்தது. கர்வமும் ஏற்பட்டது. என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள் என்றபோது, திருமணம் என்ற இனிய வார்த்தையால் ஏற்படும் பெருமையைவிட தங்களுக்கு நான் என்றென்றும்

உரிமையுடையவளாக, சொந்தமானவளாக ஆகிறோம் என்பதே என்னைக் கர்வமடையச் செய்தது. எனக்கு மட்டுமே சொந்தமாக தாங்கள் இருக்கக் கூடாதா என்று கூடப் பேதை நெஞ்சம் நினைக்கத் தொடங்கியது. தாங்கள் இளவரசராக இல்லாமல் சோழநாட்டு எளிய குடிமகனாக இருக்கக் கூடாதா என்று நினைத்ததும் உண்டு.

“நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். அரசகுலத்தின் பழக்க வழக்கங்கள் எனக்குத் தெரியாது. தங்கள் தோற்றம் தங்கள் வயதை மறைத்தது. தங்களுக்கு இளம் வயதிலேயே திருமணமாகிவிட்டது என்பதை அறிந்தேன். அதைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை.

“முக்கோக்கிழான் அடிகள், அரிந்தவன்மாதேவி, திரிபுவனமாதேவி, பஞ்சவன்மாதேவி என்ற பாக்கியசாலிகள் தங்கள் கரம் பிடித்தவர்கள் என்றறிந்தேன். ஒருவனுக்கு ஒருத்திதானே மணவாட்டியாக இருக்க வேண்டும்; எப்படி மூன்று நான்கு இளவரசிகள்? அரசர்களுக்கு அதுவே அந்தஸ்து என்பதறிந்து சமாதானமடைந்தேன். அவர்களைக் கண்டு நான் பொறாமைப் படவில்லை. ஆனால், அவர்கள் என்னைக் கண்டு பொறாமைப்பட்டார்கள். ஆத்திரப்பட்டார்கள். எதையோ அபகரிக்க வந்தவளோ என்று பயந்தார்கள். நான் ஏழைவீட்டுப் பெண் என்று இடித்துக் காட்டினார்கள். தங்களை மயக்கிவிட்டதாக ஏசினார்கள். தங்களுக்கு வயதாகிவிட்டதால், இளமைச் சுகம் பெற பருவப் பெண்ணை மணந்திருக்கிறீர்கள் என்று தங்களை மறைமுகமாகக் களங்கப்படுத்தினார்கள்.

“இளவரசர் அவர்களே! நான் எளிய குடும்பத்துப் பெண்தான். ஆனால் ஒரு வீரனின் மகள். ஒரு வீரனின் தங்கை. வீர இரத்தம் என் நரம்புகளில் பாயாது இருக்குமா? என் நாட்டியப் புலமையைப் பாராட்டாமல் புகழாமல் என்னை இழிவு படுத்தினார்கள். என் நாட்டியத்தை ரசிப்பதற்காக ஆடச்செய்யாமல் என்னை வதைப்பதற்காக ஆடச் சொன்னார்கள்.

“மாளிகைக்குப் புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கும் பணிப்பெண் என்று நினைத்துவிட்டார்கள். தங்களுடைய அன்பு ஆதரவு என்ற ஒன்று உறுதுணையாக இருக்கும்போது நான் அவர்களைக் கண்டு அஞ்சவில்லை. என்னிடம் இறுமாப்பு வளர்ந்தது. அவர்களைத் துரும்பென நினைத்தேன். அவர்கள் சிற்றரசர்களின் புதல்விகள் என்று கருதாமல், என்னிடமிருந்து தங்களைப் பிரிக்கத் திட்டமிடும் சதிகாரிகள் என்ற எண்ணத்தில் அவர்களை அலட்சியப்படுத்தினேன். பேரரசியாரும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை என்றறியும்போது எனக்கு வேதனையாக இருந்தது.



“தங்களுடைய ஆதரவான சொற்களில் மற்ற சுடுசொற்களைப் பாராட்டவில்லை. ஆனால், சோழ குலத்தின் வருங்கால வாரிசைப் பெற்றெடுத்து, சோழ மகுடத்திற்குப் போட்டியிட ஓர் ஆண்பிள்ளையைப் பெற்றெடுத்து உரிமைப் போருக்கு வழிவகுக்க வந்திருக்கும் சதிகாரி என்று அவர்கள் என்னைப் பழிப்பதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

“மரியாதைக்கு உரிய இளவரசர் அவர்களே! இப்போது நீங்கள் சொல்லுங்கள்; தங்களிடம் நான் பழகியது, தங்கள் கரம் பற்றியது ஒரு வாரிசைப் பெற்றுச் சோழ குலத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவற்காகவா? திருமணம் என்பது ஒரு குழந்தையைப் பெறச் செய்யப்படும் சடங்கா? இல்லை இல்லை; இல்லவேயில்லை.

“நடந்துபோன திருமணத்தை மாற்ற முடியாது. என் விரல்களில் தாங்களிட்ட மோதிரத்தைக் கழற்ற முடியாது. என் கழுத்திலிட்ட திருச்சரட்டைப் பறிக்க முடியாது. சோழ இளவரசரை மணந்தவள் என்று உலகம் அறிந்த செய்தியை மறைக்க முடியாது.

“நான் அமைதியாகச் சிந்தித்தேன். என்னால் சோழ நாட்டில் குழப்பம் ஏற்பட வேண்டாம். வீரம்மாள் வீரமாதேவியாகி அரியணைக்குப் போட்டியாக ஒரு குழந்தையைப் பெறுவது எவ்வாறு நிகழக்கூடும் என்பதைப் பற்றிச் சிந்தித்தேன். தங்களைப் பிரிந்து ஒருவரும் கண்டு பிடிக்க முடியாத இடத்திற்குச் சென்றுவிடலாமா என்று எண்ணினேன். ஊர் உலகம் என் செய்கையை அறிந்து என்னைத் தூற்றும். தங்களுக்கு மாசு ஏற்படும். எங்கிருந்தாலும் என்னைக் கண்டுபிடித்துவிடும் சக்தி தங்களுக்கு இருக்கிறது. அதனால் அந்த எண்ணத்தைத் தவிர்த்தேன்.

“என்னை உயிரென நேசித்து ஏற்ற என் அருமை இளவரசரே! நான் உறுதியான முடிவொன்றுக்கு வந்தேன்.

“கலை நயமை இணைத்தது. கலை நம் அன்பை வளர்த்தது. தங்கள் இதயத்தில் என்றென்றும் கலை எனக்கோர் இடம் தந்தது.

“நாம் பிரியாமல் இருப்பதற்குக் கலைத் தொடர்பே போதும். உள்ளச் சுகத்துடன் உடல் சுகம் ஓர் ஆணும் பெண்ணும் இணைவதால் ஏற்படும். அதைத் தடுக்க முடியாது. இயற்கையின் கட்டளை அது என்பதை அறிந்தேன். அதை மீறுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

“இளவரசர் அவர்களே! என்னைப் பொறுத்தருளுங்கள். பெரிய ஞானிபோலும், துறவிபோலும், பேரறிவுள்ளவள் போலும் பேசுவதாக நினைக்க வேண்டாம். இந்த உடலும் உள்ளமும் இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவை என்ற நம்பிக்கையுடன் ஏன் வாழக்கூடாது? வாழ முடியாதா?

“தேவாரத் திருப்பதிகங்களைக் கற்றுத் தர ஆசிரியர் ஒருவரை ஏற்படுத்தினீர்கள். சில நாள்கள், தில்லைக் கோவிந்தராசர் சந்நிதியில் நான் வீற்றிருக்கும்போது பூஜை செய்யும் பட்டர்கள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் கதையை எனக்குச் சொன்னார்கள். திருமால்மீது காதல் கொண்டதால் திருமால் அடியவர்கள் தங்கள் உள்ளத்தை வெளிப்படுத்த இயற்றிய பாசுரங்களை விளக்கினார்கள்.

“இந்த உடல் மனிதருக்காக ஏற்பட்டதன்று என்ற எண்ணம் ஏற்படும்படியான கோதை நாச்சியாரின் பாடல் என்னைக் கவர்ந்தது. நாள் முழுக்க முழுக்க தில்லைப் பொன்னம்பலவாணன் சந்நிதியிலேயே ஆடிப்பாடி வாழ்நாளைக் கழிக்குமாறு என்னைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கலாம். தங்களைச் சந்திக்காதிருந்தால் ஒருவேளை அப்படி நேர்ந்திருக்கலாம். ஆனால், என்னைத் தாங்கள் விரும்பி ஏற்றபோது, துணையாக ஏற்றபோது நான் தங்களிடமிருந்து பிரிந்து வாழ விரும்பினாலும் அது இயலுமா?

“என் ஆருயிர் நாயகரே! என்னையும் தங்கள் இல்லத்தரசிகளுள் ஒருத்தியாக ஏற்றுவிட்டீர்கள். என்னிடமுள்ள கலைப் புலமைக்காக மட்டுமல்லாமல் என் அழகுக்காகவும் அழகின் காரணமான உடலுக்காகவும் என்னை ஏற்றிருக்கலாம். ஓர் உண்மையைச் சொன்னால், தங்கள் வயதையும் மீறி தங்கள் வடிவழகில் நான் மயங்கினேன். என் உள்ளத்தை ஒப்படைத்து விட்டேன்.



“மன்னர்கள் இறைவன் வடிவம் என்பதை அறிவேன். தங்களை நான் இறைவடிவமாக நினைக்கிறேன். பக்தையாக உங்களோடு வாழ முடிவு செய்துவிட்டேன். தங்கள் எதிரே நடனமாடுவேன். இணைந்து நடனமாடுவேன். நான் உங்களுடன் எங்கும் வருவேன். நீங்கள் கட்டளையிடும் பணிகளை நிறைவேற்றுவேன். ஐம்புலன்களை அடக்கும் சக்தியைப் பெற்று விடுவேன்.

“என் அன்பு நிறைந்தவரே! பெரிய கோயிலின் மேல் தளத்தில் நடனக் கரணங்களை விளக்கும் சிற்பங்களைக் காணும் வாய்ப்பை எனக்களித்தீர்கள். அந்தக் கோயிலைப் படைத்ததால் தங்கள் தந்தை அழியாப் புகழ் பெற்றார். இறைவன் நடனமிடுகிறார். அவற்றைப் பார்த்ததிலிருந்து அதுபோன்ற நடனச் சிற்பங்களை நீங்களும் ஏன் படைக்கக் கூடாது? அந்த ஜீவ சிற்பங்களைப் போல் நடனவடிவம் வடிக்க என் உடலையே அர்ப்பணிக்கிறேன்.

“நீங்கள் கேட்கலாம்; உணர்ச்சிகள் பொங்கிப் பாயும் பருவத்தில் இளம் வயதில் அதை எவ்வாறு அடக்குவாய்? வீணாக சபதம் செய்யாதே என்று நீங்கள் ஏளனம் செய்யலாம்.

“இளவரசர் அவர்களே! என்னால் முடியும். தங்களைச் சந்தித்து, நெருங்கிப் பழகிய இவ்வளவு நாள்களும் என் உள்ளத்தில் காம இச்சை ஒருபோதும் எழுந்ததில்லை. ஒருநாள் கூடத் தாங்களும் அதை வற்புறுத்தியதுமில்லை.

“திருமணத்தின் பயனை, சுவையை மற்ற பட்டத்து இளவரசிகளிடம் அனுபவித்து வாரிசுகளை அளித்துள்ள தாங்கள் என்னிடம் அதை விரும்ப மாட்டீர்கள். ஆனால் உங்களுடைய பிரியமான பட்டத்து இளவரசி என்ன சொன்னார்கள் தெரியுமா? வாயால் சொல்லக் கூசுகிறது. அவர்களிடமிருந்து அடைய முடியாத சுகத்தைப் பெறுவதற்காகவே நீங்கள் என்னை மணந்தீர்களாம்.

“நான் என்றென்றும் உங்கள் அடிமை; பணிப் பெண்ணாகவும், துணையாகவும், தோழியாகவும், கருத்தையறிந்து நடப்பவளாகவும் வாழ்ந்து காட்டுவேன். வெளி உலகிற்கு, புறவாழ்விற்கு ஐம்பது பிராயத்தில் தங்களை மயக்கிய இளமங்கை. சுகவாழ்விழந்து உயிர்ச் சேர்க்கையன்றி உடல் சேர்க்கையை விரும்பாதவள்!

வீரமாதேவி தன் உறுதியை மெல்ல மெல்ல அழுத்தந் திருத்தமாகக் கூறி முடித்தாள்.

எட்டு திக்கும் சென்று பகை அரசர்களை நடு நடுங்க வைத்த, இராசேந்திரன் திகைத்து, திடுக்கிட்டு இமைக்கவும் மறந்து வீரமாதேவியின் முகத்தைப் பார்த்தவாறிருந்தார்.

அங்கே மௌனம் நிலவியது. சூலுண்ட கரிய மேகம் போன்ற விழிகளில் இதுவரை அடங்கியிருந்த கண்ணீர் அருவியாய்ப் பெருகியது.

இளவரசரின் கரம் நீண்டது. மெல்ல அவள் கண்ணீரைத் துடைத்தது.

வீரமாதேவியைத் தன் மார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டார். மழை பெய்தபின் துல்லியமான நீலவானம் போல் நிம்மதியாய் கண்களை மூடிக்கொண்ட வீரமாதேவி சோர்வுற்றாள். "என் உறுதி நிலைக்க உதவுவீர்களா?" என்று முணு முணுத்தாள். "என் உறுதி வெறும் பேச்சு, வீண் கனவு என்று தாங்கள் நினைப்பீர்கள் என்றால் சொல்லிவிடுங்கள். தங்களை என்றுமே சந்திக்க முடியாத இடத்துக்கு என்னை அனுப்பி என்னைக் காப்பாற்றுங்கள்" என்று பேசிய அவளை இருகரங்களாலும் குழந்தைபோல் சுமந்து மெல்லப் பஞ்சணையில் கிடத்தி, அவள் மேனியைப் போர்வையால் மூடினார்.

மறுநாள் நடுநிசி நெருங்கும்போது அவளைச் சந்திக்க வந்தார்.

முதல்நாள் ஏதும் நடைபெறாதவள்போல் வீரம்மாள், இராசேந்திரனை வரவேற்றாள்.

விதவிதமான உணவு வகைகள், தங்கத்தட்டில் பரிமாறப்பட்டிருந்தன. வீரம்மாள் இன்று தன் கரத்தால் சோற்றைக் கலந்து இளவரசருக்கு ஊட்டினாள்.

"எனக்கு ஒரு சந்தேகம் இளவரசே!" என்று அவர் தோளைத் தழுவினாள்.

தன் முகத்தை அவர் முகத்தோடு இணைத்து, "இளவரசர் அவர்களே!" என்று அழைத்துவிட்டுச் சிரித்தாள்.

அவள் முகத்தில் கலக்கம் ஏதுமில்லை. முன் எப்போதையும்விடத் தெளிவாக இருந்தது. கவலையை



இறக்கிவைத்துவிட்டு வந்த நிம்மதி விழிகளில் புலப்பட்டது.

"சந்தேகம் ஒன்றா, இரண்டா?" - இராசேந்திரன் கேட்டார்.

"கோவிந்தராஜர் சந்நிதியில் எனக்குப் பல பாசுரங்களைப் பட்டர்கள் கற்றுத் தந்தனர். அவற்றை தங்களிடம் பாடிக் காட்ட எனக்குப் பல நாள்களாக ஆசை".

"இதில் சந்தேகத்திற்கு என்ன இருக்கிறது?"

"திருமால் அடியார்கள் தங்களைப் பெண்களாக நினைத்துப் பாடியிருக்கிறார்கள். அந்தப் பாடலில் உள்ள காதல் வயப்பட்ட பெண்ணாக என்னையும், அவள் விரும்பிய திருமாலாக உங்களையும் கற்பனை செய்து கொண்டேன். அப்படிக் கற்பனை செய்யலாமா? என்று சந்தேகம் எழுந்தது".

4337425/610545

"ஓகோ! திருமால் அடியவர்களுடைய பாசுரங்களை நான் அறிவேன் - திருவாலியில் வசித்த திருமங்கை மன்னரின் பாசுரத்தைத்தானே குறிப்பிடுகிறாய்?"

"ஓ! தாங்கள் அறிவீர்களா?"

"வந்து அடியேன்மனம் புகுந்தாய் புகுந்ததற்பின் வணங்கும்என்
சிந்தனைக்கு இனியாய்! திருவே! என் ஆருயிரே!
அந்தளிர் அணியார் அசோகின் இளந்தளிர்கள் கலந்து அவை
செந்தழல் புரையும் திருஆலி அம்மானே!"

...நேயப் பாவா...
...மாவட்ட மைய நூல...
சென்னை - 600 00...

"ஆமாம் இநதப பாசுரததில அப்படி என்ன விசேஷம்?

"நான் இருந்த இடம் வந்து அடியேனாகிய என் நெஞ்சில் நீங்களே புகுந்தீர்கள். அப்படிப் புகுந்த பிறகு தங்களை வணங்கும் என் மனத்துக்கு நீ இனியவன் ஆனாய். எனக்குச் செல்வம் போன்றவரே! எனக்கு உயிரானவரே! - புரியவில்லையா?" என்று வீரம்மாள் சொன்னவுடன், இராசேந்திரர் அவளை இழுத்து அணைத்துக் கொண்டார்.

வீரம்மாள் அவர் பிடியை விலக்கி, "என் உயிருக்குயிரான தெய்வமே! நேற்று நான் ஒரு பாசுரத்தை விவரிப்பதாகச் சொன்னேன் அல்லவா? அதைப் பாடட்டுமா?" என்று கேட்டாள்.

இராசேந்திரன் அவளுடைய உற்சாகம் நிறைந்த பேச்சைக் கேட்டவுடன், மேலும் அவளை உற்சாகப்படுத்த

விரும்பி, "வீரமாதேவி! நீ பாடி நான் ஆடுகிறேன். நான் பாட நீ ஆடு" என்றார்.

*'துறப்பேன் அல்லேன் இன்பம், துறவாது நின் உருவம்*
*மறப்பேன் அல்லேன் என்றும் மறவாது யான் உலகில்*
*பிறப்பேன் ஆக எண்ணேன் பிறவாமை பெற்றது நிலை*
*திறந்தேன் அதன்மையால் திருவிண்ணகரானே!'*

- என்று அவள் பாடியவாறே ஆடினாள்.

அவள் கரத்தைப் பிடித்த இராசேந்திரர், "வீரம்மா! இந்தப் பாசுரத்தின் பொருள் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியுமே - உங்களிடம் பெற்ற இன்பத்தை விட மாட்டேன். அந்த இன்பத்தை விடாமல் உன் வடிவழகை எக்காலும் மறக்கமாட்டேன். மறவாமையால் நான் இனி பிறக்க எண்ண மாட்டேன்" என்று கூறி கலகலவென்று சிரித்த வீரம்மாள், "எந்தை பிரானே! இந்தப் பாசுரமும் உங்களையும், என்னையும் பற்றித்தான்" என்றாள்.

இராசேந்திரர் திடுக்கிட்டார். உண்மையிலேயே பொருள் தெரிந்துதான் பாசுரங்களைப் பாடுகிறாளா? இறைவன் மீது காதல் கொண்டுவிட்ட நாயக - நாயகி பாவத்தை எடுத்துரைக்கும் அளவிற்கு அவள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவிட்டாளா?"

"வீரமாதேவி! உன் முடிவை நீ மாற்றிக் கொள்ள வில்லையா? இந்த உலக இன்பத்தைத் துறந்து துறவியாகிவிடப் போகிறாயா? நீ மனம் மாறினால், நானும் இந்த அரியணையை - சோழ சாம்ராஜ்யத்தையே மறந்துவிட வேண்டியதுதான்" என்றவுடன் வீரமாதேவி, அவர் கரம் பற்றி, "ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இந்த நாட்டில் மதிப்புடன் வாழ விரும்புகிறேன். இளவரசி என்ற பெருமையுடன் வாழ விரும்புகிறேன். எல்லா இன்பங்களையும் துய்க்க விரும்புகிறேன் - ஆனால் இந்த உடல் சேர்க்கையால் ஏற்படும் இன்பத்தைத் தவிர.

"என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பவரே! சூடிக்கொடுத்த சுடர்க்கொடிபோல் வாழவேண்டும் என விரும்பினேன் என்று சொன்னேனல்லவா!

*என்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு*
*உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
*மற்றைநம் காமங்கள் மாற்று . . .*



"திருவரங்கத்துப் பெருமான்மீது மையல் கொண்டது போல் நான் தங்கள் ஆத்மாமீது மோகம் கொண்டே அந்த் ஆத்மாவை இறைவடிவமாய்க் காண்கிறேன். உலகத்தவர் போல் உடல் இன்பம் துய்ப்பதற்காக அன்று. தில்லைச் சித்ரகூடத்துத் திருமால் சந்நிதியில் நான் கேட்ட பாசுரங்களின் பொருள் இப்போதுதான் புரிகிறது. என் உள்ளத்தை உங்களுக்கு அடைக்கலமாக்கிவிட்டேன். உடலை இறைவனுக்குச் சமர்ப்பிப்பதுதான் நியாயம். நாச்சியார் சொல்வதுபோல்.

*"ஊனிடை ஆழிசங்க உத்தமர்க்கென்று*
*உன்னித்தெழுந்த என் தடமுலைகள்*
*மானிடவர்க்கென்று பேச்சுப்படில்*
*வாழகில்லேன் கண்டாய்" -*

வீரமாதேவி பேசிக் கொண்டு வருவதிலிருந்து இராசேந்திரன் தெளிவாக ஒன்றைப் புரிந்து கொண்டார். உடலின்பத்தை நீக்கி உயிரின்பத்தை விரும்புவதாக அவள் முடிவு செய்துவிட்டாள். அவள் போக்குப்படியே விட்டுப் பிடிப்போம் என்று எண்ணியவராய், அந்தச் சூழ்நிலையை மாற்ற விரும்பி, "வீரம்மா! என் இனியவளே! உன் விருப்பப்படியே நடப்பதற்கு நான் சம்மதிக்கிறேன். நாளை என் பிறந்த நாள்; சிதம்பரம் செல்லாமல் தஞ்சையிலேயே கொண்டாட விரும்புகிறேன். நாளை இரவு தஞ்சைப் பெரிய கோயிலில் நாட்டிய நாடகம் ஒன்று நடைபெறுகிறது. ராஜராஜ விஜயம் என்று பெயர். நீ அதைக் காண வேண்டும். நாளை அந்தி வேளையில் இங்கு வருகிறேன். நாம் இருவரும் இராசராச விஜயம் காண்போம்" என்றார்.

வீரமாதேவி மகிழ்ச்சியுடன், "இராசராச விஜயம் நாடகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை நான் பார்த்தாக வேண்டும். தங்கள் தந்தை சோழ சக்கரவர்த்தியின் பெருமையைச் சித்திரிக்கும் நாடகம் என்றறிவேன். அந்த நாடகம்போல் தங்கள் புகழை, பெருமையைக் கூறும் நாடகமொன்றை எழுத வேண்டும். புலவர்களுக்குக் கட்டளையிடுங்கள். நான் அதில் ஆட வேண்டும்" என்றாள்.

'தேவி! என் தந்தையின் வெற்றியைக் கூறும் அந்த நாடகம் என் தந்தைக்கு அழியாப் புகழ் சேர்க்கும் பெரிய

கோயில் கட்டியதைப் பெருமையாகப் பேசுகிறது. என் புகழ் பேச அப்படியென்ன நான் செய்துவிட்டேன்?" என்றார் கவலையுடன்.

வீரமாதேவியின் முகத்தில் தனி ஒளி எழுந்தது. "என் ஆருயிர் நாயகரே! தங்கள் புகழ் என்றென்றும் நின்று நிலைக்குமாறு தாங்கள் மகத்தான செயலொன்று செய்யப் போகிறீர்கள். நேற்று நான் கனவு ஒன்று கண்டேன். அக் கனவு நனவானால், தங்கள் பெருமை சூரிய, சந்திரர் உள்ள மட்டும் அழியாது" என்றாள்.







# 38. இன்னொரு பாட்டு!

இராசேந்திர சோழ தேவரின் பிறந்த நாள், திருவாதிரைத் திருநாள் இந்த ஆண்டு தஞ்சை பெரிய கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று வழக்கம் போல் இராசராச நாடகம், நாட்டிய நாடகம் நடைபெற்றது. இராசராசர் விழாவிற்கு வந்திருந்தார். பட்டத்தரசியும், இளவரசிகளும், திருச்சுற்றிலுள்ள மேல் மாடத்தில் அமர்ந்திருந்தனர். முழுமதி வானில் தண்ணிலவைப் பொழிய, விளக்குக் கம்பங்களில் தீவர்த்திகளின் ஒளி நிலவொளிக்கு உதவ, நாடக சாலை மண்டபத்தில் இராசராச விஜயம் நாடகம் நடிக்கப்பட்டது.

முரசும், மத்தளமும், உடுக்கையும் முழங்க சகடையும், சரடிகையும், உவச்சப் பறையும், முரலியம், வங்கியம், பாடலியம், சங்கும் ஒலிக்க, வீணையும் யாழும் இன்னிசை எழுப்ப இராசராசன் பெருமை கூறும் நாட்டிய நிகழ்ச்சியில் அவர் வீரமும், புலமையும், இறை பற்றும் சித்திரிக்கப்பட்டன.

நாடகம் முடிவடைந்தது. பல ஆண்டுகளாக அந்த நாடகத்தை முன்னின்று நடத்திவரும் ஹாஸ்யன் விக்கிரமாதித்த அச்சன் தன் தள்ளாத வயதிலும் உற்சாகத்துடன் சுவை குன்றாது நடத்தினான். அடுத்த ஆண்டு கலந்து கொள்ள இயலுமா என்ற ஐயம் ஏனோ அவன் உள்ளத்தில் எழுந்தது.

நாடகம் பார்க்கும்போது இராசராசருக்கும் பழைய நினைவுகள் ஒவ்வொன்றாகத் தோன்றின. இப்போதெல்லாம் தனக்கு நினைவாற்றல் குறைவதை அவரே உணர்ந்தார். நிகழ்ச்சி முடிவில் பல ஆண்டுகள் இராசராச நாடகத்தை முன்னின்று நடத்தியதற்கு அச்சனுக்குச் சிறப்புச் செய்ய விரும்பினார். இராசராச நாடகப் பெரியன் என்ற பட்டத்தையும், பொன்னையும், மணியையும் அளிக்க முடிவு செய்தார்.

தன் புதல்வன் இராசேந்திரனை அழைத்து, விக்கிரமாதித்த அச்சனுக்குப் பெரும் பரிசும் பட்டமும் வழங்குமாறு கூறினார்.

இராசேந்திரன் சற்று திகைத்தார். "சக்ரவர்த்தி இருக்கும்போது நான் பாராட்டுவதா?"

"இராசேந்திரா! உன் கரத்தால் இந்தப் பட்டத்தை அவனுக்கு அளித்துச் சிறப்பு செய். அடுத்த ஆண்டு நான் இருந்து அவனுக்குச் சிறப்புச் செய்வேன் என்பது சந்தேகமே. எனக்குப் பிறகு அவனை நீ ஆதரித்து இந்த நாடகத்தை இடையறாது நடத்த வழிவகை செய்ய வேண்டும்" என்றார் இராசராசன், மீண்டும் இராசேந்திரனின் ஐயத்தைப் போக்கும் வகையில்.

வீரமாதேவி அந்த நாடகத்தை மிகவும் கூர்மையாகக் கவனித்தாள். நூற்றுக்கணக்கானவர் அரங்க மேடையில் அமர்ந்திருப்பதைக் கண்டாள். நாட்டியமாடும் பெண்களையும், அவர்கள் அணிந்திருந்த ஆடையையும், அவர்கள் செய்திருந்த ஒப்பனையையும் குறிப்பாகக் கவனித்தாள். அவர்களுடைய விழிகளின் அசைவையும், துள்ளி மறையும் நளினத்தையும் அவள் குறிப்பாக நோக்கினாள். சோழ நாடு நாட்டியக் கலையை வளர்க்கும் சிறப்பை மனத்துக்குள் புகழ்ந்தாள். அவர்களையெல்லாம் எங்கோ கண்டிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. நினைவுபடுத்திக் கொள்ள முயன்றாள்.

அவள் தனியே அமர்ந்து இராசராச நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தாள். தன் அருகே இளவரசர் வந்தமர்வார் என்று ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்தாள்.

இராசேந்திரன் மற்ற இளவரசிகள் சூழ வீற்றிருந்து நாடகத்தை மெய்மறந்து ஆனந்திப்பதைக் கண்ட வீரமாதேவிக்கு வருத்தம் ஏதும் ஏற்படவில்லை. அவர்களுக்குப்



பிறகு தானே அவருக்கு தான் சொந்தம் என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். நாடகம் முடிவதற்குச் சற்று முன்பே அவள் அங்கிருந்துப் புறப்பட்டுவிட்டாள். ஒரே ஒரு காவல் வீரன் அவளுக்குத் துணையாக சிவிகையுடன் வந்தான்.







இரவு நடுச் சாமம் கழித்தே இராசேந்திரன் வீரமா தேவி இருக்கும் இல்லத்திற்கு வந்தார்.

நாடகத்தை அவளுடன் இருந்து காணாததற்காக வீரமா தேவி வருத்தமுற்றிருக்கப் போகிறாள் என்று எண்ணி வந்தவருக்கு, அவள் அளித்த குதூகலமான வரவேற்பு வியப்பை அளித்தது.

"வருக வருக! சோழநாட்டு இளவரசரே, வருக! கடாரங்கொண்ட பெரு வீரரே, வருக! வருக!" என்று ஓடி வந்து இரு கரம் நீட்டி வரவேற்றுச் சிறு குழந்தைபோல் தழுவிக்கொண்டாள்.

மேனியெங்கும் பருவ எழில் கோலமிட்டிருக்கும் அந்தப் பெண் மயிலின் ஆலிங்கனத்தால் இராசேந்திரனுக்கு மெல்லிய அதிர்ச்சி ஏற்பட்டது. 'இவளைப் புரிந்து கொள்ள முடியவில்லையே!'

இராசேந்திரனின் உள்ளத்துணர்ச்சிகளைப் பிரதி பலிக்கும் முகத்தை நோக்கி, கிண்கிணி ஓசைபோல் சிரித்த வீரமாதேவி, "நேற்று நான் எடுத்த முடிவிற்கு நேர் மாறாக என் நடவடிக்கை இப்போது இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? நான் இப்போது உங்கள் குழந்தை. சிறிது நேரத்தில் உங்களுக்கு ஆலோசனை வழங்கும் ஆசானாவேன். பிறகு உங்கள் தோழியாவேன். ஆனால் என்றும் உங்கள் பத்தினி என்பதை மறந்து விடாதீர்கள்" என்று கூறி மீண்டும் கலகலவெனச் சிரித்தாள்.

புரியாத புதிராக விளங்கும் வீரமாதேவியை மெல்ல அணைத்தவாறு, நடுக்கூடத்தை அடைந்தார். அஞ்சா நெஞ்சத்தோடு போர்க்களத்தில் சமர் புரியும் அவர் கரங்கள் ஏன் நடுங்குகின்றன?

"இளவரசரே! நான் நேற்று ஒன்று சொன்னேனே நினைவிருக்கிறதா?" என்று வீரமாதேவி அவர் மார்பில் முகம் புதைத்தவாறு கேட்டாள்.

"நேற்று நீ கூறியது ஒன்றா இரண்டா?" இராசேந்திரன் அவளை இறுக அணைக்க முயன்றார்.

மெல்ல அவர் பிடியினின்று விடுபட்டு, "கனவு ஒன்று கண்டதாகக் கூறினேனே அதை மறந்துவிட்டீர்களா? தங்கள் பெருமை சூரிய சந்திரர் உள்ளமட்டும் அழியாது இருக்கும் என்று சொன்னேனே, அதற்குள் மறந்து விட்டீர்களா?"

'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தார் இராசேந்திரன்.

இந்த அழகு மங்கையின் இதயத்தில் இப்படி ஓர் ஆசையா? என் புகழும் பெருமையும் காலாகாலத்திற்கு நின்று நிலவவேண்டும் என்பதில் இவளுக்கென்ன இவ்வளவு ஆசை? வீரமாதேவியின் ஆர்வத்தை எண்ணி வியப்படைந்த இராசேந்திரன், அவளுடைய உற்சாகத்தைக் குறைக்க விரும்பாதவராய், "ஆகா; அப்படியே செய்து விடுவோம். என் இலட்சியமும், கனவும் அதுதான்" என்றார்.

"தங்கள் தந்தையை உலகம் போற்றுகிறது என்பதன் காரணம் இப்போது புரிகிறது. நாட்டிய நாடகம் அவர் வாழ்க்கையை விவரிக்கிறது. பெரிய கோயிலில் உள்ள சித்திரமும், சிற்பமும் அவர் புகழை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு உலகுக்கு நினைவுபடுத்தியவாறிருக்கும். என் ஆருயிரே! அவை போன்று தாங்களும் ஓவியக்கூடம் அமைக்க வேண்டும். நடனக் கலையின் சிறப்பை விளக்கச் சிற்பங்கள் படைக்க வேண்டும். அப்படியொரு மகத்தான கலைக்கோயிலைத் தாங்கள் உருவாக்குவதாக நான் கனவு கண்டேன். இன்று இராசராச நாடகத்தைப் பார்த்தவுடன் என் எண்ணத்திற்கு மேலும் உறுதி ஏற்பட்டது".

சிறு குழந்தைபோல் அவள் கரம்கொட்டிக் குதித்து, "என் கனவு நனவாகப் போகிறது. அதற்காக் சகல தியாகங்களும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றாள் வீரமாதேவி. அவள் விழிகளில் மின்னிய ஆர்வ ஒளியைக் கண்ட இராசேந்திரன், "என் அன்பிற்கினியவளே! எந்த நிகழ்ச்சியை நாம் சித்திரமாக வரைவது? சிற்பமாக எதை வடிப்பது?" என்று கேட்டார். தொடர்ந்து, "வீரமாதேவி! பெரியகோயில் என் தந்தையின் பரந்த மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டு. அவர் போர்க்களத்தில் கழித்த நேரத்தை விடக் கலைக்கூடத்தில் சிந்தித்து வாழ்ந்த நேரமே அதிகம். அவரைச் சுற்றி எப்போதும் ஓவியர்கள், சிற்பிகள், நடன மாதர்கள், நடன ஆசிரியர்கள், அவருக்கு உறுதுணையாக இருந்து யோசனை கூறுவார்கள். நானும் அவரருகே இருந்து கவனித்த காலமுண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக என் தந்தை செய்த முன்பிறப்புப் புண்ணியம் நம்பியாண்டார் நம்பியும், கருவூர்த்தேவரும் அருளாசி



யுடன் வழிகாட்டுதல்களால் அவர் பக்தியையும், கலையையும் வளர்த்தார்" என்றார்.

வீரமாதேவி இப்போது தன் அழகிய விழிகளை மூடிக் கொண்டாள். மூடிய விழிகள் தாமரை மொட்டுகள்போல் காட்சியளித்தன. மதிவரக் கண்டு மூடிய தாமரையின் உள்ளே கருவிழிகள் சிக்கியதுபோல் அவை காட்சியளித்தன.

மதியின் உதயம் கண்டு மூடிய தாமரைக்குள்ளே சிக்கிய கருவண்டுகள்போல் மூடிய இமைக்குள்ளே கருவிழிகள் இருப்பதை அவர் கற்பனை செய்து கொண்டார். இராசேந்திரன் மெல்ல, 'ஆஹா...' என்று பரவசப்பட்டுக் கூறினார்.

அவள் விழிகளைத் திறக்காமலே, "எதைக் கண்டு ரசித்துப் பாராட்டுகிறீர்கள்?" என்றாள்.

"விழிகள் மூடியிருக்கின்றன. அதன் வடிவம் என்னைக் கவிபாட வைத்துவிடும்போல் தோன்றுகிறது. செவ்விதழ்கள் ஏதோ முணுமுணுக்கின்றன. என்ன நினைக்கிறாய், வீரமாதேவி?"

"கருவறையின் திருச்சுற்றிலே நான் பல அரிய காட்சிகளைக் கண்டேன. அந்தச் சித்திரங்கள் எதை உணர்த்துகின்றன என்று எனக்கு விளங்கவில்லை என்றாலும், ஆகா! அந்த உயிர்ச் சித்திரங்களின் வடிவழகைப் புகழ்வதா? வண்ண நேர்த்தியை எண்ணி வியப்பதா?

"மிகக் குறுகிய இடத்தில், ஓவியங்களை எவ்வாறு அமைத்து சுவர்க்க புரியை அங்கே படைத்தார்கள்? நான்கு தந்தங்களுள்ள யானையின் கம்பீரத்தைப் புகழ்வதற்கு வார்த்தைகள் இல்லை. அந்த யானையின் மீது போர்த்தப்பட்டிருக்கும் துகிலின் வேலைப்பாட்டைப் புகழ்வதா? அந்த யானையின் மீது ஓர் ஆடவர் கையிலுள்ள தாளத்தினால் தாளம் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கிறார். பாடிக் கொண்டிருக்கிறார். அவர் யார்? அவர் அருகே குதிரை மீது அமர்ந்து ஒருவர் விரைகிறார். வான் உச்சியில் கந்தர்வர்கள் கூட்டங் கூட்டமாக விரைந்து வருகிறார்க்ள். சிலர் இசைக் கருவிகளை மீட்டுகிறார்கள். ஏன் அப்படிச் செய்கிறார்கள்?"

"ஒவ்வொரு சித்திரத் தொகுதியும் கதையொன்றைச் சொல்லுகின்றன. நீ இப்போது விவரித்தது சுந்தரமூர்த்தி

சுவாமிகளின் திருச்சரித்திரத்தில் ஒரு பகுதி: அவர் சிவபெருமானைக் காண, கயிலை நோக்கி வெள்ளை யானை மீது செல்கிறார். அவர் அருகே அவருடைய உயரிய நண்பர் சேர அரசர் சேரமான் பெருமாள். அவர்களை மலர் தூவி கயிலையில் வாழும் கந்தர்வர்கள் வரவேற்கிறார்கள்".

"அந்தக் கந்தர்வர்களுள் ஒருவர் என்னை மிகவும் கவர்ந்துவிட்டார்".

"யாரவர்?"

"உங்களைப் போன்று மீசை வைத்திருக்கிறார், தலை முடியை அள்ளிச் செருகியிருக்கிறார் அதில் பூச்சரம் தொங்குகிறது".

இருவரும் இப்போது பெரிதாகச் சிரிக்கிறார்கள். இரவு வேளையில் சிரிப்பொலி அரைத் தூக்கத்தில் இருந்த காவலர்களைத் திடுக்கிட்டு விழித்தெழச் செய்கிறது. அருகிலிருந்த மரங்களிலிருந்து பறவைகள் சிறகடித்துப் பறந்து சென்று, பொழுது புலராததைக் கண்டு மீண்டும் கூட்டில் வந்தமர்கின்றன

"உனக்கு ஒரு நாள் நம்பியாரூரார் என்று அழைக்கப்படும் சுந்தரர் கதையைச் சொல்கிறேன்".

"எனக்குத் தெரியும். திருவாரூரிலே அவருக்கு ஒரு காதலி. உங்களுக்கும் ஒருத்தியிருந்ததாகச் சொல்கிறார்களே!"

இராசேந்திரர் மெல்லச் சிரித்து "என்னைப் பற்றி எல்லாச் செய்திகளையும் தொகுத்தறிந்திருக்கிறாயா?"

"என் தோழி மிகுந்த அறிவாளி. அவள் எச்சரித்தாள். உன் தலைவரிடம் பல பெண்கள் மயங்கி இருக்கிறார்கள். அவர்களுள் நீயும் ஒருத்தி என்று என்னைச் சீண்டியிருக்கிறாள். நான் அப்போதே அவளிடம் சொன்னேன், "அவர்கள் என் தலைவரின் உடலழகைக் கண்டு மையல் கொண்டார்கள். நான் அவர் உள்ளத் தடாகத்துத் தாமரையாக மலர விரும்புகிறவள்" என்று.

இராசேந்திரர் விழிகள் கலங்கின. நிலவொளியில் விழிக் கோளத்து நீர்த்துளி பளபளத்தது. அதைக் கண்ட வீரமாதேவி, தன் மெல்லிய விரல்களால் துடைத்தாள்.



முந்தானையால் அவர் மேனியில் மெல்ல அரும்பி இருந்த வியர்வையைத் துடைத்தாள்.

"நாழிகை போவது தெரியாமல் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறோமே, இதில் ஏற்படும் இன்பம் இந்தப் பொய் உடல் தருமா?" என்று வீரமாதேவி கேட்டாள்.

"ஓ! நான் பண்டித சோழன். என்னை விடப் பலமடங்கு அறிவாற்றல் மிக்க நீ மகா பண்டிதை! சுந்தரர் வரலாறுபோல் சிறந்த ஒன்று இல்லை. அதனால்தான் என் தந்தை, அவரது வரலாற்றைத் தேர்ந்தெடுத்தார். நான் விரும்பிப் பாடி மகிழும் பதங்களை இயற்றியவர் சுந்தரர். சுந்தரர் தேவாரங்கள் கற்றதுண்டா?"

வீரமாதேவி சொன்னாள்; "சுந்தரரின் தேவாரப் பாடல்கள் சில அறிவேன். பாடிப் பரவசமடையவும், ஆடி மகிழவும் ஏற்ற பாடல்கள். சதங்கை ஒலிக்க, கரங்கள் நெளிய, இடை துவள, விழிகள் ஆயிரம் பொருள்களை விளக்க ஏற்ற பாடல்கள்" என்று கூறி வீரமாதேவி ஒரு பாடலைப்பாடினாள்.

**'கங்கை தங்கிய சடை உடைக் கரும்பே கட்டியே**
**பலர்க் குங்களை கண்ணே**
**அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே அத்தா**
**என் இடர் ஆர்க்கெடுத்து உரைக்கேன்...'**

என்று பாடும்போது குறிக்கிட்ட இராசேந்திரன், 'என்னிடம் தான் உரைக்க வேண்டும்' என அவளைக் குறிப்பால் உணர்த்தி, "உனக்கு என்ன இடர் வீரமா தேவி?" எனக் கேட்டார். வீரமாதேவி மறுமொழி கூறவில்லை.

"சிவபெருமானைப் புகழ்ந்து பாடும் போதெல்லாம் சுந்தரர் கங்கையை இணைக்காமல் பாடுவதில்லையே ஏன்?" என்று கேட்டாள்.

"எனக்குக் கங்கையென்ற சொல் மிகவும் பிடிக்கும். கங்கை நதிக்கரைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. இந்த மண்ணுலகத்திற்குக் கங்கையைக் கொண்டு வந்த வரலாற்றைப் பலமுறை கேட்டு மகிழ்வேன்" என்றார்.

"இங்கே உங்களிடமிருந்து நான் வேறுபடுகிறேன். எனக்கு முதலில் உங்களைத்தான் பிடிக்கும். பிறகுதான் கங்கையை!" என்று கூறவும் இருவரும் நகைத்தனர்.

"இன்னொரு பாட்டு" என்றார் இராசேந்திரன். வீரமாதேவி இனிய குரலெடுத்துப் பாடினாள்.

**'பொன்னவன் பொன்னவன் பொன்னைத் தந்து என்னைப் போகவிடா**
**மின்னவன் மின்னவன் வேதத்தின் உட் பொருளாகிய**
**அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால்**
**என்னவன் என்னவன் என்மனத்து இன்புற்றிருப்பனே'**

பாதங்கள் தரையில் தாளமிட, தானே ஆடுவதுபோல் உடல் மெல்ல ஆட அவள் பாடினாள். பாடி முடித்தவுடன் இராசேந்திரன் அவளைப் பாராட்டி, "எங்கே மற்றொரு முறை பாடு" என்றார்.

அவள் பாடினாள். இராசேந்திரர் பாட்டின் பொருளுக்கு ஏற்ப ஆடத் தொடங்கினார்.

வீரமாதேவி வியப்புடன் நோக்கினாள். சகல கலைகளிலும் வல்லவர். இவர் என்னவர் என்னவர் என்று அவள் உள்மனத்தில் ஒலி எழுந்தது.

கதிரவன் வருகைக்குக் கீழ்வானம் கட்டியம் கூறத் தொடங்கிவிட்டது. புள்ளினங்கள் கலகலவென ஒலியெழுப்பிப் பறந்தன.

அந்த மாளிகையின் வெளியே வீரர்கள் இருவர் வந்து மிக்க மரியாதையுடன் நின்றனர். மாளிகை அதிகாரியிடம் மரியாதையுடன் செய்தி ஒன்றைத் தெரிவித்தனர்.

அதிகாரி பரபரப்படைந்தார். மேல் மாடத்தில் இளவரசர் உறங்காது பாடியும் ஆடியும் களிப்புடனிருக்கிறார் என்பது அவருக்குத் தெரியாது.

மேல்மாடத்துக் கூடத்து வாயிலருகே வந்து கைகட்டி வாய் பொத்தி நின்று, இளவரசரிடம் காவலர்கள் கொண்டு வந்த செய்தியைத் தெரிவித்தனர்.

ஒருகணம் இராசேந்திரன் திடுக்கிட்டார். ஆனால் அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல், "வீரமாதேவி! மிக முக்கியமான அலுவல். சென்று வருகிறேன். நாளை நாம் ஒரு சிறு கிராமத்திற்குச் செல்கிறோம்" என்றார்.

மீண்டும் வரவிருக்கிற அன்றைய இரவையும், அதற்கு மறுநாள் பயணத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தாள் வீரமாதேவி.





## 39. வாரிசு உருவாகிறதா?

இராசேந்திர சோழ தேவரின் வருகைக்காக வீரமாதேவி காத்திருந்தாள். மேல்மாடத்துச் சாளரத்தின் வழியே தெரு வாசலைப் பார்த்தவாறு காத்திருந்தாள்.

உள் கூடத்தில் அமர்ந்து, வீதியில் குதிரையின் குளம்படி ஓசை கேட்கிறதா என்று உற்றுக் கேட்டவாறிருந்தாள். அந்தப் போதில் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே அவள் அறிய மாட்டாள்.

அந்த மாளிகையில் வீரமாதேவிக்கு வேண்டிய பணிவிடைகள் செய்ய நியமிக்கப்பட்டிருந்த பொன்னரசி, அவள் அருகே வந்து நின்று மோன நிலையில் வீரமாதேவி அமர்ந்திருப்பதைக் கண்டு அதிசயப்படுவாள்.

"அம்மா! நேரமாகிறது. எழுந்து நீராடி வாருங்கள். உங்களுக்குப் பிடித்த உணவு வகைகளைச் சமைத்து வைத்திருக்கிறேன்" என்று சொல்வாள். ஊஹூம். வீரமாதேவி தன் நிலையிலிருந்து மாறமாட்டாள்.

'அம்மாவுக்கு என்ன நேர்ந்துவிட்டது?' என்று பொன்னரசி தோட்டத்தில் வேலை செய்பவரைக் கேட்பாள்.

அவர் தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தபடி, "பொண்ணு! உனக்குத் தெரியாததா எனக்குத் தெரியப் போகிறது? உனக்கு மிஞ்சித்தானே எனக்கு..." என்று

கூறியவர், "அம்மாவிடம் ஏதோ மாறுதல் என்று எதை வைத்துச் சொல்கிறாய்?" என்று ஆவலுடன் கேட்டார்.

"எனக்குத் தெரியாதா? ஒரு நொடியிலே புரிந்து கொண்டு விடுவேன்" என்று சொல்லத் தொடங்கியவள் ஒன்றுவிடாமல் விவரித்தாள்.

சோழ இளவரசர், வீரம்மாள் மீது மிகுந்த ஆசை கொண்டிருப்பதையும், அவளை ஆடச் சொல்லி ரசிப்பதையும் இரவு நேரம் போவது தெரியாமல் இருவரும் ஆடிப் பாடி மகிழ்வதையும் அவள் கதைபோல் விவரித்தாள். தோட்டக்காரன் மகிழும் வண்ணம் அவள் கற்பனை கலந்து கூறினாள்.

அவள் கூறியவற்றுள் மிக முக்கியமானது இது. "ஏழெட்டு நாள்களுக்கு முன்பு ஒருநாள் இரவு விடிய விடிய வீரம்மாளும், இளவரசரும் ஆடுவதும் பாடுவதுமாகக் குதூகலமாக இருந்தார்கள். பொழுது புலரும் நேரத்தில், தஞ்சை மாளிகையிலிருந்து செய்தி ஒன்று வந்தது. இளவரசர், வீரம்மாளிடம் ஏதோ கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

"அவர் சென்றதிலிருந்து, வீரம்மாள் முகம் வாடியது. குளித்துப் புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்றாள். என்னதான் அவ்வளவு நேரம் கடவுளிடம் வேண்டிக் கொண்டு இருந்திருப்பாளோ -, பிறகு பகல் படுத்தவள் பொழுது சாயும் வரையில் உறங்கினாள். பிறகு எழுந்து சீவிப் பொட்டிட்டுச் சிங்காரித்துத் வீதி வாயிலை நோககியபடியே இருநதாள. இரவு முதல சாமத்தில் மேல மாடத்திற்குச் சென்றாள. பலகணியின் வழியே வீதியை நோக்கியவாறு இருந்தாள். எவ்வளவு நேரம் இருந்திருப்பாளோ, விடியும் முன்பு நான் மேல் மாடம் சென்றபோது தரையில் படுத்திருந்ததைப் பார்த்து, "தேவி, தேவி! எழுந்திருங்கள்" என்று கூறி மஞ்சத்தில் படுக்க வைத்தேன். குளிரால் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. போர்வையை எடுத்துப் போர்த்தினேன். அந்த முகத்தைக் கண் இமைக்காமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். கள்ளங் கபடமற்ற முகம்..." பொன்னரசி சற்று நிறுத்தினாள்.

தோட்டக்காரர் கையைக் கொட்டி ஒரு கரத்தை முகவாயில் வைத்து, "அடி, பொன்னரசி! நீயே பாராட்டு



கிறாய என்றால் அதற்குக் காரணம் இல்லாமல் இருக்காது. கள்ளமுள்ள மனமும், கபடம் நிறைந்த கண்ணும் இருக்கும் ஒரு பெண் நம் இளவரசரின் ஆசை நாயகியாக வாய்த்திருந்தால் நீ எப்படி நடந்து கொள்வாய் என்று எனக்குத் தெரியாதா? இந்த மாளிகையின் பொறுப்பான காரியங்களைச் செய்ய உன்னைத் தேர்ந்தெடுத்தபோதே நான் நினைத்தேன்!" என்று கூறிச் சிரித்தார்.

பொன்னரசி அவர் கன்னத்தில் இடிப்பதுபோல் கையை வீசி, "என்ன சொன்னே தாத்தா? இதுவரை கொடுத்து வந்த மரியாதை குறைந்துவிடும். இளவரசர் இதுவரை சேர்த்துக் கொண்ட இளவரசிகள் அனைவருக்கும் நான் பணி புரிந்திருக்கிறேன். என்னைக் கேட்காமல் ஒரு காரியமும் அவர்கள் செய்ததில்லை. இளவரசர் பெற்றெடுத்து இன்று தோளுக்கு மேல் வளர்ந்து விட்ட பிள்ளைகளை நான் தூக்கி வளர்த்திருக்கிறேன்... ஹூம்" என்று நிஜமாகவே சீறினாள்.

"தெரியாதா நீ வளர்த்த இலட்சணம்? சுந்தரன் உன்னால்தான் குட்டிச்சுவரானான்".

"என்ன பேசுகிறாய்? இனி உனக்கு நான் வார்த்தையில் மரியாதை கொடுக்கப் போவதில்லை. சுந்தரன் இன்று மதுரைக்கு அரசர், இந்தப் பொன்னரசி தவறாக வளர்க்க மாட்டாள்".

"சரி, சரி... உன்னை வேடிக்கைக்குச் சீண்டினேன். ஏதோ சொல்ல வந்தாய். நான் பேச்சைத் திசை திருப்பி விட்டேன்".

"அப்படி வாய்யா வழிக்கு - நான் உண்மையாத்தான் சொல்கிறேன்; இளவரசர் கண்டெடுத்த வீரம்மாள் மற்ற இளவரசிகளிலிருந்து முற்றிலும் வித்தியாசமானவள் என்று எனக்குத் தோன்றிவிட்டது. இளவரசருக்கு ஏற்ற இளவரசிதான்".

"பொன்னரசி! தெரியாமல்தான் கேட்கிறேன்? அதெப்படி இளவரசி, இளவரசி என்று வார்த்தைக்கு வார்த்தை கூறி நீ வீரம்மாளுக்குப் பட்டப்பெயரைச் சூட்டிவிட்டாய்? எங்கோ கிராமத்துப் பெண்ணின் அழகில் மயங்கித் தன்னுடன் அழைத்து வந்துவிட்ட ஒருத்தியை எப்படி இளவரசி என மற்றவர்கள் ஒப்புக் கொள்வார்கள்?" தோட்டக்காரர் தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்டார்.

பொன்னம்மாள் கவலையை முகத்தில் வரவழைத்துக் கொண்டு, "தோட்டக்காரரே! நீங்களும் இங்கே ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்கிறீர்கள். உங்கள் அளவுக்கு வயதாகும்போது எனக்கும் அந்தப் பெருமை வந்துவிடும்" என்று கூறியபோது தோட்டக்காரர் குறுக் கிட்டு. "நூறு வயது அனுபவம் வந்துவிடும்... அது சரி. உனக்கு இப்பொழுது என்ன வயதிருக்கும்? அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் இருக்கிறாய்?" என்று கூறிவிட்டு, தோட்டக்காரர் அவள் கை வீச்சிலிருந்து தப்பும் தொலை விற்கு நகர்ந்து கொண்டார்.

"வயதாக ஆக புத்தி வக்கிரமடைகிறதா? உம்... உன்னிடம் மனம் விட்டுப் பேச வந்தேனே, என்னை நானே நொந்து கொள்ள வேண்டும்" என்று சலிப்பும் கோபமும் சேரப் பேசிய பொன்னரசியை, தோட்டக்காரர் சமாதானப் படுத்தி மாளிகைச் செய்தியை அறிய ஆவல் கொண்டார்.

வீரம்மாளின் கலைத் திறமை மீது மோகங்கொண்ட இளவரசர், அவளை முறைப்படித் திருமணம் செய்து கொண்டு வீரமாதேவி ஆக்கி பழையாறையில் புதிய மாளிகையில் குடியமர்த்தின செய்தியில் தொடங்கி, பொன்னரசி விவரிக்கத் தொடங்கினாள்.

சக்கரவர்த்தி இராசராச சோழர் தன் மகனின் செய்கையை ஆசிர்வதித்தார். பட்டத்தரசியும் அரை குறை மனத்துடன் ஆமோதித்தார். ஆனால் மற்ற இளவரசி களுக்குப் பொறுக்கவில்லை. தங்களுக்கு வயதாகி, அழகு குறைந்ததால் இளவரசர் இராசேந்திரன், அழகும் கலைப் புலமையும் உடைய வீரமாதேவியைச் சேர்த்துக் கொண் டிருப்பதாக நினைத்த வீரமாதேவியை அலட்சியப்படுத் தினர். குறைவாகப் பேசினர். அவள் அரச பரம்பரை யைச் சேர்ந்தவளல்லள் என்று குறை கூறினர் என்ற செய்தியை நேரே இருந்து கேட்டவள்போல் விவரித்தாள்.

பொன்னரசிக்கு ஒவ்வோர் அரச மாளிகையிலும் அங்கு நடைபெறுவனவற்றைத் தெரிவிக்க ஒருவன் அல்லது ஒருத்தி உண்டு.

"அவர்களுடைய அலட்சியப் போக்கைக் கேட்டு வீரமாதேவி பயந்துவிட்டாளா?" தோட்டக்காரர் மேலும் செய்தியை அறிய விரும்பினார்.



"ஓ! எங்க இளவரசி அதற்கெல்லாம் அஞ்சவில்லை. அவர்களை எதிர்த்துச் சபதமே செய்துவிட்டு வந்திருக்கி றாள். இளவரசரிடம் அவள் கண்ணீர்விட்டு, தன் மன வேதனையைச் சொல்லும்போது நான் கேட்டுக் கொண் டிருந்தேன்".

"ஒட்டுக் கேட்கலாமா?"

"நானாகவா கேட்டேன்? இரவு நெடுநேரமாகிறதே இன்னும் தூங்கவில்லையா என்று கேட்க மேல் தளம் சென்றேன். காதில் விழுந்தது".



"சோழ நாட்டு அரியணைக்குப் போட்டியிட ஒரு வாரிசை உருவாக்கவே வீரமாதேவி திட்டமிட்டு வந்திருப்ப தாகப் பேசிக்கொண்டார்களே?"

"அதனால்தான் வயதான இளவரசிகளுக்குப் பொறாமை எழுந்தது. வீரமாதேவியைத் தஞ்சையி லிருந்தும், பழையாறையிலிருந்தும் விரட்டிவிடத் திட்ட மிட்டிருக்கிறார்கள்".

"ஐயோ..."

"கவலைப்படாதீர்கள், தோட்டக்காரரே! வீரமாதேவி பார்த்தால் பசு போலிருக்கிறாள். அவள் அன்று புலி போல் சீறிவிட்டாள்".

"அப்படியென்றால் விரைவில் இளவரசர் இராசேந்திர சோழருக்கு மற்றோர் ஆண்மகன் பிறக்கப் போகிறா னென்றுசொல்லு..."





"சும்மாயிரய்யா... உம்மிடம் இதையெல்லாம் பேசியது என் தப்பு. உடனே ஊரெல்லாம் பறை அறைவித்து விடுவீர்களே".

"அம்மணி! வாயைத் திறக்கமாட்டேன். முழுச் செய்தியையும் தெரிந்து கொள்ளாமல் நான் மூச்சு விடமாட்டேன். இளவரசி கருவுற்றிருக்கிறார்களா!" என்ற செய்தியை மட்டும் அறிந்து சொல்லிவிடு!"

"அங்குதான் என் திறமை தோற்று வருகிறது. வீரமா தேவியிடமிருந்து ஒரு வார்த்தையைக்கூடப் பெறமுடிய வில்லை. திடீரென இளவரசர் காலையில் புறப்பட்டுச் சென்ற நாளிலிருந்து, வீரமாதேவியிடம் கலகலப்புக் குறைந்துவிட்டது. வாயைத் திறப்பதில்லை. வேளைக்கு ஆகாரம் உட்கொள்வதில்லை. சாளரத்தின் அருகேயே நேரம் போவது தெரியாமல் அமர்ந்து கொண்டிருந்த தேவி எப்போது உறங்கினார்கள் என்பது தெரியாது. எழுப்பி மஞ்சத்தில் படுக்க வைத்துப் போர்வையை எடுத்துப் போர்த்தினேன். அப்பொழுதுதான் சிறிது நேரம் அமைதி யாய் அவர்கள் முகத்தையே கூர்ந்து கவனித்தேன். என்னையறியாத பாசஉணர்வு ஏற்பட்டது. இளவரசரிடம் அவர்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த பற்றுதலைப் புரிந்து கொண்டேன். விரைவில் தாயாக வேண்டும் என்று மனத்திற்குள் கடவுளை வேண்டிக்கொண்டேன்..."

தோட்டக்காரர் மௌனமாக அவள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

"பொன்னரசி! நீ இப்பொழுது சொன்னதுபோல் கடைப்பிடிக்க வேண்டும். உன் இயற்கைக் குணத்தை வெளிப்படுத்திவிடாதே!" என்றார் தோட்டக்காரர்.

பொன்னரசிக்கு வீரமாதேவியிடம் பற்றும், பாசமும், மரியாதையும் அதிகமாயின.





## 40. 'இறைவனே இரக்கம் காட்டு!'

பொன்னரசி, மறுநாள் காலையிலேயே தோட்டக்காரரைத் தேடி ஒடிவந்தாள்.

அவளுடைய வேகமும் பரபரப்பும், ஏதோ முக்கியமான செய்தியை அவள் தெரிவிக்கப் போகிறாள் என்பதற்குக் கட்டியம் கூறின.

"பொன்னரசி! நீ விரைந்து வருவதிலிருந்து ஏதோ முக்கிய செய்தியைச் சொல்லப் போகிறாய் என்று தெரிகிறது" என்றார் தோட்டக்காரர்.

"தோட்டக்காரரே! இந்த மாளிகையில் நந்தவனத்தைக் கட்டிக் காப்பதுடன் உங்கள் பணி முடிவடைந்து விடுகிறது என்று நினைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள் பொன்னரசி.

"ஊஹூம்" என்று தலையசைத்த தோட்டக்காரர், "பூந்தோட்டத்தில் சிறிது நேரம் வேலைசெய்வது போக மீதி நேரம் தூங்குவது; இல்லாவிடில் உன்னிடம் ஊர் வம்பைக் கேட்டுத் தெரிந்து கொள்வது" என்று சொல்லிவிட்டு, பொன்னரசியின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள ஆயத்தமானார்.



"மாளிகைக்கு யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதைக் கவனிக்கக்கூட உங்களுக்கு நேரமில்லையா?" பொன்னரசி கேட்டாள்.

"என் வேலையல்ல. காவல்காரர்கள் இருக்கிறார்கள். சுற்றி வளைக்காமல் சொல்லு, அரசி" என்று தவிப்பாய்த் தவித்தார், தோட்டக்காரர்.

"நேற்று மாலை பொழுது சாய்வதற்குச் சற்று முன்பு, வீரமாதேவிக்கு என்ன தோன்றியதோ என்னவோ குளிப்பதற்கு எழுந்தாள். குளித்து முடித்துப் புத்தாடை அணிந்து, தலையில் முல்லையைத் தொடுத்து அணிந்துகொண்டாள். ஆபரணப் பெட்டியினின்று நகைகளை எடுத்து அணிந்து கொண்டாள். என்னை அழைத்தாள். 'பட்டீசுவரம் கோயிலுக்குச் செல்ல நினைக்கிறேன்; வண்டிக்கு ஏற்பாடு செய்துவிடு' என்றாள். வண்டிக்காரரை அழைக்க அடுத்த வீதிக்குச் சென்று திரும்பி வரும்போது நான் கண்ட காட்சி" என்று கூறி விழிகளை மூடிக்கொண்டு தானே ரசித்தாள்.

"பொன்னரசி! ஆவலை மிக அதிகப்படுத்தி மெல்ல மெல்லச் சொல்லிச் சித்திரவதை செய்யாதே. உடனே சொல்லிவிடு" என்று தோட்டக்காரர் பரபரத்தார்.

இமைகளை மூடிக்கொண்டே, "ஆஹா... அந்தக் காட்சியை எப்படி விவரிப்பேன்? நடுக்கூடத்தில் சிறு பீடத்தில் தும்பைப் பூவைப் பறிக்கும் வெண்ணிற ஆடை அணிந்து முதியவர் ஒருவர் அமர்ந்திருந்தார். வெள்ளிச் சரமெல்லாம் ஒன்றாய்க் குவித்தது போன்ற சடை முடி. மெலிந்த தோள்கள். கூர்மையான பார்வை. பேசும்போது பளிச்சிடும் பற்கள். சித்தரைப் பற்றி என் தந்தை வர்ணித்திருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரா இவர் என்று எண்ணுகிறேன்.

"வீரமாதேவி அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்குகிறாள். அங்கு மிங்கும் பரபரப்புடன் அலைந்து தட்டில் கனி வகைகளைக் கொண்டு வருகிறாள்.

"சித்தர் மாங்கனி ஒன்றைக் கையில் எடுத்து அதை வீரமாதேவியிடம் கொடுக்கிறார். அவள் இரு கரங்களையும் பயபக்தியுடன் நீட்டிப் பெறுகிறாள்.

"பொன்னரசி, பொன்னரசி" என்று வீரமாதேவி கூப்பிடுவது என் காதில் வீழ்கிறது. கூடத்துக் கதவு ஓரமாக மறைந்து நிற்கிறேன்.

"யாரையும் அழைக்காதே! சில முக்கியச் செய்திகளைக் கூறத்தான் வந்தேன். நாளைக்குத் தஞ்சை புரிக்குச் செல்கிறேன். இராசேந்திரனுக்குச் சோழ மகுடத்தைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு சக்கரவர்த்தி சொல்லி அனுப்பியிருக்கிறார். உன்னை அந்த முடிசூட்டு விழாவிற்கு அழைக்க மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அதற்காக வருத்தப்படப் போகிறாயா பெண்ணே?" என்று சித்தர் கேட்கிறார்.

"இல்லை, இல்லை" என்று தேவி தலையசைக்கிறாள். ஆனால் அவள் கேட்கிறாள் :

"ஏன் என்னை அழைக்க விருப்பப்படவில்லை, சித்த மகாபுருடரே! சொல்லுங்கள்".

கருவூர்த் தேவர் சிரிக்கிறார்.

"பெண்ணே! உன்னைத் தன் உயிருக்கும் மேலாக இராசேந்திரன் நேசிக்கிறார் என்பது உனக்குத் தெரிந்திருக்கிறதா?" வினவுகிறார்.

சற்றே நாணத்துடன் தலையசைத்து, தான் அதை முற்றிலும் உணர்ந்திருப்பதைப் புலப்படுத்திக் கொண்டாள்.

"தன் இதய சாம்ராஜ்யத்திலே உனக்கு மகுடம் சூட்டிய பிறகு மற்ற மகுடம் உனக்கு எதற்கு? நீயே அதை உணர்ந்திருக்கிறாய் என்பதையும் நான் அறிவேன். பெண்ணே! இராசேந்திரனுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள் அவனுக்குப் பெரும் கடமைகள் உள்ளன. மகுடாபிஷேகம் முடிந்தபிறகு அவன் திக் விஜயம் செய்யப் போகிறான். நீ ஓர் உறுதியை எனக்குத் தரவேண்டும். அவன் புகழ் காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் நிலைத்து நிற்க நீ அவனைவிட்டுப் பிரியாது உறுதுணையாக இருக்கவேண்டும். சொன்ன சொல் தவறாமல் நடப்பாயா?"

வீரமாதேவி, 'சுவாமி' என்றலறிவிட்டாள். அவள் விழிகளிலிருந்து நீர் அருவிபோல் பெருகிற்று. உணர்ச்சி மிகுதியால், "சித்த மகாபுருடரே! முதன் முதலில் தங்கள் தரிசனம் எனக்குக் கிட்டியதிலிருந்து இந்த உலகத்து அற்ப ஆசைகளை நான் கனவில்கூட நினைத்ததில்லை. அவர் புகழ் ஓங்க, நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும்



என்பதுதான் என் கனவு; இலட்சியம். அதற்காக நான் எந்தவிதத் தியாகமும் செய்ய உறுதி பூண்டு விட்டேன். என்னை மற்ற இளவரசிகள் வெறுக்கிறார்கள். அதற்கு அச்சமே காரணம். வருங்காலத்தில் சோழ மகுடத்திற்குப் போட்டியாக நான் வாரிசு ஒன்றை அளித்து விடுவேனோ என்ற பயமே அது. முக்காலமும், முற்றிலும் உணர்ந்த ஞானியே! உங்கள் சித்தம் நான் முன்பே உணர்ந்தேன். இளவரசர் கரம் பிடித்தது, அவரது கலை உணர்வை வளர்க்கவேயன்றி, இந்தச் சரீர இச்சையைப் பூர்த்தி செய்வதற்கு அன்று என்ற தூய ஞானத்தை எனக்கு எப்போதோ வழங்கிவிட்டீர்கள்.

"அழியும் உடலாகிய இந்தக் கோயிலைப் போல் அல்லாது அழியாத மாபெரும் கோயிலை என் தலைவர் படைக்க வேண்டும் என்பதே என் உறுதியான எண்ணம். அந்த மனஉறுதியில் நான் என்றும் தளராமலிருக்க ஆசி கூறுங்கள்!"

வீரமாதேவி அவரது பாதத்தைப் பிடித்துக் கொண்டு விம்முகிறாள்.

சித்தர் மெல்லக் குனிந்து அவளைத் தொட்டு, எழுமாறு செய்தார். இரு கரங்களையும் உயர்த்தி ஆசி வழங்குகிறார்.

"பெண்ணே! இன்னும் இரு நாள்களில் நீ இந்த நகரைவிட்டுப் புறப்படு. கொள்ளிடக் கரைக்குச் சிறிது தொலைவில் காட்டின் நடுவே ஒரு சின்னஞ்சிறு கிராமம் இருக்கிறது. அது ஒரு கலைப் பூரி. அங்குதான் உன் கனவு நனவாகப் போகிறது. இராசேந்திரன் அங்கு வந்து தங்கி உன் உதவியுடன், பெருங்கோயில் ஒன்றை நிர்மாணிப்பார்.

"பெண்ணே! நான் சோழநாட்டிற்கு வந்து ஆற்றிய பணி விரைவில் முடிவடையப் போகிறது. பொதிகை மலைக்குச் செல்ல வேண்டும்" என்று கூறிச் சற்று நிறுத்தி அவளை ஏற இறங்கப் பார்த்தார். அந்த அருள் நோக்கில், மேனியெங்கும் புல்லரிக்க, கண்ணீர்மல்க, சொல் வெளிவராத நிலையில் இதழ்கள் துடிக்க விம்முகிறாள் வீரம்மாள்.

"பெண்ணே! திரை லோக்கிய சுந்தரம் என்ற ஊரை உனக்குத் தெரியுமா?"

வீரமாதேவி தெரியாது என்பதன் அடையாளமாய்த் தலையசைக்கிறாள்.

"நம் அரசர்கள் எழுப்பித்த கோயில் அது. அந்த ஊரில் உன்னைப் போன்று ஒரு மங்கை நல்லாள். அவளுக்கு அந்தத் தலத்து சிவபெருமான்மீது தணியாத காதல். தன் காதலை இறைவன் ஏற்க வேண்டும் என்று துதிக்கிறாள்; துடிக்கிறாள். அவள் படும் வேதனை சொல்லி முடியாது. அவளுக்கு ஓர் உற்ற தோழி. தன் தோழி படும் வேதனையை அறிந்து இறைவனிடம் வேண்டுகிறாள். நான் பாடுகிறேன், நீ திரும்பவும் பாடு..."

வீரம்மாள் விழி நீரைத் துடைத்துக் கொள்கிறாள். அங்கே இருந்த தாளத்தைக் கரத்தில் ஏந்துகிறாள்.

கருவூர்த் தேவர் மெல்லப் பாட, அவள் திரும்பவும் பாடுகிறாள்.

"சரிந்த துகில் தளர்ந்த இடை
அவிழ்ந்த குழல் இளந் தெரிவை
இருந்தபரிசு ஒருநாள் கண்டு
இரங்காய் எம் பெருமானே
முரிந்தநடைமடந்தையர்தம்
முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழவு அணிகொடைத்
திரைலோக்கிய சுந்தரனே"

பாடி முடிக்கிறார். இப்போது வீரமா தேவி அதைத் தொடர்ந்து பாடுகிறாள். அதற்கு ஏற்ப ஆடுகிறாள்".

பொன்னரசி இவற்றை நேரே நடப்பன போல் கூறிச் சற்று நிறுத்தினாள்.

தோட்டக்காரர் ஆடாது, அசையாது பொன்னரசி விவரிப்பதைக் கேட்டவாறிருந்தார். பிறகு, "பொன்னரசி! உன் அறிவாற்றலை நான் இதுவரையில் அறிந்தவனல்லன். நடந்தவற்றை ஒன்றுகூட விடாமல் சொல்கிறாயே. தேவி இன்னும் இனிய குரலோடு பாடியிருப்பாள் என்பதை நான் உணர்கிறேன். ஆனால் ஒருமுறை கேட்டவுடனே அதை அப்படியே பாடுகிறாயே" என்று பாராட்டினார்.

"அந்தப் பாடலை மீண்டும் என்னிடம் பாடி ஆடிக் காட்டினாள். மனத்தில் பதிந்துவிட்டது!"



"கருவூர்ச் சித்தரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரைப் பார்ப்பது பெரிய புண்ணியம். நீ பாக்கியசாலி. பிறகு என்ன நேர்ந்தது?"

"கருவூர்த் தேவர் சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டார். கதவு வரை நடந்து வந்தார். பிறகு அவர் எப்படிப் போனார், எங்கே போனார் என்று தெரியவில்லை. மாயமாய் மறைந்துவிட்டார். அந்தக் கணத்திலிருந்து வீரமாதேவியிடம் புத்துணர்ச்சி மலர்ந்தது.

என்னை அழைத்து, "பொன்னரசி! நான் இந்த மாளிகையிலிருந்து விரைவில் புறப்படப் போகிறேன். என்னுடன் நீயும் வருகிறாயா?" என்று கேட்டாள்.

"பொன்னரசி! நீ என்ன சொன்னாய்?" தோட்டக்காரர் கேட்டார்.

"நானும் தேவியுடன் செல்வேன்".

"நானும் வருகிறேன்" என்று சிறு குழந்தைபோல கேட்டார், தோட்டக்காரர்.

ஏழு நாள்களுக்குள் வீரமாதேவி குதிரை பூட்டிய தேர் ஒன்றில் பழையாறையை விட்டுப் புறப்பட்டாள்.





# 41. 'என் மகள்'

பழையாறையிலிருந்து புறப்பட்ட இரதம் பெரும்சாலை வழியாகச் சென்று, மேற்குத் திசையில் ஒரு சிறு வழியில் திரும்பியது. இருபுறமும் உயர்ந்த மரங்கள் நிறைந்த அந்தக் காட்டுப்பாதையினிடையே சாய்ந்து வீசும் கதிரொளி வெள்ளம்போல் பாய்ந்து வந்து கண்களைக் கூசச் செய்தது.

அருகே இருந்த பொன்னரசியிடம் வீரமாதேவி கேட்டாள்:

"பொழுது சாயும் நேரத்தில் நாம் எங்கே பயணம் செய்து கொண்டிருக்கிறோம்?"

பொன்னரசி சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள்.

அவளுக்கும் தெரியாது எங்கே செல்கிறோமென்று.

தேர்ப்பாகனை நோக்கிக் கேட்டாள். அவன் ஏதும் மறுமொழி கூறாமல் இரதத்தை விரைவாக ஓட்டுவதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தான். இருள் சூழ்வதற்குள் அந்தச் சிற்றூரை அடைய வேண்டும்.

வட்டவடிவமான சூரியப் பந்து மிக வேகமாக மேற்குத் திக்கில் இறங்கி மறைய முயன்று கொண்டிருந்தது.

பாட்டையின் இரு பக்கங்களிலும் நெடிய மரங்கள் அணிவகுத்து நிற்க வட்டக் கதிரவன் கம்பீரமாகச் சுழன்ற



வாறு இறங்கும் காட்சி வீரமாதேவிக்குப் புத்துணர்ச்சியை அளித்தது. கொள்ளிடக் கரையிலும் சில நாள்களில் மேற்குக் கதிரவன் வீடு திரும்புவதைக் கண்டிருக்கிறாள். ஆனால் இது போன்ற புதுமை உணர்வை அவள் அடைந்ததில்லை.

பொன்னரசியை நோக்கி, சிறு குழந்தைபோல் கரங் கொட்டி, "பொன்னரசி! அதோ பார்த்தாயா, சூரியனின் அழகை? செம்பொன் வண்ணத்தில் வட்டவடிவமாக அவன் சுழன்றபடி மேற்கு வானில் இறங்குவதைப் பார்த்தாயா?" என்று கேட்டாள்.

பொன்னரசிக்கு எந்தப் புதுமையும் தெரியவில்லை. அவ்ள் வீரமாதேவியின் குழந்தை உள்ளத்தை எண்ணித் தனக்குள் நகைத்துக் கொண்டாள்.

"என்ன பொன்னரசி? நான் பேசிக் கொண்டே இருக்கிறேன், நீ மௌனமாக இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"மௌனமாயில்லை, தேவி! யோசிக்கிறேன்".

"என்ன யோசனை - ஆழ்ந்த யோசனை? மேற்குத் திசைக் கதிரவன் உனக்குப் புதுத்தெம்பை அளிக்கவில்லையா?"

"இல்லையென்பதற்கு அடையாளமாகப் பொன்னரசி தலையசைத்தாள்.

"என்ன யோசனை? யாரைப் பற்றி? எதைப் பற்றி?" வீரமாதேவி கேட்டாள்.

பொன்னரசி அவளைச் சுட்டிக் காட்டினாள்.

"என்னைப் பற்றியா? என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"கவலைப்படுகிறேன், தேவி".

வீரமாதேவி வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

"என்னைப் பற்றி என் அத்தை கவலைப்படவில்லை. என் ஆருயிர்த் தோழி முத்துவடிவு கவலைப்படவில்லை. மறந்தே விட்டாள். நான் சுகசௌக்கியமாக இருப்பதாக அவள் நினைத்திருக்கிறாள். என் மனத்தை அழுத்தும் கனத்தை அவளுக்கு யார் விளக்குவது?"

"நான் விளக்குகிறேன்! தேவி! இந்தக் காட்டுப் பிரதேசத்திற்கு நீங்கள் வரச் சம்மதித்ததற்குக் காரணம் என்ன என்று சொல்லுங்கள். நான் உங்கள் உயிர்த்

தோழியிடம் தெரிவிக்கிறேன்" பொன்னரசி வீரமா தேவியை நோக்கினாள்.

அவள் முகத்தில் கவலை படர்ந்தது. "எனக்கே தெரியவில்லை; இளவரசரின் கட்டளைப்படி நடக்கிறேன். அவரிடம் மனம் விட்டுப் பேசினேன். அதை நிறை வேற்றுவதற்குத் தக்க இடமிருக்கிறது என்று அவர் தெரிவித்தார். கருவூர்தேவர் வந்தார். ஆசி வழங்கினார். உடனே புறப்பட்டு விட்டேன். எங்கே செல்கிறேன்; என்ன நடக்கப் போகிறது என்று எனக்கே தெரியாது" என்றாள், வீரமாதேவி.

பொன்னரசி மெல்லச் சிரித்தாள். "தேவி! இப்படியும் ஓர் இளவரசி இருப்பதை நான் இப்போதுதான் பார்க்கிறேன். நீங்கள் எப்படிப் பிழைக்கப் போகிறீர்கள் என்று நான் கவலைப்படுகிறேன்".

இரதம் ஓரிடத்தில் நின்றது. அதற்கு மேல் அந்தக் குறுகிய சாலை மேலும் குறுகியது. உடன் வந்த வீரர்கள் குதிரையை விட்டு இறங்கி தேவியின் அருகே வந்து வணக்கம் தெரிவித்து, அவள் அங்குதான் இறங்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

"இந்தக் காட்டுப் பகுதிக்குள் நடந்து செல்ல வேண்டுமா?" என்று கேட்டாள்.

"அதிகத் தொலைவு இல்லை. ஒற்றையடிப் பாதையா யிருந்தாலும் செப்பனிடப்பட்ட பாதை. வாருங்கள்..." என்று மரியாதையுடன் வணங்கிக் கூறிய வீரன் வழி காட்டியபடி சென்றான்.

சிறிது தொலைவு சென்றவுடன் அடர்ந்த மரங்களி னிடையே நான்கைந்து குடிசைகள். குடிசை வாயில் தூய்மையாக சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. குடிசைக் கதவுகள் திறந்திருந்தன.

அவற்றைத் தாண்டிச் சென்றவுடன் திறந்த வெளியில் ஒரு தடாகம் இருந்தது. அல்லி மலர்கள் பூத்திருந்தன. காட்டருவி ஒன்று தடாகத்திற்குத் தண்ணீரைக் கொண்டு சேர்த்துக் கொண்டிருந்தது.

தடாகக் கரையில் உள்ள படிக்கட்டுகளில் பெண்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள். வீரமாதேவியும், மற்றவர்









களும் வருவதை ஒருகணம் வியப்புடன் பார்த்து விட்டுத் தங்கள் காரியத்தில் அவர்கள் கண்ணாய் இருந்தார்கள்.

பறவைகள் கூட்டை அடையக் குதூகலமாகக் குரலிசை எழுப்பிப் பறந்து வந்து கொண்டிருந்தன. திடீரென இருள் சூழ்ந்து விட்டது போன்ற நிலை. சுற்றுச் சூழலை நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள் வீரமாதேவி.

"தேவி! சற்று இங்கு நில்லுங்கள். நான் உள்ளே சென்று கலைத் தேவியிடம் உங்கள் வருகையைத் தெரிவித்து வருகிறேன்" என்று கூறி உடன் வந்த வீரனொருவன் விரைந்து சென்றான்.

அந்த இடம் மற்ற குடிசைகளைவிடப் பெரிதாக இருந்தது. சற்று உயரமாக இருந்தது. பெரிய பர்ணசாலை போல் இருந்தது. கூரைமீது கொடிகள் படர்ந்திருந்தன. வாயிலில் பூச்செடிகளில் பறிக்கப்படா மலர்கள் சிரித்துக் கொண்டிருந்தன.

வீரமாதேவி உள்ளே சென்றாள். பொன்னரசி அழைக்கப்படவில்லை.

யாரைச் சந்திக்கப் போகிறோம்; அவர் யார் என்றெல்லாம் விவரிக்கப்படாததால் வீரமாதேவி தயங்கித் தயங்கி உள்ளே சென்றாள்.

கூரை வேயப்பட்ட நடுக்கூடம் விசாலமாக இருந்தது. புதுமையான சர விளக்குகள் உயர்ந்த மேல் கூரையிலிருந்து தொங்கின.

மண்ணாலான சுவரில் காரை பூசப்பட்டு நடனத் தோற்றங்கள் சில வண்ணச் சித்திரங்களாக வரையப்பட்டிருந்தன.

அவற்றைப் போல் சில சித்திரங்களை எங்கோ பார்த்த நினைவு அவளுக்கு எழுந்தது. 'ஆம்; தஞ்சைப் பெரிய கோயில் திருச்சுற்றில் பார்த்திருக்கிறோம். அங்கே கண்ட அழகிய மன்னரின் திரு உருவம் இங்கும் திகழ்கிறது'.

பலவித நடனத் தோற்றங்கள் ஜீவசித்திரமாகத் தீட்டப்பட்டிருந்தன.

"வீரமாதேவி" என்று இரண்டு முறை யாரோ குரல் கொடுத்த பிறகு தன் நிலையுணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள் வீரமாதேவி.

"சோழ நாட்டு இளவரசி அவர்களே! வருக, வருக" என்ற அந்தக் குரலின் இனிமை அவளை வசீகரித்தது.

ஒரு கணம் அவளைப் பார்த்த வீரமாதேவியின் மெய் சிலிர்த்தது. ஐம்பதைத் தாண்டியும் இளமையும் அழகும் அகல மாட்டாது குடிகொண்டிருக்கும் வடிவம். தபஸ்வினியைப் போன்ற தோற்றம். அகன்ற விழிகள். எடுத்து முடிக்கப்பட்ட கூந்தல். கழுத்தில் ஒரே ஒரு மணிமாலை.

விழிகளும், நாசியும், இதழ்களும் செழுமையான கன்னப் பகுதிகளும், செவி மடல்களும், புருவமும், சங்குக் கழுத்தும், வேயுறு தோள்களும் அந்தப் பெண்ணிடம் தனி மரியாதையை அளித்தன.

கூந்தலில் ஒளிந்தும் தெரிந்தும் வெள்ளி இழைபோல் பளிச்சிடும் நரைமுடி மட்டுமே அவள் வயதை விளக்கியது. என்ன தோன்றியதோ, வீரமாதேவி குனிந்து வணங்கினாள்.

"என்ன இது..? இளவரசி என் பாதத்தைத் தொடுவதா? எழுந்திரு எழுந்திரு! களைத்து வந்திருப்பாய். குளித்து, உணவருந்திவிட்டு வா. பிறகு பேசலாம்" என்று கூறினாள்.

வீரமாதேவிக்கு நடப்பன எல்லாம் கனவுபோல் தோன்றின. உடன்வந்த பொன்னரசி இன்னும் வெளியே நின்று கொண்டிருப்பாளே என்ற கவலையுடன் அவள் நீராடி விட்டுத் தனக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தாள். பொன்னரசி உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடன் கொண்டு வரப் பட்டிருந்த பெட்டிகள் ஓர் ஓரத்தில் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

வீரமாதேவி புத்துடை அணிந்து வெளியே வந்தாள். கலை அரசி அவளை அன்புடன் வரவேற்றாள். அந்தப் பகுதிக்கு அவள்தான் அரசி. அவளைக் கலையரசி என்றே எல்லோரும் அழைத்தார்கள். வீரமாதேவி நீராட உதவிய பெண் சுருக்கமாக அவளைப் பற்றி விவரித்தாள். அவளை என்ன சொல்லி அழைப்பது?

அறையைவிட்டு வெளியே வந்து அவளைக் கலையரசி அன்புடன் அழைத்துத் தன் எதிரே நிற்கவைத்துப் பாதம் முதல் கேசம் வரை ஒருமுறை ஆராய்வதுபோல் நோக்கினாள். அவள் அவ்வாறு உற்றுப்பார்ப்பது - வீரமாதேவிக்குக் கூச்சமாக இருந்தது. அவள் தலை குனிந்தாள்.



நாணத்தால் முகத்தில் செவ்வரி ரேகைகள் படர்ந்தன. மூடிய விழிகளை மெல்லத் திறந்து நோக்கினாள்.

"சோழ நாட்டு இளவரசி வீரமாதேவி! இனி உங்களை - தங்களை என்று அழைக்காமல் என் அருமை மகளே என்றுதான் அழைக்கப்போகிறேன், சரிதானே?" என்று கூறியவுடன் வீரமாதேவி கலையரசியை ஏறிட்டுப் பார்த்து, "அம்மா! தாங்கள் என்னை எப்படியும் அழைக்கலாம். கலையரசியின் எதிரே நான் ஓர் எளிய பெண். மற்ற இளவரசியர் என்னை ஏற்கவில்லை. இளவரசி என்று என்னைத் தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். என்னைப் பற்றித் தெரிந்தால் தங்கள் முடிவு மாறிவிடலாம்" என்று மிகவும் அமைதியாக, பயம் நிறைந்த குரலில் கூறினாள்.

அங்கே இருந்த நடராசர் சிலையின் பாதத்திலிருந்து ஒரு கொன்றை மலரை எடுத்து, வீரமாதேவியிடம் நீட்டி, குங்குமச் சிமிழிலிருந்து குங்குமத்தைத் தன் இரு விரல் களால், வீரமாதேவியின் நெற்றியில் திலகமிட்டாள்.

மீண்டும் வணங்கி எழுந்த வீரமாதேவியைப் பரிவுடன் அணைத்து, "வீரமாதேவி, உன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் என் சகோதரர் சொல்லியிருக்கிறார் - என்ன வியப்புடன் பார்க்கிறாய்? இந்த நாட்டின் இளவரசர், 'நாளையே சக்கரவர்த்தியாகப் போகும், இராசேந்திரசோழர் என் உடன் பிறவா சகோதரர். உனக்கு யாரும் சொல்லவில்லையா?" என்று கேட்டாள்.

வீரமாதேவிக்கு வியப்பாக இருந்தது. கானகத்தின் நடுவே உள்ள அந்த இடம், அந்த இடத்திலே வாழும் கலையரசி என்றழைக்கப்படும் வயதைப் புரிந்துகொள்ள முடியாத பெண், இளவரசரைத் தன் உடன் பிறவா சகோதரர் என்று அவர் கூறுவதிலுள்ள இரகசியம் எல்லாம் புரியாத புதிராக இருந்தது.

"வீரமாதேவி! இன்று மாசிமகம். பௌர்ணமி நன்னாள். இன்னும் சிறிது நேரத்தில் நாட்டிய அரங்கு நடைபெறவிருக்கிறது. ஆடல் கலையில் சிறந்து விளங்கும் நீ இங்குள்ள நாட்டியப் பெண்களின் நிருத்யத்தை, நடனத்தைக் கண்டு மகிழவேண்டாமா? உன்னை அழைத்துச் செல்ல வருவார்கள்; ஆயத்தமாக இரு. இன்னும் ஓரிரு நாள்களில் இந்த இடம் உனக்குப் பழக்கமாகிவிடும்" என்று கூறி, மறு பேச்சுக்கு இடம் வைக்காமல், கலையரசி அங்கிருந்துச் சென்றாள்.

முழுமதி நாள். வட்ட முழுமதி வானத்தே உலாவரத் தொடங்கிவிட்டது. திறந்த வெளியில் சற்று உயரமான மேடை. நிலவு ஒளிக்கு வெளிச்சம் தருவதாக எண்ணிக் கொண்டு ஆங்காங்கே பெரும் குத்து விளக்குகள் கம்பீரமாக நின்று ஒளி அளித்துக் கொண்டிருந்தன.

மேடை எதிரே ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்கள். இருபது முதல் அறுபது வரை பல வயதுடையவர்கள் அமர்ந்திருந்தார்கள். மேடையின் ஒருபுறம் அருளும் அழகும் திகழும் நடராசர் சிலை. புதிய செப்புப் படிமம்; வார்த்துச் சில நாள்களே ஆகியிருக்க வேண்டும்.

மேடையின் எதிரே ஆடவர்கள் சிலர் இருந்தனர். இளைஞரும் முதியவருமாக. அவர்கள் சிற்பிகள்; ஓவியர்கள். அகிலின் மணம் காற்றில் பரவியது. கூடியிருந்தோர் தமக்குள் மெல்லப் பேசிக் கொண்டாலும் அந்த மெல்லிய ஒலி அந்தத் திறந்தவெளி அரங்கில் பெருகிப் பரவியது.

மத்தளத்தைத் தட்டிச் சுருதி பார்த்துக் கொண்டிருந்தார் ஒருவர். குழல் கலைஞரும், வீணை இசைப்புலவரும் வந்தமர்ந்திருந்தனர்.

கலையரசியைத் தொடர்ந்து வீரமாதேவி அந்த அரங்கினுள் நுழைந்தாள். ஒரு கணத்தில் அங்கே சூழ்ந்திருந்த மெல்லிய பேச்சொலியையும் காணவில்லை. ஓரிரு பறவைகள் அங்குமிங்கும் பறப்பதைத் தவிர வேறு ஒலியற்ற அமைதி.

மரியாதை செலுத்தப் பெண்கள் எழுந்து நிற்கும்போது அவர்களது புடைவைகளின் சலசலப்பு. காலில் கட்டியிருந்த பாதச் சலங்கைகளின் சிணுங்கலும், கைவளை ஓசையும் மரியாதை கலந்த சூழ்நிலையைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தன.

குழல், வீணை, மத்தளம் ஒருசேர முழங்க மேடையிலே ஐந்து அழகிய பெண்கள் ஆடவல்லானுக்கு மலர் தூவி வணங்கினர்.

*"நமசிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க;*

*இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க;*

*கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க;*



*ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க;*

*ஏகன், அநேகன் இறைவன் அடி வாழ்க"*

என்று அவர்கள் இனிய குரலில் பாடிக் கொண்டே மலர் தூவினர்.

கலையரசி, வீரமாதேவியை மேடைக்கு அழைத்து வந்து அங்குள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்தினாள்.

"நாட்டியக் கலை பயில வந்திருக்கும் என் அருமை நாட்டிய மணிகளே! இந்த இனிய நன்னாளில் நான் சோழ நாட்டு இளவரசி வீரமாதேவியை உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன். நாட்டியக் கலைக்குத் தன்னை அர்ப் பணித்துக் கொண்டிருக்கும் வீரமாதேவி இந்தச் சின்னஞ்சிறு கிராமத்திற்கு வருகை தந்திருப்பதில் பெரிய செய்தி இருக்கிறது. வீரமாதேவி இங்கே நம்முடன் தங்கப் போகிறாள். இளவரசியை அவள் இவள் என்று அழைப்ப தாக எண்ண வேண்டாம். என் மகள் அவள். புருவத்தை உயர்த்தி அதன் கதையையும், காரணத்தையும் அறியத் துடிக்காதீர்கள். எந்தச் செயலும் இரகசியமாக இருக்க முடியாது. சின்னச் சின்னக் கவலைகளில் கருத்தைச் செலுத்தாமல் தெய்விகக் கலையாம் நடனக் கலைக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வோமாக" என்று சுருக்க மாகப் பேசினாள்.

வீரமாதேவி மெய்சிலிர்க்க அரங்கிலிருந்தவர்களுக்குக் கை கூப்பி வணக்கம் தெரிவித்தாள். பிறகு, அரங்கில் அமர்ந்திருந்தவர்களுடன் ஒருத்தியாகக் கலையரசியுடன் சேர்ந்து அமர்ந்தாள்.

"இங்கே நடனக் கலையை முழுமையாகப் பயின்று, அந்தக் கலைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மங்கையர் பிறகு தஞ்சைக்கும், மற்றுமுள்ள கோயில்களுக் கும் கலைத் தொண்டாற்றச் சென்று விடுவார்கள். பேரரசர் இராசராசர் ஏற்படுத்திய வழக்கம் ஆல்போல் வளர்ந்து விட்டது. சோழ நாட்டின் ஒவ்வொரு திருக் கோயிலிலும், தம்மை அர்ப்பணித்துக் கொண்ட இந்தப் பதியிலாதார் கலைத் தொண்டாற்றக் காணலாம்" என்றாள்.

மேடையில் ஆடலழகிகள் ஆடினார்கள். தேவலோகத்து அரம்பையர் வந்து ஆடியதுபோல் அவர்கள் ஆடினார்கள்.

மாதவி நல்லாள் பூர்ண மதியொளியில் இந்திர விழாவில் ஆடியதுபோல் பலவித நடனங்களை ஆடினார்கள்.

நடுநிசியை நெருங்கும் நேரத்தில் நாட்டிய அரங்கு முடிவடைந்தது.

வீரமாதேவி தனக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த குடிலுக்குச் சென்றாள். இரவு உறக்கம் பிடிக்கவில்லை. பொன்னரசி நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

பொழுது புலர்வதற்குச் சற்று முன்பே எழுந்து பொன்னரசியுடன் அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டாள், வீரமாதேவி.

போகும்போதே அவள் மனத்தில் பலவிதத் திட்டங்கள் எழுந்தன. தேவாரப் பதிகங்கள் இனிய குரலில் யாரோ பாடுவது ஒரு குடிலிலிருந்துக் கேட்டது. குடிலுக்குள் எட்டிப் பார்த்தாள்.

அங்கே சிற்பி அமர்ந்து பாடிக் கொண்டிருந்தார். அவர் அருகே ஒரு பெண் தம்புராவில் சுருதி மீட்டிக் கொண்டிருந்தாள்.

இனிய காலை வேளையில் அந்த இனிய இசையும், சுற்றுச் சூழல் நிலையும் அவள் மனத் திரையில் ஒரு பெரிய கலைக் கூடத்தைத் தீட்டிவிட்டன.

"பொன்னரசி! எனக்கு இந்தக் கிராமச் சூழ்நிலை மிகவும் பிடித்துவிட்டது. சோழ சாம்ராஜ்யத்தைக் கொடுத்தால்கூட எனக்கு வேண்டாம். நான் இங்கேயே தங்கிவிடப் போகிறேன். இங்கே நடனமணிகள் இருக்கிறார்கள். ஓவியர் இருக்கிறார். சிற்பி இருக்கிறார். வேறு என்ன வேண்டும். நான் ஒரு பெரிய கலைக் கோயிலை இங்கே கட்டப் போகிறேன். என் இதய நேசர் இளவரசர் இராசேந்திரர் புகழ் நிலைத்து நிற்கும் அளவிற்குப் பெரிய கோயில் கட்டுமாறு தாண்டப் போகிறேன்!" என்றாள்.







## 42. மனக்கோயில்

வட்ட முழுமதியின் பின்னணியில், தஞ்சைக் கோயிலின் தட்சிண மேரு என்றழைக்கப்படும் விமானம் கம்பீரமாகக் காட்சியளித்தது.

கோயிலின் திருச்சுற்றில் ஏராளமான மக்கள் அமர்ந் திருந்தனர். இரண்டு நாள்களுக்கு முன்பு இராசேந்திர சோழருக்குத் தில்லைச் சிற்றம்பலத்தில் முடிசூட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. சோழ நாட்டின் குறுநில மன்னர்கள் அனைவரும் அங்கே குழுமியிருந்தனர். இராசராச சோழ தேவர் தன் பட்டத்தரசியுடன் வருகை புரிந்து முடிசூட்டு விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தார்.

அந்த வைபவம் தஞ்சையிலும் மக்களால் கொண்டாடப் பட்டது. தங்கள் வீட்டில் நடைபெற்ற சிறப்பு விழா போல் மக்கள் கொண்டாடினர். ஒவ்வொரு நாளும் தஞ்சைப் பெரிய கோயிலின் விசாலமான திருச்சுற்றில் இசையும், நடனமும், பாட்டும், கூத்தும் இரவு நடுச் சாமம்வரை நீடித்து நடந்தது.

தஞ்சைக்கு மிகத் தொலைவில் பட்டிதொட்டிகளி லிருந்து மக்கள் வந்து குழுமி இருந்தனர். நிகழ்ச்சிகளைக் காண தஞ்சையிலுள்ள தங்கள் உறவினர் இல்லங்களில் தங்கியிருந்தனர்.

அரச குடும்பத்து மகளிர், திருச்சுற்றிலுமுள்ள, மாடங்களில் அமர்ந்து, கூத்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

உயரமான மேடை மீது இராசேந்திரன் அமர்ந்திருந்தார். இராசராச விஜயம் நாடகத்தைக் காண நாள்தோறும் அவர் வந்தார். ஆனால் அவரிடம் உற்சாகமில்லை.

விவரிக்க முடியாத கவலை அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தது என்பது அவர் அவ்வப்போது விழிகளை மூடி ஏதோ சிந்தித்தவாறிருப்பதிலிருந்து தெரிந்தது.

மாடங்களில் அமர்ந்திருக்கும் இளவரசிகள் நாடகத்தைப் பார்க்காமல் தங்களுக்குள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

தில்லைச் சிற்றம்பலத்தில் நடைபெற்ற மகுடாபிஷேக விழாவைப் பற்றியும் அவர்கள் பேசினார்கள். தான் ஜீவியவந்தராக இருக்கும்போதே இராசராச சோழர் தன் புதல்வனுக்கு முடிசூட்டியதன் காரணத்தைப் பற்றியும் ஒவ்வொருவர் தங்களுக்குத் தெரிந்ததைத் தெரிவித்தனர். சக்கரவர்த்திகளின் புதுமையான செயலைக் குறித்து வியப்பையும் தெரிவித்தனர். அவர்களிடையே கருத்து வேற்றுமை நிலவினாலும், ஒன்றில் மட்டும் அவர்கள் ஒருமனதாகக் குதூகலத்துடன் ஒப்புக் கொண்டனர்.

இராசேந்திர சோழ தேவர் மிகச் சிறப்பாக ஆட்சி புரிவார் என்று மகிழ்ச்சியுடன் பேசினார்கள்.

போர்க்களத்தில் அவர் பெற்ற வெற்றியையும் வீர தீரங்களைப் பற்றியும் புகழ்ந்தவர்கள், அவரது கம்பீரத் தோற்றத்தைப் பேசி மகிழ்ந்தார்கள்.

"எல்லாம் சரிதான், அவர் வீரம்மாளை - எளிய குடும்பத்துப் பெண்ணை மணந்து கொண்டதைத்தான் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை" என்று ஓர் இளவரசி தன் வேதனையைத் தெரிவித்தாள். இளவரசியின் இடத்தினின்று, அரசியின் இடத்துக்குப் பதவி உயர்ந்தவர்கள் அவர்கள்.

"வீரம்மாள் என்று சொல்லாதீர்கள். வீரமாதேவி என்று சொல்லுங்கள்" என்று அரசியருள் ஒருத்தி திருத்தினாள்.

"நான் ஏற்கமாட்டேன். அவளுக்கு அரசி என்ற பதவி அளிப்பதாக நம் அரசர் முடிவு செய்திருந்தால், முடி சூட்டும் விழாவிற்கு அவளை அழைத்திருப்பார்.



எங்கே அழைத்து விடுவாரோ என்று நான் மிகவும் பயந்தேன், தேவி" என்று அவர்கள் பேச்சில் கலந்து கொண்டாள் செல்வாக்கு மிகுந்த பணிப்பெண் ஒருத்தி.

தொலைவில், நாடகத்தைக் கண்டு களித்தவாறிருந்த இராசேந்திர சோழர் அருகே வீற்றிருந்த பஞ்சவன் மாதேவியைச் சுட்டிக் காட்டிய ஒருத்தி, "எனக்குக்கூட மனத்தில் அச்சம்தான். அந்த இளம் அழகியைத் தன்னருகே அரியணையில் அமர வைத்துவிடப் போகிறாரே நம் அரசர் என்று முதல் நாள் வரையில் பயந்தேன். ஆனால், பட்டத்தரசிக்கு மஞ்சள் நீராட்டி, வேத கோஷம் முழங்க, தேவாரப் பண் ஒலிக்க, வீணை ஒலிக்க, குழல் ஒலிக்க பஞ்சவன்மாதேவியை யானை மீதேற்றி அழைத்து வரும்போதுதான் உறுதியாயிற்று என்று கூறிப் பெருமூச்சுவிட்டாள்.

"உனக்கு இருந்த அச்சம் எனக்கு இல்லை. நான் என்றோ முடிவு செய்துவிட்டேன், பஞ்சவன்மாதேவிதான் பட்டத்தரசி என்று. நாற்பது வயதைத் தாண்டிக்கொண்டிருக்கும் அவளுக்கு வரப்போகும் அதிர்ஷ்டத்தைப் பற்றி நாள்தோறும் அவளிடம் புகழ்ந்து கொண்டிருந்தேன். அரசிக்குரிய கம்பீரம், நடை, உடை, பாவனையைக் கற்பித்தேன்" என்று ஒருத்தி பெருமிதத்துடன் சொன்னாள்.

"உனக்கு எப்படித் தெரியும்?"

"தெரியும். எப்படி என்று கேட்காதே. கர்வம் பிடித்த அந்த இளம் அழகியை முடிசூட்டு விழாச் சூழ்நிலையிலிருந்தே ஓட்டி விடுவதற்குத் திட்டமிட்டவளே,நான்தான்".

இவ்வாறு கூறவும் எல்லோரும் அவள் முகத்தையே பார்க்கத் தொடங்கினர்.

"அவள் எங்கே போய்விட்டாள்? இந்த நாட்டைவிட்டே போய்விட்டாளாமே?" என்று ஆவலுடன் கேட்டாள்,ஒருத்தி.

மிக மெல்லிய குரலில் ஒருத்தி கேட்டாள் : "பாண்டிய நாட்டிற்குச் சென்றிருப்பதாக ஒற்றர்கள் மூலம் செய்தி. அவ்வாறு சென்றிருந்தால் ஆபத்து உண்டு. அங்கே சென்று கலகம் செய்வாள். அங்கே சுந்தரன் இருக்கிறானே மறந்துவிட்டாயா?" என்று கூறிக் கண் சிமிட்டினாள் ஒருத்தி.

"உச்... பட்டத்தரசியின் செவிகளில் விழுந்துவிடப் போகிறது. சுந்தரன் திருந்திவிட்டான். பாண்டிய

மண்டலத்துக்கே அரசன் என்று அவனை மதுரையில் அமர்த்தியிருக்கிறார்கள்".

"இருக்கட்டுமே! வீரமாதேவி சாகசம் மிக்கவள். தந்திரம் மிகுந்தவள். மாய மந்திரம் தெரிந்தவள். தில்லைச் சிற்றம்பலத்தில், இளவரசரைச் சந்தித்து மயக்கித் திருமணம் செய்து கொண்டதை மறந்துவிட்டாயா? தம் அழகு குறைந்து வருகிறது என்பதைப் புரிந்து கொண்டு அப்போது இளவரசராயிருந்தவர், இளமையும் அழகும் நிறைந்த வீரம்மாளை விரும்பியதில் வியப்பில்லை. அதற்குமேல் கலை உணர்வு மிக்க இளவரசர், வீரம்மாளிடம் நிறைந்திருந்த கலைப்புலமையை உணர்ந்து கொண்டார். நாட்டை விட்டு வீரம்மாளை அனுப்ப ஒரு போதும் அவர் ஒப்புக்கொள்ளமாட்டார்" என்று பேசி முடித்தாள்.

இராசராச விஜயம் நாட்டிய நாடகம் முடியும் தருணத்தை நெருங்கி விட்டதும் தூக்கக் கலக்கத்துடன் மாளிகையை நோக்கிச் சென்றனர். வீரமாதேவி எங்கு சென்றிருக்கிறாள் என்று ஒருவராலும் அறிந்து கொள்ள முடியவில்லை.

தங்களுக்குப் போட்டியாக வந்த வீரமாதேவி எங்கோ சென்றுவிட்டாள் என்பதில் அவர்களுக்கு நிம்மதி.

வீரமாதேவி எங்கே என்று பேரரசர் இராசேந்திர சோழரைக் கேட்பதற்கு ஒருவருக்கும் துணிவு இல்லை.

வீரமாதேவி, கானகத்தின் நடுவே இருந்த சின்னஞ்சிறு கிராமத்து இயற்கைச் சூழலில் நடனம், இசை என்று பொழுதை இன்பமாகக் கழித்தவாறிருப்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

வீரமாதேவி கதிரவன் உதிப்பதற்கு முன்பே எழுந்து விடுவாள். புள்ளினங்களின் சேர்ந்திசை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அந்த வனத்தின் ஒற்றையடிப் பாதைகள் அவளுக்குப் பழக்கப்பட்டுவிட்டன.

உயர்ந்த மரங்களின் இடைவெளி வழியே கதிரவன் எட்டிப் பார்க்கும்போது குடிலொன்றின் வெளியே 'கிளிங் கிளிங்' என்று சிற்றுளி எழுப்பும் ஓசை கேட்டது.





வீரமாதேவி அங்கு சென்றவுடன் அந்த இளைஞன் பரபரப்புடன் எழுந்து முகமன் கூறி வரவேற்று அங்கு இருந்த பாறை ஒன்றில் அமருமாறு கேட்டுக் கொண்டான்.

சிற்பங்கள் சிலவற்றை உருவாக்கும் பணியை அவனிடம் அளித்திருக்கிறார் அரசர் என்பதை வீரமாதேவி அறிந்து கொண்டாள்.

"கலைமகள், திருமகள், ஆடவல்லார் சிலைகளை உருவாக்க வேண்டும். அதற்கு முன்மாதிரியாக இங்கு நான் சிறிய அளவில் சிற்பங்களை அமைப்பதில் முனைந்திருக்கிறேன்" என்றான், இளைஞன்.

வீரமாதேவி சுற்று முற்றும் பார்த்தாள். சிறு சிறு பாறைகள் அங்குமிங்கும் கிடந்தன.

"இந்தப் பாறைகளை எப்படிக் கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டாள் வீரமாதேவி.

"சிற்பத்திற்கேற்ற பாறைகள் சோழ நாட்டிலில்லை. பல இடங்களில் தேடிக் கொண்டு வரப் படாதபாடு பட்டுவிட்டோம். பாண்டிய நாட்டில் சமீபத்தில் போரொன்று நடந்தது. போரிலே சிறை பிடிக்கப்பட்ட பாண்டிய வீரர்களைப் பயன்படுத்தி இந்தச் சிறு பாறைகளைக் கொண்டு வந்தோம். உங்கள் திட்டப்படி





கோயில் கட்டுவதென்றால் ஏராளமான பாறைகள் தேவைப்படும்" என்றான், இளம் சிற்பி.

திரும்பி வரும்போது, வீரமாதேவி மௌனமாக நடந்து வந்தாள். ஏதும் பேசாமல் மௌனமாக வீரமாதேவி வருவது பொன்னரசிக்கு வியப்பாக இருந்தது.

அவள் மௌனமாக இல்லை. அவள் மனத்தில் வருங்கால நிகழ்ச்சிகள் பல வட்டமிட்டன.

குடிலுக்கு வந்த பிறகு அவளிடம் பெரும் மாறுதலைப் பொன்னரசி கண்டாள். சில போது, வீரமாதேவி தனக்குள்ளே சிரித்துக் கொள்வாள். சில சமயம் அவள் யாரையோ பார்த்து எச்சரித்து விட்டுத் தன் புருவத்தை உயர்த்திக் கொள்வாள். யாரையோ பார்த்துப் பேசுவது போல் கரங்களை அசைப்பாள். கானகப் பகுதிக்கு விரைந்து சென்று சுற்றுமுற்றும் பார்ப்பாள். காலடி எடுத்து வைத்து அளப்பதுபோல் நடப்பாள்.

பொன்னரசி ஒரு நாள் வீரமாதேவியிடமே அவளிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் பற்றிக் கேட்டே விட்டாள்.

"பொன்னரசி! உன்னிடம் மனம் விட்டுச் சொல்வதற்கு என்ன தயக்கம் இருக்கிறது. நான் உறுதியான முடிவு ஒன்றுக்கு வந்துவிட்டேன். என்னைத் துரும்பென நினைத்த மற்ற இளவரசியரிடையே தேக்குத் தூண் என நிமிர்ந்து நிற்கப் போகிறேன். அரிய செயல் ஒன்று செய்யப் போவதாக முன்பே நான் சபதம் செய்திருப்பது உனக்கு நினைவிருக்கலாம். அந்தச் சபதத்தை எவ்வாறு நிறைவேற்றப் போகிறேன்' என்று நீ நிலைக்கலாம். மற்றவர்கள் நினைக்கக்கூட மாட்டார்கள். தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள இளவரசர் மணந்த ஓர் எளிய குடிமகள் என்ற எண்ணத்தில் என் பேச்சை நினைவிலும் வைத்திருக்க மாட்டார்கள். என் இதயத்தில் நிலைத்து விட்ட என் இளவரசர், இந்த நாட்டின் சக்கரவர்த்தியாக மகுடமணிந்த பிறகு நீண்ட நெடுங்காலம் ஆட்சியை நடத்தி அவர் புகழ் அழியாது என்றும் நிலைத்து நிற்க ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான் என் ஆசை!" என்று சொல்லி நிறுத்தினாள்.

பொன்னரசி மிகவும் பணிவாக, "தேவி! என்மீது கோபிக்காதீர்கள். நம் இளவரசரின் கரம் பிடித்த மற்ற இளவரசிகள் புகழ்பெற்ற அரச குலத்தைச் சேர்ந்த

வர்கள். அவர்களால் முடியாததை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"செய்யப் போகிறேன். பொறாமை பிடித்த அவர்கள் கனவிலும் நினைக்காத செயலொன்றைச் செய்யப் போகிறேன். அடர்ந்த இந்தக் காட்டின் நடுவே நான் புதுமை புரியப் போகிறேன்".

"தேவி! என்ன சொல்கிறீர்கள்? உங்கள் திட்டம் எனக்குப் புரியவில்லை. இங்கே பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் கலையரசி காட்டில் ஒரு சிறு ராஜாங்கமே நடத்துகிறார்கள். உங்களுக்குப் பிடித்தமான இசையும், கூத்தும் முன்னமே இங்கே நடைபெறுகின்றன. இளவரச ருக்கு மிகவும் வேண்டியவர்கள் போல் தோன்றுகிற அவர்கள் இட்டது சட்டம் என்று புரிகிறது. அவர்களுக்குப் போட்டியாக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்".

வீரமாதேவி மெல்ல நகைத்தாள். "பொன்னரசி! உனக்குப் பழைய கதை தெரியாது. நீ சொல்வதுபோல் சிறிய அரசாங்கமே நடத்தும் கலையரசியின் கடந்தகால வாழ்க்கைக் கதையைப் பிறகு சொல்கிறேன். எனக்கு அத்தை முறையான அவர்களுக்குப் போட்டியாக நான் ஏதும் செய்யக் கனவிலும் நினைக்க மாட்டேன். அவர்களைப் பார்த்த பிறகுதான் எனக்கு நம்பிக்கை பிறந்தது. அவர்களுடைய ஆசியுடனும் உதவியுடனும் நான் நினைக்கும் கலைக் கூடத்தை இந்தக் கானகத்தில் நிர்மாணிப்பேன்!" என்றாள்.

"கலைக் கூடமா? காலையில் நீங்கள் சென்று பார்த்தீர்களே, சிறு சிறு சிற்பங்களைச் செதுக்கிக் கொண்டிருந்தார்களே, அந்தக் கலைக் கூடத்தைதானே சொல்கிறீர்கள்?"

"இல்லை; இல்லை! என் திட்டமே வேறு. பெரிய கோயில் ஒன்றை நிர்மாணிக்கப் போகிறேன். அங்கே கலைதேவி களிநடனம் புரிவாள். இதோ பார்... என் உள்ளத்தில் உள்ளதை வரிவடிவமாக்கி இருக்கிறேன்" என்று கூறி அவளை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே சுருட்டி வைக்கப்பட்டிருந்த துணிச் சுருள் ஒன்றை விரித்தாள்.

வெள்ளைத் துணியில் செங்கோடுகளால் வரையப்பட்டிருந்த அந்தச் சித்திரத்தைப் பார்த்து விழிகள் விரித்



தாள், பொன்னரசி. அங்கே செங்குழம்புகள் உள்ள கிண்ணங்கள் இருந்தன.

வீரமாதேவி எப்போது இந்தச் சித்திரத்தை வரைந்தாள்?

நாட்டியக் கலையில் திறமை வாய்ந்த இவளுக்குச் சித்திரம் வரைவதில் ஆர்வம் எப்போது ஏற்பட்டது? ஒரு வேளை சிறு வயதிலேயே சித்திரக் கலையில் ஆர்வம் தோன்றியிருக்கலாம்.

"பொன்னரசி! பார்த்தாயா? இதுதான் என் இலட்சியக் கலைக் கோயில்"!

"இந்தச் சித்திரத்தைப் பார்த்தால் வேறு ஒரு கோயிலின் நினைவு வருகிறது. நெஞ்சில் இருக்கிறது; ஆனால் சொல்ல வரவில்லை".

"அப்படியென்றால், எனக்கு வெற்றிதான். ஏதோ கிறுக்கி இருக்கிறீர்கள். வெறும் செங்கோடுகள் என்று சொல்லாமல் அப்படிச் சொன்னது எனக்கு வெற்றிதான். இந்தத் துணியில் வரையப்பட்டிருப்பது தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்ற ஒரு விமானத்தின் தோற்றம். ஆனால் அந்தக் கோயிலைவிடப் பெரிய கோயில் ஒன்றை இங்கே கட்டவேண்டும். அந்தக் கோயிலில், தஞ்சையில் உள்ள சித்திரக் கூடத்தைவிட மிகப் பெரிய ஓவியக்கூடம் அமைக்க வேண்டும். பல அற்புதச் சிற்பங்களை அங்கே நிலைபெறச் செய்ய வேண்டும். தந்தையை விட மகன் படைத்த மகத்தான பெரிய கோயில் என்ற பெருமை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நின்று நிலவ வேண்டும்" என்றாள்.

இதைக் கூறும்போது, வீரமாதேவியின் விழிகள் பள பளத்தன. வார்த்தைகளிலே இலட்சிய வெறி ஒலித்தது.

தன் இதயம் கவர்ந்த இளவரசருக்கு அண்மையில் தஞ்சையில் முடிசூட்டு விழா நடைபெற்றச் செய்தி வீரமாதேவிக்குத் தெரிந்திருக்கவில்லை. இப்போது அவளும் சோழநாட்டு அரசியருள் ஒருத்தி!

அந்தக் கானகம் மறைந்து அங்கே மிகப் பெரிய கோயிலும், விமானமும் உருவாகி நிற்பதுபோல் அவளுக்குத் தோன்றியது.



# 43. கனவு பலித்தது

எங்கோ கீழ்த் திசையில் செங்கோளம் சுழன்றவாறு எட்டிப் பார்த்தது. பொன்னவனின் தங்கக் கரங்கள் நிலமங்கையைத் தட்டி எழுப்ப விரைந்தன.

அந்தக் காட்டுப் பகுதியில் இருளுக்கு உதவியாக அடர்ந்து உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களினால் மேலும் இருளாட்சியை விலக்கக் கதிரவன் முனைந்து கொண்டிருந்தான்.

இளஞ் சிற்பி மாணிக்கசேகரன், அருகே சலசலத்து ஓடிக்கொண்டிருந்த ஓடையில் குளித்து, திருநீறணிந்து மேடைபோல் அமைந்திருந்த பாறைமீது அமர்ந்து தியானம் செய்ய வந்துவிட்டான்.

பிறகு, அவன் பணி தொடங்கிவிடும். சிற்பப் பணிக்கு உதவியாகச் சிறு சிறு பாறைகள் அங்கே கிடந்தன. அவற்றை மிகுந்த பிரயாசையுடன் கொண்டு சேர்த்திருந்தனர்.

மலைக் குழந்தைகள் அவன் பார்வையில் உயிர் பெற்றன. மனக் கண்ணின் மூலம் அவை இதயத்தில் பலவித வடிவங்களாகக் காட்சியளித்தன.

அந்தக் கானகப் பகுதிக்கு அவன் வந்து பல நாள்கள் ஆகிவிட்டன. இளவரசராயிருந்த இராசேந்திரனின் இலட்சியக் கனவைப் பூர்த்தி செய்ய அவன் அங்கே வந்து சேர்ந்தான். சிற்பங்களைப் படைத்து ஒரு கலைக் கூடத்தை



உருவாக்க வேண்டும் என்ற இளவரசர் எண்ணத்தை நிறைவேற்ற அவன் பொறுப்பேற்றுக் கொண்டான்.

அடர்ந்த கானகத்தில் முன்பே கலைத் தொண்டாற்றி வரும் கலையரசி அவனுக்கு உற்சாகம் அளித்து வந்தாள். எப்போதாவது அவள் அங்கே வருவாள். அவள் கவனமெல்லாம் நாட்டியக் கலை வளர்ச்சியில் இருந்தது.

பாதச் சலங்கை ஒலியுடன் பேசும் பொற்சித்திரங்களாக இளம் பெண்கள் ஆடும் அதிசயத்தில் அவன் ஆழ்ந்திருக்கிறான். அழகுப் பெண்களை எழில் சிற்பங்களாக்க வேண்டும் என்ற ஆவல் அவன் உள்ளத்தில் மோதிக் கொண்டிருந்தது. சிறிது சிறிதாக அவன் பணி வளர்ந்தது.

மாணிக்க சேகரனுக்கு ஒரே ஓர் உதவியாளன்தான். அவனைப்போன்றே அந்த இளைஞனும் சிற்பக் கலையில் ஆர்வங்கொண்டவன். ஈடுபாடில்லாமல் கலையில் வெற்றியடைய முடியாது என்ற நம்பிக்கை உடையவன். ஆனால் அந்த இளைஞனுடன் சமமாக அமர்ந்து பேசும் ஆர்வம் மாணிக்க சேகரனுக்கு ஏற்படுவதில்லை. நாளின் பெரும் போது மௌனமாகவே கழியும். மனத்தை அலைபாயச் செய்யும் நிகழ்ச்சிகள் பல தோன்றும்.

குமுதவல்லியின் நினைவு ஏற்படாமல் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். இனிய நினைவு ஏற்படாமல் மனத்தை அங்குசம் கொண்டு அடக்கிக் கொள்வது இலேசானது அன்று. ஆனால் அவன் ஏற்றுள்ள பணிக்கு வைராக்கியம், திடமான சிந்தனை தேவைப்பட்டன. உளி பட்டவுடன் பாறையின் பகுதிகள் சிதறி அழகிய சிற்பம் உருவாக உதவும். இங்கோ, மனச் சஞ்சலம் சிதறும் எண்ணங்கள் அவன் கலை உணர்வைச் சிதைக்கும். அதனால் உயிருக்குயிரான குமுதத்தின் நினைவு எழமால் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

அன்று அவனால் பழைய நிகழ்ச்சிகளை நினைக்காமல் இருக்க முடியவில்லை. சோழ நாட்டிற்குச் செல்லும் தன் முடிவை அவன் குமுதத்திடம் தெரிவித்ததும், மதுரையை விட்டுத் தன்னால் வர இயலாது என்று அவள் மறுத்துப் பேசியதும், ஒரு நாள் சொல்லிக் கொள்ளாமல் மதுரையினின்று புறப்பட்டதையும், விராலி மலையில் சித்தரைச் சந்தித்ததையும் நினைவுபடுத்திக் கொண்டான். அழகிய

மயிலைத் தான் அணைத்து மகிழ்ந்ததை நினைவுபடுத்திக் கொண்டான். சித்தரைச் சந்தித்ததை நினைவுபடுத்திக் கொண்டபோது அவன் உடல் சிலிர்த்தது. அவருடன் ஏரியில் நீந்தியதையும், கிராமம் ஒன்றிற்குச் சென்றதை யும், இளவரசரிடம் அவர் தன்னை அறிமுகப்படுத்தி யதையும், இளவரசர் கட்டளைப்படி இந்தக் காட்டுப் பகுதியில் சிற்பக் கலையை ஆராதிக்கத் தொடங்கி யதையும் அவன் நினைவுபடுத்திக் கொண்டான்.

மதுரையில் குமுதத்தைத் தனியே விட்டு வந்ததை எண்ணும்போது வருத்தமாக இருந்தது. குமுதம் இப்போது எங்கே இருக்கிறாள்; என்னைத் தேடுகிறாளா; நினைவில் கொண்டிருக்கிறாளா என்றெல்லாம் அவன் சிந்திக்கும் போது அவனுக்கு உற்சாகம் குறைந்து விடும்.

அவன் மனத்தில் இதுவரையில் குமுதத்தின் நினைவு ஏற்படாமல் இருந்ததற்கு வீரமாதேவியும் ஒரு காரணம்.

அந்த வனப்பகுதியில் மாணிக்க சேகரன் சிற்பப்பணி செய்யும் இடத்திற்கு அவள் வந்ததிலிருந்து நிலைமை மாறியது. மாணிக்க சேகரன் குமுதத்தைப் பற்றி நினைப் பதை மறந்தான்.

நாள தோறும் இளங்காலைப் போதில் வீரமாதேவி அங்கு வருவதும், மாணிக்க சேகரன் சிற்பம் படைக்கும் நேர்த்தியைக் கண்டு வியப்பதும், அவனிடம் சிற்பம் சித்திரக் கலைகளைப் பற்றிப் பேசுவதும் அவனுக்குப் புத்துணர்வை அளித்தன.

அவள் காலையில் மட்டும் வந்து உரையாடிச் செல்கிறாளே, நாள் முழுமையும் தன்னுடன் இருந்து கலைத் தொடர்பாகப் பேசிக் கொண்டிருந்தால் எவ்வளவு புத்துணர்வாக இருக்கும் என எண்ணினான். அவள் யார் என்று அறிய ஆர்வங்கொண்டான். யாரைக் கேட்பது?

குமுதத்தையும் - வீரமாதேவியையும் மனத்திற்குள் ஒப்பிட்டு ரசித்து நேரத்தைக் கழிப்பான். அதுபோன்ற நேரங்களில் விழிகளை மூடியவாறு ரசித்து மகிழும் போது, அவனுடைய உதவியாளன் இளஞ் சிற்பி, தன் குரு மாணிக்க சேகரன் தியானத்தில் ஆழ்ந்திருப்பதாக நினைத்து அவனை நெருங்காமல் வேறு வேலையில் ஈடுபடுவான்.



தன் அகன்ற விழிகளால், மாணிக்க சேகரன் கல்லில் கவிதை வடிப்பதை ரசிப்பாள், வீரமாதேவி.

வீரமாதேவியைப் பற்றி மாணிக்க சேகரன் அறிந்து கொண்ட பிறகு அவளிடம் அவனது மதிப்பு அதிக மாகியது. அவன் மனச் சஞ்சலம் தீர்ந்துவிட்டது. ஓர் இளவரசி தன் கலைப் பணிக்கு உறுதுணையாக இருப் பதை உணரும்போது புதிய உற்சாகம் ஏற்பட்டது.

வீரமாதேவியின் வடிவழகை மனக்கண் முன் நிறுத்திக் கொள்வான். விழிகள், இதழ்கள், நாசி, முகம், தோள்கள் என ஒவ்வோர் அங்கமாக மனத்தில் தோட்டுச சித்திரம் வரைவான்.

437425/610545(1)

பாறையின் மீது அமர்ந்து, தன் மனத்தைப் புதுவிதத் தியானத்தில் லயிக்கவிருந்த ஒரு நாள் காலை வீரமா தேவி அங்கு வந்தாள்.

விழிகளை மூடியவாறு அவன் அமர்ந்திருப்பதையும், அவன் மனத்தில் எழும் எண்ணங்களுக்கேற்ப அவன் இதழ்களில் மெல்லிய நகை மின்னல் கீற்றுப் போல் தோன்றுவதையும் வீரமாதேவி சற்று நேரம் நின்று ரசித்துக் கொண்டிருந்தாள். பிறந்து சில நாள்களே ஆன பச்சிளங் குழந்தை ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது கனவு கண்டு சற்றே இதழ் விரித்துச் சிரிப்பது போல் அந்தக் கீற்றுப் புன்னகை தோன்றியது.

தன் அருகே இளவரசி வந்து நிற்பதறிந்து திடுக்கிட்டு எழுந்தான், மாணிக்கசேகரன்.

...ப் பாவாண...
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

"அமைதியான தியான நிலையைக் கலைத்து விட்டேனா?" என்று வீரமாதேவி நகைத்தவாறு கேட்டாள்.

"கலைக்கவில்லை. தியானத்தின் பலனே எனக்குக் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி".

"தியானத்தின் பலனா?" வீரமாதேவி வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம்! தேவி. இரு நாள்களாகத் தங்களைக் காணவில்லையே என்று வேதனையடைந்தேன். சிற்றுளி உறங்குகிறது. என் கரங்களில் சோம்பல் புகுந்துவிட்டது. உள்ளத்தில் சோர்வு குடிகொண்டு விட்டது. பழைய நினைவுகள் மீண்டும் தலைதூக்கி என்னைச் சோகக் கடலில் ஆழ்த்திவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது. நல்லவேளை தாங்கள் வந்தீர்கள்".

மாணிக்கசேகரனின் பேச்சில் எந்த விதக் கள்ளமும் கபடமுமில்லை என்பதை வீரமாதேவி புரிந்து கொண்டாள். அவன் பேச்சில் வீண் புகழ்ச்சி இல்லை என்பதையும் புரிந்து கொண்ட வீரமாதேவி, மெல்லச் சிரித்தவாறு, "சிற்பியாரே! அடுத்து உங்கள் கைவண்ணத்தில் உயிர் பெற்று எழப்போகும் சிற்பம் எந்தத் தெய்வத்தின் திரு உருவமாக இருக்கும் என்ற அவா என் உள்ளத்தில் இரு நாள்களாகத் ததும்பி நிற்கிறது" என்றாள்.

மாணிக்க சேகரன் பரவசத்துடன் வீரமாதேவியை நோக்கி, "தேவி! நான் ஓர் எளிய சிற்பி. இந்த நாட்டுச் சக்கரவர்த்தி இராசேந்திர சோழரின் அருள் பார்வையால் உருவாக்கப்பட்டவன். தாங்கள் இந்த நாட்டுப் பேரரசி. என்னைப் பெயர் சொல்லி அழைக்கலாம். நீ என்று உரிமையுடன் கூப்பிட்டால் எனக்கேற்படும் பெருமை 'நீங்கள்' என்றழைக்கப்படும் போது ஏற்படுவதில்லை" என்றான்.

வீரமாதேவி ஒருகணம் திகைத்தாள். மாணிக்கசேகரன் என்ன சொல்கிறான்? இளவரசர் இராசேந்திர சோழர் இந்த நாட்டுச் சக்கரவர்த்தியா? நான் இந்த நாட்டுப் பேரரசியா? புகழ்வதற்கும் ஓர் எல்லை வேண்டாமா?

"மாணிக்கசேகரன் என்றே அழைக்கிறேன். நீயும் என்னை அளவுக்கதிகமாகப் புகழ்வதை நிறுத்திவிடு. இந்தக் காட்டுப் பகுதியைக் கலைப் பூமியாக மாற்றும் பணியில் நாம் இருவரும் ஈடுபடப் போகிறோம். நாம் இருவரும் கலைஞர்கள். கல்லைக் கலை வண்ணமாக்கும் நீ ஒரு பிரம்மா. நான் ஒரு சாதாரணக் குடிமகள். எப்போதுமே நான் சோழநாட்டு எளிய மகள். இராசேந்திர சோழர் என் நாட்டியப் புலமையைக் கண்டு என்னைத் தன்னுடையவளாக ஆக்கிக்கொண்டார். அதனால் இளவரசி என்ற சிறப்புப் பெற்றேன். என்னைவிடப் பெருமை பெற்றுள்ள பெரும் குடியில் பிறந்த சிற்றரசர்களின் புதல்விகள் மாளிகையில் இளவரசிகளாக விளங்குகிறார்கள். அவர்களுக்கு இல்லாத நாட்டியப் புலமை எனும் பெருமை எனக்கு உண்டு. அவர்களுக்குக் கலை ரசனை என்பது எள்ளளவும் இல்லை. இளவரசி என்ற சிறப்பை நான் பெறக்கூடாது என்பதற்காகச் சதித் திட்டங்களை அவர்கள் தீட்டுகிறார்கள். நாட்டில் உலவும் பொறாமைப் புலிகளுக்கிடையே வாழ்வதைவிட, இந்தக்





காட்டுக்கே வந்துவிட முடிவு செய்தேன். நான் எதிர்பார்த்ததற்கு மேலாக இங்கே கலை மணம் வீசுகிறது. ஒப்பற்ற சிற்பியைச் சந்தித்ததில் பெருமை அடைகிறேன். ஆனால் அந்தச் சிற்பியோ புகழ் மாலையைச் சூட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார். இளவரசியை அரசி என்கிறார். மாபெரும் இராசராச சோழர் சக்கரவர்த்தியாகக் கோலோச்சும் போது என்னைப் பேரரசியாக்கி இளவரசரைச் சக்கரவர்த்தியாக்கிவிட்டீர்களே?"

வீரமாதேவி மெல்லப் பேசினாலும் அதில் ஆழ்ந்த உணர்வு இருப்பதைப் புரிந்து கொண்டான், மாணிக்க சேகரன். உண்மையிலேயே, இளவரசர் இராசேந்திர சோழர் சோழ நாட்டுப் பேரரசராக முடிசூட்டப்பட்ட செய்தி அவனுக்குத் தெரியாது என்பதை அறிந்தான்.





"எங்கள் இனிய இளவரசர், சோழ நாட்டுப் பேரரசராக முடிசூட்டப்பட்ட கோலாகலமான விழாவிற்கு நான் நேரே சென்று காணக்கூடிய பெரும் பேறு பெறவில்லையே என்ற மனவருத்தம் எனக்கு. அந்த விழாவிற்கு தாங்கள் சென்றிருப்பீர்கள். சோழப் பேரரசியை மிக அருகில் சந்திப்பது முன்பிறவிப் புண்ணியம்".

மாணிக்கசேகரன், மகுட விழாவைப் பற்றி விவரிக்க விவரிக்க, வீரமா தேவிக்குப் புரியமுடியா வேதனை இதயத்தில் எழுந்தது. துக்கம் பிறந்தது. துயரம் சூழ்ந்தது. கோபமும் பொங்கியது. விழிகளில் கண்ணீர் சேரத் தொடங்கியது. உடலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

என் இளவசர் அரசராகி விட்டாரா? முடிசூட்டு விழாவைக் காண எனக்கு அழைப்பில்லை. அழைப்பா? அதற்கு உரிமை எனக்கு இல்லையா? அது மறுக்கப் பட்டுவிட்டது.

முதுமை அடைந்துவிட்ட மற்ற இளவரசிகளின் பொறாமையும் அவர்கள் செய்த சதியுமாகத்தான் இருக்க வேண்டும்.

அவள் அங்கே நிற்கவில்லை. மாணிக்க சேகரனிடம் சொல்லிக் கொள்ளாமல் அங்கிருந்து தன் குடிலுக்கு விரைந்து சென்றாள்.

சில நாள்கள் கழித்து மாணிக்கசேகரன் வீரமா தேவியைத் தேடி வந்து விட்டான்.

வீரமாதேவி தன் மனத்தில் எழுந்த துயரத்தை, வேதனையைப் புலப்படுத்திக் கொள்ளாமல், சிற்பியை முகமலர்ச்சியுடன் வரவேற்றாள்.

வீரமாதேவி சிற்பக்கலையைப் பற்றிய நுணுக்கமான செய்திகளைத் தெரிந்து கொள்ள விரும்பினாள். பல்வேறு விதமான பாறைகளைப் பற்றிக் கேட்டறிந்தாள்.

அந்த வனப்பகுதியில் சிற்ப சௌந்தர்யம் நிறைந்த கோயில் ஒன்றை எழுப்புவது தன் இலட்சியம் என்றாள்! சோழ சக்கரவர்த்தியாக மகுடமணிந்துள்ள இராசேந்திர சோழரின் இலட்சியமும் அதுவே என்றாள்.

என்னென்ன சிற்பங்களை அங்கே படைக்கலாம் என்று இருவரும் கலந்தாலோசித்தார்கள்.

மறுநாள் வழக்கம்போல் காலையில் வீரமாதேவி மாணிக்க சேகரனைச் சந்தித்தாள்.

"நான் இனி அதிகம் பேசப்போவதில்லை" என்றாள் வீரமாதேவி.

ஏன் என்பதைப் புருவம் உயர்த்திக் கேட்டான், மாணிக்க சேகரன்.

"பேசுவதால் பணி தடைபடுகிறது".

"பேசினால் புதிய சிந்தனை உருவாகிறது".

"பணியைத் தொடங்குவதற்கு முன்பு சிந்தனை உருவாகட்டும்".

"அப்படியென்றால் பேசுவதற்கு - கலந்துரையாட ஒரு நேரமும், படைப்புக்காக ஒரு நேரமும் ஒதுக்க வேண்டியதுதான்".

"அப்படியே செய்யலாம்".

வீரமாதேவி இவ்வாறு சொன்னவுடன், "நாளில் பெரும் பகுதியை இங்கேயே கழிக்க வேண்டியிருக்குமே" என்றான் மாணிக்கசேகரன்.

"ஓ! அதனாலென்ன? என் முடிவை மாற்றிக் கொள்கிறேன். சிற்ப சாம்ராஜ்யத்தில் அரசியாக நான் மாறிவிடுகிறேன்".

இது கேட்ட மாணிக்கசேகரன் அதிர்ச்சியடைந்தான். தேவி, பொருள் உணர்ந்து பேசுகிறார்களா? கலை ஆர்வத்தால் பேசுகிறார்களா? அவனுக்குப் புரியவில்லை, திகைத்தான்.

"மாணிக்கசேகரா! சில நாள்களாக என் மனக்கடலில் பெரும் குமுறல். இன்றுதான் தணிந்தது. தெளிந்தது. நான் பிறவியிலேயே கலை ஆர்வமுடையவள். இளவரசி. அரசி என்ற புகழ்ப் பெயர்களில் எனக்கு ஆர்வமில்லை. என் நாட்டியக் கலையும் உன்னுடைய சிற்பத் திறமையும் ஒன்று சேர்ந்தால் தஞ்சைப் பெரிய கோயிலைவிடச் சிறந்த கலைக்கூடம் இங்கு உருவாகிவிடுமன்றோ?"

வீரமாதேவியின் ஆர்வம் அவள் விழி ஒளியாக வெளிப்பட்டது.

அங்கே கிளிங் கிளிங் என்ற ஓசை எழுந்தது. மரக் கிளைகளில் குயில் அமர்ந்து ஆசையுடன் பார்த்தது.



எங்கிருந்தோ முயலும் அணிலும் ஓடோடி வந்து வியப்புடன் நோக்கின.

சிற்பி ஓய்வெடுக்கச் செல்லும் வரையில் வீரமாதேவி அருகேயே இருப்பாள்.

ஓர் அழகிய சிற்பம் வளர்ந்தது.

அன்று...

"தேவி, நேற்றுக் கனவில் என் எதிரே ஒளிமயமான தேவதை தோன்றினாள்! என்று மாணிக்கசேகரன் தொடங்கினான்.

"நாள்தோறும் என்னையே பார்த்துப் பேசிக்கொண்டிருப்பதன் பிரதிபலிப்பாக இருக்கலாம்".

வீரமாதேவி அப்போது நகைத்ததில் நாணமும் கலந்திருந்தது.

"உம், அந்தத் தேவதை என்ன சொன்னாள்?"

"அவர்களைத் தேவதை என்று எளிய சொற்களால் வர்ணிக்கவே கூடாது; சகல கலைகளுக்கும் அதிபதியான கலைத்தேவி, கலைவாணி. ஆகா அந்தப் பேரொளி வடிவத்தை எப்படி வர்ணிப்பேன்?

"தேவி! அந்த வடிவம் உடனே மறைந்துவிட்டதே. என்ன செய்வது என்ற கவலை என்னைச் சூழ்ந்துவிட்டதே. ஆனால் எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. தாங்கள்தான் கலைமகளாக என் எதிரே அமரவேண்டும். தாங்கள்தான் கலைமகளாக மாறவேண்டும். தேவி. நாள்தோறும் தாங்கள் இதற்கென நேரம் ஒதுக்க வேண்டும்".

வீரமாதேவி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் உடல் மெல்லச் சிலிர்த்தது.

மறு நாளிலிருந்து வீரமாதேவி கலைமகளாக மாறினாள்.

கலைமகள் கல்லிலே உருவாகிக் கொண்டிருந்தாள்.

வீரமாதேவி அதைப் பார்த்து வியப்படைந்து கொண்டிருக்கும்போது அங்கே பரபரப்பு ஏற்பட்டதை அவள் உணரவில்லை. மாணிக்கசேகரனும் கவனிக்கவில்லை.

சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் அங்கே வந்து நின்றார்.



## 44. கண்டது என்ன?

வெயில் வேளைக்கு அந்தக் காட்டுப் பகுதி குளுமையை அளித்தது.

சக்கரவர்த்தி இராசேந்திரன் கரம் பிடித்த அரசிகளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்குக் குறைவில்லை.

"மாளிகையில்கூட இத்தகைய சுகம் ஏற்படாது என்று கூறினாள், ஓர் இளவரசி. ஐம்பது அகவையைக் கடந்து விட்ட அவர்களால் வெப்பத்தைத் தாங்க முடியவில்லை.

"பஞ்சணை தரா்த சுகத்தை இந்த மெத்தென்ற புல் தரை தருகிறது" என்று இயற்கை இரத்தினக் கம்பளத்தைப் புகழ்ந்தாள் ஓர் இளவரசி.

"அப்படியென்றால் புல்லைக் கட்டுகட்டாகக் பைகளில் அடைத்து மஞ்சத்தில் பரப்பிவிட ஏற்பாடு செய்வோம்" என்று கூறினாள், பட்டத்து அரசி.

"அந்த மென்மையை நான் அறிவேன். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை தஞ்சையிலிருந்து திருவையாற்றிற்கு, கோயில் திருப்பணியைக் காணச் சென்றேன். இரட்டைக் காளை பூட்டிய வண்டி ஏற்பாடு செய்திருந்தார்கள். பட்டு விரிப்பு; அடியில் பசும்புல் அடைக்கப்பட்ட மெத்தை. ஆகா! அந்தச் சுகத்தை இப்போது நினைத்தாலும்..." என்று தன் அனுபவத்தை விவரித்தாள் பஞ்சவன் மாதேவி.



அந்த இடத்திலேயே அவர்களுக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

இராசேந்திர சோழரும் விருந்தில் கலந்துகொண்டார். அவர்களுக்கு எதிரே தேக்கு மரத்தால் செய்த சிறு மஞ்சம். அதில் நுனி வாழை இலை விரிக்கப்பட்டிருந்தது.

வனப்பகுதியிலும் இப்படியொரு மாளிகை விருந்தா? இளவரசிகள் வியப்படைந்தனர்.

வீரமாதேவி ஒவ்வொருவரிடமாகச் சென்று விருந்தோம்பிய பாங்கு அவர்களுக்கு வியப்பை அளித்தது.

"வீரம்மா! பந்தி உபசரணை முடிந்ததா? நீ இப்படி வந்து உட்கார்" என்று தன் அருகே இருந்த இடத்தைச் சுட்டினார், சக்கரவர்த்தி.

வலப்புறம் அரசி. இடப்புறம் உள்ள இடம் யாருக்காக என்று ஒவ்வொருவரும் தமக்குத் தாமே கேட்டுக் கொண்டதற்கு விடை கிடைத்துவிட்டது.

அவர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. கம்பீரமாக நடந்து வீரம்மாள் அரசர் அருகே வந்தமர்ந்தாள்.

கையில் எடுத்த கவளம் அப்படியே இருக்க, விழிகள் அங்கே நிலைத்து இருக்க, பொறாமையா ஆத்திரமா அதிர்ச்சியா என்று இனம் புரியா உணர்வுத் தீ கொழுந்து விட்டெரிய அவர்கள் அரசரையும், வீரமாதேவியையும் மாறி மாறிப் பார்த்தவாறிருந்தனர்.

இராசேந்திர சோழர் வீரமாதேவியிடம் ஏதோ கூறினார். அவளும் உடன் ஏதோ மறுமொழி கூற, அரசர் 'ஹோ ஹோ' என்று பெரிதாக நகைத்தார்.

அவர் நகைத்தது, இளவரசிகளுக்கும் அரசிக்கும் தணலை அள்ளித் தெளித்தது போலிருந்து.

அவர்களால் அந்தச் சூழ்நிலையைத் தாங்க முடியவில்லை. அங்கே அமர்ந்திருக்கவும் முடியவில்லை.

வீரமாதேவியின் நிலை என்ன? அவளை எங்கோ கண் காணாத இடத்திற்கு அனுப்பிவிட்டதாகச் சொன்னார்களே? இதுதான் கண்காணாத இடமா?

இங்கே இவள் என்ன செய்கிறாள்? சகல வசதிகளுடன் கூடிய இடத்தில் மகிழ்ச்சியாக இவள் இருப்பது எப்படி?

சக்கரவர்த்தியின் திட்டப்படி, இந்தக் காட்டுப்பகுதிக்கு வந்து தங்கியிருக்கிறாளா? இங்கு அவள் என்ன செய்து

கொண்டிருக்கிறாள்? இளவரசியர் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டனர்.

திடீரென்று வீரமாதேவியும் இராசேந்திரனும் அங்கிருந்து சிற்பியின் குடிலை நோக்கிச் சென்றது அவர்களுக்குத் தெரியாது.

"பார்த்தாயா, பார்த்தாயா! சக்கரவர்த்தியின் போக்கைப் பார்த்தாயா? அவளை அழைத்துக் கொண்டு எங்கோ சென்று விட்டார். இரண்டு நாள்கள் வனப் பகுதியில் மகிழ்ச்சியாகக் கழிக்கலாம் என்று நம்மை அழைத்து வந்தவர் இங்கு வந்தவுடன் மனம் மாறிவிட்டாரே பார்த்தாயா?" என்று ஓர் இளவரசி கூறினாள். எரிச்சலும் வேதனையும் அதில் நிறைந்திருந்தன.

"வனப்பகுதியில் ஓர் ஆசிரமம் இருக்கிறது. அங்கே ஒரு தபஸ்வினி இருக்கிறாள். அவள் கலைத் தொண்டு ஒன்றே நோக்கமாகக் கொண்டு ஒரு வேள்வியாகக் கழித்து வருகிறாள். சோழ நாட்டின் பல பகுதிகளிலிருந்து பெண்கள் நாட்டியம் பயில அங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய நடனத்தைக் கண்டு களிக்கலாம் என்று சொல்லி அழைத்து வந்தார். ஆனால் இங்கு நடப்பதோ?" என்றாள், பட்டத்து அரசி.

"வீரம்மாளின் சாகசம்தான் காரணமாக இருக்க வேண்டும். நாம் உடனே இங்கிருந்து புறப்பட்டுவிட வேண்டும்".

"அவசரப்பட்டு முடிவெடுக்க வேண்டாம். இங்கே நாம் தங்கியிருக்கும் இரண்டொரு நாள்களிலேயே வீரம்மாளுக்குச் சரியான பாடம் கற்பிப்போம்".

"பாடமா?"

"ஆமாம்... இங்கே உள்ள தபஸ்வினி என்றும் கலையரசி என்றும் சொல்லப்படும் மாதரசியை எனக்குத் தெரியும். பூங்கொடி என்ற பெயரில் அவள் சில நாள்கள் தஞ்சை மாளிகையில் பணிப் பெண்ணாக இருந்திருக்கிறாள். வீரம்மாளைவிட நடனக் கலையில் ஆற்றல் மிக்கவள்.

"அவளைச் சந்தித்து வீரம்மாளைப் பற்றிய உண்மையைச் சொல்வோம். அவளுக்குப் போட்டியாக வந்திருப்பவள் என்பதை எடுத்துச் சொல்வோம்" என்று கூறியவுடன், மற்றவர்கள் ஆமோதித்தனர்.



வனப் பகுதியில் குடில் அமைத்து அமைதியாகக் கலைப்பணி புரிந்து வரும் தலைவியைச் சந்திக்க அவர்கள் புறப்பட்டனர். உண்ட பிறகு சிறிது நேரம் கண்ணுறங்கும் வழக்கம் கொண்ட இளவரசியர் சோர்வு மிகக் கொண்டு சென்றனர்.

அவர்களுள் மீனவன் மாதேவி என்ற பாண்டியர்க் குலத்தில் வந்த இளவரசிக்கு நீண்ட நாள்களாக ஆத்திரமும். பொறாமையும் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்தன.

அவள் சிரித்தாள். "அக்காமார்களே! ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய நேரத்தில் - ஏன் இன்னும் சொல்லப் போனால் இந்த வயதில் - இப்படிப் பொறாமையுடன் அலைகிறோம்..... வீரம்மாளை ஒரு பொருட்டாக நினைப்பதே நம் நிலைக்கு ஏற்றதில்லை. நமக்கோ வயது நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகிறது; வம்பு எதற்கு?" என்றாள்.

"வம்பா?" அரசி சீறினாள். வீரம்மாள் வீரமா தேவியாகி விட்டாளே உனக்குத் தெரியாதா? மகுட விழாவின்போது, அவளை எங்கோ அனுப்பிவிட்டதால், அவளுக்குச் செய்தி தெரியாமல் செய்துவிட்டதால் நாம் பிழைத்தோம். இல்லாவிடில், நம் அரசருடன் சரிசமமாக அந்தப் பசப்புக்காரி உட்கார்ந்திருப்பாள்" என்று கூறும்போது, மீனவன் மாதேவி குறுக்கிட்டு, "நாம் பிழைத்தோம் என்று எங்கள் எல்லோரையும் சேர்த்து ஏன் சொல்கிறீர்கள். உங்கள் பதவிக்குத்தான் போட்டி. உங்களை நீங்கள்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும், நான் வரவில்லை. நான் இந்தப் புல்வெளியில் பஞ்சணை மெத்தை என்ற மகிழ்ச்சியுடன் "ஓய்வு எடுத்துக் கொள்கிறேன். நீங்கள் சென்று வாருங்கள். எனக்குத் தெரிந்த வரையில் வீரம்மாளை உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது" என்று கூறினாள்.

அரசிக்குக் கோபம் பொங்கியது. "என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? பட்டத்தரசியாக நான் அரியணையில் சக்கரவர்த்தியோடு சரி சமமாக அமர வேண்டும் என்பது எப்போதோ முடிவாகிவிட்டது. பிரம்மா வந்தாலும் மாற்ற முடியாத ஒன்றை அந்தச் சிறுக்கி மாற்றிவிட முடியுமா! அவளை நீயே தூண்டிவிடுவாய் போலிருக்கிறதே..."

மீனவன் மாதேவி நகர்ந்து கொண்டாள். மற்றவர்கள் அங்கிருந்து அரசியைப் பின் தொடர்ந்தனர்.

அந்தப் போதில், வீரமாதேவியும் இராசேந்திரனும் சிற்பியின் குடில் எதிரே உள்ள மர நிழலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சிற்பி சற்றுத் தொலைவில் கைகட்டி நின்று கொண்டிருந்தான். அவர்கள் பேசுவது முழுமையும் அவன் செவிகளில் விழவில்லை.

"இன்று நீ படைத்த விருந்து மிகவும் ருசியாக இருந்தது" என்று அவர் ஒரு முறையன்று இரண்டு, மூன்று முறைகள் சொல்லிவிட்டார்.

ஏதாவது பேச வேண்டும்; வீரமாதேவியைப் பாராட்ட வேண்டும். சிறிது நேரம் அவரைச் சோதிக்க விரும்பினாள், வீரமாதேவி.

"நான்தான் பார்த்துக் கொண்டே இருந்தேனே, நீங்கள் எங்கே இலையைக் கவனித்தீர்கள்?" என்றாள், வீரம்மாள்.

"நான் கவனிக்கவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"நான் பார்த்துக் கொண்டே இருந்தேனே!"

"அப்படி என்றால் நீயும் வயிறு நிறைய உண்ணவில்லை".

"இல்லை... திருப்தியாக ஏற்றேன்... ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு..."

"இரண்டா... என் இலையில் ஒன்றுதானே பரிமாறினார்கள்".

"ஒன்றா... ஒன்றுகூட இல்லை. அதிரசமும் ஒன்றைக் கூட உங்கள் கண்ணில் காட்டவில்லை. பாவம் அதன் ருசிகூட உங்களுக்குத் தெரியாது... இல்லை... இல்லை. தெரியும்".

"அவ்வளவு இனிமையா? எனக்கு ஏன் போடவில்லை?"

"போட்டார்கள். நீங்கள் சிறிது சுவைத்தீர்கள்; மீதியை யாரும் கவனிக்காதபோது என் இலையில் போட்டு விட்டீர்கள்..."

இராசேந்திரன் மெல்ல நகைத்தார். "ஒன்றுகூட மிச்சம் வைக்காமல் ருசித்துப் புசித்துவிட்டாய்..." என்று கூறி அவளைப் பார்த்தார்.



கடை விழியால் நோக்கியாவறு அவள் சொன்னாள் "வாழ்க்கையில் கடைசி நுனிவரை ருசிக்க வேண்டும் என்று என் பாட்டனார் சொல்லுவார்".

"ஓகோ... அவர் சொன்னதை நீ கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. இந்த வனப்பகுதிக்கு அப்படியொரு மகிமை. என் சகோதரியும் முற்றிலுந் துறந்தவளாக இந்தக் கானகத்தில் வாழ்கிறாள். நீயும் அவளுடன் சேர்ந்துவிட்டாய்".

"இல்லை... இல்லை... முற்றும் துறக்கவில்லை. எங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த வனப்



பகுதியில் கலைக்காக வாழ்ந்து வரும் தலைவி அளித்த ஊக்கமே நாளும் என் வாழ்க்கையைக் கடைசிவரை கலைக்குக் காணிக்கையாக்க முடிவு செய்திருப்பது.





உங்களுக்குத் தெரியாதா? கலை ஆர்வம் கொண்டவர்கள் வாழ்க்கையைத் துறந்தவர்களாக இருக்கமாட்டார்கள்.

"சுவை, ரசனை, ஈடுபாடு, ஆர்வம் யாவும் நிறைந்த நான் வாழ்க்கையை என்றும் ருசிக்க விரும்புபவள்தான்" என்றாள்.

"அப்படித் தெரியவில்லையே? வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கடைப்பிடிப்பவளாகத் தெரியவில்லையே" என்று மீண்டும் கூறியவர், "சில காலத்திற்கு முன்பு நீ எடுத்த முடிவை மாற்றிக் கொண்டு விட்டாயா? வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை ஏற்றுக் கொண்டுவிட்டாயா?" இராசேந்திரன் மெல்லிய குரலில் கேட்டார்.

"ஆம், இசை, ஓவியம், நடனம் யாவும் வாழ்க்கைமீது நம்பிக்கை வைப்பதற்காக இறைவனால் படைக்கப் பட்டவை".

வீரம்மாள் இப்படிக் கூறியவுடன் இராசேந்திரன் சிரித்தார்.

ஏன் அவர் சிரிக்கிறார் என்பதைப் புருவத்தை உயர்த்தி வினவினாள், வீரமாதேவி.

"நாட்டியக் கலை அரசியான நீ வாழ்க்கையை அனுபவிக்க விரும்பாமல் சபதம் செய்துவிட்டாய். ஆனால் இசை, ஓவியம், நடனக் கலையில் மட்டும் ஈடுபடலாமா?" சரியானபடி வாதத்தில் அவளை மடக்கிவிட்டதாக எண்ணினார்.

"நான் துறவியாகிவிட்டதாக என்றுமே சொல்லவில்லையே. தங்கள் மீது எனக்கு ஏற்பட்ட காதல் ஒவ்வொரு நாளும் வளர்ந்து வருகிறது. ஏழேழு பிறவியிலும் தங்களை அடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். தங்களுடன் இணைபிரியாது இருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். அதற்கான வேளையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். இந்தக் கானகத்தில் கலைக் கோயில் உருவாகும்போது நாமிருவரும் இணை பிரியாதிருப்போம். உமாதேவி ஈசனின் மறுபாதியாக விளங்குவதைப்போல் நாம் என்றும் இணைபிரியாது வாழ வேண்டும்" உணர்ச்சி பொங்க அவள் பேசினாள்.

சிற்பி கையைக் கட்டிக் கொண்டு சிலைபோல் நிற்பதைக் கண்ட இருவரும் தாங்கள் பேசுவதை நிறுத்தி, சிற்பியை அருகே அழைத்தனர்.

அருகே உருவாகிக் கொண்டிருந்த சிற்பத்தைச் சுட்டிக் காட்டிய இராசேந்திரன் சிற்பம் எப்போது முடிவடையும் என்று கேட்டார்.

வரும் பௌர்ணமிக்குள் முடிவடைந்து விடும். அன்று சிலைக்குக் கண் திறந்து விட முடியும் என்று கூறினான்.

"ஞான சரஸ்வதியின் சிற்பத்தை வடிக்க உனக்கு ஊக்கம் ஏற்படக் காரணம் யார்?" என்று அரசர் வினவினார்.

சிற்பி மௌனமாக வீரமாதேவியை நோக்கினான்.

"ஓ! இந்த நடனக் கலைவாணி, ஞானசரஸ்வதியாக உருப்பெற்று விட்டாளோ? இவளை உன் மனத்திற்குள் புகச் செய்து கரத்தின் மூலம் கல்லிலே உருவாக்கி விட்டாய் அப்படித்தானே?"

சிற்பி ஆமோதித்தான்.

"நீ பாக்கியசாலி; வீரமாதேவி உன் உள்ளத்தில் அழியாது என்றும் விளங்குகிறாள். அப்படித்தானே?"

சிற்பி அவருடைய கேள்வியைப் புரிந்து கொள்ளவில்லை.

"அதுவும் என் முன் பிறவிப் புண்ணியம்தான்" என்றான்.

"நான் அந்தப் புண்ணியத்தைச் செய்யவில்லை..." அரசருடைய பேச்சின் உட்பொருள் அறிந்து வீரமாதேவி துணுக்குற்றாள்.

இராசேந்திரன் சிற்பியைப் பார்த்துக் கேட்டார். "ஞான சரஸ்வதி சிற்பம் படைக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு எப்படித் தோன்றியது?"

சிற்பப் பணியில் ஆவல் கொண்டு அரசர் கேட்கிறார் என்று எண்ணிய சிற்பி மாணிக்கசேகரன் உற்சாகத்துடன், "இளவரசியின் கலை ஆர்வத்தை நான் நுட்பமாகக் கவனித்து வந்தேன். பாறைகளைத் தேர்வு செய்வதிலிருந்து, சிற்ப சாத்திரத்தைப் பற்றிய அடிப்படை அறிவை அறிய ஆவல் காட்டுவதிலிருந்து நான் அவர்கள் கலைத் தாகத்தைக் கண்டேன். ஒவ்வொரு சிற்பத்திற்கும் இலக்கணம் உண்டு. தெய்வச் சிற்பங்களைப் படைக்கும் போது தூய்மையான நினைவு வேண்டும். கடுமையான விரதம் காக்க வேண்டும்".



"ஓ! சரஸ்வதி தேவியை நீ பார்த்திருக்கிறாயா! இன்றும் சிவபெருமான், உமைதேவி, திருமால் இவர்களையெல்லாம் தரிசித்திருக்கிறாயா?"

"எந்தத் தெய்வமும் சிற்பிகளின் எதிரே தோன்றுவர். நாம் அவர்களை அழைப்பதில் இருக்கிறது. நம் தியானம், நம் அறிவு, நம் ஆற்றல் எல்லாம் நிறைந்திருக்கின்றன. தியானம் செய்யும்போது எந்தத் தெய்வத்தை அழைக்கிறோமோ அந்த இறைவனை நினைக்க வேண்டும்".

சிற்பியின் இந்த விளக்கம் கேட்டு அரசர் மௌனமாக இருந்தார். பிறகு, "அறிவுச் சுடராம் கலைக்கு அதிபதி கலைமகளை மனக்கண்முன் நீங்கள் நினைத்தீர்களா?" என்று கேட்டார்.

"ஞான தேவதைச் சிற்பத்தைப் படைக்கும் ஆவல் எனக்கு ஏற்பட்டது. என் எண்ணத்துக்கு ஆதரவு தந்தவர் இளவரசி. அவர்களே ஞான தேவதையாக என் முன் தோன்றினார்".

"ஞான தேவதைக்குத்தான் அப்படி யாராவது ஒருவர் முன்மாதிரியாகத் தோன்றுவாரா அல்லது எல்லா இறைவன் உருவங்களுக்கும் அப்படித்தானா?"

மாணிக்கசேகரன் அரசரை நிமிர்ந்து நோக்கினான். "தெய்வங்களை வர்ணித்து எழுதப்பட்ட பதிகங்களும், மந்திரங்களும், சுலோகங்களும் ஓர் ஓவியத்தை உள்ளத்தில் வரைந்துவிடுகின்றன. எங்கள் குருநாதர் கற்பித்துள்ள மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே இருக்கும்போது எதிரே ஓர் ஒளி நிறைந்த உருவம் தோன்றிவிடும்".

சோழச் சக்கரவர்த்தி இராசேந்திரன், சிற்பி பேசுவதைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

"ஞான சரஸ்வதி உன் முன் தோன்றினாளா? அவள் வர்ணம் என்ன? வடிவம் என்ன?"

"பளிங்கு போன்ற மேனி, பவழச் செவ்வாய், தாமரைப் பூப்போன்ற கரங்கள், அல்லி போல் குளிர்விழி..."

"வீரமாதேவி பளிங்கு போன்ற மேனி உடையவளா?"

"இல்லை. ஆனால் விழிகள், கரங்கள், இதழ்கள் எல்லாம் கலைமகள் போலவே தோன்றச் செய்தன. இளவரசியார் எப்போது வருவார் என்று காத்திருப்பேன். பாதச் சலங்கை ஒலிக்கக் கலைவாணி வருவதைப்

போலவே தோன்றும். இங்கே உள்ள பாறையின்மீது அமர்வார்கள். பாறை வெண்தாமரையாக மாறும்".

சக்கரவர்த்தி வீரமாதேவியை நோக்கினார்.

வீரமாதேவி புரிந்து கொண்டு விட்டாள். சக்கரவர்த்தி மனத்தில் சந்தேக விதை ஊன்றப்படுகிறதோ என்ற கவலை.

தன் குடிலுக்கு அவரை அழைத்துச் சென்றாள்.

அங்கே இருவருக்கும் நடைபெற்ற உரையாடல்களையும், கோபதாபங்களையும், உணர்ச்சி வெளிப்பாடுகளையும் தன் தகுதி மறந்து அரசியார் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.







## 45. சிவபக்தருக்கு ஒரு சிலை

அந்த மரத்தடியில், சோழ இளவரசிகள் நால்வரும் சில பணிப்பெண்களும் அமர்ந்திருந்தனர். வயிறு நிறைந்த பகல் உணவிற்குப் பிறகு, உண்ட களைப்பால் விழிகள் சுழல சற்று உடலைக் கீழே சாய்க்கலாம் என்று எண்ணியவர்களுக்கு அரசியின் அபிநயம் நிறைந்த பேச்சு சுறுசுறுப்பை அளித்தது. அவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தனர். பணிப்பெண் மடியில் தலை வைத்துக் காலை நீட்டி மெல்லக் கண்ணயர முயன்றவர்களும் ஆவலுடன் எழுந்து உட்கார்ந்தனர்.

இராசேந்திரனும், வீரமாதேவியும் பேசிக்கொண்டிருந்தவற்றை மறைந்திருந்து கண்டதை, கேட்டதை அரசி அப்படியே விவரிப்பதை அவர்கள் ரசித்தனர். அரசியாரிடம் புதைந்துள்ள திறமை அவர்களிடம் பெரும் வியப்பை அளித்தது.

"இன்னும் ஏராளமாகச் சொல்ல இருக்கிறது. மூச்சு வாங்குகிறது - இன்று இவ்வளவுதான். எனக்குக் களைப்பாய் இருக்கிறது" என்றாள் அரசி, தன் பேச்சை நிறுத்தி.

மற்றவர்கள் வியப்புடன் பார்த்தார்கள்.

"இதுவரையில் சொன்னவை சுவையாக இருந்தன. இன்று இவ்வளவுதான் என்றால் இன்னும் இருக்கிறது

சொல்லுங்கள் - ஆகா" என்று ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியுடன் அரசியை நோக்கினர்.

"நாளை வரையில் தாங்க முடியாது தேவி. சற்று நேரம் கண்ணயருங்கள். நாங்கள் சிறுதுயில் புரிகிறோம்" என்று அரசியின் செவிக்கருகே மெல்லக் கூறினாள் ஒருத்தி.

"யாரடி பெண்ணே, மயில் தோகை விசிறி எங்கே? எடுத்து வா" என்று கட்டளையிட்டாள், மீனவன் மாதேவி.

"அப்படியென்றால் இனி வீரமாதேவி வீரம்மாளாக ஆகிவிடுவாள் என்று சொல்லுங்கள்" என்று ஆவலுடன் செய்தியை முழுமையாக அறியக் கேட்டாள். பணிப் பெண்கள் செவியைக் கூர்மையாக்கிக் கொண்டனர்.

இராசேந்திரன் வீரமாதேவி இடையே நடந்த உரையாடலை மிகத் தெளிவாகக் கேட்ட அரசிக்கே அதிர்ச்சியாக இருந்தபோது இன்னும் கற்பனை கலந்து அவள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்ற இளவரசியர்களுக்கு வியப்பு மேலிடாமல் இருக்குமா?

அரசிக்கு அந்தக் காட்சி வியப்பாக இருந்தது. அந்தத் தனி இடத்தில் இராசேந்திரனும், வீரமாதேவியும் சல்லாபத்தில் ஈடுபட்டிருக்கப் போகிறார்கள் என்று அவள் எதிர்பார்த்தாள். நீண்ட நாள்களாகச் சந்திக்காததால் விரகதாபம் மேலிட்டுக் காமன் கணைக்கு இரையாகியிருப்பார் என்று நினைத்தாள். அழகின் மோக வலைவீச்சிற்கு அடிமையான அரசர், இப்போது மீண்டும் அவளைச் சந்திப்பதால் தன்வசம் இழந்துவிடுவார் என நினைத்தாள்.

தஞ்சையிலுள்ள மற்ற இளவரசிகளிடமிருந்து அரசரைப் பிரிக்க இல்லாததை பொல்லாததை அவள் கூறி மனத்தை மாற்றி விடுவதற்கான அம்புகளை வீசுவாள் என நினைத்தாள்.

வீரம்மாளின் இளமைக் கன்லில் வீழ்ந்து பொசுங்கும் அரசரின் நிலையை ஐயோ இந்தக் கண்ணால் பார்க்க நேரிடுமோ என்று வேதனைப்பட்டாள்.

இராசேந்திரன் அங்கே இருந்த மரத்தால் செய்யப்பட்ட இருக்கை ஒன்றில் அமர்ந்தார். சுற்று முற்றும் பார்த்தார்.

சிற்பியுடன் பேசிவந்த பிறகு அவர் உள்ளத்தில் ஏற்பட்ட சிறு சலனத்தை முகம் பிரதிபலிக்காமல் மறைக்க



முயல்வது தொடர்பற்று ஏதேதோ பேசுவதிலிருந்து தெரிந்தது.

அரசி நினைத்தாள்: "இவர் ஏன் அந்தக் குடிலைப் பற்றி வினவுகிறார்? இவர்தானே இந்தக் காட்டுப் பகுதியில் அவளை இருக்குமாறு செய்தவர்? இவர்தானே அவளுக்குக் குடில் அமைத்துக் கொடுத்தார்?"

அவர் குடிலைப் பற்றி வினவியது. அந்தச் சிற்பியின் குடிலை, சிற்பம் உருவாவதைப் பற்றி. சிற்பி விவரித்ததைப் பற்றிக் கேட்கிறார்.

வீரமாதேவி ஏதோ சொல்கிறாள். வயது காரணமாக விளைவு செவியில் ஏற்பட்ட கோளாறுதான்.

வீரமாதேவி ஏதோ கூறுகிறாள். இராசேந்திரர் மௌனமாக இருக்கிறார். அவருடைய மௌனம் அவளுக்கு எரிச்சலை அளித்திருக்க வேண்டும்.

"தஞ்சைபுரிச் சிற்பங்களைவிட நான் மிகவும் மேன்மையான சிற்பங்களை இங்கே படைக்கப் போகிறேன்" என்று அவன் அழுத்தந்திருத்தமாகக் கூறியது மட்டும் சோழ அரசி பஞ்சவன் மாதேவியின் காதுகளில் வீழ்கிறது.

இராசேந்திர சோழர் ஏனோ நகைக்கிறார். "சிற்பியை நான் மதுரைக்குத் திருப்பி அனுப்பப் போகிறேன்" என்கிறார்.

வீரமாதேவி திடுக்கிடுகிறாள்.

"சிற்பியை ஏன் மதுரைக்கு அனுப்ப முடிவு செய்து விட்டீர்கள்?" வீரமாதேவி கேட்கிறாள்.

சிறு இடைவெளி வழியே பஞ்சவன் மாதேவியால் உற்றுப் பார்க்க முடியவில்லை. தான் நோக்குவதைப் பிறர் பார்த்துவிடப் போகிறார்களே என்ற அச்சம் வேறு.

சில நொடிகள் கண்ணைக் கசக்கிவிட்டு மீண்டும் பார்த்தபோது, இராசேந்திரனும் வீரமாதேவியும் எதிர் எதிர் மூலையில் நின்றிருந்தனர். அப்படி அவர்கள் திடீரென ஊடல் கொண்டு நிற்கக் காரணம் என்ன என்று பஞ்சவன் மாதேவிக்குப் புரியவில்லை. கண்ணைக் கசக்கிக் கொண்ட நேரத்தில் அவர்களிடையே ஏற்பட்ட பிணக்குதான் என்ன?

இராசேந்திரன், வீரமாதேவியை அணுகி மெல்லிய குரலில் ஏதோ சொல்கிறார். அவள் மறுமொழி கூற

வில்லை. அவர் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை அவள் காண்கிறாள்.

அவள் ஏதோ சொல்கிறாள். பிறகு உறுதி நிறைந்த குரலில், "நான் இந்தக் காட்டுப் பகுதியைவிட்டு வர மாட்டேன். மாளிகையிலும், அந்தப்புரத்திலும் எனக்கு என்ன வேலை இருக்கிறது? இந்த வனபூமியைக் கலைப் பூமியாக்கும் வரையில் நான் இங்கிருந்து நகரமாட்டேன்" என்கிறாள்.

"இந்தக் காட்டுப் பகுதியைக் கலைக்கூடமாக்கும் உன் எண்ணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் நீ தனியே இங்கு இருந்து என்ன செய்யப் போகிறாய்? சிற்பங்கள் அமைக்கும் பணியை மாணிக்கசேகரன் பார்த்துக் கொள் வான்'' என்கிறார்.

"அவருக்கு நான் உதவியாக இருக்க வேண்டும். நான் அளிக்கும் உற்சாகத்திலிருந்து அமர சிற்பங்களை அவர் படைக்கப் போகிறார்".

இதைக் கேட்டு இராசேந்திரன் மறுமொழி கூறவில்லை. பிறகு குறுக்கும் நெடுக்கும் உலவினார். அவர் மனத்தில் ஏற்பட்ட கடுமையை முகம் பிரதிபலித்தது.

சிற்பியுடன் அவள் தங்கியிருப்பதை அவர் விரும்ப வில்லை என்பது தெரிந்தது.

"இந்த நாட்டுச் சக்கரவர்த்தியாக நான் அரியணையில் அமர்ந்த பிறகு, ஒரு நாளாவது நீ தஞ்சைபுரிக்கு வரவிலலை என்பதை நினைத்துப் பார்த்தாயா?"

இப்படி இராசேந்திரன் கேட்டவுடன் வீரமாதேவி திரும்பிப் பார்த்ததில் கடுமை தென்பட்டது. "தங்களுக்கு மகுடம் சூட்டு விழா எப்போது நடந்தது? அதைப் பற்றி அறியாத நான் தஞ்சைக்கு வந்தால் என் நிலை என்ன? என்னை உங்களுடன் சரிசமமாக அரியணையில் அமர வைப்பீர்களா?" என்றெல்லாம் அவளிடமிருந்து எழுந்த கேள்விக் கணைகளுக்கு இராசேந்திரன் உடனே விடை கூறாமல் திகைத்தார்.

"நான் சோழ சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டது உனக்குத் தெரியாதா? மிகக் குறுகியகால அளவில் முடிவு செய்யப்பட்ட அந்த விழாவைப் பற்றி உனக்குத் தெரிவிக்க வில்லையா? எங்கோ தவறு நடந்திருக்கிறது! வீரம்மா.



முடிசூட்டு விழா அன்று என் விழிகள் உன்னைத் தேடின" - இப்படிக் கூறியவாறு அரசர் அவளை மெல்ல அணைக்க முயன்றார். ஆனால் வீரம்மாள் விலகியவாறு -

"நான் நம்புகிறேன். ஆனால் ஏழு கடலுக்கு அப்பால் இருந்தாலும் தேடி அழைத்து வரக்கூடிய சக்தி தங்களிட மில்லையா? ஆள் படைப்பலம் இல்லையா? நான் வர வில்லை என்பது தங்களுக்குத் தெரியாதா?"

"எங்கோ தவறு நடந்திருக்கிறது என்று சொல்லி விட்டேனே!"

"எங்கும் தவறு நடக்கவில்லை. தவறு தங்களிடம்தான்".

"சரி, ஏற்கிறேன். தவறு எங்கே நடந்திருக்கிறது என் பதைக் கண்டு பிடிக்கிறேன். அரச பதவிக்குரிய சில சடங்குகள், முறைகள், கட்டுப்பாடுகள் உடனே சூழ்ந்து விட்டன. அதனால் நான் கவனிக்கவில்லை. என்னுடன் தஞ்சைக்கு வருகிறேன் என்று சொல்".

"சொல்ல மாட்டேன். தங்களுடைய மற்ற இளவரசி களின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. 'இந்தக் கானகத்திற்கு வந்ததிலிருந்து அவர்கள் நடந்து கொள்ளும் முறை பிடிக்கவில்லை. மொத்தத்தில் என்னை அவர் களுக்குப் பிடிக்கவில்லை".

"எப்படித் தெரியும்?"

"தொடக்கத்திலேயே தெரிந்துவிட்டதால்தான் நான் தஞ்சையினின்று இந்த இடத்திற்கு வந்தேன் என்பது தங்களுக்குத் தெரியாதா? தங்களிடம் தெரிவித்துவிட்டு வந்தேன்".

"இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தவனே நான்தானே!"

"ஆம்; அந்த அரக்க மனம் படைத்தவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றவே என்னை இங்கு அனுப்புவதை ஏற்றேன். அத்துடன் என் இடலட்சியம் ஈடேறுவதற்கேற்ற சூழ்நிலை அமைந்ததற்கு மகிழ்ந்தேன்".

"நம் இலட்சியம் என்று சொல்".

"ஆம், நம் இலட்சியம்தான். ஆனால் இன்று இலட்சியத் திற்கு இடையூறாக நடக்க விரும்புகிறீர்கள்".

"இல்லை".

"ஆம்... ஆம்... என்னை இங்கிருந்து புறப்பட்டு வருமாறு வற்புறுத்துவதன் பொருள் வேறு என்ன?"

"அதற்காக இல்லை".

இராசேந்திரர் சற்று நிறுத்தி வீரமாதேவியைக் கூர்ந்து நோக்கினார்.

"எனக்குப் புரிந்துவிட்டது. சிற்பம் உருவாகும்போது நான் சிற்பியின் அருகே இருப்பதைத் தாங்கள் விரும்ப வில்லை".

"ஆமாம்... நீ உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை".

"அதில் என்ன தவறு? பொறாமையால் சொல்கிறீர்கள்".

வீரமாதேவி இவ்வாறு கூறியது கேட்டு இராசேந்திரன் இதழ்களில் குறும்பு மிளிர, "ஆமாம்... எனக்குக் கிடைக் காதது மற்றவருக்குக் கிடைக்கக் கூடாது என்பதில் எனக்குப் பொறாமை" என்று கூறவும் வீரமாதேவி சீறினாள்.

"என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள். தங்களை உயர்தரமானவர் என்றும் மனிதர்களுக்கெல்லாம் மேம்பட்ட புருஷோத்தமன் என்றும் நான் நினைத்திருக்கிறேன். கலைக்காவலர் என்பதனால் அரசருக்குரிய வக்ர குணங் களிலிருந்து மாறுபட்டவர் என்று எண்ணியிருக்கிறேன். அதனால்தான் நான் என்னைச் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாகவும் தங்களை அந்தப் பரமபுருஷனாகவும் எண்ணியிருக்கிறேன். காமத்திற்காகவும், உடல் ஆசைக் காகவும் தாங்கள் என்னை விரும்பவில்லை என்பதை உணர்ந்து தங்களை என் இதயத்தில் அமரச் சம்மதித் தேன். அது கலைப்பீடம் என்பது தங்களுக்குத் தெரியும். அழியக்கூடிய அற்ப உடலை மதிக்காமல் தங்கள் கலை ஜீவனைக் காதலித்தேன். அதற்கு என் உடலையும் ஆவியையும் அர்ப்பணிக்க முடிவு செய்திருந்தேன். என் வாழ்க்கையை இந்தக் காட்டுப் பகுதியில் கழித்து கானகத்தைக் கலைப் பூமியாக்க முடிவு செய்தேன். தஞ்சையைவிடச் சிறந்த கோயிலை எழுப்பித் தங்கள் பெயரும் புகழும் என்றும் உலகில் ஆயிரம் ஆயிரம் ஆண்டு களுக்கும் மேலாக நிலவச் செய்ய உறுதி பூண்டேன். என்னைப் பார்த்து இப்படிச் சொல்லிவிட்டீர்களே? என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்?"

கோபத்தால் வெடித்த வார்த்தைகள் சிறிது சிறிதாகக் குறைந்தன. அவள் விம்மினாள். முகத்தை இரு கரங் களால் மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.





மறைந்திருந்து தான் கேட்டவற்றையெல்லாம் அபி நயித்து அரசி கூறிவந்ததை மற்ற இளவரசிகள் ஆர்வ முடன் கேட்டு ரசித்தனர்.

"வீரம்மாள் அழுதாளா? நன்றாக அழட்டும். நம் அரசர் அவளைப் பற்றி முடிவு செய்திருந்ததை நானும் ஆமோதிக் கிறேன். சிற்பியும் இளம் வயது. இவளும் இளமை





நிறைந்தவள். அழகி என்ற கர்வம் வேறு. அரசரை விட்டுப் பிரிந்து இந்தக் காட்டில் பஞ்சும் நெருப்பும் சேர்ந்து இருக்கலாமா? இவள் இங்கே என்ன செய் கிறாள்?" என்று மீனவன் மாதேவி கேட்டாள்.

"நாம்தானே வீரம்மாளைக் கண்காணாத இடத்திற்கு அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்தோம். வீரம்மா இங்கு இருப்பதே நல்லது. அரசர் வீரம்மாளைத் தஞ்சைக்கு வருமாறு வற்புறுத்தி விடுவாரோ என்று நான் அஞ்சினேன். அவள் தஞ்சைக்கு வந்தால் நம் நிலை என்னவாகும் என்று யோசித்தீர்களா?" என்றாள், பஞ்சவன் மாதேவி.

".அப்படியா? தஞ்சைக்கு அவள் வருவதை நாம் தடுத்து விடவேண்டும்".

"அந்தப் பொறுப்பு என்னுடையது" என்றாள், அரசி.

"உம்... அப்புறம் சொல்லுங்கள். வீரம்மாள் அழுதாள்! அரசர் என்ன செய்தார்?" என்று இதுவரையில் பேசாமல் இருந்த அரிந்தவன்மாதேவி அறிந்து கொள்ளக் கேட்டாள்.

"நான் எப்படி வர்ணிப்பேன்... நம் தலைவருக்கு இன்னும் பெண் பலம் போகவில்லை. வீரம்மாளைத் தன் அருகே இழுத்து அணைத்துக்கொண்டு..."

"ஐயோ அணைத்துக் கொண்டு..." என்று அரிந்தவன் மாதேவி கேட்கவும், மற்றவர்கள் இருந்த இடத்திலிருந்து ஆவலுடன் துடிக்கவும் அரசி கையை ஓங்கி, "ஆசையைப் பார் ஆசையை. எல்லாவற்றையும் என் வாய் மூலம் அறியத் துடிக்கும் உன் புத்தியை என்னவென்று சொல்வேன்..." என்று அதட்டினாள்.

"ஒன்று விடாமல் வர்ணிக்கிறீர்களே. இதையும் வர்ணிப்பீர்கள் என்று நினைத்துக் கேட்டேன், நீங்கள் மட்டும் பார்த்து ரசித்ததை..." என்று அவள் சமாதானம் சொல்லவும் மற்றவர்கள் ஆமோதித்து அரசியை வற்புறுத் தினர்.

சுற்றும் முற்றும் பார்த்து மெல்லிய குரலில், "அரசர் அவள் கண்ணீரைத் துடைத்தார். பிறகு அவளிடம் ஏதோ கூறினார். அங்கிருந்துப் புறப்பட்டார். நான் மறைந் திருந்து பார்ப்பதை யாராவது கண்டுவிடப் போகி றார்கள் என்று நானும் அங்கிருந்துப் புறப்பட்டுவிட்டேன்".

மற்றவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது.

"ஆ... நல்ல காட்சியைக் காணாமல் வந்துவிட்டீர்களே" என்று மீனவன்மாதேவி சொல்லவும் அங்கிருந்தவர்கள் 'ஹோஹோ' என்று சிரித்தனர்.

இராசேந்திர சோழர் அங்கு வந்து கொண்டிருந்தார். அவருடன் வீரமாதேவி வரவில்லை. சிற்பி மாணிக்க சேகரன் பயபக்தியுடன் அவர் பின் தொடர்ந்தான்.

சிற்பியின் தோள்களைத் தொட்டு, "சிற்பியாரே, உங்கள் கலைத் திறமையை மெச்சுகிறேன். சிற்பப் பணி தொடரட்டும். வீரமாதேவி தஞ்சை வருகிறாள். அதனால் சிற்பப் பணி தடைப்பட்டு விடக்கூடாது. இன்னும் சிற்பி களை மதுரையினின்றும் மாமல்லையினின்றும் அழைத்து வாரும்" என்றார்.

சிற்பி மாணிக்க சேகரன் ஏதோ சொல்ல வாயெடுத் தார். பிறகு வீரமாதேவியைச் சுட்டிக் காட்டி, "நேற்று தேவி ஒரு கதை சொன்னார்கள். சிவபெருமான் அருள் பெற்ற சண்டேசுவரருடைய கதை. அதைச் சிற்பமாக வடிக்கத் திட்டமிட்டேன். இந்தச் சமயத்தில்..." என்றான் தயக்கத்துடன்.

வீரமாதேவி குறுக்கிட்டு, "சிற்பியாரே! இன்று தஞ்சைபுரிக்குச் செல்கிறேன். விரைவில் திரும்பி வரு வேன். நான் தனியே வரமாட்டேன் அரசருடன் வருவேன். நான் கூறியபடி, அந்தச் சண்டேசுவரர் வேறு யாருமல்லர். இவர்தான்" என்று அரசரைச் சுட்டிக் காட்டினாள். சிற்பி புரியாமல் திகைத்தார்.

"புரியவில்லையா? சிவபெருமானும் பார்வதிதேவியும் சண்டேசுவரருக்கு மலர் மாலை சூட்டுகிறார்கள். புவனம் புகழும் மாவீரர் நமது சோழச் சக்கரவர்த்தியின் பெருமையையும் வீரத்தையும் மெச்சி சிவபெருமான் மாலை அணிவிப்பதுபோல் அந்தச் சிற்பம் அமைய வேண்டும்.

"சோழர் குல நாயகன் வீரர் மட்டும் அல்லர்; அவர் சிறந்த சிவபக்தர் என்று உலகுக்கு அறிவிக்கும் காலம் வந்துவிட்டது. தன் பக்தருக்குச் சிவபெருமான் மாலை மரியாதை செய்வது நியாயந்தானே?" என்றாள்.

பிறகு தொடர்ந்து, "சிற்பியாரே! ஞானசரஸ்வதி சிற்பம் பூர்த்தியாவதற்குள் நான் திரும்பி வருவேன். அரசருடன் வருவேன். பிறகு இந்தச் சிற்பப்பணி தொடங்கலாம்".



பிறகு அரசரை நோக்கினாள். அருகிலிருந்த அரசி யாரை நோக்கினாள். இளவரசியர்களை அலட்சியமாகப் பார்த்தாள்.

'ஆ! வீரமாதேவி தஞ்சை வரப்போகிறாளா? திரும் பவும் அரசருடன் இங்கு வரப்போகிறாளா?' என்று கவலையும், அதிர்ச்சியும் நிறைந்த பார்வையை அரசியின் பக்கம் அவர்கள் செலுத்தினர்.

'அதெல்லாம் நடக்காது. நான் பார்த்துக் கொள்கிறேன்' என்பதுபோல் பஞ்சவன்மாதேவி கம்பீரமாகத் தலை யசைத்தாள்.





# 46. இராசேந்திரன் வேண்டுகோள்

தஞ்சை மாளிகைக்குத் தன்னை இராசேந்திரன் அழைத்து வந்ததன் காரணம், வீரமாதேவிக்குப் புரிந்து விட்டது.

அவரும் மற்றவர்களைப் போல சந்தேக எண்ணத்தை மனத்தில் விதைத்து வளர்ப்பவர் என்பது புரிந்துவிட்டது.

தன்னைத் தவிர மற்றவரிடம் பேசுவதோ, அன்பு செலுத்துவதோ கூடாது எனும் சிறுமதி அவருக்கு எப் போதும் உண்டா, இப்போதுதான் தோன்றியதா என்று அவளுக்குத் தெரியவில்லை.

மாளிகையில் இரண்டாவது சாமத்தில் தொடங்கிய அவர்கள் விவாதம் விடிவெள்ளி முளைக்கும் வரையிலும் தொடர்ந்தது.

கானகத்தின் நடுவில் கலைக் கோயில் ஒன்றை எழுப்பும் எண்ணம் இராசேந்திரனுக்கும், அவளுக்கும் சேர்ந்தே தோன்றியது. ஆனால் இப்போது அவருள்ளத்துப் பொறாமைத் தீ கலை ஆர்வத்தைத் தீய்த்துவிடும் போலிருக்கிறதே!

அவர் ஏன் இன்னும் என்னைப் புரிந்து கொள்ள வில்லை? அவள் கடைசியாக அவர் மார்பில் புதைந்து விம்மினாள்.



"நான் மறுபடியும் கொள்ளிடக் கரை கிராமத்திற்கே சென்று விடுகிறேன். அமைதி இழந்து, தங்கள் நம்பிக் கையையும் இழந்து சோழ இளவரசி என்ற நிழல் வாழ்க்கை வாழ்வதைவிட, கிராமத் தாமரையாக மன அமைதியுடன் நிஜ வாழ்க்கை வாழ்வதையே விரும்பு கிறேன்" என்றாள்.

இராசேந்திரன் அவள் முகத்தை நிமிர்த்தினார். உதடு களில் குறும்புப் புன்னகையுடன், "நல்ல யோசனை வீரம்மா; நாம் இருவருமே கிராமத்திற்குப் போய்விடு வோம். அரசருக்கான வீண் ஆடம்பரம், கட்டுப்பாடு எல்லாம் இல்லாமல் வாழ்வோம். ஐம்பது ஆண்டுகளாக நான் ஊர் உலகம் சுற்றிவிட்டேன். வாளும் வேலும் பிடித்துக் கரங்களில் தழும்பு ஏறிவிட்டது. உங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்க யாரும் கட்டுப்படுத்த மாட்டார்களே. உன் மனச் சஞ்சலமும் மாறும்".

சஞ்சலமா, எனக்கா? என்னைப் பார்த்துச் சொல் லுங்கள். தங்கள் மனம் குழம்பிவிட்டது. அடித்தளச் சேறு இதயத் தடாகத்தில் நிறைந்துவிட்டது. கலை ஒன்றேயே குறிக்கோளாகக் கொண்டவர் மனத்தில் மாசு படிய இடமே இல்லை" வீரம்மாள் அழுத்தந் திருத்தமாகக் கூறினாள். பிறகு தொடர்ந்து, "தங்கள் மனத்தில் சந்தேகம் தோன்றக் காரணம் என்ன? காட்டுப் பகுதிகளில் நான் தனியே இருந்ததால் தவித்துப் போன தங்கள் மனத்தாபம் அவ்வாறு மனத்தை மாற்றிவிட்டதா?" என்று கேட்டாள்.

"நீ தனியே இல்லை, வீரம்மா!"

"ஆம்; தனியே இல்லை. செதுக்கப்பட்ட சிற்பங்கள் துணையாக இருந்தன. சிற்றுளி எழுப்பும் நாதம் துணை யாக இருந்தது".

"நாதம் எழுப்பும் சிற்பியும் துணையாக இருந்தான்" - அரசர் இவ்வாறு சொல்லிவிட்டு வீரமாதேவியைக் கூர்ந்து நோக்கினார்.

அவரது விழியைச் சந்தித்த வீரம்மாள், "ஆமாம், சிற்பி மாணிக்க சேகரன் அந்தக் காட்டுப் பகுதியில இல்லாவிட்டால் வாழ்க்கையில் நான் தோல்வி கண்டிருப் பேன்".

"வாழ்க்கை எனும் வசந்தத்தை வீணடிக்க விரும்பியது நீதான்! நீ எடுத்த முடிவுதான் அதற்குக் காரணம்".

"தாங்கள் சொல்வது புரிகிறது. என் இளமையையும் அழகையும் கண்டு என்னை விரும்பி ஏற்றீர்கள்..."

"உன் கலைத் திறமையையும் கண்டுதான்".

"உம்; அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கலைத் திறமையை மேலும் வளர்க்க உதவியவர்கள் தாங்கள் தக்க ஆசிரியரை நியமித்து நாட்டியக் கலையில் மேலும் புலமை பெறச் செய்தீர்கள்".

"சிற்பக் கலையிலும் நீ ஆர்வங் கொண்டாய்".

"ஆமாம். நம் இருவருக்குமே அந்த ஆர்வம் இருப்பதால், அதைப் பயன்படுத்த முடிவு எடுத்தோம்".

"என்னைவிட உனக்கு ஆர்வம் அதிகம் என்பதைக் கண்டு கொண்டேன். அதை வளர்ப்பதற்காக அந்தக் காட்டுப் பகுதியைத் தேர்ந்தெடுத்தேன்".

"தஞ்சைப் பெரிய கோயிலைவிடச் சிறந்த ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்ற தங்கள் கலை ஆர்வத்தைப் புரிந்து கொண்ட நான், அதை நிறைவேற்ற முற்பட்டேன். என் முயற்சி தவறாகிவிட்டது".

"தவறாகவில்லையே! மிக அரிய சிற்பங்கள் தோன்றியுள்ளன".

"தாங்கள் அதைப் பாராட்டுவதாகத் தெரியவில்லை".

"சிற்பங்களைப் பாராட்டுகிறேன். ஆனால்...?

"சொல்லுங்கள்".

வீரமாதேவி நேருக்கு நேர் கேட்டபோது அவள் பார்வையின் கூர்மையும் சொற்களின் வலிமையும் அந்த மாவீரனால் தாங்க முடியவில்லை.

"சொல்லுங்கள், சக்கரவர்த்திகளே! சொல்லுங்கள். சிற்பியைப் பிடிக்கவில்லை! அப்படித்தானே?"

"இல்லை, இல்லை - மாணிக்க சேகரனை மதுரையிலிருந்து நான்தான் வரவழைத்தேன். அவனிடமிருந்து மேலும் அரிய பெரிய படைப்புகளை எதிர்பார்க்கிறேன். ஆனால்..."

"சொல்லுங்கள், அரசே! சொல்லுங்கள். சிற்பியைப் பிடிக்கிறது. என்னைப் பிடிக்கிறது. ஆனால் சிற்பி என்னுடன் பழகுவதில்தான் தங்கள் மனத்தில் முள் குத்துகிறது".



இவ்வாறு அவள் சொன்னவுடன் இராசேந்திரன் அதிர்ச்சியடைந்தவராய், அவளை நோக்கினார்.

'அவ்வாறு நினைக்கவில்லை; அவ்வாறு சந்தேகப்படவில்லை' என்று சொல்ல வேண்டும்போல் தோன்றியது.

தன் மனத்தில் எழுந்த ஐயப்பாட்டைக் கணத்தில் தெரிந்துகொண்டுவிட்ட அவள் கூரிய மதியைப் பாராட்டத் தோன்றியது.

தஞ்சைக்கு நிகரான கலைக் கோயில் அமைப்பதில் பெரிதும் ஆர்வங் கொண்டிருப்பதால்தானே சிற்பியுடன் அவள் நெருங்கிப் பழக நேர்ந்தது. அதைத் தவறாக நினைத்துவிட்டோமே. நம் சந்தேகப் பேய் இன்னும் சிறிது காலம் மனத்தில் குடிகொண்டிருந்தால் எவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கும். பொறாமையால் சிற்பியை அழித்து இருப்போம். வீரமாதேவிக்குக் கடுந்தண்டனை வழங்கியிருப்போம். ஐயோ, கீழ்த்தரமான பேய்க்குணம் எவ்வாறு என்னுள்ளத்தில் ஏற்பட்டது?

இராசேந்திரன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை வீரமாள் கண்டாள். தாம் தவறு செய்துவிட்டோம் என்ற உணர்வு அவருக்கு மெல்ல மெல்ல ஏற்படுகிறது என்பதை உணர்ந்தாள். அபாண்டமாகக் குற்றச்சாட்டை வெளியிட்டுவிட்டோம் என்பதை அவர் உணர்வதை அவள் புரிந்து கொண்டாள். அதனால் அவர் கண்ணைக் கசக்குவதையும் கண்டாள்.

இனியும் அவரைச் சோதனை செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் அவர் கன்னத்தை மெலலத் தடவி, அவர் இதழ்களை மெல்ல வருடி அவரது கரத்தைப் பற்றிக் கொண்டு, "அரசே! தங்கள் மனத்தில் சந்தேகம் ஏற்பட்டது நியாயம்தான். தங்கள் உள்ளத்தில் நீறு பூத்திருக்கும் தீயைக் கொழுந்துவிட்டெரியுமாறு நான் நடந்து கொண்டது தவறு தான்; இனித் தங்களை விட்டு நான் பிரியமாட்டேன்" என்றாள்.

"எந்தக் கானகப் பகுதி தங்கள் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டுவதாக அமையும் என்று நான் நினைத்தேனோ, அந்த இடம் நம்மிருவரிடையே பிளவை ஏற்படுத்தும் என்ற நிலைக்கு அழைத்துச் செல்லும் என்றால் மீண்டும் நான் அங்கே செல்ல மாட்டேன். இது உறுதி" என்று அழுத்தந் திருத்மாகக் கூறினாள்.



ஒரு கணம் இராசேந்திரன் திகைத்தார். வீரமா தேவியின் உறுதிப்பாட்டில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சொன்ன சொல்லிலிருந்து அவள் மாற மாட்டாள் என்பது அவருக்குத் தெரியும். கலைக் கோயில் அமைப்ப தற்காகக் காட்டுப்பகுதிக்குச் சென்ற வீரம்மாள் அங்கே இனி செல்ல மாட்டேன் என்று உறுதி பூண்டுவிட்டாள் என்றால் தன் இலடசியம் என்னாவது? இராசேந்திரன் ஒரு கணம் குழம்பினார்.



அவர் திகைப்பதைக் கண்ட வீரம்மாள், "என் உறுதியில் கடுமை இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"காட்டுப் பகுதிக்குச் செல்லமாட்டேன் என்று நீ எடுக்கும் முடிவினால், நம் இருவருடைய இலட்சியங்களுக்கும் இடையூறு வந்துவிடாதா?" இராசேந்திரன் கேட்டார். சிறு குழந்தை போல் அவர் அன்புடன் கேட்ட கேள்வி வீரம்மாள் மனத்தை நெகிழ வைத்தது.

"என் இலட்சியத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டேன்" என்றாள்,வீரமாதேவி.

"கானகப் பகுதியில் நிர்மாணிக்க இருக்கும் கலைக் கோயில் என்னாவது?"

"தங்கள் இலட்சியம் எதுவோ அதுவே என் இலட்சியம். தங்கள் புகழ் காலாகாலத்திற்கு அழியாமல் இருப்பதற் கான எல்லாவிதப் பணிகளிலும் ஈடுபடுவதே என் வாழ்க்கையின் குறிக்கோள். தாங்கள் எப்படிக் கட்டளை யிடுகிறீர்களோ அப்படியே நடப்பேன். அதற்காக என் உறுதியையும் மாற்றிக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்" என்று வீரம்மாள் கூறியவுடன் இராசேந்திரன் திடுக் கிட்டார்.

அவளுடைய விழிகளில் புலப்பட்ட அழியாத அன்பைக் கண்டு அவர் மெய் சிலிர்த்தார்.

என் கட்டளையிட்டபடியே நடப்பேன் என்கிறாளே. நன்றாகக் கேட்போம். இரண்டாண்டுகள் ஓடி மறைந்தும் தன் இளமையின் தாபத்தை அடககி வைததிருக்கும் அவள் போக்கை மாற்றிக் கொள்ளுமாறு கேட்போம்!

"வீரம்மா! உனக்கு வேதனை தருமாறு நான் ஏதாவது கூறியிருந்தால் அதைப் பொருட்படுத்தாதே" என்று கூறிய வாறு அவள் கரத்தைப் பற்றினார். "உன்மீது எனக்குச் சந்தேகம் வரவில்லை. ஆனால், பொறாமை ஏற்பட்டது என்பது உண்மை" என்றார். பேசிக் கொண்டிருக்கும் போதே அவர் கரம் அவள் இடையைப் பற்றியது.

"பொறாமையா?" - வீரம்மாள் விழிகள் அகல மலர்ந்தன.

"ஆமாம்! உன் எழிலைக் கண்டு பொறாமை; உன் இளமையைக் கண்டு பொறாமை".

"தங்களுக்குப் பொறாமை ஏற்பட நியாயமில்லையே. இளமை என் வயதுக்கு ஏற்றது. அதில் புதுமை இல்லை.

நான் ஓர் அழகி என்று கருதுவது தங்கள் மனத்தையும் விருப்பத்தையும் பொறுத்தது. என்னை தாங்கள் உரிமை யாக்கிக் கொண்ட பிறகு நான் பூரணமாகத் தங்களிடம் இணைந்துவிட்ட பிறகு தாங்கள் என்மேல் பொறாமைப்பட என்ன இருக்கிறது? நான் அழகி என்று தாங்கள் வர்ணித் தால் தாங்களோ பேரழகர். தங்கள் பாட்டனார் சுந்தர சோழரின் மறுபிறவி என்று தங்களை உலகம் புகழ்கிறது. மன்மதனாகிய தாங்கள் என்மீது பொறாமைப்படக் காரண மில்லை" - வீரம்மாள் அவர் கரங்களில் துவண்டாள். பேச்சுத் தடைப்பட்டது.

"இல்லை வீரமாதேவி – நினைத்துப்பார்! உன் அழகுக் காக மட்டுமன்று; உன்னிடமுள்ள கலைப் புலமைக்காகவும் தான் நான் உன்மீது விருப்பங்கொண்டேன். ஆசை நாயகியாக உன்னை அந்தப்புரத்தில் அமர்த்தவில்லை. இளவரசியாக ஏற்றுக் கொண்டேன். எனக்கு மட்டுமே உன் நாட்டியக் கலை பயன்பட வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு மாறாக நீ மற்றவர் எதிரே ஆடும்போது எனக்குப் பொறாமை ஏற்படாமல் இருக்குமா?"

அவருடைய நெருக்கத்தில் இருந்து விடுபட முயன்று தோல்வியடைந்த வீரம்மாள் நெளிந்தவாறு, ""தங்கள் தந்தை எதிரே ஆடும்போதும், தங்களுடைய அருமை பட்டத்து அரசியின் எதிரே, இளவரசிகள் எதிரே ஆடும்போதும் பொறாமைப்படவில்லையா?"

அங்கே சில நொடிகள் மௌனம். வீரம்மாள் திணறியவாறு, "என்னைப் பேச அனுமதியுங்கள். என் அழகும், இளமையும், கலையும் தங்களுக்கு மட்டுமே என்று நான் உறுதியாக முடிவு செய்ததனால்தான், தங்கள் திருக்குமரன் தண்டனைக்கு ஆளானான் என்பதை மறந்து விட்டீர்களா? நாடு நகரத்தில் இருந்தால் காமப் பார்வைகள் என் உடலை மொய்த்து, என்னைக் கருக்கி விடும் என்று காட்டிற்கு வந்துவிட்டேன். அங்கே தாங்களும் நானும் மட்டும் தங்கியிருந்து கலையாட்சி புரிய வேண்டும் என்பது என் ஆசை; ஆசையன்று, வேண்டுகோள். என் கோரிக்கையை நிறைவேற்றுவீர்களா?" வீரம்மாள் அவரது அணைப்பிலிருந்து தன்னை முற்றிலுமாக விடுவித்துக் கொண்டு, சற்று விலகி நின்று, கலைந்திருந்த தன் மேலாடையை விரைவாக சீர்திருத்த முயலும்போத



இராசேந்திரன் மீண்டும் அவள் கரத்தைப் பற்றி இழுத்த போது, அவள் அவர் மடியில் வீழ்ந்தாள்.

இராசேந்திரன் வார்த்தைகளில் தெளிவு குறைந்து தடுமாற்றம் நிறைந்திருந்தது. அந்த மாவீரனின் உடலில் மெல்லிய நடுக்கம். "ஒரு கோரிக்கை என்ன, ஒன்பது கோரிக்கையை நான் நிறைவேற்றுவேன். உன் பிடிவாதத் தைச் சற்றுத் தளரவிட்டால்..." என்று வார்த்தைகள் தடுமாறப் பேசினார். அண்மைக் காலத்தில் அவர் மது அருந்தி அவள் பார்த்ததில்லை.

மீண்டும் அவர் மடியிலிருந்து எழ முற்பட்டவள், "பேரரசரே! நான் பிடிவாதம் பிடிக்கிறேனா? இன் னொரு முறை அப்படிச் சொல்லாதீர்கள்; மமதைக்கும், கர்வத்திற்கும், பிடிவாதத்திற்கும் அப்பாற்பட்டவள் நான். ஒருவேளை நான் இன்றும் தங்கள் அரவணைப்பில் குழந்தையாக இருந்து செல்லமாகச் சிணுங்கிப் பிடிவாதம் பிடித்திருந்தால் என்னைப் பொறுத்தருளுங்கள்; அந்தப் பிடிவாதத்தைச் சுட்டிக் காட்டினால் நான் என்னை மாற்றிக் கொள்கிறேன். சோழப் பேரரசர் எதிரே பிடிவாதம் பிடித்து வென்றவர்கள் என்று யாராவது இருக்கிறார்களா?" – இப்படிச் சொல்லிக்கொண்டே அவள் அவர் அருகே அமர்ந்தாள்.

"இருக்கிறாள், இருக்கிறாள்! இதோ என் எதிரே இருக்கிறாள். தேவலோக மங்கைபோல் அமர்ந்திருக் கிறாள்" என்று கூறி அவர் நகைத்தவாறு அவளைப் பார்த்த பார்வையில் காதல் மயக்கம் பொங்கி வழிந்தது.

"வீரமாதேவி! நீ இந்த நாட்டின் அரசிகளுள் ஒருத்தி. என் மனத்துக்கு இசைந்தவள். கலையும், வீரமும், அறிவும் மிகுந்த ஒரு வீரனை உன்னால் பெற்றுத் தர முடியும். இன்னும் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டை ஆளும் சக்தி படைத்த ஆண்மகனை உன்னால் தான் சோழ நாட்டிற்கு அளிக்க முடியும். உன் சபதத்தை மறந்து, பிடிவாதத்தை வீசி எறிந்து விடு; என் கோரிக்கையை, ஆசையை நிறைவேற்றுவாயா? வா, என் அருகே வா–வீரமாதேவி" என்று பேசியவாறு இராசேந் திரன் தன் வலிமை முழுவதையும் செலுத்தி வீரம்மாளை அணைக்க முயன்றார்.



# 47, உமக்கே அடைக்கலம்

வீரம்மாளின் முகத்தில் தோன்றிய சினத்தைக் கண்டு இராசேந்திரன் ஒரு கணம் நடுங்கிவிட்டார். போர்க்களங் களில் பாய்ந்து வரும் குதிரைகளையும், துதிக்கையை மேல் தூக்கிப் பிளிறிக் கொண்டு ஓடிவரும் யானைகளையும் கண்டெல்லாம் அஞ்சாத மாவீரன் வீரம்மாளின் விழிகளில் தோன்றிய மாறுதலைக் கண்டு நடுங்கினார்.

உள்ளத்தில் கொழுந்துவிட்ட காமவெறியால் அவளை அணைக்க நெருங்கிய இராசேந்திரன் நீட்டிய கரங்கள் நீட்டியவாறு திகைத்து நின்றார்.

வீரமாதேவி தஞ்சைக் கோட்டைக் காளியைப்போல் ஒரு கணம் காட்சியளித்தாள். தில்லையின் எல்லையில் உள்ள காளியாகத் தோன்றினாள். வாதாபி நகரத்தில் வெற்றி பெற்றுத் திரும்பியபோது கண்டு வணங்கிய நகரக் காவல் தெய்வமாம் வனதுர்க்கையைப்போல் எதிரே நின்றாள்.

ஒரு கணம் ஏதும் செய்யத் தோன்றாமல் ஆடாது அசையாது சிலைபோல் நிலைத்து நின்ற இராசேந்திரன் வீரமாதேவியிடம் சரண் அடைந்துவிட விரும்பினார்.

"இங்கிருந்து போய் விடுங்கள், இங்கிருந்து போய்விடுங்கள்" என்று வீரமாதேவி முணுமுணுத்தாள். கூவி ஆர்ப்பாட்டம் செய்யக்கூடிய நிலையின் முதல்படி; தன் விரதத்தைப் பங்கமடையச் செய்ய முயன்ற



அரக்கனைச் சபிக்கும் முனிவரின் சீற்றம் அவளிடம் அப்போது குடிகொண்டது. அவள் உடலில் இப்போது நூறு பிடிகளின் வலிமை புதைந்து நின்றது. முழு வலிமையைச் செலுத்தி அணைத்துத் தன் தாபத்தைத் தீர்த்துக் கொள்ள முயன்ற அரசரை அந்தக் கணத்தில் தடுத்து நிறுத்தி நிலை குலைந்து தள்ளி விடுமளவுக்கு வலிமை அவளிடம் நிறைந்திருந்தது.

அவள் விழிகளில் ஆவேசத்தைக் கண்டார். 'இங்கிருந்து போய்விடுங்கள்' என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவள் மெல்லவே பேசினாலும் அந்தச் சொற்களில் கடுமை கலந்திருந்ததை அவர் உணர்ந்தார். அவள் இருகரங்களும் தற்காப்பு நிலையில் ஆயத்தமாக இருந்தன.

அவளுடைய நாட்டியத்தைத் தனிமையில் கண்டு பலமுறை ரசித்திருக்கிறார். நாட்டியத்தில் காதலை வெளிப்படுத்தும்போது அவளுடைய முகமும், கரங்களும், உடல் முழுமையும் அதன் அடையாளமாக இயங்கியதைக் கண்டு ரசித்திருக்கிறார்.

'காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்' என்ற பதிகத்திற்கு அபிநயம் செய்தபோது அவள் விழிகளில், கரங்களில், நடையில் ஏற்பட்ட பாவங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்.

'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே திருவலஞ்சுழி வாணனை வாயாரப் பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே...' என்று சம்பந்தப் பெருமான் கசிந்துருகி எவ்வாறு பாடியிருப்பாரோ, அதைப் புலப் படுத்தும் வகையில் தன்னையே போற்றிக் கொள்வது போல் உள்ளத்துணர்வை வெளிப்படுத்தப் புலப்படுத்திய பாவம் கண்டு வியந்திருக்கிறார்.

ஒரு சமயம் தான் கண்டு மகிழ்ந்ததை இப்போது நினைத்துப் பார்க்கிறார். தலைவியிடம் கண்ட மன மாறு பாடுகளைக் கண்ட தோழி பாடுவது போன்ற கருத்தைக் கூறும் திருமங்கை மன்னரின் பதிகமான,

*'சிலையிலங்கு பொன் ஆழி*
*திண்படைதண்(டு)ஒண்*
*சங்க மென் கின்றாளால்*

*மலையிலங்கு தோள் நான்கே*
*மற்றவனுக் கெற்றே*
*தான் என்கின்றாளால்*
*முலையிலங்கு பூம்பயலை*
*முன்போட அன்போடி*
*யிருக்கின்றாளால்*
*கலையிலங்கு மொழியாளர்*
*கண்ணபுரத்து அம்மானைக்*
*கண்டாள் கொல்லோ ?"*

என்ற பாடலைப் பாடி அபிநயித்தபோது வெளிப் படுத்தியதைப் பாராட்டி, பாட்டிலும் அவள் நடனத்திலும் மயங்கி அவளை அணைக்க முயன்றிருக்கிறார்.

சுந்தரருடைய பாடல் ஒன்றைப் பாடும்போது வீரம்மாளுக்கு ஏற்பட்ட பக்திப் பரவசமான குதூகலம் இன்னும் அவர் கண்முன் நிற்கிறது.

'சிவபெருமானுடைய திருவடிகளில் அன்புடையவர் களே, அத்திருவடிகளுக்கு ஆளான தொண்டர்களுடைய பாததூளியில் முழுகுங்கள்' என்று கோஷமிட்டவாறு அவள் குதூகலத்துடன் கூத்தாடிய காட்சியை அவரால் இன் றளவும் மறக்க முடியவில்லை.

*ஆடுமின் அன்புடையீர்*
*அடிக்காட்பட்ட தூளிகொண்டு*
*சூடுமின் தொண்டர் உள்ளீர்*
*உமரோடு எமர் சூழவந்து*
*வாடுமின் வாழ்க்கை தன்னை*
*வருந்தாமல் திருந்தச் சென்று*
*பாடுமின் பத்தர் உள்ளீர்*
*பழமண்ணிப் படிக்கரையே...*

என்ற பாடல் அவர் செவிகளில் இப்போதும் ஒலிக் கிறது. இனிய குரல், இனிய நடனம், இனிய இளமை...,

ஐயோ அந்த இளமைதானே என்னைத் தடுமாறச் செய்துவிட்டது!

ஒருநாள், முழுமதி நிறைந்த நாள். மாணிக்கவாசகரின் ஒரு பதிகத்தை அவள் பாடினாள்.



ஆகா, அந்தப் பாடலின் பொருள் உணர்ந்து அதை முக உணர்வுகள் மூலம் வெளிப்படுத்தி ஆடியபோது அவள் விழிகளிலும் கண்ணீர் கோத்து நின்றது.

*'இருந்து என்னை ஆண்டுகொள்*
*விற்றுக்கொள் ஒற்றிவை என்னின் அல்லார்*
*விருந்தினனேனை விடுதிகண்டாம்*
*மிக்க நஞ்சு அமுதா*
*அருந்தினனேமன்னும் உத்தரகோச*
*மங்கைக்கு அரசே*
*மருந்தினனேபிறவிப்பிணிபட்டு*
*மடங்கினர்க்கே...*

கொடிய நஞ்சை அமுதாய்க் கொண்டவனே, உத்தர கோச மங்கையில் எழுந்தருளியுள்ள தலைவனே! பிறப் பெனும் பிணியில் சிக்கியிருப்பவருக்கு மருந்து ஆனவனே! என் எதிரே தோன்றி என்னை அடிமைப்படுத்திக் கொள். உன்னுடைய உடைமையாகக் கொண்டு என்னை ஏற்றுக் கொள். ஒத்தி வைத்துக் கொள். உன்னிடம் விருந்தின னாக வந்தவனைக் கைவிட்டு விடாதே -

ஏன் - இந்தப் பதிகத்தில் தன்னைக் குறித்துப் பாடப் பட்டது என ஏன் கொள்ளக் கூடாது? அந்தப் பதிகத்தின் பொருளை ஒருமுறை நினைத்துப் பார்த்தார்.

வீரம்மா உன்னைக் கைவிடுவேனா?

**வீ**ரம்மா உன்னைக் கைவிட்டு உன்னை மறந்து சோழ அரியணையில் பட்டத்து அரசியுடன் வீற்றிருப்பேன் என்று நீ எண்ணிவிட்டாயா? வீரமாதேவியாக, ஓர் அரசியாகவே நீ வாழ்கிறாய், வீரமாதேவி! என் இனியவளே! என் உடலில் ஏற்பட்டுவிட்ட தாபத்தை நீ தணிக்காமல் வேறு யார் தணிப்பார்கள்? உன்னை அணுகாமல் வேறு யாரை அணுகுவேன்? இளமை ததும்பும் உன்னிடம் சுகம் காணாமல் முதுமையின் தலைவாசலுக்கு வந்துவிட்ட மற்ற இளவரசியரிடம் காண முடியுமா?

உனக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். உன் உணர்வைப் புலப்படுத்த அந்தப் பதிகத்தைப் பாடியிருக்க லாம். உன் எதிரே தோன்றுமாறு நீ சிவபெருமானை அழைப்பது என்னை அழைப்பதாக உணர்கிறேன். உன்னை உடைமையாக்கிக் கொள்ளுமாறு கேட்கிறாயே?

நீ என்றும் என் உடைமைதான்; நீ எனக்கே; எனக்குச் சொந்தம். சொந்தக்காரனின் ஆசையை நிறைவேற்றாமல் மறுக்கிறாயே. உனக்கே நியாயமா? வா வா. என் அருகே வா. தேவி!

இராசேந்திரன் இவற்றையெல்லாம் பேச நினைத்தார். வார்த்தைகள் வரவில்லை. ஒவ்வொரு கணமாகக் கழிகிறது. நீண்டிருந்த அவர் கரங்கள் தளரவில்லை. அவர் மெல்ல அடி எடுத்து வைத்தார். துணிவுடன் நகர்ந்தார். முன்னே நின்றார்.

வீரமாதேவி பின்னுக்கு நகர்ந்தாள். என்றாலும் இராசேந்திரன் கரங்கள் அவள் தோளை நெருங்கின.

வீரம்மாள் அந்தக் கரங்களை வேகமாக விலக்கினாள். இமைக்கும் நேரத்தில் இராசேந்திரனை நெருங்க விடாமல் தள்ளினாள்.

கம்பீரமான தோற்றமுடைய அந்த மாமன்னன் தடுமாறினார். போர்க்களத்தில் உறுதியுடன் அஞ்சாமல் நின்று வாளைச் சுழற்றிய வேங்கை இப்போது திகைத்துத் தடுமாறியது.

வீரமாதேவிக்கு இவ்வளவு பலம் எப்படி வந்தது? அல்லது என் வலிமைதான் சரிந்துவிட்டதா? இதுவரை பெண் அழகுக்கு அடிமையாகாத நான், என் உயர் குணத்திலிருந்து சற்று நழுவிவிட்டேனா?

அல்லது வீரமாதேவி தன் உறுதியான கொள்கையால் மேருபோல் வலிமை கொண்டுவிட்டாளா?

தன் பெண்மையைக் காத்துக் கொள்ள ஆயிரம் யானைச் சக்தியைப் பெற்று விட்டாளா? இணங்காதவளை இணங்க வைக்க நான் எடுக்கும் முயற்சி தவறா?

"வீரம்மா..." இராசேந்திரன் கூவினார்.

விடியச் சிறிது நேரமே இருக்கும் அந்த அமைதியான வேளையில் அவருடைய குரல் அவர்கள் தங்கியிருந்த அறையில் எதிரொலித்தது. வெளியேயும் பரவி இருக்க வேண்டும்.

அருகே இருந்த சோலையிலிருந்து திடீரெனத் துயில் கலைந்த பறவைகள் சடசடவெனச்சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்தன. திரைச் சீலைகூட நடுங்கி ஒரு கணம் அசையாது நின்றது.



அறையிலிருந்த தூண்டா விளக்கு எண்ணெய் இல்லாததால் அணைந்திருந்தது. மேற்கே மறையவிருந்த சந்திரனின் மங்கின நிலவொளி அந்த அறையில் நுழையலாமா வேண்டாமா என்பதுபோல் எட்டிப் பார்த்தது.

அடுத்து அங்கே என்ன நேரப்போகிறது என்று ஆவலுடன் எதிர்பார்த்து, அறையின் சுற்றுச் சுவர்களும் சித்திரக் கதவுகளும் சிங்காரச் சாளரங்களும் ஜடமாக இருந்தாலும் உயிர் பெற்றுக் காத்திருந்தன.

காலை இளங்காற்று காலதர் வழியே அறைக்குள் அச்சத்துடன் மெல்ல நுழைந்தது.

தஞ்சைப் பெரிய கோயிலின் கால அறிவிப்பு வட்டிலிலிருந்து எழுந்த மணி ஓசை எங்கும் எதிரொலித்தது.

மாளிகைக்கு அருகே இருந்த தேவாரப் பாடசாலை மாணவர்கள் விழித்து எழுந்து விட்டனர். அவர்கள் பாடும் திருவாசகப் பாடல் அமைதியான அந்த வேளையில் தெளிவாகக் கேட்டது.

**யானே பொய் என் நெஞ்சும் பொய்**
**என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால்**
**உன்னைப் பெறலாமே**
**தேனே அமுதே கரும்பின்**
**தெளிவே தித்திக்கும்**
**மானே அருளாய் அடியேன்**
**உனை வந்து உறுமாறே**

தமிழ் வேதம் பயிலும் மாணவர்கள் இசைந்து பாடும் திருவாசகப் பாடல் தெளிவாகக் கேட்டது.

பாடலின் கருப்பொருள் இராசேந்திரன், வீரமாதேவி இருவர் இதயத்திலும் எதிரொலித்தது.

'அப்படியா? அப்படியா?' நான் என்பதே பொய்யா? என் ஒழுக்கமும் பொய்யா? என் நெஞ்சமும் வஞ்சகமானதா? என் அன்பும் போலியானதா? ஐயோ நான் இப்போது என்ன செய்வேன்! மாணிக்கவாசகர் சொல்வது போல் அழுதால்தான் உன்னைப் பெற முடியும் என்றால் அழுகிறேன், வீரம்மா, நான் அழுது அழுதுக் கண்ணீர் சிந்துகிறேன். மாவீரன் அழலாமா? சோழ மண்டலாதிபன் அழலாமா? உலகின் மாபெரும் சக்கரவர்த்தியான

இராசகேசரி இராசராச சோழ தேவரின் திருக்கரத்தால் மகுடம் சூட்டப்பட்ட பரகேசரி இராசேந்திர சோழனாகிய நான், பண்டித சோழனாகிய நான் அழுவதா? சீச்சீ, என்ன செய்கை செய்யத் துணிந்து விட்டேன்? என்ன தவறு? இதுவரையில் நான் அவளிடம் கொண்டிருந்த அன்பு 'போலியானதன்று'; நெஞ்சத்தில் வஞ்சகமில்லை. நான் மெய் ஒழுக்கமுடையவன் என்பதை மெய்ப்பிக்க இதயத்தை உடைத்துக் கதறிக் கதறி அழுவது ஒன்றே மருந்து.

சிவபெருமான் தேனும் அமுதமும் கருப்பஞ்சாறும் போன்றவர் என்று மாணிக்கவாசகர் சொல்கிறார். அடியார்கள் மனத்தில் இனிக்கின்ற பெருமான் என்று பகர்கிறார். வீரமாதேவியின் காதலுக்கு நான் அடிமை. காதல் அடிமையான நான் உன்னிடம் சேரவேண்டும் என்றால் மனம் விட்டு நான் அழவேண்டும் – அப்படித் தானே?

"வீரம்மா! என்று கூவிய இராசேந்திரன் இதய ஒலி எட்டுத் திக்கும் ஒலித்தது.

ஐயோ – அவர் என்ன செய்யத் துணிந்து விட்டார்? அவர் செய்ய முற்பட்டிருக்கும் செயலை நான் உணர்ந்து விட்டேன். வீரமாதேவி பதறினாள்.

"சுவாமி, சக்கரவர்த்தி, என்னை ஆண்டவனே" என்று பரபரப்புடன் வீரமா தேவி குரல் கொடுத்தாள்.

இராசேந்திரனை முந்திக் கொண்டு அவரது திருப் பாதத்தில் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்தாள். பாதத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவர் சேவடியைக் கண்ணீரால் அவள் நனைத்தாள்.

இராசேந்திரன் எதிர்பார்க்கவில்லை, அவள் அப்படிச் செய்வாள் என்று.

சற்றும் எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் நெகிழ்ந்து போன இராசேந்திரன் வீரமாதேவியைத் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டார்.

எந்த அணைப்பிற்காக அவர் சற்று முன்பு ஏங்கினாரோ அந்த அணைப்பு இப்போது நேர்ந்துவிட்டது.

அவளுடைய கண்ணீர் மாலைகள் அவர்கள் தோளை நனைத்தன. அவரது நெடிய கரம் இரண்டும் மாறி மாறி



அவள் புதோள் தொட்டு, பின் இடைவரைத் தட்டிக் கொடுத்தன. இருவரின் மெய்ச் சிலிர்ப்புகளும் ஒன்றோடொன்று சிரித்துப் பேசிக் கொண்டன. நாம் நெருங்கி விட்டோமா என்று கேட்டுக்கொண்டன.

"என் பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள். என் தவறான செயலுக்கு ஏதும் தண்டனை தராது ஏற்றுக் கொள்ளுங்கள்" – விம்மியவாறு வீரமாதேவி பேசினாள். பேசும்போது விரிந்து சுருங்கும் அவள் இதழ்கள். அவரது இடப் புஜத்தில் ஓவியம் வரைந்தன.

"என் ஆருயிர் தலைவனே! என் உடல் பொருள் ஆவியை தங்களுக்கு அர்ப்பணிக்கவே நான் வாழ்கிறேன். உடல் என்பது அழியக் கூடியது என்பதைத் தாங்கள் அறிய மாட்டீர்களா? அழியாத ஆத்மாவாகிய மெய்ப்பொருளைத் தங்களைத் தவிர வேறு யாரிடம் நான் அர்ப்பணிக்க முடியும்? மோகத்தின் அடிப்படையில் பொங்கி வரும் ஆசையை நான் வெறுத்தே ஓர் உறுதி எடுத்தேன். அந்த உறுதியை, சபதத்தை உயிருள்ள வரையில் கடைப் பிடிக்கவே விரும்பினேன்! தாங்களும் அதை முழு மனத்துடன் ஆதரித்தீர்கள். ஆனால் ஏனோ இன்று அந்தத் தவத்தைக் குலைக்க முடிவெடுத்தீர்கள்..." விம்மலும், வார்த்தையும் மாறி மாறி வந்ததால் அவளைச் சமாதானப்படுத்த விரும்பி இராசேந்திரன் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார். சிறிது நேரம் அங்கே விம்மலின் ஒலி மட்டுமே கேட்டது.

வீரமாதேவி தொடர்ந்தாள். "ஏனோ! இன்று தங்கள் தூய மனத்தில் காமதேவன் குடிபுகுந்தான்... சிவனின் உறுதியைக் குலைத்தவன் அவன்".

இராசேந்திரன் மெல்ல நகைத்து, மஞ்சத்தில் அமர்ந்து அவளையும் தன் அருகே உட்கார வைத்துச் சிறு குழந்தையைப் போல் அரவணைத்து, "அதற்கு நீதான் காரணம் வீரமாதேவி" என்றார்.

"நானா?"

"உயிர் பெற்ற ரதி ஓவியம்போல் நீ என் எதிரே நின்றாய். தஞ்சைப் பெருவுடையார்க் கோயில் சித்திரத்திலே அழகிய மங்கை ஆடுவதுபோன்ற ஓவியத்தைப் பார்த்திருக்கிறாயா? அந்த ஓவியத்தை வரைந்த ஓவியன் மனித உணர்வைத் தூண்டும் வகையில் வண்ணங்களைத்

குழைத்துத் தீட்டியிருக்கிறானே பார்த்தாயா? ஒவ்வொரு முறையும் நான் அந்தச் சித்திரத்தைப் பார்த்து வியப்பேன். அந்த ஆடலணங்கு உயிர் பெற்று என் முன் நிற்பதைப் போல் நீ தோன்றினாய். பேசாப் பொற் சித்திரத்தின் எதிரே என் உறுதி தவிடு பொடியாகியது. அழகும், அறிவும், கலைச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற நீ ஆண்குழந்தையை உன் மணிவயிற்றில் வைத்துப் பத்து மாதங்கள் காப்பாற்றி, சோழ நாட்டிற்கு அளித்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று நான் கற்பனை செய்து கொண்டேன். என் நியாயமான ஆசைக்கு நீ ஒப்புதல் அளிப்பாய்; இணங்குவாய் என்று எண்ணினேன்..."

அவர் தன் பேச்சை முடிக்கவில்லை. "சக்கரவர்த்தி அவர்களே! நான் அறியாமை மிகுந்த பெண். சோழ நாட்டின் அரசு உரிமையைத் தொடர்ந்து ஏற்க வீர வாரிசுகளைத் தாங்கள் முன்பே பெற்றிருக்கிறீர்கள். தங்கள் திருச் குமாரர்கள் தங்களைப் போன்று கலை, வீரம் அனைத்தும் நிரம்பப் பெற்றவர்கள். அப்படியிருக்கும் போது மற்றொரு வாரிசுக்கு அவசியமே இல்லை. பேரரசர் அவர்களே! இந்த அறிவிலி சொல்வதில் தவறிருந்தால் பொறுத்தருளுங்கள். என் வயிற்றில் உதிக்கும் செல்வக் குமரனுக்குச் சோழ நாட்டு வாரிசு உரிமை கிடைக்கும் என்பது என்ன உறுதி? தங்கள் திருக்குமாரருடைய வாரிசு தான் சோழ நாட்டின் அரசராக வேண்டும் என்பது தாங்கள் அறியாததா?" என்றாள்.

இராசேந்திரன் அவள் முகத்தை நிமிர்த்தி, "வீரமா தேவி! உன் கவலை நியாயமானதே. எந்த ஓர் அரசகுல மங்கையும் தன் மகன்தான் அரியணை ஏற வேண்டும் என்று ஆசைப்படுவாள். இறைவனின் திரு உள்ளம் என்று ஒன்றுண்டு. விதி என்றும் ஒன்றிருக்கிறது. அவற்றின் மீது திடமான நம்பிக்கை உடையவன். நான் கற்ற பல சாத்திரங்களுள் சோதிட சாத்திரமும் ஒன்று. சோதிட சாத்திரத்துடன் வான சாத்திரமும் நான் அறிவேன். இரண்டும் பிரிக்க முடியாதவை. என் அருமை வீரமாதேவியே! இதுவரை என் பட்டத்து அரசியிடம் சொல்லாத ஓர் உண்மையை உன்னிடம் சொல்லும் தருணம் வந்துவிட்டது. என் தந்தை இராசகேசரி இராசராச சோழ தேவர் இன்னும் சில நாள்களுக்குத்தான்



ஜீவியவந்தராய் இருப்பார். ஒருவருடைய ஆயுள் காலத்தைப் பற்றி மற்றவரிடம் சொல்லக்கூடாது என்று சோதிடக் கலை கூறுகிறது. ஆனால் நான் துல்லியமாகக் கணக்கிட்டு வைத்துள்ளேன்..."

இராசேந்திரன் இவ்வாறு சொன்ன போது வீரமாதேவி குறுக்கிட்டு, "என்னைச் சந்திப்பது பற்றியும் என்னை ஏற்றுக் கொள்வது பற்றியும் தாங்கள் முன்னமே அறிவீர்களா?" என்று கேட்டாள். இப்போது அவருடைய அணைப்பிலிருந்து மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

இராசேந்திரன் மெல்ல நகைத்து, "பல்வேறு காரணங்களுக்காகப் பல பெண்களின் தொடர்பும், பல தாரங்களை மணந்து கொள்வதும் அரசர் குலத்துக்கு இயற்கை வகுத்த சட்டம். ஆனால், என் மனத்துக்கு மிகவும் ஏற்ற ஒருத்தி எனக்கு அமைவாள் என்பதை நான் கணித்து அறிந்திருக்கிறேன்" என்றார்.

"ஓ! இதற்கெல்லாம்கூட தங்களுக்கு நேரம் காலம் இருக்கிறதா? சோதிட சாத்திரப்படி நடப்பவரா தாங்கள்?" குறும்புத் தனம் மிளிரக் கேட்டாள், வீரமாதேவி!

"பயணம் செல்லும்போது. ஓய்வு எடுக்கும்போது மனத்திலேயே கிரகங்களின் சஞ்சாரங்களைக் கணக்கிடும்போது, இரவில் தெளிந்திருக்கும் வானத்தில் ஏற்படும் கோள்களின் மாறுதலை உன்னிப்பாகக் கவனிப்பேன். என் மனத்துக்குகந்தவள் அமைவாள்; அவளால் எனக்குப் பெரும் புகழும் ஏற்படும் என்பதை அறிந்தேன். அதனால் எப்போதும் சோதிடம் பார்த்தே நடப்பவன் என்பது பொருளன்று" என்றார், இராசேந்திரன்.

"அப்படியா? அந்த மங்கை நல்லாள் வயிற்றுதிக்கும் செல்வன் சோழநாட்டின் வாரிசாக அமைவான் என்பதையும் அறிந்தீர்களா? ஒருவேளை செல்வன் உதிக்காமல் செல்வி பிறந்துவிட்டால்...?"

வீரமாதேவியின் இந்தக் கேள்விக்கு உடனே மறுமொழி கூற அவரால் இயலவில்லை.

அவர் மறுமொழி கூற எடுத்துக் கொண்ட சில கண நேரத்தை, சிறு இடைவெளியைப் பயன்படுத்தி, "ஒரு வேளை அந்த வாரிசு உருவாகாமலே போனால்... அல்லது என் சபதத்தால் நான் வீரமகனைப் பெற்றுத் தர இயலாத

தால் வேறு ஒருத்தி தங்கள் கோரிக்கையை நிறைவேற்றக் கூடுமல்லவா?" என்று கேட்டாள்,வீரமாதேவி.

இராசேந்திரன் அவள் கேட்டதைக் கவனிக்காதவர் போல், "இறைவன் வகுத்த விதியை யாராலும் மாற்ற இயலாது என்பதை நான் அறிவேன். விதியை மதியால் வெல்லலாம் என்பதன் பொருள், விதியை உணர்ந்து அதன்படி நடப்பதே" என்றார்.

"பட்டத்தரசியிடம் தெரிவிக்காத ஓர் உண்மையை என்னிடம் சொல்வதாகக் கூறினீர்களே?" - வீரமாதேவி தூண்டினாள்.

"தேவி, இன்னும் இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு சோழ நாட்டிற்குக் கடுமையான சோதனைக் காலம் ஏற்படப் போகிறது. அந்தப் போதில் சோழநாட்டைக் காப்பாற்ற மெய்யான வாரிசு தேவைப் படும். அப்போது வீரமாதேவி பெற்றெடுக்கும் செல்வன் நாட்டைக் காப்பாற்றுவான். அந்த எண்ணத்தில்தான் நான் உன்னை நெருங்கினேன்".

இராசேந்திரன் சொல்லி நிறுத்தியபோது வீரமாதேவி குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். சற்று முன்பு விம்மி விம்மி அழுத வீரமா தேவியா குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறாள்? என்று வியப்புடன் அவள் செழுமையான கன்னத்தை மெல்ல வருடிய இராசேந்திரன், "தேவி! எதற்காக இப்படிச் சிரிக்கிறாய்?" என்று கேட்டார்.

"அதுவா...? சட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்தவரே உடைக்கச் சொல்கிறாரே என்றுதான்..." என்று கூறியவள், எழுந்து நின்று, "சுவாமி, என்னைப் பொருத்தருளுங்கள். இந்த எளியவள் மீது காதல் கொண்டு, ஏற்று, கலைச் செல்வியாக்கி, அரச குடும்பத்தில் ஒருத்தியாக்கி, கானகத்தில் கலைக்கூடம் அமைக்கத் திட்டமிட்டு அங்கே நான் தங்கியிருந்து கலைக்கோயில் அமைக்க வாய்ப்பளித் தீர்கள். திடீரென்று என்மீது தங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதனால் சிற்பியின் மீதே தங்களுக்கு ஐயம் ஏற்பட்டது. சந்தேகம் நீங்கியதோ இல்லையோ நான் அறியேன். இப்போது என் உறுதிப்பாட்டைக் குலைக்க முயல்கிறீர்கள். சுவாமி, நான் தங்களிடம் அடைக்கலம். என்னைக் காப்பது தங்கள் கடமை. என் உடல் தங்களுக்கே. நான் என்றுமே தங்களைத் தவிர வேறு



ஒருவரையும் கண்ணால்கூடப் பார்க்க மாட்டேன். கருத்தாலும் நினைக்க மாட்டேன்.

"தாயின் மடியில் இருக்கும் சிறு குழந்தை தனக்கு வேண்டியதைத் தாய் செய்வாள் என்றுதானே நினைக்கும்? எனக்கு வேண்டியதை, தாங்கள் விரும்பியதை தாங்களே ஏற்றுச் செய்யுங்கள்" என்று கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.

கீழ்வானத்து இரசவாதத்தால் வண்ணப் பூக்கள் மலரத் தொடங்கி விட்டன. வீரமாதேவி எழுந்து நின்று ஆடையைச் சரி செய்து கொண்டாள். இராசேந்திரரின் பாதம் தொட்டாள்.

பாடி ஆட வேண்டும் என்று தோன்றியது. இனிய குரலில் பாடினாள். ஆடிக் கொண்டே பாடினாள்.

"உம்கையிற் பிள்ளை உனக்கே
அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ்சொல் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு
ஒன்று உரைப்போம் கேள்;
எம் கொங்கை நின் அல்லால் வேறு தோள் சேரற்க
எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன்!"

இதுவரையில் காணாத புது ஒளி அவள் முகத்தில் ஒளிர்ந்தது. கீதம் இனிய குயிலின் குரலை அவள் குரல் வென்றது. கரங்களும், பாதங்களும், இடையும், விழியும் பாடலின் பொருளை உணர்த்த விரைந்து இயங்கின. அவள் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியும் பொருள் உணர்த்தின.

அறையின் வெளியே மத்தளம் முழங்கியது. வீணையும் குழலும் ஒலித்தன.

அரசரைப் பல்லாண்டு பாடி பள்ளி எழுப்ப கீதமிசைப் பவர்கள் வந்து நின்றிருந்தனர். அறையின் உள்ளேயிருந்து எழுந்த வீரமாதேவியின் பாடல் கேட்டு, அதற்கேற்ப வாத்தியக் கருவிகளை இசைத்து, அரசரை மகிழ்விக்க முயன்றனர்.

பொழுது புலர்ந்துவிட்டது அறிந்து வீரமாதேவியும், இராசேந்திரனும் திகைத்தனர். கதவின் தாள் திறக்கும் முன்பு இராசேந்திரன், வீரமாதேவியை அணைத்துக் கொண்டார்.

"என் ஆருயிரே! உன் சபதத்தைக் குலைக்க மாட்டேன். எனக்குப் பிறகு சோழ நாட்டிற்கு நீதான் வாரிசு! என்று சொல்லி அவள் உச்சி முகர்ந்து, கன்னம் தடவி, கரங்களை எடுத்துத் தன் விழிகளில் சேர்த்தார்.

கீழே குதிரை மீதிருந்து இறங்கிய வீரர்கள் மிக வேகமாக அரசர் இருப்பிடம் நோக்கித் தாவி வந்தனர்.

இராசராச சோழர் உடல்நிலை திடீரென்று கவலைக் கிடமாகி விட்டது என்ற செய்தியைத் தெரிவிக்க அவர்கள் ஓடி வந்தனர்.







## 48. வாழ்க பேரரசர்!

தஞ்சைப் பெருநகர் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. அந்தப் பரபரப்பில் மகிழ்ச்சி காணப்படவில்லை.

சந்திக்கும் மக்கள் ஒருவரோடொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டனர்.

பெண்கள் தங்கள் அண்டை வீட்டுப் பெண்ணோடு பேசும்போது, எதிர் வீட்டிலிருப்பவரும் வந்து சேர்ந்தனர்.

குழந்தைகள் வீதிகளில் புழுதியில் விளையாடாமல், பேசிக் கொண்டிருக்கும் தங்கள் தாயின் முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர்.

தஞ்சை அரச வீதியில் இரட்டைக் குதிரை பூட்டிய ரதங்கள் மாளிகையை நோக்கி விரைந்து கொண் டிருந்தன. அவற்றினின்று எழுந்த புழுதி தணியாமல் வானத்தில் மேகங்களை எட்டிக் கொண்டிருந்தன.

"நம் சக்கரவர்த்திக்குத் திடீரென்று உடல் நலம் சரியாய் இல்லையாமே?"

"இரண்டு நாள்களாக விழிக்காமல் படுத்துக் கொண் டிருக்கிறார்" என்ற உரையாடல்கள் எங்கும் மெல்ல எழுந்தன.

அரசருடைய உரிமை மகளிர் வாழ்ந்த பகுதிகளான வேளத்தில் உள்ளவர்கள் கவலை நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

மூதாட்டியரும், நடுத்தர வயதுப் பெண்டிரும் கண்ணீர் மல்கக் குரல் தழுதழுக்கப் பேசிக் கொண்டனர்.

அவர்களுக்குப் பணியாளர்கள் ஏதும் பணி செய்வ தறியாது தூண்கள் அருகே நின்று கொண்டிருந்தனர். சுந்தர சோழ விண்ணகர ஆதுரச் சாலையிலிருந்து மருத்து வர்கள், மாளிகையை நோக்கி விரைந்தனர். பச்சிலைச் சாற்றைக் . கலயத்திலிட்டு வேறு சில மூலிகைகளுடன் சேர்த்துக் கலக்கிக் கொண்டிருந்தனர்.

திடீரென அங்கே பரபரப்புக் காணப்பட்டது. கருவூர்த் தேவர் வருகிறார் என்ற செய்தி பரவியது.

வெண்தாடியுடன், வெண்ணிற ஆடையை முழங்கால் வரையில் உடுத்தியிருக்க அந்த முதுமைப் பிராயத்திலும் கம்பீரமாக ஆதுர சாலைக்குள் நுழைந்த கருவூர்த் தேவர், தலைமை மருத்துவரை அழைத்து ஏதோ கூறினார்.

ஆதுரச் சாலைப் பணியாட்கள், பெருவுடையார் கோயிலை அடுத்து இருக்கும் நந்தவனத்திற்கு விரைந் தனர்.

தேடிச் சென்ற மூலிகைக் கொடி உடனே கிடைத்து விட, அதைக் கருவூர்த் தேவரிடம் கொண்டு கொடுத்தனர்.

"இராசராசன் உயிருக்கு இன்று ஆபத்து இல்லை! என்று அவர் முணு முணுத்தார்.

"இன்னும் இந்த உயிர்க் காக்கும் கொடியைத் தேடிக் கொண்டு வாருங்கள்! என்று கூறி கருவூர்த் தேவர் மாளிகையை நோக்கி விரைந்தார்.

மாளிகையின் உள்ளும் வெளியும் அதிகாரிகளும், பெருந்தலைவர்களும் கூடியிருந்தனர்.

சக்கரவர்த்தியின் உடல்நிலை குறித்து, தவறான செய்திகள் பரவாமலிருக்க, மாளிகையின் வெளியே மூத்த அதிகாரி கிருஷ்ணன் ராமன் மேடை ஒன்றின் மீது ஏறி நின்று, அரசர் உடல்நிலை குறித்து அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருந்தார்.

"இவர் யார், அண்மையில் நாம் இவரை வெளியே எங்கும் காணவில்லையே?" என்று இளைஞர் ஒருவர் கேட்டார்.

அவன் அருகே நின்று கொண்டிருந்த பெரியவர், "தம்பி! இவர்தான் சோழ நாட்டின் படைத்தளபதியாக



இருந்தவர். சோழர்களின் வெற்றிகள் பலவற்றிற்கு இவர்தான் காரணம். சக்கரவர்த்தி இராசராசர் அன்பை மிகவும் பெற்றவர்." என்று கூறினார்.

"ஓ... தளர்ந்து போன வயதானவர்கள் படைத்தலைவ ராக இருந்தால் இளைஞர்களின் திறமைக்கு வாய்ப் பளிப்பது எப்படி?" என்று அவன் அருகே இருந்த மற்றொரு இளைஞன் கேட்டான்.

"தம்பி, அப்படிச் சொல்லாதே. சோழர்ப் படை களுக்குப் பல தலைவர்கள் உள்ளனர். கிருஷ்ணன் ராமன் உன்னைப்போல் இளைஞனாக இருக்கும்போதுதான் படையில் சேர்ந்தார். திறமையால், உண்மையான உழைப் பால் உயர்ந்தார். அதனால்தான் சக்கரவர்த்தி இவரைத் தன் நம்பிக்கைக்கும் உரிய பொறுப்பான பதவியை அளித்துள்ளார். திருமந்திர ஓலை நாயகம் இவர்தான் !

முதியவர் கூறியதைக் கேட்டுத் திருப்தி அடைந்தவனாக இளைஞன் அங்கிருந்து மெல்ல நகர்ந்தான்.

மாளிகைக்குள்ளே செல்லத் தகுதியுடையவர்கள் உரிமை யுடையவர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். வெளியேயுள்ள திறந்த வெளியில் கூடி இருந்தவர்கள், வருபவரை ஒவ்வொருவராக அடையாளங் கண்டு வாழ்க வாழ்க என்று கோஷமிட முயன்றனர். அவ்வாறு வாழ்க ஒலி எழுப்புபவர்களைப் பார்த்து, "தம்பிகளா! வாழ்த் தொலி எழுப்பி மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்கு ஏற்ற சமயமா இது? அமைதியாக இருங்கள். மௌனமாக இருங்கள். ஆடவல்லானை மனத்திற்குள்ளே தொழுது பிரார்த்தனை செய்யுங்கள். மனத்திற்குள்ளே சொல்லிக் கொள்ளுங்கள். உதடுகள் மெல்ல அசையட்டும். பட்டமேறி யுள்ள எங்கள் பேரரசர் இராசேந்திர சோழ சக்கர வர்த்திக்கு உதவியாக இன்னும் பல ஆண்டுகள் ஜீவித்து இருங்கள் என்று பிரார்த்தனை செய்யுங்கள். எங்கள் அரசியார் சக்தி விடங்கன் தேவியார் கழுத்தில் துலங்கும் பொற்றாலிக்கு எந்தப் பங்கமும் வரக்கூடாது என்று இறைவனை வேண்டுதல் செய்யுங்கள்!" என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார் ஒருவர். அமைதி நிலவியது.

மலையமானும், கொடும்பாளூர் வேளிரும், சம்புவரை யரும், நடுக்காட்டுக் காவல் பெருந்தலைவரும், கொங்கு வேளிரும் விரைந்து வந்ததைக் கண்ட மக்கள் "பேரரசர்

வாழ்க! சக்கரவர்த்தி இராசராசர் வாழ்க, வாழ்க!" என்று குரல் எழுப்பினர்.

முண்டாசு கட்டி, கழுத்தில் மணி மாலைகள் அணிந்து, மேலே பட்டாடை போர்த்திய புலவர் ஒருவர் மக்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்து, உரத்த குரலில் "ஐயா! எங்கள் மாமன்னரின் உடல்நிலை இப்போது எவ்வாறு உளது? கந்தவேள்போல் அழகான எங்கள் பேரரசர், உடல் மெலிந்து பிரண்டைக் கொடிபோல் கிடப்பதாக அறிகிறேன். தமிழ் மொழியின் காப்பாளராக விளங்கிய எங்கள் பேரரசர் தமிழ்த் தாயின் அருந்தவத் திருமகனார் புலவர்களை அழைத்துப் பாராட்டாத நாளே இல்லை. கடந்த ஒரு திங்களாக பேரரசரைச் சந்திக்க இயலாமல் இருந்ததே வாழ்க்கையில் ஒளி குன்றியது போலிருந்தது" என்று கூறிய புலவர், உரத்த குரலில், "எங்கள் சக்கரவர்த்தி இராசகேசரி இராசராச சோழ தேவரைப் போல் இனி இந்த உலகில் பேரரசர் ஒருவர் தோன்றுதல் இயலுமோ!

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைகல மறுத்தருளி
தடிகை பாடியும்
நுளம்பபாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ரீழமண்டலமும்
இரட்டபாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்
எழில் வளருழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே
செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோராச கேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராச ராச தேவர்... வாழ்க, வாழ்கவே!"

புலவர் உணர்ச்சிப் பெருக்கால் இராசராசன் புகழ் பாடிக் கொண்டு போகும் போது அவர் தோளின் மீது ஒரு கரம் பதிந்தது.

"புலவரே! சற்று அமைதியாய் இருங்கள், என்றார்! கம்பீரமான அந்த உருவத்துக்கு உடையவர்.



"ஏன், ஏன்? என் உள்ளத்தில் பொங்கி வரும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் சக்கரவர்த்தியின் புகழ்ப் பரணி பாடுகிறேன்" என்று கூறி அவர் கரத்தைத் தள்ளினார்.

"ஆமாம் ஐயா - சக்கரவர்த்தியின் பெருமையை, புகழைப் பாடியவர்களே புலவர்கள்தாமே? அவர்கள் வழி வந்த இந்தப் புலவரை ஏன் தடுக்கிறீர்கள்? அரசர் வாழ்க! அரசர் வாழ்க!" என்று வாழ்த்தொலி கூற, அந்தக் குரல் வானை எட்டினால் ஒருவேளை இறைவன் மனங்குளிர்ந்து, அரசரைக் காப்பாற்ற ஓடிவரலாம்!" என்றார் அருகிருந்த ஒருவர்.



'ஆமாம்; ஆமாம். சக்கரவர்த்திகளின் பெருமையைப் பேசுவதைத் தடுக்காதீர்கள்' என்று கூடியிருந்த மக்கள் குரல் எழுப்பினர்.

"புலவரைத் தடுக்கவில்லை, ஐயன்மீர்! தன்னுடைய சொந்தக் கவிதை நயம்போல் பாடுகிறாரே! இது சக்கரவர்த்தியின் மெய்க்கீர்த்தி ஐயா!" என்றார் கம்பீரத் தோற்றமுடைய அதிகாரி. அவர் பேச்சு எடுபடவில்லை.

"அமைதி! அமைதி...! என்று கிருஷ்ணன் ராமன் கையசைத்துப் பலனில்லை.

திடீரென மாளிகை மேல் மாடத்திலிருந்து முரசு அதிர்ந்தது.

முரசு அதிர்ந்தால் முக்கியமானவர் மாளிகைக்கு வருகிறார் என்று அடையாளம்.





சில நொடிகளில் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. சேவகர்கள் கூட்டத்தினரை வழிவிட்டு நிற்குமாறு கேட்டுக் கொண்டனர்.

"பரகேசரி இராசேந்திர சோழர் வாழ்க, வாழ்க!" என்ற வாழ்த்தொலி எங்கும் எழுந்தது. காற்றிலும் வேகமாகப் புரவியொன்றின் மீது அமர்ந்து இராசேந்திரன் மாளிகை வாசலுக்கு வந்தார். புலிக்கொடி தாங்கிய வீரர்கள் அவரைத் தொடர்ந்தனர்.

இராசராச சோழ தேவரின் திருமகனார் இராசேந்திர சோழர், குதிரையினின்று துள்ளிக் குதித்து காற்றினும் மிக வேகமாகத் தன் தந்தை படுத்திருக்கும் இடம் நோக்கி விரைந்தார்.

இராசராச சோழ தேவர் மஞ்சத்தில் படுத்திருந்தார். அவர் அருகே சென்றார், இராசேந்திரன்.

சிறிது நேரம் தந்தையை உற்று நோக்கியவாறிருந்த இராசேந்திரன் சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழுதார்.

இராசராசன், தன் மகனை இன்னும் மிக அருகே வருமாறு சைகை செய்தார்.

அருகிருந்த பட்டத்தரசிக்கும் வியப்பாக இருந்தது. சென்ற சில நாள்களாக, கண் விழிக்காதிருந்த பேரரசர், கண் விழிக்கிறார். தன் வலத் திருக்கரத்தைத் தூக்கி மகன் இராசேந்திரனை அருகழைக்கிறார். முதுமையும், நோயும் ஒன்று சேர்ந்ததால் ஒளி குன்றியிருந்த முகத்தில் புதிய பிரகாசம் ஏற்படுகிறது. கடுமையான காய்ச்சலால் காய்ந்திருந்த உதடுகளில் மகிழ்ச்சியின் கோடுகள். புன்முறுவல் மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் மெல்ல மலர்கிறது.

பட்டத்தரசி பரபரப்புடன் அருகே நெருங்குகிறாள், தங்கக் கிண்ணத்தில் இருக்கும் பாலை எடுத்து அவருக்குக் கொடுக்க.

வழியும் விழிநீரைத் துடைத்துக் கொண்டு இராசேந்திரன் அவர் அருகே நெருங்குகிறார். இராசேந்திரன் கரத்தை எடுத்துக் தன் கரங்களுடன் இணைத்துக் கொள்கிறார். மெல்லிய அழுத்தத்தை உணர்கிறார். இராசராசரின் உள்ளத்தில் பொங்கி நிற்கும் அன்பும்

பாசமும் அந்தக் கரங்களின் வழியே இராசேந்திரன் உடலில் பாய்கிறது.

"மகனே! நலமாக இருக்கிறாயா?" என்று இராசராசர் கேட்கிறார்.

பேச இயலாமல் இருந்த இராசராசரிடமிருந்து மெல்லிய குரல் வெளிப்படுகிறது.

அவர் படுத்திருந்த கூடத்திற்கு வெளியே முக்கிய அதிகாரிகள் நிற்கிறார்கள். உள்ளே வருவது மரியாதைக் குறைவு என்ற வகையில் அவர்கள் கூடத்துக்கு வெளியே நிற்கிறார்கள். மிக முக்கிய அதிகாரியான திருமந்திர ஓலை நாயகமும் அங்கேயே நிற்கிறார்.

'அரசர் பேசுகிறார் - கரம் தூக்கி இராசேந்திரனை ஆசி கூறுகிறார்' என்ற செய்தி, மாளிகைக்கு வெளியே கூடி இருந்தவர்களுக்குப் பரவுகிறது.

"அப்பாடா, அரசர் உயிர் பிழைத்து விட்டார்! என்ற நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள் கூடியிருந்தவர்கள்.

"இராசராச சோழ சக்கரவர்த்தி வாழ்க! வாழ்க!" என்ற கோஷம் வானை எட்டுகிறது. சிறிது சிறிதாக மெல்லக் கலைகிறார்கள்.

"மகனைப் பார்த்தவுடன், சக்கரவர்த்திகளுக்கு இருந்த நோய் மறைந்துவிட்டது".

"மனநோய் என்று சொல்கிறாயா? தன் தந்தை அருகே இராமல் இராசேந்திர சோழர் வேறு எங்கே சென்று விட்டார்?"

"அது தெரியாதா சேதி? தந்தைக்கும் மகனுக்கும் சில காலமாகவே கருத்து வேற்றுமை. சில போது கடுமையாகவும் மாறியது. கலைக்கோயில் அமைக்கப் போவதாக ஒரு காட்டுப் பகுதியில் தங்கியிருக்கிறார் தன் மகன் என்ற செய்தி அரசருக்கு அதிர்ச்சியை அளித்தது. வெளியே புலப்படுத்தாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்திருந்ததால் நோயாக மாறிவிட்டது!

"ஆமாம்; நானும் கேள்விப்பட்டேன். அங்கே அவருடைய புதிய துணைவிக்கு மாளிகை கட்டிக் கொடுத்திருக்கிறாராம்".

"துணைவி என்றோ மனைவி என்றோ சொல்லாதீர்கள். பட்டத்து அரசியைவிடச் சக்தி வாய்ந்தவர்கள். எளிய



குடும்பப் பெண் வீரம்மாளின் அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா? இளமையின் மோகத்தில் மயங்கி விட்டார் இராசேந்திரர்".

"உச்... பெயரைச் சொல்லிச் சாதாரணமாக அழைக்கிறீர்களே! நம் பேரரசர் ஐயா, அவர் நம் பேரரசர். இராசராசர் மனமுவந்து தன் வாழ்நாளிலேயே தன் மகனைப் பேரரசராக்கினார்".

"பேரரசர் - ஆமாம். இராசராச சோழரைப் போல் மகத்தான பேரரசர் என்பது நமக்குப் பெரும் அதிர்ஷ்டம், பெருமை".

"அப்படிச் செய்தாலாவது தன் மகன் தன் பிடிவாதத்தை மாற்றிக் கொள்வான் என்று இராசராசர் நினைத்திருக்கலாம்".

"எல்லாம் சரிதான்; ஆனால் தன் தந்தையைவிடத் தனக்குப் புகழ் அதிகமாக வேண்டும் என்று அவர் விரும்புவதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை".

"அதில் என்ன தவறு? இராசராசர் அடையாத புகழ் இல்லை. தன் மகனுக்கு என்று அவர் எதையும் விட்டு வைக்கவில்லை. எவ்வளவு வெற்றிகள்! புலிக் கொடியை எட்டுத் திக்குகளிலும் பறக்க விட்டவர்..."

"சரி... தந்தையின் வெற்றியில் மகன் பங்கும் இருக்கிறதே? தனக்கு எனத் தனிப் பெருமை அடைய நினைப்பது நியாயம் தானே?"

"ஓ! அழியாப் புகழைத் தருவது கலை ஒன்றுதான் - அதனால் கலைக்கூடம் ஒன்றைப் படைக்கத் திட்டமிட்டிருக்கிறார்".

"அதற்கு வீரம்மாள்தான் காரணம்".

"இராசராச சோழ சக்கரவர்த்தி தன் மகனுடைய எண்ணத்தை ஏற்கவில்லை".

"அதுமட்டுமா? தஞ்சைப் பெரிய கோயிலைவிட மகத்தான கோயில் ஒன்றைக் கட்டவேண்டும் என்று தன் மகன் சிற்பிகளை அழைத்து ஆலோசனை கேட்டிருப்பது சக்கரவர்த்திக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்திருக்கிறது".

"ஒரு நாளும் முடியாது. பெரிய கோயிலைவிட மற்றொரு கோயிலா? தக்ஷிணமேருவைவிட மற்றொரு மேருவா? ஹூஹூம் நடக்கவே நடக்காது. இராசேந்திரன் வீண் கனவு காண்கிறார். அவரைத் தூண்டிவிட்ட வீரம் மாள் மீதும் சக்கரவர்த்திகளுக்குக் கோபம்... மகன் மனத்தை மாற்ற முடியவில்லையே என்ற கவலை".

"இராசேந்திர சோழரின் பட்டத்தரசியும், மற்ற இளவரசிகளும் வீரம்மாளை வெறுக்கிறார்கள். வீரமா தேவி என்று அழைக்காமல் வீரம்மா என்றே ஒருமையில் அழைத்து அவமானப்படுத்துகிறார்கள்".

"அதனால் வந்த வினைதான். தன்னை அலட்சியப் படுத்திய, அவமானப்படுத்திய மாளிகைப் பெருமாட்டிகள் எதிரே வீரமா தேவி ஒரு சபதம் செய்துவிட்டாள். அதன் விளைவுதான் காட்டுப் பகுதியில் ஒரு கலைக்கோயில் உதயமாவதற்கான திட்டம்!"

"ஓ! அப்படிப் போகிறதா கதை! அரசாங்கக் குடும்பச் செய்தியே விசித்திரம்தான்! வீரமாதேவியின் சபதம், இராசேந்திரனின் புகழ்ப் போதை இரண்டும் சேர்ந்து சோழ நாட்டில் பெரிய கலைக்கோயில் உருவாகப் போகிறது".

"அது இராசராச சோழச் சக்கரவர்த்தியின் உயிரைக் குடிக்கும் கொடிய விஷமாகவும் அமைந்துவிடப் போகிறதே. இராசராசர் படுத்த படுக்கையாகி, பேச இயலாமல் போனதற்கு இராசேந்திரனின் திட்டம்தான் காரணம். என்ன நேரப் போகிறதோ?"

"கவலைப்படாதே! இன்று இராசேந்திரனைப் பார்த்த வுடன் இராசராசர் புதிய தெம்பைப் பெற்று விட்டாராம். தன் மகனிடம் அவர் மனம் திறந்து பேசினாராம்".

"ஓ! அதன் விளைவுதான் நாளைக்கு இராசராச விஜயம் நாட்டிய நாடகம் நடக்கப் போகிறதா? வீரமா தேவியும் வருகிறாள். அதைவிட மிக முக்கிய செய்தி ! அந்தக் காட்டுப் பகுதியில் உள்ள நடனப்பள்ளி நடத்தி வரும் பெண் ஒருத்திதான் இராசராச விஜயம் நாடகத்தை நடத்துகிறாளாம்".

"ஆகா! அவள் வருகிறாளா? அந்தப் பெண் - ஒரு பெரிய இரகசியமே மறைந்திருக்கிறது".

இவர் இப்படிக் கூறியவுடன் சுற்றிலுமுள்ளவர்கள் அந்தச் செய்தியைக் கேட்க ஆவல் கொண்டனர்.





## 49. இராசராச விஜயம்

பேரரசர் இராசராசன் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடக்கும் செய்தி தஞ்சைமாநகர் எங்கும் பரவியது. சுற்றுப்புறம் பட்டி தொட்டிகளெல்லாம் பரவியது.

இன்னும் அந்தச் செய்தி உறையூரை எட்டியது.

நாகைப்பட்டினத்தைச் சென்றடைந்தது.

காஞ்சியினுள் பலரைக் கலக்கச் செய்தது.

வடக்கே திருக்காளத்தியிலும் திருவேங்கட மலையில உள்ளவர்களும் செய்தி கேட்டுத் திகைத்தனர். கருவூரில் உள்ளவர்கள் கலங்கினர். திருவஞ்சைக் களத்திற்கும் அந்தச் செய்தி கிடைத்தபோது அவர்கள் நம்பவில்லை.

மதுரையில் அந்தச் செய்தி சோழர்ப் பிரதிநிதிகளைத் துயர் அடையச் செய்தது. பாண்டிய ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் வருந்தினர்.

இராசேந்திர சோழரின் முடிசூட்டு விழாக் கோலா கலத்தில் திளைத்தவர்களுக்கு உடனே கிடைத்த இந்தச் செய்தி அதிர்ச்சியை அளித்தது. முடிசூட்டு விழா வைபவத்தைக் காண வராதவர்கள்கூட, இராசராச சோழ தேவரைக் காண தஞ்சைக்கு விரைந்துவர விரும்பி

னார்கள். வண்டிகள் ஏறபாடு செய்யப்பட்டன. வசதி படைத்தவர்கள் உயர்தரக் குதிரைகள் பூட்டிய தேர்களைத் தேடினர்.

பெரியவர்களும், இளைஞர்களும் தஞ்சைக்கு அருகிலுள்ள ஊர்களிலிருந்து நடைப் பயணமாக தஞ்சைக்கு வரத் தொடங்கினர். வீட்டுப் பெண்டிரும் உடன் வருவதாகப் பிடிவாதம் பிடித்தனர். அவர்களுள் சிலரை மட்டும் அழைத்துச் செல்லப் பெரியவர்கள் ஒப்புதல் அளித்தனர்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். என்ன நடக்கிறது; ஏன் பரபரப்புடன் பெரியவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று வியப்புடன் பார்த்தார்கள். சின்னஞ் சிறுசுகள் தங்களையும் தூக்கிச் செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்கள். சிலர் தோளில் அவர்களைச் சுமந்து கொண்டும், பெண்டிர் இடுப்பில் சுமந்து கொண்டும், இளைஞர்கள் வழிப் பயணத்திற்கான உணவு மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டும் விரைந்து நடக்கலாயினர்.

"நாம் தஞ்சைக்குச் செல்வதற்குள் அரசருக்கு ஏதும் நடக்காதிருக்க வேண்டும்" என்று தங்கள் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டனர். அரிசிலாற்றங்கரையிலும், மண்ணியாற்றங்கரையிலும், குடமுருட்டிக் கரையிலும், காவிரிக் கரையிலும் குடும்பத்தோடு இரவில் மக்கள் தங்கி, பொழுது புலர்ந்ததும் புறப்பட்டனர். வழிக் களைப்பு தெரியாதிருக்க அவர்கள் தேவாரப் பதிகங்களைப் பாடிக் கொண்டு சென்றனர்.

குரல் இனிமை உடைய குமரர்கள் பாடியதைத் தொடர்ந்து கூட்டத்தினர் பாட, கைத்தாளம் தட்டப் பெரியவர்களும், பெண்களும், இளைஞர்களும் ஓட்டமும் நடையுமாகப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

**பூசுவதும் வெண்ணீறு; பூண்பதுவும் பொங்கரவம்;**
**பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ**
**பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை**
**ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ -**

இந்தப் பாடலின் முதல் இரண்டு அடிகளை இளைஞர்கள் பாட, பின் இரண்டு அடிகளை மகளிர் பாட ஒரே கும்மாளம்தான்.



இளவட்டங்களின் சிரிப்பும், கும்மாளமும் பெரியவர்களுக்கு எரிச்சலை அளித்தன.

"நாம் எதற்காகச் செல்கிறோம் என்பதுணராமல் இப்படிக் கும்மாளமிட்டு வருகிறீர்களே?" என்று அவர்கள் கடிந்து கொண்டனர்!

பாடி ஆடிக் கொண்டிருந்தவர்களுள் இளம்பெண் ஒருத்தி துணிவுடன், "என்ன தாத்தா? நாங்கள் பாடியது என்ன தெரியுமா? மாணிக்கவாசகரின் திருச்சாழல்" என்றாள்.

"எதுவாக வேனும் இருக்கட்டுமே? பாடி ஆட இதுவா நேரம் காலம்? நாங்கள் எல்லாம் கவலை கலந்த மனத்துடன் செல்கிறோம்; எங்கள் மன்னருக்கு என்ன நேருமோ என்ற கவலை எங்கள் இதயத்தை அழுத்துகிறது. உங்களுக்கு எல்லாம் கவலை, வருத்தம் ஏதுமில்லையா?" என்று பெரியவர் ஒருவர் கேட்டார்.

"ஏனில்லை? கவலையை மறக்கத்தான் நாங்கள் பாடுகிறோம். வேடிக்கைப் பாட்டில்லை, தாத்தா. எங்கே சொல்லுங்கள்....இந்தப் பாட்டிற்கு என்ன அர்த்தம்?" என்றாள் குறும்புத்தனம் மிளிரும் விழிகளுடன் ஒரு பெண்.

கேள்வி கேட்டவர்கள் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

"யார் பாடிய பாட்டு என்றாவது தெரியுமா?" இளைஞன் ஒருவன் கேட்டான்.

கேள்வி கேட்பதை விரும்பாத ஒருவர், "என்னடா கேள்வி கேட்கிறாய்?" என்று கையை ஓங்கினார்.

மற்றொருவர் தடுத்து, "சின்னவர்கள் தாமே, உங்களை வேடிக்கை செய்கிறார்கள்" என்றார்.

"வேடிக்கை இல்லை, தாத்தா. மெய்யாகவே கேட்கிறோம். இந்தப் பாடலை எங்களுக்கு விளையாடக் கற்றுக் கொடுத்தார்கள். யாருடைய பாடல் என்று சொல்லித் தரவில்லை" என்றாள் ஓர் இளம் பெண்.

பெரியவர் ஒருவர் அவளைத் திரும்பிப் பார்த்தார். "இந்தக் காலத்திலே எதையும் ஆழமாகத் தெரிந்து கொள்வதில் உங்களுக்கு ஆர்வமில்லை. அதைப் பாடியவர் திருநாவுக்கரசர்" என்றார்.

அங்கு சிரிப்பு வெடித்தது.

"ஓ, அதை எழுதியவர் திருநாவுக்கரசர் இல்லை தாத்தா! மாணிக்கவாசகர்" என்று ஓர் இளம் குரல் எழுந்தது.

கைகொட்டிச் சிரிப்பு மீண்டும் பூப்பூவாய்க் கொட்டியது.

"விளையாட்டுப் பாடல் அது. பாடிக் கொண்டே விளை யாடுவது. விளையாடிக் கொண்டே பாடுவது! திருச்சாழல் என்று பெயர்" என்றபோது கண்டிப்புடன் பேசிய வெரியவர், "என்ன பாடலோ, எந்த வேளையில் என்ன பாடுவது என்று இல்லாமல் போய்விட்டது. இப்படியே நடந்து சென்றால் ஒரு வாரங்கூட ஆகிவிடும்" என்று முணு முணுத்துக் கொண்டே வேகமாக நடக்கலானார்.

தஞ்சை மாநகரத்து வீதிகளிலுள்ள மாந்தர்கள் ஒவ்வொரு கணமும், மாளிகையிலிருந்து செய்தி வருவதை எதிர்பார்த்து வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தனர்.

உள்ளாலை எனப்படும் பகுதியில் கோயிலும், மன்னர் வதியும் மாளிகையும் இருந்தன. நகரத்தின் நடுநாயகமாக அவை இருந்தன.

கொலுமண்டபம் இருந்தது. ஆவணக் களரி, அறச் சாலை இருந்தன. அருகருகே அரசியல் அதிகாரிகள், படைத்தலைவர் மாளிகைகளும் இருந்தன.

விழாக் காலங்களில் நாட்டியம் நாடகம் நடைபெற ஆடலரங்கும் நாடக சாலையும் மாளிகையை ஒட்டி இருந்தன. பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றில் உள்ள விசாலமான இடத்திலும் விழாக் காலங்களில் நாடகம், நாட்டியம் நடைபெறும்.

வெளியூர்களிலிருந்து நகரத்திற்கு வந்தவர்கள் எங் கெங்கு முடியுமோ அங்கெல்லாம் தங்கினர். முன்பே கலகலப்பாகவும், மக்கள் வருகை அதிகமாகவும் இருக் கும் கடைதெருவில் இன்று நெருக்கடி அதிகமாகியது.

தஞ்சை புரியைப் பார்த்திராதவர்கள் நகரின் மையப் பகுதியிலேயே சுற்றிச் சுற்றி வந்தார்கள். எப்பொழுதோ தஞ்சையைக் கண்டிருந்த வெரியவர்களுக்கு அந்தக் கடைத் தெருவின் வளர்ச்சி பிரமிப்பாக இருந்தது.

ஒவ்வொரு கடைவீதிக்கும் ஒவ்வொரு பெயர் சூட்டப் பட்டிருந்தது.



'திருபுவனமாதேவிப் பேரங்காடி', 'கொங்காள்வார் அங்காடி', 'இராசராச பிரம மாராயன் அங்காடி' என்று அழைக்கப்பட்ட கடை வீதிகளுக்குள் இன்று மெல்லத்தான் நகர முடிந்தது. வணிகர்களும் தம் அங்காடிகளை உடனே மூடிவிட்டு அரசரின் உடல் நிலையைக் காணச் செல்லவேண்டும் என்ற பரபரப்புடனிருந்ததால் வியா பாரத்தில் அதிகம் ஈடுபாடு கொள்ளவில்லை.

அங்காடிகள் நிறைந்த வீதிகளுக்கருகே நகரத்தில் முக்கியமான வீதிகள் இருந்தன. வீரசோழர்ப் பெருந் தெரு, இராசவித்தியாதரப் பெருந்தெரு, சயங்கொண்ட சோழர்ப் பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந்தெரு என்ற பெயரில் பெருந்தெருக்கள் மக்கள் வெள்ளத்தைத் தாங்கின. "இதுதான் வானவன்மாதேவிப் பெருந்தெரு, சில நாள்கள் முன்பு முடிசூட்டிக் கொண்டாரே இரா சேந்திர சோழர் அவரைப் பெற்றெடுத்த பாக்கியசாலி" என்று இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் விளக்கினார் முதியவர்.

முதியவர்களைக் கேலியும் கிண்டலுமாகப் பேசி வந்த இளைஞர்களுக்குப் பெரியவர்கள் மீது மதிப்பும் மரியாதை யும் அதிகரித்தன.

"நீங்கள் வானவன்மாதேவியைப் பார்த்திருக்கி றீர்களா?"

"இன்று நாம் இராசேந்திர சோழ தேவரைப் பார்க்க முடியுமா?"

"நானும் படையில் சேர்ந்து என் நாட்டிற்குத் தொண்டாற்றப் போகிறேன். படை வீரனானால் சக்கர வர்த்திகளை அடிக்கடிச் சந்திக்க முடியும் அல்லவா?" என்றனர், சில இளைஞர்கள்.

"மிக சீக்கிரம் போர் ஒன்று மூளப்போகிறதாமே? போர்க்களத்தில் வீரதீர சாகசங்களைச் செய்ய வேண்டும் என்று ஆசை".

"ஓ! வீரனுக்குத்தான் மாலை இடப்போவதாக உன் மாமன் மகள் முடிவு செய்திருப்பதால் படைவீரனாகச் சேரப் போகிறாய். அப்படித்தானே?" என்று அருகே இருந்த இளம் பெண் ஒருத்தி அவனைச் சீண்டினாள். சிரிப்பு அலை ஓய நெடுநேரம் பிடித்தது.

தஞ்சை நகருக்கு வந்தவர்கள் தங்கள் உறவினர் வீடுகளிலும், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் வீடுகளிலும் தங்குவதற்கு அவர்கள் முகவரி கேட்டு அலைந்தனர்.

தொழிலாளர்கள் குடியிருப்புகளான அந்த வேளங்கள் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே இருந்தன.

அபிமான பூஷணத் தெரிந்த வேளம், அருண்மொழித் தேவர் தெரிந்த திருபரிகளத்தார் வேளம், இராசராசத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்து வேளம், உத்தம சீலியார் வேளம், பஞ்சவன்மாதேவியர் வேளம் என்று அழைக்கப்பட்ட வேளத்து வீடுகளில் அவர்கள் தங்க இடம் பிடித்தனர்.

கோட்டைக்கு வெளியே புற நகர்ப் பகுதியில் அவை இருந்ததால், நகரத்திற்குள் வந்தவர்கள் மீண்டும் புறநகர்ப் பகுதியை நோக்கி விரைந்தனர். கூட்ட நெரிசலில் ஊர்ந்தவண்ணம் சென்றதால் சிலர் பொறுமை இழந்தனர்.

கலைஞர்களின் இல்லங்களிலும் நிற்க இடம் இல்லை.

தஞ்சை மாநகரில் தாங்க முடியாத அளவுக்கு மக்கள் நிறைந்து விட்ட செய்தியும், மேலும் மேலும் பல திசைகளிலிருந்து மக்கள் வெள்ளம்போல் வந்து கொண்டிருக்கும் செய்தியும் இராசராசனுக்கு அறிவிக்கப்பட்டது.

இராசராசன் உடல் நிலையில் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டது.

அவர் அருகே கருவூர்த் தேவரும் இராசேந்திரனும், பட்டத்தரசியும், திருமந்திர ஓலை நாயகமாக இப்போது பணி ஏற்றிருக்கும் முதியவர் கிருஷ்ணன் ராமனும் மட்டுமே இருந்தனர்.

தன் அன்புப் புதல்வர் இராசேந்திரன் திருக்கரத்தைத் தன் கரத்துடன் பிணைத்துக் கொண்ட இராசராசன் மெல்லப் பேசினார்.

"பரகேசரி இராசேந்திர சக்கரவர்த்தியே!" என்று அவர் அழைத்தபோது இராசேந்திரன் நெகிழ்ந்து விட்டார்.

"தந்தையே, தந்தையே! தாங்கள்தான் இந்தக் கணம் இந்தப் பொழுது வரை சக்கரவர்த்தி. என்றுமே நான் தங்கள் அருமைப் புதல்வன் மதுரன்தான்" என்றார் இராசேந்திரன்.



புன்முறுவலுடன் தலை அசைத்த இராசராசன் சொல்லுவார்: "அருமை மகனே! எப்பொழுதோ பிரிந்திருக்க வேண்டிய இந்த உயிரை இந்தக் கூட்டிற்குள் தங்க வைத்திருக்கும் பெருமை கருவூர்ச் சித்தருடையது. அவர் அருகே இருக்கும்போது இயம பயம் ஏது? அவர் நேற்று இரவு மூலிகை மருந்தைக் கொடுத்தார். என் பிணிகள் ஓடோடி விட்டன. உடல் கனம் குறைந்தது. பார்வை தெளிவாகிவிட்டது.

"மகனே! கருவூர்த் தேவர் நமக்கு ஆதரவாக, உதவியாக இருப்பது ஆடவல்லான் நமக்களித்த பரிசு. அதற்காக ஏழேழு பிறவிக்கும் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். என் அருகே இருந்து சோழ நாடு வாழ வாழ்த்திக் கொண்டே இருப்பதுபோல், உன்னுடன் அவர் என்றைக்கும் இருக்க வேண்டும். நாடு நகரம் எங்கும் அவர் சுற்றி வருகிறார். தெற்கே அகத்திய மலைக்குச் சென்றுவிடப் போகிறாராம். இராசேந்திரா! நீ அவர் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவர் உன்னை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டிக் கொள்ள வேண்டும்.

"இராசேந்திரா! வடக்கே வளப்பு மிகு பெரிய நதி இருக்கிறது. புனிதமான அந்த நதியின் பெயர் கங்கை என்பதை நீ அறிவாய். சிவபெருமான் சடை முடியினின்று இந்தப் புண்ய பூமிக்கு இறங்கி வந்து வளம் பெருக்கும் தெய்வ நதி. அந்த மாபெரும் நதியை நம் சோழநாட்டிறகுக் கொண்டுவர வேண்டும். என் ஆவல்களுள் அதுவும் ஒன்று.

"இராசேந்திரா! நீ கங்கை நதிக்குச் சென்று நீராட வேண்டும். அந்த நதியிலிருந்து லட்சம் லட்சம் குடங்களில் கங்கை நீரைக் கொண்டு வரவேண்டும். கங்கை நீரைக் கொண்டு பெருவுடையாரை திருமுழுக்காட்ட வேண்டும் என்பது என் பேரவா.

"என் ஆசை நிறைவேறப் போவதில்லை; இறைவன் என்னை அழைத்துக் கொண்டிருக்கிறான். எந்தக் கணமும் கைலாயபதியின் கணங்கள் என்னை அழைத்துச் செல்ல விமானங்களுடன் வருவார்கள். பெருவாழ்வு வாழ்ந்துவிட்டேன். நம் புலிக்கொடி திக்கெட்டும் பறக்கிறது. அதில் பெருமை இல்லை.

"நான் வென்ற நாடுகளைப் பற்றி, வெற்றிகளைப் பற்றி மட்டுமே வருங்காலத்தவர் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. ஆடவல்லான் அருளால் தட்சிண மேருவாய் விளங்குகிறதே, அந்தப் பெருவுடையார்த் திருக்கோயில் தான் அழியாது இருக்கப் போகிறது. என் அருமை இராசேந்திரா! தஞ்சைக் கோயிலைப் போன்று பெரிய, மிகப் பெரிய கோயிலைக் கட்டு. அங்கே பெரிய லிங்கம், பெரிய நந்தி, பெரிய விமானம் எல்லாம் உருவாக்கு".

இராசராசர் மெல்லப் பேசினார். தொடர்ந்து பேசியதால் களைப்படைந்தார். விழிகளை மூடிக் கொண்டார்.

அருகே இருந்தவர் பதறினர். கருவூர்த் தேவர் நாடியைச் சோதித்தார். 'பயமில்லை' என்றார்.

சிறிதுநேரம் கழித்து இராசராசர் கண் திறந்தார்.

மீண்டும் அதே புன்னகை. முகத்தில் தனி ஒளி.

"இராசேந்திரா! இராச இராசேசுவர நாடகத்தைக் கடைசியாகக் காண வேண்டும் என்று ஆவல். சென்ற வைகாசித் திங்களில் அந்த நாடகத்தைக் கண்டு மகிழ்ந்தேன். சாந்திக் கூத்தன் தன் தள்ளாத வயதிலும் மிகச் சிறப்பாக அந்த நாடகத்தை நடத்தினான். அவன் நலமாக இருக்கிறானா? அவனுடைய குடும்பத்தினர் எந்தவித வறுமையும் இல்லாமல் வாழ ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

"தந்தையே! திருப்பந்தணை நல்லூருக்குச் செய்தி அனுப்பி சாந்திக் கூத்தனை உடன் அழைதது வரச செய்கிறேன்" என்றார்.

"அவரை அழைப்பதும் நடக்கட்டும். மற்றொரு செய்தி; மிக முக்கியமானது" என்று கூறி அவனிடம் மெல்லிய குரலில் தெரிவித்தார்.

இராசேந்திரன் முகத்தில் புதிய ஒளி பிறந்தது.







## 50. தந்தையும் மகனும்

மாளிகை நிலா முற்றத்தில் இராசராச தேவர் சாய்ந்தவாறு அமர்ந்து இராசராசேச்வர நாடகத்தை வசதியாகக் காண ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தஞ்சைப் பெரிய கோயில் நாடகசாலை மண்டபத்தில் தான் பொதுவாக அந்த நாடகம் நடைபெறுவது வழக்கம். மாளிகையிலுள்ள கோயில் நாடக சாலையிலும் நாடகங்கள், கூத்துகள் நடைபெறுவது வழக்கம். உடல் நலம் மிகவும் சீர் குலைந்த நிலையில், அந்த நாடகத்தைப் பார்ப்பதற்காகவே இதுநாள் வரை உயிர் அவர் உடலில் இருப்பதுபோல் தோன்றியது.

தன் வீர தீரப் பிரதாபங்களை மீண்டும் நாடகத்தின் மூலம் காண்பதற்கு அவர் ஆவல் கொண்டுள்ளார் என்று சொல்ல முடியாது. அவர் ஆவலுடன் எதிர்பார்த்த ஒரு நிகழ்ச்சிக்காகத்தான் அன்றைய நாடக ஏற்பாடு என்றும் சொல்லலாம்.

நிலவு ஒளியும் *சுழுந்துகளின் வெளிச்சமும் நிறைந்த அந்த முற்றத்தில் சோழர் குலத்திற்கு மிகமிக நெருக்கமானவர்கள் மட்டுமே கூடியிருந்தனர்.

அரசருக்கு எதிரே அரைவட்ட வடிவமான மேடையில் ஓர் ஓரத்தில் இசைக் கருவிகளை இயக்கும் கலைஞர்கள் அமர்ந்திருந்தனர்.

* கள்ளி போன்ற செடிகளால் ஆக்கப்பட்ட தீப்பந்தங்கள்

கொட்டி, மத்தளம், ஒடுக்கை, சகடை, கரடிகை, உவச்சப் பறை போன்ற தோல் கருவிகளைத் தட்டுபவர்களும், வங்கியம், பாடலியம், குழல் போன்ற துளைக் கருவிகளை இசைப்பவர்களும், வீணை போன்ற நரம்புக் கருவிகளை மீட்பவர்களும் சுருதி சேர்த்துக் கொண்டிருந்தனர்.

பல ஆண்டுகளாக இராசராசேச்வர நாடகம் நடிப்பதில் திறமை நிலைநாட்டியவரான விசயராசேந்திர ஆசாரியன் என்ற பெயருடைய கூத்தில் வல்லவன் மெல்ல நடந்து நாட்டிய அரங்கேறினார். இன்னும் இராசராசர் வந்து அமரவில்லை என்பதை அறிந்தார். ஏறத்தாழ எழுபது அகவையை நெருங்கும் அவரால் முதுமை காரணமாக நாடகத்தை நடித்துக் காட்ட முடியுமா என்ற ஐயம் மாளிகையில் இருப்போரிடம் எழுந்தது.

வெற்றிலையை எப்போதும் குதப்பிக் கொண்டிருக்கும் மத்தளம் கொட்டும் ஹூாஸ்யன் விக்கிரமாதித்தனும் வந்து விட்டார். பட்டுப் பட்டாடை உடுத்தி சவ்வாது நறுமணத் திரவியங்கள் பூச்சுடன், பெரும் குங்குமப் பொட்டுத் துலங்க அவர் கம்பீரமாக அனைவரையும் ஒரு தடவை பார்த்தார்.

ஏறத்தாழ நான்கு நாழிகை நேரம் நடத்தப்படும் அந்த நாடகத்தை இராசராசர் அமர்ந்து முழுமையும் காண முடியுமா என்று அதிகாரிகள் கவலை கொண்டனர்.

அரண்மனைக் காரியங்களை மேற்பார்வை செய்யும் மாளிகை நாயகத்துடன் கலந்தாலோசித்து, யார் யார் அந்த நிலா முற்றத்தில் இருக்கலாம் என்ற முடிவெடுத்தனர். யாரையும் அழைக்க வேண்டாம் என்று கண்டிப்பாக இராசராசர் கூறியது இராசேந்திரனுக்கு வியப்பாக இருந்தது.

பொதுவாக இதுபோன்ற நிகழ்ச்சிகளில் சக்கரவர்த்தி நடுநாயகமாக வீற்றிருக்க, அரசி உடனிருக்க, மற்ற உரிமை இளவரசிகள் நிகழ்ச்சியைக் காண வசதியாக மேல் மாடத்தில் வீற்றிருக்க, கட்டியங்காரர், அரசர் அவ்வப்போது மலர்ந்தருளும் ஆணைகளைக் கேட்டு வந்து திருமந்திர ஓலை நாயகத்திடம் அறிவிக்கும் அதிகாரியான திருவாய்க் கேள்வி, மிகவும் முக்கிய அதிகாரியான திருமந்திர ஓலை நாயகம், நாள்தோறும் நடக்கும்



நிகழ்ச்சிகளை நிகழ்ச்சிப் புத்தகத்தில் குறித்து வைக்கும் பட்டோலைப் பெருமான், எப்போதும் அரசர் அருகே இருந்து நாட்டுச் செய்திகளை மன்னருக்கு அறிவிக்கும் அரசாங்கச் செயலாளர், நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர ,நிர்வாகத்தைக் கவனிக்கும் சபையின் தலைவர், அரசர் மெச்சி அழைக்கும் பெரும் புலவர், படைத்தலைவர் போன்றோர் அரங்கில் அவரவர்க்கு உரிய இடத்தில் அமர்ந்திருப்பது வழக்கம். மாளிகையில் நடைபெறும் பிறந்தநாள் விழா போன்ற முக்கிய நிகழ்ச்சியின்போது மன்னர் பெரிதும் போற்றி வணங்கும் சிவாச்சார்யார்களான ஈசானிய சிவன் மன்னருக்கு அருகே வீற்றிருப்பார்.

போர்க் காலங்களில் உதவியவர், நல்லாட்சிக்கு உறுதுணையாயிருந்தவர், நிர்வாகத் திறமை பெற்ற அரசு அதிகாரிகள், நம்பிக்கையுடன் பல்லாண்டு பணிபுரிந்தவர்கள், வீரப் போர் புரிந்தவர்கள் ,ஆகியோருக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிப்பது சக்கரவர்த்திகளின் வழக்கம். மூவேந்த வேளான், பூவேந்த வேளான், கேரள ராசன், காலிங்கராயன், கச்சி ராயன், வாணவ கோவரையன்,பல்லவராயன், சேதிராயன், காடவ ராயன், தொண்டையன், விழுப்பரயன், ஈழங்கொண்டவர், இளங்கோவேள், களத்தில் வென்றார் போன்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்கள் சபையின் அரங்கில் கம்பீரமாக இருப்பது வழக்கம்.

இன்று அவர்களுள் ஒருவரும் அழைக்கப்படவில்லை.

இராசராசர் மெல்லிய குரலில் இராசேந்திரனிடம் சொல்வார் : "மகனே! இந்த நாடகம் என பெருமைகளைப் பறை சாற்றுவதன்று. நான் அடைந்த வெற்றியை நானே பார்த்து, கேட்டு மகிழ்வதற்காக நடிக்கப் பெறுவதன்று. சோழ நாட்டுப் பெருமக்கள் மனத்தில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தம் நாட்டைப் பற்றிய பெருமையையும் வளர்ப்பதற்காகத்தான் இந்த நாடகத்தை என் பிறந்த நாளான ஐப்பசி சதய நாளன்று கோயிலில் நடக்குமாறு செய்தேன்.

"அருமை மகனே! இந்த நாடகத்தை நீ பல தடவைகள் பார்த்திருப்பாய். நான் அரியணை ஏறியவுடன் பாண்டிய மன்னனுடன் போர் புரிந்ததும், சேர நாட்டு உதகைக் கோட்டையை வென்றதும், குடமலையைக் கொண்டதும்,

சாளுக்கிய சத்யாச்ரயனுடைய நாட்டில் புலிக்கொடியை ஏற்றியதும் நாட்டிய நாடகமாக நடிக்கப் பட்டதைக் கண்டு மகிழ்ந்திருப்பாய். நாட்டியப் புலமை பெற்ற விஜய ராசேந்திர ஆசாரியன் என்னைப் போன்று நடித்து மக்களிடம் பாராட்டுதல் பெற்றதையும் நீ அறிவாய்.

"நான் அரியணை ஏறுவதற்கு முன்பு கடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற செய்தி உனக்குத் தெரிந்திருக்க லாம். அந்த நிகழ்ச்சியை விசய இராஜேந்திரன் இந்த நாடகத்தில் சேர்ப்பதில்லை!

இராசராச சோழர் மெல்லப் பேசினாலும் அவருக்கு மூச்சு வாங்கியது.

இளம் பருவத்திலே கடல் கொள்ளையர்களை எதிர்த்துத் தன் தந்தை போரிட்டதை இராசேந்திரன் அறிவார். அவர் சென்ற கலம் பழுதடைந்ததும், முல்லைத் தீவில் கலத்தைப் பழுதுபார்க்க நங்கூரம் பாய்ச்சி கலம் நின்றபோது தன் தந்தை, தீவிற்குள் சென்று அந்தத் தீவின் தலைவரைச் சந்தித்ததும், அவரது மகள் இன்பவல்லி அறிமுகமானதும், அவளுடன் முதல் கை கொடுத்து ஆடிய நிகழ்ச்சியும் அவருக்குத் தெரியும்.

இராசராசனே இப்போது சொல்ல ஆரம்பித்தார்: "இராசேந்திரா! தமிழ்நாட்டிலிருந்து வெகு தொலைவில் முல்லைத் தீவிலிருக்கும் இன்பவல்லி நாட்டியக் கலையில் சிறந்திருந்தாள். கூத்தன் விசய ராசேந்திரன் அந்தச் சம்பவத்தை ஆடுவதில்லை. அந்தச் சம்பவத்தை நேரே கண்டதுபோல் ஆட ஒருவருக்குத்தான் தெரியும். நடனப் புலமை பெற்றவர் ஆணா, பெண்ணா என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

நடந்த கதை ஓரளவுக்கு இராசேந்திரனுக்குத் தெரியும். "அத்தை குந்தவ்வை பிராட்டி எனக்குச் சொல்லி யிருக்கிறார்" என்றார்,இராசேந்திரன்.

சிறிது நேரம் மௌனமாயிருந்த இராசராசர், "இளைய பிராட்டிக்குத் தெரியாததா? அவர்கள் உனக்குக் கதை போல் எல்லாவற்றையும் சொல்லியிருப்பார்கள் அப்படித் தானே?" என்று கேட்டார்.

"ஆமாம், ஆமாம்! இளைய பிராட்டியார் எனக்கு எல்லா வற்றையும் சொல்லி இருக்கிறார். எனக்குத் தாயாயும், தந்தையாயும், ஆசானாயும் விளங்கியவர் அவர். தக்க



சமயத்தில் அவர் எச்சரித்திராவிடில் மாபெரும் பிழையை நான் செய்திருப்பேன்" என்று இராசேந்திரன் மெல்லிய குரலில் பேசினார்.

இராசராசன் தன் மகனைப் பார்த்து மெல்லப் புன்னகை புரிவது தெரிந்தது. ஆனாலும் அவர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பது மற்றவருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அவர் உதடுகள் 'சிவசிவ' என்று உச்சரித்த வண்ணம் இருந்தன. சில நாள்களுக்கு முன் அவர் உடல்நலம் விசாரிக்க வந்த இளையபிராட்டியின் கரத்தைப் பற்றியபோது இளையபிராட்டி சொன்னாள்:

"தம்பி! தேக்கு போன்ற உன் கரங்கள் எலும்புகள் மட்டும் நிறைந்த கூடாகிவிட்டனவே. உனக்குப் பிறகும் நான் இந்த உலகில் வாழ வேண்டும் என்பது இறைவன் சித்தம் போலும்" என்றாள். அவள் கூறும்போது குரல் தழுதழுத்தது.

ஏன் அவ்வாறு சொன்னோம் என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. இராசராசன் இந்த உலகில் இனி அதிக நாள்கள் வாழமாட்டார் என்பதும், அவருக்குப் பிறகும் தான் வாழப் போவதாகவும் அவள் எண்ணி யிருக்கலாம்.

இராசராசர் மெல்லப் பேசினார். ஆனால் அதில் தெளிவு இருந்தது. "என் அருமைச் சகோதரியே! என்னை உருவாக்கினீர்கள். என் மகனை வீர தீரனாக, அறிவாளி யாக வளர்த்துச் சோழ நாட்டின் சக்கரவர்த்தி ஆக்கி னீர்கள். நீங்கள் இன்னும் பல ஆண்டு வாழ்ந்து என் மகனுக்கு வழி காட்டியாகவும் சோழர் குலத்திற்கு உறுதுணையாகவும் இருக்க வேண்டும்".

இளைய பிராட்டியின் முகத்தில் பூத்த புன்னகையில் விரக்தி தெரிந்தது.

"தம்பி! இப்பொழுது எனக்கு என்ன வயது என்று நினைக்கிறாய்? உன்னைவிட ஆறு ஆண்டுகள் மூத்தவள். சோழ நாட்டின் பெருமையும் புகழும்தாம் எனக்கு மன வலிமையை அளித்து வருகின்றன. இப்போதெல்லாம் பழை யாறைக்கும், தஞ்சைக்கும் வந்துசெல்வதால் உடல் களைப்பு ஏற்படுகிறது. நான் பழையாறையிலிருந்து புறப்பட்டுப் பிரம்மதேயம் செல்லப் போகிறேன். உனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் உன் உடல் அடக்கம் செய்

வதற்கு முன்பு வருவேனா என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. சோழர் குலத்துக்குத் தோன்றாத் துணையாக உள்ள கருவூர்த்தேவரிடம், தஞ்சையில் உன் அருகேயே இருக்குமாறு வேண்டிக் கொண்டிருக்கிறேன். எப்போதும் சிவபெருமான் நாமத்தை உச்சரித்துக் கொண்டு, ஆடவல்லான் நினைவாக எஞ்சிய பொழுதைக் கழிக்குமாறு சொல்லி இருக்கிறார். உன்னைப் பார்க்க வருவது இதுவே கடைசி முறையாக இருக்கலாம்" - இளைய பிராட்டியின் விழிகள் கலங்கின.

இராசராசன் விழிக் கோடியிலிருந்து நீர்த்துளிகள் உருண்டன. குரல் தழுதழுக்கக் கூறினார்: "என்னை விட்டு நீங்கள் ஒரு கணமும் பிரியக்கூடாது. என் கட்டளை. நீங்கள் அருகிலிருந்தால் நான் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வேன். எங்களை விட்டு விரைவில் பிரிந்து செல்ல விரும்புகிறீர்களா?"

அவர் விழியிலிருந்து வடியும் கண்ணீரைத் தன் நடுங்கும் கரத்தால் மெல்லத் துடைத்த இளையபிராட்டி, "தம்பி, அதெப்படி முடியும்? வல்லவரையரை நான் உடனே சந்திக்க வேண்டும். அவர் உடல் நலமில்லாமல் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. எனக்கும் அவருக்கும் நூறு கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். என்றாலும் அவர் அருகே இறுதிவரை இருக்க வேண்டும் என்ற எண்ணம் அழுத்தமாக என் மனத்தில் பதிந்துவிட்டது. அவருக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும் என்ற ஆவல் என்னை ஒரு கணம்கூட இங்கே நிறகவிடவில்லை. இராசராசா! எதற்கும் அஞ்சாதே. 'சிவசிவ' என்று எப்போதும் சிவபெருமான் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இரு. நமசிவாய என்ற நாதன் திருநாமம்தான் உறுதுணை" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

தன் சகோதரி இளையபிராட்டி கூறியபடி அந்தக் கணம் முதல் 'சிவசிவ' என்று மனத்திற்குள்ளேயே சொல்லலானார். பிறகு மெல்ல உச்சரிக்கலானார்; அதனால் அவருக்கு மன அமைதி ஏற்பட்டது. காலை வேளையில் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்களை மட்டும் தன்னருகே இருந்து பாடுமாறு செய்தார்.

இராசேந்திரனிடம் இராசராசர் சொன்னார்: "மகனே, இளைய பிராட்டியாரையும் வல்லவரையர் வந்தியத்





தேவரையும் இனி கண்ணெனக் காப்பது உன் கடமை. ஒரு பெரிய இரகசியம் - தன் பெயரைக் காலகாலத்திற்குச் சொல்ல உன் அத்தை வாரிசை உருவாக்கிக் கொள்ள வில்லை. வல்லவரையர் இளைய பிராட்டியின் பாசப் பிணைப்பு மகத்தானது என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அமர காதலர்கள் வரிசையில் சேர்க்கப்பட்டவேண்டிய அவர்கள் சோழ நாட்டிற்குச் செய்திருக்கும் தொண்டும், பணியும் ஆயிரம் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட





வேண்டியவை. உண்மையைச் சொல்லப் போனால் உன்னைத் தன் மகனைப்போல் கருதி அன்பைப் பொழிந்தார். வல்லவரையருடன் சேர்ந்து வாழ்ந்த நாள்கள் மிகக்குறைவு. அவர்களுக்கு எந்தவித இடர்ப்பாடும் நேராமல் நீ பார்த்துக் கொள்ள வேண்டும். வல்லவரையருக்கு நாம் உரிமை செய்து கொடுத்துள்ள மகத நாட்டில் வாரிசுரிமைக்காக எந்தப் போட்டியும் போரும் பிற்காலத்தில் நேர்ந்துவிடக்கூடாது. உன் அத்தை தனக்கு வாரிசை உருவாக்கிக் கொள்ளவில்லை. 'மதுராந்தகன் தான் என் வாரிசு' என்று அடிக்கடி உன்னைக் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அது எப்படி இயலும்? வல்லவரையர் பல ஆண்டுகளுக்குப் பிறகு குந்தள நாட்டு இளவரசியைத் திருமணம் செய்து கொண்டதையும் நீ அறிந்திருக்கலாம். அவர்களுக்கு ஒரு மகள். திருமண வயதுடைய அவளை நீ மணந்திருந்தால் பிறகு ஒரு காலத்தில் வந்தியத் தேவனுக்குப் பிறகு ஏற்படப் போகும் வாரிசுரிமைப் பிரச்னையைத் தீர்த்திருக்கலாம். உம்..." என்று கூறிப் பேச்சை நிறுத்தினார்.

இராசேந்திரனுக்கு இந்தச் செய்தி புதிதாக இருந்தது. வல்லவரையருக்கு ஒரு மகளா? இதுவரையில் அவருக்குத் தெரியாது. தன் தந்தை கூறுவதில் தீர்க்க தரிசனம் இருக்கிறது. சோழ நாட்டின் மிக முக்கியமான பகுதிகள் அடங்கிய மகத நாட்டு வாரிசுரிமை குறித்துப் பிணக்குகள் ஏற்பட்டால் சோழ நாட்டின் ஒற்றுமை குலையக் கூடுமல்லவா? கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் இந்த நிலையில் தன் தந்தை, இவ்வளவு முக்கியச் செய்தியைத் தனக்குச் சொல்கிறார். அதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இதுபோன்ற முக்கியமான செய்தியைச் சொல்லத்தானோ என்னவோ, இராசராச விஜய நாட்டிய நிகழ்ச்சியைக் காணும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறாரோ? நிகழ்ச்சியைக் காண முக்கியமான அதிகாரிகள் ஒருவரும் அழைக்கப்படாததற்கு இதுவும் ஒரு காரணமோ? என்று இராசேந்திரன் எண்ணினார்.

"வல்லவரையர் பிரச்னையைத் தீர்க்க நான் என்ன செய்ய வேண்டும்?" என்று அவர் அருகே சென்று கேட்டார், இராசேந்திரன்.

மீண்டும் ஒரு முறுவல், இராசராசன் வதனத்தில். "மிகவும் தாமதமாக நான் சிந்திக்கிறேன்", வல்லவரையர்

மகளை நீ மணந்து கொண்டிருக்கலாம். மணஉறவில் வயது இடைவெளி அதிகம் என்று நீ சொல்லக்கூடும்" என்று கூறி இராசேந்திரனை நோக்கினார்.

'ஆம் ஆம்' என்பது போல் இராசேந்திரன் தலையசைத்தவுடன், மீண்டும் ஒரு குறும்புச் சிரிப்பு முகிழ, "வீரம்மாளுக்கு என்ன வயது?" என்று கேட்டார்.

இராசேந்திரனுக்குப் புரிந்துவிட்டது. காதலுக்கும், காமத்துக்கும் கண், வயது ஏதுமில்லை என்பதை அவர் அறியமாட்டாரா?

வயதையும் மீறி வீரம்மாளுக்கும் தனக்கும் உள்ள உறவைத் தந்தையிடம் எப்படி விவரிப்பது? இராசேந்திரன் பரபரப்படைந்தார்.

"இராசேந்திரா! ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவிக்கவே இன்று இராசராச விஜய நாடகம் காண விரும்பினேன். நாடகம் தொடங்கும் நேரம் வந்துவிட்டது. அதற்காகத்தான் நான் 'வீரமாதேவியையும், அவளுடன் சேர்ந்து கலைப்பணி செய்யும் கலைத்தேவியையும் இங்கே அழைக்குமாறு சொன்னேன். அந்தக் கானகத்தின் நடுவே நாட்டிய சாலை ஏற்படுத்தித் தொண்டாற்றி வரும் கலைத் தலைவியைப் பற்றி உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

இராசேந்திரனுக்குத் தெரியும். தன் தந்தையின் இளமைக் காதல் கதை தெரியும். தன் தந்தை முல்லைத் தீவில் தங்கியபோது இன்பவல்லி என்ற மங்கையிடம் மனத்தைப் பறி கொடுத்ததும் தெரியும். இராசேந்திரன் தலையசைத்தார்.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அவர் மனக் கண்முன்னால் தோன்றின. அவருக்கு நாணமாகக் கூட இருந்தது, இளமையில் தான் நடந்து கொண்டவிதம்.

இராசராசர் புரிந்து கொண்டார். இன்னும் சற்று நேரத்தில் நாட்டிய நாடகம் தொடங்கப் போகிறது.

உட்னிருந்து இசைக்கும் வாத்தியக்காரர்கள் ஆயத்தமாக இருந்தனர். இராசராச விஜயம் நாடகத்தில் முக்கியப் பொறுப்பேற்றிருக்கும் விஜயராசேந்திர ஆசாரியர் வேட மணியாமல் மேடையின் ஒருபுறம் அமர்ந்திருந்தார். யார் ஆடப் போகிறார்கள்? இராசேந்திரனுக்குப் புரிந்து விட்டது, ஆடப்போகிறவர் யார் என்று.





கானகத்தில் உள்ள கலைக்கூடத்தலைவியும் வீரமாதேவியும் ஆடப் போகிறார்கள். சோழச் சக்கரவர்த்தி இராசராசன் சரித்திரத்தை ஆடிக் காட்டப் போகிறார்கள்.

மேடையின் ஓர் ஓரத்தே அமர்ந்து ஒருவர் பாடுவார். அதற்கேற்ப ஆசாரியன் ஆடுவான். மத்தளமும், குழலும் யாழும், வீணையும் பின்னணியில் ஒலிக்கும்.

இராசராச சோழர் மெல்லச் சாய்ந்து படுத்தவாறு நாடகத்தைக் காண ஆயத்தமானார். இராசேந்திரன் அவர் அருகே அமர்ந்திருந்தார்.

கட்டியக்காரன் நாடகம் தொடங்கும் முன்பு இராசகேசரி இராசராசர் பெருமை பேசினான்.

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளல்
காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி"

என்று அவன் விரிவாகத் தனக்கே உரிய குரலில் ஏற்ற இறக்கத்துடன் பேசிச் சென்றான். அவன் கூறுவதே வாழ்க்கைச் சரிதத்தை விவரிப்பதுபோல் தோன்றியது. அமைதியாக இருந்த வாத்தியங்கள் முழங்கின.

பிறகு வாத்ய ஓசை நின்றது. எங்கும் அமைதி. நிலாமுற்றத்தருகே உள்ள நந்தவனத்திலிருந்து பூத்துக் கொண்டிருக்கும் மலர்களின் நறுமணம் தென்றல் காற்றோடு கலந்து வந்தது. ஓர் புறத்திலிருந்து அகிலின் புகை மெல்லப் பரவியது. நீல வானத்தைக் கூரையாகக் கொண்ட அந்த முற்றம் கந்தர்வலோகம் போல் காட்சியளித்தது.

திடீரெனப் பாதச் சலங்கை ஒலி கேட்டது. தொடர்ந்து இனிய பாடல் எழுகிறது.

'குன்றெறிந்து குலம் காத்த குமரன்வந்து
காவானோ தோழி? காவானோ தோழி?
மன்றமும் பொதியிலும் மகிழ்ந்தே விளங்குவான்
மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்வான்
இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே
இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி.

வீரமாதேவி பாடிக் கொண்டே ஆடுகிறாள். இது என்ன? இராசராச விஜயம் நாடகத்தில் வரும் காட்சியா? இதுவரைப் பார்த்ததில்லையே. பாடலைக் கேட்டதில்லையே.

இராசராசனும், இராசேந்திரனும் நிமிர்ந்து பார்க்கின் றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு அரியணை ஏறுவதற்கு முன்பு இராசராச சோழருக்கு அருண்மொழி என்ற பெயர்.

பட்டத்துக்கு உரிமையுடைய ஆதித்த கரிகாலன் படுகொலை செய்யப்பட்ட பிறகு தான் ஏற்கவேண்டிய சோழநாட்டு மணி முடியை யாரும் எதிர்பாராத வகையில் உத்தம சோழருக்குக் கோலாகலமாக அணிவித்து விழா நடத்திவிட்டு, 'தன் சகோதரி இளைய் பிராட்டியாரின் யோசனைப்படி கடல் கடந்த நாடுகளுக்கு நாகைப் பட்டினத்திலிருந்து கிளம்பிய கலிங்கத்துக் கலம் ஏறிப் புறப்பட்டார். கலிங்கத்துக் கலம் மிகப் பெரியது. அதில் மூன்று அடுக்குகள் இருந்தன. மேல்தளம், இடைத்தளம், அடித்தளம். அடித்தளத்தில் வணிகர்களின் பண்டங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. இடைத் தளத்தில் கலத்தில் பயணம் செய்வோர் தங்கியிருந்தனர். பல நாள்கள் பயணத்திற்குப் பிறகு கலிங்கத்துக் கலம் முல்லைத் தீவை அடைந்தது. கலத்திற்குத் தேவையான பொருள்களை முல்லைத் தீவில்தான் சேகரிப்பது வழக்கம். தவிர மரக் கலத்தின் இருபுறமும் படிந்திருக்கும் கனமான பாசிகளை அகற்றிப் பழுதுபார்க்கவும் அத்தீவில் சில நாள்கள் தங்க விரும்பினார், கலபதி.

முல்லைத் தீவில் உட்புறத்தே வளைந்து செல்லும் ஆழமான கழிக்குள் கலிங்கத்துக் கலம் நங்கூரம் பாய்ச்சி நின்றது. மூன்று நாள்கள் கலம் அந்தத் தீவில் தங்குமென்றும், மூன்றாவது நாள் பொழுது சாயுமுன்னர் கலம் புறப்படுமென்றும் கலபதி அறிவித்திருந்தார். கலத்தில் வந்த வணிகர்கள் கடற்கரையின் வெண்மணல் பரப்பில் கூடாரமடித்துத் தங்கினர். மாறு வேடத்திலிருந்த அருண்மொழி தீவிற்குள் சென்றார்.

வணிகர்கள் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி அருண் மொழி மெல்ல நடந்தார். மற்றவர்கள் முன்னதாகவே உறங்கச் சென்றுவிட்டனர். அவரைத் தொடர்ந்து யாரோ வரும் காலடி ஓசை... அருண்மொழி திரும்பினார்.



அவ்வுருவம் மர நிழலோடு நிழலாக மறைந்தது. வேறு எவராக இருக்க முடியும்? ரவிதாசன்தான்! அவன் ஏன் தன்னைத் தொடர்கிறான்? தன் உண்மைத் தோற்றத்தைக் கண்டு கொண்டானா? ஆடையைச் சரிப்படுத்திக் கொண் டார், அருண்மொழி. தலை முண்டாசை ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

கூடாரத்தில் அவர் படுத்து உறங்குவதற்குக் கண்களை மூடிக்கொண்டார். துயில் அவரை வந்து அடையவில்லை. பல நினைவுகள். அலை கடலின் ஒலி, காற்றின் ஓசை, கலத்தின் காவலர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தத்தம் மொழியில் பாடும் ஓசை, சில வணிகர்கள் வாய்ப்பிதற்ற லால் ஏற்படும் புரிய முடியாத சப்தம் எல்லாமாக வந்து அவரைச் சூழ்ந்தன. 'யார் அது'... அருண்மொழி துள்ளி எழுந்தார். கூடாரத்து வாயிலில் யாரோ வந்து சென்றது போன்ற ஓசை. மெல்ல எழுந்த அருண்மொழி வெளியே வந்தார்.

எங்கிருந்தோ மெல்லிய இசை காற்றில் மிதந்து வந்தது.

'குன்றெறிந்து குலம்காத்த குமரன் வந்து
காவானோ தோழி? காவானோ தோழி?
மன்றமும் பொதியிலும் மகிழ்ந்தே விளங்குவான்
மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்வான்
இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே
இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி'.

ஆகா; நம் கையில் சுருதியெழுப்ப இசைக்கருவி இல்லையே; உடன் பாட இசை கற்றோமா? அதுவும் இல்லையே. இதுவரை நாம் கண்டதென்ன? அரண்மனை வாழ்வு... போர்க்களத்துச் சூழ்நிலை. இதுதான் வாழ்க் கையா? இசையில் உயிரைப் பறிகொடுக்க மாட்டோமா? இனிய நடனத்தில் சிந்தையைச் செலுத்த மாட்டோமா? இவற்றை இப்படியே இதயச் சுவரில் ஓவியமாகத் தீட்டி வைத்துக் கொள்ள மாட்டோமா!

'இளைய பிராட்டியாரே! நீங்கள் நீடூழி வாழவேண்டும். நீங்கள் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பாவிடில் இந்த மரகத பூமியின் சௌந்தர்யம் காண்பேனா? நீலவானத் தடாகத்தில் பூத்த வெண்தாமரை மதியின் குளிர்க் கிரணச்

சூழலில் தேவமாதரைப் போல இசை பாடும் மகளிரைக் காண்பேனா...?

மறுநாள் இப்படிச் சிந்தித்தபடியே அருண்மொழி காற்றிலே இசை வந்த திக்கு நோக்கி இரண்டடி எடுத்து வைத்தார்.

அருண்மொழி வெண்மணற் பரப்பில் நடந்து கடற்கரையை அடைந்தார். தாழை சூழ்ந்த தடாகத்துக் கரையில் நீண்டு நிமிர்ந்த பாறையின் மேல் இன்பவல்லி அமர்ந்து வானத்தைப் பார்த்துப் பாடிக் கொண்டிருந் தாள். அவள் பாடலுக்கு மினு மினுக்கும் தாரகைகள் தாளம் போட்டன. காற்றில் அசைந்தாடும் தென்னைக் கீற்றுகள் சுருதி மீட்டின. உதிரும் புன்னை மலர்கள் கைகொட்டி ஆரவாரித்தன. வெண்நுரை கக்கி விரைந்து வந்து கரையைத் தழுவும் வெண்திரைகள் ஆடிப்பாடின.







# 51. பேரரசரின் அருளாசி

அருண்மொழி தன் தலைப்பாகையை மெல்லக் கழற்றி னார்.

"ஆஹா..." என்று மெல்லக் கூறினார்.

இன்பவல்லி திடுக்கிட்டு எழுந்தாள், பாட்டை நிறுத்தி னாள்.

"ஏன் நிறுத்தி விட்டாய்? பாடு! 'குமரன் வரக்கூவுவாய் குயிலே' என்று பாடேன்".

இன்பவல்லி மெல்ல நகைத்தாள். வெட்கத்தால் அவள் தலை குனிந்தாள்.

"பெண்ணே, ஏன் நிறுத்திவிட்டாய்?"

"பெண்ணா? இன்பவல்லி என் பெயர்".

"இன்பமாக இருக்கிறது".

"உங்கள் பெயரை அறிவது தவறாகுமா?"

"தவறென்ன? என் பெயர் சித்திரசேனன்".

"ஊர்?"

"என் ஊர் காந்தார தேசம்".

"இல்லை இல்லை; இல்லவே இல்லை!"

"பிறகு...?"

"எனக்குத் தெரியாது..."

அருண்மொழி அவள் கண்களை நோக்கினார். அந்தப் பேச்சை மாற்ற விரும்பி, "இன்பவல்லி! நீ இவ்வளவு அழகாகப் பாடுகிறாயே! நீ ஏன் குரவைக் கூத்தில் கலந்து கொள்வதில்லை?" என்றார்.

இன்பவல்லியின் கண்களில் கண்ணீர் தளும்பியது. "என் தந்தை என்னை அனுமதிப்பதில்லை".

"உனக்குக் குரவைக் கூத்து நல்ல பாடமா?"

"ஆகா! அதை நான் யாரிடமாவது ஆடிக் காட்டாவிடில் என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. யாரிடமாவது ஆடிக் காட்டாவிடில் கால்கள் முரிந்துவிடும் போலிருக்கின்றன!"

"எனக்கு ஆடிக்காட்டேன்".

"ஆட்டுவித்தால் ஆரோருவர் ஆடாதாரே?"

"இன்பவல்லி! நீ தமிழ் இலக்கியம் படித்திருக்கிறாயா?"

"எதையும் நான் கற்றதில்லை; கேட்டிருக்கிறேன்".

"இந்தத் தீவில் உனக்கு இவற்றைக் கற்றுக் கொடுத்தது யார்?"

இன்பவல்லி மௌனமாக இருந்தாள். அவள் இப்போது அருண்மொழியையே உற்று நோக்கினாள். அவளுடைய கண்கள் ஒளி வீசின.

"நான் கேட்டது உனக்குப் பிடிக்கவில்லையென்றால், நீ மறுமொழி கூற வேண்டாம்!" என்று அருண்மொழி கூறினார்.

"அப்படியெல்லாம் எண்ணிவிடாதீர்கள். என் மௌனம் தவறுதலாகப் பட்டால் பொறுத்துக் கொள்ளுங்கள். என் பிறப்பின் இரகசியம், நான் வளர்ந்த இரகசியம் யாருக்கும் தெரியாது. இதுவரை என் தந்தையோ நானோ யாருக்கும் கூறியதுமில்லை. உங்களிடம் என் இதயத்தையே ஒப்படைத்து விடவேண்டும் எனும் எண்ணம் எனக்கு ஏனோ ஏற்பட்டுவிட்டது! என் இதயம் உங்களை வேண்டியவர் எனக் கூறிக்கொண்டிருக்கிறது. விட்ட குறை ஏதேனும் இருக்கும்போல் தோன்றுகிறது". இன்பவல்லி உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள்.

அருண்மொழிக்கே அந்த நிலை மிகப் புது அனுபவமாக இருந்தது. சோழ நாட்டிலிருந்து பல காத தொலைவுக் கப்பால் கடல் சூழ்ந்த தீவொன்றில் இப்படி ஒட்டி உற



வாடும் நிலை தனக்கு எப்படி வந்தது? முன்பின் அறியா மங்கை ஒருத்தியின் எதிரே அவளது தந்தையின் சம்மதம் பெறாமல் தனித்துப் பேசத் துணிவு எப்படி வந்தது? இளவரசன் எனும் எண்ணம் - துணிவு உள்ளத்தில் இருப்பதால் இப்படித் திடீரெனப் பழகுகிறோமா? அவர் தன்னையே சோதித்துக் கொண்டார்.

இன்பவல்லி இப்பொழுது எழுந்து நின்றாள். "என் கதையை மற்றொரு நாள் கூறுகிறேன். இப்போது வேளை வந்துவிட்டது. இதுகாறும் நான் கற்றிருந்த கலையையெல்லாம் எவரெதிரேயாவது அரங்கேற்ற வேண்டிய போது ஏற்பட்டுவிட்டது. என் ஆட்டத்தில் தவறிருந்தால் பொறுத்தருளுங்கள்" என்று கூறினாள். கால்களில் சதங்கையை அணிந்தாள்.

அகக் கூத்து ஆடத் தொடங்கினாள். பாடியவாறு ஆடினாள், ஆடியவாறு பாடினாள். மாயவன் ஆடும் அல்லி ஆடினாள். முக்கண்ணன் ஆடும் பாண்டரங்கமாடினாள், நெடியோன் ஆடும் துடியாடினாள். திருமகள் ஆடும் பாவைக் கூத்தாடினாள். ஆட்டத்துக்கு உறுதுணையாகக் கலீர் கலீரெனச் சதங்கை ஒலி மட்டுமே எழுந்தது. கடற்கரைப் பகுதி முழுமையும் அமைதியுடன் அவள் ஆட்டத்தை ரசித்தது. புள்ளினங்கள் உறங்கியவாறே கனவிலே அவள் கூத்தைக் கேட்டு மகிழ்ந்து மறுநாள் பொழுது விடியும்போதே உற்சாகமாகச் செல்ல வழி கோலின. வெண்திரை தன் கரங் கொட்டி ஆர்ப்பரித்தது.

அருண்மொழிக்கு அத்தீவில் இருப்பது போன்ற உணர்வே இல்லை. இன்பவல்லி தேவ கன்னிகையாகவும் தான் தேவராஜனாகவும் ஒரு கணம் மாறிவிட்டது போன்று உணர்ந்தார். அவள் இப்போது பாவைக் கூத்தாடத் தொடங்கினாள். அவளுக்கு முதற் கை கொடுக்க இப்போது அருண்மொழி முன் வந்தார். முதல் நாள் கண்ட ஆட்டத்தை நொடியில் கற்றுக் கொண்ட அவர் ஆடுவதைக் கண்டு அவள் அதிசயித்தாள்.

முதற் கை கொடுக்க அவள் கரத்தை அவர் பிடித்த போது அவள் உடல் சிலிர்த்தது.

அவள் கை விரல்களுடன் அவரது விரல்கள் பிணைந்த போது அவளது உடல் சிலிர்த்தது.

இன்பவல்லி பாத்திரம், வீரமாதேவி ஏற்றிருந்தாள். கலைக்கூடத் தலைவி அருண்மொழியாக நடித்தாள்.

அவள் கம்பீரமாக வரும்போது இராசராசன் மெய் சிலிர்த்தது.

இராசராசனும், இராசேந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆயிரமாயிரம் செய்திகளை அவர்களுடைய விழிகள் பரிமாறிக் கொண்டன.

மீண்டும் கட்டியங்காரர் தன் குரலில் கூறினான்:

"நமது மதிப்புமிகு சக்கரவர்த்தியின் தந்தையார் இராசகேசரி இராசராச சோழ தேவர் தம் இளவயதில் முல்லைத் தீவில் இன்பவல்லியைச் சந்தித்த கதையை இதுவரையில் கண்டீர்கள். இராசகேசரி இராசராச சோழ தேவர் பாத்திரத்தை ஏற்று நடிக்க வல்லவர் யார் இருக்கிறார்கள்? முல்லைத் தீவு சம்பவத்தை முற்றிலும் ரசித்துணர்ந்தவர்களால்தான் முடியும். பாத்திரமாக மாறுபவர்களின் முகபாவம், அபிநயம்தான் முக்கியம். அதற்குத் தகுதியானவர் இதோ அருண்மொழியாக வருகிறார்!"

கலைக்கூடத் தலைவி இன்பவல்லியின் மகள் என்பதை இராசேந்திரன் அறியவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு பூங்கொடி என்ற பெயரில் தஞ்சை மாளிகையில் பணிப் பெண்ணாக இருந்த போது அவள் மீது இளம் வயதில் மதுராந்தகனாக விளங்கிய இராசேந்திரன் அவள் நாட்டியத் திறமையில் மோகங்கொண்டதும் சிறிது சிறிதாக அவளிடம் தன் மனதைப் பறிகொடுக்க முயன்றதும், அதை அறிந்த இளைய பிராட்டி குந்தவ்வை தேவியார் இன்பவல்லியின் மகள் பூங்கொடி என்பதறிந்து திடுக்கிட்டாள். அருண்மொழியின் மூலம் இன்பவல்லிக்குப் பிறந்த பூங்கொடியை மதுரன் காதலிப்பதா? சகோதரியைக் காதலிப்பதா! ஐயோ என்ன கொடுமை?

இளைய பிராட்டி மிக மன வேதனையுடனே பூங்கொடியை மதுரனிடமிருந்து பிரித்தாள். இன்பவல்லியையும் அருண்மொழியுடன் சேராமல் செய்தாள். எல்லாம் சோழ நாட்டு நன்மைக்குத்தான் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். எவ்வளவு பெரிய அபாயத்திலிருந்து மதுரனை மீட்டாள்! இராசராசன் இதை அறிந்தபோது திடுக்கிட்டார். சோழர் குலத்துக்கு ஏற்பட இருந்த பெரும் அவமானத்திலிருந்து காப்



பாற்றியதற்காக இளைய பிராட்டிக்கு ஓராயிரம் நன்றி தெரிவித்தார்.

இன்பவல்லியைத் தன்னிடமிருந்து பிரித்ததற்காக இளைய பிராட்டியிடம் இராசராசனுக்கு வருத்தம் இருந்தாலும், இன்பவல்லி தன் வாழ்நாளில் இறுதிக் காலம் வரையில் காவியப் பணியில் ஈடுபட்டிருக்க வழி செய்தார். அவள் பெற்றெடுத்த அழகிய பெண்தான், பூங்கொடி. சோழப் பேரரசருக்குப் பிறந்தவள் என்ற செய்தி வெளி உலகத்துக்குத் தெரியாதவாறு பார்த்துக் கொண்ட இளைய பிராட்டியின் திறமையைக் கண்டு அவர் வியப்படைந்தார்.

அருண் மொழியாகவும் - இன்பவல்லியாகவும், பூங்கொடியும், வீரமாதேவியும் வேடம் பூண்டு இராசராச விஜயம் நாடகத்தை நடித்தபோது இராசராசனுக்கு மன நிறைவு ஏற்பட்டது.

முல்லைத் தீவிலிருந்து அருண்மொழி சோழ நாடு திரும்புகிறார். அதற்கு முன்பு இன்பவல்லியைச் சந்திக்கிறார். இந்த நிகழ்ச்சி நடந்து பல ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. அவர் மனதில் அந்த நிகழ்ச்சி பசுமையாக இருக்கிறது. அவருடைய சோர்வு எல்லாம் பறந்தோடியது போன்ற உணர்வு.

அதற்கு மேல் அவரால் அங்கு இருக்க முடியவில்லை. சில்லென்ற காற்று அவர் உடலில் மெல்லிய நடுக்கத்தை ஏற்படுத்தியது. இதயப் படபடப்பு அதிகமாகியது. அவர் இராசேந்திரனை மிக அருகே அழைத்தார். நாட்டிய நிகழ்ச்சியை உடனே நிறுத்துமாறு சொன்னார்.

"இந்த நாடகத்தை நான் எதற்காக இன்று நடத்தச் சொன்னேன் என்று நீ கேட்கவில்லையே?" என்று தன் மகனை நோக்கிக் கேட்டார்.

மிகப் பணிவான குரலில், "நான் எப்படிக் கேட்க முடியும் தந்தை அவர்களே! இராசராச விஜயம் நாடகத்தைத் தாங்கள் காண விரும்பும்போது, எதற்கு, ஏன் என்று நான் கேட்பது மரியாதையா? ஆனால் ஒரே ஒரு சந்தேகம். முல்லைத் தீவிற்குத் தாங்கள் சென்றதும், இன்பவல்லியைச் சந்தித்ததும் இராசராச விஜய நாடகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பது எனக்குத் தெரியவில்லை. இன்று பழைய சம்பவங்களை நடத்திக் காட்டச் சொன்னதற்கு என்ன காரணம் என்பதுதான் எனக்குத் தெரிய

வில்லை. அதற்காகத்தான் காட்டுப் பகுதியிலிருந்து வீரமாதேவியையும் தலைவியாக விளங்கும் கலைச் செல்வியையும் உடனே அழைத்து வருமாறு கூறினீர்கள் என்பதை நான் இப்போதே புரிந்து கொண்டேன். முல்லைத் தீவு சம்பவங்கள் முழுமையும் அவர்கள் எப்படி அறிந்திருந்தார்கள் என்பதுதான் எனக்கும் புரியவில்லை" என்றார் இராசேந்திரன்.





"என் அன்புள்ள இராசேந்திரா! என் மனதில் இது வரை புதைந்துள்ளவற்றை வெளிப்படுத்தவேண்டிய கால கட்டம் வந்துவிட்டது. அதை விவரிக்கவே நான் அவர்களை வருமாறு கூறினேன். பூங்கொடி உன் சகோதரி என்பதைப் புரிந்து கொண்டிருப்பாய். மிகவும் கட்டுப்பாடாக இதுவரை நடந்து கொண்டிருக்கும் கலைக்கூடத் தலைவியாகத் தியாக மங்கையாகக் கழித்து வரும் அவள்தான் நாட்டியக் கலையில் திறமை உடையவர்களை உருவாக்கி வரும் பணியைச் செய்து வருகிறாள். தஞ்சைக் கோயிலிலும் மற்றும் சோழ நாட்டுக் கோயில் ஒவ்வொன்றிலும் கலையை வளர்க்கும் பெண்களை உருவாக்கி வருகிறாள். தன்னைப் போன்று பதி இல்லாத பெருமகள்களாக அந்தப் பெண்களை உருவாக்கி வரும் சிறந்த கலைப் பணியாற்றி வருகிறாள்.

"வருங்காலத்தில் நீ செய்ய வேண்டிய மகத்தான பணியை விளக்கவே இராசராச விஜயம் நிகழ்ச்சி. இன்றே, இன்று இரவே, நான் உன்னிடம் என் மனதில் உள்ளவற்றைச் சொல்லிவிட வேண்டும்" என்றார்.

"சக்கரவர்த்திகளே! இன்றே, இந்த இரவிலா? தங்கள் உடல் நிலை இடம் கொடுக்குமா?" இராசேந்திரன் கவலையுடன் கேட்டார்.

"ஆம்... ஒருநாள்கூடத் தாங்க முடியாது" என்றார் இராசராசன் கண்டிப்பு நிறைந்த குரலில்.

அன்று இரவு அவர் கூறியவை, இராசேந்திரனுக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபுறம் மகிழ்ச்சியையும் அளித்தது. தந்தையின் திருவடிகளைத் தொட்டு வணங்கினார்.

இராசராச சோழர் சயனித்திருக்கும் அந்த அறை மிகவும் விசாலமானது. அதை ஒரு சித்திர விசித்திரமான கூடம் என்றே சொல்வார்கள். அந்தக் கூடத்துச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவறையின் திருச்சுற்றில் வண்ண ஓவியங்கள் வரைந்த அதே ஓவியர்தான் தன் மாணாக்கருடன் ஓவியங்களை வரைந்து அந்த அறையின் எழிலை மேலும் கூட்டியிருந்தார்.

திருவலஞ்சுழிக் கோயிலிலிருக்கும் சாளரம் போன்று பெரிய சாளரங்கள் வெளிச்சத்தை அளவோடு அளித்துக்

கொண்டிருந்தன. காலதர் வழியே நந்தவனத்து நறுமணத்தைச் சுமந்து காற்று வீசிக் கொண்டிருந்தது. அன்று சாளரத்தை திரைச்சீலைகள் மூடி மறைத்தன. காற்று அளவோடு வருவதற்குக் காலதர்கள் பல மூடப்பட்டன. அவ்வப்போது மூச்சுத் திணறும் அரசருக்குச் சிகிச்சை செய்ய அரச வைத்தியர் கூடத்திற்கு வெளியே ஆயத்தமாக இருந்தார்.

வெண் சாமரம் வீசும் பணிப்பெண்கள்கூட அங்கே அனுமதிக்கப்படவில்லை. இராசேந்திரன் உடன் பிறந்தவர்களான இராசராசன் புதல்வியரும் அங்கே முறை போட்டுக் கொண்டு அரசர் அருகே இருந்தனர். ராஜமாதா கவலையே உருவாக மஞ்சத்தில் அமர்ந்திருந்தார்.

இராசராச விஜயம் நாடகத்தை முற்றிலும் அரசர் பார்க்கவில்லை. அவர் குறிப்பறிந்து நாட்டிய நாடகம் நிறுத்தப்பட்டது. பக்கவாத்தியக்காரர்கள் வணங்கி விடை பெற்றுச் சென்றனர்.

பூங்கொடியும் வீரமாதேவியும் தங்கள் வேடத்தைக் கலைக்காமல், அரசர் எதிரே மிக்க மரியாதையுடன் நின்று கொண்டிருந்தனர். கைத்தாங்கலாக இருவர் பிடித்துக் கொள்ள அரசர், சயன மண்டபத்திற்குச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து இராசேந்திரனும், பூங்கொடியும், வீரமாதேவியும் மெல்ல நடந்தனர்.

இராசராசர், இராசேந்திரனையும், வீரமாதேவியையும், பூங்கொடியையும் அருகே அழைத்தார்.

நடுச்சாமம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஓய்வின்றி அரசர் இவ்வேளையிலும் பேச முற்படுகிறாரே என்று மாளிகை நாயகம் கவலைப்பட்டார்.

மெல்லிய குரலில் மாளிகைப் பணியாட்கள் பேசிக் கொண்டனர். 'இனி பயமில்லை என்றே மருத்துவர் சொல்கிறார்' என்ற செய்தி மெல்ல மெல்லப் பரவியது.

திருவாய்க் கேள்வி மிகவும் மரியாதையுடன் மன்னர் அருகே நின்று கொண்டிருந்தார்.

இராசேந்திரன் தந்தை அருகே வந்தார்.

நடுநிசியைத் தாண்டிவிட்டது என்றும், சக்கரவர்த்திகள் இப்போது ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லதென்றும் மருத்துவர் கண்டிப்பாகக் கூறுவதாகவும்,



காலையில் சந்திக்கலாம் என்றும் இராசேந்திரன் தந்தையிடம் மெல்லக் கூறினார்.

அவரால் மிகவும் மெல்லிய குரலில்தான் பேச முடிந்தது என்பதால், இராசராசர் தலையசைத்து மறுத்தார். "இராசேந்திரா! ஒரு நொடிகூட என்னால் இனி காத்திருக்க முடியாது. என் அருகே வா!" என்று அழைத்தார்.

இராசேந்திரன் அவர் அருகே சென்று குனிந்து பய பக்தியுடன் நின்றார். அவர் அருகே வீரமாதேவியும் சென்று வணங்கி நின்றாள். பேரரசரை மிக அருகே அவள் காண்கிறாள். சில நாள்களுக்கு முன்பு, இவ்வளவு நெருக்கமாக இல்லாவிடினும் சற்றுத் தொலைவில் பார்த்திருக்கிறாள்.

ஆகா; அந்தப் பொன்னிற மேனி, சுருங்கிய மாங்கனியைப்போல் ஆகிவிட்டதே!

அவர்கள் செவிக்கு மட்டுமே கேட்கும் வகையில் இராசராசர் மெல்லப் பேசினார்.

அவர் கூறியவை கேட்ட இராசேந்திரன் மெய் சிலிர்த்தது. விழிகளில் நீர் ததும்பியது. உணர்ச்சி மிகுதியால் அவர் உடல் மெல்ல நடுங்கியது.

"தந்தையே!" எனக் கூறி அவர் காலடியில் வீழ்ந்தார். வீரமாதேவியும் வணங்கினாள்.

**வீ**ரமாதேவியும், இராசேந்திர சோழரும் அன்று நடுச்சாமத்திற்குப் பிறகு தம் மாளிகையில தங்குவதற்குச் சென்றனர். பின்னிரவு நேரத்தில் அவர்களுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. சக்கரவர்த்தியின் சொற்கள் அவர்கள் இதயத்தில் ஒலித்தவாறு இருந்தன.

"சக்கரவர்த்தியின் அருகிலேயே இன்னும் சிறிது நேரம் இருக்கமாட்டோமா என்று தோன்றுகிறது" என்றாள், வீரமாதேவி. இரவு நடைபெற்ற நாட்டிய நாடகத்தில் அவள் ஒன்றிவிட்டாள். இராசராச சோழரின் மனங்கவர்ந்த இன்பவல்லியாகத் தான், நடிக்க வாய்ப்புக் கிடைத்ததற்காக அவள் இறைவனுக்கு நன்றி தெரிவித்தாள்.

"இறைவனுக்கு நன்றி கூறுவதைவிட, பூங்கொடிக்குத்தான் நீ நன்றி தெரிவிக்க வேண்டும்!" என்றார் இராசேந்திரன்.

"பூங்கொடிக்கா, ஏன்? சக்கரவர்த்தியாக வேடம் பூண்டதற்காகவா?"

"அதற்காகவும் - அத்துடன் முல்லைத் தீவில் நடைபெற்ற சம்பவத்தை விவரித்ததற்காகவும் - இன்பவல்லியைப் பற்றிய வரலாற்றை விவரித்ததற்காகவும் நீ நன்றி தெரிவிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு, இராசேந்திரன் சொன்னார்:

"வீரமாதேவி! இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியாரில்லாவிட்டால் நானில்லை. ஏற்படவிருந்த பெரும் ஆபத்திலிருந்து அவர்கள் என்னைக் காப்பாற்றினார், தெரியுமா?"

"ஆகா; நன்றாகத் தெரியும். வரவிருந்த பெரும் ஆபத்து என்பதைவிட அவமானத்திலிருந்து என்று சொல்லுங்கள். நடந்த கதை எல்லாம் எனக்குத் தெரியும். இன்பவல்லியின் மகள் பூங்கொடி. இந்த நாட்டை ஆள ஒரு பெண்ணுக்கு உரிமை உண்டென்றால் பூங்கொடிதான் சோழ அரியணையில் அமர்ந்திருக்க வேண்டும். அவள் உரிமை பெற்றுவிடப் போகிறாளென்று இளைய பிராட்டி தடுத்துவிட்டார். நாட்டைவிட்டே வெளியேறி விடுமாறு இன்பவல்லியிடம் சத்தியம் பெற்றாள். அது நியாயமான செயலா சொல்லுங்கள். பிறகு இன்பவல்லியின் வயிற்றில் பிறந்த பூங்கொடி மீது தாங்கள் அறியாது காதல் கொண்டதைத் தடுத்து அவளைக் கண்காணாமல் செல்லுமாறு செய்தாள்.

இளைய பிராட்டிக்கு அளித்த வாக்குறுதியை இன்பவல்லி நிறைவேற்றினாள். அவள் அழகிய குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாயும் சேயும் எந்தவிதக் குறையுமின்றி அந்த சின்னஞ்சிறு கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். அந்தக் கிராம மக்கள் நகரத்தைக் கண்டறியாதவர்கள். பூங்கொடியையும், இன்பவல்லியையும் கிராம மக்கள் மிகவும் மதித்தார்கள். இன்பவல்லியின் இனிய குரல் அவர்களைக் கவர்ந்தது. தேவாரத் திருப்பதிகங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தாள். வேல் ஒன்றை நட்டு அதை வழிபடும்படிச் சொன்னாள்.

'குமரன் வரக் கூவுவாய் குயிலே' என்ற பாடலைப் பாடி, அந்தப் பாடலை அனைவரும் பாடுமாறு கற்றுக் கொடுத்தாள்.



பல தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் குந்தவ்வை அந்தக் கிராமத்திற்கு வந்தாள். அவள் திடீரென்று வந்தாள். அப்போது இன்பவல்லி இனிய குரலில் இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தாள். முல்லைத் தீவில் நடைபெற்ற சம்பவங்கள் குந்தவ்வைக்குத் தெரியும். இந்தப் பாடல் மூலம்தான் அருண்மொழி இன்பவல்லியிடம் மிகவும் ஈடுபாடு கொண்டார் என்பதையும் அறிவாள்.

இன்பவல்லியிடம், இளையபிராட்டி மீண்டும் வேண்டிக் கொண்டாள். 'உன் மனதில்கூட என் இளவலின் நினைவு எழக்கூடாது. இந்தப் பாடலைப் பாடக் கூடாது' என்று அன்பாகவும் எச்சரிக்கையாகவும் கூறினாள். இதுவரையில் இளையபிராட்டியிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த இன்பவல்லி இப்பொழுது பெண்புலியெனச் சீறினாள்.

"தங்கள் இளவலுக்கும் சோழ நாட்டிற்கும் எந்தவிதத் தொல்லையும் ஏற்படாது என்று நான் உறுதிமொழி கொடுத்திருந்தேன் என்பது உண்மைதான். ஆனால், ஒரு பெண்ணின் நெஞ்சில் குடிகொண்டிருக்கும் அவள் தெய்வத்தை அகற்றிவிடு, அழித்துவிடு என்று கூறுவதும் ஒரு பெண் என்றால் அதை உலகம் பொறுத்துக் கொள்ளாது. நான் இந்தக் கானகச் சூழலிலிருந்து விடுபடுவேன். நந்திபுரத்துக்கு வருவேன். நந்திபுரத்து நாயகியான தங்கள் மாளிகை வாயிலில் நின்று பெரிதாக ஒலிக்கப் பாடுவேன்..."

இன்பவல்லியின் விழிகளில் கனல் வீசுவதைக் கண்ட இளைய பிராட்டி நடுநடுங்கிவிட்டாள். விரைந்து தன் கரத்தால் அவள் வாயைப் பொத்தி, அவளை அணைத்துக் கொண்டு, "இன்பவல்லி! உணர்ச்சி வசப்படாதே. ஒரு பெண்ணுக்குப் பெண் தீங்கிழைத்தாள் என்ற அவப் பெயர் வரலாற்றில் நிலைத்துவிடக்கூடாது. சோழ நாட்டின் நலனுக்காகவே, நான் உன் சொந்த வாழ்க்கையில் குறுக்கிட்டேன். இப்போது உன்னிடம் கேட்பதுகூட அதற்காகத்தான். ஒருவர் உருவம் மற்றவர் மனத்தில் அழியாது பதிந்து இருப்பதை மாற்ற முடியாது என்பதும் எனக்குத் தெரியும். இந்தச் சின்னஞ்சிறு ஊர் மக்களை நீ மாற்றிவிட்டதை அறிந்தேன். நீ கற்றறிந்த நடனக்கலை வீணாகப் போய்விடக்கூடாது. இங்கு ஒரு நடனப்பயிற்சிச் சாலையை ஏற்படுத்தி, உனக்கு வேண்டிய உதவி செய்

கிறேன். கலையில் பெண்களுக்குத் தேர்ச்சி ஏற்படுமாறு நீ செய்ய வேண்டும். என் இளவல் ஒரு திட்டத்தை மனத்தில் கொண்டுள்ளான். ஒவ்வொரு கோயிலிலும் இறைவன் திருமுன்பு இறைவன் புகழைப் பாடி நாள்தோறும் நடனமிட வேண்டும் என்று கலைஞர்களை வளர்க்க, ஊக்குவிக்க ஏற்ற நல்ல திட்டம். அதற்கு வடக்கே காளத்தி நகரத்திலிருந்து ஆடற்கலையில் சிறந்தவர்களை இங்கே அழைத்துவரப் போகிறானாம். நீ இந்தக் கிராமத்திலிருக்கும் இளம் பெண்களுக்கு நாட்டியம் கற்றுத் தந்து அவர்களை நடனக் கலையில் பயிற்றுவித்து சிறப்படையுமாறு செய்!

இன்பவல்லியின் கண்கள் கலங்கின. இளைய பிராட்டியின் பாதங்களைத் தொட்டு வணங்கி அவ்வாறே செய்வதாக வாக்களித்தாள்.

சில திங்கள் சென்றன. அங்கேயே தங்கி நடனம் பயில ஒரு பள்ளி உருவாகியது. பூங்கொடியும் தாயிடம் நடனம் கற்றாள். அவளுடைய நடனத்தில் இளைஞனாயிருந்த மதுராந்தகன் மயங்கினான். பூங்கொடி தங்கை என்பதறியாது காதல் கொண்ட மதுராந்தகனை இளைய பிராட்டி தடுத்தாள். மீண்டும் சோழ நாட்டின் நலனுக்காகவும் சோழ அரசர்குல நலனுக்காகவும் இளைய பிராட்டி இளம் காதலைத் தடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவை பழைய கதை. இன்பவல்லி இறந்த பிறகு தாயின் பணியை, பூங்கொடி தொடர்ந்தாள். இறைவனுக்குத் தன்னையும் நாட்டியக் கலையையும் அர்ப்பணித்துக் கொண்டாள். உணவும் உறைவிடமும் பெற்று நாட்டின் பல பகுதிகளிலிருந்து இளம் பெண்கள் நாட்டியம் பயில வந்தனர். அங்கே தங்கி நாட்டியக் கலையை முறையாகப் பயின்றனர். கன்னிமாடமாகத் திகழும் அந்த இடத்திற்கு வீரமாதேவியும் வந்து சேர்ந்தாள்.

வீரமாதேவி எல்லாச் செய்திகளையும் அறிந்திருந்தாள். தன் காதலையும் இளைய பிராட்டி தடை செய்து விடுவாள் என்றும் பயந்திருந்தாள். அந்த நிலை மாறி, தன்னை இராசேந்திரன் மணம்புரிந்து கொண்ட பிறகு, தானே ஓர் உறுதியான முடிவுக்கு வந்தாள். தன்னால் சோழர் குலத்தில் எந்தக் காலத்திலும் வாரிசு உரிமைக்காகப் போட்டியும், சச்சரவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்



காக மகத்தான தியாகம் செய்ய முன்வந்தாள். தன்மீது இராசேந்திரனுக்கு ஏற்பட்டுள்ள அழிக்க முடியா காதலை உடல் மீதில்லாமல் கலைமீது ஏற்படுமாறு செய்தாள். உலகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக வாழ்வேன் என்று மனதில் சபதம் செய்த வீரமாதேவி அதை உறுதியாகக் கடைப்பிடித்து வந்தாள். எளிய குடியில் பிறந்த தன்னை மற்றவர்கள் ஏளனமாகப் பார்க்கிறார்கள் என்பதையும் வீரமாதேவி அறிவாள். இராசேந்திரனின் கனவுக்கு மகத்தான இலட்சியத்திற்குத் தான் உறுதுணையாக இருக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருந்தபோது, மாமன்னர் இராசராசன் தன் மகனுடைய விருப்பத்திற்கு மாறாக எண்ணுகிறார் என்ற செய்தி வருத்தத்தை அளித்தது.

ஆனால் அன்று அவர் நடுநிசியில் கூறிய வார்த்தைகள், வழங்கிய ஆசிகள் எதிர்பாராதவை.

இராசேந்திரனும், வீரமாதேவியும் விடியும் வரையில் இராசராச சோழ தேவர் கூறியவற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். விடிவெள்ளி முளைக்கும் நேரத்திற்குச் சற்று முன்பு தங்களை அறியாமல் கண்ணயர்ந்தார்கள். திடீரென ஒரு கனவு. மகிழ்ச்சியாகவும் இருந்தது. பெரும் அதிர்ச்சியையும் அளித்தது.

இராசேந்திரனும், வீரமாதேவியும் ஒருவருக்கொருவர் தாங்கள் கண்ட கனவை விவரித்துக் கொண்டிருந்தபோது மாளிகைக் காவல் தலைவர் பரபரப்புடன் அழைப்பது கேட்டது.





## 52. ஒரு சகாப்தம் முடிந்தது

இராசேந்திரனும், வீரமாதேவியும் தாங்கள் கண்ட கனவினை ஒருவருக்கொருவர் விவரித்துப் பேசிக் கொண்டனர். இருள் விலகா வேளை.

"நம் இருவர் கனவிலும் என் தந்தையார் வந்தார் என்றால் அவருடைய ஆசி நமக்கு இருக்கிறது என்று தானே பொருள்?" என்று கூறிக்கொண்டே இராசேந்திரன் வீரமாதேவியை மெல்ல நெருங்கி மெல்ல அணைக்க முயன்றார். அந்த இளங்குளிர் வேளையில் அவளுடைய நெருக்கம் அவருக்குத் தேவையாக இருந்தது.

விழிகளில் கோபமும், இதழ்களில் குறும்புப் புன்னகையும் கொண்டு, வீரம்மாள் இராசேந்திரன் கரத்தை விலக்கி, "நம் இருவர் உள்ளத்திலும் மகிழ்ச்சி நிறைந்திருக்கிறது. இருவரிடையே உள்ள பாசப்பிணைப்பு வலுப்பெற்றுவிட்டது. காற்றும் நுழையமுடியா நெருக்கம் அதிகரித்துவிட்டது.

"சோழ நாட்டுச் சக்கரவர்த்தியான பிறகு தங்கள் பரிவும் பாசமும் மேலும் அதிகமாகிவிட்டன என்பது உறுதி. சோழ அரச குடும்பத்துள் ஒருவராக என்னைப் பேரரசர் ஏற்றுக் கொண்டு விட்டார் என்பதும் நேற்று இரவு நடந்த நிகழ்ச்சி தெளிவாக்கிவிட்டது. அரச குடும்பத்து நிகழ்ச்சிகளை விவரிக்கும் நாட்டிய நாடகத்தில் என்னைப்



பங்கேற்க அழைத்ததன் மூலம் என் நிலையை உயர்த்தி உறுதிப்படுத்திவிட்டீர்கள்.

"தங்கள் தந்தை எனக்கு ஆசி வழங்கி விட்டார். அதுமட்டுமா? இரவு கனவில் வந்தார். எனக்குப் பல அறிவுரைகளை வழங்கினார். கனவு போலவே தோன்ற வில்லை. என் அன்புக்கரசரே! அவர் கூறிய அறிவுரைகளில் முக்கியமானது: தங்கள் சொற்படி நடப்பதும் ஒன்றாகும். என்னைப் பற்றி முழுமையாக அவர் தெரிந்திருக்கவில்லை என்றே நினைக்கிறேன். நான் தங்கள் விருப்பம் அறிந்து, சொல்லைத் தட்டாமல் நடப்பேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

வீரமாதேவி கூறிவரும்போது, இராசேந்திரன் குறுக்கிட்டார். விழிகளிலும் இதழ்களிலும் குறும்புப் புன்னகையுடன், "பொய்... என்று அவருக்குத் தெரிந்திருப்பதால் தான் அவர் அந்த அறிவுரையைக் கூறினார்?" என்றார்.

வீரமாதேவி ஒருகணம் திடுக்கிட்டாள். பொய்க் கோபத்துடன் அவர் மார்பிலே சித்திரம் வரைவதுபோல் தன் நுனி விரலைத் தவழவிட்டு, "பொய்யா? என்ன சொல்கிறீர்கள்? தங்கள் சொல்லை எப்போது தட்டியிருக்கிறேன்?" என்று கேட்டாள். தொடர்ந்து....

"தாங்கள் கூறுவதை மீறி ஒரு வார்த்தை பேசியிருக்கிறேனா? முதன் முறையாக என்னைச் சிதம்பரத்தில் சந்தித்தீர்கள். நாட்டியம் பயிலுமாறு கட்டளையிட்டீர்கள். பிறகு என் நாட்டியத்தில் மயங்கினீர்கள். தங்கள் விருப்பப்படி தங்கள் எதிரே நான் ஆடினேன். பிறகு என்னை மணக்க விரும்பினீர்கள். தங்கள் தந்தை மற்றும் அரச குடும்பத்தார், குறிப்பாக இளவரசிகளின் விருப்பத்துக்கு மாறாக என்னைத் தாங்கள் ஏற்றபோது கிராமத்திலிருந்து என்னைப் பழையாறையில் குடியேற்றினீர்கள். பிறகு தஞ்சை மாளிகைக்கு வரச் செய்தீர்கள். அங்கே தங்களுடைய மற்ற மனைவியரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானேன். என்னை ஓர் இளவரசி என்பதை மறந்து அவர்கள் எதிரே ஆடச் செய்தனர். பொறுத்துக் கொள்ளுமாறு சொன்னீர்கள். எதிர்த்தேனா? தங்கள் தமக்கையாரின் அச்சமும் மற்றவர்களின் பயமும் எனக்குப் புரிந்தது. காட்டுப்பகுதிக்குச் சென்று கலைப் பணி புரியுமாறு கட்டளையிட்டீர்கள். ஏன் என்று கேட்டேனா? தங்களுக்கு மகுடாபிஷேகம் நடைபெற்ற

செய்தி எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. நான் மனம் வருந்தினேனா? ஒரே ஒருமுறை நான் அதுபற்றிக் கேட்டேன். தங்கள் மௌனத்தை ஏன் என்று வினவவில்லை. ஏன், எதற்கு என்று இதுவரையில் கேட்டேனில்லை!" சொல்லி வரும்போதே வீரம்மாளின் விழிகள் கலங்கின. குரல் தழுதழுத்தது.

இராசேந்திரன் திகைத்தார். அவள் விழிநீரைத் துடைத்து, "சீச்சீ... என்ன சொல்லிவிட்டேன் என்று துயரப்படுகிறாய். விளையாட்டுக்காகக் கூறினேன். பொழுதைச் சற்று இன்பமாகக் கழிப்போம் என்று எண்ணி நான் கேட்டதைக் கொடுக்காதது, சொன்னதைச் செய்யாதது - இது ஒன்றுதான்" என்று, தன் மிக அருகே மார்பில் முகம் புதைத்திருந்த அவளை இறுக அணைத்து, தன் முகத்தை அவள் முகத்தோடு அழுத்தி ஆலிங்கன சுகத்தைத் தொடர விரும்பி இமைப் பொழுதில் அவளைக் குழந்தைபோல் தூக்கி மஞ்சத்தில் கிடத்த முயன்றபோது, அந்த மாவீரன் பலத்துக்கு ஈடாக - ஏன் அதற்கும் மேலாகத் தன் பெண்மைச் சக்தியைப் பயன்படுத்தி, அவரை மஞ்சத்தில் வீழ்த்தி, அவரிடமிருந்து விலகி, துள்ளி ஓடி 'வென்று விட்டேன்' என்று விழிகள் வெற்றிப் பெருமிதம் பொங்க அறை வாயில் அருகே சென்று நின்று, கலைந்த தன் ஆடையைச் சரி செய்து கொண்டாள். அவள் மேனி முழுமையும் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. விழிகளில் வெற்றிப் பெருமிதமா? அச்சமா?

சோழ நாட்டுச் சக்கரவர்த்தி, வீரமாமல்லன், இளையோர் திலகம், போர்க்களத்தே பகைவர்களுக்கு அரிமா, இங்கே சயன அறையில், மஞ்சத்தில் தடுமாறி வீழ்ந்த நிலையில் இரு கரங்களையும் ஊன்றி வீரம்மாளைத் திகைப்புடன் நோக்கினார்.

'இவருக்கு இவ்வளவு காமமா? வாக்குறுதியைக் காமம் மீறிவிடுமோ - அடிபட்ட வேங்கையைப்போல் மீண்டும் தன் தாபம் தணிக்கப் பாய்ந்து வருவாரோ?' என்று வீரமாதேவி அச்சத்துடன் நிற்க, சோழ நாட்டுச் சக்கரவர்த்தி பரகேசரி இராசேந்திர சோழ தேவர் ஏமாற்றத்தை மறைக்கும் அசட்டுச் சிரிப்புடன், "வீரம்மா! உன் உடல் வலிமையை இன்றே அறிந்தேன். பெண்களைப் பூவையர், மலர் மேனியர் என்றெல்லாம் வர்ணிப்பது பொய். என் சொற்படி நீ நடப்பதில்லை, என் கோரிக்



கையை ஏற்பதில்லை என்பதை உணர்த்தவே நான் உன்னை ஒரு கண நேரத்தில் வருத்திவிட்டேன்" என்று கூறி, மஞ்சத்திலிருந்து மெல்ல எழ முயன்றார்.

வீரமாதேவி விரைந்து வந்து எழ முடியாமல் தவித்துக் கொண்டிருந்த அவர் திருக்கரத்தைப் பற்றி மெல்ல தூக்கி, பிறகு சரிந்து அவர் பாதத்தில் தன் முகம் பதித்தாள். விழிகளிலிருந்துச் சிந்திய நீர் பாதத்தை முத்தாக உதிர்ந்து நனைத்தது.

"அரசர்க்கரசே! என் வலிமையைப் புலப்படுத்த வேண்டும் என்பது என் நோக்கமன்று. பெண்ணொருத்தி தன் கணவனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கடமை உள்ளவள் என்பது உண்மைதான். ஆனால் அரசே, அதே சமயம் தன் கணவரின் உறுதிக்குப் பங்கம் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியவளாகிறாள். நாம் இருவரும் செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன? கொடுத்த வாக்குறுதி என்ன? சக்கரவர்த்திகளே! நேற்று முதல் தாங்கள் என்னைப் பார்க்கும் பார்வையை நான் அறிவேன். தங்கள் விழிகளில் தேங்கி நிற்கும் பசியை நான் உணர்வேன். சோழ நாட்டில் தங்களுக்குப் பிறகு அடுத்த வாரிசுரிமையை முன்பே நிலை நாட்டிவிட்ட தங்களுக்கு வருங்காலத்தில் என் மூலம் தொல்லை தருவதற்கு நான் ஒரு கருவியாகலாமா? நல்ல நாளான இன்று நல்லோரையில், ஓர் வாரிசு உருவாகக் கூடிய சூழ்நிலையை நான் ஏற்படுத்தலாமா? என்னைப் பொறுத் தருளுங்கள், அல்லது தங்களைவிட்டுப் பிரிந்து ஏழ் கடலுக்கு அப்பால் வாழுமாறு அனுப்பி விடுங்கள். விரத பங்கம் ஏற்படுமாறு மட்டும் செய்து விடாதீர்கள்.

"நேற்று மாமன்னர் இட்ட கட்டளை என்ன? அவர் நமக்கு அளித்த அறிவுரை என்ன? நாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு அவர் முழுமனதுடன் அளித்த வாழ்த்துகளை மறந்துவிட்டீர்களா?

"என் தலைவரே! நாம் இருவருமே ஒன்று போல விடிகாலையில் கனவு கண்டோம். அது கனவா? இல்லை இல்லை. முன்னிரவில் பேரரசர் கூறிய நல்லுரைகளின் எதிரொலி.

"எவ்வளவு ஆசைகளைப் பேரரசர் தம் மனதில் தேக்கி வைத்திருக்கிறார். தங்களுக்கு இசை, ஓவிய, நடன,

சிற்பக் கலை ஆர்வம் எப்படி ஏற்பட்டது என்று நான் எண்ணிப் பார்த்திருக்கிறேன். அவருக்கிருக்கும் ஆர்வத்தில் பாதிதான் தங்களுக்கு இருக்கிறது என்று நான் சொன்னால் தாங்கள் தவறாகக் கருதமாட்டீர்கள். கிழக்கே கடல் கடந்த நாடுகளுக்கு அவர் விஜயம் செய்து அங்கிருந்து அவர் அறிந்தவற்றை அந்த நாட்டிய நாடகத்தினின்று நான் தெரிந்து கொண்டேன்.

"ஆகா! பெரிய கோயிலைக் கட்டவேண்டும் என்று அவர் எவ்வளவு காலமாகக் கனவு கண்டிருக்கிறார். தன் ஆர்வத்தை மனதிலே பல ஆண்டுகளாகத் தேக்கி வைத்திருக்கிறார். அவை அவருடைய முதுமைக் காலத்தில் நிறைவேறின. . பகைவர்களை வென்று, அந்த நாட்டில் புலிக் கொடியைப் பறக்கவிடுவது மட்டும் அவர் இலட்சியமாயில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்.

"அவருடைய சிறப்புப் பெயர்களை வரிசைப்படுத்திப் பிறர் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அவர் வருகையை அறிவிக்கும்போது கட்டியம் கூறுபவன் விவரிக்கும் பெயர்களை விரல்விட்டு எண்ணியிருக்கிறேன். முப்பத்தேழு சிறப்புப் பெயர்கள்! ஒவ்வொரு பெயருக்கும் ஒரு காரணமிருந்தது என்பதையும் அறிந்தேன். செயங்கொண்ட சோழன், கேரளாந்தகன், சத்துரு புஜங்கன், சிங்களாந்தகன் என்ற பெயரெல்லாம் அவர் வீரத்துக்குச் சாட்சி.

"முதன் முதல் தங்களைச் சந்திக்கும்போது தங்கள் சுந்தரவடிவைக் கண்டு வியந்ததும், மோகித்ததும் உண்மை. தங்களுக்கு இவ்வளவு அழகு எப்படி வந்தது என்று நான் எண்ணியிருக்கிறேன். என்னிடம் அந்தரங்கமாகப் பேசும் மூதாட்டியை வினவியிருக்கிறேன். தங்கள் பாட்டனார் சுந்தர சோழரை நீங்கள் அப்படியே உரித்து வைத்திருப்பதாகக் கூறினார்கள். ஆனால் நான் சொல்வேன்: தந்தையின் பிரதிபிம்பமே நீங்கள். அவருக்குச் சோழகுல சுந்தரன், அழகிய சோழன் என்ற சிறப்புப் பெயர்கள் மிகவும் தகுதியானவையே.

"என் அன்பின் இருப்பிடமே! அவருக்கு உள்ள விருதுகள் - புகழ்ப் பெயர்கள் யாவும் தங்களுக்கும் பொருந்தும். பண்டித சோழன், நித்யவிநோதன் - கலையில் ஆர்வமுடைய அவருக்கும் தங்களுக்கும் தகும்.



"என்னைத் தாங்கள் மணந்தபோது, தங்களுக்கும் எனக்கும் உள்ள வயது இடைவெளியை என் தோழி சுட்டிக் காட்டியபோது, நான் அதைப் பற்றி எள்ளளவும் நினைக்கவில்லை. தங்களுடைய இதயம் கவர்ந்தவள் எனும் பெருமை என்னுள் நிறைந்தது. எனக்கு மட்டுமே தாங்கள் என்ற கர்வமும் எனக்கு இருந்தது. ஆனால் தாங்கள் முன்பே திருமணமானவர் என்றும், பட்டத்து இளவரசியாக உரிமை கொண்டாட வேறு ஒருத்தி இருக்கிறாள் என்பதையும் அறிந்து முதலில் அதிர்ச்சி அடைந்தேன். ஆனால் தங்கள் தந்தையின் வழியைத் தாங்கள் பின்பற்றியிருக்கிறீர்கள் என்பதை அறிந்து மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டேன். பத்துக்கு மேற்பட்டவர்களை மணந்திருந்ததை நாட்டிய நாடகத்தின் மூலம் தெரிந்து கொண்டேன். தாங்களும் தந்தை வழியைப் பின்பற்றியிருப்பதும் பெருமைதானே? ஆனால், தங்கள் தந்தையை உயிருக்கு உயிராகக் காதலித்த அபிமான வல்லியாகிய இன்பவல்லியை மட்டும் பேரரசர் இளவரசியாக அந்தப்புரத்தில் சேர்க்காதது எனக்கு வருத்தமே. அந்த வகையில் தங்கள் தந்தையைத் தாங்கள் பின்பற்றவில்லை என்பது எனக்குப் பெருமைதான். தங்கள் அத்தையார் இளைய பிராட்டி என் வாழ்க்கையில் குறுக்கிடவில்லை என்பது மனத்திற்கு நிம்மதியைத் தருகிறது. நான் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கவில்லை. நானே கட்டுப்பாடு செய்து தங்களுக்கு உறுதி மொழியளித்து விட்டேன்.

"தங்கள் தந்தையைப் போல் மற்றொன்றையும் தாங்கள் பின்பற்றியிருக்கலாம். அதுதான் - பேரரசருக்குத் தாங்கள் ஒரே புதல்வர். ஆனால் தங்களுக்கோ... (வீரமாதேவி மெல்லச் சிரிக்கிறாள்).

"மிகச் சிறந்த வீரராக மட்டும் அவர் விளங்கவில்லை. சிவபக்தி மிகுந்த அவர் பெரிய கோயிலைக் கட்டத் தூண்டியவர், கருவூர்த் தேவர். தங்களுக்கும் அவர்தான் ஊக்கமளித்துள்ளார்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

"தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்று மற்றொன்று எடுப்பிக்கத் தாங்கள் எண்ணம் கொண்டுள்ளீர்கள் என்பதை முதலில் தங்கள் தந்தை பேரரசர் விரும்பவில்லை என்பதை வருத்தத்துடன் தாங்கள் சொல்லியிருப்பது என் நினைவுக்கு வருகிறது. நேற்று அவர் சொல்லிவிட்டார்.

மனம் திறந்தும் பேசிவிட்டார். தங்களுடைய திட்டத்திற்கு ஆதரவு அளித்துவிட்டார்".

வீரமாதேவி பேசிவந்ததை இமைகொட்டாமலும் வியப்புடனும் இராசேந்திரன் பார்த்துக் கொண்டே இருந்தார்; கேட்டுக்கொண்டே இருந்தார்.

"வனப்பகுதியைக் கலைக் கோயிலாக்க தாங்கள் கண்ட கனவை, உடனே நனவாக்க ஆசி வழங்கிவிட்டார். தஞ்சையிலுள்ளது போல் பெரிய கோயிலை எழுப்ப எதிர்ப்பைத் தெரிவிப்பார் என நாம் பயந்திருந்தோம். ஆனால் அவருடைய வாழ்த்து நமக்குக் கிடைத்துவிட்டது. தாங்கள் நினைக்காத ஒன்றையும் அவர் தெரிவித்தாரே கவனித்தீர்களா?" என்று வீரமாதேவி கேட்டவுடன் இராசேந்திரன் வியப்புடன் அவளை நோக்கினார்.

"தாங்கள் எடுப்பிக்கும் பெரிய கோயிலில் கருவறையில் உள்ள பெரிய லிங்கத்திற்குப் பெருவுடையார் என்றே பெயர் சூட்டவேண்டும் என்று அவர் தெரிவித்தார்".

"ஆமாம்..."

"பெருவுடையாருக்கு நாள்தோறும் கங்கை நீரைக் கொண்டு திருமுழுக்கு செய்ய வேண்டும்" என்று சொன்னாரே. கவனித்தீர்களா?"

வீரமாதேவி கூறியவுடன், இராசேந்திரன் மகிழ்ச்சியுடன், "வீரமாதேவி, உன் அறிவுக் கூர்மையை நான் மெச்சுகிறேன். என் தந்தைக்குக் கங்கை நதியின்மீது பெரு மதிப்பு. கங்கையில் நீராடி வந்தவர்கள் அந்த நதியின் பெருமையை அதன் நீர்ப் பெருக்கைப் பற்றி வர்ணிப்பதை ஆவலுடன் கேட்பார். சிவபெருமான் திருச்சடையில் திகழும் பேறு பெற்ற புனித நதி என்பதால், கங்கையின் பெருமையை என்னிடம் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார். கங்கைக் கரைக்குச் சென்று புனித நீராட வேண்டும் என்ற தன் அவாவை அடிக்கடி சொல்வார். காசி எனும் புனித நகரம் கங்கைக் கரையில் இருக்கிறதாம். அங்கு நீராடிப் பின் தென் கோடியிலுள்ள இராமேச்வரத்தில் கடலில் நீராட வருபவர்களுக்கு வேண்டிய உதவிகளும், வசதிகளும் செய்து கொடுக்குமாறு கட்டளையிட்டிருப்பதையும் நான் அறிவேன்.

"என் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றுவேன். கங்கை நதியினின்று புனித நீரைக் கொண்டு வருவது



போல் கனவு கண்டேன். அதைச் சொல்ல நினைத்தேன். மிக விரைவில் காட்டுப் பகுதியைக் கலைக்கோயிலாக்குவோம். வீரமாதேவி! உன் உறுதியைக் குலைக்குமாறு நான் இனி நடந்து கொள்ள மாட்டேன். உன்னையே கங்காதேவியாக நான் மதிக்கிறேன்".

இராசேந்திரன் கூறிவரும்போது, வீரமாதேவி குறுக்கிட்டு, அவர் வாயைத் தன் கரத்தால் மூடி, "அப்படியெல்லாம் சொல்லலாமோ, என் மன்னவரே? நான் என்றும் தங்கள் பிரியமான வீரமாதேவியாகவே இருக்கிறேன். சிவபெருமான் முடிமீதிருக்கும் கங்கை எங்கே, நான் எங்கே? தங்கள் திருமுடி மீது அமர விரும்பவில்லை. தங்கள் இதயத்தில் என்றும் அழியாது வீற்றிருக்க விரும்புகிறேன்" என்று அவள் கூறும் போதுதான், அவர்கள் சயன அறை அருகே வந்து மாளிகைக் காவல் தலைவர் அழைக்கும் குரல் கேட்டது.

அவர் கூறிய செய்தி, இராசேந்திரனையும் வீரமாதேவிரையயும் திடுக்கிட வைத்தது.

கணங்கூடத் தாமதிக்காமல், இராசேந்திரன் வீரமாதேவியுடன் இராசராசசோழர் படுத்திருக்கும் இடம் நோக்கி விரைந்தார்.





## 53. நானா? வீரம்மாளா?

எல்லாம் முடிந்துவிட்டன. சோழ நாட்டைக் காத்து வந்த இராசராசன் என்ற ஆலமரம் வீழ்ந்துவிட்டது.

கண்ணீர் விட்டறியா இராசேந்திரன் சிறு குழந்தை போல் தேம்பி அழுத காட்சியைக் கண்டு கலங்காதவர் இல்லை.

"நேற்று எனக்குத் தாங்கள் துணிவு அளித்தீர்கள். ஊக்க மூட்டினீர்கள். என் இலட்சிய தீபத்தைத் தூண்டி விட்டீர்கள். ஆசி வழங்கினீர்கள்.

"கங்கை நதியின் பெருமையைச் சொன்னீர்கள். எந்தையே! என் அகவிழியைத் திறந்தீர்கள். புனித நதியாம் கங்கையின் பெருமையை அறியச் செய்தீர்கள். பூசை செய்யும் ஈசான சிவத்தின் திருமகனைச் சந்தித்து கங்கையின் சிறப்பைக் கேட்டறியப் பணித்தீர்கள்.

தங்கள் காலத்தில் கங்கையைத் தஞ்சைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஆசை நிறைவேறாமல் போனதை எடுத்துச் சொல்லி ஏக்கத்தைப் புலப்படுத்தினீர்கள். தங்களைப் போல் புகழுடைய நானும் பெரிய கோயில் கட்ட விரும்பினேன். என் எண்ணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போன்ற சூழ்நிலை இருந்ததை நான் அறிவேன். ஆனால் தாங்கள் மகா பெரிய சக்கரவர்த்தி என்ற பெருமையை நிலைநாட்டி விட்டீர்கள். என் இலட்சியம்



அறிந்தீர்கள். எனக்கு ஏற்படும் புகழ், பெருமை எல்லாம் சோழ நாட்டிற்குக் கிடைக்கும் பெருமை என்று எண்ணிய தங்கள் உயர்நோக்கம் எனக்கு வழிகாட்டி. தஞ்சைப் பெரிய கோயிலைப்போல் மற்றோர் ஆலயம் படைக்க ஆசி வழங்கினீர்கள். அதற்கான திட்டங்களைக் குறிப்பால் உணர்த்தினீர்கள். கங்கை நீரைக் கொண்டு வந்து பெருவுடையாருக்கு நித்ய அபிஷேகம் செய்ய வேண்டுமென்று தெரிவித்தீர்கள். அது எப்படி முடியும் என்று நான் திகைத்தபோது அதற்கும் யோசனை தெரிவித்தீர்கள்.

"அதுதான் தங்களுடைய கடைசி பேச்சு என்பதை நான் உணரவில்லை. ஈசன் அருளால் நான் தங்களுடைய நல் ஆசியைப் பெற்றேன். தங்கள் இறுதி மூச்சு அடங்கும் போது தங்கள் அருகே இருக்கும் பேறு கிடைத்ததே. அதுவே முன் பிறவிப் புண்ணியம்.

'போர்க்களங்களுக்குச் சென்று வெற்றியுடன் திரும்பி வரும் ஒவ்வொரு தடவையும் என்னை வாழ்த்தி, உற்சாகமூட்டும் தங்களுடைய நல்லுரைகளை எண்ணிப் பார்க்கிறேன்.

"தங்கள் உபதேசப்படி நான் அமைக்கவிருக்கும் சிற்ப ஆலயத்தைத் தாங்கள் கண்டு மகிழ வேண்டாமா! அந்தக் கோயிலின் குடமுழுக்கை நடத்தித் தந்திருக்க வேண்டாமா!

"எந்தையே! இன்னும் சில ஆண்டுகள் இருந்து என்னை வழிநடத்தியிருக்கக் கூடாதா?

"நான் ஓர் அதிர்ஷ்டமற்ற பிறவி. தங்கள் வீரதீரப் பிரதாபங்களை விளக்கும் வரலாற்றை வண்ணச் சித்திரங்களாக வடித்துத் தர எண்ணினேனே. அந்த ஜீவ சித்திரங்களைத் தாங்கள் கண்டு மகிழ்வதைக் காணும் பேறு பெறாத துரதிர்ஷ்டசாலியாகி விட்டேனே!"

இராசேந்திரன் வாய்விட்டுப் புலம்பி அழுவதைப் பார்ப்பவர்களும் இருகரங்களால் முகத்தை மூடிக் கொண்டு விம்மினர். சிலர் வாய்விட்டு அழுதனர். குலுங்கிக் குலுங்கி அழுதனர். தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு ஓலமிட்டனர்.

இராசேந்திரன் தோளை ஓர் அருள் கரம் தொட்டது.

"இராசேந்திரா, மகனே!" என்றழைத்த குரல் அரிய மருந்தாக அமைந்தது.

இராசேந்திரன் திரும்பிப் பார்த்தார்.

கருவூர்த் தேவர் குனிந்து, இராசேந்திரனின் முதுகை ஆறுதல் ஏற்படுமாறு தடவினார்.

அவர் பார்வையில் ஆயிரம் ஆயிரம் செய்திகள் பிறந்தன.

"தேவரே - சோழர் குலத்தை வாழ வைக்கும் குல குருவே! - இனி தாங்கள்தான் எனக்கு வழிகாட்டி - ரட்சகர், தாய், தந்தை எல்லாம்" என்று ஓலமிட்டு அவர் பாதங்களில் வீழ்ந்தார், இராசேந்திரன்.

இராசேந்திரனை மெல்ல எழுப்பி ஆறுதல் கூறிய கருவூர்த் தேவர், "இராசேந்திரா! என் அன்பு மகனே! இன்றைக்கு இருந்தவர் நாளைக்கு இருப்பதில்லை என்ற பெருமை உடையது இந்த உலகு என்பதை நீ அறிய மாட்டாயா? நீ இன்னும் சிறுபிராயத்தவனா? இராசேந்திரா! நீ பரகேசரி என்ற பட்டம் பெற்றவன். சோழ நாட்டுச் சக்கரவர்த்தி. 'உனக்கென்று கடமைகள் பல இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றி, சோழ நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டியவன் நீ. சோர் வடையலாமா? உன் தந்தையின் இறுதிக் கால ஆசையை நிறைவேற்ற வேண்டாமா! நான் உன்னுடன் இருக்கிறேன். சோழ நாட்டிலிருந்து புறப்பட்டுத் தெற்கே பொதிகை மலைக்குச் செல்ல வேண்டிய காலம் எனக்கு நெருங்கிக் கொண்டிருக்கிறது. விரைவிலே நீ பெரிய கோயிலை எடுப்பிப்பதற்கு வேண்டிய செயல்களில் முழு மூச்சுடன் ஈடுபடு. எழுந்து நில். செயல்படு - வெற்றியை அடைய வாழ்த்துகிறேன்!" - இராசேந்திரனுக்குப் புத்துணர்வு ஊட்டினார்.

சோழ நாடே குலுங்கியது. மக்கள் விட்ட கண்ணீர் காவிரியின் பெருக்கைவிட அதிகமாகியது.

மலர்ப் படுக்கையில் இராசராசன் திருமேனி உயிருள்ள சிற்பமாகத் திகழ்ந்தது. அகில்புகை மெல்லிய மணத்தைப் பரப்பியது.

அர்ச்ச குரு வந்தார். காளாமுகத் துறவிகள் வந்தனர். பெரிய கோயிலில் இறைவன் திருமுன்னர் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்யும் நாற்பத்தெண்மரும் சூழ்ந்தனர். பெரிய கோயிலில் திருப்பதிகம் ஓதுவார் தங்கள் வருத்த



நிலையிலும் தேவாரப் பதிகங்களும், திருவாசகமும், திவ்யப் பிரபந்தமும் மெல்லப் பாடிக் கொண்டிருந்தனர். இறைவன் மலரடியைப் பேரரசர் அடைந்ததைக் குறிப்பது போல் மலர் மாலைகள் பாதத்தில் குவிந்தன. உடுக்கை வாசிப்பவரும், மத்தளம் கொட்டுபவரும் தம் பணி விட்டு ஓடோடி வந்தனர்.





மாளிகை முற்றத்திலும், வெளிச் சுற்றிலும், வெளியிலும், வீதியிலும் சிறிது சிறிதாக அதிகாரிகளும், பெரியவர்களும் அறிஞர்களும், கலைஞர்களும் வந்து சேர்ந்தனர்.

இராசராசன் எழுப்பித்த பெரிய கோயிலால் பயன் அடைந்தவர்கள் பலர். கோயிலின் அன்றாட வழிபாட்டிற்கு உதவித் தொண்டாற்றும் பலவகைத் தொழிலாளர்கள் - பூந்தோட்டக்காரர், மாலை தொடுப்போர்,



கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்வோர், நீரிறைப்போர், திருவிளக்கு ஏற்றுவோர், மணியடிப்போர், சங்கு ஊதுவோர், மங்கல இசைக் கருவிகளை முழக்குவோர், திருப்பதிகம் ஓதுவோர் என்று பலவகைப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் அன்றாடப்பணிகளை விட்டு மாமன்னருக்கு இறுதி மரியாதை செலுத்த ஓடோடி வந்தனர்.

இராசராச நாடகத்தை நடத்தும் பொறுப்பேற்றிருந்த ஹாஸ்யன் விக்கிரமாதித்தன் அச்சன் முதல் நாள் நாடகம் நடிக்க வந்தவர், கோயில் விடுதியிலேயே இரவு தங்கி விட்டார். அவர் தன் முதுமை நிலையையும் பாராமல் ஓடோடி வந்தார்.

ஊர்வலத்தில் நாட்டியமாடும் நங்கையரும் பெரிய கோயிலில் தொண்டு புரியும் பதியிலாதாரும் அழுதழுது முகம்சிவந்து துயரம் தாளாமல் ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

தஞ்சை நகரில் வாணிபம் செய்யும் நகரத்தார்கள் துயரம் நிறைந்த உள்ளத்துடன் விரைந்து வந்தனர்.

தச்சுத் தொழிலாளர்களும், கட்டடத் தொழிலாளர்களும், அணிகலத் தொழிலாளர்களும் சக்கரவர்த்திக்கு இறுதி மரியாதை செலுத்த வந்து கொண்டிருந்தனர்.

தஞ்சை நகரத்தின் புறம்பாடியில் குடியிருந்த தொழிலாளர்கள் துயரச் செய்தி கேட்டு ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தனர்.

மாளிகையிலுள்ளவர்களுக்கு ஆடைகளைத் தைத்துக் கொடுக்கும் ரத்னதையான் தன தொழிலாளர்கள் பின்தொடர துயர நெஞ்சுடன் வந்தான்.

சீன நாட்டினின்று வாணிபம் செய்ய வந்தோரும், அரச தூதுவர்களும், மௌனமாகக் கூடி நின்று, தலைகுனிந்து நின்று கண்ணீர் உகுத்தனர். சோனகர்களும், யவனர்களும் இறுதி அஞ்சலி செலுத்த வந்தனர்.

பெருந்தரம், சிறுதரம் என்ற பிரிவு பாராமல் அரசியல் அதிகாரிகள் ஒன்று சேர்ந்து வந்தனர்.

நால்வகைப் படையின் தலைவர் மாதண்ட நாயகர் வந்தார். கூடியிருந்தவர்களிடையே ஒழுங்கும், அமைதியும் நிலைநாட்ட ஏற்பாடு செய்தனர். மாமன்னரின் புகழுடல் இருக்கும் இடம் செல்வதற்கு அவர்கள் பெரும்பாடு பட்டனர்.

சோழநாட்டின் பெருமைக்குப் பெரும் காரணமாய்த் திகழ்ந்த குறுநில மன்னர்களின் வருகைக்காக எல்லோரும் காத்திருந்தனர். காற்றைவிட வேகமாகச் சென்று அவர்களுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. கூடியிருந்தவர்கள் எல்லோரும் இரவு பகல் பாராமல் பசி தூக்கம் மதிக்காமல் காத்திருந்தனர்.

வீழ்ந்த ஆலமரம் போல் மாமன்னர் சாய்ந்து கிடக்கும் அந்தத் துயரம் நிறைந்த வேளையில், இராசேந்திரனுடன் வந்த வீரமாதேவியைக் கண்டு, மற்ற இளவரசிகளுக்குப் பொறாமை துயரத்தையும் மீறிப் பொங்கி நின்றது.

சிறிது நேரம் கண்ணீர்விட்டுக் கதறி விட்டு, சடலத்தைச் சுற்றிலும் அரசாங்க அதிகாரிகள் சூழத் தொடங்கியவுடன், மெல்ல அருகே இருந்த அறைக்குச் சென்ற இளவரசிகள் வீரமாதேவியைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

சக்கரவர்த்தி, வீரமாதேவியுடன் முதல் நாள் தங்கியிருந்ததையும், அவளையும் உடன் அழைத்து வந்ததையும் பற்றிப் பேசினர்.

"காட்டுப் பகுதியில் கலையை வளர்ப்பதாக நினைத்திருந்தோம். இப்போது நாட்டுக்கே வந்துவிட்டாளே" என்று அவர்கள் கூறினர்.

"உம்... அவ்வளவு எளிதில் விட்டு விடுவேனா? மறுபடியும் அவளைக் காட்டுக்கே ஓட்டி விடுவேன்!" என்றாள்,பட்டத்து அரசி.

"நேற்று, சக்கரவர்த்தி நீண்ட நெடுநேரம் வீரமாதேவியிடமும், நம் அரசரிடமும் என்ன பேசிக் கொண்டிருந்தார் என்று தெரியவில்லை. அவர்கள் இருவரும் பேசிப் பேசியே களைத்திருக்க வேண்டும்" என்று கவலை தெரிவித்தாள்,ஒருத்தி.

"பெரிய கோயில், கங்கா நீர் அபிஷேகம், சிற்பங்கள், சிற்பி, நாட்டியம் என்ற வார்த்தைகள் மட்டும் அந்த மாளிகையிலிருந்த பணிப்பெண்ணின் காதில் விழுந்ததாக அறிந்தேன். அதனால், வீரம்மாள் மீண்டும் காட்டிற்கே போய்விடுவாள் என்று நினைக்கிறேன்".

"அதுவும் ஆபத்துதான். வீரம்மாள் இருக்குமிடத்தில் தான் நம் அரசரும் இருப்பார். அவள் மோகவலையில் சிக்கி இங்கே வராமலே இருந்துவிட்டால்...?"



இப்படிச் சொன்னவுடன் மற்றவர்கள் திடுக்கிட்டனர். வெளியே எழுந்த ஓலத்திற்கு இணையாக அவர்கள் நெஞ்சில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டது.

"கவலைப்படாதீர்கள்! இளைய பிராட்டிக்குச் செய்தி போயிருக்கிறது. அவர்கள் வந்துவிடுவார்கள். அவர்களிடம் சொல்லி நம் அரசரைத் தஞ்சை மாநகரைவிட்டு வெளியே எங்கும் செல்லாதவாறு செய்து விடுகிறேன்" என்று ஆறுதல் சொன்னாள்,பட்டத்து அரசி.

அப்போது அங்கே வந்த வீரமாதேவியைக் கண்டவுடன் அவர்கள் சீறும் சிங்கத்தைக் கனவில் கண்டதுபோல் நடுங்கினர். தொடர்ந்து பெரும் அமைதி அங்கே நிலவியது. கண்ணீரைத் துடைத்துக் கொள்வதுபோல் ஒவ்வொருவரும் முகத்தை மூடிக்கொண்டு மற்றவரை இரகசியமாகப் பார்த்தனர்.

வீரமாதேவி பட்டத்து அரசியைப் பார்த்து, "மரியாதைக்குரிய என் மூத்த சகோதரிகளே! பட்டத்து அரசிகளே! நீங்கள் நினைப்பது போல் சோழ நாட்டுப் பேரரசரான என் தலைவர் தஞ்சைபுரியில் தங்கி இருக்கப் போவதில்லை. அவருக்குத் தஞ்சையைக் கண்டால் பிடிக்கவில்லை. சக்கரவர்த்தியின் இறுதிச் சடங்குகள் முடிந்த பிறகு ஒரு நாள்கூட அவரும் நானும் தஞ்சையில் தங்குவதில்லை என்று முன்பே முடிவு செய்துவிட்டோம். இளவரசியே! தஞ்சையிலோ, பழையாறையிலோ நீங்கள் தனியே வாழ வேண்டியதுதான். பாவம், வயதான நிலையில் நீங்கள் அனுபவிக்கப் போகும் துயரத்தை எண்ணினால் எனக்கே வருத்தமாய் இருக்கிறது. முற்பகல் செய்யும் இன்னா பிற்பகல் தாமே விளையும் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

இராசேந்திர சோழ தேவரின் பட்டத்து இளவரசியும் மற்ற இளவரசிகளும் சொல்வதறியாது ஒருவரை ஒருவர் அதிர்ச்சியுடனும் கவலையுடனும் பார்த்துக் கொண்டனர்.

பட்டத்து இளவரசி சொன்னாள்: "கவலைப்படாதீர்கள்! நமது மாமன்னர் இன்னும் சில நாள்களில் வடக்கு நோக்கிப் படைகளுடன் புறப்படப் போகிறார். பாவம், வீரம்மாள் காட்டில் தனியே இருந்து வேதனைப் படவேண்டியதுதான்".

'உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்பதுபோல் மற்ற இளவரசிகள் புருவம் உயர்த்தினர்.

"ஆம்; நேற்று ஒற்றர்ப்படைத் தலைவர் தெரிவித்த செய்தி. எனக்கு மட்டுமே தெரியும்" என்றாள்.

இராசகேசரி இராசராசர், இறைவனடி எய்தி இரு பட்சம் ஓடி மறைந்துவிட்டது. சோழ நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த குறுநில மன்னர்கள் தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர்.

வல்லவரையர் வந்தியத் தேவரும், இளைய பிராட்டியும் முக்கியச் செய்தி ஒன்றைப் பேசுவதற்காக இராசேந்திர சோழரைச் சந்திக்கத் தஞ்சை மாளிகைக்கு வந்தனர்.

இராசேந்திர சோழர் தஞ்சையை விட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்ட செய்தி அறிந்து திடுக்கிட்டனர்.







## 54. அரிந்தவன்தேவி தந்திரம்

இராசேந்திரனைக் காணவந்த இளைய பிராட்டியும் வல்லவரையரும் அவரைக் காணாது திகைத்தனர்.

இராசேந்திரன் தஞ்சையை விட்டுப் புறப்பட்டுச் சென்று விட்டார் என்ற செய்தியைக் கேட்ட இளைய பிராட்டி வந்தியத் தேவனைப் பொருட்புதைந்த புன்னகையுடன் நோக்கினாள்.

அந்தப் புன்னகையில், "பார்த்தீர்களா, நான் சொன்னதுபோல் நடந்து விட்டது என்று சொல்வது போல் இருந்தது.

"தஞ்சையை விட்டுப் புறப்பட்டு இராசேந்திரன் சென்று விடுவார் என்று முன்பே உனக்குத் தெரியுமா? அவ்வளவு சரியாகச் சொன்னாயே?" என்று வந்தியத் தேவன், இளைய பிராட்டியைக் கேட்டார்.

அங்கே சூழ்ந்திருந்தவர்களையும் குறிப்பாக பஞ்சவன் மாதேவியையும் நோக்கிய இளைய பிராட்டி....

"பட்டத்து ராணிக்குத் தெரியாமலா, இராசேந்திரன் சென்றிருப்பான்?" என்றாள்.

"உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், நீ பட்டத்து அரசியைக் கேட்கிறாயே" என்று வந்தியத் தேவன் இளைய பிராட்டியைப் பார்த்துக் கேட்டார்.

"பஞ்சவன் மாதேவிக்குத் தெரியாத செய்தியே கிடையாது, அதனால் கேட்டேன்" என்றாள் இளைய பிராட்டி குந்தவ்வை தேவி, குறும்புப் புன்னகை இதழ்களில் இழையோட.

"எனக்கொன்றும் தெரியாது அக்கா! உங்கள் பிள்ளை என்னிடம் முன்பு போல் ஏதும் சொல்வது கிடையாது" என்று முகத்தில் ஏமாற்றம் பிரதிபலிக்கக் கூறினாள், பழுவேட்டரையர் வம்சத்து வந்த பஞ்சவன்மாதேவி.

"ஒரு காலத்தில் அரிந்தவன் மாதேவியிடம் நெருங்கி இருந்தானே, இராசேந்திரன்? அவளுக்காவது தெரியுமா கேள்.?"என்று இளைய பிராட்டி சோகமே வடிவாக நின்றிருந்த அரிந்தவன் மாதேவியைக் கேட்டாள். பிறகு இளைய பிராட்டி தொடர்ந்து....

"அரிந்தவன் மாதேவி, இராசேந்திரனை வயப் படுத்தாது விட்டுவிட்டாள். நன்றாகப் பாடுவாள். இசைப் புலமை எல்லாம் இப்போது மறந்துவிட்டதோ?" என்று அரிந்தவன் மாதேவியைச் சீண்டினாள், இளையபிராட்டி.

"நாங்கள் இருவருமே ஏமாந்துவிட்டோம். எங்கள் இளமை அப்படியே இருக்குமென்று நினைத்து விட்டோம். தங்கள் புதல்வர் எங்களைச் சந்திக்க வராதபோது அவர் வழக்கம்போல் அண்டை நாடுகளுக்குப் படை எடுத்துச் சென்றிருப்பதாக நினைப்போம்; ஆனால் இளவயது வீரம்மாளுடன் அவர் சல்லாபித்துக் கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியாது" - புலம்பாத குறைதான்.

இளையபிராட்டி குந்தவ்வை தேவியார் கேட்டாள்: "நான் வளர்த்த இராசேந்திரன் இளமைக்கு மட்டுமே மயங்கக் கூடியவன் என்று நினைத்து விட்டீர்களா? அழகுக்கும் இளமைக்கும் அடிமையாகக் கூடியவன் என்று தவறாக நினைத்த விட்டீர்களா?" என்று வந்தியத் தேவனைப் பார்த்தவாறு கேட்டாள். ஆனால் அவள் விடை எதிர்பார்த்ததோ பஞ்சவன்மாதேவியிடம்.

பஞ்சவன்மாதேவியும் அரிந்தவன்மாதேவியும் மறு மொழி கூறாது சற்றுத் திகைத்தனர்.



இளைய பிராட்டியே இதற்கு விடை கூறினாள்.

"என் அருமை தேவியரே! என்ன இருந்தாலும் நாட்டின் அரசியர் நீங்கள். உங்கள் தந்தை சோழ நாட்டின் சிற்றரசர்கள். சோழர்களின் வெற்றிக்குப் பல விதத்தில் உதவியவர்கள், உதவி வருபவர்கள். அத்துடன் உங்களையும் பரிசாக உங்கள் தந்தைமார்கள் அளித்துள்ளார்கள் என்பதை மறக்க முடியாது. ஆனால் வீரமாதேவியை யாரும் பரிசாக அளிக்கவில்லை. என் அருமை மகனே தனக்கெனத் தேடிக் கொண்டான். அவள் எளிய குடும்பத்துப் பெண். ஆனால் அந்தக் குடும்பத்தவர்கள் சோழ நாட்டிற்கு மகத்தான தியாகங்கள் செய்திருக்கிறார்கள். அதற்காக மட்டும் வீரமாதேவியிடம் மனத்தைப் பறிகொடுத்தானா? உங்களிடமில்லாத ஒன்று வீரம்மாளிடம் நிறைந்திருந்தது. இறைவன் அவளுக்கு அளித்த நடனக்கலை. இனி யாரும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது".

இளைய பிராட்டி இவ்வாறு கூறியதும் பஞ்சவன் மாதேவி அதிர்ச்சி அடைந்தாள். தங்களை இளைய பிராட்டி ஆதரிப்பார்கள் என்று எண்ணியது போக வீரம்மாளின் பக்கத்து நியாயத்தை எடுத்துச் சொல்கிறார்களே?

"ஏன் உங்கள் முகத்தில் இப்படி ஓர் அதிர்ச்சி. மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். என் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள், குந்தவ்வை.

பஞ்சவன் மாதேவியும், அரிந்தவன் மாதேவியும் பேசாமடந்தையாக இருந்தார்கள்.

"என் கதை உங்களுக்குத் தெரியாதா? இதோ இருக்கிறாரே மகத நாட்டுச் சிற்றரசர் வல்லவரையர் - அவர்மீது எனக்கு ஏற்பட்ட காதலும், அவருக்கு என்மீது ஏற்பட்ட அன்பும் நாடறியும். வீண் பழி சுமத்தப்பட்டு சிறையில் அவர் இருந்தபோது அவருக்காகத் தவம் செய்து காத்திருந்தேன். தவம் பலித்தது. இருவரும் இலட்சியத் தம்பதியரானோம். அதெல்லாம் வேறு கதை. பழைய கதை. இளம் பிராயத்தில் மனம் மாறாத வல்லவரையர், வேறு பெண்ணை ஏறெடுத்துப் பாரா வல்லவரையர் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் வேறொருத்

தியை மணம்புரிந்து கொண்டார் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்திருக்கும், தெரிந்திருக்கும். மரியாதைக் காக நீங்கள் மௌனமாய் இருக்கிறீர்கள். அவளுக்கு ஒரு குழந்தை பிறந்து - வளர்ந்து - இந்த மகத நாட்டு வாரிசாக உருவாகித் திகழ்கிறது. அதனால் வல்லவரையர் என்னுடன் வாழ்ந்த வாழ்க்கை கசந்துவிட்டதா? இல்லை இல்லை. அவர் பெயரைச் சொல்ல ஒரு வாரிசை உருவாக்கிக் கொடுக்க என்னால் முடியவில்லை. அவள் தந்து விட்டாள். இப்பொழுதும் வல்லவரையரும் நானும் ஒற்றுமையோடு மகிழ்ச்சியாக இருக்கிறோம். நீங்கள் - ஒருத்திக்கு மூன்று பேராகப் பொறாமைப்பட்டு கருகு கிறீர்கள். இனியாவது உங்கள் மனத்தில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை விட்டொழியுங்கள். வீரமாதேவியை வீரம் மாள் என்று அழைத்து அவளை அவமானப்படுத்தா தீர்கள்".

வல்லவரையரும், இளையபிராட்டியும் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

பஞ்சவன்மாதேவி திகைத்தவாறு சிலைபோல் நின் றிருந்தாள். இளைய பிராட்டியாரின் ஆதரவு தனக்கு இருக்கும் என்று நினைத்திருந்தது போக, வீரம்மாளை அன்றோ ஆதரிக்கிறார்கள்? வீரமாதேவி என்று அழைக்க வேண்டும் என்று சொல்கிறார்களே!

மனத்திலுள்ள சந்தேகங்களை விட்டொழிக்க வேண்டு மாமே! 'நடனக் கலையில் புலமை பெற்றவள், அதனால் தான் சோழச் சக்கரவர்த்திகள் வீரம்மாள் மீது காதல் கொண்டார், என்று கூறுகிறாரே! நமக்கு ஒரு கலையும் தெரியாது; வெறும் ஜடம் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறாரே' என்று வேதனைப்பட்டாள்.

அரிந்தவன்மாதேவி, தோளைத் தொட்டுக் குலுக்கிய பிறகுதான் பஞ்சவன்மாதேவி சுயநினைவுக்கு வந்தாள்.

"தேவி! தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏன் இப்படி அதிர்ச்சியடைந்து விட்டீர்கள்?" என்று கேட்டாள்.

"ஏதோ ஒன்று என்னிடமிருந்து பறிபோவது போல் உணர்கிறேன். சோழ சக்கரவர்த்தி இனி நம்மிடம் அன் பாக இருக்கமாட்டார். நேற்று வந்த மாயக்காரி சொன்னது போல் நடக்கிறதே. இனி தஞ்சைபுரிக்கு அரசர் வர மாட்டார் என்று அந்த வீரம்மாள் சொன்னாளே. தவறு



வீரம்மாள் என்று சொல்லக் கூடாது - வீரமா மா மாதேவி - சொன்னாளே. அதன்படி இனி நடக்கும்போல் தோன்றுகிறதே! இனி என்ன செய்யலாம்?" - பஞ்சவன் மாதேவியின் குரலில் சோகம் நிறைந்திருந்தது.

"நாமும் நாட்டியம் கற்றுக் கொள்வோம்" என்று கூறி அரிந்தவன் மாதேவி சிரித்தாள்.

"நகைச்சுவையாகப் பேச இதுவா நேரம்?" என்று பஞ்சவன் மாதேவி கடிந்து கொண்டாள்.

அங்கே சிறிது நேரம் அமைதி நிலவியது. அரிந்தவன் மாதேவி மௌனத்தைக் கலைத்தாள்.

"அப்படியா? நான் ஒரு யோசனை சொல்கிறேன்., தஞ்சைக்குத்தானே வரமாட்டார்? பழையாறைக்கு வரு வாரல்லவா?" என்றாள், பஞ்சவன்மாதேவி.

"வீரம்மாள் வராவிட்டால் என்ன? அரசர் வருவார். அவரை வரச்செய்வோம். வீரம்மாள் வராமல் அரசர் தனியே ஒருமுறை வந்தால் போதும்; என் எண்ணம் நிறை வேறிவிடும்" என்றாள், அரிந்தவன் மாதேவி.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது" என்று கூறி, பஞ்சவன்மாதேவிக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்லிய குரலில் தன் திட்டத்தை விளக்கிக் கூறினாள்.

"மிகவும் ஆபத்தான யோசனை!" என்றாள், பஞ்சவன் மாதேவி.

"அதில் ஆபத்து ஏதுமில்லை. நம் அரசரை இங்கே வரவழைக்க ஒரே வழி அதுதான்" என்றாள், அரிந்தவன் மாதேவி.

"தஞ்சைக்கு இனி வரப்போவதில்லை என்று மாமன்னர் சூளுரைத்துச் சென்றிருக்கிறாரே தெரியுமா? அதனால் உன் யோசனை பலிக்காது" என்றாள், பஞ்சவன்மாதேவி.

மீண்டும் அங்கே மௌனம் குடிகொண்டது.

மறுநாள் பஞ்சவன்மாதேவியும், அரிந்தவன்மாதேவி யும் தோழியர் புடைசூழ பழையாறைக்குப் பயண மானார்கள்.

இவர்கள் போய்ச் சேருவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்புதான் அதுவரை அங்கே தங்கியிருந்த இராசேந் திரனும் வீரமாதேவியும் பழையாறையிலிருந்து புறப்பட்டு,

கலைக்கூடப் பணிகள் நடைபெறும் காட்டுப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

பழையாறைக்கு வந்தவுடனேயே அரிந்தவன்மாதேவி கடும் வயிற்று வலியால் துடித்தாள். பழையாறை மாளிகையிலுள்ளவர்கள் கூடிவிட்டனர். மாளிகை மருத்துவர் விரைந்து வந்தார். மருந்து கொடுக்கப்பட்டது.

கடும் வயிற்று வலியால் தொல்லைப் படுவதுபோல் நடிக்க எண்ணியவளுக்கு, மெய்யாகவே வயிற்று வலியுடன் காய்ச்சலும் சேர்ந்தன. எல்லோரும் பயந்து விட்டனர்.

சக்கரவர்த்திகளுக்குச் செய்தி தெரிவிக்க விரைந்தார்கள். அரிந்தவன்மாதேவி திட்டமிட்டதுபோல், இராசேந்திர சோழ தேவருக்குச் செய்தி தெரிந்திருந்தால் அவர் பழையாறைக்கு உடனே வந்திருப்பார். ஆனால், நினைத்தது ஒன்று. நடந்ததோ வேறு!







## 55. சலனமும் சபதமும்

தன் தந்தை பேரரசர் இராசராச சோழ தேவர் தில்லை அம்பலவாணர் திருவடிகளை அடைந்த பிறகு இராசேந்திரன் ஓரிரு நாள்கள் மட்டுமே தஞ்சைபுரியில் தங்கினார். வீரமாதேவிக்கு அந்தச் சில நாள்களும் முள்ளின் மேல் இருப்பது போலிருந்தது.

பிரதானியுடனும், கருவூல அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்து மூத்த அதிகாரியும், நீண்ட காலமாக சோழர்க் குலத்துக்கு நம்பிக்கையுடன் பணியாற்றியவரும், படைத் தலைவராக இருந்தவருமான கிருஷ்ணன் ராமனை மட்டும் அழைத்துக் கொண்டு வீரமாதேவியுடன் இராசேந்திரன் தஞ்சையை விட்டுப் புறப்பட்டு விட்டார்.

சிற்ப வேலைப்பாடு மிகுந்த சோழநாட்டு இரதத்தில் வீரமாதேவியும் இராசேந்திரனும் அமர்ந்து தஞ்சையின் முக்கிய வீதிகள் வழியே வடக்குக் கோட்டை வாயில் வழியே சென்றபோது வீதியின் இருபுறமும் மக்கள் நின்று வாழ்த்தொலி எழுப்பினர். சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் அருகே வீற்றிருக்கும் வீரமாதேவியை அவர்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. வீரமாதேவியை அடையாளம் கண்டு சொல்லக் கூடியவர் ஒருவரும் இலர். அரசர் அருகே அமர்ந்திருப்பவள் அரசி பஞ்சவன்மாதேவி இல்லை என்பது மட்டும்

புரிந்தது. அதனால் பெயர் கூறி வாழ்த்தொலிக்க இயலாது திகைத்தனர்.

புத்திசாலியான நகர மூத்தவர் ஒருவர், "சோழ நாட்டு இளவரசி வாழ்க, வாழ்க!" என்று வாழ்த்தொலி எழுப்பவும் அந்த வாழ்த் தொலி தொடர்ந்தது.

"அரசர் அருகே இருப்பவள் ஓர் இளவரசியாக இருக்க வேண்டும். அதனால் இளவரசி வாழ்க, வாழ்க என்று வாழ்த்தினேன்" என்றார் மூத்தவர்.

இராசேந்திரனும் வீரமாதேவியும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர்.

முன் எப்பொழுதையும்விட வீரமாதேவியின் விழிகளில் நம்பிக்கை ஒளி வீசியது. அன்றலர்ந்த மலர் போன்ற புன்னகை இதழ்களில் நிறைந்திருந்தது. வீதிகளின் இருபுறமும் கையசைக்கும் மக்களும், கரங்கூப்பியுள்ள மக்களும் தன்னைப் பார்த்து வாழ்த்துக் கூறுகிறார்கள் என்பதை நினைக்கும்போது, 'ஓ, வீரம்மா! உனக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தாயா? உன்னைக் கேலியாகப் பேசியவர்கள் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?'

இப்படி நினைக்கும் போதே அவளுக்குச் சற்றுக் கர்வமாக இருந்தது. ஒரு தடவை அருகே இருக்கும் சக்கரவர்த்தியைத் திரும்பிப் பார்த்துத் தன் பெருமிதத்தைத் தெரிவிக்க விரும்பினாள். ஆனால் அவரோ வீதியின் இருபுறமும் கூடி நிற்கும் மக்களைப் பார்த்துக் கையசைத்தும், கை உயர்த்தி வாழ்த்துக் கூறியும், சற்று அறிமுகமான முகங்களைப பார்த்து மகிழ்ச்சியைத் தெரிவித்தும் இங்கும் அங்குமாகத் திரும்பிப் பார்த்து வந்ததால் வீரமாதேவியை அவர் கவனிக்கவில்லை.

ஒரு முறை இராசேந்திரன் வீரமாதேவியிடம் திரும்பிப் பார்த்து, "நம் நாட்டு மக்களின் மரியாதையையும் பாசத்தையும் கவனித்தாயா? அவர்கள் நம்மீது வைத்திருக்கும் பாசமும், அன்பும் என்றும் மாறாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

வீரமாதேவி ஏதோ சொல்ல முயன்றாள். அதற்குள் இராசேந்திரன் பார்வை வேறுபக்கம் திரும்பியது.

வடக்குக் கோட்டை வாயில் அருகே இராசேந்திரன் இரதத்தினின்று இறங்கினார். கோட்டைக் காவல் தலைவரை அழைத்து ஏதோ பேசினார்.



கோட்டைக் காவல் வீரர்கள் சிலரைப் பெயர் சொல்லி அழைத்து அவர்கள் நலம் விசாரித்தார். வியப்பினால் திகைத்துப் போன அவர்கள் இராசேந்திரன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்.

அவர்கள் அனைவரும் வீரமாதேவிக்கும் வணக்கம் தெரிவித்தார்கள்.

நெடிதுயர்ந்த மதிலை இராசேந்திரன் நிமிர்ந்து பார்த்து, காவல் தலைவரிடம் சில யோசனைகளைத் தெரிவித்தார். கோட்டையின் நுழைவாயில் மீது பறக்கும் புலிக்கொடி சற்றுப் பழுதுற்றிருப்பதைச் சுட்டிக் காட்டி, உடனே புதிய கொடியை மாற்றுமாறு கூறி கொடியின் பெருமையையும், சிறப்பையும், உணர்த்தினார்.

தொடர்ந்து, "போரில்லாத அமைதியான காலத்தில் தான், நாம் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். கோட்டைக் கதவுகள், அகழி, மதிள் இவற்றைப் பலமாக வைத்திருப்பது மிக முக்கியம். பலங்குறைந்த இடம் என்று ஓரிடம்கூட இருக்கக்கூடாது. கோட்டையைச் சுற்றியுள்ள அகழிக்கும் மதிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் அடர்ந்திருக்கும் முள் புதர்களை அகற்றிவிட வேண்டும். அகழியில் உள்ள முதலைகளைக் கவனித்து மேலும் வளர்க்க வேண்டும்" என்று



கட்டளையிட்டுவிட்டு இரதத்தில் ஏறி, வீரமாதேவியின் அருகே அமர்ந்து கொண்டார்.

"முதலில் பழையாறைக்குச் செல்வோம். அங்கே அத்தையும் அத்தான் வந்தியத்தேவரும் இருப்பார்கள். அவர்களுடன் சிறிது நேரம் இருந்துவிட்டு, சிதம்பரம் சென்று ஆடவல்லானை வணங்கிவிட்டு, சிற்பப் பணிகள் நடைபெறும் இடத்திற்குச் செல்வோம்" என்றார்.

அரசரும் வீரமாதேவியும் அமர்ந்திருந்த தேர்- பழையாறைச் சாலையில் விரைந்து கொண்டிருந்தது.

"சாலைகளை இன்னும் சரிவரச் செப்பனிடவேண்டும்" என்றார், இராசேந்திரன்.

"முள்ளும் கல்லும், மேடும் பள்ளமும் நிறைந்த பாதையில் குதிரையின்மீது போகும்போது எப்படி இருக்கும்?" என்று கேட்டாள், வீரமாதேவி. அவர் அருகே சற்று நகர்ந்து, ஒட்டிப் படர்ந்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. அப்படிச் செய்வதனால் விரதபங்கம் ஏற்படுவதற்கு விதை விதைக்கப்படுமோ என்ற ஐயமும்ஏற்பட்டது.





"குதிரைமீது, உன்னையும் உட்கார வைத்து அழைத்துச் செல்லட்டுமா?" - இராசேந்திரன் அவளைத் திரும்பிப் பார்த்துக்கேட்டார்.

அவள் முகத்தை அவர் மிக அருகில் பார்க்கிறார். முன்பைவிட இப்போது பளபளப்பும், ஆர்வமும், மகிழ்ச்சியும், எல்லாவற்றிற்கும் மேலாக காதலும் நிறைந்திருப்பது தெரிந்தன.

"குதிரை மீது இருவரா?" - வியப்புடன் கேட்டவள், அந்த அனுபவம் எப்படி இருக்கும் என்று கற்பனையும் செய்து கொண்டாள்.

"குதிரைமீது உன்னை உட்காரவைத்துக் கொண்டு செல்வது மிகவும் இன்பமாக இருக்கும்!" என்றார்.

"குதிரைகளுக்கு...?" வீரமாதேவி அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

"ஒருவருக்கு மகிழ்ச்சி என்றால் மற்றவருக்குத் துன்பம் தான்" என்றார், இராசேந்திரன், அவளுடைய கன்னத்தை மெல்ல வருடி. அவள் உடல் சிலிர்த்தது.

வீரமாதேவிக்கும், இராசேந்திரனுக்கும் இருந்த இடைவெளி குறைந்தது. ஆனால் அவள் உள் மனம் எச்சரித்தது. வேண்டாம் வேண்டாம் என்று கூறியது. பேச்சை வேறு திக்கில் செலுத்த விரும்பினாள்.

"எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியால் மற்றவருக்கு எவ்வளவு துன்பம் தெரியுமா?" இராசேந்திரன் மீது மெல்ல சாய்ந்தவாறு அவா செவிக்கருகே பேசினாள்.

"உன்னால் மற்றவருக்கு என்ன துன்பம்?"

"நான் உங்களை மயக்கி விட்டேனாம். நீங்கள் அரசியையும், மற்ற இளவரசிகளையும் கண்டு பேசி பல நாள்களாகின்றனவாம்".

"அதனால்? பழைய கதையையே சொல்கிறாயே வீரம்மா - என் பட்டத்தரசியுடனும், மற்ற இளவரசிகளுடன் திகட்டும் அளவுக்கு இருந்து, பேசி, மகிழ்ந்தாகிவிட்டது. இப்போது என் இலட்சியம் எல்லாம், விரைவிலேயே கோயில் ஒன்று கட்டுவது. கோயிலில் சிற்பக்கூடம் அமைப்பது. அதே நினைவில் நானிருக்கும்போது இவர்கள் அந்தப்புரத்தில் உட்கார்ந்து கொண்டு கேளிக்கைகளில், சல்லாபங்களில் காலத்தைக் கழிக்கச் சொல்கிறார்கள்.

வீரமாதேவி! நீயும் நானும் செய்யவேண்டிய காரியங்கள் பல உள்ளன. பழையாறை சென்று, பிறகு சிதம்பரம் சென்று, ஆடவல்லானைக் கண்டு பிரார்த்தனை செய்தபிறகு, நம் கலைப்பணியைத் தொடங்குவோம்!' என்றார்.

மிகுந்த கலை ஆர்வம் அவர் முகத்தில் பிரதிபலிப்பதைக் கண்ட வீரமாதேவி, வேகமாகச் செல்லும் இரதத்தில் அவர்மீது சாய்ந்து கொண்டாள். விழிகளை மூடிக் கொண்டாள். தென்றலின் சுகமும், ஆருயிர்க்கருகே உள்ள நெருக்கமும் சேர்ந்தன. மாபெரும் சக்கரவர்த்திக்கு இணையாக அமர்ந்து, இரதத்தில் செல்வதில் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் கர்வமும் சேர்ந்தது. விரதபங்கம் செய்து, சோழ நாட்டில் தன் விருப்பப்படி இராசேந்திரனை ஆட்டிப் படைத்தால் என்ன என்ற எண்ணமும் எழுந்தது.







## 56. வீரமாதேவியின் சபதம்

**வீ**ரமாதேவியால் தன் விரதத்தினின்று மாற முடியவில்லை. சோழநாட்டுச் சக்கரவர்த்தியாகத் திகழும் இராசேந்திரனை ஆட்டிப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் ஏன் எழுந்தது என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

பழையாறையில் அவர்கள் நுழைவதற்கு முன்பே, அவர்கள் வருகை சிலருக்குத் தெரிந்துவிட்டது. குளக்கரையிலும், கோயில் வாசலிலும் அரசர் வருகைக்காகக் காத்து நின்றனர்.

அரசர் வரும் அழகுத் தேரின் முன்பு நான்கு குதிரைகள் மீது புலிக்கொடி ஏந்திய வீரர்கள் புழுதியைக் கிளப்பிய வண்ணம் விரைந்து சென்றனர். அவர்களைத் தொடர்ந்து இரண்டு குதிரைகளில் வீரர்கள் வந்தனர். அவர்கள்தாம் அரசர் வருகையை அறிவித்துச் சென்றனர்.

இராசேந்திரன் அருகே அமர்ந்திருக்கும் வீரமாதேவியைப் பலர் அறியமாட்டார்கள். பெண் வயிற்றுப் பெயர்த்தியாகவும் அவள் இருக்க முடியாதே - யாராக இருக்கும் என்ற கேள்விக் குறியை எழுப்பிக் கொண்டனர்.

கேள்வியும், மறுமொழியும், சந்தேகமும், வம்பும், வதந்தியுமாக உச்சிப்பொழுதிற்குள் வீரமாதேவியைப் பற்றி அவர்கள் தெரிந்துகொண்டனர்.

"ஓ! நான் கேள்விப்பட்டது நிஜம்தான்" என்றாள், அங்கிருந்தவர்களுள் சற்று வயது முதிர்ந்தவள்.

"என்ன கேள்விப்பட்டாய்? கேள்விப்பட்டதை உடனே தெரிவிக்காமல் நீங்கள் இருந்தது அதிசயம்தான்!" என்று அவளைப் பார்த்து மற்றொருத்தி சிரித்தவாறு கேட்டாள்.

"நமக்குப் பெரிய இடத்து வம்பு எதற்கு என்றுதான் சும்மாயிருந்தேன்" என்ற மூதாட்டி, மெல்லிய குரலில், 'இந்தச் சிறுசுதான் இப்போது நமது அரசரை ஆட்டி வைக்கிறாளாம். தஞ்சாவூரிலேயே அரசரைத் தங்க விடாமல் செய்ததே இவள்தானாம்!"

"ஏனாம்?"

"தஞ்சையில் இருந்தால் தன் செல்வாக்கு எடுபடாது என்றுதான்! எல்லாம் இளமை மோகம்தான்".

"அப்படியெல்லாம் இல்லையாம். நம்ம பெருவுடையார்க் கோயிலைவிடப் பெரிய கோயில் ஒன்றை அரசர் கட்டப்போகிறாராம். அரசருக்கு அப்படியோர் ஆசை ஏற்படக் காரணமே இவள்தானாம்!"

"இனிமேல் அரசர் பழையாறையிலேயே தங்கிவிடப் போகிறாராம்!"

"நல்ல முடிவுதான். பழையாறைக்குப் புதுப்பொலிவு ஏற்படும். மந்திரி மண்டலத்தார், படைத் தளபதிகள், குறுநில மன்னர்கள் என்று இங்கே அடிக்கடி வருவார்கள். நகரம் கலகலப்பாக இருக்கும்".

"பழையாறை கலகலப்பாக, இன்னும் சோபையுடன் விளங்கும்".

"அதுதான் இல்லை. வீரமாதேவியின் திட்டம் எனக்குத் தெரியும். பழையாறையிலும் அவள் சக்கரவர்த்திகளைத் தங்கவிடப் போவதில்லை. அவர்கள் கொள்ளிடக் கரையையும் தாண்டி, வனப்பிரதேசத்துக்குப் போகப் போகிறார்கள். அங்கே கோயில் கட்டப் போகிறார்கள். சிலைகள் அமைக்கும் பணி ஆரம்பமாகிவிட்டது. நடனம் கற்றுக் கொடுக்கும் கலைப்பள்ளி அங்கே முன்பே இருக்கிறது. சிற்பிகள் குடியிருக்க வீடுகள் கட்டப் போகிறார்கள்".

அவள் கூறிவருவனவற்றை மற்ற பெண்கள் ஆவலுடன் கேட்டவாறிருந்தனர்.



அவர்கள் வியந்து பேசும் வகையில் பல சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன.

அவற்றுள் ஒன்று, அரிந்தவன்மாதேவி பழையாறைக்கு திடீரென்று வந்தவுடன் கடும் வயிற்று வலி அவளுக்கு ஏற்பட்டது.

பழையாறைக்கு அரிந்தவன்மாதேவி வருவதற்கு முதல் நாளே, வீரமாதேவியும், இராசேந்திர சோழ தேவரும் பழையாறையை விட்டுப் புறப்பட்டு சிற்பப் பணிகள் நடைபெறும் கானகப் பகுதிக்குச் சென்றுவிட்டனர்.

அங்கு செல்லும்போதே, இராசேந்திரன் தன் திட்டங்களை விவரித்து வந்தார். வீரமாதேவி ஆவலுடன் அவர் சொல்வதைக் கேட்டவாறு வந்தாள்.

"வீரமாதேவி! நீ கூறியதை நான் சிந்தித்தேன். பெரிய கோயில் ஒன்றைக் கட்டுவதற்கு முன் அங்கே சிற்றூர் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். தஞ்சையும், பழையாறையும் மிகப் பழமையான நகரங்களாகிவிட்டன. புதிய நகரத்தைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும்" என்று இராசேந்திரன் கூறினார்.

"நான் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தது எதற்காக என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியும்; சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தரிசிக்க எந்தவித இடையூறும் இருக்கக் கூடாது".

"ஆமாம். என் எண்ணத்தைத் தெரிந்திருக்கிறாயே? பார்! நேற்றே நாம் சிதம்பரம் சென்றிருக்க வேண்டும். காவிரியிலும் மற்றும் நான்கு ஆறுகளிலும் கடுமையான வெள்ளம். கொள்ளிடத்திலும் பிரவாகம் கரைபுரண்டோடுகிறது. மேற்கே பெய்த பெருமழை இப்படித் திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. புதிய நகரத்தினின்று தில்லையம்பதிக்குச் செல்ல எந்தவித இடையூறும் இருக்கக் கூடாது. நாம் நினைத்தவுடன் தில்லைக்குச் செல்ல வேண்டும். சிதம்பரத்திற்கு மிக அருகே அந்த நகரம் இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற நகரத்தை நிர்மாணிக்க வேண்டும்".

ஆகா; திட்டமிட்டுச் செய்யும் அறிவாற்றல். உணர்ச்சி மிகுதியால் அப்படியே இராசேந்திரனைத் தழுவிக் கொள்ளத் துடித்தாள், வீரமாதேவி.

"எவ்வளவு பெரிய அறிவு பூர்வமான திட்டம், வீரம், விவேகம், ஞானம், ஆட்சித்திறன் எல்லாம் சேர்ந்த பேரரசர் எனக்குச் சொந்தமானவர்" என்று நினைக்கும்போது அவளுக்கு ஏற்பட்ட பெருமிதம் அவள் முகத்தில் படர்ந்தது.

"அவரை எனக்கு மட்டுமே சொந்தமானவராகக் கொள்வதில் என்ன தவறு? "ஏ, பஞ்சவன்மாதேவி! அரிந்தவன்மாதேவி! மற்ற மற்ற தேவிகளே! உங்களுக்கு அவர் சொந்தமில்லை. உங்களைச் சந்திக்க வேண்டுமென்றால் என் அனுமதியை அவர் பெறவேண்டும்" - இப்படி நினைக்கும்போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"திடீரென்று சிரிக்கிறாயே, ஏன்!" என்று கேட்டார் இராசேந்திரன்.

"ஒன்றுமில்லை" என்று கூறி நாணத்துடன் அவரைப் பார்த்தாள், வீரமாதேவி.

"இல்லை இல்லை - ஏதோ என்னிடம் மறைக்கப் பார்க்கிறாய். புதிய நகரத்தைப் பற்றி நான் திட்டமிட்டுப் பேசுகிறேன். சிறு பிள்ளைத்தனமான காரியம் என்று நினைத்து நீ சிரிக்கிறாயா?" என்று கூறி அவளை உற்று நோக்கினார், இராசேந்திரன்.

"ஓ, ஓ... அப்படியெல்லாம் இல்லை" என்று கூறி, தான் அவரைப் பற்றி நினைத்ததைக் கூறினாள்.

இராசேந்திரன் வீரமாதேவியை இமைகொட்டாமல் நோக்கினார்.

"வீரமாதேவி! ஆமாம்; நீ நினைப்பது சரிதான். நான் உனக்குமட்டும்தான்".

"இல்லை, இல்லை! அப்படியெல்லாம் பேராசைக் காரியாக நான் இருக்கமாட்டேன். தேவிமார்களை உங்களிடமிருந்து பிரிக்க மாட்டேன். என்னதான் தங்களுக்கு அபிமானவல்லியாக நான் இருந்தாலும், பட்டத்து அரசியாக நான் ஆக முடியாது என்பது எனக்குத் தெரியும். அரியணையில் அமரும் தகுதி எனக்கு இல்லை என்று நான் அறிவேன். ஆனால், கலை வளர்ப்பதில் தங்களுக்கு உதவியாக - உறுதுணையாக இருப்பதிலிருந்து என் இடத்தை யாரும் அபகரித்துவிட முடியாதல்லவா?"

"வீரமாதேவி! அரியணையிலும் உனக்கு உரிமை உண்டு. வீரமாதேவி! இறைவனுக்குக் கோயில் மட்டும்



இங்கே கட்டப் போவதில்லை, கோயிலைச் சுற்றிப் பெரிய நகரத்தையும் படைக்கப் போகிறேன். அந்த நகரத்திற்கு உன் பெயரைச் சூட்டப் போகிறேன்".

இராசேந்திரன் இவ்வாறு கூறியது கேட்டு வீரமாதேவியின் மெய் சிலிர்த்தது.- வியப்பால் உடல் நடுங்கியது.

"என் பெயரையா? வேண்டாம், வேண்டாம், வேண்டாம் பேரரசரே! வேண்டாம். கிராமத்தில் பிறந்த "நான் நல்ல பெண்; அமைதியானவள்' என்ற பெயரைப் பெற்றிருந்தேன். தாங்கள் என்னை ஏற்ற பிறகு என்னைப் பொறாமையுடன் பலர் பார்க்க ஆரம்பித்தார்கள். அதற்கு முக்கியக் காரணம், நான் தங்களை வசீகரித்து விட்டேனாம். என் பேச்சைக் கேட்டுத்தான் தஞ்சைபுரியைத் தாங்கள் புறக்கணிக்கிறீர்களாம். தாங்கள் திருப்பணி செய்து படைக்கப் போகும் கோயிலைச் சுற்றிலும் மக்கள் வாழத்தக்க பெரிய நகரம்; அதற்கு என் பெயர்! வேண்டாம், பேரரசரே வேண்டாம்! இதுவரை விழிகளால் மட்டும் சுட்டு வருபவர்கள், மெய்யாகவே எரித்து விடுவார்கள்" - வீரமா தேவியின் குரலில் வேதனையும் வருத்தமும் கலந்திருந்தன.

இராசேந்திரன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டார். "வீரமாதேவி! மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை. உன்னைப் பார்த்தவுடன் என் உள்ளத்தில் மறைந்திருந்த கலை ஊற்றுப் பொங்கிப் பிரவாகித்தது. அழியாச் சிற்பங்களைப் படைக்கச் சிற்பிகளை வரவழைத்தேன். அந்தத் திட்டத்தில் உனக்குப் பங்கு உண்டு என்பதை மறந்துவிட்டாயா? உன்னைப் பார்த்தவுடனேயே சிற்பிக்கு கலை ஆர்வம் மேலும் சிறந்தது. எனக்குக்கூடப் பொறாமையாக இருந்தது. திருமாலையும், ஞான சரஸ்வதியையும், ஆடவல்லானையும் கல்லிலே படைக்குமாறு சிற்பிக்கு ஊக்கம் கொடுத்தது, நீதானே? சிற்பங்களை வெறும் காட்சிப் பொருளாக வைப்பது பிடிக்கவில்லை என்று நீதான் கருத்துத் தெரிவித்தாய். சிற்பியின் கைவண்ணத்தில் தெய்வ வடிவங்கள் சிற்பங்களாகத் திகழ்கின்றன. அந்தக் கலைக் கருவூலத்தைக் கோயிலில் வைத்துக் கும்பிடுவோம். இந்த அரிய கருத்தைக் கூறியவள், நீதானே? உன் பெயர் அழியாது இருக்க வேண்டாமா?

உன் பெயரை புதிய நகரத்திற்குச் சூட்டுவதில் தவறு என்ன?"

இராசேந்திரன் இவ்வாறு தன்னைப் புகழ்ந்து பேசுவதைக் கேட்கும்போது, வீரமாதேவி நன்றிப்பெருக்கால் பரபரப்படைந்தாள், அவளால் அப்போது செய்யக் கூடியது அவரை ஆலிங்கனம் செய்து கொண்டு - செய்து கொண்டு - நினைப்பே அவள் முகத்தில் செம்மை படர வைத்தது. முகத்தை மூடிக்கொண்டாள்.

"என்ன, பேச்சு நின்று விட்டது? முகத்தை மூடிக் கொண்டு விழிகள் இரண்டால் என்னை நீ பார்க்கலாம்; உன் முகத்தை நான் பார்க்கக் கூடாதா!" இராசேந்திரன் விரைந்து மூடியிருந்த அவள் கரங்களைப் பற்றி இழுத்தார்.

வீரமாதேவிக்கு நாணம் மேலும் அதிகரித்தது. அங்கிருந்து வெளியே ஓட முயன்றாள். கூடத்து வெளி வாயிலை அடைய முற்பட்டபோது, மிக முக்கியச் செய்தி கொண்டு வந்த இரு வீரர்கள் வணங்கி நின்றனர்.

செய்தியைப் படித்த இராசேந்திரன் முகத்தில் கவலை நிறைந்தது. அவருடைய கரம் ஓலையை வீரமாதேவியிடம் நீட்டியது.

வீரமாதேவி ஓலையில் இருந்த செய்தியைப் படித்துத் திடுக்கிட்டாள்.

"என்ன செய்வது?" என்று அவள் விழிகள் கேட்டன.

அரிந்தவன்மாதேவிக்கு வந்திருக்கும் கொடிய வயிற்றுவலி அறிந்து வீரமாதேவி மெய்யாகவே வேதனை அடைகிறாள் என்பதை இராசேந்திரன் அறிந்து கொண்டார்.

'அரிந்தவன்மாதேவி தஞ்சையில் இருந்து, பழையாறைக்கு எப்போது வந்தாள்?'

'வயிற்றுவலி ஏற்பட என்ன காரணம்?'

'அரண்மனை மருத்துவர் வந்து பார்த்தாரா?'

'நான் இங்கே இருப்பதாக அவளுக்குத் தெரிவித்தது யார்?'

'நான் வந்து அங்கு ஆகவேண்டியவை இருக்கின்றனவா?' என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி கேட்டு, வந்த அதிகாரியைத் துளைத்து எடுத்துவிட்டார்.



அங்கிருந்தவர்களைச் சற்று வெளியே சென்றிருக்கச் சொல்லிவிட்டு, வீரமாதேவி கேட்டாள் :

"பேரரசரே! பழையாறையில் இருந்து தங்கள் இருப்பிடம் தேடிச் செய்தி வந்திருக்கிறது என்றால் மிக முக்கியமானதாக இருக்க வேண்டும்.

"இளவரசியாருக்குக் கடும் வயிற்றுவலி ஏற்பட்டிருப்பதால்தான் அவர்கள் தங்களுக்குச் செய்தி அனுப்பி இருக்கிறார்கள். தாமதமின்றிப் பழையாறைக்குச் செல்வதுதான் நியாயமானது" - வீரமாதேவி கூறியது கேட்டுப் பேரரசர் புன்முறுவல் கொண்டு, "தேவி, உன்னை வெறுக்கிறவர்களை நீ ஆதரிக்கிறாயே! உன் குணம் புரியவில்லையே" என்றார்.

"விவாதிக்க நேரமில்லை, பேரரசரே! உடனே புறப்படுங்கள்" - வீரமாதேவியின் குரலில் கட்டளை இருந்தது.



தனக்குள்ளேயே அவளைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்ததை இராசேந்திரன் இப்போது வெளியே புலப்படுத்தினார்.

"அரிந்தவன்மாதேவியிடம் உனக்குள்ள மதிப்பையும், மரியாதையையும் புலப்படுத்த வேண்டுமென்றால் நீ உடனே பழையாறைக்குச் செல்லலாம். என் சார்பில் அவளுக்கு ஆறுதல் கூறலாம். நாம் சொல்லாமலே மருத்துவர்கள் தகுந்த சிகிச்சை அளிப்பார்கள் என்றாலும், நீ அருகிருந்தால் அரிந்தவன்மாதேவிக்குப் புத்துணர்வும் புதுத்தெம்பும் ஏற்படும். பழையாறைக்கு நீ பயணப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறேன்!" என்றார்.





வீரமாதேவிக்கு ஒன்றும் புரியவில்லை.

தன்னை வெறுப்பவளிடமே சென்று அவளுக்கு ஆறுதல் சொல்லச் சொல்கிறார், அரசர். என்னைச் சோதனை செய்வதற்கா?

"தாங்கள் வராமல் நான் மட்டுமா?" வீரமாதேவி பேரரசரை ஏறிட்டுப் பார்த்துக் கேட்டாள்.

"மிக முக்கியமான செய்தியை எதிர்பார்த்திருக்கிறேன். கருவூர் தேவர் வருவதாகச் செய்தி வந்திருக்கிறது. நானில்லாமல் இருப்பது சரியன்று. நீ போய் வா, வீரமாதேவி! தாமதப்படுத்தாதே. விவாதிக்க நேரமில்லை. உடனே புறப்படு!"

**ப**ழையாறை மாளிகையில் அரிந்தவன் மாதேவியை வீரமாதேவி சந்தித்தாள். இருவரும் திடுக்கிட்டனர்.

தகுந்த வரவேற்பு பழையாறை மாளிகையில் தனக்குக் கிடைக்கவில்லை என்பதை வீரமாதேவி உணர்ந்தாள். என்றாலும், அரண்மனை மருத்துவரிடம் அதிகாரத்துடன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்ததை மற்றவர்கள் கேட்டு, அரிந்தவன் மாதேவியிடம் சொன்னார்கள்.

"சக்கரவர்த்தியின் கட்டளை என்கிறாள். உடனே புறப்பட்டுச் சென்று பார்த்து வருமாறு பேரரசர் வேண்டிக் கொண்டாராம். மிக முக்கியப் பணி இருப்பதால் அரசர் வரவில்லையாம். 'என் சார்பில் அருகே இருந்து கவனித்துக்கொள்' என்று அரசர் சொல்லி இருக்கிறாராம்."

இதைக் கேட்ட பட்டத்தரசியும், மற்றவர்களும் ஆத்திரமடைந்தனர்.

"பேரரசருக்கு அப்படியென்ன மிக முக்கியமான பணி?" என்று பட்டத்தரசி கேட்டாள்.

வீரமாதேவி கூறிய மறுமொழி அவர்களைச் சீறியெழச் செய்தது.

வனப்பகுதியை அழித்து புதிய நகரத்தை நிர்மாணிக்கப் போவதாகவும், அங்கு பெரிய கோயில் - தஞ்சை புரியிலுள்ள பெருவுடையார் கோயிலைவிடப் பெரிய கோயிலைக் கட்டப் போவதாகவும், அதற்காக சிற்பிகள் பலர் அங்கே வரப்போவதாகவும், நாட்டியம் கற்றுக் கொடுக்கும் கலையகத்தில் சோழ நாட்டினின்று நூற்றுக் கணக்கானவர்

களுக்கு நாட்டியப் பயிற்சி அளிக்கப் போவதாகவும், நகரத்திற்குத் தன் பெயரைச் சூட்டப்போவதாகவும், பொறாமைப்பிடித்த அரிந்தவன் மாதேவியைச் சந்திக்கத் தன்னைப் பேரரசர் வற்புறுத்தி அனுப்பியதாகவும் மிகக் கம்பீரமாகவும் குரலில் செருக்குடனும் வீரமாதேவி கூறியது கேட்டு, பஞ்சவன்மாதேவியும், மற்றவர்களும் சீறியெழுந்தனர்.

அவர்கள் உடலில் பாயும் குருதியெல்லாம் பொறாமை, ஆத்திரம், சீற்றம் இவற்றால் கொதித்தது.

"உன் பெயரில் நகரமா? பெரிய கோயிலா? உன்னை வற்புறுத்தி இங்கு அனுப்பினாரா? உனக்கு என்ன உரிமை? இந்த நாட்டில் வாழும் எளிய குடிமகள். அரச அந்தஸ்தை ஒரு நாளும் நீ அடைய முடியாது. அரசரிடம் உனக்குள்ள நெருக்கத்தால், நீ செல்வாக்குடன் திகழ்கிறாய். உனக்குள்ள செல்வாக்கை ஒழிக்காமல் நாங்கள் ஓயமாட்டோம்" என்று அவர்கள் கூவினர். எல்லாரும் ஒருசேரப் பேசியதால் வார்த்தைகளில் குழப்பம்!

வீரமாதேவி அமைதியாகப் பேசினாள் : "அரச குடும்பத்தில் மிக உயர்ந்த இடத்தில் வீற்றிருப்பவர்கள் என்பதற்காகத் தங்களுக்குத் தரும் மரியாதையை நான் குறைக்கப்போவதில்லை. ஆனால், சோழர் குலத்து மகராசிகளே! உங்களுக்கு ஒனறு இப்போது சொல்வேன். அரசரின் அன்பு இதயத்தினின்று என்னை கீழே வீழ்த்த ஒருவராலும் முடியாது. தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவும், என் அன்புக்கு இனியவர் நிர்மாணிக்கப் போகும் மற்றொரு பெரிய கோயிலை போலவும் என் பெயரும் சூரிய சந்திரர் உள்ள வரை அழியாமல் இருக்கப் போகிறது".

"ஓஹோ" என்று அவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

"எங்கள் எதிரே நீ ஒரு புழு. உன் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. உன் பெயரை அந்தக் கோயிலுக்குப் பேரரசர் சூட்டுவார் என்று கனவிலும் நினைக்காதே. அங்கே கோயிலும் கட்டப்படப் போவதில்லை; புது நகரமும் எழப் போவதில்லை. அப்படியொன்று நடந்தால்தானே அந்தக் கோயிலுக்கும், நகரத்திற்கும் உன் பெயரைச் சூட்டுவார்கள்? 'வீரமாதேவிச்சரம், வீரமாதேவிபுரம்' என்றழைப்பார்கள் என்று வீண் மனப்பால் குடிக்காதே வீரம்மா! நீ அந்த இடத்திற்குத் திரும்பிப் போக முடியாது.



போனாலும் அரசரைச் சந்திக்கப் போவதில்லை. உன் பெயர் வீரமாதேவியாகவும் இருக்கப் பாவதில்லை. இருந்தால்தானே அழியாமல் இருப்பதற்கு! உன்னை வீரம்மாளாக ஆக்கி, மீண்டும் கொள்ளிடக் கரைக்கே அனுப்பாவிடில் நான் பேரரசரின் பட்டத்தரசியல்லள். நீ இப்போது போகலாம்" என்று அரசி ஆவேசத்துடன் பேசினாள்.

வீரமாதேவி சிரித்தாள். அந்தச் சிரிப்பில், அரசியாரை அவமதிக்கும் தன்மை இருந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இடுப்பில் கை வைத்துக் கொண்டு எழுந்து நின்றாள். மெல்ல நடந்து வந்தாள். பஞ்சவன் மாதேவியின் முகத்துக்கு வெகு அருகே தன் கையை நீட்டி; "இந்த நாட்டின் அரசி என்பதற்காக நான் தங்களுக்கு இந்தக் கணம் வரை மரியாதை தருகிறேன். பழுவேட்டரையர் குலத்தில் வந்தவள் என்பதற்காக அன்று. என் அபிமானத்திற்குரிய, என் இதயத்தின் அரியணையிலிருந்து என்றும் அழிக்கமுடியாத சக்கரவர்த்தி ஆளும் நாடான சோழப் பேரரசின் அரசி என்பதற்காக மிகவும் அடக்கமாக இருக்கவேண்டியிருக்கிறது. ஆனால், இப்போது நீங்கள் அரசி என்ற தர்மபீடத்திலிருந்து இறங்கி பொறாமை பிடித்த பெண்போல் பேசுவதால் நானும் அதற்கு ஏற்றபடி என் குணத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

"பஞ்சவன் மாதேவி அவர்களே! மனத்தில் உள்ள பொறாமையைக் கொட்டித் தீர்த்து விட்டீர்கள். உங்கள் வாய்மொழிப்படியே உங்களை பேரரசரின் பட்டத்தரசிப் பதவியிலிருந்து நொடியில் இறக்கிவிட முடியும். மீண்டும் என்னை பழைய வீரம்மாளாக மாற்றிக் கொள்ளிடக் கரைக்கு அனுப்பு முடியாது. நான் சோழச் சக்கரவர்த்தியின் இதய அரியணையில் ஈடு இணையில்லாமல் அமர்ந்திட்டவள். வருங்காலத்தில் உங்கள் பெயரைச் சொல்வதற்கு ஒருவர்கூட இருக்கப்போவதில்லை. சோழ நாட்டின் பெயர் உள்ளளவும், மூவுலகும் ஆளும் பரகேசரி இராசேந்திர சோழச் சக்கரவர்த்தி அவர்களின் பெயர் உள்ள அளவும் என் பெயரும் அழியாது நின்று நிலவப் போகிறது. அப்படிப்பட்ட மகத்தான செயலொன்றைப் புரிந்து என் பெயரை நிலைநாட்டிக் கொள்ளாவிடில் என் பெயர்,

வீரமாதேவி அல்ல; சோழப் பேரரசரைக் கைபிடித்த இளவரசிகள் என்ற உரிமையையோ பயன்படுத்தினாலும் என் சபதம் நிறைவேறாமல் தடுக்க முடியாது".

வீரமாதேவி மெல்லப்பேசிக் கொண்டே, பஞ்சவன் மாதேவியின் மிக அருகே நெருங்கி தன் சபதத்தை உரத்த குரலில் கூறியது கேட்டு அந்தக் கூடத்தில் இருந்தவர்கள் நடுநடுங்கி விட்டனர்.







## 57. சித்தரைத் தேடி...

வீரமாதேவி, பழையாறையிலிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டாள்.

அவள் சென்ற பிறகு, மழை விட்டும் தூவானம் விடா தது போல் பஞ்சவன் மாதேவியும், அரிந்தவன் தேவியும் வீரமாதேவியைப் பற்றியே பேசிக் கொண்டார்கள். அவளைத் தூற்றினார்கள். அவளைக் குரூரமாக வர்ணித் தார்கள்.

"என்ன சொன்னாள் பார்த்தீர்களா? நாம் பொறாமை பிடித்தவர்களாம். பட்டத்தரசிப் பதவியிலிருந்து என்னை நொடியில் இறக்கி விடுவார்களாம்" பஞ்சவன் மாதேவி சீறினாள்.

வீரமாதேவிக்கு இவ்வாறு பேச யார் உரிமை கொடுத் தார்கள்?

"தேவி! சோழநாட்டின் அரசி என்பதைத் தாங்கள் மறந்துவிட்டீர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. நேற்று வந்தவள் பேசி விட்டுப் போகிறாள். மரியாதை யின்றிக் கையை நீட்டி நீட்டிப் பொல்லாங்கு பொழிந்து விட்டுப் போகிறாள். நீங்கள் கேட்டுக் கொண்டிருக் கிறீர்கள். ஒரு வார்த்தை பேசியவுடனேயே காவலர்களை அழைத்து அவள் நாக்கைத் துண்டாடச் செய்திருக்க வேண்டாமா?" அரிந்தவன் தேவி அரசியாரை நோக்கிச் சற்று அதிகாரத்துடனேயே கேட்டாள்.

"அவள் சபதமிடுகிறாள். நாம் அனைவரும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

"வருங்காலத்தில் நம் பெயரைச் சொல்வதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்களாம்.

"சோழநாட்டின் பெயர் உள்ளளவும் மூவுலகும் ஆளும் பரகேசரி இராசேந்திர சோழ சக்கரவர்த்தி அவர்களின் பெயர் உள்ளளவும் என் பெயர் அழியாது நின்று நிலவப் போகிறது' என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறாள்.

'அழியாது பெயர் நின்று நிலவுவதற்கான செயலொன்றைப் புரியப் போகிறேன். அப்படியோர் அரிய செயல் செய்யாவிட்டால், என் பெயரை நிலை நாட்டிக் கொள்ளாவிட்டால் என் பெயர் வீரமாதேவி அன்று' எனச் சபதம் செய்து விட்டாளே!" பஞ்சவன்மாதேவி வாய் விட்டுப் புலம்பினாள்.

"அவள் இவ்வாறு சொல்வதன் அடிப்படைக் காரணம் என்னவாக இருக்கும்?" அரிந்தவன் தேவி கேட்டு அவளே அதற்கு விடை பகன்றவாறு, "நம் சக்கரவர்த்திதான் வீரமாதேவி இவ்வாறு பேசுவதற்கும் மமதை பிடித்து அலைவதற்கும் காரணம்".

"அவள் பெயர் அழியாதிருக்க அரிய செயல் என்ன செய்யப் போகிறாள்?"

"அதுதான் சொல்லிவிட்டாளே! வளப் பகுதியை அழித்துப் புதிய நகரத்தை அமைக்கப் போகிறாளாம். அங்கே பெரிய கோயில் ஒன்றைக் கட்டப் போகிறாளாம். சிற்பிகளை அழைத்து வரப்போகிறாளாம். புதிய நகரத்திற்குத் தன் பெயரைச் சூட்டப் போகிறாளாம். வீரமாதேவிபுரம் என்று பெயரிட்டு விட்டால் காலகாலத்திற்கு அவள் பெயரால் அந்த நகரத்தை ஆழி சூழ் உலகிலுள்ளவர்கள் அழைப்பார்கள் அன்றோ?"

பஞ்சவன்மாதேவியும், அரிந்தவன் தேவியும் ஏதும் பேசாமல் மௌனமாயிருந்தார்கள். புதிதாக ஒன்றைக் கண்டு பிடித்து விட்டவள்போல் பஞ்சவன்மாதேவி பரபரப்புடன் கூறினாள்;

"காடுகளை வெட்டினால்தானே நகரத்தை அமைப்பாள்! நகரத்தை அமைத்தால்தானே பெரிய கோயிலைக் கட்டுவாள்! பெரிய கோயிலைக் கட்டினால்தானே அதில்



அற்புதச் சிற்பங்களை அமைப்பாள். சிற்பங்கள் அமைப்பதாயிருந்தால்தானே சிற்பிகள் வருவார்கள். நகரம் அமைந்தால்தானே நகரத்திற்கு வீரமாதேவியின் பெயரிடப்படும். 'வீரமாதேவிபுரம்' என்ற பெயர் இடப் பட்டால்தானே அது அழியாதிருக்கும்! அடிப்படையையே தகர்த்து விடுவோம்" என்றாள், பஞ்சவன்மாதேவி.

அரிந்தவன் தேவி தலையை அசைத்தவாறு கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு கவலையுடன் கூறினாள்: "தேவி, கேட்க நன்றாகத்தானிருக்கிறது. வீரமாதேவியைத் தடை செய்யும் சக்தி யாருக்கிருக்கிறது? அரசர் தாங்கள் சொல்வதைக் கேட்கப் போவதில்லை. அமைச்சர்கள் எடுத்துக் கூறுவார்களா என்பது சந்தேகமே! அமைதியான பணி, அதைத் தடை செய்வானேன் என்று அவர்களே கூறக் கூடும். யாரைக் கொண்டு வீரமாதேவியைக் கட்டுப்படுத்தப் போகிறீர்கள்?"

அரிந்தவன் தேவி கூறியதைக் கேட்டு பஞ்சவன் தேவி ஒரு கணம் திகைத்தாள். சிறிது சிந்தித்தாள்.

"காட்டை அழிக்க மரம் வெட்டும்போது நான் அங்கே செல்வேன், தடுப்பேன்" பஞ்சவன்தேவி வீரமுடன் பேசினாள்.

அரிந்தவன் தேவி தலையசைத்தாள். "முடியாது, முடியாது, தங்களால் முடியாது! யாராலும் முடியாது. அங்கே பணிகள் ஆரம்பமாகிவிட்டன. பணியைத் துரிதப் படுத்துவதற்காகவே சக்கரவர்த்தியும், மற்றும் பரிவாரங்களும் சென்றிருக்கிறார்கள். விஷப்பரீட்சை மேற்கொள்ளாதீர்கள். அவமானப்பட்டுத் திரும்புமாறு நேரலாம்" என்றாள்.

பஞ்சவன்மாதேவி அமைதியாகச் சிந்தித்தாள். பிறகு முகமலர்ச்சியுடன், உற்சாகமான குரலில் பேசினாள்.

"அரிந்தவன் தேவி! தக்கவரைக் கண்டுபிடித்து விட்டேன். அவர் சொன்னால் சக்கரவர்த்தி கேட்பார். வீரமாளும் தலைவணங்குவாள்" என்றாள்.

அரிந்தவன் தேவி வியப்புடன் அரசியை நோக்கினாள். 'தக்கவர்' யார் என்றறிய ஆவல் கொண்டாள்.

அரிந்தவன் தேவியை அழைத்து அவள் செவிக்கு மட்டும் கேட்கும்படியாக அவர் பெயரைச் சொன்னாள்.

"கருவூர்ச் சித்தர்".

'கருவூர்ச்சித்தர்' - அரிந்தவன்தேவி ஒரு முறை அந்தத் திருப்பெயரை உச்சரித்தாள். மெல்ல அவள் மேனி சிலிர்த்தது.

"தேவி! நல்ல யோசனை. நமது பேரரசர், சித்தர் பேச்சைத் தட்ட மாட்டார். அவரை நாம் சந்திப்போம். அவர் எங்கே இருப்பார்? அவர் இங்கு வருவாரா? சற்றும் தாமதமின்றி நாம் இயங்க வேண்டும்". இதுவரை சோர்ந்துப் படுத்திருந்த, அரிந்தவன் தேவி நிமிர்ந்து அமர்ந்தாள்.

"நாம் அழைத்தால் வரமாட்டார். அவர் இருக்குமிடம் செல்ல வேண்டும். நமக்கு அவரைச் சந்திக்கும் நற்பேறிருந்தால்தான் சந்திப்பார். என்ன செய்வதென்று தெரியவில்லை. புரியவில்லை. இதுவரையில் நான் எந்த அரசு அதிகாரிகளிடமும் நேரே பேசியதில்லை; கட்டளையிட்டதில்லை. ஒற்றர் படைத் தலைவர் பலமுறை எனக்கு வணக்கம் தெரிவித்துப் பேச முயன்றிருக்கிறார். என் ஆணைப்படி இயங்கவே ஒற்றர்களில் ஒரு பிரிவு இருப்பதாகவும் நான் இப்போதுதான் அறிந்தேன். சக்கரவர்த்திகளை நான் மணம்புரிந்து கொண்ட பிறகு, மாளிகையில் சுகபோக வாழ்வில் திளைத்து இருந்துவிட்டேன். எப்போதும் யுத்தகளத்திலும், வேற்று நாட்டிற்குச் சென்று போர் புரிவதிலும் பேரரசர் தன் காலத்தைக் கழித்துவிட்டார். மாளிகையிலும் 'நீ பெரியவள், நான் பெரியவள்' என்ற பூசலிலேயே காலத்தைப் போக்கிவிட்டேன். பொற்கொல்லரையும், நானா தேசத்து வணிகர்களையும் ரத்தின வியாபாரிகளையும் மாளிகைக் கூடத்திற்கு அழைத்து, ஆபரணங்கள் செய்வதிலும், நவரத்தினங்களின் சிறப்பை ஆராய்வதிலும் காலத்தைக் கழித்துவிட்டேன். காஷ்மீரத்திலிருந்தும் சீனத்திலிருந்தும் யவன நாட்டிலிருந்தும் வரும் பெருஞ்செல்வந்தர்கள் அளிக்கும் பரிசுகளை ஏற்று மகிழ்ச்சியுடன் காலம் கழித்துவிட்டேன். பேறு காலம், உடல் நலக் குறைவுக் காலம், திருவிழாக்கள் என்று காலங் கழித்து வேறு சிந்தனையில்லாமலேயே முதுமையை அடைந்து விட்டேன். இப்போது நினைத்து என்ன பயன்?

"முக்கோக்கிழானடிகள், வானவன் மாதேவி இவர்கள் எல்லாம் என்னை இலட்சியமே செய்ய மாட்டார்கள். நீ சற்று அன்புடன் பழகுவாய். அதற்கே மற்ற தேவிமார்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.



'அரிந்தவன் தேவி, பஞ்சவன் மாதேவியிடம் நெருங்கிப் பழகுவதற்கு ஏதோ காரணம் இருக்கிறது' என்று பேசிக் கொள்கிறார்களே" என்று கூறும்போது அரிந்தவன் தேவி குறுக்கிட்டு, "எனக்குத் தெரியும். அதுபோன்ற வம்புப் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளக் கூடாது" என

"என்னிடம் வந்து நம்பிக்கைக்கு உகந்தவர்கள் சொல்கிறார்களே!"

"எனக்கு ஒன்று தோன்றுகிறது. தங்களிடம் இது போன்ற செய்திகளைச் சேகரித்துச் சொல்பவர்களில் நம்பிக்கையான ஒரிருவரை அழைத்து, கருவூர்ச் சித்தர் இருக்குமிடத்தைத் தெரிந்து வருமாறு செய்யுங்கள்".

"ஆ! மிக நல்ல யோசனை. வயதில் என்னைவிட இளையவளெனினும் உனக்குள்ள அறிவு ஆற்றலைப் பாராட்டுகிறேன்" என்று கூறி பஞ்சவன் மாதேவியை



நோக்கி அரிந்தவன் தேவி மெல்லிய குரலில், "பட்டத்தரசிகளுக்குள் நான்தான் இளையவள் என்பதும், அழகானவள் என்பதும், என் அழகிற்காகவே இளவரசராயிருந்தபோது நம் அரசர் என்னை விரும்பி மணந்து கொண்டார் என்பதும் தங்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நெஞ்சில் தைப்பதுபோல் பேசினாள்.

ஒரு காலத்தில் அரிந்தவன் தேவிமீது பஞ்சவன் தேவிக்குப் பொறாமை உண்டு. திரிபுவனமாதேவியும், மூக்கோக்கிழானடிகளும் இறந்த பிறகு, பஞ்சவன் மாதேவிக்கு மதிப்பு உயர்ந்தது. இராசேந்திரனும் அவ்வப்போது பஞ்சவன் மாதேவியைச் சந்தித்து உரையாடி வந்ததால், பஞ்சவன்மாதேவி தன் பொறாமைக் குணத்தை மாற்றிக் கொண்டாள். அரிந்தவன் தேவியுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தாள். வீரமாதேவியை இராசேந்திரன் திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தி அறிந்த நாளிலிருந்து பஞ்சவன் மாதேவிக்கு உள்ளூர பயம் குடி கொண்டது. அரிந்தவன் தேவியிடம் நெருக்கமாகி வீரமா





தேவியைக் குறை கூறுவது, இழிவு படுத்துவதுபோல் பேசுவது, இராசேந்திரனிடமிருந்து அவளை எப்படியாவது பிரித்துவிட வேண்டுமென்பதற்குத் திட்டங்களை வகுப்பது - இப்படியாக அரிந்தவன் தேவியின் கருத்துகளுக்கு மதிப்பளித்தாள்.

"தேவி! நேரம் பொன்னானது என்பார்கள். ஒரு கணம் கூட நாம் சும்மாயிருக்க முடியாது. சித்தர் இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்கச் சொல்லுங்கள். நமது திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும்" என்று பஞ்சவன் மாதேவியைத் தூண்டினாள்.

சோழநாட்டுப் பேரரசி தன் அந்தரங்க ஒற்றர்களை முதன் முதலாக ஏவினாள்.

கருவூர்ச் சித்தர் இருக்குமிடத்தை இரு நாள்களுக்குள் அறிந்து வந்துத் தெரிவித்தனர்.

பஞ்சவன்மாதேவியும், அரிந்தவன்தேவியும் சில பணிப் பெண்களுடன், மெய்க் காவலர்களுடன் கருவூர்த் தேவரைச் சந்திக்கப் புறப்பட்டார்கள்.





## 58. கங்கை நீரும் கண்ணீரும்

**ப**ழையாறையினின்று பல்லக்குத் ?ில் பஞ்சவன் தேவியும், அரிந்தவன் தேவியும் புறப்படும்போது, மெய்க் காப்பாளர்களிடம் அரசி சொன்னாள் :

"நாங்கள் செல்லும் இடம், காரிய காரணங்கள் மிக இரகசியமாக இருக்க வேண்டும்" என்று, பட்டோலைப் பெருமானிடமும் தெரிவித்தாள்.

**இரா**சேந்திர சோழ சக்கரவர்த்திகளுடன் தஞ்சையி னின்று புறப்பட்ட பட்டோலைப் பெருமானை, பழையாற யிலேயே இருக்குமாறு அவர் சொல்லி வீரமாதேவியுடன் புறப்பட்டார். ஏன் என்று வீரமாதேவிக்கும் தெரிய வில்லை.

"வீரமாதேவி! சில நிகழ்ச்சிகள் அரசியலில் மிக முக்கியமானவருக்குக் கூடத் தெரியாமல் இருப்பது நல்லது. பட்டோலை நாயகத்திடம் நாள்தோறும் நாட்டு நடப்பை எழுதுமாறு பணிப்பேன். இப்போது நாம் செய்வது, இன்னும் சில நாள்கள் கழித்துத் தெரியட்டும் என்பதற்காகவே, அந்த அதிகாரிகளைப் பழையாறை யிலேயே சில நாள்கள் தங்குமாறு பணித்தேன்!" என்று கூறினார், இராசேந்திரன்.

"சில நிகழ்ச்சிகள் மிக முக்கியமானவருக்குக் கூடத் தெரியக் கூடாது என்பது அரச இரகசியமாயிருப்பதால்



நான் ஏன் என்று கேட்கவில்லை. முக்கியமானவர் களுக்குத் தெரியக் கூடாதென்பதால் நான் மிக முக்கிய மானவளா இல்லையா என்பதை உறுதி செய்து கொள்ள லாமா? மிக முக்கியமானவள் நான் என்றால் எனக்குத் தெரியக் கூடாது. தெரிவதில் தவறில்லை என்றால் நான் முக்கியமானவளில்லை அப்படித்தானே?" - வீரமாதேவி யின் கேள்விக்கு மறுமொழி கூறமுடியாமல், தேவியைக் கூர்ந்து நோக்கினார்.

அவளுடைய கூர்மையான அறிவிற்காக அவளைப் பாராட்டத் துடித்தார். அவளை அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும்போல் தோன்றியது. உச்சியிலும் இதழ்களிலும் முத்தமிட வேண்டும் என்று தோன்றியது.

ஒரு கணம் அந்த மாயை அவர் கண்களை மறைத்தது. மறுகணம் தன் நிலை உணர்ந்து, "வீரமாதேவி! உன் அறிவுத் திறமையைப் பாராட்டுகிறேன். நீ வேறு, நான் வேறா? மிகமிக வேண்டியவர்களுக்கும் அப்பாற்பட்டவள் நீ. உனக்கு நான்; நம் உறவுமுறை விசித்திரமானது. கலை நம்மைப் பிணைத்திருக்கிறது. அதனால் கலை தொடர்பாக நாம் எடுக்கும் முடிவை மற்றவர்கள் சில காலம் அறியக் கூடாது என்பதற்காகவே பட்டோலைப் பெருமகனாரை வருமாறு சொல்லவில்லை. இன்றும் பார்த்தாயா? திருமந்திர ஓலை நாயகம் வரவில்லை; உடன் கூட்டத்தாரை அழைக்கவில்லை. கட்டியங்காரனும் அழைக்கப்படவில்லை. என்னுடனிருந்து என் ஏவலை நிறைவேற்றுவோர் ஒருவரும் வரவில்லை. கவனித் தாயா?" என்று கேட்டார்.

வீரமாதேவி சிறிது மௌனமாயிருந்து பிறகு எதையோ நினைத்துச் சிரித்தாள்.

"அந்தக் கட்டியங்காரனை நினைத்தால் சிரிப்பு வரு கிறது. அவனுடைய உடையும் குரலும் - கையிலே வெள்ளிப்பூண். அதன் முகப்பில் புலி உருவம். அவர் மீசை. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதுபோல் 'பரகேசரி இராசேந்திர சோழ தேவர் வருகிறார் வருகிறார் வருகிறார்' என்று அவர் முழங்கு வதும் பரகேசரி என்று சொல்வதற்கு முன்பு அவர் கூறும் தங்களைப் பற்றிய பெருமைச் சொற்கள்; ஆகா! கேட்டுக் கொண்டே இருக்கலாம். ஆனால், அவர் ஒரு

தடவைகூட 'வீரமாதேவியும் உடன் வருகிறாள் வருகிறாள் என்று கூறியதில்லை!" என்றாள்.

"இனி கூறுமாறு சொல்கிறேன். தேவி! நமக்காக கருவூர்த் தேவர் காத்திருப்பார். இந்தப் பூவுலகிலேயே கண்கண்ட தெய்வமான சித்தர் அருளால்தான் நாம் வாழ்கிறோம். அவர் இன்று நமக்குப் பல யோசனைகளை கூறப் போகிறார். அவருடன் நாம் பேசும்போது மற்ற வர்கள் இருக்கக் கூடாது".

"தங்கள் சகோதரி?"

"கூடாது".

"சிற்பி".

"கூடாது".

"அப்படியென்றால்?"

"சித்தர், நீ, நான் மட்டுமே! இன்று மந்திரபூர்வமான செயலொன்று உருவாகப் போகிறது. நம் வாழ்க்கையில் திருப்புமுனை. நம் இலட்சிய மாளிகையின் கால்கோள் விழா. இந்தப்பிறவி எடுத்த பயனை நான் பெறப் போகிறேன்".

"பிறவிப் பயன் எனக்கில்லையா?"

"நான் என்று சொல்லும்போது நீயும் உட்பட!"

"ஓ! மாதொரு பங்கன்; அர்த்தநாரி!"

"ஆமாம்! சிவனும் பார்வதியும் எப்படியோ அப்படியே தான் நாம். காம, குரோதங்களுக்கு அப்பாற்பட்ட தெய்வ நிலையை நாம் அடைந்து விட்டோம். அதை நாம் உறுதி யுடன் கடைப் பிடிக்கிறோமா என்று கருவூர்த்தேவர் சோதனை செய்து வருகிறார். சோதனை முடிந்து நம் இலட்சியக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் விழா வரை அவர் காத்திருப்பார்".

வீரமாதேவியின் மெய் சிலிர்த்தது. "பேரரசரே! என் இதய நாயகரே! என் இடது தோளும் கண்ணும் துடிக் கின்றன. கட்டப்படும் கோயிலில் நம் இருவர் சிலைகளும் அமைய வேண்டும் என்ற என் எண்ணத்தைத் தேவரிடம் சொல்லலாமா?"

"நாம் ஒன்றுமே சொல்லக் கூடாது. எல்லாம் உணர்ந் தவர்! அவர்".



காட்டின் நடுவே, முன்பே உருவாகியிருந்த வெட்ட வெளிக்கு இராசேந்திரனும் வீரமாதேவியும் மட்டும் சென் றடைந்தார்கள். அவர்கள் வருவதற்கு முன்பே கருவூர்ச் சித்தர் அங்கிருந்த பாதை ஒன்றில் அமர்ந்து யோக நிஷ்டையிலிருந்தார்.

இராசேந்திரனும் வீரமாதேவியும் வருவதுணர்ந்து அவர், சைகையால் அவர்களை வரவேற்று ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினார்.

ஈரமாயிருந்த மணல் வெளியில் கோலமிடப்பட் டிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள்.

"இராசேந்திரா! நன்றாகக் கவனி! இதுதான் நீ கட்ட விருக்கும் சிவபெருமான் திருக்கோயில்.

"பெரிய லிங்கம்; பெரிய ஆவுடையார். மிகப் பெரிய விமானம். மண்டபம், திருச்சுற்று, கருவறையின் இருபுற மும் துவார பாலகர்கள், மேல் மாடம், அதற்கு மேல் மாடம் இன்னும் சொல்கிறேன்.

"வீரமாதேவி! இராசேந்திரன் திருக்கரத்தைப் பிடித் துக் கொள்! இருவரும் இங்கே வரையப்பட்ட கோயிலின் வரைகோடுகளைச் சுற்றி வாருங்கள். கூர்ந்து கவனி யுங்கள்.

"கோயில், விமானம், கோபுரம், திருச்சுற்று, பெரிய நந்தி, மதில், கோயிலுக்கு வெளியே வீதிகள், வீதிகளைத் திட்டமிட்டு அமையுங்கள். மாளிகை கட்டுங்கள், சுற்றுக் கோட்டை மதில் கட்டுங்கள், புறநகரங்களை அமையுங்கள். ஓ! நமசிவாய - இங்கே ஒரு தட்சிண கைலாயம் அமை யட்டும்.

"ஓ! இராசேந்திரா! சோழநாட்டில் நான் சுற்றி வந்த காலம் முடியப் போகிறது. பொதிகைச் சாரலில் நான் தவஞ் செய்யச் சென்று விட்டால் நான் மீண்டும் வர மாட்டேன். இன்னும் இரு நாள்களில் வடக்கே கங்கைக் கரைக்குச் செல்கிறேன். கங்கை வழியே கைலாசம் செல் கிறேன், திரும்பி வரும் போது சோளீச்சரம் கட்டி முடிக் கப்பட்டிருத்தல் வேண்டும், நகரம் உருவாகியிருக்க வேண்டும். இராசேந்திரா! மற்றுமொரு மகத்தான பணியை உன்னிடம் கூறப் போகிறேன். இங்கே, தட்சிண கைலா யம் உருவாகிக் கொண்டிருக்கும்போது, நீ கங்கைக்

கரைக்குச் சென்று அங்கே புனித நீராடி கங்கை நீரைக் கொண்டுவர வேண்டும். சோளீச்வரருக்கு கங்கையின் புனித நீரால் திருமுழுக்காட்ட வேண்டும்".

வீரமாதேவி பயபக்தியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். விழிநீர் அருவி போல் வழிந்து அவளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. உதடுகள் உணர்ச்சி மிகுதியில் துடித்தன.

"வீரமாதேவி!" என்று கருவூர்ச் சித்தர் அழைத்தார்.

மிகவும் பயபக்தியுடன் வீரமாதேவி அவர் அருகே வந்து பாதங்களைக் கண்ணீரால் குளிப்பாட்டினாள்.







## 59. கங்கைக் கரை நோக்கி...

கருவூர்ச் சித்தர் புறப்பட்டு விட்டார். இரு கரங்களையும் உயர்த்தி வீரமாதேவிக்கும், இராசேந்திரனுக்கும் ஆசி அளித்துப் புறப்பட்டு விட்டார். பறவைகள் நின்று வணங்கின. காட்டு மயிலொன்று நின்று பார்த்து அவர் அருளுக்கு ஏங்கியது. பூங்கொத்துகள் நிறைந்த மரக் கிளைகள் தாழ்ந்து வணங்கின. அவருக்கு என்ன வயதிருக்கும்? புயல் போன்ற நடை, புகை மெல்ல மறைவது போல், கானகப் பாதை வழியே சென்று மறைந்தார் நடந்தாரா! பூமியில் பாதங்கள் பதிகின்றனவா!

வீரமாதேவியும், இராசேந்திரனும் நின்ற இடத்திலிருந்து அசையாச் சிலையாக அருளாளரை கண் இமைக்கவும் மறந்து, நெஞ்சாஞ்சலி செலுத்தி நின்று கொண்டிருந்தனர்.

"தேவி, வா போகலாம்! செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன. சித்தர் மிக விரைவில் திரும்பி வருவார். அவர் வருவதற்குள் நாம் மேருவையே இங்கு கொண்டு வர வேண்டும். வா போகலாம்" என்று வீரமாதேவியின் தோளை மெல்லத் தொட்டு, அவளைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தார், இராசேந்திரன்.

உணர்ச்சி மிகுதியால், பக்திப் பரவசத்தால் வீரமாதேவி விழிகளிலிருந்து அருவி நீராய்க் கண்ணீர் பெருகியது.

அவள் விழிநீரை மெல்லத் துடைத்து, "சித்தர் எங்கும் போய்விடவில்லை; சித்தர் வடக்கே இமயமலைச் சாரலுக்குச் செல்கிறார். திரும்பி வருவதாகத் தெரிவித்திருக்கிறாரே. அவர் திரும்பி வருவதற்குள் இந்தத் தட்சிணக் கைலாயம் கட்டி முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நாம் மிக வேகமாக இயங்க வேண்டும்; மற்றவரையும் இயக்க வேண்டும். வா, போகலாம்" என்று இராசேந்திரன் வீரமாதேவியை சமாதானப்படுத்தி அழைத்தார்.

கட்டப்பட வேண்டிய கோயிலின் வரிவடிவம் வரையப்பட்ட பூமிக்கருகே இருவரும் நின்று வணங்கினர். "இந்த இடத்தைச் சுற்றி வேலி அமைத்து என்றும் பாதுகாக்க வேண்டும்" என்றார், இராசேந்திரன்.

"புனிதமான இடமாக இதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். சித்தர் கரம் பட்ட பூமி, இது" என்றாள், வீரமாதேவி.

"அவர் அருளால், கோயில் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஆனால்..." என்றார், இராசேந்திரன்.

"தங்களுக்கு என்ன சந்தேகம்?"

"சந்தேகமில்லை... ஒருவித அச்சம்".

"அச்சம் என்ற சொல் தங்கள் மனதில் எழுவதற்கே அஞ்சுமே...தாங்களா அச்சம் என்று சொல்வது?"

"சித்தர் இட்ட கட்டளையை மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்! வடக்கே கங்கைக் கரைக்குச் சென்று கருவூரார் திரும்பி வருவதற்குள் சோளீச்சரம் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சித்தர் கூறியுள்ளாரே..."

"அதில் என்ன தயக்கம்? அவர் அவ்வாறு சொன்னதால் தான், இறைவன் திருக்கோயில் திருப்பணியை விரைவில் முடிக்கும் வேகம் நம்மிடம் ஏற்படுகிறது".

"அதைச் சொல்லவில்லை. மற்றொரு மகத்தான பணியை அவர் கூறியிருக்கிறார். இங்கே தட்சிணக் கைலாயம் உருவாகிக் கொண்டிருக்கும்போது, நான் கங்கைக் கரைக்குச் சென்று, புனித நீராடி, கங்கை நீரைக் கொண்டு வந்து சோளீச்வரருக்கு அந்தப்புனித நீரால் முழுக்காட்ட வேண்டுமாம். அப்படியென்றால் இங்கே கோயில் திருப்பணியை நீதான் அருகே இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். தயக்கமே அங்குதான் தேவி..!" என்று இராசேந்திரன் கூறி, வீரமாதேவியை நோக்கினார்.



இப்போது அவர்கள் பேசிக் கொண்டே பூங்கொடியின் நடன அரங்கு அருகே வந்து விட்டனர். உள்ளே, நடனம் பயில்பவர்களின் பாதச் சதங்கை ஒலியும், தாள ஓசையும் கேட்டுக் கொண்டிருந்தன.

வீரமாதேவிக்கு ஒரு கணம் அவர் சொல்வது விளங்கவில்லை; விழிகளால் வினவினாள்.

"கங்கையில் நீராட என்னுடன் நீ வர இயலாது என்ற கவலைதான் தயக்கத்திற்குக் காரணம்".

"தங்களுடன் நான் வரமுடியாதா?"

"சித்தர் என்ன சொன்னார்? என்னைக் கங்கையில் நீராடிக் குடமுழுக்குக்குக் கங்கை நீர் கொண்டுவருமாறு சொல்லவில்லையா? நம் இருவரில் ஒருவர் இங்கு இருந்து கோயில் நிர்மாணப் பணிகளைக் கவனிக்க வேண்டாமா? நான் இங்கு இருந்து, கங்கைக் கரைக்கு நீ செல்ல முடியுமா? இருவரும் சென்றால், திருப்பணியை யார் மேற்பார்வை இடுவது?"

வீரமாதேவி புரிந்து கொண்டாள்.

"தாங்கள் பட்டத்து அரசியுடன் சென்று நீராடுவதுதான் தர்மம், நியாயம். பட்டத்து அரசியை அழைத்துக் கொண்டு செல்லுங்கள். அங்கே முப்பெரும் நதிகள் கலக்கும் இடத்தில் அவருடன் நீராடுங்கள். "நான் இங்கே இருந்து, திருப்பணிகளைக் கவனிக்கிறேன்" என்று வீரமாதேவி கூறினாள். கங்கையில் நீராட இராசேந்திரனுடன் செல்ல இயலவில்லையே என்ற வேதனையை அவள் சிறிதும் புலப்படுத்திக் கொள்ளவில்லை.

"நான் மிக மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். என் இலட்சியமே, கோயிலை மிக விரைவில் கட்டவேண்டும் என்பதே! புறப்படுங்கள், கங்கைப் பயணத்திற்கு ஆயத்தம் செய்யுங்கள். இப்பயணம் விரோதி நாட்டின்மீது படையெடுத்துச் செல்வதன்று. இது புனிதப் பயணம் என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்".

"ஆம் தேவி! இது புனிதப் பயணம். எதிரிகள் நாட்டின்மீது படை எடுத்துச் செல்வதன்று. ஆனால் என் இலட்சிய யாத்திரைக்குச் சாளுக்கியன் பெரும் தடையாக விளங்குவான் என்று தோன்றுகிறது".

"சாளுக்கியரா? அந்த நாட்டைத் தான் தாங்கள் எப்போதோ வென்று ஒன்றுமில்லாது செய்து விட்டீர்களே?"

"வென்று புலிக்கொடியை நாட்டினேன். அந்த நாட்டை நம் நாட்டுடன் இணைத்து ஒரே நாடாக்காததுதான் பெரிய குறை. எங்குமே அதுபோல் செய்வது நம் வழக்கமில்லை. தோற்றவர்கள் சிறிது காலத்திற்குப் பிறகு துளிர்த்து விடுகிறார்கள். படைப் பலத்தைப் பெருக்குகிறார்கள். சோழ நாட்டின் எல்லை நகரங்களிலுள்ள மக்களுக்குத் தொல்லை தருகிறார்கள். போரில் தோற்றபோது ஒப்புக் கொண்ட திரைப் பணத்தைச் செலுத்துவதில்லை. அதனால் மீண்டும் அந்த நாட்டின்மீது படை எடுத்துச் செல்ல நேர்கிறது. வீரமாதேவி! உன்னிடம் இந்தச் செய்திகளைச் சொல்லி, குழப்பமும் கவலையும் அடையச் செய்ய விரும்பவில்லை" என்று கூறிவரும்போது, "ஆட்சி முறையைப் பற்றி நான் அறிந்து கொள்ளக் கூடாதா?" என்று வீரமாதேவி கேட்டாள்.

"நாட்டரசி அறிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால்..." என்று சொல்ல முற்பட்டவர், நிறுத்தி விட்டார். "ஏதோ சொல்ல வந்தீர்கள், தொடக்கத்திலேயே நிறுத்திவிட்டீர்களே" என்று வீரமாதேவி கேட்டாள். "இல்லை தேவி! பேச்சை நிறுத்தவில்லை. நீ தெரிந்து கொள்ள வேண்டிய பல முக்கிய செய்திகள் இருக்கின்றன. அவற்றைவிடக் கோயில் திருப்பணி சம்பந்தமாக நீ அறிந்து நீயே முடிவெடுக்க வேண்டிய செயல்கள் ஏராளம், ஏராளம்! இரண்டொரு நாள்களில் மிக முக்கியமாக முடிவெடுக்க வேண்டியவற்றைப் பற்றி ஆலோசனை செய்ய, தஞ்சையிலிருந்து அமைச்சர் மண்டலத்தார் மற்ற அதிகாரிகளும் இங்கு வருகிறார்கள். அப்போது நீ உடன் இருந்து கவனித்துப் பலவற்றை அறிந்து கொள்ளலாம்" என்றார்.

சில நாள்கள் கழிந்தன. பஞ்சவன் மாதேவியும், அரிந்தவன் தேவியும் கருவூராரைச் சந்திக்க முடியாமல் திரும்பினர்.



**சோ**ழ மன்னர் இராசேந்திர சோழ தேவரைச் சந்திக்க, தஞ்சாபுரியிலிருந்து ஐம்பெருங்குழுவில் அமைச்சர், படைத்தலைவர், ஒற்றர்கள் ஆகிய மூவரும் அதிகாரிகளான கரும விதிகள், கனகச் சுற்றம், நாடு காவலதிகாரி, அரசர் அவ்வப்போது இடும் கட்டளைகளைக் குறிப்பெடுத்து திருமந்திர ஓலைச் செய்திகளை நிறைவேற்றும் அலுவலர் ஆகியோர் பேரரசர் தங்கியிருக்குமிடத்திற்கு மிகப் பிரயாசையுடன் வந்து சேர்ந்தனர்.

"காட்டின் நடுவே கோயில் கட்டுவதற்காக இங்கேயே அரசர் தங்கிவிட்டால் சோழ நாட்டு ஆட்சி முறையில் தொய்வு ஏற்படாதா?" என்றும், "ஒவ்வொரு முறையும் நாமெல்லாம் இங்கு வந்து ஆணையைக் கேட்டுச் செயல்படுவதால் காலதாமதமாகும்" என்றும் அவர்கள் பேசிக் கொண்டனர்.

"தஞ்சாபுரியில் தங்கியிருப்பதில் அரசருக்கு ஏனோ விருப்பம் இல்லை. தஞ்சையில் தங்கியிருந்து ஆணையிட விரும்பாவிடில் பழையாறையில் வீற்றிருக்கலாமே" என்றும் பேசிக் கொண்டனர்.



காட்டுப் பகுதியின் நடுவே பனை ஓலையாலும், தென்னங் கீற்றாலும் வேயப்பட்ட சபை மண்டபம் போன்று அமைக்கப்பட்ட இடத்தில், அரசரை அதிகாரிகள் சந்தித்தனர்.

பயணக் களைப்பைப் பற்றியும், அவர்களது நலன்களையும் கேட்டறிந்த இராசராசன், தாம் அங்கு தங்கியிருப்பதன் நோக்கத்தை விளக்கினார்.

கருவூர்ச் சித்தரின் ஆசியையும் கோயில் திருமுழுக்குக்குக் கங்கையாற்று நீரைக் கொண்டு வர அவர் பணித்ததைப் பற்றியும் விவரித்தார். இவற்றையெல்லாம் முறைப்படி எடுத்துக் கூற நேரமில்லாமல் போனதைத் தெரிவித்தார்.

வீரமாதேவி, மன்னர்க்கருகே வீற்றிருந்து அங்கு நடைபெறுவனவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

தஞ்சாபுரியை விட்டுப் பேரரசர் இந்தக் கானகப் பகுதியில் தங்கி ஆட்சி செய்வதிலுள்ள இடர்ப்பாடுகளை ஐம்பெருங்குழுவினரும், எண்பேராயத்தினர் சிலரும் எடுத்துக் கூறினர்.





அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இராசேந்திரன் சொன்னார் : "எனக்கு உறுதுணையாயிருப்பவர்களான நீங்கள் கூறியவற்றைக் கேட்டறிந்தேன். தஞ்சாபுரியைப் போன்று ஒரு பெரும் நகரத்தை நான் நிர்மாணிக்கப் போவதைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். கோயிலுக்குரிய பெரும் நகரத்தை நிர்மாணிக்கவே இங்கு நான் தங்கியிருக்கிறேன். மிக விரைவில் நகரத்தை உருவாக்கும் பொறுப்பு உங்களுடையது. கோயிலை நிர்மாணிக்கும் பொறுப்பு இதோ இந்த தேவியுடையது" என்று கூறிவிட்டு வீரமாதேவியை நோக்கினார். அங்குள்ளவர்கள் வீரமாதேவிக்கு எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தனர்.

"அரசுப் பணிகள் தாமதமின்றி நடைபெற புதிய நகரம் உருவாகும் வரை, நாம் அமர்ந்து ஆட்சி செய்ய ஒரு நகரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளோன். சோழர் குல தெய்வம் வீற்றிருக்கும் தில்லைச் சிற்றம்பலத்தில் நாம் வீற்றிருந்து ஆட்சி செய்வோம். தஞ்சாபுரியிலுள்ள முக்கிய ஆவணங்களை அங்கு கொண்டு சேருங்கள். அதிகாரிகள் அங்கே சென்று விடுங்கள். சிறிது காலம்தான். பிறகு புதிய நகரம் உருவாகிவிடும். நான் கங்கைக் கரைக்குப் புறப்படுகிறேன். அங்கிருந்து கங்கையாற்று நீரைக் கொண்டு வந்து புதிய திருக்கோயிலின் கருவறையிலுள்ள சோளீச்வரருக்குப் புனித நீராட்டுவேன். இப்போதுள்ள கவலையெல்லாம் சோளீச்வரர் திருக்கோயில் கட்டுவதற்கு வேண்டிய கற்பாறைகளை உடனே கொண்டுவர ஏற்பாடு செய்வதுதான்!" என்றார்

இராசேந்திர சோழன், கங்கைக்கரைக்குச் செல்லப் போகும் செய்தியும் உடன் பட்டத்துஅரசி பஞ்சவன் மாதேவி செல்லப் போகிறார்கள் என்ற செய்தியும் அன்றே வெளியே பரவின.

கருவூர்ச் சித்தரைச் சந்திக்க வந்த பஞ்சவன் தேவியும், அரிந்தவன் தேவியும் இந்தச் செய்தி அறிந்து, பேரரசரைச் சந்திக்கக் கானகப் பகுதிக்குச் சென்றனர்.

வீரமாதேவியின் மீது ஏற்பட்டிருந்த கோபமும் பொறாமையும் மறைந்தன.

தீர்த்த யாத்திரையாகக் கங்கைக் கரைக்குச் செல்லப் புறப்பட்ட இராசேந்திர சோழர், அதற்கு முன்பு ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதில் முனைந்தார்.

தன் மூத்த குமாரன் இராசாதிராசனைத் தில்லையில் வீற்றிருக்கச் செய்தார். மதுரையிலிருந்து, பாண்டியர்கள் கலகம் செய்யாதிருக்கத் தன் இளைய மகன் சுந்தரனுக்கு சோழ பாண்டியன் என்று பெயர் சூட்டி அங்கேயே திறமையுடன் அமர்ந்து நிர்வகிக்குமாறு செய்தார்.

நாள்கள் விரைந்தோடின.

தில்லைச்சிற்றம்பலத்தில் நடராசப் பெருமானுக்கு ஆனித் திருமஞ்சன நிகழ்ச்சியைக் கண்டு களித்தபிறகு, வடக்கே புறப்பட நல்ல நாள் குறிக்கப்பட்டது.

முதல்நாள் இரவு, இராசேந்திரன் வீரமாதேவியைச் சந்தித்துப் நேரம்போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்ததில் பெரும் பகுதி, திருப்பணி மிக வேகமாக நடைபெற வழி வகைகளைப் பற்றியே அமைந்திருந்தது.

பாறைகள் கொண்டு வருவது, சிற்பப் பணிக்குத் தேவையான சிற்பிகள் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்றவற்றைப் பற்றியே இருவரும் பேசிக் கொண்டனர்.

இராசேந்திர சோழருடன் செல்லும் குழுவில் அதிகாரிகள், பணியாளர்கள் தவிர இராசராசப் பேரரையன் என்ற இளைஞன் உடன் இருந்ததை, வீரமாதேவி கவனித்தாள். "கங்கைப் பயணத்தில் இவன்தான் எனக்கு உறுதுணை" என்று வீரமாதேவியிடம் அறிமுகப் படுத்தினார். இது நாளில்லாது இப்போது அவனை அறிமுகப்படுத்துவதை அறிந்த வீரமாதேவி வியப்புற்றாள்.

பல குதிரைகள் பூட்டப்பட்டத் தேரில் பரகேசரி இராசேந்திர சோழ தேவர் ஏறி அமர்வதற்கு முன்பு ஆலம் சுற்றி, கண்ணேறு சுழித்து அவருக்கு நெற்றித் திலகமிட்டாள்! வீரமாதேவி. அருகே இருந்த பஞ்சவன் மாதேவியின் நெற்றியிலும் திலகமிட்டு வணங்கினாள்.

"பார்த்தாயா! நான் வென்று விட்டேன். உன்னிடமிருந்து பிரித்துப் பேரரசரை அழைத்துச் செல்கிறேன்" என்று பஞ்சவன் மாதேவி கூறுவதுபோல் அவள் விழிகளில் வெற்றிப் பெருமிதம் நிறைந்திருந்தது.

"பேரரசியாரே! சக்கரவர்த்திகளுடன் தாங்கள் உடன் செல்ல அனுமதித்ததே நான்தான். அவருடன் செல்வதை விட மிகப் பெரும் பணி எனக்கு இருக்கிறது. தாங்கள்



திரும்பி வரும்போது என் புகழ், பெருமை இவற்றைக் கண்டு சக்கரவர்த்திகள் என்னைப் பாராட்டிப் புகழ்ந்து பேசப் போகிறார்கள். அப்பொழுது யாருக்கு வெற்றி என்பதை, தாங்களே அறிந்து தோல்வியைப் பூட்டிக் கொள்வீர்கள்" என்று மறுமொழி கூறுவதுபோல் வீரமாதேவியின் பார்வை இருந்தது.

இராசேந்திர சோழர், குனிந்து வீரமாதேவியின் செழுமையான கன்னத்தில் முத்தமிட்டார். அப்பொழுது வீரமாதேவியின் விழிகளிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தி அவருடைய உதடுகளை நனைத்தது.

பரிவாரங்கள் புறப்பட்டன. செல்லும் இரதத்திலிருந்து இராசேந்திர சோழர் திரும்பிப் பார்த்துக் கையசைத்தார். பிரிவு சில மாதங்கள் அன்று; சில ஆண்டுகளுக்கு இருக்கலாம் - என்று தன்னைத் தேற்றிக் கொண்டாள், வீரமாதேவி.

அவள் எதிரே கம்பீரமாய் எழுந்து நின்றது, கங்காபுரியை அமைக்கும் திருப்பணி.





## 60. சோழநாட்டில் கங்கை

கங்கையைக் கொண்டு வரவேண்டும் என்ற புனித நோக்கத்துடன் பயணம் மேற்கொண்ட சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர், முதல் நாள் பயணத்திற்குப் பிறகு தில்லைச் சிற்றம்பலத்தை அடைந்தார். அங்கு மாளிகையில் தங்கி ஓய்வு எடுத்த பிறகு, வீரநாராயண புரத்துக்கருகே கடல் போல் காட்சியளித்த ஏரியைக் காணச் சென்றார்.

பல முறை அந்த ஏரிக் கரையைச் சுற்றி வந்திருக்கிறார். அக்கரை தெரியாது பரந்து விரிந்திருக்கும் ஏரியைக் காணும்போது அவர் மெய் சிலிர்க்கும். தன் முன்னோர் களின் திறமையை எண்ணி மகிழ்வார்.

இராசேந்திரன் தன் அருகே படைத் தலைவர்கள், விரர்கள் சூழ்ந்திருப்பதை விரும்பவில்லை. அந்தப் பரிவாரத்தினைச் சற்று முன்னதாகச் சென்று தங்குமாறு



கட்டளையிட்டார். இராசேந்திரனுடன் பல இரதங் களிலும், நான்கு காளைகள் பூட்டப்பட்ட பெரும் கூண்டு வண்டி களிலும் அறிஞர்கள் பலர் உடன் வந்தனர்.

வீரநாராயணபுரம் ஏரியைக் கண்டு மகிழ்ந்து வீர நாராயணர் திருக்கோயிலில் திருமாலை வழிபட வந்த இராசேந்திரன் தன் அருகே இருந்த ஈசானசிவ பண்டிதரை நோக்கி

''குருநாதரே! என் முப்பாட்டனார் பராந்தக சோழரின் நீண்டகால நோக்கத்தைக் கவனித்தீர்களா? அழகிய



கோயிலுக்கருகே நீர்நிலை ஒன்றை ஏற்படுத்தினார். அந்த ஏரிக்கு இறைவன் திருப்பெயரைச் சூட்டினார். நூறு ஆண்டுகளுக்குப் பிறகு வீரநாராயணபுரம் ஏரி சுற்றுப்புற மக்களுக்கு வாழ்வளிக்கிறது'' என்று வியப்புடன் கூறும் போது, பண்டிதர் புன்முறுவலுடன், ''பேரரசரே! பராந்தக சோழர் மாவீரர். தம் பெயர் நிலைக்க அவர் தம் வீரத்தை





மட்டும் நம்பி இருக்கவில்லை. திருக்கோயிலும், குளமுமே மக்களின் அன்றாட வாழ்க்கை உயர்வுக்கு உறுதுணையா யிருக்கும் என்று முடிவு செய்தார். திருச்சிற்றம்பலத்து விமானத்துக்குப் பொன் தகடு வேயவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உதித்தது. சைவத் தத்துவத்தை விளக்கும் மெல்லிய பொன் தகடுகள் கோயில் விமானத் தில் பதிக்கத் திட்டமிட்டுப் பணியைத் தொடங்கினார். மெய்யாகவே பொன்னம்பலத்தைப் பொன் ஒளி வீசச் செய்ய முயன்றார். அவர் காலத்தில் அந்தப் பணி ஈடேறவில்லை. கண்டராதித்தன் அந்தப் பணியை முடிக்கத் தன்னையே தியாகம் செய்து கொண்டார். பராந்தக சோழ தேவர் மறைந்து பல ஆண்டுகள் ஆகின்றன. அவர் புகழை இன்றும் நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றன தில்லை பொன் விமானமும், வீரநாராயணபுர ஏரியும். அதனால் அவருக்கு வீரநாராயணர் என்ற பெயரும் ஏற்பட்டது. பேரரசரே! தாங்களும் முப்பாட்டனார் வழி நடப்பதற்காக மகிழ்கிறேன், பாராட்டுகிறேன். பகீரதன் கங்கையைக் கொண்டுவர மிகப் பெரிய முயற்சியைக் கொண்டது போல் தாங்களும் திட்டமிட்டுள்ளீர்கள், என் பரிபூரண ஆசிகள்'' என்றார்.

பண்டிதரைப் பார்த்துக் கை கூப்பிய இராசேந்திரன், ''பேரறிஞரே! பல வழிகளில் எனக்கு நல்லுரைகள் கூறி நற்பணிகள் செய்யத் தூண்டி விடுகிறீர்கள். பயணம் மேற் கொண்டு விட்டேன், கங்கை நீரைக் கொண்டு வர. சிவபெருமானுக்குக் கங்கை நீரை அபிஷேகம் செய்யு மாறு இலகுளீச பண்டிதர் கூறியுள்ளார். புதிய நகரம் ஒன்றையும், புதிய கோயில் ஒன்றையும நிர்மாணிக்கத் திட்டமிட்டுவிட்டேன். கோயில் கட்டும் பணியை

வீரமாதேவியிடம் ஒப்படைத்து விட்டேன். கங்கை நீரைக் கொண்டு வரும்போது கோயில் கட்டி முடிக்கப்பட் டிருக்க வேண்டும் என்பதே என் பெரும் கவலை. கோயில் பணி முடியாவிட்டால், கொண்டு வரப்படும் கங்கைப் புனித நீரை என்ன செய்வது? ஒருவேளை கோயில் கட்டி முடிக்கப்பட்டு, கருவறையி லுள்ள சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, குறித்த முகூர்த்தத்தில் திருமுழுக்காட்ட கங்கை நீர் வராது போனால்? கருவூர்ச் சித்தர், கோயில் குடமுழுக்கு விழாவை முடித்து விட்டு ,பொதிகைமலைச் சாரலுக்குச் சென்றால் மீண்டும் திரும்புவதில்லை என முடிவெடுத் திருக்கிறார். கோயில் திருப்பணி இடையூறின்றி முடிவடைய வேண்டுமே, என்று மற்றொரு கவலை'' - பெருமூச்சுவிட்டார் இராசேந்திரன்.

ஈசான சிவ பண்டிதர் பலவகையிலும் இராசேந்திர னுக்கு யோசனை வழங்கி வழிநடத்தி வந்தவர். இராசேந்திரனின் மனக் கவலைக்குத் தக்க சமாதானம் கூற வரும்பினார். ஆனால் புதிய கோயில் கட்டுவதில் தன் யோசனையைக் கேட்கவில்லை என்ற மனக் குறை அவருக்கு உண்டு. ஆனால் அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல், இராசேந்திரன் எடுத்திருக்கும் முயற்சிகள் இரண்டும் மகத்தானவை என்பதை அவர் அறிவார். அவரால் தக்க ஆலோசனைகளே கூற முடியும். விரைவில் நிறைவேற்றி வைக்க அவரால் முடியுமா?

அவர் மெல்லிய புன்னகையுடன், ''என் அருமை சோழ தேவரே! தங்கள் மனக்கவலையை நான் அறியேன். தங்கள் முயற்சி இடையூறின்றி விரைவில் முடிய வாழ்த்துவதைத் தவிர என்னால் வேறென்ன செய்ய முடியும்? சிவபெருமான் அருள் தங்களுக்குப் பரிபூரண



மாக உண்டு. அதை வேண்டிப் பிரார்த்திக்கவும் நான் சித்தமாயிருக்கிறேன். ஒரே போதில் இரண்டு மாபெரும் பணிகளை நீங்கள் மேற்கொள்ளத் தங்களுக்கு ஆலோ சனை வழங்கியவர் யார் என்று நான் அறியவில்லை'' என்றார்.

தான் மிகவும் மதிக்கும் பண்டிதரின் மறுமொழி இராசேந்திரனுக்கு மன நிறைவை அளிக்கவில்லை.

''குருநாதரே! கங்கையில் நீராட வேண்டும் என்பது என் தந்தையின் வாழ்நாளில் இறுதிக் கால ஆசை. அவரால் கங்கைக் கரைக்குச் செல்ல முடியவில்லை. ஆனால் அவர் நினைவாக எழுப்பப்படும் ஆலயத்தில் நிர்மாணிக்கப்படும் சிவலிங்கத்திற்குக் கங்கை நீரைக் கொண்டு புனித அபிஷேகம் செய்ய வேண் டும் என்று முடிவு செய்தேன். தஞ்சைப் பெரிய கோயிலை போன்று பெரிய கோயிலைக் கட்ட வேண்டும் என்பது என் இலட்சியம். அதற்கு வீரமாதேவி பேராதரவு அளித்தாள். அங்கு சிற்பக் கூடமே நிறுவ வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு. அந்தப் பணிக்காகத் தன்னைத் தியாகம் செய்யத் துணிந்திருக்கிறாள். நெடுந்தொலைவுப் பயணம் வரக்கூடிய உடல்வாகுடன் உள்ள இளம் வயதினளான அவள் கங்கை நீரைக் கொண்டு வரும் அந்தப் புனிதப் பயணத்தில் என்னுடன் வராமல் காட்டுப் பகுதியிலேயே தங்கி, கோயில் திருப்பணியை விரைவில் முடிக்க அல்லும் பகலும் பாடுபடத் துணிந்துவிட்டாள். இப் பொழுது புரிந்ததா என் முயற்சிக்கு அடிப்படையானவர் கள் யார் யார் என்பது?'' என்று இராசேந்திர சோழ தேவர் கூறவும் பண்டிதரால் மறுமொழி கூற இயலவில்லை.

இராசேந்திரனிடம் மிக அன்பும், மதிப்பும் கொண்டு அவருக்கு அரிய யோசனைகளை அவ்வப்போது வழங்கி

வரும் பண்டிதருக்கு, கங்காபுரி யாத்திரையைத் தன்னைக் கேளாமலேயே இராசேந்திரன் மேற்கொண்டதில் மனக்குறை ஏற்பட்டது. அதை வெளிப்படையாகப் புலப் படுத்த விருப்பமில்லை.

இராசேந்திரன் மேற்கொண்ட இந்தக் கடுமையான பணிகளுக்குக் காரணம் இலகுளீச பண்டிதர் என்ற முடிவுக்கு வந்திருந்தார். சோழநாட்டுத் திருக்கோயில் களை மேற்பார்வையிட்டு அவற்றின் நிர்வாகத்தை மேற்கொண்டிருப்பவர் இலகுளீசர். அவர் யோசனை யாகத்தான் இருக்கவேண்டும் என்று பண்டிதர் முடிவு செய்தார். இராசராசன் நினைவாக மேற்கொண்டுள்ள பணியைப் பற்றிக் குறை சொன்னால் இராசேந்திரன் ஏற்கமாட்டார் என்பது பண்டிதருக்குத் தெரியும். அதனால் இலகுளீசரைச் சந்தித்துத் திட்டத்தில் மாறுதல் செய்வதென முடிவு செய்தார்.

''என்ன பண்டிதரே, மௌனமாகி விட்டீர்கள்? என்னுடன் கங்கைக்கரைக்கு வருகிறீர்களா?'' என்று இராசேந்திரன் கேட்டார்.

கங்கை யாத்திரைக்கு இலகுளீசரையும் அழைத்துச் செல்லும் முடிவு முன்பே செய்தது. 'பயணத்தில் உடன் வருபவர்கள் குழுவில் தன்னையும் இப்போது சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று அரசர் முடிவு செய்திருப்பது தன்னை ஒருவகையில் சமாதானப்படுத்தவே இருக் கலாம். ஹூம்' பண்டிதர் சிந்தனை சுழன்றது.

''பண்டிதரே! திடீரென சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர். தில்லையை விட்டு வெளியே வரச் சம்மதிக்கமாட்டீர் களோ? தங்கள் நிர்வாகத்திலுள்ள வேத பாட சாலைகள், தேவார இசைப் பள்ளிகள், இலக்கணப் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றைக் கவனிப்பதைவிட்டு கங்கைக்



கரைக்குத் தங்களை அழைத்துச் செல்வது சரியா என நானே யோசித்தேன். தங்களால் பல திங்கள் சிதம்பரத்தை விட்டு வெளியே தங்கியிருக்க முடியுமா என்றும் எண்ணினேன். தாங்களும் அதைத்தான் நினைக்கிறீர் களோ!'' இராசேந்திரன் பண்டிதரைக் கூர்ந்து நோக்கிக் கேட்டார்.

பண்டிதர் திடுக்கிட்டார். எவ்வளவு காலம்தான் சிதம்பரத்திலும், கல்விக் கூடங்கள் உள்ள இடங் களிலும் மட்டுமே தங்கியிருந்து, வெளி உலகை மறந்திருப்பது? அரசர் அழைத்தால் செல்லாமல் இருக்க முடியாது. ஆனால் அரசர் தன்னை அழைத்துச் செல்ல விரும்பவில்லை. அதற்காக இப்படிப் பேசுகிறார்.

''ஆமாம்... ஆமாம்... என் மனத்திலுள்ளதைத் தாங்கள் எவ்வாறு புரிந்து கொண்டீர்கள்? அதனால்தான் பண்டித சோழர் என்று மக்கள் தங்களைப் பாராட்டுகிறார்கள். சகல கலையும் அறிந்தவர்கள் நீங்கள்...'' என்று ஏதேதோ சொல்ல முற்பட்டார்.

''எல்லாம் குருநாதராகிய தங்கள் கருணைதான். தாங்கள் நல்லாசானாக எனக்கு அமைந்திராவிடில் நான் அத்தகைய பெருமைக்கும் பட்டங்களுக்கும் உரியவனாவதேது?'' என்று கூறிக் கரங்கூப்பி வணங்கி னார் இராசேந்திரன்.

''சக்கரவர்த்திகளே! கங்கையில் நீராட வேண்டும் என்று எனக்கும் ஆசைதான். ஆனால் இங்குள்ள பணி களை விட்டுவிட முடியுமா? மாணவர்களை விட்டுப் பிரிய முடியுமா? தங்களுடன் பயணம் புறப்பட்டு சிதம்பரம் வரை வந்து விடைபெற்றுக் கொள்ள எண்ணினேன். வீரநாராயண ஏரிக் கரையில் தங்களுடன் இருந்து பேசும் வாய்ப்புக் கிடைத்தது இறைவன்

கருணையே. வீரநாராயண ஏரிக்கரையில் ஒரு சிந்தனை எழுந்தது.''

''சொல்லுங்கள் பண்டிதரே! நல்ல கருத்துகள் நாட்டுக்கும் பயன். எனக்கும் பெருமை...''

''சக்கரவர்த்திகளே! மாபெரும் திட்டத்தை மேற்கொண்டுள்ளீர்கள். காட்டை அழித்து பெரிய நகரும், பெரிய கோயிலும் நிர்மாணிக்கப் போகிறீர்கள். நகரத்தை அமைத்துக் காடு திருத்தி நாடாக்குவதோடு பயிர் நிலங்களை வளர்க்க வேண்டும். பயிர் நிலங்களுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் வேண்டும். நகர மக்களுக்குக் குடிநீர் வேண்டும். இந்தப்பெரிய கோயில் பெரிய நகரம் போன்று பேரேரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். வீரநாராயண ஏரியைப் போன்ற பேரேரி ஒன்றைத் தாங்கள் வெட்டிட வேண்டும்...''

பண்டிதர் சொல்லும்போது, இராசேந்திரன் மனத்தில் ஆயிர மாயிரம் எண்ணங்கள் உதித்தன. பண்டிதரின் இருகரங்களையும் பற்றிக் கொண்டு, தன் கண்ணில் எடுத்து ஒற்றிக்கொண்டு, ''பண்டிதரே, பண்டிதரே! அரிய பெரிய யோசனைகளைத் தெரிவித்து விட்டீர்கள். ஆகா! தெய்விக அறிவு படைத்த உங்கள் கருத்துக்குப் பல்லா யிரம் பொன் பரிசளித்தாலும் ஈடாகாது. நான் நிர்மாணிக்கப் போகும் நகரத்தின் அருகே பெரிய ஏரியை உடனே ஏற்படுத்துவேன். கொள்ளிட நீரையும் காவிரியை யும் அதில் தேக்குவேன்...'' என்று கூறிய இராசேந்திரன் சிறிது நேரம் ஏதோ சிந்தித்தவராக, ''பண்டிதரே, பண்டிதரே! எனக்கு ஒரு யோசனை இப்போது உதித்து விட்டது. கங்கை நீரைக் கொண்டுவந்து புதிய ஏரியில் நிரப்புவோம். கங்கை நீரைக் கொண்டு நாள்தோறும்



இறைவனுக்குத் திரு மஞ்சனம் செய்விப்போம். ஆகா! என் வாழ்வின் பயன் அதுதான். வாழ்க பண்டிதர்! முப்பெருந் திட்டங்கள்; முப்பெருந்திட்டங்கள்'' என்று ஆனந்தக் கூத்தாடினார்.

அருகே இருந்த தன் மகன் ஆதித்தனை அழைத்து, ''மகனே! உனக்கு ஒரு மகத்தான பணி. பேரேரியை வெட்டும் பணியை நீ மேற்கொள்ள வேண்டும். பண்டிதர் மேற்பார்வையில் நடைபெற இருக்கும் அந்த ஏரியை விரைவில் அமைத்து முடிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டார்.

தந்தையுடன் கங்கைக் கரைக்குச் செல்லப் போகிறோம் என்ற ஆவலுடன் இருந்தவனுக்கு தந்தையின் கட்டளை ஓர் அதிர்ச்சி.

மகனின் தயக்கம் அறிந்த இராசேந்திரன், ''மகனே! உனக்குக் குறையொன்று உண்டு என்பதை நானறிவேன். உன் மூத்த சகோதரனை இராதிராசன் என்ற பட்டப் பெயருடன் இளங்கோவாக்கப் போகிறேன். உன் இளைய சகோதரன் சுந்தரன் மதுரையிலிருந்து பாண்டிய நாட்டை நிர்வகிக்கிறான் - அவனுக்கும் அங்கே முடி சூட்டப் போகிறேன். என் நிலை என்ன? என்று நீ கேட்டுக் கொண்டிருந்தாய். நீ இந்தக் காட்டுப்பகுதியை நாடாக்கும் முயற்சியில் ஈடுபடு. பண்டிதருடைய கருத்திற் கேற்பப் புதிய ஏரியை உருவாக்கு. அந்த ஏரியில் கங்கை நீர், சோழ நாட்டில்... கங்கை! என்றுமே இறைவனுக்கு கங்கை நீரால் அபிஷேகம். வெற்றி வெற்றி!'' என்று சிறு குழந்தை போல் இராசேந்திரன் இருகரம் கொட்டிக் கூத்தாடினார்.



## 61. ஏரியா? கோயிலா?

ஈசான சிவபண்டிதர், பழையாறையை வந்தடையும் போது நடுநிசிக்கு மேலாகிவிட்டது. இரவோடு இரவாக பழையாறையை அடைந்து விடவேண்டும் என்ற வேகத்தில் நடுவே எங்கும் இளைப்பாறாமல் பயணம் செய்தார்.

அரசர் அளித்திருந்த சிவிகையில் நெடுந்தொலைவு செல்ல முடியாதாகையால் காளை வண்டியிலும் பயணம் செய்தார். குதிரை ஏற்றம் அவர் கல்லாததால் குதிரைப் பயணம் செய்ய இயலவில்லை. இரண்டு குதிரைகள் பூட்டிய இரதம் இருந்தால் நன்றாக இருந்திருக்கும். அரசு அதிகாரிகளிடம் நாம் கேட்கவில்லையே என்று வருத்தப் பட்டுக் கொண்டார். எப்படியோ அவர் உடல் வருத்தம் பாராது பழையாறை வந்தடைந்துவிட்டார்.

எந்தக் காலத்திலுமில்லாத மனச் சஞ்சலம் அவரிடம் மிகுந்திருந்தது.

சோழ நாட்டில் கோயில் திருப்பணியையும் கோயில் நிர்வாகத்தையும் பொறுப்பேற்றுக் கவனிக்கும் இலகுளீச



பண்டிதரை உடனே சந்தித்தாக வேண்டும் என்ற வேகம் அவரிடமிருந்தது. இலகுளீச பண்டிதரின் செல்வாக்கு அதிகமாவதாய் அவருக்குத் தோன்றியது. சிதம்பரத்தில் சில நாள்களும் பிரம்ம தேசத்தில் சில நாள்களுமாக அவர் இருப்பதால் தஞ்சையிலும் பழையாறையிலும் நடை பெறுவன பற்றி அவருக்குத் தெரியவில்லை.

தன்னிடம் கேட்டு அதன்படி இராசேந்திர சோழதேவர் நடக்கிறார் என்று அவர் இதுவரையில் எண்ணியிருந்தது போக, இலகுளீச பண்டிதரின் செல்வாக்கு அதிகமாய் இருப்பதாக இப்போது எண்ணினார்.

சக்கரவர்த்திகள் தன்னுடன் பயணம் செய்யத் தன்னை அழைக்கவில்லை. அதற்கு இலகுளீசரும் காரணமாக இருக்கலாம். ஆனால் அவரும் சக்கரவர்த்திகளுடன் செல்லவில்லை. அதனால் இலகுளீசரின் செல்வாக்கு மிகுந்திருக்க முடியாது. ஒருவேளை தானும் செல்லாமல், என்னையும் செல்லவிடாமல் அவர் தடுத்திருக்கலாம்.

இலகுளீச பண்டிதரின் கருத்துப்படி பெரிய கோயில் ஒன்றைக் கட்ட சக்கரவர்த்திகள் முடிவு செய்துவிட்டார். அதற்காக கங்கைக் கரைக்குச் செல்கிறார். பெரிய கோயில் கட்டப்பட்டால் இலகுளீசரின் செல்வாக்கும் மதிப்பும் மேலும் உயர்ந்து விடும். அவ்வாறு நடக்கவிடக் கூடாது.

பயணத்தின்போது பலபல எண்ணியவாறு மனத்தைக் குழப்பிக் கொண்டார். தங்களுக்கென்று தனியே கட்டப் பட்டிருக்கும் மடத்திற்குச் சென்று இரவைக் கழிக்க விரும்பினார். உறக்கம் வரவில்லை. சரியான உணவு இல்லாததால் ஒருவித மயக்க நிலை ஏற்பட்டதே, தவிர உறக்கம் வரவில்லை.

பிரம்ம முகூர்த்த வேளையில் விழித்தெழுந்து காலைக் கடன்களை முடித்துப் பழகிப் போயிருந்த அவருக்கு அந்த

இளங்காலைப் பொழுது உறக்கத்தை அளித்தது. விழித்தெழுந்த போது காலைக் கதிரவனின் கரங்கள் சாளரத்தின் வழியே, அவர் உறங்குமிடத்தின் வழியினுள் புகுந்து கடுமையாகத் தாக்கின.

''அடடா, இப்படி ஒருபோதும் உறங்கிய தில்லையே!'' அதிகாலை விழித்தெழுந்து இலகுளீசர் வசிக்கும் தஞ்சை நகரைச் சென்று சேர அவர் எண்ணி யிருந்தார். மிக விரைவாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, சிவபூஜை செய்ய அமரும் போது, 'ஓம், நமசிவாய' என்ற குரல் கேட்டு அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தார்.

இலகுளீச பண்டிதர் கம்பீரமாக நின்று கொண் டிருந்தார்.

''நமசிவாய! பண்டிதரே, என்ன ஆச்சர்யம்! இந்த இடத்தில், இந்தக் காலைப் பொழுதில் தங்களைச் சந்திப்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. எல்லாம் அந்தக் கயிலையங்கிரி எம்பிரான் சித்தம்'' என்று கூறி, ''உம், சிவபூஜையில் நான் குறுக்கிட விரும்ப வில்லை. பூஜையை முடித்துவிட்டு வாரும். நான் அதற்குள் அரசியாரைச் சந்தித்து வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட எத்தனித்தார்.

ஈசான பண்டிதர் ஒருகணம் திகைத்தார். பேசுவதற்குக் குரல் எழவில்லை. நாம் காண்பது நனவா, கனவா என்று ஒரு கணம் எண்ணினார்.

''என்ன ஈசான பண்டிதரே, மௌனமாகிவிட்டீர்கள்! மிகவும் களைப்பாகக் காட்சியளிக்கிறீர்கள். பூஜையை முடித்துச் சற்று இளைப்பாறுங்கள். பிற்பகல் சந்திப் போம். என் பயணத்தை மாலை நேரத்தில் தொடரு கிறேன்'' என்று கூறிப் புறப்பட எத்தனித்தார்.



'சோழ அரசியாரைச் சந்திக்கப் போகிறாராம்; பிறகு எங்கோ பயணம் தொடங்குகிறாராம். நாம் செய்ய நினைத்ததையெல்லாம் அவரும் செய்ய நினைக்கிறார். இப்போதே இங்கேயே இவரைச் சந்தித்து விடவேண்டும்' என்ற முடிவுடன், ''இலகுளீசரே! தங்களைச் சந்திக்க விரும்பியே, எங்கும் தங்காமல் ஒரே மூச்சில் தில்லையி லிருந்து வருகிறேன். தஞ்சாவூருக்கு உடனே புறப்பட எண்ணினேன். தங்களை இங்கே கண்டவுடன் எனக்கு ஏற்பட்ட வியப்பால், பேச நா எழவில்லை. சற்று இருங்கள். பூஜையை முடித்து வருகிறேன். தங்களுடன் பேச வேண்டியவை நிறைய உள்ளன'' என்று கூறி பூஜை செய்ய ஆயத்தமானார்.



அவரிடம் ஏற்பட்டுள்ள பரபரப்பை உணர்ந்த இலகுளீசர், ''அமைதியாக பூஜையை முடித்துவிட்டு வாருங்கள். அதற்குள் நான் அரசியாரைச் சந்தித்து வருகிறேன். அதிருக்கட்டும், தஞ்சைக்குச் செல்லப் போவதாகக் கூறினீர்களே, என்ன விசேஷம்?'' என்று கேட்டார்.

''தஞ்சையில் தங்களைச் சந்திக்கத்தான். தஞ்சையில் தங்கியிருந்தன்றோ, கோயில் நிர்வாகங்களைக் கவனிக் கிறீர்கள்'' என்றார், அவரை உற்றுப் பார்த்தபடி.





இலகுளீசர் பெரிதாக நகைத்து வியப்பைத் தெரிவிக்கத் தன் கைத் தடியை கீழே இரண்டு முறை தட்டி, ''பண்டிதரே! எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்? தஞ்சை புரியிலிருந்து எமது பணியிடத்தைப் பழையாறைக்கு மாற்றிக் கொண்டு பல மாதங்களாகிவிட்டன என்பது தங்களுக்குத் தெரியாதா? சக்கரவர்த்திகள், தஞ்சைபுரியில் இருந்து ஆட்சி புரிவதை விரும்பவில்லை. பழையாறைக்கு வந்துவிட்டார். நாங்களும் வந்து விட்டோம். புதிய நகரம் ஒன்றை நிர்மாணித்து அந்த நகரத்தி லிருந்துதான் நாட்டை ஆளப்போகிறார். இந்தச் செய்தி தெரியாதா?'' என்று கேட்டார்.

'இந்தச் செய்தி தெரியாதா?' எனக் கேட்டவுடன் ஈசான பண்டிதர் உள்ளத்திற்குள் கூனிக் குறுகிவிட்டார். இலகுளீசர் செல்வாக்கு ஓங்கியிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா? ஹூம்; இவற்றை எல்லாம் நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? கல்வி பயில்வித்து அறிஞர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாம் இதுபோன்ற சிறிய அரசாங்க நடைமுறைகளை அறிய வேண்டியது அவசியமில்லை. அதை எடுத்துக் கூற விரும்பி, ''ஓ! எனக்குத் தெரியும். சக்கரவர்த்திகள் என்னிடம் புதிய நகரத்தைப் பற்றிப் பல மாதங்களுக்கு முன்பே கேட்டார். நான் சில கருத்துகளைச் சொன்னேன். என் யோசனையை அவர் ஏற்றார். புதிய நகரம் உருவாகும் வரை தஞ்சையிலேயே ஆட்சி யாளர்கள், அதிகாரிகளை இருக்கச் செய்வதாகச் சொல்லி விட்டார். கங்கை நதிக் கரைக்குச் சென்றுவந்த பிறகு நகரத்தை மாற்றுவதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று சொல்லிவிட்டார். தஞ்சையில் தங்களைச் சந்திக்கச் சொல்லி செய்தி அனுப்பினார். அதனால்தான் தஞ்சைக்கு வந்து கொண்டிருக்கிறேன்'' என்றார்.

இலகுளீசர் திடுக்கிட்டார். அவர் மனத்தில் மேலும் குழப்பம் ஏற்படுத்த விரும்பிய ஈசான பண்டிதர், ''வீர நாராயண ஏரிக்கரையில், பேரரசருடன் நான் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தேன். பல முடிவுகளை நாங்கள் எடுத்தோம். அவற்றைத் தங்களிடம் தெரிவிக்க வேண்டும். சிறிது நேரம் இருங்கள், நான் பூஜையை முடித்து விடுகிறேன்'' என்றார் ஈசான பண்டிதர்.

அரசியாரை இலகுளீசர் எதற்காகச் சந்திக்கப் போகிறார் என்று கேட்டறிய வேண்டும் என்ற ஆவலும் அவரிடம் இருந்தது. பூஜையில் கவனம் செல்லவில்லை.

இலகுளீசர், பண்டிதரை ஒருமுறை கூர்ந்து நோக்கினார்.

''பண்டிதரே! உம்மிடம் நான் பேச வேண்டியவை நிறைய உள. தவிர, சக்கரவர்த்திகள் சொல்லி அனுப்பியிருப்பதைக் கேட்டறிய வேண்டும். சற்று அமைதியாக நாம் பேச வேண்டும். என்னைச் சந்திக்க, அரசியார் நேரம் குறிப்பிட்டிருக்கிறார். மிக முக்கியமான செய்திகளைக் கூறி கலந்தாலோசிக்க வேண்டுமாம். குறித்த நேரத்தில் செல்லாவிடில் அரசியார் கோபத்திற்கு ஆளாக நேர்ந்திடும். பழுவேட்டரையர் மகள் அன்றோ - அவர் கோபத்தைத் தாங்க முடியாது! அமைதியாகப் பூஜையை முடித்துவிட்டு இங்கேயே இரும். விரைவில் வந்து விடுகிறேன்'' என்று புறப்பட முயன்றார்.

''இலகுளீசரே! அரசியாரை நானும் சந்திக்க வேண்டும். இருவருமே செல்வோம்'' என்று கூறி சிவலிங்கம் எதிரே அமர்ந்து விழிகளை மூடிக் கொண்டு, 'நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!' என்று முணுமுணுக்க ஆரம்பித்தார். பூஜையில் ஈடுபாடு கொள்ள இயலவில்லை.



விழியைத் திறந்தார். இலகுளீசரை அங்கு காணவில்லை.

''வாருங்கள், இலகுளீச பண்டிதரே! தங்களுக்காகத் தான் காத்திருக்கிறேன்'' என்று வணங்கி வரவேற்றாள், சோழ நாட்டுப் பேரரசி, பஞ்சவன் மாதேவி.

சில நாள்களுக்குள் முதுமை அவர்களை மிகவும் ஆக்ரமித்து விட்டது. இலகுளீசர் அரசியாரைச் சந்தித்துப் பல திங்கள் ஆகியிருந்ததால், அரசியாரிடம் ஏற்பட்டிருந்த மாறுதல் நன்றாகவே புலப்பட்டது.

அரசியாரை நலம் கேட்டறிந்து பிறகு மிகவும் பரிவும் பணிவும் நிறைந்த குரலில், ''தேவி, முன்னுக்கு இப்போது தாங்கள் மிகவும் இளைத்துக் காணப்படுகிறீர்கள். மாளிகை மருத்துவர்கள் தக்க மருந்து தருகிறார்களா?'' என்று கேட்டார், மெல்லத் தன் தாடியை உருவிவிட்டுக்கொண்டு. ''ஒருமுறை புள்ளிருக்கும் வேளூர் சென்று மருந்தீச்வரரைத் தரிசனம் செய்து வாருங்கள். உடல்நோய் நீங்கிவிடும்'' என்று பாசமிகுந்த குரலில் அன்பைக் குழைத்துப் பூசிப் பேசினார்.

''சிவ யோகியாரே! முன்பு போல் இப்போது தங்களை மாளிகைப் பக்கமே காண முடிவதில்லை. கோயிலைக் கட்டிக் காப்பதே தங்களுக்குப் பெரும் பணியாக இருப்பது போல் தோன்றுகிறது. தங்களை இன்று பழையாறையிலாவது சந்திக்க முடிந்ததே'' என்று கூறிப் பெருமூச்சுவிட்ட அரசி, ''இலகுளீச பண்டிதரே! நம் நாட்டுக் கோயில்களில் ஆறுகால பூஜை நடைபெறுகிறதா? தூண்டா விளக்கு இடைவிடாமல் எரிகிறதா?

பக்தர்கள் அளிக்கும் இரையிலி கொடைகளிலிருந்து வருவாய் சரிவர வருகிறதா?'' என்று கேட்டாள்.

இலகுளீசர் மீண்டும் தன் தாடியை ஒருமுறை நீவி விட்டுக் கொண்டு, ''சிவபாத சேகரன் பெற்ற திருமகன் பண்டித சோழர் ஆட்சியில் எந்தவித இடர்ப்பாடு மில்லை. மூவர் பாடல் பெற்ற திருத்தலங்களைச் செப்பனிட்டு ஒழுங்காக பூஜை நடத்துவதற்கான திட்டங் களிட்டு, அவை நிறைவேறுகின்றனவா என்று பார்க்கவே என் நாளும் பொழுதும் சரியாகி விடுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலைச் சரிவரப் பராமரிப்பதே இப்போது பெரும் பாடாக இருக்கிறது'' என்று கூறி, தன் பணியின் சிறப்பையும் அதிலுள்ள வேலைப் பளுவையும், தன் பொறுப்பையும் கடமையையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டினார்.

பஞ்சவன்மாதேவி இருந்த இடத்தில் நிமிர்ந்து உட்கார்ந்து, ''பெரிய கோயிலில் நித்ய பூஜை, அபிஷேகம், திருநாள் இவற்றைக் கவனிப்பதில் உள்ள சங்கடங்களை அறிந்த தாங்கள், மற்றொரு கோயிலைக் கட்டுமாறு வற்புறுத்தலாமா?'' என்று கேட்டாள்.

இலகுளீச பண்டிதர் சிறிது மௌனமாயிருந்து, பிறகு, ''தேவி! சோழ நாட்டில் சைவம் தழைக்க மட்டும் நான் யோசனை கூறி வருகிறேன். புதிய கோயில் கட்டுவதைப் பற்றி நான் ஏதும் சொல்லவில்லையே'' என்றார்.

''உங்கள் சக்கரவர்த்தியின் மனத்தை யாரோ கலைத்திருக்கிறார்கள். எழுபதுக்கும் மேலான சிவத் திருக்கோயில்கள் இருக்கும்போது நம் அரசரின் தந்தை தஞ்சையில் பெரிய கோயில் கட்டினார் என்றால் அதற்குக் காரணம் இருக்கிறது. கடல் கடந்து சென்ற நாட்டில் தான் கண்டவற்றை இங்கே நனவாக்க அவர் விரும்பினார்.



அதுவே இலட்சியமாகக் கொண்டார். எங்கள் நாயகர் மற்றொரு கோயிலைக் கட்ட முற்பட்டதற்குக் காரணம் என்ன? தாங்கள் யோசனை சொல்லாவிடில் வேறு யார் சொல்லி இருப்பார்கள்?'' -பஞ்சவன்மாதேவியின் குரலில் அதிகாரம் நிறைந்திருந்தது.

''தேவி, தாங்கள் அறிந்திருந்தே என்னைக் கேட்பது நியாயமா? கருவூர்ச் சித்தரின் விருப்பப்படிதான் நம் சக்கரவர்த்தி நடக்கிறார் என்பது தங்களுக்குத் தெரியாதா? காட்டை அழித்துப் பெரு நகரமும், கோயிலும் நிர்மாணிக்கப் போவதாக அரசர் திட்டமிட்ட பிறகு நான் வேறு யோசனை கூறுவது நியாயமாகுமா? ஆனாலும் நான் மேலும் நல்ல சில யோசனைகளைக் கூறினேன். கங்கை நதிக் கரைக்குச் சென்று நீராடி, புனித கங்கை நீர் கொண்டு வருமாறு தெரிவித்தேன்'' என்று கூறி அரசி யாரை நோக்கினார்.

''உங்கள் யோசனை இல்லை. அமரராகிவிட்ட என் மாமனாரின் கடைசி விருப்பம் அது. அது போகட்டும்; புதிய கோயில் கட்டுவதில் தங்களுக்குச் சம்மதமில்லை என்றால் தாங்கள் அந்தப் பணியைத் தொடக்க காலத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காகவே தங்களைச் சந்திக்க விரும்பினேன்'' என்றார்.

இலகுளீச பண்டிதருக்கு என்ன மறுமொழி கூறுவதென்றே தெரியவில்லை. ''ஒருநாள் அவகாசம் கொடுங்கள். தீவிரமாகச் சிந்தித்துச் சொல்கிறேன்'' என்றார்.

ஈசான பண்டிதரிடம் சென்று அவர் கருத்துரையைக் கேட்போம் என்ற எண்ணத்தில், ஈசான பண்டிதர் தங்கியிருந்த இடம் நோக்கி விரைந்தார். பேரறிஞரான அவர் தக்க யோசனை கூறுவார் என்று எண்ணினார்.

ஈசான பண்டிதர் தங்கியிருந்த இடம் நோக்கி விரைந்த போது, அதற்கு முன்னரே பண்டிதர் புறப்பட்டுச் சென்று விட்டதாகச் செய்தி கிடைத்தது.

''எங்கே சென்றிருப்பார்?'' என்று இலகுளீசர் சிந்தித்தார்.

பண்டிதர் தங்கியிருந்த மடத்துப் பணியாளர் ஒருவரை அழைத்து வினவினார்.

சக்கரவர்த்திகள் இரண்டாவது மகன் பழையாறைக்கு வந்திருப்பதாகவும், அவரைச் சந்திக்கச் சென்றிருப்பதாகவும் அறிந்து கொண்டார்.

ஈசான சிவன், அரசியைச் சந்திப்பதற்காக விரைந்து சிவ பூஜையை முடித்துக் கொண்டு, மடத்திலுள்ள பணியாளரிடம் பூஜைக் கலங்களைச் சீராக எடுத்து வைத்து, இடத்தை ஒழுங்கு படுத்துமாறு பணித்துப் புறப்பட எத்தனிக்கையில், இளவரசர் அழைப்பதாகக் காவல் வீரர் ஒருவன் அங்கு வந்து தெரிவித்தான்.

அரசியிடம் இலகுளீசர் பேசிக் கொண்டிருக்கும் போதே தானும் கலந்து கொண்டு புதிய கோயில் எழுப்புவதை நிறுத்தி இலகுளீசருக்குத் தலைகுனிவு ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டது நடவாமல் போய்விடும் போலிருக்கிறதே என்று பண்டிதர் எண்ணினார். 'உம், இதுவும் சிவன் செயல்தான்' என்ற முடிவுடன் இளவரசரைச் சந்திக்கச் சென்றார்.

இராசேந்திர சோழரின் இரண்டாவது புதல்வன் அவன். சோழர் குலக்கொடியைத் தஞ்சையில் ஏற்றி வைத்த விஜயாலய சோழனின் திருக்குமாரன் ஆதித்தனுடைய பெயரை அவனுக்குச் சூட்டினார் இராசராச சோழர்.



ஒருமுறை அவர் தன் மகன் இராசேந்திரனை அழைத்து மிகவும் அந்தரங்கமாக, ''மகனே! உன் புதல்வர்கள் ஒவ்வொருவரும் அரிமாபோல் கம்பீரமாகத் தோன்றுறார்கள். அவர்களுடைய அறிவையும் ஆற்றலையும் வளர்க்க வேண்டும். திறமையும், அறிவும், வலிமையும் வீணாக விட்டு விடக் கூடாது. ஒவ்வொருவரும் தங்கள் நேரத்தைத் தக்க முறையில் ஈடுபடுத்த இப்போதிருந்தே திட்டமிட ஏற்பாடு செய்'' என்றார்.

மூத்த புதல்வன் இராசாதிராசன் தன் தந்தை இராசேந்திரனுடன் போர்க்களங்களுக்குச் சென்று போர்க் கலையில் வல்லவனானான். மூன்றாவது மகன் சுந்தரன் மதுரைக்குச் சென்றுவிட்டான். அவன் தீய வழக்கங்களிலிருந்து மாறிவிட்டான் என்றே மற்றவர்கள் பேசிக் கொண்டனர்.

ஆதித்தனை, நாட்டு நிர்வாகத்தில் ஈடுபடுத்தினார் அரசர்.

ஈசான பண்டிதருடன் அவன் மனம் விட்டுப் பேசி, வீர நாராயணப் பேரேரி போன்ற ஒன்றை வெட்டுமாறு சக்கரவர்த்திகளுக்கு யோசனை வழங்கியதற்கு நன்றி தெரிவித்தான். நல்ல நாளாகப் பார்த்து, ஏரியை வெட்டும் பணியைத் தொடங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். தன் தந்தையிடம் கூறி அந்த ஏரிக்குத் தன் பெயரைச் சூட்டுமாறு செய்ய வேண்டும் என்றும் தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான்.

பண்டிதர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். ''இளவரசர் அவர்களே! மிக விரைவில் ஏரிப் பணியைத் தொடங்குவோம். அதற்கிடையே ஒரு வேண்டுகோள்'' என்றார்.

''சொல்லுங்கள் பண்டிதரே! நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று பணிவுடன் கேட்டான் ஆதித்தன்.

''ஏரிப்பணி நடைபெறும்போது கோயில் திருப்பணி நடைபெறக் கூடாது. ஏரி வெட்டி, அதில் கங்கை நீரை நிரப்பிய பிறகே கோயில் கட்டவேண்டும். இலகுளீச பண்டிதர், கோயில் கட்டுவதில் மிக முனைப்பாக இருக்கிறார். தங்கள் தாயைச் சந்திக்க அவர் சென்றிருக்கிறார். தாங்கள் உடனே அரசியாரைச் சந்தித்துக் கோயில் கட்டும் பணியை நிறுத்தச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

இளவரசன் ஆதித்தன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான்.







## 62. ஆதித்தன் என்ன செய்யப் போகிறான்?

காடு திருத்தி நாடாக்கும் பணியில் ஈடுபடுவதா? அல்லது, சிற்பிகளை அழைத்து விரைந்து கோயில் திருப்பணியை நடத்தச் சொல்வதா என்ற கவலை வீரம்மாளைச் சூழ்ந்தது.

கங்கை நதிக்கரைக்குச் சென்று, நீராடி கங்கை நீருடன் திரும்பி வருவதற்குள் கோயிலைக் கட்டி முடிக்க வேண்டும். அதற்கு ஏராளமான சிற்பிகள் தேவைப் படுவார்கள். சிற்பிகளை, மாணிக்கசேகரன் அழைத்து வந்து விடுவார். ஆனால், கோயில் கட்டுவதற்குக் கருங்கல் பாறைகள் வேண்டுமே?

சிற்பப் பணியைத் தொடங்குவதற்கு முன்பு, சிற்பிகள் தங்குவதற்குக் குடில்கள் ஆயத்தமாக வேண்டும். அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் வேண்டும். வயிறார உணவு சமைக்கப் பணியாளர்கள் வேண்டும். இந்தக் காட்டிற்குள் தடங்கலின்றி வந்து செல்ல ஒழுங்கான பாதைகள் வேண்டும். இவற்றை எல்லாம் ஏற்பாடு

செய்ய எவ்வளவு நாள்கள் ஆகுமோ? எவ்வளவு பணியாளர்கள் வேண்டுமோ? என்னால் முடியுமா? பொருள் செலவுக்கு யாரைக் கேட்பது? இவை பற்றி, அரசரை ஏதும் கேட்காமலிருந்து விட்டேனே...

வீரமாதேவி கவலையுடன் அமர்ந்திருந்த போது கலைச்செல்வி பூங்கொடி அங்கு வந்தாள். வீரமாதேவியின் கவலைக்குக் காரணம் கேட்டாள். தேவைக்கு அதிகமாக எப்போதும் பேசும் பழக்கமில்லாத அவள் வீரமாதேவியின் அருகே வந்தமர்ந்தாள்.

''கோயில் பணி எந்த நிலையிலிருக்கிறது?'' என்று பேச்சைத் தொடங்கினாள்.

யாராவது தன்னிடம் அன்புடன் பேச மாட்டார்களா என்று எதிர்பார்த்திருந்த வீரமாதேவி, தன் கவலையைத் தெரிவித்தாள்.

''நீ எடுத்துக் கொண்டுள்ள பணி மகத்தானது. இராசேந்திரனின் இலட்சியம் நிறைவேற நீ உறுதுணையாக அமைந்தது இந்த நாடு செய்த புண்ணியம்'' என்று பேச்சைத் தொடங்கி, தொடர்ந்து வீரமாதேவிக்கு ஆதரவாகப் பேசலானாள்.

மற்ற இளவரசிகளைப் போல, பூங்கொடியும் எதிர்ப்புத் தெரிவித்தால் என்ன செய்வது என்று எண்ணியிருந்த வீரமாதேவிக்குப் புத்துணர்ச்சி எற்பட்டது.

''புதிய நகரத்தை நிர்மாணிப்பதும், கோயில் கட்டுவதும் மட்டுமே நிறைவேற்றத் திட்டமிட்டிருந்த போது ஏரி வெட்டுமாறும் அரசர் உத்தரவிட்டுச் சென்றிருக்கிறாராம்... மூன்று திட்டங்களை ஒரேபோதில் எப்படி நிறைவேற்றுவது என்று குழம்பியிருக்கிறேன்'' என்றாள் வீரமாதேவி.



''எல்லாம் நன்மைக்கே! ஒரு செய்தி தெரியுமா? -செய்திகள் தெரியாமல் இருப்பது நல்லது. பட்டத்தரசியும், மற்ற இளவரசிகளும் எல்லாவற்றிற்கும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.''

''ஆமாம், அறிவேன்.''

''அவர்கள் எதிர்ப்பிலும் இப்போது கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. ஏரி வெட்டுவதை ஓர் இளவரசி எதிர்க்கிறாள். ஓர் இளவரசிக்குக் கோயில் கட்டுவது பிடிக்கவில்லை. புதிய நகரம் அமைப்பதை அனைவரும் எதிர்க்கிறார்கள்.''

''அப்படி என்றால் மூன்றும் நிறைவேறாமல் போய் விடும், எப்படியோ அவர்களுக்கு மகிழ்ச்சிதானே?''

''இல்லை, இல்லை. இளவரசன் ஆதித்தன் அவர்களுடைய தடையை ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் உனக்குத்தான் வெற்றி.

''ஆதித்தனா?''

''ஆமாம், அரசரின் புதல்வன். அமைதியாகப் பணியாற்றுபவன். நாட்டு நிர்வாகத்தில் அவன் பொறுப்பு அதிகம். ஏரி வெட்டும் பணியில் அவன் முன் நிற்கிறான்.''

''ஏரி வெட்டுவதில் முனைந்தால், கோயில் பணியும் புதிய நகரத்தை ஏற்படுத்தும் பணியும் என்னாவது? ஒருவேளை அரசரின் மற்ற இரு புதல்வர்களும் உதவுவார்களோ?''

''இல்லை; இல்லை. ஒருவன் அரசருடன் வடக்கே சென்றிருக்கிறான். ஒருவன் மதுரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறான். மற்ற இருவரும் புகழ் பெறுவதை

அறிந்த ஆதித்தன் ஏரியை வெட்டிப் பெயரும், புகழும் அடைய ஆசைப்படுகிறான்.''

''பேரேரி மிகத் தேவையானது. வீரநாராயண ஏரியை நான் பார்த்திருக்கிறேன். சோழ நாட்டில் ஒரு புதிய கடல் என்று சொல்லுமளவிற்கு வீரநாராயணப் பேரேரி திகழ்கிறது. ஏரியை வெட்டுவதால் ஆதித்தனுக்குப் பெயரும் புகழும் ஏற்படும் என்கிறீர்களே, அதெப்படி?''

''சோழநாட்டில் மற்றொரு கடலென்று சற்றுமுன்பு சொன்னாயே அந்த ஏரியின் பெயரென்ன தெரியுமா?''

''வீரநாராயணப் பேரேரி.''

''அந்த ஏரிக்குப் பெயர் எப்படி ஏற்பட்டது?''

பூங்கொடி கேட்டவுடன், வீரமாதேவி சற்றுச் சிந்தித்தாள். அவளுக்குப் புரிந்துவிட்டது. ''சோழ சக்கரவர்த்தி பராந்தக சோழதேவரின் புகழ்ப் பெயர் வீரநாராயணர். அவர் நிர்மாணித்த ஏரி, நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் நினைவாக விளங்குகிறது. புதிதாக வெட்டவிருக்கும் இந்த ஏரிக்குத் தன் பெயரைச் சூட்டினால் தனக்குப் புகழும் பெயரும் என்றும் அழியாதிருக்குமல்லவா? அப்படி எண்ணி ஏரி வெட்டுவதில் இளவரசர் முனைந்திருக்கிறார் போலும்! யாரோ சிந்திக்கிறார்கள்; திட்டமிடுகிறார்கள். யாரோ பெயரை அடையப் பார்க்கிறார்கள்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் வீரமாதேவி.

''அடி, பெண்ணே! நீ உலகை இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஏரிக்கும், கோயிலுக்கும், நகரத்திற்கும் பெயர் சூட்டுவது நம் கரத்திலோ, அரசி, இளவரசிகளின் கரங்களிலோ இல்லை. உன்னிடம் இருக்கும்போது ஏன் கவலைப்படுகிறாய்? அமைதியாப்



இருந்து காரியத்தை வெற்றிகரமாக முடிப்பதில முனைப்பாக இரு'' என்று பூங்கொடி கூறியவுடன், வீரமாதேவிக்கு வியப்பாக இருந்தது.



''பெயர் சூட்டுவது நானா? தேவி! நீங்கள் என்னைச் சோதிக்கிறீர்களா அல்லது மற்றவர்களைப் போல் கிண்டலும் கேலியும் செய்கிறீர்களா?'' என்று கேட்டாள்.





வீரமாதேவியின் கரங்களை எடுத்துத் தன் கரங்களோடு பிணைத்துக் கொண்டு, ''வீரமாதேவி! சக்கரவர்த்திக்கு உன்னிடம் இருக்கும் அன்பைவிட மதிப்புதான் மிக அதிகம் என்பதை நான் புரிந்து கொண்டேன். உன் விருப்பத்தை அவர் நிறைவேற்றுவார். இராஜ தந்திரம் என்று சொல்வார்களே, அந்தக் கலையை நீ கற்பதும் கடைப்பிடிப்பதும் மிகமிகத் தேவை. உணர்ச்சி வயப்படாமல் இலட்சியத்தை நிறைவேற்றுவதில்தான் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஏரி வெட்டும் பணியைத் தொடங்குவதால் இரட்டைப் பயன். பல நூறு பேருக்கு வேலை வாய்ப்பு. அவர்கள் தங்கியிருக்க வீடுகள் கட்டப்படும். அங்கு செல்ல வழித் தடம் ஏற்படும். உணவுப் பண்டங்கள் தடையின்றிக் கிடைக்கும். இளவரசரின் நேர்ப்பார்வையில் பல பலன்கள் ஏற்படும்'' என்று கூறியவுடன் வீரமாதேவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

இளவரசன் ஆதித்தன் வீரமாதேவியைச் சந்திக்கக் காட்டுப் பகுதிக்கு வந்தான். அவன் வருகை வீரமாதேவிக்கு முதல் நாளே தெரிவிக்கப்பட்டிருந்தது.

சிற்பி மாணிக்க சேகரனிடம் கோயில் வரைபடத்தைக் காட்டிப் பேசிக் கொண்டிருந்தபோது, காவல் வீரர்கள் சூழ ஆதித்தன் அங்கு வந்து விட்டான்.

வீரமாதேவியைப் பற்றி இருவிதக் கருத்துகளை அவன் அறிந்திருந்தான்.

தந்தையைத் தன் அழகால் மயக்கி இளவரசி எனும் உயர்ந்த இடத்தை அடைந்தவள் என்றும், அவள் விருப்பப்படி, சொற்படி, தன் தந்தை நடக்கிறார் என்றும்

அவன் அறிந்திருந்தான். தஞ்சைப் பெரிய கோயிலைப் போல் மற்றொரு கோயிலைக் கட்டுவதற்கான பொன்னும் பொருளும் கருவூலத்தில் இல்லை என்பது அரசருக்குத் தெரிந்திருந்தும் மாபெரும் பணியில் அவர் இறங்க வீரமாதேவிதான் காரணம் என்பதாக அவன் எண்ணியிருந்தான். வீரமாதேவியைப் பற்றித் தன் தாய் பஞ்சவன் மாதேவி குறை கூறுவதை அறிந்திருக்கிறான். இவ்வளவு விரைவில் அவளைச் சந்திக்க இயலும் என்று அவன் நினைக்கவில்லை.

வீரமாதேவி -

ஆதித்தன் அவளை முதன்முறையாக நேருக்கு நேர் பார்க்கிறான்.

அவன் மனத்தில் பல்வேறு எண்ணங்கள். இவளைப் பார்த்து தன் தந்தை மயங்கியது அழகிற்காகவா, கலைக்காகவா?

அழகிற்காக இருக்க முடியாது. இவளை விட அழகிகள் தன் தந்தைக்குக் கிடைக்கக்கூடும். கலைக்காக என்றால் - தன் தந்தை அறியாத கலையா? பிறகு எதற்காக?

எதனாலோ - தன் தந்தையின் மனத்தை இனி மாற்ற முடியாது. மாற்ற முயல்வதும் தவறு. வீரமாதேவியை வெறுத்து எதிரியாக நினைப்பதும் சரியில்லை; சுமுக மாகப் பேசுவோம். அன்புடன் பழகுவோம்.

முன்பு, தன் சகோதரன் சுந்தரன் வீரமாதேவியால் பெற்ற தண்டனையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறான். அவன் செய்தது தவறோ - தவறில்லையோ



அவனுக்குக் கடுந்தண்டனை கிடைத்தற்கு வீரமாதேவி யின் அழகுதான் காரணம். வீரமா தேவியின் சம்மத மில்லாமலா சுந்தரன் அவளை நெருங்கி இருப்பான்? அவனை மோகவலையில் வீழ்த்தியதுமல்லாமல் தண்டனையும் வாங்கிக் கொடுத்த இவளிடம் நாம் மிகக் கவனமாக நடந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமும் சேர, வீரமாதேவியைச் சந்திக்க வந்தான்.

வீரமாதேவியைச் சந்திக்காமலே ஏரிப் பணியைத் தொடங்கி நிறைவேற்றினால் என்ன தவறு என்று அவன் எண்ணினான். முக்கியமானவர்களின் கருத்தைக் கேட்டான். ஈசான சிவ பண்டிதரும், இலகுளீசரும் ஒப்புக் கொள்ளவில்லை.

''வீரமாதேவி மிக சக்தி வாய்ந்தவள். அவள் ஆதரவு, உதவி இல்லாமல் இந்தப் பணியை நிறைவேற்ற முடியாது'' என்று ஈசான சிவபண்டிதர் கூறினார்.

பஞ்சவன் மாதேவியும், மற்ற இளவரசிகளும் கோயில் கட்டும் பணியை எப்படியாவது தடுத்து நிறுத்து மாறு இலகுளீசரிடம் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஏரிப் பணியைத் தொடங்கினால், கோயில் கட்டும் பணி தடைப்படும்; கோயில் கட்டுவது இயற்கையாக நிற்கட்டும் என்ன எண்ணத்தில் ஏரி வெட்டும் பணியில் ஈசான சிவ பண்டிதருக்கு உதவ முன்வந்த இலகுளீசரும் வீரமாதேவியின் ஒத்துழைப்பைப் பெறுவது அவசியம் என்று ஆதித்தனிடம் கூறி இருக்கிறார்.

வீரமாதேவியின் எதிரே ஆதித்தன் நின்றான். சிறிது நேரம் அவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவன் கரம்கூப்பி வணங்கி, ''பழையாறையில்,

தஞ்சையில் தங்களைக் காண நான் முயன்றிருக்கிறேன். முடியவில்லை. தங்களின் ஆசி பெற நான் இங்கு வந்துள்ளேன்'' என்றான்.

வியப்பால் வீரமாதேவியின் விழிகள் மேலும் விரிந்தன. மேனியில் ஒருவிதச் சிலிர்ப்பு, தந்தையின் கம்பீரமும், தாயின் ஆணவமும் மிகுந்த பார்வையும் அதே போதில் சூழ்நிலைக்காக வரவழைத்துக்கொண்ட பணிவும் ஆதித்தனிடம் அவளுக்குப் புலப்பட்டன. அவன் பார்வையில் தவறான உள்நோக்கம் இல்லை என்பதையும் நொடியில் புரிந்து கொண்டாள்.

மௌனம் அங்கே சில கணம் குடிகொண்டிருந்தது. அவனுடனும் நேருக்கு நேர் பேசாமல், சிற்பி வசிக்கும் குடில் பக்கம் திரும்பி, சிற்பி மாணிக்க சேகரனை அழைக்கக் குரல் கொடுத்து விட்டு, அருகே இருந்த பாறையை நோக்கிச் சென்றாள். அதில் வரையப் பட்டிருந்த சிற்ப வரைகோட்டை ஒருமுறை பார்த்து, பிறகு ஆதித்தனை நோக்கித் திரும்பி சிறிது புன் முறுவலுடன், ''என் ஆசியா? எதற்கு?'' என்று மெல்லக் கேட்டு அவனை நோக்கினாள். ஆதித்தன் அவளைத் தொடர்ந்து வந்து அருகே நின்றான். இந்தக் கேள்வியை ஆதித்தன் எதிர்பார்க்கவில்லை.

அவள் சுட்டிய அதே பாறையின் மீது தன் பார்வை யைச் செலுத்தி, ''கலைத் தேவியாக விளங்கும் தாங்கள் என் இளைய தாயார் என்ற இடத்தில் அமர்ந்திருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. தங்களுக்கு என் பாராட்டைத் தெரிவித்து, ஆசி பெற வந்தேன்'' என்றான். இதைச் சொல்வதற்குள் அவன் மிகவும் திணறிவிட்டான்.



''ஓ!'' என்றாள் வியப்புடன் வீரமாதேவி. ''நான் இளவரசியாகிப் பல மாதங்கள் ஆகிவிட்டன. உனக்கு அரசுப்பணிகள் மிக அதிகம் என்று அறிந்திருக்கிறேன்'' என்றாள் வீரமாதேவி, அவனை நேருக்கு நேர் நோக்கிய வண்ணம். தன்னைவிட வயதில் மூத்த ஆதித்தனை ஒருமையில் அழைப்பது பலவிதத்தில் நல்லது என்று அவள் கணத்தில் முடிவெடுத்து விட்டாள். தன் மகனுடைய ஸ்தானத்தில் அவன் இருப்பதை அந்த அழைப்பு வலியுறுத்துவதாக அந்தக் குரல் அமைந் திருந்தது.

சோழநாட்டு அரசியல் பணிகளில் தான் ஈடுபட்டிருப் பதை வீரமாதேவி அறிந்திருக்கிறாள் என்பதை உணர்ந் தான் ஆதித்தன்.

''நாட்டு நிர்வாகப் பணியுடன் புதுப் பொறுப்பு ஒன்றும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, தாயே வடக்கே புறப்படும் முன்பு, மகத்தான பணியொன்றை விரைவில் நிறைவேற்றும் பொறுப்பை அரசர் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்'' என்று, தான் வந்த நோக்கத்தைத் தெரிவிக்கத் தொடங்கினான். தொடர்ந்து, ''தாங்கள் பெரும் பொறுப்பொன்றை ஏற்றிருப்பதுபோல்'' என்று கூறி வீரமாதேவியை நோக்கினான்.

''ஒரு பொறுப்பா - இரண்டு மாபெரும் பொறுப்புகள் என்பது உனக்குத் தெரிந்திருக்குமே'' என்று கூறி அவன் மனத்தை ஆராய்வதுபோல கூர்ந்து நோக்கினாள்.

அதற்குள் மாணிக்க சேகரன் அங்கு வந்துவிட்டான். சிற்பியை ஆதித்தனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

மாணிக்க சேகரனை ஒருமுறை பார்த்து, ''இவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். மதுரையில், அரச

மாளிகை ஒன்றைக் கட்டுவதற்காகச் சென்றவர்களுள் இவரும் ஒருவர்'' என்று கூறி, ''மதுரையில் மாளிகைப் பணி முடிந்து விட்டதா?'' என்று அவனை நோக்கிக் கேட்டான் ஆதித்தன்.

மாணிக்க சேகரன் இதற்கு மறுமொழி கூறுவதற்கு முன்பு, வீரமாதேவியே குறுக்கிட்டுப் பேசினாள்.

''மதுரை மாளிகையைவிட மிக முக்கியமான பணியை ஏற்று முடிக்க அரசர் கட்டளையிட்டார். கருவூர்ச் சித்தரின் ஆசியுடன் இந்தக் காட்டுப் பகுதிக்கு வந்து பணியாற்றத் தொடங்கிவிட்டார். பெரிய கோயில் எவ்வாறு அமைய வேண்டும் என்று நம் சக்கரவர்த்திகளும், நானும் கனவு காண்கிறோமே அதற்கு உயிர் வடிவம் கொடுப்பதில் முன் நிற்கிறார் சிற்பி மாணிக்க சேகரன். இவர் குடும்பம் மதுரையில் இருக்கிறது. இவர் இங்கே கலைத்தவம் செய்கிறார். பெரிய கோயிலைக் கட்டுவதுடன் பெரிய நகரத்தையே உருவாக்க வேண்டும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தக்கவரைத் தேடி உடனே ஒப்படைக்க வேண்டும். கட்டப்படவிருக்கும் பெரிய கோயிலின் மாதிரியையும், கோயில் மாடங்களில் அமையவிருக்கும் சிற்பங்களின் மாதிரியையும் நீ பார்க்க வேண்டும்'' என்று கூறி, அருகே, கலைத் தேவி, திருமகள், போன்ற சிற்பங்கள் சிறு வடிவில் அமைக்கப்பட்டிருப்பதைக் காட்ட ஆதித்தனை அழைத்துச் சென்றாள்.

பெரிய கோயிலில் அமையவிருக்கும் சிற்பங்களின் சிறு வடிவத்தைப் பார்த்து ஆதித்தன் வியப்படைந்தான். சுருட்டி வைக்கப்பட்டிருந்த துணிச் சுருளில் கட்டப்படவிருக்கும் பெரிய கோயிலின் சித்திரத்தையும், ஆதித்தன் பார்த்தான்.



'கோயில் கட்டுவதை அரசியும், இளவரசியும் ஏன் எதிர்க்கிறார்கள்? அரசரின் இலட்சியத்தை, அதை நிறைவேற்ற அவர் கட்டளையை ஏன் அரசி எதிர்க்கிறார்?' ஆதித்தனுக்குப் புரியவில்லை.

''இளவரசே! என் ஆசியைவிட உன் உதவி பெரிதும் தேவை. கங்கைக் கரைக்குச் சென்றுள்ள சக்கரவர்த்திகள் திரும்பி வருவதற்குள் பெரிய கோயிலைக் கட்டி முடிக்க வேண்டும். அதற்கு எதிர்ப்பும் இடையூறும் இருக்கின்றன என்பதை நீ அறிவாய். நீ சக்கரவர்த்தியின் இடத்தில் இருந்து எதிர்ப்பை முறியடித்துப் பணிகளை முடித்துத் தரவேண்டும்'' என்றாள்.

வீரமாதேவி பேசுவதையே ஆதித்தன் இமைக்காமல் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

''இன்னும் சில நாள்களில் தங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறி விடை பெற்றான்.

கோயில் திருப்பணியை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்ற சோழ அரசி பஞ்சவன் மாதேவியின் எண்ணத்தை எப்படி மாற்றுவது என்ற சிந்தனையில் ஆழ்ந்தவாறு பழையாறையை நோக்கிச் சென்றான்.





## 63. வீரமாதேவி போகாதே நில்

இராசேந்திர சோழ தேவர் தம் படைகளுடன் சில நாள்கள் சிதம்பரத்தில் தங்கியிருந்து, பிறகு காஞ்சி மாநகர்ப் பொன் மாளிகையில் வீற்றிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டார்.

அவருடன் வீரர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் சென்றனர். பகை நாட்டின் மீது படை எடுத்துச் செல்லும் உணர்வு அவர்களிடம் இல்லை. வழக்கமான அணி வகுப்புக் கட்டுப்பாடும் தளர்த்தப்பட்டிருந்தது. 'வீர வேல், வெற்றி வேல்' கோஷம் இல்லை. இரவு தங்குமிடங்களில் அவர்கள் விருப்பப்படி, உணவு சமைத்து உண்டனர். பாட்டும் கூத்தும் அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தன. அணிவகுத்துச் செல்லும்போது ஆடிப்பாடிச் சென்றனர்.

வழியே குறுக்கிட்ட ஆறுகளில் நீர்ப்பெருக்கு குறைந்திருந்ததால் பெரும் வண்டிகளும் எளிதில் ஆற்றைக் கடந்து செல்லும் அளவுக்குக் குறுக்குப் பாலமாக அமையத் தக்க படகுகளையும் அவர்கள் உடன் கொண்டு சென்றனர். படகுப் பாலம் அமைக்காமல்



படகுகளிலேயே கடந்தனர். சில இடங்களில் இடுப்பளவு நீரில் நடந்தும் சென்றனர்.

நாட்டியமாடி மகிழ்விக்க நடனப் பெண்கள் தக்க பாது காவலுடன் தொடர்ந்து வண்டிகளில் வந்தனர். ஆனால் ஒழுக்கத்தை மிகக் கண்டிப்பாகக் காக்க வேண்டும் என்ற உத்தரவை யாரும் மீறவில்லை.

வழியே பாடல் பெற்ற திருத்தலங்களில், இராசேந்திரன் தங்கி அந்தந்தக் கோயில்களுக்குத் தேவையானவற்றை நிவந்தங்களாக அளித்தார். அந்தத் தலத்து இறைவன் மீது பாடப் பெற்ற பதிகங்களைப் பாடச் சொல்லி, கேட்டு மகிழ்ந்தார்.

தங்குமிடங்களில், படையில் புதிதாகச் சேர்ந்த வீர இளைஞர்களை அழைத்து மனம் திறந்து அவர்களுடன் உரையாடினார். அவர்கள் குடும்பத்தைப் பற்றிக் கேட்டறிந்தார். அவர்கள் திறமையைக் கண்டறிந்தார்.

சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற போதெல்லாம், இராசேந்திரனுடன், அவர் புதல்வர் இராசாதிராசன் உடனிருப்பது வழக்கம். மாதண்ட நாயகராக இராசேந்திரனே பொறுப்பேற்றிருந்தாலும், மகன் இராசாதிராசனே படைவியூகம் அமைப்பது, எதிரிகளின் போக்கறிந்து செயல்படுவது, முன்னணிப் படைக்குத் தலைமை வகிப்பது என்ற தம் போர் அறிவையும் வீரத்தையும் புலப்படுத்தி வந்தான்.

இம்முறை கங்கை யாத்திரையின் போது இராசேந்திரன் அரையன் இராசராசன் என்ற வீரனைத் தேர்ந்தெடுத்தார். பலமுறை அவன் வீரத்தைக் கூர்மையாகக் கண்டறிந்து பாராட்டி இருக்கிறார்.

''நம்மையெல்லாம் கங்கை நதிக்கரைக்கு அழைத்துச் சென்று நீராடச் செய்து, நாடு நகரங்களைக் காட்டித் திரும்பவும் அழைத்து வரப்போவதாக அன்றோ பேசிக் கொள்கிறார்கள்? இதற்கு அரையன் இராசராசன் தலைமை வேறு தேவைதானா? அரசர் ஏன்அவ்வாறு முடிவெடுத்தார்?'' என்று படை வீரர்கள் பேசிக் கொண்டனர்.

அரையன் இராசராசனுக்கும் வியப்பாக இருந்தது. சோழ சக்கரவர்த்திகளின் உள்ளக் கிடக்கையை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. தன் சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள அரசரை வினவ, வாய்ப்புக் காகக் காத்திருந்தான்.

படைப் பயணத்தில் ஒரு நாள் வடபெண்ணை ஆற்றங் கரையில் பரந்த மணல் வெளியில், சோழப் படைகள் தண்டு இறங்கி இருந்தன. வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்த வேளையில், படைவீரர்கள் குதூகலமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த போதில் இராசேந்திரன், நீலவானத்தை நோக்கிச் சிந்தனையிலாழ்ந்திருந்தார். திடீரென அவர் அரையன் இராசராசனை அழைத்தார்.

படைத் தலைவர் அரையன் இராசராசனுக்கு ஒரு கணம் வியப்பேற்பட்டது. இரவு வேளையில் அரசர் எதற்காகத் தன்னை அழைக்கிறார் என்று அவனால் யூகிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியின் அன்பையும் மதிப்பை யும் தான் பெற வேண்டும் எனும் ஆர்வமும், ஆவலும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அதுபோல் தம் திறமையைக் காட்டி முன்னேற விரும்பும் இளைஞர் மற்றொருவர் உண்டு. இராசராச சோழர் காலத்துப் படைத்



தலைவராயிருந்த கிருஷ்ணன் இராமனின் புதல்வன் அருண்மொழி, சக்கரவர்த்திகளிடம் நன் மதிப்பு பெற முயன்று கொண்டிருந்தான். அவனையும் விஞ்ச வேண்டும் என்று அரையன் இராசராசன் விரும்பினான்.

''வருக, வருக விக்கிரம சோழ அரையன் இராச ராசனாரே! மாதண்ட நாயகரே வருக வருக!'' என்று இராசேந்திர சோழர் வரவேற்புக் கூறி அழைத்தவுடன், அரையன் இராசராசன் திடுக்கிட்டான்.

தன் பெயரையும், பட்டப் பெயரையும் சொல்லி அழைப்பது ஒருவேளை தன்மீது குற்றம் கண்டு குத்திக் காட்டுவதற்காக இருக்குமோ என்று அச்சமுற்று, மிகப் பணிவுடன் நின்றான்.

எதிரே அமரச் செய்து, அடுத்துப் பயணத் திட்டத்தை விவாதிக்கத் தொடங்கிய பிறகுதான் அரையனுக்குத் துணிவு பிறந்தது. ஆனால், அவர் தன்னை 'நீங்கள், தாங்கள்' என்று அழைக்காமல் நீ என்று அழைத்தால் மேலும் துணிவும் தெம்பும் ஏற்படும் என்ற எண்ணம் தோன்றியது.

சக்கரவர்த்திகள் மெல்ல நகைத்தார். ''அரையரே! வல்லவரையர் வந்தியத் தேவனை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

அரையன் இராசராசன் தலை அசைத்தான்.

''அவர் என் அத்தையின் கணவர். என்னை உருவாக்கியவர். அவர் என்னை இன்றும் 'நீங்கள் - தாங்கள்' என்றழைக்கிறார். ஏன் தெரியுமா? பதவியின் காரணமாக. வயது அங்கே குறுக்கிடவில்லை. அதுபோல் மாதண்ட நாயகனாக இந்த கங்கைப் படையெடுப்புக்கு

நியமிக்கப்பட்டிருக்கும் உன்னை -'' என்று கூறிச் சற்று, நிறுத்தி 'சரிதானா?' என்பது போல் பார்த்து, ''படைத் தலைவருக்கு உரிய மரியாதையுடன் அழைக்கிறேன். அப்படி அழைப்பது உனக்குக் கூச்சமாக இருந்தால் உன் விருப்பப்படியே அழைக்கிறேன்'' என்றார்.

இராசராசன் மிகவும் பணிவான குரலில், ''சக்கர வர்த்திகளே! நாம் எந்த நாட்டின் மீது படையெடுத்துச் செல்கிறோம் என்று தெரியாமலே தொண்டை மண்டலம்





கடந்து வந்துவிட்டோம். இன்னும் சில நாள்களில் வேங்கியை அடைந்து விடுவோம். கீழைச் சாளுக்கியர் க்ள் நம் நண்பர்கள் தாமே? படைவீரர்கள் உற்சாக யாத்திரையாகக் கருதுகிறார்கள். உல்லாச யாத்திரைக்கு நான் மாதண்ட நாயகனா? எனக்கே ஒன்றும் விளங்க வில்லை'' என்று தன் ஐயத்தைத் தெரிவித்துக் கொண்டான்.

''வீர இளைஞர்கள் மிக அதிகமாகக் கொண்ட நம் படை வீரர்களின் தோள் வலியை வீணாக்குவது என் நோக்கமன்று. வேங்கி வந்தடைந்தவுடன் நம் திட்டம் புலப்படும். கங்கையில் நீராடி, கங்கை நீரைக் கொண்டு வருவது என் நோக்கம். என் தந்தை அமரர் இராசராசரின் கடைசிக் கால ஆசையை நிறைவேற்றுவது என் கடமை. புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் கோயிலின் குடமுழுக்கு கங்கை நீரால் நடைபெற வேண்டும் என்பது என் ஆசை. கங்கை நீரைக் கொண்டுவர இவ்வளவு படைகளா என்று நீ கேட்கலாம். நீயே பார்க்கப் போகிறாய் - வேங்கி வந்தடைநதவுடன் சாளுக்கியர்களும், கலிங்கத்தாரும், சக்கரக் கோட்டத்தாரும் போரிட ஆயத்தமாகப் போவதை. கங்கைக் கரைக்குச் செல்லும் வழியில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து நம்மை எதிர்க்கப் போகிறார்கள். மும்முனை, நான்கு முனைத் தாக்குதல் என்று நாம் பலத்த தாக்குதலை எதிர்பார்க்க வேண்டும். இப்போதுள்ள படைகள் போதுமா என்பது சந்தேகமே. படைகள் எண்ணிக்கையில் அதிக மிருந்தாலும் தந்திரமும், திட்டமும் மிக அவசியம். அங்குதான் உன் வீரமும், விவேகமும், ஆற்றலும் கைகோத்து உன் புகழை நிலைநாட்டப் போகின்றன.''

இராசேந்திர சோழர் சொல்லி நிறுத்தினார்.

"என் புகழா? சக்கரவர்த்திகளின் திறமையும், வீரமும் புகழைக் கொண்டு குவிக்கப் போகின்றன. புகழும் பெருமையும் தங்களுக்கே அரசே! மும்முனை, நான்கு, ஐந்து முனைத் தாக்குதலுக்கு நான் ஆயத்தமாக இருக்கிறேன். அரசர்க் கரசே ! ஏதோ வேடிக்கை விளையாட்டாக இவ்வளவு தொலைவு வந்த எங்களுக்கு உண்மையிலேயே வீரத்தை நிலை நாட்ட ஒரு வாய்ப்பு கிடைக்கப் போகிறது" என்று உணர்ச்சி மிகுதியுடன் பேசினான்.

அந்த நிலவு வேளையில் அந்த இள வீரன் விழிகள் வீரத்தால் மின்னுவதைக் கண்ட இராசேந்திரன் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, "இராசராசா! நம் உளவுப் படைகள் மிகக் கவனமாக இயங்க வேண்டும். கலை விருந்து படைக்க வந்த நடனமணிகள் வேங்கியிலேயே தங்கட்டும். உல்லாசமும், கேளிக்கையும் பாட்டும் கூத்தும் வேங்கிக்குப் பிறகு வேண்டாம். நீயும், வீர இளைஞன் அருண்மொழியும் சேர்ந்து சோழ நாட்டிற்குப் பெரும் புகழைத் தேடித்தர வேண்டும்" என்றார்.

இரவு நேரமாகிக் கொண்டிருந்ததை நினைவு படுத்தி, மறுநாள் பொழுது புலரா முன்னரே படைகள் புறப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

அரையன் இராசராசனுக்குப் புதிய உற்சாகம் ஏற்பட்டது என்றாலும், புகழில் ஒரு பங்கினை அருண் மொழி பெற்றுவிடப் போகிறானே என்ற கவலை வேறு ஏற்பட்டது. உறக்கம் வராமல் தவித்தான்.



இராசேந்திர சோழருக்கும் உறக்கம் வரவில்லை. மாளிகையில் மஞ்சத்தில் கவலையின்றி உறங்க வேண்டியவர், எங்கோ ஆற்றங்கரையில் மணல் வெளி யில் உறங்கக் காரணம் ஏதுமில்லையே?

புகழுக்குக் குறைவா? கல்விக்குக் குறைவா? செல்வம் குறைவா? நாட்டின் எல்லை குறைவு பட்டதா? பிறகு கங்கைக் கரைக்கு ஏன் செல்ல வேண்டும்? ஆயிரக் கணக்கான போர் வீரர்களை, காரணம் கூறாமல் நடத்திச் செல்ல என்ன காரணம்? உறக்கம் வராமல் ஆயிரம் சிந்தனைகளில் மிதக்க என்ன காரணம்?

437425/610545

கங்கைக் கரை யாத்திரைக்குப் புறப்படும்போது, அதிகாரிகளுக்கு அவர் அந்தரங்க உத்தரவுகள் சில பிறப்பித்துச் சென்றிருந்தார். இரு நாள்களுக்கு ஒருமுறை, தலை நகரத்தில் நடைபெறும் முக்கிய செய்திகளைத் தெரிந்துகொண்டு ஒற்றன் ஒருவன் அரசரைச் சந்திக்க வேண்டும் என்பது ஒன்று. பெரிய கோயில் கட்டும் பணியும், நகர நிர்மாணமும், ஏரி வெட்டும் வேலையும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைச் சுருக்கமாக எழுதி நம்பிக்கை வாய்ந்தவரிடம் அனுப்புமாறு பட்டோலைப் பெருமான் என்ற அதிகாரியிடம் ஒப்படைத்திருந்தார்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை 600 002

நாள்தோறும் நடக்கும் அரசு தொடர்பான நிகழ்ச்சி களை, நிகழ்ச்சி ஏட்டில் குறித்து வைத்திருப்பதே பட்டோலைப் பெருமானின் பணி.

காஞ்சியினின்று இராசேந்திரன் புறப்பட்டுப் பல நாள்கள் ஆகியும் கோயில் பணி, நகர நிர்மாணப் பணிகள் தொடர்பாக எவ்விதச் செய்தியும் அவருக்குக் கிடைக்க வில்லை.

அதற்குள் திருப்பணியில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுவிடப் போகிறது என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டார் இராசேந்திரன்.

''வீரமாதேவி இப்போது என்ன செய்து கொண்டிருப் பாள்? பாவம்! முற்றிலும் தன்னை நம்பி வந்துவிட்டவள். கலை, கலை என்று கலையே தன் மூச்சாகக் கொண்டு சுறுசுறுப்புடன் இயங்குகிறாள். அவள் கனவுகள் விரிந்து பரந்தவை, ஆழமானவை. என்னைவிட, பெரிய கோயிலைக் கட்டுவதில் அவளுக்குத்தான் ஆர்வம் அதிகம். அந்தக் கோயிலைச் சிற்பக் களஞ்சியமாக்க வேண்டும் என்பது அவளுடைய தணியாத ஆவல். காட்டுப் பகுதியில் அவள் தன்னந்தனியளாய் இயங்கு கிறாள். அவளுடைய கலை ஆர்வத்தை மேலும் தூபமிட ஒரு சிற்பி. சிற்பியுடன் அவளுக்குள்ள நெருக்கத்தைத் தவறாக எண்ணினோம். விளையாட்டாக இட்ட சபதத்தை நிறைவேற்றுவதில் அவள் கடுமையாக இருக்கிறாள். உள்ளத்தை முழுமையாக அர்ப்பணித்து விட்ட அவள் தன் உடல் இளமையைச் சிற்பியிடம் ஒப்படைத்து விடுவாளோ என்று நான் தவறாக எண்ணியதை அறிந்த அவள் அன்று எப்படிச் சீறினாள்? உள்ளம் வேறு, உடல் வேறு என்று பொதுவாகப் பெண்கள் பிரிக்க விரும்ப மாட்டார்கள் என்பதை அறியாது போனேனே! என் கபட உள்ளத்தைப் போல், வீரமாதேவியும் இருவேறு மனமுடையவளாக இருப்பாள் என்று தவறாக எண்ணி விட்டேனே...''

இராசேந்திரன் கண் இமைக்காமல் சிந்தித்துக் கொண்டிருந்தார். பழையாறையில் நடைபெற்ற சம்பவங் களை நினைவு படுத்திக் கொண்டார். அந்த இரவு - வீரமாதேவி பொங்கி எழுந்த இரவை நினைவு படுத்திக் கொண்டார். அவளுக்குத்தான் எத்தனை வலிமை!



சினத்தின் உச்சியிலேறிய அவள் சீறி எழுந்து என் கரத்தை விலக்கினாளே! அப்பப்பா! அந்தப் பூங்கரத்திற்குள்தான் எவ்வளவு புயலின் வேகம்?

'கோபப்பட்டது நியாயம்தானே. அவள் மனஉறுதியை நான் சோதிக்க முற்பட்டது தவறுதானே?'

இராசேந்திரன் தனக்குள் பேசிக் கொண்டார். எதிரே வீரமாதேவி இருப்பது போன்ற நினைவு. அவர் அருகே அவள் வந்தமர்கிறாள். அவர் மெய் சிலிர்க்கிறது.

''எனக்காகத்தானே உங்களுக்கு இவ்வளவு தொல்லை கள்?'' என்று கேட்கிறாள்.

''தொல்லையா, உன்னாலா?'' இராசேந்திரர் வினவு கிறார்.

''கோயில் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வர வேண்டும் என்று விரும்பினேன். உடனே புறப்பட்டு விட்டீர்கள். இப்படி, நதிக் கரையில் வெறும் தரையில் படுத்திருக்கிறீர்கள். அந்தப்புரத்தில் பஞ்சணையில் பணிப் பெண்கள் சாமரம் வீசத் துயில வேண்டிய நீங்கள், இப்படி கண்விழித்துப் படுத்திக்க நான்தானே காரணம்?''

''இல்லை, இல்லை. நீ காரணமில்லை. என் தந்தையின் ஆசையை நிறைவேற்றப் புறப்பட்டதற்கு நீ எப்படிக் காரணமாவாய்?''

''இந்த வடபெண்ணை ஆற்றங்கரை எனக்குப் புதியதன்று. வாதாபிப் போரின் போதும், ஒரு சமயம் கீழைச் சாளுக்கியர்களை அடக்கப் படையெடுத்து வந்தபோதும் பஞ்சணை மெத்தையையா உடன் கொண்டு வந்தேன்?''

''வாழ்க்கையின் பெரும் பகுதியை போர்ப் பூமியிலே கழித்த நீங்கள் இந்த வயதிலாவது சுகம் அனுபவிக்காமல் காடு மேடு என்று அலைந்திருக்க வேண்டாம். கங்கை நீர் வேண்டும் என நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் உங்கள் திருப் புதல்வர்கள் கொண்டு வந்திருக்க மாட்டார்களா?''

''கொண்டு வந்திருப்பார்கள். ஆனால் கங்கையில் நீராடி நானே கொண்டு வர ஆசைப்பட்டேன்.''

''கங்கையில் தனியே புனித நீராடக் கூடாது என்று சாத்திரம் புகல்வதாகப் பண்டிதர் கூறினார். தங்களுக்குத் தெரியாதா?''

''ஆமாம், என்னுடன் வருவதற்கு நீ சம்மதப்பட வில்லை. கோயில் பணி என்று கூறிவிட்டதால் உனக்குப் பயம், தனியே என்னுடன் வந்தால் விரதபங்கம் ஏற்பட்டு விடுமோ என்று.''

''என்னைப் பற்றி எனக்குத் தெரியும். தங்களையும் நான் அறிவேன். 'விரத பங்கம், சபதத்தை மீறுவது' என்பதெல்லாம் இனி ஒரு நாளும் நடைபெறாது. தங்களுடன் நான் வரச் சம்மதிக்காததற்கு அவை எல்லாம் காரணமல்ல.''

''பிறகு...'' என்று கேட்டவாறு, இராசேந்திரன் வீரமா தேவியை மெல்ல அணைத்துக் கொண்டார். அவர் அணைப்பிலிருந்து மிக இலகுவாக நழுவினாள் வீர மாதேவி.

''பிறகு... கங்கையில் நீராடும்போது உரிமைப் பொருள் உடனிருக்க வேண்டும். 'சகதர்மிணியின் கரம் பிடித்துக் கங்கையில் மூழ்கி எழ வேண்டும்' என்ற சாத்திரக் கூற்றை நீங்கள் மீறலாமா?''



''ஓ! சாத்திரம் நிறையப் படிக்கிறாய்.''

''இல்லை, சாத்திர வல்லுனர்கள் நானிருக்கும் கானகத் திற்கு வந்து விட்டார்கள். தெய்வச் சிற்பங்கள் எப்படி அமைய வேண்டும் என்று கூற சிற்ப விற்பன்னர்கள் வந்திருக்கிறார்கள். சாத்திரம் படித்தவர்களுடன் பேசும் போது பல அரிய உண்மைகளைக் கற்றறிகிறேன். ஆகா! மனித வாழ்க்கை என்பதே எவ்வளவு பெரிய தத்துவம்! பிறப்பது, மகிழ்ச்சியுடன் இருப்பது, திருமணம் செய்து கொள்வது எல்லாம் தத்துவமே. கணவருடன் நாள் தோறும் வாழ்வது புனித வேள்வி செய்வதுபோல். உடலில் ஏற்படும் கிளர்ச்சிகளும், உடல் உபாதைகளும் நம்மைச் சோதிக்கும் அரக்கர்கள். அந்த அரக்கர்களை வதைக்க நமக்கென்றே இறைவன் அவதாரம் எடுக்கிறான். அவன் அவதாரத்திற்கு ஏற்ற நிலைக்களனை ஏற்படுத்தவே நல்ல இசை, நடனம் இவை யெல்லாம். பெண்களின் முழு உடலே வேள்விப் பீடமாகும்.''

''ஏய்...ஏய்...வீரம்மா... சாத்திர மேதையாக, தத்துவ ஞானியாக அதற்குள் எப்படி மாறினாய்? நான் திரும்பி வருவதற்குள் காவியுடை உடுத்தி, உருத்திராட்ச மாலை அணிந்து கமண்டலத்தால் என்னை வரவேற்கும் அளவுக்கு மாறிவிடப்போகிறாய்...''

''மாற மாட்டேன். அஞ்சாதீர்கள், நான் எப்போதும் போல் உங்கள் வீரமாதேவியாக உங்கள் அருகேயே இருக்க விரும்புகிறேன். நினைவெல்லாம் உங்களிடம் இருத்தியிருக்கிறேன். செய்யும் பணியில் எள்ளளவும் பிசகு ஏற்படாதிருக்க உங்களிடம் பூரணமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள என் மன நிறைவு உதவுகிறது. பணிகள் வேகமாக நடைபெற உற்சாகம் ஏற்படுகிறது.''

''நீ சொல்வதில் முன்னுக்குப் பின் முரண்பாடு இருக்கிறதே. என் நினைவாக இருந்தால் கோயில் கட்டும் பணி எப்படி நடைபெறும்? உதாரணமாக போர்க்களம் செல்லும் நான் உன்னையே நினைத்துக் கொண்டிருந்தால் வெற்றி கிட்டுமா?''

''யுத்த பூமியிலே பெண் உதவி தேவையில்லை, அதனால் நினைவைச் சிதறவிடக் கூடாது. ஆனால் கலைப்பணியில் உங்களைப் போன்ற கலைஞரின் உறுதுணை வேண்டும். நீங்கள் அருகே இருப்பது போன்ற உணர்வு இருந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் முழுமையாகக் கலை பூத்துக் குலுங்கும்.''

''வீரமாதேவி! உன்னைச் சாதாரணப் பெண் என்று நினைத்தேன். என்னையே நினைத்துக் கொண்டிருக்கும் உன்னைப் போல, நானும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதனால் என் யாத்திரை தடைப் படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. வீரமாதேவி! நீ இப்படியே இங்கேயே இருந்து விடு. என்னுடனேயே இருந்து விடு.''

வீரமாதேவியிடமிருந்து ஒரு மெல்லிய சிரிப்பொலி எழுந்தது. ''அதெப்படி என்னால் முடியும்? கங்கை நதியில் நீராட உங்கள் உரிமை மனைவியை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்.''

''உரிமை மனைவியா? வீரமாதேவி! என்னைச் சோதனை செய்கிறாயா? நீதான் என் உரிமை, உயிர், உடல் எல்லாம்.''

''இல்லை, இல்லை. உலகம் ஏற்காது. அரியணையில் அமரும் உரிமை பெற்றவள், ஊரும் உலகமும் அறிந்த



பஞ்சவன் மாதேவி இருக்கும்போது, அந்த இடத்தை நான் பறிப்பது, உரிமை கொள்வது மிகவும் தவறு. இரண்டு காரணங்களுக்காக உடனே பஞ்சவன் மாதேவியை அழைத்துக் கொள்ளுங்கள். ஒன்று கங்கையில் ஆற்ற வேண்டிய புனிதச் செயலுக்காக. மற்றொன்று - பழையாறை, தஞ்சையை விட்டுச் சில காலம் அவர்கள் வெளியே இருந்தால் தான் கலைப்பணி, நகரப்பணி எல்லாம் நிறைவேறும். என் மீதுள்ள வெறுப்பால் பட்டத்து அரசியும் மற்றவர்களும் நல்ல காரியத்தைத் தடை செய்கிறார்கள். நான் சொல்வதை ஏற்கிறீர்களா? போய் வரட்டுமா ? பொழுது புலர்கிறது. அதோ, படை வீரர்கள், விழித்தெழ சங்கம் முழங்குகிறது.''

இராசேந்திரன் அருகே அமர்ந்திருந்த வீரமாதேவி துள்ளி எழுந்து மறைகிறாள்.





## 64. ஓலையில் வந்த செய்தி

சோழ வீரர்கள் அணிவகுத்து வடக்குத் திசை நோக்கிப் புறப்பட்டனர். இதுவரையில் அவர்களிடம் இருந்துவந்த குறிக் கோளற்ற போக்கு மாறி, வேற்று நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும்போது இருக்கும் வேகம், துள்ளல், கம்பீரம், முழக்கம் ஆகிய யாவும் இப்போது நிறைந்திருந்தன.

போருக்குப் போகவில்லை; கங்கை நதிக்கரையில் நீராடிப் பொழுதை நல்ல முறையில் கழிப்பதற்காகச் செல்கிறோம் என்ற உணர்வு மங்கி விட்டது.

கட்டுப்பாட்டிற்கும், கடமை உணர்விற்கும் பெயர் பெற்ற சோழப் படைகளிலும் ஓரிரு ஒற்றர்கள் இல்லாம லில்லை. பாண்டிய நாட்டின்மீது அன்பு கொண்டவர்கள் ஓரிருவர் இல்லாமலில்லை.

நான்கு, ஐந்து வீரர்களாக கூடிப் பேசும்போது அவர்கள், வேடிக்கைப் பேச்சின் மூலம் சோழ நாட்டைக் குறைகூறத் தவறுவதில்லை. சிரிக்கச் சிரிக்கப் பேசுவதால்



அவர்களுக்குச் சோழ நாட்டின் மீதுள்ள விரோத மனப்பான்மையை எவரும் சந்தேகிப்பதில்லை. அதற்கு மாறாக சங்கன், ரங்கன் என்ற அந்த இரு இளைஞர்களும் தங்கள் சாதுர்யப் பேச்சால், வேடிக் கைப் பேச்சால் சக தோழர்களின் கவனத்தைக் கவர்ந்திருந்தனர்.

''நம் அரசர், பழையாறையிலிருந்து செய்தி வருகிறதா என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறார். அதனால் அவருக்கு ஏக்கமும் அதிகம். அதுபோல் நம் அரையர் இராசராசனும் எதிர்பார்க்கிறார்'' என்று கண்சிமிட்டியபடியே கூறுவான் சங்கன்.

''அரசர் நாள்தோறும் முக்கிய செய்திகளை எதிர்பார்க் கிறார். நம் அரையருக்கு அப்படி என்ன செய்தி? பட்டீச்வரத்தில் ஒரு பாட்டி இருக்கிறாள். அவள்தான் ஏதாவது செய்தி அனுப்ப வேண்டும்'' என்பான் ரங்கன்.

''அடடே, பட்டீச்சரம் பாட்டியா? எனக்குத் தெரியாமல் போய்விட்டதே? திருவாரூர் தேன்மொழி யைத் தான் எனக்குத் தெரியும். தேன்மொழியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பல வருடங்களாகத் தவம் செய்தார்'' - சங்கன்.

''ஏதேது, இப்பொழுதுதான் படைத்தலைவர் ஆகி யிருக்கிறார். அதற்குள் இரண்டு, மூன்று காதலா?'' என்று கூறி, கண்சிமிட்டுவான் ரங்கன்.

உணவு சமைக்க மூட்டப்பட்டிருக்கும் அடுப்பைச் சுற்றி வீரர்கள் அமர்ந்திருப்பர். அங்கு பாட்டும் கூத்துமாக இருக்கும். வீரர்கள் குழுவில் இதுவரை சரியாகக் கலந்து கொள்ளாமலிருந்தவர்கள் சங்கன் பேசுவதைக் கேட்க ஆவலுடன் அவன் பக்கம் திரும்புவார்கள்.

''முக்கியமானவர்களின் அந்தரங்கச் செய்திகளை எப்படி சங்கா நீ தெரிந்துகொள்கிறாய்?'' என்று அவனை உசுப்பி விடுவான் ஒரு வீரன், செய்தியை முழுமையாகக் கேட்டறிய.

''அதுவா? நானாக அலைவதில்லை. அதற்காக, என்னைத் தேடி வருவதைத் தள்ளிவிட முடியுமா? உன்னைப்பற்றிக்கூட ஒரு செய்தி எனக்குத் தெரியும்'' எனக்கூறி, கேள்வி கேட்டவனையே திடுக்கிட வைப்பதுடன், ''என்னைப் பற்றி என்ன செய்தி, என்ன செய்தி?'' என்று பரபரப்புடன் கேட்குமாறு செய்வான்.

''நம் தலைவரைப் பற்றிச் சொல்லப்பா. மற்ற கதையெல்லாம் எதற்கு? ஏதோ உத்தமர்போல அவர் நடித்து நம் அரசரின் அபிமானத்தைப் பெற்றுவிட்டார். பட்டீச்சரம் பாட்டியைப் பற்றிச் சொல்லு'' என்று மற்றொருவன் தூண்டுவான்.

சக்கரவர்த்தியிடம் அபிமானம் பெறுவதில் அரையன் இராசராசனுக்கும் மூன்னால் படைத்தலைவர் கிருஷ்ணன் ராமன் புதல்வன் அருண்மொழிக்கும்தான் கடுமையான போட்டி. இருவரும் தம் திறமையைப் புலப்படுத்திப் போட்டியிடுவதால் சோழ நாட்டிற்கு நன்மைதானே என்று அரசரும் அவர்கள் நடவடிக்கையைக் கண்டும் காணாததுமாக இருந்து விடுவார்.

இளம் வயதிலேயே திறமை மிகுந்த இரு வீரர்களும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தி முன்னேறி வந்தனர். அவர்கள் இருவரையும் பாராட்டுவதற்கும் - புகழ்வதற்கும் என்று சிலர் சூழ்ந்திருப்பர். அவர்களுள்



அருண்மொழியை ஆதரிக்கும் வீரன் ஒருவன் ரங்கனைப் பேசத் தூண்டினான்.

ரங்கன் கண் சிமிட்டியபடி, ''நமக்கு எதற்கப்பா வம்பு? அரையர் காதில் இந்தச் செய்தி விழுந்தால் என்னை இங்கேயே வெட்டி மணலில் புதைத்து விடுவார்'' என்றான், மேலும் ஆவலைத் தூண்ட.

''பட்டீச்சரம் பாட்டியைப் பற்றி நீ சொல்லாவிட்டாலும்கூட ஒருநாள் இல்லாவிட்டால் வேறு ஒருநாள் உன்னை அரையர் கண்ட துண்டமாக வெட்டிப் போடத்தான் போகிறார்.''

''அந்த ரகசியச் செய்தியைச் சொல்லிவிட்டுத்தான் செத்துப்போயேன். பாவம், தன் அபிமானத் தலைவர் அருண்மொழியிடம் இந்தக் கதையை உடனே போய்ச் சொல்லத் துடிக்கும் அவன் ஆசையை ஏன் தடுக்கிறாய்?'' என்று கேள்வி கேட்டவனைப் பார்த்து அங்கிருப்போர் எல்லாரும் சிரிக்குமாறு செய்து விட்டான் சங்கன்.

''எனக்கு ஒரே தலைவர், நமது பேரரசர்தான். உம் சொல்லப்பா, ஆவலைத் தூண்டிவிட்டு திசை திருப்பப் பார்க்கிறாயே. அன்று அப்படித்தான், நமது பேரரசர் குடும்பத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொல்லிக் கடைசியில் வீரமாதேவியைப் பற்றி ஏதோ பெரிய ரகசியம் சொல்லப் போவதாகக் கூறி ஆவலைத் தூண்டிவிட்டு சொல்லாமல் போய்விட்டாய். இரவெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை'' என்று குறைப்பட்டுக் கொண்டான். ''வீரமாதேவியைப் பற்றி அறிய உனக்கு அவ்வளவு ஆவல் ஏன்?'' என்று கேட்டான் மற்றொரு வீரன்.

''அதுவா, ஒரு பெரிய கதை'' என்றான் மற்றொருவன்.

''கிணறு வெட்ட பூதம் கிளம்புவதுபோல் சுவையான கதை இன்று கிடைக்கும் போலிருக்கிறதே. இன்று சிவராத்திரிதான்'' என்றான் மற்றொருவன்.

''மற்ற கதையெல்லாம் இருக்கட்டும்; வீரமாதேவியை உனக்கு முன்பே தெரியுமா? வீரமாதேவியின் கடைக் கண் பட்டுவிட்டால் அரசாங்கத்தில் பெரிய பெரிய காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள்'' என்று தூபம் போட்டான் மற்றொருவன்.

''வீரமாதேவி வீரம்மாளாகக் கிராமத்தில் வசித்த போதே அவனுக்குத் தெரியும். அவளுக்குப் பரிசம் போட அவன் வீட்டார் முடிவு செய்து விட்டார்கள். அவன் துரதிர்ஷ்டம் காரியம் கைகூடவில்லை'' என்றான் மற்றொருவன்.

''துரதிர்ஷ்டமா? அதிர்ஷ்டம் என்று சொல்லு. அந்த வீரம்மாள் வீரமாதேவியாகி நம் சக்கரவர்த்திகளைப் படுத்தும் பாடு கொஞ்சமா? அவளை இவன் மணந்திருந்தால் இவன் கதி என்ன ஆகியிருக்கும்?''

''ஒன்றும் ஆகியிருக்காது. அவள் அங்கேயே இருப்பாள். இவன் மட்டுமே பரிதாபத்துடன் பிரிந்து போர்க்களம் செல்ல வேண்டியிருக்கும்.''

''ஆமாம். எனக்கும் அதுதான் சந்தேகம். நம் அரசர் எங்கு சென்றாலும் வீரமாதேவியை உடன் அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தஞ்சையில் தங்காமல், பழையாறையில் தங்காமல் காட்டுப்பகுதியில் தங்கியிருக்கிறார். அவர் கட்டும் கோயில் குடமுழுக்குக்



குக் கங்கை நீரைக் கொணரவும், கங்கையில் புனித நீராடவும் இளவரசியை ஏன் அழைத்து வரவில்லை?''

''அரசர் அழைத்து வரவில்லையா? அவள் வரச் சம்மதிக்கவில்லை. அதற்குச் சில காரணங்கள் உண்டு'' சங்கன் கூறினான்.

''ஒரு கதை சொல்லப் போக நூறு கிளைக் கதைகள் கிளர்ந்தெழுகின்றன. இவற்றையெல்லாம் கேட்பதற்கு நமக்கு வயது இருக்குமா என்று தெரியவில்லை'' என்று ஒரு வீரன் அங்கலாய்த்தான். இளைஞர்களே நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில் அவன் ஒருவனே சற்று வயதானவன். கல்யாணமாகி மனைவியை இழந்தவன். காதல் கதைகள், குடும்ப நிகழ்ச்சிகள் கணவன் - மனைவி பிணக்கு, ஊடல் ஆகிய போன்ற செய்திகளைக் கேட்பதில் அவனுக்கு ஆவல் அதிகம். சுவையான பாடல்களைத் தானே புனைந்து பாடுவான். இளைஞர்களிடையே இருந்து அவர்கள் பேசுவதைக் கேட்பதில் தான் அவனுக்கு மனநிறைவு. அதனால் வீரமாதேவியைப் பற்றி அறிவதில் அவன் ஆவல் கொண்டான்.

எவ்வளவு காத தொலைவு பயணம் செய்தாலும் களைப்படையாத இராசேந்திரசோழ தேவர் இரண்டு பகல் பயணம் செய்தவுடனே சற்று இளைப்பாற விரும்பினார். மலையடிவாரத்திலுள்ள ஒரு சிற்றூரில் தங்கினார்.

படைகளின் ஒரு பகுதித் தலைவர் அருண்மொழி, அரசரைப் பார்க்க விரைந்து வந்தான். அவனிடமிருந்த பரபரப்பை அரசர் நொடியில் அறிந்தார். அவன் காத்தில்

பட்டுத் துணியால் சுற்றப்பட்ட ஓலைகள் இருந்தன. அதை அரசரிடம் நீட்டிய அருண்மொழி ''இவை நம் படை வீரனொருவனிடமிருந்தன'' என்றான்.

பழையாறையிலிருந்து பட்டோலைப் பெருமான் அனுப்பிய செய்திகள் நிறைந்த ஓலை அவை. அவர் முன்பே திட்டமிட்டிருந்தபடி வாரம் ஓர் ஒற்றன் செய்தியை எடுத்துக் கொண்டு, அரசர் இருக்குமிடம் வரவேண்டும். பல வாரங்கள் கடந்தும் தஞ்சையி லின்றோ, பழையாறையினின்றோ எந்தவிதத் தகவலும் வந்து சேரவில்லை. என்பதை அறிந்து அரசர் பெரிதும் கவலை கொண்டிருந்தார். இரண்டு நாள்களுக்கு முன்பு, வீரமாதேவியே நேரில் வந்து உரையாடியது போன்ற உணர்வினால் பெரிதும் மனம் பாதிக்கப்பட்டிருந்த இராசேந்திரன் பத்துக்கும் மேற்பட்ட ஓலைகளைக் கண்டவுடன் ஒரு கணம் சிற்றமடைந்தார். பிறகு தம்மை அமைதிப்படுத்திக் கொண்டு அருண்மொழியை நோக்கிப் பார்வையாலேயே வினவினார்.

''நம் படை வீரர்களுள் ரங்கன், சங்கன் என்று இருவர். நல்லவர்கள் போல் நடிப்பார்கள்.''

''சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்களே அவர்களா?'' என்று அரசர் கேட்டவுடன், நுணுக்கமான சிறு செய்திகளைக்கூட அரசர் அறிந்து வைத்திருக்கிறாரே என்று வியப்புடன் அருண்மொழி அரசரைப் பார்த்தான்.

உள்ளே கோபம் பொங்கிக் கொண்டிருந்தாலும் உதட்டில் புன்னகையுடன் ''நம் வீரர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் நான் அறிவேன். உம்; மேலே செய்தி



களைச் சொல்லு. இவ்வளவு வாரங்கள் இந்த ஓலைகள் எங்கே இருந்தன? அவற்றைக் கொண்டு வந்த ஒற்றர்கள் எங்கே?''

அருண்மொழி திகைத்தான். சங்கனிடமிருந்து ஓலை களைப் பறித்து வந்தானே தவிர, அதைக் கொண்டு வந்தவர்கள் என்ன ஆனார்கள் என்பதை விசாரிக்க மறந்தான். அல்லது அப்போது தோன்றவில்லை.

''இந்த ஓலைகளைப் படித்து முடிப்பதற்குள் செய்தி கொண்டு வந்தவர்களைத் தெரிந்து வா. படைத்தலைவன் ஆற்றல் மிக்கவராய் இருக்க வேண்டும். ஆற்றல் வீரத்தில் மட்டுமன்று; அறிவிலும்'' என்று அரசர் சொன்னவுடன் நொடியில் கூனிக் குறுகிவிட்டான் அருண்மொழி.

இராசேந்திரன் ஒவ்வோர் ஓலை மடலாகக் கவனத்துடன் படித்தார். இடையே ஓர் ஓலை, வீரமாதேவி யிடமிருந்து வந்திருந்தது, ஓலை நறுக்கில் எழுத்தாணி யால் அவள் முத்து முத்தாக எழுதியிருந்தாள் சில வரிகள் மட்டுமே ஆயினும் அவை ஆயிரம் செய்திகளைத் தெரிவித்தன. வீரமாதேவியிடமிருந்து வந்த ஓலையைத் தவிர மற்ற ஓலைகளைப் படிக்கலானார்.

மதுரையில், சோழநாட்டின் சார்பில் அரசப் பிரதி நிதியாக இருந்த சுந்தரனைப் பற்றிய செய்தியை ஒரு மடல் விவரித்தது. வடக்கே சோழப் படைகள் சென்றிருப் பதால், தெற்கே மதுரையில் கிளர்ச்சி செய்யலாம் என்று எண்ணிய பாண்டிய நாட்டுப் புரட்சிக் காரர்கள் கலகம் செய்ய முற்பட்டதை ஒரு மடல் விவரித்தது.

தந்தையுடன் கங்கை நதிப்பயணத்தில் சேர்ந்து வராமல் தஞ்சையில் உடல்நலக் குறைவால் தங்கிவிட்ட

இராசராசனின் மூத்த இளவரசன் இராசாதிராசன் மதுரைக்கு விரைந்ததை மடல் விவரித்தது.

பழையாறையில், அரசி பஞ்சவன் மாதேவிக்கும் மற்றோர் இளவரசன் ஆதித்தனுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, இருவரும் நேர்விரோதமாக உத்தரவுகளை வெளியிட்டு வருவதாக ஒரு செய்தி.

ஏரி வெட்டுதல், காட்டை அழிக்கும் பணி மிக விரைவாக நடைபெறுகின்றன.

ஈழத்துப் போரிலும் மற்ற போர்களிலும் சிறை பிடிக்கப் பட்டவர்களைக் கொண்டு அந்த வேலைகள் நடைபெறுகின்றன. மதுரையிலிருந்து சிற்பிகளை அழைத்து வர அனுப்பப்பட்ட செய்தி அங்கு சென்றடையவில்லை என்று ஒரு செய்தி.

கோயில் திருப்பணிக்கு வேண்டிய பாறைகள், பாண்டிய நாட்டினின்றும், தொண்டை மண்டலத்தினின்றும் கொண்டுவர இளவரசர் ஆதித்தன் இட்ட உத்தரவை அரசியார் தடுத்துவிட்டார் என்ற செய்தி.

சிற்பி மாணிக்க சேகரன் உடல் நலம் குன்றியதால் பழையாறைக்கு அழைத்து வரப்பட்டதாகவும், அவனை மிக நேசிக்கும் அவன் காதலியை அவன் அருகே இருக்க வைக்க முயற்சி செய்யப்படுவதாகவும் ஒரு தகவல்.

மற்றுமோர் ஓலை - கல்விக் கூடங்கள் பண்டிதர்களுக்கு உதவி; வருவாய்க் கணக்கைத் தெரிவித்திருந்தது.

வீரமாதேவியிடமிருந்து வந்திருந்த ஓலையைக் கடைசியாகப் படிக்க எண்ணிய இராசேந்திரன் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.



'சோழ நாட்டுப் பேரரசியாக விளங்கினாள் உலக மாதேவி. அவள் மறைவிற்குப் பிறகு பஞ்சவன் மாதேவி அந்த இடத்தை ஏற்றாள். அவள் அதிர்ஷ்டக்காரி. அரியணையில் என்னிடம் சரிசமமாக அமரும் வாய்ப்பு பஞ்சவன் மாதேவிக்கே கிடைத்தது. பழுவேட்டரையர் குலத்திற்கு இதைவிடப் பெரிய பரிசு வேறெதுவும் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனால், அழகிலும் குணத்திலும் சிறந்திருந்த பஞ்சவன் மாதேவியின் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. வயது முதிர்ந்த நிலையில் வயதுக்கேற்ற அனுபவம், அவளுள் எழுந்த பொறாமையை ஏன் தடுக்கவில்லை? வீரமாதேவி இளவரசியாக வந்து சேர்ந்தவுடனேயே பஞ்சவன்மாதேவியிடம் பெரும் மாறுதல். அவளுள்ளத்தே ஏற்பட்ட பொறாமைத் தீ நல்ல காரியங்களுக்குத் தடையாக இருக்கிறது. பெரிய கோயில் கட்டுவது என்ற இலட்சியத்திற்கு வடிவமைத்துக் கொடுக்கும் ஆற்றல்மிக்க வீரமாதேவியின் பணிகளுக்குப் பஞ்சவன் மாதேவி இடையூறாக விளங்குகிறாள் என்பதை அறியும்போது இராசேந்திரனுக்குக் கவலை இதயத்தைக் கனக்கச் செய்தது.

கோயிலின் குட முழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வரவே இந்தக் கங்கை யாத்திரை. கோயில் பணி நடைபெறாவிடில் எதற்காக இந்தப் பயணம்? உடனே, தலைநகரத்திற்குத் திரும்பி விடுவோம் என்று எண்ணினார் இராசேந்திரன்.

இதுவரை எடுத்த காரியம் யாவிலும் வெற்றி கண்டு வந்த தனக்கு இப்படி ஓர் ஏமாற்றமா?

இதுவரை கவலை என்பதே அறியாத இராசேந்திரன் மனத்தில் பலவித எண்ணங்கள் கூத்தாடின. நெற்றிப்

பொட்டைப் பிடித்துக் கொண்டார். பழையாறையில் குழப்பம் இருக்கும் போது நாம் இங்கே ஏனிருக்க வேண்டும் என்று கவலை கொண்ட அவர் எதிரே வீரமாதேவி எழுதிய மடல் இருந்தது. அந்த ஓலையை எடுத்துப் படிக்கலானார்.

ஓலையைப் படிக்கும்போது தன் முகத்தில் ஏற்படும் மாறுதலை, வியப்பை, கவலையை படைத்தலைவன் கவனிக்கிறானா என்று ஒருமுறை அவனை நோக்கினார். அவன் வேறு எங்கோ பார்த்திருந்தான்.

ஓலையைப் படித்து முடித்தவுடன் அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.



CHN
CHN437425
CHN437425
...யப் பாவாண...
மைய நூலகம்
...னை - 600 002


ங்காபுரிக் காவலன்
கலைமாமணி விக்கிரமன்
பாகம் - 3
CHN
CHN437432
CHN437432



CHN
CHN437432
CHN437432

## 65. பயணத்தில் மாற்றம்

அருண்மொழியை இராசேந்திரன் ஒரு கணம் கூர்ந்து நோக்கினார்.

''அருண்மொழி! நீயும் அரையனும் பகைவர் படைகளை எளிதில் வென்று விடுவீர்களல்லவா?'' என்று கேட்டார்.

''ஏன் இவ்வாறு கேட்கிறீர்கள்? சோழப் படைகள் தோற்றோடியது என்ற வரலாறே கிடையாதே?'' அருண்மொழி புரிந்து கொள்ள முடியாமல் நின்றான்.

''சாளுக்கியர் படைகள் மிகக் கடுமையாக நம்மை எதிர்க்கப் போகிறார்கள். அதனால் அஞ்சிவிட மாட்டீர்களே?'' என்று கேட்டார் அரசர்.

சிங்கம் பிடரியைச் சிலிர்ப்பதுபோல் அருண்மொழி உடல் ஒருகணம் சிலிர்த்தது.

''புறப்பட்டுப் பல நாள்களாகியும் பகைவர்களுடன் நேருக்கு நேர் சந்தித்துப் போராட வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று கவலையுடன் இருக்கிறேன். எனக்கு

அச்சம் ஏது? சக்கரவர்த்திகளே! யுத்த பூமியில் என் திறமையைக் காட்ட எங்கே மறுத்து விடுவீர்களோ என்று கவலையுடன் இருந்தேன். கட்டளையிடுங்கள்...'' என்று பணிவுடன் கூறினான் படைத்தலைவன் அருண்மொழி.

''உங்கள் இருவரைப் பற்றிக் கேட்டேன்; நீ உன்னைப் பற்றி மட்டுமே உறுதி கூறுகிறாய். உன் நண்பன் அரையனைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. நீயும் அவனும் கலந்துபேசி, போர் முறைகளை வகுக்க வேண்டும். சோழநாட்டிற்கு இது ஒரு சோதனைக் காலம். உங்கள் இருவருக்குள்ளும் பொறாமை ஏற்படக் கூடாது. கருத்து வேற்றுமை ஏற்படக் கூடாது. படை வீரர்கள் ஒற்றுமையுடன் இல்லாவிடில் குழப்பம்தான் மிஞ்சும்'' எனக் கூறிவிட்டு இராசேந்திரன் அருண்மொழியை ஏறிட்டுப் பார்த்தார்.

அவன் கண்கள் கலங்கியிருந்தன. மற்றொரு படைத் தலைவன் அரையனுடன் தனக்கு எந்தவிதப் பூசலும் இல்லாதபோது அரசர் இப்படி ஏன் சொல்கிறார்? தன்னைப் பற்றித் தவறாக அரசரிடம் யார் தெரிவிக் கிறார்கள்? வேறு யார் சொல்வார்? எல்லாம் அரைய னாகத்தான் இருக்க வேண்டும்.

ஏன் அரையன் மீது நாம் சந்தேகப்படுகிறோம்? அவனிடம் என் உள் மனத்திற்குள்ளே பொறாமை இருப்பது எனக்கே தெரியவில்லையா?

தன் மௌனத்தை அதிக நேரம் நீடிக்கவிடாமல், ''சக்கரவர்த்திகளே! எங்களிடம் எந்தவித மன வேற்றுமையுமில்லை. படை வீரர்களுள் சில ஒற்றர்கள் இருப்ப தாகத் தாங்கள் அறிந்திருக்கிறீர்களே - இப்படி யொரு வதந்தியைப் பரப்புவது அவர்களுடைய



கை வரிசையாகத்தான் இருக்கவேண்டும். செய்திகளைப் பகைவர்களுக்குத் தெரிவிப்பதுமட்டும் ஒற்றர்களின் பணியன்று. நட்பில் பிரிவினை செய்து பலவீனப் படுத்துவதும் அவர்கள் பணி போலிருக்கிறது. நாங்கள் இரு கண்களென இயங்குவதாக உறுதி கூறுகிறேன். கட்டளையிடுங்கள்'' என அருண்மொழி நிமிர்ந்து நின்று பேசினான்.

''நீங்கள் இருவரும், படைகளை நடத்திக் கொண்டு முன்னேறுகிறீர்கள். நான் தலைநகரம் திரும்புகிறேன். அங்கிருந்து கிடைத்து வரும் செய்திகள் கவலையை அளிக்கின்றன'' என்றார் இராசேந்திரன்.

அருண்மொழி ஒருகணம் திகைத்தான் - என்ன சொல்வதென்று. ''சரி, நாங்கள் செல்கிறோம்; நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்'' என்று சொல்வதா, என்ன விடை பகர்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

''நான் திரும்பும் செய்தி யாருக்கும் தெரியவேண்டாம். கிருஷ்ணை நதிக் கரை வரை ஒரே மூச்சாகப் பயணப் படுங்கள்'' என்றார் சக்கரவர்த்தி.

**சோ**ழப்படைகள் புதிய உற்சாகத்துடன் அணி வகுத்துச் சென்றன. யானைப் படைகள், குதிரைப் படைகள், தேர்ப் படைகள் என, அவை கம்பீரமாகச் சென்றன.

''சக்கரவர்த்தி நம்முடன் வரவில்லையாம். பழை யாறைக்குத் திரும்புகிறாராம்'' என்ற செய்தி காற்றினும் அதிக வேகத்தில் விரைந்து பரவியது. அதைவிட வேகமாக ரங்கனும் சங்கனும் செய்தியைப் பழை யாறைக்கு அனுப்பினர். அவர்களை விட்டு விட்டு சோழப்படைகள் முன்னேறின. இராசேந்திரன் தங்கி

யிருந்த பாடிவிட்டுப் படைகளுடன் ரங்கனும் சங்கனும் தங்கிவிட்டனர்.

''சங்கா! நாம் சோழப்படைகளுடனே சென்றிருக்கலாம். அரசருடன் மீண்டும் பழையாறைக்குச் செல்வதால் என்ன பயன்?'' என்று சங்கன் கேட்டான்.

''இரண்டுவித ஆதாயங்கள். தீர்த்த யாத்திரை என்று தொடங்கிப் போரிடத் திட்டமிட்டுள்ளார் சோழ மன்னர். புத்த பூமியை மிதிக்காமல் பத்திரமாக பழையாறை திரும்புவது ஒன்று. மற்றொன்று சொந்த ஊரிலே சகல சௌபாக்கியங்களுடன் மீதி நாள்களைக் கழிப்பது'' என்றான் ரங்கன்.

''கிராமத்தில் தங்கியிருந்தால் நம் பிழைப்பு நடந்துவிடுமா? செய்திகளைச் சேகரித்துப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பினால்தானே பொன்னும் பொருளும் கிடைக்கும்?'' சங்கன் கவலைப்பட்டான்.

''அப்படிச் சொல்லாதே. அங்கேயும் பிழைப்பு இருக்கிறது'' ரங்கன் கூறினான்.

''எப்படி?''

''அரசியாருக்கும் இளவரசருக்கும் இடையே தூது போய்ப் பொருளீட்டலாம்.''

''எப்படி?''

''அங்கே குடும்பச் சண்டை வலுத்திருக்கிறது. அரச குடும்பத்திற்குள் அதிகாரப் போட்டி ஏற்பட்டிருக்கிறது. நாமும் நம்மால் இயன்றளவு தூபமிடுவோம்.''

''அவர்கள் சண்டை வலுப்பதால் நமக்கென்ன லாபம்?''



''ஒவ்வொன்றையும் உனக்கு விளக்கிச் சொல்ல எனக்குச் சக்தியில்லை. சோழர்களின் பலவீனம், பாண்டியர்களுக்குத் தனிப்பலம். நாம் சாளுக்கியர்களிடமும் பழகுகிறோம். சொல்லி வருவோம். நமக்குச் சேரவேண்டிய பொன்னும் பொருளும் கூடுதலாகக் கிடைக்கும்.''

''எந்த நாட்டில் சென்று கடைசிக் காலத்தை நிம்மதியாகக் கழிப்பது என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும்.''

''எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. நம்முடைய நடவடிக்கைகள் வெளிப்பட்டு விட்டால், கடைசிக் காலம் உடனே வந்துவிடும் என்று தோன்றுகிறது.''

''அடப் பைத்தியமே! அதுவரையில் நாம் இருந்த இடத்திலிருப்போமா? சோழ சக்கரவர்த்திகள் பழையாறை நோக்கிப் புறப்படும்போது ஒருவருமறியாமல் நாம் நழுவி விடுவோம்.''

''எப்படி?''

''பழையாறைக்குச் செல்லும் முன்பு அரசர் காளத்திக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கிறார். பிறகு அருகே உள்ள வேங்கடவரைத் தரிசிக்கச் செல்வார். மலை ஏறிச் செல்லும்போது நாம் தப்பி விடுவோம்.''

''சரியானபடி சிக்கிக் கொண்டால் மலையிலிருந்து உருட்டி விடுவார்கள்.''

சங்கன், ரங்கன் இருவருடைய பேச்சு நீடித்தது. பழையாறையை நோக்கித் திரும்பிச் செல்லும்போது சக்கரவர்த்தியின் கண்களில் படாமல் தப்புவது எப்படி என்பதைப் பற்றிப்பலமான யோசனையில் இருவரும் ஆழ்ந்திருந்தனர்.

அவர்களுக்கு அதிகக் கவலை வைக்காது மறுநாள் காலைப் பொழுது புலர்ந்தது. இரவு நெடுநேரம் விழித்திருந்ததால், காலைப் பொழுது விடிந்தும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். கண் விழித்தபோது, தங்கியிருந்த இடத்தில் யாருமில்லை. அரசருடைய பரிவாரங்கள் அங்கில்லை. நடுநிசிக்கு மேல் சக்கர வர்த்திகள் திடீரென முடிவெடுத்தார். சக்கரவர்த்திகளும் மற்றும் அவருடைய உடன் கூட்டத்தாரும் புறப்பட்டனர். பழையாறை நோக்கி அவர்கள் செல்ல வில்லை. மீண்டும்





வடதிசை நோக்கிச் சென்றனர். ஆட்சிச் செயல்பாடுகளில் திடீரென முடிவெடுப்பது அவர் வழக்கம். ஆனால் அந்த முடிவு சரியானதாக இருக்கும்.

இதுபோல் திடீரென முடிவை மாற்றியதில்லை. தன் முடிவை எண்ணி இராசேந்திரனுக்கு வியப்பாகவே இருந்தது.

வீரமாதேவியின் சுருக்கமான ஓலையைப் படித்த வுடன், பழையாறையில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். அங்கே தான் இருந்தால்தாம் சிக்கல்களைத் தவிர்க்கலாம். அதனால் பரிவாரங்களுடன் பழையாறை செல்வது என்று முடிவெடுத்தார்.

படை வீரர்கள் புறப்பட்டுச் சென்ற பின் வீர மாதேவியின் ஓலையை மீண்டும் ஒருமுறை படித்தார்.

எழுத்தாணி கொண்டு பனை ஓலையில் அவள் முத்துக் கோத்ததுபோல் எழுதியிருந்தாள். தெளிவாக இதயத்தைப் புலப்படுத்தியிருந்தாள். யார் மீதும் குற்றம் சுமத்தவில்லை. குறை காணவில்லை. பிரிவின் வேதனை ஓரிரு இடங்களில் தெரிந்தது. பஞ்சவன் மாதேவிக்குத் தன்மீது ஏற்பட்டிருப்பது பொறாமையா, கோபமா என்று புரியவில்லை; அதனால் கோயில் கட்டுவதற்கான கருங்கற்கள் வருவது தடுக்கப்படுகிறது. வனப் பகுதியி லுள்ள மரங்களை வெட்டக் கூடாது என்று அதிகாரிகள் தடுக்கின்றனர். சிற்பப் பணிக்கு வரும் சிற்பிகள் வரும் வழியிலேயே தடுக்கப்படுகின்றனர். ஆனால் ஏரி வெட்டும் பணி மட்டும் எந்தவித இடையூறுமின்றி நடைபெறத் தொடங்கிவிட்டது என்று தெரிவித்திருந் தாள்.

மற்றொரு செய்தி இராசேந்திரனுக்குச் சற்று அதிர்ச்சியைத் தந்தது.

'தங்கள் உடன்பிறவாச் சகோதரி பூங்கொடி சில நாள்களாக ஒருவருடனும் பேசுவதில்லை. நடன வகுப்புகள் நடைபெறவில்லை. பழையாறைக்குச் சென்றுவிட்டாள். அவளுக்கு உடல் நலம் குன்றியிருப்பதாகத் தகவல். இளவரசர் ஆதித்தனின் ஆதரவு இருப்பதால் நான் துணிவுடன் இருக்கிறேன். திருப்பணிகள் நடைபெறாமல் தடுக்கப்படுவதும் அதிக நாள்கள் நீடிக்காது என்று எனக்குத் தெரியும். சிற்பியின் உடல்நலத்தைக் கவனிக்க மருத்துவர்கள் வராமல் தடுக்கப்படுகிறார்கள்.

''எல்லாவற்றையும்விட எனக்கு அதிர்ச்சி தருவது என் உடன் பிறந்தாருக்கு என்மீது ஏற்பட்டிருக்கும் கோபம். அது ஏன், எதனால் ஏற்பட்டது என்று என்னால் உணர முடியவில்லை.

''எப்போதும் வாய் நிறைய 'வீரம்மா, வீரம்மா' என்று என்னை அழைக்கும் என் அண்ணன், 'இளவரசி அவர்களே!' என்றும், 'வீரமாதேவி அவர்களே!' என்றும் அழைப்பதிலிருந்து அவருக்கு என் மீது ஏதோ ஒரு விதத்தில் மனத்தாங்கல் ஏற்பட்டிருப்பது புரிகிறது. இறைவன் அளித்திருக்கும் காட்டை அழிக்குமாறு தங்களுக்கு நான் தவறான யோசனை கூறியுள்ளேனாம். தஞ்சைபுரியிலிருந்து தலைநகரத்தைக் காட்டுப் பிரதேசத்திற்கு மாற்றுமாறு, தங்களுக்கு திட்டமிட்டுத் தந்தது நான்தானாம். இன்னும் என்னவெல்லாமோ கூறி என் மனத்தை நோகச் செய்துவிட்டார்.

''இருந்தாலும் நீங்கள் கவலைப்படாமல் கங்கா யாத்திரையை மேற்கொண்டு புனித நீராடித் திரும்பி வாருங்கள்.



''கங்கையைக் கொண்டு வந்து, நாம் கட்டி முடித்திருக்கும் கோயிலில் வீற்றிருக்கும் பெருவுடையாருக்குப் புனித நீர்த் திருமுழுக்காட்டி பெரிய விமானத்தின் கும்பத்திற்குக் கங்கை நீரால் அபிடேகம் செய்து, ஏரியில் கங்கை நீரை நிரப்பி, வெள்ளி விழா கொண்டாடிய பிறகு நீங்களும் நானும் மட்டும் கங்கையில் புனித நீராடி விட்டுத் திரும்ப வேண்டும்.

''கங்கையை இந்தப் பூமிக்குக் கொண்டு வந்த பகிரதனைப் போல் நீங்கள் கலியுகப் பகிரதனாக மாறும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இப்படி நான் எழுதுவதைப் படித்தவுடன் நீங்கள் என்ன முடிவு எடுத்திருப்பீர்கள் என்று நான் கற்பனை செய்கிறேன். சொல்லட்டுமா?

'கங்கை நீரைத் தேக்கி வைக்க ஏரி வெட்டப்பட்டிருக்கும். கோயில் குடமுழுக்குக்கு ஆயத்தமாகக் கோயில் பணி முடிந்திருக்கும். என் அருமை வீரமாதேவி எடுத்ததை முடிக்கும் ஆற்றல் படைத்தவள்' என்றுதானே நினைத்திருப்பீர்கள்? என் எண்ணம் சரிதானே? உங்கள் விழிகளில் ஏற்படும் காதல் ஒளியைக் காண்கிறேன். இதழ்களில் மிளிரும் புன்முறுவலைக் காண்கிறேன். வழக்கம்போல் என்னை நெருங்கி நீங்கள்... அதற்குமேல் எழுதமாட்டேன். ஏன் என்றால் என் நினை விருந்தால் நீங்கள் பயணத்தைப் பாதியில் நிறுத்தித் திரும்பிவிடக் கூடும். எனக்கோ, நீங்கள் என் அருகே இருப்பது போன்ற உணர்வு. - இதயத்தில் அழியா இடம் பெற்ற வீரமாதேவி.''

இராசேந்திரன் ஓலையை மீண்டும் ஒருமுறை படித்தார். கண்களில் ஒத்திக் கொண்டார். மார்புடன் அணைத்துக் கொண்டார்.

பாதிசாமம் நெருங்கியதால் விளக்கொளி குறைந்தது. விளக்கில் எண்ணெய் விட வந்த பணியாள் சற்றுத் தொலைவில் நின்று அரசரின் செய்கையைக் கவனித்துக் கொண்டிருந்தான். இருளை ஓட்டி முகத்திற்கு மட்டும் ஒளியைத் தந்து கொண்டிருந்த அந்த அகல் விளக்கொளியில் அரசர் முகத்தில் இப்போது புத்துணர்வு ஏற்பட்டிருப்பதை உணர்ந்தான்.

விளக்கில் எண்ணெயிடத் தான் வந்திருப்பதை சிறு ஓசையால் மெல்லத் தெரிவித்தவுடன் இராசேந்திரன் நிமிர்ந்து பார்த்தார். "எண்ணெய் விட்ட பிறகு, திருமந்திர ஓலை நாயகத்தை உடனே வரச்சொல்" என்றார். காவலரிடம் மட்டுமே சொல்லப்பட வேண்டிய அந்தக் கட்டளையைத் தன்னிடம் சொல்வதால் செய்வதறியாது திகைத்த அவன் உடனே விரைந்தான். நன்றாக உறங்கிக் கொண்டிருந்த திருமந்திர ஓலை நாயகம் திடுக்கிட்டு விழித்தெழுந்து விரைந்து வந்தார்.

"பழையாறையிலிருந்து அரசி பஞ்சவன் மாதேவியை இளவரசி அரிந்தவன் மாதேவியையும் உடனே இங்கு அழைத்து வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவர்களுக்குத் துணையாக வீரமாதேவியின் சகோதரன் முத்துக் குமரனைப் படைவீரர்கள் நூற்றுவரோடு வருமாறு பணியுங்கள். வழியில் பயணம் எவ்வித இடையூறின்றி அமைய ஏற்பாடு செய்யுங்கள். விடிந்தவுடன் நாம் கிருஷ்ணா நதிக்கரையை நோக்கிச் சென்று அங்கே தங்குகிறோம். பழையாறையிலிருந்து புறப்பட்டு எவ்வளவு விரைவாக அவர்கள் வர முடியுமோ அவர்கள் இங்கு வந்து சேரட்டும்" என்று கட்டளை பிறப்பித்தார்.

மன்னர் கட்டளைக்கு மறுபேச்சு பேச முடியுமா?





## 66. அதென்ன முடிவு?

சிற்பி மாணிக்க சேகரன் நோய்வாய்ப்பட்டு பழையாறையில் அரச மருத்துவரின் கண்காணிப்பில், ஆதுர சாலையில் படுத்திருந்தான்.

அவன் அருகே அவனைக் கவனிக்க, ஊதியம் பெற்ற பணியாளர்கள் இருந்தனர். அவன் உற்றார் உறவினர் அவன் அருகிலில்லை. தனக்கு அப்படி யாருமே இல்லை என்று அவனே சொன்னான். "எனக்கென்று பரிதாபப்பட ஒரு ஜீவன் உண்டு. அதுவும் இங்கில்லை" என்று அவன் முணுமுணுத்தான். மதுரையில் சிற்பத் திருப்பணி செய்யச் சென்ற குழுவினருள் அவனுடைய உறவினர் சிலர் இருந்தனர். அவனுக்கு மிக நெருங்கியவர், வேண்டியவர் என்று சொல்வதற்கு யாராவது இருக்கிறார்களா என்றால் - அவன் குறிப்பிட்டது போல் அவன் மனத்தைக் கவர்ந்த குமுதத்தைத்தான் சொல்லலாம்.

அவள் இன்னும் பழையாறைக்கு வந்து சேரவில்லை! அவனைத் தேடிப் புறப்பட்டவள் எங்கோ தடைப்பட்டு நின்றிருக்கிறாள். ஒவ்வொரு நாளும் மாணிக்க சேகரன்

அவள் வருகையை எதிர்நோக்கியிருந்தான். எதிர்பார்ப்பினால் அவன் மனம் சில நேரங்களில் சஞ்சலமடையும், உற்சாகம் குறையும் என்றாலும் அவனுடைய உள்ளத்தில் பொங்கி வழிந்து கொண்டிருந்த ஆர்வம் அவன் சோர்வைப் போக்கிவிடும். சிவபெருமானும், உமையும், திருமாலும், திருமகளும், விநாயகரும், ஆறுமுகக் கடவுளும், சூரியனும், பைரவனும், பிக்ஷாடனரும் அவன் மனக்கண் முன் எப்போதும் நின்று புன்முறுவல் பூத்தவாறிருப்பார்கள்.

சில வேளைகளில் தன் எதிரே யார் இருக்கிறார்கள் என்றே அவனுக்குத் தெரியாது. புதிதாகச் சிற்பம் பயில வந்திருக்கும் இளம் சிற்பிகள் அவன் இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்திருப்பார்கள். சிற்பக் கலையைக் கற்றுத் தேர்ந்து அமர சிற்பங்களைப் படைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் வந்தவர்கள் அவன் எதிரே நிற்பார்கள். ஓலைச் சுவடியிலுள்ள சிற்ப சாத்திரத்தை ஒருபுறம் அமர்ந்து ஓர் இளம் சிற்பி மிகக் கவனத்துடன் படித்துக் கொண்டிருப்பான். வேற்று மொழியிலுள்ள நுணுக்கச் சொற்களின் உச்சரிப்பு மாறாமல் இருக்க, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்தின் வரிவடிவம் புரியாமல் சந்தேகம் கேட்க ஓர் இளம் சிற்பி மாணிக்க சேகரன் அருகே மிகவும் அடக்கமாக நிற்பான். பாறைகளின் தன்மையைச் சோதித்து அவற்றைத் தலை கீழாகப் புரட்ட, பணியாளர்களின் உதவியைக் கேட்டுக் குரல் எழுப்புவான் ஒருவன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாறையில் சிற்பம் செதுக்கக் காவிக் கோடுகளையும் சுண்ணாம்புக் கோடுகளையும் இட்டு அளவு பார்ப்பான் ஒருவன். பதப்படுத்தப்பட்டு



ஒன்று சேர்த்துத் தைக்கப்பட்ட இலைகளில் வரி வடிவமாக வரையப்பட்டிருக்கும் உருவங்களை ஒரு முறை கவனமாக மனத்தில் பதிய வைத்துக்கொள்வான் ஓர் இளஞ் சிற்பி.

சிற்ப நூலில், உருவாக்கப்பட வேண்டிய சிற்பங்களின் அங்க அளவுகளை விவரிக்கும் பாடல்களை, ஸம்ஸ்கிருத சுலோகங்களை இளம் சிற்பி ஒருவன் வாய் விட்டுப் படித்துக் கொண்டிருப்பான்.

சூழலைச் சிறப்புடையதாக்க இளஞ் சிற்பிகள் முனைந்து கொண்டிருந்தனர். பெரிய கோயில் ஒன்றையும் கோயிலில் சிற்பக் கூடங்களையும் அமைக்க அவர்கள் உற்சாகத்துடன் இயங்கிக் கொண்டிருந்தனர். இளம் வயதிலேயே கலாதேவியின் பூரண அருளையும் பெற்று விட்ட மாணிக்க சேகரனின் வழிகாட்டுதலுக்காக அங்கே சிற்பிகளின் படையே நின்று கொண்டிருந்தது. ஆனால் சில நாள்களாக அந்தக் கானகப் பகுதியில் சிற்பப் பணி தடைப்பட்டது.

ஒரு நாள் மாணிக்க சேகரனுக்குக் கடும் காய்ச்சல் ஏற்பட்டது. காட்டின் நடுவே சிகிச்சைக்கு வசதியில்லை. கை வைத்தியமாகச் சில மூலிகைகளைப் பிழிந்து சாறாக்கிக் கொடுத்தார்கள். பழையாறைக்கு அவனை அழைத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதால், மாணிக்க சேகரன் பழையாறைக்குத் தக்க துணையுடன் அழைத்துச் செல்லப்பட்டான். அவனுடன் செல்ல வீரமாதேவி விரும்பினாள். ஆனால் தொடங்கப்பட்ட சிற்பப் பணிகளுக்கு இடையூறு ஏற்படும் என்பதால், அவள் பழையாறை செல்லும் முயற்சி கைவிடப்பட்டது. பஞ்சவன் மாதேவி இதை அறிந்து, மாணிக்க சேகரனுக்கு

அரச மருத்துவர் சிகிச்சை அளிப்பதைத் தடை செய்ய முயன்றான். ஆனால் இளவரசன் முயற்சியால் மாளிகை மருத்துவரிடம் மாணிக்கசேகரன் ஒப்படைக்கப்பட்டான்.

மாணிக்க சேகரன் பழையாறைக்குச் சென்ற பிறகு ஒருநாள் ஓர் இளஞ் சிற்பி விழிகளை மூடி மனத்தை ஒருமைப்படுத்தியவாறு அமர்ந்திருந்தான். அப்பொழுது மற்றொரு சிற்பி அப்பொழுதுதான் நீராடிவிட்டு ஈர ஆடையுடன் வந்து கொண்டிருந்தான்.

''காய்ச்சல் எப்படி இருக்கிறது?'' என்று மனத்தை ஒருமைப்படுத்த முயன்று கொண்டிருந்த சிற்பி அவனை நோக்கிக் கேட்டான்.

''காய்ச்சலைப் பார்த்தால் முடியுமா? இரண்டு நாள்களாக உளியைத் தொடாததால் மனத்தில் ஏற்பட்ட வேதனை சொல்ல முடியவில்லை.''

''ஏன் தொடவில்லை?''

''நீராடாமல் சிற்றுளியையும், சுத்தியலையும் நெருங்கக்கூடாது என்று குருநாதர் சொல்லியிருக்கிறார். ஏனெனில் தூய்மைதான் சிற்பக் கலைக்கு அடிப்படை இல்லையா? என்னால் சும்மாயிருக்க முடியவில்லை. அல்லித் தடாகத்திற்குச் சென்று இளம் சூடு குறையு முன்பே தொப்பென்று குதித்து மூழ்கி எழுந்து ஓடோடி வந்து விட்டேன்'' என்று கூறியவனை நோக்கி, மனத்தை ஒரு நிலையில் நிறுத்த முயன்று கொண்டிருந்த இளம் சிற்பி கேட்டான்.

''தூய்மை, உடலில் மட்டும் இருந்தால் போதுமா? மனத் தூய்மை எந்த நீரால் அமையும்?''



கேள்விக்குள் மறைந்திருந்த பொருளைப் புரிந்து கொண்ட சிற்பி கேட்டான், ''மனத்தில் மாசு இருப்பது முகத்தில் தெரிந்துவிடும். மாசை உள்ளே மறைத்துக் கொண்டு சிறு பாறை அருகே கூடச் சிற்பப் பணியாற்ற நெருங்க முடியாது. தெரியுமா? சிற்பப் பணியிலீடுபட வேண்டுமென்றால் மனத்தில் தூண்டுதலொன்று ஏற்பட வேண்டும். மாசுள்ள மனத்தில் எந்த விதப் புத்துணர்வும் ஏற்படாது.''

இளஞ் சிற்பி நகைத்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''நம் குருநாதர் எவ்வளவு திறமைசாலி தெரியுமா?''

''அதில் என்ன சந்தேகம்?''



''அவர், பாறைகளில் ஜால வித்தைகளைச் செய்கிறார் தெரியுமா?''

''ஆமாம், அவரிடம் சிற்பக் கலை கற்பதற்கென்றே பல காத தொலைவிலிருந்து வந்திருக்கிறோம் என்பதை மறந்துவிட்டாயா?''

''அதில் என்ன சந்தேகம்? அவருடைய மனத்தை நான் அறிவேன். அதில்... அதில்... அதில்...''

''என்ன சொல்ல வருகிறாய்? அவர் மனம் மாசு பட்டிருக்கிறது என்றா? சுற்றி வளைக்காமல் பளிச்சென்று சொல்லி விடு. ஒளிவு மறைவு இல்லாமல் பேசப் பழகிக்கொள்.''

''எல்லாருக்கும் தெரிந்த கதைதான். ஆனால் வெளியே சொல்லப் பயம்.''

''உனக்குத் தெரியாதா? சில நாள்களாக அவர் பிரமை பிடித்தவர் போலிருக்கிறார். யாரையோ எதிர்பார்ப்பது





போல் அவர் பார்வை குத்திட்டு நிற்கிறது. நான் கேட்டறிந்தவரை - அவருக்கு ஒரு காதலியாம். அவள் இவரை மறந்து விட்டாளா அல்லது இவர் அவளை மறந்து விட்டாரா தெரியவில்லை. ஆனால் இங்கு இவர் மனமாறுதலுக்கு வேறு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்கிறார்.''

''அப்படி என்ன சூழ்நிலை?''

''உனக்குத் தெரியாதா? இங்கே கானகத்தில் ஓர் அழகிய பெண். அவளிடம் அவர் தன் மனத்தைப் பறி கொடுத்து விட்டார். மின்னல் வெட்டைப் போன்ற அவளுடைய பார்வை இவரை வெட்டி இழுக்கிறது. அவளும் இவரும் அப்படி என்னதான் நேரம் போவது தெரியாமல் பேசிக்கொள்வார்களோ?''

''அவர்கள் பேசிக் கொள்வதை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா?''

''சொல்லாமலே எனக்குப் புரியாதா? நான் இப்போது உன்னிடம் சொல்ல வந்தது: மனத்தில் இப்படிப் பெரிய அழுக்கை வைத்துக் கொண்டு அவர் அற்புதச் சிற்பங் களைச் செதுக்குவது சரிதானா?''

இப்படிச் சொன்னவுடன். இளஞ் சிற்பி வாயடைத்துப் போனான். ''சிவ சிவ'' எனக் கூறிக் காதைப் பொத்திக் கொண்டு, ''உன் மனத்தில்தான் பெரும் அழுக்கு. உன்னுடன் பேசிக் கொண்டிருந்தால் என் மனம் மாசு அடைந்துவிடும்.. பிறகு நான் உளியுடன் பாறைகளை நெருங்க முடியாது. போ, போ இங்கிருந்து போய்விடு. தகாத வார்த்தையெல்லாம் பேசாதே'' என்றான் கடுமை யாகப் பேசியவாறு.

அவனை அடிக்க வருவதுபோல் கையை ஓங்கிய வனைப் பார்த்து இளஞ் சிற்பி நகைத்து, ''உனக்கு ஏனப்பா கோபம் வருகிறது? நான் கண்டதைக் கேட்டதைச் சொல்கிறேன். ஒவ்வொரு சிற்பியின் மனக் கண் முன்னாலும் ஓர் அழகிய இளம் பெண் நடமாடிக் கொண்டிருப்பாள். ஓர் இலட்சியப் பெண் உருக் கொண்டிருப்பாள் என்பது உண்மைதானே! அவளுடைய எட்பூ நாசியையும், அகன்ற விழியையும், குமிழ்ச் சிரிப்பையும், வில் புருவத்தையும், செங்கலச மார்பு களையும் ரசித்தவாறுதானே தன் படைப்புகளையும் உருவாக்குகிறான்? திருநாவுக்கரசர் பதிகத்தை அன்று நீ பாடினாய் - அந்தப் பாடல் வரிகள் ...கொவ்வைச் செவ்வாயில் குமிழ்ச் சிரிப்பும்...''

''ஏய், ஏய் - நாவுக்கரசர் பெண்ணையா வர்ணித்தார்? இறைவனின் திருவடியை மனக் கண்ணால் கண்டதைப் பாடல்களாகப் பாடினார்... 'குனித்த புருவமும், குமிழ் சிரிப்பும்' என்றவுடன் உன் அத்தை மகள் நினைவுக்கு வந்து விட்டாளா? வேண்டிய வரை மனத்தில் நினைத்துக் கொள்வதால் மனம் மாசுபடுமா?''

''உனக்கு உலகம் புரியவில்லை. நம் குருநாதர் நேரம் போவது தெரியாமல் அந்த மங்கை நல்லாளுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் உனக்குத் தெரியும்.''

''இருக்கட்டுமே? ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டி ருப்பதால் மனத் தூய்மை கெட்டு விடுமா?''

''நெருங்கிப் பேசிப் பார்த்தால் தெரியும். எனக் கென்னவோ இந்தக் காட்டுப் பகுதியில் நடமாடும் பெண் தேவதைகளால் மனம் சஞ்சலமடைகிறது. நடனம் கற்றுக் கொள்ள வந்தார்களா? அல்லது திருமணம் புரிந்து



கொள்ள மணாளனைத் தேட வந்தார்களா? ஊர் நினைவு வந்து விடுகிறது.''

''போ, போ... நாச்சியார் கோயில் இங்கிருந்து அதிகத் தொலைவில் இல்லை. அங்கே உனக்காகக் காத்திருக்கும் அத்தை மகளை மணம் பேசி முடித்து விட்டு வா.''

''குருநாதர் அனுமதிக்க மாட்டார். தனக்கு மட்டும் தான் காதல் தாபம் ஏற்படும் என்பது அவர் எண்ணம். தன் காதலியைக் காணாத ஏக்கத்தை இங்கே சுற்றிச் சுற்றி வரும் மோகினியிடம் பேசிப் பழகுவதில் தீர்த்துக் கொள்கிறார்.''

''அடேய்! உனக்கு மோகினிப் பிசாசு பிடித்துவிட்டது. என்னிடம் பேசுவது போல் மற்றவர்களிடம் பேசாதே. நீ நினைப்பது போல் இந்தக் கானகத்தில் சுற்றிச் சுற்றி வருபவள் மோகினி அல்லள். அவள்தான் - அவள் தான்...'' என்று சொல்ல முனைந்தவன் வாயடைத்துப் போனான். பேச்சு தடைப்பட்டது.

''சொல்லாமல் ஏன் தயங்குகிறாய்?'' என்று மற்றவன் அவனை உலுக்கினான். நிலைகுத்தி நின்ற பார்வையுடன் இருந்த அவன் தோளை உலுக்கி, ''அவள்தான் என்றால் யார்? மோகினி என்றால் பாதம் பூமியில் பதிய வேண்டுமல்லவா? அதை நான் பார்த்து விடுகிறேன்'' என்றவனிடம், ''திரும்பிப் பார்'' என்று தடுமாறியவாறு கூறினார்.

வீரமாதேவி அங்கு நின்று கொண்டிருந்தாள். அவ்வளவுதான் - இரண்டு இளம் சிற்பிகளும் ஓட்டம் பிடித்தனர்.

அவர்கள் பேசியதன் இறுதிப் பகுதியை மட்டும் கேட்ட வீரமாதேவி, அவர்களிடம் முழுமையும்

கேட்டறிய முற்படுவதற்குள் அவர்கள் ஓட்டம் பிடித்தது கண்டு மேலும் வியப்படைந்து, மாணிக்க சேகரனின் மன நிலையைப் பற்றிச் சிந்திக்கலானாள். அவனுடன் தான் பேசிக் கொண்டிருந்ததை முன்பு அரசர் தவறாக எடுத்துக் கொண்டது நியாயமே என்று எண்ணினாள்.

மாணிக்க சேகரனின் காதலி குமுதத்தைத் தேடிப் பிடித்து உடனே அவனிடம் சேர்க்க விரும்பினாள்.

தன் பணிகளில் அரசி குறுக்கிடு செய்வதை அரசருக்கு எழுதியனுப்பிய பிறகு வீரமாதேவி அமைதியாகச் சிந்தித்தாள்.

மாணிக்க சேகரன் உடல் நிலை முழுமையாகக் குணமடைய வேண்டும். காட்டுப் பகுதியைச் சீராக்க வேண்டும். வீடுகள் கட்டப்பட வேண்டும். புதிய நீர் நிலை ஏற்படுத்த வேண்டும். கோயில் திருப்பணியை முழுமூச்சுடன் நிறைவேற்ற வேண்டும். இவ்வளவும் நிறைவேற சோழ அரசி தடையாக இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அரசிக்குச் சிவபக்தி இல்லையா? புதிதாகக் கோயில் கட்டுவதை ஏன் தடுக்கிறாள்? புதிய நகரம் உருவாகித் தன் கணவனுடைய இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் எனும் ஆவல் அவளுக்கு இல்லையா? புதிய நகரத்தில் கட்டப்படும் அரண்மனையின் புதிய மண்டபத்தில் புதிய அரியணை யில் அரசருடன் அமர்ந்து புதிய மகுடாபிஷேகம் செய்துகொள்ளும் ஆசை அவளுக்கு இல்லையா? அந்த உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்ற துடிப்பு இல்லையா? ஒவ்வோர் ஆண்டும் கட்டுக்கடங்காமல் பெருக்கெடுத்தோடும் காவிரி வெள்ளத்து வடிகாலாக இருக்கும் கொள்ளிடத்தில் பாயும் நீரைத் தடுத்துத் தேக்க



ஓர் ஏரி வெட்டினால் சோழ நாட்டிற்குத்தானே பெரும் பலன்? அதை நிறைவேற்றுவதால் தனக்குப் பெயரும் புகழும் ஏற்படும் என்ற நம்பிக்கை அரசிக்கு இல்லாதது ஏன்?

பெயர், புகழ், பெருமை - யாவும் அவளுக்குக் கிடைக்கும் என்றாலும் அதைத் தடுக்கும் மற்றொன்று அவள் உள்ளத்திலிருக்கிறது. அதுதான் - அதுதான் பொறாமை. யார் மீது பொறாமை? வேறு யார் மீது இருக்க முடியும்? தன் மீதுதான். அப்பொழுதே புரிந்து விட்டது. அரசரிடமிருந்து தன்னைப் பிரித்து விட்டால் தான் சோழ நாட்டிற்கும் - சோழ மாமன்னன் இராசேந் திரனுக்கும் புகழ், பெயர், அழியாக் கீர்த்தி எல்லாம் ஏற்படக் கூடிய இந்தப் பணி நிறைவேறும். கோயில் கட்ட, ஏரி வெட்ட, நகரம் உருவாக்க வேறு எவரேனும் முன்வர மாட்டார்களா?

அங்கேயே மரத்தடியில் அமர்ந்து சிந்தித்தாள். மாணிக்கசேகரன் நோய்வாய்ப் பட்டதால் அரை குறையாக நின்று விட்ட சிற்பங்கள் ஒரு புறம். மரங்கள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டு நிறைவேறாமல் இருக்கும் காடு திருத்தும் பணி ஒரு புறம். காட்டை அழிக்கும் பணியால் கொடிய பாம்பு இனங்கள் இடம் பெயர்வதால் ஏற்பட்ட அச்சத்தால் நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள ஓடி வருவதால் அவ்வப்போது ஓலமிட்டு, தங்கள் கலைப் பணிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, கலைச் செல்வி பூங்கொடி யுடன் நடனக் கூடத்தை விட்டுப் புறப்பட ஆயத்தமாகும் கலைக் கூடப் பரபரப்பு ஒரு பக்கம்.

பழையாறையில் இருந்து உணவுப் பொருள்கள் சரிவர வராததால், பணியாள்கள், பசியால் வாடி தன்னிடம்

முறையிடும் கூக்குரல் ஒரு பக்கம். தன் பணிக்கு உதவியாக இருக்கும் இளவரசர் பல நாள்களாக அந்தப் பக்கம் வரவில்லை; காரணம் என்னவென்று தெரியவில்லை.

அரசருக்குச் செய்தி எடுத்துச் சென்றவர்கள் ஒவ்வொருவராகத் திரும்பி வரும்போது ஒருவர் சொன்னார், ''அரசர் கங்கைக் கரைக்குச் செல்லவில்லை. கிருஷ்ணா நதிக் கரையில் தங்கியிருக்கிறார்.''

'அப்படியென்றால் கங்கைக் கரைக்கு அவர் எப்போது செல்லப் போகிறார்? எப்போது கங்கை நீர் வரப் போகிறது? இங்கே கோயில் கட்டும் பணி முடிவடைவதற்குப் போதிய அவகாசம் தரவேண்டும் என்பதற்காகக் காலம் தாழ்த்துகிறாரா?

தன் சகோதரன் கூறியதுபோல் நாம் அளவுக்கு மீறிய உரிமையை அரசரிடம் எடுத்துக் கொண்டு விட்டோமா? அரச குடும்பத்தில் தேவையற்ற கலக்கத்தை ஏற்படுத்தி விட்டோமா?'

வீரமாதேவி நேரம் போவது தெரியாமல் பல வித சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தாள். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். அதுதான் -

பழையாறைக்குச் சென்று சிற்பி மாணிக்க சேகரனின் உடல் நலம் குறித்துக் கேட்டறிந்து, அவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு உடல் நலமடைந்தவுடன் சிற்பப் பணிகளைத் தொடருமாறு கூறிவிட்டு, சக்கரவர்த்தி தங்கியிருக்கும் கிருஷ்ணா நதிக் கரையை நோக்கிச் செல்வது. அங்கு அவரைச் சந்தித்துத் தன் முடிவைத் தெரிவிப்பது...

முடிவா? அதென்ன முடிவு? அவள் அப்படியும் ஒரு முடிவு செய்ய முடியுமா?





## 67. சித்தரின் சித்தம்

இராசேந்திர சோழ தேவரின் பட்டத்தரசி, பஞ்சவன் மாதேவியின் கரத்தில், பட்டுத் துணியில் சுற்றப்பட்ட ஓலைகள் இருந்தன. அந்த ஓலைகளில் எழுதப் பட்டிருந்த செய்தியை மிகக் கவனத்துடன் அரசி படித்தாள். சற்றுத் தொலைவில் நின்றிருந்த ஒற்றர் படைத் தலைவர் அரசியார் என்ன சொல்லப் போகிறாரோ என்று எதிர் பார்த்துக் கவனத்துடன் பயபக்தியாக நின்று கொண்டிருந்தார். பயமும் மரியாதையும் கலந்த முகத்தில், சற்றுப் பெருமிதமும் கலந்திருந்தது.

வீரமாதேவியின் நடவடிக்கையைக் கண்காணிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கானகத்தில் அவள் செய்யும் பணிகள், அவள் யாருடன் பேசுகிறாள், கோயில் பணிகளின் முன்னேற்றம் - ஆகிய எல்லாவற்றையும் கவனமாகக் குறித்து, அரசியிடம் தெரிவிப்பது அவர் பொறுப்பு.

அரசியாருக்கு அவர் தெரிவிப்பது மற்ற எவருக்கும் தெரியாது பார்த்துக் கொள்ளும் மிகப் பெரிய கடமையும் அவருக்கிருந்தது. ஒவ்வொரு நாளும் பழையாறையிலும்,

நாட்டிலும் நடைபெறும் முக்கியச் செய்திகள் வடக்கே சென்றிருக்கும் அரசருக்குத் தெரிவிக்கப்படும். அதற்கென்றே படை வீரர்கள் இருவர் இரு நாள்களுக்கு ஒருமுறை அரசரிருக்குமிடத்திற்குச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் மூலம் வீரமாதேவியும் செய்தி அனுப்பி வந்தாள்.

அவள் அனுப்பும் செய்தியைத் தெரிந்து அரசியிடம் சொல்லும் பொறுப்பை ஒற்றர் படைத் தலைவர் ஏற்றிருந்தார். ஓலையைப் படித்துவிட்டு பஞ்சவன் மாதேவி கொடுத்து விடுவாள். வீரமாதேவியின் ஒவ்வோர் எழுத்தையும் படிக்கும்போது, பஞ்சவன் மாதேவிக்குச் சீற்றமும், எரிச்சலும், ஆத்திரமும் பொங்கும்.

அன்று ஒற்றர் படைத் தலைவர் கொண்டு வந்த தகவலைப் படித்தறிந்தவுடன் பஞ்சவன் மாதேவி வெகுண்டெழுந்தாள்.

''பழையாறையிலுள்ள ஆதுர சாலைக்கு வீரமாதேவி வந்து சென்ற செய்தி எனக்குத் தெரிவில்லை. கருவூர்ச் சித்தரும் வந்திருக்கிறார். எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை?'' கோபத்துடன் ஒற்றர் படைத் தலைவரைக் கேட்டாள்.

பழையாறைக்கு யார் வருகிறார்கள், யாரைச் சந்திக்கிறார்கள் என்பனவற்றை அறிந்து அரசியாரிடம் சொல்லும் பொறுப்பை அவர் ஏற்கவில்லை. எனவே என்ன சொல்வது என்று புரியாமல் கையைப் பிசைந்தார்.

''என்ன?'' - பஞ்சவன் மாதேவியின் விழிகள் உருண்டன. நடக்காதது ஏதோ நடந்து விட்டதைப் போல் அவள் சீறினாள்.



ஒற்றர் படைத் தலைவர் மிகவும் மெல்லிய குரலில், பயத்துடன், ''மாளிகை மருத்துவரின் வீட்டைக் கண்காணிக்குமாறு எனக்கு உத்தரவு இல்லை என்பதால், நான் ஒற்றர்களை அங்கே இருக்கச் செய்யவில்லை...'' என்றான்.

''பழையாறைக்கு வீரமாதேவி வந்தது எப்படி தெரியாமல் போயிற்று? கானகப் பகுதியை விட்டு அவள் புறப்பட்டதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா? அது உங்கள் கடமையல்லவா?'' அரசியின் ஆத்திரம் அதிகமாயிற்று.

அரசி கேட்பது நியாயம்தான். வீரமாதேவி சிற்பத் திருப்பணி நடைபெறும் இடத்தை விட்டுப் புறப்பட்டது நமக்குத் தெரியாமல் போனது எப்படி? தலைவர் கவலையடைந்தார். 437432/6105520

அவருடைய மௌனம் அரசியாரின் கோபத்தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்தது.

''அந்த மாய மோகினி பழையாறைக்கு வந்திருக்கிறாள். ஹூம்'' என்று அரசி சீறினாள்.

மாய மோகினி என்று அவள் குறிப்பிடுவது வீரமாதேவியை.

''மாளிகை மருத்துவரின் ஆதுர சாலையில் சிற்பி மாணிக்க சேகரன் கடும் காய்ச்சலுடன் கிடக்கிறான். அவனுக்குக் காய்ச்சல் வந்ததால் சிற்பப் பணிகள் தடைபட்டன. சிற்பிக்கு வந்திருக்கும் நோயைக் குணப்படுத்தவேண்டும் என்பதில் எமக்கும் அக்கறை உண்டு. ஆனால், சிற்பிக்கு உடல்நிலை சரியில்லாததால்தானே கோயில் திருப்பணி தடைப்பட்டது? வெளிப்படையாக



தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

நான் சொல்ல வேண்டுமா? சிற்பி பழையாறையில் எவ்வளவு நாள்கள் தங்கியிருக்கிறாரோ அவ்வளவுக்கு நல்லது. அவருடைய காதலியைப் பழையாறைக்கு வரவிடாம்ல் நீங்கள் தடுத்ததில் எனக்கு மகிழ்ச்சியே. ஆனால்...'' என்று கூறி நிறுத்திய பஞ்சவன் மாதேவி, தன் கோபத்தைச் சற்றுத் தணித்து, அவரைச் சமாதானப் படுத்துபவள் போல், ஒற்றர் படைத் தலைவரைப் பெயர் சொல்லி விளித்து, ''வீரம்மாளிடமிருந்து சக்கரவர்த்திகளுக்குச் செல்ல இருக்கும் இந்த முக்கிய ஓலையைக் கொண்டு வந்ததற்காக உங்களைப் பாராட்டுகிறோம். இந்த ஓலையை நான் பார்த்திராவிடில், பல முக்கியச் செய்திகளை நான் அறிந்து கொள்ள இயலாமல் போயிருக்கும். பல ரகசியச் செய்திகளை அறிந்திருந்தும் நீங்கள் இந்த ஓலையைக் கொண்டு வந்ததன் மூலம் பல முக்கிய முடிவுகளை நான் எடுக்குமாறு செய்து விட்டீர்கள். அதற்காகப் பாராட்ட வேண்டும்'' என்றாள்.

ஒற்றர் படைத் தலைவர் அரசி பாராட்டியதற்காகவும் மகிழ்ந்து விடவில்லை. ஒரு முறை தன் வணக்கத்தைத் தெரிவிக்கும் முகமாக தலையைத் தாழ்த்தி நின்றார்.

பழையாறைக்கு விரைந்து வந்த வீரமாதேவி சிற்பியின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதை அறிந்து செய்வதறியாது திகைத்தாள். பழையாறையை விட்டுச் சென்று பல மாதங்களானபடியால், இப்போது நகரத்தைப் பார்க்கும் போது புதிதாக இருந்தது. நாட்டு ஆட்சி முறை தொடர்பான அலுவலர்கள் பழை யாறைக்கு வந்து விட்டதனால் நகரில் கலகலப்பு சற்று மிகுந்திருந்தது. பணியாள்களுக்கான குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்பட்டன. நகரம்



[library stamp, illegible]

வளர்ந்தது. கடல் கடந்த நாடுகளிலிருந்து வரும் வணிகர்கள் பலரை நகர வீதிகளில் காண முடிந்தது. மாளிகையில் அதிகாரிகளைக் காண யவன, சீன வணிகர்கள் வருவது மிகுந்திருந்தது.

சக்கரவர்த்தி தலை நகரிலில்லாததால் விலையுயர்ந்த அணிமணிகள், பட்டுப் பீதாம்பரங்களை விற்பவர்கள் அரசியைக்காண நேரம் கேட்டுக் காத்திருந்தனர்.



பழையாறைக்குத் தாம் வருவது ஒருவருக்கும் தெரியக்கூடாது என்பதால், எந்தவித முன் அறிவிப்புமின்றி ஒரு நாள் இரவு வேளையில் வீரமாதேவி பழையாறைக்கு வந்தாள்.

ஆதுர சாலையில் சிற்பி மாணிக்க சேகரனைக் கண்ட பிறகு அவளுக்கு இரவு உறக்கம் வரவில்லை. மருத்துவர்களின் உதவியாளர்களிடம் பேசியதிலிருந்து சிற்பியின் உடல் நிலையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை அறிந்தாள். அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு அளவில்லை. சோழ நாட்டின் தலைசிறந்த கலைஞரின் உடல் சீரடைய ஒருவரும் முயற்சி





மேற்கொள்ளவில்லையே என்பது குறித்து அவளுக்கு வருத்தமே. மறுநாள் அரச மருத்துவரைச் சந்தித்தாள்.

மாணிக்க சேகரனைப் பீடித்திருப்பது காட்டுப் பகுதியில் ஏற்படும் கொடிய நச்சுக் காய்ச்சல் என்று விவரித்த மருத்துவர், தன்னால் முடிந்த அளவிற்குச் சிகிச்சை செய்வதாகவும் பிறகு இறைவன் விட்ட வழிதான் இறுதியானது என்றும் தெரிவித்தார்.

''சக்கரவர்த்தி கேட்டிருந்தாலும் இந்த மறுமொழியைத்தான் சொல்லியிருப்பீர்களா மருத்துவரே?'' என வீரமாதேவி பளிச்சென்று கேட்டு விட்டாள்.

மருத்துவர் ஒரு கணம் திகைத்தார். ''என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? சக்கரவர்த்திக்கு வேறு; தங்களுக்கு வேறு என்று நான் வேற்றுமை பாராட்டி ஏதும் சொல்ல மாட்டேன். நோயாளிகளுள் வேற்றுமை ஏது?'' என்றார்.

''நோயாளிகளுக்குள் வேற்றுமை பாராட்டக் கூடாது என்பது நியாயமே. ஆனால், இங்கு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பவர் சோழ நாட்டின் கண்மணி போன்றவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் மற்றொரு பிரம்மா என்பதை அறிவீர்களா? சக்கரவர்த்திகள் மிகவும் மதிப்பு வைத்து அவரிடம் மிகப் பெரிய பொறுப்பை ஒப்படைத்திருப்பதையும், இந்த நாட்டின் பெருமையை உயர்த்தும் மாபெரும் கோயிலை நிர்மாணிக்கும் பொறுப்பை மாணிக்க சேகரனிடம் சக்கரவர்த்திகள் ஒப்படைத் திருப்பதையும் நீங்கள் அறிவீர்களா?'' வீரமாதேவி சற்று உணர்ச்சிவயப்பட்டுப் பேசியதைக் கண்ட மருத்துவர், அவளைச் சமாதானப் படுத்த விரும்பி, அவளுக்கு நம்பிக்கை ஏற்படும்

வகையில் பேசினார். வீரமாதேவியை எப்படி விளிப்பது என்று முதலில் அவருக்குத் தெரியவில்லை - என்றாலும் பொதுவாக, ''தேவி!'' என்று அழைத்துப் பேச்சைத் தொடங்கினார்.

''கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு என் ஆதுர சாலையில் இருப்பவர் மிக முக்கியமானவர் என்பதை அறிவேன். அரச குடும்பத்திற்கு என்று தனியே ஏற்படுத்தப்பட்டிருக்கும் மருத்துவமனையில் ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றால் அவர் மிக முக்கியமானவராகத் தானிருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். தேவி! அவருக்கு ஏற்பட்டிருக்கும் நச்சுக் காய்ச்சலுக்கு எல்லாவித மருந்துகளையும் கொடுத்து விட்டோம். உடனிருந்து பணிவிடை செய்ய அவருக்கு உற்றார் உறவினர் யாருமில்லை என்பதறிந்து, எங்கள் பணியாட்களை அவர் அருகிலேயே அல்லும் பகலும் இருக்குமாறு பணித்தேன். காய்ச்சலின் உச்ச நிலையில் அவர் பிதற்றுவதிலிருந்து அவரைப் பற்றி அறிந்தேன். அவர் பெரும் கலைஞர் என்பதைப் புரிந்து கொண்டேன். ஒரு நாள் அவர் அருகேயே நீண்ட நேரமிருந்தேன். காய்ச்சல் வேகத்தில் அவர் யாருடனோ பேசுகிறார். சிரித்துப் பேசுகிறார். குழந்தைபோல் குழைந்து பேசுகிறார். நாட்டிய மாதுவதைப் போல் அவர் அபிநயிக்கிறார். அவர் யாரையோ எதிர்பார்த்து வராததால் ஏக்கமுற்றிருப்பது நன்றாகப் புலப் பட்டது. ஒரு பெண்ணின் பெயரை அடிக்கடி உச்சரிக்கிறார்'' என்று மருத்துவர் சொல்லிவரும் போது வீரமாதேவி குறுக்கிட்டு, ''யாருடைய பெயரை அவர் சொன்னார் என்பது நினைவிருக்கிறதா!'' என்று ஆவலுடன் கேட்டாள்.



சற்று யோசித்த பிறகு மருத்துவர், ''நினைவில் வரவில்லை தேவி! மிகவும் நேசிக்கும் பெண்ணாக அவளிருக்க வேண்டும் எனத் தோன்றியது. அந்தப் பெண் அவர் அருகிலிருந்தால் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும் என்பது தெரிந்தது. அவள் யார் தேவி?'' என்று மருத்துவர் கேட்டார்.

யார் என்று குறிப்பிட்டு வீரமாதேவி கூறுவாள்?

''பாவம் சிற்பி! மாபெரும் கலைஞர், என்றாலும் அவருக்கும் மனம் என்று ஒன்று உண்டு. உணர்வுகள் உண்டு. உலக இன்பங்களில் ஈடுபாடு உண்டு. அழகை ரசிக்கும் கலைஞன் அழகை மிகவும் நேசிப்பவன். அந்த முறையில் மாணிக்க சேகரன் தன்னை மிகவும் கவர்ந்த குமுதவல்லியை நினைக்காமல் இருக்க முடியுமா? என்னிடம் எதிரெதிரே அமர்ந்து சிற்பக் கலையைப் பற்றியும், கோயில் உருவாவதைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கும் போது என்னில் அவர் தன் காதலியைக் கண்டிருக்கலாமல்லவா? அவர் பேச்சையும், நடவடிக்கையையும் கண்டு சக்கரவர்த்தியார் சந்தேகப்படும்படி இருந்திருப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால் என் உள்ளம் சிற்பம் வடிக்கப் பிறந்த பாறை. அதை அசைக்க முடியாது. எந்த விதச் சலனமும் எனக்கு ஏற்படவில்லை. ஆனால் சிற்பியின் மென்மையான உள்ளத்தில் ஏற்படும் சலனத்தை யாரால் தடுத்திருக்க முடியும்?

''பாவம், சிற்பி! காய்ச்சல் வேகத்தில் யாரை அழைத்திருப்பார்? அவர் மனத்துக்கினியவளை அழைத்திருப்பார். எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு, அரச கட்டளை இடப்பட்டிருந்தும் அவளைக் கொண்டு சேர்க்க

இயலவில்லை. உம். சிற்பியின் காய்ச்சல் முழுமையாகக் குணமாக வேண்டும். அதற்கான மருந்தை ஏழு கடலுக்கு அப்பாலிருந்தாவது கொண்டு வந்தாக வேண்டும். யாரிடம் சொல்வது? இளவரசர் ஆதித்தனைச் சில நாள்களாகக் காணவில்லை. அவரைச் சந்திப்போம். இதற்கிடையே சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்புவோம்'' என்று முடிவு செய்த வீரமாதேவி, மருத்துவரை நோக்கி, ''ஐயா, சிற்பியின் காய்ச்சலைக் குணப்படுத்த சோழ நாட்டில் மூலிகையே இல்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லாமலிருக்குமா? கொல்லி மலையில் மூலிகை ஒன்று இருக்கிறது'' என்று பேச்சைத் தொடங்கியவரை நோக்கிப் பரபரப்புடன், ''கொல்லி மலை என்ன, இமயமலையில் இருந்தாலும் கொண்டு வர வேண்டும். நாறு திக்குகளுக்கும் தக்கவர்களை அனுப்புங்கள். கங்கை நீரைக் கொண்டுவரச் சென்றிருக்கும் சக்கரவர்த்திக்கும் நான் சொல்லி அனுப்புகிறேன்'' என்றாள்.

மருத்துவர் மௌனமாக இருப்பதைப் பார்த்தவுடன், ''உடனே இயங்குங்கள் நான் கட்டளையிடத் தகுதி வாய்ந்தவள் என்பதை சக்கரவர்த்தியின் உத்தரவு மூலம் உறுதிப் படுத்துகிறேன். இன்றே, சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்புகிறேன். செய்தி போய்ச் சேர்ந்து அரசரிடமிருந்து மறுமொழி வருவதற்குப் பல நாள்களாகும். அதுவரை, சிற்பியின் உயிரைப் பிடித்திருக்க முடியுமா? இயங்குங்கள். உடனே இயங்குங்கள். ஒரு நாட்டிற்கு மருத்துவர் எவ்வளவு முக்கியமோ, அரச குரு எவ்வளவு முக்கியமோ, படைத் தளபதி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கலைஞர்களும். கலைஞர்களின் முதன்மையானவர் சிற்பி சோழ நாட்டிற்குப் பெரும்



புகழைத் தரப்போகிற கோயிலைக்கட்ட வந்துள்ள சிற்பி, மிக முக்கியமானவர் என்று தங்களுக்குத் தோன்ற வில்லையா! உடனே நான்கு திக்கும் ஆளை அனுப்புங்கள். கொல்லி மலைக்கு அனுப்புங்கள், பொதிகைக்கு அனுப்புங்கள்'' என்று ஆவேசம் வந்தவள் போல் பேசினாள்.

மருத்துவர் திகைத்து ஏதும் சொல்வது அறியாமல் நின்றார்.

''கொல்லி மலைக்குச் செல்ல வேண்டாம்; பொதிகைக்கும் செல்ல வேண்டாம். இமயத்திற்கும் போக வேண்டாம்!'' என்ற குரல் கேட்டது.

அந்தக் குரல் மிக இனிமையாக இருந்தது. தேவகானம் ஒலிப்பது போலிருந்தது. யாழின் இன்னிசை போலிருந்தது. கீதமினிய குயில்கள் ஒரு சேர அமர்ந்து இன்னிசை எழுப்புவது போலிருந்தது.

வீரமாதேவி திரும்பிப் பார்த்தாள். மருத்துவர் திரும்பிப் பார்த்தார்.

ஆதூர சாலையில் நுழைந்த கருவூர்ச் சித்தர், அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிறிது நேரம் நின்ற பிறகு குரல் கொடுத்தார்.

வீரமாதேவி உடல் மெல்ல நடுங்கியது.

கருவூர்த் தேவர் அங்கு வந்து கொண்டிருந்தார்.

பேச வார்த்தைகள் வராமல் திகைத்த வீரமாதேவி, ''சித்த மகாபுருஷரே! நான் காண்பது கனவா? மெய் தானா? ஒரு கணம் தங்களை மனத்தில் நினைத்தேன், வந்து விட்டீர்கள். சோழ நாட்டைக் காப்பாற்றுங்கள்.

சோழ சக்கரவர்த்திகளின் இலட்சியத்தை நிறைவேற்றுங்கள். தாங்கள் ஆசிர்வதித்துத் தொடங்கிய கோயில் திருப்பணிக்குத் தடை ஏற்பட்டிருக்கிறது. தடையை நீக்குங்கள். சிற்பியைக் காப்பாற்றுங்கள்'' என்று கூறி, அவர் பாதத்தில் விழ்ந்து வணங்கினாள்.

ஒரு கணம் ஒன்றும் புலப்படாமல் திகைத்த மருத்துவர், ஓடோடிச் சென்று இருக்கை ஒன்றைக் கொணர்ந்து அமருமாறு உபசரித்தார்.

சிற்பி மாணிக்க சேகரன் உடல் குணமடைய சித்தர் மூலிகைச் சாறு கொடுத்தார். இரண்டாவது முறையாக அந்த ஜீவ மூலிகையைப் பயன்படுத்தினார்.

''இன்னும் இரு நாள்களில் சிற்பி குதித்தெழுந்து விடுவார். பெண்ணே! வடக்கே போய் என்ன செய்கிறான் இராசேந்திரன்? இன்னும் இரண்டு பௌர்ணமிகள் வரைதான் நான் சோழ நாட்டில் இருப்பேன். அதற்குள் கோயில் திருப்பணியை முடிக்க வேண்டும்'' என்று கூறிச் சுற்று முற்றும் பார்த்தார்.

மருத்துவர், மூலிகைச் சாற்றை, சிற்பியின் வாயில் புகட்டிக் கொண்டிருந்தார்.

வீரமாதேவி விம்மினாள். கோயில் திருப்பணிக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை ஒன்றுவிடாமல் விவரித்தாள்.

சித்தர் கரம் தூக்கி ஆசி வழங்கி, ''மகளே! கவலைப் படாதே. சூரியனைக் கண்ட பனிபோல் தடைகள் நீங்கிவிடும். உடனே வருமாறு இராசேந்திரனுக்குச் செய்தி அனுப்பு...'' என்றார்.



வீரமாதேவி திகைத்தாள். ''நான் அரசருக்குக் கட்டளை யிடுவதா? என்ன சுவாமி என்னைச் சோதிக்கிறீர்கள்?'' என்றாள். கண்கள் கலங்கி யிருந்தன.

''சோதனை இல்லை - உன்னால் முடியும். நடக்கக் கூடியதைச் சொல்கிறேன். அடுத்த வாரம் நான் திருப்பணி நடக்குமிடத்திற்கு வருவேன். அதற்குள் முழு மூச்சுடன் வேலைகள் நடக்க வேண்டும். நாற்பத்தி ஐந்து நாள்களில் பணி முடிவடையவில்லை என்றால், இராசேந்திரன் இலட்சியப்படி, கங்கை நீரால் குடமுழுக்கு நடைபெறும் போது நான் கலந்து கொள்ள முடியாது. என்னைச் சோழ நாட்டில் எங்கும் காண முடியாது. உம். தாமதமின்றி பணிகளைக் கவனி'' என்றார். பிறகு சிற்பியின் நெற்றியில் தன் கரத்தைப் பதித்தார். மீண்டும் விழுந்து வணங்கிய, வீரமாதேவியைத் தூக்கி அவள் தலையில் தன் கரத்தை வைத்து ஆசிர்வதித்தார்.

ஆயிரம் மின்னல்கள் உடலில் பாய்ந்தது போன்ற உணர்வு வீரமாதேவிக்கு ஏற்பட்டது.

அன்று பழையாறையில் நடந்த நிகழ்ச்சியை விடாமல் எழுதி வடக்கே உள்ள சக்கரவர்த்திக்கு அனுப்பினாள் வீரமாதேவி. ஓலையை அனுப்பிவிட்டு, கானகப் பகுதிக்கு விரைந்து சென்று விட்டாள்.

சக்கரவர்த்திக்கு வீரமாதேவி எழுதிய அந்த முக்கிய ஓலையைப் பஞ்சவன் மாதேவி படித்தாள். அதிலுள்ள செய்தியை வரி விடாமல் படித்தாள். ஒரு முறைக்கு இரு முறை படித்தாள். கருவூர்ச் சித்தரின் ஆசி முழுமையாக வீரமாதேவிக்கு ஏற்பட்டிருக்கும்போது நாம் ஏற்படுத்தும் தடைகள் வெற்றியடையுமா என்று கவலைப்பட்டாள்.

''இந்த ஓலையைச் சக்கரவர்த்திக்கு அனுப்புமாறு சொல்கிறீர்களா?'' என்று ஒற்றர் படைத் தலைவர் கேட்டார்.

அரசி சிறிது நேரம் ஏதும் பேசவில்லை.

''சிந்திப்பதற்குச் சிறிது நேரம் கொடு. பகல் உணவிற்குப் பிறகு வா. ஓலையை எடுத்துச் செல்பவரை மாலை வரை காத்திருக்கச் சொல்'' என்றாள்.

ஆனால் நண்பகல் நேரத்தில், இராசேந்திர சோழ தேவர், பஞ்சவன் மாதேவிக்கு அனுப்பிய செய்தியை எடுத்துக் கொண்டு, வீரனொருவன் மாளிகையை அடைந்தான்.

உடனே கிருஷ்ணை நதிக்கரைக்குப் புறப்பட்டு வருமாறு சக்கரவர்த்தி எழுதியிருந்தார்.







## 68. பஞ்சவன்மாதேவி யாத்திரை

வீரமாதேவி, நீராடி, திருநீறணிந்து புத்தாடை உடுத்தி சிற்பி மாணிக்க சேகரனைக் காண மருத்துவ மனைக்கு வந்தாள். மாணிக்க சேகரன் படுத்திருக்கும் குடிலின் கதவருகே வந்தபோது திகைத்து நின்றாள்.

உள்ளேயிருந்து இனிய குரல் கேட்டது.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துயர் வாய் உமை பங்கன் திருஆலவாயான் திருநீறே
முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

என்ற, திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப் பாடலை மாணிக்க சேகரன் மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தான். மாணிக்க சேகரனின் இனிய தோற்றத்

திற்கு ஏற்பக் குரலும் மிக இனிமையாக இருப்பது கேட்டு அவள் வியந்தாள்.

சித்தர் கொடுத்த மருந்து கைமேல் பலனைத் தந்து விட்டது. அதற்கு மேலாக சித்தரின் வாக்கான, 'இன்னும் இரு நாள்களில் சிற்பி குதித்து எழுந்து விடுவார் பெண்ணே!' என்பது பலித்து விட்டது.

வியப்பு மேலிட வீரமாதேவி, சிறிது நின்று பார்த்தாள். மாணிக்க சேகரன் இதுவரையில் படுத்திருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டு, விழிகளை மூடியவாறு பாடிக் கொண்டிருந்தான்.

நெற்றியில் திருநீறு. கடும் காய்ச்சலால் பல நாள்களாக வளர்ந்துவிட்ட மீசையும் தாடியும் முனிவர் போன்ற தோற்றத்தைத் தந்தன. அவன் அருகே யாருமில்லை.

வீரமாதேவி மெல்ல அவன் அருகே வந்தாள். அவள் வந்ததையும் கவனிக்காமல், சிவபெருமானின் புகழ் பாடும் பதிகத்தை மெல்லப் பாடிக் கொண்டிருந்தான். மெலிந்திருந்த உடலுக்குள்ளிருந்து கம்பீரமாக, இனிமை யாகக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

''சிற்பியாரே!'' என்று மெல்லக் குரல் கொடுத்தாள், அவன் கவனம் சிதறவில்லை. பாடிக் கொண்டே இருந் தான்.

வீரமாதேவி மெல்லத் தொண்டையைக் கனைத்தாள். ஹஊஹஊம், சிற்பி திரும்பிப் பார்க்கவில்லை.

வீரமாதேவி, அந்தப் பாடலுக்கு ஏற்பக் கர தாளம் இடலானாள்.

தாளமும், பாடலும் இணைந்தன.



வீரமாதேவி சட்டெனத் தாளத்தை நிறுத்தினாள். மாணிக்க சேகரன், இமைகளைத் திறந்து பார்த்தான்.

''யார்... இளவரசியா?

வீரமாதேவியா...

வாருங்கள், வாருங்கள்.

வந்து நேரமாகிறதா?

நின்று கொண்டிருக்கிறீர்களே!''

என்று கேள்வி மேல் கேள்வியாய் கேட்டவாறு பரபரப்புடன் இருக்கையில் இருந்து ஏழ முயன்றான்.

எழ வேண்டாம் என்று வற்புறுத்திய வீரமாதேவி, சிற்பியின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதற்குப் பாராட்டி, அதற்குக் காரணமான சித்தரைப் புகழ்ந்து, விழிகளை மூடியவாறு சித்தருக்கு நன்றி கூறினாள்.

மாணிக்க சேகரன், வீரமா தேவியின் கருணையைப் பாராட்டி, ''சித்தர் என்னைக் காப்பாற்றியதற்குத் தங்கள் பிரார்த்தனையும், நல்ல உள்ளமுமே காரணம்'' என்றான்.

''நாம் இன்றே இங்கிருந்து புறப்படுகிறோம்'' என்று உற்சாக மாகக் கூறினான் மாணிக்க சேகரன்.

'இன்னும் சிறிது நாள்கள் ஓய்வு எடுத்து வரலாம்' என்று, வீரமாதேவி உபசாரத்துக்காவது சொல்லவில்லை. நாளையே சிற்பப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்ற ஆவல் அவள் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

சித்தர் கூறியவற்றை, மாணிக்க சேகரனிடம் தெரிவித்த வீரமாதேவி, ''இப்பொழுது எனக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. எந்தச் சக்தியும் இனி நம் பணியைத் தடுக்க முடியாது'' என்று உற்சாகமாகப் பேசினாள்.

அரசி பஞ்சவன் மாதேவி, பரிவாரங்களுடனும், பாதுகாவலுடனும் வடக்கு நோக்கிப் புறப்பட்ட செய்தியைப்பற்றி அவள் அறிய ஆவல் கொள்ளவில்லை.

வீரமாதேவியின் பணிகளை இனித்தடுக்க முடியாது என்றுணர்ந்த அரசு அதிகாரிகள் வீரமா தேவியைப் புகழத் தொடங்கினர்.

''நல்ல வேளையாக, அரசர் அழைப்பு வந்ததனால் தங்களுக்கு நேரவிருந்த இடையூறுகள் நீங்கின'' என்று ஆதரவுக் குரல் கொடுத்தனர்.

எந்தெந்த விதங்களில், அரசியும் அவள் கட்டளையை ஏற்றவர்களும் தன் சிற்பப் பணிக்கு இடையூறு செய்ய முற்பட்டனர் என்ற விவரம் அறிந்த வீரமாதேவி, இறைவன் கருணையை எண்ணி மகிழ்ந்தாள். இறைவனுக்கு நன்றி தெரிவித்தாள். சிறு வயது முதல், தில்லையம்பதி நடராசரை அவள் கண்கண்ட தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தாள். பிறகு அவள் நெஞ்சில் நிறைந்த இராசேந்திரனும் நடராசப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்தவுடன் தில்லையம்பதியானைக் கணம் கூட மறவாத சிந்தை உடையவளானாள்.

இறைவனுக்குத் தன் நன்றியை எவ்வாறு தெரிவிப்பது என்று சிந்தித்தாள். இப்பொழுது எடுத்திருக்கும் கோயில் திருப்பணியை மிக விரைவில் முடித்து, நடராசரின் திருத்தாண்டவங்க ளக் கோயில் திருச்சுற்றில் சிற்பமாக வடிவமைக்க உறுதி கொண்டாள்.

''சிற்பியாரே! சிவபெருமான் கருணைக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். இறைவனுக்கு நம் காணிக்கையைத் தக்க முறையில் அளிக்க வாய்ப்பளித்திருக்கும், சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவருக்கு நாம் முதலில்



நன்றி தெரிவிக்க வேண்டும்'' என்றாள் வீரமாதேவி உணர்ச்சிப் பெருக்குடன்.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். உலகிலேயே அழியாத சின்னம் கல்வெட்டு, பட்டயம், சிற்பம், திருக்கோயில். கல்வெட்டும் பட்டயமும் அளிக்க நமக்கு உரிமையில்லை. ஆனால் சிற்பம் சமைப்போம். சக்கரவர்த்தியின் திரு உருவத்தைப் படைப்போம். உங்களுக்கு நினைவிருக்கும் என நினைக்கிறேன். சில திங்களுக்கு முன்பு கட்டப்படும் புதிய கோயிலில் சக்கரவர்த்திக்கு உரிய இடத்தை, அளிக்க முடிவு செய்தோமே - நினைவிருக்கிறதா?'' என்று மாணிக்க சேகரன் கேட்டான்.

வீரமாதேவி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, ''ஆம்; நினைவுக்கு வருகிறது. சிவபெருமான் நம் சக்கரவர்த்திக்கு அருள்வதுபோல் சிவபெருமான் சிற்பம் ஒன்று - வரிவடிவமாகத் தாங்கள் செங்கோட்டில் வரைந்த கோட்டோவியம் - குடிலில் ஓரிடத்தில் இருக்க வேண்டும். அதைத் தேடி எடுத்து அதைப் போன்ற சிற்பம் ஆக்குவோம். விரைந்து செயல்படுவோம். கருவூர்த் தேவர் அருள் நமக்குப் பூரணமாக உண்டு. சித்தர் திருமுன்பு குடமுழுக்கு நடைபெறச் செய்ய வேண்டும். இரவு பகல் பாராமல் பணியாற்றுவோம்'' என்று உணர்ச்சிப் பெருக்கால் கூறும்போது, குரலில் கம்பீரம் மிளிர்ந்தது.

பஞ்சவன் மாதேவி, தன் பணியாள்களும் பாங்கியரும் அதிகாரி காவல் வீரர்களும் புடைசூழ இராசேந்திரன் தங்கியிருந்த கிருஷ்ணை நதிக்கரையை நோக்கிப் புறப்பட்டாள்.

அரிந்தவன் மாதேவி உடல் நலங்குன்றி எழமுடியாமல் படுத்திருந்தாள். அதனால் பழையாறையில் அவள்

தங்கிவிட்டாள். புறப்படும் முன்பு அவள் சொன்னாள்: ''தேவி! என்னைத் தனியே விட்டுத் தாங்கள் செல்கிறீர்கள். அங்கு சென்றுதான் ஆக வேண்டுமா? அப்படியென்றால் வீரமா தேவியின் பணிகளைத் தடுக்க முடியாது போய்விடுமே. அவள் வெற்றி பெற்று விடுவாளே'' என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

அவளை அன்புடன் அணைத்து, அரசி பஞ்சவன் மாதேவி, கூறினாள்: ''என் இனியவளே! கவலை





இல்லாமல் இரு. நெடுந்தூரப் பயணம், உன் உடலுக்கு ஏற்காது. வயதால் தளர்ந்து விட்ட என்னாலும் வெகு தொலைவு பயணப்பட முடியுமா என்பது சந்தேகமே. ஆனால், சக்கரவர்த்தி அழைக்கிறார்கள். பட்டத்து இளவரசியுடன் இணைந்தே நீராட வேண்டுமாம்; அதுவே பெரும் புண்ணியமாம். யுத்த பூமிக்கா நான் செல்கிறேன்? புண்ணிய கங்கையில் நீராடச் செல்வது முன் பிறவிப் பேறன்றோ? கிருஷ்ணை, கோதாவரி, மகாநதி என்று பல புண்ணிய நதிகளிலும் நாங்கள் இணைந்து நீராடுவோம். இந்தப் பேறு வீரமா தேவிக்குக் கிடைக்குமா? சக்கரவர்த்திகளுடன் நெருங்கி இருக்கப் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது. மோக வலை வீசி அரசரைத் தன் கைப்பாவையாக ஆக்கிக் கொண்ட வீரமா தேவியின் பிடியிலிருந்து சக்கரவர்த்தியார் விடுபட இது ஒரு நல்ல வாய்ப்பு. அரிந்தவன் தேவி, நீ கவலைப்படலாமா! சிறந்த மருத்துவர்கள் உன் அருகே இருந்து, நோயைத் தீர்க்க உதவுவார்கள். நாங்கள் திரும்பி வரும்போது, நீ உற்சாகத்துடன் வரவேற்க வேண்டும்'' என்று ஆறுதல் கூறினாள்.

எலும்பும் தோலுமாய், படுக்கையில் கிடந்த அரிந்தவன் தேவியால் அதிகம் பேச முடியவில்லை. அவள் விழிகளில் நீர் கோத்து நின்றது. அரசியை அருகே அழைத்து, ''தேவி! என் வருத்தமெல்லாம் வீர மாதேவியை எதிர்த்து நின்ற, நம் போராட்டம் தோல்வி அடைந்து விட்டதே என்பதுதான்'' என்றாள்.

''தோல்வியா, அதெப்படி?''

''வீரமா தேவியின் நடவடிக்கையான புதிய நகரம் ஒன்றை ஏற்படுத்துவதையும், கோயில் கட்டுவதையும், ஏரி வெட்டுவதையும் நாம் தடுக்க முடியவில்லை. நேற்று

அதிகாரி ஒருவர் என்னிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார். வீரமாதேவிக்கு, நம் அரசரின் முழு ஆதரவும் இருக்கிறதாம். பெரிய நகரம், பெரிய கோயில். பெரிய ஏரி - இவை மூன்றும் வீரமாதேவியின் திட்டம். அவள் பெயர் என்றும் நின்று நிலவத் தன் பெயரை அவற்றிற்குச் சூட்டப் போகிறாளாம். வீரமாதேவீச்சுரம், வீரமாதேவிபுரம், வீரமாதேவி பேரேரி. தேவி! அவள் எண்ணம் நிறைவேறி விட்டால், நகரமும், கோயிலும், ஏரியும் ஏற்பட்டுவிட்டால், நாம் படுதோல்வியடைந்து தலை குனிய வேண்டியதுதான். சோழப் பேரரசி என்ற பெயர் தங்களுக்கு இருந்தும் என்ன பயன்? வீரமா தேவியின் கை ஓங்கினால், செல்வாக்கு மிகுந்தால் அவள் நம்மைப் பழிவாங்கத் தயங்கமாட்டாள். தன்னுடைய அழகாலும், இளமையாலும் செல்வாக்காலும் சக்கர வர்த்தியைக் கைக்கொண்டு விட்ட வீரமா தேவியின் பணிகளைத் தடுக்காமல், நீங்கள் வடக்கே செல்கிறீர் களே; என்னை விட்டு விட்டுச் செல்கிறீர்களே - அந்தப் பாதகி என்னைக் கொன்று விடுவாளே. எனக்குப் பயமாயிருக்கிறது. தேவி! அவள் தங்களுக்குப் பெரும் இடையூறு விளைவிக்கத் தயங்கமாட்டாள். செல்லும் வழியில் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும்படி செய்துவிட்டால், பிறகு நான் என்ன செய்வேன்? தேவி! என்னையும் அழைத்துச் செல்லுங்கள்; ஆபத்து ஏற்பட்டால் நம் இருவருக்கும் சேர்ந்தே ஏற்படட்டும். அல்லது என் அருகேயே இருங்கள்'' என்று, அரசி பஞ்சவன் மாதேவியின் திருக்கரத்தை அழுத்தமாகப் பற்றிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அச்சத்தாலும், அன்பினாலும், வேறு துணையில்லை என்ற நம்பிக்கையாலும், அழுத்தமாகப் பற்றியிருந்த அரிந்தவன் தேவியின் கரத்தை மெல்ல விலக்கி, அவள்



விழி நீரைத் துடைத்து, ''கோழை போன்று அழலாமா? நீ மாபெரும் வீர பரம்பரையைச் சேர்ந்தவள் என்பதை மறந்து விட்டாயா? நீயும் நானும் உயிர்த் தோழிகள்; பிறகுதான் பேரரசி - இளவரசி என்ற பாகுபாடு. நீ பழையாறையில் இருக்க வேண்டும். வீரமாதேவியின் பணிகள் நடைபெறாமலிருப்பதற்கு வேண்டிய திட்டங் களை வகுத்து விட்டேன். கருவூலத்திலிருந்து ஒரு செப்புக்காசு கூடத் திருப்பணிக்குக் கொடுக்கக் கூடாது என்று கட்டளை இட்டுவிட்டேன். வீரமா தேவியின் கோயில் பணியும், அவளுடைய திட்டங்களும் நிறை வேறாமல் தடுப்பதற்கு வழி வகுத்து விட்டேன். இன்னும் பல ரகசியத் திட்டங்கள். அவற்றைப் பிறகு தெரிவிக் கிறேன். நீ பொறுமையாக இரு. உன் உடல் நிலை முழுமையும் குணமடைய மருத்துவர்கள் பெரு முயற்சி எடுக்கின்றனர். என்னுடன் பயணம் செய்ய உன் உடல் நிலை இடம் தராது. மருத்துவர்களும் அவ்வாறே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். என் பயணம் வெற்றிகரமாக முடிய கடவுளைப் பிரார்த்தித்துக் கொள். விரைவில் திரும்பி வருவேன். அதற்குள் வீரமாதேவியின் எண்ணம் தவிடு பொடியாகி இந்த நாட்டை விட்டே அவள் வெளியேறியிருப்பாள். அவளாக வெளியேறா விட்டாலும், நம் சக்கரவர்த்தி அதற்கான கட்டளைகளைப் பிறப்பிக்குமாறு நான் செய்துவிடுவேன். கவலையை விட்டு அமைதியாக இரு'' என்று கூறி அவள் கரத்தை ஆதரவுடன் தன் கரத்துடன் பிணைத்துக் கொண்டாள். அவள் முகத்தை ஆசையுடன் தடவினாள். முதுகை அன்புடன் வருடினாள். அவள் விழிகளிலிருந்து வடிந்த நீரைத் துடைத்தாள். விடை பெற்றுக்கொண்டு, இராசேந்திரன் தங்கியிருக்கும் இடத்தை நோக்கிப் பரிவாரங்களுடன் பயணப்பட்டாள்.



## 69. பிரிந்தவர் கூடியபோது

சிற்பி மாணிக்க சேகரன், மறுநாள் புதுத் தெம்புடன் கண்விழித்துப் பார்த்தபோது அங்கே வீரமாதேவி இல்லை. அந்த அறை முழுவதும் நறுமண வாசனை பரவியிருந்தது. கோலமிடப்பட்டிருந்தது. மூலையில் ஒரு குத்து விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. அதன் அருகே சிறு விநாயகர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. விநாயகர் பாதத்தருகே முல்லை மலர் தூவப்பட்டிருந்தது. அருகம் புல் மாலையாகத் தொடுக்கப்பட்டு அணிவிக்கப் பட்டிருந்தது. சிறு சட்டியிலிருந்து குங்கிலியப் புகை நறுமணம் பரப்பிக் கொண்டிருந்தது. குங்கிலியத்தின் மணத்துடன் சேர்த்து புதுவித மணம் அங்கு எழுந்து பரவியது. அந்த நறுமணத்திற்கான பொருள் கடல் கடந்த நாட்டினின்று வந்தது என்று மாணிக்க சேகரன் அறிவான். அந்த அறைக்குள் வேறு யாரோ வந்து சென்றிருக்க வேண்டும். உள்ளே பாத்திரங்கள் எழுப்பும் ஒலியுடன் வளையல்கள் குலுங்கும் மெல்லிய ஓசையும் எழுந்தது.

அவனுக்குப் பசித்தது. எழுந்து உலவச் செல்ல வேண்டும் என்ற தெம்பு ஏற்பட்டது. அவனால் எழுந்திருக்க முடிந்தது. தரையில் பாதங்களை ஊன்ற முடிந்தது. சோர்வில்லாமல் புதிய சுறுசுறுப்பு உடலில் பரவியிருந்ததை உணர்ந்தான்.

மருத்துவர் அனுமதி இல்லாமல் எழுந்து நடமாடக் கூடாது என்பதை அவன் அறிவான். அவன் அருகே இருந்து பணிவிடை செய்யும் பணியாளரைக் காண வில்லை.

ஆற்றங்கரைக்குச் சென்று அமிழ்ந்து நீராட வேண்டும் என்ற உந்துதல் எழுந்தது. பழையாறையில் இருக்கும் போது அரிசிலாற்றிலோ, காவிரியிலோ நீராடாமல் இருப்பதா? என்ன பாவம் செய்தேனோ - இவ்வாறு கட்டிப் போட்டது போல் கிடப்பதற்கு.

மாணிக்கசேகரன் விழிகளை மூடிக் கொண்டான். அவனுடைய இஷ்ட தேவதையை மனத்தில் எண்ணிக் கொண்டு மௌனமாக இருக்க முயன்றான். இவ்வளவு நாள்கள் நினைவில்லாமல் இருந்ததும் ஒருவிதத் தியானம்தானே!

திடீரென்று, பின்புறமிருந்து மூடியிருந்த அவன் விழிகளை இளம் பூங்கரங்கள் மூடின. அல்லித் தண்டோ அல்லது அன்னத்தின் தூவியோ என்று அவன் ஒரு கணம் திகைத்தான். அந்த மென்மையான பூங்கரத்திற்கு உரியவளின் வளைக்கரங்களைத் தன் இரு கரங்களாலும் பற்றினான்.

வளையல்கள் ஓசைப்படுத்தின. மெல்லிய மணம் மிக அருகே சூழ்ந்தது. அவள் விடும் மூச்சு அவன் தோள்களைத் தழுவின. பெண்மை வந்து விழிகளைத் தழுவவும் திடீரென அவன் மனத்தில் உற்சாகம் பொங்கியதால்,

''யார் அது'' என்று கேட்டான். உரிமை யில்லாதவர்கள் அவ்வளவு தைர்யமாக அவனைத் தொட முடியாது என்பது அவனுக்குத் தெரியாதா?

வளைக்கரத்தை மெல்ல விலக்க முயன்றான்.

''யாராக இருக்கும்! ஒருவேளை... ஒருவேளை வீரமாதேவியாக இருக்குமோ?'' அவன் நினைப்பது மாபெரும் தவறாக இருக்கலாம். அப்படிப்பட்ட எண்ணம் அவனுக்கு வந்ததே பெருங் குற்றமல்லவா?

மீண்டும், ''யாரது?'' என்று குரல் கொடுத்தான். கரங்களை விலக்க முடியவில்லை. அந்த ஸ்பரிசத்தை நீக்க வேண்டாம் என்று தோன்றியது. ஆனால், அவ்வாறு துணிவுடன் உரிமையுடன் தன்னைத் தொடக்கூடியவள் யாராயிருக்க முடியும்?

''யார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?'' என்ற குரல் வரும். குரலிலிருந்து யார் என்று அறிந்து கொள்ளலாம் என்று எண்ணினான். தோளின்மீது படர்ந்த மெல்லிய மூச்சுக் காற்றைத் தவிர வேறு அரவம் இல்லை. கண்ணை மூடிட - கரங்களின் அழுத்தம் அதிகமாயிற்று!

யாராக இருக்கும்? இளம் பெண்ணாக இருக்க வேண்டும். இந்த நிலையில் வேறு யாராவது பார்த்தால் தவறாக நினைத்துவிடப் போகிறார்களே என்ற அச்சம் வேறு -

தலையை இப்படியும் அப்படியும் அசைத்தான். அவனால் கரங்களை நகர்த்த முடியவில்லை.

''என்னால் ஊகிக்க முடியவில்லை. ஓர் ஆடவனை உரிமையுடன் தொடக் கூடியவள் - என்னைத் தொடக் கூடியவள் - ஒருத்திதான் இருக்கிறாள். அவளாக இருந்து



விட்டால் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி'' என்றான் மாணிக்க சேகரன்.

அடுத்த கணம் அவன் விழியை அழுத்தியிருந்த தன் கரங்களை எடுத்துவிட்டு அவனை ஆரத் தழுவிக் கொண்டாள். அவள் பேசவில்லை. விம்மினாள். அவள் விழிகளிலிருந்து நீர்த் துளிகள் அவன் கன்னத்தை ஈரமாக்கின.

''யார், யார் குமுதமா? என் குமுதமா?'' என்று பர பரப்புடன் உணர்ச்சி மிகுதியால் கேட்டவாறு, மாணிக்க சேகரன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டான். பிரிந்தவர் கூடியபோது பேச்சு எதற்கு? இருவர் விழிகளும் ஒன்று கலந்தன.



''குமுதம்.....குமுதம்! நான் காண்பது கனவா, நனவா? நீ எப்போது வந்தாய்? சொல் சொல் குமுதம்'' என்று மாணிக்க சேகரன் பரபரத்தான். அவள் கன்னத்தை வருடினான். தோள்களை ஆசையுடன் தொட்டான். அவள் விரல்களைத் தன் விரல்களுடன் கோத்துக் கொண்டான். என்ன செய்வது என்று தெரியாமல் பரபரத்தான்.

''இந்தக் கஞ்சியைக் குடியுங்கள். பிறகு பேசுவோம். நேரம் போவது தெரியாமல் பேசுவோம். தங்களுக்குப் பால் கலந்த கஞ்சி தருமாறு எனக்குக் கட்டளை. உணர்ச்சி வயப்படாமல் தங்களைக் கவனித்துக் கொள்ளுமாறு கட்டளை. கரும்பைக் கண்ட யானையாகாமல், மாணிக் கத்தைக் காத்து நிற்கும் நாகமாயிருக்குமாறு எனக்குக் கட்டளை'' என்று கூறி, கலயத்திலிருந்து சிறு குவளை யில் கஞ்சியை எடுத்து ஊற்றிப் பருகுமாறு வேண்டி,





குவளையை அவன் இதழ் அருகே கொண்டு சென்றாள். சிற்பியைத் தன் மீது சாய்த்துக் கொண்டாள். அவள் மேனி மெல்ல நடுங்கியது. 437432/6105530

''தாங்கள் பிழைத்தது பெருமான் அருளாம். தங்கள் உடல் நிலை முற்றும் குணமாகும் வரை பொறுப்பு என்னுடையதாம். நான் அதிகம் பேசக் கூடாதாம். நான் எங்கிருந்து வந்தேன், இவ்வளவு நாள்கள் எங்கிருந்தேன், தங்களைக் காணாது எங்கெல்லாம் அலைந்தேன் என்பவை பற்றியெல்லாம் பேசித் தங்களுக்கு வருத்தம் ஏற்படுமாறு செய்யக் கூடாதாம். வருத்த மிகுதியால் உணர்ச்சி வயப்பட்டால் மீண்டும் தங்கள் நோய் திரும்பி விடுமாம். அப்படியெல்லாம் என்னால் தங்களைப் பாதுகாக்க முடியாவிட்டால் இந்த இடத்தை விட்டே, ஊரைவிட்டே சென்று விடுமாறு கட்டளை. கொஞ்சம் கொஞ்சமாகக் கஞ்சியை அருந்துங்கள்'' என்று குமுதவல்லி மெல்லப் பேசினாள். பேச வேண்டிய வற்றை, சொல்ல வேண்டியவற்றைக் கட்டுப்பாட்டுடன் அடக்கிக் கொள்வதால் எழுந்த திணறலும், அதனால் அவளிடமிருந்து சொற்கள் உடைந்து வருவதும் அழுத்த மாக எழும் பெருமூச்சும் அவள் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறாள் என்பதைப் புலப் படுத்தின.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

அவன் அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னை விழுங்கிவிடுவது போல் பார்க்காதீர்கள். இந்தக் கஞ்சியைக் கொஞ்சம் கொஞ்சமாக அருந்துங்கள். உடலுக்குப் புதுத் தெம்பு வரவேண்டும். தெம்பு ஏற்பட்டால்தான் என்னுடன் பேச முடியும்'' என்றாள்.

''உன்னைப் பார்த்தவுடனேயே வயிறு நிறைந்து விட்ட உணர்ச்சி; புதிய உற்சாகம் பொங்கி உடல் முழுமையும் பரவுவது போன்ற உணர்ச்சி.'' மாணிக்க சேகரன் மெல்லச் சிரித்தான். அவளுடைய ஒரு கரத்தைப் பிடித்துக் கொண்டான். மற்றொரு கையில் கஞ்சிக் குவளை.

''கையை விடுங்கள்; ஒரு வாய்கஞ்சி கூடப் பருக வில்லை. என் வேண்டுகோளுக்கு என்ன பயன்?'' குமுதம் கோபப்படுவது போல் பேசினாள். முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''எவ்வளவு நாள்களாகி விட்டன உன்னைப் பார்த்து? ஒரு யுகமாகியிருக்குமா?''

''சொல்ல மாட்டேன்; கஞ்சி ஆறுகிறது.''

''என் நெஞ்சத்துணர்வுகளும் ஆறி விடுவதற்கு முன்பு நான் கேட்பதற்கெல்லாம் மறுமொழி சொல்ல வேண்டும்.''

''நீங்கள் கேட்பதை, கேட்க நினைப்பதை, கேட்காததை - எல்லாவற்றிற்கும் நான் மறுமொழி கூறுவேன். நாம் இருவரும் நேரம் போவது தெரியாமல் பேச வேண்டாமா?''

''ஆமாம்'' என்று தலையசைத்து, அவள் கரத்தை அழுத்தினான்.

''புதிய தெம்புடன் நீங்கள் பேச வேண்டாமா?''

''ஆமாம்.''

''அப்படியென்றால் நீங்கள் கஞ்சியை ஒரே மூச்சில் குடித்துவிடவேண்டும்.''



குமுதம் ஆசையுடன் கூறும்போது அவள் முகத்தில் தேங்கி நிற்கும் பாசத்தையும், கட்டுக்குள் அடங்கியிருக்கும் காதல் உணர்வுகளையும் புரிந்து கொண்டான். அவள் கொடுத்த கஞ்சியை வாங்கிக் குடித்தான்.

''உம்...உம்...மெல்ல...மெல்ல. அதற்காக ஒரே மூச்சில் குடிக்கக் கூடாது'' குமுதம் மெல்ல அவன் மார்பைத் தடவினாள். இதுநாள் வரை வாடியிருந்த மலர் மீண்டும் பூத்தது.

''குமுதம்! இந்த நோய் வந்ததால் தானே உன் மெல்லிய கரங்கள் என் மார்பைத் தொடுகின்றன? உன்னை விட்டுப் பிரிந்திருந்ததால்தானே நீ என் அருகே அமர்ந்து உன் மெல்லிய மூச்சுக் காற்றில் என் உடலில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறாய்'' என்று கூறி அவளுடைய இரு கரங்களையும் பற்றித் தன் அருகே அமர்த்த முயன்றான்.

''எழுந்து சென்று கதவை மூடிவிட்டு வருகிறேன். கொஞ்சம் நடக்க வேண்டும் என்று தோன்றுகிறது'' என்று எழ எத்தனித்தவனை, குமுதம் தடுக்க, ''பகலில் கதவை மூடக் கூடாது. இது மருத்துவமனை'' என்றாள்.

''நாம் பேசவேண்டும்.''

''பேசுவோம். அதற்காகக் கதவை மூடவேண்டுமா?''

''யாராவது, வந்துவிட்டால்?''

''வரட்டுமே.''

''நம் பேச்சு தடைப்படும். யுகயுகமாக நாம் பிரிந்திருந்த கதையைப் பேச வேண்டும். விராலிமலைக்கு

அருகே நாம் பிரிந்ததிலிருந்து இந்தக் கணம் வரை நடந்தவற்றைப் பேச வேண்டும். நீ எப்படி இங்கு வந்தாய் என்பதை விவரிக்க வேண்டும். இவ்வளவு காலமாக உனக்கு ஏற்பட்ட இன்னல்களை, துன்பங்களை நீ எடுத்துச் சொல்ல வேண்டும். உனக்குத் தொல்லை கொடுத்தவர்களை, மறைத்து வைத்தவர்களை நீ அடையாளம் காட்ட வேண்டும். என் அருமைக் குமுதா! சோழநாட்டுப் பேரரசர் என்மீது அன்பு கொண்டவர். மரியாதை மிகுந்தவர். அவரது காதல் துணைவியும் அவ்வாறே என்மீது அன்பு மிகுந்தவர். நான் என்ன சொன்னாலும் அதை நிறைவேற்றக் கூடியவர்கள். சொல் குமுதா - சொல்'' மாணிக்க சேகரன் வேகமாகப் பேசினான். பரபரப்புடன் பேசினான். நடந்தவற்றை எல்லாம் உடனே அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடி துடிப்புடன் பேசினான். களைப்பு மிகுந்தது. அதைக் கவனித்த குமுதம் பேசுவதைத் தடுக்கவும், திருத்தவும் எண்ணி, குளிர்ந்த நீரால் அவன் உதடுகளைத் துடைத்து, அவனை மெல்லப் படுக்க வைத்து, ''என் அன்பே! உங்களை விட எனக்கு ஆர்வம் மிக அதிகம். உங்களைப் பிரிந்திருந்த கால நிகழ்ச்சிகளை அறியும் ஆவல் எனக்கிருக்காதா? கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போய்விடாது. நான் இங்கேயே இருக்கப் போகிறேன். உங்கள் அருகேயே இருக்கப் போகிறேன். உங்கள் உடல் நலம் முற்றும் சீராகிப் பயணத்துக்குத் தக்கவாறு புதிய தெம்பு ஏற்படும்வரை உங்கள் அருகேயே இருக்கப் போகிறேன். சற்று இளைப்பாறுங்கள்; உண்ட களைப்பு நீங்கியவுடன் பேசுவோம்'' என்று அவனை அமைதிப் படுத்தினாள்.



களைப்பு மேலிட்டது. அவன் விழிகளில் உறக்கம் சேர்ந்தது. இமை மூடக் கண்ணயர்ந்தான். குமுதவல்லி அவன் அருகேயே அமர்ந்த அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதே பழையாறை நகரில் இரண்டு திங்களாக அடைபட்டிருந்த அவளுக்கு மாணிக்க சேகரன் அதே நகரில் இருப்பது தெரியவில்லை. சிற்பி இருக்குமிடத்தைக் கண்டுபிடித்துத் தருவதில் அரசு அதிகாரிகள் மெத்தனம் காட்டியதுதான் அவளுக்கு மிக வருத்தத்தை அளித்தது. கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் சரிவர மறுமொழி தராததுடன், மௌனம் சாதித்தது சந்தேகத்தை அளித்தது. கடைசியாக சோழ அரசி பஞ்சவன் மாதேவியைச் சந்திக்கச் சென்றபோது அதிகாரிகள் மெத்தனத்திற்கு அரசிதான் காரணம் என்பதை அறிந்தாள்.

சோழ நாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டிய சிற்பியை மிகவும் நேசிப்பவள் என்பதை அவர்கள் அறிந்தும், சிற்பி இருக்குமிடத்தைக் கண்டு கூறுமாறு அதிகாரிகளுக்குக் கட்டளையிடுவதில் அரசி ஏன் தயக்கம் காட்டுகிறாள் என்பது அவளுக்குப் புரியவில்லை. மாளிகையில் சுகசௌக்கியமாக வாழ எல்லாவித வசதிகளும் செய்யப்பட்டன. அந்தப்புரத்தில் வாழும் மகளிர்க்கு அளிக்கப்படும் உபசரணைகளுக்கும் ஆகார வகைகளுக்கும் குறைவில்லை. பட்டுப் புடைவையும், நறுமணத் திரவியங்களும், அறுசுவை உணவுகளும் அவள் மனத்தை மயக்கவில்லை. பெற்றோரைப் பிரிந்து காதலனைத் தேடி அலைந்து அவனுடன் சேரத் துடிக்கும் அவளுக்கு, ஏற்பட்ட வசதியான வாழ்க்கை கசந்தது.

மெல்ல மெல்ல உண்மையை அறிந்தாள். அரசிக்கு ஏற்பட்ட குடும்பப் பூசலுக்குத் தான் பலியாவதை

அறிந்தாள். இராசேந்திர சோழ தேவரின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் வீரமாதேவி எடுக்கும், பெரிய கோயிலைச் சிற்பப் பெட்டகமாக்கும் பெரும் பொறுப்பை மாணிக்க சேகரன் ஏற்றிருக்கிறார். தன் காதலி யைக் காணாது தவிக்கிறார். சிற்பியின் உற்சாகத்தைக் குறைத்து, காதல் நோயால் சிற்பியைப் பித்துப் பிடித்தவர் போலாக்கி, சிற்பப் பணிக்குத் தடை விதிப்பது அரசியின் திட்டம். கலைஞர்கள் அழகுணர்வு மிக்கவர்கள். சிருங் காரத்தை ரசிப்பவர்கள். நடனக்கலையில் புலமை பெற்ற, இயற்கையாக அழகு வடிவமான வீரமா தேவியிடம் சிற்பி நெருங்கிப் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தி, வீர மாதேவிக்கு அவப் பெயர் ஏற்படுத்தினால், இராசேந்திர சோழர் சீற்றம் கொண்டு வெறுப்புற்று அவள் உறவைத் துண்டித்துக் கொள்ளலாம் என்ற கபடமான சூது நிறைந்த திட்டம் அரசியின் மனத்தில் உருவாகியதன் விளைவு தான், குமுதமும் மாணிக்க சேகரனும் சந்திக்க முடியாது செய்தது.

மெல்ல மெல்ல, அரசியின் இந்தத் தீய நோக்கத்தை குமுதம் அறிந்தாள். மாணிக்க சேகரனைச் சந்திக்க அல்லாமல் அரசி சூழ்ச்சி செய்வதன் காரணம் அதுவே என்பதை உணர்ந்தாள். அவளால் மாளிகைச் சுக வாழ்க் கையை ஏற்க முடியுமா?

அரசி பஞ்சவன்மாதேவி, வடக்கே இராசேந்திர சோழரின் அழைப்புக்கிணங்கப் புறப்பட்ட பிறகு தான், அந்தப்புரத்திலுள்ள வீரமாதேவியிடம் மதிப்பும் மரியாதையும் கொண்ட பணிப் பெண் ஒருத்தியின் மூலம், அரசியின் சூழ்ச்சிகளை அறிந்தாள்.

மாணிக்க சேகரன் கடும் காய்ச்சலால் பல நாள்களாய்ப் பழையாறையில் மருத்துவக் கூடத்தில் தங்கியிருக்கும்



செய்தி அறிந்தவுடன், அந்த இடத்திற்குச் செல்ல குமுதம் துடிதுடித்தாள். ஆனால், மாளிகையை விட்டு வெளியே செல்லக் கட்டுப்பாடு இருந்தது.

ஒருநாள் - மாணிக்க சேகரனைக் காண வீரமா தேவியும் கருவூர்ச் சித்தரும் வருவதை அறிந்தாள். கருவூர்ச் சித்தரைச் சந்திக்கச் செல்வதாகத் தெரிவித்து மாளிகையில் இருந்து வெளியேறுமாறு பணிப்பெண் யோசனை கூறினாள்.

தொலைவில் இருந்தே கருவூர்ச் சித்தரையும், வீரமா தேவியையும் கண்டாள். ஆனால் மருத்துவ மனையை நெருங்க முடியவில்லை. பழையாறையினின்று அரசி சென்ற பிறகு ஒரு நாள் நண்பகலில் குமுதம், மருத்துவக் கூடத்தை நோக்கி விரைந்தாள். அங்கே வீரமாதேவியைச் சந்தித்து அவள் பாதங்களைக் கெட்டியாகப் பற்றித் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை விவரித்தாள்.

வீரமாதேவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை. அதே போது, அரசி பஞ்சவன் மாதேவியிடம் ஏற்பட்ட கோபத்திற்கும் அளவில்லை. மாணிக்க சேகரனை இயமன் வாயிலிருந்து மீட்ட சித்தரின் மூலிகை மருந்துடன், மாணிக்க சேகரனின் மன ஏக்கத்தை, குமுதாவின் வருகை தீர்க்கும் என்பதை உணர்ந்த வீரமாதேவி, குமுதவல்லியை முழுமையாகப் பயன் படுத்தத் தீர்மானித்தாள்.

குமுதவல்லியின் பணிவிடையால் மாணிக்க சேகரன் முற்றும் தேறி, பழைய தெம்புடன் சிற்பப் பணியில் ஈடுபடுவான் என்ற நம்பிக்கையில் மாணிக்க சேகரனை அவளிடம் ஒப்படைத்து விட்டுக் கோயில் பணியை முழு மூச்சுடன் முடிக்கக் கானகப் பகுதிக்கு விரைந்தாள்.

மாணிக்க சேகரனிடம் குமுதம் நடந்தவற்றை ஒன்று விடாமல் விவரித்தபோது மாணிக்க சேகரனுக்கு மகிழ்ச்சியும் அதே போது கவலையும் சேர்ந்தன.

அவன் கவலைக்கும், அச்சத்திற்கும் காரணம் இல்லாமலில்லை. மறு நாளே பழையாறை அரசியின் மாளிகையிலிருந்துச் சில வீரர்கள், மருத்துவ மனைக்கு வந்தனர். மீண்டும் அவளை மாளிகைக்கு அழைத்து வருமாறு அரிந்தவன் மாதேவியின் கட்டளை என்று தெரிவித்தனர்.

எத்தகைய இடர்ப்பாடு, எதிர்ப்பு, அரச கட்டளை ஏற்பட்டாலும் மாணிக்க சேகரனை விட்டுப் பிரிய, குமுதவல்லி விரும்பவில்லை.







## 70. பெயரும் புகழும்

பெரிய கோயில் கட்டப்படும் பகுதி. சில நாள்களுக்கு முன்பு அடர்ந்த கானகப் பகுதி. கண்ணுக்கு எட்டிய தொலைவு வரையில் வெட்ட வெளியாகத் தென்பட்டது. அடர்ந்த மரங்களும், செடி கொடிகளும் புதர்களுமாக இருந்த இடத்தில் பாறைகள் கொண்டு குவிக்கப்பட்டிருந்தன.

ஒருபுறம் கோயில் திருப்பணி நடந்து கொண்டிருந்தது. ஒருபுறம் மாளிகையை எழுப்பக் கடைக்கால் தோண்டும் வேலையில் நூற்றுக்கணக்கானவர் ஈடுபட்டிருந்தனர். மிகப் பெரிய மாளிகை உருவாவதற்கான அறிகுறி தென்பட்டது.

செங்கற்கள் அடுக்கடுக்காய் வரிசையாய் சிறிய மதில் போல் நின்றன. அவை புத்தம் புதிதாய் சூளைகளிலிருந்து வந்து இறங்கி செந்நிறத்துடன் ஒளி வீசின.

ஒருபுறம் பாறைகளை உயரமான கற்தூண்களைச், சிற்பிகள் செதுக்கிக் கொண்டிருந்தனர். பெரும் கல்தூண்கள் உருளைகள் பொருத்தப்பட்ட வண்டிகளில் யானை

களால் இழுத்து வரப்பட்டன. தேர்கள், குதிரைகள், இரட்டை மாடுகளால் இழுக்கும் பார வண்டிகள், யானைகள் இழுக்கும் பார வண்டிகள் தடையின்றிச் செல்ல அகலமான பாதைகள் போடப்பட்டன. பாதைகளின் இருபுறமும், மரங்கள் நடப்பட்டன. அவை பெரிதாக வளர்ந்து நிழல் தருவனவாய் விளங்கும் காட்சி மனத்துக்கு இதமாய் இருந்தது.

'இந்தக் கானகப் பகுதியில் வெட்டப்பட்ட மரங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக புதிய மரங்களை வளர்க்க வேண்டும்' என்று அரசு அதிகாரிகள் கட்டளையிட்டு, நிறைவேற்றத் திட்டங்கள் வகுத்தனர்.

பல இடங்களில் வெண்ணெய் போன்ற நிறமுள்ள சுண்ணாம்பு அடிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோயிற் பணி தொடங்குவதற்காக முதன் முதலில் கட்டப்பட்ட குடிலில் வீரமாதேவி அமர்ந்திருந்தாள். உண்ணும், உறங்கும் நேரம் தவிர அவளால் ஒரு கணம்கூட சும்மாயிருக்க முடியவில்லை.

கோயில் திருப்பணி, மாளிகைத் திருப்பணி, குடியிருப்பு இல்லங்கள், தெருக்கள், வீடுகள், வீரர்கள் தங்கும் விடுதிகள், என்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டி யோசனை பெற, கட்டளை ஏற்கத் தொழிலாளர்களின் மேற்பார்வையாளர்கள் வந்து சென்று கொண்டிருந்தனர். தேனீக்கள் போல் சுறுசுறுப்பாக, தொழிலாளர்கள் இயங்கிக் கொண்டிருந்தனர். சிற்பிகள் எழுப்பிய சிற்றுளி ஓசை அந்தப் பகுதி முழுமையும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

சிற்பி மாணிக்க சேகரனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. குமுதவல்லியுடன் சேர்ந்து அவனும்



அவளும் சிற்பப்பணி நடக்குமிடங்களுக்குச் செல்வதும் யோசனை கூறுவதுமாக சிட்டுகளைப் போலப் பறந்து கொண்டிருந்தனர்.

குமுதவல்லிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. தன் இதயம் நிறைந்தவனுடன் சேர்ந்துவிட்டது முதல் மகிழ்ச்சி. சோழ நாட்டில் தஞ்சைபுரிக்கு அடுத்து பெரிய கோயில் ஒன்றை நிர்மாணிக்கும் மகத்தான பணியைத் தன் காதலன் ஏற்றிருப்பது மற்றொரு மகிழ்ச்சி. வீரமாதேவியிடம் மகிழ்ச்சி நிறைந்த தன் உள்ளத்து உணர்ச்சியை வெளியிட்டு நன்றி தெரிவிக்க வந்தபோது அவள் விழிகளில் மகிழ்ச்சிக் கண்ணீர் கோத்து நின்றது.



'குமுதவல்லி! உனக்கு ஏற்பட்ட முதல் மகிழ்ச்சி உன் அருமைக் காதலனுடன் சேர்ந்ததுதான். கடைசி நேரத்தில் அதற்குப் பெரும் இடர்ப்பாடு நேர இருந்ததை நீ மறந்துவிட்டாயா?' என்று வீரமாதேவி கேட்டாள்.

உண்மைக் காதலுக்குக் கடைசி வரையில் சோதனைகளும், இடர்ப்பாடுகளும் நேருவது உலக இயற்கை போலும் என்று வீரமாதேவி எண்ணிப் பெருமூச்சு விட்டாள். கை கூப்பியவாறு நின்றிருந்த குமுதவல்லி, மறுமொழி கூறினாள்.

''ஆமாம். இளவரசி அவர்களே! கைக்கு எட்டிய மாங்கனி எங்கே தவறி விடுமோ என்று பயந்து கலங்கினேன். கதிரொளி கண்ட பனிபோல் அது கரைந்தது. அந்தச் சூரிய ரேகைக்குக் காரணம் தாங்கள்தான் என்று அறியும்போது எங்கள் நன்றியை எவ்வாறு தெரிவிப்பது என்று தெரியவில்லை.'' என்று குமுதவல்லி மெல்லப் பேசினாள். உணர்ச்சி மிகுதியால் வார்த்தைகள் வெளிவரத் தடுமாறின.

வீரமாதேவி, அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள். ''நீ பட்ட துயரத்தை நான் பிறகுதான் அறிந்து கொண்டேன். உள் துயரம், வெளித்துயரம் என்று இரண்டு விதம். சாட்டை எடுத்து நூறு அடிகள் மேனியில் அடித்துக் காயப்படுத்தலாம். மருந்திட்டு அந்தக் காயத்தை ஆறச் செய்துவிடலாம். ஆனால், உள்ளத்தில் வடு அளிக்கும் வகையில் துன்பம் ஏற்படுத்துவதைத் தாங்கிக்கொள்வது கடினம். உன் இதயம் நிறைந்த மாணிக்க சேகரன் தெய்வப் பிறவி. அவர் கரங்களுக்கு இறைவன் மாய சக்தியை அளித்திருக்கிறான். இறைவன் சிற்பியின் மூலம் இந்தப் பூமியில் தோன்றப் போகிறார்.



சிற்பிக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பது சோழ அரசியின் நோக்கமன்று. ஒரு விதத்தில் நான்தான் காரணம் என்றும் சொல்லலாம். என்மீது அவருக்கு ஏற்பட்ட பொறாமை, சோழ நாட்டின் கலைக்கே இடையூறு செய்யுமளவிற்கு வளர்ந்து விட்டது. இங்கே ஏற்பட விருக்கும் பெரிய கோயிலால் எனக்கு அழியாப் பெருமை ஏற்படப் போவதாக அரசி நினைத்து விட்டாள். அதற்கும் நான்தான் காரணம் என்று நினைக்கிறேன். நான் ஒரு சபதம் செய்தேன். சிற்பியைத் தடுப்பதன் மூலம் சிற்பிக்கு மன வேதனை ஏற்படுத்துவதன் மூலம் கலைப் பணியைத் தடுத்துவிடலாம் என்று அரசி நினைத்துவிட்டார்கள். அதன் விளைவுதான் உங்களுக்கு அவர்கள் அளித்த தொல்லை'' என்று ஆறுதலாகக் கூறினாள் வீரமாதேவி. தனக்கே மனப்புண்ணிற்கு மருந்திட மற்றவர் வருவாரா என்று தேடுவது போக, குமுதவல்லிக்கு ஆறுதல் சொல்லும் அளவிற்குச் தனக்குச் சக்தி ஏற்பட்டு விட்டது அவளுக்கு வியப்பாக இருந்தது.

''சிற்பியுடன் நான் சிற்பக்கூடத்திற்குப் புறப்படப் போகிறேன் என்று எண்ணியிருந்தபோது இளவரசி அழைப்பதாகக் காவலர்கள் வந்தார்கள். என்னை மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். சோழ சக்கரவர்த்தியின் மனத்துக்கு இனிய இளவரசியாம் - அரிந்தவன் மாதேவி, நோயுற்றுப் படுத்திருந்த நிலையிலும் என்னிடம் கடுமையாகப் பேசினாள். தங்கள் பெயரைக் குறிப்பிட்டு, கடுஞ்சொற்களால் ஏசினார்கள். அரசியார் வடக்கே சென்றிருக்கும் நிலையில, தானே அரசி என்றும் தன் உத்தரவுப்படி அதிகாரிகள் நடப்பார்கள் என்றும் ஆவேசத்துடன் கூறினார்கள்.

இன்னும் சில நாழிகைக்குள் சிற்பியையும் அழைத்து கொண்டு கண்காணாத தேசத்திற்குச் சென்றுவிட வேண்டும் என்று எச்சரித்தார்கள். அதற்காகப் பொன்னும் பொருளும் ஏராளமாகத் தருவதாகக் கூறினார்கள். சோழநாட்டு எல்லையைத் தாண்டிச் செல்லும் வரை தகுந்த பாதுகாப்பு அளிப்பதாகவும் உறுதி கூறினார்கள்.

''மீண்டும் தங்கள் பெயரைச் சொல்லி 'ஒரு நாளும் அவள் திட்டம் நிறைவேறப் போவதில்லை. கோயில் பணிகள், ஏரி வெட்டுதல், வீடு கட்டுவது போன்ற காரியங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைத் தடுத்து அவரவர் ஊர்களுக்குச் செல்லுமாறு உத்தரவிடப் பட்டுள்ளது' என்று கூறினார்கள். கடைசியாக அவர்கள் மெல்லக் கூறினாலும் கடுமையாகக் கூறிய சொற்கள் என்னை நடுங்க வைத்துவிட்டன. அதாவது தன் கட்டளையை இன்றைய பகற்பொழுதுக்குள் நிறைவேற்ற வில்லை என்றால் சிற்பியுடன் நானும் இந்த உலகை விட்டே மறைந்து விட நேரிடும் என்ற எச்சரிக்கை வார்த்தைகளைக் கேட்டவுடன், நான் மயங்கி விழாத நிலைதான்...''

குமுதவல்லி தொடர்ந்து பேசுவதைத் தடுத்து, வீரமாதேவி சொன்னாள்:

''எனக்கு எல்லாம் தெரியும். நடந்தவற்றை மீண்டும் விவரிப்பதன் மூலம் மனத்தில் மீண்டும் துன்ப நிகழ்ச்சி களை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டாம். நல்ல செயல்களுக்குத் தொடக்கத்தில் தொல்லை ஏற்படும். துன்பத்தைக் கண்டு துவளக்கூடாது. நம் இலட்சியத்தில் உறுதியுடன் இருக்கிறோம் என்று இறைவனின் சோதனை என்று எண்ணி உறுதியுடன் இருந்துவிட்டால் அவன்



உதவி நமக்கு உண்டு. சிற்பியும், நீயும் மருத்துவ மனையிலிருந்து புறப்படும் தருணத்தில் இளவரசி அழைப்பதாகக் காவலர்கள் வந்து உன்னை மட்டும் அழைத்துச் சென்றதை நான் அறிவேன். உன்னைப் பயமுறுத்திப் பேசியதும் எனக்குத் தெரிய வந்தது. ஆனால், பிறகு என்ன நேர்ந்தது. எப்படி ஓர் அதிசயம் நடந்தது என்று உனக்குத் தெரியுமா?'' என்று கூறிச் சற்று நிறுத்தினாள் வீரமாதேவி.

தெரியாது என்று தலையசைத்து வீரமாதேவி என்ன சொல்லப் போகிறாளோ என்று வியப்புடன் அவள் முகத்தை விரிந்த விழிகளுடன் நோக்கினாள்.

''இளவரசி அரிந்தவன்மாதேவி தஞ்சைபுரியிலிருந்து பழையாறைக்கு, நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காகவே வந்தாள். மன அமைதியுடன், முழு ஓய்வுடன் இருக்க வேண்டும் என்று மருத்துவர் எச்சரித்திருந்தும் அதை மீறி, மனத்தில் எப்போதும் சதித்திட்டங்களுக்கு இடம் கொடுப்பதால் உடல் நிலை சீர் குலைந்தது.

''உன்னிடம் பேசி, அதிகாரிகளை அழைத்துக் கட்டளையிடும் முன்னரே மயக்கமடைந்துவிட்டாள். வாய் பேச முடியாமல் போய்விட்டது. கரங்கள் செயலிழந்தன. பிறகு நடந்தது உனக்குத் தெரியும். நீயும் சிற்பியும் உற்சாகமாகப் பணியாற்றி வருகிறீர்கள். மதுரையினின்று பூற்றுக்கணக்கானவர்கள், காடு திருத்தி நாடாக்க வந்திருக்கிறார்கள். பஞ்சம் வந்துவிடுமோ என்று பயந்து, அடுத்து என்ன செய்வது என்று திகைத்திருந்த பகுதி மக்களை ஏரி வெட்டும் பணியில் ஈடுபடுத்தியதும் அவர்கள் உற்சாகத்துடன் வேலை செய்கிறார்கள்.

"சோழ சக்கரவர்த்திகளின் இலட்சியங்களில் ஒன்றான, மாபெரும் ஏரியை வெட்டுவது மிக விரைவில் நிறைவேறிவிடும். அவர்கள் திரும்பி வருவதற்குள் ஏரியை வெட்டி, கரையை உயர்த்தும் பணியை முடித்து விடவேண்டும். சக்கரவர்த்திகள் கொண்டு வரும் கங்கை நீர் அந்த ஏரியில் நிரப்பப்படும்."

வீரமாதேவி விழிகளை மூடிக்கொண்டு தன் எதிரே ஏரியும், கோயிலும், மாளிகையும், நகரமும் கம்பீரமாக நிற்பனபோல் மெய்மறந்து உற்சாகத்துடன் விவரித்தாள்.

வீரமாதேவி விவரித்துக் கொண்டே வந்த போது, அவர்கள் வார்த்தைகளால் மெய்சிலிர்த்துப் போன குமுதம் வாய்விட்டு உற்சாகத்துடன் குரல் கொடுத்தாள். மாணிக்க சேகரனும் அங்கே வந்து சேர்ந்தான்.

''ஆமாம், ஆமாம். நான் செய்வது மிகையில்லை. இங்கே மூன்று அற்புதங்கள் நிகழப் போகின்றன. பெரிய கோயிலின் குடமுழுக்கும், ஏரியில் கங்கை நீர் நிரப்புதலும், புதிய மாளிகையில் அரச குடும்பத்தினர் குடிபுகுதலும் நடைபெறப்போகின்றன. கருவூர்ச் சித்தர் சோழநாட்டை விட்டுத் தெற்கே பொதிகை மலைச் சாலை அடையும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. சோழ அரசியும், அரசரும் கங்கை நதியில் நீராடி, கங்கை நீருடன் திரும்பி வருவார்கள். வெற்றியுடன் அவர்கள் திரும்பும் நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். பெருவுடையார் கோயிலுக்குப் புகழ் சேர்க்கப் போகும் இரண்டு முக்கிய சிற்பங்களை முடிக்கும் பொறுப்பு உன் அருமை மாணிக்க சேகரனிடம் இருக்கிறது. அவையும் முடிந்து விட்டால் வாழ்வின் இலட்சியம் பூர்த்தியாகி விடும். பிறகு சோழ அரசியோ மற்றவர்களோ என்னைச் சோழ சக்கரவர்த்தியிடமிருந்து பிரித்து, என்னை நாட்டை விட்டு ஓட்டிவிட்டாலும் கவலைப்பட மாட்டேன்...''



என்று கூறிவரும் போது மாணிக்க சேகரன், ''தேவி...'' என்று பெருங் குரல் கொடுத்தான்.

''தேவி! என்ன கூறினீர்கள்? சோழ நாட்டில் உங்களுக்கு எதிர்ப்பாளரா? அப்படி ஒருவரும் இருக்க முடியாது; என்றும் ஏற்படப் போவதுமில்லை. தாங்கள் குறிப்பிட்ட கலைத் தேவியாம் ஞான சரஸ்வதியின் சிலை முடிவடையும் தருவாயிலுள்ளது. சண்டேச்வர அனுக் கிரகர் சிலையில் இன்னும் சில பணிகள் மட்டுமே உள்ளன. கண் திறக்க நாள் பார்க்குமாறு சோதிடரைக் கேட்டுக் கொண்டுள்ளேன். சக்கரவர்த்தியின் பெருமையுடன் உங்களுடைய புகழையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில், சூரிய சந்திரர் உள்ளவரை அழியாத சிற்பக்கூடமாகப் பெரிய கோயில் திகழும். என் நெடுநாள் ஆசை ஒன்றையும் நான் சக்கவர்த்திகளிடம் விண்ணப் பிக்கப் போகிறேன். லோக மாதீச்சரம், ராஜராஜேச்சரம், செம்பியன் மாதேவீச்சரம் என்ற புகழ்க் கோயில்கள் இருப்பனபோல் இங்கே அமையும் கோயிலுக்கு வீர மாதேவீச்சரம் என்று பெயர் சூட்ட வேண்டும் என்று நான் சக்கரவர்த்திகளிடம் வேண்டப் போகிறேன். உருவாகும் பேரேரிக்கு வீரமாதேவி பேரேரி என்றும் ஊருக்கு வீரமாதேவி நகரம் என்றும் பெயர்கள் சூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் போகிறேன்.''

வீரமாதேவி அதிர்ச்சியடைந்தாள். ''சிற்பியாரே! சிற்பியாரே! என்ன வார்த்தைகள் கூறிவிட்டீர்கள்? என்னை மகிழ்விக்க வேண்டும் என்று இப்படிப் பேச மாட்டீர்களே. என்னைப் புகழ வேண்டும் என்று உயர்வு நவிற்சியாகப் பேசமாட்டீர்களே! இந்தப் பணிகளின் பெருமை முழுமையும் நம் தலைவர் சோழ சக்கரவர்த்தி களையே சேரவேண்டும். இந்த நகரத்திற்கு இராசேந்திர

சோழபுரம் என்று பெயர் சூட்டப்படவேண்டும். இராசேந்திர சோழப் பேரேரி என்று இந்த ஏரிக்குப் பெயரும், இராசேந்திர சோழீச்சரம் என்று பெரிய கோயிலுக்குப் பெயரும் சூட்டப்பட வேண்டுமென்பது தான் என் விருப்பம். நியாயம்கூட. கருணை கூர்ந்து தங்கள் எண்ணத்தை, விருப்பத்தை வெளியே யாரிடமும் சொல்லி விடாதீர்கள்'' என்று உருக்கமாக வேண்டினாள்.

நகரம், ஏரி, கோயில் மாளிகைப் பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது பழையாறையிலிருந்து அதிர்ச்சியான செய்தியொன்று வந்தது.

அரிந்தவன்மாதேவியின் உடல்நிலை கவலைக்கிடமாகி விட்டது என்ற செய்தியை அதிகாரிகள் விரைந்து வந்து தெரிவித்தனர்.

அந்தச் செய்தியை சக்கரவர்த்தி இராசேந்திர சோழரிடம் தெரிவிக்க உடனே புறப்பட்டுச் செல்லுமாறு வீரமாதேவி சோழ இளவரசரிடம் வேண்டிக் கொண்டாள்.

அடுத்து என்ன நேருமோ என்ற பெரும் கவலை வீரமாதேவியிடம் எழுந்தது.







## 71. திறந்த விழிகளும் கலங்கிய விழிகளும்

இராசேந்திர சோழ தேவரின் இலட்சியமான பெரிய கோயிலில் அமைக்கப்படவிருந்த சிற்பப் பணிகள் மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு சிற்பத்தையும், வீரமாதேவி ஆவலுடன் பார்த்தாள். ஓர் அதிசயத்தைப் பார்ப்பது போல் பரந்த விழிகளுடன் நோக்கினாள். ஒரு குழந்தையைப் போல் குதூகலித்துக் கரம் கொட்டிக் குதித்தாள்.

''தங்கள் கரங்களுக்குத்தான் எத்தனை திறமை?'' என்று சிற்பியின் கரத்தை எடுத்துத் தன் விழித்தாமரையில் ஒத்திக் கொண்டாள். சிற்பியின் மெய் சிலிர்த்தது.

சிற்பத்தின் விழிகளைத் திறப்பதற்குத் தேர்ந்தெடுத்த நாளன்று மாணிக்க சேகரன், பொழுது புலருமுன்பு நீராடித் திருநீறணிந்து, தன் குடிலிலுள்ள பிள்ளையாரைக் கும்பிட்டுத் தோத்திரம் சொல்லி, சிற்றுளியை வணங்கி, வெளியே வந்து சகுனம் பார்த்துச் சிற்பக் கூடத்துக்குப் புறப்பட்டான். கஞ்சிக் கலயத்துடன் விரைவில்

வருவதாகக் கூறி, குமுதவல்லியும் மலர்ந்த முகத்துடன் வழியனுப்பினாள். முதல் நாளிலிருந்து சிற்பி உண வேதும் அருந்தவில்லை. சிற்பத்தின் விழிகளைத் திறப்பதைப் புனிதமான நோன்பாகக் கொண்டான். இறைவன் திருவடிகளை நினைத்துக் கொண்டே இரவைக் கழித் தான்.

அவன் படைத்த ஞான சரஸ்வதியின் சிலை அழகுடன் அமைந்து விட்டது. சிற்பத்தின் விழிகளைத் திறந்தவுடன் தான் கலைதேவியின் பூரணப் பொலிவு புலப்படும். விழி திறக்கும்போது எள்ளளவு தவறு ஏற்பட்டாலும் முழுச் சிற்பமும் வீண் தான். தவறு நிகழாது என்ற உறுதி அவனுள்ளத்தில் இருக்கிறது என்றாலும், அச்சமுமில்லா மற் போகவில்லை. தெய்வம் துணை நிற்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சிற்பம் உருவாகும் கூடத்திற்குச் சென்றான்.

ஞான சரஸ்வதி முழுப் பொலிவுடன் காட்சியளித் தாள். மாணிக்க சேகரனின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி நின்றது.

ஞான சரஸ்வதியின் சிற்பத்தின் எதிரே வீரமாதேவி மெய்மறந்து நின்றாள்.

''கலையின் அதிதேவதையே! உன்னைப் பணிகிறேன். வெள்ளைக் கலை உடுத்தி, வெண் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் தேவியே உன் திருவடிகளில் வணங்கு கிறேன். நடனம், இசை ஆகிய அறுபத்து நான்கு கலை களின் நாயகியே! உன் பாதங்களில் சரணடைகிறேன்.

சகல கலைகளையும் படைத்தவளே! உன்னைப் பணிகிறேன். நிருத்தியத்தின் மூலம் உன்னை அஞ்சலி



செய்யும் ஆற்றல் என்றும் என்னிடமிருந்து அகலாம லிருக்க அருள வேண்டும். தங்களிடமிருந்து நான் பெற்ற நடனக் கலையைக் கண்டுதானே அரசர் எனக்கு இவ்வளவு பெரிய வாய்ப்பு அளித்தார்!'' என்று வீர மாதேவி பிரார்த்தித்தாள்.

மாணிக்க சேகரன் வீரமாதேவியின் இதழ்கள் துடிப்பதை நோக்கியவாறிருந்தான்.

''தேவி! தங்களுடைய ஊக்கமும் ஆதரவும் இல்லா விட்டால் கலைவாணி இங்கு எழுந்தருளுவது ஏது?'' என்றான் மாணிக்க சேகரன்.

''எல்லாம் சக்கரவர்த்தியின் கருணை. அவருடைய கலைக் கனவுதான் சிற்ப அற்புதங்கள் இங்கு நிகழக் காரணம். அவர் இப்போது இங்கிருந்தால் உங்களுக்குப் பல்லாயிரம் பொன் பரிசாக அளித்திருப்பார். என்னிடம் பொன் இல்லையே! சொல்லால் உங்களைப் புகழ்வதற்கு வார்த்தைகள்கூட வரவில்லையே'' என்று உணர்ச்சி மிகுதியுடன் பேசினாள் வீரமாதேவி.

''சக்கரவர்த்தியின் திக் விஜயம் முடிந்து எப்போது திரும்பி வருகிறார்கள், தேவி? அதற்குள் கோயிற் பணிகளை முடித்து விடவேண்டாமா?'' என்று மாணிக்க சேகரன் கேட்டான்.

''ஆமாம், ஆமாம். எனக்கும் அதே கவலைதான். விழிகளை வலுக்கட்டாயமாக மூடினால், கலீர், கிணிங், கிணிங் என்ற ஓசைதான் கேட்கிறது. முன்னேற்றம் போதாது என்று தோன்றுகிறது. முன் மண்டபம் முடிந்து, மளமளவென்று விமானம் வளர்கிறது. தஞ்சைப் பெரிய கோயிலைப் படைத்த பரம்பரையில் வந்தவரின் கை

வண்ணத்தைப் பார்த்தீர்களா? ஈழ நாட்டிலிருந்தும், மதுரையினின்றும் நான் எதிர்பார்த்ததைவிட அதிக மானவர்கள் உற்சாகத்துடன் பணிபுரிய இங்கு வந்திருக் கிறார்கள். மதுரையினின்று வந்தவர்கள் சில நாள்கள் வரை அரை மனத்துடன் கோயில் பணியில் ஈடுபட்டார் கள். இப்போது முழு உற்சாகத்துடன் வேலை செய்கிறார்கள். நம் சக்கரவர்த்திகளைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் பலர், 'சக்கரவர்த்தி எப்போது திரும்பி வருவார்கள்?' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொள்கிறார்கள். 'நாம் பணியை விரைவில் முடித்தவுடன் அவர்கள் வந்து விடுவார்கள்' என்று அவர்களே





பேசிக்கொள்கிறார்கள்.'' என்று வீரமாதேவி பணிபுரிபவர் களின் கருத்தை எடுத்துக் கூறினாள். அவ்வாறு கூறும் போது முழுத் திருப்தி அவள் உள்ளத்தில் நிரம்பியிருந்தது அவள் விழிகளில் புலப்பட்டது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிலையின் அருள் விழிகளைத் திறப்பது எனத் திட்டமிட்டிருந்தான் மாணிக்க சேகரன். வரிசையாக நான்கு நாள்களும் நல்ல நாள்களாக அமைந்தன.

பௌர்ணமி அன்று, கருவூர்ச் சித்தர், கோயில் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காண வருவதாகச் செய்தி கிடைத்தவுடன், வீரமாதேவி பரபரப்



படைந்தாள். கோயில் பணிகள் நடைபெறும் பகுதியை ஒருமுறை சுற்றிப் பார்க்க விரும்பினாள்.

ஓர் ஆண்டிற்கு முன்பு அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்த அந்த இடம் இப்போது முற்றிலும் மாறியிருந்தது. பரந்த வெளியாக மாறி இப்போது கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை தொழிலாளர்கள் சுறுசுறுப்பாகப் பணிபுரிவது தெரிந்தது.

மாட்டு வண்டிகளும், குதிரை பூட்டிய வண்டிகளும் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தன. ஏராளமான மூங்கில்கள் காததொலைவிலிருந்து கொண்டு வரப் பட்டன. ஆற்று மணலும், செம்மண்ணும், கருங்கற்களும் ஏற்றிய பார வண்டிகள் அசைந்தாடி வந்தன. மாளிகை, இல்லங்கள், விடுதிகள், வீடுகள் என ஆங்காங்கே கட்டப்பட்டு வந்தன. வீடு கட்டும் கலைஞர்கள் சோம்ப லின்றி இயங்கினர். அவர்களுக்கு உதவியாக இளம் பெண்களிலிருந்து முதிர்ந்த வயதுடையவர்கள் வரை ஒய்வு இன்றி அல்லும் பகலும் உழைத்தனர்.

புதிய நகரமும், மாளிகையும், கோயிலும் உருவாவ தைப் பார்க்கத் தொலைவிலுள்ள பட்டி தொட்டிகளி லிருந்து மக்கள் வந்த வண்ணமிருந்தனர். வேடிக்கை பார்த்துச் செல்லாமல் தங்களால் இயன்ற பணிகளைச் செய்து கூலியாக தானியங்களையும், காசுகளையும் பெற்றுச் சென்றனர். பழையாறை நாணய சாலையில் புதிதாக உருவான செப்பு நாணயங்கள் அவர்களுக்கு கூலியாகக் கொடுக்கப்பட்டன. அந்தக் காசுகளைப் பார்த்து அவர்கள் வியப்படைந்தனர்.

எதிர்பார்த்தது போலவே கருவூரார் வந்துவிட்டார். சிற்பங்களைக் காண அவர் விரும்பினார். வீரமாதேவி



உற்சாகத்துடன் கருவூராருடன் சிற்பக் கூடங்களுக்குச் சென்றாலும் அவளுள்ளத்தில் அச்சமும் நிறைந்திருந்தது. சித்தர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற கவலை அவள் விழிகளில் நிறைந்திருந்தது.

மாணிக்க சேகரன் ஒவ்வொரு சிற்பமாக விளக்கி வந்தான்.

ஆலமர் செல்வர், காலாந்தகர், காமாந்தக மூர்த்தி, தக்ஷிணா மூர்த்தி என்று சிவபெருமானின் பலவிதத் தோற்றங்கள் கல்லில் அழகுறக் காட்சியளித்தன.

ஆடவல்லாரின் சிற்பமும் உருவாகிக் கொண்டி ருந்தது.

கருவூரார் மாணிக்க சேகரனைத் தன் அருகே அழைத்து, சில குறிப்புகளைத் தெரிவித்தார்.

''ஆடவல்லாரின் சிற்பத்தை மிக நேர்த்தியாகச் செய்ய வேண்டும். சோழர் குலத்தைக் காக்கும் கடவுள் நடராசர். இராசேந்திரன் புதிய நகரத்தை நிர்மாணிக்காமல் தில்லையம்பதியை மேலும் விரிவு படுத்தியிருக்கலாம். ஆனால் இராசேந்திரனுக்கு எல்லாம் புதுமையாக, மகத்தானதாக இருக்க வேண்டும் என்ற ஆர்வம். அந்த ஆர்வத்தைத் தூண்டியவளே இந்த வீரமாதேவிதான்'' என்று கூறித் திரும்பிப் பார்த்தார்.

வீரமாதேவி, நாணமும் அச்சமும் கலந்து கரங்கூப்பி, நிலத்தை நோக்கித் தலை குனிந்து நின்றாள்.

''என்ன, தேவி! நான் சொல்வது சரிதானே? காட்டு வெளியைக் கண்ணுக் கெட்டிய தொலைவுவரை பொட்டல் வெளியாக மாற்றி அங்கே கயிலாயத்தையே படைத்துவிடப் போகும் இராசேந்திரனின் எண்ணத்தை

ஊக்குவிப்பவள் நீதானே?'' என்று வெண் தாடியை வருடியவாறு கேட்டார் கருவூரார்.

மறுமொழி கூற வீரமாதேவிக்கு நா எழவில்லை. உணர்ச்சியால்விழிகளில் நீர் திரையிட்டது. இமைகளை மெல்ல மூடித் திறந்தாள்.

'சித்தர் பாராட்டுதலுக்கு நான் தகுதியானவள்தானா?' என்ற ஐயம் அவளுள்ளே எழுந்தது. மூங்கில் துறைக் கிராமத்திலிருந்தபோது இப்படியொரு மகத்தான இலட்சியம் மனத்தில் விதைக்கப்பட்டதாகக் கூடத் தெரியவில்லையே! பிறகு எப்படிப் பிறந்தது? எல்லாம் இறைவன் அருள்' என்று நினைத்தாள்.

''சிறிது நேரமாக நீ ஒன்றுமே பேசாமல் இருக்கிறாய். மனத்தில் ஏதோ ஒரு கவலை - அப்படித்தானே பெண்ணே?'' என்று கேட்டார் கருவூரார்.

''வடக்கே வெகு தொலைவில் இருக்கும் உன் நேசன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாரோ என்ற கவலை. எந்த விதத் துன்பமும் தொல்லையும் ஏற்படாமல் திரும்பி வர வேண்டுமே என்ற கவலை. கங்கை நீரைக் கொண்டு வந்து விரைவில் குடமுழுக்குச் செய்ய வேண்டுமே - கங்கை நீரை இவ்வளவு தொலைவு அவர் எப்படிக் கொண்டு வரப்போகிறாரோ என்ற கவலை.

இராசேந்திரன் வருவதற்கு முன்பு கோயில் விமானம் பூர்த்தியாகிவிட வேண்டும். சுற்றுக் கோட்டங்களில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய தேவதைகளின் சிலைகள் இடர்ப்பாடின்றி முடிவடைந்திருக்க வேண்டும். ஆவுடையாரும் மாபெரும லிங்கமும் செய்யப்பட்டு பாலாலயத்தில் ஒரு மண்டலப் பூசையில் இருக்க வேண்டும். இப்படிப் பல கவலைகள்.



இன்னொரு கவலையையும் உன் உள்ளத்தில் ஏற்றிக் கொள் -'' என்று கூறினார். வெண்தாடியையும் தாண்டி அவர் நகைப்பது தெரிந்தது.

''வீரமாதேவி! கோயில் கட்டும் பணி என்பது எளிதன்று. இராசேந்திரனுக்குத் தன் தந்தை எழுப்பிய இராசராசேச்வரம் திருக்கோயில் முன் மாதிரியாக இருந்திருக்கிறது. ஆனால் இராசராசன் பெரிய கோயிலைக் கட்டும்போது கோயில் அமைப்பு முறை, விதிகள், அளவு எல்லாம் அவனுடைய சொந்த ஆற்றலால் எழுந்தன. திறமையான சிற்பியும் அவருக்கு உறுதுணையாக அமைந்தார்.'' என்று கூறி மாணிக்க சேகரனை நோக்கி, ''இளவயதிலேயே கலைமகளின் பூரண அருள் பெற்றிருக்கும் நீ, உன் முழுக் கவனத்தையும் செலுத்தி, இராசேந்திரனின் பெரிய கோயிலை உலகப் புகழ் அடையுமாறு அமைக்க வேண்டும். உன் மனத்தில் சஞ்சலம் ஏற்படுவதற்கான சூழ் நிலைகள் ஏற்படலாம். பிரம்ம கர்மத்தைக் கடைப்பிடித்து நீ, உன் கை வண்ணத்தால் தெய்வங்களை இங்கே வந்தமரச் செய்ய வேண்டும்'' என்றார்.

மாணிக்க சேகரன் மிகப் பயபக்தியுடன் அவர் கூறுவதைக் கேட்டுத் தலையசைத்தான். மீண்டும் வீரமாதேவியை நோக்கி, ''எல்லாம் நல்ல விதமாக அமையும். அங்கே எதிர்ப்பவர்கள் யாரும் இன்றியே கங்கை நீரைக் கொண்டு வரப்போகிறான் இராசேந்திரன்'' என்று புதிய நம்பிக்கையை அளித்தார் கருவூரார்.

''வீரமாதேவி! அரிந்தவன்தேவியின் உடல்நிலை கவலைக்கிடமாயிருக்கிறது என்று ஓலை அனுப்பினாயே. அதைக் கேட்டுப் பதற்றத்துடன் இராசேந்திரன் திரும்பி வந்து விட்டால்? கங்கை நீரைக் கொண்டு வருவது

தடைப்பட்டுவிடுமே! நீ இப்படியொரு செய்தி அனுப்பியிருக்கலாமா? பட்டத்தரசியும் அங்கே சென்றிருக்கிறாள் என்பது உனக்குத் தெரியாதா? இந்தச் செய்தி கேட்டவுடன் கங்கை நீராடாமல், கங்கை நீரைக் கொண்டு வரத் திட்டமிடாமல் திரும்பி வந்து விட்டால் உன் இலட்சியம் என்னாவது? ஒன்று உறுதியாகச் சொல்கிறேன். பொதிகை மலைக்குச் செல்லும் திட்டத்தை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன். இன்னும் மூன்று பௌர்ணமிகள் உள்ளன -'' என்று கூறி, வீரமாதேவியின் உள்ளத்தை ஊடுருவது போல் பார்த்தார் கருவூரார்.

என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றாள் வீரமாதேவி.

''அரிந்தவன் மாதேவியின் இறுதிக் காலத்தில் அரசரை அவளருகே இருக்கச் செய்வது என் கடமையல்லவா?'' என்று கேட்டாள் வீரமாதேவி.

''அந்தக் கடமையைச் செய்ய அவளுடைய மகன் இருக்கிறானே. அவனுக்கு இல்லாத பாசம் உனக்கு எப்படி ஏற்பட்டது?'' கருவூராரின் இந்தக் கேள்விக்கு மறுமொழி கூறுவதற்கு முன் மீண்டும் கருவூரார் கேட்டார்.

''பெண்ணே! தர்ம நியாயத்திற்கு நீ கட்டுப்படுகிறாய். ஆனால் அரிந்தவன் தேவி, உனக்குத் தொல்லை தருவதையே தன்கொள்கையாகக் கொண்டிருந்தாளே! அவள் சொற்படி, இராசேந்திரன் நடந்திருந்தால் இங்கே கோயில் ஏது? சிற்பம் ஏது, ஏரி ஏது, புதிய நகரம் ஏது?''

வீரமாதேவி கண் கலங்கினாள். குரல் தழுதழுக்க, 'நான் அப்படி நினைக்கவில்லை. என்ன இருந்தாலும் இளவரசி அரிந்தவன் மாதேவிக்கு இருக்கும் உரிமை



எனக்கு இல்லை. சக்கரவர்த்திகளின் அபிமானத்தைப் பெற்று, தன் உரிமையில் ஒரு பகுதியை நான் பகிர்ந்து கொண்டேன் என்ற கோபம்தான், பெரிய கோயில் உருவாவதற்கு அவர்கள் தடையாக நின்றது. இளவரசியின் தடையையும் மீறி கோயில் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. அதனால், இளவரசி மீதுள்ள கோபத்தைப் புலப்படுத்த இது தருணமன்று என்ற முடிவுடன், அரசருக்குச் செய்தி அனுப்பினேன். செய்தி அறிந்து அவர், திரும்பி விட்டால் - என்ன செய்வது புரியவில்லையே சுவாமி?'' வீரமாதேவியின் விழி வேதனையை நீராகச் சொரிந்தன.

சித்தர், வீரமாதேவியின் இரு கரங்களையும் அன்புடன் எடுத்து தன் கரத்துடன் பிணைத்து, ''கலங்காதே வீரமாதேவி! எல்லாம் நல்ல வண்ணமாக நடக்கும். அரிந்தவன் தேவியின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது. பெரிய கோயில் குட முழுக்கு விழாவைப் பார்த்து விட்டுத்தான் அவள் கண் மூடுவாள். இப்போதே நீ அரசருக்கு ஓர் ஓலை எழுது. 'கங்கை நீருடன் வரவும். திருப்பணிகள் எல்லாம் நல்லபடி முடியும் தறுவாயில் உள்ளன' என்று குறிப்பிட்டு, விரைந்து செல்லுமாறு நம்பிக்கையான தூதுவரை அனுப்பிவை. அரசர் கரத்தில் கிடைக்குமாறு அனுப்பிவை.

''கங்கைக்கரைக்கு, சோழ வீரர்கள் சென்றடைந்து விட்டனர். அரசி பஞ்சவன் மாதேவி வருவதை அறிந்து, கோதாவரிக் கரையில் காத்திருக்கிறார் அரசர். நினைவிருக்கட்டும். இன்னும் மூன்று பௌர்ணமிகளே உள்ளன'' என்றார்.

அரிந்தவன் தேவி பிழைத்து விட்டாளா? வீரமாதேவியின் முகம் மலர்ந்தது. அகம் குளிர்ந்தது. சித்தர் சொன்னது போல் ஓலை அனுப்பத் திட்டமிடலானாள்.

''வீரமாதேவி!'' என்று மீண்டும் அழைத்தார் சித்தர். ''செய்தியைக் தக்கவரிடம் அனுப்ப வேண்டும் என்று ஏன் சொன்னேன் தெரியுமா? அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை சரியில்லை என்று தெரிவிக்குமாறு சொன்ன ஓலை, அரசரை இன்னும் சென்றடையவில்லை'' என்று சித்தர் கூறினார்.







## 72. மனித திட்டம் இறைவன் செயல்!

கோதாவரி பேராறு இரு கரைகளையும் அணைத்தவாறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. வெகு தொலைவிலுள்ள கடலரசனுடன் சேர அது விரைந்து கொண்டிருந்தது. எதிர்க்கரை ஒரு மெல்லிய கோடுபோல் தெரியுமளவுக்குப் பரந்து விரிந்திருந்த கோதாவரியின் அழகைக் கண்டு ரசித்தவாறு அமர்ந்திருந்தார் சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர்.

வேங்கியில் சில நாள்கள் தங்கிவிட்டு, கோதாவரியைக் கடந்து செல்ல அந்தச் சிற்றூரில் தங்கினார்.

அவர் தந்தை இராசராசன் காலத்திலேயே அந்த ஊரில் சிறிய மாளிகை கட்டப்பட்டது. சாளுக்கியர்களுடன் நடைபெறும் போரின்போது அங்கே தங்கி, படைத் தலைவர்கள் திட்டம் வகுப்பார்கள். வேங்கியில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக பல ஆண்டுகளாக அந்த மாளிகை கவனிப்பவரில்லாமல் பொலிவிழந்திருந்தது.

இராசேந்திர சோழர் கங்கையில் நீராடச் செல்லப் போகிறார் என்ற செய்தி வேங்கியை எட்டிய பிறகு, வேங்கியில் அவரை விருந்தினராக வரவேற்று, உபசரிக்க

விமலாதித்தன் விரும்பினார். நோய்வாய்ப்பட்டிருந்தால் முழு நிறைவோடு அவரால் செயலாற்ற முடியவில்லை. மேலும், அண்டை நாட்டு சாளுக்கிய அரசன் ஜெயசிங்கன் தொல்லை தரத் தொடங்கியதை முறியடிப்பதிலேயே அவர் பொழுதெல்லாம் செலவிட்டதால் மனவேதனையும் அதனால் ஏற்பட்ட உடல்நோயும் அவர் ஆற்றலைத் தடுத்தன.

இராசேந்திர சோழர் வேங்கியில் சில நாள்களே தங்கினார். தங்கிய அந்தக் குறுகிய காலத்திலேயே வேங்கியின் நிலைமையை முழுவதும் உணர்ந்தார். தான் எடுத்த பெரும் பணியை நிறைவேற்றுவதிலேயே அவர் கவனமாக இருந்ததால், வேங்கியில் தங்காமல் புறப்பட்டார். கோதாவரியைக் கடந்து கங்கைக் கரையை நோக்கிச் செல்லத் திட்டமிடலானார். அவர் எண்ணியது அவ்வளவு எளிதில் நடைபெறும் என்று தோன்றவில்லை.

அரசி பஞ்சவன்மாதேவி பழையாறையிலிருந்து புறப்பட்டு வரும் செய்தியும், வீரமாதேவி அவ்வப்போது அனுப்பும் செய்திகளும் அவர் முன் பல பிரச்னைகளை உருவாக்கின. தன் எண்ணத்தையும், முடிவுகளையும் பகிர்ந்து கலந்து ஆலோசிக்க அமைச்சர் குழுவினரை அவர் அழைத்து வரவில்லை. கங்கைக் கரைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் செல்கிறார். அவர் பயணத்தின் நோக்கம் புனித யாத்திரை என்றே வெளி உலகிற்குப் புலப்பட்டது. ஆனால் வேற்று நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும் அளவிற்கு வீரர்களும், போர்க் கலன்களும் அவர் பயணத்தில் இருந்தன.

ஆயிரக்கணக்கான வீரர்கள் அவருடன் செல்லக் காரணம் என்ன என்று அறிய சாளுக்கிய ஒற்றர்கள் முயன்றனர். கங்கைக் கரைக்குச் செல்லும்போது சக்கரக்



கோட்டம், தண்டபுத்தி, ஒட்டரம், கலிங்க நாடுகளைக் கடந்து செல்லும்போது அந்த நாட்டரசர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் - அதற்காகப் படைகள், இராசராசனுடன் செல்கின்றன என்றே ஒற்றர்கள் அறிந்து சாளுக்கிய நாட்டிற்குச் செய்தி அனுப்பினார்கள்.

கோதாவரிக் கரையில், ஆற்றின் அழகை ரசித்தவாறு நேரம் போவதே தெரியாமல் இருக்கும் அரசன் அருகேயே பஞ்சவன் மாதேவி மௌனமாக ஒருநாள் இருந்தாள். இரு நாள்கள் வீற்றிருந்தாள்.

ஒரு நாள் மாலை வேளை, கோதாவரியில் கதிரவன் மூழ்கி மறையும் நேரத்தில் அரசர் இருக்குமிடம் வந்தாள். அவளுடன், வீணை மீட்டுவதில் திறமை வாய்ந்த மங்கையும் வந்திருந்தாள். காலில் சதங்கை கட்டிய அழகிய பெண் ஒருத்தியும் வந்தாள்.

கோதாவரி நதியின் மேற்றிசையில் கதிரவன் நீராடி மறையும் அழகை ரசித்தவாறு இருந்த இராசேந்திரன், வீணை மீட்டும் ஒலி கேட்டுத் திகைத்துத் திரும்பினார்.

பஞ்சவன் மாதேவி அவர் அருகே வந்தமர்ந்தாள். வீணை மீட்டுபவளையும், நடனப் பெண்ணையும் காட்டி, ''இவர்கள் எல்லாம் எதற்காக? ஏன் இங்கே அழைத்து வந்தாய்?'' என்று புருவம் உயர்த்திக் கேட்டார் அரசர். பட்டத்தரசி பஞ்சவன் மாதேவி அவர் இருக்குமிடம் வந்து நான்கு நாள்களாகிவிட்டன. ஒருநாள்கூட அவளுடன் அமைதியாக அமர்ந்து அந்தரங்கமாக உரையாடவில்லை என்பதையும் அவர் அறிவார்.

நின்று கொண்டிருக்கும் பஞ்சவன் மாதேவியின் பாதாதி கேசம் முடிய அவர் விழிகளைப் படரவிட்டார்.

மாலைப் பொழுதின் மங்கிய ஒளியில் தன்னை வைத்த விழி வாங்காது நோக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட பஞ்சவன் மாதேவி நாணமுற்றாள். மேனியெங்கும் முதுமை கொடி படர்ந்திருந்தாலும் பழுவேட்டரையர் குலத்துக்குரிய இயற்கையான கம்பீரம் அரசியாரிட மிருந்து மறையவில்லை. விழிகளுக்குக் கீழே தேங்கி யிருந்த சுருக்கம், இளமையில் தாம் எப்படியெல்லாம் இராசேந்திரனைக் கவர்ந்திழுக்கும் சக்தி படைத் திருந்தோம் என்று நினைத்துக் கொண்டது. கடைவாய்ப் பற்கள் சில தங்கள் உறவை விட்டுப் பிரிந்து, தாங்கள் வாழ்ந்த இடத்தை நிரூபிக்க அடையாளம் விட்டுச் சென்றதால் ஒரு காலத்தில் செழுமையாயிருந்த கன்னங் கள் சோபை இழந்திருந்தன.

அந்த முதிய பருவத்திலும் அரசர் தன்னைப் பாதம் முதல் முடி வரை நோக்குவதைக் கண்டு நாணமுற்று, மெல்லத் தலை குனிந்தாள், பஞ்சவன்மாதேவி.

இராசேந்திரன் அவளைப் பார்த்து மெல்ல நகைத்து, ''தேவி, ஏன் நிற்கிறாய்? இப்படி உட்காரலாமே. அதோ பார். மேற்றிசையில் சூரியன் செங்கோணமாய், திருமால் கைச் சக்கரம் போல் சுழன்றுகொண்டு மறைய விரைவதை'' என்றார்.

பஞ்சவன் மாதேவி தொண்டையைக் .கனைத்துக் கொண்டு, ''தங்களைத் தேடி நான் வந்திருப்பதும், நினை வில்லாமல் சூரியன் உதயமாவதையும், மறைவதையும் பார்த்து மகிழ்ந்தவாறு இருக்கிறீர்கள். அதற்குக் கோதாவரிக் கரைக்கு வரவேண்டுமா? காவிரிக் கரையி லில்லாத சூரியோதயமா?''



மெல்ல நகைத்து, தலைகுனிந்தவாறு இருக்க வேண்டும் என்று எண்ணியவள், தன் உள்ளத்துள் குமுறிக் கொண்டு இருப்பதை மேலும் தொடர்ந்து வெளிப்படுத்த முயன்றாள்.

இராசேந்திரன், பஞ்சவன்மாதேவியைத் திரும்பிப் பார்த்தார். மெல்ல நகைத்தவாறு ''நீ வந்திருப்பதை நினைவு படுத்த வீணையும், நாட்டியமும் வேண்டுமா?'' என்று கேட்டார், அவர்களை உடனே போகச் சொல்லு என்பதை மறைமுகமாகப் புலப்படுத்த.

பஞ்சவன்மாதேவி புரிந்துகொள்ளவில்லை. ''நடனம் என்றால் உங்களுக்குப் பிடிக்குமே என்றுதான் நடன மாதை என்னுடன் அழைத்து வந்தேன். தேவாரப் பாடல்களை நீங்கள் விரும்புவீர்கள் என்பதும் தெரியும். மிக நல்ல வீணையைத் தடவி மீட்டி - அதற்கேற்ப ஆடப்படும் நடனம் தங்கள் மனத்தைக் கவரும் என்பதும் எனக்குத் தெரியாதா?'' என்று கூறிச் சற்று நிறுத்தினாள். விழிகள் அரசரின் முகத்தை ஆராயச் சுழன்றன.

இராசேந்திரன் அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்து ''தேவிக்கு இப்போதாவது இசை நாட்டியத்தின் மீது மதிப்பு ஏற்பட்டதே! தன் பிரியமானவருக்குப் பிடித்ததைத் தானும் பிடித்ததாகக் கொள்ளவேண்டும் என்பதை உணர பலகாத தூரம் கடந்து கோதாவரி நதிக்கரைக்கு வரவேண்டியதாயிற்று பார்த்தாயா?'' என்றார்.

அவர் பேசியதில் புதைந்து இருக்கும் மறைபொருளை உணராத பஞ்சவன்மாதவி, ''எனக்கும் கலைகளில் விருப்பம் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால்

தங்கள் மனத்தைக் கவரும் இளம் வயதை நாம் விரும்பிப் பெறமுடியுமா?'' என்றாள்.

பேச்சின் திசைமாறி, தேவிக்கு மீண்டும் வருத்தத்தை வரவழைக்கக் கூடாது என்பதற்காக, இராசேந்திரன் மகிழ்ச்சி நிறைந்த குரலில், ''தேவி! இளமையைப் பற்றி இப்போது ஏன் நினைக்கிறாய்? உனக்கு மட்டும்தானா? எனக்கும் இளமை மீண்டும் வரப்போகிறதா? உன்னை முதன்முதலில் சந்தித்த அதே இனிய நினைவுகள் போதும். போர்க்களங்களில் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தேனே - அதை நினைத்து மகிழ்வதா - வருத்தப்படுவதா? மகிழ்வது எதற்காக என்று கேட் கிறாயா? இளம் பருவத்தில் பெரும் வெற்றிகளைப் பெற்றதால் எட்டுத்திக்கும் என்னைப் புகழ்கிறது. வீரனாக வாழாமல் இளமை உல்லாசத்தில் மோகக் கடலில் மூழ்கியிருந்தால் சோழ நாட்டிற்கோ எனக்கோ புகழும் பெருமையும் கிடைத்திருக்குமா? இளமை முழுவதுமாக நம்மிடமிருந்து மறைந்து விட்டது என நினைக் கிறாயா, தேவி?'' இராசேந்திரன் கேட்டுவிட்டு, நடனப் பெண்ணையும், வீணை மீட்ட வந்திருப்பவளையும் அங்கிருந்து போய்விடுமாறு சைகை காட்டினார்.

அரசர் அந்தரங்கமாக பேச விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்ட பஞ்சவன்மாதேவியும், அரசர் விருப்பத்தை ஆமோதிப்பவள் போல் அவர்களைப் போகுமாறு கூறித் த லையசைத்தாள்.

மனக் குறையை யெல்லாம் பேச நினைத்து முடியாத தால் பஞ்சவன் மாதேவிக்குத் துக்கம் நெஞ்சை வந்து முட்டியது. 'இருவருக்கும் முதுமை வந்துவிட்டது.



நானும் வயதைப் பற்றி எப்போதும் நினைத்துப் பார்ப்பதில்லை. நீங்களும் நினைத்துப் பார்ப்பதில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், மற்றவர்கள் தங்களைப் பற்றி அவ்வாறு நினைப்பதில்லை. அதனால் தானே, தங்களை வீரம்மாள் மயக்கிவிட்டாள்?'

மனத்தில் குமுறிய இந்த எண்ணத்தை வார்த்தை களாகக் கொட்டிவிட எண்ணினாள். ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது.

அரசர் தன்னுடன் தனியே பேச விரும்பும் இந்தப் போதில், நாதபேதம் ஏற்படுத்தி விடக்கூடாது என்பத னால் அவள் மௌனமானாள். அது கரைந்து கண்ணீராகப் பொங்கியது. துக்கத்தை அடக்க முயன்றாள். அது விம்மலாக வெளிவந்தது.

''தேவி! தேவி! ஏன் அழுகிறாய்? என்ன நேர்ந்தது உனக்கு? நல்ல வேளையாக நடனப் பெண்ணையும் வீணை வாசிப்பவளையும் இங்கிருந்து அனுப்பி விட்டேன்! அவர்கள் இங்கு இருந்திருந்தால் என்ன நினைப்பார்கள்? சோழ அரசி அழலாமா? மண்ணில் கண்ணீர் சிந்தலாமா?'' என்று கூறி தேவியின் கரங்களைத் தன் கரங்களுடன் பிணைத்துக் கொண்டார். பிறகு ஆதரவாக அவள் கூந்தலையும், முதுகையும் வருடினார். விழிநீரைத் துடைத்தார்.

பரந்த திண்தோள் வீரரான சோழ சக்கரவர்த்தியின் கரம் பட்டவுடன், அவள் உடல் சிலிர்த்தது. இவ்வளவு ஆண்டுகளில் உணர்ந்திராத ஒரு சிலிர்ப்பு அவள் மேனியெங்கும் மின்னல் வெட்டைப் போல் பாய்ந்து பரவியது.





அந்தக் கணம் பஞ்சவன் மாதவி வானில் பறப்பது போன்ற உணர்வை அடைந்தாள். இதுவரையில் அவள் நெஞ்சை அழுத்தியிருந்த சுமை திடீரென இறங்கி விட்டதுபோல் உணர்ந்தாள்.

'இவருக்கா, நம்மிடம் அன்பு குறைந்து விட்டது என்று நினைத்தோம்? இவரா, இளம்பெண்ணின் மாயையில் சிக்கி, நம்மை வெறுத்து, அரசி என்ற நிலையிலிருந்து நம்மை இறக்கி அந்த இடத்தில் நடனப் பெண்ணை அமர்த்திடப் போவதாக எண்ணினோம்?



வீரம்மாள் வந்ததால் நம்மை அரசர் மறந்துவிட்டு, நம் மதிப்பு குறையுமாறு செய்துவிடுவார் என்று கற்பனை செய்து கொண்டோம்? அடடா, அதற்காகவா கலைக் கோயில் எழாதவாறு தடுக்க முயன்றோம்?

அவள் விழிகளில் தேங்கி நின்ற கடைசி சொட்டுக் கண்ணீரையும், அரசரின் மேலாடை துடைத்தது. ''தேவி! நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. கங்கை நதிக் கரைக்குச் சென்று உன் கரம் பற்றி உன்னுடன் இணைந்து நீராட நினைத்தேன். அந்த எண்ணம் ஈடேறாது போல் தோன்றுகிறது. அடுத்து என்ன செய்வது போன்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். இரண்டு நாள்களாக அதே சிந்தனை. அப்பப்பா! பழை யாறையிலிருந்து வடக்கே பயணம் வருவது எளிதன்று என்பது எனக்குத் தெரியாதா? பயணம் சுகமாக இருந்ததா? கிருஷ்ணை ஆற்றங்கரை வரையில் நம் பிரதிநிதிகள் ஆங்காங்கே வந்து உன்னைக் கண்டு வணங்கியிருப்பார்களே! உனக்கு எந்தவிதக் குறையும் ஏற்படாமல் பார்த்திருப்பார்களே! நான் இப்போது தான் பயணக் களைப்பை உணர்கிறேன். தொடர்ந்து, இலட் சியம் நிறைவேறப் பயணம் செய்து கொண்டிருந்தால் களைப்பும் சோர்வும் ஏற்பட்டிருக்காது'' என்று கூறிச் சற்று அமைதியானார்.

''தேவி! முன் யோசனையுடன் படை வீரர்களை அழைத்து வந்தது இப்போது பயன் உடையதாய் இருக்கிறது. நம் வீரர்கள் வடகிழக்கிலும், வடமேற்கிலு மாகப் பிரிந்து செல்லும் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. சாளுக்கியர்கள் கொட்டம் ஒடுங்கி அவர்கள் அமைதியாகி விட்டார்கள் என்று எண்ணியது எவ்வளவு தவறாகி விட்டது? என் தந்தையின் கடைசிக் கால சூளுரையை



இப்போது எண்ணிப் பார்க்கிறேன். சாளுக்கிய நாடென்று ஒரு நாடே இல்லாமல் அப்போதே செய்திருந்தால் இப்போது கவலைப்படுமாறு நேர்ந்திருக்காது. ஹூம்...'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார் இராசேந்திரன்.

பஞ்சவன் மாதேவிக்குச் சோழ நாட்டு அரசியல் ஓரளவிற்குத் தெரியும். சாளுக்கியர்களுடன், தன் மாமனார் சக்கரவர்த்தி இராசராசன் பலமுறை பெரும் போர் நடத்தி வெற்றி வாகை சூடியதை அவள் அறிவாள். அந்தப் போர்களில் பலமுறை தன் கணவர், இராசேந்திர சோழன் பங்கு கொண்டு வெற்றி பெற்றதும் பெரும் புகழ் எய்தியதும் அவள் அறிவாள். சோழர்களுக்கு விரோதி யாருமிலர். எதிர்த்துப் போரிட நினைப்பவர்கள் யாரு மில்லை. இனி அமைதி அமைதி அமைதிதான் என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கும்போது, கோதாவரி நதிக்கரையில் அமைதியாக உரையாட வந்தவேளையில் சோழ சக்கரவர்த்தி சாளுக்கியர்களைப் பற்றிக் கவலைப் படுகிறாரே-

''தேவி! சாளுக்கிய அரசன் சத்தியாச்ரயனுடன் போரிட்டு நான் வெற்றியடைந்ததை நீ அறிந்திருக்கலாம். அவன் ஆண் வாரிசின்றி இறந்தான். அப்பொழுதே சோழப் பிரதிநிதியை அங்கே நிலை நிறுத்தி சோழ நாட்டின் ஒரு பகுதியாக அந்த நாட்டை மாற்றியிருக்க வேண்டும். ஏனோ தந்தை தடுத்தார். 'எதிரிகளை வெல்ல வேண்டும் என்பதே நம் இலட்சியம். நாட்டை ஆக்ரமிப்பதன்று' என்று அறிவுரை கூறினார்.

''வாரிசு இல்லாத சாளுக்கிய நாட்டில் அடுத்து அரியணை ஏறப்போவது யார் என்று வாரிசுப் போர் ஏற்பட்டுக் குழப்பம் நிலவும்; அப்போது நாம் தலையிட லாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் சத்தியாச்ரயனின்

உடன் பிறந்தான் தசவருமனின் மகன் விக்கிரமாதித்தியன் முடிசூடிக் கொண்டான். நாட்டை ஆளும் வலிமை அவனுக்கு இல்லை என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அதற்கு ஏற்றவாறு முடி சூடிக்கொண்ட நான்கு ஆண்டுகளிலேயே அவன் இறந்தான். அதுதான் சரியான தருணம். கீழைச் சாளுக்கிய நாட்டுடன், மேலைச் சாளுக்கிய நாட்டையும் ஒன்று சேர்த்து விட வேண்டும் என்று எண்ணினேன்.

''நான் கோதாவரி ஆற்றங்கரைக்கு வந்த பிறகுதான் சில செய்திகளை முழுமையாக அறிந்தேன். விக்கிரமாதித்தியனுக்குப் பிறகு அவன் மகன் ஜெயசிங்கன் பட்டமேறினான். ஆட்சியைத் தொடங்கும்போதே நம் மீது விரோத எண்ணத்துடன் தொடங்கினான். அவன் நம்மை எதிர்க்கப் பெருந் திட்டமிடுகிறான் என்பதை அறிகிறேன். அவனால் நமக்குப் பெரும் தொல்லை வரப்போகிறது என்று இப்போது உணர்கிறேன். அவன் வேங்கியில் நுழையப் பார்க்கிறான். கீழைச் சாளுக்கிய நாட்டைத் தன் நாட்டுடன்' சேர்க்கப் பார்க்கிறான். விமலாதித்தன் சக்தி குறைந்திருக்கும் நிலையில் ஜெயசிங்கன் எண்ணம் எளிதில் நிறைவேறலாம். நாம் கங்கைக் கரைக்குச் செல்லப்போவதை அறிந்து அவன் நேரே நம்மிடம் மோதாமல் நாம் செல்லும் வழியிலுள்ள ஒட்டரர்களையும் கலிங்கரையும் நம்மை எதிர்க்கத் தூண்டுகிறான். எப்பாடுபட்டாவது என்னைச் சிறைப் பிடித்து விடவேண்டும் என்பதும் அவனது ரகசியத் திட்டமாம்!'' என்று கூறிப் பெரிதாக நகைத்தார் இராசேந்திரன்.

அரசன் இவ்வாறு நகைத்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை, பஞ்சவன் மாதேவி அறிவாள்.



அரசரின் உள்ளத்தில் இதுவரை அடக்கி வைக்கப் பட்டிருந்த சீற்றம் சிரிப்பாகப் பொங்கியிருக்கிறது என்பதையும் அறிவாள்.

''தேவி! இவை எல்லாம் ஒரு பக்கமிருக்கட்டும். நம் படைவீரர்கள் இதற்கெல்லாம் அஞ்சாதவர்கள். அவர்களுக்கு வழிகாட்டி நடத்திச் செல்லும் தளபதி அரையன் இராசராசன், வீரமும், தீரமும், புத்திக் கூர்மையும் உடையவன். அவன் இருக்கும் வரையில் ஜெயசிங்கன் கனவு, கனவுதான். ஆனால், பெரும் ஆபத்து மற்றொன்று காத்திருக்கிறது. வீட்டினுள்ளே கொடிய நாகம் புகுந்தது போல் மேற்கே ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

''கங்கை மாநதியைப் போல மேற்கே சிந்து நதி என்ற நதி- காவிரி, கோதாவரி மகாநதி, கங்கை, பிரம்மபுத்ரா போன்று மிகப் பெரிய நதி மட்டுமன்று; புண்ணிய நதியுங்கூட. எனக்கோர் ஆசை உள்ளத்தின் ஒரு மூலையில் இருக்கிறது. கங்கையில் நீராடுவது போல், சிந்து நதியிலும் நீராடி மகிழ வேண்டும். மேற்குக் கடற்கரையில் கிருஷ்ணபிரான் வாழ்ந்த நாட்டிற்கும் சென்று அங்குள்ள பழைமையான கோயிலைக் கண்டுவர வேண்டும் என்பதே அந்த எண்ணம். ஆடவல்லான் அருளால் நீண்ட ஆயுள் இருந்தால் அந்த எண்ணம் நடைபெறாமலா போகப் போகிறது? ஆனால், சிந்துநதி பாயும் இடங்களுக்கு அருகிலுள்ள நாடுகளுக்குப் பெரும் ஆபத்து வந்திருக்கிறதாம். கஜினி முகமது என்றோர் அரசன் இமயமலையைத் தாண்டி இந்த நாட்டிற்குள் நுழைந்திருக்கிறானாம். வேற்றுச் சமயத்தினரான அவனுக்கு நம் நாட்டுப் பொன்னின் மீதும் பொருளின் மீதும் பேராசை. வடக்கே உள்ள நாட்டை எல்லாம்

கைப்பற்றும் பேராசையுடனும், பெரும் வெறியுடனும், ஏராளமான போர் வீரர்களுடனும் அவன் சிந்துநதியின் கரைகளிலுள்ள நாடுகளின் மீது ஒருமுறை படை எடுத்த பொழுது, அம்முயற்சி வெற்றியடையாமல் மீண்டும் வரப்போவதாகக் கேள்வி. ஏராளமான படை வீரர்கள் வலிமையும் அவர்களது தோள்வலிமையும், வாள் வலிமையும் கொண்டு பாய்ந்து வரும் அவனைத் தடுத்து நிறுத்தாவிடில் எல்லா அரசர்களுக்கும் ஆபத்து அல்லவா? இதை உணர்ந்து வட மேற்கு நாட்டு அரசர்கள் சிலர் நம் உதவி நாடி வரப்போவதாகச் செய்திவந்துள்ளது. அவர்கள் தெற்கே தொலைதூரத்திற்கு தஞ்சைபுரிக்கு வர வேண்டுமே என்ற கவலையுடன் இருந்தபோது, கங்கை நீராட நாம் வரபோகும் செய்தி அறிந்து, மகிழ்வுற்று என்னைச் சந்திக்க வரப்போகிறார்கள்.

''ஒவ்வொரு நாளும் அவர்களை எதிர்பார்த்து நான் காத்திருக்கிறேன். அவர்களுக்கு உதவ படைவீரர்களை அனுப்ப ஆயத்தமாக இருக்கிறேன். தேவைப்பட்டால் நானே போகலாம் என்ற எண்ணம்'' என்று கூறி அவர் பேச்சை நிறுத்தியபோது பஞ்சவன் மாதேவி கவலையடைந்தாள். ''கங்கை நீராடச் செல்லாமல் என்னை இங்கே தங்குமாறு கூறிச் செல்லப்போகிறாரா? அல்லது பழையாறைக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிடப் போகிறாரா? புதிதாகக் கட்டப்படும் கோயிலின் குடமுழுக்கின் நாளைத் தள்ளிப் போட்டால், கருவூரார் கோபமுற்று பொதிகை மலைக்குச் சென்று விடமாட்டாரா? பஞ்சவன்மாதேவிக்கு எதைப் பற்றியும் சிந்திக்கத் தோன்றவில்லை. நாமும், சக்கரவர்த்திகள் செல்லும் இடமெங்கும் செல்வோம்' என்று எண்ணினால் கோயில்



குடமுழுக்கைத் தள்ளிப் போடட்டுமே! கருவூரார் பொதிகைக்குச் செல்லட்டுமே! வீரமாதேவியின் எண்ணத்தில் மண் விழட்டுமே! எல்லாம் இறைவன் செயல்'' என்று எண்ணி இறைவனைத் துதிக்கக் கண்களை மூடிக் கொண்டாள்.

அந்தப்போதில், பணியாள் ஒருவன் வந்து மரியாதையும் பயமும் சேர வணங்கி செவியருகே ஏதோ கூறினான்.

இராசேந்திர சோழர் நிமிர்ந்து உட்கார்ந்தார். கோதாவரி நதியைக் கூர்ந்து கவனித்தார்.

நான்கு படகுகள் வந்து கொண்டிருந்தன. படகுகளின் மீது அமைதிக் கொடியான வெள்ளைக் கொடி பறந்து கொண்டிருந்தது.

மேற்குத் திசை நாட்டினின்று உதவி கேட்க வருகிறார்கள், போலும்! என்று எண்ணினார் இராசேந்திர சோழர்.





## 73. தீர்த்த யாத்திரையா? திடீர்ப் படையெடுப்பா?

இரண்டு நாள்களாக வீரமாதேவியின் மனம், பெரும் காற்றில் சிக்கிய தீபம் போல் நிலைகொள்ளாமல் தவித்தது. வடக்கே இராசேந்திர சோழ தேவரிடமிருந்து செய்தி ஏதும் வரவில்லை. கருவூர்ச் சித்தர் சொற்படி அரிந்தவன்மாதேவியின் உடல்நலம் சீர் கெட்டிருக்கும் செய்தியைத் தெரிவிக்காது இருந்தாள். அவள் ஓலை எழுதாவிடில் என்ன - பழையாறையிலிருந்து செய்தி அரசரைச் சென்றடைந்திருக்காதா? அவ்வாறு மற்றவரால் அனுப்பப்பட்ட செய்தி கிடைத்து, நான் எழுதாது இருந்துவிட்டதற்காக சக்கரவர்த்திக்கு என்மீது வருத்தம் ஏற்பட்டிருந்தால், வேண்டுமென்றே நான் அரிந்தவன் மாதேவியின் உடல்நிலையைக் குறித்து எழுதாது மறைத்துவிட்டேன் என்று நினைத்துவிட்டால்...?

புதிய நகரம் மிக வேகமாக உருவாகி வருவதையும், வீடுகள் கட்டப்படுவதையும், மாளிகைகள் அமைவதற்காக கடைக்கால் தோண்டப்படுவதையும், பெரிய



கோயிலைச் சுற்றி கற்பாறைகளால் மதிற் சுவர் கட்டும் பணி தொடங்கப்பட்டிருப்பதையும், பரந்து விரிந்திருக்கும் நீள அகலமுடைய ஏரி வெட்டப்பட்டு, அதனின்று அகழ்ந்து எடுக்கப்பட்ட மண், பள்ளமான பகுதியை நிரப்ப வண்டிகளில் சென்ற வண்ணமாக இருப்பதையும் பார்ப்பதற்குப் பல குறுநில மன்னர்கள் வந்தனர். சோழ நாட்டுப் பிரமுகர்கள் வந்தனர். புதிய நகரம், புதிய கோயில், பெரிய ஏரி, சாலைகள், வீதிகள் போன்ற வியக்கத்தக்க பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காண வருபவர்கள் வீரமாதேவியையும் காணாமல் செல்வதில்லை.

இராசேந்திர சோழ தேவரின் அபிமானத்தைப் பெற்றவள், இளவரசியருள் மிக முக்கியம் வாய்ந்தவள் வீரமாதேவி என்பதை அனைவரும் அறிவார்கள். குறிப்பாக சோழ நாட்டு அதிகாரிகள், மலையமான், வேளிர் போன்ற குறுநில மன்னர்கள் அறிவார்கள்.

அன்று வீரமாதேவியைக் காண வந்தவருள் இருவர் மிக முக்கியமானவர்கள். அவர்கள் சோழ நாட்டின் மீதும் சோழர் குலத்தின் மீதும் மிகுந்த மரியாதையும் விசுவாசமும் கொண்டவர்கள்.

வீரமாதேவியின் சொற்படியே இராசேந்திர சோழ தேவர் முடிவெடுக்கிறார் என்ற எண்ணம் அவர்களுக்குச் சற்று எரிச்சலை அளித்திருந்தது. குறிப்பாக தஞ்சைபுரியிலிருந்து தலைநகரை மாற்றுவதற்காகப் புதிய நகரத்தை உருவாக்கி அங்கே பெரும் கோயில் எழுப்பி தஞ்சைபுரியின் பெருமையைக் குறைக்கச் செய்யத் திட்டமிட்டதற்கு, வீரமாதேவி பெரும் காரணம் என்பதாக முடிவு செய்திருந்தவர்களுள், படைத்தலைவர்களுள் ஒருவரான

இராசராச பிரும்ம மகாராசாவும் மலையமான் பராந்தகன் யாதவீமனும் முக்கியமானவர்கள்.

அவர்கள் இருவரும் புதிதாக வெட்டப்படும் ஏரிக்கரையில் சந்தித்துக் கொண்டனர். பெரும் காட்டை அழித்து ஏரியாக மாற்றும் பணி அசுர வேகத்தில் நடைபெறுவதை குதிரை மீதிருந்தே கண்டு வியந்த இருவரும், பெருமூச்சு விட்டவாறு மரநிழலில் ஓய்வாக நின்றனர்.

அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிப் பல ஆண்டுகளாகி விட்டபடியால் சற்று நேரம் இருவரும் மௌனமாகப் பார்த்தவாறு முதலில் யார் பேசுவது என்று தயங்கி நின்றனர்.

''வீரநாராயணப் பேரேறிக்குப் பிறகு மற்றொரு சமுத்திரம் இந்த ஏரி'' என்று பேச்சைத் தொடங்கினார் மிலாடுடையார்.

அவர் முன்னோர்கள் சோழர்களுடன் மணவினைத் தொடர்புடையவர்கள்.

''ஆமாம், ஆமாம். என் பாட்டனார் காலத்தில் வீர நாராயணபுர ஏரி வெட்டப்பட்டதாகச் சொல்வார்கள்'' என்றார் இராசராச பிரம்மராயர்.

''என் தந்தை காலத்தில் வெட்டப்பட்டது வீர நாராயணஏரி. எங்கள் குடும்பத்தில் பெண் எடுத்த காலம் முதல் சோழ நாட்டில் எந்தக் காரியமும் எனக்குத் தெரியாமல் நடந்ததேயில்லை. இப்போது சோழ சக்கர வர்த்திகள் முற்றிலும் மாறிவிட்டார்.''

மலையமான் வம்சத்தவர் என்பதைப் புரிந்து கொண்ட பிரம்மராயர், மரியாதை தெரிவிப்பதற்காக மட்டுமல்லா



மல், வியர்வையைத் துடைத்துக் கொள்வதற்காகவும் தன் தலைப் பாகையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டார்.

''மிலாடுடையாரைச் சந்தித்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நம் பெரிய சக்கரவர்த்தி மரணமடைந்த போது எனக்குக் முக்கியமான பணிகள் அளிக்கப் பட்டிருந்த படியால், மிலாடுடையாரை நெருங்கிப் பேச முடியாது போயிற்று. உடல்நலமாயிருக்கிறீர்களா? திருக் கோவலூரிலிருந்து இப்போதுதான் வருகிறீர்களா? தஞ்சைபுரி போயிருந்தீர்களா? பழையாறைக்குச் சென்றி ருந்தீர்களா?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு அவர் நலன் விசாரித்தார்.

''ஓ! இராசராச பிரம்ம மகாராசர்தானே? தங்கள் வீரப் பிரதாபங்களைக் கேட்டறிந்திருக்கிறேன். உங்கள் வீர மறிந்து படைத் தலைமை ஏற்கும் பொறுப்பை இரா சேந்திர சோழ சக்கரவர்த்தி அளித்திருக்கும் செய்தியையும் நான் அறிவேன். தாங்கள் இங்கேயே இருப்பவர்கள். எனவே, இங்கு நடப்பவை எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆனால், எனக்கு எந்தச் செய்தியும் எட்டுவ தில்லையே.

இராசேந்திர சக்கரவர்த்தி தஞ்சையையும் மறந்து, பழையாறையையும் பிடிக்காமல் இப்படி ஒரு வனப் பகுதியில் நகரத்தை நிர்மாணிக்கிறார் என்ற செய்தி எனக்குத் தெரியவில்லை. சோழ நாட்டினின்று நான் வெகு தொலைவில் சென்று விட்டேனோ என்ற எண்ணம் தோன்றுகிறது'' என்று வருத்தத்துடன் கூறினார்.

இராசராச பிரம்மராயரும் தன் பங்கிற்கு மனத்தில் அடக்கி வைத்திருந்ததைக் கூறினார்.

"வட திசைக்குச் சக்கரவர்த்தி புனித நீராடச் செல்கிறார், என்று செய்தி தெரிவிக்கப்பட்டது. தீர்த்த யாத்திரை என்றால் என்னை அரசர் அழைத்திருக்கலாம். அருண்மொழி என்ற இளம் வயதினனை அழைத்துச் சென்றிருக்கிறார். தீர்த்த யாத்திரையா? இல்லை இல்லை. மறைமுகமாக வேறு ஏதோ போர் நடத்தப் போகிறார். நான் என்ன குற்றம் செய்தேன்? யாரிடம் கேட்பேன்?





சக்கரவர்த்தியின் திருக்குமாரர்கள் தங்களுக்கு ஏதும் தெரியாது எனக் கைவிரித்துவிட்டனர். மிலாடுடையாரே!

தேவநேயப் பாவ
மாவட்ட மைய நூ
சென்னை - 600



என்னதான் இருந்தாலும் நான் படைத் தலைவருள் ஒருவர்தான். தாங்களோபரம்பரைப் புகழ்பெற்ற மன்னர். சக்கரவர்த்திகளிடமும், சோழகுலத்துடனும் நெருங்கிய தொடர்புள்ளவர். எந்தக் கணத்திலும் தாங்கள் அரசரைச் சந்தித்து அந்தரங்கமாக உரையாடக்கூடிய உரிமை உடையவர்'' என்று தன் வேதனையைப் புலப்படுத்தினார்.

''ஆமாம், சக்கரவர்த்திகளுக்கு என்னிடம் மிகுந்த மரியாதை உண்டு. அவர் கலந்து கொள்ளும் போர்க்களங்களில் எல்லாம் நானும் உடன் செல்லத் தவறுவதில்லை. இந்த முறை அவர் ஏன் என்னை அழைக்காமல் சென்றுவிட்டார்? அதற்கு என்ன காரணம்? யார் காரணம்? அதை முதலில் கண்டறிய வேண்டும்'' என்று கூறிய மிலாடுடையார், குதிரையைத் தட்டிவிட்டு, ''இங்கு நிற்பதால் என்ன பயன்? வாருங்கள் போவோம்...இதற்கெல்லாம் யார் காரணம் என்று கண்டுபிடித்து விட்டேன்'' என்று கூறிப் புறப்பட்டார். இராசராச பிரம்மராயரும் அவரைப் பின் தொடர்ந்தார்.

யார் காரணம் என்று இவர் கண்டுபிடித்திருப்பார்? என்ற யோசனையில் அவர் மிலாடுடையாரைத் தொடர்ந்தார்.

பெரிய கோயில் நிர்மாணிக்கப்படும் இடத்திற்கு அருகே இன்னும் தம் பழைய நிலை மாறாதிருந்த, மரங்கள் அடர்ந்திருந்த, பகுதிக்குள் மிலாருடையார் செல்ல, இராசராச பிரம்மராயரும் அவரைத் தொடர்ந்தார்.

பர்ணசாலை போல் ஓலைகளாலும், மூங்கில்களாலும் கட்டப்பட்ட குடிலருகே சென்று குதிரையினின்று இறங்கினர்.



அந்தக் குடிலின் வாயிலில் பலர் நின்று கொண்டிருந்தனர். சீனவணிகர், நானா தேசியார், தொழிலாளர்கள், அதிகாரிகள் என்று வீரமாதேவியைக் காண நின்று கொண்டிருந்தனர். ஒவ்வொருவராகக் குடிலுக்குள் செல்வதும், விரைவில் தாம் வந்த பணியை முடித்துத் திரும்பி வருவதுமாக இருந்தனர்.

குடிலின் வாயில் அருகே நின்றிருந்த காவலருள் ஒருவன் மிலாடுடையாரை அடையாளம் கண்டு விரைந்து அவர் அருகே வந்து வணங்கி, ''உள்ளே சென்று இளவரசியாரிடம் செய்தி சொல்லி வரும் வரையில் இதோ அந்த இருக்கையில் அமர்ந்திருங்கள்'' என்று பணிவுடன் கூறி மரத்தடியில் இருந்த இருக்கையைச் சுட்டிக் காட்டினான். வெட்டப்பட்ட பெரும் மரத்தின் அடிப்பாகம், உட்கார வசதியாக ஆக்கப்பட்டிருந்தது.

''உம்... சோழ அரசிகள் பலரையும், இளவரசிகள் பலரையும் நான் கண்டிருக்கிறேன். மாளிகை வெளியே வரமாட்டார்கள். செம்பியன் மாதேவியாரையும், இளைய பிராட்டியாரையும் போல் மக்களோடு பழகும் ஆற்றல் கொண்டவளாக வீரமாதேவி விளங்குகிறாள். பெருங்காட்டை அழித்து பெரிய நகரத்தை உருவாக்கும் ஆற்றல் படைத்திருக்கும் வீரமாதேவியைக் காண பல்வேறு இனத்தவர்கள் காத்திருப்பதில் அதிசயமில்லை. அரசரையும் வழி நடத்திச் செல்லும் ஆற்றல் அவளிடமிருக்கிறது என்பதில் வியப்பில்லை. வட திசைக்கு அரசர் செல்லும் போது இன்னார் இன்னார்தான் செல்ல வேண்டும் என்று யோசனை சொல்லியிருப்பவள் இவள்தான்'' என்று கூறிச், சற்று நிறுத்திய அவர், சற்றுக் கோபத்துடன், ''என்னைத் தவிர்த்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும்? நேருக்கு

நேர் சந்தித்து நான் ஒரே கேள்வி கேட்டு விட்டுப் போய் விடுகிறேன்'' என்று கூறியவர், மறுகணம், ''இந்தக் காவல்காரன் போய்ச் சொன்னவுடன், நான் வந்திருப்பது தெரிந்து என்னைச் சந்திக்க அவள் விரும்பாமல் இருக்கலாம்'' என்றும் சொல்லிக் கொண்டார். ''அப்படி அவள் என்னை அலட்சியப்படுத்தி அழைக்காமல் இருந்தால், நான் காவல் தடையை மீறி புயல் போல் உள்ளே புகுவேன்'' என்றார்.

அவர் சொல்லி வாய்மூடும் முன்பாக அந்தக் குடிலுக்கு வெளியே பரபரப்பு ஏற்பட்டது. கூட்டமாக இருந்தவர்கள் திடீரென்று ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். அங்கிருந்தவர்கள் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள்.

வீரமாதேவி, வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்து, மரத்தடியில் அமர்ந்திருக்கும் மிலாடுடையாரை நோக்கி நடந்தாள். அவளைத் தொடர்ந்து அதிகாரிச்சியும், பணிப் பெண்களும் வந்தனர்.

கரம்கூப்பிய வீரமாதேவி மிலாடுடையாரைப் பார்த்து, ''வரவேண்டும், வரவேண்டும். வந்து அதிக நேரமாகிறதா? என்னைச் சந்திக்க உங்களுக்கு என்ன தடை? காவல்காரர் தங்களைத் தடுத்து விட்டார்களா? மிக முக்கியமானவர்களை உடனே சந்திக்க விரும்பி ஒவ்வொருவரையும் அழைத்துப் பேசி அனுப்புவதற்காக, நானிருக்கும் இடத்து வாயிலில் காவல் வீரனை நியமித்தோம். தங்களை அவன் நிறுத்திவிட்டானா? தடுத்துவிட்ட பிறகு வந்து சொல்கிறான் புத்தியில்லாதவன்'' என்று காவல்காரனைக் கடிந்து கொண்ட வீரமாதேவி, கூப்பிய கரத்தைத் தாழ்த்தாமல், மிலாடுடையாரைப் பேச



விடாமல், ''வாருங்கள், வாருங்கள், குடிலுக்குள்ளே செல்வோம்'' என்றழைத்தாள்.

இராசராச பிரம்மராயரும் மிலாடுடையாரும் திகைப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். வீரமாதேவி வழிகாட்டியவாறு முன் செல்ல, கம்பீரமாக மிலாடுடையாரும் இராசராச பிரம்மராயரும் தொடர்ந்தனர்.

திடீரென்று, ''மலையமான் வாழ்க வாழ்க! உத்தம சோழ மிலாடுடையார் பராந்தகன் யாதவவீமன் வாழ்க வாழ்க!'' என்று வாழ்த்துக் குரலொலி எழுந்தது. குறுநில மன்னர்களை மரியாதையுடன் வரவேற்கும் முழக்கங்கள் எழுந்தன.

வீரமாதேவி நேருக்கு நேர் சந்தித்தவுடனேயே அவர் உள்ளத்திலிருந்த கோபம் நீங்கியது; ஆத்திரம் அகன்றது. வடதேச யாத்திரையைப் பற்றி வீரமாதேவி விவரித்ததும், நிர்மாணிக்கப்படும் பெரிய கோயில், வெட்டப்படும் பெரிய ஏரி, கட்டப்படும் நகர வீடுகள், அரண்மனைகள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் கருத்துக் கூறி, அரசர் வடநாட்டிற்குச் சென்ற காரணத்தை விளக்கவும் மிலாடுடையார் பாகாக உருகிவிட்டார்.

கோதாவரிக் கரையில் அரசியும், அரசரும் வீற்றிருப்பதையும், சில மாதங்களாக செய்தி ஏதும் வராததால் தான் அடைந்திருக்கும் கவலையையும், கோயில் குடமுழுக்குக்கு நாள் குறிப்பிட்டுவிட்டதையும், கங்கை நீரால் விமானக் கும்பபத்தைத் திருமுழுக்காட்ட வேண்டிய அரசர் இலட்சியத்தையும், கருவறையில் ஆவுடையார் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருப்பதையும், இலிங்க

வடிவில் பெருவுடையார் உருவாவதையும் எடுத்துக் கூறி, ''நான் தன்னந் தனியாள் என்ன செய்வதெனத் தெரியாமல் திகைக்கிறேன். கங்கைக் கரைக்கு அரசர் சென்றாரா? கங்கையில் நீராடினாரா? கங்கை நீரை இவ்வளவு தொலைவு எவ்வாறு கொண்டு வரப் போகிறார் என்ற செய்தியெல்லாம் அறியாமல் கவலை நிறைந்தவளாக இருக்கிறேன். தங்களைப் போன்றவர்களின் வழிகாட்டு தலுக்கும், யோசனைக்கும் காத்திருக்கிறேன்'' என்றாள்.

மிலாடுடையார் மிகவும் இலேசாக வானத்தில் பறப்பது போன்ற நிலையில் இருந்தார். இராசராச பிரம்மராயர் விழிகளை மூடியவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அப்போது வீரர்கள் இருவர் சற்றுத் தொலைவில் வணங்கி நின்றனர். பல காத தொலைவு பயணம் செய்த களைப்புடன் காணப்பட்டனர். அரச முத்திரையிட்ட ஓலைச் சுருள் அவர்களிடமிருந்தது.

ஆவல் மிகுதியும், பரபரப்பும் ஒருசேர வீரமாதேவி ஓலைச் செய்தியைப் படித்தாள். படித்தவுடன் அதை மிலாடுடையாரிடம் நீட்டினாள். ''கோதாவரிக் கரையி லிருந்து சக்கரவர்த்திகள் எழுதியிருக்கிறார்கள்'' என்றாள்.

''அரசர் தங்களுக்கு எழுதியுள்ள அந்தரங்க ஓலையை நான் படிக்கலாமா? ஏதாவது முக்கியச் செய்தியிருந்தால் மட்டும் சொல்லுங்கள்'' என்றார்.

''இல்லை, இல்லை. தாங்கள் படிக்கலாம்'' என்ற வீரமா தேவி, ஓலையை அவரிடம் கொடுத்தாள்.

மிலாடுடையார் படித்தபின் பிரம்மராயரிடம் கொடுத் தார்.



மறுகணம் இருவரும் எழுந்தனர்.

''நான் நினைத்தது சரி. தீர்த்த யாத்திரை புனித நீராடல் இல்லை. அங்கே பெரும் போர் நடைபெறவிருக்கிறது. உடனே நாங்கள் புறப்படுகிறோம்'' என்றனர்.

மறுநாள் இராசராச பிரம்மராயரும், உத்தம சோழ மிலாடுடையாரும் ஐநூறுக்கும் குறையாத படை வீரர் களுடன், கோதாவரிக் கரையை நோக்கிப் பயணப் பட்டார்கள்.





## 74. மன்னனின் நோக்கமும் மாதேவியின் திட்டமும்

கோதாவரி நதிக்கரையில், கிழக்கே கதிரவன் உதிக்கும் அழகை ரசித்தவாறு இராசேந்திர சோழ தேவர் அமர்ந்திருந்தார். அவர் மனம் எப்போதுமில்லாத வகையில் அமைதியாக இருந்தது. அவர் அருகே பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவி அமர்ந்திருந்தாள்.

கடல் போன்ற கோதாவரி நதியில் சூரியோதயத்தைக் காண்பதில் பஞ்சவன் மாதேவிக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், அரசரைப் போன்று அந்தக் காட்சியிலேயே மனத்தை முழுமையும் ஈடுகொடுத்து மூழ்கி விட அவளால் முடியவில்லை.

மெல்லப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். மிக முக்கியமான சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் போது தான், அரசர் சுற்றுச் சூழலை மறந்து அமைதியாக யாருடனும் பேசாமல் இருப்பார்.

'என்னால் அவ்வாறு இருக்க முடியவில்லையே; மனத்தில் இருப்பதை யாரிடமாவது கொட்டித் தீர்க்கவே



தோன்றுகிறது. இவரால் எப்படி அமைதியாக இருக்க முடிகிறது?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

தேவாரப் பதிகங்களைப் பாடும் ஓதுவார்களை அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் தாளத்துடன் பாடினார்கள். ஒருமுறை திரும்பிப் பார்த்த அரசர், சிறிது நேரம் கழித்துப் பாடுவதை நிறுத்துமாறு சைகை செய்தார். அவர்களும் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

கதிரவன் மேலெழுந்து, கதிர்களைச் 'சுள்'ளென்று வீசத் தொடங்கியபோது, இராசேந்திரன் பஞ்சவன் மாதேவியின் பக்கம் திரும்பிப் புன்முறுவல் பூத்தார்.

'அப்பாடா, முனிவர் தவம் கலைந்தது!' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்ட தேவி, வெளியே கேட்கும் படியாகவும் சொன்னாள். இராசேந்திரன் அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

''முனிவராகும் பக்குவம் இன்னும் வரவில்லை தேவி! கொடிய பகைவரைக்கூட அடக்க முடிகிறது. ஆனால் மனம் எனும் உள் விரோதியை அடக்குவது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை. அடக்கியவுடன் ஏற்படும் அமைதி இருக்கிறதே, அதற்கு எல்லையே யில்லை. இங்கு வந்து பல நாள்கள் ஓடிவிட்டன. ஒவ்வொரு நாளும் என் மனம் அலைகடல் போல் கொந்தளிக்கும்...''

அரசர் சற்றுப் பேச்சை நிறுத்தியவுடன், அவரிடம் பேச வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்த அரசி, ''உங்கள் மனத்தில் கவலையும், குழப்பமும் ஏற்படக் காரணமே இல்லையே...'' என்று குறுக்கிட்டாள்.

''தெற்கே, பழையாறையில் என்ன நடக்கிறதோ என்ற கவலை இருக்கலாம். அங்கு ஒவ்வொரு நாளும்

நடைபெறும் நிகழ்ச்சியை அதிகாரிகள் அறிவித்துக் கொண்டிருக்கின்றனர். என்னை உடன் அழைத்து வராமலிருந்த கவலையும் தீர்ந்துவிட்டது. போர் நடத்தச் சென்றவர்களோ மாபெரும் வீரர்கள். வடக்கே இருந்து சில நாட்டரசர்கள் தங்களைத் தேடி வந்தனர். அதனால் புதிய கவலை ஏற்பட்டிருக்கலாம். அப்படித்தானே? அவர்களும் மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டனர். ஆனால், நான் நினைக் கிறேன் - உங்கள் மனத்திலுள்ள கவலை என்ன வென்றால்...'' பேச்சை நிறுத்தினாள்.

அரசரை நிமிர்ந்து நோக்கினாள். அரசரும் திரும்பி அவளைப் பார்த்தார்.

''என் மனத்திலுள்ள கவலை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

அரசர் மன நிலையைப் புரிந்து கொண்டாள் அரசி. எந்தவிதத் தடையுமின்றிப் பேசலாம். உரிமையுடனும் பேசலாம்.

''வீரர்களுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டது போர் புரிய அன்று; புனித யாத்திரைக்காக. அந்தத் தெளிவு தங்களிடமிருந்தது. ஆனால், வெளி உலகிற்குத் தெரியா வண்ணம், சில நாடுகளின் மீது படையெடுத்து சோழ நாட்டிற்கு உள்ள நிரந்தர விரோதிகளை வென்றுவிடும் எண்ணமும் உண்டு. அந்த எண்ணம் தங்கள் மனத்தில் பல சஞ்சலங்களை ஏற்படுத்தியிருக்கும். அவை ஒரு வகையில் தீர்க்கப்பட்ட பிறகு, கங்கையாற்றில் புனித நீராடச் செல்வதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினீர்கள். நான் அருகே இல்லாமல் புனிதச் சடங்குகளை நிறைவேற்றுவது முறையில்லை என்பதை உணர்ந்தீர்கள். என்னை வரவழைப்பதைப் பற்றிச் சிந்தித்தீர்கள். அதே போது, உங்கள் அபிமான வல்லியையும் உடன் அழைத்து



வருவதா, வேண்டாமா என்ற குழப்பம் ஏற்பட்டிருக்கும். நல்ல வேளையாக, தன்னால் வருவதற்கு இயலாது என்று அவள் சொல்லிவிட்டபடியால் என்னை மட்டும் அழைத்தீர்கள். என்னை இங்கே அழைத்ததன் மூலம் தங்களுக்கிருந்த மற்றொரு குழப்பமும் நீங்கியது'' என்று மனத்திலுள்ளதை ஒளிக்காமல் கூறிச் சற்று நிறுத்திய பஞ்சவன் மாதேவி, 'என்ன குழப்பம்?' என்று அரசர் வினவுவார் என்று எதிர்பார்த்தாள்.

அது போன்றே அவர், 'என்ன குழப்பம்?' என்று அரசர் கேட்டார். தேவி மேலும் தைரியத்துடன் பேசலானாள்.

''நான் பழையாறையிலிருந்தால், வீரமாதேவியின் பணிகளுக்கு இடையூறாக இருப்பேன். என்னை இங்கே அழைதது வந்து விட்டதால் அங்கே கோயிலும், ஏரியும் எவ்விதத் தடையுமின்றி மளமளவென்று வளர்கின்றன'' என்றாள்.

இராசேந்திரன் மெல்ல நகைத்தார். முதுமையால் துவண்டிருக்கும் பஞ்சவன் மாதேவியின் கரத்தை மெல்லத் தன் வலக்கரத்துடன் பிணைத்து, ''தேவி! நீயே சொல்லு. இவ்வளவு அமைதியாக, நெருக்கமாக நாம் இதுவரை அமர்ந்து பேச வாய்ப்பிருந்திருக்கிறதா?''

பஞ்சவன் மாதேவி மறுமொழி கூறவில்லை. ஏதாவது பேசி, அரசரின் மன நிலையில் மாறுதலை ஏற்படுத்தி விடக் கூடாது என்பதற்காகத் தலையை மட்டும் அசைத்தாள்.

''தஞ்சையிலும், பழையாறையிலும் இருக்கும்போது உனக்கும் மன சஞ்சலம் அதிகம் தானே?''

தேவி தலையை மட்டும் அசைத்தாள்.

''வீரமாதேவி வந்த பிறகு, வீணே நீ உன் மனத்தில் கவலையை வரவழைத்துக் கொண்டாய்.''

தலையை மட்டும் அசைத்தாள்.

''உன்னுடன் அரிந்தவன் தேவியும் சேர்ந்து கொண் டாள். பொறாமைத் தீர வளர அவளும் ஊதினாள். அதனால் மனத்தில் கவலை சூழ்ந்தது. அப்படித்தானே?''





பஞ்சவன் மாதேவி தலையை அசைக்கவில்லை.

'அது என்ன பொறாமைத் தீ என்று சொல்கிறார். உண்மையைச் சொன்னார், சங்கடம் வராமல் தடுத்தார். அது பொறாமையா?'

மறுமொழி கூறவில்லை. அரசருக்கு அப்போது இருந்த மன அமைதியைக் குலைக்க விரும்பவில்லை.



அரசி மௌனமாக எவ்வித உணர்ச்சியையும் புலப் படுத்தாதிருப்பதை அறிந்த அரசர், "நடந்து போனவற்றை நினைவுபடுத்த நான் விரும்பவில்லை. நாட்டை ஆளும் அரசர் மனத்தில் ஏற்படும் அழுத்தம், தீர்க்கவேண்டிய பிரச்னைகள் ஏராளம் என்பதை நீ அறிவாய் அல்லவா! கங்கை நதியில் புனித நீராட நான் ஏன் திட்டமிட்டேன் என்பது உனக்குத் தெரியுமா?"

அரசி தலையசைத்தாள்.

"நம் குல தெய்வம் சிவபெருமான் செஞ்சடையில் வீற்றிருக்கும் புண்ணியம் செய்த நதி கங்கை. கங்கையின் வரலாறு கேட்டறிந்தது முதல் நான் கங்கையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். செழுநீர்புனல் கங்கை செஞ்சடை அணிந்த புண்ணியனான சிவபெருமானை நினைக்கும் நாளெல்லாம், கங்கை நதிக்கரைக்குச் செல்ல விரும்பினேன். என் தந்தை பேரரசரின் எண்ணமும் கங்கைக்கரைக்குச் செல்ல வேண்டும் என்பதிலேயே இருந்தது. அவர் இறுதி இலட்சியமும் அதுவே. அவருக்குக் கிடைக்காத பெருமை எனக்குக் கிடைத் திருப்பது நடராசப் பெருமான் திருவருள் தான். பெரிய கோயிலைக் கட்டும் எண்ணம் ஏற்பட்டு, அதை நிறை வேற்ற வீரமாதேவி எனக்குக் கிடைத்தாளல்லவா? அது இறைவன் செயல் அல்லவா?"

இப்படிச் சொல்லும்போது, பஞ்சவன் மாதேவியின் முக உணர்ச்சியை இராசேந்திரன் கவனிக்கத் தவற வில்லை.

"வீரமாதேவியிடம் உனக்கு ஏற்பட்ட தவறான எண்ணத்தால், சோழநாட்டிற்குக் காலகாலத்திற்குக்



கிடைத்த மாபெரும் புகழை, பெருமையைத் தடுக்க நினைத்தாய். உன்மீது குற்றம் சாட்டுவதாகவோ, குறை கூறுவதாகவோ நினைக்க வேண்டாம். மனிதகுல இயல்பு அது. அரசியென்றாலும், அந்தக் குறையினின்று தப்ப முடியாது. மற்றொரு தட்சிண மேரு என்று புகழப்பட விருக்கும் அந்தக் கோயிலின் விமானத்தின்மீது அமைக்க விருக்கும் பொற்கலசத்திற்குக் கங்கை நீரால் அபிடேகம் செய்விக்க விரும்பினேன். அதற்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதுதான் என் முதன்மையான நோக்கம். அதை மனத்தில் எண்ணியே வடநாட்டு யாத்திரையை மேற்கொண்டேன். புனிதக் கங்கையில் நீராடிப் புண்ணியம் சேர்த்துக் கொள்வதை முதன்மையாகக் கருதவில்லை. நான் கட்டும் பெரிய கோயிலில் உள்ள பெருவுடையாருக்குப் புனித நீரால் அபிடேகம் செய்ய வேண்டும்; கோயிலின் திருமுழுக்கு கங்கை நீரால் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் என் இலட்சியம்."

"உயர்தர இலட்சியம் மனத்திற்குள் இருக்கும்போது அதை நிறைவேற்றும் திட்டங்களை வகுக்கும்போது அதைப்பற்றிய சிந்தனை, கவலை மனத்தில் இருப்பது இயற்கைதானே! ஏனோ தொடக்கத்திலிருந்து, புதிய கோயில், புதிய நகரம், புதிய ஏரி ஏற்படுத்தும் மாபெரும் திட்டம் உனக்குப் பிடிக்கவில்லை.

"ஆடவல்லான் அருளால் இப்போது அவை சரியாகிவிட்டன. கங்கையில் நீராடச் செல்லவேண்டும் எனும் எண்ணம் எனக்கு ஏற்பட்டவுடன் உன்னையும் அழைத்து வரத் திட்டமிட்டேன். அதற்கிடையில், கோதாவரிக் கரையில் தங்கியிருக்கும் கட்டாயம் ஏற்பட்டது. நம்மால் வாழும் வகை செய்யப்பட்ட

வர்களே நமக்கு விரோதியாகும் நிலை ஏற்பட்டது. வேங்கியில் ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்க்க வேண்டிய நிலை. கங்கை நதியை நோக்கிச் செல்லும் என் நோக்கம் தடைப்பட்டது. அதற்கிடையே புதிய பிரச்னை. வடமேற்குத் திசையில் நம் நாட்டிற்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாய்ச் செய்தி வந்தது. கஜினி முகம்மது என்ற வெளி நாட்டு மன்னர் வட நாட்டில் உள்ள பெரும் செல்வத்தின் மீது ஆசைப்பட்டுத் தம் படைகளுடன் வந்து தாக்குதலைத் தொடங்கியிருக்கிறான். அவனைத் தடுத்து நிறுத்தாவிடில் நம் நாட்டிற்குப் பெரும் ஆபத்து வந்து விடும். நம் பலம் அறியாமல் அவன் நம்மீது மோத மாட்டான் என்றாலும், மூர்க்கத்தனமான படை வீரர்கள் - ஏராளமான குதிரை வீரர்களுடன் அவன் வருகிறானாம். அவன் நோக்கம் நாட்டைப் பிடிப்பதன்று; கோயில்கள் தாம் அவன் இலக்கு. கோயில்களில் உள்ள ஏராளமான செல்வங்களைக் கொள்ளையடிப்பதுதான் அவன் நோக்கம்.

நாம் கோதாவரிக் கரையில் தங்கியிருப்பதை அறிந்த வட நாட்டு வேந்தர்கள் சில நாள்களுக்கு முன்பு என்னைச் சந்திக்க வந்தது உனக்கு நினைவிருக்கலாம். அவர்களுக்கு உதவியாக சோழ வீரர்களை அனுப்புவதாக வாக்களித்தேன். நம் படைகளை இரண்டு பகுதிகளாகப் பிரித்தேன். ஒரு பிரிவைக் கங்கைக் கரையை நோக்கி அனுப்பத் திட்டமிட்டுள்ளேன். இப்போது எனக்குத் தெளிவு ஏற்பட்டுள்ளது. நல்ல நாளாகப் பார்த்து நாம் கங்கைக் கரைக்குச் செல்வோம். நீராடுவோம். புனித நீரெடுத்துச் சோழ நாடு திரும்புவோம்.''



பஞ்சவன்மாதேவி அமைதியாக அரசர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தம் வயதில் இன்னும் இருபது ஆண்டுகள் குறைவாகி விட்டதுபோல் புதிய உற்சாகம் ஏற்பட்டது.

'வீரமாதேவி! பார்த்தாயா? நீ சொல்வது போல் மன்னர் எப்போதும் ஆடுவார் என நினைத்தாயே. உன் இளமை மோகத்தால் அவரை வயப்படுத்திவிட முடியும் என நினைத்தாயே - மனப்பால் குடித்தாயே, செருக்குடன் அவருடன் இணைந்து ஆடினாயே, என்ன நடக்கப் போகிறது தெரியுமா? நான் அரசருடன் கங்கையில் நீராடி புனிதக் கங்கை நீருடன் திரும்பி வருவேன். அதற்குள் அங்கே கோயில் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். சந்தேகம்தான். பழையாறையில் உள்ள கோயிலுக்கும் திருவையாற்றுக் கோயிலில் உள்ள இறைவனுக்கும், இறைவிக்கும் திருமஞ்சனம் செய்விக்கச் செல்வோம். தஞ்சைப் பெரிய கோயிலை ஏனோ புறக்கணிக்க எண்ணிய அரசரின் மனத்தை மாற்றுவேன். பேரரசர் - என் மாமனார் - விருப்பப்படி கங்கை நீரைக் கொண்டு, பெருவுடையாருக்குத் திருமஞ்சனம் செய்விப்பேன் - வீரமாதேவி - உன் மமதை சபதம் குலைவது திண்ணம்' பஞ்சவன் மாதேவி தன் மனத்துக்குள்ளேயே கற்பனை செய்து கொண்டாள்.

''தேவி! திடீரென மௌனமாகி விட்டாயே? என்ன சிந்தனை? என்ன திட்டம்? என் கவலையெல்லாம் உன்னிடம் வந்துவிட்டனவோ? கங்கை நீருடன் சோழ நாட்டில் புதிதாகத் தோன்றியுள்ள நகரத்திற்குள் நுழையும் போது வரவேற்பு எப்படியெல்லாம் இருக்கும் என்று

கற்பனை செய்து பார்க்கிறாயா?'' என்று அரசர் கேட்டவுடன் திடுக்கிட்டுச் தன்நிலைக்கு வந்தாள் பஞ்சவன் மாதேவி.

அப்போது, ஒற்றர் படைத் தலைவர், விரைந்து வந்து, சோழநாட்டிலிருந்த இராசராச பிரம்மராய உத்தம சோழரும் மிலாடுடையாரும் படைவீரர்களுடன் வந்து கொண்டிருக்கும் செய்தியைத் தெரிவித்தார்.

இராசேந்திர சோழதேவர் புருவம் உயர்த்தினார். எதற்காக அவர்கள் வருகிறார்கள் என்ற கேள்விக் குறி அவர் உள்ளத்தே எழுந்தது.







## 75. அரசியின் சீற்றம்

இராசராச பிரம்மராய உத்தமசோழரும், மிலாடுடையாரும் கோதாவரி நதிக்கரையில் சிறப்பாகக் கட்டப்பட்டிருந்த மாளிகையில் அமர்ந்து, இராசேந்திர சோழரிடம் மனம்விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

பல காத தொலைவு பயணம் செய்து வந்த களைப்பு எதுவும் அவர்களிடம் இல்லை. இருந்த சிறிது சோர்வும், இராசேந்திர சோழ தேவரை மிக நெருக்கத்தில் சந்தித்த போது நீங்கிவிட்டது.

அவர்கள் உரையாடும் போது பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவியையும் அருகேயே இருக்குமாறு அரசர் பணித்தது, தங்களுக்கு அரசர் அளித்த மிகப்பெரிய கௌரவம் என்று நினைத்தனர். அவர்கள் மனத்திலிருந்த சிறிதளவு குறையும் மறைந்து விட்டது. அவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். அவர்கள் உடலில் புதிய தெம்பு ஏற்பட்டது. சோழர் குலத்திற்கு ஏழேழு தலைமுறைக்கும் உண்மையுடையவர்களாக இருக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார்கள்.

சோழ நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசினார்கள். இந்த ஆண்டு நல்ல விளைச்சல் என்று உற்சாகமாகச் சொன்னார்கள். மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதாகப் பெருமையுடன் சொன்னார்கள்.

சோழ அரசர் அவர்கள் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வப்போது தலையசைத்தார். மெல்லிய புன்னகைக் கோட்டினால் அவர்களை மேலும் உற்சாகப் படுத்தினார்.

பணியாள்களை அழைத்து, முக்கனிகளைக் கொண்டு வருமாறு பணித்தார். சக்கரவர்த்திகளின் எதிரே அமர்ந்து உண்பதா? அவர்கள் திகைத்தார்கள். மேலும் உற்சாகம் அவர்களிடம் பொங்கியது.

மூன்றாவது மனிதர்கள் பேசும்போது பொதுவாக அரசி அந்த மண்டபத்திலோ, இடத்திலோ இருப்பதில்லை. அரசரும் அரசியாருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது மற்றவர்களை அழைப்பதில்லை. சபை கூட்டப்படும்போது அரியணையில் சபைக் கொலுமண்டபத்து மேல் மாடத்தில் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கவனிப்பாள். அரசியும் அவள் பரிவாரங்களும் மாடத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை நோக்குவதை அவையிலிருப் பவர் பார்க்க முடியாது.

கோதாவரி நதிக்கரையில் அரசருடன் அமர்ந்து தனியே பேசிக் கொண்டிருக்கும் வேளையில் நேரம் போவது தெரியாமல் சோழ நாட்டுச் செய்திகளைப் பேச வந்து விட்டார்களே என்ற கோபம் அரசிக்கு எழுந்தது.

ஆனால், புதிதாக உருவாகும் கோயிலைப் பற்றியும், நகரத்தைப் பற்றியும், வெட்டப்படும் ஏரியைப் பற்றியும்,



போடப்படும் சாலைகளைப் பற்றியும் அவர்கள் விவரிக்கும்போது மேலும் மேலும் ஊர்ச் செய்தியை அறிய அரசி ஆவல் கொண்டாள்.

காடுகள் வெட்டப்பட்டதை அவர்கள் சொன்னார்கள். சாலை அகலமான பெரும் அமைத்திருப்பதை விவரித்தார்கள்.

சிதம்பரத்திலிருந்து அந்தப் புதிய நகரத்திற்கு, அகலமான சாலை போடப்படுவதையும், சாலையின் இருபக்கங்களிலும் மரக்கன்றுகள் நடப்படுவதையும் தெரிவித்தார்கள். இன்னும் பத்து ஆண்டுகளில் கன்றுகள் பெருமரங்களாக வளர்ந்து குளிர் நிழல் தரும் காட்சியை இப்போதே காண்பதாக அவர்கள் சொன்னார்கள்.

''சக்கரவர்த்திகளே! அங்கே புதிய புதிய வீடுகள் நிறையக் கட்டப்படுகின்றன. பழையாறையிலும், தஞ்சைபுரியிலும் இருக்கும் வீடுகளைவிடப் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன. புதுமையாக இருக்கின்றன. சில ஆண்டுகள் கழித்து உருவாகும் அந்த நகரம் எப்படியிருக்கும் என்று கற்பனைக் கண் கொண்டு பார்க்கிறேன்.

''தஞ்சைபுரியையும், பழையாறையையும் விட மிகப் பெரியதாக அந்த நகரம் அமையும் போல் தோன்றுகிறது. பாண்டிய நாட்டு மதுரைக்கும் சென்றிருக்கிறேன் - அந்த நகரத்திற்கில்லாத பெருமை இந்த நகரத்திற்கு இருக்கப் போகிறது'' என்று கூறி மிலாடுடையார் சற்று நிறுத்திய போது, 'அது என்ன பெருமை, சொல்லுங்கள்' என்று வினவுவதுபோல் இராசேந்திர சோழர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார்.

''பெரிய கடலும், கடலுக்கு அருகே பெரிய கோயிலும் வேறு எந்த நகரத்துக்குப் பெருமை சேர்க்கின்றன?'' என்று பெருமையுடன் கூறினார் மிலாடுடையார்.

அவர் சொல்வதற்கெல்லாம் பிரம்ம ராய உத்தம சோழர் தலையசைத்துக் கொண்டிருந்தார்.

''பெரிய கடலா? கடலுக்கு அருகே பெரிய கோயிலா? விளங்கவில்லையே'' என்று அரசர் கேட்டார்.

''ஆ பெரிய கடல் போன்ற ஏரி என்று சொல்வதற்கு மாறாக அவசரத்தில் அப்படிச் சொல்லிவிட்டேன்'' என்று பல்லை இளித்த அவரைப் பார்த்து, அரசர், ''கடலை





நகரத்திற்குள் கொண்டு வர நான் விரும்பவில்லை. விளை நிலங்கள் உப்பாக மாறி, பயனில்லாமல் போய்விடுமல்லவா?''

''கங்கை நீரைக் கொண்டுவர விரும்புகிறேன். அதனால்தான் கடல் போன்று பெரிய ஏரி அங்கே உருவாகிறது! கங்கை நீரை அதில் நிரப்ப கங்கையைக் கொண்டு வரத்தானே நான் இங்கே வந்திருக்கிறேன்?'' என்றார் அரசர்.

அவர்கள் இருவரும் தலையசைத்தனர். ''ஆமாம், ஆமாம். அங்கே எல்லாம் மிகப் பிரம்மாண்டமாக உருவாகிறது. இளவரசி தாமே முன்னின்று பெரிய கோயிலை, பெரிய நகரத்தை உருவாக்குகிறார்கள். அவர்களுக்கு வேறு சிந்தனையே இல்லை. இங்கும் அங்கும் ஓடி அலைந்து மேற்பார்வையிடுகிறார்கள். சோழ



சக்கரவர்த்திகளே! இன்னும் சில மாதங்களில் புதிய சுவர்க்கமே அங்கே நிர்மாணமாகி விடும். இந்த சமயத்தில் சக்கரவர்த்திகள் பழையாறையிலிருந்து திடீரென்று வட திசைக்குப் போர் வீரர்களுடன் சென்றதாகக் கேள்விப்பட்டோம். தாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாவற்றிலும் நாங்கள் இதுவரையிலும் பங்கு கொண்டு எங்களால் இயன்றதைச் செய்திருப்பது தாங்கள் அறியாததா? நாங்கள் என்ன பிழை புரிந்தோம்? நாங்கள் பங்குபெறாமல் செய்துவிட்டீர்கள். அதனால்தான் தாங்கள் அழைக்காமலே படைவீரர்களுடன் வந்து விட்டோம். எங்கள் கடமையல்லவா?''

''புதிய சுவர்க்கம் உருவாகி வருகிறது என்றா சொன்னீர்கள்? தென்னாட்டில் கயிலாயம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்பதே வீரமாதேவியின் ஆசை. பெரிய கோயிலில் சிற்பங்கள் எல்லாம் உருவாகி விட்டனவா? விமானத்தில் சுதையாலான சிற்பங்கள், திருச்சுற்றில் உள்ள கோட்டங்களில் தேவதைகளின் திரு உருவங்கள், தாமரைத்திரு, கலைத்தேவி, மகாவிஷ்ணு - சிற்பங்களைப் பார்த்தீர்களா? எல்லாம் வீரமாதேவி திட்டமிட்டபடி நடைபெறுகின்றனவா?''

அரசர் சற்று நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர் போல் மௌனமாக இருந்தார்.

''சக்கரவர்த்திகளுக்கு ஒரு வேண்டுகோள்! சோழ இளவரசி கலை ஆர்வம் மிகுந்தவர்கள் என்று நாடு நகரம் எல்லாம் புகழ்கின்றன. எங்கள் வாழ்நாளில் புதிய நகரம் ஒன்று உருவாவதைப் பார்க்கும் பேறு பெற்றிருக்கிறோம். சுற்றுப்புற ஊர்களிலிருந்து கூட்டங் கூட்டமாக வந்து புதிய நகரத்தைப் பார்த்துச் செல்கிறார்கள். புதிய நகரத்தில்



வீடு கட்டிக்கொண்டு வாழப் பலர் இப்போதே ஆயத்தமாகிறார்கள். தரிசாகக் கிடந்த நிலங்களை உழுது பயிரிட வேளாண் குடிமக்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். பெரிய ஏரியிலிருந்து பாசனத்துக்குப் பஞ்சமில்லாமல் தண்ணீர் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். வடக்கே சிதம்பரம் சென்று ஆடவல்லானைத் தரிசிக்க முடியாதவர்கள், தங்கள் ஊரிலேயே பெரிய கோயில் எழப் போவதை எண்ணிப் பெரிய அளவில் மகிழ்கிறார்கள்.

''கோயில் திருப்பணி விரைவில் முடிவடைய வேண்டும் என்று கருவூர்ச் சித்தர் இரவு பகலாக அங்கேயே தங்கியிருந்து ஆலோசனை கூறி வருகிறார்கள். கருவறையில் மிகப் பெரிய ஆவுடையார் லிங்கம் - அப்பாடி! எங்களைப் போலவே பலரும் ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கிறார்கள். தேவலோகத்து மயன் அனுப்பிய சிற்பிகள் தாம் வந்து சிற்பங்களை வடிக்கிறார்களோ என்று மக்கள் பிரமிப்படைகிறார்கள்.

''சக்கரவர்த்திகளே! நாங்கள் பாக்கியசாலிகள். இந்தப் புனிதமான பணியில் எங்களுக்குப் பங்கு கொடுங்கள். விரைவில் தலைநகரம் திரும்புவதற்கு இடையூறாக எதிரிகள் இருந்தால் சொல்லுங்கள்; அவர்களை துவம்சம் செய்கிறோம். கங்கையில் நீராடச் செல்லாமல் தங்களைத் தடுப்பவர்கள் யார்? கட்டளையிடுங்கள் - அவர்களை நிர்மூலமாக்குகிறோம்.''

உண்மையிலேயே உற்சாகமாகவும், தூய உள்ளத்துடனும் பேசும் உத்தம சோழரையும், மிலாடுடையாரையும் அரசர் கை உயர்த்தி வாழ்த்தி, ''உங்கள் அன்பு என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது. தங்களைப் போன்றவர்கள்

உற்ற துணையிருந்தால் எனக்கும் இந்த நாட்டிற்கும் எந்தவிதக் குறையுமுண்டோ?

''என் புனித யாத்திரைக்கு இடையூறு செய்ய ஒரே ஓர் எதிரி மட்டுமே இருப்பதாக எண்ணினேன். இப்போதோ புதிய எதிரி முளைத்துவிட்டார். வடநாட்டு அரசர்களுக்குப் பெரும் ஆபத்து. அவர்களுக்கு மட்டும்தானே ஆபத்து என்று நாம் எளிதில் தள்ளிவிட்டால் அந்தக் கொடியவர்கள், தெற்கு நோக்கிப் படைகளுடன் வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? கஜினி முகமது என்ற பெயருடைய அந்த அயல்நாட்டு மன்னனுக்கு நாட்டைப் பிடிக்க ஆசை இருப்பதாகத் தெரியவில்லை. நம் முன்னோர்கள் கட்டி வைத்த கோயில்களின் கருவறையில் மதிப்பிட முடியாச் செல்வம் இருக்கிறது. இறைவனுக்கும் இறைவிக்கும் விலைமதிப்பிட முடியாத வைர, வைடூரிய நவரத்ன ஆபரணங்களை மூதாதையர் காணிக்கையாகச் சேர்த்து வைத்துச் சென்றிருக்கிறார்கள். அவற்றைக் கொள்ளையடித்துச் செல்வதே கஜினியின் நோக்கம். பலமில்லாமல் ஒற்றுமையில்லாமல் இருக்கும் வடபுலத்து மன்னர்களை எளிதில் வென்று செல்வங்களைக் கொள்ளையடித்து வருகிறான். அவனைத் தடுக்க வேண்டும். அடித்து விரட்டவேண்டும். வட நாட்டரசர்களை ஒற்றுமையாக இருக்குமாறு செய்துவிட்டேன். என் உதவியை அவர்கள் நாடினார்கள். தோள்வலி மிகுந்த ஆயிரக்கணக்கான நம் வீரர்களை, கஜினியை எதிர்த்துப் போராட அனுப்ப முடிவு செய்துள்ளேன்.

''நம் படையில் ஒரு பிரிவினர் கங்கைக் கரை நோக்கிச் சென்றுள்ளனர். நான் சில நாள்களில் புறப்படுகிறேன்...'' என்று கூறி அரசர் சற்று நிறுத்தினார்.



''சக்கரவர்த்திகளே! கட்டளையிடுங்கள். நாங்கள் கங்கைக் கரைக்குத் தங்களுக்குத் துணையாக வருகிறோம்'' என்ற மிலாடுடையாரை நோக்கிக் கையசைத்து, ''வேண்டாம், வேண்டாம். நீங்கள் உடனே வடமேற்கு நோக்கிச் செல்லுங்கள். சோழப் படைகளுடன் சேர்ந்து கொள்ளுங்கள். கண்ணபிரான் பிறந்து, வளர்ந்து, லீலைகள் புரிந்த மதுரா நகருக்கும் ஆபத்து நெருங்குகிறது. சிந்துநதிக் கரையிலுள்ள மாசுணி நாட்டிற்குப் பேராபத்து.

கஜினி முகமதுவை எதிர்க்கப் போகிறோம் என்று நான் நினைக்கவில்லை. கங்கைக் கரைக்குச் செல்லும் போது நம்மைத் தடுக்க வரும் அரசர்களை எதிர்க்கப் போதுமான வீரர்களுடன் புறப்பட்டேன். இப்போது படை வீரர்களை இரு பிரிவுகளாகப் பிரித்தேன். பலமிக்க கஜினியை எதிர்க்க அரசர்கள் பலரை ஒன்று சேர்த்துள்ளேன். இன்னும் பலம் பொருந்திய சோழர்ப் படைகள் தேவை. நல்ல வேளையாக நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். உடனே நீங்கள் கஜினியை எதிர்க்கப் புறப்படுங்கள். சிந்துநதியின் நீரைக் கொண்டு வாருங்கள். நர்மதை, சிந்து, கங்கை நீர்களைக் கொண்டு பெருவுடையாருக்குப் புனித நீராட்டுவோம். உடனே புறப்படுங்கள். கங்கை வெற்றியில் தங்கள் பங்கும் என்றும் நின்று நிலவும். புதிய கோயிலின் விமானத்தை கங்கை நீரால் முழுக்காட்ட நீங்கள் உதவியதாக நான் சொல்கிறேன். உம்; புறப்படுங்கள்'' என்றார்.

கோதாவரி நதியில், மேற்குத் திசையில் கதிரவன் மூழ்கி மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது.

''தேவி! நெடுநேரம் இங்கே அமர்ந்திருந்ததால், சோர்வுற்றிருப்பாய். சற்று ஓய்வு எடுத்துக் கொள். மீண்டும் நாம் இங்கே வந்தமர்ந்து இசையின்பத்தில் திளைப்போம்'' என்றார்.

ஐந்தாம் பிறைச் சந்திரன் வானவெளியில் பவனி வந்து தண்ணிலவைப் பொழிந்து கொண்டிருந்தான்.

வீணையை மீட்டி, குழலூதி இன்னிசை எழுப்ப கலைப் பெண்கள் வந்தமர்ந்தனர். பாடலுக்கேற்றபடி நடனமிட இரண்டு அழகிய பெண்கள் வந்து நின்றனர்.

பட்டத்தரசியும் வந்தமர்ந்தாள். அவள் முகத்தில் சோர்வு மிகுந்திருந்தது. சென்ற சில நாள்களாக இருந்த மகிழ்ச்சி இன்று முகத்தில் காணவில்லை.

தேவாரப் பண்ணிசைக்க வந்த மங்கையை நோக்கி, ''மாதர் பிறைக் கண்ணியானை - பதிகம் தெரியுமா?'' என்று அரசர் கேட்டார். அரசருக்கு மிகவும் பிடித்தமான பதிகம்?

பாடலும், வீணையொலியும், குழல் ஓசையும் எழுந்தன. பாடலுக்கே ஏற்ப மங்கையர் ஆடினார்கள். திடீரென அரசர், 'நிறுத்துங்கள் நிறுததுங்கள்' என்று குரல் கொடுத்தார்.

''காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்' என்ற பாடலுக்கு இப்படியா ஆடுவது? வீரமாதேவியின் நடனத்தைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால், நாடு திரும்பியதும், இளவரசி வீரமா தேவியிடம் நாட்டியம் பயிலுங்கள்'' என்று சற்றுக் கோபத்துடன் கூறினார்.

அரசி பஞ்சவன்மாதேவி அதிர்ச்சியடைந்தாள்.



கோபம் பொங்கியது. வீரமாதேவி, வீரமாதேவி. அவள் நினைவு இங்குமா? விருட்டென்று எழுந்து, அந்த வெளி முற்றத்திலிருந்து உள்ளே சென்று மஞ்சத்தில் சாய்ந்தாள்.

இராசேந்திர சோழ தேவர், பஞ்சவன் மாதேவியின் அருகே சென்றமர்ந்து, ''தேவி! உடல்நிலை சரியில்லையா? ஏன் திடீரென எழுந்து சென்று விட்டாய்?'' என்று கேட்டு நெற்றியில் கரம்பதித்து மெல்ல வருடினார்.

பஞ்சவன்மாதேவி பேசவில்லை. ''இலேசாகக் காய்ச்சல் இருக்கிறதே'' என்றார். அவள் பேசவில்லை.

பஞ்சவன்மா தேவிக்கு இரவு உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள்.

காலையில் அரசரைச் சந்தித்தவுடன், ''பழையாறைக்கு உடனே புறப்பட வேண்டும்'' என்றாள்.

இராசேந்திரன் வியப்புடன் அவள் முகத்தை நோக்கினார்.

திடீரென்று ஏன் இந்த மாற்றம்? என்று விழியாலேயே கேட்டார்.

''ஆமாம், இங்கே இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. உங்கள் அபிமான வல்லி வீரமாதேவி உருவாக்கும் புதிய சொர்க்கத்தை நான் உடனே பார்க்க வேண்டும். அந்த அதிசய நகரத்தை நான் உடனே காண வேண்டும்'' என்றாள்.



## 76. வீரமாதேவியின் சிந்தனை அலைகள்

பழையாறை மாளிகைக்குத் திடீரென வீரமாதேவி, பணிப் பெண்களும், காவலர்களும் சூழ வருகை புரிந்தாள். அரிந்தவன் மாதேவியின் உடல்நலம் மேலும் குன்றியிருப்பதாக வந்த செய்தி அறிந்தவுடன் அவளால் சிற்பப் பணிகளையும், கோயில் பணிகளையும் மேற்பார்வையிட்டவாறு புதிய நகரத்தில் கணம்கூடத் தங்கியிருக்க முடியவில்லை.

பொழுது புலர்வதற்கு முன்பே பரிவாரங்களுடன் புறப்பட்டு விட்டாள். அரசர் உடன் வராமல் அவள் பழையாறைக்குச் செல்வது அதுவே முதல் தடவை.

புதிய நகரம் பாதிக்கு மேல் உருவாகிவிட்டது. புதிய புதிய வீடுகள், புத்தம் புதிய ஓடுகள் வேயப்பட்டு வீதிகளின் இரு புறமும் வீதிக்கு அழகு செய்தன.

பெரிய கோயில் பணிகள் முக்கால் பாகம் முடிவடைந்து விட்டன. விமானம் கம்பீரமாக எழுந்து கொண்டிருந்தது. விமானத்தின் நான்கு பக்கங்களும்



ஓலைகளால் மறைக்கப்பட்டிருந்தன. சிற்பிகள் விமானத்தில் அழகிய சிற்பங்களை அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு நாள்கள் முன்பு வீரமாதேவி கோயில் பணி எவ்வளவு நிறைவேறியிருக்கிறது என்று சுற்றிப் பார்த்தாள். கோயிலைச் சுற்றி மதிற்சுவர்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நீண்ட பெரிய பாறைகள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கிப் பொருத்தப்பட்டன.

'அப்பப்பா, தேவலோகத்திலிருந்து தேவர்கள் வந்து பணியாற்றுகிறார்களா? அவர்களுக்கு 'அசுரபலம்' அமைந்து விட்டதா?'

சோழ நாட்டுப் பணியாட்களைத் தவிர நானா தேசங்களிலிருந்தும் திறமை மிக்கவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து இரவு பகல் பாராமல் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சிற்பி மாணிக்க சேகரனின் மாணாக்கர்களின் இரு கரங்களும் சோர்வில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தன. இடக்கரம் உளியைப் பிடிக்க, வலக்கரம் சுத்தியல் பிடிக்க, 'கிணிங் கிணிங்' என்ற நாதம் எழ, பாறைத் துகள் சிதறி ஓட, கற்கள் உயிர்வடிவம் பெற்றுக் கொண்டிருந்தன.

சிற்பிகள் களைப்படையாதிருக்க அவர்களது அன்பிற்குரிய இனிய துணைவியர் கஞ்சிக் கலயத்துடன் அங்கு வந்து வற்புறுத்தி ஒரு வாயாவது கஞ்சியைப் பருகச் செய்தனர். பிறகு அங்கிருந்து செல்லாமல் மலர்ந்த விழிகளால் தங்கள் அருமை அத்தானையும் இயங்கிக் கொண்டிருக்கும் கரங்களையும் உருவாகும் சிற்பத்தையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

குடமுழுக்குக்கு நாள் குறித்தாகிவிட்டதாகப் பேசிக் கொண்டார்கள். அதற்குள் தங்களுக்கிட்ட பணியை முடித்துவிட வேண்டும் என்னும் ஆர்வத்தில் சிற்பிகள் இயங்கிக் கொண்டிருந்தார்கள். வெயிலுக்காக வேயப்பட்ட கீற்றுப் பந்தலில் தலைமைச் சிற்பி மாணிக்க சேகரன் சிற்பங்களுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்தான்.

காலைக் கதிரவன் எழும் முன்பே தன் பணியை, தொடங்கி, பசி, தாகம் பாராமல் அவன் பணி செய்து கொண்டிருப்பதை வியப்புடன் குமுதவல்லி பார்த்துக் கொண்டிருந்தாள். கோயில் திருப்பணிகள் மிக விரைவில் நிறைவேறவேண்டும் என்பதில் மற்றவர்களைவிட அவளுக்கு அக்கறை அதிகம்.

வீரமாதேவி ஒருநாள் வேடிக்கையாக மாணிக்க சேகரனிடம் சொன்னாள்: ''பெரிய கோயில் குடமுழுக்கு நடைபெற்ற மறுநாளே உங்கள் திருமணத்தை நடத்த வேண்டும் என்று நான் முடிவெடுத்து அதை முன்பே அரசரிடம் தெரிவித்து விட்டேன்.''

''அதென்ன, குடமுழுக்கு முடிந்தபிறகே மாணிக்க சேகரன் திருமணம் நடைபெற வேண்டும் என்று கட்டளை விதித்திருக்கிறாய்?'' என்றுகூட வேடிக்கையாகக் கேட்டார் அரசர்.

''அப்போதுதான் திருப்பணி மிக வேகமாக நடைபெறும். தூண்டுதல் குமுதவல்லியிடம் இருந்தும் வரும்'' என்று சொல்லியிருக்கிறாள், வீரமாதேவி சிரித்தவாறு. வீரமாதேவி சொல்வதைக் கேட்ட குமுதவல்லியின் முகம் நாணத்தால் சிவந்ததை மாணிக்க சேகரன் காணத் தவறவில்லை. இளவரசி கூறியதைக் கேட்டு மாணிக்க



சேகரன் என்ன நினைக்கிறான் என்று, குனிந்த தலை நிமிராமல் நோக்கினாள் குமுதவல்லி.

'அதோ அவரும் தலைகுனிந்து விட்டாரே!' ஓர் ஆண் வெட்கப்படுவதை அவள் இப்போதுதான் பார்க்கிறாள்.

பொதுவாகவே சிற்பப்பணி நடைபெறும்போது அவளுடன் நெருங்கிப் பேச விரும்பாத மாணிக்க சேகரன் இப்போது குடிலுக்குக்கூட வருவதில்லை. சிற்பப்பணி



நடக்கும் இடத்திலேயே இரவு பகல் தங்கத் தொடங்கினான். அவளும் உறுதியுடன் இருக்க முடிவு செய்தாள். சிறிது நேரம் ஓய்வெடுக்க முயன்று அமைதியாக அமர்ந்திருக்கும் மாணிக்க சேகரன் செவிகளில் மட்டும் கேட்குமாறு, ''இளவரசி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?'' என்று கேட்பாள்.

மாணிக்க சேகரன் திரும்பிப் பார்ப்பான் - அவள் சொற்கள் புரியாமல் திகைப்பான்.

''குடமுழுக்கு ஆன மறுநாளே நம் திருமணம்!'' என்று அவள் நினைவு படுத்தும் வார்த்தைகளைக் கேட்டவுடன், அவன் சிற்றுளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொள்வான்.

அன்று, வீரமாதேவி சிற்பப் பணிகளைச் சுற்றிப் பார்க்க வரும்போது மாணிக்க சேகரன், சிற்பம் ஒன்றில் மிக நுணுக்கமான வேலைப்பாட்டைச் செய்து கொண்டிருந்தான். அவன் களைப்பாக இருந்தான். அவன் எதிரே குமுதவல்லி கவலையுடன் மாணிக்க சேகரன் முடிக்கவிருக்கும் அழகிய திருமகளின் சிற்பத்தை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். வீரமாதேவி வந்ததைச் சிற்பி கவனிக்கவில்லை. குமுதவல்லி பார்த்து விட்டாள். சைகையால் குமுதவல்லியை அழைத்துச் சற்றுத் தொலைவில் சென்று, ''குமுதவல்லி! திருமண நாளை நிச்சயித்து விடலாமா?'' என்று கேட்டாள்.

வீரமாதேவி கேட்பதன் பொருள் புரியாமல் திகைத்த குமுதவல்லியை நோக்கி, ''அதோபார்! விமானத்தில் கலசம் வைக்க வேண்டியதுதான் பாக்கி. சிற்பி இரவு பகலென்று பாராமல் பணிசெய்கிறார். இந்தச் சிற்பத்துடன் எல்லாம் முடிவடைந்துவிடும். பிறகு என்ன?



சக்கரவர்த்திகள் குடமுழுக்குக்கு நாள் பார்த்து விடுவார். அதற்குப் பிறகு உங்கள் திருமண நாள் தானே?'' என்றாள் வீரமாதேவி.

'இளவரசி மிகப் பொல்லாதவர் - இல்லாவிட்டால் நாணத்தால் தலைகுனிய வைத்துவிடும் கலையைக் கற்றிருப்பார்களா?' என்று குமுதவல்லி எண்ணி, மறுமொழி கூறாமல் அங்கிருந்து சிற்பியை நோக்கிச் சென்றாள். வீரமாதேவியும் அவளைப் பின் தொடர்ந்தாள். இளவரசி வந்திருப்பதை குமுதவல்லி தெரிவித்தாள். சிற்பியின் சிந்தை கலையவில்லை. சிற்பி கருமமே கண்ணாக இருந்தான்.

திருமகள் - செந்திருவின் சிற்பத்தின் வில் போன்ற புருவத்தைச் செதுக்கி, கருணை விழிகளை அமைத்த பிறகே அவனுக்கு இந்த உலகத்தின் நினைவே வந்தது.

அருகே குமுதவல்லியும், வீரமாதேவியும் நிற்பதைக் கண்டவுடன் திடுக்கிட்டு எழ முயன்ற மாணிக்க சேகரனைப் பார்த்து, கையமர்த்தி, ''சக்கரவர்த்திகள் இங்கிருந்திருந்தால் தங்கள் கரங்களுக்கு பொற் கங்கணமிட்டிருப்பார்கள். உம்; அதனால் என்ன - இன்னும் சில நாள்களில் உங்கள் திருமண நாள் அன்று சக்கரவர்த்தி கனகாபிஷேகம் செய்து விடுவார் பாருங்களேன்!'' என்று கூறி, கலகல வென நகைத்தாள்.

சிற்பியின் விழிகள் கலங்கின. முழுமையாக உருவான திருமகள் சிற்பத்தை வெற்றிகரமாக முடித்துவிட்ட உள்ள நிறைவில் அவனுக்குப் பேச நா எழவில்லை.

''ஆடவல்லான் அருளால் எல்லாம் நல்லபடியாக முடிவடைந்தன. கருவூர்ச் சித்தரின் ஆசி, அரசர் கொடுத்த

நல்வாய்ப்பு, தாங்கள் அவ்வப்போது அளித்து வரும் ஊக்கம்...'' என்று வார்த்தைகளை முழுமையாக்க முடியாமல் தவித்தான்.

''கருவூர்ச் சித்தர் நேற்று இங்கு வந்திருந்தார். இன்னும் இரண்டு நாள்களுக்குள் கோயில் பணி அனைத்தும் முடிந்துவிட வேண்டும் என்று அன்புடன் வற்புறுத்தினார். பொதிகை மலைக்குப் புறப்பட்டுச் செல்ல நாள் குறித்துவிட்டாராம்'' என்றான் மாணிக்க சேகரன்.

வீரமாதேவி திடுக்கிட்டாள். ''சித்தர் இங்கு வந்தாரா? எனக்குத் தெரியாதே. பொதிகை மலைக்குச் சென்றால் மீண்டும் சோழ நாட்டிற்குத் திரும்ப மாட்டாரே? அவர் இருக்கும்போதே குடமுழுக்கு நடத்த வேண்டுமே - ஐயோ வடக்கே இருந்து எந்தவிதச் செய்தியும் வரவில்லையே. சக்கரவர்த்திகள் கங்கைக் கரைக்குச் சென்றாரா? விமானத்திற்கும் பெருவுடையாருக்கும் கங்கை நீரால் அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற சக்கரவர்த்திகளின் எண்ணம் நிறைவேற வேண்டுமே'' என்று பதைபதைப்புடன் கூறிய வீரமாதேவி, சிற்பியை நோக்கி, ''சித்தர் வேறு என்ன தெரிவித்தார்? இங்கே வந்து எவ்வளவு நேரம் இருந்தார்? ஐயோ, எனக்குத் தெரியாமல் போய்விட்டதே?'' என்று கவலையுடன் பேசினாள்.

வீரமாதேவி அங்கிருந்து சென்றவுடன் மாணிக்க சேகரன் அருகிலுள்ள பாறையில் அமர்ந்தான். பணிகளை முழுமையாக முடித்துவிட்டதில் அவனுக்கு முழு நிறைவு இருந்தாலும், இதுவரை இல்லாத களைப்பும் சோர்வும் அவனிடம் சேர்ந்தன. அதையறிந்த குமுதவல்லி அவன்



கரத்தை எடுத்து முத்தமிட்டு அவனைத் தன் மடியில் கிடத்தி அவன் தோள்களைப் பிடித்துவிட்டு, ''இந்தக் கரங்களுக்கு உரிமையுடையவள் என்பதில் பெருமைப் படுகிறேன்'' என்று அவன் கரங்களை எடுத்துத் தன் விழிகளில் புதைத்துக் கொண்டாள்.

மாணிக்க சேகரனுக்கு அப்போது ஏற்பட்டது மயக்கமா, சோர்வினால் ஏற்பட்ட களைப்பா? மாணாக்கன் ஒருவன் வந்து அழைத்தபோதுதான் அவன் கண் விழித்தான்.

''இளவரசியார் பழையாறை புறப்படப் போகிறார். தங்களையும் உடன் அழைத்துச் செல்ல விரும்புகிறார் பழையாறை சோதிடரிடம் குடமுழுக்குக்கு நாள் பார்க்க வேண்டுமாம்'' என்று தெரிவித்தான்.

பழையாறைக்குச் சென்ற வீரமாதேவி சோதிடரிடம் செல்லாமல், அரிந்தவன் மாதேவியின் மாளிகைக்குச் சென்றாள். கடந்த சில நாள்களாக அவன் பேச்சும் சுய நினைவும் இல்லாமல் படுத்துக் கிடப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

'அரிந்தவர் மாதேவியின் இறுதி நாள்கள் நெருங்குகின்றன. சுயநினைவு வரும்போது, சக்கரவர்த்திகளை உடனே காண வேண்டும் என்று தன் இறுதி விருப்பத்தைத் தெரிவிக்கிறார்கள்'' என்று மருத்துவர் கூறியது கேட்டு வீரமாதேவி என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தாள்.

வடக்கே சென்றிருக்கும் சக்கரவர்த்திகளுக்கு அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்துத் தெரிவிக்கக்

கூடாது என்று சித்தர் ஏன் சொன்னார்? தெரிந்தால் கங்கைப் பயணத்தை இடையிலே நிறுத்தித் திரும்பி விடுவார் என்பதால் இருக்கலாம். கங்கை நீரைக் கொண்டு குடமுழுக்குச் செய்யும் எண்ணம் நிறைவேறாமல் போய்விடும். அபசகுனம் போல் அந்தச் செய்தி அமைந்து விடலாம். ஒருவேளை அரிந்தவன் மாதேவி நிரந்தர நித்திரை கொண்டுவிட்டால் அப்போதும் அரசர் பயணத்தை முடிக்காமல் திரும்பி விடலாம் அல்லவா? என்ன செய்வது என்று தெரியாமல் வீரமாதேவி கவலையு டன் நின்று கொண்டிருக்கும்போது கருவூர்த் தேவர் அங்கு வந்து கொண்டிருந்தார்.

மேகம் மூடிய இருண்ட வானத்தில் 'பளிச்' என்று வெண்மதி தோன்றியது போல் அந்த வெண்தாடித் தேவர் வந்து கொண்டிருந்ததை விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் வீரமாதேவி.







## 77 .அரசரின் முடிவு?

பெரும் புயல் வீசிக் கொண்டிருந்தது. வானமே பொத்துக் கொண்டதோ எனும்படியாக மழை தாரை தாரையாக ஊற்றிக் கொண்டிருந்தது.

கண்ணுக்கெட்டிய தொலைவு வரை நீர், நீர்! கோதா வரி நதியில் பெருக்கெடுத்த வெள்ளத்தோடு, வானத்தை யும் பூமியையும் இணைத்துக் கொண்டிருக்கும் மழை நீரும் சேர்ந்து கொண்டது.

இரவு பகல் என்று தெரியாமல் மழை பெய்து கொண்டிருந்தது. அவ்வப்போது வெட்டிச் செல்லும் மின்னொளியில், பெரும் பெரும் மரங்கள் நதி நீரில் அடித்து வருவது தெரிந்தது.

இராசேந்திரன் தங்கியிருந்த மாளிகையை மெல்ல மெல்ல வெள்ளம் சூழத் தொடங்கியதால், அரச பரி வாரங்கள் சற்று மேடான இடத்தினை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

வெண் கொற்றக் குடையின் கீழ் ஏழுலகையும் ஆளும் சக்தி படைத்த இராசேந்திரன் மழையால் நனையாமல்

இருக்கப் பிரிக்கப்பட்ட குடைகள் சூறாவளியில் பிய்த்துக் கொண்டு பறந்தன.

இராசேந்திரன், பட்டத்தரசியை உடன் அணைத்துக் கொண்டு பாதுகாப்பான இடம் நோக்கி விரைந்தார். அந்த முதுமையிலும் அவரிடம் நிறைந்திருந்த வலிமை அவரை வேகமாக இயங்க வைத்தது. பஞ்சவன்மாதேவியின் கரத்தை அவர் அழுத்தமாகப் பிடித்திருந்தார். அவருடைய வேகத்துக்கு இணையாக, பஞ்சவன் மாதேவியால் நடக்க இயலவில்லை. பல இடங்களில் தடுமாறினாள். காற்றுடன் கலந்து மழை நீர் முகத்தில் பளீர் பளீர் என்றடித்தது. உடலுடன் ஒன்றிப் போன பட்டாடை நடையைத் தடைப்படுத்தியது. மழைக் குளிரால் உடல் நடுங்கியது.

சிறு குழந்தையைத் தாய் அணைப்பதுபோல் அணைத்துக் கொண்டு இராசேந்திரன் விரைந்தார். அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் கோயிலொன்றின் மண்டபம். மேடான இடம். அங்கே மழை வெள்ளம் எட்டிப் பார்க்க முடியாது. கோயிலின் பாதத்தைத் தொட்டு ஓடியது.

கலங்காத இராசேந்திரன் மனம் கலங்கியது. பஞ்சவன் மாதேவி தரையில் படுத்திருந்தாள். விரைந்தோடி வந்த பணியாளர்கள் எங்கிருந்தோ சுளுந்துகளைக் கொண்டு வந்து தூண்களில் கட்டி மண்டப ஓரமாக ஒளி பரவச் செய்தனர்.

முற்றிலும் நனைந்திருந்த பஞ்சவன் மாதே-பியாரின் உடலெங்கும் காய்ந்த துணியால் அரசர் துடைத்தார். தனக்கு அவர் செய்யும் பணிவிடை கண்டு திடுக்கிட்ட பஞ்சவன்மாதேவி அதைத் தடுக்க முயன்றாலும் அவளால் முடியவில்லை. அச்சத்தாலும், நாணத்தாலும்



மரியாதை மிகுந்திருந்ததாலும் அவள் குறுகிப் போனாள். உதடுகள், 'வேண்டாம்; வேண்டாம்' என்று முணுமுணுத்தன.

நல்ல வேளையாக உடைகள் இருந்த பெட்டி மழையில் நனையவில்லை. அரசர், அங்கு உதவி வந்த பணியாளர்களையும் அதிகாரிச்சிகளையும் அங்கிருந்து விலகச் சொல்லி, பெட்டியைத் திறந்து வேற்றாடைகள் எடுத்து உடுக்கச் செய்தார். மண்டபத்தின் நான்கு புறமும் மறைக்கப் பட்டன. ஒருவரும் அருகே வர அரசர் அனுமதிக்கவில்லை.

இராசேந்திரன் வெளியே வந்து நின்று கொண்டார். பணிப் பெண்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள், அதிகாரிச்சிகள் - பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விட்டனரா என்று அறிவதில் முனைந்தார். அவ்வப்போது வெட்டிச் செல்லும் மின்னலொளியில் புயலின் கோரத் தாண்டவம் புலப்பட்டது. நடுநிசியைத் தாண்டியிருக்கும்.

அருகேயிருந்த கிராமத்து மக்கள் அந்தக் கடுமையான மழையிலும் கூட்டமாக ஓடிவருவது தெரிந்தது. பானைகளைச் சுமந்து வந்தனர். அதில் சூடான கஞ்சி இருந்தது.

அந்த நேரத்தில் அது அமுதமாகத் தோன்றியது.

மழையும் புயலும் எப்போது நின்றனவோ தெரியவில்லை. அரசரும் அரசியும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். பொழுது புலர்ந்து நேரமான பிறகும் அவர்கள் எழுந்திருக்கவில்லை.

மழை ஓய்ந்தது. கரிய மேகங்கள் விலகி வானம் வெளுத்தது. எங்கோ தெரிந்த கதிரவனின் மெல்லிய கரங்கள் மக்களுக்கு ஆதரவு தர நீண்டன. பறவை

இனங்கள் சிலிர்த்தவாறு பறந்தன. கடுமையான மழை யில் சிக்குண்டு தவித்த ஆவினங்கள் 'அம்மா' என்று தீனக்குரல் எழுப்பின.

கோயில் மண்டபம் எந்தகைய வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்படாத அளவுக்கு உயரமான இடத் தில் கட்டப்பட்டிருந்தது. அது சிவன் கோயிலின் உள் மண்டபம். சுற்றிலும் உயரமான மதில்கள்.

பணியாளர்களும், அதிகாரிகளும் மண்டபத்தின் வெளியே நின்று கொண்டு அரசரை எப்படி எழுப்புவது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர். பரி வாரங்களுடன் வந்திருந்த மருத்துவர், துணிவுடன் சுற்று மறைப்பை விலக்கிக் கொண்டு அரசர் படுத்திருந்த இடம் நோக்கிச் சென்றார். அரசியார் கண் விழித்து, அரசரின் அருகே செய்வதறியாது திகைத்தவாறு அமர்ந்திருந்தார்.

இராசேந்திர சோழ சக்ரவர்த்தியின் உடல் தணலாய்க் கொதித்தது. நெற்றியைத் தொட்டுப் பார்த்து நாடி பிடித்துப் பார்த்த மருத்துவர் பதற்றத்துடன் வெளியே வந்தார். மூலிகைச் சாறெடுத்து அவருக்குப் புகட்ட முயன்றார். கைவசமிருந்த தைலங்களைத் தடவித் தேய்த் தார். தன் உதவியாளர்களிடம் தகவல் கூறி அவர்களை விரைந்து சென்று சில மருந்துகளைக் கொண்டுவரச் சொன்னார்.

மெல்ல எழுநத பஞ்சவன்மாதேவி, அரசர் அருகே கவலையுடன் அமர்ந்த மருத்துவர் அளித்த மருந்தைப் புகட்ட முனைந்தாள்.

நண்பகல் தாண்டிய பிறகு அரசர் கண் திறந்து பார்த்து, சைகையால் வினவும் நேரம்வரை அனைவரும் பேய்



அடித்தவர்கள் போல் பிரமிப்புடன் இருந்தனர். வேங்கி நாட்டுக்குச் செய்தி சென்றது.

கடும் காய்ச்சல் மெல்ல மெல்லக் குறைந்தது. சூழ்ந்திருந்த வெள்ளம் படிப் படியாகக் குறைந்தது. ஆனால் கோதாவரியில் இன்னும் இரு கரைகளையும் உடைத்து விடுவது போல் வெள்ளம் பாய்ந்தோடியது. சுழல் குறையவில்லை.

கோதாவரி நதியில் இரண்டு முறை முழுமதி நிலவு மறைந்தது. கதிரவன் மறைவதையும், முழுமதி உதய மாவதையும் கண்டு மன அமைதியடைந்தார் இரா சேந்திரன்.

அந்தப் புயல் அடித்த இரவு நடந்த சம்பவத்தை அரசி மறக்கவில்லை. அன்று வலிமையுடன் அவர் இயங்கியதையும் இன்று அவர் துவண்டு கிடப்பதையும் பார்க்க அவள் அதிர்ச்சியடைந்தாள். அவருடைய திடமான கரங்களைத் தன் மடி மீது வைத்து மெல்ல வருடியவாறிருந்த பஞ்சவன்மாதேவி, கடுங் காய்ச்சலி லிருந்து தப்பிய சக்கரவர்த்தியின் முகத்தையே நோக்கிய வாறிருந்தாள்.

அவள் விழிகள், சக்கரவர்த்திகளின் வாடிய முகத்தை நோக்கின. ஒரு மாதத்திற்குள் இளைத்துப் போன மேனியை நோக்கி வேதனை யடைந்தாள்.

இராசேந்திரனும் பஞ்சவன்மாதேவியை நோக்கி மெல்லப் புன்னகை புரிந்தார். அந்தக் கீற்றுப் புன்னகை யில் பல நூறு அர்த்தங்கள் பளிச்சிட்டன.

'கவலைப்பட்டாயா, தேவி?' என்று அந்த விழிகள் கேட்டன.

''அந்தப் புயலடித்த இரவு வேளையில் நானே பயந்து விட்டேன். உன்னால் நடக்க முடியவில்லை. மிகவும் களைப்படைந்து விட்டாய். மலர் போன்ற உன் பாதங்கள் மழை நீரில் சிக்குண்டு தள்ளாடின. பன்னீர் அன்றி வேறு நீரால் நனையாத உன் முகத்தில் பளீர் பளீர் என்று புயலும், மழையும் அடித்து வேதனையடையச் செய்தன. எப்படித் தாங்கிக் கொண்டாய், தேவி?''

''மிகவும் தொல்லை கொடுத்து விட்டேன் அரசே! குடி மக்கள் துயரங்களைச் சுமக்கும் தாங்கள், என்னைச் சிறு குழந்தை போல் சுமந்தீர்கள். நானும் சோழ நாட்டுக் குடிமகள் என்பதை உணரச் செய்தீர்கள். என்னால் அன்றோ தாங்கள் கடுமையான நோயால் அவதிப் பட்டீர்கள்?''

''இல்லை, இல்லை. நீ அருகே இருந்து பணிவிடை செய்ததால் நான் பிழைத்தேன். இல்லாவிடில், கோதாவரி நதிக் கரையில் எனக்கு ஒரு நினைவு மண்டபத்தை எழுப்பியிருப்பார்கள்.''

''ஐயோ, என்ன சொல்கிறீர்கள்? சோழ நாட்டைக் கொடிய துயரில் ஆழ்த்தி விட வேண்டும் என்பது தங்கள் விருப்பமா?''

''இல்லை, இல்லை. சாவுக்கு அஞ்சுபவன் அல்லன் நான். ஐந்தெழுத்து மந்திரத்தை மனத்தில் நினைத்த வாறிருந்தேன். 'நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப் படோம்' என்று உறுதியாக நம்பினேன். 'நமசிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க' என்று ஆயிரம், லட்சம், கோடி முறை உச்சரித்தவாறிருந்தேன்.''

சொல் வெளியே வரவில்லை. உதடுகள் அசைய



வில்லை. பஞ்சவன் மாதேவியின் விழிகளும், இரா சேந்திர சோழ தேவர் விழிகளும் இமை கொட்டாமல் மேலே கூறியவாறு பேசிக்கொண்டிருந்தன.

சக்கரவர்த்தி இராசேந்திரசோழ தேவர் முகத்தில் புதிய ஒளி பிறந்தது. இவ்வளவு நாள்களாக பேசாத அவர் பேசினார்.

''தேவி! இரவும் பகலும் என்னருகே அமர்ந்து நீ செய்த பணிவிடையால் நான் பிழைத்தேன். நீ பயந்து விட்டாய். அப்படித் தானே?''



பஞ்சவன்மாதேவியின் விழிகள் பனித்திருந்தன. மெல்ல, விழிகளைத் துடைத்துக் கொண்டாள். இதயத்தில் அடக்கி வைத்திருந்த பாச உணர்ச்சியைப் பொங்கி வரும் கண்ணீரால் வெளிப்படுத்த முயன்றாள்; அடக்கிக் கொண்டாள். மெல்லிய விம்மல் ஒலி விசும்பலாக வெளி வந்தது.

''சக்கரவர்த்திகளே! நான் அஞ்சவில்லை. தங்களைப் போன்றே நான், நம் குல தெய்வம் ஆடவல்லானின் திருவடிகளை மனத்திலெண்ணித் தங்கள் பாதத்தில் முகத்தைப் புதைத்தவாறிருந்தேன். சிவ பெருமானுக்கு மிகப் பெரிய கோயில் கட்டும் திருப்பணியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கு இத்தகைய கொடிய காய்ச்சலை ஏன் அவர் அளித்தார், என்றெண்ணினேன். சில நாள்களாகவே நான் தங்களை வற்புறுத்தி வந்தது நினைவிருக்கலாம். பழையாறைக்கு உடனே திரும்ப வேண்டும். அரிஞ்சயன் தேவியைப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு என் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டு மன்று; நம் நாட்டினின்று சில நாள்களுக்கு முன் வந்தவர்கள் கோயிலையும் அதிலுள்ள சிற்பங்களையும் வர்ணித்ததைக் கேட்கும் போது கோயிலைக் காண வேண்டும் என்ற ஆர்வம் என் உள்ளத்தில் எழுந்து என்னை நிலை கொள்ளாமல் செய்தது. கங்கை நதி நீரால் கோயிலின் குடமுழுக்கை நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே, அதை நிறைவேற்ற வேண்டாமா?'' என்று கூறும்போது பஞ்சவன்மாதேவியின் குரல் தழுதழுத்தது.

இராசேந்திரசோழ தேவர், பஞ்சவன்மதேவியின் கரத்தை எடுத்து அன்புடன் தன் கரத்துடன் பிணைத்து, ''புதிய கோயிலை, பெரிய கோயிலைக் காணவேண்டும்



என்ற ஆவல் உனக்கு மட்டுமா? எனக்குந்தான். கோயில் திருப்பணியை அருகிருந்து நான் நடத்தாமல் கங்கை நீரின் மீது ஆசை கொண்டு புறப்பட்டது பிழைதானோ என்று எண்ணுகிறேன்.

''நகரம் பெரிதாக உருவாகி வருகிறதாம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் போன்றே மிகப் பிரம் மாண்டமான கோயில் அங்கே கட்டப்பட்டு விட்டதாம். அழகிய சிற்பங்கள் சோழ நாட்டிற்கே பெருமை தரும் அளவுக்கு அங்கே அமைந்து விட்டனவாம். கருவறையில் மிகப் பெரிய பெருவுடையார் லிங்க வடிவில் அமர்ந்திருக்கி றாராம். ஆவுடையாரும் லிங்கமும் தஞ்சைக்கு இணையாக இருக்கின்றனராம். அவற்றைக் காணாது நான் கோதாவரி நதிக்கரையில் அமர்ந்து என்ன செய்து கொண்டிருக்கிறேன்? பொழுதை வீணடித்து விட்டேனோ? கங்கையில் நீராடி, கங்கை நீருடன் திரும்பும் எண்ணத்தில் நான் போர்க்குணம் கொண்டு விட்டேனே. தவறு, தவறு என் செயல். பெரும் பிழை. தஞ்சையிலுள்ளது போல் பெரிய நந்தியின் சிற்பத்தைப் படைக்க வேண்டும் என்று சொல்ல நினைத் திருந்தேன். நந்தியை அமைக்காமல் கோயில் பணிகள் முழுமையாகமாட்டா.

''கனவிலே, புதிய கோயில் தெரிந்தது. பெரும் மதில்கள் சூழ கோயில் விமானம் கம்பீரமாக நிற்பது தெரிந்தது. பல நூறு வீடுகள் அந்த நகரத்தில் கட்டப் பட்டிருக்கும் காட்சி தெரிந்தது. அடர்ந்த காடுகள் நிறைந்த இடம் என்று சொல்ல முடியாத அளவிற்கு அந்தப் பகுதி மாறிவிட்டது தெரிந்தது. புதிய நகரத்தைக் காண சோழ நாட்டின் பல காத தொலைவிலிருந்து மக்கள் வந்து பார்த்த வண்ணமாக இருப்பது எனக்குத் தெரிந்தது.

''பாவம், வீரமாதேவி! தன்னந்தனியளாகவே அந்த நகரத்தை, கோயிலை உருவாக்கி விட்டாள். அந்தக் கோயிலுக்கு வீரமாதேவீச்சரம் என்று பெயர் சூட்டப் போகிறேன்.'' இராசேந்திர சோழர் விழிகளை மூடியவாறு தன் கண்முன் தெரிந்ததை விவரித்துக் கொண்டே போனார்.

பஞ்சவன் மாதேவி நிமிர்ந்து உட்கார்ந்தாள். தன் மெலிந்த கரத்தை, இராசேந்திரன் கரத்திலிருந்து விருட்டென்று எடுத்துக் கொண்டு, ''வீரமாதேவீச்சரமா? இல்லை... இல்லை... அவள் பெயரைச் சூட்டக் கூடாது'' என்று, மெல்லத்தான் சொல்ல எண்ணினாள். ஆனால் அந்தக் குரல் கிறீச்சென்று ஒலித்தது.

இராசேந்திரன் திடுக்கிட்டார். ''தேவி, தேவி! உனக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டு நெருங்கினார்.

''எனக்கு ஒன்றும் ஆகவில்லை. உங்களுக்குத்தான் - உங்களுக்குத்தான் - இன்னும் அவள் மீதுள்ள மோகம் மாறவில்லை. வீரமாதேவீச்சரமாம் வீரமாதேவீச்சரம்! இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் உங்களுக்கு அந்த மோகினி மீதுள்ள மோகம் தணியவில்லையா?'' பஞ்சவன்மாதேவியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலையும், உள்ளத்துணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் விதத்தில் முகத்தில் ஏற்பட்ட கடுமையையும் இராசேந்திரன் கண்டார்.

''என்ன சொல்கிறாய் தேவி!'' - இராசேந்திரன் அவள் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பினார்.

''வழக்கத்திற்கு மாறாக புதிய கோயிலுக்கு அவள் பெயரை இட விரும்புகிறீர்கள்...''



''வழக்கம்தானே - லோகமாதீச்வரம், செம்பியன் மாதீச்சவரம் - பஞ்சவன்மாதீச்சுவரம் என்றெல்லாம் எனக்கு முன்பிருந்த பெரியவர்கள் கோயில்களுக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்களே-''

''புதிய கோயில் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இராசராசேச்வரம் என்று தானே பெயர்? அதுபோல் இந்தப் பெரிய கோயிலுக்குத் தங்கள் பெயரைச் சூட்டுங்கள். இராசேந்திர சோழேச்வரம் என்று பெயரிட வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.''

இராசேந்திர சோழ தேவர் வியப்புடன் பஞ்சவன் மாதேவியை நோக்கினார். 'வீரமாதேவி மீது இவ்வளவு ஆத்திரமா? ஏன் அப்படி?'' அவருக்கு விளங்கவில்லை.

''நாம் உடனே பழையாறைக்குப் புறப்பட வேண்டும்'' என்று கூறினாள் பஞ்சவன்மாதேவி. அதில் பரபரப்பும் வேகமும் தெரிந்தன.

''ஆம்; என் எண்ணமும் அதுதான். அந்தப் புதிய கோயிலையும் நகரத்தையும் நான் காணாமல் ஒருகணம் கூட இருக்க முடியாது. ஆனால்...''

''ஆனால்...என்று கூறி, நம் பயணத்தை நிறுத்தி விடாதீர்கள்.''

''நீ தானே அதை நினைவுபடுத்தினாய். கோயில் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதற்காக நான் பயணம் புறப்பட்டதை...''

''ஆம்; ஆனால், அந்தப் புனித யாத்திரையை நீங்கள் மறந்து, கோதாவரிக் கரையில் தங்கியது ஏன்? வடக்குத் திசை நோக்கிப் படைகள் அனுப்பினீர்கள். கங்கைக்

கரைக்குப் படைகளை அனுப்பினீர்கள் ஏன்? நீங்கள் சென்றிருந்தால் உங்களை எதிர்க்கும் துணிவு யாருக்கு வந்திருக்கும்? இளைய படைத் தலைவர்களை கங்கைக் கரைக்கு ஏன் அனுப்பினீர்கள்? கங்கை நதிப் புனித நீர் தானாக வந்து விடுமா? கங்கை நீர் வரப் போவதில்லை; வீரர்கள் வெற்றியடைந்த செய்திதான் வரப்போகிறது பிறகு ஏன் இங்கே காத்திருக்க வேண்டும்? மழையிலும் புயலிலும் சிக்கி அநாதை போல் மண் தரையில் ஏன் உறங்க வேண்டும்? ஆடவல்லான் அருளால் புயலும் வெள்ளமும் நமக்கு எந்தவித இடையூறும் தரவில்லை. தெய்வ அருள் பூரணமாக இருந்ததால் தப்பினோம். இனியும் நாமிங்கே தங்கக்கூடாது. புறப்படுவோம்.''

பஞ்சவன்மாதேவி இதுபோல் கருத்துத் தெரிவித்து அவர் அறிந்ததில்லை. அவர் மௌனமானார்.

''ஏதோ சிந்திக்கிறீர்கள். திட்டமிடுகிறீர்கள். நீங்கள் வருவதற்குள் அங்கே கருவூர்ச் சித்தரின் உதவியுடன் வீரம்மாள் குடமுழுக்கு நடத்தி விடுவாள். அவ்வாறு நடைபெற நான் சம்மதிக்க மாட்டேன்.''

இராசேந்திரன் மறுமொழி கூறாமல் இருந்தார். ஆனால் அவருள்ளம் பெரிதாகக் கொந்தளித்தது. அவர் உள்மனம் கேட்ட கேள்விகளுக்கு அவராலேயே மறு மொழி கூற முடியவில்லை.

''கங்கையில் நீராடுவதற்காகத்தானே புறப்பட்டாய்?

கங்கையில் நீராட வேண்டும் எனும் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றத் தானே புனித யாத்திரை மேற்கொண்டாய்?



'புனித நதியில் நீராடும்போது பட்டத்து அரசியை அழைத்துச் செல்லவில்லை. ஏன் என்று தெரியும். அந்த வீரமாதேவியுடன் சென்று நீராட வேண்டும் என்பது தானே தங்கள் உள்ளார்ந்த விருப்பம்?'

'ஆம்; அப்படியும் இருக்கும். அதனால்தான் படைகளுடன் புறப்பட்டேன். பிறகு மனத்தை மாற்றிக் கொண்டேன். பஞ்சவன் மாதேவியைப் பழையாறையில் இருந்து வருமாறு அழைத்தேன்.'

'இல்லை, இல்லை. மறைக்காதே. பழையாறையி லிருந்தால் வீரமாதேவியின் பணிகளுக்குப் பஞ்சவன் மாதேவி இடையூறு செய்வாள் என்ற எண்ணத்தில்தானே, தேவியை அழைத்தீர்கள்?'

உள்மனக் குரலுக்கு விடை கூற, சமாதானம் செய்ய முடியவில்லை. 437432/

'பழையாறைக்குத் திரும்ப வேண்டும் - பஞ்சவன் மாதேவி பிடிவாதமாக இருக்கிறாள்.'

கோயில் திருப்பணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலையும் கட்டுப்படுத்த முடியவில்லை. கங்கை நீரைக் கொண்டு வராமல் செல்வது, எடுத்த இலட்சியத் திற்குத் தோல்வி. என்னதான் செய்வது?'

இராசேந்திர சோழர் மறுமொழி கூறாமல் எங்கோ தொலை தூரத்திலுள்ளதை வெறித்துப் பார்ப்பதுபோல் அமர்ந்திருப்பதைக் கண்ட பஞ்சவன் மாதேவிக்குக் கவலை ஏற்பட்டது. தன் பேச்சைக் கேட்டு அரசருக்குக் கோபம் வந்துவிட்டதா? வரம்பு மீறிப் பேசிவிட்டேனா?

பஞ்சவன் மாதேவியிடம் மெல்ல நடுக்கம் ஏற் பட்டது. அவரை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் அச்சத்தால்



தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

தலை குனிந்து கொண்டாள். அதுபோன்ற சமயங்களில் அரசர் எதிரே நில்லாமல் போய் விடுவதுதான் சரி.

பஞ்சவன் மாதேவி குனிந்த தலையுடன் எழுந்தாள். அங்கிருந்து செல்ல முயன்றவளை, ''தேவி! நில். என் மனத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை எப்படி நீக்குவது என்று நான் சிந்திக்கிறேன். கலிங்க நாடு சென்றவர்களிடமிருந்து செய்தியை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்திருக்கிறேன். சிலவற்றை நான் யூகித்து உணர்ந்துள்ளேன். அதன்படி நடக்கவும் யோசனை கூறியுள்ளேன். சில நாள்கள் பொறுத்திருப்போம். கோதாவரிக் கரையிலேயே அமைதியாகப் பொழுதைக் கழித்து வருவது சரியில்லைதான். ஓரிரு நாள்களில் கோதாவரியில் பெரும் வெள்ளம் குறையும். நாம் கங்கைக் கரையை நோக்கிச் செல்வோம்'' என்றார்.

இரண்டு நாள்கள் - ஐந்து நாள்கள் - ஏழு நாள்கள் என்று கழிந்தன. ஆற்றுவெள்ளக் கடுமை குறைந்தது. நதியைக் கடக்கப் பெரிய பெரிய படகுகள் ஆயத்தம் செய்யப்பட்டன. மறுநாள், நல்ல வேளையாகப் பார்த்து பரிவாரங்களுடன் அரசர் புறப்படும்போது, கோதாவரியின் மறுகரையினின்று படகுகள் சில வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் படகுகளில் புலிக்கொடி கம்பீரமாகப் பறப்பது, படகு நெருங்க நெருங்க நன்றாகப் புலப்பட்டது.







## 78. கருவூராரின் கட்டளை

கருவூர்த் தேவர் நின்று நிதானமாக, பெருவுடையார் கோயிலைச் சுற்றிப் பார்த்தார். அவருடன் வீரமாதேவியும், சிற்பி மாணிக்க சேகரனும் சென்றனர். சற்றுத் தொலைவில் அதிகாரிகளும், சிற்பிகளும் அவர்களைத் தொடர்ந்து வந்தனர்.

விசாலமான கோயில் திருச்சுற்றில் அவர்கள் உயர்ந்து நிற்கும் விமானத்தைப் பார்த்தவாறு நடந்தனர். அவர்களுள் பலர் தஞ்சை இராசராசேச்வரத்தைக் கண்டவர்கள். அங்கே சிற்பப்பணி செய்தவர்கள். தஞ்சையிலேயே வாழ்ந்து வருபவர்கள்.

குரலைத் தாழ்த்தி அவர்கள் தங்களுக்குள் பேசி வந்தனர்.

''மிகப் பிரம்மாண்டமான பணிதான்.''

''தட்சிண மேரு என்று தஞ்சை இராசராசேச்வரத்தைப் புகழ்வார்கள். மற்றொரு மேரு தான் இது'' என்று வியந்து பேசினார்கள்.

''சிற்பி மாணிக்க சேகரனின் கைவண்ணமே கை வண்ணம்.''

''குடமுழுக்குக்கு நாள் குறித்துவிட்டாராமே கருவூர்த் தேவர்? நம் சக்கரவர்த்திகள் இப்போது எங்கே இருக்கிறார்? வடக்கே கங்கை நீராடச் சென்றவர் மனம் மாறி, போர் புரியச் சென்றுவிட்டாராமே. எப்பொழுது திரும்பி வருவார் என்று தெரியுமா?'' என்று வியப்புடன் தானறிந்த செய்தியை விவரித்தார் ஒருவர்.

''ஆமாம். தக்க சமயத்தில் சக்கரவர்த்தி நம் வீரர் களை அனுப்பியிராவிடில் கூர்ஜர அரசர் தோற்றோடி இருப்பாராம். சோமநாதபுரம் வடமேற்கே பெரிய சிவன் கோயிலாம். அந்தக் கோயிலிலுள்ள நகைகளையும், செல்வங்களையும் கணக்கிட முடியாதாம். கஜினி என்ற ஊரிலிருந்து வந்த அரசர் பலமுறை தாக்குதல் நடத்தி, செல்வங்களைக் கொள்ளை அடிக்க முயன்றாராம்.''

''ஓ! அப்படியா? புலிக்கொடி ஏந்திய படை வீரர்கள் அவர்களை விரட்டியடித்து விட்டார்களா?''

''அப்படித்தான் நினைக்கிறேன். செய்தி இன்னும் இங்கே கிட்டவில்லை. கங்கைக் கரையிலும் சில எதிர்ப்புகள் இருந்தனவாம். அவை எல்லாம் சரியாகி விட்டனவாம். அரசரின் வருகை குறித்த செய்தியை பழையாறையில் எந்தக் கணமும் எதிர்பார்க்கிறார்கள்.''

''பழையாறையிலா? அங்கே யார் இருக்கிறார்கள்? சக்கரவர்த்திகளின் திருமகனார் இருவரும் இங்கே இருக் கிறார்கள். முதல் அமைச்சர் இங்குதான். இங்கே செய்தி கிடைத்த பிறகுதான் பழையாறைக்கு-''

''என்ன அப்படிச் சொல்லி விட்டாய்? பழையாறை யில் அரிந்தவன் மாதேவியார் படுத்த படுக்கையாய்



இருக்கிறார். அவருடைய அந்திம நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவருடைய கடைசிக் காலத்தில் ஒருவர்கூட அவர் அருகே இல்லையே - ஹூம். குடமுழுக்குக்காக இல்லாவிட்டாலும், தம் அருமை மனைவியைக் காணவாவது அரசர் வரவேண்டாமா?''

''வடக்கே எங்கோ இருக்கும் அவருக்குச் செய்தி சொல்லி அனுப்பினார்களா தெரியவில்லையே?''

இப்போது குரல் மிகவும் மெலிந்தது. ரகசியம் பேசுவது போல், ''உனக்குத் தெரியுமா, வீரமாதேவி யாருக்கு மனத்தில் ஒரே குழப்பம். அரிந்தவன் மாதேவி நிரந்தரமாகக் கண்ணை மூடிவிட்டால் என்ன செய்வது என்ற கவலை. கோயில் குடமுழுக்கு நடைபெற வேண்டும். அதற்குள் அரசர் வந்துசேர வேண்டும். அரிந்தவன் மாதேவி உடல்நிலை குறித்த செய்தியை அரசருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று கருவூரார்தான் கூறினாராம்?''

''உனக்கு எப்படித் தெரியும்? அரசருக்குச் செய்தி தெரிவிக்குமாறு சொல்லியிருப்பார். வீரமாதேவி தடுத் திருப்பாள்.''

''நீ பேசுவதில் நியாயம் இருப்பதாகத் தெரிய வில்லையே? இருவருமே அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள்.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''அரசர் விரைவில் வரவேண்டும் என்பதுதான் கருவூரார் விருப்பம். குடமுழுக்கை நிறைவேற்றிவிட்டுப் பொதிகை மலைக்குச் சென்றுவிட வேண்டும் என்று முன்பே முடிவு செய்துவிட்டார். அவர் குறிப்பிட்ட நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அரசரை வரவேண்டாம்

என்று சொல்வாரா? வீர மாதேவிக்கும், அரசரைத் தடுத்து நிறுத்துவதால் என்ன பலன்?''

இந்த வாதம் நியாயமாகப்பட்டது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொருவர் சொன்னார்: ''அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்த செய்தி இரண்டு





திங்களுக்கு முன்பு சக்கரவர்த்திகளைச் சென்றடைந்திருந் தால் சக்கரவர்த்திகள் கங்கைக் கரைக்குச் செல்லாமலே திரும்பியிருப்பார். அரிந்தவன் மாதேவியின் முடிவு உறுதி. குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டுவர வேண்டும் என்ற அரசரின் இலட்சியம் நிறைவேறாது போயிருக்கும். இரண்டு துன்பகரமான நிகழ்ச்சிகளைத்



தடுப்பதற்காகவே பழையாறை நிலவரத்தைக் கருவூரார் தடுத்திருப்பார்.''

அவர் வாதத்திலும் நியாயமிருப்பதாகவே தோன்றி யது.

மிக மெதுவாகப் பேசினாலும் பேச்சுச் சுவையில் தங்களைச் சுற்றிலும் பலர் நின்று கேட்டுக் கொண்டிருப் பதையும், சித்தரும், வீரமாதேவியும், சிற்பியும் தொலை வில் சண்டேச்வர அனுக்ரக மூர்த்தி சிலை எதிரே நின்று சிற்ப அற்புதத்தை ரசித்துக் கொண்டிருப்பதையும் கண்டு அங்கே விரைந்தார்கள்.

கருவூர்த் தேவர், சிற்பி மாணிக்க சேகரனைப் பாராட் டினார். அவன் கரத்தைப் பிடித்து மெல்ல வருடியவாறு, ''உலகம் உள்ள அளவும் இந்தச் சிற்பம் அழியாது. இந்தச் சிற்பத்தின் சிறப்பு மற்றொன்று இருக்கிறது தெரியுமா?'' என்று கூறி மாணிக்க சேகரனையும் வீரமாதேவியையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு, மெல்லிய இனிய குரலில் பாடினார்.

''தனிய ரெத் தனையோ ராயிர வருமாம்
தன்மையர் என் வயத்தினராம்
கனியரத் தருதீங் கரும்பர் வெண்புரிநூற்
கட்டியர் அட்டஆர் அமிர்தர்

புனிதர் பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினிய ரெத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சுரத் திவர்க்கே''

வெண் தாடியும், முடியும் கொண்ட சித்தர் உணர்ச்சி யுடன் பாடினார். பாடும்போது அவர் கரங்களை அசைத்துப் பாடினார். ஆடினார்.



வீரமாதேவியும் மாணிக்க சேகரனும் விழிகளை மூடிக் கொண்டு நின்றனர். பெரிதும் புரியவில்லை. மயக்கம் தரும் சித்தரின் குரலில் கட்டுண்டு மெய்மறந்து நின்றனர்.

''வீரமாதேவி! எப்படி இருக்கிறது இந்தப் பதிகம்?'' என்று கேட்டார் சித்தர்.

இதற்கு என்ன மறுமொழி கூறுவாள்? ''சித்தர் பெருமானே! நாங்கள் எளியவர்கள். எங்களை ஒரு பொருட்டாக மதித்து கருத்தைக் கேட்கிறீர்களே! நாங்கள் கருத்துச் சொல்வதற்கே தகுதியற்றவர்கள்'' என்று வீரமா தேவி சொல்லும்போது அவள் குரல் தழுதழுத்தது. இராசராசேச்சுரம் என்று கூறும்போது இராசேந்திர சோழேச்சுரம் என்பதுபோல் அவள் செவிகளில் வீழ்ந்து அவள் மேனி மெல்ல நடுங்கியது.

''வீரமாதேவி! இந்தப் பதிகம் தஞ்சையிலுள்ள பெரு வுடையாரைப் பற்றியது. அவர் குடிகொண்டிருக்கும் கோயிலைக் குறித்தது.

''தஞ்சை இராசராசேச்வரத்தில் வீற்றிருக்கும் இறைவர் கனிவுடையவர். தனிமையானவர். ஆயிரம் பெயர் களுடைய தன்மையும் உடையவர். இனிய தித்திப்பான கரும்பைப் போன்றவர். வெண்மையான முப்புரி நூலைத் தரித்தவர். அமிர்தம் போன்றவர். தூய்மையானவர். பொன்மயமான வீர தண்டையைத் தரித்தவர். முறுக்கடங் கின சடையினையும் மகுடத்தையும் உடையவர் - பொய் பேசாத உண்மையானவர்களுக்கே இனியவர், புண்ணியர் என்று பொருள். புரிந்ததா? என்ன சிற்பியாரே! இந்த வர்ணனை யெல்லாம் நீர் செதுக்கிய சிவபெருமானிடம் உள்ளனவா?'' என்று கூறி, மெல்ல நகைத்தார். வெண் தாடி, மீசைக்கிடையே வெண்பற்கள் மின்னின.

வீரமாதேவி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ''சொல்லு, மகளே! தஞ்சையிலுள்ள இராசராசேச்வர முடைய பெருவுடை யாரைப் பற்றித்தானே பதிகம் பாடியுள்ளீர்கள்? இங்கே குடி கொண்டிருக்கும் இறைவனும் பிரம்மாண்டமானவர்தானே? பெருவுடை யார் என்று தானே நாமம் சூட்டப்போகிறீர்கள்? இவருக்கு நீங்கள் இராசேந்திர சோழீசர் என்று பெயர் சூட்டி மகிழ வேண்டியதுதானே?'' என்றுதானே கேட்கப் போகிறாய்? வரும் காலத்தில் அழியாப் புகழ் அடையப் போகும் வீரமாதேவியே! இங்குள்ள இறைவனும் பெருவுடையார் தான். ஆனால் இந்தக் கோயிலுக்கு என்ன பெயர் சூட்டுவது? உன் பெயரில் வீர மாதேவீச்சரம் என்றழைக் கலாமா? இல்லை - மூத்த அரசி பஞ்சவன்மாதேவீச்சரம் என்றழைக்கலாமா? என்ன பெயரிடலாம் பெண்ணே! நீயே சொல்லு'' சித்தர் சிரித்தவாறு கேட்டார்.

வீரமாதேவியிடமிருந்து மெல்லிய விம்மல் ஒலி எழுவது அவர் செவிகளில் வீழ்ந்திருக்க வேண்டும்.

''பெண்ணே! நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. உன் நினைவெல்லாம், விரைவில் இராசேந் திரன் திரும்பி வரவேண்டும். கங்கை நீர் கொண்டு குடமுழுக்குச் செய்ய வேண்டும். அவ்வளவுதானே? நடந்துவிடும். கவலை மறந்து களிப்புடன் இரு'' என்றார்.

அவர் பார்வை சுற்றிலும் படர்ந்தது. அண்ணாந்து மேருவை ஒத்த விமானத்தை நோக்கியது. சாரம் கட்டி இன்னும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பிரமேந்திரக் கல்லையும் கும்பத்தையும் விமான சிகரத்தில் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.



''வீரமாதேவி! பொதிகைக்கு நான் செல்ல வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. வரும் பௌர்ணமிக் குள் குட முழுக்கு நடைபெறாவிடில், நானில்லாமல் நீங்களே குடமுழுக்கை நடத்திக் கொள்ள வேண்டியது தான். நீண்ட நாள்கள் தள்ளக்கூடாது. அந்தப் புண்ணிய நிகழ்ச்சிக்காகவே அரிந்தவன் மாதேவியின் உயிரை உடலில் நிறுத்தி வைக்கச் செய்துள்ளேன். பிறகு உங்கள் எல்லாரையும் பிரிந்து அரிந்தவன் மாதேவி சிவபெருமான் திருவடிகளை அடைந்து விடுவார்...'' என்றார்.

''சுவாமி, சுவாமி! வரும் பௌர்ணமிக்குள்ளாகவா? அரசரிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லையே. கங்கைக் கரைக்குச் சென்றாரா? கங்கை நீர் வருமா? இப்போதுள்ள சூழலில், கங்கை நீர் வராவிட்டாலும் - அரசர் வந்து சேரட்டும். கங்கையைவிடப் புனிதமான காவிரியினின்று நீர் கொண்டு வருவோம். சுவாமி! நீங்கள் இல்லாமல் பெரிய கோயிலுக்குக் குடமுழுக்கா? சித்தருக்கு ஒரு வேண்டுகோள்'' என்று நிறுத்தினாள்.

''சொல்லலாம்'' என்பதுபோல் சித்தர் புருவம் உயர்த்தினார்.

''தஞ்சைப் பெருவுடையாரைப் புகழ்ந்து பாடியது போல் இந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கும் பெரு வுடையார் பேரிலும் பாடவேண்டும்'' என்றாள்.

சித்தர் சிரித்தார். ''எல்லாம் இறைவனின் ஆணை. அவனன்றி ஓரணுவும் அசையாது. உன் தலைவன் குட முழுக்குக்கு வந்து சேரட்டும். அது சமயம் நாம் பதிகம் பாடுவோம். குடமுழுக்கு நடத்துவோம். விரைவில் எல்லாருக்கும் செய்தி சொல்லி அனுப்புவோம் - நினைவிருக்கட்டும்: வரும் பௌர்ணமியன்று கோயில்

குடமுழுக்கு. என்ன செய்வாயோ? எப்படிச் செய்வாயோ கோதாவரிக் கரையில் பட்டத்தரசியுடன் ஓய்வு எடுத்து வரும் இராசேந்திரன் செவிகளை எட்டுமாறு உடனே செய்தி அனுப்பு.

''அரிந்தவன் மாதேவி கைலாசத்தின் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கிறார். விரைவில் வந்து சேருங்கள். கோயில் பணி முடிந்து குடமுழுக்குக்கு ஆயத்தமாக இருக்கிறது. கோயிலுக்கும் நகரத்திற்கும் பெயரிடும் பிரச்னைதான் மேலோங்கி இருக்கிறது. உடன் வந்து சேருங்கள்'' என்று எழுதிச் செய்தியைக் காற்றினும் கடிதாகச் சென்று சேர்ந்து விடையுடன் வருமாறு செய்க'' என்றார்.

வீரமாதேவிக்கு ஏது செய்வது என்று விளங்காமல், 'கருவூராரின் மனத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கில்லையா? அல்லது அவர் புரிந்து கொள்ள முடியாதா புதிரா?' என்று வீரமாதேவி தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

வீரமாதேவி அருகே சித்தர் வந்தார். ''குழந்தை என்று அழைப்பதா, தேவி என்று அழைப்பதா என்று எனக்கே தெரியவில்லை, வீரமாதேவி! என்ன செய்வதென்று திகைக்க வேண்டாம். செய்தி சென்றடைந்தவுடன் இராசேந்திரன் திடுக்கிட்டு உடனே திரும்பி வந்து விடுவாரே என்ற கவலைதானே? அந்தக் கவலை உனக்கு முன்பே இருக்க வேண்டாமா? அவருக்குச் செய்தி அனுப்பத் துடித்தாயே கங்கை நீரைக் கொண்டு வராமல் திரும்பி வருவாரே என்று அப்போது நீ நினைத்திருக்க வேண்டாமா? - போகட்டும். உனக்குப் பெரிய மனது. களங்கமற்ற மனது. வஞ்சனையில்லாத மனது. கலைக்



காகவே வாழும் கன்னி நீ என்பது உலகத்துக்குத் தெரிய வாய்ப்பில்லை.

''வீரமாதேவி! பஞ்சவன் மாதேவி பழையாறை வரத் துடிக்கிறாள். மரணப் படுக்கையிலிருக்கும் அரிந்தவன் தேவியைக் காண்பதற்காக அன்று; இங்கே பூலோக கைலாயம் உருவாகிறது. பிரம்மாண்டமான கோயில், நிர்மாணிக்கப்பட்டு விட்டது. தஞ்சைக்கு இணையான பெரிய நகரம் அமைந்து விட்டது. நகரத்திற்குக் குடிநீரும், பயிர் வளரப் பாசன நீரும் கொடுக்க, பெரிய ஏரி வெட்டப்பட்டு விட்டது என்ற செய்தியை இங்கிருந்து சென்று சிலர் சொல்லி யிருப்பார்கள். பட்டத்து அரசி தான்; ஆனால் சாதாரண மனிதனுக்கு இருக்கக் கூடிய இலட்சணத்துள் ஒன்றான பொறாமை அவளிடம் ஆரம்பம் முதல் குடிகொண்டிருக்கிறது. நகரத்திற்கும் கோயிலுக்கும் உன் பெயரைச் சூட்டிவிடப் போகிறார் களோ என்ற கவலையும், பயமும் அவளுக்கு ஏற்பட்டு விட்டன.''

''அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதுதான் இப்போது கேள்வி. இராசேந்திரன் கங்கைக் கரைக்குப் புறப்பட இருக்கிறான். அதற்குள் நம் தூதர்கள் செய்தி கொண்டு செல்ல வேண்டும்'' என்று சித்தர் சொல்லும் போது அவருக்கே குடமுழுக்கு உரிய நாளில் நடைபெறுமா என்ற ஐயம் ஏற்பட்டது.





## 79. கங்கை வரும்

கோதாவரிக் கரையில் நின்று கொண்டிருந்த பெரும் படகுகளில் ஏறுவதற்கு ஆயத்தமான இராசேந்திர சோழ தேவர், கரையை நெருங்கிக் கொண்டிருக்கும் புலிக்கொடி பறக்கும் படகுகளைக் கண்டவுடன் படகில் ஏறாமல் நின்றார்.

அருகில் இருந்த திருமந்திர ஓலை நாயகத்தை அழைத்து, ''வருவது நம் படைவீரர்களா?'' என்று கேட்டார்.

சற்று உற்றுப் பார்த்த ஓலை நாயகம், ''ஆம், வெற்றிக் களிப்புடன் வருகிறார்கள் என்று தெரிகிறது'' என்றார் நாயகம்.

''இந்த வயதிலும் தங்கள் பார்வை தெளிவாக, தொலை நோக்குடன் இருக்கிறது. எப்படி அறிந்தீர்கள் வெற்றிக் களிப்புடன் அவர்கள் வருகிறார்கள் என்பதை?'' என்று கேட்டார்.



''பெரிய பெரிய படகுகள் நான்கிலும் புலிக் கொடிகள் தெளிவாகக் காற்றில் அசைந்தாடிப் பறக்கின்றன. தளர்ச்சியைக் காணோம்; படகின் தளத்தில் வீரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அதோ பாருங்கள், அவர்கள் தங்கள் கரத்தை உயர்த்தி வேல், வாளுடன் நிற்பதை! அவர்கள் உரத்த குரலில் ஒன்றாகச் சேர்ந்து வெற்றிக் கீதம் இசைப்பதைக் கேளுங்கள். வானை நோக்கி அவர்கள் வீசுகிறார்களே அவை பூங்கொத்துகள், அவை காற்றில் மிதந்து வருகின்றன.''

இராசேந்திரர், திருமந்திர ஓலை நாயகத்தின் முதுகைத் தட்டிக் கொடுத்து, அவர் கூறியபடியே வெற்றி முழக்கக் குரல் விண்ணை எட்டும் அளவிற்கு எழும் வாழ்த் தொலியைச் செவிமடுத்தார். தேவர்கள் பூமாரி பொழிவது போல் படகுகளிலிருந்து மலர்களைத் தூவுவதையும் பார்த்தார்.

''புறப்பட ஆயத்தமாக இருக்கும் நம் படகுகளில் விரிக்கப்பட்ட பாய்களைச் சுருட்டச் சொல்லுங்கள்'' என்றார்.

பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவியின் பக்கம் திரும்பி, ''தேவி! நல்ல செய்தியை வீரர்கள் கொண்டு வருகிறார்கள் என்றே தோன்றுகிறது. நீ, இருப்பிடம் செல்; வரும் வெற்றி வீரர்களை நான் வரவேற்று அழைத்து வருகிறேன்'' என்று கூறும்போது அவர் குரலில் பரபரப்பு நிறைந்திருந்தது. உள்ளத்தில் பொங்கித் ததும்பும் மகிழ்ச்சி மிகுதியால் அவர் பேசுகிறார் என்பதும் புலப்பட்டது.

நான்கு பெரும் படகுகள் நதிக்கரையின் சற்றுத் தொலைவில் வரிசையாக நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தன.

தொலைவிலிருந்து பார்க்கும்போது சிறியவைபோல் தோன்றிய அந்தப் படகுகள், கரையருகே வந்து நின்ற போது பெரும் மரக்கலங்கள் போல் காட்சியளித்தன. அவற்றினின்று தோணிகள் போன்று சிறு படகுகள் கரை இறக்கப்பட்டன. ஏணியின் வழியே, சிறிய படகுகளில்





வீரர்கள் ஒவ்வொருவராக இறங்கினர். அந்தப் படகுகள் கரையை நெருங்கின.

ஒரு பகுதிப் படைகளின் தலைவனான வீரர் ஒருவர் அரசரை வணங்கி, ''ஜய விஜயீ பவ! சோழ சக்கரவர்த்தி



கள் வாழ்க! நும் கொற்றம் வாழ்க! வடபுலத்திலுள்ள நாடுகளிலெல்லாம் புலிக் கொடியை நாட்டிய செம்பியன் வழிவந்த கோப்பர கேசரி வர்மர் உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர் வாழ்க! வாழ்க! அவர்தம் பட்டத்து அரசியார் பஞ்சவன் மாதேவியார் வாழ்க! வாழ்க!'' என்று கூறி பட்டுத் துகிலால் போர்த்தப்பட்ட தந்தப் பேழையொன்றை அரசரிடம் அளித்து வணங்கி, பின்புறமாக நகர்ந்து, சற்றுத் தொலைவு சென்று நிமிர்ந்து நின்றார்.

மூடப்பட்ட பட்டுத் துகில் நீக்கி, தந்தப் பேழை திறந்து, அதன் நடுவே இருந்த ஓலைச் சுருள் ஒன்றை யெடுத்துப் படித்தார்.

அவர் முகம் மலர்ந்தது. திருமந்திர ஓலை நாயகத் துடன், நதிக்கரை மாளிகைக்கு விரைந்தார். அவரைத் தொடர்ந்தனர் மற்ற அதிகாரிகள்.

செய்தி கொண்டு வந்த தூதன் கூறியவற்றை, இராசேந் திரன் மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டார்.

சென்ற இடங்களிலெல்லாம் வெற்றி! வேங்கி, சக்கரக் கோட்டம், மதுரை மண்டலம், கலிங்கம், ஒட்டரம், நாமணைக் கோணப் பஞ்சப்பள்ளி நாடுகளிலெல்லாம் நம் படைவீரர்கள் வென்று வெற்றிவாகை சூடியுள்ளனர் என்று பெருமிதத்துடன் உரக்கக் கூறினர்.

மகிழ்ச்சியான இந்தச் செய்தியைப் பஞ்சவன்மாதேவி கேட்டுக் கொண்டிருந்தார். இனி கங்கையில் நீராடச் செல்வதற்கு எந்தத் தடையுமில்லை. வேற்று நாட்டு மன்னர்கள் சமாதானமாகி, அரசரை வரவேற்க ஆயத்த மாக இருக்கிறார்கள் என்பதையும் அரசி அறிந்து கொண்டாள்.



ஆனால் நதிக்கரை வரை சென்று படகில் ஏறும் தருணத்திலும், பயணம் தடைப்பட்டது. அது நல்ல சகுனமாக அரசிக்குத் தோன்றவில்லை.

தூதுவர் கொண்டு வந்த செய்தியிலிருந்து அடுத்து நிறைவேற்ற வேண்டியவற்றைப் பற்றி அரசர் கலந் தாலோசனை செய்து கொண்டிருந்தபோது, பழை யாறையிலிருந்து மிக முக்கியமான செய்தியைச் சோழ வீரர்கள் கொண்டு வந்திருப்பது தெரிய வந்தது.

அடுத்து நிறைவேற்ற வேண்டியவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த போது பழையாறையிலிருந்து வந்த சேதியைக் காண அவருக்கு நேரமில்லை. ''தேவி! தூதுவர்களிடம் நீயே கேட்டறிந்து கொள்'' என்று கூறிவிட்டு அரசர் அதிகாரிகளுடன் கலந்து பேசுவதில் முனைந்தார்.

அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை மிகக் கவலைக் கிடமாக இருப்பதாகவும், உடனே பழையாறை வரு மாறும் இளவரசர் கைப்படத் தெரிவித்திருந்தார். செய்தியறிந்த பஞ்சவன் மாதேவிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அடங்கச் சில கணங்களாயின.

ஓலையை எடுத்துக் கொண்டு அரசரிடம் விரைந்து, ''சக்கரவர்த்திகளே! இந்தச் செய்தியைக் கேட்டீர்களா? அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்துச் செய்தி யைப் பாருங்கள். கணம்கூடத் தாமதிக்கக்கூடாது, நாம் உடனே புறப்பட வேண்டும். நம் பயணம் இன்று தடைப்பட்டபோதே என் மனம் துணுக்குற்றது. அதுமுதல் நெஞ்சில் ஒருவிதப் படபடப்பு. வயிற்றில் ஒரு கலக்கம். ஏதோ நிகழப்போகிறது என்ற பீதி ஏற்பட்டது. கங்கைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று சொல்ல

முடிவு செய்தேன். இன்றே பழையாறைக்குப் புறப் பட்டால் போய்ச் சேரப் பல நாள்கள் பிடிக்கும். அதற்குள் தேவிக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்? ஐயோ என்னால் நினைக்க முடியவில்லையே'' - வார்த்தைகளை முடிக்கக் கூட அரசியால் இயலவில்லை.

சக்கரவர்த்திகளால் உடனே முடிவெடுக்க இயல வில்லை. கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் யோசிக்கலானார். நடைபெற வேண்டிய பற்பல சம்பவங் கள் அவள் மன மேடையில் கூத்தாடின. சில அவரைப் பார்த்துச் சிரித்தன. சில அவரைப் பார்த்துக் கேள்விகள் கேட்டன. சில அவரைப் பயமுறுத்தின.

கட்டப்பட்ட புதிய பெரிய கோயில் அவர் கண்முன் கம்பீரமாக நின்றது. வெட்டப்பட்ட பரந்த ஏரி தோன்றி யது. அகலமான வீதிகளும், புதிய வீடுகளும் அவர் எதிரே கம்பீரமாகக் காட்சியளித்தன. விமானம் உயர்ந்து நிற்கிறது. திருச்சுற்றிலுள்ள மாடங்களில் காட்சிதரும் கோயிலில் அழகிய சிற்பங்களை, சித்தர் பார்த்துப் பாராட்டுகிறார். அருகே வீரமாதேவி புன் முறுவலுடன் நிற்கிறாள். சிற்பி மாணிக்க சேகரன் அருகே நிற்கிறான். அந்தக் காட்சி இராசராசனை மெய்சிலிர்க்க வைக்கிறது.

''கோயிலின் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதாக முடிவெடுத்துச் சென்றேனே - கங்கை நீரைக் கொண்டுவராமல் சோழ நாட்டின் எல்லையில் அடியெடுத்து வைக்க மாட்டேன் என்று உறுதி பூண்டேனே... கங்கை நீரைக் கொண்டு வராமல் எப்படித் திரும்புவது?

''பழையாறையில், என் அன்புக்குரிய அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அங்கே கங்கைக் கரையின் படைத் தலைவன்



அரையர் இராசராசன் காத்திருக்கிறான். வடபுலத்து மன்னர்களை அவன் அடிபணிய வைத்துவிட்டான். அவனுடைய வீரத்தை, சேவையைப் பாராட்டி அவனுக் குப் புகழ்ப் பெயர் சூட்ட முடிவு செய்திருந்தேனே - கங்கைக்குச் செல்வதா, பழையாறை திரும்புவதா, குட முழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வராமலிருப்பதா - என்ன செய்வது?'' - இராசேந்திரன் மிகக் குழப்பத்துடன் இரு கரங்களாலும் நெற்றியைப் பிடித்துக் கொண்டு அங்கேயே குனிந்த தலையுடன் அமர்ந்தார்.

அதைப் போன்ற சமயங்களில் அவர் எதிரே நிற்காமல், அதிகாரிகளும், பணியாளர்களும், காவலர் களும் அங்கிருந்து சென்றுவிடுவர். அதைப்போல் ஒவ் வொருவராகச் சென்றனர்.

பஞ்சவன் மாதேவிக்கு ஒன்றும் புரியவில்லை. அன்று பகல் முழுவதும் அரசர் ஏதும் பேசவில்லை. சிந்தனை - சிந்தனை - ஒரே சிந்தனையில் ஆழ்ந்தார். அதுபோன்ற வேளைகளில் அவர் மௌனமாக உட்கார்ந்திருப்பார். குறுக்கும் நெடுக்கும் நடப்பார். கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருப்பார். நெடுநேர மிருப்பார்.

பகல் கழிந்து, இரவு வந்தது. அவர் உறங்கவில்லை என்பது அவர் புரண்டு படுப்பதிலிருந்து தெரிந்தது.

ஒருமுறை பஞ்சவன் மாதேவி அவரிடம் ஏதோ கேட்க முனைந்தாள். பழையாறை திரும்ப வேண்டும் என்ற பரபரப்பு அவர்களிடம் இருந்தது. பயணத்திற்கு இப்போதே ஆயத்தம் செய்தால்தானே பரிவாரங்களுடன் புறப்பட முடியும்? ஒருவேளை கங்கைக் கரைக்குச் செல்வது என அரசர் முடி வெடுத்துவிட்டால்...?

கங்கையில் நீராடுவதில் அரசிக்கு விருப்பமோ ஆர்வமோ முன்பு எப்போதுமில்லை. காவிரியைவிட கங்கை எந்த விதத்தில் உயர்வு பெற்றது என்று அரசி நினைப்பாள்; பேசுவாள்; விவாதிப்பாள். ஆனால், அரசர் எதிரே தன் கருத்தை வெளியிடும் துணிவு அரசிக்கு இல்லை.

வீரமாதேவிதான் கங்கை மீது ஆசையை உண்டாக்கினாள் என்று அவள் எண்ணினாள். கங்கையில் அரசருடன் சென்று நீராட வேண்டும் என்ற ஆசையால், கங்கை நீரைக் கொண்டு வந்து குடமுழுக்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை அரசர் மனத்தில் அவள்தான் தூண்டி விட்டாள் என்றும் எண்ணினாள். அதனால் கங்கைக் கரைக்குப் புனித நீராடச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அரசருக்குத் தோன்றிய போது வீரமாதேவியின் மீது ஏற்பட்ட வெறுப்பில் அவள் கங்கைப் பயணத்தில் ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், கங்கை மீது அரசருக்குள்ள பற்றும் மரியாதையும் அசைக்க முடியாதவை என்று அவள் உணர்ந்தாள்.

திருஞானசம்பந்தரும், சுந்தரரும், நாவுக்கரசரும் இறைவன் மீது பதிகங்கள் பாடிய போதெல்லாம் அரசர் உள்ளம் உருகி, சிவபெருமானின் செஞ்சடையில் வீற்றிருக்கும் பெருமை பெற்ற கங்கையைப் போற்றிப் பாடிய பதிகங்களை அரசர் விரும்பிக் கேட்பதும், மீண்டும் மீண்டும் கேட்பதும், பாடலிலே உள்ளம் தோய்ந்து மெய் மறந்து நிற்பதும், அவர் சிந்தனையிலிருந்து கங்கை எனும் புனித நதியை மறக்க வைக்க முடியாது என்பதை அரசி உணர்ந்தாள்.



சக்கரவர்த்திகள் பேசாமல், முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறார் என்பதை பஞ்சவன்மாதேவி உணர்ந்தாள். அவருடைய குழப்பத்தைத் தீர்த்து சரியான முடிவை எடுக்க அவளால் முடியும். ஆனால் அதை அவரிடம் எப்படி எடுத்துச் சொல்வது? அவரருகே சென்று அமர்ந்து மெல்ல அவரைத் தொட்டால், அவர் சிற்றமுற்று கடுஞ்சொல் கூறிவிட்டால்...?

பஞ்சவன் மாதேவியும் கவலையுடன் விழித்திருந்தாள். அரசரிடம் செல்வாள்; திரும்பி வருவாள். பிறகு எப்போது உறக்கம் வந்ததோ தெரியாது; தன்னை மறந்து உறங்கினாள்.

பொழுது புலர்ந்தது. விதவிதமான புள்ளினங்கள் இசைத்த பூபாளம் அரசியை விழித்தெழச் செய்தது. அருகே இருந்த அரசரைக் காணவில்லை. அரசர் வெளியே வந்து மாளிகையை ஒட்டி ஓடிக்கொண்டிருந்த கோதாவரியை உற்று நோக்கியவாறிருந்தார்.

நதியின் கீழ்த்திசை வெளுத்து, வானச் சீலையில் மெல்லிய செங்கோடுகள் வரையப்பட்டது. படர்ந்து வரும் மேகக் கூட்டத்தின்மீது செம்பொன் நிறம் பூசப்பட்டது வானத்தின் விளிம்பில் கதிரவனின் வருகைக்குக் கட்டியம் கூறப்பட்டது.

வட்டத் திகிரி போல் சுழன்று கொண்டு செங்கோளமாகக் கதிரவன் கீழ்த் திசையில் தோன்றினான்.

முதல் நாள் இருந்த குழப்பம் தீர்ந்தது போன்ற உணர்வு, புதிய தெம்பு அவர் மேனியெங்கும் பரவியது

இராசேந்திர சோழ சக்கரவர்த்தி கதிரவனைக் கையெடுத்துக் கும்பிட்டுத் தன்னை மறந்து நின்றார்.

கோதாவரியின் கீழ்த் திசைக் கோடியினின்று வெண்பஞ்சு மேகங்கள் மெல்லப் படர்ந்து வானவெளியில் மேலெழுந்து மிதந்தன. அவற்றின் இடையே ஓர் உருவம். புனிதமான தோற்றம். அருள் ஒளிரும் திருமேனி. மெல்ல மெல்லப் பூமியில் இறங்கி வருகிறது. அந்த உருவம் சிறிது நேரத்தில் தன்னை நோக்கி வருவதை உணர்ந்தார்.

அவர் மேனி சிலிர்த்தது. விழிகள் அத்தோற்றத்தை நோக்கி அசையாது நிலைபெற்று நின்றன.

அந்தப் புனிதமான வடிவுடையவர் வானத்து மேகக் கூட்டங்களில் அமர்ந்து வந்தார். நீலவானக் கடலில் நீந்தி வந்தார். ஓடும் பிரவாகத்தில் நடந்து வந்தார்.

''யார்... யார்?'' வார்த்தைகள் வரத் தடுமாறின.

'அவரா? அவராக இருக்க முடியாது. அவர் இங்கு வருவாரா?

'அவர் இங்கு இப்போது வந்தால் நான் பெரும் பேறு பெற்றவனாவேன். எந்தத் திசை செல்வது என்று தெரியாமல் திகைக்கிறேன். என்ன முடிவு எடுப்பது என்று தெரியாமல் குழம்புகிறேன். எனக்கு வழிகாட்ட நான் யாரை அழைப்பது என்று தடுமாறுகிறேன். அவர் வந்தால் எனக்குத் தெளிவு பிறக்கும், குழப்பம் தீரும்.

'என்னுடன் என்றுமே இருந்து வழிகாட்டும் தேவ புருடராகிய அவர் இப்போது இந்தக் கணம் இங்கு வந்தால் ஆடவல்லான் அருள் எனக்கும் பரிபூரணமாக இருக்கிறது என்றுதான் பொருள்.'

அதோ அவர் கரம் உயர்த்துகிறார். அஞ்சாதே என்று அபயமளிக்கிறார். வெண்தாடிக்கு இடையே முத்துப்பல் ஒளிரச் சிரிக்கிறார்.



ஆம்; அவரேதான்! நான் எதிர்பார்த்த தேவபுருடனே தான். சோழர் குலத்தின் உயர்வுக்குத் தோன்றாத் துணையாயிருந்து காப்பாற்றுபவர்தான். அவர்தான் கருவூர்ச் சித்தர்.

விழிகளை அகல விரித்துப் பார்த்தார் அரசர். தாம் காண்பது கனவா - நனவா என்று கண்களைக் கசக்கிப் பார்த்தார்.

சூரியக் கதிர்கள் ஊடுருவ, ஒளி வீசும் மற்றொரு கதிரவன் போல் சித்தர் திகழ்ந்தார்.

''இராசேந்திரா!'' என்று அன்பைக் குழைத்து வடித்தெடுத்த அதே குரல். யாழிசை போலும், கந்தவர்கள் மீட்டும் வீணை நாதம்போலும் அந்தக் குரல் ஒலித்தது.

''சித்தர் பிரானே! எங்கள் குலம் காக்க வந்த தேவரே!'' என்று கூறியவாறு இராசேந்திர சோழ தேவர் சித்தரின் திருவடிகளில் வீழ்ந்தார்.

சித்தர் குனிந்து, இராசேந்திரனைத் தொட்டு எழச் செய்து, ''மகனே! கதிரவனைப் பார்த்து வணங்கி நிற்கும் உன் முகத்தில் காலைப் பொழுதில் கவலைக் கோடுகள் ஏன்?'' என்று சக்கரவர்த்தியின் கரத்தை மெல்லப் பிடித்தவாறு கேட்டார்.

இராசேந்திரன் வியப்புடன், சித்தரைப் பார்த்தார். 'சித்தர் எங்கிருந்து வருகிறார்? இந்த இடத்திற்கு வந்தது எப்படி?'

''இராசேந்திரா! நீ சொல்லாவிட்டாலும் உன் குழப்பத்தை நான் அறிவேன். உன் கவலைக்கு மருந்தளிக்கிறேன். நான் சொல்கிறேன் - கங்கைக் கரைக்கு நீ செல்ல



வேண்டாம்'' என்று கூறி மாளிகை மண்டபத்தின் உள்ளே சென்றார்.

''சித்தர் பிரானே! கங்கை நீரைக் கொண்டு வர வேண்டும் என்று நான் எடுத்த முடிவு என்னாவது?'' என்று பதற்றத்துடன் கேட்டார் இராசேந்திரன்.

''கங்கை வரும்... புனிதக் கங்கை நீரால் புதிய கோயில் கலசத்துக்கு குடமுழுக்கு செய்யத்தான் போகிறாய்'' என்றார்.

'கங்கை வருமா? நான் கங்கைக் கரைக்குச் செல்லாமலே கங்கை வருமா? சித்தர் என்ன வழி கூறப் போகிறார்? என்று இராசேந்திரன் வியப்புடன் சித்தரை நோக்கினார்.







## 80. சித்தர் சிரித்தார்

கங்கைக் கரையினின்று வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்த தூதர் கூறியவற்றை அரசி பஞ்சவன் மாதேவி அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

வடக்கே, வடமேற்கே, கிழக்கே, வடகிழக்கே என்று சோழரின் வீரப் படைகள் பல திசைகளுக்குச் சென்றதை அவர்கள் தெரிவித்தார்கள்.

''வடமேற்கே நம் படைகள் சென்றன. புதிய இடம், பெரிய நதி, மிகப் பெரிய நதி. எதிர்க் கரையைக் காணமுடியாத அளவுக்கு மிகமிக அகலமான மாபெரும் நதி'' என்று அவர்கள் விவரித்தார்கள்.

''இதோ இந்தக் கோதாவரியின் மறுகரை தெரிகிறதா? இதுவும் நம் காவிரியை விடப் பெரியது. அதைப் போலத்தானே? அதற்கு ஏன் பெரியது, மிகப் பெரியது என்று கையை அகலமாக விரிக்கிறீர்கள்?'' என்று பஞ்சவன் மாதேவி மிகுந்த எரிச்சலுடன் கேட்டாள்.

அப்படி இல்லை என்பதற்கு அடையாளமாக, ''ஹூம் ஹூம்'' என்று கூறி அவர்கள் தலையை அசைத்தார்கள். ''இந்தக் கோதாவரியைப் போல நான்கு மடங்கு. ஆறு மடங்கு, எட்டு மடங்கு பெரியது. கங்கையைவிடப் பெரியது. ஆகவே நடு ஆற்றில் படகில் செல்லும்போது எங்கள் குலை





நடுங்கியது, குலதெய்வத்தை வேண்டிக் கொண்டோம். படகு, சுழலில் சிக்கிக் கவிழாமல் இருக்க வேண்டும் என்று.''

சிந்து நதியைப் பற்றி அவர்கள் வர்ணிப்பது அரசிக்குப் பிடிக்கவில்லை. ''உம் - அங்கே எதற்குச் சென்றீர்கள்? கங்கைக் கரைக்குச் செல்லுமாறு தானே உத்தரவு?'' - அரசி கேட்டாள்.



''சக்கரவர்த்திகள் கட்டளையை மீறுவோமா தேவி? ஒரு பகுதிப் படைகள் கங்கைக் கரைக்குச் சென்றன. ஒரு பகுதி மதுரை மண்டலம் அடைந்தது. சென்ற இடமெல் லாம் எதிர்ப்பின்றி வெற்றி, வெற்றி! புலிக் கொடியைப் பார்த்தவுடனேயே அங்குள்ள அரசர்கள் அஞ்சி நடு நடுங்கிச் சமாதானம் பேசிச் சரணாகதி அடைந்தனர். கண்ணபிரான் பிறந்து, வளர்ந்து, விளையாடிய மதுரா நகரை மேற்குத் திசையினின்று வந்த பெயர் சொல்ல முடியாத வேற்று நாட்டரசன் திடீரென்று தாக்குவதாகச் செய்தி வந்தது.

''கேள்வியுற்ற நம் படைத்தலைவர் வெகுண்டெழுந் தார். ஆயிரக்கணக்கான நம் வீரர்கள் புயலெனப் பாய்ந் தனர். வாயில் பெயர் நுழையவில்லை. கஜினியோ, கஜினிமுகமதோ, அவனை வேரோடு நசுக்காவிடில் பெரும் ஆபத்து என்பதை அங்குள்ள சிறு சிறு நாட்டரசர் கள் உணர்ந்தனர். எப்போதும் அவர்களுக்குள் சிறு சிறு பிணக்குகள், சச்சரவுகள். ஒருவரோடொருவர் சண்டை யிட்டுக் கொள்வார்கள். தங்கள் பொதுப் பகைவரின் ஆபத்தை உணர்ந்த அவர்கள் புலிக்கொடி வேந்தர் உதவியை நாடினார்கள். நம் சக்கரவர்த்தி முன்பே கட்டளை யிட்டிருந்தார். போசராசனும், சேதி நாட்டுக் காளசூரி மன்னன் காங்கேய விக்கிரமாதித்தனும், சாந்தல நாட்டு மன்னன் நித்தியாதரனும் நம் புலிக்கொடியின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்தனர். பகையரசர் கஜினி முகமதுவை எதிர்த்துப் போரிட்டனர்.

சோழ வீரர்களின் தாக்குதலைத் தாங்காமல் கஜினி பின் வாங்கி ஓடினான்.''



சோழப் படைகளின் வெற்றியை, தூதுவர்கள் விவரித்ததை ஆர்வத்துடன் பஞ்சவன் மாதேவி கேட்டுக் கொண்டிருந்தாள்.

''பிறகு, கஜினி என்ன ஆனான்? கங்கை நீரைக் கொண்டு வரும் நம் நோக்கம் என்ன ஆனது? கங்கை கரைக்குச் செல்ல வேண்டும் என்று எவ்வளவு நாள்கள் கோதாவரிக் கரையில் காத்திருப்பது? அதைப்பற்றிச் சொல்லுங்கள். பழையாறையில் என் சகோதரி அரிந்தவன் மாதேவி மரணப்படுக்கையில் இருக்கிறாள். நாங்கள் உடனே போயாக வேண்டும். கங்கை நீரா, இளவரசியைக் கடைசி கடைசியாகக் காண்பதா என்ற குழப்பத்தில் நானிருக்கிறேன். சக்கரவர்த்திகளும் இருக்கிறார். சொல்லுங்கள், சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்' - அரசி பரபரப்புடன் கேட்டாள்.

செய்தி கொண்டு வந்த தூதர்கள் கலக்கமடைந்தார்கள். அவர்கள் என்ன மறுமொழி சொல்வார்கள்? இராசராசன் சக்கரவர்த்திகளுக்குச் சொல்லியனுப்பியதை எடுத்துக் கூற வந்திருக்கிறார்கள்.

வடபுலத்திற்குச் சென்றிருக்கும் படை வீரர்களின் தலைவர் அரையன் இராசராசன் சொல்லியனுப்பியதை எடுத்துக் கூற முற்பட்டார்கள்.

''கங்கைக் கரையில் படைத் தலைவர் தங்களுக்காகக் காத்திருக்கிறார். அந்த நாட்டுச் சிற்றரசர்கள் சக்கரவர்த்தி களை வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறார். சக்கர வர்த்தியையும், தங்களையும் அங்கே எதிர்பார்த்திருக் கிறார். தங்கள் திருப் பாதங்கள் பதிந்து வர மலர்களைத் தூவ நந்தவனத்து மலர்களை ஏற்பாடு செய்திருக்கிறார்.

மற்றுமோர் அதிசயத்தை - புதுமையைச் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார். உலக அதிசயத்துள் ஒன்றாக அது அமைய வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்...'' தூதர்கள் சொல்லிக் கொண்டே போனார்கள். அவர்கள் பயம் தெளிந்துவிட்டது. தைரியமாகப் பேசத் தொடங்கினார்கள்; உற்சாகமாகவும் பேசத் தொடங்கினார்கள்.

''அதிசயமா - அப்படி என்ன அதிசயம்?'' அரசி கேட்டாள்.

''அதை விவரிக்க எங்களுக்கு ஆற்றல் இல்லை. அந்தக் கண்கொள்ளாக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகளைத் தேட வேண்டிய நிலையிலிருக்கிறோம். லட்சோப லட்சம் மலர்கள். சம்பங்கியும், முல்லையும், தாமரையும், அல்லியும், பாரிஜாதமும் பூத்துக் குலுங்கும் நந்தவனத்திலிருந்து பக்குவமாக மலர்களைக் கொய்து நடைபாதையில் ரத்னக் கம்பளம் விரித்தது போன்று தூவி, தங்கள் செம்பொற்பாதங்களை அவற்றில் பதிய வைக்கத் திட்டமிட்டிருக்கிறார், இந்திரதரன் என்ற கங்கை நாட்டு அரசர்.''

பஞ்சவன் மாதேவியின் விழிகள் வியப்பால் விரிந்தன. சக்கரவர்த்திகளின் பெருமை எட்டுத் திக்கும் பரவியிருந்தது கேட்க அவளுக்குப் பெருமையாக இருந்தது.

''அதில் என்ன அதிசயம்?'' தேவி கேட்டாள்.

''கங்கைக் கரையில் ஆயிரத்தெட்டுப் பொற்குடங்களில் கங்கை நீரை நிறைத்து தங்களுக்கு அபிஷேகம் செய்யப் பொற் குடங்களைப் பொற் கொல்லர்கள் இரவு பகலாகச் செய்து வருகிறார்கள். கங்கை பாயும் நாட்டு



வேத பிராமணர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் அந்திப் பொழுதில் வேதம் ஒலிக்கப் போகிறார்கள். சோழப் படை வீரர்களால் தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்ட மன்னர்கள் கூடுகிறார்கள். பொன்னும், மணியும், கோமேதக இரத்தினங்களும், வைர, வைடூரியங்களும் சக்கரவர்த்திகளின் திருப்பாதங்களில் காணிக்கையாக்கப் பெரிய பெரிய பொற்பேழைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.''

இந்த அதிசய அற்புதங்களை விவரிக்கும் பொழுது தூதர்களின் குரலில் உற்சாகம் இருந்தது. நிமிர்ந்து நின்றார்கள். முகம் மலர்ந்து பேசினார்கள். கரங்களை அகல விரித்து, அந்த நிகழ்ச்சியை விவரித்தார்கள். அரசி எதிரே பேசுகிறோம் என்ற அச்சமில்லை.

நடைபெறவிருக்கும் கங்காபிஷேக நிகழ்ச்சி. பஞ்சவன் மாதேவியின் கண் எதிரே தாண்டவ மாடியது.

''இவை எல்லாம் எப்போது நடைபெறும்?'' அரசி கேட்டாள்.

''புஷ்பக விமானம் ஒன்று இருந்தால், சக்கவர்த்திகளும் தாங்களும் அதில் அமர்ந்து வானமார்க்கமாக சில நாழிகைகளில் அங்கே சென்று சேரலாம். அவர்கள் ஒவ்வொரு நொடியும் தங்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.'' தூதர்கள் ஆவலுடன், உற்சாகத்துடன் கூறினார்கள்.

''புஷ்பக விமானத்தைத் தேவலோகத்திலிருந்து யார் கொண்டு வருவது? சோழ மூதாதையர் முசுகுந்த சக்கரவர்த்தி அசுரர்களை ஒழிக்க தேவேந்திரனுக்கு உதவியிருக்கிறார். அந்த நன்றியை நினைவில் கொண்டு, இப்போது

தேவேந்திரன் புஷ்பக விமானத்தை அனுப்பலாம். விமானத்தில் செல்லாவிடில் அங்கே செல்ல எவ்வளவு நாள்கள் ஆகும்?' - அரசி கேட்டாள்.

தூதர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''கங்கை நதிக் கரையையும், அதன் பிரவாகத்தையும், புனிதத் தன்மையையும், அங்கே எங்களுக்கு நடக்கவிருக்கும் வரவேற்பையும், உபசரணையையும் அவர்கள் நடத்தவிருக்கும் கங்காபிஷேகத்தையும் நீங்கள் வர்ணிப்பதைக் கேட்டு எனக்கும் ஆசையாக இருக்கிறது. ஆனால்...''

அடுத்து அரசி என்ன சொல்லப் போகிறாரோ என்று தூதர்கள் அவள் முகத்தையே உற்று நோக்கினார்கள்.

''சக்கரவர்த்திகளிடம் நான் சொல்கிறேன். ஆனால் என் நினைவெல்லாம் பழையாறையிலிருக்கிறது. அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அரிந்தவன் மாதேவியின் நிலை எப்படி இருக்கிறதோ என்ற கவலையில் கங்கையில் நீராடுவதைப் பற்றி என்னால் நினைக்க முடியவில்லை. மனம் சிந்தனைச் சுழலில் சிக்கித் தடுமாறுகிறது. நீங்கள் சொன்ன புஷ்பக விமானமிருந்தால் சில நொடிகளில் நான் பழையாறைக்குச் சென்று விடுவேன். முருகபிரானின் மயில் வாகனமோ, திருமாலின் கருடனோ, அன்னப் பறவையோ அல்லது என்னை முதுகில் தூக்கிப் பறந்து செல்லும் சக்தியுடைய எந்தத் தேவ புருடரோ இருந்தால் நான் உடனே பழையாறைக்குத்தான் செல்வேன்.

''ஆனால்... ஆனால் எனக்கு நம்பிக்கை தருவதற்குக் கருவூர்த் தேவர் வந்திருக்கிறார். சரியான வேளையாகப்



பார்த்து அவர் இங்கே தோன்றிவிட்டார். அவர் எனக்கு வழிகாட்டுவார். என் சஞ்சலம் தீர்ப்பார்'' என்று பஞ்சவன் மாதேவி கைகூப்பி விழிகளை மூடியவாறு துதிப்பது போல் உருக்கமாகப் பேசினாள்.

அருகே பன்னீரும், பாரிஜாதமும் சேர்ந்து மணம் வீசுவது போல் தேவமணமும். சந்தன மணமும், தேவதாரு மகிழ மலர் மணமும் ஒன்று சேர்ந்து காற்றில் மிதப்பது போன்ற நறுமணம்.

பஞ்சவன் மாதேவி விழி திறந்தாள். கருவூர்ச் சித்தர் அருகே நின்றிருந்தார். அவர் அருகே சோழ சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் மேலே அலங்கரிக்கும் பட்டாடையை இடுப்பில் கட்டியவாறு கைகட்டி மிகவும் பயபக்தியுடன் நின்றிருந்தார்.

''பஞ்சவன் மாதேவி என்ன சொல்கிறாள் என்று கேட்போம், வா'' என்று இராசேந்திரன் பக்கம் திரும்பிய சித்தர், ''பார்த்தாயா இராசேந்திரா! உன் இல்லத்தரசியின் வேண்டுதலை? சஞ்சலம் தீர்ப்பேனாம்; வழிகாட்டுவேனாம்! எவ்வளவு உயரிய நம்பிக்கை! கங்கையில் புனித நீராட வேண்டும் என்பது உன் ஆவல்; இலட்சியம். பட்டத்து அரசிக்கோ பழையாறை செல்ல வேண்டும் என்ற துடிப்பு'' என்று கூறி பஞ்சவன் மாதேவியின் விழிகளைக் கூர்ந்து நோக்கியவாறு, ''தேவி! உண்மையைச் சொல்ல வேண்டும், அரிந்தவன் மாதேவியிடம் உனக்கு அவ்வளவு பற்றா? அப்படித் தோன்றவில்லையே! இராசேந்திரனின் அபிமானம் மிக்க வீரமாதேவியின் மீதுதான் உன் கவனம், எண்ணமெல்லாம். அங்கே கட்டிமுடிக்கப்பட்டிருக்கும் பெரிய கோயிலைக் காண வேண்டும், உருவாகியிருக்கும் பெரிய நகரத்தைக் காண

வேண்டும், கட்டி முடிக்கப்பட்டிருக்கும் அழகிய மாளிகையில் வீரமாதேவி குடியேறிவிடப் போகிறாளே என்றஞ்சி, அந்த மாளிகையில் நல்ல வேளையில் குடிபுகுந்து விடவேண்டும். அதுதானே உன் எண்ணம்?''

சித்தர் உரை கேட்ட பஞ்சவன் மாதேவி நடுநடுங்கினாள். அரசர் அருகே இருக்கிறார்; சற்று விலகித் தொலைவில் அதிகாரிகள், தூதர்கள் நிற்கிறார்கள்; நம் மனத்தில் இருப்பதை அப்படி அப்படியே விண்டு வைத்து விட்டாரே! அவர்கள் கேட்டிருப்பார்களே. என்ன நினைப்பார்கள்? இதே போல் வேறு யாராவது சொல்லியிருந்தால் நாம் அமைதியாயிருப்போமா? சொன்னவருக்குத் தண்டனை வழங்க முனைந்திருப்போமே!-

''சுவாமி சுவாமி!'' என்று பஞ்சவன்மாதேவி கதறினாள். சித்தர் பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள். பேச்சு வரவில்லை. இராசேந்திரனும், சித்தரும் பஞ்சவன் மாதேவியைத் தூக்கி நிறுத்தினர்.

சித்தர், பஞ்சவன் மாதேவியைச் சிறுகுழந்தைபோல் அணைத்து, கண்ணீர் துடைத்து, ''நீ நினைத்ததில் தவறென்ன? வீரமாதேவியின் மீது உனக்கேற்பட்ட கோபமும் தவறில்லைதான். மனிதர்களின் ஆசைக்கும், வெறுப்புக்கும், அன்புக்கும் அப்பாற்பட்டவர் இறைவன்.

''ஓர் உருவம், ஒரு நாமம் இல்லாத - இறைவனுக்கு இராசேந்திரன் கோயில் கட்டுகிறான். சிறிய கோயிலா? பெரிய கோயில்! மிகப் பெரிய கோயிலாயிற்றே!

''அந்தக் கோயிலின் கருவறையில் பெரிய இலிங்கம் அமைக்கிறான். கருவறை மீது மிகப் பெரிய விமானம் கட்டுகிறான். முழு முதற் கடவுள் வீற்றிருக்கும் மேரு



மலையின் பெயரையே அந்த விமானத்திற்குச் சூட்டுகிறான்.

''ஓர் உருவம் இல்லை என்று சொன்னால் எளியவர்களுக்கு எப்படிப் புரியும்? தன்னை உணர வைக்கவே கலைஞர்களைப் படைத்தான். சிற்பியைப் படைத்தான். சித்திரக்காரர்களைப் படைத்தான். புலவர்களைப் படைத்தான், மொழியைப் படைத்தான், கல்லிலும், செப்புத் தகடுகளிலும் அவர்களுடைய கருத்துகளை உணர்வுகளைத் தீட்டச் செய்தான். இறைவன் புகழ் பாடுமாறு கவிஞர்களைப் படைத்தான். அவர்கள் எண்ணத்தைப் பனை ஓலைகளில் எழுதச் செய்தான்.

''இறைவன் அம்பலத்தில் ஆடுகிறான். அம்பலம் என்பது என்ன? அதற்குக் கரை உண்டா? மண்டபம் உண்டா? மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் உண்டா? அண்டவெளி பிரம்மாண்டமான வெளி - பாழ்வெளி - அதுதான் ஆண்டவன் இருப்பிடம். இதைச் சொன்னால் புரிந்து கொள்ள மாட்டார்களே. நம்ப மாட்டார்களே! நம்பிக்கை இல்லாவிட்டால் நேற்று - இன்று நாளை என்ற கால வித்தியாசம் ஏது? சூரியன் உதிப்பதையும் சந்திரன் மறைந்து மறைந்து தோன்றுவதையும் செய்பவன் யார்? என்று நம்பமாட்டார்களே. அதனால்தான் தில்லைப் பெருவெளியில் அவன் ஆடினான்; ஆடிக் கொண்டே இருக்கிறான்.

''பேரம்பலமான அகண்ட வானவெளியைச் சிறிதாக்கி - சிற்றம்பலமாக்கி நமக்குப் புரிய வைத்தது யார்? கலை உள்ளம் படைத்தவர்கள்தாம். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே என்பதுதானே நியதி!

''உன் அருமைக் கணவர் இராசேந்திரன் தன் தந்தையைப் போல், பாட்டனாரைப் போல், முப்பாட்டனாரைப் போல், சோழர் குலத்தை மீண்டும் உருவாக்கிய விஜயாலயரைப்போல் மாவீரன். திண்தோள் வீரனான இராசேந்திரன் தன் தோள் வலிமையினால், ஆற்றலினால் சோழர் குலத்திற்குப் பெருமை தேடித் தந்தான். உன் மாமனார் இராசராசனுடைய பெரும் வெற்றிகளுக்கெல்லாம், அடைந்த புகழ்களுக்கெல்லாம் உன் கணவர் தான் காரணம் என்பதை நீ அறிவாயா?

''இராசேந்திரனுடன் சமமாக அரியணையில் அமரும் பேறு கிடைக்கும் என நீ அவனைக் கரம்பிடித்தபோது நம்பினாயா? அல்லது உன் தந்தை பழுவேட்டரையர் நினைத்திருப்பாரா?

''காலச் சுழற்சியில் பட்டத்துக்கு உரிமையானவர்களின் காலம் முடிந்தது. உனக்கு அந்தப் பெரும் பாக்கியம் கிடைத்தது.

''போர்க்கள வெற்றி நிலையற்றது என்பதை இராசேந்திரன் உணர்ந்து தன் பெயரும், சோழ நாட்டின் பெயரும் என்றும் நிலைத்து நிற்க என்ன செய்வது என்று சிந்தித்தார். அவர் மனத்தடாகத்தில் மலர்ந்த வாடா மலர்தான் பெரிய கோயில். அவர் கலை உணர்வுக்கு உருக்கொடுத்து நிறைவேற்றச் சபதம் எடுத்தவள் வீரமாதேவி.

''அவள் உன்னிடத்தைப் பிடித்துவிடப் போகிறாள் என்று நீ தவறாக எண்ணியதன் விளைவே அவள் மீது உனக்கு ஏற்பட்ட பொறாமை. அவள் வயிற்றில் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையும் வாரிசு உரிமை கொண்



டாடுமே என்று நினைத்தாய். அப்படி ஏதும் நடைபெறாது என்பதை விளக்கக்கூடிய காலம் வந்துவிட்டது.

''என் அருமைக் குழந்தாய், பஞ்சவன் மாதேவி! உன் மனத்திலுள்ள அழுக்காறுகளை நீக்கிவிடு.

''பழையாறைக்குச் செல்லவேண்டும், அரிந்தவன் மாதேவியைக் கடைசியாகக் காண வேண்டும் என்பது தானே உன் எண்ணம்?

''அப்படியென்றால் கங்கை நீரைக் கொண்டு வந்து, குடமுழுக்கு ஆற்றுவேன் என்று உறுதி பூண்ட இராசேந்திரன் எண்ணம் என்ன ஆவது?

''இரண்டுமே நிறைவேறப் போகின்றன. இப்படி நான் சொன்னவுடன் உனது புருவங்கள் உயர்கின்றன. எப்படி முடியும் எனத் திகைப்படைகிறாய். இராசேந்திரனுக்கும் கூட, அப்படி ஓர் ஐயம் எழவே செய்யும். அந்த ஐயம் தேவையற்றது.

''சோழ சக்கரவர்த்தி தன் மனைவியின் விருப்பப்படி கங்கை நீரைக் கொண்டு வராமல் பாதி வழியிலேயே திரும்பி விட்டார் என்ற அவப்பெயர் கால காலத்திற்கு நிலவ வேண்டுமா? கூடாது, கூடாது. பெரிய கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்த பிறகே சோழ நாட்டை விட்டு வெளியேறுவேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். சோழ நாட்டிலேயே நான் தங்கியிருக்க முடியாது. என் வார்த்தை என்னாவது?

''நடப்பதை - நடக்கக் கூடியதைச் சொல்கிறேன். சொன்னபடி செய்வேன். அதுவே இறைவன் கட்டளை.''

சித்தர் பேசிக் கொண்டே போனார். பேசினார் என்பதைவிட சொல் மாரி பொழிந்தார் என்பதே சரியாகும். மந்திரம் போல் அவர் வார்த்தைகள் ஒலித்தன.

இப்போது இராசேந்திரனும், பஞ்சவன் மாதேவியும் நின்று கொண்டிருக்கவில்லை. இருவரும் சித்தரின் திருப்பாதங்களில் வீழ்ந்து, அவர் பாதங்களைச் சிக்கெனப் பிடித்திருந்தனர். அவர்களின் கண்ணீர், சித்தரின் பாதங்களை நனைத்தன.

''எழுந்திரு இராசேந்திரா! உன் இலட்சியம் நிறைவேறும். எழுந்திரு தேவி! உன் எண்ணமும் நிறைவேறும். கங்கை வரும். பழையாறைக்கும் செல்லலாம்'' என்று கூறி, சித்தர் சிரித்தார்.

''கங்கை வருமா? என்ன இது, சித்தரின் சித்து வேலையா'' என்று நினைக்காதே. இந்தப் புண்ணிய பூமியில் எல்லா நதிகளும் மிகப் புனித நதிகளே! சிந்து, நர்மதா, யமுனை, கங்கை, கோதாவரி, கிருஷ்ணை, காவிரி, பொருநை எல்லாம் இறைவனின் திருமேனியிலிருந்து தோன்றுபவையே. வேற்றுமை, ஏற்றத்தாழ்வு காண்பவன் இறைவனல்லன்.

கோதாவரி நதிக்கரையில் அடுத்த பௌர்ணமி வரை நீங்களிருவரும் அமைதியாகத் தவம் செய்யுங்கள். கங்கை வரும்.

பிறகு, கங்கையுடன் நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்.

இராசேந்திரா! பஞ்சவன் மாதேவி! இதயம் என்பது புனிதமான கோயில். அந்தக் கோயில் தூய்மையாக விளங்க வேண்டும்.



தெற்கே உருவாகியிருக்கும் பெரிய கோயில் இந்த உலகம் உள்ளளவும் அழியாதிருக்கும். அந்தக் கோயிலுக்கும், கோயில் இருக்கும் ஊருக்கும் என்ன பெயர் சூட்ட வேண்டும் என்று கவலைப்படாதீர்கள்.

நல்ல பெயராக அழியாத பெயராக நான் சூட்டுவேன்.

பெயரைச் சூட்டி, குடமுழுக்கு செய்து ஆசி வழங்கிய பிறகே நான் சோழநாட்டை விட்டுச் செல்வேன்.''

இராசேந்திரனும், பஞ்சவன்மாதேவியும் ஏதும் பேசமுடியாமல் திகைத்து நிற்க, சித்தர் திரும்பினார், நடந்தார். சற்றுத் தொலைவு சென்ற பிறகு நின்று அவர்களைத் திரும்பிப் பார்த்தார். கரங்களைத் தூக்கி ஆசி வழங்கினார். அவருடைய அருள் புன்னகை பளிச்சென்று தெளிவாகத் தெரிந்தது.





## 81. நடத்த விடமாட்டேன்

கோதாவரி ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. கோடைக் காலமானதால் ஆற்றில் பிரவாகம் குறைந்திருந்தது. நதியில் நீராட அமைந்துள்ள புண்ணியத் துறையில், மழைக் காலத்தில் சில படிக்கட்டுகள் இறங்கினால் போதும். இப்போது பல படிக்கட்டுகள் இறங்கி, மணற்பகுதியைக் கடந்து நதியில் நீராட வேண்டியிருந்தது.

பௌர்ணமி வரை அமைதியாக விரதமிருக்குமாறு சித்தர் சொல்லியிருக்கிறார். இல்லை கட்டளையிட்டிருக்கிறார். மூன்று வேளைகளிலும் நீராட வேண்டும். சோழ அரசி பஞ்சவன் மாதேவியால் அவ்வளவு படிக்கட்டுகளிலும் இறங்க முடியவில்லை.

மிகத் தூய்மையாகக் கடைப்பிடிக்க வேண்டியது விரதம். புறத் தூய்மை நீரால் அமையும். அகத்தூய்மை வாய்மையால் காணப்படும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

கோதாவரியில் மூன்று வேளைகளிலும் நீராடு துறையில் அரசனும், அரசியும் நீராடினர். கரையருகே



இருந்த மண்டபத்தில் அமர்ந்து அவர்கள் பயபக்தியுடன் சோழர்கள் குலங்காக்கும் தெய்வமான திருச்சிற்றம்பல வாணனின் திருப்பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் குஞ்சிதபாதமுடையவனின் திருமேனியை மனக் கண்முன் நிறுத்தி அவன் நினைவில் வாழ்ந்தனர்.

பொற்பாதமெடுத்தாடும் தூயவனைப் போற்றும் திருப்பதிகங்களை அவர்கள் எதிரே அமர்ந்து ஓதுவார்கள் இசைத்துக் கொண்டிருந்தார்கள்.

சக்கரவர்த்தியும், அரசியும் அமர்ந்து பல நாழிகை நேரம் மெய்மறந்த நிலையில் இருப்பது பரிவாரங்களை வியப்பிலாழ்த்தியது. பன்னீர் கலந்த நீரில் குளித்து, நறுமணப் பொருள்களை மேனியில் பூசி, சுவைமிகுந்த உணவருந்தி பெரும்பாலான நேரம் ஓய்வுடனிருக்கும் அரசி, தன்னைத் தானே வருத்திக் கொள்வதைப் பார்க்க அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

பஞ்சணையின்றித் தரையில் துயின்றனர். ஒரே வேளை இலேசான உணவு அவர்கள் உடலுக்குச் சுகத்தை அளித்தது. இராசேந்திரன் தன் வாழ்நாளில் அடையாத புதிய உணர்வை அடைந்தார். அவர் உடல் இலேசானது. எங்கோ மிதப்பது போல் தோன்றியது. சில வேளைகளில் எதிரே பாடப்படும் பாடல்கள் எங்கோ இருந்து ஒலிப்பதுபோல் கேட்கும். பாடுபவர்கள் களைப்படைந்து அவர்கள் ஓய்வெடுக்கச் செல்லும்போது, இசை ஒலிக்காததைக் கூட அரசரும் - அரசியும் அறியமாட்டார்கள். புதிய உலகில் சஞ்சரிப்பதுபோன்ற இன்பத்தை உணர்ந்தார்கள்.

அரச பரிவாரங்களுக்குக் கவலை ஏற்பட்டது. கங்கைக் கரைக்குச் செல்லாமல் கோதாவரிக் கரையில் அரசரும் அரசியும் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருப்பது அவர்களுக்குச் சிறிது அச்சத்தை அளித்தது.

புதிய கோயிற் பணிகள் முடிவடைந்து, சுற்றுப் புறங்களைத் தூய்மைப்படுத்தும் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கம்பீரமாக அமைந்த புதிய கோயிலைக் காண நாட்டின் பல பகுதிகளிலிருந்து மக்கள் வந்த வண்ணமாக இருந்தனர். பெரும் மதிற்சுவர்கள் கட்டப் பட்டன. கோயிலுக்குள் ஒருவரும் அனுமதிக்கப்பட வில்லை.

சாலைகள் தூய்மையாக்கப்பட்டன. சாலைகளின் இருபுறமும் நடப்பட்ட மரங்கள் வளர்ந்து துளிர்விடத் தொடங்கின. கட்டப்பட்ட புதிய வீடுகளில் மக்கள் குடிபுகுந்தனர்.

கோயில்களில் பணி செய்வோருக்காகக் கட்டப்பட்ட இல்லங்களில் அவர்கள் குடியேறினர். தஞ்சைபுரியி லிருந்து கோயில் திருப்பணி செய்யப் பலர் குடிபெயர்ந் தனர். இறைவனுக்கு நடைபெறும் ஆறு காலப் பூஜையின்போது பாடவும் ஆடவும் கலைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு புதிய நகரத்திற்கு வரத் தொடங்கினர். அதனால் நகரத்தில் கலகலப்பு அதிகமா கியது.

வீரமாதேவி புதிதாக உருவாகி வந்த நகரத்தின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வந்தாள். காடுகள் நிறைந் திருந்த அந்தப் பகுதி கலைக்கூடமாகியிருப்பது அவளுள் ளத்தில் பெரும் பூரிப்பை அளித்தது. அரசர் வந்தவுடன்,



அவருடன் ஒவ்வோர் இடமாகப் பார்த்து வரும்போது அவர் என்ன கருத்தைக் கூறுவார் என்பதைக் கற்பனை செய்து கொண்டாள். மெல்லப் புன்முறுவல் பூத்தாள். உடல் சிலிர்த்தது. உள்ளத்தில் திடீரென ஆர்வம் பொங்கி வழிந்தது. நாணம் கவ்விக் கொண்டது. கற்பனைக்கே இவ்வளவு பாதிப்பா?

அவர் கேட்பார்: ''வீரமாதேவி! நாட்டியக் கலையை மறந்து விட்டாயா?''

அவர் அப்படிக் கேட்கத்தான் வேண்டும். ''தஞ்சை புரிப் பெரிய கோயிலில் பூர்த்தியாகாதிருக்கும் நடனத் தோற்றங்களைப்போலன்றி இங்கே முழுமையான நடனக் கலையையே கல்லில் வடிக்க வேண்டும். அதற்கு ஏற்ற சூழ்நிலை இங்கே அமைய வேண்டும்'' என்று கூறுவேன்.

'சூழ்நிலையா? இப்போது இல்லாத சூழ்நிலையா? என்ன சூழ்நிலை?' என்று கேட்பார்.

நான் சொல்லத் தயங்குவேன். என் முகத்தில் நாணப்பூ மலர்வதைக் காண்பார். என்னை நெருங்கிக் காரணம் கூறுமாறு வற்புறுத்துவார்.

நான் அவர் செவிகளில் மட்டும் கேட்கும்படி, ''நீங்களும் நானும் சேர்ந்து ஆட வேண்டும். சிவனுடன் பார்வதி இணைந்து ஆடிய நடன வகைகளை விளக்கும் சிற்பங்களாக அவை அமைய வேண்டும். ஓய்வு கிடைத்து, மன நிறைவுடன் நாம் சேர்ந்தே நடனத் தோற்றங்களை அமைக்கச் சிற்பிக்கு உதவ வேண்டும். வீரநாராயணபுர ஏரியின் நடுவே சில ஆண்டுகளுக்கு முன்பு... நினைவிருக்கிறதா? அதுபோல்'' என்று கூறுவேன்.

என் கருத்தை அவர் அப்படியே ஏற்பார்.

''கோயில் குடமுழுக்கு முடிவடைந்து, நாம் நிம்மதியுடன் அந்தப் பணியைச் செய்வோம்'' என்று அவர் கூறுவார். ''என்ன, சரிதானா? திருப்திதானா?'' என்று கேட்டுவிட்டு, ''உன் முகத்தில் முளைத்துள்ள நாண மலரில் ஓரிதழைக் கொய்து கொள்ளட்டுமா?'' என்று கேட்பார்.

வீரமாதேவி கற்பனையில் ஆழ்ந்திருந்தாள்.

''குடமுழுக்கு எப்போது நடைபெறும்? அரசர் கங்கைக் கரைக்குச் சென்றாரா? கங்கை நீருடன் வருவது எப்போது? செய்தி ஏதும் வரவில்லையே...'' என்ற கவலையே அவளைச் சூழ்ந்தது.

ஒவ்வொரு நாளும் பழையாறையிலிருந்து, அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்துச் செய்திகள் வந்த வண்ணமாய் இருந்தன. ஒருநாள், தேவியின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தூதுவர்கள் கொண்டு வந்தனர்.

அரிந்தவன்மாதேவி நீண்ட நாள் வாழ வேண்டும் என்று கடவுளைத் துதித்தாள் வீரமாதேவி.

ஒருநாள் காலையில் வீரமாதேவி விழித்தெழுந்த போது கருவூர்ச் சித்தர் ஏரிக் கரைக்குச் சென்று ஏரியைப் பார்வையிடுகிறார் என்ற செய்தி கிடைத்தது.

''சித்தர் வந்துவிட்டாரா?'' என்று பரபரப்புடன் கேட்ட வீரமா தேவி, அவரைச் சந்திக்க ஏரிக்கரையை நோக்கி விரைந்தாள்.

புதிதாக அமைக்கப்பட்ட அந்த ஏரி பரந்து விரிந்து காணப்பட்டது. ஏரியில் காவிரியின் தண்ணீர் வந்து



சேருமளவுக்கு ஏரி மிகப் பிரம்மாண்டமானதாக இருந்தது. அண்மையில் பெய்த மழையால் ஏரியில் நீர் நிறைந்திருந்தது. மெல்லிய அலைகள் கரையில் வந்து செய்தி கூறித் திரும்பின.

காலைப் பொழுது புலர்ந்து, கதிரவனுக்குக் கட்டியம் கூறியது. சித்தர் ஏரிக் கரைக்கருகே நின்று கிழக்கே உதயமாகும் காலைக் கதிரவனை நோக்கி இருகரம் உயர்த்தி வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார்.



அவர் இயற்கையை வணங்கினார். இயற்கைக்கு ஆற்றல் தரும் இறைவனைப் பணிந்தார்.

''யாருக்காகவும், எவருக்காவும் காத்திராது தன் கடமையை யுகயுகங்களாகச் செய்து கொண்டிருக்கும் கதிரவனே போற்றி'' என்று சத்தியவானான ஞாயிற்றைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருதார். அவருடைய உதடுகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. அவர் இசைப் பாவால் இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தார்.

சூரிய ஒளி ஏரி நீரின் மீது பிரதிபலித்தது. தங்கத்தை உருக்கித் தகடாக்கி ஏரிக்குக் கூரை வேய்ந்தது போல் ஏரிப் பரப்பு முழுமையும் காட்சியளித்தது.

அவர் சிரித்தார். திரும்பிப் பாராமலேயே ''வா குழந்தாய், வீரம்மா! - ஓ! தேவி என்று சொல்ல வில்லையோ?'' என்று கூறி மீண்டும் குழந்தைபோல் சிரித்தார்.

'நான் வந்தது, அவருக்கு எப்படித் தெரியும்?' நினைத்தாள்.

''நீ வருவாய் என்பதறிவேன். வந்துவிட்டதையும் தெரிந்து கொண்டேன். எனக்கு வீரம்மா - குழந்தைதான். வீரம்மா! நீ தேவமகள்'' என்று கூறி கரத்தை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

வீரமாதேவி அவர் பாதத்தில் விழ்ந்து வணங்கினாள். கண்ணீர்த் துளிகளால் அவர் பாதத்தை நனைத்தாள்.

''குழந்தாய்! இந்தப் பொன் ஏரியைக் கடைசி கடைசியாக என்று கண்டாய்?'' என்று கேட்டு அவளை மெல்லத் தூக்கி நிறுத்தி, கேசத்தை வருடினார்.



''பத்து நாள்களுக்கு முன்பிருக்கும்'' என்று கூறிய வீரமா தேவி, ''ஆனால் நாள்தோறும் நம் அதிகாரிகள் ஏரியைச் சுற்றிப் பார்த்து வருகிறார்கள். புதிதாகக் கட்டப்பட்ட மதகுகளையும் கரையையும் அவர்கள் பார்க்கத் தவறுவதில்லை'' என்று மரியாதையும், பயமும் கலந்து மெல்லப் பேசினாள்.

''குழந்தாய்! இந்த ஏரி ஏன் வெட்டப்பட்டது என்று தெரியுமா?''

''எனக்குத் தெரியாது. பெரிய கோயில், பெரிய ஆவுடையார், பெரிய நந்தி, பெரிய விமானம், பெரிய ஏரி - என்று எல்லாம் பெரிதாக இருக்க வேண்டும் என்று தலைவர் விரும்பினார்.''

''பெண்ணே! உன் மாமனார் செய்யாத ஒன்றை உன் கணவர் செய்துவிட்டார். அதுதான் இந்த ஏரி. அவனுடைய முப்பாட்டனார் சிதம்பரத்திற்கு அருகே ஏரியை வெட்டினார். வீரநாராயண ஏரி என்ற தன் பெயரையே அந்த ஏரிக்கும் சூட்டினார். இந்த ஏரிக்கு யார் பெயரை வைக்கலாம்?'' என்று வீரமாதேவியைக் கேட்டு விட்டு, தன் விழிகளை மூடினார். ஆனால் அரைவிழி திறந்திருந்தது.

''நகரத்திற்கு, கோயிலுக்கு, ஏரிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பது எனக்குத் தெரியாது. ஊருக்கும், கோயிலுக்கும் என் பெயரை வைக்க வேண்டும் என்று நான் சக்கரவர்த்திகளை வற்புறுத்துவதாகப் பெரியவர்கள் பேசிக் கொள்கிறார்கள். நான் அவ்வாறு கனவில் கூடச் சிந்திக்கவில்லை. என் பெயர் வேண்டாம். வேண்டவே வேண்டாம்'' என்று வீரமாதேவி இருகரங்களையும் கூப்பிப் பணிவாகச் சொன்னாள்.

''ஏன், ஏன் கூடாது? உன் பெயரை ஏன் வைக்கக் கூடாது? இராசேந்திரன் வந்தவுடன் அவனிடம் சொல்லப் போகிறேன். 'இராசேந்திரா! இந்தக் கோயில் கட்ட யார் காரணம்?' என்று கேட்பேன்.

''உன்னைச் சுட்டிக் காட்டி 'என் அன்புக்குரிய வீரமாதேவிதான் காரணம், என்று கூறுவான் - அப்படித் தானே?'' கண் சிமிட்டினார் சித்தர்.

வீரமாதேவியின் மேனி மெல்லச் சிலிர்த்தது. தலையைப் பலமாக அசைத்து, ''இல்லை, இல்லை. நான் காரண மில்லை. எல்லாம் வல்ல இறைவன் காரணம்'' என்று கரத்தை மேல் நோக்கி உயர்த்தினாள்.

''சரி, இல்லை என்று நீ சொன்னால் அரசி சம்மதிப் பாளா? அரிந்தவன்மாதேவிதான் ஒப்புக் கொள்வாளா?'' சித்தர் கேட்டார்.

''சுவாமி! அவர்கள் ஒருங்கிணைந்து இதேபோல் ஊர் உலகம் எல்லாம் வதந்தியைப் பரப்பி வருகிறார்கள். நான் ஓர் எளிய கிராமத்துக் குடியானவனின் மகள். தாய் தந்தை அற்ற நான் பாட்டனார் கொடுத்த ஊக்கமும் உதவியும் கொண்டு நடனக் கலையைப் பயின்றேன். தேர்ந்தேன். அரசரின் பார்வையில் நான் வீழ்ந்தேன்.''

சித்தர் குறுக்கிட்டார். ''உன் பார்வை இராசேந்திரன் மீது விழவில்லையோ?'' என்று கூறிச் சிரித்தார்.

வீரமாதேவி தலை குனிந்தாள். ''சித்த மகாபுருஷரே! முக்காலும் உணர்ந்த தாங்கள் என்னைச் சோதிப்பது சரியா? உங்களிடம் நான் மிகப் பணிவுடன் வேண்டு கிறேன். என் பெயர் எதற்கும் வேண்டாம். நான் ஒருபோதும் அப்படி எண்ணியதில்லை'' - சொற்களில் பணிவும், மென்மையும் இருந்தன.



''ஓ!'' என்று கை கொட்டிச் சிரித்த சித்தர், ''அந்தப் புரத்தில் பலபேர் அறிய அன்றொருநாள் நீ சபதம் செய்தாயாம். 'இந்தச் சோழ நாடு உள்ளவரை என் பெயரும் புகழும் நிலைத்து நிற்கும்படியாக நான் ஏதாவது செய்து விடுகிறேன்'' என்று. உன் பெயரில் இந்தப் பெரிய கோயிலும், நகரமும், ஏரியும் அமைந்து விட்டால் சோழ நாட்டின் புகழ் உள்ளளவும் உன் பெயர் நின்று நிலைத்து நிற்குமல்லவா? வீரநாராயண ஏரியும், லோகமாதீச்சரமும், ராஜராஜேச்சரமும் அவற்றைப் படைத்த அரசகுலத்தவரை நினைவுபடுத்துகின்றன. நீ சபதம் செய்ததே அவற்றை மனத்தில் கொண்டுதானே?'' - கேட்டுவிட்டு சித்தர் கூர்ந்து நோக்கினார்.

437432/ 605530

வீரமாதேவி மெல்ல விசும்பினாள். ''மகாபுருஷரே! நான் என் குலத்தவர் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் என்றுமே இருந்த தில்லை. அரசியையும், மற்ற இளவரசிகளையும் விட என் பெயர் நிலைத்து நிற்குமாறு நான் செய்வேன் என்று நான் சூளுரைத்தது உண்மையே. ஆனால், நகரத்திற்கும் கோயிலுக்கும் என் பெயரைச் சூட்டவேண்டும் என்று நான் என்றும் விரும்பியதில்லை. சக்கரவர்த்தியின் திருப் பெயர்தான் இடப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்து வேன். இராசேந்திர சோழேச்வரம், இராசேந்திர சோழப் பெருநகரம், இராசேந்திர சோழப் பேரேரி... இப்படியாக அழைக்கப்படுவதைத்தான் விரும்புவேன்'' என்று கூறி இரு கரங்களையும் கட்டிக்கொண்டு விழிகளை மூடிக் கொண்டாள்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்

''சுவாமி! என் தலைவர் பெயர் சூரிய சந்திரர் உள்ளளவும் ஒலிக்கப்பட வேண்டும். அவர் பெயரை

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் மக்கள் உச்சரிக்க வேண்டும். அதுவே என் ஆசை'' என்று கூறி மௌனமாய் நின்றாள்.

''ஏன், பெரிய கோயிலுக்குப் பஞ்சவன் மாதீச்வரம் என்றும் நகரத்திற்குப் பஞ்சவன் மாதேவி பெருநகர் என்றும் ஏன் பெயரிட்டு அழைக்கக் கூடாது? அதில் உனக்கு எந்தவிதக் கருத்து வேற்றுமையும் இல்லையே?'' என்று சித்தர் கேட்டு, அவள் மௌனத்தைக் கலைத்தார்.

வீரமாதேவி தன் விழி நீரைத் துடைத்துக் கொண்டு, ''சித்தரின் சித்தம் எப்படியோ அப்படியே எங்களுடையதும். தங்கள் கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். அரசியாரின் பெயரை எல்லாவற்றிற்கும் இடுவதில் எனக்குப் பெருமகிழ்ச்சியே'' என்றாள்.

பிறகு, ''சுவாமி! ஏதேதோ பேசி, முக்கியமாகக் கேட்க வேண்டியதை மறந்து விட்டேனே! அரசரும் அரசியும் கங்கைக் கரைக்குச் சென்றனரா? குடமுழுக்குக்கு கங்கை நீர் வருகிறதா? தாங்கள் சக்கரவர்த்திகளைச் சந்தித்தீர்களா? என்று ஆவலுடன் கேட்டாள்.

கருவூர்ச் சித்தர், வீரமாதேவியை உற்று நோக்கியவாறு சொன்னார்: ''வீரமாதேவி! உன் எண்ணம், இராசேந்திரன் விருப்பம், பஞ்சவன்மாதேவியின் ஆசை எல்லாம் நிறைவேறப் போகிறது. இராசேந்திரன், கங்கை நீருடன் வருகிறான். கலிங்க நாட்டு, யானைகள் கங்கை நீரைப் பொற்குடங்களில் சுமந்து வருகின்றன.''

வீரமாதேவி விழிநீரைத் துடைத்துக் கொண்டு வியப்புடன் சித்தரைப் பார்த்தாள்.

''சுவாமி...?'' என்று விழிகளை அகல விரித்து அவர் சொல்வதை நம்ப முடியாத நிலையில் இருப்பது போல் கேட்டாள்.



''ஆமாம், உண்மை உங்களுக்காக இல்லாவிட்டாலும், எனக்காக, இந்தப் பெரிய கோயிலின் குடமுழுக்கை உரிய நாளில் நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். இன்னும் இரண்டு நாள்களில் பௌர்ணமி. அதற்கு அடுத்த பௌர்ணமி அன்று பெரிய கோயிலின் குடமுழுக்கு. மற்றொரு செய்தி - நான் இந்த ஏரிக் கரைக்கு ஏன் வந்தேன் தெரியுமா? பலநூறு யானைகள் மீது பெரும் குடங்களில் ஏற்றப்பட்டு வரும் கங்கை நீர் குடமுழுக்குக்கும், பெருவுடையாரின் அபிஷேகத்திற்கும் போக மீத மாவதை வீணாக்கக் கூடாது. குடங்களிலுள்ள கங்கை நீரை இந்த ஏரியில் கலக்க வேண்டும். காவிரியுடன் கங்கை கலக்க வேண்டும். அதற்காக இந்த ஏரியைக் காண வந்தேன். இந்தப் பொன்னேரி மேலும் புனிதமடையப் போகிறது. வீரமாதேவிப் பேரேரியாகப் புகழ் பெறப் போகிறது'' என்றார்.

''கூடாது - கூடாது. நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்'' என்று வீரமாதேவி கூவினாள். ''அப்படி என் பெயர் வைப்பது உறுதியென்றால், நான் குடமுழுக்குக்கு முன்பாகவே இந்த நாட்டை விட்டு ஏன் உலகை விட்டே மறைந்து விடுவேன்'' என்று ஆவேசம் வந்தவள் போல் கூறினாள்.

சித்தர் சிரித்தார். ''பெண்ணே! அப்படி ஓர் எண்ணம உனக்கிருக்கிறதா? ஹூம் பார்ப்போம். இராசேந்திரன் இங்கு வந்தவுடன் பெயர் சூட்டும் படலத்தைக் கவனிப்போம். இனியும் தாமதம் செய்யாமல் சென்று இராசேந்திரன் புதல்வர்களை அழைத்து, குடமுழுக்கு விழாவிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சொல். விரைவாக இயங்க வேண்டும். மற்றவர் சொற்களுக்குச் செவி சாய்க்கக் கூடாது'' என்றார்.

வீரமாதேவி விரைந்தாள். அவள் கூறியதை ஒருவரும் நம்பவில்லை.

பழையாறையில் நோய்வாய்ப்பட்டிருந்த அரிந்தவன் மாதேவி சற்றுத் தெளிந்து படுக்கையினின்று எழுந்து உட்காரத் தொடங்கினாள்.

சக்கரவர்த்தியும், அரசியும் விரைவில் வருவார்கள் என்ற செய்தி அறிந்த அரிந்தவன் மாதேவி, ''கங்கை நீருடன் வருகிறார்களா?'' என்று கேட்டாள்.

''ஆம்'' என்ற மறுமொழி கிடைத்தவுடன் ''அந்த மாயக்காரி வீரம்மாள் தன் எண்ணத்தை நிறைவேற்றி விட்டாள்'' என்று கூறும்போது அதில் எரிச்சல், பொறாமை, ஆத்திரம் நிறைந்திருந்தன.

''பௌர்ணமி நாளன்று குடமுழுக்கு நடக்கக் கூடாது. நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று வெறி பிடித்தவள் போல் பேசினாள்.

''அந்த மாயக்காரியின் எண்ணம் நிறைவேற விட மாட்டேன். தன் இளமையால் அரசரை வயப்படுத்தி இந்த நாட்டை அபகரிக்கப் பார்த்த சூழ்ச்சிக்காரியின் திட்டம் வெற்றியடைய விடமாட்டேன். நான் இறந்துவிடுவேன் என்று எண்ணினார்கள். இறைவன் என் பக்கம். அவனருளால் பிழைத்து விட்டேன்'' என்று ஆவேசத்துடன் பேசினாள். பிறகு சற்று அமைதியடைந் தாள்.

''கடவுளே! மரணவாயிலுக்குச் சென்ற என்னை ஏன் பிழைக்க வைத்தாய்? உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக் கும் என்னை விட்டுவிட்டு அரசி பஞ்சவன்மாதேவியும் வடக்கே போய்விட்டாள். இந்த நிலையில் எனக்கு எதற்கு இந்த உலக வாழ்க்கை? கடவுளே! என்னைக் கொண்டு போய்விடு. அவர்கள் இங்கே வருவதற்குள் கொண்டு போய்விடு. அப்போது கங்கை குடமுழுக்கு நடைபெறாது. நான் போன பிறகு நடந்தால் என்ன, நடக்காவிட்டால் எனக்கென்ன?'' என்று அரிந்தவன் மாதேவி வெறி பிடித்தவள் போல் பேசினாள்.





## 82. கங்கை நீருடன்... புதுநகரம் புறப்பட்டார்

கோதாவரி நதிக்கரையில், சோழ சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர் தங்கி விரதமிருந்த இடம் ஒரே இரவில் கலகலப்பு மிகுந்ததாக மாறியது.

'வாழ்க வாழ்க' என்ற வாழ்த்தொலிகள் வானை எட்டின. கோதாவரியின் நீர்ப்பரப்பே காணாது போய் விட்டதோ என்று சொல்லும் அளவுக்குத் தோணிகளும், படகுகளும், சிறுசிறு மரக்கலங்களும் மறு கரையினின்று வந்து கொண்டிருந்தன.

எதிர்க்கரையில் ஏராளமான சோழப் படைகள் தங்கி யிருந்தன. குதிரைகளும்; யானைகளும் கட்டுவதற்கு இடமில்லாமல் கண்ணுக்கெட்டிய தொலைவுவரை பரந்த வெளியில் நின்றிருந்தன. சோழப் படைகளுடன் பல நாட்டு மன்னர்களும் தங்கள் மெய்க்காவலர்களுடன் கோதாவரியைக் கடக்கக் காத்திருந்தனர்.

கோதாவரிக் கரையில் ஓரமாக இருந்த வனங்களும், பூங்காக்களும், வயல் வெளிகளும் படை வீரர்கள் தங்கி யிருந்ததால் மனிதத் தோட்டமாக மாறிவிட்டன.



படை வீரர்களுக்கு மற்றவர்களுக்கும் உணவு படைக்க ஏற்படுத்தப்பட்ட சமையற் கூடத்தின் அடுப்புகளிலிருந்து எழுந்த புகை அந்தக் கோடைக் காலத்திலும் கரிய மேகங்கள் போல் வானில் பரவின.

போர் ஓய்வைக் கொண்டாடும் வகையில் வீரர்கள் வெற்றிக் களிப்பால், ஒருவரோடொருவர் மகிழ்ச்சியுடன் பேசுவதும், களிப்புடன் பாடுவதும், கடல் ஓசைபோல் வெகுதூரம் கேட்டன. இத்தகைய மக்கள் கூட்டத்தை இதுவரை காணாத சோழ வீரர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிச் சூழ்ந்து அவர்கள் ஆடுவதையும் பாடுவதையும் வியப்புடன் நோக்கினர்.

தங்களால் இயன்ற உணவுப் பண்டங்களையும், காய் கனிகளையும் அவர்களுக்கு அளித்து மகிழ்ந்தனர்.

பத்துப் பன்னிரண்டு படகுகளை ஒன்று சேர்த்துப் பிணைத்து பலமாகக் கட்டப்பட்ட படகுகளில் கம்பீரமாக வந்த வேழங்கள் கரை இறங்கியவுடன் சக்கரவர்த்தி இருக்குமிடம் நோக்கி அசைந்து அசைந்து சென்றன.

யானைமீது புலிக் கொடியுடன் அமர்ந்து வீரர்கள் செல்ல, தொடர்ந்த பஞ்ச கல்யாணிக் குதிரைகளோ என்று வர்ணிக்கத்தக்க சோனக நாட்டுப் பரிகளின் மீது மறவர்கள் கையில் வேலுடனும், அசைந்தாடும் கொடியுடனும், நிமிர்ந்த மார்புடன் வெற்றிக் களிப்புடன் அமர்ந்திருந் தனர். அவர்கள் இராசேந்திர சோழ மன்னர் வீற்றிருக்கும் மண்டபத்துக்குச் சற்றுத் தொலைவில் மரியாதை செலுத்தும் நிமித்தம் நின்றனர்.

கம்பீரமான குதிரை ஒன்றின் மீதிருந்து நடுத்தர வயதுள்ள வீரன் கீழே இறங்கிக் குதித்து கம்பீரமாக நடந்தான். அவனுக்கு முன்னும் பின்னும் காவல் வீரர்கள் மார்பை நிமிர்த்தி தாளம் தவறா நடை ஒலிக்க நான்கு

நான்கு பேராக அணிவகுத்துச் சென்றனர். அவர்கள் கரங்களில் கூர்மையான வேல்கள் சூரியக்கதிர்கள் பட்டு மின்னின. அவர்கள் நடுவே இருந்த வீரனின் கரத்தில் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

அவர்கள் வருகை இராசேந்திர சோழருக்கு முன்னரே முறையாய் அறிவிக்கப்பட்டது. இது வரை இல்லாத பரபரப்பு அவரிடம் நிறைந்திருந்தது.

பேரிகை ஒலித்தது. துந்துபி முழங்கியது. வாழ்த் தொலி வானை எட்டியது.

''தேவி! அரையன் இராசராசன் வந்து விட்டானாம். நம் விரதம் முடியும் நேரத்தில் நம் பிரார்த்தனை பலித்தது, சித்தர் வாக்கு பலித்தது'' என்று நிறைந்த மனத்துடன் கூறியவாறு அரசர் எழுந்து வெளியே வந்தார்.

படைத்தலைவர் இராசராச அரையனைப் பார்த்த வுடனே மண்டபத்துப் படிக்கட்டுகளில் இளம் வயதினர் போல் துள்ளிக் குதித்து இராசேந்திரன் இறங்கி வந்தார், ''இராசராசா'' எனக் கூவிக் கொண்டே அரையனை அவர் நெருங்கி அணைத்து மகிழ்ந்தார்.

இராசராச அரையன், அரசரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அரசர் விழிகள் ஆனந்தத்தால் பொங்கிப் பிரவாகித்தன.

''அரையா - நலமா?'' என்று அரசர் வினவினார்.

கீழே வணங்கி நின்றவனை இருகரங்களால் மீண்டும் தன் மார்புடன் இறுகத் தழுவினார். அரையன் இராச ராசனுக்குப் பேச நா எழவில்லை.

அவன் திரும்பி ஏதோ சைகை காட்டினான். வீரர்கள் மின்னல் விலகுவதுபோல் விலகி நின்றனர். கரிய குன்று



நகர்ந்து வருவது போல் கம்பீரமான கலிங்க யானை ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தது. முகப் பதாகம் தங்கத் தால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் மீதிருந்த அம்பாரி யில் பட்டாடை அணிந்த வீரன் அமர்ந்திருந்தான். அவன் கரத்தில் தங்கக் குடம் ஒன்றிருந்தது. பின்புறம், குடை யொன்றைப் பிடித்தவாறு ஒருவன் அமர்ந்திருந்தான்.

அரசருக்குள்ள மரியாதை அந்தக் குடத்துக்கு அளிக்கப் பட்டது.

குடம் அழுத்தமாக மூடப்பட்டிருந்தது. மலரால் அலங்கரிக்கப்பட்டிருந்த குடத்திற்குப் பொட்டிடப் பட்டிருந்தது. குடத்தைச் சுமந்தவன் நெற்றியில் பளிச் சென்ற திருநீறும் அதன் நடுவே குங்குமமும் அழகுற விளங்கின.

அரசர் அருகே வந்தவுடன் யானை துதிக்கையைத் தூக்கிப் பிளிறி வணக்கம் தெரிவித்தது. பிறகு சற்றுக் குனிந்து குடத்துடனிருந்தவன் கீழே இறங்க உதவியது. அவன் பயபக்தியுடன் இறங்கினான்.

கீழே இருந்த அரையன் இராசராசன் இருகரங்களாலும் மிகுந்த மரியாதையுடன் ஒரு குழந்தையை அணைத்துப் பெறுவது போல் அவனிடமிருந்து பொற்குடத்தைப் பெற்றுக் கொண்டான்.

பிறகு குடத்தைத் தலைக்குமேல் தூக்கி இருகரங் களாலும் மிகவும் கவனத்துடன் பிடித்துக் கொண்டு மெல்ல அரசரை நோக்கி வந்தான்.

இராசேந்திர சோழன், நெடுநாள் பிரிந்திருந்த மகனைத் தாவி அணைப்பதுபோல் விரைந்து வந்து, ''அரையா கங்கை நீரைக் கொண்டு வந்தாயா?'' என்று கேட்டார்.

''புனித கங்கை நீரை, சக்கரவர்த்திகளின் பெருமைக் குச் சின்னமான கங்கை நீரைக் கொண்டு வந்து விட்டேன். வெற்றிக் களிப்பால் எனக்குப் பேச நா எழவில்லை. கங்கை நீரைத் தங்களிடம் சமர்ப்பிக்க வடநாட்டு அரசர்கள் பலரும் வந்திருக்கிறார்கள்'' என்றான்.

'பரகேசரி இராசேந்திர சோழ தேவர் வாழ்க!' என்ற வாழ்த்தொலி எழுந்ததும், தொடர்ந்து 'வாழ்க வாழ்க' என்று ஆயிரமாயிரம் குரல் எதிரொலித்தன.





''தேவி! இதோ புனித கங்கை நீர்; நம் கனவு பலித்தது. இலட்சியம் நிறைவேறியது. கங்கை நீரைக் கொண்டு வந்து விட்டோம்'' என்று இராசேந்திரன் உணர்ச்சி மிகுதியால் பேசினார்.

பஞ்சவன்மாதேவி பொற்குடத்தைப் பெற்றுக் கொண்டாள். அவர்கள் இருவரும் கோதாவரிக் கரைக்குச் சென்றனர். படை வீரர்கள் களிப்புடன் ஆடிப்பாடிக் கொண்டு பின்தொடர்ந்தனர். தாரை தப்பட்டைகள் ஒலித்தன. சங்கம் முழங்கியது.



அரசரைப் பின் தொடர்ந்த அரையன் இராசராசன் நடந்துகொண்டே சொன்னார்: ''சக்கரவர்த்திகளுக்கு மற்றொரு பரிசையும் கொண்டு வந்துள்ளேன். அந்தப் பரிசை வேங்கி மன்னர், தாமே தர வேண்டும் என்று துடிக்கிறார்.

''முதன் முதலில் நம் பலம் அறியாது பெருமையறியாது நம்மை எதிர்க்க முற்பட்டுப் பிறகு அடிபணிந்தவர் அவர். பிறகு அவர் மனம் மாறியது. கங்கை நீரைக் கொண்டு வருவதற்கு மிகவும் உதவியாக இருந்தார். நான் வேங்கியைச் சுற்றிப் பார்த்தபோது அங்கே அழகிய விநாயகர் சிற்பம் ஒன்றைக் கண்டேன். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தலைநகரத்தில் அந்தச் சிலையை நிறுவ வேண்டும் என்றும் அதைச் சோழ நாட்டிற்கு எடுத்துச் செல்வதாகவும் வேங்கி மன்னரிடம் கூறினேன்.

அவர் சொன்னார்: ''பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பல்லவ தளபதி பரஞ்சோதி சாளுக்கிய நாட்டை வென்று திரும்பும்போது வாதாபியிலிருந்து பிள்ளையார் சிலை ஒன்றைப் பல்லவ நாட்டிற்குக் கொண்டு வந்தார். அந்தச் சிலை சிறுத் தொண்டராக மாறிய பரஞ்சோதியின் பிறந்த ஊருக்குக் கொண்டு செல்லப்பட்டது. இப்போது சோழர் தளபதியான நீங்கள் ஒரு விநாயகர் சிலையைக் கொண்டு செல்வது பொருத்தமே. ஆனால் என் கரத்தால் பிள்ளையார் சிலையைச் சோழச் சக்கரவர்த்திகளின் பாதத்தில் காணிக்கையாகப் படைக்கப் போகிறேன். ஓர் அதிசயமான செய்தி: வெண்தாடியுடன் சித்தர் ஒருவர் என் மாளிகைக்கு வந்தார். அவர்தான் பிள்ளையார் சிலையைச் சோழ அரசரிடம் சேர்க்கச் சொன்னார். தெரிந்தும் தெரியாமலும் இதுவரை சோழநாட்டை எதிர்த்ததற்குப்



பிராயச்சித்தமாக நான் பிள்ளையாரைக் கொடுக்க அனுமதியுங்கள். அதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும்'' என்றார். ''கோதாவரிக் கரையில் பிள்ளையாருடன் அவர் காத்திருக்கிறார்'' என்றான் அரையன் இராசராசன்.

''வேங்கி மன்னரா? அடாடா அவர் ஏன் அங்கேயே நிற்கிறார்? உன்னுடன் அழைத்து வந்திருக்கலாமே. என்ன இருந்தாலும் எங்களுடன் மணத் தொடர்பு கொண்டவரா யிற்றே'' என்று கூறி வேகமாக நடந்து, பிள்ளையார் சிலையுடன் இருக்கும் வேங்கி அரசர் இருப்பிடம் அடைந்தார். அரையன் இதை எதிர்பார்க்கவில்லை.

அழகாக அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் விநாயகர் சிலை வைக்கப்பட்டிருந்தது. சிற்பியின் கைவண்ணத்தால் அழகுடன் திகழ்ந்த விநாயகர் சிலை எதிரே, தன் மேலாடையை பயபக்தியுடன் இடுப்பில் அணிந்து சிறிது நேரம் மெய்மறந்து நின்று, பிறகு நெடுஞ் சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினார் இராசேந்திரன்.

''பிள்ளையாரப்பா! நீங்கள்தான் முதலில் புதிய நகரத்திற்குள் நுழைய வேண்டும். வடநாட்டு வெற்றியும், புதிய நகரும், புதிய கோயில் நிர்மாணமும் தங்கள் அருளின்றி நடந்திருக்குமா? வழிநடத்திச் செல்ல வந்து விட்டீர்கள். சோழ நாட்டிற்கு இனி எந்தவித இடர்ப் பாடும் இல்லை. வேழமுகத் தானே, ஐங்கரத்தானே, சிவபெருமானின் மூத்த பிள்ளையே, வினை தீர்ப்பவனே, இடர் ஒழிப்பவனே, வெற்றி தரும் ஞானக் கடவுளே! நீங்கள் சோழர் குலத்தை என்றும் காத்து இரட்சிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்து மீண்டும் அரசியுடன், சேர்ந்து விநாயகர் சிலையின் எதிரே கீழே வீழ்ந்து வணங்கினார்.

பிறகு அரையனை நோக்கி, ''இராசராச! குடத்துக் கங்கை நீரை முதன் முதலில் விநாயகருக்கு அபிஷேகம் செய்வோம்'' என்றார்.

அருகே இருந்த பஞ்சவன்மாதேவி ''இந்தக் குடத்து நீரைப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்துவிட்டால், ஊர்சென்று கோயில் குட முழுக்குக்கு என்ன செய்வது?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

அரையன் செவிகளில் அவை வீழ்ந்து விட்டன போலும், ''பேரரசியாரே! வணங்குகிறேன். இந்த ஒரு குடத்தில் மட்டும் கங்கை நீரைக் கொண்டு வரவில்லை. ஆயிரக்கணக்கான குடங்களில் கங்கை நீர் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் பல நூறாயிரம் குடங்களில் கங்கைநீர் வருவது தொடரும்'' என்றான்.

விநாயகர் திருமேனிக்குக் கங்கைநீர் புனித அபிஷேகத்தை, அரசரும் அரசியும் செய்தனர்.

பிறகு இராசேந்திரன் கற்பக விநாயகர் சிலையின் பாதத்தில் அமர்ந்து, அரசியாரை நோக்கி, ''நாம் இங்கேயே, இந்த இடத்திலேயே கங்கை நீரால் புனித நீராடுவோம்'' என்றார்.

யானைமீது வந்து கொண்டிருந்த குடங்களிலிருந்து கங்கைநீர் கொண்டு அரசரும் அரசியும் அபிஷேகம் செய்யப்பட்டனர்.

இராசேந்திர சோழன் மகிழ்ச்சியோடு பீடத்தில் அமர்ந்து கொண்டிருந்தார்.

''தேவி! உனக்கு இப்போது மிகுந்த மன நிறைவு தானே? கங்கை நீராடிவிட்டோம். கற்பக விநாயகரைத்



தரிசித்து விட்டோம். பெரிய கோயிலின் குடமுழுக்குக்கு வேண்டிய அளவு கங்கை நீர் வருகிறது. வேறு என்ன வேண்டும்?'' என்று மகிழ்ச்சிக் களிப்போடு கூறினார்.

அருகே இருந்த அரையன் இராசராசன், ''ஆம் தேவி! கண்ணுக்கு எட்டிய தொலைவு வரையில் கரிமீது குடங் குடமாய் கங்கை நீருடன் பொற்குடங்கள் வந்துகொண்டிருக்கின்றன. எல்லாம் பெருவுடையாருக்கே'' என்று கூறிய அரையன் சுற்றுமுற்றும் பார்த்து, அரசரின் செவிகளுக்கு மட்டும் கேட்கும்படி, ''வழிகாட்டிய சித்தரைக் காணவேண்டும். அவர் எங்களுக்கு யோசனை சொல்லி உதவியிராவிடில் கங்கை நீரைக் கொண்டு வர முடியாமல் தவித்திருப்போம்'' என்றான்.

''கோதாவரிக் கரையிலேயே இருந்து கங்கை நீரில் நாள்தோறும் நீராடி மகிழ ஆசையாக இருக்கிறது. ஆகா, கங்கையின் புனித நீருக்குத் தனி மணம், தனி ருசி. மூலிகை கலந்த நீர், சங்கரன் சடை முடியிலிருந்து தவழ்ந்து வரும் நீர் ஆயிற்றே!'' என்று பஞ்சவன்மாதேவி சிறு குழந்தை போல் குதூகலத்துடன் பேசினாள்.

இராசேந்திர சோழர் புன்முறுவலுடன், ''தேவி! நீ நாள்தோறும் கங்கை நீரில் நீராடி மகிழத் திட்டம் வகுத்து விட்டேன்'' என்றார்.

''எப்படி?'' ஆவலுடன் கேட்டாள் பஞ்சவன் மாதேவி.

''கங்கையின் பெருமையைக் கேட்டறிந்தவுடன் கங்கையைச் சோழ நாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்தேன். கிருஷ்ணையும், கோதாவரியும் கங்கையும் காவிரியுடன் கலந்தால் எப்படி இருக்கும்?

கங்கையையும், காவிரியையும் இணைக்க வேண்டும். சோழர் கொடி அந்த நாட்டில் பறந்தால்தான் என் இலட்சியம் நிறைவேறும். அதனால்தான் வடதிசைப் படையெடுப்புக்குத் திட்டமிட்டேன். அதைப் புனித யாத்திரையுடன் ஒன்று சேர்த்தேன்.

''வரிசை வரிசையாக சோழ நாட்டிற்குக் கங்கை நீருடன் யானைகள், நாம் புதிதாக அமைத்துள்ள ஏரியில் நீரைச் சேர்ப்பிக்கும். புனிதமான கங்கை நீரால் அந்த ஏரி பொன்போல் மிளிரும். ஏரியிலிருந்து வாய்க்கால் வெட்டி மாளிகைக்குக் கங்கை கலந்த நீரைக் கொண்டு வந்து தடாகத்தில் சேர்ப்போம். அல்லியும் தாமரையும் பூத்திருக்கும் அந்தத் தடாகத்தில் நீ நாள்தோறும் நீராடலாம். கேளிக்கையாக நீந்தி மகிழலாம்'' என்றார்.

பஞ்சவன் மாதேவியின் மெய் சிலிர்த்தது. ''கேளிக்கைக்கு ஏற்ற வயதா? அதற்காகப் பிறந்த வீரம்மாள் இருக்கிறாளே!'' என்றாள்.

''தேவி அரிய பெரிய செயலைச் செய்த அரையன் இராசராசனை நாம் பாராட்ட வேண்டாமா? அரையன் சாதாரணமானவன் அல்லன். அவன் வீரன். என் தந்தையால் பாராட்டப் பெற்றவன். அவனுக்குள்ள புகழ்ப் பெயர்களைக் கேள்!

''நால்மடி பீமன், எதிர்த்தவன் காலன், சயசிங்க குலகாலன், வீரபீமன், வீர பூஷணன்... இன்னும்'' என்று அரையன் புகழ்பேச-

''அரசர்க்கரசே! போதும் போதும் என்னைப் புகழ்ந்து என்னை மூச்சுத் திணற வைக்காதீர்கள். என் பெருமையெல்லாம் உங்கள் பெருமையே. நான் என்றுமே தங்களுக்கு அடிமை. சோழர்குல அடிமை'' என்றான்.



அவன் விழிகள் பனித்திருந்தன. அடக்கத்தால் அரையன் மேனி குறுகி நின்றான்.

பிறகு, சக்கரக்கோட்டத்து அரசரும், மதுரை மண்டலத்து மன்னரும், வத்ச நாட்டு அதிபதியும், மாசுணி மன்னரும், ஒட்டர நாட்டவரும் தங்களை வணங்கிப் பரிசுகள் தரக் காத்திருக்கின்றனர்'' என்றான். பிறகு மெல்லிய குரலில், ''இவர்களெல்லாம், நம்மை எதிர்த்தவர்கள். கங்கை நீரை நாம் அடைவதில் விருப்பம் காட்டாதிருந்தவர்கள். ஆனால், அந்த பொல்லாத கஜினி முகமதுவை வென்று விரட்டியவுடன் நம் பலம் அறிந்தனர். நம் புகழ் அறிந்தனர். கங்கைக் கரைக்கு வந்து எனக்குக் கட்டளை இட்ட சித்தர் ஒவ்வோர் அரசரையும் சந்தித்துக் கட்டளையிட்ட அதிசயத்தை என்னவென்று புகழ்வேன்!''

இராசேந்திர சோழர் வடநாட்டு மன்னர்களை அழைத்து அவர்கள் அன்பினைப் பெற்று, பரிசுப் பொருள்களை ஏற்று, ''என் அருமைச் சகோதர மன்னர்களே! நீங்கள் எல்லாரும், தெற்கே என்னுடன் வரவேண்டும். புதிய கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப் போகிறேன்'' என்றார்.

கோதாவரிக் கரையினின்று, பரகேசரி இராசேந்திர சோழரும் பட்டத்தரசி பஞ்சவன் மாதேவியும் முன்னே நான்கு வகைப் படை வீரர்கள் செல்ல, தொடர்ந்து வண்டிகளும், பண்டங்கள் கொணர்ந்த வண்டிகளும், உதவியாளரும் வர, பழையாறை நோக்கிச் சென்றார்.

புறப்படும் முன்பு, ஒற்றர் படைத்தலைவரை அழைத்து, ''நம் வருகையை வீரமாதேவியிடம் தெரிவித்து விடுங்கள்'' என்றார்.



## 83. என்ன பெயர் இடுவது?

பெரிய கோயில் விமானம் கம்பீரமாக உயர்ந்து நின்றது. வானை எட்டுமளவிற்கு அது வளர்ந்திருந்தது. கோயிலைச் சுற்றி மதில் அமைய வேண்டும். சக்கரவர்த்தி வந்த பிறகு, கோயில் விமானக் கலசத்திற்குக் குடமுழுக்கு நடைபெற்ற பிறகு அவற்றை எல்லாம் முடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தாள் வீரமாதேவி.

குடமுழுக்குக்கு முன்பு பூர்த்தியடைந்த திருப்பணிகளின் முழு வடிவத்தை மீண்டும் ஒருமுறை பார்த்து, நிறைகுறைகளைக் கண்டறிய சிற்பி மாணிக்க சேகரனும் சிற்பிகளும் கோயிலை ஒருமுறை சுற்றி வந்தனர். அவர்களுக்கே தங்கள் பணியின் சிறப்பு அப்போதுதான் புலப்பட்டது. தலைமைச் சிற்பி ஒவ்வொரு சிற்பியையும் அழைத்துப் பாராட்டினார். வீரமாதேவியும் அருகே இருந்தாள்.

தலைமைச் சிற்பி பாராட்டும்போது, சிற்பிகள் பெருமை தாங்காது நெளிந்தனர். சிலர் வெட்கத்தால் பெண்கள் போல் தலை குனிந்தனர். சிலர் அடக்கமாகப்



பாராட்டுதலை ஏற்றனர். சிலர் பாராட்டுதலுக்கு நன்றி சொல்லத் தெரியாமல், விழிகளை நகர்த்தக்கூட முடியாமல் மாணிக்க சேகரனைப் பார்த்தவாறு திகைத்து நின்றனர்.

''தலைவர் சொற்படி செய்தோம். நமக்கு என்ன பாராட்டு? செய்ததற்குக் கூலி பெற்றுக் கொண்டோம்!'' என்று மெல்லப் பேசிக் கொண்டனர் சிலர்.

வீரமாதேவியைச் சுட்டிக் காட்டி, ''இளவரசியார் நம்முடனே இருந்து, நமக்கு உற்சாகமூட்டி யிராவிடில் கோயில் திருப்பணி முடிந்திருப்பதேது!'' என்று வீரமாதேவியைப் புகழ்ந்தனர் சிலர்.

தஞ்சைப் பெரிய கோயில் திருப்பணியில் ஈடுபட்ட சில முதிய சிற்பிகள் வீரமாதேவியின் அருகே சென்று வணக்கம் தெரிவித்தனர்.

கைகட்டி மிக மரியாதையுடன் நின்ற பெரியவர்களை நோக்கி, அவர்களை அமருமாறு சொல்லி அவர்களுடைய பணியைப் புகழ்ந்தாள் வீரமாதேவி.

''உங்கள் கருத்துகளை நீங்கள் இப்போது சொல்லலாம். சக்கரவர்த்திகள் வந்தவுடன் உங்கள் பணியை மிகவும் பாராட்டுவார். அவருடைய கனவை நிறைவேற்றியவர்கள் நீங்கள். இந்தக் கோயிலைப் பற்றிய உங்கள் கருத்துகளை, குறை நிறைகளை நீங்கள் ஒளிவு மறைவின்றிக் கூறலாம்'' என்று வீரமாதேவி, முதிய சிற்பிகளைப் பார்த்துப் பேசுவதுபோல், அனைவரிடமும் கேட்டாள்.

மாணிக்க சேகரனை நோக்கி ஒருமுறை விழிமூலம் அனுமதி கேட்ட முதிய சிற்பி ஒருவர், ''எங்களுக்

கெல்லாம் ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. என்னைப் போன்று இங்குள்ள சிற்பிகளுக்கும் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. தங்களுடைய சலியாத உழைப்பை நாங்கள் பாராட்டுகிறோம். அமரராகிவிட்ட பேரரசர் இராசராசருக்குப் பெரும் பெருமையை, அவர் புதல்வர் இராசேந்திர சோழ சக்கரவர்த்திகள் ஏற்படுத்திவிட்டார். இராசராசேச்சுரம் பெருவுடையார் கோயிலைவிட அளவில் குறைவுதான் இந்தப் பெருவுடையார் கோயில் என்றாலும் தஞ்சைக் கோயிலுக்கு இணையாக இந்தக் கோயில் அமைவதற்கு முக்கிய காரணம் சக்கரவர்த்திகள் மட்டுமல்லர். முகத் தெதிரே பாராட்டுகிறேன் என்று எண்ணி விடக்கூடாது. இந்த இளவயதில் தங்களுக்கு எவ்வளவு ஆர்வம், சலியாத உழைப்பு! காடாயிருந்த இந்த இடத்தைக் கந்தர்வ பூமியாக்கினீர்கள். நீங்கள் நீடுழிவாழ வேண்டும். அறிவாற்றலில் குறைந்தவர்கள் என்றாலும் வயது காரணமாக எங்கள் வாழ்த்தை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றார். அவர் கூறும்போது கண்களில் நீர் மல்கியது.

மற்றொரு முதியவர் கூறினார்: ''தஞ்சையில் பெரிய கோயில் கட்டி, குடமுழுக்கு நடைபெற்ற அன்றைய நாள் நிகழ்ச்சியை என்னால் இன்றளவும் மறக்க முடிய வில்லை. அங்கு நடந்த அந்த வைபவம் - அப்பப்பா- அரச குடும்பத்தினர் அத்தனை பேரும் வந்திருந்தனர். குறிப்பாக சக்கரவர்த்திகளுக்குத் தம் அக்கை யாரிடம் அளவு கடந்த அன்பு, மதிப்பு, மரியாதை. இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியார் வந்திருந்தார். அவரது கணவர் வல்லவரையர் வந்தியத்தேவன் வயது முதிர்ந்த நிலையிலும் அங்கே கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்.



இன்று இந்தக் கோலாகலமான விழாவைக் காண அவர்கள் இல்லை. இன்றும் அரச குடும்பத்தில் முக்கிய மானவர்கள் இல்லை. சக்கரவர்த்திகளுடைய ஆற்றலும், வீரமும் போர்க் களங்களில் பிரதிபலித்தாலும் இந்தக் கோயில்தான் அவருக்கு அழியாத புகழை நிலைநாட்டப் போகிறது. தஞ்சை புரியிலுள்ள பெருவுடையார் கோயிலுக்குச் சக்கரவர்த்தி இராசராசர் பெயர் சூட்டப் பட்டது போல, இந்தக் கோயிலுக்கும், சக்கரவர்த்தி இராசேந்திரர் பெயர் சூட்டப்படவேண்டும் என்பது என் கோரிக்கை.''

அங்கே ஒருகணம் அமைதி நிலவியது. இராசேந்திர சோழரின் இளைய திருக்குமாரன் அங்கு வந்து, அவர்கள் உரையாடலில் கலந்து கொண்டார்.

அதுவரை பேசிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று பேச்சை நிறுத்தி மௌனமானதைக் கண்ட இளவரசர், ''ஏன் திடீரெனப் பேச்சை நிறுத்தி விட்டீர்கள்? நானும் அதில் கலந்து கொள்ளலாம் அல்லவா? ரகசியம் என்றால் நான் இங்கிருந்து சென்று விடுகிறேன். பிறகு வருகிறேன். சக்கரவர்த்தியிடமிருந்து முக்கியமான செய்தி வந்திருக் கிறது. அதைத் தெரிவிக்க வந்தேன். பிறகு வருகிறேன்'' என்று கூறி அங்கிருந்து புறப்பட எத்தனித்தார்.

வீரமாதேவி உட்பட அனைவரும் பரபரப்புடன் எழுந்து நின்று, ''வாருங்கள் வாருங்கள். இங்கே உட்காருங்கள். அந்தரங்கமோ, ரகசியமோ ஏதுமில்லை. உங்களுக்குத் தெரியாதவற்றை நாங்கள் என்ன பேசி முடிவெடுக்கப் போகிறோம்?'' என்று கூறி, ''ஏதோ முக்கியமான செய்தி சக்கரவர்த்திகளிடமிருந்து வந்திருப்ப தாகச் சொன்னீர்களே, அதைச் சொல்லுங்கள்'' என்று ஆவலுடன் கேட்டாள் வீரமாதேவி.

''கோதாவரிக் கரையிலிருந்து கங்கை நீர்க் குடத்துடன் சக்கரவர்த்திகள் புறப்பட்டு விட்டார்கள். பரிவாரங் களுடன் அரசர் வந்து கொண்டிருக்கிறார். குடமுழுக்குக்கு ஏற்பாடுகளை விரைந்து செய்யுமாறு உத்தரவு வர் துள்ளது. சித்தரை உடனே சந்திக்க வேண்டும் ; விரை வாகப் பணியாற்ற வேண்டும். குறுநில மன்னர்களுக்கும், அரச குடும்பத்தவர்களுக்கும், தாயாதிகளுக்கும், உறவின் முறையோர்களுக்கும், புலவர்களுக்கும், பஞ்சாயத்து தலைவர்களுக்கும் குடமுழுக்கு விழாச் செய்தியை அறிவிக்க வேண்டும். சக்கரவர்த்திகள் வரும்போது நகர எல்லையில் கோலாகலமாக வரவேற்க வேண்டும். பழையாறைக்கு வந்த பிறகே இங்கே வரப்போகிறார்களா அல்லது, கொள்ளிடம் தாண்டி இங்கே நேரே வரப்போகிறாரா, தெரியவில்லை'' என்றார்.





சக்கரவர்த்தி, கங்கை நீருடன் வரும் செயதி கிடைத்து விட்டது. செய்தியைக் காவலர்கள் இங்கு கொண்டு வராமல், பழையாறைக்கு ஏன் கொண்டு சென்றனர் என்று வீரமாதேவி எண்ணினாள். அதற்குக் காரணம் இருக்க வேண்டும் என்றும் சிந்தித்தாள்.

இளவரசர் கேட்ட கேள்விக்கு உடனே மறுமொழி கூற வேண்டும். ஏதோ ரகசியம் பேசுவதாகவும் அவர் வந்தவுடன் நிறுத்திவிட்டதாகவும் நினைத்த இளவரசரின் சந்தேகத்தைப் போக்க வேண்டும் என்று வீரமாதேவி முடிவு செய்தாள். மற்றவர்கள், இளவரசருடன் நேரே பேச சற்று அச்சங் கொண்டவர்கள்.

வீரமாதேவி சொன்னாள்: ''குடமுழுக்குக்கு நாள் குறிப்பிட்டாகிவிட்டது. கங்கைப் புனித நீருடன் அரசர் எப்போது வருவார் என்ற கவலை எனக்கிருந்தது. அந்த ஐயமும் தீர்ந்துவிட்டது. பழையாறைக்குச் சென்று



வருவதுதான் முறை. இங்கே உள்ளவர்கள் எல்லாரும், கோயிலுக்கு என்ன பெயர் சூட்டுவது என்பதைப் பற்றித் தங்கள் கருத்தை விவரித்தார்கள். அந்த வேளையில்தான் நீங்கள் வந்தீர்கள்'' என்றாள்.

இளவரசர் அங்குள்ளவர்களை ஒருமுறை பார்த்தார்.

''பெயரிடும் பிரச்சனை இங்கும் தலை தூக்கி விட்டதா? கோயிலுக்கும், கோயிலுள்ள நகரத்திற்கும், நகரத்திற்கு அருகிலுள்ள ஏரிக்கும் என்ன பெயரிடுவது என்பதை அமைச்சர்கள் விவாதித்து வருகின்றனர். அரச சோதிடரும் அதுபற்றிச் சிந்தித்து வருகிறார். ''பஞ்சவன் மாதேவீச்சுரம்'' என்று பெயரிட வேண்டுமென்று சிலர் கருத்துத் தெரிவிக்கிறார்கள். லோகமாதீச்சுரம், செம்பியன் மாதேவீச்சுரம் என்றெல்லாம் பெயரிடப்பட்ட திருக் கோயில்கள் இருப்பன போன்று சோழ அரசியார் பெயரால் கோயில் அமைய வேண்டும் என்று அரசியார் விரும்புவதாகச் செய்தி ஒன்று கிடைத்தது. சக்கரவர்த்தி களும் அதை ஆமோதிக்கிறார் என்றும் கேள்வி. ஆனால், சற்று உடல்நிலையில் முன்னேற்றம் கண்ட பழை யாறையிலுள்ள அரிந்தவன்மாதேவி தன் பெயர்தான் பெரிய கோயிலுக்கிடப்பட வேண்டும் என்று வற்புறுத்து கிறாள். என்ன செய்வதெனத் தெரியவில்லை. கல்தச்சர் களைக் கொண்டு கல்வெட்டுகளில் பெயர் பொறிக்கப்பட வேண்டும்...'' என்று இளவரசர் கவலைப்படுபவர் போல் பேசினார்.

முதிய சிற்பி கூறினார்: ''நான் என் கருத்தைச் சொல்வதில் பிழை இருந்தால் பொறுத்தருளுங்கள். நான் சொல்வது நியாயம் என்பதும் தங்களுக்குத் தெரியும். சோழர் குலத்தின் பிதாமகர் விஜயாலயசோழ தேவர்,



முதன்முதலில் சிவபெருமானுக்குக் கற்கோயில் எழுப்பினார். விஜயாலய சோழீச்சுரம் என்று அதற்குப் பெயர் சூட்டினார்கள். ஆதித்த சோழீச்சுரம் - இன்னும் பல உதாரணங்கள் கூற முடியும். தஞ்சாவூரில் மாமன்னர் இராசராசசோழ தேவர் எழுப்பிய கோயிலுக்கு இராசராசேச்சுரம் என்றே பெயர் சூட்டினார்கள். அதுபோல் இந்தப் பெரிய கோயிலுக்கும் இராசேந்திர சோழீச்சுரம் என்று பெயர் சூட்டவேண்டும். அதுதான் முறை. என் சொல்லில் தவறிருந்தால் முதலிலேயே நான் வேண்டியது போல் பொறுத்தருளவேண்டும்''.

முதிய சிற்பி கூறியதை மறுப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் மாணிக்கசேகரன் மட்டும் எழுந்து, ''இந்தக் கோயில் உருவாவதில் எனக்கு முக்கியப் பங்குண்டு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்'' என்று கூறத் தொடங்கியவுடன், இளவரசர் குறுக்கிட்டு, ''மாணிக்க சேகரீச்சுரம் என்று பெயரிட வேண்டும் என்று விருப்பப்படுகிறீர்களா?'' என்றான்.

அங்கே இருந்தவர்களிடையே அடக்கமான சிரிப்பு எழுந்து அடங்கிற்று. மாணிக்க சேகரன் முகம் சிவந்தது; நாணத்தால் அன்று; சினத்தால்.

''அந்த அளவுக்கு அறிவிலி என்றோ பேராசைக்காரன் என்றோ என்னை எண்ணிவிட்டாரா, சக்கரவர்த்திகளின் இளைய மகன்? எனக்கு அப்படிப்பட்ட ஆசையிருந்திருந்தால் இந்தக் கோயிலின் முக்கிய இடத்தில் இந்தக் கோயிலைக் கட்டுவித்தவர் மாணிக்கசேகரக் கல்தச்சர் என்று செதுக்கியிருப்பேன். உங்களுக்குத் தெரிந்திருக்குமோ - தெரியாதிருக்குமோ

என்றாலும் நான் சொல்லத்தான் போகிறேன். ஒரு காலத்தில் - ஏன் நான் அறிந்து இந்த இடம் பெரிய காடாக இருந்தது. இந்த இடத்தில் ஒரு கோயில் எழுப்ப விரும்பினார் சக்கரவர்த்திகள். அப்போது அவர் சக்கரவர்த்தி பீடத்தில் அமரவில்லை. அவர் பிறவியி லேயே கலைஞர். அவர் உள்ளத்தில் கலை ஆர்வத்தை மேலும் வளர்க்க ஒருவர் தேவைப் பட்டார். எப்போதும் 'போர் போர்' என்று சோழ நாட்டின் பெருமையை யுத்த பூமியில் நிலை நாட்டிய இளவரசரின் கலைத் தாகத்தை ஒருவர் வளர்த்தார்: உருவம் கொடுத்தார். சிற்ப சௌந்தர்யங்கள் நிறைந்த கலைக் கோயில் உருவாக ஊக்கமளித்தார். பல எதிர்ப்புகள் ஏற்பட்டன. காட்டை அழித்துச் சமமாக்கி, இங்கே கோயில் கட்டும் பணியைத் தாமே ஏற்றுக் கொண்டார். கோயிலைச் சுற்றி நகரம் ஏற்பட வேண்டிய கட்டாயம் எழுந்தது. ஒன்றை நினைத்துப் பார்க்கவேண்டும், தஞ்சை மாநகரம், சோழ நாட்டின் தலைநகராக அமைந்த பிறகே அங்கே பெரிய கோயிலை எழுப்பினார், இராசகேசரி இராசராச சோழ தேவர். ஆனால் இங்கோ கடுமையான கானகம். காடு திருத்திக் கோயில் கட்ட வழி வகுத்தார். சிற்பியைத் தேடி அழைத்து வருவதில் பெரும் பாடுபட்டார். நகரத்தின் அருகே ஒரு பெரிய ஏரியும் அமைந்தது. இதற்கெல்லாம் காரணம் யார்? யார் தெரியுமா?'' என்று கூறிச் சற்று பேச்சை நிறுத்தினார்.

அனைவரும் யார் என ஆவலுடன் நோக்கினர். ''அவர்தான் இதோ இங்கே அடக்கமாக நிற்கும் இளவரசி வீரமாதேவி. இவர் பெயரைக் கோயிலுக்குச் சூட்ட வேண்டும். இந்த நகரத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட



வேண்டும். ஏரிக்கு எந்தப் பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்''.

மாணிக்க சேகரன் பேச்சைக் கேட்டு அங்கிருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். தலைமைச் சிற்பி என்ன சொல்கிறார்? தெரிந்துதான் சொல்கிறாரா? நிலைமையைப் புரிந்துதான் சொல்கிறாரா?

வீராமாதேவியின் பெயரால் கோயிலா? இது என்ன நியாயம்? ஊர் உலகம் சம்மதிக்குமா? அரசி பஞ்சவன் மாதேவி அறிந்தால் என்ன ஆவது?

சிற்பிக்கு என்ன நேர்ந்து விட்டது? வீரமாதேவியின் மீது முன்பே பொறாமை கொண்ட அரசியார், சிற்பியின் எண்ணத்தை அறிந்தால் யார்மீது சீற்றம் கொள்வாள்?

இளவரசருக்கே வியப்பாக இருந்தது. கோயில் - நகரம் இவற்றிற்குப் பெயர் சூட்டுவதைப் பற்றிய கருத்தைக் கூற சிற்பிக்கு என்ன உரிமை? ஒருவேளை வீரமாதேவி யிடம் நற்பெயரைப் பெற இப்படிப் புகழ் வார்த்தை கூறுகிறாரா?

பழையாறையில் கடும் நோயிலிருந்து பிழைத்து எழுந்துள்ள அரிந்தவன்மாதேவி, தம் பெயரைக் கோயி லுக்குச் சூட்ட விரும்புவது நியாயமானது.

அரசியார் பஞ்சவன் மாதேவி தம் பெயரில் கோயில் அமைவதை விரும்புவது - உரிமையின் அடிப்படையில் எனலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, முதிய சிற்பி விரும்பியது தான் நாடே ஒப்புக் கொள்ளக் கூடியது. அப்படியெல்லாம் இருக்க, மாணிக்க சேகரன் வீரமாதேவியின் பெயரைச் சூட்ட விரும்புவதில் ஏதோ பின்னணி இருக்க வேண்டும்.

இளவரசர் ஏதும் பேசவில்லை. மௌனமாயிருந்தார்.

வீரமாதேவி தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள். அவள் என்ன சொல்லப்போகிறாள் என்று அனைவரும் எதிர்பார்த்தனர்.

''மாணிக்க சேகரரே! என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள்? என்னுடைய விருப்பத்தைக் கேட்டல்லவா நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்?'' என்று கடினமான குரலில் கேட்டாள் வீரமாதேவி.

''தேவி! என்னைப் பொருத்தருளுங்கள். தங்களைக் கேட்டுச் சொல்வதாக தங்கள் தூண்டுதலில் சொல்வதாக எல்லாரும் நினைப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், சக்கரவர்த்திகளின் உள்ளத்தை சரிவர நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அவரிடம் நான் சொன்னால் என்னைப் பாராட்டுவார். மேலும், தேவி! முன்பு ஒரு முறை நீங்கள் ஒரு சபதம் செய்திருக்கிறீர்கள் என்பது அரச குடும்பத்தவருக்குத் தெரியும். அரிந்தவன்மாதேவி அறிவார்கள். அரசி பஞ்சவன் மாதேவியாரும் அறிவார்கள்.

'என் பெயர் என்றென்றும் சந்திர சூரியர், உள்ள வரை நின்று நிலவுமாறு நான் செய்கிறேன்' என்று அவர்கள் எதிரே சூளுரைத்தீர்கள். உங்கள் பெயர் நிலைக்க அழியாத சின்னம் வேறு என்ன இருக்க முடியும், இந்தக் கோயிலைத் தவிர.

''நீங்கள் கோயில் கட்டும்போது அனைவரும் அப்படித்தான் நினைத்தார்கள். காட்டை அழித்துக் கோயில் கட்டத் தொடங்கியபோதே உங்கள் சபதம் உறுதியாகிவிட்டது. கோயில் கட்டுவதற்கு அவர்கள்



எடுத்துக் கொண்ட தடை முயற்சிகளை மறந்து விட்டீர்களா? சக்கரவர்த்திகள் உங்களிடம் கோயில் கட்டும் பெரும் பொறுப்பை ஒப்படைத்ததிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? யார் என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும். சக்கரவர்த்திகள் இங்கே வந்தவுடன் என் கருத்தை அழுத்தமாகச் சொல்லப் போகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட ஆயத்த மானான்.

அங்கே ஒருவித அமைதி நிலவியது. ஒவ்வொருவராக அங்கிருந்து புறப்பட்டனர்.

வீரமாதேவி உரத்த குரலில் சொன்னாள்: ''கோயிலுக்குப் பெயர் சூட்டுவதில் கடும் விவாதத்தில் இறங்கி நேரத்தைக் கழிப்பதைவிட பொறுப்பைச் சித்தரிடம் விட்டுவிடுவோம். அவர் என்ன சொல்கிறாரோ அதை ஏற்போம்.''

இளவரசர், மாணிக்க சேகரன், சிற்பிகள் எல்லாரும் அங்கிருந்து சென்றுவிட்ட பிறகு வீரமாதேவி சோர்வுடனும், பெரும் கவலையுடனும் நின்று கொண்டிருந்தாள்.

'கோயிலுக்கு என் பெயரைச் சூட்டுவதா? என்ன நியாயம்? மாணிக்க சேகரனுக்கு இப்படி ஓர் எண்ணம் எப்படி ஏற்பட்டது?' என்று அவள் குழம்பினாள்.

''சித்தர் பிரானே! நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்'' என்று கைகூப்பிப் பிரார்த்தித்தாள். அங்கே சித்தர் இல்லை. சித்தரைச் சந்திக்க வேண்டும் என்று வீரமாதேவி அப்போது மிகவும் விரும்பினாள்.

தொலைவில் தெரிந்த கோயில் விமானத்தை ஒரு முறை பார்த்தாள். வேயப்பட்ட ஓலைகள் மறைக்க நின்ற விமானத்தின் கம்பீரத்தை ஒருமுறை நோக்கினாள்.

''வீரமாதேவி! என்ன பார்க்கிறாய்? தட்சிண மேருவின் கம்பீரத்தையா? உன் இலட்சியம் பூர்த்தியடைந்ததையா?'' என்று கேட்டவாறு சித்தர் அங்கு வந்து கொண்டிருந்தார்.

'ஆகா; தெய்வத்தின் கருணை என்பது இதுதான். உள்ளத் தூய்மையுடன் ஒன்றை நினைத்தால் நிச்சயம் நடக்கும் என்பதற்கு இந்தச் சம்பவமே சாட்சி' என வீரமாதேவி நினைத்தாள்.

''சித்தர்பிரானே! நீங்கள் தான் எனக்கேற்பட்டிருக்கும் இக்கட்டிலிருந்து காப்பாற்ற வேண்டும்'' என்று குரல் தழுதழுக்கக் கூறியவாறு, அவரது பாதங்களில் விழ்ந்து வணங்கினாள்.

சித்தர் சிரித்தவாறு, ''என்ன தொல்லை ஏற்பட்டு விட்டது? நீதான் எல்லாவற்றிலும் வென்று விட்டாய். கோயிலைக் கட்டிவிட்டாய்; நகரத்தை ஏற்படுத்தி விட்டாய்; ஏரியில் கங்கை நீரைச் சேர்க்கப் போகிறாய். விமானத்தையும் பெருவுடையாரையும் புனித நீரால் முழுக்காட்ட கங்கையின் புனித நீர் வந்து கொண்டிருக் கிறது.

''இந்தப் பெரிய கோயிலின் பெருவுடையார் அதிர்ஷ்டம் நிறைந்தவர். தஞ்சைப் பெருவுடையாருக்கு இல்லாத புகழ், பெருமை இந்தப் பெருவுடையாருக்கு ஏற்படப் போகிறது. வீரமாதேவி நகரத்தின் வீரமாதீச்



சுரத்தில் வீற்றிருக்கும் பெருவுடையாருக்கு கங்கைப் புனித நீரால் திருமுழுக்கு ஏற்படப்போகிறது. பெருவுடையார் அதிர்ஷ்டசாலி'' என்று கூறி வீரமாதேவியை உற்று நோக்கினார்.

''சித்தர் பெருமானே! என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள்? நீங்கள் எடுத்த முடிவான முடிவா? நீங்கள் அப்படி முடிவு செய்யலாமா? என் பெயரால் கோயிலோ, நகரமோ ஏற்படக் கூடாது. இது சத்தியம்'' என்றாள்.

சித்தர் மீண்டும் சிரித்தார்.





## 84. எனக்கு வேண்டாம் புகழ்

கங்கை நீரைக் குடங்களில் சுமந்து சென்ற யானைகள் தொடர்ந்து பயணம் செய்தன. வழிநடைக் களைப்புத் தீர சிறிது நேரம் ஆங்காங்கே இளைப்பாறினார் இராசேந்திரன். விரைவில் கங்கை நீரைப் பெருவுடையாருக்குத் திருமுழுக்காட்டி வணங்க வேண்டும் என்ற பேரார்வம் அவருள்ளத்தில் இருந்தது. சோழ மன்னர் கங்கை நீருடன் வருகிறார் என்ற செய்தி யறிந்து அவருக்கு வணக்கம் தெரிவித்து வரவேற்கக் கூடியிருந்தவர்களிடமும் அதிக நேரம் தங்கவில்லை. இடையே திருவொற்றியூரில் மட்டும் ஒரு பகல் தங்குவதற்கு அனுமதித்தார்.

மிகப் பழைமை வாய்ந்த திருவொற்றியூர்க் கோயிலை அடையும்போது அவர் வியப்படையும் வண்ணம் சதுரானன பண்டிதர் இராசேந்திரனை வரவேற்றார். சோழர் குலத்துக் குருவான அவரை வணங்கி அங்கே ஒரு நாள் தங்கினார் அவர். திருவொற்றியூர்க் கோயிலின் பழம் பெருமையையும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிவனடியார் சுந்தரர் அங்கு வந்து சென்றதையும் கூறி, சுந்தரரின் காதல் கதையையும் விவரித்தார்.



சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலியார் என்ற பெண்ணின் மீது காதல் கொண்டார் என்ற செய்தியையும், திருவொற்றியூர்க் கோயிலிலுள்ள மகிழ மரத்தடியில், ''உன்னை என்றும் பிரியேன்'' என்று உறுதியளித்ததையும் அவர் விவரித்தார்.

பிறகு, சுந்தரர் தன் உறுதியினின்று மாறியதால் விழிகள் இழந்ததையும் எடுத்துக் கூறினார்.

இந்த வரலாற்றைக் கேட்டிருந்த அரசியார் பஞ்சவன் மாதேவியார் சக்கரவர்த்திகளிடம் கேட்டாள்:

''சிவனடியார் தன் வாக்குறுதியிலிருந்து மீறலாமா?''

இராசேந்திரன் தேவியை உற்றுப் பார்த்து, அவர் கேள்விக்குள் புதைந்திருக்கும் பொருளைப் புரிந்து கொண்டு ''சிவனடியார் மட்டுமா? யாருமே கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடாது?'' என்று கூறினார். அவள் அடுத்துக் கேட்கவிருக்கும் கேள்வியை உணர்ந்து கொண்டவர்போல், புன்முறுவல் பூத்தார்.

''வாக்குறுதி கொடுத்து அதை மீறினால் தண்டனை உண்டு. அதுவும் அரசரென்றாலும் தப்ப முடியாது. தெய்வம் நின்று கொல்லும்'' என்றார்.

தேவி அப்போதும் எதுவும் பேசவில்லை. மௌனமாக இருந்தாள். திருவொற்றியூர்க் கோயிலை விட்டுப் புறப்படும் முன்பு, சதுரானன பண்டிதரின் யோசனைப் படி திருவொற்றியூர்க் கோயிலைப் புதுப்பித்துக் கற்களைக் கொண்டு பெரிதாகக் கட்டித்தர இசைவு தந்தார். அப்போதே உத்தரவையும் பிறப்பித்தார்.

இரவு அங்கே தங்கியிருக்கும்போது தேவி கேட்டாள்: ''புதிதாகக் கட்டப்படும் பெருவுடையார் கோயில்

முடிவடைந்தவுடனேயே சோழ நாட்டில் பல கோயில்கள் கட்டத் திட்டமிட்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே!''

''ஆமாம்; அங்கே பெரிய கோயில் திருப்பணி முடிந்த வுடன், சிற்பிகளுக்குத் தொடர்ந்து பணி தரவேண்டும். என் தந்தை, அக்கையார், பாட்டனார், முப்பாட்டனார் செய்த கோயில் அறப்பணிகளைத் தொடர்ந்து பல கோயில்களைப் புதுப்பிக்க வேண்டும். பல ஊர்களில் புதிய கோயில்கள் கட்ட வேண்டும். சிற்பிகளின் திறமை யைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சோழ நாட்டில் தங்கள் புலமையைத் தெரிவிக்கக் கலைஞர்களுக்கு வாய்ப்பில்லாவிடில் அவர்கள் வேற்றிடங்களுக்குச் சென்று விடுவார்கள்'' என்றார்.

பஞ்சவன்மாதேவி அரசரின் விழிகளை நேருக்கு நேர் பார்த்து, ''அந்தக் கோயில்கள் கட்டப்படும்போது அருகிருந்து மேற் பார்வையிடத் தக்கவர்கள் வேண்டு மல்லவா?'' என்று கேட்டாள்.

''ஆமாம், அதிலென்ன சந்தேகம்? கோயில் எழுப்பு வது காலாகாலத்துக்கு அழியாத புகழைத் தரும் திருப்பணி. அவை செவ்வனே நடைபெற வேண்டும். பணியை மேற்பார்வையிட கலை உள்ளம் படைத்தவர் வேண்டும்.''

''ஆனால் இப்போது நீங்கள் இல்லாமலேயே, பெருவுடையார் கோயில் பணி செவ்வனே முடிவடைந் தது அல்லவா?''

''ஆமாம், எந்தப் பணியுமே அதில் ஈடுபாடு மிக்கவர் பார்வையில் நடைபெறவேண்டும். ஒரு போர்க்களம் போல என் தந்தையார் பல போர்களின் பொறுப்பை



என்னிடம் ஒப்படைத்தார். நான் செவ்வனே முடித்தேன். அதுபோல நான் இல்லாமலேயே...''

''அதுபோல பெருவுடையார்க் கோயில் பணியை நம் இருபுதல்வர்களும் ஏற்றுக் கொண்டார்கள் அல்லவா?''

தேவியார் இப்படிக் கேட்டவுடன், இராசேந்திரன் அவளைத் திரும்பிப் பார்த்து, ''தேவி! உனக்குத் தெரியாதது போல் கேட்கிறாய். மூத்தவன் இராசாதிராசன் நம்முடன் வந்து, இப்போது சாளுக்கிய நாட்டிற்குச் சென்றிருக்கிறான். இளையவன் சுந்தரன் மதுரையில் இருக்கிறான். உனக்குத் தெரியும், நடுப்பிள்ளை ஆதித்தன் தஞ்சையிலும் பழையாறையிலுமாக இருந்து நாட்டு நடப்பைக் கவனிக்கிறான். வீரமாதேவி அங்கு இல்லாம லிருந்திருந்தால் கோயிலும், நகரமும் சிறப்பாகப் பூர்த்தியடைந்திருக்குமா?'' என்று கூறிய அரசர் தன் விழிகளை மூடிச் சிறிது நேரமிருந்த பிறகு மெல்ல முணுமுணுத்தார்: ''அவள் ஆர்வமும், உற்சாகமும் உழைப்புமே இப்பெரும் திருப்பணி நிறைவேறக் காரணம்''.

அதைக் கேட்ட பஞ்சவன்மாதேவி, அரசரின் கருத்தை ஏற்றுக் கொள்ளாதவள் போல முகத்தைச் சுளித்துக் கொண்டாள். அதையும் அரசர் கவனிக்கத் தவறவில்லை. தேவி, இந்தப் பேச்சைத் தொடங்கும்போதே, அவள் உள்ளத்தைப் புரிந்து கொண்டுவிட்டார் அரசர்.

பஞ்சவன்மாதேவி மேலும் பேச்சைத் தொடர்வதற்கு முன்பே, ''கங்கை யாத்திரைக்கு வீரமாதேவியை அழைத்து வராததற்கு அதுதான் காரணம். பொறுப்புள்ள வர்கள் அங்கு இல்லாதிருந்திருந்தால் குறுகிய கால

அளவில் அந்த மகத்தான கோயில் திருப்பணி நிறை வேறியிருக்காது.'' என்றார்.

'ஹூம்' என்ற பெருமூச்சுடன் ''ஏரியை அந்த நகரத் துக்கு அருகே வெட்டச் சொன்னது நான்தான், தெரியுமா? குடிக்கத் தண்ணீர் இல்லாமல் என்ன கோயில், என்ன நகரம், ஹூம்?''

பஞ்சவன் மாதேவியின் குரலில் இருந்தது பெரு மையா - பொறாமையா அல்லது வெறுப்பா என்பதைப் புரிந்து கொள்ள முடியாத அரசர், ''தேவி! எல்லாம் உன் திட்டம்தான். அங்கே கட்டப்பட்டுள்ள பெரிய கோயி லின் பெருமை உனக்கும் சேர்ந்ததுதானே?'' என்றார், மெல்லிய புன்னகையுடன், தேவியின் முக உணர்ச்சியைக் கவனமாக நோக்கியவாறு.

''அப்படி நீங்கள் நினைப்பது உண்மையானால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. இப்போது சொன்ன கருத்தை உறுதிப்படுத்தினால் நான் மிக மகிழ்வேன்!'' என்றாள்.





''உறுதிப்படுத்த வேண்டுமா?'' வியப்புடன் கேட்டார் அரசர்.

''ஆமாம்; என்றென்றும் தங்கள் புகழ் நின்று நிலைத்திருக்கும் வகையில் கட்டப்பட்டிருக்கும் அந்தக் கோயிலுக்குள்ள பெருமை எனக்கும் சேரும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.''

''ஓ! அதற்கென்ன தடை? உன் பெயரைக் கல் எழுத்தில் பொறித்து விடுகிறேன்.''

''போதாது...''

''என்ன செய்ய வேண்டும்?''

''அந்தக் கோயில் சாசனங்களில் என் பெயர் மட்டுமே இருக்க வேண்டும்''

ஒரு கணம் இராசேந்திரன் திடுக்கிட்டார். உணர்ச் சியை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. உடனே மறு மொழியும் கூறவில்லை.



''என்ன, மௌனமாகி விட்டீர்கள்? என் பெயர் மட்டுமே எப்படிக் கல்லில் எழுதமுடியும், வீரமாதேவி யின் பங்கும் அங்கு நிறைய இருக்கிறதே என்றுதானே நினைக்கிறீர்கள்?'' என்றாள்.

இராசேந்திரன் தேவியைக் கூர்ந்து நோக்கினார். ''நீயே எல்லாவற்றிற்கும் சமாதானமும், மறுமொழியும் வைத்திருக்கிறாயே. நீ கேட்டதற்கு சரியான மறுமொழி யும் நல்ல வழியும் நீயே சொல்லு'' என்றார்.

''ஆகாகா - இப்படிச் சொல்லித் தப்பப் பார்க்காதீர்கள். எனக்குத் தெரியும் அந்தக் கோயிலுக்கு வீரமாதேவியின் பெயரை வைக்கப் போகிறீர்கள்?''

இராசேந்திரன் தலையை அசைத்தார்.

''என் அருமை தேவி! நீ நினைப்பது தவறு. கோயிலுக் கும், நகரத்திற்கும் என்ன பெயரிடலாம் என்பதை முடிவு செய்யும் உரிமை என்னிடம் மட்டுமில்லை'' என்று சொன்னபோது பஞ்சவன்மாதேவி அரசரை அதிர்ச்சியுடன் நோக்கி, ''நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். சோழ நாட்டின் சக்கரவர்த்தி யாரிடம் கேட்கவேண்டும்? கோயிலுக்குப் பஞ்சவன் மாதேவீச் சுரம் என்று பெயர் சூட்டவேண்டும் என்ற என் கோரிக்கையை - இல்லை இல்லை என் உரிமையை - நிறைவேற்றுவதாக நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். உறுதி தவறாதவர்கள் நீங்கள். சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரலாறு அறிந்தவர்கள்'' என்றாள்.

இராசேந்திர சோழதேவர் முடிவு ஏதும் கூறவில்லை. தன்னை மிக இக்கட்டான நிலையில் நிறுத்தியிருக்கிறாள் என்று முடிவு செய்தார்.



''தேவி! நீ சொல்வதுபோல் என் தீர்ப்பை எதிர்ப்பவர் யாருமில்லை. ஆனால் முதல் அமைச்சரையும் மந்திரி மண்டலத்தாரையும் கேட்க வேண்டுமல்லவா? அவர் களுக்கும் மேலாக, நம் குருநாதர் கருவூர்த் தேவரைக் கேட்க வேண்டாமா? பெரிய கோயில் அவர் அருளாலும், ஆசியாலும் மட்டுமே உருவாகியிருக்கிறது என்பது உனக்குத் தெரியாதா?''

சக்கரவர்த்திகள் கூறியது கேட்டவுடன், பஞ்சவன் மாதேவி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'கருவூர்த் தேவரிடம், நம் எண்ணத்தை எடுத்துச் சொல்லி நிறைவேற்றுவோம்' எனத் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இராசேந்திர சோழ சக்கரவர்த்திகளின் பரிவாரம் கங்கை நீர் சுமந்த குடங்களுடன் வந்து கொண்டிருக்கும் செய்தி சோழ நாடெங்கும் பரவியது.

தஞ்சாவூருக்கு வருகிறாரா, பழையாறைக்கு வரு கிறாரா என்று தெரியாமல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதச் செய்தியைப் பரப்பி வந்தனர்.

பழையாறையில் அரிந்தவன் மாதேவியின் மாளிகை யில் அமைச்சர் பெருமக்கள், இளவரசர் அனைவரும் கூடினர். அரசர் வந்து கொண்டிருக்கும் செய்தி அரசரின் இளையமகன் இராச மகேந்திரனுக்குத் தெரிவிக்கப் பட்டது. இராசமகேந்திரன் மிக வேகமாக இயங்கினார். அரசகுருவும், சோதிடரும் பழையாறைக்கு வந்து சேர்ந்தனர். பழையாறையில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திற்கு வருமாறு, வீரமாதேவிக்கு அழைப்பு அனுப்பவில்லை. அரிந்தவன்மாதேவி தடுத்து விட்டாள்.

குடமுழுக்கு விழாவின் பணியில் ஈடுபட்டிருந்த வீரமாதேவி, சக்கரவர்த்திகள் முதலில் கோயில் குட முழுக்கு விழாவிற்குத் தான் வரப்போவதாக எண்ணியிருந்த வீரமாதேவி, வரவேற்பிற்காக ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தாள். ஆனால், அவள் மனச் சோர்வுடனிருந்தாள். கருவூர்ச் சித்தர் கூறிய வார்த்தைகள் கலக்கத்தை அளித்தன. கோயிலுக்கும் நகரத்திற்கும் தன் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பிய சிற்பி மாணிக்க சேகரனிடம் தன் மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

இருவருக்கும் விவாதம் முற்றியது. ''உங்கள் நன்மைக்காகவே, நான் அவ்வாறு சொன்னேன்'' என்று மாணிக்க சேகரன் கூறியவுடன், வீரமாதேவி சிற்றத்துடன் ''சோழ அரசியும் இளவரசியும் கோயிலுக்கும், நகரத் திற்கும் தங்கள் பெயரிட வேண்டும் என்று போட்டியிடு கிறார்கள். இதற்கிடையே என் பெயரா? எனக்கென்ன தகுதி?'' என்றாள்.

மாணிக்க சேகரன் சிரித்தவாறே, ''தகுதியா? சக்கர வர்த்திகளின் அன்பை அதிகம் பெற்றிருக்கிறீர்கள். அது ஒன்றே தகுதி. மற்றவர்களிடமில்லாத மற்றொரு பெரும் தகுதியும் தங்களிடமிருக்கிறது'' என்று கூறிச் சற்று நிறுத்தி வீரமாதேவியைக் கூர்ந்து நோக்கினான். 'அதென்ன?' என்று புருவம் உயர்த்திய வீரமாதேவியை நோக்கிக் கூறினான்.

''அதுதான் தங்கள் இளமை. தங்கள் அழகிலும் இளமையிலும் மயங்கித்தான் அரசர் இந்தக் கோயிலைக் கட்டினார். அதற்குப் பரிசாகத் தங்கள் பெயரைச் சூட்டுவதுதான் முறை; நியாயம்-''.

அழகு இளமை -



மாணிக்க சேகரனின் பேச்சைக் கேட்டு வீரமாதேவி சீறினாள். கடுஞ்சொற்களை வீசினாள். மாணிக்க சேகரனை அந்த இடத்தை விட்டுச் செல்ல உத்தர விட்டாள்.

சோழத் தலைநகர் தஞ்சைபுரிக்கு வந்து அரியணை யில் அமர்ந்தபிறகே புதிய நகரத்திற்குள் செல்ல வேண்டும் என்று ஈசான சிவ பண்டிதர் சொல்லிவிட்டார்.

அரிந்தவன்மாதேவி அதற்குச் சம்மதிக்கவில்லை. ''பழையாறைக்கு வந்து, என்னைப் பார்த்துவிட்டு என் உடல் நலம் கேட்டறிந்தே, அரசர் தஞ்சாவூருக்குச் செல்வார் என்ற செய்தி எனக்குக் கிடைத்து விட்டது. அதை மாற்றாதீர்கள்.'' என்று அரிந்தவன் மாதேவி கூறினாள்.

வீரமாதேவியிடம், இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்ட போது கருவூர்ச்சித்தர் அங்கு இருந்தார்.

''பழையாறைக்கு நாம் செல்வோம். சக்கரவர்த்திகள் கங்கை விநாயகர் சிலையைக் கொண்டு வருகிறார். அதைப் பழையாறையிலேயே நிலைபெறச் செய்வோம்'' என்றார் சித்தர். கருவூர்த் தேவர் வீரமாதேவியைத் தனியே சந்திக்கும் சிறிது நேரத்தில் அவர் புன்முறுவல் பூப்பார். வீரமாதேவி கவலை தோய்ந்த முகத்துடன் 'இல்லை இல்லை' என்று தலையை அசைப்பாள்.

''உங்கள் திருப்பாதம் பிடித்துக் கெஞ்சுகிறேன். கருணை கூர்ந்து கோயிலுக்கு என் பெயரை இடாதீர்கள்'' என்று கண்ணீர் மல்கக் கூறுவாள்.

சித்தர் நகைத்தவாறு ''வீரமாதேவி! பெயரிடுவது என் உரிமையா? சோழ சக்கரவர்த்திகள் என்ன சொல்கிறாரோ, அதுதான் இறுதி - உறுதி'' என்று கூறுவார்.

''சக்கரவர்த்திகளிடம் உங்கள் கருத்தைச் சொல்லாமல் இருங்கள்; இதுவே நீங்கள் எனக்குச் செய்யும் பேருதவி'' வீரமாதேவி மன்றாடுவாள்.

''நீ ஏன் மறுக்கிறாய்? அரிந்தவன்மாதேவியும், பஞ் சவன் மாதேவியும் தங்கள் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். உனக்கு உரிமையில் லையா?'' என்று சித்தர் கேட்டார்.

''அந்தப் பெருமை அவர்களுக்கே சேரட்டும்!''

''அரசர் வற்புறுத்தினால்?''

''மறுப்பேன், எதிர்ப்பேன்''

''நான் சொன்னால்?''

''சுவாமி! அதனால்தான் தங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன். என் பெயரிட வேண்டாம் என்று மன்றாடுகிறேன்.''

''தஞ்சாவூரில் இளவரசிகள், அரசியார் எதிரே ஒரு சபதம் செய்தாயே, நினைவிருக்கிறதா?''

''ஆமாம், என் பெயர் அழியாதிருக்கும் ஓர் அரிய செயல் புரிவேன் என்று சொ ன்னேன். கோயில் ஒன்று கட்ட வேண்டும் என்று எண்ணமிருந்ததைச் சொன்னேன். இப்போது என் அறிவு வளர்ந்து விட்டது. உங்கள் கருணைப் பார்வையினால் ஒரு முதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. சோழ சக்கரவர்த்தியின் பெயரோ, அரசியாரின் பெயரோ கோயிலுக்கு இடப்பட வேண்டுவதே நியாயம் என்று உணர்ந்து விட்டேன்.''

''ஒன்று செய்வோமா - அரிஞ்சயன் தேவியின் பெயரைச் சூட்டலாமா?''

''நான் கடுமையாக எதிர்ப்பேன்.''



''சரி,சரி பெண்ணே! பழையாறையில் சக்கரவர்த்தி களைச் சந்திக்கும்போது முடிவு எடுப்போம். என் சொல்லைத் தட்டமாட்டான் இராசேந்திரன்.''

''யார் சொன்னாலும் நான் மீறுவேன் - உறுதி.''

வீரமாதேவியின் உறுதியான சொல்லைக் கேட்டுச் சிரித்தார் தனக்குள் நகைத்துக் கொண்டார்.

பழையாறை நகரம் விழாக் கோலம் பூண்டு திகழ்ந்தது. தில்லை அம்பலவாணரைத் தரிசித்து விட்டு இராசேந்திர சோழ தேவர் அங்கு வருகிறார் என்ற செய்தி எங்கும் பரவியது.

வீரமாதேவிக்கு வருத்தம், ஏமாற்றம். நேரே பெரிய கோயிலுக்கு வந்து, குடமுழுக்குச் செய்துவிட்டுப் பழையாறைக்குச் செல்வார் சக்கரவர்த்தி என எண்ணி யிருந்தவள், சக்கரவர்த்தி பழையாறை சென்று, தஞ்சை சென்ற பிறகே இங்கு வருகிறார் என்று அறிந்தவுடன் ஏமாற்றத்தால் துடிதுடித்தாள்.

அரசர் அழைத்தாலும் பழையாறைக்குச் செல்வ தில்லை என்று முடிவு கொண்டாள்.

'எனக்குப் பழையாறையில் என்ன வேலை? கோயில் திருப்பணி முடிந்து விட்டது. சித்தர் இருக்கிறார்; அரசி இருக்கிறார். உற்றார் உறவினர்கள் இருக்கின்றனர். அவர்கள் குடமுழுக்குப் பணியினைப் பார்த்துக் கொள் வார்கள்' என்று தனக்குள் பேசிக் கொண்டாள்.

அவள் ஓர் உறுதியான முடிவுக்கு வந்துவிட்டாள்.



## 85. வீரமாதேவியின் எண்ண அலைகள்

மூங்கில்துறைக் கிராமத்திற்கு வீரமாதேவிவந்து இரண்டு நாள்களாகி விட்டன. வந்தவுடனேயே கொள் ளிடக் கரைக்குச் சென்றாள். கரையோரமாக முன்பைவிட மூங்கில் அதிகம் வளர்ந்து காற்றில் உராய்ந்து சரக் சரக் என்ற ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது.

பரிசல் துறையில் ஒரு பரிசல் மட்டும் மரக்கிளையில் கட்டப்பட்டு, ஆற்று நீரில் மெல்ல அசைந்து கொண்டிருந் தது. இரண்டு மூன்று பரிசல்கள் குப்புறப்படுத்துக் கிடந்தன. கண்ணுக்கெட்டிய தொலைவு வரை மக்கள் நடமாட்டமில்லை.

மூங்கில் துறைக் கிராமத்தில் வீடுகள் பொலிவிழந் திருந்தன. தெருக்களில் ஆள் நடமாட்டம் இல்லாததால் மண்மேடிட்டு புல்லும் முட்செடியும் முளைத்து நடப்பதற்கு ஓர் ஒற்றையடிப் பாதை மட்டும் நெளிந்து சென்றது.



மூன்று ஆண்டுகளில் மூங்கில் துறை பொலிவிழந்து விட்டதை எண்ணிப் பெருமூச்சு விட்டாள். சிதம்பரம் செல்பவர்கள், பரிசலில் இறங்கி அந்த வழியாகத்தானே சென்றிருக்க வேண்டும்?

தண்ணீர்ப் பந்தல் இருந்த இடத்தில் உடைந்த பானைகள் மட்டுமே கிடந்தன. பரிசலிலிருந்து இறங்கி தண்ணீர்ப் பந்தலில் நீர் மோர் அருந்திச் செல்பவர்கள் யாருமில்லையா?

வீட்டு வாசலில் கோலமிட்ட நாள்களை நினைத்துக் கொண்டாள். அவளும் அவளுடைய இரு தோழிகள் முத்து வடிவும், கோதையும், வரைந்த கோலத்தின் நடுவே வைக்கப்பட்டிருந்த பூசணிப் பூவை அழகு பார்த்து, சுற்றி வந்து கை கொட்டிப் பாடுவார்கள். தானே இட்டுக்கட்டிய பாடலை இப்போது நினைத்துக் கொண்டாள்.

ஆடுங்கடி பள்ளுப் பாடுங்கடி
ஆதிரையான் பெயர் சொல்லுங்கடி
சூடுங்கடி மாலை சூடுங்கடி - அந்தத்
தூயோன் புகழ்பாடி ஆடுங்கடி.

''ஆகா - மனம் நிம்மதியாக இருந்தபோது பாடல்கள் தாமே கோவையாகத் துள்ளி வரும். அதற்கேற்ப மனத் திலே துள்ளிவரும் ஆசைகள், இலட்சியங்கள் வளரும்.

எவ்வளவோ கனவுகள்! வீட்டிலே அத்தையும், பாட்டனாரும் இருப்பார்கள். அவர்களின் அன்பு மழையில் நனைந்த காலம் இனி மீண்டுவரப்போகிறதா? பாட்டனார் எவ்வளவு காலத்திற்குத் தான் இருக்க முடியும்? அவர் போய்ச் சேர்ந்தார். ஆனால், அத்தை..? அவர்கள் இன்னும் சில ஆண்டுகள் இருந்திருக்கலாம்.

பழையாறையில் எனக்காகக் கட்டப்பட்ட புதிய வீட்டில் என்னைப் பற்றி அவர்களுக்குக் கவலையுடன் காலங் கழித்தாள். அரண்மனை வாழ்க்கை அவர்களுக்குப் பிடிக்க வில்லை.

'பெண்ணே! பார்த்துப் பிழைத்துக் கொள். உன் நடனம் - நாட்டியம் - பாட்டு - கலை ஆசை எல்லாம் நிம்மதியான வாழ்க்கைக்கு உதவுமா என்பதை அமைதி யாகச் சிந்தித்துப்பார்' என்று அடிக்கடி சொல்வாள். அவர்கள் கூறியதுதான் உண்மையா? எதை நம்பி கிராமத்தை விட்டுப் பிரிந்தோம்? அரண்மனை வாழ்க்கை சுகபோகங்கள் எனும் மாயையில் சிக்கினோமா? இல்லை, இல்லவே இல்லை. என் அத்தைக்குத் தெரியும். அவர் இளவரசராயிருந்தபோது சிதம்பரத்தில் சந்தித்ததை அத்தை அறிவார்கள். நான் அரண்மனைக்குள் நுழைந்த வுடனையே அங்கிருந்த சூழ்நிலையை அறிந்தேன், அத்தையிடம் சொல்லியிருக்கிறேன். என் கலைப் புலமைக்காக என்னை இளவரசர் தன்னுடன் சேர்த்துக் கொண்டாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் ஓர் உயர்ந்த மனிதர். மன்னர்களுக்கும் மேற்பட்டவர். அவரை இராசேந்திரன் என்று அழைப்பது மிகமிகப் பொருத்தம்.

கலைக்காகவே வாழக்கையை அர்ப்பணிக்க முன் வந்தவள் நான் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். என் இளமைத் தாகத்தை அடக்கிக் கொண்டதற்குக் காரணத்தை அவர் உணர்ந்திருக்க வேண்டும். என் வேண்டுகோளை, சபதத்தை அவர் ஏற்றுத் தன் உணர்ச் சியை அடக்கிக் கொண்டு என் விருப்பப்படி நடக்க ஒப்புக் கொண்டாரே, அது மாபெரும் தியாகமல்லவா?



என் மூலம் வாரிசு உருவாகி வருங்காலத்தில் சோழ நாட்டிற்கு எந்தவிதத் தொல்லையையும் கொடுக்கக்கூடாது என்பதற்காக நான் அவருடன் ஒன்று சேர்வதைத் தவிர்த்தேன். அதற்காகவே சபதம் செய்தேன். அதை ஏற்றிருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. அவர் சோழ நாட்டு மாமன்னராக மகுடம் சூட்டிக் கொண்ட பிறகும், அவர் என்னை ஒதுக்கியிருக்கலாம்; என்னைப் போன்ற இளமையும் அழகும் நிறைந்த மகளிர் அவருக்குக் கிடைக்காமலா



போயிருப்பார்கள்? அதனால்தான் சொல்கிறேன்: அவர் ஒப்புயர்வற்ற மாமனிதர்; அரசர்களுக்குள் இந்திரன், இராசேந்திரன்!

வீரமாதேவி வாய்விட்டுப் பேசிக் கொண்டிருந்தாள். ''சுற்றிலும் பல காத தூரத்துக்கு ஓர் உயிரினம் கூட இல்லை. மனத்திற்குள்ளே நினைத்து நினைத்து உருகிப் புதைத்து வைத்திருப்பதால் உள்ளத்துக்கும், உடலுக்கும் தான் வேதனை. மனம்விட்டுப் பேசுவோம்.

யாருடன் பேசுவது? அன்று என் அருமை நாகு இருந்தது. என்னிடம் அந்தக் கன்று எவ்வளவு பிரியம் வைத்திருந்தது? என் மனக் குறையை நான் நாகுவிடம் தான் கூறி ஆறுதல் பெறுவேன். என் ஆருயிர்த் தோழியா யிருந்த கோதை கல்யாணம் செய்து கொண்டு வேற்றூர் சென்றுவிட்டாள். முத்துவடிவு மட்டும் இருந்தாள். அவளும் இப்போது இங்கில்லை. அப்போதே அவளுக்கு இலேசான பொறாமை உதயமாயிருப்பதை அறிந்தேன். புழக்கடைக்குச் சென்று நாகுவிடம் மனம் விட்டு வாய் திறந்து பேசுவேன். அதைத்தவிர வேறென்ன செய்ய முடியும்?

''என் அருமை நாகு'' என்று கன்றின் கழுத்தை மெல்ல வருடி, ''நாகு, நாகு! எனக்கு ஏன் இப்படி ஒரு வேதனை ஏற்பட்டிருக்கிறது?'' என்று கேட்டிருக்கிறேன். இரா சேந்திர சோழ தேவரைச் சந்தித்த சில நாள்களிலேயே கேட்டிருக்கிறேன். அப்போது ஒருவித வேதனை. இப்போது ஒருவித வேதனை. காதல் முளைவிட்டு விரியும் சமயம் ஏற்பட்ட அந்த வேதனை பற்றி நான் நாகுவிடம் கேட்டபோது அது விழிசாய்த்து என்னைப் பார்த்தது.



''நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். முன்பு போல் நீ இல்லை!'' என்றது. ''என்னிடம் என்ன மாறு தலைக் கண்டாய்?'' என்று நாகுவிடம் கேட்டது இப்போதும் நன்றாக நினைவிற்கு வருகிறது.

''இவ்வளவு நாள்களாக நீ என்னைக் கவனித்தாயா? சில நாள்களாக நீ யாருடனும் பேசாமல் உன்மத்தம் பிடித்தவள் போலிருக்கிறாயே?'' என்று நாகு என்னைப் பார்த்துக் கேட்டது. இப்போது நாகு இருந்திருந்தால் என்ன கேட்டிருக்கும்?

''வீரம்மா - வீரம்மா! இளவரசரின் கருணை விழிப்பார்வை பெற்றுவிட்ட உனக்கு என்ன குறை?'' என்று அன்று கேட்டேன். நீ இளவரசரின் கருணை விழிப்பார்வை பெற்று, அவர் இதய அரியணையில் ஏறி அமர்ந்து, மற்ற அரசிகள் பொறாமைப்படும் நிலையை அடைந்தாய். அரசர் உன்னிடம் மயங்கி, உன்னைவிட்டுப் பிரியாமலே இருந்தது மற்றவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அதற்காக நீ ஒரு சபதம் செய்தாய்'' என்று நாகு கூறியிருக்கும்.

என் ஆசை நாகுவுக்கு அவ்வளவுதான் தெரியும். அந்தப்புரத்து மற்ற இளவரசிகளுக்கும், பட்டத்து அரசிக்கும் எந்தவிதத் தொல்லையும் கொடுக்காமல் நான் ஒதுங்கியது நாகுவுக்குத் தெரியாது.

மாளிகை வாழ்க்கையை உதறிப் பழையாறைக்கு வந்தது அதற்குத் தெரியாது. இளவரசர் அரசரானார். அவர் இலட்சியத்தை நான் புரிந்து கொண்டேன். அழியா அற்புதக் கலைச் சின்னம் படைக்கும் பொறுப்பை நான் ஏற்றேன். அதற்கும் எவ்வளவு இடையூறு ஏற்பட்டது

என்று நாகுவுக்குத் தெரியாது. ''நாகு, நாகு! நீ இருந்திருந்தால், தஞ்சை புரியைவிட மிகவும் சிறந்த கோயிலை நான் தன்னந்தனியளாய் படைத்ததைத் தெரிந்து கொண்டிருப்பாய். நாகு! நீ இங்கு இருந்திருந்தால் உன்னைத் தூக்கிச் சென்று, புதிதாகக் கட்டப்பட்ட பெரிய கோயிலில் விட்டிருப்பேன். துள்ளித் துள்ளி நீ திரிந்து திருச்சுற்றில் உள்ள சிற்பங்களைக் கண்டு வியந்திருப்பாய். இப்போது அங்கு படைக்கப்பட்டுள்ள சிற்ப அற்புதத்தை எப்படி நான் விளக்குவேன் நாகு?

நாகு, நாகு! சோழச் சக்கரவர்த்தி வடக்கே கங்கைக் கரைக்குச் சென்றபோது என்னை அழைத்துச் செல்லவில்லை. பட்டத்து அரசியைத்தானே அழைத்துச் சென்றார்? கங்கை நதியில் முறையாக, அரசியுடன் கை கோத்து நீராடினால்தானே புண்ணியம்? நான் என்ன முறையான உரிமை பெற்ற அரசியா? ஹூம் அது போகட்டும். நான் இரவு பகல் பாராமல் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தேன். தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இணையான ஒரு கோயிலை என் அன்பிற்குரிய அரசர் படைத்தார் என்ற பெருமையை நிலைநாட்ட விரும்பினேன். அந்தக் கோயிலின் விமானத்திலுள்ள கலசத்திற்குக் கங்கை நீரால் குடமுழுக்காட்ட விரும்பினேன். என் விருப்பமும், என்னவர் விருப்பமும் ஒன்றுபட்டது. அவர் வடக்கே புறப்பட்டார், கங்கை நீரைக் கொண்டு வர.

என் அருமை நாகு! இவையெல்லாம் உனக்குத் தெரியுமா? என் முயற்சியைத் தடுக்க இரண்டு பேரரசிகளும் திட்டமிட்டனர். அரிந்தவன் மாதேவிக்கு மட்டும் அதிகாரமிருந்தால் என்னை நாடு கடத்தியிருப்பாள்.



பட்டத்தரசிக்கு மட்டும் ஆணையிடும் ஆற்றலிருந்தால் என்னை மேலுலகுக்கே ஓட்டியிருப்பாள். எவ்வளவு இடையூறுகள்! ஆனால் எனக்குச் சித்தர் அருள் இருந்தது.

என் பிரியமான நாகுவே! தெய்வம் அனுப்பியது போன்று கருவூர்ச் சித்தர் வந்து சேர்ந்தார். அவர் தேவ தூதர்தான். அவர் அருள் ஆசி இல்லாவிடில் ஏதடி இந்தப் பெரிய கோயில்? எந்தவித இடையூறுமில்லாமல் முடிந்திருக்குமா? 437432/605630.

என் உயிரான நாகு! எல்லாம் முடிந்து விட்டது. கோயில், நகரம், ஏரி எல்லாப் பணிகளும் வெற்றிகரமாக முடிந்துவிட்டன. என் உயிருக்குயிரான பேரரசர் வந்து கொண்டிருக்கிறார்; கங்கை நீரைக் கொண்டு குடமுழுக்கு நிகழ்த்த வந்து கொண்டிருக்கிறார்.

நாகு! இதைப்பார், இவ்வளவு பெரிய நகரமும், கோயிலும், ஏரியும் ஏற்பட யார் காரணம், சொல்லு?

நாகு! நீ இருந்திருந்தால், மாபெரும் வெற்றிக்கு நான்தான் காரணம் என்று என்மீதுள்ள தணியாத அன்பு காரணமாகக் கூறியிருப்பாய்!

நாகு! நான் காரணம் இல்லை. அடர்ந்த காட்டை அழித்து நகரமாக்கி, கோயில் கட்டவில்லை. கோயிலில் அற்புதச் சிற்பங்கள் அமைக்கவில்லை. கருவறையில் பெருவுடையாரை அமர்த்தவில்லை. தட்சிணமேரு போன்ற பெரும் விமானத்தைக் கருவறையின் மீது எழச் செய்யவில்லை.

நாகு! குறுகிய காலத்தில், வீதி, வீடுகள், என்று நகரப் பொலிவு பெற்றிருக்கிறது. அரண்மனை கட்டப்படுகிறது.



தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

சோழநாட்டின் தலைநகரத்தை இங்கே கொண்டு வந்துவிட வேண்டுமென்பது என் அரசரின் இலட்சியம். அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

பெரிய கோயிலுக்கு அரிந்தவன்மாதேவீச்சரம், என்றும் அரிந்தவன் மாதேவிபுரம் என்றும் பெயர் சூட்ட வேண்டும் என்று பழையாறையிலிருந்து அரிந்தவன் மாதேவி ஆசைப்படுகிறாள். அதற்காகத் தன் சக்தி, அதிகாரம் முழுமையையும் பயன்படுத்துகிறாள். சக்கர வர்த்திகளுடனயே இருந்து வரும் அரசி பஞ்சவன் மாதேவி, பஞ்சவன்மாதேவீச்சரம் என்று கோயிலுக்குப் பெயரிடத் துடிக்கிறாள். அரசரிடம் வாக்குறுதி வாங்கி விடுவாள் போலிருக்கிறது.

ஆனால், நான் மதிக்கும் தேவதூதர் சித்தர் என் பெயரைச் சூட்ட முன் வந்திருப்பதை நான் ஏற்கவில்லை.

என்ன அப்படிப் பார்க்கிறாய், நாகு? வீரமாதேவீச்சரம் என்று பெயரிடுமாறு அரசரிடம் சொல்லப் போகிறாராம். வீரமாதேவிபுரம் என்று நகரத்திற்குப் பெயர் சூட்ட வேண்டுமாம்.

சோழநாட்டின் தலைநகரமாக வீரமாதேவிபுரம் விளங்க வேண்டுமாம்.

நாகு, என் அருமை நாகு! என் நெஞ்சை அடைக்கிறது. என் பெயரிலா? ஹூம் கூடவே கூடாது.

என் உள்ளத்தில் நிறைந்திருக்கும் என் ஆசை நாயகர், சோழச் சக்கரவர்த்தி இராசேந்திர சோழதேவர் பெயரில் தான் நகரம், ஏரி விளங்க வேண்டும். நான் சொல்வதை ஒருவரும் கேட்க மாட்டார்களே!



அதனால்தான நாகு! நான் இரவோடு இரவாக அங்கிருந்து புறப்பட்டு விட்டேன். எங்கே செல்வது என்று ஒருகணம் யோசித்தேன். கண் காணாமல் போய் விடலாமா என்று நினைத்தேன்.

பழையாறைக்குச் சென்றுவிட்டு, சிதம்பரம் வந்து ஆட வல்லானைத் தரிசித்துவிட்டு பெரிய கோயிலுக்குக் குடமுழுக்கு செய்ய அரசர் வருவார். அப்போது நான் அங்கிருக்கக் கூடாது. தேடட்டும், என்னை நன்றாகத் தேடட்டும்.

குடமுழுக்குக்கு நாள் குறிப்பிட்ட சித்தர் என்னைத் தேடட்டும். அரச பரிவாரங்கள் அலையட்டும்.

முகூர்த்த வேளை தவறி விடக்கூடாது என்பதற்காக கோயில் விமானத்திற்குக் குடமுழுக்கும் பெருவுடையார்க்குச் சங்கு நீரால் புனித அபிஷேகமும் நடக்கட்டும்.

எந்தப் பெயரை வேண்டுமானாலும் சூட்டிக் கொள்ளட்டும். நான் யாருக்கும் போட்டியாக இல்லை என்பதை அப்போதாவது உணர்ந்து கொள்ளட்டும்.

வீரமாதேவிக்கு இட்ட பணி முடிந்து விட்டது என்ற மன நிறைவுடன் அரசர் மகிழ்வுடன் இருக்கட்டும்.

நான் நிம்மதியாக மூங்கில் துறையில் என் இறுதி நாளைக் கழிப்பேன்.

நாகு! நீ இப்போது இல்லை. உன்னைப் போல மற்றொரு கன்றைப் தேடிப் பிடிப்பேன்.

நந்தவனம் வைப்பேன். நாட்டியப் பணிக்கு என் வாழ்நாளை அர்ப்பணித்துக் கழிப்பேன். நாகு! இவை

தான் நான் சொல்ல விரும்பியது. நீ இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பாய்? கூடாது என்று தடுத்திருப்பாய். நீ யார் எனக்கு யோசனை கூற என்று உன்னை நான் கடிந்து கொண்டாலும் நீ என் உயிர்த் தோழி. நாகு! வரட்டுமா?''

வீரமாதேவி, கொள்ளிடக் கரையினின்று எழ முயன்றாள்.

''இன்னும் பேசு, தேவி! இன்னும் பேசு. உன் மனத்தில் உள்ளதையெல்லாம் கொட்டிவிட்டாய். அது நல்லதுதான். ஆனால், நீ செய்தது சரியா என்று சற்று சிந்தித்துப்பார்!'' என்ற குரல் கேட்டு வீரமாதேவி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அமைதி மட்டுமே நிறைந்திருந்த, கொள்ளிடக் கரையில் காற்று வீசுவதால் எழும் பலவித ஓசைகள் மட்டும் நிறைந்த அந்தப் பகுதியில் யார் யார் என்னருகே?

வீரமாதேவி திரும்பிப் பார்த்தாள். அவள் அருமைத்தோழி முத்துவடிவு நின்றிருந்தாள்.

எழப்போன வீரமாதேவியை உட்கார வைத்து ''உன்னை நான் இங்கே எதிர்பார்க்கவில்லை வீரம்மாள்! எப்போதோ ஒருதடவை, மூங்கில் துறைக்கு வருவேன். நீ என்னை மறந்துவிட்டாய் என்று நான் வருத்தப்பட்டது உண்டு. ஆனால் காட்டுப் பகுதியைத் திருத்தி நகரமாக்கி கோயில் கட்டிப் பெரிய அற்புதம் செய்துவிட்ட உன் பெருமையைச் சோழ நாடே பேசுகிறது. குடமுழுக்கு நடைபெறும் நாளில் அங்கில்லாமல் நீ மூங்கில் துறைக்கு வந்துவிட்டாய். உன்னைத் தேடி அலைவார்களே - அதைப் பற்றிக் கவலைப்பட்டாயா? யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்? அருமை நாகுவுடனா? அத்துடன் நீ



வாய்திறந்து பேசியதால் பல உண்மைகளை அறிந்தேன். வீரம்மா! வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழியை உடைக்கலாமா? உன் பெயரில் கோயில் நகரம் இவையெல்லாம் விளங்கினால் உனக்கென்ன இழப்பு? எங்களுக்கும் பெருமை இல்லையா? வா, போவோம். எழுந்திரு'' என்று வற்புறுத்தினாள் முத்துவடிவு.

வீரமாள் தலையசைத்தாள். ''நான் வரமாட்டேன். இங்கேயே இந்த ஊரிலேயே இருக்கப் போகிறேன். இனி எனக்கு அங்கு என்ன வேலை?'' என்று சொன்னாள். அதில் வேதனை இல்லை. வீரமாதேவியின் தெளிவான உறுதியான குரல் கேட்டு முத்துவடிவு திகைத்தாள்.





## 86. இனி அங்கே எனக்கென்ன வேலை?

வீரமாதேவியின் போக்கை மாற்ற முடியவில்லை. பகலெல்லாம் கொள்ளிடக் கரையில் வீற்றிருக்கிறாள். எப்போதாவது வரும் தோணியிலிருந்து இறங்குபவர்களைப் பார்த்தவாறு இருக்கிறாள். திடீரென்று சிரிக்கிறாள். கரை ஓரமாக நடந்துவிட்டு நீண்ட நேரம் கழித்துத் திரும்புகிறாள். வீட்டிற்கு வந்து, விளக்கேற்றி, நடுக்கூடத்தில் அமர்ந்து, பாட்டனாரை, அத்தையை நினைத்துக்கொண்டு பிரார்த்தனை செய்கிறாள்.

முத்துவடிவு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். வீரம்மாள் கேட்கவில்லை.

'நான் நிம்மதியாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா?' என்று வீரம்மாள் முத்துவடிவை நோக்கிக் கேட்டாள்.

''இது நிம்மதியா? மக்கள் நடமாட்டமில்லாத கிராமத்தில் இருப்பது நிம்மதியா? மணல் ஆற்றங்கரையில்



வீற்றிருப்பது நிம்மதியா? நீ ஒருவருக்கு மட்டுமன்று; பலருக்கு மறுமொழி கூற வேண்டியவள்'' முத்துவடிவு சற்று அழுத்தமாகப் பேசிப் பார்த்தாள். வீரம்மாளின் மனத்தை மாற்ற முடியவில்லை.

''மணல் ஆறா - முத்துவடிவு? நாளைக்கே இதில் சுழன்று சுழன்று வெள்ளம் பெருக்கெடுத்தோடும். அதற்கு என்ன செய்யப் போகிறாய்? நான் சுழன்றோடும் வெள்ளத்தைப் பார்த்தபடியே கோடானுகோடி ஆண்டுகளுக்கு வீற்றிருக்கப் போகிறேன். நான் யாருக்கும் கட்டுப் பட்டவளல்லள் முத்துவடிவு! ஒரே ஒருவருக்குத்தான்...'' வீரம்மாள் எங்கோ பார்த்தவாறு பேசினாள்.

''அந்த ஒருவரைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். அவர் உன்னைத் தேடமாட்டாரா?'' முத்துவடிவு அவள் அருகே நெருங்கி அமர்ந்து அவள் முகவாயைத் தொட்டுக் கேட்டாள்.

அவள் கரத்தை விலக்கி, அவளிடமிருந்து சற்று விலகி நகர்ந்து உட்கார்ந்து, ''அவர் என்னைத் தேடட்டுமே. நன்றாகத் தேடட்டும். தேட வேண்டும் என்றுதான் நான் இப்படி யாருக்கும் தெரியாத இடத்திற்கு வந்தேன்.''

முத்துவடிவு சற்று நகைத்து, ''மூங்கில் துறை யாருக்கும் தெரியாத இடமா? சோழச் சக்கரவர்த்திகளுக்குப் பட்டிதொட்டிகளிலெல்லாம் ஆள்கள் இருக்கிறார்கள். இவ்வளவு நேரம் செய்தி போயிருக்கும். கரி, பரி, தேர், ஆள்படைகளுடன் வந்து விடமாட்டாரா?'' என்று பயமுறுத்துபவள்போல் பேசினாள்.

''வரட்டுமே! அவர் இப்போது வரமாட்டார். பௌர்ணமி அன்று பெரிய கோயில் குடமுழுக்கு

நடைபெற்றாக வேண்டும். அதைக் கவனிப்பாரா? என்னைத் தேடுவாரா? அவர் என்னைத் தேடமாட்டார் என்று எனக்குத் தெரியும்'' சோர்வுடன் பேசினாள்.

''வீரம்மா! ஏன் இப்படித் தோல்வி மனப்பான்மை யுடன் பேசுகிறாய்? நீ இல்லாமல் குடமுழுக்கு இல்லை; கோலாகலம் இல்லை; கொண்டாட்டம் இல்லை.''

''நானில்லாமலா?'' வீரமாதேவி சிரிக்கிறாள். அதில் விரக்தி மேலிட்டிருந்தது. ''முத்துவடிவு! உனக்குத் தெரியாது. இப்போது என்னை எல்லாரும் வெறுக் கிறார்கள். கோயிலுக்கு என் பெயர். நகரத்திற்கு என் பெயர் - ஏரிக்கு என் பெயர் சூட்டி மகிழப் போகிறேனாம் நான். அரசி பெயர் வருவதை நான் தடுக்கிறேனாம். பெரிய இளவரசியார் இருக்கிறாரே அரிந்தவன் மாதேவி, அவரே தன் பெயர்தான் சூட்டப்பட வேண்டும் என்று தன் முழு அதிகாரத்தையும் வெளிப்படுத்த முயல் கிறார்...''

''நீ என்ன சொல்கிறாய்?''

''சக்கரவர்த்திகள் பெயர்தான் சூட்டவேண்டும். அதுதான் நியாயம். நான் நினைப்பதும் சொல்வதும் யாருக்குத் தெரியும்? சித்தர் கூட எனக்கு விரோதமாகி விட்டார். அதனால்தான் நான் கண்காணா இடத்திற்கு வந்துவிட்டேன்''

''சித்தர் உனக்கு விரோதமாகவா பேசுகிறார்?''

''ஆமாம்''.

''என்ன சொல்லிவிட்டார்? என்ன செய்துவிட்டார்? கோயில் எழ, நகரம் எழ, ஏரி வெட்ட அவர்தானே



உன்னைத் தூண்டி உனக்கு ஆசிவழங்கி, உனக்கு உறு துணையாக இருந்தவர். அவர் எப்படி...''

''முத்து! என் பெயரைத்தான் இட வேண்டுமென ஒற்றைக் காலால் நிற்கிறார். வீரமாதேவீச்சுரம், வீரமாதேவிபுரம், வீரமாதேவி பேரேரி என்று பெயரிட வேண்டும் என்று சக்கரவர்த்திகளிடம் வற்புறுத்தப் போவதாகச் சொல்கிறார். சக்கரவர்த்திகள் சித்தர் சொற்படியே நடப்பார்.''

''என்னமோ ஏதோ என்று பயந்து விட்டேன்! இளவரசி வீரமாதேவி அவர்களே! உன் பெயர் என்றென்றும் நின்று நிலவ வேண்டாமா?''



''வேண்டாம். நான் என்ன செய்து விட்டேன்? என் பெயர் காருள்ளளவும், கடல் நீருள்ளளவும் நின்று நிலவ?''

''என்ன செய்யவில்லை? சோழச் சக்கரவர்த்தி எனும் மத களிற்றை உன்னிடம் பணிய வைத்து விட்டாயே, அது போதாதா? பெரும் கானகமாக இருந்த இடத்தைத் திருத்தி - அப்பப்பா! எவ்வளவு பெரிய கோயில்! அதைத் தன்னந் தனியாய்க் கட்டிமுடித்து விட்டாயே, அது போதாதா? தஞ்சை புரியை விடப் பெரிய நகரத்தை உருவாக்கி விட்டாயே, அது போதாதா?'' இவை எல்லாமே தன்னந் தனியாளாய் நின்று நீ நிகழ்த்திய சாதனைகள் தாமே!''

''ஏய் முத்துவடிவு! மேலும் பேசினால் கழுத்தைப் பிடித்து உன்னைக் காததூரம் தள்ளிவிடுவேன். கோயிலும், நகரமும், ஏரியும் என்னால் மட்டுமே எழுந்தனவா? எங்கள் பேரரசரின் சக்தியல்லவா?''

''இருக்கலாம்; அசட்டுப் பெண்ணே! நான் சொல்கிறேன், பேசாமல் சித்தர் சொற்படி கேள். காரணமாகத் தான் சொல்கிறேன். உன் பெயர் ஒன்றுதான் நிலைக்கும்''

''வேண்டாம்; என் பெயர் நின்று நிலைக்க வேண்டாம்''.

''ஏதோ சபதம் செய்ததாக முன்பு கூறினாயே?''

''பக்குவமற்ற பருவம். இளமையின் வேகம். சக்கரவர்ததிகள் என் ஒருத்திக்கு மட்டுமே சொந்தம் என்று நினைத்த இறுமாப்பு! பிறகு, அந்தச் சபதத்தை மாற்றிக் கொண்டேன். அதிசயம் வேறு ஒன்றும் செய்தேன் தெரியுமா?''

சொல்லி நிறுத்திய வீரமாதேவி அதிசயிக்கும்படி முத்துவடிவு சொன்னாள்: ''உன் மூலம் வாரிசு ஏற்படாமல் இருக்க கடினமான முடிவு எடுத்தாயாமே! என்ன நியாயம்? உன்னுடைய இளமையை இப்படிப் பலி கொடுக்கலாமா? நான் ஒரு சமயம் நினைத்தேன், சக்கரவர்த்திக்கு சகலவிதத்திலும் இன்பம் தர ஏற்றவள் நீ என்று. ஓர் அற்புதமான குழந்தையைப் பெற்றெடுத்துத் தரப் போகிறாய் என்று. சோழ நாட்டில் பல ஆண்டுகளுக்குப் பிறகு சின்னஞ் சிறு குழந்தைக்குத் தொட்டிலிடுவிழா; பெயர் சூட்டுவிழா என்று கோலாகலமாக நடைபெறப் போகிறது என்று கனவு கண்டேன். என்னைப்போல் பல ஆயிரம் சோழ மக்கள் எதிர்பார்த்திருப்பார்கள். அரசரிடம் நீ சபதம் செய்தது அறிந்தவுடன் நான் மயங்கி விழாத நிலைதான்''.

''முத்து! இந்த உடல் அழகு, இளமை எல்லாவற்றையும் ஆண்பெண் சேர்க்கைக்காக மட்டுமா இறைவன் படைத்தான்? இந்த ஜீவன் அதற்கு மட்டும் ஏங்கவில்லை. இதயக் கூட்டிலுள்ள பறவை கேட்பது என்ன தெரியுமா? அது பெறவிரும்பும் அன்புப் பரிசு எது தெரியுமா?''

''வீரமாதேவி! பெரிய பெரிய தத்துவங்கள் பேசுகிறாய். எனக்கு அவை ஒன்றும் புரியாது. ஓர் ஆண் பிறந்தவுடன் அவனுக்காக ஒரு பெண்ணை ஆண்டவன் உடனே படைத்து விடுகிறான். இருவரும் எங்கோ வளர்கிறார்கள். பிறகு பக்குவமாக ஒன்று சேர்கிறார்கள். இன்பம் துய்க்கிறார்கள். சுகம் அனுபவிக்கிறார்கள். சந்ததியைப் பெருக்க ஒன்று கூடுகிறார்கள். மக்களைப் பெறுகிறார்கள். அவர்களைப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கிறார்கள். வீரமாதேவி உடல் அவயவங்கள் எல்லாம் எதற்காகப் படைக்கப்பட்டன என்பது உனக்குத் தெரியாதா? சின்னஞ் சிறுவயதில் நாம் கொள்ளிட

மணலில் விளையாடுவோம். நான் அப்பாவாக இருப்பேன். நீ அம்மாவாக இருப்பாய். மரப்பாவையை வைத்துக்கொண்டு நீ என்ன செய்வாய்?''

''சீ, அந்த விளையாட்டை எல்லாம் இப்போது நினைவு படுத்துவதற்கு என்ன காரணம்? அப்படியே நினைவுபடுத்தினாலும் நான் இப்போது முற்றிலும் விவரம் அறிந்தவள்.''

''வீரம்மா! பெண்களுக்கு ஏற்பட்ட நகில்கள் யாருக்காக ஏற்பட்டன தெரியுமா? ரகசியமாக நான் அப்போது கேட்பேன், நினைவிருக்கிறதா? உன்னை மணக்கப் போகிற ஆணழகன் பாக்யசாலி. உன் அழகை அணு அணுவாக ரசிப்பான். கமலப்பூ விழிகளையும், எள்பூ நாசியையும், கோவைப்பழக் கன்னங்களையும், பவழ உதடுகளையும், யானைத் துதிக்கை போன்ற கரங்களையும், வாழைத் தண்டு போன்ற உன் சிவந்த அழகிய தொடைகளையும் கொள்ளிடச் சுழல் போன்ற உன் நாபிக்கமல அழகையும், செவ்விளநீர் போன்ற இரண்டு தனங்களையும், தோள்களையும், பொய்யோ என்று சொல்லும்படியான இடையையும், நடனமிடப் படைக்கப்பட்ட பொற்பாதங்களையும் உன்னை மணக்கப் போகும் ஆணழகன் எப்படி எல்லாம் வர்ணிப்பான்! தனக்கே சொந்தமென்று மார்பு நிமிர்ந்து நடப்பான். ஆனால் - ஆனால் - வீரம்மா - உலகத்தில் உள்ள ஆண்களில் எல்லாரையும் விட ஆணழகனான மதுரன் என்ற பெயருக்கேற்றவனான மன்மதனையும் தோற்கடிக்கக் கூடிய அழகு நிறைந்தவரான மனிதர்தான். உன் 'அவருக்கு' அவர்தான் ஈடு. ஆனால் - ஆனால்'' முத்துவடிவின் குரலில் சோகம் இழைந்தது.

வீரம்மாள் தன் விழிகளின் கடைக்கோடியில் துளிர்த்த நீர்த்துளிகளை மெல்லத் துடைத்தவாறே, ''சொல்லு,



வடிவு! நிறுத்தி விடாதே. முதலில் அழகையும், கம்பீரத்தையும் பார்த்து நெஞ்சை அவரிடம் நழுவவிட்டேன். இளவரசராக அவர் அப்போது இருந்தார். அவருடைய கலைப் புலமையை ஆர்வத்தை அறிந்தவுடன் அவர் உள்ளத்தின்மீது நேசங் கொண்டேன். அவருடைய கலையைக் காதலித்தேன். அதன் விளைவுதான் பெரிய கோயில். இதில் என் சாதனை கடுகளவே. அவருடைய சாதனை விமானம் அளவு. தன் தந்தைகட்டிய பெரிய கோயிலுக்கு இணையாக ஒரு கோயிலைக் கட்ட வேண்டும் என்ற இலட்சியம் உடையவராகத் திகழ்ந்தது என் தூண்டுதலாலா? இல்லையே. அவர் உள்ளத்தில் நீண்ட நெடுநாள்களாக 'அந்த எண்ணம் ஊறிக் கிடந்தது. கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று புலிக்கொடியை நிலைநாட்டியதும், எட்டுத் திக்குகளிலும், சோழரின் புகழைப் பரப்பியதும், மற்ற மன்னர்களை அடிபணிய வைத்ததும், அவர் வீரத்தால் விளைந்தவை. போரும், பூசலும் நிலையானவை அல்ல. கலை ஒன்றுதான் அழியாதது என்பதை இளம் வயது முதலே கற்றுக் கொண்ட என் அரசர், தன் பெயரை நிலைநாட்ட விரும்பினார்; அதன் விளைவுதான் இங்கு ஒரு பெரிய கோயில்.''

முத்துவடிவு குறுக்கிட்டாள்: ''நீ சொல்வதை அப்படியே ஒப்புக் கொள்கிறேன். ஆனால், எண்ணத்துக்கு வடிவம் கொடுத்தது யார்? காட்டுப் பகுதியைத் திருத்தியது யார்? சிற்பிகளை வரவழைத்து அவர்கள் பணி தொய்யாமல் நடைபெறச் செய்தது யார்? கங்கைக் கரைக்கு அவர் சென்றாலும் அவருடன் செல்ல நினைக்காமல் இங்கே தங்கியிருந்து அழகிய கோயிலை அமைத்தது யார்? வீரம்மா! எல்லாரும் சொல்கிறார்கள். உயிருள்ள சிற்பங்கள் புதிய கோயிலில்

இருக்கின்றனவாம். பெரிய லிங்கமாம். மேலே விமானம், தஞ்சைக்கு இணையாக இருக்கிறதாம். சுற்று மதிலுக்குப் பாறைகளை எங்கிருந்து கொண்டு வந்தாய்? அதுபோகட்டும். கோயிலைச் சுற்றி வீதிகள், வீடுகள் மளமளவென்று ஏற்பட்டன. இவையெல்லாம் உன் தனிப்பட்ட சாதனை. அப்படியிருக்கும்போது சித்தர் சொல்வது சரி; நகரத்திற்காவது உன் பெயரைச் சூட்ட ஒப்புக் கொள் வீரம்மா!'' என்று அவர் கரத்தைப் பிடித்துக் கெஞ்சுவது போல் கேட்டாள்.

''முத்துவடிவு! என்ன சொல்கிறாய்? கூடவே கூடாது. பெயரிடப்படுவது இருக்கட்டும்; என்னவர் என்ன செய்து விட்டார் தெரியுமா? காதல், அன்பு, பாசம் எல்லா வற்றையும் மறந்து விட்டார். யானைகள் மீது கங்கை நீரைக் கொண்டு வருகிறார். 'அவர் கோயில் இருக்குமிடம் வருவார்; எல்லையிலேயே வரவேற்பேர' என்று எண்ணினேன். ஆனால் பழையாறைக்குப் போய்விட்டதாகச் செய்தி வந்தது. அரிந்தவன் மாதேவிச் சுரம் என்றோ பஞ்சவன்மாதேவிச்சுரம் என்றோ பெயர் வைப்பதில் ஏற்படும் சண்டையை அவரே தீர்க்கட்டும். எனக்கு என்ன வேலை இனி? இந்தக் கிராமம் உண்டு; நானுண்டு. என் வாழ்நாளை இங்கே அமைதியாகக் கழிப்பேன். வந்த இருண்டு நாள்கள் எனக்குப் பிரமை பிடித்தது போலிருந்தன. சிற்றுளியின் ஓசை கேட்க வில்லை. கற்பாறைகளை ஏற்றி வரும் வண்டிகளின் ஓசை கேட்கவில்லை. மக்களின் பேச்சொலி கேட்கவில்லை. காற்றில் மூங்கில்கள் உராய்ந்து கொள்ளும் 'சரக் சரக்' என்ற ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. காற்று 'விர்விர்'ரென எழுப்பும் ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. எனக்கு ஓர்



உதவி செய். எங்கிருந்தாவது ஆசை நாகுவைப் போல் ஒரு பசுவையும் கன்றையும் விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடு. அதன் துணையுடன் மகிழ்ச்சியுடன் வாழ் வேன். தினமும் நானே சோறாக்கி உண்டு மகிழ்வேன். என் பாதம் நோகுமளவுக்கு முடிந்த போதெல்லாம் நான் கற்ற பதிகங்களுக்கு ஏற்ப, ஆடி ஆடிக் களைத்து மகிழ்வேன். என் உடன் பிறந்தவர் அரசருடனே வருவார். என்னைத் தேடுவார். இந்த உலகில் பற்றும் பாசமும் மிக்கவர் அவரே. அவர் மனம் வருந்துவாரே, வேதனைப் படுவாரே என நினைக்கிறேன்'' என்று கூறி விழிகளை மீண்டும் துடைத்துக் கொண்டாள்.

''முத்துவடிவு! மற்றோர் உதவியும் செய்ய வேண்டும். என் உடன்பிறந்தவரைப் பற்றி உனக்குத் தெரியுமல்லவா? மூவேந்த வேளார். இப்போது அரசரின் நம்பிக்கைக்கும் அபிமானத்திற்கும் உரியவர் - அவரைச் சந்தித்து நான் இங்கு இருக்கிறேன் என்று ரகசியமாகச் சொல்லிவிடு. வேறு யாரிடமாவது நான் இங்கிருப்பதைச் சொல்லி விட்டாய் என்றால், நான் இந்தக் கிராமத்திலேயே இருக்க மாட்டேன். கண்காணாத பூமிக்குச் சென்று விடுவேன். என்னை யாரும் கண்டுபிடிக்க முடியாது. அவரிடம் நான் கூறியவற்றை எல்லாம் சொல்லிவிடு.''

பிரமிப்புடன் பார்த்தாள் முத்துவடிவு. ''மூவேந்த வேளாரை எனக்குத் தெரியும். நான் உடனே செய்கிறேன். இப்போதே செல்கிறேன். உன் உடன்பிறந்தார் சொன் னால் நீ ஏற்றுக் கொள்வாயா?'' என்றாள்.

முத்துவடிவு சென்ற சில நாழிகை கழித்து மூவேந்த வேளார், வீரம்மாவின் வீட்டிற்கு வந்த கதவை இலே சாகத் தட்டினார். கதவு திறந்து கொண்டது.

தூண் ஒன்றில் சாய்ந்து கொண்டு, விழிகளை மூடியவாறிருந்த வீரம்மாளின் அருகே அமர்ந்த அவள் உடன் பிறந்தான், ''வீரம்மா - வீரம்மா'' என்றழைத்தான். வீரம்மாள் திடுக்கிட்டு விழித்தாள். எதிரே தன் அண்ணன் அமர்ந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தாள்.

''இன்றுதான் உங்களை நினைத்தேன். உங்களுக்குப் போனது போக நூறு வயது'' என்றாள்.

தங்கையின் கூந்தலை மெல்ல வருடி, ''வீரமாதேவி! உன்னை எங்கெல்லாம் தேடுவது? சோழச் சக்கரவர்த்திகள் உன்னைக் காணாமல் மிகவும் சோகமுடன் இருக்கிறார். நீ இங்குதான் இருப்பாய் என்று நான் உறுதியாக எண்ணி ஓடோடி வந்திருக்கிறேன். வா, வீரம்மா! இளவரசி வீரமாதேவியாயிற்றே! மிக மரியாதையுடன் அழைக்க வேண்டும், கிராமத்துக்கு வெளியே உனக்கென்று, ரதம் ஆயத்தமாயிருக்கிறது. வா, போவோம்'' என்றார்.

வீரமாதேவி 'முடியாது' என்று தலையை அசைத்தாள்.







## 87. இறைவனின் சித்தம்

பரகேசரி மதுராந்தக சோழ மூவேந்த வேளார் என்ற பெயருக்குள்ள மரியாதை சோழ நாட்டில் மட்டுமன்று; இராசேந்திர சோழ சக்கரவர்த்தி செல்லும் இடங்களில், வெல்லும் போர்க் களங்களிலெல்லாம்கூட, மிக அதிகம் உண்டு.

மூவேந்த வேளார் பிறவியிலேயே அறிவும், ஆற்றலும் மிக்கவர். ஓர் எளிய போர் வீரனாக, பெரிய சக்கரவர்த்தி காலத்தில், படைக் குழுவில் சேர்ந்தார். அவர் அதிர்ஷ்டம் இளம் வயதிலிருந்தே இளவரசராக அப்போதிருந்த இராசேந்திர சோழரின் மெய்க்காப்பாளராகத் திகழ்ந்தார். பதவியின் பெயர் காரணமாக இல்லாமல் மெய்யாகவே இராசேந்திரனின் எல்லாவித நலன்களைக் காப்பவராக இருந்தார். இராசேந்திரன் புகழ் ஓங்க, ஓங்க மூவேந்தரின் பெருமையும், வெளியே புலப்பட்டது. படைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார்.

இராசேந்திர சோழரின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமான மூவேந்த வேளாரின் செல்வாக்கைக் கண்டு சிலர் உள்ளூரப் பொறாமை கொண்டார்கள் என்றாலும்,

வெளியே சொல்லப் பயந்து, மற்றவரிடம் பேசுவதைக் கூட உரக்கப் பேசாமல் செவிகளில் மட்டும் கேட்கும்படி பேசுவார்கள்.

''மூவேந்த வேளாரின் அறிவுக் கூர்மையைக் கவனித்தீர்களா? திட்டமிடுவதில் கூட தன் சுய நன்மையை வெளியே தெரியாமல் செயல்படுவதைச் சொல்கிறேன்'' என்று ஒருவர் பீடிகையுடன் தொடர்வார். அவர் சொல்வதில் உள்ள உண்மையை மற்றவர் எளிதில் புரிந்து கொள்வர். ''தன் தங்கையை அரசரிடம் பழகச் செய்து அவளை அந்தப்புரத்தில் சேர்த்ததைத்தானே சொல்கிறாய்?'' என்று பேச்சு தொடரும்.

''சக்கரவர்த்திகள் வீரமாதேவி மீது மோகங் கொண்டார் என்று சொல்வதைவிட, பித்தனாக ஆகிவிட்டார் என்று சொல்லலாம்.''

''உண்மைதான். தன் தந்தை எதிர்த்தும், பட்டத்து அரசி எதிர்த்தும், உடன் பிறந்தவள் எதிர்த்தும் அவற்றிற்கெல்லாம் கவலைப்படாமல் கொள்ளிடக் கரைப் பெண்ணைத் தஞ்சை மாளிகையில் கொண்டு உட்கார வைக்கும் அளவுக்கு நம் அரசர் அவள் மோக வலையில் சிக்கிவிட்டாரே!''

''உம்; எவ்வளவோ செய்திகள்! அரண்மனைச் செய்திகள் நமக்கெதற்கு? அந்த வீரம்மாள் வீரமாதேவியாகி, சக்கரவர்த்திகளுக்கு மிகவும் பிடித்தமான நாட்டியக் கலையைத் தானும் கற்றுக் கொண்டு அவரை ஆட்டி வைக்கிறாள்.''

''நடனக்கலை இருக்கட்டும். சக்கரவர்த்திகளுக்குச் சிற்பம், சித்திரம், கோயில் ஆகியவற்றில் ஈடுபாடு



இருப்பதை மிக நுணுக்கமாக அறிந்த வீரம்மாள், சக்கரவர்த்திகளின் மனத்தை மெல்ல மெல்ல மாற்றினாள். போர்க்களம் செல்லாமல் வீரமா தேவியுடன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பார். நான் கேட்கிறேன், நீ மறுமொழி கூறு பார்க்கலாம்; தஞ்சாவூரில் பெரிய கோயில் இருக்கிறது; பிறகு இங்கே காட்டுப் பகுதியில் அதைப் போலவே பெரிய கோயில் ஒன்று எதற்கு?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை.''

''உனக்கு மட்டுமா, எனக்கும் நாடு நகரத்திலுள்ளவர்களுக்கும் புரியவில்லை.''

''நான் சொல்லட்டுமா? சக்கரவர்த்திகளை நிரந்தரமாகத் தன் பிடியில் வைத்துக் கொள்வதற்காகத்தான்!''

''வைத்துக் கொண்டு...?''

''நாட்டை ஆள்வதையே தன்னுடைய பிடியில் வைத்துக் கொள்ளத்தான்.''

''தலைநகரத்தைக்கூட தஞ்சாவூரிலிருந்து புதிய நகரத்திற்கு மாற்றிவிடுமாறு தன் யோசனையை அழுத்தமாகச் சொல்லிவிட்டாளாம்.''

''சக்கரவர்த்திகளுக்கு இவையெல்லாம் தெரியாதா? அவருடைய அத்தானும், அக்கையாரும் இல்லாதது சக்கரவர்த்திகளுக்கு மிகவும் உதவியாகி விட்டது. கேட்பவர்களுக்கெல்லாம் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானை நாள்தோறும் சேவிக்க வசதியாக இருக்கும், புதிய நகரம். விசாலமாக வசதியாக நகரம் அமையும் என்ற சமாதானம்!''





''நகரத்திற்கு என்ன பெயர் தெரியுமா?''

''கேள்விப்பட்டேன் - வீரமாதேவிபுரம், கோயிலுக்கு வீரமாதேவீச்சரம்''

''அடடா - இதை யாரும் எதிர்க்கவில்லையா?''



''அரசியாரும், மூத்த இளவரசி அரிந்தவன் மாதேவியும் சக்ரவர்த்திகளின் புதல்வர் சிலரும் கடுமையாக எதிர்த்தார்கள். எதிர்த்து என்ன பயன்? நம் சக்ரவர்த்திகள் மிக மரியாதையுடனும், அச்சத்துடனும் வணங்கும் கருவூர்த் தேவர் வீரம்மாளை ஆதரிக்கிறாராம்.''

''போச்சுடா - இனி யாரும் வீரமாதேவியைத் தடுக்க முடியாது.''

''ஆனால், பழையாறையில் போர்க்கொடி உயர்ந்துவிட்டது. சக்கரவர்த்திகளின் புதல்வர்கள் மூவரும் வீரம்மாளை எதிர்க்கிறார்கள். அரசியார் பஞ்சவன் மாதேவி, தன் பெயரைத் தான் கோயிலுக்கும், நகரத்திற்கும் இடவேண்டுமென்று அரசரை வற்புறுத்துகிறார்கள். வீரம்மாளை சோழநாட்டை விட்டு விரட்டிவிடும் திட்டத்துடன் அனைவரு மிருக்கிறார்களாம்.''

''அச்சோ - உனக்குத் தெரியாதா? இரண்டு நாள்களாக வீரம்மாளைக் காணவில்லை.''

''ஏன் காணவில்லை. எங்கே போயிருப்பாள்?''

இந்தப் பேச்சு மிகவும் ரகசியமாக, மெதுவாக மெல்ல மெல்லப் பரவியது. மூவேந்த வேளாரின் செவிக்கும் எட்டியது.

ஊர் அலர் எழுந்தால் அதைத் தடுப்பது அவ்வளவு எளிதன்று. இராசேந்திர சோழ தேவர் நேரே பழையாறைக்குச் சென்றது என்னவோ உண்மை. நோய்வாய்ப் பட்டிருக்கும் அரிந்தவன் மாதேவியை முதலில் பார்க்க வேண்டுமென்று அவர் தன் பட்டத்தரசியுடன் சென்றார். கங்கை நீர்க்குடம் சுமந்திருக்கும் யானைகளும், வெற்றிப்



புகழைச் சுமந்து வந்திருக்கும் சோழ வீரர்களும் கங்கை விநாயகரும், நகரத்திற்கு வெளியே கொள்ளிடக் கரையில் அமைதியுடன் தங்கியிருந்தனர்.

வீரமாதேவியும் பழையாறைக்கு வந்திருப்பாள் என்று ஆவலுடன் உள்ளூர எதிர்பார்த்து வந்த இராசேந்திர சோழருக்கும் பெரும் ஏமாற்றம். யாரிடம் கேட்பார்? தன் நம்பிக்கைக்குரிய மூவேந்த வேளாரிடம் மெல்லக் கேட்டார்.

அப்போதுதான் மூவேந்த வேளாரும், தன் தங்கையைக் காணவில்லை என்பதை உணர்ந்தார்.

தவித்தார். தடுமாறினார். ஏக்கமுடன் அலைந்தார். ''வீரம்மா! எங்கே சென்றுவிட்டாய்? எங்கே உன்னைத் தேடுவது?'' என்று புலம்பினார்.

கடைசியில் மூங்கில் துறையின் நினைவுவர அங்கு விரைந்தார்.

வீரமாதேவியைத் தேடி அலைந்தார்.

கொள்ளிடக் கரையோரமாக நடந்தார்.

கடைசியில் தங்கள் வீட்டை அடைந்தார். சோகமே உருவாக அமர்ந்திருந்த வீரம்மாளைக் கண்டார்.

''முடியாது'' என்று அழுத்தமாகக் கூறிய தன் தங்கையின் கரத்தை மெல்லப் பிடித்து சோர்வுற்றிருந்த கன்னங்களை மெல்லத் தடவி, ''என் கண்ணே, வீரம்மா! இல்லை இல்லை, இளவரசி வீரமாதேவி என்றல்லவா அழைக்க வேண்டும்? பொறுத்தருள் வீரமாதேவி? சக்கரவர்த்தியின் அபிமானம் மிகப்பெற்றவளல்லவா? உன் முடிவை மாற்றிக் கொள்ளம்மா. வெண்ணெய்

திரண்டுவரும்போது தாழியை உடைத்த கதையாய் இருக்கிறதே - உன் போக்கு'' என்று வாஞ்சையுடனும் உரிமையுடனும் கேட்டார்.

''வெண்ணெயாம் வெண்ணெய்! வெண்ணெய் திரண்டும் வரும்போது தாழியை உடைத்தவர் யார் அண்ணா? நானா? அழகிய வண்ண விசித்திரமான மட்பானையைச் செய்தேன். அதில் பசும்பால் இட்டுப் பிறகு திரிந்து ஆனதயிரைக் கடைந்தேன். அதில்வரும் வெண்ணெயைத் திரட்டி என்னவருக்கு - அவருக்கு - மட்டுமே தர நினைத்தே இரவு பகல் பாராமல் கடைந்தேன். மோர்த் துமிகள் என் முகத்தில் தெறித்தன. மனத்திலிருக்கும் கற்பனைகளை ஆசையாய்க் கனவு கண்டு கொண்டே மத்துக் கயிற்றை இழுத்து இழுத்துக் கடைந்தேன். தாழியை நான் உடைக்கவில்லை அண்ணா! நான் உடைக்கவில்லை. உடைந்த பானையிலிருந்து வழிந்தோடும், சிந்திப் பெருகும் வெண்ணெய் கலந்த மோரை நாயும், நரியும், பூனையும் நக்கிக் குடிக்க நான் பார்த்திருப்பேனா? அதனால் நான் யாரும் அறியாமல் இங்கே வந்துவிட்டேன். அரசிக்கு, இளவரசிக்கு என்னைப் பிடிக்கவில்லை. கோயில் கட்டுவதைத் தடுத்தனர். கட்டி முடிந்த பிறகோ உரிமை கொண்டாட வந்து விட்டனர். என் அவரும் அதற்கு உடந்தை. நான் அங்கிருந்தால் என்னை நாட்டை விட்டே விரட்டி விடுவார்கள். அவர்கள் என்னை ஓட்டும் முன்பே நானே வெளியேறி விட்டேன் அண்ணா!'' என்று கூறும்போது வீரமாதேவியின் கு‍ரல் தழு தழுத்தது. கண்ணீர் பெருகியது.

''வீரமாதேவி! என் கண்ணே! உன்னை யார் விரட்ட முடியும்?'' அவள் கூடப் பிறந்தவரான மூவேந்த வேளார் அவள் கூந்தலை மெல்லக் கோதினார்.



''யாருக்காக நான் கோயிலைக் கட்டினேனோ அவரே என்னை மறந்து விட்டார்.''

''என்ன சொல்கிறாய் வீரம்மா? உன்னை மறக்க யாரால் முடியும்? இன்னும் இரண்டு நாள்கள் வரை நல்ல நாளில்லையாம். சோதிடர் சொல்லிவிட்டார். புதிய நகர எல்லைக்குள் காலெடுத்து வைக்கக்கூடதாாம். அதனால் பழையாறை சென்றார். உனக்குச் செய்தி சொல்லி அனுப்பினாரே? கிடைக்கவில்லையா? பழையாறைக்குள் நுழைந்தவுடனேயே அவர் விழிகள் நாற்புறமும் சுற்றி அலைந்தன. உன்னைத் தேடித்தான்.

''அப்பொழுதே அங்கே பேச்சு, உன்னைக் காணவில்லை என்று. அவர் யாரைக் கேட்பார்? நீ எங்கே சென்று விட்டாய் என்று யாரைக் கேட்பார்? என்னை அழைத்தார்.'' மூவேந்த வேளார் சொல்லச் சொல்ல, வீரமாதேவி சற்றுச் சமாதானமடைந்தவள் போல் தன் அண்ணனின் முகத்தைப் பார்த்தாள்.

''சித்தர் பழையாறைக்கு வந்தார். அவரும் உன்னைத் தேடினார்.''

''தேடட்டும். அவரால் வந்த வினைதான். அவர் பெரிய சூழ்ச்சி செய்துவிட்டார் அண்ணா! கோயிலுக்கு என் பெயர், நகரத்துக்கு என் பெயர், ஏரிக்கு என் பெயர் என்று, அரசரிடம் அவர் வற்புறுத்தப் போவதாகச் சொன்னார் அண்ணா! இதென்ன நியாயம்? முன்பே என்னைக் கண்டால் பிடிக்காதவர்களுக்கு இந்தச் செய்தி எரிக்கும். அண்ணா! நீங்களே சொல்லுங்கள் நான் யார்? நான் என்ன செய்து விட்டேன்? என் பெயரா? ஹூம். நான் இங்கிருந்தால் தானே என் பெயரைச் சூட்டுவதற்கு?

அண்ணா! இங்கிருந்து போய்விடுங்கள். கேட்பவர்களுக்கு என்னைப் பார்க்கவேயில்லை என்று சொல்லி விடுங்கள்.''

''என்ன பிடிவாதம் வீரம்மா? நீ சின்னக் குழந்தையா? நீ யார் தெரியுமா? சோழ நாட்டின் இளவரசி. மாபெரும் கலைக் கூடத்தைத் தன்னந்தனியளாய்ப் படைத்த தேவ சிற்பி. யார் பெயரை இட்டால் என்ன? அரசரின் முடிவு என்ன என்று நீ அறிந்தாயா?''

''அரசரின் மனத்தில் என்ன இருக்கிறது என்று யாருக்குத் தெரியும்?''

மூவேந்த வேளார் மெல்லச் சிரித்து ''அரசர் மனத்தில் நீதான் இருக்கிறாய். இதில் என்ன சந்தேகம்?'' என்றார்.

''அரசரின் மனத்தில் நான்தான் இருக்கிறேன் என்பது உண்மையானால் அவர் கோயிலுக்கும் நகரத்திற்கும் என் பெயரைத்தான் சூட்டுவார். சித்தரின் யோசனை, வற்புறுத்தலும் உடன் சேரும். அது கூடவே கூடாது. எனக்கு ஓர் உறுதி தருவீர்களா? நான் இங்கிருந்து திரும்ப வேண்டுமென்றால் என் விருப்பப்படிதான் கோயில், நகரம், ஏரி இவற்றிற்குப் பெயரிட வேண்டும்.''

''ஓ! அதிலென்ன இடர்ப்பாடு? உன் விருப்பத்தை அரசர் நிறைவேற்றுவார். உன் விருப்பம் என்ன?''

''இராசேந்திர சோழீச்சரமுடையார் திருக்கோயில், இராசேந்திரபுரம், இராசேந்திரர் பேரேரி'' என்று பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதே என் விருப்பம்.''

மூவேந்த வேளார் சற்று நேரம் மௌனமாயிருந்தார். பிறகு, ''இவ்வளவுதானே! நான் அரசரிடம் சொல்கிறேன்.



புறப்படு'' என்று வீரமாதேவியின் கரங்களைப் பற்றினார் எழச் செய்ய.

வீரமாதேவி அவர் கைகளை மெல்ல விலக்கினாள். ''அண்ணா! என்னைப் பொறுத்தருளுங்கள். முத்துவடிவு இப்போதுதான் சென்றாள், அரசரை அழைத்துவர. அவர் வரட்டும்.''

''வீரமாதேவி! அரசர் பழையாறையி லிருக்கிறார். அங்கே போவோம் புறப்படு.''

''முடியாது. நான் பழையாறைக்கு வரமாட்டேன். என் இதய தெய்வத்தைச் சந்திக்கும் முன்பு, அரசியாரைச் சந்திக்கச் சொல்வார்கள். அரிந்தவன் மாதேவியாரைச் சந்திக்கச் சொல்வார்கள். என்னால் முடியாது. முதலில் என் இதய தெய்வத்தைத் தான் நான் சந்திப்பேன். அவரை அழைத்துக் கொண்டு புதிய கோயிலைச் சுற்றிக் காட்டுவேன். பெரிய திருச்சுற்றிலுள்ள மாடங்களில் கம்பீரமாக சிற்பிகளின் கைவண்ணத்தால் எழுந்தருளி யிருக்கும் இசை வாணிதேவியையும், விநாயகப் பெருமானையும், திருமகளையும் இன்னும் மிகமிக அற்புதச் சிற்பமொன்றையும் அவருக்குக் காட்டுவேன்.

என் இதயத்தில் இதுவரை அடக்கி வைத்திருந்த, அவருக்குப் பிடித்த பதிகத்தைப் பாடுவேன். ஆடுவேன். நான் பாடி ஆட - அவரும் ஆடுவார். அந்தக் கோலாகலமான இன்ப நிகழ்ச்சிக்குப் பிறகுதான் குடமுழுக்கு விழா. இதற்கு அவர் ஒப்புக் கொள்ள வேண்டும். அவர் சம்மதிப்பாரா?''

வீரமாதேவியின் தூய்மையான அசைக்க முடியாத அன்புடன் கூடிய மனத்தை அவள் சகோதரர் மூவேந்த வேளார் அறிந்து வியந்தார்.

''வீரமாதேவி! உன்னைத் தேடி வரும் என்னுடனேயே அவர் வரத் துடித்தார். நான்தான் தடுத்தேன். அவரை இங்கே அழைப்பது நியாயமில்லை. ரகசியம் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். சோழ சக்கரவர்த்திகள் பழையாறையை விட்டுச் சோகமாகப் புறப்பட்டு, சிதம்பரத்திற்கு வந்து கொண்டிருக்கிறார். கங்கையைக் கொண்டு வந்த வெற்றி வீரர் திருச்சிற்றம்பல முடையாரிடம் உன்னைப் பற்றிப் பிரார்த்தித்துக் கொள்ளப் போகிறார். அம்பலவாணனைத் தரிசித்த பிறகே புதிய கோயிலைக் காணச் செல்வார். உடனே புறப்படு. அரசரை அங்கே சென்று காண்போம்.''

தன் அண்ணன் சொல்வதை ஏற்கும் மனப்பக்குவம் சிறிது ஏற்பட்டது, வீரமாதேவிக்கு.

''சரி; எனக்கு ஓர் உறுதி கூறவேண்டும்.''

''என்ன?''

''புதிய நகரம், கோயிலுக்குச் சோழ சக்கரவர்த்திகளின் பெயரைத்தான் சூட்டவேண்டும்.''

''உன் பெயரைச் சூட்ட நீ விரும்பாதது போல அவரும் விரும்பாமல் இருக்கலாம்.''

''அவர் அரசர். அவர் எழுப்பிய கோயிலுக்கு அவர் பெயரைச் சூட்டுவதுதான் மரபு. நியாயம். ஆனால் அவர் மறுத்தால் அங்குதான் ஆபத்து இருக்கிறது. பஞ்சவன் மாதேவீச்சரம் என்றோ : அரிந்தவன் மாதேவீச்சரம் என்றோ பெயரிடப்படுமானால் நான் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டேன்.''

மதுராந்தக மூவேந்த வேளாருக்குக் கடும் கோபம் வந்தது. ''அன்புள்ள தங்கையே! அறிவாற்றலில் நீ



வளர்ந்து சிறந்துள்ள தாக எண்ணியிருந்தேன். சோழ நாட்டரசிக்கு ஏற்ற அறிவுத் திறன் உன்னிடம் புகுந்திருக்குமென்று நினைத்தேன். நீ இன்னும் சிறு பெண். பச்சைக் குழந்தை. நான் அரசரிடம் சென்று சொல்லி விடுகிறேன்; உங்கள் பாடு, உங்கள் இதயத்து அரசி பாடு என்று. இந்த நாட்டுப் படைத்தலைவர் பதவி எனக்கு வேண்டாம். பிடிவாதம் மிக்க தங்கை எனக்கு இருப்பதற்காக நான் வெட்கப்படுகிறேன். நான் எங்காவது கண்காணாமல் போகிறேன். நீ இந்த கொள்ளிடக் கரையில் தனிமையில் பாடிப் பாடி சமாதியாகிவிடு. காற்றைக் குடி; மண்ணைத் தின்று பிச்சி போல் அலைந்து வேதனைப்படு'' என்று கூறி மெய்யாகவே கோபத்துடன் மூவேந்த வேளார் புறப்பட்டார்.

வீரமாதேவி விம்மினாள். விம்மல் ஒலி பலத்தது. அவள், ''அண்ணா!'' என்று கூவினாள். ஓடிச்சென்று அவர் கரத்தைப் பற்றினாள்.

''நானும் வருகிறேன் அண்ணா!'' விம்மலுக்கிடையே சொன்னாள்.

''வீரமாதேவி! நான் ஒன்று சொல்கிறேன். நம் எண்ணத்திற்கும் முடிவுக்கும் மேல் இறைவனின் சித்தம் என்பது ஒன்று உண்டு. தில்லைக் கூத்தரசர் சபையில் புதிய கோயிலுக்கு இடவேண்டிய பெயர்களைத் திருவுளச் சீட்டெழுதிப் போடுவோம். அதனின்று தேர்ந்தெடுக்கப்படும் பெயரை நீ ஏற்பாயா?''

வீரமாதேவி ஏதும் மறுமொழி கூறவில்லை. அவருடன் மெல்ல நடந்தாள்.

''இறைவன் சித்தம் எதுவானாலும் நான் ஏற்கிறேன்'' என்றாள்.

''அப்படிப்பட்ட எண்ணமுடைய நீ சித்தரின் சொல்லை ஏன் கேட்கவில்லை?''

''சித்தர் - சித்தர்! சித்தர் எனக்குச் சாதகமாகப் பேசுவது எனக்கு ஏற்புடையதாக இல்லை.''

மௌனமாக இருவரும் நடந்தனர். சிவிகையில் ஏறி தில்லைச் சிற்றம்பலம் சென்றடைந்தனர்.

நுழைவாயிலிலேயே கருவூர்ச் சித்தர் நின்று கொண்டிருந்தார்.

அவரைக் கண்டவுடனேயே வீரமாதேவி திடுக்கிட்டாள்.

''அண்ணா! நமக்கு முன்பே இங்கே சித்தர் வந்து விட்டார். சக்கரவர்த்திகளிடம் தன் கருத்தைச் சொல்லியிருப்பார். சக்கரவர்த்திகள் பொல்லாதவர். சித்தர் பேச்சுப்படி நடப்பார். நீங்கள் சொல்வதுபோல் திருவுள நறுக்கெழுதிப் பெயரைத் தேர்ந்தெடுப்பதற்கு இசைவு தருவார். ஆனால் அவர் என்ன செய்வார் தெரியுமா? இரண்டு ஓலைகளிலும் என் பெயரை எழுதிப் போடுவார்'' என்று கூறும்போது அவளுக்கு அழுகை அதிகமாக வந்தது.

''ஆமாம்; அப்படித்தான். இதோ பார்! இரண்டு நறுக்குகளிலும் உள்ள பெயரை'' அன்று அங்கே திடீரென வந்த சித்தர் ஓலை நறுக்குகளில் எழுதப்பட்டிருந்த பெயர்களைக் காட்டினார்.

அதைப் பார்த்த வீரமாதேவியும், மூவேந்த வேளாரும் திகைத்தனர். வியப்புற்றனர். மெய்சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் பொங்க அவர்கள் சித்தரை நோக்கினர்.





## 88. விருப்பு வெறுப்பற்றவன் விருப்பம்

பழையாறை நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் தங்கள் வீட்டில் நடைபெறும் திருநாள் போன்ற மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நகர மக்களிடையே ஏற்பட்டுப் பல திங்கள் ஆகிவிட்டன. சக்கரவர்த்திகள் இராசேந்திர சோழ தேவர் வடக்கே சென்றபிறகு, பழையாறை மாளிகை கலகலப்புக் குறைந்து காணப்பட்டது. நகர மக்களிடையேயும் அப்படித்தான் சிறப்புக் குறைந்தது. பழையாறை மாளிகையில் அரச குடும்பத்தினர் வசிக்கத் தொடங்கினர்; அதிகாரிகள் பழையாறையிலிருந்தே ஆட்சிப் பொறுப்பைக் கவனித்தனர். இராசேந்திர சோழரும், வடநாட்டு விஜயத்தைப் பழையாறையிலிருந்தே தொடங்கினார்.

பழையாறைக்கு வடமேற்கே காடுகள் அழிக்கப்பட்டு அங்கே கோயில் கட்டப்பட்டு, புதிய நகரமே உருவாகத் தொடங்கியவுடன் மக்கள் புதிய நகரத்திற்குக் குடி புகத் திட்டமிட்டு அங்கே புதிய வீடு கட்ட முனைந்தனர்.

பழையாறையிலிருந்து பத்து, இருபது பேராக வண்டி கட்டிக்கொண்டு புறப்பட்டுப் புதிய கோயில் உருவாவதைக் காணச் சென்றனர். அகலமான வீதிகளின் இரு புறமும் புதிய வீடுகள் கட்டப்படுவதைக் கண்டனர்.

''நீங்கள் ஒரு தடவை போய்ப் பார்த்து வர வேண்டும். தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவே மற்றொரு பெரிய கோயிலைக் கட்டி முடித்து விட்டார்கள். சுற்றிலும் பெரிய மதில். பாறைகளையும் கற்களையும் எங்கிருந்து கொண்டு வந்தனர்; சிற்பிகள் எங்கிருந்து வந்தனர், ஏரி வெட்ட, சாலை போட தொழிலாளர்கள் எங்கிருந்து வந்தனர்; வேளாண்மை செய்ய ஆண்கள் சோழநாட்டிலிருக்கிறார்களா? கோயிலைச் சுற்றி வீதிகள். வீதியில் பெரிய, சிறிய மாளிகைகள்; அந்தப்புரங்கள், அரண்மனை யாவும் கட்டப்படுகின்றன'' என்று, புதிய நகரத்தைப் போய்ப் பார்த்து வந்தவர்கள் வர்ணித்தார்கள். அவர்களுடைய வர்ணனை கேட்பவர்களையும் உடனே புதிய நகரத்திற்குச் சென்று பார்க்கத் தூண்டியது.

அகலமான வீதிகள்; அங்காடிகள். அயல்நாட்டு வணிகர்கள் இப்போதே பல்பொருள் அங்காடிகளைத் தொடங்கத் திட்டமிட்டனர். சீன நாட்டினர் புதிய புதிய பட்டுத் துணிகளைக் கொண்டு குவிக்கப் போகிறார்களாம். யவனர்கள், சோனகர்கள், காஷ்மீரத்து வணிகர்களும் புதிய நகரத்தில் தாங்களும் வாணிபம் தொடங்க அனுமதியைக் கேட்கப் பழையாறைக்கு வரத் தொடங்கி விட்டார்கள்.

அமைச்சர்களும், அதிகாரிகளும் புதிய நகரத்திற்குச் சென்று கோயில் குடமுழுக்குப் பணியைக் கவனிக்கத் தங்கள் பொழுதின் பெரும்பகுதியை அங்கேயே கழித்தார்



கள். அந்த நகரத்திலிருந்து பழையாறை தஞ்சைக்குச் செல்ல சில நாள்கள் பிடித்தன. அதனால் அயல்நாட்டு வணிகர்கள் அதிகாரிகளையோ அமைச்சர் பிரதானிகளையோ குறித்த நேரத்தில் சந்திக்க முடியவில்லை. மூன்று இளவரசர்களும் பழையாறையில் தங்கியிருக்கிறார்கள் என்றறிந்த வணிகர்கள் பழையாறையை அடைந்தனர்.

பழையாறையில் பழைய மாளிகை ஒன்று; புதிதாகக் கட்டப்பட்ட மாளிகை ஒன்று. பழைய மாளிகையில் இளவரசி அரிந்தவன் தேவி இருந்தாள். நோய்வாய்ப்பட்டு சில ஆண்டுகளாக வெளியே வராமல் இருந்தார்கள். அவர்களுக்குப் பூரண ஓய்வு தேவைப்பட்டது. அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காக அயலார் ஒருவரையும் அங்கே அனுமதிப்பதில்லை.

கங்கை நீரைக் கொண்டு வந்த சக்கரவர்த்திகளும், அரசியாரும், பழைய மாளிகைக்கே வந்து தங்கினர்.

தந்தையை வரவேற்க இராசேந்திரனின் மூன்று புதல்வர்களும் பழையாறை புதிய மாளிகையில் தங்கினர். அரசி, புதிய மாளிகைக்கே சென்று தங்கினாள். பயணக் களைப்புத் தீரப் பல நாள்கள் கழிந்தன.

வணிகர்கள் குழுவினர் புதிய மாளிகையில் இளவரசர்களைச் சந்திக்கக் காத்திருந்தனர். வணிகர்கள் வந்துள்ளனர் என்று அறிந்தவுடன், மூத்த இளவரசர் இராசாதிராசன் அவர்களைச் சந்தித்தார்.

புது நகரத்தில் பட்டுத் துணிகளும், தங்க ஆபரணங்களும் உயர்தர இரத்தினக் கம்பளங்களும் மற்றும்

நூதனமாகத் தயாரிக்கப்பட்ட பொருள்களும் விற்கத் தக்க விதிகளைக் குறிப்பிட்டு அதற்கான அனுமதிகளை வழங்குமாறு அயல்நாட்டு வணிகர்கள் கேட்டுக் கொண்டனர்.







பலமொழி பேசிய வணிகர்கள் கூறுவதை இராசாதி ராசனுக்குப் அம்மொழி அறிந்த அறிஞர்கள் தமிழில் எடுத்துக் கூறினர்.

அந்த உரையாடலின்போது மற்ற இளவரசர்களும் உடனிருந்தனர்.

இராசாதிராசன், தனக்கு அடுத்த சகோதரனைச் சுட்டிக்காட்டி அறிமுகப்படுத்தி, ''சக்கரவர்த்திகளின் இரண்டாவது புதல்வர் இவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இவர் இங்கேயே இருந்து நகர, ஏரி, நிர்மாணத்தைக் கவனித்துக் கொண்டார். நான் பல திங்கள் வடநாட்டில் கழித்து சில நாள்களுக்கு முன்பு திரும்பி வந்தேன். நகர அமைப்பைப் பற்றி எனக்குத் தெரியாது. என் இளவலிடம் தங்கள் வேண்டுகோளையும் யோசனை களையும் கூறித் தெளிவு பெறுங்கள்'' என்றான்.

இராசாதிராசன் பேசும்போது அவனையே இமை கொட்டாமல் சீன வணிகர்களும் மற்றவர்களும் பார்த்துக் கொண்டிருந்தனர். இராசேந்திர சோழச் சக்கரவர்த்தியைப் பல ஆண்டுகளுக்கு முன்பு, அவர் இளம் வயதினரா யிருக்கும்போது அவர்கள் பார்த்திருக்கிறார்கள். ''அதே தோற்றப் பொலிவு; அதே கம்பீரம். அதே பாவனைகள். குரலில் ஏற்றத் தாழ்வு. சக்கரவர்த்திகளுக்கு ஏற்ற வாரிசு'' - என்று அவர்கள் தங்கள் மொழியில் மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டனர்.

தன்னிடம் அனுமதி கேட்குமாறு மூத்தவர் கூறியதை இளையவன் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. சற்றுத் தயக்கத்துடன் அனைவரையும் ஒரு முறை பார்த்து, ''நகரம் இப்போதுதான் உருவாகிக் கொண்டிருக்கிறது. மக்கள் குடியேறத் தொடங்கியுள்ளனர். சாலைகள் அமைக்கப்படுகின்றன. .கோயில் குடமுழுக்கு முடிந்த பின்தான், நகரத்தின் பல பகுதிகளைப் பிரிப்பது, இட ஒதுக்கீடு பற்றி முடிவு எடுக்கப்படும். நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேல் நகரம் நான்கு திசைகளிலும்



விரிவடையும் போலிருக்கிறது. சக்கரவர்த்திகள் இருக்கும் போது நாங்கள் முடிவு செய்வது முறையன்று. சக்கர வர்த்திகளைச் சந்தித்துத் தங்கள் கோரிக்கையை அவரிடம் தெரிவிப்பதுதான் முறை'' என்றான்.

''சக்கரவர்த்திகள் வந்து விட்டாரா, எங்கே அவரைச் சந்திப்பது?'' என்று வணிகர்கள் கேட்டனர்.

''சக்கரவர்த்திகள் பழைய அரண்மனையில் இருக் கிறார். கோயில் குடமுழுக்குத் தொடர்பான பணியில் அவர் ஈடுபட்டிருப்பதால், அவர் தங்களை எப்போது சந்திப்பார் என்பதை என்னால் உறுதி கூற முடியாது. மாளிகை அதிகாரிகளிடம் சென்று கேட்டு உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள'' என்று கூறிவிட்டான். சக்கர வர்த்திகளைச் சந்திக்க வணிகர்கள் பழைய மாளிகையை நோக்கிச் சென்றனர்.

மாளிகையில் அரிந்தவன் தேவியார் இருக்குமிடத் திற்கு அரசி அப்போதுதான் வந்திருந்தார். அரிந்தவன் தேவியார் படுக்கையில் சற்றுச் சாய்ந்து உட்காரும் நிலையில் இருந்தார்.

உடல் நலம் குறித்துக் கேட்டறிந்த பிறகு, அரசியாரும் அரிந்தவன் தேவியாரும் சற்று நேரம் வடநாட்டு விஜயத் தைப் பற்றிப் பேசலாயினர். பிறகு பெரிய கோயில் குடமுழுக்குப் பற்றிப் பேசலாயினர்.

''தேதி குறிக்கப்பட்டு விட்டது. சக்கரவர்த்திகள் எங்கு சென்றார் என்று தெரியவில்லை'' என்று அரசியார் அரிந்தவன் தேவியாரிடம் சொன்னார்.

'அரசியாருக்குத் தெரியாமல் சக்கரவர்த்தி எங்கு சென்றிருக்க முடியும்? அரசர் தன்னைச் சந்திக்காமல் இருக்கச் சூழ்ச்சி செய்துள்ளாள். ஏதோ தன்னிடம் மறைக்கப் பார்க்கிறாள்' என்று முடிவு செய்த அரிந்தவன் தேவி சற்று ஏளனமான குரலில், அரசியைக் கூர்ந்து நோக்கியவாறு, ''கங்கைக்கரை வரையில் சென்ற போதெல்லாம் உடனிருந்த அரசர், பழையாறை வந்த வுடன் ஒருவருக்கும் சொல்லாமல் எங்கே போயிருக்கப் போகிறார்? நீங்களும் அரசரும் ஒன்றாக இங்கே வந்தபிறகு உங்களுடன்தானே அவர்கள் இருந்தார்கள்?'', என்று கேட்டாள். அவள் பார்வை கூர்மையாக, பஞ்சவன் மாதேவியரின் இதயத்தை ஆராய்வது போலிருந்தது.

அரிந்தவன் தேவியின் குரலில் இருந்த ஏளனத்தைப் புரிந்து கொண்ட அரசி, தானும் அதற்கு ஏற்பவே சூடாக மறுமொழி கூற விரும்பி, ''பல நாள்களாக அரிந்தவன்தேவியைப் பார்க்கவில்லை. சில நாள்களா வது உடனிருப்போம் என்று அரசர் கூறினார். இங்கே இருப்பார் என்ற எண்ணத்துடன் பார்க்க வந்தேன்'' என்றாள்.

''ஆங்'' - எரிச்சலுடன், ''வடக்கிருந்து வந்தவுடன் இங்கே என் உடல் நலம் கேட்க வந்தது உண்மைதான். சிறிது நேரம் தங்கியிருந்தார். நான் கோயிலுக்கும் நகரத் திற்கும் என் பெயரைச் சூட்ட வற்புறுத்தி அவர் மனத்தை மாற்றி விடப் போகிறேன் என்ற எண்ணத்தில், நீங்கள் மிக முக்கிய பணி இருப்பதாக அதிகாரிகளை அனுப்பி அழைத்து வரச் சொல்லி விட்டீர்கள். மறந்து விட்டீர் களா? அவர்கள் என்ன சொன்னார்களோ, ஏது சொன்னார் களோ அப்போதே அரசர் புறப்பட்டு விட்டார். உங்களுக் குப் பயம். நீங்கள் என்ன சொல்லியனுப்பியிருப்பீர்கள்



என்பது எனக்குத் தெரியும். பஞ்சவன் மாதேச்சரம் என்ற பெயர் இட்டுத்தானாக வேண்டும் என்று வற்புறுத்த அழைத்திருப்பீர்கள்.''

கோபமாகப் பார்த்த அரசி, ''நான் ஏன் பயப்பட வேண்டும்? என் பெயரிடுவதாக அவர் எப்போதோ வாக்களித்து விட்டார். ஒரு வேளை உன் பிடிவாதத்தால் அதை அவர் மாற்றப் பார்க்கலாம். சக்கரவர்த்திகள் உறுதியளிக்கும் வரை அவரை நகரவிடாமல் நீங்கள் சண்டித்தனம் செய்திருக்கலாம்'' என்று சீறினாள்.

அரிந்தவன் மாதேவி விடவில்லை. ''என்னிடம் சக்கரவர்த்தி வாக்களித்திருக்கிறார். என் பெயரைத்தான் கோயிலுக்குச் சூட்டப் போகிறார். எங்கள் குலம் சோழ நாட்டிற்கு அரும்பணிகள் செய்திருக்கிறது.''

''எங்கள் குலம் மட்டும் தாழ்ந்ததா? பழுவேட்டரை யர்கள் இல்லையென்றால் சோழ வம்சம் ஏது? பெரிய கோயில் ஏது? மூத்த சக்கரவர்த்தி அரியணை ஏற எங்கள் முப்பாட்டன் செய்த உதவியை யார் மறந்தாலும் மக்கள் மறக்க மாட்டார்கள். மூத்தவள் நானிருக்க கோயிலுக்கு உன் பெயரிடுவதா? அரசர் வாக்குறுதியா? ஒருபோதும் நடவாது. மனப்பால் குடிக்காதே.''

இருவரின் சொற்போர் உச்ச நிலையை அடைந்தது. வெளியே வணிகர்கள் காத்திருப்பதாக அதிகாரிச்சி வந்து கூறினாள். அரசி எரிச்சலும் கோபமும் சேர, ''வணிகர்கள் என்னை எதற்காகச் சந்திக்க வேண்டும்? இந்த மாளிகை யில் நான் இருப்பதாக அவர்களுக்கு எப்படித் தெரியும்? அரிந்தவன் தேவியைச் சந்திக்க வந்திருப்பார்கள். முத்து, பவழ, ரத்தின ஆபரணங்கள் மீது இவளுக்குத்தான் ஆசை. அதற்காக வணிகர்களை வரச் சொல்லியிருக்கலாம்.

படுத்த படுக்கையிலிருக்கும் இவள் உடுத்திக் கொள்ளப் பட்டாடைகள் தேவைப்பட்டிருக்கலாம்!''

இதைக் கேட்ட அரிந்தவன் தேவியின் கோபம் உச்ச நிலையடைந்தது.

''தேவி! சோழநாட்டு அரசி என்பதால் என்ன வேண்டு மானாலும் பேசலாமா? அதற்கும் எல்லை உண்டல்லவா? எனக்கெதற்குப் பட்டும், பவழமும், முத்தும், கோமே தகமும்? நீங்கள் வேண்டுமானால் வாங்கி அனுபவி யுங்கள்'' என்று கோபமாகப் பேசினாள்.

''எனக்கெதற்கு? எங்கள் வடநாட்டு விஜயத்தின்போது அரசர்கள் அளித்த செல்வங்கள் பல பெட்டிகளில் வருகின்றன. அவற்றை அப்படியே பெரிய கோயிலுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று அரசரிடம் சொல்லி விட்டேன். செல்வத்தின்மீது பற்று நீங்கிப் பல ஆண்டு கள் ஆகின்றன. எங்கள் பழுவேட்டரையர் குலம் சோழ நாட்டிற்குச் செய்துள்ள தொண்டின் பரிசாக, என்றும் நிலைத்திருக்க பெரிய கோயிலுக்கு என் பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதே என் இலட்சியம்'' என்று கூறியவள் சற்றுக் கோபம் தணிந்தவளாக, ''அரிந்தவ்ன் தேவி! உடல் நலம் குன்றியிருக்கும் உன் மனத்தை நோக வைப்பதில் எனக்கு ஆசை இல்லை. சக்கரவர்த்திகள் இரண்டு நாள்களாக எங்கு சென்றார் என்பது தெரிய வில்லை. அவர் இருப்பிடம் அறிந்து செல்ல இங்கு வந்தேன். வீணே ஏன் விவாதம்?'' என்று கூறி அமைதி அடைந்தாள்.

அதுபோது இளவரசன் இராசாதிராசன் அங்கு வந்தான். வணிகர்கள் வெளியே காத்திருப்பதாகக்



கூறினான். அவர்கள் காத்திருப்பதன் காரணத்தையும் தெரிவித்தான்.

''மகனே! நீயே அவர்களிடம் சொல்லி அனுப்பி யிருக்கலாம். நகரம் முற்றிலும் முடியவில்லை. முடிந்த பிறகும் அங்கே அங்காடிகள் அமைவது, அமைப்பது நம் விருப்பமா? சக்கரவர்த்திகள் கருத்துக்கு மாறாக நாம் ஏதும் செய்ய முடியுமா! சக்கரவர்த்தியைச் சந்திக்குமாறு சொல்லி அனுப்பி விடு'' என்றாள்.

''சக்கரவர்த்திகளை எதிர்பார்த்தே நான் இங்கே வந்தேன்'' என்று சொன்ன இராசாதி ராசனிடம், அரசியார் தானும் அரசர் இருப்பிடம் அறிந்து கொள்ள வந்திருப்பதாகச் சொன்னாள். அரசர் எங்கு சென்றிருப் பார் என்பதை அறிய அவர்கள் ஆலோசிக்கலாயினர்.

சோழ அரசி பஞ்சவன் மாதேவியின் எதிரே வந்து வணங்கி நின்றான் ஒரு வீரன். சோழ வீரர்களுக்கான உடையில் அவனில்லை. சோழ அரண்மனையைச் சேர்ந்த ஒற்றன் அவன். பஞ்சவன்மாதேவிக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்டவன் அவன்.

அரசி வட திசைக்குச் சென்றிருந்தபோது சோழ நாட்டில் நடைபெறும் - குறிப்பாக புதிதாகக் கட்டப்படும் கோயில், அமைக்கப்படும் நகரம் - ஆகியவற்றில் நடை பெறுவனவற்றைச் சேகரிக்கும் வேலை அவனுடையது. வீரமா தேவியைப் பற்றி அறிந்து, அரசி தங்கியிருக்கும் இடத்திற்கு ரகசியமாகச் செய்தி அனுப்புவது அவன் பொறுப்பு.

சக்கரவர்த்திகள் திடீரென்று பழையாறையினின்று எங்கு சென்றிருக்கிறார் என்பதை அறிய அவனைத் தேடிக்

கொண்டிருந்தாள் அரசி. அரசி சொல்வதற்கு முன்பே அவன் இயங்கினான்.

அவனைக் கண்டவுடன் தனியே அழைத்துச் சென்று நடந்தவற்றைக் கேட்டறியலானாள்.

சிதம்பரத்தில் நடைபெற்ற சம்பவத்தை அவன் விவரித்தான். வீரமாதேவியும் சக்கரவர்த்தியும், மூவேந்த வேளாளரும், கருவூர்த் தேவரும் நடராசர் சபையில் இருந்ததையும் ஏதோ ஓலை நறுக்குகளை நடராசர் திருப்பாதத்தில் வைத்து சித்தர் எடுத்ததையும் அவன் கூறினான். அதற்குப் பிறகு அவர்களிடையே மகிழ்ச்சி நிலவியதையும் அவன் தெரிவித்தான்.

''அதற்குமேல் நான் அங்கே நிற்கவில்லை. என்ன நடந்ததென்று தெரியாது. ஓலை நறுக்கில் எழுதப் பட்டிருந்ததென்ன என்றும் தெரியாது. உடனே விரைந்து இங்கு வந்தேன்'' என அவன் விவரித்தான்.

''புதிய கோயிலுக்குப் பெயர்; புதிய நகரத்திற்குப் பெயர் முடிவு செய்ய அவர்கள் சிதம்பரத்தில் கூடியிருக் கிறார்களாம்'' என்றும் தான் கேள்விப்பட்டதைத் தெரி வித்தான்.

''ஓ! வீரமாதேவி அரசரைச் சந்தித்துச் சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்று விட்டாளா? கைகாரி. தந்திரசாலி. தன் இளமையை, மயக்க மூலிகையாகப் பயன்படுத்துகிறாள். என்னிடம் தெரிவிக்காமல் அரசர் சென்றிருக்கிறார். பெயரைப் பற்றி அவர்கள் ஏதாவது பேசினார்களா?'' அரசி ஒற்றனைக் கேட்டாள். தெரியாது என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் ஒற்றன்.

''தேவி! அரசர் இருப்பிடம் அறிந்து விட்டேன். சிதம்பரத்தில் வீரமாதேவியுடன் இருக்கிறாராம்.



கோயிலுக்கும் இறைவனுக்கும் பெயர் சூட்டப்பட்டு விட்டதாம்'' என்றான் இராசாதிராசன். கோபமும், ஆத்திரமும் குரலில் கலந்திருந்தன.

''என்ன?'' என்ற அதிர்ச்சியுடன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் அரிந்தவன் தேவி.

''எனக்குத் தெரியும். அந்த மாயமந்திரக்காரி சித்தரின் உதவியுடன் தன் காரியத்தை நிறைவேற்றியிருப்பாள். இனி எனக்கு இந்த உலகில் என்ன வேலை? இறைவன் என்னை ஏன் இன்னும் வாழ வைத்திருக்க வேண்டும்? என் வாழ்நாளில் ஒரே ஓர் இலட்சியம், காலா காலத்திற்கு நினைவில் இருக்கும்படியாக, கட்டப்படும் புதிய கோயிலுக்கு என் பெயரைச் சூட்ட வேண்டுமென்பது தான் அது. என் ஆசை நிராசையானது'' - அரிந்தவன் தேவியின் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பாய்ந்தது.

''அம்மா - அம்மா - தேவி - தேவி!'' என்று இள வரசர்கள் அவளருகே சென்றனர்.

''தாங்கள் வருத்தப்படக் கூடாதம்மா. அரசியாரும் தன் பெயரிடப்படுவதை எதிர்பார்த்தார்கள். எண்ணம் நிறை வேறவில்லை. அதற்காக வருந்துகிறார்களா?'' என்று கூறித்தேற்ற முயன்றனர்.

''என்ன சொன்னீர்கள்? நான் வருந்தவில்லை என்று யார் சொன்னது? நான் ஏன் வருந்த வேண்டும்? என் உள்ளம் எரிமலையாகக் கொதிக்கிறது. நான் சீறி எழப் போகிறேன். அரசர் வரட்டும்'' என்றாள் கோபத்துடன்.

சுந்தரன் மெல்லக் கேட்டான்: ''சோழ அரசி அவர் களே! நான் இப்போது சொல்லப் போவதற்கும் பொறுத் தருள வேண்டும். பெரிய கோயிலைக் கட்டியவர் அரசர்,

கோயிலைச் சுற்றி நகரத்தைப் படைத்தார் அரசர். அப்போது நீங்கள் எதிர்த்தீர்கள். சிற்றன்னை வீரமாதேவி கோயில் கட்டுவதற்கும் பல தடைகளை விதித்தீர்கள். எந்த உரிமையில் தாங்கள், தங்கள் பெயர் கோயிலுக்குச் சூட்டப்பட வேண்டும் என்று கேட்கிறீர்கள்? ஆசைப் படுகிறீர்கள்? முடிவு செய்ய வேண்டியவர் அரசர். அவர் விருப்பத்தை எதிர்க்க யாருக்கு உரிமை?''

சுந்தரனை எரித்து விடுபவளைப் போல் பார்த்த பஞ்சவன் மாதேவி சீறிப் பாய்பவள் போல் எழுந்து, ''என்ன சொன்னாய்? வீரமாதேவி சிற்றன்னையா உனக்கு? அந்த மாயக்காரியின் அழகில் மயங்கி அவளிடம் தவறாக நடந்து கொண்டதற்காக உன் சகோதர னிடம் உதைபட்டு அவள் காலில் விழுந்தாயே, மறந்து விட்டாயா? அவள் உனக்குச் சிற்றன்னையா? கோயிலுக்கு அவள் பெயரைச் சூட்ட நான் சம்மதிக்க மாட்டேன்'' என்றாள்.

இராசாதிராசன் அரசியாரை அமைதிப் படுத்தி, ''அரசியார் அவர்களே! அமைதி. அமைதி, நானறிந்த வரையில் தஞ்சையிலுள்ள பெரிய கோயிலுக்குப் பாட்டனார் இராசராசேச்சுரம் என்று பெயரிட்டதுபோல், இங்கு என் தந்தையால் கட்டி முடிக்கப்பட்ட பெரிய கோயிலுக்கும் இராசேந்திர சோழீச்சரம் என்றுதான் பெயர் சூட்டி அழைக்க வேண்டும். அம்மா! என்னைக் கோபிக்க மாட்டீர்கள் என் ു நினைக்கிறேன். என் தந்தையின் கரம் பிடித்து பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்து சொர்க்கம் புகுந்துள்ள முக்கோக்கிழானடிகள், திரிபுவன மாதேவி ஆகியவர்கள் நினைவாக அவர்கள் பெயர்களைச் சூட்ட லாம் அல்லவா? யாராவது அதைப்பற்றி நினைத்தார் களா?'' என்றான்.



''அப்படியா - தர்ம நியாயம் பேசுகிறாயா? நான்தான் உன் தந்தையுடன் சமமாக அரியணையில் அமர்ந்தவள். நான்தான் சோழநாட்டுச் சக்கரவர்த்தினி. நான்தான் சக்கரவர்த்தியுடன் வடதிசை சென்று, கங்கை நீரைக் கொண்டு வந்தவள். எனக்குள்ள உரிமை வேறு யாருக்கும் கிடையாது, நினைவிருக்கட்டும். சோழர் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயலவேண்டாம். என்முன் நிற்காமல் உடனே போய் விடுங்கள்'' - அரசியாரிட மிருந்து சொற்கள் கடுமையாகப் பாய்ந்து வந்தன.

அங்கு சிறிது நேரம் அமைதி நிலவியது. இராசாதி ராசன் எழுந்தான்.

''அரசியார் அவர்களே! இளவரசியார் அரிந்தவன் தேவி அவர்களே! என்னைப் பொறுத்தருளுங்கள். கங்கைக் கரைக்குச் சென்றவர்களுள் நானும் ஒருவன். தந்தை என்ன சொல்கிறாரோ - அதை நான் ஏற்றுக் கொள் கிறேன். வரம்பு மீறி நான் ஏதாவது சொல்லியிருந்தால், பேசியிருந்தால் என்னைப் பொறுத்தருளுங்கள். கோயில் குடமுழுக்குக்கு இன்னும் இரண்டு நாள்களே உள்ளன. அங்கே இன்னும் முடிக்க வேண்டிய பணிகள் பல உள்ளன. இது வரையில் வீரமாதேவியவர்கள் இரவு பகலாகப் பணிகளை முடித்தார்கள். சில நாள்களாக அவர்களைக் காணவில்லை. எங்கு சென்றார்கள் என்று தெரியவில்லை. சிதம்பரம் சென்றிருப்பதாக இப்போது அறிகிறேன். அவர்கள் வருவார்களோ மாட்டார்களோ - சக்கரவர்த்திகளை நகர எல்லையில் வரவேற்க வேண்டும். வேதியர்களையும், சாத்திர விற்பன்னர்களையும் அமைச் சர் மண்டலத்தாரையும், படைத் தலைவர்களையும், குறுநில மன்னர்களையும், ஊர்ப் பெருங்குடி மக்களை யும், வணிகர்களையும் அங்கே குழுமியிருக்கச் செய்ய

வேண்டும். சித்தர் பெருமகனாரையும் காணவில்லை. என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. எல்லாம் நல்லதாக முடியவேண்டுமே என்ற கவலை. நான் புறப்படுகிறேன். சக்கரவர்த்திகள் பழையாறைக்கு வந்த பிறகே குடமுழுக்குக்குப் புறப்படுவார்கள். கருணை கூர்ந்து கோபம் தணிந்து, எல்லாவற்றையும் மறந்து அரசருடன் புறப்பட்டு வாருங்கள்'' என்று கூறிவிட்டு, இராசாதிராசன், தம்பியாரையும் அழைத்துக் கொண்டு புதிய நகரம் நோக்கிப் புறப்பட்டான்.

பஞ்சவன் மாதேவி அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தவாறு இருந்தாள்.

நடுப்பகல் தாண்டியவுடன், சோழச் சக்கரவர்த்திகள் இராசேந்திரசோழத் தேவரும், அவருடன் கருவூர்ச் சித்தரும் பழையாறைக்கு வந்தார்கள்.

பஞ்சவன் மாதேவியைச் சந்திக்க, அரசர் அந்தப்புரம் வந்தார். மஞ்சத்தில் கவலை தோய்ந்த முகத்துடன் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தார். பஞ்சவன் மாதேவிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

அரசரைக் கண்டவுடன் பரபரப்புடன் எழுந்து அவரை வரவேற்றாள். பஞ்சவன் மாதேவியையும் உட்காரச் சொன்ன அரசர், ''தேவி! கருவூர்த் தேவர் வெளியே மண்டபத்தில் வீற்றிருக்கிறார். உடனே புறப்படு. வணங்கி ஆசி பெறலாம்'' என்றழைத்தார்.

பஞ்சவன்மாதேவி மறுமொழி கூறாமல், சென்றாள். அரசருடன் கருவூர்ச் சித்தரை வணங்கினார்கள். தேவியை ஆசிகூறி வாழ்த்திய சித்தர்:

''தேவி! உன் மனக் குறை, குழப்பம் எல்லாம் நானறிவேன். அவை உடனே தீர்ந்திருக்கும் என எண்ணுகிறேன்.



கோயிலுக்கு, பெருவுடையாருக்கு, நகரத்திற்கு - ஏரிக்கு - பெயரைச் சூட்டிவிட்டோம். சிதம்பரத்தில் இறைவன் திருச் சந்நிதியில் ஏற்பட்ட முடிவு. இறைவன் திருவுள்ளம் எப்படியோ அதை ஏற்றுக் கொண்டோம். நீயும் ஏற்றுக் கொண்டு மனநிம்மதியடைவாயாக'' என்றார்.

''திருஉளம்தானே, இறைவன் திருவுளம்! ஏன் சுற்றி வளைக்கிறீர்கள் சித்தர் அவர்களே திருஉள நறுக்கை நீங்களே எடுத்திருப்பீர்கள். அதில் ஒன்று சக்கரவர்த்திகளின் பெயராய் இருக்கும் அல்லது வீரமாதேவியின் பெயராய் இருக்கும். அப்படித்தானே? என் பெயர் எழுதினீர்களா?'' என்றாள் பஞ்சவன் மாதேவி, ஏமாற்றத்தால் குரல் தழுதழுக்க.

சித்தர் பெரிதாக நகைத்தார். ''சோழ அரசியாரே! கலங்காதீர்கள். கவலைப் படாதீர்கள். ஆடவல்லான் திரு உளம் நம் போன்ற மனிதர் தம் எண்ணத்திற்கும் மேலானது. வெறுப்புக்கு அப்பாற்பட்டவன் இறைவன்'' என்று கூறி, பெருவுடையாருக்கு, கோயிலுக்கு, நகரத்திற்கு, ஏரிக்கு இறைவன் திருவுளத்தால் இடப்பட்ட பெயரைத் தெரிவித்தார்.

சிறிது நேரம் மௌனமாயிருந்த பஞ்சவன் மாதேவியின் முகம் மலர்ந்தது. ஆனந்தக் கண்ணீருடன் ''இறைவன் விருப்பத்தை நான் ஏற்கிறேன்'' என்றாள்.





## 89. இராசேந்திர சோழர் - வீரமாதேவி வாழ்க! வாழ்க!

பெருவுடையாருக்குக் கங்கை நீரைக் கொண்டு குடமுழுக்கு கோலாகலமாக நடைபெற்று பன்னிரண்டு நாள்களுக்கு மேலாகிவிட்டன.

புதிய நகரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் மாளிகையில், முன்னே விரிந்து பரவியிருந்த நந்தவனத்தில் இன்னும் பூஞ்செடிகளும், மரங்கொடிகளும் வளரவில்லை. தென்னையும், மாவும், நெல்லியும் நடப்பட்டிருந்தன. பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று பசும்புல் வளர்ந்திருந்தது. புல் தரையில் கலைஞர்கள் பலர் ஆங்காங்கே கூடி அமர்ந்து மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தனர். சக்கரவர்த்திகளின் வருகையை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். அனைவருடன் அமர்ந்து விருந்துண்ண அரசர் அழைத்திருந்தார்.

ஈசான சிவபண்டிதரும் இலகுளீச பண்டிதரும் இராசேந்திர சோழரின் இரண்டாவது திருக்குமாரர் ஆதித்தனும் சக்கரவர்த்திகள் வருகைக்காகக் காத்திருந்தனர். அவ்வப்போது நுழை வாயிலைப் பார்ப்பதும்,



பேச்சில் தாங்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பேசுவதுமாக இருந்தனர்.

''திருச்சிற்றம்பல வாணனின் திருவருளை என்னவென்று சொல்லிப் புகழ்வது? பண்டிதரே! தங்களுக்கு நினைவிருக்கிறதா, பழையாறையில் நாம் கூடிப்பேசியது?'' என்று ஈசான பண்டிதர் இலகுளீசரை நோக்கிக் கேட்டார்.

''பெரிய கோயில் திருப்பணி எந்தவித இடையூறுமின்றி நிறைவேறியதற்குக் காரணம் திருச்சிற்றம்பல வாணன் அருளல்லாமல் வேறென்ன? சக்கரவர்த்திகள் வீரநாராயண ஏரிக்கரையில் தங்களிடம் கூறியது அப்போது விளையாட்டுப் போலிருக்கிறது. அன்றைய நாள் கங்கைக் கரைக்கு யாத்திரை புறப்பட்ட நாள். கங்கை நீரைக் கொண்டு வந்து பெருவுடையாருக்குத் திருமஞ்சனம் செய்விக்கப்போவதாக அன்று கூறிப் புறப்பட்டார். சக்கரவர்த்திகளால் முடியாதது ஒன்றுமில்லை என்பது எனக்குத் தெரியும். எண்ணியதுபோல் கங்கை நீரைக் கொண்டு வந்துவிட்ட அவர் ஆற்றலை என்ன கூறிப் புகழ்வது?''

''எல்லாம் திருச்சிற்றம்பலமுடையான் செயல். அவன் அருளில்லாவிட்டால் மாபெரும் செயல்கள் மூன்றும் எப்படி நிறைவேறியிருக்கும்?'' என்றார் ஈசான பண்டிதர்.

''மூன்றா? பெரிய கோயில், பெரிய நகரம் - மூன்றாவது எது எனக்குப் புரியவில்லையே?'' இலகுளீசர் கேட்டார்.

''பெரிய ஏரி வெட்டி அதில் கங்கை நீரை நிறைக்கப் போவதாக அவரின் திட்டம். இளவரசர் ஆதித்தனும் நானும் ஏரியை வெட்டுவதில் முனைந்திருந்ததை நீங்கள் மறந்துவிட்டீர்கள்'' என்று ஈசானர் கூற, இலகுளீசர்,

''ஆமாம், ஆமாம் - இராசராசர் செய்யாத ஒன்றை அவர் திருமகன் இராசேந்திரன் செய்து விட்டார். முப்பாட்டனார் பராந்தகனைப் போல் அழியாப் பெயர் பெற்றுவிட்டார்'' என்றார்.

''ஆனால்...'' என்று கூறிச் சற்று நிறுத்தினார் ஈசானர்.

''என்ன சொல்ல வருகிறீர்கள்?''

''பராந்தக சோழ தேவருக்கு வீரநாராயணன் என்ற மற்றொரு பெயர் உண்டு. அந்தக் கடல் போன்ற ஏரிக்கு அந்தப் பெயரைச் சூட்டினார். பராந்தகர் மறைந்த பிறகும், வீரநாராயண ஏரி என்று இன்றும் அந்த ஏரி அழைக்கப் படும் போது அந்த மாபெரும் மன்னரின் திருப்பெயர் மக்கள் மனத்தில் அழியாத நினைவில் நிற்கிறதல்லவா? ஆனால்...''

''ஆனால் என்ன? சக்கரவர்த்திகள் அமைத்த புதிய ஏரிக்கு இராசேந்திர சோழப் பேரேரி என்றல்லவா பெயர் சூட்டியிருக்க வேண்டும்? அல்லது கண்ணும் கருத்துமாக இரவு பகலென்று பாராது ஏரித் திருப்பணியை முன்னின்று நடத்திய நம் இளவரசர் ஆதித்தன் பெயரை இட்டிருக்கலாமல்லவா?''

ஈசானர் இவ்வாறு கூறியதும் இலகுளீசர் மறுமொழி ஏதும் கூறவில்லை. ஆனால் மெல்ல நகைத்தார். ''ஏன் நகைக்கிறீர்கள், இலகுளீசரே!''-கேட்டார்.

''ஈசானப் பேரேரி என்றும் பெயரிட்டிருக்கலாம்!''

ஈசானர் முகம் மாறியது.

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. அவர்கள் பேச்சில் கலந்து கொண்ட இளவரசர் ஆதித்தன், ''பண்டிதர்களே! நானும் அவ்வாறுதான் ஆசைப் பட்டேன். நீங்கள் சொன்னீர்களே இறைவன் திருவுள்ளம் என்று, அதை மாற்ற யாரால் முடியும்? மனிதர் ஒன்று



நினைக்க, ஆண்டவன் ஒன்று முடிப்பார்!'' என்றபோது, பண்டிதர்கள் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

''ஆமாம், ஆமாம். சிற்றம்பலவாணன் திருவருள் வேறு விதமாக இருக்கும்போது மனிதரின் சிறு ஆசைகள் எப்படி நிறைவேறும்?'' என்றார் இலகுளீசர்.

437432 | 6105530

''இளவரசரே! நீங்கள் ஆசைப்பட்டது பிள்ளைப் பிராய ஆசை என்று சொல்லிவிடலாம். நிறைவேற வில்லை என்பதைக் குறையாக ஒருவரும் நினைக்க மாட்டார்கள். ஆனால், அரசியார் பஞ்சவன் மாதீச்சுரம், பஞ்சவன் மாதேவிபுரம் என்று பெயரிட வேண்டும் என்று பஞ்சவன் மாதேவியார் விரும்பியதை என்ன வென்று சொல்கிறீர்கள்?'' என்று இலகுளீசர் கேட்டார். ''அரசியார் தனக்குள்ள உரிமையை நிலைநாட்ட அவ்வாறு விரும்பியுள்ளார். ஆனால், அரிந்தவன் மாதேவி ஆசைப்பட்டதை என்னவென்று சொல்வது?'' என்று கூறி மெல்ல நகைத்தார் ஈசானர்.

தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகம் சென்னை 600 002

''அதுதான் நான் முன்பே சொன்னேனே, எல்லாம் திருச் சிற்றம்பல உடையான் திருவுளம் என்று. அவர்கள் அனைவரையும் விட பல விதங்களில் தகுதியுடைய வீரமாதேவியார் தன் பெயரைச் சூட்டவேண்டும் என்று வற்புறுத்தியதும் எடுபடவில்லை பார்த்தீர்களா?'' என்று இளவரசர் ஆதித்தன் சொன்னபோது, அதற்கு மறுமொழி கூற இலகுளீசர் முயன்றபோது, அங்கே பரபரப்பு ஏற் பட்டது. அனைவரும் எழுந்து நின்றனர்.

சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் அங்கே வந்து நின்றதை ஒரு கணம் ஒருவரும் கவனிக்கவில்லை. ஒளி கொடுக்கும் தீவர்த்தி தாங்கியவர்களை வாயிற்புறத்தே இருக்கச் செய்துவிட்டு வந்த அரசர் அனைவரையும் அமரச் சொன்னார்.

''ஆதித்தா! என்ன சொன்னாய்? இன்னொரு முறை சொல்லு. உன் சிற்றன்னை வீரமாதேவி - தன் பெயரிட வேண்டும் என்று யாரிடம் வற்புறுத்தினார்கள்?'' என்று அழுத்தமான குரலில் கேட்டார்.

இளவரசர் ஆதித்தன் நடுக்கமுடன் கை கட்டி, ''அப்படித்தான் மற்றவர்கள் சொல்லக் கேள்விப் பட்டேன்...'' என்று தயக்கத் துடன் சொன்னான்.

இராசேந்திரன் பெரிதாகச் சிரித்தார். ''பண்டிதர்களே! காதால் கேட்பதை மெய் போன்று கூறக்கூடாது என்பதை என் பாலகனுக்குக் கற்றுத்தாருங்கள். உங்களுக்குத் தெரியும், காட்டுப் பகுதியைத் திருத்தி அங்கே கோயில் எழச் செய்தவள் வீரமாதேவி. கங்கைக் கரைக்குத் தானும் வர ஆசைப்படாமல் தன்னந்தனியளாக சிற்ப அற்புதங்கள் நிறைந்த பெரிய கோயிலைக் கட்டி முடித்தவள் வீரமாதேவி. கோயில் கட்டும் போதே, வீதிகள்





அமைந்தன. வீடுகள் எழுந்தன. மாளிகைகள் கட்டப் பட்டன. அதற்கெல்லாம் காரணம் யார்? ஆதித்தன் சொன்னது போல் தன் பெயரிட வேண்டுமென என்னிடம் அவள் வற்புறுத்தியிருந்தால், அவளுடைய கோரிக்கையை, விருப்பத்தை உடனே நிறைவேற்றி இருப்பேன். பண்டிதர்களே! உங்களுக்குத் தெரியுமா? கோயிலுக்கும், நகரத்திற்கும், ஏரிக்கும் என் பெயர்தான் சூட்டப்படவேண்டும் என்று வற்புறுத்தியவள் வீரமா



தேவி. அரசியார் தன் பெயரிட வற்புறுத்தியது உண்மை. ஆனால் திருச்சிற்றம்பலமுடையான் திருச்சந்நிதியில் கருவூர்ச் சித்தர், திருவுள ஓலையை இட்டுப் பார்த்தார். ஆகா - செழுநீர்ப் புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனுடைய திருவுள்ளம் எவ்வாறு இருந்தது தெரியுமா?

''பெருவுடையாரின் திருப்பெயர் கங்கை கொண்ட சோளீசர். நகரத்தின் பெயர் கங்கைகொண்ட சோழபுரம். ஏரிக்குச் சோழ கங்கம். இவ்வாறு ஓலையில் பெயர் எழுதி இட்டவர் சித்தர்.

''பண்டிதர்களே! என் அருமை மகனே! நீங்கள் அனைவரும் கூறியதுபோல் காட்டைத் திருத்தி நகரமாக்கி, நகரத்தில் பெரிய கோயில் அமைக்க முதல் காரணம் யார் தெரியுமா?''

சக்கரவர்த்தி பண்டிதர்களை நோக்கி இவ்வாறு கேட்டு விட்டு பேச்சைச் சற்று நிறுத்தினார்.

''தஞ்சையில் என் தந்தை பேரரசர் இராசராசர் பெரிய கோயிலைக் கட்டினார். மேல் தளங்கள் இரண்டிலும் அழகிய சிற்பங்களையும், சித்திரங்களையும் படைத்தார். பெரிய லிங்கத்தையும் அமைத்தார். இராசராசேச்சரம் என்று கோயிலுக்குத் தன் பெயரைச் சூட்டினார். அதைப் போலவே மற்றொரு கோயிலைக் கட்டும் எண்ணம் அவர் திருக்குமாரனாகிய எனக்கு ஏன் ஏற்பட்டது?''

ஒவ்வொருவரும் வெளியே சொல்ல முடியாத முடிவினை மனத்தில் நினைத்திருந்தனர்.

''தந்தைக்கும் மகனுக்கும் கருத்து வேற்றுமை.''

''தந்தையின் புகழைக் கண்டு மகனுக்குப் பொறாமை. அதனால்தான் இராசராசேசரம் பெரிய கோயிலைப்



போன்று மற்றொன்று கட்ட முடிவு செய்தார்'' என்றெல்லாம் ரகசியமாக ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

''கற்றறிந்தவர்களே ஏற்படுத்திக்கொண்ட முடிவு என் செவிகளிலும் வீழ்ந்தது. பட்டத்தரசியும், மற்ற இளவரசிகளும் வீரமாதேவியின் மீது பழியைச் சுமத்துவதற்காக, அவள் மீது அவப்பெயர் ஏற்படுத்துவதற்காக, காரணத்தை வீரமா தேவியின் மீது சுமத்தி வதந்திகளைப் பரவ விட்டனர்.

''பண்டிதர்களே! தஞ்சையில் பெரிய கோயில் இருக்கும் போது மற்றொரு கோயில் எதற்கென்று நீங்கள் விவாதித்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரியும். தஞ்சை தலைநகராக இருக்கும்போது, மற்றொரு பெரிய நகரம் ஏன் என்ற கேள்விக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான மறுமொழியைக் கூறுவார்கள். தந்தைக்கும் தனயனுக்கும் கடுமையான கருத்து வேற்றுமை என்ற முடிவுக்கே வருவர். எவ்வளவு தவறான கருத்து! என் தந்தை, சோழ நாட்டின் பொற்காலம் உதயமாகச் செய்தார். அவருடன் கருத்து மோதல் கொள்ளும் அளவுக்கு நானென்ன அவ்வளவு திறமைசாலியா, மேதையா? பண்டிதர்களே! சோழர் குல தெய்வம் திருச்சிற்றம்பலத்தில் நடனமிடும் நடராசப் பெருமான் என்பதை நீங்கள் அறிவீர்கள். நடராசப் பெருமான் மீது என் தந்தைக்கு எவ்வளவு பக்தி என்பது எனக்குத் தெரியும். ஆடவல்லான் அருளால்தான் சோழநாடு மகோன்னத நிலைக்கு உயர்ந்திருக்கிறது என்பது அவர் திடமான நம்பிக்கை, மூவர் தேவாரப் பதிகங்கள் தில்லைச் சிற்றம்பலத்தில் கிடைத்த பிறகு ஆடவல்லான் மீதுள்ள பயபக்தி மிக அதிகமாகியது. ஒவ்வொரு நாளும் சிதம்பரம் சென்று வரவேண்டும் என்ற ஆவல் அதிகமாகியது.

''ஆனால் முக்கியமான நாள்களில் கூட சிதம்பரம் சென்று தரிசனம் செய்வதற்குக் காவிரியும் மற்ற நான்கு கிளை நதிகளும் இடையூறாக இருந்தன. வெள்ளப் பெருக்கெடுத்தோடும் வேளைகளில் பரிவாரங்களுடன் சிதம்பரம் சென்றடைவதற்குப் படும் தொல்லையைச் சொல்லி முடியாது. கொள்ளிடத்தில் எப்போது வெள்ளம் வரும் என்பதே தெரியாது. வெள்ளம் என்றால் தோணி களிலும், பெரிய படகுகளிலும், ஓடங்களிலும் கூட ஏறிக் கடக்க முடியாத பெரும் சுழிகளுடன் கூடிய வெள்ளம். அச்சமயம் ஆற்றைக் கடக்கக் கூடாது என்று சொல் வார்கள். அரசியுடன், என் குடும்பத்தார்களுடன் ஆற்றைக் கடக்க முடியாமல் எவ்வளவு காலம் மறுகரையில் தங்கியிருப்பது? சிதம்பரத்திற்கே தலைநகரத்தை மாற்றி விடலாம் என்று சிலர் யோசனை சொன்னார்கள். நான் எவ்வளவு நாள்கள் சிந்தித்தேன் தெரியுமா? தஞ்சையி லிருந்து தலைநகரத்தை அங்கே மாற்றி, புதிய நகரம் ஏற்படுத்தி, புதிய நகரத்தின் நடுநாயகமாகக் கோயில் ஒன்று கட்டுவது என்ற முடிவுக்கு வந்தேன். அதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதை வெளியே சொல்ல இப்போது விருப்பமில்லை. தில்லைச் சிற்றம்பலத்துக் குத் தடையின்றிச் செல்ல ஏற்ற நகரம் அமைக்க விரும்பினேன்.

''அதையும் விட நான் மற்றொரு முக்கிய உண்மை யைக் குறிப்பிட்டாக வேண்டும். பெருவுடையார் கோயிலை, சிற்ப அற்புதங்களுடன் படைத்த சிற்பி மாணிக்க சேகரன் இங்கு வந்திருக்கிறார். அவரைப் பெரிதும் பாராட்ட வேண்டும். கோயிலிலுள்ள சிற்பங்களில் தெய்விகத் தோற்றத்தையும் வடிவழகையும் பார்த்தீர்களா? சிற்பியின் கைவண்ணத்தையும் கலைத் திறமையையும் பாடிப் புகழ்ந்து எவ்வளவு பரிசுகள்



தந்தாலும் போதா. என் தந்தை சக்கரவர்த்தி கட்டிய இராசராசேச்சுரக் கோயில் சிற்பப் பணியை முடித்த பிறகு சிற்பக் கலைஞர்களுக்குச் சோழ நாட்டில் வேலை யில்லை. கலைஞர்கள் ஒரு கணம் கூட சும்மா இருக்க முடியாது. அவர்கள் மதுரையை நோக்கிச் சென்று விட்டனர். சித்தர் அருளால் அவர்கள் மீண்டும் சோழ நாடு திரும்பினர். அவர்களுடைய கலைத் தாகம் தீர்க்க ஏற்படுத்தப்பட்டதே இந்தப் பெரிய கோயில். இன்னும் இந்தக் கோயிலில் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. இந்தப் பெரிய கோயில் கலைஞர்களுக்காகப் படைக்கப்பட்டதென்றும் கூறலாம்.''

இராசேந்திரனின் பக்திப்பூர்வமான இந்த விளக்கம் கேட்டு பண்டிதர்கள் இருவரும், இளவரசன் ஆதித்தனும் தங்கள் மகிழ்ச்சியை, மலர்ந்த முகங்களின் மூலமாக வெளிப்படுத்தினர்.

இளவரசன் ஆதித்தன், சக்கரவர்த்திகளின் காலில் வீழ்ந்து வணங்கினான். இலகுளீச பண்டிதரும், ஈசானரும் மகிழ்ச்சியுடன் சக்கரவர்த்திக்கு வாழ்த்துக் கூறினர்.

''சக்கரவர்த்திகளே! உங்கள் உயர்ந்த உள்ளத்தை நாங்கள் அறிந்தோம். முயன்றிருந்தால் தங்கள் பெயரை ஊருக்கும், கோயிலுக்கும் இட்டிருக்கலாம். அதைத் தாங்கள் வற்புறுத்தாதது ஒன்றிற்காகவே தங்கள் பெருமையை இந்த உலகம் என்றும் போற்றும்'' என்றனர்.

அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொண்டவர் போல், அரசர் பெருமிதத்துடன் புன்னகை பூத்தார்.

''நாம் பேசிக் கொண்டே இருந்து விட்டோம், நேரமாகிறது. உங்களை விருந்துக்கு அழைத்திருந்தேன். அதோ, சிற்பிகளும் மற்றும் கட்டடக் கலைஞர்களும்

கூடியிருக்கின்றனர். தங்களையும் காக்க வைத்து விட்டேன்'' என்று கூறி அரசர் அவர்களை விருந்து மண்டபத்திற்கு அழைத்தார்.

''இரவில் நாங்கள் ஆகாரம் ஒன்றும் ஏற்பதில்லை; சக்கரவர்த்திகளுடன் சிறிது நேரம் இருந்து அளவளாவி மகிழவே இங்குக் காத்திருந்தோம்'' என்றனர்.

சக்கரவர்த்திகள் யார் வருகையையோ எதிர்பார்த்தவர் போல் வெளிவாயிலைப் பார்த்தவாறு இருந்தார். மெய்க்காவலரை அழைத்து ஏதோ கூறினார்.

''கருவூர்ச் சித்தரைப் பெரிதும் இங்கே எதிர்பார்த்திருக்கிறேன். இன்னும் அரசியையும் இளவரசிகளையும் காணவில்லை'' என்றார்.

சிறிது நேரத்தில் அரசி பஞ்சவன்மாதேவி பணிப் பெண்கள் சூழ அங்கு வந்தார். அரிந்தவன்மாதேவி வெளியே வரக்கூடிய நிலையில் இல்லாததால் மாளிகையை விட்டு வரவில்லை.

கருவூர்ச் சித்தரை அங்கே கண்டு வணங்க அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். வீரமாதேவியையும் எதிர்பார்த்தனர்.

அவர்கள் இருவரும் வரக் காணாததால் ஏற்பட்ட ஏமாற்றத்தைச் சக்கரவர்த்திகள் வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை.

அதே வேளையில், சோழ கங்கப் பொன் ஏரிக்கரையில் படகுத் துறையில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த சிறிய மண்டபத்தில், கருவூர்ச் சித்தர் எதிரே வீரமாதேவி கரங்கூப்பி பணிவுடன் நின்று கொண்டிருந்தாள்.

''தேவரீர்! நான் முற்பிறவியில் செய்த புண்ணியம் தங்களை இங்கே தரிசித்தது. சுவாமிகள் இன்னும் சில



காலம் கங்கை கொண்ட சோழபுரத்தில் தங்கியிருக்க வேண்டும். சக்கரவர்த்திகளுடைய விருப்பமும் அதுவே'' என்றாள் வீரமாதேவி. அவள் கண்கள் பனித்திருந்தன.

வீரமாதேவியன் வேண்டுகோளைக் கவனிக்காதவர் போன்று, ''வீரமாதேவி! என் பணி முடிந்து விட்டது. நான் முன்பே கூறியபடி நான் போய் வருகிறேன். பெருவுடையார் கோயிலில் இன்னும் முடிக்க வேண்டியவை பல இருக்கின்றன. இனிமேல் தான் நீ அமைதியாகப் பணியாற்ற வேண்டும். சோளீசருக்கு ஆறுகாலப் பூசையை முறையாக நடத்த வேண்டும். நகர வளர்ச்சியையும் கவனிக்க வேண்டும். ஒவ்வோர் எல்லையிலும் கோயிலொன்றைக் கட்ட வேண்டும். தலைநகருக்கான எல்லாத் தகுதிகளையும் உண்டாக்க வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே தலையை அசைத்தவாறு எங்கோ பார்த்துத் தனக்குள் மெல்ல நகைத்துக் கொண்டார்.

''சுவாமி! தங்களுக்காக சக்கரவர்த்திகள் மாளிகையில் காத்திருப்பார். சிற்பிகளும், கலைஞர்களும் முக்கியமானவர்களும் தங்கள் ஆசிபெறக் காத்திருப்பார்கள். தங்களைத் தேடி சிற்பக் குடிலுக்கும், நடனப் பள்ளிக்கும் ஓடி ஓடி அலைந்தேன். ஏதோ உள்ளுணர்வு ஒன்று கூறியது, சோழகங்க ஏரிக் கரையில் நீங்கள் இருப்பீர்கள் என்று. தங்களைச் சந்தித்தது, நான் முற்பிறவியில் செய்த புண்ணியம்'' - வீரமாதேவி உணர்ச்சி மிகுதியால் குரல் தழுதழுக்கப் பேசிக் கொண்டே நின்றாள்.

''வீரமாதேவி! இராசராசன் மிகுந்த பாக்கியசாலி. அவனைவிடப் பாக்கியசாலி கங்கை கொண்ட சோளீச்சரத்து சோளீசப் பெருவுடையார். என்னிடமிருந்து பதினோரு பாடல்களைப் பரிசாகப் பெற்று விட்டார்!'' என்று கூறிப் பெரிதாகச் சிரித்தார்.

''ஆமாம் சுவாமி! என் கனவெல்லாம், தஞ்சைப் பெருவுடையாருக்குத் தாங்கள் அளித்த பாமாலை போல் கங்கை கொண்ட சோளீசருக்கும் இசைப்பாடல் அளிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்'' என்று கூறும்போது, சித்தர், ''யாரை வேண்டிக் கொண்டாய்? என்னை வேண்டினாயா? யாரும் கேட்காமலே நான் பாடினேன்'' என்றார். மீண்டும் பெருஞ் சிரிப்பு.

''சுவாமி, சுவாமி! நாள்தோறும் நான் இறைவனைத் துதித்தேன். 'சிவபெருமானே! உன் கோயில் மிகப் பெரியதாக அமைய வேண்டும். உன் திருவுருவம் பெரிதாக அமைய வேண்டும். கருவறையின் மேல் விமானம் மேருவைப்போல் உயரமாக அமைய வேண்டும். எங்களுக்கு வழிகாட்டிய சித்தர் பெருமான் உன்னைப் புகழ்ந்து போற்றிப் பாட வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டேன். சுவாமி! சோளீசரை வேண்டினால் என்ன, தங்களை வேண்டினால் என்ன?'' வீரமாதேவி பணிவுடன் பேசினாள்.

''தஞ்சை இராசராசேச்சரத்துப் பெருவுடையாரைப் போற்றிப் பாடிய இசைப் பாவை நீ அறிவாயா, பெண்ணே? இந்தக் கங்காபுரிக்கில்லாத பெருமை இராசராசேச்சரத்துப் பெருவுடை யாருக்குண்டு. அது என்ன தெரியுமா?'' - சித்தர் வினவினார்.

வீரமாதேவி திகைத்து நின்றாள்.

''எங்கே அந்தப் பாடலைப் பாடு'' சித்தர் குரலில் கட்டளையிருந்தது. 'தஞ்சையில் பாடப்பெற்ற பதிகத்தை நீ அறிவாயா?' என்று சோதிப்பது போலும் அவர் குரல் இருந்தது. கணமும் தாமதிக்காமல், முன்றானையை எடுத்துச் செருகிக் கொண்டு வீரமாதேவி பாடி ஆடினாள்.



''நெற்றியிற் கண் என் கண்ணின்நின் றகலா
செஞ்சினில் அஞ்சிலம்(பு) அலைக்கும்
பெற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன இல்லை
மற்றெனக்கு உறவேன் மறிதிரை வடவாற்
றிடு புனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசராச சேச்சரத் திவர்க்கே''

என்று திருவிசைப்பாவைப் பாடியவாறு, பாடலின் பொருளுக்கேற்ப விழிகளையும், கரங்களையும் குறிப் பால் உணர்த்தி ஆடினாள்.

வெண் நாடிக்குள், சித்தரின் புன்னகை பளிச்சிட்டது. கரவொலி எழுப்பிய சித்தர், ''பெண்ணே! பாடலின் பொருள் புரிந்ததா?'' என்று கேட்டார்.

''எளியவளுக்குச் சிறிது சிறிது புரிந்ததால் என் விழிகளும், கரங்களும் குறிப்புணர்த்தின. தஞ்சை நகரத்தை ஒட்டிச் செல்லும் வடவாற்றின் மதகில் முதலைகள் நீரை வாரி இறைக்கின்றன. அகழிகளோடு கூடிய மதில்களை உடைய தஞ்சை மாநகரில் இருக்கிறது இராசராசேச்சுரம் எனும் கோயில். அங்கு எழுந்தருளியுள்ள பெருவுடையாரின் நெற்றியிலுள்ள கண்கள் என் விழிகளிலிருந்து நீங்கா. சிலம்புகள் ஒலிக்கின்ற அவர் பொன் திருவடிகள் என்னை ஆட்கொள்ள என் நெஞ்சினுள் புகுந்தன. புகுந்தவை மீண்டும் வெளியே வரவில்லை. ஆதலால் அவரைத் தவிர மற்ற உற்றார் உறவினர் எதற்கு?'' என்று வீரமாதேவி சொன்னாள்.

கருவூர்ச் சித்தர், தஞ்சை இராசராசேச்சரத்துப் பெருவுடையார் மீது பாடிய பதினோரு பாடல்களையும் முற்றிலும் அவள் அறிவாள். இந்தப் பாடல்களைப் பலமுறை பாடி அரசர் முன் ஆடியிருக்கிறாள்.

''நாம் எழுப்பவிருக்கும் கோயிலுக்கும் இதுபோன்று பல பாடல்கள் சித்தரின் பரிசாகக் கிடைக்க வேண்டும்'' என்று சக்கரவர்த்திகளிடம் அவள் தன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறாள். அதனால் கருவூராரின் சோதனையில் தேறி விட்டாள்.

''சுவாமிகளே! கங்கைகொண்ட சோளீச்சரருக்கு இல்லாத சிறப்பு தஞ்சைப் பெருவுடையார்க்கு உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் கோட்டை மதிலை ஒட்டி வடவாறு செல்கிறது. ஆற்று மதகில் முதலைகள் உண்டு. ஆனால் இங்கே கோயிலுக்கு வெகு தொலைவில் தான் சோழ கங்க ஏரி இருக்கிறது. சோழ கங்கத்திலிருந்து வாய்க்கால் வெட்டி, ஏரி நீர் பாய்ந்துவர அகழியில் நீரைச் சேர்ப்போமா? அப்போது தஞ்சைக்கு இல்லாத பெருமை, கங்கை கொண்ட சோழபுரத்துக்கு ஏற்படும். கங்கை நீர் கோட்டை மதிலில் மோதும் அல்லவா?'' என்று வீரமாதேவி கேட்டாள்.

''வீரமாதேவி! இராசராசேச்சரத்துக்கு இல்லாத பெருமையை கங்கை கொண்ட சோளீச்சரத்து வீற்றிருக்கும் பெருவுடையாருக்கு நான் ஏற்றிப் பாடவில்லையா?'' சித்தர் கேட்டார்.

வீரமாதேவி தலையசைத்தாள். ''குடமுழுக்கு நாளிலிருந்து தொடர்ந்து தாங்கள் இசைத்த பாடல்கள் ஒவ்வொன்றும் கோடி பெறும். சோளீசர் பாக்கியசாலி. பதினோரு பாடல்களும் உலகம் உள்ளளவும் வாழும்.''

சித்தர் வெளியே புலப்படாமல் புன்னகை புரிந்தார்.

''பாடல்கள் நினைவிருக்கின்றனவா?''

''ஆகா. ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பாடல். அன்று முழுவதும் அதே சிந்தனை. இந்த நாள்களில் எவ்வளவு முறைப் பாடிவிட்டேன், ஆடிவிட்டேன்!''

''அப்படியா? உனக்குப் பிடித்த பாடலை இசையுடன் பாடு. ஆடிக்கொண்டே பாடு.''



''குடமுழுக்கு அன்று பாடிய பதிகம் பாடட்டுமா?''

''அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.''

வானை எட்டும் அளவுக்கு உயர்ந்து நின்று சிவ பெருமான் திருஉருவத்தை உருவகப்படுத்தினாள். வீரமா தேவி அந்தப் பாடலுடன் ஐக்கியமாகி விட்டாள். கரங்கள் குவிந்து நிற்க அவள் தன்னை மறந்து, சோளீச்சரக் கோயிலை நோக்கி நின்றாள்.

சித்தரும் தம்மை மறந்து விழிகளை மூடியவண்ணம் யோக நிலையில் அமர்ந்து விட்டார்.

இராசேந்திர சோழ தேவர் மெய்க்காவலர் சூழ அங்கே வந்துநின்றார்.

வீரமாதேவி தன் நிலை உணர்ந்தாள். சக்கரவர்த்திகளைப் பார்த்துப் பரபரப்புடன் வரவேற்று வணங்கினாள். அரசரிடம் என்ன கூறுவது - நா எழவில்லை.

''சித்தரைத் தேடி அலைந்தேன். நம்மிடமிருந்து விடைபெற்றுச் செல்ல அவர் முன்பே குறிப்பிட்ட நாளை நான் மறக்கவில்லை. இன்று அவர் நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் நாள். அவர் நம்முடனேயே எப்போதும் இருப்பார் என்று நான் நம்பினேன். நம்முடனிருந்து வழிகாட்டி வருவார் என்று எண்ணினேன். ஒவ்வொரு நாளும் அவர் பெருவுடையார் திருச்சந்நிதிக்கு வந்து பாடுவார். முதல் நாள் பாடலைத் தான் இப்போது நீங்கள் கேட்டீர்கள். நான் ஒவ்வொரு பாடலாகக் கேட்டு மெய்

மறந்தேன். பாடும்போது நான் மனத்தில் பதித்துக் கொண்டாலும் உடனே ஓலைச் சுவடியில் அதை எழுதிக் கொண்டேன். தனியே அமர்ந்து படித்துப் பாடுவேன்.''

சித்தர் அவளைப் பாராட்டுவதுபோல் தலையசைத்து, தன் கரங்களை ஆசி வழங்குவது போல் உயர்த்தினார்.

பிரமிப்புடன் இராசேந்திரன் வீரமாதேவி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். இறுதியில் சித்தர் தம்மிடம் விடை பெற்றுக் கொள்வார் என்று எண்ணியிருந்தவருக்கு ஓர் அதிர்ச்சிதான். மெய்க்காவலர்கள் சற்றுத் தொலைவில் நின்றனர்.

வெண்மதி வானின்று களங்கமில்லாமல் புன்னகை புரிந்து கொண்டிருந்தது. நிலவுக் கதிரை ஒட்டி வைத்தது போன்ற தன் தாடியை மெல்ல வருடியவாறு வீரமாதேவி சொல்லி வருவதைச் சித்தர் கூர்ந்து கவனித்து வந்தார்.

வீரமாதேவி தொடர்ந்தாள்: ''சக்கரவர்த்திகளே! நீங்கள் பாக்கியசாலி. தில்லைப் பொன்னம்பலவாணனின் பூரண அருள் பெற்றவர். போர்க் களங்களில் பெற்ற வெற்றியின் புகழ் என்றும் நிலைத்து நிற்பதைவிட கங்கை நீரைச் சோழநாட்டிற்குக் கொண்டு வந்தீர்களே, அந்த நிகழ்ச்சி சந்திர, சூரியர் உள்ள அளவுக்கும் அழியாது.

''மற்றொன்று எனக்குத் தோன்றியது. தாங்கள் எழுப்பிய கோயில், நகரத்தை ஏரியைப் பற்றிய வெற்றிச் செய்தியைப் பட்டயத்தில் பொறித்து வைக்கலாம். கல்வெட்டாக்கி வைக்கலாம். அவைகூட அழிந்து விடலாம். ஆனால் என்றும் அழியாத சாசனத்தைத் திருச்சிற்றம்பலத்து எம்பெருமான் சித்தர் மூலம் அருளியிருக்கிறார். இசைப் பாடல்கள் ஒவ்வொன்றும் கங்கை கொண்ட செய்தியைச் சொல்கின்றன. ஆகா; நான்காவது நாள் அவர் திருவாய் மலர்ந்து இசைத்த பாடலைக் கேளுங்கள்.



''ஐயபொட் டிட்ட அழகுவாள் நுதலும்
அழகிய விழியும்வெண் ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்
தரங்கமும் சதங்கையும் சிலம்பும்
மொய்கொள்எண் திக்கும் கண்டநின் தொண்டர்
முகமலர்ந்(து) இருகணீர் அரும்பக்
கைகள்மொட் டிக்கும் என்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!''

சக்கரவர்த்திகளே! உங்களுடைய அன்புக்குரியவள் நான் என்பதைவிட, இளவரசி என்று மற்றவர் அழைப்பதை விட, கங்கை கொண்ட சோளீசர் ஆலயத்துள் என்றும் சிவத்தொண்டாற்றும் பேறு பெற்றேனே, அது அவன் கருணை. சித்தர் பெருமானே! எங்களை விட்டுப் பிரியக் கூடாது. உங்களை நாங்கள் விடமாட்டோம்'' என்று கூறியவாறு, வீரமாதேவி சித்தர் பாதங்களில் விழ்ந்து, அவர் திருப்பாதங்களைச் சிக்கெனப் பிடித்தாள். இராசேந்திர சோழரும், தன் அங்கங்கள் யாவும் பூமியில் பதியும்படி வீழ்ந்து வணங்கி, ''அறியாமல் பிழையேதும் அடியேன் செய்திருந்தால் பொறுத்தருளுங்கள். வீரமாதேவி இங்கு உரிய நேரம் வராவிடில் நான் தங்களைச் சந்திக்க முடியாமல் போயிருக்கும். எங்கள் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரியக்கூடாது'' என்று கூறி குழந்தைபோல் விம்மி விம்மி அழுதார்.

சித்தர் குனிந்து இருவரையும் அன்புடன் தூக்கி, ''என் அருமைச் செல்வங்களே! நீங்கள் நீடுவாழ அஞ்செழுத்துடையவன் அருள் உண்டு.

''இங்கு என் பணி முடிந்துவிட்டது. பொதிகை மலையில் எனக்கு இறைவன் இட்ட பணி இருக்கிறது. மலையேறி, கானகத்தின் நடுவே மிக அமைதியாகத் தவம் செய்ய வேண்டும். பிறகு அங்கே வரும் மற்ற சித்தர்களுடன் பரிபூரணானந்தத்தை அனுபவித்து மகிழ வேண்டும்.

''சோழ நாட்டிற்கு இனிவரும் பல ஆண்டுகளுக்கு எந்தவித இடர்ப்பாடும் இல்லை. சோழநாடு என்றில்லாமல் மற்ற நாடுகளுக்குச் செல்லும் போது இறைவன் திருப்பணியைச் செவ்வனே செய்து வரவேண்டும். பல ஆண்டுகள் கழிந்து திடீரென்று நான் சோழ நாட்டிற்கு வரக்கூடும். தஞ்சையிலோ, இங்கோ நான் நிரந்தரமாகத் தங்கி, பரிபூரண நிலையை அடையலாம். இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது. எப்போதுமே இன்பம் சூழ்ந்திருக்கும் என்று சொல்ல முடியாது. ஒளியுடன் நிழலுமிருக்க வேண்டும். பெண்களுள் சிறந்தவளாக உலகம் வீரமாதேவியைப் போற்றப் போகிறது.

''நாழிகை ஆகிக்கொண்டே போகிறது. உன் துணைவி வீரமாதேவி அபூர்வமானவள். உன்னை விட்டுப்பிரிய மாட்டாள். மிகப் பெரிய கோயிலையும் நகரத்தையும் சிவ பெருமான் அருளிவிட்டார். கோயிலில் தொண்டு செய்பவர்கள் நலனைப் பாதுகாத்து வரவேண்டும். யாருமே வராதபோது இந்தக் கானகப்பகுதியில் நாட்டியக் கலையைக் கற்றுத் தந்தாளே, அந்த மூதாட்டியை மேலும் ஊக்குவித்து, கலையை வளர்த்து வரும் அந்த நாட்டியக் கலைக் கூடத்திற்கு மேலும் ஆதரவு கொடு. இறைவன் முன் நாட்டியாஞ்சலி புரிய பலரை ஊக்குவிக்க உதவி செய். வீரமாதேவி உன்னுடனே இருந்து உற்றுழி உதவுவாள். நேரமாகிறது. நான் வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே ஏரிக்கரையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அரசர் அவர் பின் தொடர்ந்து ஓடினார். குரல் தழுதழுக்க, ''சுவாமி, சுவாமி! வீரமாதேவி என்றும் என்னுடன் இருப்பாள் என்று ஆசி கூறிவிட்டீர்கள். ஆனால், அவள் எந்தவித சுகத்தையும் என்னிடம் விரும்பாமல் தபஸ்வினிபோல் இருக்கிறாளே! தாங்கள் அவளுக்கு அறிவுரை வழங்குங்கள். என்னுடைய வாரிசை அவள் மூலம் நான் பெறவேண்டும் என்ற ஆசை உண்டு. வீரமாதேவியின் மனத்தை மாற்றிக் கொள்ளச் சொல்லுங்கள். அருள் புரியுங்கள்'' என்று கூறும்போது அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக உதிர்ந்தது.



சித்தர் திரும்பி நோக்கினார். அவர் பேசுவதற்குள் வீரமாதேவி முந்திக் கொண்டாள். ''சுவாமி! அப்படியெல்லாம் உத்தரவிடாதீர்கள். நான் எடுத்த முடிவிலிருந்து மாறிவிட உத்தரவிடாதீர்கள். மனித உடலே கோயில் என்று நீங்கள் அவ்வப்போது சொல்வீர்கள். என் அன்பிற்குரிய சக்கரவர்த்தியின் திருமேனியைக் கோயிலாக எப்போதோ வரித்து விட்டேன். பேரின்ப சுகத்தை அனுபவிக்கும் பாதையில் நான் சென்று கொண்டிருக்கும் போது, அழியக்கூடிய சிற்றின்ப மாயையில் என்னைத் தள்ளிவிடாதீர்கள். 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் வேண்டிய' சிவ பக்தர்களை விடவா நான் உயர்ந்துவிட்டேன்? என் உயிர் மூச்சு உள்ளவரை கங்கை கொண்ட இந்த மாவீரருடனேயே இருந்து தொண்டு செய்து அவருடனேயே மாய்வேன். இது சத்தியம். என் மனம் மாறிவிடச் செய்யாதீர்கள்.'' வீரமாதேவியும் ஓடிச்சென்று, சித்தர் பாதங்களை மீண்டும் பற்றிக் கொண்டு கதறினாள்.

இருகரங்களையும் தூக்கி சித்தர் ஆசி வழங்கினார்.

''வீரமாதேவி! உன் நல்லெண்ணத்துக்கு என்றும் ஊறு விளையாமல் சோழ பூபதி, கங்காபுரிக் காவலன், கங்கை கொண்ட சோளீசர் ஆலயத்தை எழுப்பியவன், இராச கேசரி இராசராசன் திருமகன், சோழ கங்கம் படைத்த பரகேசரி இராசேந்திர சோழ உடையார் நடந்து கொள்வார். என் எதிரே இந்த நகரத்தின் புகழ்க்கொடி இன்னும் நூறு ஆண்டுகளுக்குக் குறையாமல் பறக்கப் போவது தெரிகிறது. எல்லாவித நலங்களும் பெற்று நீங்கள் இருவரும் நீடு வாழுங்கள்'' என்று கூறித் திரும்பினார். நடந்தார்.

தன்னை வீரமாதேவியும், இராசேந்திரனும் பின் தொடர்வதை அறிந்து விரைவாக நடந்தார். புயல் போல் நடந்தார். ஏரிக்கரையருகே வந்தார்.

''சுவாமி, சுவாமி! அக்கரைக்குக் கொண்டு சேர்க்க அரசுப் படகு ஆயுத்தமாக இருக்கிறது'' என்று கூறியவாறு ஓடி வந்தனர், அரசரும் வீரமாதேவியும்.

சித்தர் மீண்டும் திரும்பினார். அந்த வெண்ணிலவில் வெண்தாடியும், வெள்ளை உடையும் ஒளிவீசின.

கரம் தூக்கி ஆசி வழங்கினார்.

ஏரி நீரின் மேல் நடந்தார். நடந்தார். நடந்துகொண்டே இருந்தார்.

தொலைவில், இறுதியாக ஒளி சிறு புள்ளியாக மின் மினியாகத் தோன்றியது. கடைசியில் மறைந்தது.

''கருவூர்ச் சித்தர் புகழ் வாழ்க, சோழ நாட்டிற்கு விரைவில் நீங்கள் வருகைப் புரியப் பிரார்த்திக்கிறோம்.'' என்று இராசேந்திரனும், வீரமாதேவியும் சரங் குவித்து வேண்டிக் கொண்டனர்.

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோ(டு) அணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மலையால் ஆழிச்
செங்கையோ(டு) உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே.

…374432
…105530
…நேயப் பாவாணர்
…ட்ட மைய நூலகம்
…ன்னை - 600 002

முற்றும்.